211,31 N82
N83·32
122233

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது
சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத்தொடர்

*1982 மார்ச் 9, 10 மற்றும் 11 ஆம் நாட்கள்*

(தொகுதி XXXII எண்கள் 1 முதல் 3 வரை)

©
தமிழ் நாடு அரசு
1983

சட்டமன்றப் பேரவைத் துறை,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை–600 009

விலை ரூ. 2]

Y211 . 31 N82

N83 . 32

122233

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை.

## இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத் தொடர்.

1982 மார்ச் 9, 10 மற்றும் 11 ஆம் நாட்கள்.

(தொகுதி XXXII எண் 1-3)

உள்ளடக்கம்.


| | பக்கங்கள். |
|---|---|
| **அரசினர் தீர்மானம்—** | |
| விதி 31-ஐத் தளர்த்தல் | 120 |
| **அறிக்கை அளித்தல்—** | |
| துணை வினாவிற்கு அளித்த விடைக்கான திருத்தம் | 49—50 |
| **அறிவிப்புகள்—** | |
| நல்வாழ்வுத் துறை அமைச்சர் அறிக்கை | 173—174 |
| பேரவை அலுவல் | 281—282 |
| **ஒத்திவைப்புத் தீர்மானம்—** | |
| சென்னை மீனம்பாக்கம் விமானநிலையத்தருகில் நடைபெற்ற கலவரம் | 174—197 |
| தென்காசி தாலுகா திருமாலாபுரத்தைச் சேர்ந்த அரிசனர் ஒருவர் இறந்துள்ளது | 39—49 |
| **கவன ஈர்ப்புகள்—** | |
| சிமெண்டிற்கு மைய அரசின் இருவிலை அறிவிப்பு | 192—208 |
| சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, ஒப்பந்தக்காரர்களிடம் கரும்பு எடுத்துக்கொள்வது | 434—436 |
| சேலம் செவிலியர் பயிற்சிப்பள்ளி மூடப்பட்டுள்ளது | 50—53 |
| வடாற்காடு மாவட்டத்தில் கால்நடைகள் நோயினால் மடிவது | 53—59 |

உள்ளடக்கம்—தொடர்ச்சி.


| | பக்கங்கள். |
|---|---|
| தகவல் கோரல்— | |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் | 433—434 |
| சென்னை விமான நிலையத்தின் முன் ஏற்பட்ட கலவரம் | 92—93 |
| தமிழ்நாட்டில் பல பகுதிகளில் காலரா நோய் பரவியுள்ளது | 436—445 |
| பேரவை நிகழ்ச்சிகளின் சுருக்க வெளியீடு | 432—433 |
| பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 121—282<br>645—647 |
| வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு— | |
| கோரிக்கை எண் 18—மருத்துவம் | |
| கோரிக்கை எண் 19—பொதுச் சுகாதாரம் | 524 — 645 |
| கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை | 59—119 |
| கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் | 208—266 |
| கோரிக்கை எண் 12—1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம் | |
| கோரிக்கை எண் 25—சின்கோனா | |
| கோரிக்கை எண் 45—காட்டுவளத் துறை | 266—281 |
| கோரிக்கை எண் 47—செய்தி, சுற்றுலா திரைப் படத் தொழில் நுட்பவியல் | 446 — 523 |
| கோரிக்கை எண் 54—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு | |
| வினாக்கள்—விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1—38<br>395—432 |


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை.

---

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத் தொடர்

1982 மார்ச் 9, 10 மற்றும் 11 ஆம் நாட்கள்.

---

(தொகுதி XXXII எண்கள் 1—3)

---

'அ'


| | பக்கங்கள். |
|---|---|
| அணைகள்— | |
| சிறுகுட்டைகள், திட்டம் | 405—408 |
| சேர்வலாறு | 395—396 |
| அப்பாதுரை, திரு. எம்.— | |
| மீனம்பாக்கம் விமான நிலையத்தருகில் கலவரம் (ஒ.தீ.) | 174 |
| வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு— | |
| 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம், சின்கோனா, காட்டுவளத் துறை, செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல், காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு | 268 |
| அம்பிகாபதி, திரு. மு.— | |
| மீனம்பாக்கம் விமான நிலையத்தருகில் நடைபெற்ற கலவரம் (ஒ.தீ.) | 174, 178-180 |
| வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு— | |
| மாநில ஆயத் தீர்வைத் துறை, பொதுவிற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வையும்-நிர்வாகம் | 98—103 |

அ—தொடர்ச்சி.


பக்கங்கள்

**அரங்கராசன், திரு. வெ.—**

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் —சட்ட நிர்வாகம், சின்கோனா, காட்டுவளத் துறை, செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல், காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு ... 456—460

**அரசினர் தீர்மானம்—**

விதி 31-ஐ தளர்த்தல் ... 120

**அலுவலகங்கள்—**

திருச்சியில் சோழன் போக்குவரத்துக் கழக தலைமை அலுவலகம் ... 31—32

திருப்பனந்தாள் பேரூராட்சி, துணைப் பதிவாளர் அலுவலகம் ... 4—5

பெரியார் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கட்டிடம் ... 35—36

**அலுவலர்கள்—**

உள்ளாட்சி மின்கார இலாகா ஊழியர்கள், குடும்ப நல பாதுகாப்புத் திட்டம் ... 18—1[illegible]

**அழகர்சாமி, திரு. சோ.—**

சிமெண்ட், மைய அரசின் இருவிலை அறிவிப்பு (க.ஈ.) ... 205

மீனம்பாக்கம் விமான நிலையத்தருகில் கலவரம் (ஒ.தீ.) ... 174

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—மருத்துவம், பொதுச் சுகாதாரம் ... 635

**அன்பழகன், திரு. க.—**

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—மருத்துவம். பொதுச்சுகாதாரம் ... 546, 588—615, 619, 626, 628—63, 632—633

மாநில ஆயத் தீர்வைத் துறை, பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் ... 248—251, 253—255, 262—264




அ—தொடர்ச்சி.


பக்கங்கள்

**அன்பழகன், திரு. தி.—**

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள்—சட்ட நிர்வாகம், சின்கோனா, காட்டுவளத் துறை, செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல், காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு ... 446—451

## ஆ

**ஆசிரியர்கள்.—**

ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்கல் ... 15—17

**ஆண்டித்தேவர் திரு. எஸ்.—**

மீனம்பாக்கம் விமான நிலையத்தருகில் கலவரம் (ஒ.தீ.) ... 175, 183—184

**ஆறுமுகம், திரு. எம்—**

வஞ்சிப்பாளையம், தொழிற்சாலை, ரயில்-பெட்டி ... 421

**ஆறுமுகம், திரு. த.—**

மீனம்பாக்கம் விமான நிலையத்தருகில் கலவரம் (ஒ.தீ.) ... 174

## இ

**இராசகுமார், திரு. மே. அ.—**

சோழன் போக்குவரத்துக் கழக தலைமை அலுவலகம் திருச்சியில் அமைத்தல் ... 31—32

**இராசமாணிக்கம், திரு. இரெ.—**

காலரா நோய், பரவுதல், (க.ஈ.) ... 436, 439—440

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம், சின்கோனா, காட்டுவளத் துறை, செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு ... 266—267

மருத்துவம், பொதுச் சுகாதாரம் ... 524

பக்கங்கள்

இ—தொடர்ச்சி.


இராசரத்தினம், திரு. து.—

பாலம், கூவம் ஆறு, உடைப்பு 410—411

இராசாம்பாள், திரு. தா.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

மருத்துவம், பொதுச் சுகாதாரம் 576—580

இராசாராமன், திரு. எஸ்.—

செங்கனூர், பனைத் தொழில் 429—432

இராசு, திரு. ஜே. எஸ்.—

தென்காசி திருமலாபுரத்தில் அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒருவர் இறந்துள்ளது (ஓ.தீ.) 38

இராமசாமி, திரு. எஸ். என்.—

காலரா நோய், பரவுதல் (க.ஈ.) 436

மீனம்பாக்கம் விமான நிலையத்தருகில் கலவரம் (ஓ.தீ.) 174

இராமச்சந்திரன், திரு. ச.—

மீனம்பாக்கம் விமான நிலையத்தருகில் கலவரம் (ஓ.தீ.) 191—196

இராமச்சந்திரன், திரு. செஞ்சி. ந.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

மருத்துவம், பொதுச் சுகாதாரம் 526—532

இராமலிங்கம், டாக்டர் கே.பி.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

மருத்துவம், பொதுச் சுகாதாரம் 572—576

இராமலிங்கம், திரு. செ.—

திருப்பனந்தாள் பேரூராட்சி, துணைப் பதிவாளர் அலுவலகம் ஏற்படுத்தல் 4—5

பேருந்துகள், பள்ளிகளுக்கு அளித்தல் 419—421




பக்கங்கள்

இ—தொடர்ச்சி.


இளையபெருமாள், திரு. எல்.—

தென்காசி, திருமலாபுரத்தில் அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒருவர் இறந்துள்ளது (ஓ.தீ.) 41—42

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம், சின்கோனா, காட்டு வளத் துறை, செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல், காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு 519

மருத்துவம், பொதுச் சுகாதாரம் 636

இராஜசேகரன், திரு. வே.—

மீனம்பாக்கம் விமான நிலையத்தருகில் கலவரம் (ஓ.தீ.) 175, 186—190

வெளி நடப்பு, சுருக்க வெளியீட்டில் சேர்ப்பது குறித்து (ஓ. பி.) 432—433

ஈ.

ஈஸ்வரமூர்த்தி என்ற சொரணம், திரு. பி.—

காலரா நோய், பரவுதல், (க. ஈ.) 436, 444

சிமெண்ட், மைய அரசின் இருவிலை அறிவிப்பு (க. ஈ.) 197, 200

சேர்வலாறு, அணை, 395—396

தென்காசி திருமலாபுரத்தில் அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒருவர் இறந்துள்ளது (ஓ. தீ.) 38

மின் உற்பத்தி செய்யும் புதிய திட்டங்கள், மைய அரசிடம் உள்ளவை 2—4

உ.

உச்சி, திரு. சே.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக் கட்டளைகள்—சட்ட நிர்வாகம், சின்கோனா, காட்டு வளத் துறை, செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல், காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு 478—480

பக்கங்கள்

உ—தொடர்ச்சி.

உத்திராபதி, திரு. பொ.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம், சின்கோனா, காட்டு வளத் துறை, செய்தி, சுற்றுலா, நிரைப்படத் தொழில் நுட்பவியல், காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு ... 269

உமாநாத், திரு. ரா.—

பேருந்துகள் பயணிகளின் தேவைகளுக்கேற்ப விடுதல் ... 32—35

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

மாநில ஆயத்தீர்வைத் துறை, பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் ... 215, 224, 227, 241, 243

உள்ளாட்சிகள்—

ஊராட்சிகளுக்குத் தொலைக்காட்சி பெட்டிகள் சலுகை விலையில் வழங்கல் ... 21—22

எ

எண்ணெய்—

போச்சம்பள்ளி, கடலை எண்ணெய் ... 408—409

ஏ

ஏடுகள்—

பேரவை முன் வைக்கப்பெற்றவை ... 121, 282, 645—647

ஏற்றுமதி—

வெங்காயம் ... 401—405

ஒ

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

பார்க்க—தலைவர்



பக்கங்கள்

க

கணேசன், திரு. இ.—

தொலைக் காட்சி பெட்டிகள், ஊராட்சிகளுக்கு சலுகை விலையில் வழங்கல் ... 21—22

கதர்—

பாலியஸ்டர் கலந்து நெசவு செய்தல் ... 36—37

சேலம், நூற்பு நிலையங்கள் ... 426—429

கருணாநிதி, டாக்டர் மு.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

மாநில ஆயத்தீர்வைத் துறை, பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் ... 103—120, 228, 230, 233, 236, 237, 240, 244—247, 250—252, 254, 256, 259—261, 265

கருப்பையா, திரு. இரா.—

சிமெண்ட், மைய அரசின் இருவிலை அறிவிப்பு (க. ஈ.) ... 206

மீனம்பாக்கம் விமான நிலையத்தருகில் கலவரம் (ஒ. தீ.) ... 174

கருப்பையா, திரு. ஏ. டி.—

மீனம்பாக்கம் விமான நிலையத்தருகில் கலவரம் (ஒ. தீ.) ... 175

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம், சின்கோனா, காட்டு வளத் துறை, செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல், காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு ... 471—476

க—தொடர்ச்சி. பக்கங்கள்

கல்லன், திரு. கே.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக் கட்டளைகள்—சட்ட நிர்வாகம், சின்கோனா, காட்டு வளத் துறை, செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல், காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு. 451—456

கல்விக் கூடங்கள்—

பேருந்துகள், பள்ளிகளுக்கு அளித்தல் 419—421

கவன ஈர்ப்புகள்—

காலரா நோய், பரவுதல் 436—445

சிமெண்ட், மைய அரசின் இருவிலை அறிவிப்பு 197—208

சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, கரும்பு அரைவை 434—436

சேலம் செவிலியர் பயிற்சிப்பள்ளி மூடப்பெற்றமை 50—53

வட ஆற்காடு மாவட்டம், கால்நடைகள் நோயால் இறத்தல் 53—59

கா.

கால்நடைகள்—

பராமரிப்பு, கிளை நிலையங்களுக்கு மருந்து வழங்கல். 37—38

காளிமுத்து, திரு கா.—

சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, கரும்பு அரைவை (க.ஈ.அ.) 434—436

துணை வினா விடைக்கான திருத்தம் (அ) 49—50

கிருஷ்ணமூர்த்தி, திரு. வி.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

மாநில ஆயத் தீர்வைத் துறை, பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் 61—68





கு—தொடர்ச்சி. பக்கங்கள்

கிருஷ்ணன், திரு. ரா.—

ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்கல் 15—17

தென்காசி, திருமாலாபுரத்தில் அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒருவர் இறந்துள்ளது (ஒ.தீ.) 39—41

மீனம்பாக்கம் விமான நிலையத்தருகில் கலவரம் (ஒ.தீ.) 175, 184—186

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள்—சட்ட நிர்வாகம், சின்கோனா, காட்டு வளத் துறை, செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல், காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு 268, 269

மாநில ஆயத் தீர்வைத் துறை, பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் 91—95

குப்புசாமி, திரு. கே.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

மாநில ஆயத் தீர்வைத் துறை, பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வையும்—நிர்வாகம் 82—87

குமரி அனந்தன், திரு.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

மாநில ஆயத் தீர்வைத் துறை, பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் 87—91

குலசேகர், திரு. ஏ. டி.—

மீனம்பாக்கம் விமான நிலையத்தருகில் கலவரம் (ஒ.தீ.) 174

குலசேகரபாண்டியன், திரு. ந.—

ஆம்பூர், வாணியம்பாடி தோல் பதனிடும் தொழிற்சாலைகள், மின் இணைப்பு 1—2

ச—தொடர்ச்சி.

கூட்டுறவு—

பாய் நெசவாளர்கள்

கேசவ ஆதித்தன், திரு. சி.—

ஸ்ரீவைகுண்டம் பாலம், விரிவாக்கம்

கோபாலன் திரு. ஆர். டி.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம், சின்கோனா, காட்டுவளத் துறை, செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல், காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு

கோமதி சீனிவாசன் திருமதி—

வடஆற்காடு மாவட்டம், கால்நடைகள் நோயால் இறப்பு (க. ஈ. அ.)

ச

சங்கரய்யா திரு. என்.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக் கடுப்பு—

மருத்துவம், பொதுச் சுகாதாரம்

சத்தியமூர்த்தி திரு. வ—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

1959-ம் ஆண்டு இந்து சமய-அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம்,சின்கோனா,காட்டுவளத்துறை செய்தி சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல், காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு

சமரசம் டாக்டர் கே.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம், சின்கோனா, காட்டுவளத் துறை, செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல், காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு



பக்கங்கள்

ச—தொடர்ச்சி

சர்க்கரை—

சேலம் கூட்டுறவு ஆலை கரும்பு அரைவை (க.ஈ.) 434—436

சாகுல் ஹமீது திரு. ஏ.—

கூட்டுறவுச் சங்கங்கள், பாய் நெசவாளர்கள் 423—426

தென்காசி திருமாலாபுரத்தில் அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒருவர் இறந்துள்ளது (ஓ.தீ.) 39

மீனம்பாக்கம் விமான நிலையத்தருகில் கலவரம் (ஓ.தீ.) 174—182, 183

சித்தன் திரு. என். எஸ். வி.—

சைக்கிள், டயர், டியூப் தொழிற்சாலை, உதவி 396—399

தென்காசி திருமாலாபுரத்தில் அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒருவர் இறந்துள்ளது (ஓ.தீ.) 38

மதுரை இராஜாஜி மருத்துவமனை, புதிய பிரிவுகள் 23—26

மீனம்பாக்கம் விமான நிலையத்தருகில் கலவரம் (ஓ.தீ.) 174

மீனம்பாக்கம் விமான நிலையத்தருகில் கலவரம் (த.கோ.) 92—93

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

மாநில ஆயத் தீர்வைத் துறை, பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்-நிர்வாகம் 75—82

சி மண்ட்—

மைய அரசின் இருவிலை அறிவிப்பு (க.ஈ.) 197—208

சிவசாமி திரு. செ.—

காலரா நோய் பரவுதல் (க.ஈ.) 436—443

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம், சின்கோனா, காட்டுவளத் துறை, செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு 267

மாநில ஆயத் தீர்வைத் துறை, பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் 60

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சிவராமன் திரு. எஸ்.—

காலரா நோய், பரவுதல் (க.ஈ.) 436

மீனம்பாக்கம் விமான நிலையத்தருகில் கலவரம் (ஒ.தீ.) 174

சின்னசாமி திரு. எம்.—

உள்ளாட்சி மின்சார ஊழியர்கட்கு குடும்பநலப் பாதுகாப்புத் திட்டம் 18—19

சென்னை சென்ட்ரல் நிலையம், நெரிசல் 421—423

சுந்தரம் திரு. கே. ஆர்.—

மீனம்பாக்கம் விமான நிலையத்தருகில் கலவரம் (ஒ.தீ.) 175

சுந்தரம் திரு. ப.—

மீனம்பாக்கம் விமான நிலையத்தருகில் கலவரம் (ஒ.தீ.) 174

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம், சின்கோனா, காட்டுவளத் துறை, செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல், காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு 268

சுந்தரமூர்த்தி திரு. ஆர்.—

மீனம்பாக்கம் விமான நிலையத்தருகில் கலவரம் (ஒ.தீ.) 175

சுந்தரராஜ் திரு. நா.—

மீனம்பாக்கம் விமான நிலையத்தருகில் கலவரம் (ஒ.தீ.) 174—178, 196—197

சுப்பிரமணியன் திரு. உ.—

காலரா நோய், பரவுதல் (க.ஈ.) 436

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

மருத்துவம்

பொதுச் சுகாதாரம் 537—543





ச—தொடர்ச்சி.

பக்கங்கள்

சுவாமிநாதன் திரு. வி. வி.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம்

சின்கோனா

காட்டுவளத் துறை

செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்

காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு 480—490

சுற்றுலா—

சாத்தனூர் அணை, சுற்றுலா மையமாக்கல் 12—13

செம்மலை திரு. செ.—

கரும்பு வளர்ச்சிப் பணி, 13—14

சேலம் செவிலியர் பயிற்சிப் பள்ளி, மூடப் பெற்றமை (க. ஈ.) 50—52

சேலம், நூற்பு நிலையங்கள் 426—429

பாரதி—பாரதிதாசன் கவிதைகள், மலிவு விலையில் வெளியிடல் 4—11

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

மருத்துவம், பொதுச் சுகாதாரம் 565—569

சென்னிமலை என்கிற கந்தசாமி திரு. ப. செ.—

கதர் ரகங்களில் பாலியஸ்டர் கலந்து நெசவு செய்தல் 36—37

சேதுராமன் திரு. ஏ. எம்.—

உப்புப்பேட்டை, கழிவு நீரினால் நிலங்கள் பாதிப்பு 412—414

சோமசுந்தரம் திரு. எஸ். டி.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

மாநில ஆயத் தீர்வைத் துறை, பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் 59—61, 208—266

சௌந்திரராசன் திரு. தே.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

மருத்துவம், பொதுச் சுகாதாரம் 532—537

பக்கங்கள்

த

**தகவல் கோரல்—**

**மீனம்பாக்கம் விமான நிலையத்தருகில் கலவரம்** 92—93

**தங்கமணி திரு. கே. எம.—**

**காலரா நோய், பரவுதல், (க. ஈ.)** 436—442

**தென்காசி திருமாலாபுரத்தில் அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒருவர் இறந்துள்ளது (ஒ. தீ.)** 38

**வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—**

**மாநில ஆயத்தீர்வைத் துறை, பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும்தீர்வைகளும் நிர்வாகம்** 60

**மருத்துவம், பொதுச் சுகாதாரம்** 525

**தங்கராசு திரு. ஏ.—**

**காலரா நோய், பரவுதல் (க. ஈ.)** 436

**தலைவர்—**

**அறிவிப்புகள்—**

**பேரவை அலுவல்** 281

**தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—**

**அவையில் காட்டப்பெறும் பொருட்கள்—**

**"தலைவரின் அனுமதியின்றி பேரவைக்குள் எந்தப் பொருளையும் கொண்டு வந்து காட்டக் கூடாது" என ஓர் உறுப்பினர் அவ்வாறு செய்தபொழுது குறிப்புரைக்கப் பெற்றது. (ஒ. தீ.)** 139





பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

அறிக்கை அளித்தல்—

பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருள் குறித்து மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை அறிக்கை ஒன்று வைக்க தலைவர் அனுமதித்தார். அமைச்சர் அவ்வறிக்கையை அளிக்க முற்பட்டபோது இது பற்றி உறுப்பினர்கள் விதிகள் 54, 55 இன்கீழ் முன்னறிவிப்புகள் கொடுத்திருக்கையில் இதுபோன்று அறிக்கை அளிக்க அமைச்சரை அனுமதிப்பது உறுப்பினர்கள் தம் கருத்துக்களை எடுத்துக் கூற வாய்ப்பு இல்லாமல் செய்து விடுகிறது என எதிர்க்கட்சித் தரப்பில் ஆட்சேபணை எழுந்தது. இது பற்றி தலைவர் அளித்த குறிப்புரையாவது:

"பின்னர் இது கவன ஈர்ப்புத் தீர்மானமாக எடுத்துக் கொள்ளப்படும். அதுவரை தற்போது அவைமுன் வைக்கப்பட்டுள்ள அறிக்கை இரகசியமாக இருக்க வேண்டும்." 173—174

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

"சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத் தருகில் 9—3—1982 அன்று நடைபெற்ற கலவரம் குறித்து"—

மின்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் இசைவு மறுக்கப்பெற்றது. 175—197

"தென்காசி தாலுகா பன்மொழி கிராமம் மீனாட்சிபுரம் அருகிலுள்ள திருமாலாபுரத்தில் அரிசன வகுப்பைச் சார்ந்த சகோதரர் திரு. காளிமுத்து அவர்கள் காவல் துறையினரால் 1982 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 16 ஆம் நாள் அன்று காவல் நிலையத்தில் அடித்துக் கொல்லப்பட்டதாக நடந்துகொண்டிருக்கும் போராட்டத்தால் ஏற்பட்டுள்ள கவலை குறித்து"

நிதி அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப்பெற்றது. 38—49

த—தொடர்ச்சி.

பக்கங்கள்


**தலைவர்—தொடர்ச்சி.**

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

குற்றச்சாட்டு—

"ஊகத்திலே எதையும் சொல்லிவிடக் கூடாது" (ஓ.தீ.) — 191

நடைமுறை—

ஓர் அமைச்சர் சார்பில் இன்னொரு அமைச்சர் பதில் சொல்லலாம் (ஓ.தீ.) — 191

ஓர் உறுப்பினர் வெளிநடப்புச் செய்தது குறித்து பேரவை நடவடிக்கைகளின் சுருக்க வெளியீட்டில் காணப்படவில்லையென்கிற பிரச்னையைப் பேரவையில் எழுப்ப முற்பட்டபோது தலைவர் அளித்த குறிப்புரையாவது:

"சுருக்க வெளியீட்டில் அதைச் சேர்ப்பது வழக்கம் இல்லை" (த.கோ.) — 430

கட்சிக்கு ஒரு உறுப்பினர் பேச வேண்டுமென்ற மரபிருந்தாலும், பாதிக்கப்பட்டவர் பேரவை உறுப்பினராக இருக்கும் நிகழ்ச்சியில், அவரும் பேசுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்ற வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப் பெற்று அனுமதியளிக்கப் பெற்றது (ஓ.தீ.) — 186

நீக்கம்—

பேரவைத் தலைவரின் அனுமதியின்றி உறுப்பினர்கள் திடீர் திடீரென்று அவையில் பேசுவது கூடாது என குறிப்புரைக்கப் பெற்று அவ்வாறு பேசப்பெற்ற பகுதிகள் நீக்கப் பெற்றன (க.ஈ.) — 445

பேசும் முறை—

"அமைச்சர் பதில் அளிக்கும்பொழுது அவையில் அச்சடித்து வைக்கப்பெற்றுள்ளதையே படிக்கிற முறை இருக்குமானால் அவையை விட்டே தாங்கள் வெளியேற வேண்டியிருக்கும்" என ஓர் உறுப்பினர் கூறியபொழுது, "அமைச்சர்கள் தாங்கள் விரும்பும் விதத்தில் பதில் கொடுக்கலாம்" என்று குறிப்புரைக்கப் பெற்றது. (வ.செ.தி.) — 263—264




த—தொடர்ச்சி.

பக்கங்கள்


**தலைவர்—தொடர்ச்சி**

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

பேசும் முறை—தொடர்ச்சி.

பேச முற்படுகிற உறுப்பினர், தமக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு தமது கட்சித் தலைவருக்கு நன்றி தெரிவித்தபொழுது, தலைவர் அளித்த குறிப்புரையாவது:

"நான்தான் உங்களைப் பேச அழைத்திருக்கிறேன். இங்கு கட்சியெல்லாம் கிடையாது". (வ.செ.தி.) — 271

பேசுகின்ற உறுப்பினர் குறிப்புகளை வைத்துப் பேசவேண்டும். எழுதிப் படிக்கக் கூடாது. (வ.செ.தி.) — 272

வினாக்கள்—விடைகள்—

சுருக்கமாகக் கேட்க வேண்டும், வரலாற்றுக்குள் போகக் கூடாது. (து.வி) — 20

மூலக் கேள்வியை ஒட்டியிருத்தல் வேண்டும். (து.வி.) — 15,16

**தாமரைக்கனி, திரு. இரா.—**

காலரா நோய், பரவுதல், (க.ஈ) — 436—444

சிமெண்ட், மைய அரசின் இருவிலை அறிவிப்பு (க.ஈ.) — 204

சென்னை சென்ட்ரல் நிலையம், நெரிசல் — 421—423

நீர் ஆராய்ச்சித் திட்டம், ஸ்வீடன் நாட்டு உதவி — 14—15

பூம்புகார் விற்பனை நிலையம், வெளி மாநிலங்களில் ஆரம்பித்தல், — 400—401

**திருநாவுக்கரசு, திரு. எஸ்.—**

சிமெண்ட், மைய அரசின் இருவிலை அறிவிப்பு (க.ஈ.அ.) — 197—208

**திருவேங்கடம் திரு. பெ. சு.—**

காலரா நோய், பரவுதல், (க.ஈ.) — 436, 443

சுற்றுலாக் கார்கள், உரிமம் — 417—419

த—தொடர்ச்சி.


திருவேங்கடம் திரு. பெ. சு.—தொடர்ச்சி

| | பக்கங்கள் |
|---|---|
| வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—1959 ஆம் ஆண்டு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம், சின்கோனா, காட்டுவளத்துறை, செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல், காட்டுவளம் குறித்த மூலதனச். செலவு | 270 |
| விவேகானந்தர் நினைவுப் பாறை, இயந்திரப் படகு விடுதல். | 28—29 |

துரைசாமி, திரு. வி. எஸ்.—

| | |
|---|---|
| வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—மருத்துவம், பொதுச் சுகாதாரம், | 586—588 |

துரைமுருகன், திரு.—

| | |
|---|---|
| வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம், சின்கோனா, காட்டுவளத் துறை, செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல், காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு, | 492—504 |

தொழில்கள்—

| | |
|---|---|
| செங்கனூர், பனைத் தொழில் | 429—432 |
| சைக்கிள் டயர், டியூப் தொழிற்சாலை, உதவி | 396—399 |
| பூம்புகார் விற்பனை நிலையம், வெளி மாநிலங்களில் ஆரம்பித்தல். | 400—401 |
| மாட்டுச் சாணம், எரிவாயு உற்பத்தி | 414—417 |
| வஞ்சிப்பாளையம், ரயில் பெட்டி தொழிற்சாலை. | 421 |


## ந


நல்லப்பன், திரு தி. கா.—

| | |
|---|---|
| காலரா நோய், பரவுதல், (க.ஈ.) | 436 |
| மீனம்பாக்கம் விமான நிலையத்தருகில் கலவரம் (ஒ.தீ.) | 174 |




ந—தொடர்ச்சி


| | பக்கங்கள் |
|---|---|
| **நல்லப்பன் திரு. தி. கா.—தொடர்ச்சி** | |
| வரவு-செலவுத் திட்டம், 1982-83 வாக்கெடுப்பு—1959-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம், செய்தி, சுற்றுலா. திரைப்படத் தொழில் நுட்பவியல், காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு | 270 |
| மருத்துவம் | |
| பொது சுகாதாரம் | 569—572 |
| மாநில ஆயத் தீர்வைத் துறை பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் | 61 |
| **நவநீதகிருஷ்ண பாண்டியன் திரு ஆர்—** | |
| காலரா நோய், பரவுதல், (க.ஈ.) | 436 |
| மீனம்பாக்கம் விமான நிலையத்தருகில் கலவரம் (ஒ.தீ.) | 174, 181—182 |
| **நிதி அலுவல்கள்—** | |
| வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம், சின்கோனா காட்டுவளத்துறை செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல், காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு, | 266—282, 445—523 |
| மருத்துவம், பொதுச் சுகாதாரம் | 524—645 |
| மாநில ஆயத் தீர்வைத்துறை, பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் | 59—120, 208—260 |
| **நினைவுச் சின்னங்கள்—** | |
| விவேகானந்தர் நினைவுப் பாறைக்கு இயந்திரப்படகு | 29—31 |
| **நீக்கம்—** | 432, 433, 434, 445 |
| **நெடுஞ்செழியன் டாக்டர் இரா.—** | |
| தென்காசி, திருமாலாபுரத்தில் அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒருவர் இறந்துள்ளது (ஒ.தீ) | 46—49 |

ந—தொடர்ச்சி

பக்கங்கள்

நெடுமாறன் திரு. ப—
காலரா நோய் பரவுதல், (க.ஈ) 436
வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
மாநில ஆயத் தீர்வை துறை, பொது விற்பனை வரியும். ஏனைய வரிகளும் தீர்வைகளும்— நிர்வாகம் 68—76

நோய்கள்—
காலரா பரவுதல் (க.ஈ.) 436—445

ப

பலராமன். திரு. இல—
மீனம்பாக்கம் விமான நிலையத்தருகில் கலவரம் (ஓ.தீ.) 174
வட ஆற்காடு மாவட்டம், கால்நடைகள் நோயால் இறத்தல் (க.ஈ.) 53,56—57
வரவு-செலவுத் திட்டம் 1982-83, வாக்கெடுப்பு—
மாநில ஆயத் தீர்வைத் துறை, பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்— நிர்வாகம் 59

பழனிமுத்து திரு. சி—
காலரா நோய், பரவுதல் (க.ஈ.) 436
வரவு-செலவுத், திட்டம் 1982-83, வாக்கெடுப்பு—
மருத்துவம், பொதுச் சுகாதாரம், 524

பழனியப்பன் திரு. கு. பா—
காலரா நோய், பரவுதல், (க.ஈ.) 436
வரவு-செலவுத் திட்டம், 1982-83 வாக்கெடுப்பு—
1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம், சின்கோனா, காட்டுவளத் துறை, செய்தி சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் காட்டுவளம் குறித்த மூல தனச் செலவு 271—276

பாபு ஜனார்த்தனன், திரு—
சிமெண்ட், மைய அரசின் இருவிலை அறிவிப்பு (க.ஈ.) 203
மீனம்பாக்கம் விமான நிலையத்தருகில் கலவரம் (ஓ.தீ.) 174,180—181



பக்கங்கள்

ப—தொடர்ச்சி

வரவு-செலவுத் திட்டம், 1982-83 வாக்கெடுப்பு—
மாநில ஆயத் தீர்வைத் துறை, பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்— நிர்வாகம் 60

பாரமலை திரு. க—
காலரா நோய், பரவுதல் (க.ஈ.) 436—441
தென்காசி, திருமாலாபுரத்தில் அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒருவர் இறந்துள்ளது (ஓ.தீ.) 38

பாலகிருஷ்ணன் திரு. ச—
பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டிடம் 35—36

பாலங்கள்—
கூவம் ஆறு, உடைப்பு, 410—411
தாமிரபரணி ஆறு, ஸ்ரீவைகுண்டம், விரிவாக்கம் 411

பாலசுப்பிரமணியன் திரு வேடசந்தூர் வி. பி—
கால்நடை பராமரிப்பு கிளை நிலையங்கள் மருந்து வழங்கல், 37—38
பாரதி-பாரதிதாசன் கவிதைகள், மலிவு விலையில் வெளியிடல் 5—11
வரவு—செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
மருத்துவம், பொதுச் சுகாதாரம், 543—555
வெங்காயம், ஏற்றுமதி 401—405

பாலன் திரு. சு—
வரவு-செலவுத் திட்டம், 1982—83, வாக்கெடுப்பு—
1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் சின்கோனா காட்டு வளத்துறை செய்தி சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல், காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு 226, 967
மருத்துவம், பொதுச் சுகாதாரம் 525

பிரபாகரன் திரு ஜே. சி. டி.—
வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—
மருத்துவம் பொதுச் சுகாதாரம் 580—584

பக்கங்கள்

ப—தொடர்ச்சி

புருஷோத்தமன் திரு. து—

கோவை—உதகை ஹெலிகாப்டர் போக்குவரத்து பணி 30—31

மாட்டுச்சாணம் எரிவாயு உற்பத்தி 414—417

பெரியசாமி திரு ரா.—

சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, கரும்பு அரைவை (க. ஈ.) 434

பொன்னம்மாள் திருமதி ஏ. எஸ்—

தென்காசி, திருமாலாபுரத்தில் அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒருவர் இறந்துள்ளது (ஒ.தீ) 42—43

வரவு-செலவுத் திட்டம், 1982—83, வாக்கெடுப்பு—

மருத்துவம், பொதுச் சுகாதாரம் 584—586

பொன்னுரங்கம் திரு ப—

இராயபுரம், லெவல் கிராஸிங் 19—21

காலரா நோய், பரவுதல் (க. ஈ.) 436,443

மீனம்பாக்கம் விமான நிலையத்தருகில் கலவரம் (ஒ. தீ.) 174

போக்குவரத்து—

இராயபுரம், லெவல் கிராஸிங் 19—21

கோவை—உதகமண்டலம், ஹெலிகாப்டர் விடுதல் 30—31

சுற்றுலாக் கார்கள், உரிமம் 417—419

சென்னை சென்ட்ரல், நிலையம், நெரிசல் 421—423

பயணிகளின் தேவைகளுக்கேற்ப பேருந்துகள் விடுதல் 32—35

''ம''

மக்கள் நல்வாழ்வு—

உப்பு பேட்டை, கழிவுநீரால் நிலங்கள் பாதிப்பு 412—414

மணி, திரு. டி.—

சிமெண்ட், மைய அரசின் இருவிலை அறிவிப்பு (க.ஈ.) 291—202

மீனம்பாக்கம் விமான நிலையத்தருகில் கலவரம் (ஒ,தீ.) 175

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

மருத்துவம், பொதுச்சுகாதாரம் 524



பக்கங்கள்

ம—தொடர்ச்சி

மருத்துவமனைகள்—

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை குழந்தைகள் பிரிவு விரிவாக்கம் 26—28

மதுரை இராஜாஜி மருத்துவமனை, புதிய பிரிவுகள் தொடங்கல் 23—26

மாணிக்கம் திரு. எம். எஸ்.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

மாநில ஆயத் தீர்வைத் துறை பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிர்வாகம் 95—98

மாரிமுத்து திரு. த.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

1959 ஆம் ஆண்டு இந்து சமய—அறக் கட்டளைகள்—சட்ட நிர்வாகம், சின்கோனா, காட்டுவளத் துறை, செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல், காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு 476—478

மின்சாரம்—

தோல் பதனிடும் தொழிற்சாலைகள், ஆம்பூர், வாணியம்பாடி 1—2

புதிய திட்டங்கள், மைய அரசிடம் உள்ளவை 2—4

முத்துராமலிங்கம் திரு. இ.—

காலரா நோய் பரவுதல், (க.ஈ.) 436—440, 441

மீனம்பாக்கம் விமான நிலையத்தருகில் கலவரம் (ஒ.தீ.) 174

வரவு-செலவுத், திட்டம் 1982-83, வாக்கெடுப்பு—

1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள்—சட்ட நிர்வாகம், சின்கோனா, காட்டுவளத் துறை, செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில், நுட்பவியல், காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு 490—492

மூர்த்தி திரு. ஜி.—

தென்காசி, திருமாலாபுரத்தில் அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒருவர் இறந்துள்ளது (ஒ.தீ.) 38

பக்கங்கள்

"ர"

ரகுமான்கான் திரு. அ.—

தென்காசி, திருமாலாபுரத்தில் அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒருவர் இறந்துள்ளது (ஒ.தீ.) 43—45, 48

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள்—சட்ட நிர்வாகம், சின்கோனா, காட்டு வளத் துறை, செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு 274

ரங்கசாமி திரு. ஆர்.—

சிறு குட்டைகள் திட்டம் 405—408

ரமணி திரு. கு.—

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை குழந்தைகள் பிரிவு, விரிவாக்கம் 26—28

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

மாநில ஆயத் தீர்வைத் துறை பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் 61

"வ"

வின்சென்ட் திரு. மி.—

பாரதி—பாரதிதாசன் கவிதைகள், மலிவு விலையில் வெளியிடல் 4—11

வீரப்பன் திரு. ஆர். எம்.—

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள்—சட்ட நிர்வாகம், சின்கோனா, காட்டு வளத் துறை, செய்தி, சுற்றுலா. திரைப்படத் தொழில் நுட்பவியல், காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு 267—270
274—276
277
504-521

வெங்கடசுப்பிரமணியம் திரு. ப.—

போச்சம்பள்ளி, கடலை எண்ணெய் 408, 409

வெளியீடுகள்—

பாரதி—பாரதிதாசன் கவிதைகள், மலிவு விலையில் வெளியிடல் 4—11



பக்கங்கள்

வ—தொடர்ச்சி

வேணுகோபால் திரு. த.— 12, 13

சாத்தனூர் அணை, சுற்றுலா மையமாக்கல்

மீனம்பாக்கம் விமான நிலையத்தருகில் கலவரம் (ஒ.தீ.) 174

வடஆற்காடு மாவட்டம், கால்நடைகள் நோயால் இறத்தல் (க.ஈ.) 53—58

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

மாநில ஆயத்தீர்வைத் துறை, பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் 59

வேளாண்மை— 13—14

கரும்பு வளர்ச்சிப் பணி, நிர்வாகம் 14—15

நீர் ஆராய்ச்சி திட்டம், ஸ்வீடன் உதவி

"ஹ"

ஹண்டே டாக்டர் எச். வி.— 437—439

காலரா நோய், பரவுதல் (க.ஈ.அ.) 440—445

சேலம் செவிலியர் பயிற்சிப்பள்ளி மூடப்பெற்றமை (க.ஈ.) 50—53

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

மருத்துவம், பொதுச் சுகாதாரம் 524—525
563
615—645

ஹேமச்சந்திரன் திரு. ஜே.—

சிமெண்ட், மைய அரசின் இருவிலை அறிவிப்பு (க.ஈ.) 202—203

மீனம்பாக்கம் விமான நிலையத்தருகில் கலவரம் (ஒ.தீ.) 175

வரவு-செலவுத் திட்டம், 1982-83, வாக்கெடுப்பு—

1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள்—சட்ட நிர்வாகம், சின்கோனா, காட்டு வளத் துறை, செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல், காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு 267—268
461—468

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. சாதிக் அலி.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்புத் திட்டம், சர்க்கரை பாகு கழிவு, தொல்பொருள் இயல்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)—நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன் வளம், பிற்பட்ட வகுப்பினர்' இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, முன்னாள் ராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் துறை அமைச்சர்)—கிராம குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்; பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிப்புத்துறை, முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி, சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்)—வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத்துறை, காடுகள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)—தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சிமொழி, கைத்தறி

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு—சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றகங்ள், சிறைகள், எடைகள் மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு, கடன் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம், பூமிதானம், கிராமதானம், நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)—தொழிலாளர் வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைம்பு, இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத்துறை.

13. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்)—வேளாண்மைப் பணி, கூட்டுறவுச் சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், வஃப்.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக் கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில்துறை அமைச்சர்)—பெருந் தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள். நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (கதர் மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர்)—கதர், மது மனுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மது விலக்கு, பயண இசைவுச் சீட்டு, பொதுப்பணித் துறை மற்றும் பொதுப்பணித் துறை அலுவல்கள் ம்ப ந்தமாக.



17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்)—ஆதி திராவிடர் நலம், எழுதுபொருள்) அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு. மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடைப் பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

Governor of Tamil Nadu.

Thiru S. SADIQ ALI.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Thiru M. G. RAMACHANDRAN (Chief Minister) Public, General Administration, Indian Admistrative Service, District Revenue Officers, Deputy Collector, Police, Prevention of Corruption, Planning, Molasses and Archaeology.

2. Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)—Finance, Legislature, Elections, Food, Fisheries, Backword Classes, Youth Service Corps, Price Control and Ex—Servicemen.

3. Hon. Thiru. S. RAMACHANDRAN (Minister for Electricity)—Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K. A. KRISHNASAMY (Minister for Rural Industries)—Rural Industries including Village, Cottage and Smal Industries, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. Hon. Thiru S. D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes, Excise and Census.

6. Hon. Thiru R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Permits.

7. Hon. Thiru C. ARANGANAYAKAM (Minister for Education)—Education including Technical Education, Official Language and Handlooms.

8. Hon. Thiru K. KALIMUTHU (Minister for Agriculture)—Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. Hon. Thiru C. PONNAIAN (Minis:er for Co-operation and Law)—Law, Courts' Prisons, Legislaticns on Weigths and Measuresr) Regisiiation of Companies, Debt Relief including Legislation on Money Lending and Lgislatiɔn on Chits and Cc-Operation.

10. Hon. Thiru P. KULANDAIVELU (Minister for Local Administration)—Municipal Administration, Panchayats and Panchayat Unicns, Commu i y Developmen , Rural Indeb:edness, Bhoodan and Gramdhan and Hihgways.

11. Hon. Thiru S. RAGHAVANANDHAM (Minister for Labour)—Labour, Housing Slum Clearance Board, S a is ics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. Hon. Dr. H. V. HANDE (Minis er for Health)—Health.

13. Hon. Thiru K. RAJA MOHAMMED (Minister for Irrigation)—Agro Service Co-o erative Societies, Irriga ion including Minor Irriga ion and Wakf.

14. Hon. Thiru. S. MUTHUSAMY (Minister for Transpor — Transpor , Na ionalised Transpor , Mo or Ve icles Act and Ports.

15. Hon. Thiru. S. THIRTNAVUKKARALU (Minister for Industries)—Large Scale Indus ries, Mi es and Minerals and Tex iles.

16. Hon. Thiru S. N. RAJENDRAN (Minis er for Public Works and Khadi)—Handlooms, Khadi, Prohibition excluding grant of Liquor permi s, Pass or s, Public Works Department and Es abltshment ma er rela ing o Public Works Depar men .

17. Hon. T iru M. M. VIJAYASARATHI (Minis er for did Dravidar Welfare)— Adi Dravidar Welfare, Stationery, And Prin ing Governmen Press, News Prin Con(rol, Hill Tribes ana Bonded Labour and Employment and Training

18. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minis er for Social Welfare)—Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and correc ional Administration



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர் :

* மாண்புமிகு திரு. க. இராசாராம்.

பேரவைத் துணைத் தலைவர் :

* மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்.
2. திரு. ப. வேங்கடசுப்பிரமணியம்.
3. திரு. துரைமுருகன்.
4. திரு. இல. பலராமன்.

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

துணைச் செயலாளர்கள்

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. இரா. பாலகுரு, பி,ஏ.
திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ.,பி.ஜி.எல்.
திரு. கா. சீனிவாசன், பி.எஸ்-சி. (குழு அலுவலர்).
திரு. வி. சீதாராமன், பி.காம். (சார்புச் செயலாளர்).
திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி,ஏ., பி.எல். (சார்புச் செயலாளர்).
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ பி எல். (சார்புச் செயலாளர்.)
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம். (சார்புச் செயலாளர்).
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ. (சார்புச் செயலாளர்).
திரு, டி. எஸ். துளசிராம் (எஸ்டேட் அலுவலர்)
திரு. பி. கோதண்டராமன் (பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்).
திரு. மா. சந்திரசேகரன் (தலைமை நிருபர்).

விவாதப் பதிப்பாளர்.

திரு. ஜி. எஸ் அனந்தநாராயணன். பி.லிட்.

---

* 21—6—1980 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.

** 2—2—1982 அன்று நியமனம் செய்ய ப்பெற்றார்கள்

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் [தமிழ் அகர வரிசைப்படி] தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 1 | அங்குசாமி, திரு. ச. .. | திருவாடானை |
| 2 | அண்ணாதாசன், திரு. எம். .. | திருவரும்பூர் |
| 3 | அப்துல் ரசாக், திரு. கே. எம். .. | ஆலந்தூர் |
| 4 | அப்பாதுரை திரு. மு. .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 5 | அம்பிசாபதி, திரு. மு. .. | மன்னார்குடி |
| 6 | அரங்கநாதன், திரு. எஸ். .. | தர்மபுரி |
| 7 | அரங்கநாதன், திரு. மு. .. | கூனூர் (செ.வ.) |
| 8 | அரங்கநாயகம், திரு. செ. .. | கோவை (மேற்கு) |
| 9 | அரங்கராசன், திரு. வெ. .. | உப்பிலியாபுரம் |
| 10 | அருணகிரி, திரு. இரா. .. | திருப்பத்தூர் |
| 11 | அருணாசலம், திரு. இரா. .. | நாமக்கல் (செ.வ. |
| 12 | அழகர்சாமி, திரு. சோ. .. | கோவில்பட்டி |
| 13 | அன்பழகன், திரு. க. .. | புரசைவாக்கம் |
| 14 | அன்பழகன் திரு. தி. .. | நாட்ராம்பள்ளி |
| 15 | அன்பில்தர்மலிங்கம், திரு. .. | லால்குடி |
| 16 | ஆண்டி அம்பலம், திரு. மெ. .. | நத்தம் |
| 17 | ஆண்டித்தேவர், திரு. எஸ். .. | உசிலம்பட்டி |
| 18 | ஆறுமுகம், திரு. எம். .. | அவினாசி (செ.வ.) |
| 19 | சேலம் ஆறுமுகம், திரு. மு. .. | சேலம்—2 |
| 20 | ஆறுமுகம், திரு. த. .. | அரியலூர் |
| 21 | ஆனூர் ஜெகதீசன், திரு. .. | செங்கல்பட்டு |
| 22 | இரத்தினம், திரு. எம். வி. .. | பொள்ளாச்சி |
| 23 | இராசகுமார், திரு. மெ. அ. .. | மருங்காபுரி |
| 24 | இராசமாணிக்கம், திரு. இரெ. .. | குத்தாலம் |
| 25 | இராசரத்தினம், திரு. து. .. | பூந்தமல்லி |
| 26 | இராசாம்பாள், திருமதி தா. .. | தலைவாசல் (செ.வ.) |
| 27 | இராசாராம், திரு. க. .. | பனமரத்துப்பட்டி |
| 28 | இராசாராமன், திரு. எஸ். .. | பாபநாசம் |

| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 29 | இராசு, திரு. ஜே. எஸ். .. | பெரம்பலூர் வ. |
| 30 | இராசேந்திரன், திரு. எஸ். என். .. | தூத்துக்குடி (செ.) |
| 31 | இராமச்சந்திரன், திரு. எம். ஜி. ... | மதுரை (மேற்கு) |
| 32 | இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். ... | சாத்தூர் |
| 33 | இராமச்சந்திரன், திரு. ச. .. | பண்ருட்டி |
| 34 | இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந. .. | செஞ்சி |
| 35 | இராமசாமி, திரு. எஸ். என். .. | சாத்தான்குளம் |
| 36 | இராமசாமி, திரு. த. .. | இராமநாதபுரம் |
| 37 | இராமசுப்பிரமணியன், திரு. இ. .. | ஸ்ரீ வைகுண்டம் |
| 38 | இராமலிங்கம், திரு. ஏ. .. | காட்டுமன்னார் [செ.வ.] |
| 39 | இராமலிங்கம், டாக்டர் கே. பி. .. | இராசிபுரம் |
| 40 | இராமலிங்கம், திரு. செ, .. | திருவிடைமருதூர் |
| 41 | இராஜசேகரன், திரு. வெ. .. | இராதகிருஷ்ணநகர் |
| 42 | இராஜாராம்நாயுடு, திரு. தெ. இரா. .. | தல்லி |
| 43 | இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். .. | ஆண்டிப்பட்டி |
| 44 | இளையப்பெருமாள், திரு. எல். .. | எழும்பூர் (செ.வ.) |
| 45 | ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. .. | அம்பாசமுந்திரம் |
| 46 | உகம்சந்த், திரு. எஸ். டி. .. | மதுராந்தகம் |
| 47 | உச்சி, திரு. கே. .. | கூடலூர் |
| 48 | உத்திராபதி, திரு. பொ. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 49 | உமாநாத், திரு. ரா. .. | நாகை |
| 50 | கண்ணன், திரு. ம. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 51 | கணபதி, திரு. கே. ஆர். .. | சிதம்பரம் |
| 52 | கணேசன், திரு. இ. .. | இடப்பாடி |
| 53 | கணேசன், திரு. சி. .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |



| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 54 | கந்தசாமி, திரு. கா. வே. .. | கிணத்துக்கடவு |
| 55 | கந்தசாமி, திரு. பி. .. | பொங்கலூர் |
| 56 | கபாலி, திரு. டி. கே. .. | மைலாப்பூர் |
| 57 | கருணாநிதி, டாக்டர். மு. .. | அண்ணாநகர் |
| 58 | கருப்பசாமிப் பாண்டியன், திரு. வி. .. | பாளையங்கோட்டை |
| 59 | கருப்பையா, திரு. இரா. .. | குளித்தலை |
| 60 | கருப்பையா, திரு. ஏ. டி. .. | வால்பாறை |
| 61 | கல்லன், திரு. கே. .. | உதகமண்டலம் |
| 62 | கலிதீர்த்தான், திரு. சோ. .. | சங்கராபுரம் |
| 63 | கலியமூர்த்தி, திரு. பெ. .. | மங்களூர் (செ. வ.) |
| 64 | நன்னிலம் கலையரசன், திரு. அ. .. | நன்னிலம் (செ. வ.) |
| 65 | காளிமுத்து, திரு. கா. .. | திருப்பரங்குன்றம் |
| 66 | கிட்டப்பா, திரு. என். .. | மாயவரம் |
| 67 | கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. .. | காங்கேயம் |
| 68 | கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. .. | ஆயிரம்விளக்கு |
| 69 | கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. .. | ஆண்டிமடம் |
| 70 | கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. | நெல்லிக்குப்பம் |
| 71 | கிருஷ்ணராஜ், திரு. ஜி. .. | சேலம்-1 |
| 72 | கிருஷ்ணன், திரு. ரா. .. | வாசுதேவநல்லூர் |
| 73 | குப்புசாமி, திரு. என். .. | மொரப்பூர் |
| 74 | குப்புசாமி, திரு. கே. .. | ஒட்டன்சத்திரம் |
| 75 | குப்புசாமி, திரு. செ. .. | வந்தவாசி (செ. வ.) |
| 76 | குமரி அனந்தன், திரு. .. | திருவொற்றியூர் |
| 77 | குருசாமி, திரு. ப. .. | அந்தியூர் (செ. வ.) |
| 78 | குலசேகர், திரு. ஏ. டி. .. | சிங்காநல்லூர் |
| 79 | குலசேகரப் பாண்டியன், திரு. ந. .. | வாணியம்பாடி |
| 80 | குழந்தைவேலு, திரு. ப. .. | உடுமலைப்பேட்டை |
| 81 | கேசவ ஆதித்தன், திரு. சி. .. | திருச்செந்தூர் |
| 82 | கோபால், திரு. சி. .. | சோளிங்கர் |
| 83 | கோபாலகிருஷ்ணன், திரு. கா. .. | பெரியகுளம் |
| 84 | கோபாலன், திரு. ஆர். டி. .. | கம்பம் |
| 5 | கோமதி சீனிவாசன், திருமதி .. | வலங்கை (செ.வ.) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 86 | கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 87 | கோவைத்தம்பி, திரு. | பேரூர் |
| 88 | சக்கரபாணி, திரு. ஆர். | பொன்னேரி |
| 89 | சங்கரய்யா, திரு. என். | மதுரை (கிழக்கு) |
| 90 | சட்டநாத கரையாளர், திரு. கி. | தென்காசி |
| 91 | சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 92 | சண்முகம், திரு. ஏ. சி. | ஆரணி. |
| 93 | சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி. |
| 94 | சந்திரசேகரன், திரு. ஏ. | சோழவந்தான். |
| 95 | சபாபதி, திரு. சி. | அரூர் (செ.வ.). |
| 96 | சமரசம், டாக்டர், கே. | காவேரிப்பட்டணம். |
| 97 | சாகுல் ஹமீது, திரு. ஏ. | கடையநல்லூர். |
| 98 | சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம். |
| 99 | சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம். |
| 100 | சிதம்பரம், திரு. சி. த. | காரைக்குடி. |
| 101 | சிவசாமி, திரு. செ. | இளையான்குடி. |
| 102 | சிவஞானம், திரு. ந. | திருவோணம். |
| 103 | சிவப்பிரகாசம், திரு. சி. | சேந்தமங்கலம் (செ.வ.) |
| 104 | சிவபெருமான், திரு. மு. | ஓமலூர். |
| 105 | சிவராமன், திரு. எ. எஸ். | சின்னசேலம். |
| 106 | சின்னசாமி, திரு. எம். | கரூர். |
| 107 | சின்னதுரை, திரு. ஏ. | மேல்மலையனூர். |
| 108 | சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி. |
| 109 | சின்னராசு, திரு. மா. | தொண்டாமுத்தூர். |
| 110 | சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம். |
| 111 | சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர். |
| 112 | சுந்தரம், திரு. மு. | ரிஷிவந்தியம். |
| 113 | சுந்தரமூர்த்தி, திரு. ஆர். | முகையூர். |
| 114 | சுந்தரராஜ், திரு. நா. | திருமயம். |
| 115 | சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர். |
| 116 | சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை. |
| 117 | சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். | போடிநாயக்கனூர். |
| 118 | சுப்பிரமணியன், திரு. மா. | திருவையாறு. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 119 | சுப்பிரமணியன், திரு. வி. | திருநாவலூர். |
| 120 | சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர். |
| 121 | சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி. |
| 122 | செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டிபாளையம் |
| 123 | செம்மலை, திரு. செ. | தாரமங்கலம். |
| 124 | செல்லமுத்து, திரு. எம். | திருவாரூர் (செ.வ.), |
| 125 | செல்வராசன், திரு. அ. | துறைமுகம், |
| 126 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. | அரவக்குறிச்சி. |
| 127 | சேதுராமன், திரு. ஏ. எம். | ஆற்காடு. |
| 128 | சொக்கலிங்கம், திரு. கே. | திருப்போரூர். |
| 129 | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை. |
| 130 | சோமு, திரு. என். வி. என். | பூங்கா நகர். |
| 131 | சௌந்திரராசன், திரு. கே. | திருச்சி-2. |
| 132 | டாக்டர் சௌரிராஜன், திரு. கே. | தி. நகர். |
| 133 | தங்கமணி கவுண்டர், திரு. கே. எம். | திண்டிவனம். |
| 134 | தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி. |
| 135 | தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 136 | தங்கவேலு, திரு. பி. | ஜெயங்கொண்டான். |
| 137 | தவசி, திரு. ஆர். | பரமக்குடி (செ. வ.). |
| 138 | தனபால், திரு. ப. | சங்கரி (செ. வ.). |
| 139 | தனுக்கோடித் தேவர், திரு. கே. | முதுகுளத்தூர். |
| 140 | தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 141 | தியாகராசன், திரு. ஆர். | விருத்தாசலம். |
| 142 | திருச்சி சௌந்திரராசன் திரு. ஆர். | ஸ்ரீரங்கம். |
| 143 | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி. |
| 144 | திருமாறன், திரு. பெ. | ஆலங்குடி. |
| 145 | திருமான், திரு. இரா. | ஏற்காடு (செ.வ.). |
| 146 | திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம். |
| 147 | தீர்த்தராமன், திரு. ப. | பொன்னகரம். |
| 148 | துரைசாமி, திரு. பி. எஸ். | பர்கூர். |
| 149 | துரைமுருகன், திரு. இரா | ராணிப்பேட்டை |
| 150 | துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 151 | துரைராஜ், திரு. பி. .. | சங்கரநாயினார் கோவில் (செ. வ.) |
| 152 | தேவராஜ், திரு. வி. எம். .. | வேலூர் |
| 153 | நடராஜன், திரு. எஸ். .. | தஞ்சாவூர் |
| 154 | நரசிம்மன், திரு. பூ. மு. .. | பள்ளிப்பட்டு |
| 155 | நல்லப்பன், திரு. தி. கா. .. | பெருந்துறை |
| 156 | நவநீத கிருஷ்ண பாண்டியன், திரு. .. | ஆலங்குளம் |
| 157 | நாச்சிமுத்து, திரு. கே. பி. .. | மேட்டூர் |
| 158 | நாராயணசாமி, திரு. கே. .. | திருவண்ணாமலை |
| 159 | நாராயணன், திரு. பி. ஜி. .. | பவானி |
| 160 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. .. | திருநெல்வேலி |
| 161 | நெடுமாறன், திரு. ப. .. | மதுரை (மத்திய) |
| 162 | பக்கீர் முகம்மது, திரு. இ. எஸ். எம். .. | கும்பகோணம் |
| 163 | பட்டாபிராமன், திரு. செ. .. | திருவள்ளூர் |
| 164 | பம்மல் நல்லதம்பி, திரு. .. | தாம்பரம் |
| 165 | பரமசிவ கவுண்டர், திரு. பி. என். .. | பல்லடம் |
| 166 | பலராமன், திரு. இல. .. | போளூர் |
| 167 | பழனிசாமி, திரு. சு. .. | மேட்டுப்பாளையம் |
| 168 | பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர் |
| 169 | பழனியப்பன், திரு. கு. ப. .. | விழுப்புரம் |
| 170 | பழனிவேல், திரு. என். .. | பழனி (செ.வ.) |
| 171 | பாண்டியன், திரு. பி. எச். .. | சேரன்மாதேவி |
| 172 | பாபு கோவிந்தராஜன், திரு. .. | கடலூர் |
| 173 | பாபு ஜனார்த்தனன், திரு. .. | செய்யாறு |
| 174 | பாரமலை, திரு. க. .. | மானாமதுரை (செ.வ.) |
| 175 | பாலகிருஷ்ணன், திரு. ச. .. | மொடக்குறிச்சி |
| 176 | பாலகிருஷ்ணன், திரு. வி. .. | சிவகாசி |
| 177 | பாலசுப்பிரமணியன், திரு. க. .. | சீர்காழி (செ.வ.) |
| 178 | வேடசந்தூர் பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. .. | வேடசந்தூர் |
| 179 | பாலன், திரு. சு. .. | பெரம்பூர் (செ.வ.) |
| 180 | பாலுச்சாமி, திரு. ஏ. .. | சமயநல்லூர் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 181 | பிச்சை, திரு. எம். .. | அருப்புக்கோட்டை |
| 182 | பிரபாகரன், திரு. ஜே. சி. டி. .. | வில்லிவாக்கம் |
| 183 | புருஷோத்தமன், திரு. நு. .. | சைதாப்பேட்டை |
| 184 | பூங்காவனம், திரு. என். ஏ. .. | காட்பாடி |
| 185 | பெரியசாமி, திரு. ஏ. .. | தாராபுரம் (செ.வ.) |
| 186 | பெரியசாமி, திரு. ரா. .. | தொட்டியம் (செ.வ.) |
| 187 | பெருமாள், திரு. என். .. | வரகூர் (செ.வ.) |
| 183 | பெருமாள், திரு. ரா. கு. .. | விளாத்திகுளம் |
| 189 | பொன்னம்மாள், திருமதி. ஏ. எஸ். .. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 190 | பொன்னுரங்கம், திரு. ப. .. | ராயபுரம் |
| 191 | பொன்னையன், திரு. சி. .. | திருச்செங்கோடு |
| 192 | மணி, திரு. டி. .. | விளவங்கோடு |
| 193 | மணிமாறன், திரு. ஆர். .. | திருப்பூர் |
| 194 | மாணிக்கம், திரு. எம். எஸ். .. | வேதாரண்யம் |
| 195 | மாரிமுத்து, திரு. த. .. | குளத்தூர் (செ.வ.) |
| 196 | முகமது இஸ்மாயில், திரு. பி. .. | பத்மநாபபுரம் |
| 197 | முசிறிப்புத்தன், திரு. பி. .. | திருச்சி-1 |
| 198 | முத்துகிருஷ்ணன், திரு. சு. .. | கன்னியாகுமரி |
| 199 | முத்துசாமி, திரு. சு. .. | ஈரோடு |
| 200 | முத்துராமலிங்கம், திரு. இ. .. | ராதாபுரம் |
| 201 | முத்துவேல், திரு. என். .. | வானூர் (செ.வ.) |
| 202 | முத்தையா, திரு. இரா. .. | சேடப்பட்டி |
| 203 | முனிரத்தினம், திரு. இரா. சா. .. | கும்மிடிபூண்டி |
| 204 | முனுசாமி, திரு. மு. ப. .. | பாலக்கோடு |
| 205 | மூர்த்தி, திரு. ஜி. .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 206 | மொக்கையன், திரு. பி. .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 207 | யசோதா, திருமதி. டி. .. | ஸ்ரீ பெரும்புதூர் |
| 208 | ரகுமான்கான், திரு. அ. .. | சேப்பாக்கம் |
| 209 | ரங்கசாமி, திரு. ஆர். .. | சத்தியமங்கலம் |
| 210 | ரங்கசாமி, திரு. க. .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 211 | ரமணி, திரு. கு. .. | கோயம்புத்தூர் (கிழக்கு) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
| --- | --- |
| 212 ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. .. | புதுக்கோட்டை |
| 213 ராஜமாணிக்கம், திரு. எம். கே. .. | முசிறி |
| 214 ரெத்தினராஜ், திரு. எஸ். .. | குளச்சல் |
| 215 வரதராஜன், திரு. என். .. | திண்டுக்கல் |
| 216 விசயலட்சுமி, செல்வி வி. .. | வீரபாண்டி |
| 217 வின்செண்ட், திரு. மி. .. | நாகர்கோவில் |
| 218 விஜயசாரதி, திரு. எம். .. | அரக்கோணம் (செ. வ.) |
| 219 விஜயபாலன், திரு. என். .. | பூம்புகார் |
| 220 விஜயராகவன், திரு. பொ. .. | கிள்ளியூர் |
| 221 விஸ்வநாதன், திரு. கே. .. | அணைக்கட்டு |
| 222 வீராசாமி, திரு. த. .. | ஒரத்தநாடு |
| 223 வீராணம்பலம், திரு. க.வெ. .. | மேலூர் |
| 224 வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. .. | காஞ்சி |
| 225 வெங்கட ரெட்டி, திரு. டி. .. | ஒசூர் |
| 226 வெங்கடேசன், திரு.பி.எம். .. | பெரணமல்லூர் |
| 227 வெள்ளைச்சாமி, திரு. அ. .. | ஆத்தூர் |
| 228 வேணுகோபால், திரு. த. .. | தண்டராம்பட்டு |
| 229 வேலப்பன், திரு. சி. வி. .. | கபிலர்மலை |
| 230 ஜகத்ரட்சகன், திரு. எஸ். .. | உத்திரமேரூர் |
| 231 ஜான் வின்சென்ட், திரு. மு. .. | நாங்குனேரி |
| 232 ஜெயராமன், திரு.வே.இரா. .. | தேனி |
| 233 ஹாஜா செரீப், திரு. கே. எஸ். ஜி. .. | திருவல்லிக்கேணி |
| 234 ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. | திருவட்டார் |
| 235 மார்க்ரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி. .. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்.

1. மாண்புமிகு திரு. இர்ராம. வீரப்பன்—அமைச்சர்.
2. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்.
3. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்.
4. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது—அமைச்சர்.
5. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

---

செவ்வாய்க்கிழமை, 1982 மார்ச் 9

மாசி 25, துன்மதி—திருவள்ளுவர் 2013

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராஜாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்
எண்ணப் படவேண்டா தார்.

கள்ளை உண்ணக் கூடாது. சான்றோரால் நன்கு எண்ணப் படுவதை விரும்பாதவர் கள்ளை உண்ண வேண்டுமானால் உண்ணலாம்,

### 1. வினாக்கள்-விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

**ஆம்பூர், வாணியம்பாடி நகர தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்குத் தனி மின் இணைப்புகள் வழங்கும் திட்டம்.**

*வினா எண். 421—திரு. ந. குலசேகரபாண்டியன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் ஆம்பூர், வாணியம்பாடி நகரங்களில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்குத் தனி மின்சார லைன்கள் வாயிலாக இணைப்புகள் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ) : ஆம்பூர் பகுதியில் தோல் பதனிடும் எட்டு தொழிற்சாலைகளுக்கு மின் பயனீட்டாளர்களின் செலவில் தனி மின் கம்பித் தொடர் அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விரைவில் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. வாணியம்பாடி பகுதியிலுள்ள இத்தகைய தொழிற்சாலைகளுக்குத் தனி மின் கம்பித் தொடர் அமைக்கும் செயற் குறிப்புகள் மின் வாரியத்தின் பரிசீலனையில் இல்லை.

திரு. ந. குலசேகரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர் நகருக்கு இப்படித் தனி மின்சார இணைப்புகள் வழங்குவது குறித்து அறிவித்தமைக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே போன்று வாணியம்பாடி நகரிலும் தோல் பதனிடும் தொழிற்சாலையின் அதிபர்கள் இப்படித் தனி இணைப்புகள் வேண்டும் என்று கேட்க முன் வருவார்களேயானால் அரசு அதைச் செய்து தர ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அரசு நிச்சயமாக ஆவன செய்யும்.

திரு. ந. குலசேகரபாண்டியன் : தலைவ்ரவர்களே, இப்படி ஆம்பூர் நகரிலுள்ள தொழிற்சாலைகளுக்குத் தனியாக இணைப்புகள் வழங்குவதன் மூலம் அரசுக்கு ஏற்படும் மொத்தச் செலவு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இதிலே, அரசுக்குச் செலவு இல்லை. இந்தத் தனி வசதியைத் தொழில் அதிபர்கள் விரும்புகின்ற காரணத்தால் இதற்கு ஆகின்ற செலவை அவர்களே ஏற்றுக் கொள்கிறார்கள். 13,82,962 ரூபாய் தொழில் அதிபர்கள் கட்டிய பணத்தில் இந்த வேலை நடைபெறுகிறது.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று தனி லைன்களை அந்தத் தொழில் அதிபர்களுக்குக் கொடுப்பதில் யாருக்கும் ஆட்சேபணை இல்லையா ? இதனால் அந்தப் பகுதி விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்படுமா? அந்த மின் இணைப்புத் தொழிற்சாலைகளுக்குச் செல்லும்போது விவசாயிகளுக்குப் போதிய மின்சாரம் கிடைக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## புதிய மின் திட்டங்கள்.

*வினா எண். 422—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரண்டாயிரம் மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் புதிய திட்டத்திற்கு மத்திய அரசிடம் தமிழ் மாநில அரசு அனுமதி கோரியுள்ளதா ?

(ஆ) ஆமெனில், இது பற்றிய விவரம் என்ன ?

(இ) மத்திய அரசின் பதில் என்ன ?





மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ), (ஆ) மற்றும் இ) : கீழ்க்கண்ட திட்டங்கள் மத்திய அரசின் அனுமதி கோரி அனுப்பப்பட்டுள்ளன :

(1) வட சென்னை அனல் மின் திட்டம் 5×210 மெகாவாட் பிரிவுகள்.

(2) மேட்டூர் அனல் விரிவாக்கத் திட்டம் 2×210 மெகாவாட் பிரிவுகள்.

(3) தூத்துக்குடி விரிவாக்கத் திட்டம் ரூ. 1×500 மெகாவாட் பிரிவும், 1×210 மெகாவாட் பிரிவும்.

இத் திட்டங்களுக்கு மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மின் பற்றாக்குறை உள்ள மாநிலங்கள் போதிய மின் உற்பத்திக்காக மத்திய அரசிடம் அனுமதி கோரும்போது மத்திய அரசு என்ன அடிப்படையிலே அனுமதி வழங்குகிறது? அப்படி அனுமதி வழங்குவதில்லையானால் தாமதத்தைக் குறைக்க அரசு என்ன நடவடிக்கை மேற் கொண்டுள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அன்னுவல் பவர் சர்வே கமிட்டி என்ற ஒன்றினை மத்திய அரசு வைத்து அந்த அடிப்படையில் ஒவ்வொரு மாநிலத்தின் பற்றாக்குறையையும் கணக்கிடுகிறார்கள். தென்னகத்தைப் பொறுத்த வரையில் மிகப் பெரும் பற்றாக்குறைக்கு ஆளாகி இருப்பது தமிழகம்தான். இந்த நிலையை எடுத்துச் சொல்லி அனல் மின் உற்பத்தித் திட்டங்களுக்கு அனுமதி வழங்க வேண்டும் என்று மத்திய அரசை நாம் வற்புறுத்தி இருக்கிறோம். அந்த அடிப்படையிலே இந்தத் திட்டங்களைப் போட்டு கடந்த டிசம்பர் மாதத்திலே மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. விரைவிலே அனுமதி வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு அனுமதி அளித்தால் இந்தத் திட்டங்களை நிறைவேற்ற எவ்வளவு காலமாகும்? இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படுமானால் நம்முடைய தேவையில் எத்தனை சதவீதம் பூர்த்தி செய்யப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

[1982 மார்ச் 9

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நாம் இப்போது போட்டிருக்கிற திட்டங்களோடு, கேஸ் டர்பைன் என்ற அளவில் ஒரு 300 மெகாவாட்டில் திட்டம் ஒன்று போட்டிருக்கிறோம். இவைகள் அனைத்தும் சேர்த்து 2,480 மெகாவாட்டுக்கு வருகிறது. இதற்கு 1,345 கோடி ரூபாய் செலவு ஆகும் என்று எதிர்பார்க்கப்பெறுகிறது. அவர்கள் அனுமதி கொடுத்தால், 3 அல்லது 4 ஆண்டுகளில் நிறைவேற்றப் பெறும். இந்தத் திட்டங்கள் அனைத்தும் நிறைவேற்றி முடிக்கப் பெறும்போது, மின் தேவையில் பற்றாக்குறை இராது. நாம் தன்னிறைவை எய்துவோம் என்பதுதான் நிலை.

## திருப்பனந்தாளில் துணைப் பதிவாளர் அலுவலகம் ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண் 423—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் வட்டம் திருப்பனந்தாள் பேரூராட்சியில் துணைப் பதிவாளர் அலுவலகம் ஏற்படுத்த அரசு செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மற்றும் (ஆ) 1982—83 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின் கீழ் திருப்பனந்தாளில் ஒரு சார்பதிவாளர் அலுவலகம் திறக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டே இந்தத் துணைப் பதிவாளர் அலுவலகம் ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இன்று வரையில் அந்த அலுவலகம் திறக்கப்படவில்லை. ஆகவே இந்த ஏப்ரல் மாதத்திலாவது அந்தப் பகுதியில், பதிவு செய்ய வருபவர்களின் நிலையைக் கவனத்தில் கொண்டு, இந்த அலுவலகம் திறக்கப்படுமா என்று அறிய விரும்புவதோடு, அந்த அலுவலக எல்லைக்குள் எத்தனை ரெவின்யூ கிராமங்கள் வரை பதிவு செய்யும் பொருட்டு எடுத்துக் கொள்ளப்படும் என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பனந்தாள் எல்லைக்குள் 30 ரெவின்யூ கிராமங்கள் இணைக்கப்பட இருக்கின்றன. அதில் ஏறத்தாழ ஆண்டு ஒன்றுக்கு 722 பத்திரங்கள்—டாக்குமெண்டுகள் பதிவு செய்கிற ஒரு வாய்ப்பு இருக்கிறது. இந்த ஆண்டு அரசு 30 சார்பதிவாளர் அலுவலகங்களைத் திறக்க 2 ஆவது திட்டத்தின் கீழ் முடிவு செய்திருக்கிறது. அதிலே ஒன்றாக இந்த திருப்பனந்தாள் நிச்சயமாக இடம் பெறும்.



திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இந்தத் துணைப் பதிவாளர் அலுவலகங்களில் ஸ்டாம்புகளை வாங்குகிறபோது, மதிப்பீடுகள் குறைத்துக் காண்பிக்கப் படுகிறது என்று சொல்லப்படுகிறதே. வருவாய்த் துறையில், இருக்கிற வட்டாட்சியர் அல்லது கோட்டாட்சியர் அவர்களிடத்தில் மறுபடியும் மதிப்பீடு போடக் கொடுக்கிறார்கள். அதைத் தவிர்த்து பதிவாளர் அவர்களிடத்திலேயே, அப்படிச் சரியான மதிப்பீடு நிர்ணயிக்கப்படுமா ? கோட்ட அளவில் மாவட்டப் பதிவாளர்களின் பதவிகளை ஏற்படுத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, இது ஒரு கொள்கைப் பிரச்சினை. விவரமாக வருகிற 19 ஆம் தேதி மானியத்தின் விவாதத்தின்போது விளக்கயிருக்கிறேன்.

## மலிவு விலையில் பாரதி-பாரதிதாசன் கவிதைகளை வெளியிடும் திட்டம்.

*வினா எண் 424—திருவாளர்கள் மி. வின்சென்ட், செ. செம்மலை, வேடாசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பாரதி—பாரதிதாசன் கவிதைகள் அச்சிடப்பட்டு மலிவு விலையில் விநியோகிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (1) மகாகவி பாரதியாரின் கவிதைகள் மற்ற படைப்புகளைச் சிறப்பாகவும் மலிவுப் பதிப்பாகவும் வெளியிடுவது பற்றி பரிசீலனை செய்ய துணை வேந்தர்கள் குழு ஒன்று அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

(2) பாரதிதாசன் கவிதைகளின் பதிப்பு உரிமையும் விற்பனை உரிமையும் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் குடும்பத்தாரிடம் உள்ளது. அவர்களின் இசைவினைப் பெற முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, '' யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவதெங்கும் காணோம் '' என்றும், '' தெருவெல்லாம் தமிழ் ஓசை

செழிக்கச் செய்வோம்'' என்றும் பாடிய பாரதியின் வாக்கினுக்கு ஒப்ப, உலகத் தமிழ் மாநாட்டை நடத்தி, தமிழ் பல்கலைக் கழகம் கண்ட புரட்சித் தலைவர் அவர்களின் அரசு, பாரதியின் கவிதைகளையும், பாரதிதாசனின் கவிதைகளையும் புத்தகங்களாக அச்சிட்டு வெளிநாடுகளுக்கும் வழங்க அரசு முன் வந்து ஏற்பாடு செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, பாரதிதாசன் கவிதைகளின் பதிப்பு உரிமையும், விற்பனை உரிமையையும் அவர்களுடைய குடும்பத்தினரிடமே இருந்து வருவதால் அந்த உரிமைகளைப் பெற தக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். அதைப் பெற்ற பிறகுதான் அரசு மேலும் அது பற்றிப் பரிசீலனை செய்யலாம்.

**திரு. மி. வின்சென்ட் :** பேரவைத் தலைவர் அவர்களே, ''ஜாதி மதங்களைப் பாரோம்—உயர் ஜன்மம் இத்தேசத்தில எய்தினராயின் வேதியராயினும் ஒன்றே—அன்றி வேறு குலத்தினராயினும் ஒன்றே'' என்ற பாரதியின் பாடலுக்குத் தக்கவாறு இந்த ஜாதி மதங்களை ஒழித்து சமத்துவம் நிலை நாட்டும் வகையில், அனைத்து ஜாதிகளையும் கொண்ட ஒரு குழுவினைக் கூட்டி, ஒற்றுமை மாநாடு நடத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதியாருடைய கவிதைகள் நாட்டிலே பரப்பப்பட்டு, அந்தக் கொள்கைகள் மக்கள் மத்தியிலே ஏற்றுக் கொள்ளப்பட்டாலேயே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய விருப்பம் நிறைவேறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9-10]

**திரு. செ. செம்மலை :** பாரதியார் பாடல்களுடைய உரிமை பாரதியாருடைய குடும்பத்தினிடமும் ஏ.வி.எம்.மிடமும் இருந்தபோது அது நாட்டுடைமையாக்கப்பட்டது போல் பாரதிதாசன் பாடல்களையும் நாட்டுடைமையாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** பாரதிதாசனுடைய பாடல்களை நாட்டுடைமையாக்க வேண்டும் என்ற முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது. ஆனால் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த பல்வேறு உறுப்பினர்கள் தங்களுக்கு உரிமை இருக்கிறது என்று அவர்கள் உரிமை கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் மிகப் பெரிய அளவில் தொகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.





ஆகவே அதைப் பற்றி அவர்களை அழைத்து சில முறை பேசப்பட்டிருக்கிறது. மீண்டும் அவர்களோடு தொடர்பு கொண்டு அதிலே ஒரு இறுதியான முடிவு எடுப்பதற்காக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முயன்று கொண்டிருக்கிறார்கள்.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** பாரதியார் கவிதைகளை மலிவு விலையில் பிரசுரிக்க குழு அமைக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பாரதியாருடைய இறுதிக்காலத்தில் எழுதிய பிரசுரிக்கப்படாமல் இருக்கிற கட்டுரைகள், உரைநடைகள் ஆகியவற்றையும் பரிசீலித்து அந்தக் குழு மலிவு விலையில் பிரசுரிக்க அரசு பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** பாரதியாரின் நூற்றாண்டு விழாவையொட்டி அமைக்கப் பெற்றிருக்கிற பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள் குழு பல பரிந்துரைகளை இப்போது முடிவாக எடுத்திருக்கிறார்கள். பாரதியார் படைப்புகளை மூன்று பாகங்களாகவும், நினைவு மலர் ஒன்றும், மொழி பெயர்ப்பு நூல்களும் வெளியிடலாம் என்று இப்போது முடிவு செய்யப்பட்டிருக்கிறது. பாரதியார் நூல்களைத் தனியார் மலிவு விலையில் வெளியிட முன்வந்தால் அவர்களுக்கு மத்திய அரசை அணுகி மலிவு விலையில் காகிதம் வழங்க ஏற்பாடு செய்யலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல் பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள் குழு எல்லா நூல்களையும் இதுவரையில் அச்சில் வராத நூல்களையும் கொண்டுவருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. நெடுமாறன் :** பாரதியார் நூல்களை வெளியிடுவதற்காக பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள் குழு அமைக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்தக் குழுவினர்—பாரதியார் பாடல்கள் எந்தெந்த அடிப்படையில் எந்தெந்தத் தேதிகளில் எழுதப்பட்டன என்ற விவரம் இதுவரையில் எந்தப் பதிப்பிலும் இல்லை. ஆகவே, அதை முறையாக ஆராய்ச்சி செய்து தொகுத்து வெளியிடுவதற்கான முயற்சியை அந்தக் குழு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** பாரதியார் நூல்களை வெளியிடுவதற்காக, பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள் அடங்கியுள்ள குழு அமைப்பதற்கான காரணமே இதுபோல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அந்தக் குறிப்புகளை எல்லாம் தேடிக் கண்டுபிடித்து முறையாக அகில உலக அளவில் பல்வேறு மொழிகளில் வெளியிட வேண்டும் என்பதற்காகத்தான். பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள் குழு எந்த முடிவுகளை

மேற்கொண்டிருக்கிறது என்று முடிவாக இன்னும் அரசுக்கு வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் அந்தக் குறிப்பும் பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள் குழுவினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : பாரதி, பாரதிதாசன் ஆகியோருடைய கவிதைகளை மக்கள் மத்தியில் பரப்பும் விதத்தில் திரைப்படங்களில் கண்டிப்பாக அவர்களின் ஒரு பாடல் இருக்க வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அப்படி கண்டிப்பாகத் திரைப்படங்களில் பாரதி, பாரதிதாசன் பாடல்களை உபயோகப்படுத்த வேண்டும் என்று ஆணையிட முடியாது. திரைப்படங்களில் வருவதால் மாத்திரம்தான் பாடல்கள் புகழ் பெற்றுவிடும் என்றும் நாம் எடுத்துக்கொள்ள முடியாது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பாமரர்களும் புரிந்துகொள்ளும் வகையில் பாரதி பாடல்கள் பிரசுரிக்கப்பட வேண்டும். பாரதியின் கவிதைகளை மலிவு விலையில் வெளியிடுவதற்கு அமைச்சர் அவர்கள் பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள் குழு அமைத்திருப்பதாகச் சொன்னார்கள். அவற்றை மலிவு விலையில் வெளியிட நீண்ட நாட்கள் தேவையில்லை. ஆகவே விரைவில் அவை வெளியிடப்படுமா ? மேலும் பாரதி நூற்றாண்டு விழா ஆண்டான இந்த ஆண்டில் அரசாங்கம் தனியாருக்குக் கொடுப்பதை விட அரசே மலிவு விலையில் அவற்றை வெளியிட முயற்சிகள் எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பாரதியார் கவிதைகள் இப்போதே தனியாரால் பல பதிப்புகளாக வெளியிடப்பட்டிருக்கின்றன. அதிலே மலிவுப் பதிப்பும் வந்திருக்கிறது. முன்னால் ஒரு முறை அரசாங்கச் சார்பில் பாரதியுடைய நூல்களை மலிவுப் பதிப்பில் வெளியிட்டபோது அது அப்படியே மூட்டை கட்டி வைக்கப்பட்டிருக்கிறது என்ற தகவலை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே மலிவுப் பதிப்பு என்று வந்துவிட்டாலே மக்களிடத்தில் அந்தச் சரக்கே மலிவான சரக்கோ என்ற எண்ணம் வந்துவிடுகிறது. பாரதியார் பாடல்கள் அப்படி மலிவான சரக்கல்ல. உலகம் முழுதும் பாராட்டப் பெறுகிற மிக உயர்ந்த சரக்கு. இன்று மக்களிடத்திலுள்ள மன உணர்வு கூட அதிகமான விலை கொடுத்து வாங்கினால் உயர்ந்த பொருள் என்ற எண்ணமும் மனப்பான்மையும் வளர்ந்து கொண்டிருக்கிற காலம். அதனால்தான் அரசாங்கம் பாரதியாரின் கவிதைகளைப் பல்





வேறு இந்திய மொழிகளில், உலக மொழிகளில் பரப்புவதன் மூலம், இந்தியாவில், தமிழகத்தில், உலகத்தில் உலகப் புகழ்பெற்ற மாபெரும் கவிஞர் தோன்றினார் என்ற ஒரு பெருமையை எடுத்துக் காட்டுவதற்கு இந்த அரசு பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள் மூலம் முயற்சி எடுத்துக்கொள்ள இருக்கிறது.

திரு. கோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பாரதி நூற்றாண்டு விழாவையொட்டி, பாரதி பிறந்த எட்டையாபுரத்திலுள்ள மண்டபத்திற்குப் பின்னால் வள்ளுவர் கோட்டம் போன்ற ஒரு கலை அரங்கத்தை அமைத்து, அதிலே பாரதியாரின் முக்கியமான கவிதைகளையும், வசனங்களையும் பொறிப்பதற்கான திட்டம் இருந்தது ; அது எப்போது துவங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பாரதியாரின் மிகச் சிறந்த கவிதைகளையும், கருத்துக்களையும் அவர்கள் வாழ்க்கையையொட்டிய வரலாற்றுச் சம்பவங்களையும் பல்வேறு வகைகளில் பொறித்துக் காட்டுகின்ற வகையில் கலைக்கூடம் அமைக்கப்பட வேண்டுமென்ற கொள்கையை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. அந்தக் கருத்தின் அடிப்படையில் எப்படி அமைக்கப்பட வேண்டுமென்பதற்காக, அரசுக்கு, பரிந்துரை வழங்குவதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவின் பரிந்துரை கிடைத்தவுடன், நிதி நிலையையொட்டி, விரைவிலே அந்தப் பணியை மேற்கொள்ளும். காரணம், இது ஒரு மிகப் பெரிய முதலீட்டுச் செலவிலே செய்ய இருக்கின்ற காரியமாகும்.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, பாரதி நூல்களை மலிவு விலையில் வெளியிடுவதற்குத் துணை வேந்தர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதிலே, துணை வேந்தர்கள் மட்டுமல்லாமல், பாரதியாரோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர்களையும், பாரதியாரோடு மிகவும் ஈடுபாடு கொண்டிருந்தவர்களையும் இந்தக் குழுவில் சேர்த்துக் கொள்ளக்கூடாதா ? அடுத்து, பாரதியார் சம்பந்தப்பட்ட கவிதைகளுக்கு சித்திரங்களாக பல ஆண்டு காலம், பல பத்திரிகைகளில், ஆண்டு மலர்களில் சேகர், ஆரியா போன்றவர்கள் வரைந்த சித்திரங்களையும் தொகுத்து இத்துடன் வெளியிடுவதற்கு, பெருமை தேடித் தருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, துணை வேந்தர்கள் அடங்கிய குழுவிலே உள்ளவர்கள் எல்லாத் தரப்பினரோடும் தொடர்புகொண்டு, எழுத்தாளர்கள், ஓவியர்கள் போன்றவர்களையும் கலந்துகொண்டு

தான் சில முடிவுகளை எடுக்கிறார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் மலிவுப் பதிப்பை வெளியிடுவதற்காக பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள் கொண்ட குழு நியமிக்கப்பட்டிருப்பதாகக் கூறிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு கொடுத்திருக்கிற பணிகளில் மலிவுப் பதிப்பை வெளியிடுவது பற்றியும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்பதே தவிர, மலிவுப் பதிப்பாக வெளியிட வேண்டுமென்பதற்காக மட்டுமல்ல. இப்போது அவர்கள் முதல் கூட்டத்தைக் கூட்டி, அதிலே மலிவுப் பதிப்பை அரசாங்கம் வெளியிடுவதைவிட, தனியார் வெளியிடலாம் என்றும், அதற்கு அரசாங்கம் வேறு சில சலுகைகளைக் கொடுத்து ஊக்குவிக்கலாம் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தெரிவித்துள்ள கருத்துக்களையொட்டித்தான், பல்கலைக் கழக துணை வேந்தர்கள் குழு இப்பணியை மேற்கொள்ள இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது, மலிவு விலையில் அச்சடிக்கப்பட்ட புத்தகங்கள் விற்பனையாகாமல் மிகுதியாக இருப்பதாகச் சொன்னார்கள். அவை ஆங்கிலத்தில் இருந்தால், கல்லூரி மாணவர்களுக்கும், தமிழிலே இருந்தால் எல்லாப் பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கும் பாதி விலையில் கொடுப்பதற்கோ அல்லது வீணாவதை நல்லமுறையில் பயன்படுத்த இலவசமாகவோ எல்லாப் பள்ளிக்கூடக் குழந்தைகளுக்கும் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இலவசமாகக் கொடுத்தால் யாரும் படிக்க மாட்டார்கள் ; இது பெரியார் சித்தாந்தம்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இது பாரதியாரின் 80-வது ஆண்டு விழாவையொட்டி அப்போது போடப்பட்டதாக அறிகிறேன். இன்றைக்கு 20 ஆண்டுகளுக்குப் பிறகு அது உபயோகிப்பதற்குத் தகுதியுள்ளதாக இருக்குமா என்பதே சந்தேகம். இருந்தாலும், இன்றைய தினம் பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற முயற்சியில் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் மிகப் பெரிய அளவிற்கு பாரதியாரின் பாடல்களைப் பரப்புவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டுமென்பது இந்த அரசின் திட்டமாகும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் நூற்றாண்டையொட்டி, குழந்தைகள் சம்பந்தமான திரைப்படம் எடுத்தால், அதற்கு சில சலுகைகளை



தமிழக அரசு அறிவித்தது. அதேபோல், பாரதியாரின் நூற்றாண்டு விழாவையொட்டி, பாரதியாரின் கவிதைகளை, கருத்துக்களையொட்டி திரைப்படம் எடுத்தால், அதற்குத் தமிழக அரசு அதுமாதிரியான சலுகைகளைக் கொடுக்கும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு படம் பாரதியாருடைய வாழ்க்கையின் கருத்துக்களை அடிப்படையாக வைத்து எடுத்து முடித்ததற்குப் பிறகு அந்தப் படம் அந்தக் கருத்துக்களை பிரதிபலிக்கிறதா என்பதைத் தெரிந்து மக்களுக்குப் பயன்படுகிறதா என்பதைப் பார்த்து வரிச் சலுகை அளிப்பதற்காகவே ஒரு குழு இருக்கிறது. அந்தக் குழுவினிடத்திலே அந்தப் படத்தை முடித்துக் காண்பித்தால் அதற்குப் பிறகு அரசு அதைப் பரிசீலித்து முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ணன் பாண்டியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது மதச் சண்டைகள், ஜாதிச் சண்டைகள் அதிகமாக நடைபெறுகின்றன. பாரதியார் பாடிய
''தீயினை கும்பிடும் பார்ப்பார். தினம் திக்கை வணங்கிடும் துருக்கர், கோயிற் சிலுவையின் முன்னே நின்று கும்பிடும் யேசு மதத்தார்''

என்னும் இந்த பாடலை ஒவ்வொரு ஊரிலும் செய்திப் பலகைகளிலே பதித்து மதச் சண்டைகள் வராமல் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதியார் பாடலை ஒவ்வொரு இடத்திலும் எழுதி வைப்பதாலே மாத்திரம் இந்தச் சண்டைகளைக் குறைத்துவிட முடியாது. காரணம், படித்தவர்கள்தான் இந்தச் சண்டையிலே ஈடுபடுகிறார்கள் என்பதல்ல; படிக்காதவர்களும், தெரியாதவர்களும் ஈடுபடுகிறார்கள். அவர்கள் ஈடுபடுகிறார்கள் என்பதைவிட ஈடுபட வைக்கிறவர்களைத்தான் நாம் திருத்த வேண்டும். இதற்கு பாரதியார் பாடல் மாத்திரமல்ல, யேசுவினுடைய பொன்மொழிகள், நபிகள் நாயகம் அவர்களுடைய உரைகள், நம்முடைய ஆண்டவனுடைய வேதங்கள், எத்தனை சொன்னாலும் திட்டமிட்டுச் செய்கிறவர்களைத் திருத்த முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## சாத்தனூர் அணைப்பகுதியைச் சுற்றுலா மையமாக்கும் திட்டம்.

*வினா எண் 425—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

சாத்தனூர் அணையில் ஒரு சுற்றுலா மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** அதை மாவட்ட உலாத் தலமாக அபிவிருத்தி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. த. வேணுகோபால் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எப்போது செயல்படும்? இதனுடைய மதிப்பீடுகள் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு இடங்களைத் தேர்ந்தெடுத்து போக்குவரத்துக் கழகங்களின் நிதியிலேயிருந்து 3 லட்சம் ரூபாய் செலவில் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. வட ஆற்காடு மாவட்டத்தை பொறுத்தவரையில் சாத்தனூர் அணை, ஏலகிரி மலை ஆக இரண்டு இடங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ஏலகிரி மலையை இப்போது முதலில் அபிவிருத்தி செய்கிற பகுதியாக மேற்கொண்டு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அதற்குப் பிறகு சாத்தனூர் அணையில் அந்தத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

**திரு. த. வேணுகோபால் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, சாத்தனூர் அணையைக் கட்டும்போது சுற்றுலாப் பயணிகள் தங்கும் வசதிகளைப் பெற பொதுப்பணித் துறையினரால் சிறுசிறு வீடுகளாகக் கட்டப்பட்டிருக்கின்றன. அந்த வீடுகள் சிதிலமாகி விட்டன. பயணிகள் யாரும் இப்போது தங்குவது கிடையாது. அந்தக் கட்டிடங்களை சுற்றுலா வளர்ச்சியின்கீழ் எடுத்துக் கொண்டு நல்லமுறையிலே செப்பனிட்டு சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு ஏற்ப செய்து தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தனூர் அணை அமைக்கப்பட்ட போது பொதுப்பணித் துறையினரால் அந்தப் பகுதியிலே சுற்றுலாப் பயணிகள் காண்பதற்கு ஏற்ற வகையிலே திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அந்த வீடுகள் எல்லாம் பொதுப்





பணித் துறையின் நிர்வாகத்திலே இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியபோது அவைகள் எல்லாம் தங்குவதற்கு வசதியற்ற நிலையிலே இருப்பதாகச் சொன்னார்கள். அதுபற்றிய தகவல் என்னிடத்திலே இல்லை. இருந்தாலும் அந்த வீடுகளை மேம்பாடு அடையச் செய்யவும் சுற்றுலாத் துறை பொதுப்பணித் துறைக்குத் தகவல் தரும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தக் குறிப்பை பொதுப் பணித் துறைக்கு அறிவிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தனூர் அணையில் தண்ணீர் பிடிக்கிற நடுப்பகுதியில் மேடான ஒரு பாகம் இருக்கிறது. அதை மக்கள் சென்று பார்க்கிற வகையிலே—ஏற்கனவே கிருஷ்ணா நதியிலே இப்படி அமைத்திருக்கிறார்கள்—படகு போக்குவரத்து ஏற்படுத்திக் கொடுத்தால் அங்கிருக்கும் கல் வெட்டுகள் முதலியவற்றைப் பார்ப்பதற்கு வசதியாக இருக்கும். இதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே சாத்தனூர் அணை மக்கள் பாராட்டுகிற சுற்றுலாப் பகுதியாக அமைந்திருக்கிறது. ஆகவே, எதிர்காலத்திலே அந்தப் பகுதியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிற கருத்துக்களை எல்லாம் அடிப்படையாக வைத்து மேலும் நல்ல பணிகளை மேற்கொள்வதற்கும் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் அரசு பரிசீலனை செய்யும்.

## கரும்பு வளர்ச்சிப்பணியினை மாற்றியமைக்கும் திட்டம்.

*வினா எண் 426—திரு. செ. செம்மலை : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கரும்பு வளர்ச்சிப் பணியை வேளாண்மைத்துறை இயக்குநரிடமிருந்து சர்க்கரை உற்பத்தி இயக்குநருக்கு மாற்றுவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் தற்போதைய நிலை என்ன?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** (அ) மற்றும் (ஆ) கரும்பு வளர்ச்சிப் பணியை வேளாண்மை இயக்குநரிடமிருந்து சர்க்கரை இயக்குநருக்கு மாற்றுவது குறித்த செயற்குறிப்பினை அரசு நன்கு பரிசீலித்து தற்போதுள்ள அமைப்பே தொடர்ந்து நீடிக்கலாம் என முடிவெடுத்துள்ளது.

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, சர்க்கரை உற்பத்தி இயக்குநர், கரும்பு வளர்ச்சிப் பணியை வேளாண்மைத் துறை இயக்குநரிடமிருந்து தனக்கு ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டதன் பேரில்தான் அரசு அதைப் பரிசீலனை செய்து முடிவு எடுத்திருக்கிறது என்று அறிகிறேன். அப்படி முடிவு எடுப்பதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, சர்க்கரை இயக்குநர் சர்க்கரை உற்பத்தியைப் பெருக்கும் பணியில் கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறார். கரும்பு வளர்ச்சிக்கான பணியிலே அத்துறைக்கு அனுபவம் இல்லை. அதனால் வேளாண்மை இயக்குநர் துறையில் கரும்பு வளர்ச்சிப் பணியில் நல்ல அனுபவம் உள்ள அலுவலர்கள் பணிபுரிகிறார்கள் என்ற காரணத்தினால் கரும்பு வளர்ச்சிப் பணி வேளாண்மை இயக்குநரிடமே இருக்கவேண்டுமென்று அரசு முடிவு செய்தது.

## தமிழகத்தில் ஸ்வீடன் நாட்டு உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள நீர் ஆராய்ச்சித் திட்டம்.

*வினா எண் 427—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சாகுபடி பரப்பை அதிகரிப்பதற்கு உதவும் வகையில் தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகம், ஸ்வீடன் நாட்டு உதவியுடன் நீர் ஆராய்ச்சித் திட்டம் ஒன்றை மேற்கொள்ள அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) ஸ்வீடன் நாட்டு உதவியுடன் கோவையில் நீர் ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைப்பது சம்பந்தமான கருத்துரு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆய்வில் இருந்து வருகிறது. இதற்கு ஆகும் செலவு ரூ. 150 இலட்சங்களையும் ஏற்க ஸ்வீடனின் பன்னாட்டு வளர்ச்சிக் கழகம் முன் வந்துள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, ரஷ்யா, ஜப்பான் போன்ற நாடுகளில் கடல் நீரிலிருந்து விவசாயம் செய்கிறார்கள். அதே மாதிரி நீர் ஆராய்ச்சியில் தமிழ்நாட்டில் உள்ள சாகுபடியின் பரப்பை அதிகப்படுத்த கடல் நீரில் விவசாயம் செய்ய அரசு ஆவன செய்யுமா?





மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே லத்தில் நாம் செய்கின்ற வேளாண்மையை முறையாக ஒழுங்காக செயல்படுத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்ததற்குப் பிறகு அதைப் பற்றி யோசிக்கலாம்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நீர் ஆராய்ச்சிக்கு ரூபாய் ஒதுக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா? ஸ்வீடன் நாட்டில் சோஷியல் பாரஸ்டிற்கு 40 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக்கேள்விக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. ஸ்வீடன் நாட்டிலே உள்ளதையெல்லாம் சொல்ல ஆரம்பிக்க வேண்டாம்.

திரு. இரா. தாமரைக்கனி : அதற்காகப் பணம் 6 ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அந்த ஆராய்ச்சிப் பணிக்கு ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நான்கு வருட காலத்திற்கு 114·13 லட்சங்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

## உள்ளாட்சிகளில் பணியாற்றும் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்கும் திட்டம்.

*வினா எண் 428—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உள்ளாட்சியின்கீழ் பணியாற்றும் ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) அதன் மீது நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ. 1-6-1981 முதல் அரசு ஊராட்சி ஒன்றியங்களின் ஆசிரியர்கள் ஊழியர்களாகி விட்டார்கள். மாநகராட்சிகளின் ஆசிரியர்கள் குறித்து கோரிக்கை எதுவும் அரசுக்கு வரவில்லை. நகராட்சிகளில் பணியாற்றும் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்குவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

[1982 மார்ச் 9

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, மாநகராட்சி ஆசிரியர்களிடமிருந்து கோரிக்கை வரவில்லை என்று குறிப்பிடப்பட்டது. அவர்களையும் அரசு ஊழியர்களாக்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? ஏற்கெனவே அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கு நேரடியாக செக் மூலம் சம்பளம் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாநகராட்சி ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை வரவில்லை. கொடுக்கின்ற சம்பளத்தை செக் மூலமாகக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். பல்வேறு முறைகளில் செக்காக வழங்குகிறோம் என்று சொன்னாலும், கேஷாக வழங்குகிறோம் என்று சொன்னாலும் அல்லது அவர்களுடைய அக்கவுண்டிலேயே போடுகிறோம் என்று சொன்னாலும் ஒரு சிலர் ஏற்றுக்கொள்கிறார்கள், ஒரு சிலர் ஏற்றுக்கொள்ளவில்லை. இப்படிப்பட்ட நிலையில செக் மூலமாக கொடுக்கலாம் என்று உத்திரவிடப்பட்டிருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : ஊராட்சி ஒன்றியங்களிலே கல்வி அலுவலர்கள் போதுமான அளவில் இல்லை என்று சொல்லப்படுகிறது. அவர்களுக்கு வேண்டிய கிளார்க், டைப்பிஸ்ட் போன்றவர்கள் இல்லாத காரணத்தினால் உடனடியாக அவர்களைக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட கேள்வி. டைப்பிஸ்டைப் பற்றியெல்லாம் கேட்கக் கூடாது.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலே உள்ள ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்கிவிட்ட காரணத்தினால் அங்கே இருக்கின்ற ஸ்டாஃபுக்கு நிறைய வேலை வந்திருக்கிறது. அதனால் தான் அந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இப்பொழுது 1-6-81-க்குப் பிறகு உதவி கல்லூரி அலுவலர்கள் அத்தனை பேர்களும் இப்பொழுது கல்வித் துறையிலே பணி புரிந்து வருகிறார்கள். ஆகவே, தட்டெழுத்தர் போன்ற பதவிகளெல்லாம் அதிலேதான் நிரப்பப்படுகின்றனவே ஒழிய ஊராட்சி ஒன்றியங்களில் அல்ல.



1982 மார்ச் 9]

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, மாநகராட்சியிலுள்ள ஆசிரியர்கள் தங்களை அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கை வரவில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். நகராட்சியின் கீழ் உள்ள ஆசிரியர்கள் பற்றிப் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். எவ்வளவு காலத்தில் அந்தப் பரிசீலனை முடிக்கப்படும்? அந்த ஆசிரியர்களின் குறைகளைத் தீர்க்கும் வகையில் துரிதமாக அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவதற்கான ஏற்பாடுகள் நடக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மாநகராட்சி ஆசிரியர்கள் எந்தக் கோரிக்கையையும் அனுப்பவில்லை. அவர்கள் அப்படி அனுப்பாததற்கு முக்கியமான காரணம் மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கும் நன்கு தெரியும் என்று நினைக்கிறேன். ஏனென்றால், ஒரு மாநகராட்சியில் பணி புரிகின்றவர்கள் நாளைக்கு அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டால் ஒரு மாநகராட்சியிலிருந்து இன்னொரு மாநகராட்சிக்குச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்படும். அதன் காரணமாக இப்படிப்பட்ட கோரிக்கைகளை எழுப்பவில்லை. ஆனால் நகராட்சி ஆசிரியர்கள் தங்களையும் எப்படி ஊராட்சி ஒன்றியங்களுடைய ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டார்களோ அதைப் போல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருப்பதற்குக் காரணம் 1-6-81 லேயிருந்து ஊராட்சி ஒன்றியங்களினுடைய ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டார்கள், அதன் விளைவு எப்படி இருக்கிறது என்பதைப் பார்த்துவிட்டு அது நல்லபடியாக திருப்திகரமாக இருக்கிறதா என்று பார்த்து இவர்களையும் அவ்வாறு செய்யலாமா வேண்டாமா என்பது பற்றி அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யூனியன் ஆசிரியர்களை அரசு ஆசிரியர்களாக மாற்றியதற்குப் பிறகு அவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய சாமான்கள், ஸ்டேஷனரி, சாக்பீஸ், டிரஷரிக்குச் சென்றால் அதற்கான செலவுத் தொகை போன்றவை கொடுக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படியென்றால் அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே அது எனக்குத் தெரியாது. ஏனென்றால் இப்பொழுது கல்வித் துறையே நேரடிக் கவனம் எடுத்திருப்பதால் அப்படிப்பட்ட குறைபாடுகள் எங்களுடைய துறைக்கு வரவில்லை.

[1982 மார்ச் 9

## நகராட்சியில் பணிபுரியும் மின்சாரத்துறை ஊழியர்களுக்கான குடும்ப நலப்பாதுகாப்புத் திட்டம்.

* வினா எண். 429—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாநகராட்சி, நகராட்சிகளில் பணிபுரியும் மின்சார இலாகா ஊழியர்கட்கு குடும்பநலப் பாதுகாப்புத் திட்டம் (பணிக்காலத்தில் மரணமடைந்தால் ரூபாய் 10,000) அமுல் படுத்த அரசுக்கு உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு எம். சின்னசாமி : பேரவைத் தலைவரவர்களே, அரசின் பரிசீலனையில் உள்ளதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தப் பரிசீலனை எப்பொழுது முடிவடையும்? அப்படிக் கொடுப்பதாக இருந்தால் எந்தத் தேதியிலிருந்து கொடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மாநகராட்சி, நகராட்சிகளில் பணிபுரியும் மின்சார இலாக்கா ஊழியர்கட்குக் குடும்பநலப் பாதுகாப்புத் திட்டத்தின் அடிப்படையில் 10,000 ரூபாய் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இது கடந்த 1-1-74—லிருந்து கொடுக்கப்படுகிறது. ஆனால் இப்படிப்பட்ட ஊழியர்களுக்குக் கடந்த 1975-லேயிருந்து கூட்டு ஆயுள் காப்பீட்டுத் திட்டம் - குரூப் இன்ஷ்யூரன்ஸ் ஸ்கீம் — அவர்களுக்குக் கொண்டு வரப்பட்டு அதிலே அவர்கள் பலனடையும் சூழ்நிலையிருக்கிறது. ஆனாலும் 10,000 ரூபாய் அவர்களுக்கும் தனியாகக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை அரசினுடைய பரிசீலனையிலேயிருக்கிறது. விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவரவர்களே, பரிசீலனையில் உள்ளது பரிசீலனையில் உள்ளது என்று பல பிரச்னைகளுக்கு அமைச்சர்களின் பதில் உள்ளது. அதற்கு ஏதாவது வரைமுறை உண்டா? இந்த நேரத்தில், இந்த வருஷத்தில், இந்தக் காலத்திற்குள் முடியும் என்ற வரைமுறையை அளிக்க வேண்டுமென்று சபாநாயகர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், அமைச்சர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேண்டுகோளுக்கு நன்றி.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மின்சார ஊழியர்களுக்கு விபத்துக் காலத்தில் இறந்தால் 10,000 ரூபாய் கொடுப்பது என்பது பரிசீலனையில்



1982 மார்ச் 9]

உள்ளது என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். ஓய்வு பெற்றாலும் பத்தாயிரம் ரூபாய் கிடைக்க இந்தப் பரிசீலனையின் இறுதியில் முடிவு இருக்குமா? இதவும் அந்தப் பரிசீலனையோடு இணைத்துப் பார்க்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இப்பொழுது தான் பரிசீலனையே நடந்து கொண்டிருக்கிறது என்பதைச் சொன்னேன். பரிசீலனைக்கு முன்னால் திட்டவட்டமான அறிவிப்பையே நம்முடைய உறுப்பினர்கள் கேட்கிறார்கள். அப்படி ஒரு அறிவிப்பைக் கொடுத்துவிட்டால் பரிசீலனையே தேவையில்லை. பரிசீலித்து முடிவெடுக்கலாம்.

## சென்னை இராயபுரம் தொகுதியிலுள்ள லெவல்கிராஸிங்

*வினா எண். 430 திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை இராயபுரம் தொகுதியில் உள்ள இராபின்சன் பூங்காவுக்கும் அரசினர் ஸ்டான்லி மருந்துவமனைக்கும் இடையில் உள்ள லெவல்கிராஸிங் அடிக்கடி மூடப்படுவதால் பொது மக்களுக்கு ஏற்படும் இன்னல்களை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அதனைக்களைய அரசு எடுக்கவிருக்கும் நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) & (ஆ) சென்னை இராயபுரம் தொகுதியில் உள்ள இராபின்சன் பூங்காவுக்கும் அரசினர் ஸ்டான்லி மருத்துவமனைக்கும் இடையில் உள்ள லெவல்கிராஸிங் அடிக்கடி மூடப்படுவதால் பொதுமக்களுக்கு ஏற்படும் இன்னல்களை அகற்ற மேற்குறிப்பிட்ட இடத்தில் வரையறுக்கப்பட்ட சுரங்கப்பாதை கட்ட திட்டமிடப்பட்டு சென்னை மாநகராட்சியின் ஆய்வில் உள்ளது.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இத்துறை அமைச்சருக்குப்பக்கத்திலே அமர்ந்திருக்கிற மாண்புமிகு திரு காளிமுத்து அவர்கள் இந்த இலாகாவின் பொறுப்பை ஏற்றிருந்தபோது இதே மாதிரி தான் சொன்னார். 2, 2½ ஆண்டுகள் போய்விட்டன. இது ரொம்ப முக்கியமான பிரச்சனை வியாபாரிகள், அலுவலகத்திற்குச் செல்பவர்கள், மற்றவர்கள் எல்லாம்கூட ரொம்ப அவதிக்குள்ளாகிறார்கள். அது மட்டும் அல்ல, இந்த லெவல் கிராசிங்குக்கு வடக்குப் பக்கத்திலே ஆர். எஸ். ஆர். எம். ஆஸ்பிட்டல் இருக்கிறது—மாண்புமிகு

அமைச்சர் ஹண்டே அவர்களுக்கு நன்றாகத் தெரியும்—தெற்கு பக்கத்திலே ஸ்டான்லி ஆஸ்பிட்டல் இருக்கிறது. இந்த இரண்டு மருத்துவ மனைகளுக்கும் போகின்ற அவசர நோயாளிகள் லெவல் கிராசிங் அடிக்கடி மூடப்படுவதால் ரொம்ப அவதிக்குள்ளாகிறார்கள். ஆகவே, மற்ற திட்டங்கள் மாதிரி, அன்டர் கன்சிடரேஷன், அன்டர் கன்சிடரேஷன் என்று இல்லாமல், துரிதமான நடவடிக்கைகள் மூலமாக, அதை உடனடியாக நிறைவேற்ற அரசும் அமைச்சரும் ஆவன செய்வாரா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஆய்விலே இருப்பதற்குக் காரணமே ரெயில்வே இலாகாதான். ரெயில்வே இலாகாவினுடைய அனுமதி இல்லாமல் நாம் இந்தச் சுரங்கப்பாதையை, அதுவும் தண்டவாளத்திற்குக் கீழே போடமுடியாத சூழ்நிலையிலே இருக்கிறோம். ஆகவேதான் மத்திய அரசுக்கு எழுதி இருக்கிறோம். அவர்கள் அனுமதி கிடைக்கவில்லை. அதற்குரிய வடிவமைப்பு, வரைப்படம், மதிப்பீடு இவைகள் எல்லாம் அனுப்பப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டத்திற்கு ரூ. 1 கோடியே 30 இலட்சம் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, ரெயில்வேயிலே டிலே ஆகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அமைச்சருக்கு அடிக்கடி டெல்லிக்கு செல்லக்கூடிய வாய்ப்பு கிடைக்கக்கூடும். அதுபோன்ற வாய்ப்புகள் வருகின்றபொழுது, சம்பந்தப்பட்ட இலாகாவோடு நேரடியாகத் தொடர்பு கொண்டு, உடனடியாக நிறைவேற்றச் செய்யவேண்டும். இதற்குக் காரணம், கோஷ்டி சண்டையிலே கால் வெட்டப்பட்ட 18 வயது சிறுவன் ரிக்ஷாவிலே எடுத்துச் செல்லப்படுகிறான்; இரவு நேரம். அந்த நேரத்திலே அந்த லெவல் கிராசிங் மூடப்பட்டிருக்கிறது. எடுத்துச் சென்ற ரிக்ஷாக்காரன் பொறுப்பற்ற முறையில் அந்தப் பையனை அங்கேயே போட்டுவிட்டுப் போகிறான். கால் மட்டும் வெட்டப்பட்டு இருக்கிறது, ஆனால், ஹெவி பிளீடிங்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் ஹண்டே இடத்திலே சொல்ல வேண்டியதை, அமைச்சர் குழந்தைவேலுவிடம் சொல்கிறீர்கள். கேள்வி நேரத்தை, வரலாற்று நேரம் ஆக்கக் கூடாது. கேள்வியை முறையாகக் கேளுங்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : ஆகவே அமைச்சரே நேரடியாக, பெர்சனல் இன்ட்டரஸ்ட் எடுத்து— திரு. காளிமுத்து டிலே செய்து விட்டார். அது மாதிரி செய்யாமல்—விரைவாக முடிக்க ஏற்பாடு செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கதவு மூடப்படுகின்ற நேரத்தில் எல்லாம் இப்படிப்பட்ட இடைஞ்சல்கள் எல்லோருக்கும் வருவது வழக்கம், இயற்கை. இதுபோன்ற நிலைகளை எல்லாம் தவிர்ப்பதற்காக அரசு தீவிர நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. ரெயில்வே இலாகாவில் இதுபோன்ற பிரச்சினைகள் பல்வேறு இடங்களில் ஏற்படுகின்றன. காரணம், நெடுஞ்சாலைத் துறையின் மூலமாகக் கூட எங்கெங்கே லெவல் கிராசிங் வருகிறதோ, அங்கே எல்லாம் மேம்பாலம் கட்ட வேண்டும், அல்லது அடிமட்டப் பாலம் கட்ட வேண்டும் என்றெல்லாம் கேட்டால் உடனடியாக உத்திரவு கொடுப்பதில்லை. ஆகவேதான் இதுபோன்ற நிலைமைகள் ஏற்படுகின்றன.

ஊராட்சிகளுக்கு சலுகைவிலையில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம்.

*வினா எண். 431—திரு. இ. கணேசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சிகளுக்கு டெலிவிஷன் பெட்டிகளைச் சலுகை விலையில் அளிக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம், எனில், 1981–82 ஆம் ஆண்டில் எத்தனை ஊராட்சிகளுக்கு அப்பெட்டிகள் அளிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) ஊராட்சிகளுக்கு ரூபாய் 1,000 மானியமாக வழங்கி 50 டி.வி. செட்டுகளை ஊராட்சிகளுக்கு அளிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆரணி ஊராட்சி ஒன்றியத்தில் பல பஞ்சாயத்துக்களில் பணம் இருந்தும் பஞ்சாயத்துத் தீர்மானம் போட்டும் தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைப்பதற்குத் தடை இருப்பதாக அறிகிறேன். தடையைத் தவிர்த்து, தொலைக்காட்சி எங்கெங்கே வேலை செய்யுமோ, அங்கெல்லாம், சென்னையிலே இருந்து 125 கிலோ மீட்டர் வரையில் உள்ள அனைத்துப் பஞ்சாயத்துக்களிலும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1982 மார்ச் 9

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, கடந்த ஆண்டிலேயே, இங்கே சென்னையிலேயிருந்து 100 கிலோ மீட்டர் தூரத்திற்கு உள்ளே உள்ள அத்தனை ஊராட்சி மன்றங்களுக்கும் டி.வி. செட்டுகளைக் கொடுப்பதற்கான திட்டத்தை இந்த அவையிலே நானே அறிவித்தேன். ஏறத்தாழ 910 டி.வி. செட்டுகள் கொடுப்பதன் மூலமாக, அதிலேயும்கூட ஒரு தன்னிறைவு ஏற்பட வேண்டுமென்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இப்பொழுது 50 டி.வி. செட்டுகளுக்கு மட்டுமே, ஒவ்வொரு டி.வி. செட்டுக்கும் ரூபாய் 1,000 மானியமாகக் கொடுக்கப்பட்டு வருகின்றது.

ஆனால், அத்தனை டி.வி. செட்டுகளையும் ஒரே சமயத்தில், ஒரே ஆண்டுக் காலத்தில் வைத்துவிடலாம் என்கின்ற யோசனை கூட அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. கண்டிப்பாக இந்த ஆண்டாவது முடிக்கலாமா என்பதுபற்றி நாம் விரைவில் நடவடிக்கை எடுப்போம்.

[முற்பகல் 9-40]

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த டெலிவிஷன் செட்டு சென்னையில் இருந்து 100 கிலோ மீட்டர் தூரத்தில் கொடுப்பதாகச் சொன்னார்கள். நான் கேட்டுக் கொள்வது இதேபோன்று தஞ்சை மாவட்டத்தில் உள்ள கிராமப் பகுதிகளில் உள்ள மக்கள் பார்க்கக் கூடிய அளவுக்கு, ஊராட்சி மன்றங்களுக்கும் விஸ்தரிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திற்குக் கண்டிப்பாகச் செய்யவேண்டும். ஆனால் சென்னையின் தொலைக்காட்சி தஞ்சையில் தெரியாது என்று நான் நினைக்கிறேன். வேண்டுமானால் சிலோன் டி.வி. தெரியலாம். அது கூடத் தெரியுமா, தெரியாதா என்று தெரியவில்லை. இருப்பினும் இது குறித்துப் பரிசீலனை செய்யலாம்.

திரு. இரா. சண்முகம் : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஆயிரம் ரூபாய் மானியத்திலே தொலைக்காட்சி அளிக்கப்படுவதாகச் சொன்னார்கள். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் வாழ்கின்றவர்களுக்கு என்று தனியாக அறிவிக்கப்பட்ட ஊராட்சி மன்றங்களுக்கு முழு மானியம் கொடுத்து அந்த டெலிவிஷன் பெட்டிகள் அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ரூபாய் ஆயிரம் கூட மானியம் இல்லாமல் 75 சதவீதம் மானியமாகக் கொடுக்க வேண்டும் என்ற திட்டத்தைக் கொண்டு வர இருக்கிறோம். அதுதான் பரிசீலனையில் இருக்கிறது.



1982 மார்ச் 9]

மதுரை இராஜாஜி அரசினர் மருத்துவமனை

*வினா எண். 432—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை இராஜாஜி அரசினர் மருத்துவ மனையில் சிகிச்சைக்காக என்னென்ன புதிய பகுதிகள் தொடங்கப்பட உள்ளன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : கீழ்க்கண்ட நான்கு பிரிவுகள் மதுரை இராஜாஜி அரசினர் மருத்துவமனையில் தொடங்கப்பட்டுள்ளன :—

(1) 50 படுக்கைகள் கொண்ட கண் மருத்துவப் பிரிவு.

(2) 30 படுக்கைகள் கொண்ட விபத்து மற்றும் அவசரப் பிரிவு.

(3) நடமாடும் கண் மருத்துவப் பிரிவு.

(4) இருதய நோய்ப் பிரிவு.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க தலைவர் அவர்களே, மதுரை ராஜாஜி மருத்துவமனையானது, சென்னைக்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய மருத்துவமனை தமிழ்நாட்டிலே. இன்னும்சொல்லப்போனால் தென்மாவட்ட மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கின்றது. திறமையான மருத்துவர்கள் இருந்தாலும் கூட பல்வேறு வசதிகள் இல்லாத காரணத்தினால், இன்றைய தினம் சிகிச்சைக்கு வரும் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். உங்கள் மூலமாக நான் அமைச்சரைக் கேட்டுக் கொள்ள விரும்புவது, சென்னை மருத்துவமனைக்கு ஒதுக்கப்படும் நிதியையும், இராஜாஜி மருத்துவமனைக்கு ஒதுக்கப்படும் நிதியையும் ஒப்பிட்டுப் பார்த்தால், இராஜாஜி மருத்துவ மனைக்கு ஒதுக்கப்படும் நிதி குறைவாக இருக்கின்றது. அங்கே வருகின்ற நோயாளிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு கணிசமான அளவுக்கு நிதி ஒதுக்கப்படுமா ? மேலும் இந்த 'பி' கிளாஸ், 'சி' கிளாஸ் படுக்கைகளை அதிகப்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்கிய கருத்து ஏற்றுக் கொள்ளத் தக்கதாக இருக்கின்றது. சென்னையிலே பொது மருத்துவமனை இருக்கிறது. அதே மாதிரி ராஜாஜி

மருத்துவமனையும் வளர வேண்டும் என்ற அடிப்படையில் அண்மையிலேகூட—பட்ஜெட்டிலேகூட—முக்கியமான ஒரு குறிப்பைச் சொல்லி இருக்கிறோம். சென்னையில் ஹெட் ஸ்கேனர் இருக்கிறது, கழுத்துக்கு மேல் இருக்கக்கூடிய அந்தப் பகுதியிலே நோய் கண்டுபிடிப்பதற்கு 'ஹெட் ஸ்கேனர்' இருக்கின்றது. ஆனால் மதுரையில் முழுமையான உடல் அனைத்தையும் முழுப் பகுதியையும் படம் பிடிக்க ஏதுவாக 'பாடி ஸ்கேனர்' கொண்டு வரவிருக்கிறோம். அது ஹெட் ஸ்கேனரைவிட இரண்டு மடங்கு விலை ஜாஸ்தியாகும். அந்த சிகிச்சைக்காக சென்னையிலே இருந்து கூட மதுரைக்கும் போக வேண்டியிருக்கின்றது. ஆகவே ஒரே இடத்திலே சில முக்கியமான கருவிகள் இல்லாமல் அவைகளைப் பரவலாக்க வேண்டும் என்பதற்கு இப்படிப்பட்ட உத்தரவுகளைப் போட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க தலைவர் அவர்களே, இந்த ராஜாஜி மருத்துவமனையிலே சரியாக ஒட்டடை அடிக்க முடியாத நிலை இருப்பதன் காரணமாக, எக்ஸ்ரே பிரிவு, ஆபரேஷன் பிரிவு போன்ற பிரிவுகளிலேயும், இன்னும் பல இடங்களிலும் ஒட்டடைகள் நிறைந்து காணப்படுகிறது. அங்கே போய்ப் பார்த்தால் தெரியும். நான் விசாரித்த அளவிலே அந்தப் பணியை யார் செய்வது என்று போட்டி இருந்துகொண்டு, தகராறு இருந்து கொண்டு ஒட்டடை அடிக்காமல் இருக்கின்ற காரணத்தால், ஆபரேஷன் செய்த நோயாளி ஒருவர் ஒட்டடை விழுந்த காரணத்தால் இறந்ததாகச் சொல்லப்படுகிறது. இவைகளைத் துரிதமாக நிவர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தப் பெரிய மருத்துவ மனைகளைப் பொருத்தவரை—ராஜாஜி மருத்துவமனையைப் பொருத்தவரையில், ஏறத்தாழ ஒரு நாளைக்கு 35 ஆயிரம் பேர்கள் உள்ளே வந்து வெளியே போகிறார்கள். நாங்கள் ஒரு கணக்கு எடுத்து மானிட்டர் செய்து பார்த்ததில் இது தெரியவந்தது. எனவே 6 மாதங்களுக்கு முன்பு, இப்படிப்பட்ட மருத்துவ மனைகளிலே, பொது மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனை, மதுரைப் ராஜாஜி மருத்துவமனை போன்ற மருத்துவமனைகளில் டிப்டி செகரட்டரி ரேங்கில், அட்மினிஸ்டிரேடிவ் ஆபீசர்களைப் போட்டு இருக்கிறோம். அவர்கள்தான் முழுமையாக இவைகளைக் கண்காணிக்க வேண்டும். அண்மையிலே நான் அங்கே போய்ப் பார்த்த நேரத்தில் கூட, இந்தப் பிரச்சினை எழுந்து, திட்டவட்டமாக ஒவ்வொருவருக்கும் இன்னின்ன வேலை என்று ஃபிக்ஸ் செய்து, உத்தரவு போட்டிருக்கிறோம். அந்தக் குறைபாடுகளுக்கு இடம் இல்லாமல் பார்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.



திரு. எஸ். ஆண்டித் தேவர் : தலைவரவர்களே, மதுரையில் இருக்கிற இராஜாஜி மருத்துவமனை 4, 5 தென் மாவட்டங்களுக்கு முக்கியமான சேவை செய்து வருகிறது. அந்த மருத்துவ மனையில் 'கார்டியாலஜி' பிரிவு இல்லை. சென்னையிலும், வேலூரிலுள்ள தனியார் மருத்துவ மனையிலும்தான் இந்தப் பிரிவு தற்போது இருக்கிறது. இந்த கார்டியாலஜி சம்பந்தப்பட்ட ஆபரேஷன் செய்யும் வசதியும் அங்கே இல்லை; மருத்துவர்களும் இல்லை என்று தெரிகிறது. ஆகவே, மதுரை இராஜாஜி மருத்துவமனையில் கார்டியாலஜி பிரிவு ஒன்றை விரைவில் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, இந்த கார்டியாலஜி பிரிவு முன்னால் அங்கே இல்லாமல் இருந்தது உண்மைதான். ஆனால் அண்மையில் அந்தப் பிரிவுக்கு அங்கே அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஜி.ஓ. எம்.எஸ். நம்பர் 777, தேதி 6—5—1981-ல் சுமார் 9 மாதங்களுக்கு முன்னால் உத்தரவிட்டிருக்கிறோம். அதற்கு

| | |
|---|---|
| Recurring Expenditure .. | Rs. 47,?60 |
| Equipment .. .. .. | Rs. 14 lakhs |
| Medicines .. .. .. | Rs. 1 lakh |
| Reader in Cardiology .. .. | One post |
| Assistant Professor of Cardiology .. | One post |

என்று உத்தரவு போட்டிருக்கிறோம். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மகிழ்ச்சியடைவார்கள் என்று கருதுகிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவரவர்களே, இந்த குடல் புண், சல்லீரல் சம்பந்தமான 'காஸ்ட்ரோ என்ட்ராலஜி' பிரிவு சென்னையில் மட்டும்தான் இருக்கிறது. தென் மாவட்டங்களில் முக்கியமாக விளங்குகின்ற இராஜாஜி மருத்துவமனையில் இந்தப் பிரிவு இல்லை என்பதால் எல்லோரும் சென்னைக்குத்தான் இந்தச் சிகிச்சைக்காக வரவேண்டியிருக்கிறது. இன்றைக்கு சுமார் 35 சதவீதம் பேர் இந்த நோயால் அவதிப்படுகிறார்கள். அவர்கள் அத்தனை பேர்களும் சென்னைக்குத்தான் வரவேண்டியிருக்கிறது. இதனுடைய முக்கியத்துவத்தைக் கருதி, அமைச்சரவர்கள் இந்த ஆண்டிலாவது இந்தப் பிரிவை இராஜாஜி மருத்துவ மனையில் ஏற்படுத்த நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1982 மார்ச்

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே எல்லா பிரிவுகளையும் ஒவ்வொரு பெரிய மருத்துவமனையிலு ஏற்படுத்துவது என்பது இயலாத காரியம். பாரதப் பிரதம அவர்கள் கூட அண்மையில் ' லேடி ஆர்டிஞ்ச் காலேஜில் உரை யாற்றும்போது எல்லாப் பிரிவுகளையும் ஒரே மருத்துவ மனை யில் ஏற்படுத்த முடியாது ; அதற்கு செலவு ஏராளமாக ஆகு என்று சொல்லியிருக்கிறார்கள். இது சம்பந்தமாக யூனியன் ஹெல்த் மினிஸ்டர் திரு. சங்கரானந்த் அவர்கள் ஒரு கடிதத்தை எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். ஒவ்வொரு முக்கியமான பிரிவையும் ஒவ்வொரு பெரிய மருத்துவமனையில் ஏற்படுத்தவேண்டும் எனபதை ஒரு கொள்கையாக மத்திய அரச வைத்திருக்கிறது. அதே ரீதியில் தான் நாமும் செய்கிறோம். கார்டியாலஜி என்றால் அது உடனடியாக கவனிக்கப்பட வேண்டும். ஆனால் இந்த குடல் புண் சம்பந்தப்பட்ட நோய் அவ்வளவு அவசரமானது அல்ல ; கொஞ்சம் மெதுவாக கூட சிகிச்சை செய்யலாம். ஆகையால் இந்த காஸ்ட்ரோ என்ட்ரா லஜி பிரிவு சென்னையில் மட்டும் இப்போது இருக்கிறது. ஒரே இடத்தில் இருந்தால்தான் சௌகரியமாக இருக்கும். இந்தப் பிரிவு முழு அளவுக்குப் பயன்படுத்தப்பட்டு, இனிமேல் இங்கே இடமில்லை என்று தெரிந்தால் இதேமாதிரி மதுரையில் ஒரு பிரிவை ஆரம்பிக்கலாம்.

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை.

*வினா எண். 433— திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் குழந்தைகள் பிரிவில் தற்போதுள்ள படுக்கைகள் எவ்வளவு ?

(ஆ) இதனை அதிகப்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) 105 படுக்கைகள்.

(ஆ) 1980–81 ஆம் ஆண்டில் இம்மருத்துவமனைக்கென 16 படுக்கைகள் கொண்ட குழந்தைகளுக்கான அறுவை சிகிச்சைப் பகுதி ஒன்று கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு இப்பணி முன்னேற்றத்தில் உள்ளது.



1982 மார்ச் 9]

[முற்பகல் 9-50]

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, கோவை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மதுரை அளவுக்கு இல்லாவிட்டாலும் பல ஆயிரக்கணக்கான ஜனங்கள் தினசரி சிகிச்சைக்காக வந்து போகின்ற சூழ்நிலை இருக்கின்றது. அதிலே, குறிப்பாக, நூற்றுக்கணக்கான குழந்தைகள் அங்கே வந்து சிகிச்சை பெற வேண்டிய நிலைமையில் படுக்கை வசதி கிடைக்காத காரணத்தால் அவர்கள் காத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. ஆகவே, அந்த மருத்துவமனையிலே குறைந்தது 500 படுக்கைகளுக்குக் குறையாமல் விஸ்தரிப்பு செய்து அந்தக் குழந்தைகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காகவேண்டிய டாக்டர்கள், ஸ்டாஃப் போன்றவர்களையும் நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, நான் மூலக் கேள்விக்கு அளித்த பதிலை அவர்கள் கேட்டிருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். 16 படுக்கைகள் கொண்ட சர்ஜிக்கல் வார்டினை அங்கே துவக்குவதற்கு நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

In the year 1980-81 sanction has been accorded for the construction of a 16 bed Paediatrics Surgical Ward for this Hospital.

என்ற அந்தக் குறிப்பையும் நான் சொல்லி இருக்கிறேன். அதற்காக 2.92 இலட்சம் செலவாகிறது. ஆனால், மாண்புமிகு திரு. ரமணி அவர்கள் கேட்பது போன்று 500 படுக்கைகளை ஏற்படுத்துவது என்பது இயலாது. ஏராளமாகச் செலவு ஆகும் அந்த அளவுக்கு எந்த ஒரு அரசாங்கத்தாலும் செலவழிக்க முடியாது.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, நான் 500 படுக்கைகள் வேண்டும் என்று சொல்வதன் காரணம் பல நூற்றுக்கணக்கான குழந்தை நோயாளிகள் தினசரி வந்து படுக்கை கிடைக்காமல் காத்திருக்கிறார்கள் என்பதற்காகத்தான். ஆகவே, அங்கே குழந்தைகளுக்கு என்று தனியாக ஆப்பரேஷன் பிரிவு இல்லாததால் சில கேஸ்கள் சென்னைக்கு வருகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலை அங்கே இருப்பதால் 500 படுக்கைகள் என்ற அளவுக்கு ஏற்படுத்த முடியாவிட்டாலும் வேறு ஏதாவது ஆலோசனையை அங்கே நடைமுறைக்குக் கொண்டுவர அரசு ஏற்பாடு செய்திருக்கின்றதா ? அப்படிச் செய்தால் நலமாக இருக்கும். தற்போது 7 இலட்சம் மக்களுக்கு மேல் ஜனத்தொகை இருக்கின்ற அந்த மாநகரத்திற்கு தனியாக ஒரு குழந்தைகள் நல மருத்துவ மனையை ஸ்தாபிப்பதற்கும் அதிலே ஆப்பரேஷன் தியேட்டர் போன்றவற்றைச் சிறந்த முறையிலே ஏற்படுத்துவதற்கும் முயற்சி செய்வார்களா ?

[1982 மார்ச் 9

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, இந்த ஆப்பரேஷன் தியேட்டர் கட்டி முடிக்கப்பட்டவுடனேயே பல பிரச்சினைகளுக்கு நாம் தீர்வு காண முடியும். அதுமட்டு மல்ல அந்த மருத்துவமனையில் ஏற்கெனவே, குழந்தைகள் பிரி விலே 105 படுக்கைகள் இருக்கின்றன என்றும் சொல்லி இருக் கிறேன். குழந்தைகள் பிரிவினையைப் பொறுத்த வரையிலே கேஸ்ட்ரோ என்டரைட்டீஸ் என்ற அந்த வாந்தி பேதி நோயினால் பாதிக்கப்படுபவர்கள்தான் அங்கே அந்த எண்ணிக்கையிலே பாதிப் பேராக இருக்கிறார்கள். ஆகவே, இதற்காக மேஷிவ் ஓரல் ஹைட்ரேஷன் என்ற ஒரு கேம்ப்பெயின் ஆரம்பித்திருக்கிறோம். அதன்மூலம் அந்த நோயாளிகள் மருத்துவமனையிலே அனுமதிக் கப்படாமலேயே அவுட் பேஷன்ட்டாக இருந்து சிகிச்சை பெறு வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். இதனை ஒரு பெரிய ஸ்கீமாகக் கொண்டுவந்து இருக்கிறோம். இதிலே வெற்றி கண்டு விட்டால் அங்கே குழந்தைகளின் படுக்கைகளை உயர்த்த வேண் டிய தேவையில்லாமல் சமாளிக்க முடியும் என்று கருதுகிறோம்.

திரு. கோவைத்தம்பி : தலைவரவர்களே, 500 படுக்கை களை அமைச்சர் அவர்களால் தர முடியாவிட்டாலும் அமைச்ச ரவர்கள் பதிலிலே குறிப்பிட்ட அளவினைப் போல இரண்டு மடங்கு படுக்கைகளையாவது தருவதற்கு அமைச்சரவர்கள் முயற் சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அந்த மருத்துவமனையிலே ஜெனரேட்டர் வசதி இல்லாத காரணத்தால் பல்வேறு தொல்லைகள் ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, இந்த இரண்டு கோரிக்கை களையும் அமைச்சரவர்கள் நடைமுறைக்குக் கொண்டுவர ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, ஜெனரேட்டரைப் பொறுத்தவரையிலும் அந்தப் பிரச்சினை இப் போது தீர்க்கப்பட்டிருக்கின்றது. ஆனால், படுக்கைகளின் எண் ணிக்கையை உயர்த்துவதைப் பொறுத்தவரையிலே நான் மாண்பு மிகு திரு. ரமணி அவர்களுக்கு அளித்த பதிலே இதற்கும் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவேகானந்தர் நினைவுப்பாறைக்குச் செல்ல உபயோகிக்கப்படும் இயந்திரப் படகு.

*வினா எண் 434—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்பு மிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய சுற்றுலாத்துறை இயந்திரப்படகை விவேகா னந்தர் நினைவுப்பாறைக்கு உபயோகப்படுத்த கொடுத்துள்ளதா ;

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(இ) எப்பொழுது முதல் பயன்படுத்தப்படும் ?



1982 மார்ச் 9]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (அ) ஆம்.

(ஆ) ரூபாய் 4·50 இலட்சம் மதிப்புள்ள 100 இருக்கைகள் கொண்ட "பாகீரதி" என்ற மோட்டார் படகு 1974 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

(இ) விவேகானந்தர் கேந்திரத்தினரால் 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 9 ஆம் தேதி வரை உபயோ கப்படுத்தப்பட்டு வந்தது. 1981 ஆம் ஆண்டு அக் டோபர் திங்கள் 1 ஆம் நாள் முதல் படகுப் போக்குவரத்தினை அரசு ஏற்றுக்கொண்ட பிறகு, பழுதடைந்த நிலையிலிருந்த இப்படகு தூத்துக்குடி துறைமுகத்தில் பழுது பார்க்கப்பட்டு, கடந்த டிசம்பர் (1981) முதல் மீண்டும் தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர் களே, அங்கே படகு விடுவதிலே தகராறுகள் எல்லாம் இருந்தனவே அவை தீர்க்கப்பட்டுவிட்டனவா ? இப்போது தகராறு இல்லாமல் பொதுமக்களின் உபயோகத்திற்கு அது பயன்படுத்தப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, அதனை அரசு ஏற்றுக்கொண்ட பின்பு இப்போது எந்தப் பிரச் சினையும் இல்லாமல் பொது மக்களுக்கு உபயோகப்படுகின்ற வகையிலே சிறப்பான முறையிலே இயங்கிக் கொண்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அரசாங்கத்தின் சார்பிலே இப்படி தொடர்ந்து படகு விடுவதற்குப் பதிலாக விவேகானந்தர் பாறைக்கு கடலிலே ஒரு பாலம் அமைத்து அதன் மூலம் பாதை அமைப்பது என்ற ஆலோசனை இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அப்படி நிலத் தொடர்பு ஏற்படு மானால் விவேகானந்தர் பாறைக்கு இருக்கின்ற ஒரு சிறப்பு அதனால் பாதிக்கப்படக்கூடிய அளவுக்கு நிலைமை ஏற்படாதா? அது பற்றி அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நாம் முதலிலே யோசித்தது, அங்கே கார்கள்கூட போய்வருவதற் கான ரோடு வசதி ஏற்படுத்தவேண்டும் என்பது. அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது பேராசிரியர் அவர்கள் சொன்ன கருத்துக்களை எல்லாம் கவனத்தில் கொண்டுதான் நடந்துபோகிற அளவிற்கு ரோடு ஏற்படுத்தினால் போதும் என்று தற்போது ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். இருந் தாலும் இப்போது அவர்கள் மீண்டும் சொல்லியதையும் வைத்து மறுபடியும் பரிசீலனை செய்து, அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற் படுவதாக இருந்தால், அதிலே வேறு விதமான மாற்றங்களை ஏற்படுத்த அரசு தயங்காது.

[1982 மார்ச் 9

## கோவை-உதகை இடையே ஹெலிகாப்டர் போக்குவரத்துப் பணி.

*வினா எண் 435—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூருக்கும் உதகமண்டலத்திற்கும் இடையே ஹெலிகாப்டர் போக்குவரத்து வசதி செய்ய மத்திய அரசிடம் மாநில அரசு வலியுறுத்துமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** ஆம். இது சம்பந்தமாக மத்திய அரசிடம் மாநில அரசு தொடர்பு கொண்டிருக்கிறது.

**திரு. து. புருஷோத்தமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஹெலிகாப்டர் போக்குவரத்து மிகமிக அவசியம் என்பதை உணர்ந்து மத்திய சர்க்காரை, மீண்டும் வற்புறுத்தி விரைவில் அரசு நடவடிக்கை எடுக்குமா ? ஏற்கெனவே மத்திய சர்க்கார் அங்கே இருக்கிற ரயில் போக்குவரத்தைக்கூட நிறுத்தி விட வேண்டும் என்று, நீண்டகாலத் திட்டம் வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையிலே இந்த ஹெலிகாப்டர் போக்குவரத்தையாவது பெற அரசு அவர்களை மீண்டும் வற்புறுத்தி முயற்சிகளை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதையெல்லாம் அறிந்துதான் மத்திய அரசாங்கத்தை மாநில அரசு வற்புறுத்திக் கொண்டேயிருக்கிறது. தொடர்ந்தும் வற்புறுத்திக் கொண்டுதான் இருக்கும். மேலும் இது குறித்து எடுத்துச் சொல்வதிலே எந்தவித இடையூறும் அரசுக்கு இல்லை.

**திரு. து. புருஷோத்தமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சீசன் காலங்களில் பஸ்களிலே நிற்கக் கூட கொஞ்சமும் இடம் இல்லாமல் மக்கள் அவதியுறும் நிலை இருக்கிறது. ரயில்வே போக்குவரத்தும் தற்காலிகமாக நிறுத்தப்பட இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமையில் மக்களுக்கு இந்த ஹெலிகாப்டர் போக்குவரத்தாவது பயன்படும் என்ற வகையில் இதை மிக விரைவிலே ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் அரசு உடனடியாக ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, ஹெலிகாப்டர் வந்து விடுவதன் காரணமாக பேருந்துகளில் நெரிசல் குறைந்து விடும் என்று சொல்லிவிட முடியாது. சில நேரங்களில் பேருந்துகளின் போக்குவரத்தில் தடை ஏற்படும்



1982 மார்ச் 9]

காலங்களில் இந்த ஹெலிகாப்டர் போக்குவரத்து பெரிதும் பயன்படும் என்பது உண்மைதான் என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த உணர்வின் அடிப்படையிலேயே, அது சீக்கிரமாக வேண்டும் என்ற வகையில்தான் மத்திய அரசாங்கத்தை மாநில அரசு தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டு வருகிறது. இதைத் தவிர, மாநில அரசு வேறு என்ன செய்ய முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

## சோழன் போக்குவரத்துக் கழக தலைமை அலுவலகத்தைத் திருச்சியில் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 436—திரு. மே. அ. இராசகுமார் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழன் போக்குவரத்துக் கழக தலைமை அலுவலகத்தை திருச்சியில் அமைக்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ) ஆம்.

(ஆ) தற்போது சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் எண்ணிக்கை சுமார் 800 ஆக இருப்பதால் அரசு இக்கழகத்தை இரண்டாகப் பிரிக்க திட்டமிட்டுள்ளது. இதுபற்றிய செயற்குறிப்பு சோழன் சாலைப் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநரிடமிருந்து வந்தவுடன் அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும்.

**திரு. மே. அ. இராசகுமார் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சோழன் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரிக்கத் திட்டம் உள்ளதாக கூறினார்கள். அப்படி பிரிக்கப்படும்போது, திருச்சியிலே ஏற்படவிருக்கும் போக்குவரத்துப் பிரிவிற்கு, ராஜராஜசோழன் போக்குவரத்துக் கழகம் என்ற பெயர் வைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகத்திற்கு பெயர் இடுவதை இப்பொழுதே இந்த நேரத்திலேயே சொல்வது என்பது சாதாரண விஷயம் அல்ல. என்ன பெயர் வைத்தாலும் எது பொருத்தமாக இருக்கும் என்பதையெல்லாம் ஆராய்ந்து தான் பின்னர் முறையாக பெயர் வைக்கப்படும். இதை பிறகு முடிவெடுக்கலாம்,

திரு. மே. அ. இராசகுமார் : பேரவைத் தலைவர் அவர்களே அமைச்சர் அவர்கள் சோழன் நிர்வாகத்தை இரண்டாகப் பிரிக்கிட்டம் இருப்பதாகச் சொன்னார்கள். அதுவரையில் தற்காலிகமாக சோழன் போக்குவரத்துக் கழகத்தின் தலைமை அலுவலகத்தை திருச்சியிலே அமைக்க அரசு முடிவெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தற்காலிகமாக மாற்றுவது என்பது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. நடைமுறையில் ஒவ்வாது. ஆகவே நிரந்தரமாக அமைப்பதற்கு வேண்டுமானால் நடவடிக்கை எடுக்கலாம்.

## DIFFERENT TYPES OF BUSES FOR VARIED REQUIREMENTS

*Q. No. 437—Thiru R. UMANATH : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether this Government has any proposal to operate different types of buses to suit the varied requirements of the passengers and

(b) if so, the details thereof

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) தற்போது நான்கு விதமான பயணிப் பேருந்துகள் தமிழ்நாட்டில் பயணிகளின் தேவைக்கேற்ப இயக்கப்பட்டு வருகின்றன. அவையாவன :—

(i) சாதாரணப் பயணிப் பேருந்துகள் (நகரப் பேருந்து வெளியூர்ப் பேருந்து, விரைவுப் பேருந்து).

(ii) மினி பஸ்கள் என்கிற சிறு உந்துகள் ;

(iii) ஜீப் உந்துகள் மற்றும்

(iv) பயணிகள் மற்றும் சரக்கு வண்டிகள்.

(முற்பகல் 10–00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.



திரு. ரா. உமாநாத் : இரவு நேரங்களில் நீண்ட தூரம் செல்லும் விரைவுப் பேருந்துகள் அதிகமாக போய்க் கொண்டிருக்கின்றன. பயணிகள் அதிகமாக இரவு நேரங்களில் போகக் கூடிய ஒரு நிலையும் இருக்கிறது. அவர்களுக்கு பிரதானமாக வேண்டியது இரண்டு விஷயங்கள்தான். அதைத்தான் எல்லாப் பயணிகளும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். லாங் டிஸ்டன்ஸ் பஸ்களில் போகும்போது சிறுநீர் கழிக்க தனி வசதி வேண்டும். அதோடு படுக்கை வசதியும் வேண்டும். இவை இல்லாமல் பிரயாணிகள் கஷ்டப்படுகிறார்கள். ப்ளேனில் கூட சின்ன என்க்ளோஷர் கட்டி டாய்லெட் வசதி இருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட வசதிகளை அதிக தூரம் செல்லக் கூடிய சாதாரண பஸ்களில் செய்து கொடுக்கும் உத்தேசமுண்டா ? இல்லை என்றால் அதைப் பரிசீலித்து அந்த வசதிகளை செய்து கொடுக்க சீக்கிரம் முடிவெடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : படுக்கை வசதி கொண்டது சிறுநீர் கழிப்பதற்கான வசதி கொண்ட பேருந்து ஏற்கெனவே அமைக்கப்பட்டு அந்தப் பேருந்து ஏ.ஸி. போடுவதற்காக அங்கே நிறுத்தப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பேருந்தை நாம் தயாரித்து நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இதைப்பற்றி பரிசீலனை செய்து நாம் முடித்திருக்கிறோம். தொடர்ந்து சாதாரண பேருந்துகளை அப்படி விடுவதற்கு அரசு முயற்சி எடுக்கும்.

திரு. ரா. உமாநாத் : கிராமப் புறங்களிலிருந்து ஏழை மக்கள் காய்கறிகளை எடுத்துக் கொண்டு நகரங்களுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அந்தக் காய்கறி மூட்டைகளை எடுத்துச் செல்வதற்கும் அந்த மூட்டைகளோடு அவர்களும் பிரயாணம் செய்து நகரங்களுக்குப் போவதற்கும் வசதி செய்து கொடுக்கக்கூடிய பஸ்கள் விட முன்பு ஒரு ப்ராஜக்ட் இருந்ததே அது ட்ரயல் நடத்தப்பட்டதா ? அதன் விளைவு என்ன ? அப்படிப்பட்ட வசதிகளைக் கொண்ட பஸ்களை விட அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பயணிகளோடு சரக்குகளையும் கொண்டு செல்லும் பேருந்தை இப்போது இயக்கிக் கொண்டிருக்கிறோம். இந்தப் பரிசீலனைக்காக இயக்கிக் கொண்டிருக்கிறோம். இது வெற்றிகரமாக இருக்கிறது. ஐந்தாறு பேருந்துகள் வெற்றிகரமாக இயங்கி வருகிறது என்ற குறிப்பு இருக்கிறது. அதைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம்,

திரு. ஆர். டி. கோபாலன் : படுக்கை வசதி கொண்ட நவீன பஸ்களை மதுரை போன்ற நகரங்களிலே அதிகமாக விடுவதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** இப்போதுதான் நாம் அந்தக் கூண்டு கட்டி இரண்டு பேருந்துகளை தயார் செய்திருக்கிறோம். இது வெற்றிகரமாக இருந்தால் தொடர்ந்து எல்லாப் பெரிய நகரங்களுக்கும் விடுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யும்.

**திரு. கே. சொக்கலிங்கம்:** அமைச்சர் அவர்கள் சாய்கறி ஏற்றிச் செல்லும் வண்டிகள் பற்றிச் சொன்னார்கள். நான் கேட்க விரும்புவது, பொதுவாக மீனவர்கள் மீன் கூடைகளை ஏற்றிச் செல்ல பேருந்துகளில் இதுவரையில் அனுமதிக்கப்படவில்லை. ஆனால் அவர்களுக்கு வியாபாரம் செய்வதற்கு சங்கடமான ஒரு நிலை இருக்கிறது. பெரியார் போக்குவரத்தில் மீன் கூடைகளை ஏற்றிச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் பல்லவன் போக்குவரத்தில் அப்படி அனுமதிக்கப்படுவதில்லை. ஆகவே பல்லவன் போக்குவரத்துக் கழக பேருந்துகளிலும் அந்த நிலையை உருவாக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** சில நேரங்களில் பேருந்துகளில் அதிகமான பயணிகள் செல்லும்போது இப்படி கூடைகளை ஏற்ற முடியாது. அது பயணிகளுக்காக இருக்கிற பேருந்து. இதையெல்லாம் மனதில் கொண்டுதான் சரக்குகளையும் ஏற்றி பயணிகளும் பயணம் செய்ய புதுவிதமான பேருந்து ஒன்றைக் கண்டு பிடித்து நடவடிக்கை எடுத்திருக்கிறது. இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பு மீனவர்கள் என்னைச் சந்தித்து இந்தக் குறையைச் சொன்னார்கள். அதற்காக ஒரு பேருந்து பாடி கட்ட ஏற்பாடு செய்திருக்கிறோம். அது முடிந்தவுடன் இயக்கப்பட இருக்கிறது.

**திரு. ப. நெடுமாறன்:** அரசாங்கப் பேருந்துகளில் ஆர்மோனியப் பெட்டியை கலைஞர்கள் கொண்டு செல்வார்களானால் அதற்கு அதிகமான சார்ஜ் செய்கிறார்கள். அதை இலவசமாக எடுத்துச் செல்வதற்கு அரசு அனுமதிக்குமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** என்ன பொருள்களை கொண்டு போகிறார்கள் என்று பார்ப்பதில்லை, அதன் கனம் என்ன என்றுதான் பார்க்கிறார்கள். அதற்குரிய கட்டணம் வசூலித்துத்தான் ஆக வேண்டும், வசூலிக்காமல் விடுவதற்கு எந்த சாத்தியக்கூறும் இப்போது இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதன் அடிப்படையில் என்ன சிரமங்கள் அவர்களுக்கு இருக்கிறது என்று பார்த்து அதற்கேற்றபடி நடவடிக்கைகள் எடுக்கலாம்.

**திரு. இரா. கருப்பையா:** நீண்ட தூரம் செல்லும் சில வழித்தடங்களில்தான் சொகுசுப் பேருந்துகள் தற்சமயம் விடப்படுகின்றன. ஆகவே நீண்ட தூரம் செல்லும் அனைத்து வழித்தடங்களிலும் சொகுசுப் பேருந்துகள் விடப்படுமா? குறிப்பாக



சென்னையிலிருந்து கரூருக்கு பெரம்பலூர் வழி செல்கிற அந்த வழித்தடத்தில் சொகுசுப் பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, இப்போது ஓடுகின்ற பேருந்துகளே சொகுசுப் பேருந்துகளாகத்தான் இருக்கின்றன. இன்னும் சொகுசுப் பேருந்துகள் வேண்டுமென்று சொன்னால், அதை எப்படி என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. செமி டீலக்ஸ், டீலக்ஸ், சூபர் டீலக்ஸ் என்றிருக்கிறது; இதிலே எதைக் கேட்கிறார்கள்? எனவே, தனியாக எந்தெந்த வழிகளில் எப்படிப்பட்ட பேருந்துகள் வேண்டுமென்று கேட்கிறார்களோ, அதற்கேற்ப அரசு நடவடிக்கைகள் எடுக்கும்.

### பெரியார் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கட்டிடம்,

* வினா எண். 438— **திரு. ச. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர்— கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் ஈரோடு நகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தில் இயங்கி வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திற்கு சொந்தமாகக் கட்டிடம் ஏற்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்:** (அ) தெரியும்.

(ஆ) மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், மற்றும் சில வருவாய்த்துறை அலுவலகங்களுக்குத் தேவையான கட்டிடத் தொகுதி ஒன்றினை சுமார் 169 இலட்சம் செலவில் ஈரோடு— பெருந்துறை சாலைக்கு தென்புறமுள்ள சூரம்பட்டி கிராமம் சர்வே எண். 113 மற்றும் 114-ல் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. இப்பணி முன்பே தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

**திரு. ச. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம் ஆரம்பிக்கப்பட்டு 3 ஆண்டுகளுக்கு மேலாகிறது. என்ன காரணத்தாலோ மாவட்ட ஆட்சியாளர் கட்டிடம் கட்டப்படாமல் காலதாமதமாகிறது. இந்த ஆண்டு, அந்தக் கட்டிடத்தைக் கட்டி நிறுவப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1982 மார்ச் 9

**மாண்புமிகு எஸ். என். இராசேந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இக்கட்டிடம் கட்டுவதற்கான ஆணை 24—3—80ல் பிறப்பிக்கப்பட்டு, மேற்படி கட்டிடத்தை கோட்டாட்சி அலுவலகம் ஈரோடு மையப் பகுதியில் கட்ட வேண்டுமென்று முன்னால் ஏற்பாடு செய்யப்பட்டது. அது நெரிசல் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், அங்கே மேற்கொண்டு கட்டிடம் கட்டினால், இன்னும் அதிக நெரிசல் ஏற்படும் என்று கருதிய காரணத்தினால், இப்போது அந்த இடம் மாற்றப்பட்டு, அங்கே கட்டப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ச. பாலகிருஷ்ணன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கட்டப்பட்டு வருகிற கட்டிடம், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு தனியாக கட்டப்பட்டு வருகிறதா? அல்லது வேறு அரசு அலுவலகங்கள் அதிலே இயங்குகின்ற அளவில் சேர்த்துக் கட்டப்படுகிறதா? அவ்வாறு கட்டப்படுமானால், எந்தெந்த துறைகள் அந்தக் கட்டிடத்தில் இயங்கும்?

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாகக் கட்டப்படும் அந்தக் கட்டிடத்தில், (1) மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் (வருவாய்த் துறை), (2) மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் (அபிவிருத்தி பிரிவு), (3) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் பின் தங்கிய வகுப்பினர் நலப் பிரிவு, (4) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் ஆதி திராவிட நலப் பிரிவு, (5) மாவட்ட உணவு வழங்கு அலுவலர், ஈரோடு, (6) கோட்டாட்சியர் அலுவலகம், ஈரோடு, (7) சமூக நல அலுவலர் அலுவலகம், ஈரோடு, (8) சிறு விவசாயிகள் மேம்பாட்டு திட்ட அலுவலகம், (9) கோட்ட அபிவிருத்தி அலுவலர் அலுவலகம், ஈரோடு, (10) நில அளவு உதவி இயக்குநர் அலுவலகம், (11) வட்டாட்சியர் அலுவலகம், ஈரோடு, (12) மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (செய்தி, மற்றும் பொதுமக்கள் தொடர்பு) ஆகிய 12 அரசு அலுவலகங்கள் அங்கே இயங்கும்.

### கதர் ரகங்களில் பாலியெஸ்டர் நூல் கலந்து நெசவு செய்யும் திட்டம்.

*வினா எண். 439— **திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி :** மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர்— கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர் ரகங்களில் பாலியெஸ்டர் நூல் கலந்து நெசவு செய்தது நிறுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் காரணம் என்ன?



1982 மார்ச் 9]

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :** (அ) கதர் ரகங்களில் பாலியெஸ்டர் நூல் கலந்து நெசவு செய்வது நிறுத்தி வைக்கப்படவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

### கால்நடை பராமரிப்பு கிளை நிலையங்களுக்கு வழங்கப்படும் மருந்துகள்.

*வினா எண். 440—**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்— கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் இயங்கிவரும் கால்நடை பராமரிப்பு கிளை நிலையங்களுக்கு ஆண்டுக்கு அளிக்கப்படும் மருந்தின் மதிப்பு எவ்வளவு ?

(ஆ) அத் தொகையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** (அ) தமிழகத்தில் மொத்தம் 2,301 கால்நடைப் பராமரிப்பு கிளை நிலையங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு கிளை நிலையத்திற்கும் ஆண்டு தோறும் 1,500 ரூபாய் வரை மருந்துகள் வாங்கி உபயோகிக்க அனுமதி வழங்கப்படுகிறது. 1980-81ம் ஆண்டில் இக்கிளை நிலையங்களுக்குத் தேவையான மருந்துகள் வாங்குவதற்கு 23,24,935 ரூபாய் மொத்தம் ஆகியிருக்கிறது.

(ஆ) ஒவ்வொரு கிளை நிலையத்திற்கும் ஆண்டு தோறும் மருந்துகள் வாங்க நிர்ணயிக்கப்பட்டுள்ள 1,500 ரூபாய் நிதி வரம்பை உயர்த்த வேண்டிய நிலைமை தற்போது ஏற்படவில்லை.

**திரு: வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கக்கூடிய கால்நடை கிளை மருத்துவமனைகளிலே. கால் நடைகளுக்கு சித்த வைத்திய முறை அளிக்கப்படுகிறதா? உயிர் காத்தல் மருந்தைத் தவிர, மற்ற எல்லா மருந்துகளும் சித்த வைத்திய முறையில் அதாவது சுக்கு, காசிக் கட்டி போன்ற சித்த வைத்திய மூலப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. எனவே, தமிழகத்திலே எல்லா கால்நடை மருத்துவமனைகளிலும் சித்த வைத்திய மருத்துவ முறையை அளிப்பதற்கு அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

[1982 மார்ச் 9

[முற்பகல் 10.10]

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை கிளை நிலையங்களில் வேண்டிய மருந்துகள் தேவையான அளவிற்கு தயாரிக்கப்பட்டு கொடுக்கப்படுகிறது. இந்த மருந்து தேவையில்லையென்றால், நாம் சித்த வைத்திய முறையை கையாள வேண்டும். சித்த வைத்திய முறையை கையாண்டு கால்நடைகளுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க முடியும் என்று உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னாலும், தேவையான மருந்து கிடைக்கும்போது சித்த வைத்திய முறை தேவையில்லை என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடி முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### தென்காசி தாலுகா திருமாலாபுரத்தைச் சேர்ந்த அரிஜனர் ஒருவர் இறந்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் ஏ. சாகுல் அமீது, ரா. கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், எல். இளையபெருமாள், திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், திருவாளர்கள் ஜி. மூர்த்தி, கே. பாரமலை, கே. எம். தங்கமணி, அ. ரகுமான்கான், ஜே. எஸ். இராசு, என். எஸ். வி. சித்தன், ஆகியோர்,

'' தென்காசி தாலுகா பன்மொழி கிராமம் மீனாட்சிபுரம் அருகிலுள்ள திருமாலாபுரத்தில் அரிசன வகுப்பைச் சார்ந்த சகோதரர் திரு. காளிமுத்து அவர்கள் காவல் துறையினரால் 1982-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 16 ஆம் நாள் அன்று காவல் நிலையத்தில் அடித்துக் கொல்லப்பட்டதாக நடந்துகொண்டிருக்கும் போராட்டத்தால் ஏற்பட்டுள்ள கவலை குறித்து'' விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர்.

இது எப்படி அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி திரு. ஏ. சாகுல் அமீது அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



1982 மார்ச் 9]

***திரு. ஏ. சாகுல் அமீது :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கடையநல்லூர் தொகுதியில் உலகப் புகழ் பெற்ற மீனாட்சிபுரத்திற்கு அருகில் தென்காசி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த திருமாலாபுரம் என்ற காலனி இருக்கிறது. அங்கே ஏறக்குறைய 200 அரிசன மக்கள் வசிக்கிறார்கள். 1982-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 15ஆம் நாள் அன்று குடும்பத்தில் அண்ணன் தம்பிக்குள் தகராறு ஏற்பட்டிருக்கிறது. குடும்பச் சண்டை காரணமாக அண்ணன் போலீசிலே பிராது செய்கிறார். மாலையிலே அவருடைய தம்பி காளிமுத்து என்பவரை காவல் துறையினர் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்கிறார்கள். மறுநாள் 1982 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 16-ஆம் நாள் அன்று காலை அந்த காளிமுத்து என்பவரை கோர்ட்டிற்கு அழைத்துச் செல்கிறார்கள். கோர்ட்டிற்குச் சென்றவுடன் காளிமுத்து மயங்கி விழுந்து விடுகிறான். அப்போது கோர்ட்டார் அவரை ஆஸ்பத்திரியிலே சேர்க்கும்படி சொல்கிறார்கள். ஆனால், அவர் மருத்துவ மனைக்கு கொண்டு செல்லும்போது இடையில் இறந்து விடுகிறார். மருத்துவ மனையில் போஸ்ட் மார்ட்டம் செய்து அடித்ததாலே இருதயம் கலங்கி இறந்திருக்கிறார் என்று மருத்துவச் சான்றிதழ் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. என்னுடைய தொகுதியில் மீனாட்சிபுரத்தில் பலர் மதம் மாறினார்கள் என்ற காரணங்களில் போலீசாருடைய கொடுமையினால் மாறினார்கள் என்று பல குற்றச்சாட்டுகள் கூறப்பட்டுவந்துள்ளன. இப்போது அதற்கு அருகில் திருமாலாபுரத்திலும் ஏற்பட்டிருக்கிற காரணத்தினால் காவல் துறையினரின் அட்டகாசத்தினால் இவ்வாறு நிகழ்கின்றன. இது குறித்து சர்வ கட்சிகளும் போராட்டங்கள் நடத்திக் கொண்டிருக்கின்றன. இன்றைக்குச் செங்கோட்டை காவல் நிலையமும், அச்சம்பூதூர் காவல் நிலையமும், மீனாட்சிபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள அவுட்-போஸ்ட் காவல் நிலையமும் அங்கே பணியாற்றுகின்ற சில விரும்பத்தகாத உணர்வு படைத்தோரால் எடுக்கிற நடவடிக்கையினால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பொதுமக்களுடைய கருத்து, காளிமுத்து என்பவர் போலீஸ் லாக்கப்பிலே அடிக்கப்பட்டு அவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்று பரவலாகப் பேசப்படுகிறது. இதனால், பதட்டமான சூழ்நிலை நிலவி வருகிறதால் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ரா. கிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தாலுக்கா செங்கோட்டை காவல் நிலையத்தின் எல்லைக்குள், மீனாட்சிபுரத்தின் அருகே இருக்கிற இந்த கிராமத்தில், மேல திருமாலாபுரம் என்ற கிராமத்தில் 15ஆம் தேதி ஒரு குடும்பத்தில் அண்ணன் சுப்பிரமணியன் தம்பி காளிமுத்து இருவருக்குள் ஒரு சிறு கலவரம். சுப்பிரமணியம் என்பவர் செங்கோட்டை மருத்துவ மனையில் உள்நோயாளியாக

(திரு ரா. கிருஷ்ணன்) 1982 மார்ச் 9

அனுமதிக்கப்பட்டுள்ளார். காளிமுத்து 15-ஆம் தேதி மாலையில் கைது செய்யப்பட்டு காவல் நிலையத்திற்கு கொண்டுபோகப்பட்டு மறுநாள் தென்காசி கோர்ட்டிற்கு ரிமாண்ட் செய்வதற்காக போகிற போது கோர்ட்டிலே மூர்ச்சை ஆகிறார். அங்கிருந்து தென்காசி மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லும் வழியிலே இறந்து போகிறார் அன்று மாலையே சுமார் 2½ மணிக்கு ஆர்.டி.ஓ., எஸ்.பி. ஆகியோர் அங்கே வருகிறார்கள். விசாரணைக்குப் பிறகு காளிமுத்துவினுடைய மனைவியிடம் ஒரு புகார் வாங்கப்படுகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை.)

அந்தப் புகார் அடிப்படையில் ஏற்கெனவே செங்கோட்டை மருத்துவமனையில் சிகிச்சைப்பெற்று இருக்கக்கூடிய இறந்துபோன காளிமுத்துவின் அண்ணன் கொலை செய்தார் என்று அவர் மீது வழக்கு தொடங்கப்பட்டு அவர் இப்போது கைது செய்யப்பட்டு இருக்கிறார். ஆனால், அந்தப் பகுதி மக்களிடையே மிகப்பெரிய சந்தேகம் என்னவென்றால், காவல் நிலையத்திலே லாக்-அப்பிலே இருந்த நேரத்தில் காவல் துறை அதிகாரிகள் அவரை பூட்ஸ் காலால் உதைத்த காரணத்தால் சாகடிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதாகும். இந்த நிகழ்ச்சியை மறைப்பதற்குத் திட்டமிட்டு ஆர்.டி.ஓ.வும், எஸ்.பி-யும் சேர்ந்து, அவர்களுடைய ஆலோசனையின் பேரில் இறந்துபோன காளிமுத்து அவர்களின் மனைவியிடம் ஒரு புகார் வாங்கி, அந்த அடிப்படையில் வழக்கு தொடரப்பட்டு இருக்கிறது. நமது நாட்டில் ஒரு பழமொழி உண்டு. குதிரை கீழே தள்ளியதும் அல்லாமல் குழியையும் பறித்ததாம். அதைப் போல ஒருவரைச் சாகடித்து கொலை செய்ததோடு மட்டுமல்லாமல், அவர் கூடப்பிறந்த அண்ணனையே கொலை வழக்கில் மாட்டியிருப்பது வேதனைக்குரியதாகும். காவல்துறையின் அறிக்கையின் வாசகம் எப்படியும் இருக்கலாம். ஆனால், அந்தப் பகுதியில் இருக்கும் மிக பயங்கரமான சூழ்நிலையை அரசாங்கம் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இதைத் தீவிரமாக விசாரித்து ஒரு முழுமையான உண்மையான நிலைமை தெரிய வேண்டும் என்று சொன்னால் அதற்கு நீதி விசாரணை நடத்த வேண்டும் என்று சர்வ கட்சித் தலைவர்கள் சொல்லுகிறார்கள்,

இறந்து போன காளிமுத்து நான்கு குழந்தைகளுக்குத் தகப்பன். அவர் குடும்பம் நிர்கதியாக இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதும் ஒரு கோரிக்கை

ஆகவே, இறந்துபோன காளிமுத்து இறந்ததிற்கான உண்மையான காரணம் என்ன என்பதைத் தீவிரமாக விசாரித்து, அதற்குச் சம்பந்தப்பட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுப்பது மிக



1982 மார்ச் 9] [திரு. ரா. கிருஷ்ணன்]

அவசியம் என்பதை வலியுறுத்தவும், இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் இனி நிகழாமல் இருப்பதற்காக ஆலோசனைகளைத் தெரிவிக்கவும் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. எல். இளையபெருமாள் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இறந்துபோன காளிமுத்து என்பவர் செங்கோட்டை தென்காசி தாலுக்கா பன்மொழி கிராமத்திலுள்ள ஹேம்லட்டைச் சேர்ந்தவர். அவருக்கும் அவருடைய சகோதரர் சுப்பிரமணியத்திற்கும் குடும்பத்தில் பாக சம்பந்தமாகத் தகராறு நடந்தது. அது சம்பந்தமாக சகோதரர்களில் ஒருவருக்கொருவர் காவல் துறையில் புகார் செய்தார்கள். புகாரை விசாரிக்கும் பெயரில் 1982 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 15 ஆம் நாள் அன்று விசாரணைக்காக போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று இருக்கிறார்கள். அப்படி விசாரிக்கின்ற நேரத்தில் ஜாதியைச் சொல்லி கேவலமாக அவரைப் பேசியிருக்கிறார். அங்கேயிருக்கிற எஸ்.ஐ. அப்போது அவர் திருப்பிச்சொல்லியிருக்கிறார், நீங்கள் விசாரணைதான் செய்யலாமே தவிர ஜாதியைக் குறிப்பிட்டுக் கேவலமாகப் பேசுவதுகூடாது என்று சொல்லியிருக்கிறார். அதன் காரணமாகக கோபம் அடைந்த எஸ்.ஐ. பூட்ஸ்காலால் அவரை எட்டி உதைத்து கீழே தளளி இருக்கிறார். அப்படி கீழே விழந்ததோடு விடாமல், மேற்கொண்டும் அவரை அங்கேயிருந்த காவல்துறையைச் சேர்ந்தவர்கள் அடித்து இருக்கிறார்கள். இப்படி அடிக்கப்பட்ட காரணத்தால் அவன் மயக்கம் அடைந்து இருக்கிறான். அப்படி மயக்கமடைந்துள்ள நிலையிலும் அவனை கோர்ட்டுக்கு அழைத்துச் சென்று ரிமான்ட் வாங்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அவன் அப்போது கோர்ட்டிலேயே மயக்க நிலையை அடைந்து இருக்கிறான். பிறகு, அவனை அங்கேயிருந்து மருத்துவ மனைக்குக் கொண்டு செல்கிறார்கள். அப்படி கொண்டுசெல்கின்ற வழியில் அவன் உயிர் பிரிந்து இருக்கிறது. இப்படி இதைச் செய்துவிட்டு, அவருடைய சகோதரர் மருத்துவ மனையில் இருப்பவர். அவர்தான் குடும்பத் தகராறு காரணமாக இவரை அடித்துக் கொன்று விட்டார் என்று தவறான முறையில் புகார் எழுதி வாங்கி, அவரைக் கைது செய்து இருக்கிறார்கள். போலீசார் செய்த ஒரு தவறான காரியத்திற்காக அந்தப் போலீசாரைக் காப்பாற்ற வேண்டும் என் பதற்காக மேல் அதிகாரிகள் மட்டத்தில் உள்ளவர்கள் இந்த மாதிரியான காரியங்களைச் செய்து இருக்கிறார்கள். இப்படிச் செய்வதற்குக் காரணம் அரசாங்கம் போலீசார் எதைச் செய்தாலும் அதை ஆதரிக்கிறது, போலீசாருக்குத்தான் துணையாக இருக்கிறது என்கிற எண்ணம்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் இது குறித்து அரசாங்கத்திற்கு சரியான தகவல் கொடுக்காதது மட்டுமல்ல. தமிழகத்தில் அரிசனங்கள் மட்டு

[திரு. எல். இளையபெருமாள்] [1982 மார்ச் 9

(பிற்பகல் 10-28)

மல்ல, யாரெல்லாம் ஏழைகளாக இருக்கிறார்களோ அவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்திருந்தாலும் ஏழைகளாக இருந்தால் எடுத்ததும் அவர்களை அடிப்பதும் 75-ஐப் போட்டு சார்ஜ் பண்ணுவதும், எடுத்ததும் பூட்ஸ் காலால் உதைப்பதும் அரசாங்கத்திலே இரண்டு ஆண்டுக் காலமாய் நடந்துகொண்டிருக்கிறது என்பதை அரசு தெரிந்து இருந்தும் அவர்கள் கொடுக்கிற ரிப்போர்ட்டையே அவையிலே வைக்கிற வழககமாக இருப்பதால் அவர்கள் துணிவாகச் செய்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொண்டு இன்றைக்கு நிர்கதியாகிவிட்ட அந்தக் குடும்பத்திற்கு அரசாங்கம் பாதுகாப்பு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்வது ஒன்று. இன்னொன்று, யார் உண்மையாகவே அந்தக் குற்றத்தைச் செய்தார்கள் என்று கண்டுபிடிப்பதற்கு வழி செய்வது. டாகடர் கொடுத்திருக்கின்ற ரிப்போர்ட்டில் கொலை செய்யப்பட்டதாக அடிக்கப்பட்டதாக இம்சையால் இருதயம் கலங்கியதாகச் சொல்லியிருப்பதால் உயர் அதிகாரிகளை வைத்து விசாரணை அல்லது நீதி விசாரணை செய்துதான் உண்மையைக் கண்டுபிடிக்க உதவும். அது மட்டுமல்ல இதுபோன்ற அக்கிரமங்கள் இனிமேல் நடக்காமல் தடை செய்யவும் வழிசெய்யும். ஆகவே, இது முக்கியமான விஷயமாக இருப்பதால் இந்தப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த காளிமுத்து என்பவர் இறந்தது ஏதோ அவருக்கும் அவருடைய அண்ணன் சுப்பிரமணியனுக்கும் இருந்த குடும்பத் தகராறு காரணமாக என்று சொல்லப்படுகிறது. போலீஸ் நிலையத்தில் 1982-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 15-ஆம் நாள் அன்று தகராறு பற்றி புகார் செய்யப்பட்டிருக்கிறது. அவரை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று அன்று இரவு ஸ்டேஷனிலே வைத்து சாதியைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள், சப்-இன்ஸ்பெக்டரும், போலீஸ்காரர்களும் பேசியிருக்கிறார்கள், ஏனைய்யா, சாதியைப் பற்றி பேசினீர்கள் என்று கேட்ட ஒரே காரணத்திற்காக அவரை பூட்ஸ் காலால் உதைத்து இம்சைப் படுத்தியிருக்கிறார்கள். அடுத்த நாள் காலையில் அவரைக் கோர்ட்டிற்குக் கொண்டுபோய் இருக்கிறார்கள், கோர்ட்டிலேயே, அவர் மயக்கமுற்று விழுந்திருக்கிறார். கோர்ட்டாரே அவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோங்கள் என்று சொல்லி போகிற போது அவர் இறந்து போயிருக்கிறார். ஆனால், தன் சொந்த அண்ணன் தான் அதற்குக் காரணம் என்று மனைவியிடம் தவறான பெட்டிஷனை வாங்கியிருக்கிறார்கள். அரிசனங்களுக்கும், ஏழைகளுக்கும் இப்படிப்பட்ட கொடூரங்கள் நடைபெறுகின்றன. யாரால் அடித்துக் கொல்லப்பட்டாலும் எந்த நிலையிலே மரணமடைந்தாலும் போலீசுக்கும் அரசுக்கும் பாதுகாக்கக்கூடிய கடமை



1982 மார்ச் 9] [திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்]

இருக்கிறது. ஆனால், கீழே உள்ள போலீஸ்காரர்களை பாதுகாக்கவேண்டுமென்ற ஒரே காரணத்திற்காக அந்தக் கொலையை மறைக்கக்கூடிய காரியம் நடக்கிறது. அவருடைய மனைவி, ஒரு ஆண் குழந்தை, இரண்டு பெண் குழந்தைகள் இவர்களை விட்டு விட்டு அந்த நபர் இறந்திருக்கிறார். இப்படிப்பட்ட கொடுமைகள் நடக்காமல் தடுப்பதற்கும் அந்தக் குழந்தைகள் 3 பேர்களுக்கும் மாண்புமிகு முதல்வர் நிதியிலிருந்து உதவி செய்வதற்கும் இறந்தவருடைய குடும்பத்தைப் பாதுகாக்கக்கூடிய அளவுக்கு நடவடிக்கை எடுக்கவும் நீதி விசாரணை நடத்த வேண்டுமென்பதற்காகவும் இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆகவே, சபையை ஒத்திவைத்து இதை விவாதிக்க அனுமதிக்க வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காளிமுத்து என்ற ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர் போலீஸ் லாக்கப்பில் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்று நம்புவதற்குப் போதுமான சாட்சியங்கள் இருப்பதாகத் தெரிகிறது. டாக்டருடைய சர்டிபிகேட்டும் அதைத்தான் உறுதிபடுத்துகிறது. சட்டத்தின் முன்னாலே அனைவரும் சமம். அமைச்சர் காளிமுத்துவாக இருந்தாலும், சாதாரண காளிமுத்துக்களாக இருந்தாலும் எல்லோருடைய உயிரும் பாதுகாக்கப்பட வேண்டியதுதான். காரணம், மனித உயிர் புனிதமானது. அதிலே ஜாதிகள் கிடையாது. ஒரு நாயைக் கொல்வதாக இருந்தாலும் கூட, யாருக்கும் உரிமை கிடையாது. ஆனால், இங்கே போதுமான அளவிற்குச் சாட்சியங்கள் தெளிவாக இருக்கின்றன. இதிலே வேதனை கலந்த வேடிக்கை என்னவென்று கேட்டால், காளிமுத்துவிற்கும் அவருடைய அண்ணனுக்கும் தகராறு. அதனாலே இந்தக் காளிமுத்துவை விசாரிப்பதற்காகப் போலீசார் கொண்டு வந்து விசாரணை என்ற பெயரால் போலீஸ் லாக்கப்பில் வைத்திருக்கிறார்கள். இப்படி ஒரு வன்முறை சம்பவத்தின் காரணமாகப் போலீஸ் அந்தக் காளிமுத்துவை அடித்து இம்சைப் படுத்தியதாலே இருதயமே வெடித்து விடுகின்ற அளவிற்கு வன்முறை ஏற்பட்டது என்று டாக்டர் சர்ட்டிபிகேட் சொல்வது போன்ற காரணங்களாலே மரணம் சம்பவித்திருக்கிறது.

ஆனால், இந்த மரணத்திற்கு யார் காரணம் என்று போலீஸ் யார் மீது வழக்குப் போடுகிறது என்று சொன்னால் எந்தக் காளிமுத்து அநியாயமாகக் கொல்லப்பட்டாரோ அந்தக் காளிமுத்துவினுடைய அண்ணன் மீது 302 செக்ஷன் போட்டிருக்கிறது. இதைக் காட்டிலும் கொடுமை வேறு இருக்க முடியாது என்பதை எனக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலே சொல்ல விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவரவர்களே, இதுபோன்று போலீஸ் லாக்கப்பிலே சொல்லப்பட்ட சம்பவங்கள் பற்றித் தொடர்ந்து இந்தச் சட்டமன்றத்திலே நானே எட்டு, ஒன்பது கேஸ்கள் பற்றிப் பேசியிருப்பேன் போலத் தெரிகிறது. அந்த அளவிற்கு இங்கே தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகிறது. ஆனால், நான் கேட்பதெல்லாம் ஏதாவது நடவடிக்கை இருக்கிறதா என்பதுதான்.

இராஜன் கொலை வழக்கிலே கொலை செய்தவர்கள் என்று குற்றம் சுமத்தப்பட்ட போலீஸ் அதிகாரிகள் மீது வழக்கு போடப்பட்டது. நீதிமன்றத்திற்குப் போனார்கள். இன்றைக்குச் சுப்ரீம் கோர்ட்டிலே அப்பீல் இருக்கிறது. அது வேறு விவகாரம்.

அதைப்போலவே, பகல்பூரிலே கைதிகளுடைய கண்களைக் குருடாக்கிய குற்றத்திற்காக அவர்கள்மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, நான் இன்னும் தெளிவாகச சொல்ல விரும்புறேன். போலீஸ்காரராக இருந்தாலும் சரி, தனி நபர்களாக இருந்தாலும் சரி, ஒரு விஷயத்தைப் பார்க்க வேண்டும். தனி நபர் ஒருவர் செய்தால் அது கொலையாக ஆகிவிடுகிறது. போலீசார் லாக்கப்பில் அடித்துக் கொன்று போட்டால் அதுவும் கொலைதான். எனவே, அப்படி செய்யக்கூடிய சட்டத்திற்குப் புறம்பாக போலீஸ் லாக்கப்பில் இம்மாதிரி சாவு ஏற்படுவதற்குக் காரணமான சூழ்நிலைகளைச் செய்யக்கூடியவர்கள் போலீஸ்காரர்களாக இருந்தாலும், இன்ஸ்பெக்டராக இருந்தாலும், வேறு எந்த அதிகாரிகளாக இருந்தாலும் அவர்கள்மீது 302 செக்ஷன்படி கொலைவழக்குப் போட்டு, அவர்களை விசாரிப்பதற்காக நீதிமன்றத்திற்குக் கொண்டுவந்து அவர்கள் தூக்கு மேடையைச் சந்திக்க வைக்கின்ற அளவிற்கு அவர்களுக்குத் தண்டனை கிடைக்கக்கூடிய ஒரு சூழ் நிலையை ஏற்படுத்தினால்தான் இந்த போலீஸ் அக்கிரமம் ஓரளவிற்குக் குறையும்.

வெள்ளைக்கார பிரிட்டிஷ் எகாதிபத்தியம் அடக்குமுறை காரணமாகப் பயன்படுத்திய போலீஸ் நிர்வாகம் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. குற்றவாளிகளைத் தண்டிக்கின்ற அதிகாரம் போலீஸ் அதிகாரிகளுக்குக் கிடையாது. நீதிபதிதான் தண்டனை தர வேண்டும்; நீதிமன்றம்தான் தண்டனை தர வேண்டும்; பில்லா, ரங்கா போன்ற மிகப்பெரிய சமூக குற்றவாளிகளைக் கூட யாரும் கொன்றுவிடவில்லை. அப்படிப்பட்ட நிலைமையிருந்தால் ஒருவர்கூடத் தப்ப முடியாது. போலீஸ்காரர் யாரை வேண்டுமானாலும் துப்பாக்கியை எடுத்துச் சுட்டுக்கொ[illegible] இருக்கக்கூடிய அக்கிரமம் நாட்டிலே நடைபெறும்.





எனவே, ஒரு உண்மையான ஜனநாயக நாட்டிலே, ஒரு உண்மையான சட்டத்தினுடைய ஆட்சி இருக்க வேண்டுமென்று சொன்னால் என்ன செய்ய வேண்டுமென்று பார்க்க வேண்டும். போலீஸ் லாக்காப்பிலே ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த ஒரு இளைஞர் இன்றைக்குக் கொல்லப்பட்டு, அவருடைய மனைவி பூவிழந்து, பொட்டிழந்து விதவையாக்கப்பட்டு அவருடைய குழந்தைகளெல்லாம் சிரமத்தில் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

நம்முடைய குடும்பத்தில் இப்படியொரு சம்பவம் நடந்தால் எவ்வளவு பெரிய வேதனையாக இருக்கும் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இம்மாதிரி தவறு செய்பவர்கள்மீது விசாரணைக் கமிஷன் ஒரு புறத்திலே போடப்பட்டாலும் அந்த விசாரணைக் கமிஷனுக்குப் பின்னாலே டாக்டர் கோபாலகிருஷ்ணன் சாட்சியம், போன்று நிலைமைகள் ஏற்பட்டுவிடும். ஆகவே, டைரக்டாக 302 செக்ஷனிலே போட்டு நீதிமன்றத்திற்குக் கொண்டு போங்கள் என்று கேட்கின்ற காரணத்தால் இது மிக முக்கியமான சம்பவம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வழக்கம்போல நம்முடைய நாவலர் அவர்கள் எந்தப் போலீஸ்காரர்கள் இந்த அக்கிரமத்திற்குக் காரணமோ அவர்களிடமிருந்தே ரிப்போர்ட் வாங்கி எனக்குக் கிடைத்திருக்கின்ற தகவல் இது, உனக்குக் கிடைத்திருக்கின்ற தகவல் இது இதோடு பிரச்னை முடிந்தது என்று சொன்னால் மக்களுடைய உயிர் தொடர்ந்து போய்க்கொண்டே இருக்கும். எனவே இது பப்ளிக் இம்பார்ட்டன்ஸ் உள்ள அர்ஜெண்டான மேட்டர். இதைக்காட்டிலும் முக்கியமான பிரச்னை இருக்க முடியாது. சட்டத்தின் முன் எல்லோரும் சமம்தான். நாளைக்கு விசாரணை என்று சொல்லி என்னையும் அழைத்துப் போகலாம். எல்லோரையும் அழைத்துப் போகலாம்; இதே கொடுமை வந்தால் போலீஸ்காரர் யாரை வேண்டுமானாலும் அடிக்கலாம், யாரை வேண்டுமானாலும் கொலை செய்யலாம் வழக்கு கிடையாது, விசாரணை கிடையாது என்று சொன்னால் அதற்குப் பெயர் காட்டு ராஜாங்கம் என்ற நிலைமை ஏற்பட்டுவிடும். எனவே, இந்த நிலைமைகளைப் பற்றியெல்லாம் விசாரிக்க வேண்டும். இதைக் காட்டிலும் வேறு வேலை நமக்கு கிடையாது. ஆகவே, சபையின் இதர வேலைகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-30]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சம்பவத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களும் அந்த இடத்திலே இல்லை, நானும் அந்த இடத்திலே இல்லை. அவருக்குக் கிடைத்த தகவலை வைத்து அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனக்குக் கிடைத்த தகவலை வைத்து நான் விவரம் தருகிறேன். போலீஸ் துறையிலிருந்து இந்தத் தகவலை வரவழைக்க கூடாது என்றால், வேறு எந்த இடத்திலேயிருந்து இந்தத் தகவலை நான் வரவழைப்பது என்று எனக்குத் தெரியவில்லை. எந்த ஆட்சி நடைபெற்றாலும் எப்பொழுது ஒத்தி வைப்புத் தீர்மானம் வந்தாலும், இதுபோன்ற பிரச்னைகள் வருகிற பொழுது, தொடர்ந்து போலீஸ் துறையின் மூலம் கிடைக்கின்ற தகவலை வைத்துச் சொல்கிறோம். நீங்கள் சொல்லியதிலே மாறுபட்ட தகவலை அவர்கள் சொல்கிறபொழுது, இந்த இரண்டையும் வைத்து இதற்குப் பிறகு நீதி கிடைக்க வேண்டும் என்றால், இதற்கான முயற்சிகள் எடுக்க வேண்டுமே தவிர, உங்களுக்குக் கிடைத்த தகவலைத்தான் ஒவ்வொரு உறுப்பினரும் எனக்குக் கிடைத்த தகவல் என்று சொன்னீர்கள்—நான் எனக்குக் கிடைத்த தகவல் என்று நான் சொல்கிறேன். அதிலே சில மாறுபாடுகள் இருந்தால், விசாரித்து, நீதி கிடைக்க முயல வேண்டும்.

1982 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 15 ஆம் தேதி மாலை 6-00 மணிக்கு தென்காசி தாலுகா, திருமாலாபுரம் ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஈழத்தார் ஆரம்பச் சுகாதார நிலையத்தில் சுகாதார ஆய்வாளராகப் பணிபுரியும் சுப்பிரமணியம் மகன் சுப்பிரமணியம் என்பவர் செங்கோட்டைக் காவல் நிலையத்தில் ஆஜராகி ஒரு புகார் கொடுத்தார். அதில் தனது சகோதரன் காளிமுத்து 15—2—1982 மாலை 2-30 மணிக்கு அரிவாளால் தனது இடது கைசுண்டு விரலை வெட்டி விட்டதாகவும், காளிமுத்து தன்னை அடித்ததாகவும் காளிமுத்து வீட்டுக்கு அருகில் இருந்த குப்பை குழியில் சுப்பிரமணியம் மகள் செல்லத்தாயி சாம்பலைக் கொட்டியதற்கு காளிமுத்து மனைவி சின்னத்தாய் திட்டியதாகவும் கூறி இருந்தார். இப்புகாரின் மீது செங்கோட்டைக் காவல் நிலையத்தில் இந்திய தண்டனைச் சட்டத்தின் 323, 324 பிரிவுகளின்கீழ் குற்ற எண். 47/82-ல் வழக்கு பதிவு செய்து, உதவி ஆய்வாளர் புலன் ஆய்வு செய்தார். உதவி ஆய்வாளர், காளிமுத்துவை 16—2—1982 ஆம் நாள் காலை 7-30 மணிக்கு தென்கோதையில் கைது செய்து, காலை 10-00 மணிக்கு தென்காசி நீதித் துறை குற்றவியல் இரண்டாம் நிலை நடுவருக்கு



ரிமாண்டுக்கு அனுப்பி வைத்தார். அவரோடு, தமிழ்நாடு நகரக் காவலர் சட்டம் 75-வது பிரிவின்படி குற்ற எண். 46 82-ல் சம்பந்தப்பட்ட வெங்கிட்டு நாயுடு மகன் வாத்து என்கிற வரதராஜனையும் காவலர்கள் மூலம் ரிமாண்டுக்கு அனுப்பி வைத்தனர். இவ்விருவரும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, வாத்து என்கிற வரதராஜன் குற்றத்தை ஒப்புக்கொண்டு ரூ. 25 அபராதம் விதிக்கப்பட்டார். காளிமுத்து, 15 நாட்களுக்கு ரிமாண்ட் செய்யப்பட்டு, அவரது உடல்நிலை சரியில்லை என்று கூறப்பட்டதால், கிளைச் சிறைச்சாலை கண்காணிப்பாளர் மூலம் மருத்துவமனைக்கு நேரே சிகிச்சைக்கு அனுப்பிவைக்க மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டார். அதன்படி ஒரு டாக்சியில் தென்காசி அரசு மருத்துவ மனை டியூட்டி மெடிகல் ஆஃபீசர் திரு. தங்கபாண்டியனிடம் கொண்டு செல்லப்பட்டு அவரைப் பரிசோதித்த மருத்துவர் காளிமுத்து 16—2—1982 அன்று பகல் 1-55 மணி அளவில் வருகின்ற வழியில் இறந்து விட்டிருக்கிறார் என்று கூறியிருக்கிறார். இந்த தகவலை காவலர்கள் தென்காசி காவல் நிலையத்தில் அறிவித்தனர்.

அதன்மேல், குற்ற விசாரணை முறைச் சட்டத்தின் 174-வது பிரிவின்படி குற்ற எண். 124/82-ல் மாலை 3-45 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டு மேலதிகாரிகளுக்குத் தகவல் அனுப்பப பட்டது. இதன்படி 16—2—1982 ஆம் நாள் அன்று மாலை 5-30 மணிக்கு இறந்து போன காளிமுத்துவின் மனைவி சின்னத்தாயி வழக்கறிஞர் செல்லப்பாவுடன் செங்கோட்டைக் காவல் நிலையத்தில் ஆஜராகி காளிமுத்துவின் சகோதரர் சுப்பிரமணியம் 15—2—1982 ஆம் நாள் அன்று 2-30 மணி அளவில் திருமாலாபுரத்தில் வாலக்கொம்பினால் அடித்ததன் காரணமாக திரு. காளிமுத்து இறந்துவிட்டார் என்ற ஒரு புகார் கொடுத்தார்.

அதைப்பற்றி தலைமைக் காவலர் இந்திய தண்டனைச் சட்டத்தின் 302-வது பிரிவின்கீழ் குற்ற எண். 43/82-ன் கீழ் வழக்குப் பதிந்து துரித முதல் தகவல் அறிக்கையைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தார். அதைச் செங்கோட்டைக் காவல் துறை ஆய்வாளர் புலன் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டார். இது குறித்த தகவலைப் பெற்ற திருநெல்வேலி வருவாய்க் கோட்ட அலுவலர் 16—2—1982 அன்று இரவு விசாரணைக்கு எடுத்துக்கொண்டு பின் சவப் பரிசோதனைக்கு அனுப்பி வைத்தார். பிரேத பரிசோதனையின்போது சுப்பிரமணியத்தின் தாக்குதலால் காளிமுத்து மரணம் அடைந்தார் என்று பஞ்சாயத்தார் பொதுவான கருத்தைக் கூறினார். சம்பந்தப்பட்ட மருத்துவ அதிகாரி காளிமுத்துவின் விசராவை இரசாயன பரிசோதனைக்கு அனுப்பி வைக்குமாறு வருவாய்க் கோட்ட அலுவலர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இச் சம்பவம் குறித்து காவலர் நிலை ஆணைஎண். 145-ன்படி விசாரணைசெய்து அறிக்கை அனுப்பிவைக்கும்படி திருநெல்வேலி வருவாய்க்கோட்ட அலுவலர் பணிக்கப்பட்டுள்ளார். அவர் அறிக்கை கிடைத்த பின் இதனுடைய முழு விவரமும் தெரிய வரும். 15 ஆம் தேதியே அவர்கள் கைது செய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டு, மறுநாள் கோர்ட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தகவல் தந்திருக்கிறார்கள். 16 ஆம் தேதி காலை 7-00 மணிக்குக் கைது செய்யப்பட்டதாகவும் 10-00 மணிக்குக் கோர்ட்டுக்குச் சென்றதாகவும், அதற்குப் பிறகு அவர் மருத்துவ மனைக்குச் சென்றதாகவும் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகவேதான், கோட்ட வருவாய்த்துறை அலுவலர் அறிக்கையும் அது மட்டுமல்லாமல், இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களின் அடிப்படையிலும், நான் எடுத்து வைத்த தகவலின் அடிப்படையிலும் விசாரித்து அறிந்தது மட்டுமல்லாமல், அங்கே இரசாயனப் பரிசோதனையின் மூலம் கிடைக்கின்ற அத்தனையும் வைத்துக் கொண்டு, உண்மையான குற்றவாளிகள் யார் என்று கண்டுபிடித்து, அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க இந்த அரசு ஆயத்தமாக இருக்கும். அந்த விசாரணை அறிக்கையை நாம் எதிர்பார்த்து கொண்டிருக்கிறோம். அறிக்கை வந்ததற்குப் பிறகு, மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற கருத்தையும் மனதிலே வைத்து, ஆராயலாம் உறுப்பினர் கூறுவது 15 ஆம் தேதியே கைது செய்து ரிமாண்டில் வைத்தார்கள் என்பதாகும்.

எனக்குக் கொடுத்திருக்கிற தகவல் 16-ந்தேதி காலையிலே கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டார். ரிமாண்டிலே வைத்ததாக சொல்லப்படவில்லை. இரண்டையும் விசாரித்த பிறகுதான் நமக்கு உண்மை தெரியவரும். யார் குற்றவாளிகளாக இருந்தாலும் அவர்களை காப்பாற்ற வேண்டிய அவசியம் இந்த அரசுக்கு இல்லை. அதுப் பற்றி தக்க நடவடிக்கைகளை இந்த அறிக்கை வந்ததற்குப் பிறகு மேற்கொள்ளப்படும். இந்த அறிக்கை வந்தப் பிறகு அந்தக் குடும்பத்தினுடைய நிலைமையைப் பற்றி அரசு உதவிசெய்ய வேண்டும் என்ற கருத்தையும் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். அதனுடைய அடிப்படையில் எத்தகைய உதவியைச் செய்ய வேண்டும் என்று ஏற்படுகிறதோ அதைச் செய்ய அரசு ஆயத்தமாக இருக்கிறது என்பதைக் கூறிக்கொண்டு, இதற்கு மேல் இந்த அவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** அந்த அதிகாரிகள் சஸ்பென்ட் பண்ணப்பட்டிருக்கிறார்களா அல்லது நடவடிக்கை உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, கொடுத்திருக்கின்ற தகவல் முழுவதையும் நான் படித்து விட்டேன். இதற்கு பிறகு எனக்குத் தனியாக ஏதாவது செய்தி தெரிந்தால் தான் நீங்கள் கேட்கின்ற கேள்விக்கு நான் பதில் சொல்ல முடியும். இதிலே இருப்பதை வைத்துதான் இப்போது பதில் சொல்ல முடியும். அதிகாரிகள் தவறு செய்தார்கள் என்று வந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் பதிலுக்குப் பின்னர் எந்த விளக்கமும் கேட்பது மரபாகாது.

மாண்புமிகு அவைமுன்னவரின் விளக்கத்திற்குப்பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

## 3. அறிக்கை அளித்தல்.

### துணை வினாவிற்கு அளித்த விடைக்கான திருத்தம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 1982-ம் ஆண்டு பிப்ரவரி 4-ம் நாள் அன்று 31-வது வினாவிற்கான துணைவினாவிற்கு அளிக்கப்பட்ட விடைக்கு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திருத்தம் ஒன்றை அளிப்பார்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 4-ம் நாள் அன்று சட்டமன்ற பேரவை வினா எண். 4788 (புதிய எண். 31) விடையளிக்கப்பட்டபோது, சட்டமன்ற உறுப்பினர் திரு. ரா. கிருஷ்ணன் அவர்கள் துணை வினா ஒன்றினை எழுப்பினார். ''பி.எஸ்.ஸி (அக்ரி) மற்றும் பி.இ. டெக்னிகல் குவாலிபிகேஷன் உள்ளவர்கள் புல்லி குவாலிபைடு ஆனவர்கள் என்றும், இதனால் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழுவைப் பொறுத்தவரையில் அவர்களைத் தேர்ந்தெடுக்க முடிவு செய்வதற்கு அங்கே ஒன்றும் இல்லை என்றும், ஒரு சினியாரிட்டி பேசிசில் அவர்களை அப்பாயின்ட் செய்ய அரசு முன்வருமா?''

இதற்கு விடையளிக்கையில், ''அப்படித்தான் இப்போது ஏற்பாடு செய்யப்படுகிறது'' என்று கூறினேன். அதைக் கீழ்க் கண்டவாறு திருத்தி ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

வேளாண்மை அலுவலர்கள், உதவிப் பொறியாளர்கள் (வேளாண்மை/ பொறியியல்) பதவிகளுக்கு முறையே பி.எஸ்.ஸீ (வேளாண்மை) பி.இ. பட்டப்படிப்பு படித்தவர்கள் தகுதி வாய்ந்தவர்கள் ஆவார்கள். இப்பதவிகள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழுவின் வரம்பிற்குட்பட்டவை. தமிழ்நாடு வேளாண்மை விரிவாக்கப் பணி சிறப்பு விதி மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் பணிச்சிறப்பு விதிகளின் படி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் உதவிப் பொறியாளர்கள் (வேளாண்மைப் பொறியியல்) பதவிகளுக்கு நியமனம் செய்டத் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழுவின் மூலம் நேரடி முறையில் தேர்வு செய்யப்படுகிறது. மேற்கூறிய பதவிகள் தொழில் நுட்பப் பதவிகளாக இருப்பதால் எழுத்துத் தேர்வு நடைபெறுவதில்லை. ஆனால் பணி "வேட்பாளர்களை தேர்ந்தெடுக்க வாய்மொழித் தேர்வு நடத்தப் படுகிறது".

"தமிழ்நாடு அரசு மற்றும் சார்நிலைப் பள்ளிகளில் பொது விதிகளின் விதி 22-ன் கீழ், ஒதுக்கீடு விதியைப் பின்பற்றி வாய் மொழி தேர்வு மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாடு தேர்வாணைக் குழுவால் முதுநிலை நிர்ணயம் செய்யப் படுகிறது. எனினும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவினால் தேர்வு செய்யப்பட்டு முறைப்படுத்தப்பட்டவர்கள் இல்லாவிட்டால், தமிழ்நாடு வேளாண்மை விரிவாக்கப்பணி மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் பணிச்சிறப்பு விதிகளில் குறிப்பிட்ட தகுதிகளின் அடிப்படையில் வேளாண்மை அலுவலர்கள் மற்றும் உதவிப் பொறியாளர்கள் பதவிகளுக்குத் தற்காலிக நியமனங்கள் வேலை வாய்ப்பகம் மூலம் செய்யப் படுகிறது. தேர்வாணைக்குழுவினால் தேர்வு செய்யப்பட்டவர் களின் பட்டியல் கிடைக்கப்பெற்றவுடன் அவர்கள் மாற்றப்படு வார்கள்"

**4. கவன ஈர்ப்புகள்.**

**அ. சேலம் செவிலியர் பயிற்சிப் பள்ளி மூடப்பெற்றது.**

திரு. செ. செம்மலை : துணைத்தலைவர் அவர்களே, "சேலத்தில் நடைப்பெற்று வந்த செவிலியர் பயிற்சிப் பள்ளி திடீரென்று மூடப்பட்டது குறித்து" அவசரப் பொது முக்கியத்து வம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : துணைத்தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.



**அறிக்கை.**

சனவரி திங்கள் 1980 ஆம் ஆண்டில் சேலம் மாவட்ட தலைமையிட மருத்துவமனையில் தேவையான கட்டிடம் கட்டு வதற்கு முன்னரும், வாடகைக்கு இடம் கிடைப்பதற்கு முன்னரும் செவிலியர் பயிற்சிப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. இப் பயிற்சிப் பள்ளியில் சனுவரி பிரிவில் 50 மாணவர்களும், ஜூலை பிரிவில் 50 மாணவர்களும் அனுமதிக்கப்பட்டனர். இப்பள்ளியில் இது வரை 150 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஜனவரி 1980—50, ஜூலை 1980—50, மற்றும் ஜனவரி 1981—50) சேலம் மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் தற்சமயம் உள்ள இடத்தில் மேலும் கூடுதலாக மாணவர்களை சேர்ப்பது என்பது இயலாத காரியமாகும். ஆகவே 1981 ஜூலை பிரிவுக் குள்ள மாணவர்கள் மற்ற மையங்களுக்கு மாற்றப்பட்டனர். 1982 ஜனுவரி பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களும் இடம் வசதியில்லாத காரணத்தால் மாற்றப்பட்டுள்ளார்கள்.

2. செவிலியர் பயிற்சிப் பள்ளி வாடகைக்கு இடம் கிடைக்க வில்லை. மேலும் பயிற்சிப் பள்ளி கட்டுவதற்கும் சேலம் நகரத் திற்கருகில் அரசுக்கு சொந்தமான நிலங்களும் கிடைக்கவில்லை. எனவே திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலியில் செவிலியர் பயிற்சிப் பள்ளி மற்றும் செவிலியர் மாணவர் விடுதி கட்டுவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

செவிலியர் பயிற்சிப் பள்ளிக் கட்டிடம் கட்டுவது நிறுத்தி வைக்கப்பட்ட இத்தருணத்தில், 1981 ஜூலை மற்றும் 1982 ஜனவரி பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் அரசு தலைமையிட மருத்துவமனை, சென்னை, அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை, அரசு பெண்கள் மற்றும் குழந்தை களுக்கான கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனை, சென்னை தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர் அரசு இராஜாஜி மருத்துவமனை, மதுரை ஆகிய இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

திரு. செ. செம்மலை : பேரவை துணைத் தலைவர் அவர் களே, இந்தப் பயிற்சி நிலையம் சேலம் மாவட்டத்திற்கு மட்டு மல்லாமல், கோவை, தர்மபுரி, பெரியார் ஆகிய மாவட்டங் களுக்கு சேர்த்து ஒன்றாக இருந்தது. அது மட்டுமல்லாமல் இந்த விவர அறிக்கையிலே குறிப்பிடப்பட்டதிலிருந்து, வாடகைக் கட்டிடம் இல்லாததால், இந்தப் பயிற்சி நிலையம் மூடப்பட்ட தாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இடம் கிடைக்காத ஒரே காரணத்தினால் இருந்து வந்த ஒரு இன்ஸ்டிடூஷனை மூடுவது என்பது அவ்வளவு சரியானதாக இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முடிவுக்கு இது வந்திருக்குமானால்கூட, அப்போது

இந்த உத்தரவை நிச்சயமாக அவர் போட்டிருக்கமாட்டார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். 15 நாட்களுக்கு முன்பு சேலம் மாவட்ட, வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் இந்தப் பிரச்சினையை அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் எழுப்பிய நேரத்தில் வாடகைக்கு இடம் மருத்துவமனை அருகிலேயே கொடுப்பதாக மாவட்ட, ஆட்சித் தலைவர் அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். எனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒத்துக் கொள்ளும்போது அந்தப் பயிற்சி நிலையத்தை அங்கே தொடர்ந்து நடப்பதற்கு அமைச்சர் துரிதமான நடவடிக்கை எடுத்து, இந்த ஆண்டிலேயே நடைபெற முயற்சி எடுத்துக் கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40).

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செம்மலை அவர்கள் எழுப்பிய இந்தக் கேள்வி ஒரு நியாயமான கேள்வியாக இருந்தாலும் அங்கேயிருக்கக்கூடிய நிலைமைகளை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26 ஆம் நாளன்று மக்கள் நல் வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையில் ஒரு அரசாணை போடப் பட்டது. அந்த அரசாணையின் அடிப்படையில் சேலம் நகரத்தில் இருக்கும் தலைமை மருத்துவ மனைக்கு அருகில் இந்த செவிலியர் பயிற்சிப் பள்ளிக்கு ஏற்பாடு செய்யப்படும் என்று திட்டமிடப் பட்டது. அந்த வகையில் 1980 ஆம் ஆண்டு சனவரி திங்களில் 50 மாணவர்களும், 1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் 50 மாணவர்களும், மற்றும் சனவரித் திங்கள் 1981 ஆம் ஆண்டில் 50 மாணவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அங்கே பயிற்சிக்காக அனுப்பப்பட்டனர். அங்கு உடனடியாக அந்தப் பயிற்சிப் பள்ளிக்குத் தேவையான இடம் கிடைக்கும் என்று ஆதார பூர்வமாகத் தெரிவிக்கப்பட்டது. அந்த அடிப்படையில் தான் 1979 ஆம் ஆண்டில் அந்த அரசாணை போடப்பட்டது. பிறகு நிலைமை என்னவென்றால் அங்கே இடம் கிடைக்கவில்லை. அதனால் அங்கே பயிற்சி பெறக் கூடிய அந்த செவிலியர்களை சுகாதார மற்ற தன்மையில் உள்ள இடங்களில் வைக்க வேண்டி வந்தது. இதன் காரணமாக அவர்களை வெவ்வேறு இடங்களுக்கு மாற்ற வேண்டிய அவசியத்திற்கு நாம் தள்ளப்பட்டோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள் மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டத்தில் மாவட்ட கலெக்டர், அவர்கள் இடம் அளிப்பதாக வாக்குறுதி அளித்து இருப்பதாகச்





சொன்னார்கள். அது குறித்த தகவல்கள் நம்மிடத்தில் இல்லை. அந்த முழுத் தகவல் நமக்குக் கிடைத்தவுடன் அதனுடைய அடிப் படையில் மீண்டும் இதைப் பரிசீலனை செய்யலாம். இப்பயிற்சி நிலையத்திற்காக இடம் கிடைக்கும் சூழ்நிலை இல்லையென்றால் அந்த உத்தரவு அப்படியே அமல்படுத்தப்பட வேண்டிய சூழ் நிலையில் நாம் இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) வடாற்காடு மாவட்டத்தில் கால்நடைகள் நோயினால் மடிவது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திருவாளர்கள் இல. பலராமன், திருத. வேணுகோபால் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. இல. பலராமன்:** துணைத் தலைவர் அவர்களே, "வடாற்காடு மாவட்டத்தில் கால்நடைகள் நோயால் தாக்கப் பட்டு இறப்பது குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி வட ஆற்காடு மாவட்டத் தில் ஆரணி சரகத்தில் கால், வாய், கோமாரி நோய் டிசம்பர் திங்கள் 1981 இல் இறுதியில் நெடுங்குளம், வடக்கனாம் பட்டி, அனவருதி, மேலுத்தாங்கள் மற்றும் பட்டி முதலிய கிராம களில் ஏற்பட்டு அவை தக்கவாறு கட்டுப்படுத்தப்பட்டது.

ஆரணி சரகத்தில் இந்நோய் குறித்து தக்க நடவடிக்கை எடுக்க மேற்கொள்ளப்பட்டு 69 கால்நடைகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டு தடுப்பு முறைகளும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆரணி சரகத்தில் ஏற்பட்ட கால், வாய், கோமாரி நோய் பற்றிய தகவல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

ஆரணி வட்டம் (கொழப்பலூர் பகுதி.)

| (1) | | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|---|
| 1 நோய் ஏற்பட்ட இடங்கள் | .. | நெடுங் குளம். | வடக்கனாம் பட்டி. | அன் மருதை. | மேலுத் தாங்கள். | பட்டி. |
| 2 நோயின் பெயர்கள் .. | .. | கால், | வாய். | கோமாரி நோய். | | |
| 3 முதல் பாதிப்பின் தேதி | .. | 19–12–81 | 22–2–82 | 29–1–82 | 24–1–82 | 24–1–82 |
| 4 முதல் இறப்பின் தேதி | .. | 20–12–81 | 27–1–82 | 31–1–82 | .. | .. |
| 5 கடைசி பாதிப்பின் தேதி | .. | 20–1–82 | 29–1–82 | 8–2–82 | 24–1–82 | 24–1–82 |
| 6 கடைசி இறப்பின் தேதி | .. | 5–1–82 | .. | .. | .. | .. |
| 7 மொத்த பாதிப்பு .. | .. | 108 | 1 | 93 | 4 | 16 |
| 8 மொத்த இறப்பு .. | .. | 37 | 1 | 2 | .. | .. |
| | | (இளங் கன்றுகள்). | (கன்று). | (கன்றுகள்). | | |



சோதனைப் பொருட்களை கால்நடை நோய்த் தடுப்பு நிலையத்திற்கு அனுப்பப்பட்டு சோதனை செய்து ''சி'' டைப், வைரஸ் (Virus) என்று ஆய்வில் முடிவு செய்யப்பட்டது.

II. திருவண்ணாமலை சரகத்தில் போளூர் வட்டத்திலுள்ள சதுப்பேரி என்னுமிடத்தில் தொண்டை அடைப்பான் நோய், முதலில் 1982-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 16 ஆம் நாளன்று ஏற்பட்டு இதனால் இரண்டு கால்நடைகள் இறந்து போயின. 1982 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 22 ஆம் நாளுக்குப் பிறகு ஏதும் பாதிப்போ இறப்புகளோ ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

1982 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 23 ஆம் நாளன்று தகவல் கிடைக்கப் பெற்றவுடன் கால்நடை பராமரிப்புத் துறையினர் நோய் பரவிய இடத்தைப் பார்வையிட்டு தடுப்பு நடவடிக்கைகள் மேற் கொண்டனர். தற்போது இந்நோய் கட்டுப்பாட்டிலுள்ளது.

III. இராணிப்பேட்டை சரகத்தில் அரக்கோணம், பகுதியில், கிடேரி, அம்பிகாபூர், மோசூர், புதுர் முதலிய கிராமங்களில் கால்நடைகளுக்கு தொண்டை அடைப்பான் நோய் பரவியது. 1982 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 18 ஆம் நாளில் 7 கால்நடைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டு அன்றும் மறுநாளும் 7 கால்நடைகளும் இறந்தன. 1982 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 19 ஆம் நாளன்றே கால்நடைப் பராமரிப்புத் துறையினர் தக்க தடுப்பு நடவடிக்கைகளை எடுத்து 496 தடுப்பூசிகள் போட்டு தற்போது இந்நோய் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

கோமாரி நோய் மிக விரைவில் பரவக் கூடிய தொத்து நோய், நாட்டுப் பசுக்கள் தங்களுக்கு இயற்கையாகவே உள்ள தடுப்புத் திறனால் இந்நோயால் அதிகமாகப் பாதிக்கப்படுவதில்லை. ஆனால் இளங்கன்றுகள் அதிகமாகப் பாதிக்கப்படும். பசு, எருமை, ஆடுகள், வெள்ளாடுகள் பன்றி போன்ற கால்நடைகள் இந்நோயினால் பாதிக்கப்படுகின்றன. தரம் உயர்த்தப்பட்ட மாடுகள் கலப்பினக் கன்றுகள் கோமாரி நோயால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டு பால் உற்பத்தி பாதிக்கவும் இறக்கவும் நேரிடும். இந்நோய் (Virus) என்னும் நுண் கிருமிகளால் ஏற்படுகிறது. இது ஓ.ஏ.சி. A.S.I., A1 SAT-I, SAT-II, SAT-III என்ற 7 முக்கிய பிரிவும் 65 உட் பிரிவுகளும் கொண்டது. ஆதலால் ஒரு பிரிவுக்குச் செய்யும் தடுப்புச் சிகிச்சை மற்றதற்கு சரியாகப் பயனளிக்காது. இதற்கான தடுப்பு மருந்து தயாரிப்பது மிகக் கடினமானதும், செலவு அதிகமானதுமாகும். தடுப்பூசி போடுவதால் பலன் 6 முதல் 9 மாதம் வரையே நீடிக்கும். ஆதலால் மீண்டும் மீண்டும் தடுப்பூசி போட வேண்டும். இந்நோயினால் பாதிக்கக் கூடிய கால்நடைகள் அனைத்திற்கும் தடுப்பு சிகிச்சை செய்வது மிக அதிகமான செலவாகும்.

[திருமதி கோமதி சீனிவாசன்] [1982 மார்ச் 9

கோமாரி நோயிற்கான தடுப்பு மருந்து தற்சமயம் இந்திய கால்நடை ஆராய்ச்சி நிலையம் பெங்களூர் மற்றும் தனியார் நிறுவனம் ஹெக்ஸ்ட், பாரதீய அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் பெடரேஷன் போன்றவைகள் தயாரிக்கின்றன. அவர்களிடம் இருந்து அரசாங்கம் தேவையான அளவு மருந்தைப் பெற்று உபயோகப் படுத்தப்படுகிறது.

1. கால், வாய், கோமாரி நோய்க்கான தடுப்பூசி மருந்தின் விலை அதிகமானதாகும். ஏழை விவசாயிகள், குறுநில விவசாயிகள், வேளாண்மை தொழிலாளர்கள் முதலானவர்களுக்கு இத் தடுப்பூசி மருந்து கிடைக்கும் வகையில் மானிய விலையில் (50 சதவீதம்) வழங்கப்படுகிறது.

இத்திட்டம் மத்திய அரசு உதவியுடன் நடத்தப்படுகிறது. இவ்வாண்டு ரூபாய் 40,000 செலவில் சுமார் 1 இலட்சம் டோஸ் தடுப்பூசி மருந்து வாங்கப் பெற்று மாநில அளவில் விநியோகிக்க உள்ளது.

2. 1981–82 ஆம் ஆண்டிற்கான வறட்சி நிவாரணப் பணி திட்டத்தின் கீழ் ரூபாய் 17.35 இலட்சம் செலவில், கால், வாய், கோமாரி நோய் தடுப்பு மருந்து வாங்கப் பெற்று 2,52,500 டோஸ் தடுப்பூசி மருந்துகள் இலவசமாக வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டது.

3. கடந்த 1981 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணப் பணித் திட்டத்தின் மூலம் வட ஆற்காடு மாவட்டத்திற்கு 14,100 டோஸ் தடுப்பூசி மருந்து வழங்கப்பட்டது.

கோமாரி நோய் தோன்றும்கால் 'காற்றின் மூலம்' மிக விரைவாக பல இடங்களுக்கு பரவுகிறது. நோய் பரவிய விவரம் கிடைத்தவுடன் இலாகா அதிகாரிகள் நோய் கண்ட இடத்திற்கு விரைந்து சென்று தேவையான பரிசோதனைப் பொருட்கள் எடுத்தும் நோய் கண்ட கால்நடைகளுக்குச் சிகிச்சையும் அவைகளை பராமரிக்கும் முறைகள் பற்றி அறிவுரைகளும் வழங்குகின்றனர்.

**திரு. இல. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே ஆரணிப்பகுதி, திருவண்ணாமலைப் பகுதி, இராணிப்பேட்டைப் பகுதியில் தான் இந்த பாதிப்பு இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள் கால், வாய் கோமாரி நோயால் பாதிக்கப்பட்டவைகள் 108 என்றும், மொத்த இறப்பு 38 என்றும் இந்த அறிக்கையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். தடுப்பு ஊசி 69 கால்நடைகளுக்கு போட்டு இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இறப்பு



1982 மார்ச் 9] [திரு. இல. பலராமன்]

37 என்றும் சொல்லியிருக்கிறார்கள். அப்படியிருக்கையில் மொத்தப் பாதிப்பு 108 என்று கூறியிருக்கின்ற புள்ளி விவரத்தை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ராணிப்பேட்டைப் பகுதியில் பாதிப்பு என்று சொல்லியிருக்கிறார்கள். எங்கள் கிராமத்திலேயே எனக்கு தெரிந்து 3 கால்நடைகள் இறந்து விட்டன. அந்தப் புள்ளிவிவரம் இதிலே அளிக்கப்படவில்லை. இதுபோன்ற பாதிப்புகள் அதிகமாக வடாற்காடு மாவட்டத்தில் இருப்பதால் அரசாங்கம் கவனிக்காமல் இருப்பதால் அங்கேயிருக்கிற உயர்ரக பசுக்கள் அதிகமாக இறந்து இருக்கின்றன. அதே நிலையில் ஆடுகளும் இறந்து இருக்கின்றன. இதுபோன்ற நிலைகளை கவனித்து 14100 டோஸ்கள் தடுப்பு ஊசி மருந்துகள் வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது. என்று சொல்கிறார்கள். ஆனால் இத்தகைய நடவடிக்கைகள் மூலம் அதிகாரிகள் அந்த நோயைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்பது என்னால் கூறமுடியும். ஆகவே, அரசாங்கம், அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை கவனித்து நடவடிக்கை எடுப்பார்களா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கால்நடைகளுக்குத் தடுப்பு ஊசி போடுவது நோய்வருவதற்கு முன்பு செய்வது. நோய் வந்து இறந்தது குறித்து இங்கே குறிப்புகள் தரப்பட்டுள்ளன. நோய் வந்த பிறகு அவற்றைக் காப்பதற்காக 'கியுரேடிவ்' மருந்துகளைத் தான், அதைப் போக்கும் வகையில் தான் மருந்துகள் தரமுடியும் நோய் வந்தபிறகு தடுப்பு ஊசி போடமுடியாது. ஆகவேதான் தடுப்பு ஊசிகள் 69 கால்நடைகளுக்கு அந்த ஆரணிப் பகுதியில் போடப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் வறட்சி நிவாரணப் பணி மூலமாகவும் வடாற்காடு மாவட்டத்தில் 14100 டோஸ்கள் தடுப்பு ஊசிமருந்துகள் வழங்கப்பட்டு இருக்கிறது என்பதும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வளவுதான் மருந்து கொடுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் நாங்கள் கொடுத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 3 கால் நடைகள் இறந்திருப்பதாகக் குறிப்பிட்டார்கள் அந்தக் குறிப்பு அறிக்கையில் இல்லை என்றும் சொன்னார்கள் அதைப்பற்றிய விவரம் வரவில்லை. அப்படி இறந்திருந்தால் உங்கள் தொகுதியிலுள்ள கால்நடைகளுக்கு எவ்வளவு மருந்து கொடுக்க வேண்டுமோ அந்த அளவுக்கு மருந்து கொடுக்கப்பட்டு, அந்த கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சமூக நலத்துறை அமைச்சரவர்கள் சில விவரங்களை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். திருவண்ணாமலை ஒன்றியத்திலும் துரிஞ்சாபுரம் ஒன்றியத்திலும ஏராளமான கால்நடைகள் இறந்திருக்கின்றன. குறிப்பாக திருவண்ணாமலை ஒன்றியத்தில் மேல்கச்சிராப்பட்டு, கீழ்கச்சிராப்பட்டு கிராமங்களிலும் மற்ற பகுதிகளிலும் ஒவ்வொருவரும் 40, 50 ஆடுகள் வைத்து பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த கால்நடைகள் இறந்துவிட்டால் அவர்களால் எப்படி வாழமுடியும் ? அவர்களுடைய ஆடுகளில் 10, 15 ஆடுகள் தினந்தோறும் சாகின்றன என்று நான் என்னுடைய கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் தெரிவித்திருக்கிறேன். அப்படி இறப்பதற்குக் காரணம் அந்த நோயைத் தடுப்பதற்கு போதிய மருந்து இல்லை ; நல்லமுறையில் சிகிச்சை அளிக்கவில்லை. ஏன் நல்லமுறையில் சிகிச்சை அளிக்கவில்லை என்றால் அரசாங்கத்திடம் மருந்து இல்லை என்று அந்த மருத்துவ அதிகாரிகள் கூறுகின்ற காரணத்தால்தான் நல்லமுறையில் சிகிச்சை அளிக்கவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

அந்த மருந்துகள் அரசாங்கத்தில் இல்லை என்றால் தனியார் துறையில் வாங்குவதாக இருந்தால்கூட அதற்கு விலை மிகவும் அதிகமாக இருக்கிறது. விலை அதிகமாக இருந்தாலும் உரிய நேரத்தில் கிடைக்கவும் இல்லை. ஆகையால் ஆடு, மாடுகள் இறப்பைத் தடுக்க முடியவில்லை. இப்போது அரசாங்கத்தின் மூலம், கூட்டுறவுத் துறையின் மூலம், வங்கிகள் மூலம் ஆடுகள், கறவை மாடுகள் வாங்க கடன் வழங்குகிறார்ள். அந்தக் கடனைப் பெற்று வாங்கிய கால்நடைகளுக்கு நல்ல சிகிச்சை அளிக்கவில்லை என்றால் அவை இறந்துவிடுகின்றன. அதனால் வாங்கிய கடனைக் கட்ட முடியாமல் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள்; கட்டக்கூடிய வசதி அவர்களிடம் கிடையாது. ஆகவே, தேவையான மருந்துகளை அரசாங்கம் வழங்கி அல்லது அந்த மருந்துகளுக்கான மானியத்தை அரசாங்கம் வழங்கி, கால்நடைகள் இறப்பைத் தடுக்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** துணைத் தலைவரவர்களே, திருவண்ணாமலை சரகத்தில் 16—2—1982 அன்று நோய் ஏற்பட்டு, அதனால் இரண்டு கால்நடைகள் இறந்துவிட்டதாகத் தெரியவந்தது. 22—2—1982 அன்று தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பிறகு பாதிப்போ, இறப்போ ஏற்பட்டதாக தகவல் இல்லை.

23—2—1982 அன்று தகவல் கிடைத்தவுடன் கால்நடை பராமரிப்புத் துறையினர் நோய் பரவிய இடத்தைப் பார்வையிட்டு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். தற்போது இந்த நோய் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. என்று அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது.



அதுமட்டுமல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆடுகள் அதிகமாக இறப்பதாகச் சொன்னார்கள். அப்படி இறந்ததாக தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை . இறந்திருந்தால் அதற்கான மருந்துகளைக் கொடுப்பதற்கு நாங்கள் ஏற்பாடு செய்கிறோம்.

அதோடு, இந்த ஏழை எளிய விவசாயிகளுக்கு, சிறுநில உழவர்களுக்கு, வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு இந்த தடுப்பு ஊசி மருந்துகள் 50 சதவீத மானிய விலையில் கொடுக்கப்படுகிறது. ஏனென்றால் இந்த மருந்துகள் விலை அதிகம், மேலும் இந்த மருந்துகளை தயாரிப்பது மிகவும் கடினமாக இருக்கிறது. ஆகையால் மானியம் அளிக்கப்படுகிறது. நோய் வந்தபிறகுதான் மருந்து கொடுக்க முடியும். தடுப்பு ஊசி போட்டாலும் அது 6 முதல் 9 மாதங்களுக்குத்தான் தாக்குப் பிடிக்கும். அதற்குப் பின்னால் மேலும் தடுப்பு ஊசி போட வேண்டும்.

5. வரவு-செலவுத் திட்டம், 1982-83—வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 2 —மாநில ஆயத் தீர்வைத் துறை.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வைத் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,68,44,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்."

(முற்பகல் 10-50)

**திரு. த. வேணுகோபால் :** துணைத் தலைவரவர்களே, கள்ளச் சாராயம் காய்ச்சுவதையும் திருட்டுத்தனமாக கள் இறக்குவதையும் போதை வஸ்துக்களை கடத்துவதையும் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 2 மாநில ஆயத்தீர்வைத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,68,44,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. இல. பலராமன் :** துணைத் தலைரவர்களே, மது அருந்துவதை மக்கள் மத்தியிலிருந்து நீக்க, கெடுதல் விளக்கு படங்கள் சினிமா மற்றைய விளம்பரம் செய்தல் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டு தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 2 மாநில ஆயத் தீர்வைத் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,68,44,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. செ. சிவசாமி :** துணைத் தலைவரவர்களே, குடியினாலும் போதை வஸ்துக்களாலும் சமுதாயத்துக்கு ஏற்படும் கெடுதல் பற்றி அரசு சரியான பிரச்சாரம் செய்ய வேண்டியதன் அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 2 மாநில ஆயத் தீர்வைத் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,68,44,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**(ஆ) கோரிக்கை எண் 4 பொதுவிற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம்.**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண். 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 9,24,62,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

**திரு. பாபு ஜனார்த்தனன் :** துணைத் தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன். :

"மானியக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும் — நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 9,24,62,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. கே. எம். தங்கமணி :** துணைத் தலைவரவர்களே, சினிமா கொட்டகைகளில் கள்ள டிக்கெட்டுகளை விநியோகிப்பதைத் தடுப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ, 9,24,62,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



**திரு. கு. ரமணி :** தலைவரவர்களே. விசைத் தறிகளுக்குப் பயன்படுத்துகிற கோண்நூலுக்கு விற்பனைவரி உயர்த்துவதால் இத்தொழிலில் ஏற்படப் போகிற விளைவுகளைக் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்— நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 9,24,62,000 -இல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

**திரு. தி. கா. நல்லப்பன் :** துணைத் தலைவரவர்களே, விற்பனை வரி விதித்துள்ள அனைத்து பொருள்களுக்கும் ஒருமுனை வரியாக்க வேண்டியதன் அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன். :

"மானியக் கோரிக்கை எண் 4— பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்— நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 9,24,62,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** துணைத் தலைவரவர்களே, கொள்கை விளக்கக் குறிப்புக்களை* நான் இங்கே வைத்திருக்கிறேன். அவற்றை நான் படித்ததாக ஏற்றுக்கொள்ள வேணடும் என்று கேட்டுக்கொண்டு கடைசியிலே நான் பதிலளிக்கிறேன் எனபதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் இந்த மன்றத்திலே வைத்துள்ள குறிப்பேட்டினைப் பார்த்து அரசாங்கம் நடைமுறைப்படுத்துகின்ற கொள்கைகளிலே இருக்கக் கூடிய குறைபாடுகளை இங்கே சுட்டிகாட்டலாம் என்று நான் விரும்புகிறேன். இதிலே முதலிலே இங்கே சொல்லி இருக்கிறார்கள்

This Governmen: reit: rate their firm b:lief in pro:ibition policy and would not scrap the law on prch bition

---

* 121—169 பக்கங்களில் இணைப்புகளாக அச்சிடப் பெற்றிருக்கின்றன.

என்றும் இந்த மாநிலத்தில் மது விலக்கு கொள்கை தொடர்ந்து அமலில் இருக்கின்றது என்றும் சொல்கிறார்கள். நாம் இதை இந்த ஆண்டினுடைய பிக்கஸ்ட் ஜோக்காக எடுத்துக்கொள்ளலாம். தமிழ் நாட்டிலே ஏறக்குறைய 10, 15 ஆயிரம் கள், சாராயக் கடைகளைத் திறந்துவிட்டு, கூட்டுறவுத் துறையிலேயும், தனியார் துறையிலேயும் சற்றேறக்குறைய 1,500 அயல் நாட்டு மதுக்கடைகளைத் திறந்து வைத்துவிட்டு இதன் மூலமாக சற்றேறக்குறைய 100 கோடி ரூபாய் குடிப்பவர்களிடத்திலே இருந்து பணம் வருகின்றது என்று ஒத்துக்கொண்டு விட்டு இன்னும் தமிழ்நாட்டிலே மதுவிலக்கு அமலிலே இருக்கின்றது என்று சொல்லக்கூடிய நிலைமை நம்முடைய தமிழ் நாட்டைத் தவிர வேறு எந்த மாநிலத்திலும் இருக்காது என்று கருதுகிறேன். ஆகவேதான் முதலிலே சொன்னேன். மதுவிலக்கு இங்கே அமலிலே இருக்கின்றது என்று மக்கள் நம்பவேண்டும் என்ற காரணத்தாலேதான் மதுவிலக்கு இருக்கின்றது என்று சொல்லக்கூடிய வாதம் இது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மது விலக்கை ரத்து செய்துவிட்ட அந்தக் காலத்திலேயே இவ்வளவு கடைகள் இல்லை. அந்தச் சமயத்திலே இவ்வளவு பாரின் லிகர் ஷாப் என்று சொல்லக்கூடிய பிராந்திக் கடைகள் கிடையாது. "நீங்கள் சென்னை நகரத்திலே எந்தப் பகுதியிலே போய்ப் பார்த்தாலும் சரி, மூலை முடுக்குகளில் எல்லாம்" Every alternate shop in every b g area is a liquior shop என்று சொல்லக்கூடிய வகையில லஸ் போன்ற பகுதிகளில எல்லாம் 10 கடைகள் 15 கடைகள் என்ற அளவில் நிறைய வந்து விட்டன.

அதேபோல சாராய கடைகளுக்கு 3, 4 பிராஞ்சுகளையும் வைத்துக் கொள்ளலாம் என்று அனுமதித்துவிட்டு, இன்னும் மதுவிலக்கு இங்கே அமுலில் இருக்கிறது என்று சொல்வது இருக்கிறதே, அதுதான் மிக வேடிக்கையான ஒன்று என்று நான் முதலிலே சொன்னேன். இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சென்ற ஆண்டிலே இந்த மதுவிலக்கை தளர்த்தி இங்கே பேசப்பட்டபோது, சுமார் 130 கோடி அளவில் வருமானம் அரசாங்கத்திற்கு கிடைக்கும் — இன்னும் சொல்லப் போனால் 150 கோடியைக் கூட தாண்டிவிடலாம் என்கிற நிலைமையெல்லாம் அப்போது பேசப்பட்டது. ஆனால் இப்போது நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே வைத்திருக்கிற குறிப்பேடுகளைப் பார்க்கிற சமயத்திலே, அல்லது நிதியமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட பட்ஜெட் உரையிலேயும், ரிவைஸ்டு எஸ்டிமேட்டின் கீழ் ஆயத்தீர்வை வகையில் 100 கோடி ரூபாய் தான் வருமானம் எதிர்பார்க்கப்பெறுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.





அந்த 100 கோடி ரூபாயும் சரியாக வருமா அல்லது இந்தக் குறிப்பேட்டிலே கொடுத்திருக்கிற பிரகாரம் (Collection up to 31st December 198 ) என்ற வகையில் கள் சாராயக் கடைகளின் மூலமாக 50 கோடியும், வெளிநாட்டு மதுக்கடைகள் மூலமாக 9.01 கோடியும் Country Fermented Liquor (Toddy) என்கிற கள் மூலமாக 14.7 கோடியும் வருவாய் என்று குறிக்கப்பெற்று, இன்னும் ஒன்றிரண்டு பெயர்கள் போடப்பட்டிருக்கின்றன. எல்லாமும் சேர்த்து சற்றேறக்குறைய 79 கோடி ரூபாய்தான் வருகிறது. டிசம்பர் மாதம் வரையிலே என்று கூறியிருக்கிறார்கள். இன்னும் எஞ்சியிருக்கக்கூடிய அந்தப் பணமும் வருமா என்று பார்த்தாலும் கூட, அப்படியே வரும் என்று வைத்துக்கொண்டாலும் கூட 100 கோடி ரூபாய்க்கு உள்ளேதான் இருக்கக்கூடிய அளவு நிலைமை இருக்கிறது. ஆனால் 130 கோடி, அல்லது 150 கோடி ரூபாய் வரையில இதில் வருமானம் வரும். அதை வைத்துக் கொண்டு ஏழை எளிய மக்களுக்கு நன்மைகளைச் செய்யலாம் என்று முடிவு எடுத்து இந்த மதுவிலக்கைத் தளர்த்துகிறோம் என்று சொன்னார்கள். ஆனால் அந்த திட்டம் ஏன் தோல்வியடைந்தது ? அரசாங்கத்தினுடைய தவறான கொள்கைகளின் காரணமாக, சரியான செயல்முறைகள் இல்லாததின் காரணமாகத் தான், எதிர்பார்த்த அளவு வருவாய் வரவில்லை, என்றுதான் நினைக்க வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம்.

இன்னொன்றையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். என்ன காரணத்தால் அரசாங்கத்திற்கு வரவேண்டிய வருமானம் குறைகிறது என்று பார்த்தால், தமிழ் நாட்டிலே கள்ளச் சாராயம் ஆறு போல பெருகி ஓடிக் கொண்டிருக்கிறது. அதைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அதன் காரணமாகத்தான் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. அரசாங்கம் அனுமதித்திருக்கும் கள்ளுக் கடைகள், சாராயக் கடைகளின் பக்கத்திலேயே கள்ளச் சாராயக் கடைகள் இருக்கின்றன. இதனால் அரசாங்கத்தில் கடை எடுத்தவன் எல்லாம் நஷ்டப்பட்டுக் கொண்டே போக, எங்களால கடையை நடத்த முடியவில்லை என்று கலெக்டருக்கு நோட்டீஸ் கொடுத்துவிட்டு ஓடிவிடுகிற நிலைமை இருக்கிறது. பலபேர்கள் விட்டு விட்டு ஓடிவிட்டார்கள். நடத்திக் கொண்டிருக்கும் பலபேர்கள் திவாலாகக் கூடிய நிலைமையில் இருந்து வருகிறார்கள். ஆகையினால்தான் இதற்குக் காரணம் என்ன என்று ஆராய்ந்து பார்த்த போது, கள்ளச் சாராயம் நாட்டிலே பரவலாக்கப்பட்டு, எங்கும் விரிந்து வியாபித்து இருக்கக்கூடிய நிலையில் இருக்கிறது என்பதுதான் இதற்கான காரணம் என்பதையும் நாம் உணருகிறோம்.

அரசாங்கத்திற்கு வந்து சேரவேண்டிய பணம் வராமல் தவிர்க்கப்படுமேயானால் அதற்கான காரண காரியத்தை நாம் கண்டு பிடித்து, ஆராய்ந்து, அதை நீக்குவதற்கு முயற்சி செய்து, நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அரசாங்கத்தினுடைய

கடமையாகும் என்பதற்காக நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்தக் கள்ளச் சாராயத்தை தடுப்பதற்காக, ஒரு மினி மிசா சட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களை, அதை எடுத்துச் சென்று விற்பனை செய்பவர்களை, அதற்காக பணம் செலவு செய்பவர்களை எல்லாம் கைது செய்து சிறைச்சாலையிலே தள்ளுவதற்கு என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

(முற்பகல் 11-00)

இந்தச் சட்டத்தை வைத்துத்தான் இன்றையதினம் தமிழ் நாட்டில் அரசாங்கம் திறந்து வைத்திருக்கக்கூடிய அல்லது அரசாங்கம் அனுமதித்திருக்கக்கூடிய கடைகளில் வியாபாரம் நடக்க வேண்டும் என்று அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்ற ஒரு நிலைக்கு நாம் தள்ளப்பட்டிருக்கிறோம் என்பதை என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை. நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்த சமயத்தில் மதுவிலக்குக் கொள்கை ரத்து செய்யப்பட்டு மதுக்கடைகள் திறக்கப்பட்டன, அப்படி அப்போது திறந்த சமயத்தில் எப்படி அது நடைமுறையில் இருந்தது, இப்போது எப்படி நடைமுறையில் இருக்கிறது என்பதைச் சற்றுப் பார்ப்பது அரசுக்கு உதவியாக இருக்கும். அது அரசாங்கத்தின் வருமானத்தை பெருக்கக்கூடிய அளவிற்கு இருக்கும் என்ற கருத்தில்தான் இங்கே சொல்கிறேன். அப்போது ரீட்டேயில் ஷாப்களில், சாராயக் கடைகளில் 100 மில்லி குடிக்க வேண்டுமென்றால் ஒரு ரூபாய் கொடுத்து குடிப்பான். இப்போது அதே கடையில் 100 மில்லி லூஸாக சாராயம் குடிக்க வேண்டுமென்றால் அல்லது 750 மில்லி உள்ள பாட்டிலானாலும் சரி இப்போது 100 மில்லி சாராயத்தின் அடக்கவிலை ரூ.2 லிருந்து ரூ. 2.25 என்றிருக்கிறது. இப்படி 2.25 ரூபாய்க்கு விற்கிற காரணத்தால் குடிக்குத் தள்ளப்பட்டிருக்கிற அந்தப் பாட்டாளி மகன் அல்லது தாழ்த்தப்பட்டவர் அல்லது பிற்படுத்தப்பட்டவர் அல்லது அப்பாவி மக்கள் தங்களுக்குத் தெரியாமலேயே இந்த இன்னலில் மாட்டிக்கொண்டு 100 மில்லி சாராயம் குடிக்கிறான் ரூ. 2.25 கொடுத்து. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் திராவிட முன்னேற்றக்கழகத்தில் இருந்தபோது, தீர்மானத்தை முன்மொழிந்து ரத்து செய்யப்பட்ட சமயத்தில் ஒருவன் 100 மில்லி சாராயம் ஒரு ரூபாய் கொடுத்து குடித்தான். ஆனால் இன்றைய தினம் ஒரு ரூபாய்க்கு மேல் ஒரு ரூபாய் இருபத்தைந்து காசு எங்கே செல்கிறது என்றால் அது பலயிடங்களுக்கு பெரிய நதியாக, சிற்றாறாக ஓடிக்கொண்டு ஆங்காங்கே செல்ல வேண்டிய இடத்திற்குச் செல்கிறது. ஆகவேதான், அரசாங்கம் அனுமதி கொடுத்த கடைகளில் குடிக்காமல் பக்கத்திலுள்ள செடி, புதர்களுக்குள் உள்ள மட்டமான சாராயத்தைக் குடித்து உடலை



வருத்திக் கொள்கிறான். ஆக, எந்த நோக்கத்திற்காக இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்களோ அந்த நோக்கம் இன்று தோற்கடிக்கப்பட்டிருக்கிறது, அரசாங்கக் கொள்கை காரணமாக என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சாராயத்தை எப்படியெல்லாம் காய்ச்சுகிறார்கள் என்று நான் சொல்லாமல் இருக்க முடியவில்லை. 750 மில்லி கொண்ட பாட்டிலில் உள்ள சாராயம் இருக்கிறதே அந்தச் சாராயத்தில் உள்ள ஸ்ப்ரிட்டின் காஸ்ட் மட்டும் 69 பைசா. பாட்டில் கிரயம் இரண்டு ரூபாய். மூடி போட 25 பைசா. லேபல் ஒட்ட ஐந்து பைசா. உற்பத்தி செய்ய தண்ணீர் ஊற்றுகிறார்களே அதற்கு 35 பைசா. பாக்கிங் செய்ய 20 பைசா. வேஸ்டேஜ் ஐந்து பைசா. இந்த மாபெரும் காரியத்தைச் செய்கிறார்களே அதற்காக 36 பைசா. ஆக, ரூ. 3.95 பின், எக்ஸைஸ் ட்யூட்டி ப்ளஸ் சேல்ஸ் டாக்ஸ் ரூ. 3.44 என்று வைத்து ஹோல்சேலர் கமிஷன் 65 பைசா என்று ரூ. 7.90-க்கு ஹோல்சேலர் தலையில் கட்டுகிறார்கள். அவர்கள் ரீட்டேயில் கடைக்காரர்களுக்குக் கொடுக்கிறார்கள். அந்த ரீட்டேலேர்ஸ் ஏழை எளிய மக்களின் தலையில் அந்த விலைக்குக் கட்டி அவர்களை ஒழிக்கிறார்கள். இதுதான் இன்றறையதினம் நடக்கிறது. இப்படியிருப்பதால் அரசாங்கத்தின் சாராயம் செல்லுபடியாக வில்லை. தனியார் உற்பத்தி செய்கிற சாராயம் செல்லுபடியாகிறது. பல ப்ளென்டிங்க் யூனிட்களில் கணக்கு இல்லாமல் சரக்குகள் வெளியே வருகிறது. எக்ஸைஸ் ட்யூட்டி இல்லாமல் வருகிறது. தண்ணிரை காசு கொடுத்து வாங்க வேண்டியதில்லை. அதற்கு லாபரட்டரி எல்லாம் இருக்கிறது. க்ளோரல் ஹைட்ரேட் என்று சொல்கிறார்களே அதை சிறிது அதிகமாகப் போட்டால்——200 மில்லி சாப்பிட்டாலே கீழே விழுந்து விடுகிறான். பின்னர் அவன் பச்சைத் தண்ணீரைக் குடித்துக் கொண்டே இருப்பான். 100 ரூபாய் கொடுத்தால் 99 ரூபாய்க் கணக்கு சொல்லி அவன் தள்ளாடி வீட்டுக்கு வருவான். இது தான் இன்று தமிழ்நாட்டில் உள்ள கிராமங்களில் நடந்து கொண்டிருக்கிறது. இன்று இப்படி குடித்துவிட்டு பெண்டாட்டி பிள்ளைகளைக் காப்பாற்ற முடியாமல் இருக்கிறார்கள் பலர். படித்தவர்களைப் பற்றிச் சொல்லவில்லை. படிக்காதவர்களுக்கு நாம்தான் ட்ரஸ்டியாக இருக்க வேண்டும். அவர்களை ஏமாற்றினால் அந்தப் பாவம் நம்மை விடாது. ஏழை மக்களுக்கு துரோகம் செய்தால், அது யாராக இருந்தாலும் சரி, அந்தப் பாவம் நம்மை விடாது. (குறுக்கீடு) நாங்கள் நம்புகிறோம்.

ஆகவேதான் நான் அரசாங்கத்தைக் கேட்டேன்——ஏன் இப்படியெல்லாம் ஜேக்கப் பண்ணுகிறீர்கள் என்று. விலையை மேலும் ஏற்றாதீர்கள், கொஞ்சம் குறையுங்கள். அப்படி ஏற்றினால் அது ஏழையின் தலையில்தான் விழும். ஏழை கைவண்டிக்காரன் தான் குடிக்கிறான்; அவனால் குடிக்காமல் இருக்க முடியாது.

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1982 மார்ச் 9

காரணம், கைவலி தாங்க முடியாமல், அவனால் இரவிலே தூங்க முடியாது. அதேபோல், வயலிலே வேலைசெய்யும் ஒருவனுக்கும் நிம்மதியாகத் தூங்க வேண்டுமென்றால், அவனும் இதைச் சாப்பிட்டே தீரவேண்டும் ஆகையால், கொஞ்சம் விலையைக் குறைத்துக் கொடுங்கள்: இல்லாவிட்டால், கள்ளச் சாராயம் தான் பெருகும். ஆகவேதான், அரசாங்கச் செயலாளரிடத்திலே 1981ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 1-ம் தேதி ஒரு கடிதம் எழுதினேன். நிலைமை இந்த மாதிரியெல்லாம் இருக்கிறது. பாட்டில் விலையை நீங்கள் ரூ 2 என்று போட்டிருக்கிறீர்கள், ஒரு காலி பாட்டில் 60,70 பைசா தானேவிலையாகிறது. ஆனால், இரண்டு ரூபாய் என்று போட்டிருக்கிறீர்கள், மீதி ரூ. 1,20 வின்ட் பால் இன்கம் எங்கே போகிறது? அதேபோல், கப்பிங்கிற்கு 25 பைசா என்று இருக்கிறது. ஆனால், கப்பிங்கிற்கு 5, 6 பைசாதான் செலவாகும், மீதி 15 காசு எங்கே போகிறது? இப்படி அரசாங்கமே ஏழைகளை மறைமுகமாக தீர்த்துக் கட்டுவதற்கு ஏன் முயற்சி செய்யவேண்டும்.? என்று இந்தத் துறையின் செயலாளர் இடத்திலே நேரடியாகவும், அமைச்சரிடத்திலேயும் சொன்னேன். இப்படிச் சொல்லுகின்ற சமயத்தில், அந்தத் துறையின் செயலாளர் எழுதியிருக்கிறார்—

"I am directed to acknowledge the receipt of the letter cited and to state that the matter is receiving attention.

இப்படி எழுதியதன் விளைவாக அந்த பாட்டிலின் விலை குறைகிறதா? இல்லை. அது சம்பந்தமான பைல் யாரிடத்திலே இருக்கிறது ? மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரிடத்திலே இருக்கிறதா? அல்லது அவருக்கு மேலுள்ள முதலமைச்சர் அவர்களிடத்திலே இருக்கிறதா? அல்லது வேறு எங்கிருக்கிறது? அந்த விலையைக் குறைக்கச் சொல்லுங்கள். ஏற்கெனவே ஒரு கான்ட்ராக்டருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அந்த கான்ட்ராக்ட் பீரியட் முடிந்தபிறகு, அடுத்து வரும் பீரியட்டில் இதை இம்பிளிமென்ட் பண்ணலாம் என்று வைத்திருக்கிறீர்களா? இதையெல்லாம் விளக்க வேண்டும். அப்படியில்லையானால், கள்ளச் சாராயம் தான் ஆறாகப் பெருக்கெடுத்து ஓடும்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இதுவரையிலே நம்முடைய அறிக்கையிலே 10 பிளண்டிங் யூனிட், 16 ஒல்சேல் ஐ.எம்.எப்.எல் 16 என்று கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னாருக்குத்தான் குத்தகை விடவேண்டும், இன்னாரைத்தான் நாங்கள் நியமனம் செய்திருக்கிறோம் என்று சொல்வதிலே ஏதாவது விதிமுறை இருக்கிறதா? இந்த நியமனத்தைப் பற்றி நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இதற்கு ஒரு சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டப்படி எக்சைஸ் கமிஷனர் தான் ஒரு குவாசி ஜுடிசியல் அதாரிடி. அவர் அப்ளிகேஷன்



1982 மார்ச் 9] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

கால்பார் பண்ணுவார். 300 ரூபாய் பீஸ் கட்ட வேண்டும். ரூ. 50,000 டிபாசிட் கட்டவேண்டும் என்று சொல்வார். இப்படி கேட்டு, ஒரு 10 பேர்கள் விண்ணப்பம் போடுவார்கள். இந்த விண்ணப்பம் சரியில்லை, அது சரியில்லை என்று சொல்லி, அந்த குவாசி ஜுடிசியல் அதாரிடி முடிவைச் சொல்வார். ஒல் சேலாக இருந்தாலும், ஐ.எம்.எப்.எல். ஆக இருந்தாலும், மற்றதாக இருந்தாலும் இந்த குவாசி ஜுடிசியல் அதாரிடிதான் தமிழ்நாட்டிலே அந்த விண்ணப்பங்களைக் கோரி, இவைகளையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தார். இன்றைக்கு அந்த குவாசி ஜுடிசியல் அதாரிடி இல்லை; அது பியூர்லி அட்மினிஸ்ட்ரேடிவ் என்று என்று சொல்லி யாருக்கு வேண்டுமானாலும் நாங்கள் கொடுப்போம் என்ற நிலையிருக்கிறது. என்ன காரணத்திற்காக கொடுக்க மாட்டோம் என்பதைக்கூட அவர்கள் சொல்ல வேண்டியதில்லை.

ஒரு மாதத்திற்குமுன்பு ஒரு வழக்கு நீதிமன்றத்தில் திரு.கோகுலகிருஷ்ணன் அவர்கள் இருக்கக்குடியபெஞ்சுக்கு அந்த கேஸ் வந்தது. பெரியார் மாவட்டத்திலே இருக்கின்ற வேடியப்பன் என்பவர் ஒல்சேல் வியாபாரத்திற்கு விண்ணப்பம் போட்டிருந்தார். மேலும் 5, 6 பேர்கள் போட்டிருந்தார்கள். எல்லாவற்றையும் பார்த்து, அந்த எக்சைஸ் கமிஷனர் வேடியப்பன் என்பவரைத் தான் தேர்ந்தெடுத்தார். அவர்தான் உயர்ந்திருக்கிறார் என்று சிபார்சு செய்தார். ஆனால், 6 (ஏ) ரூல்படி, அரசாங்கம்

The Commissioner shall grant the licence only after prior approval of the Government.

என்று ஜூன் 15ஆம் தேதி ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் நோடிபிகேஷன் போட்டு, அரசாங்கத்திலேயிருந்து வேடியப்பனுக்கு அதைக் கொடுக்கக் கூடாது என்று சொன்னார்கள்.

அதற்கு எதிராக, அவர் ரிட் மனு போட்டு, சத்தியதேவ் கோர்ட்டுக்கு வந்தது. கோர்ட்டிலே எவ்வளவு தாமதம் ஆகுமென்பது தெரியும். சீக்கிரம் கிடைக்காது; ஜனவரி முதல் அங்கேயிருக்கிறது. சத்தியதேவ் சொல்கிறார்.

[முற்பகல் 11.10]

அரசாங்கம் செய்தது தப்பு, ரூல் மேக்கிங் பவர்ஸ் கிடையாது. ரூல்சிலே ரெட்ராஸ்பெக்ட்டில் எபெக்ட் கொடுப்பது கிடையாது. ஜூன் மாதம் 15ம் தேதி ரூல் போடுகிறார்களானால் அதற்குப் பிறகு வருகிற அப்ளிகேஷன்கள்தான் செல்லுமே தவிர, அதற்கு முன்னாலே வாங்கியது எல்லாம் செல்லாது என்று சொல்லி அதைத் தள்ளினார். உடனே லைசென்ஸ் கொடுத்தார்களா ? நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்றுக்கொள்கிறோம்,

ஏற்றுக்கொள்கிறோம் என்று சொல்கிறார்களே தவிர உடனே அப்பீலுக்கு போனார்கள். அப்பீலிலே கோகுலகிருஷ்ணன் மற்றுமுள்ள ஜட்ஜ்கள் பென்ச்சிலே டெசிஷன் கொடுத்தார்கள். பிப்ரவரி மாதம் 20ம் தேதி வரை கொடுத்து விடுங்கள் ஆப்டர் ஆல் பத்து, பதினைந்து நாட்கள் தானே அவர் லைசென்ஸ் வைத்துக்கொண்டு வீட்டிற்குப் போகட்டும் என்று கொடுத்தார்கள். அந்த ஜட்ஜ்மென்ட்டையாவது கவர்ன்மென்ட் ஆனர் பண்ணினார்களா என்றால், முடியவே முடியாது வேடியப்பனுக்கு கொடுக்கவே முடியாது என்று சுப்ரீம் கோர்ட்டிற்கு எடுத்துப் போகிறோம் என்று சொல்லி அங்கே போய் அவர்கள் அதற்கு மறுத்து இன்றைய தினம் வந்திருக்கிறார்கள். லைசென்ஸ் கொடுத்தார்களா இல்லையா என்பது தெரியவில்லை. கொடுப்பார்கள். கொடுத்தால் கூட நாளையே இரண்டு பேரலை கும்பகோணத்திலே ஏற்றிய மாதிரி இரண்டு பேரவை தூக்கி வைத்து கள்ளச் சாராயத்தை ஏற்றி வைத்தான் என்று ஒன்றைச் சொல்லி நாளையே கேன்சல் பண்ணிக் கொள்ளலாம். இதற்கு வழி இருக்கிறது. ஆகவே பஞ்சாபகேசன்கள் வழி சொல்லிக் கொடுக்க இருக்கும் போது அவர்கள் ஏகப்பட்ட ஐடியாக்கள் எல்லாம் கொடுப்பார்கள், ஆகவே இந்த கொள்கையிலே இந்த அரசாங்கம் பெரிய தவறு செய்து விட்டது. (மணியடிக்கப்பட்டது) இன்னும் பத்து நிமிடங்களில் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் 20 நிமிடம் பேசியாகி விட்டது, இனிமேல் வரப்போகிற உறுப்பினர்கள் 10 நிமிடம் தான் பேச இருக்கிறார்கள். இன்னும் 9 பேர் பேச வேண்டும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேச வேண்டும். அதற்குப் பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேச வேண்டும். உட்காருங்கள்.

***திரு. ப. நெடுமாறன் :** மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையிலே என்னுடைய கருத்துக்களை கூற வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். விற்பனை வரித் துறைக்கு மாவட்ட வாரியாகவும் மாநில அளவிலேயும் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். சில முக்கியமான முடிவுகளை எடுக்கும்போது இந்த ஆலோசனைக் குழுக்களை கலந்து அரசு செயல்படுவது நல்லது. குறிப்புரையில் 13-ஆம் பக்கத்திலே ஒரு முக்கியமான முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது, 1-1-82 முதல் சரக்குகளை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் இதற்கு முன்னால் 2 பில்கள் காண்பித்தால் போதும். ஆனால் இப்போது 3 பிரதிகள் கொண்ட பில் அல்லது டெலிவரி நோட் கட்டாயமாக எடுத்துச் செல்ல வேண்டும். முதலாவது சாவடியிலே ஒன்று. இறுதிச் சோதனை சாவடியிலே ஒன்று இறுதியாக வியாபாரிக்கு ஒன்று என்று



திடீரென்று ஒரு முடிவை அறிவித்திருக்கிறீர்கள். இதன் மூலம் பல்வேறு முறையிலே வியாபாரிகள் பாதகம் அடைகிறார்கள். இடையிலே சோதனைச் சாவடிகளிலே இருக்கக்கூடிய அலுவலர்கள் லஞ்சம், லாவண்யங்களில் ஈடுபடுவதற்கும் இது இடம் கொடுக்கிறது. இதுபோன்ற முக்கியமான முடிவையாவது ஆலோசனைக் குழுக்களை கலந்து எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விற்பனை வரித் துறையிலே சில நிர்வாக மாற்றங்கள் செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களுக்கு சில யோசனைகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். விற்பனை வரித் துறையிலே 'அசெஸ்மென்ட் ஆபீசஸ்' என்பதுதான் அடிப்படையானவை. வணிகவரிக் கணக்குகளை சரிபார்த்து இவ்வளவு வரி போடலாம் என்று சொல்லக் கூடிய அசெஸ்மென்ட் ஆபீசஸ் மிகவும் முக்கியமானவை. இவைகளின் நிலைமை எப்படி இருக்கிறது. 1966—67-க்கு பின்னால் இந்த அலுவலகங்களில் அலுவலர்களின் எண்ணிக்கை உயர்த்தப்படவே இல்லை. ஏறத்தாழ 15 ஆண்டுகளுக்கு முன்னால் உள்ள எண்ணிக்கை எவ்வளவோ அவ்வளவுதான் இன்றும் இருக்கிறது. ஆனால் வியாபாரம் என்பது இந்த 15 ஆண்டுகளிலே ஏறத்தாழ 8 அல்லது 10 மடங்கு வளர்ந்து இருக்கிறது. 1979ல சில உயர் அதிகாரிகள் பதவிகள் மட்டும் இந்தத் துறையிலே அதிகரிக்கப்பட்டன.

அடி மட்டத்திலே பதவிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவில்லை. இப்போது வாணிபம், தொழில் பல மடங்கு அதிகரித்து இருக்கிறது, அதற்கேற்ற முறையிலே அலுவலர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக எங்களுடைய தென் மாவட்டங்களிலே மதுரை, தேனி, திண்டுக்கல், சாத்தூர், விருதுநகர், சிவகாசி, கோயில்பட்டி, திருநெல்வேலி, தூத்துக்குடி போன்ற நகரங்கள் வாணிபத்திலே பெரும் அளவுக்கு வளர்ந்திருக்கின்றன. கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்ததைவிட அதிகமாக வளர்ந்திருக்கிறது. அந்தப் பகுதிகளிலே முன்னாலே இருந்த எண்ணிக்கையிலேயே அலுவலர்களை வைத்து அசெஸ்மெண்ட் செய்யவேண்டுமென்று சொன்னால் முடியவில்லை. அது மட்டுமல்ல, வேலைப் பளு அதிகமாக இருப்பதால் லஞ்சலாவண்யங்கள் அதிகரிக்கின்றன. யார் முதலிலே அசஸ்மெண்ட் செய்ய வருகிறார்களோ அவர்கள் இவ்வளவு ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொல்கிற ஊழலில் ஈடுபடக்கூடிய நிலைமை இருக்கிறது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற முறையிலே அலுவலர்களின் எண்ணிக்கையை வேலைப் பளுவுக்கேற்ப அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்றுமதியாளர்கள் வரிவிலக்கைப் பெறுவதற்கு மத்திய அரசு பார்ம் 'எச்' வைத்திருக்கிறது. மாநில அரசின் சட்டப்படி அதற்கு தனியாக பார்ம் இல்லை. மத்திய சேல்ஸ்டாக்ஸ்

..டப்படி பார்ம் 'எச்' இல் பூர்த்தி செய்து கொடுத்தால் ..தற்கான விதிவிலக்கு பெற்றுவிட முடிகிறது. ஆனால் மாநில ..ரசிலே அதுபோன்ற பார்ம் இல்லாத காரணத்தினாலே வணி..ர்களுக்கு பெரும் அளவுக்குச் சிரமங்கள் ஏற்பட்டிருக்..ன்றன. அதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசு ..டுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மாநிலங்களுக்கு இடையே ஏற்படும் விற்பனையை ..த்திய விற்பனை வரிச் சட்டம் கட்டுப்படுத்துகிறது. அந்தச் ..ட்டத்தின்படி வாங்குவோரிடமிருந்து 'சி' பார்மிலே பூர்த்தி செய்து விற்பனையாளர்கள் வாங்கினால் அதற்கு 4 சதவீதம் ..லுகை கிடைக்கும், இல்லாவிட்டால் 10 சதவீதம் வரி செலுத்த வேண்டுமென்ற நிலைமை இருக்கிறது. அந்த 'சி' பாரம் வாங்கு..தற்கு வணிகர்கள் பெரும்பாடு படவேண்டியிருக்கிறது. இதிலே ..திகாரிகளின் தொல்லை வேறு. 'சி' பார்ம் சுலபத்திலே கிடைப்..தற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்று ..கட்டுக்கொள்கிறேன். இண்டர்ஸ்டேட் விற்பனையில் ஜெனரல் ..ரட் ஆப் டாக்ஸ் என்பது 4 சதவீதம் ஆக இருக்கிறது. ..சத வீதத்துக்கு கீழே இருந்தால அதற்கு 'சி' ..ார்ம் தேவையில்லை என்று மத்திய சட்டத்திலே ..லக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் தமிழகத்திலே ஜெனரல் ரேட் ஆப் டாக்ஸ் 4 சதவீதம் என்பதாக இருக்கிறது. ஆனால் அண்டை மாநிலமான பாண்டிச்சேரியிலே ரேட் ஆப் டாக்ஸ் 3 சதவீதம் தான் விதிக்கப்படுகிறது. ஆகவே, 'சி' பார்ம் அவசியமில்லாத நிலைமை அங்கே இருப்பதால் தமிழகத்தைச் சேர்ந்த பல உற்பத்தியாளர்களும் மொத்த விற்பனையாளர்களும் பாண்டிச்சேரிக்குப் போய் அவர்களுடைய விற்பனைக் கிடங்குகளைத் திறக்கிறார்கள். அதன்மூலம் பொருட்கள் இங்கே இருந்து அங்கே கொண்டுசெல்லப்பட்டு விற்கப்படுகின்றன. 'சி' பார்ம் அவசியம் இல்லை என்பதோடு வரியும் குறைகிறது. அதனாலே தமிழகத்திற்குப் பெரிய அளவிலே நட்டம் ஏற்படுகிறது. நமக்கு வரி வருமானம் குறைகிறது. இதைத் தடுப்பதற்கு இங்கே 3 சதவீதம் என்று ரேட்டைக் குறைக்கவேண்டுமென்று வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். அதன் மூலம் வணிகர்களுக்கு 1 சதவீதம் வரி குறையும் என்பது மட்டுமல்ல, 'சி' பார்ம் தொல்லையும் இருக்காது. நம்முடைய வருமானமும் அண்டை மாநிலத்திற்குச் செல்லாது. ஆகவே அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால் பேப்பருக்கு தமிழ்நாட்டில் 8 சதவீதம் வரி. அதே பேப்பரை பாண்டிச்சேரியிலே கொண்டுபோய் விற்றால் 3 சதவீதம்தான் வரி,



என்று சொன்னால் உற்பத்தியாளர்கள் அங்கே கொண்டு போய் விற்றால் வரியும் குறைகிறது, லாபமும் வருகிறது என்பதால் அங்கே தான் எடுத்துச் செல்வார்கள், ஆகவே அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலிக்கவேண்டுமென்று வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். பேப்பர் மட்டுமல்ல ; ஸ்கூட்டர், மொபெட், மோட்டார் சைக்கிள் போன்றவைகளுக்கும் அந்த மாநிலத்திலே விற்பனை வரி குறைவாக இருப்பதால் அவர்கள் அங்கே கொண்டு போய்த் தான் விற்கிறார்கள். ஆகவே, மொத்தத்திலே அந்த விற்பனை வரி வருவாய் அந்த மாநிலத்தில் உயர்ந்து கொண்டே போகிறது; நம்முடைய மாநிலத்திலே விற்பனை வரி வருவாய்க் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டே இருக்கிறது என்பதை நான் உங்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 11.20).

அது மட்டுமல்ல, பட்ஜெட் உரையிலேயே நான் சொன்னதை மீண்டும் இப்பொழுது வலியுறுத்த விரும்புகிறேன். பாண்டிச்சேரியில் ஹெவி இண்டஸ்ட்ரீஸ் ஆரம்பித்தால் 36 மாதங்களுக்கு சேல்ஸ் டாக்ஸ் இல்லை என்று அந்த மாநில அரசு அறிவித்திருக்கிறது. அதனால் தொழிலதிபர்கள் அங்கே போய் ஹெவி இண்டஸ்ட்ரீஸ் ஆரம்பிப்பதில் ஆர்வம் காட்டுகிறார்கள். சிவகாசியில் உள்ள தொழிலதிபர்கள் ஒன்று கூடி பாண்டிச்சேரியிலே பேப்பர் மில்லைத் தொடங்கியிருக்கிறார்கள். என்பதையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன் ஆகவே, தமிழகத்திலே தொழில் வளர்ச்சிக்காக, ஹெவி இண்டஸ்ட்ரி ஆரம்பித்தால் குறைந்த பட்சம் 36 மாதங்களுக்கு சேல்ஸ் டாக்ஸ் இல்லை என்று அரசு அறிவிக்க வேண்டுமென்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

இன்னொன்றையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன் விற்பனை வரி விதிப்புக்கான விற்று முதலின் அளவு எவ்வன். இருக்க வேண்டுமென்பது ஏறத்தாழ எட்டாண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்டது. 1974 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், 50,000 ரூபாய் டர்ன் ஓவர் இருந்தால் அவர்களுக்கு வரி போடலாம் என்று முடிவு செய்யப்பட்டது. ஆனால் அதற்குப் பிறகு எட்டாண்டுகள் ஆகி விட்டன. இந்தக் கால அளவில் எத்தனையோ மடங்கு விலைவாசி உயர்ந்ததற்குப் பிறகும் கூட அந்தத் தொகையை அப்படியே வைத்திருப்பது அவ்வளவு சரியல்ல எனவே, அத்தொகையை விற்பனை வரிக்கான விற்று முதல் தொகையை ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று வற்புறுத்திக் கூறிக் கொள்கிறேன்.

கம்பவுண்டிங் வரி விதிப்புக்காக இந்தத் தொகை இரண்டு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட வேண்டுமென்பதையும் நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

விவசாயப் பொருட்கள் குறைவான விலைக்கு விற்கப்படுகிறது. வெல்லத்திற்குக் குறைவான விலை கிடைக்கிறது. காரணம் நம்முடைய விவசாயிகள் கரும்பு உற்பத்தியை அதிகமாகச் செய்கிறார்கள். அதிலிருந்து வெல்லத்தை அவர்கள் குடிசைத் தொழில் முறையிலே உற்பத்தி செய்கிறார்கள். பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் ஆட்சிக் காலத்திலே இது குடிசைத் தொழிலாகக் கருதப்பட்டு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு அதற்கு 3 சதவீதம் பல்முனை விற்பனை வரி என்று விதித்தார்கள். 1970 ஆம் ஆண்டிலே அதை 5 சதவீதம் ஒரு முனை விற்பனை வரியாக ஆக்கினார்கள். பிறகு அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மீண்டும் பல முனை விற்பனை வரியிலே சேர்க்கப்பட்டது. இதன் விளைவாக இன்றைக்கு விவசாயிகள் பெரிய நஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலே உற்பத்தியாகும் வெல்லத்திலே கிட்டத்தட்ட 60 சதவீதம் இந்த மாநிலத்திற்கு வெளியே, வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. மீதியுள்ள 40 சதவீதம் தான் இந்த மாநிலத்தில் விற்பனை ஆகிறது. அதிலும் 20 சதவீதத்தை பெரிய வியாபாரிகளே விவசாயிகளிடத்தில் கொள்முதல் செய்து விடுகிறார்கள். மீதியுள்ள 20 சதவீதத்திலே 10 சதவீதம் வரி ஏய்ப்பு என்று வைத்துக் கொண்டால், 10 சதவீதத்திற்குத்தான் நீங்கள் வரி விதிக்கும் நிலைமை இருக்கிறது. எனவே, இதனால் அரசாங்கத்திற்கு அதிக வருமானம் கிடைக்கவில்லை. ஆகவே, வெல்லத்திற்கு இருக்கின்ற பலமுனை விற்பனை வரியை ஒரு முனை விற்பனை வரியாக ஆக்குங்கள் என்று வற்புறுத்த விரும்புகிறேன்.

அதைப் போலவே, சாக்குத் தொழில் என்பது பல இலட்சம் ஏழைத் தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கும் தொழில். பழைய சாக்குகளையெல்லாம் வாங்கி, தைத்து விற்பனை செய்கிறார்கள். சாக்கு என்பது பேக்கிங் மெட்டீரியல். கிட்டத்தட்ட அது குடிசைத் தொழில். அதற்கு வரி விலக்கு கொடுக்க வேண்டும். அதன் மூலமாகப் பல இலட்சம் தொழிலாளர்களுக்கு மறு வாழ்வு அளிக்க முடியும் என்பதை நான் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

புதிய வரி விதிப்புக்கான யோசனையையும் இந்த அரசாங்கத்திற்கு நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்திலே கிரிக்கெட் போர்டு என்று இருக்கிறது. இதற்கு அரசாங்கத்தின் மானியமாக இது வரையில் இருபது இலட்சம் ரூபாய்க்கு மேலே நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். இந்தக்





கிரிக்கெட் போர்டில் அரசாங்கப் பிரதிநிதி யாரும் இல்லை. தனிப்பட்டவர்கள் கூடி அமைத்திருக்கின்ற போர்டு, அரசாங்க நாமினி யாரும் கிடையாது. இந்த ஆண்டு மட்டும் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய்க்கும் மேலே வசூலாகியிருக்கிறது. லாபம் மட்டும் கிட்டத்தட்ட 70 இலட்சம் ரூபாய் இருக்கும் என்று சொல்கிறார்கள். ஆகவே, அதிக விலை உள்ள டிக்கெட்டுகளுக்கு ஹையர் டினாமினேஷன் உள்ள டிக்கெட்டுகளுக்கு அரசாங்கம் வரி போடலாம். அதிக டினாமினேஷன் உள்ள டிக்கெட்டுகளுக்கு வரி போடுவதன் காரணமாக பெருந் தொகை கிடைக்கும். ஏழை எளிய விவசாயிகளுக்கு வெல்லத்திற்கு விதிக்கும் வரியை ரத்து செய்து இது போன்றவைகளுக்கு வரியை உயர்த்துவதன் மூலம் மக்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள் ; இது போன்ற வரிகளை மக்கள் ஆட்சேபிக்க மாட்டார்கள் என்பதையும் நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து ஆயத் தீர்வை பற்றியெல்லாம் சில விஷயங்களை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். விற்பனை வரிக்கு மேலே கூடுதல் ஆயத் தீர்வை மத்திய அரசாலே விதிக்கப்பட்டுள்ளது. துணி, சர்க்கரை, புகையிலை போன்றவற்றிற்கு மத்திய அரசு விதித்திருக்கிறது. அதைத் தொடர்ந்து வனஸ்பதி, சிமென்ட், காகிதம் பெட்ரோலிய பொருட்களுக்கெல்லாம் விற்பனை வரியை ரத்து செய்து அதை மத்திய அரசு அடிஷனல் எக்சைஸ் டியூட்டி போட்டு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறது. மாநிலங்களின் வருவாய்களிலே மிக முக்கியமான பங்கை வகிப்பது இந்த விற்பனை வரி. ஆனால் அந்த விற்பனை வரியின் மீது கொஞ்சம் கொஞ்சமாக மத்திய அரசு ஆதிக்கம் செலுத்தி அதையெல்லாம் கூடுதல் ஆயத் தீர்வை என்ற பெயராலே நல்ல வருவாய் அளிக்கக் கூடிய பொருள்களையெல்லாம் எடுத்துக் கொண்டு அப்படியே நாளா வட்டத்தில் விற்பனை வரியையும் மத்திய அரசாங்கம் எடுத்துக் கொள்ளக் கூடிய ஒரு அபாயகரமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதைப் பற்றியெல்லாம் இந்தச் சட்டமன்றத்திலே விவாதம் நடந்தது. இப்பிரச்சினையில் எல்லா கட்சிகளும் ஒன்று பட்டிருக்கின்றன. மாநில அரசுக்கு இருக்கக் கூடிய கொழுத்த வரியான விற்பனை வரியை எந்தக் காலக் கட்டத்திலும் மாநில அரசு விட்டுக் கொடுக்கக் கூடாது. அதை மத்திய அரசு எடுப்பது என்பது அனைத்து மாநிலங்களின் உரிமைகளின் மீது கை வைப்பதாகும் என்பதில் எல்லாக் கட்சிகளும் ஒன்று பட்டிருக்கின்றன. ஆகவே இந்த உணர்வைப் பயன் படுத்தி மத்திய அரசுடன் போராடி விற்பனை வரியைப் பொறுத்த வரையிலே இந்த மாநில அரசு தன்னுடைய உரிமையை நிலை நாட்ட வேண்டுமென்று நான் வற்புறுத்தி சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பு [illegible] ஏ 15—10

[திரு. ப. நெடுமாறன்] [1982 மார்ச் 9]

இறுதியாக மதுவிலக்கு பற்றியும் சில வார்த்தைகளை நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். மது விலக்கைப் பொறுத்த வரையிலே, எங்களுடைய கட்சியின் கொள்கை என்ன என்பது எல்லோருக்கும் தெரியும். நாங்கள் பரிபூரண மாகமது விலக்கை வற்புறுத்துகிறவர்கள். ஆனால், இந்த அரசாங்கம் மது விலக்கை நாங்கள் ரத்து செய்யவில்லை; என்று சொன்னாலும், பிராக்டிக்கலாக, செயல் முறையிலே அநேகமாக, ரத்து செய்த நிலைமைதானிருக்கிறது. இதன் மூலம் ஏழை, எளிய மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதைப் பற்றி விவாதிப்பதற்கு நேரம் இல்லையென்ற காரணத்தினால், அந்தப் பற்றி நான் அதிகமாகப் பேசவில்லை. ஆனால், குறைந்த பட்சம் இந்த மதுவிலக்கு தளர்வினால் ஏற்படக் கூடிய சமுதாய சீர்கேடுகளையாவது ஒழிக்க நீங்கள் முன் வர வேண்டும். மதுரையில், என்னுடைய மத்திய தொகுதியில், ஒரு பக்கம் கிறித்தவ தேவாலயம், பள்ளிக் கூடம், இன்னொரு பக்கத்திலே குடியிருப்புகள், பசார். நான் சொல்லும் இடம் டவுன்ஹால் சாலையின் அருகில் உள்ளது. அங்கு ஒரு சாராய கடை வைக்க, அனுமதி கொடுத்து, அதன் விளைவாக அந்தப் பகுதியிலே, இருக்கக்கூடிய எல்லாக் கட்சிகளும், ஆளுங் கட்சியான அ.தி.மு.க உட்பட, பிரதான எதிர்க் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட, எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து; அந்தச் சாராயக் கடையை அப்புறப்படுத்த வேண்டுமென்று மகஜர் கொடுத்து, அந்தத் தொகுதியின் பிரதிநிதி என்ற முறையிலே நான் மாவட்ட கலெக்டர் அவர்களை சந்தித்து அந்தமனுவைக் கொடுத்து வற்புறுத்தினேன். அதற்குப் பின்னாலே, கலெக்டர் அவர்களே அதை ரத்து செய்ய வேண்டுமென்று உத்தர விட்டார்கள். ஆனால், அந்த உத்தரவு செயல் படுத்தப்படாததன் விளைவாக, அந்தப்பகுதி மக்கள் ஒரு போராட்டத்தைத் தொடங்கிட வேண்டியநிலை வந்து; அதனாலே, சாராயக் கடையை ஏலம் எடுத்தவர்கள் ஆத்திரம் அடைந்து, அந்தப் பகுதியிலே இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர் ஒருவரைக் கொலை செய்தார்கள்—அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்பதால் அல்ல; அந்தப் பகுதியிலே சாராயக் கடை இருக்கக் கூடாது என்பதற்காக அந்தப் பகுதி மக்களோடு இணைந்து போராடியவர் என்புதாலே அவர் கொலை செய்யப்பட்டார். அதன் விளைவாக, அங்கே பதட்ட நிலை உருவாகி, இவ்வளவு விவகாரங்கள் ஆனபின்னாலுங்கூட இன்னும் அந்தச் சாராயக் கடை அங்கேயிருந்து அகற்றப்படவில்லை. கோவில்கள், கிறித்தவ தேவாலயங்கள், மசூதிகள், பள்ளிகள், இருக்கக்கூடிய இடங்களிலே நீங்கள் சாராயக் கடைகளை வைக்காமல் இருந்தால், அதுவே மிகப் பெரிய உதவியாக இருக்கும். மதுரை நிகழ்ச்சி ஒரு சான்றாக இருக்கும் என்பதை எடுத்துச் சொல்லி, கூடுமானவரை பள்ளிகள், கோவில்கள், கிறித்தவ தேவாலயங்கள், மசூதிகள் போன்றவைகள் இருக்கக்கூடிய இடங்களுக்கு அருகிலே



1982 மார்ச் 9] [திரு. ப. நெடுமாறன்]

சாராயக் கடைகள், அல்லது மதுக் கடைகள், அல்லது ஒயின் ஷாப்புக்கள் வைக்க அனுமதிகொடுப்பதில்லை என்றகொள்கையை அரசாங்கம் உறுதியாகக் கடைபிடிக்க வேண்டும். இதிலே வேண்டியவர், வேண்டாதவர் என்ற பாகுபாட்டுக்கு இடம் கொடுக்கக்கூடாது. சமுதாயத்தின் பல்வேறு சீர்கேடுகளுக்கு வழி வகுக்குகின்ற இப்பிரச்சினையில் மிக அழுத்தமாகத் தலையிட வேண்டுமென்று கேட்டு, என் உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

(முற்பகல் 11-30)

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிக்க பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய முன்னாலே வைக்கப்பட்டிருக்கும் தமிழ்நாடு பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், என்ற மானியத்தின் மீதும், மாநில ஆயத்தீர்வை என்ற மானியத்தின் மீதும் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

**பொதுவாக** இன்றையத்தினம் நம்முடைய அரசாலே விதிக்கப்படுகின்ற விற்பனை வணிக வரி அங்கிங்கெனாதபடி மனித சமுதாயத்திலே எல்லோரையும் பாதிக்கின்ற அளவுக்கு விதிக்கப்படுகிற வரி என்பதை நாம் எல்லோரும் அறிவோம். சமுதாயத்தின் உயர்தட்டிலே இருக்கக் கூடியவர்கள் மட்டுமல்லாது, சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கின்ற மக்களை பெரிதும் பாதிக்கின்ற அளவுக்கு இந்தத் துறையின் வரிகள் இன்றையத்தினம் கொஞ்சம் கொஞ்சமாக ஆண்டுதோறும் உயர்ந்து கொண்டு வருவதை அண்மைக் காலங்களிலே நாம் பார்த்து வருகிறோம். வணிக வரித் துறையைப் பொறுத்த வரையில் 1976-77-லே அதனுடைய வருவாய் 256 கோடியாக இருந்தது. 4 ஆண்டுகளில் 1980-81-லே 492 கோடி ரூபாயை எட்டி இருக்கின்றது. இந்த நடப்பாண்டில் 1981-82-லே 9 மாதத்திற்கான வருவாய் 424 கோடி என்று தரப்பட்டிருக்கின்றது. ஆண்டு இறுதியிலே மொத்தமாக ஏறத்தாழ 615 கோடி ரூபாய்க்கு அதிகமாக வணிக வரித் துறையின் வருவாய் இருக்கும் என நாம் எதிர்பார்க்கலாம். அதைப் போலவே பொது விற்பனை வரி 1977-78-ஆம் ஆண்டிலே 178 கோடி ஆக இருந்தது. இந்த ஆண்டிலே ஏறத்தாழ 410 கோடி அளவுக்கு அதிகமாக வளர்ந்து வந்திருக்கிறது. இன்னும் சொல்லவேண்டுமானால் மத்திய விற்பனை வரி 1977-78-லே 43 கோடியாக இருந்தது இந்த ஆண்டிலே 90 கோடியாக வளர்ந்திருக்கிறது. நான் எண்ணிப் பார்க்கின்றேன். 1966-67-ஆம் ஆண்டிலே காங்கிரஸ் அரசுக் கட்டிலிலே இருந்தபோது வணிக வரியின் சதவிதம் $2\frac{1}{2}$ யாக வருவாய் 56 கோடியாகத்தான் தமிழகத்திற்கு வந்து கொண்டிருந்தது. இன்றையத்தினம் விலைவாசி உயர்வாலும், அரசாங்கம் கடைபிடிக்கின்ற வரிக் கொள்கையாலும். அந்த $2\frac{1}{2}$ சதவிகிதம் கொஞ்சம் கொஞ்சமாக

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1982 மார்ச் 9

உயர்ந்து இன்றையத்தினம் வருமானம் 1569 கோடி என்று சொன்னால் அதிலே 40 சதவிகிதம் வணிகத் துறை மட்டுமே கொடுக்கின்ற காமதேனுவாக, கற்பகத் தருவாக இந்தத் துறை இன்றையத்தினம் உயர்ந்து கொண்டு இருக்கின்றது.

இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே ஏதாவது வரிச் சலுகை அளிப்பார்களா என்று நாம் எதிர்பார்த்ததற்கு மாறாக புதிதாக பட்டுத் துணிகளுக்கு வரி போடுவது போல போட்டு அதை எதிர்க்கட்சிகளின் வேண்டுகோளுக்கு இணங்க ரத்து, செய்தோம் என்று சொல்லி, ஏற்கெனவே அதற்கு வரியில்லை. இப்போதும் இல்லை என்கிற நிலைதான் அரசு செய்திருக்கின்றது. மாறாக பல்வேறு இனங்களிலே வணிக வரி சதவிகிதத்தை இந்த அரசாங்கம் உயர்த்தி இருக்கிறது. இன்னும் சொல்லவேண்டுமானால் ஒவ்வொரு மாநிலங்களுக்கு இடையே வணிகவரியினுடைய சதவிகிதம் பல்வேறு நிலைகளிலே அமைந்திருக்கின்ற காரணத்தால்தான் மத்திய அரசு கூட, வணிக வரியை எடுத்து விட்டு ஆயத்தீர்வையை எடுத்துக் கொள்ளலாமா என்கின்ற கருத்தினை இன்றையத்தினம் நம் முன்னாலே வைத்திருக்கின்றது.

தமிழக அரசைப் பொறுத்தவரையிலே இந்த ஆண்டிலே மோட்டார் வண்டிகளின் பகுதிகளுக்கும், துணை உறுப்புகளுக்கும் வரி விகிதத்தை 13 சதவிகிதத்திலே இருந்து 15 சதவிகிதமாக உயர்த்தி இருப்பதும், அதேபோல மோட்டார் வண்டிகளின் டயர், டியூப்களுக்குப் பத்திலிருந்து 12 சதவிகிதமாக உயர்த்தி இருக்கிறார்கள். நான் பொதுவிவாதத்திலே பேசுகின்றபோது சொன்னேன். இது ஏழை எளிய மக்களை பாதிக்கின்ற வரி, இதன் மூலமாக போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் டிக்கட் கட்டணத்தை உயர்த்துவதற்கு வழிவகைகளை செய்கிற காரணத்தினாலே இதனை அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நான் முன்னமே சொன்னேன் $2\frac{1}{2}$ சதவிகிதத்தில் இருந்து இன்றையதினம் வணிகவரித் துறை கொஞ்சம் கொஞ்சமாக உயர்ந்து இந்த ஆண்டிலே சொல்ல வேண்டுமானால் 4 சதவிகிதத்தில் இருந்து 5 சதவிகிதமாக வணிக வரி விகிதத்தை இந்த அரசு உயர்த்தி இருக்கிறது. துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக இந்த அரசைக் கேட்டுக் கொள்ள விரும்புவேன்; மண்ணெண்ணெய் ஏழை எளிய மக்கள் உபயோகிக்கின்ற பொருளாக இருக்கின்ற காரணத்தினாலே இந்த அரசாங்கம் மண்ணெண்ணெய்க்கு வணிக வரியை 8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைத்திருகிறது என்று நிதி அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையிலே படித்தார்கள். 4 சதவிகிதமாக இருக்கின்ற வணிக வரி விகிதத்தினை 5 சதவிகிதமாக உயர்த்தினால் அது பொருளாதாரத் துறையிலே உயர் மட்டத்திலே இருக்கின்றவர்கள் மட்டும்தான் பாதிக்குமா? சமுதாயத்தின் அடித்தட்டிலே இருக்கின்ற ஏழை எளிய நடுத்தர மக்களை அந்த 5 சதவிகிதம் பாதிக்காதா என்ற வினாவை நான் உங்கள் மூலமாக எழுப்புகிறேன்.



1982 மார்ச் 9] [திரு. என். எஸ். வி. சித்தன்]

அதைப்பேலவே சிமெண்ட் மீது 10 சதவிகிதம் என்று இருக்கும் விற்பனை வரியை 12 சதவிகிதம் என்று உயர்த்தியிருப்பதால் அது வசதி படைத்தவர்களை மட்டும் அல்லாமல் வீட்டைக் கட்டி அதன் மூலம் வாடகைக்குச் செல்லும் நடுத்தர மக்களின் வாடகையையும் உயர்த்துவதற்கு இது உறுதுணையாக இருப்பதால் அரசாங்கம் இதையும் எடுத்துவிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த இரண்டு ஆண்டுகாலமாக வணிக வரித்துறை மானியத்தின் மீதான விவாதத்தின்போது சொல்லி வருகிறேன். சைக்கிள் வாகனம் இந்தச் சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கும் ஒவ்வொரு மக்களுக்கும் பயன்படும் வாகனம். பஸ் கட்டணம் நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது. குறைந்தபட்சக் கட்டணமே 30 பைசா என்று இருப்பதால் சைக்கிள்களை ஏழை எளிய மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். இது ஏற்றுக் கொள்ளக்கூடிய உண்மை. 1980-81-ஆம் ஆண்டிலே 6 சதவிகிதம் வரி இருந்தது. அதை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டேன். அப்போது 3 சதவிகிதம் என்று அதைக் குறைத்தீர்கள். அந்த 3 சதவிகிதம் ரத்து செய்ய வேண்டும் என்று கடந்த ஆண்டு கோரிக்கை வைத்தேன். அதை இந்த ஆண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். கர்நாடக மாநிலத்திலும், மத்தியப் பிரதேசத்திலும், பீகார் மாநிலத்திலும், பாண்டிச்சேரி மாநிலத்திலும் சைக்கிள் பொருள்கள் மீது வரிகளை அரசாங்கம் முழுமையாக ரத்து செய்து இருப்பதால் நாமும் இந்த சைக்கிள் பாகங்களின் மீதான வரியை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் அதை ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

கூடுதல் விற்பனை வரி என்பது வியாபாரிகளை தொல்லைப் படுத்துகின்ற வரியாக இருக்கிறது. வியாபாரிகளுக்கு லாபம் வந்தாலும், நஷ்டம் வந்தாலும் அவர்கள் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் இந்தக் கூடுதல் வரியைக் கட்டவேண்டும் என்று சொல்கிறார்கள். இப்படி ஒரு நிபந்தனை இருப்பதால் இந்தக் கூடுதல் விற்பனை வரியையே ரத்து செய்ய வேண்டும் என்பதை இந்த அரசுக்கு யோசனையாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

சிறு வியாபாரிகளுக்கு நிவாரணம் அளிக்கும்வகையில் குறைந்தபட்ச வரி விதிப்பான உச்சவரம்பு 50,000 ரூபாய் என்பதை 1974-ல் நிர்ணயிக்கப்பட்டது. விலைவாசி உயர்வின் காரணமாகவும், இன்றைக்கு இருக்கும் சூழ்நிலை காரணமாகவும் இந்த உச்சவரம்பை 1 இலட்சம் ரூபாய் என்கிற அளவிற்கு உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே 7-வது பிரிவின் கீழ் விதிக்கப்படும் கம்பவுண்டிங் வரிக்கான உச்சவரம்பை ஒரு இலட்சம் ரூபாயிலிலிருந்து இரண்டு இலட்ச ரூபாய் அளவிற்கு உயர்த்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1982 மார்ச் 9

பதிவு செய்யப்பட்ட பிரிவின் கீழ் மாட்டுத் தீவனத்திற்கான வரி பல முனை வரி என்று இருப்பதை ஒரு முனை வரியாக மாற்றி மைக்க வேண்டும். ஏழை எளிய மக்கள் பயன் படுத்து கின்ற அலுமினியம் பாத்திரங்கள் மீதான வரிக்கு அரசாங்கம் முழு விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய அருமை நண்பர் நெடுமாறன் அவர்கள் வெல்லம், சர்க்கரை போன்றவற்றிற்கான வரியை நீக்கிவிட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்கள். அதை அடுத்து நானும் அந்த வெல்லத்திற்கான வரியை குறைந்த பட்சம் 3 சதவீதம் ஒரு முனை வரியாகவாவது மாற்றியமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உலர்ந்த ரக வெள்ளைப் பூண்டுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் பச்சை வெள்ளைப் பூண்டுக்கு வரி விதிக்கப்படுவதால், அது சாய் கறியின் ஒரு பகுதியாக இருப்பதால், அதற்கு விதிக்கப்பட்டுள்ள வரியை விலக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உத்திர பிரதேசம், மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் அதற்கு வரி விலக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை இங்கே நினைவூட்ட விரும்புகிறேன்.

பால், வெண்ணெய், தயிர் போன்றவற்றுக்கு வரி இல்லை ஆனால் அதே நேரத்தில் நெய்க்கு 4 சதவீதம் வரி இருக்கிறது. அதை அரசாங்கம் ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் ?

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்கக் கூடும். இப்படி வரிசையாக வரியை ரத்து செய்யுங்கள் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறீர்களே, அரசாங்கம் எதை வைத்துக் கொண்டு பின்னர் திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்று கேட்கக் கூடும். பின்னர் பதில் சொல்கிற போது கேட்கக் கூடும் என்பதால் இப்போதே சொல்லி விடுகிறேன். சென்ற ஆண்டு அப்படித்தான் கேட்டார்கள் ?

ஆகவே, இந்த ஆண்டு அவர் கேட்பதற்கு முன்பே நான் சில யோசனைகளைச் சொல்லிவிட விரும்புகிறேன்.

கிரிக்கெட் மேட்சில் பல லட்சக்கணக்கான ரூபாய் வருமானம் வருகிறது. சாதாரணமாக 2 ரூபாய், 1 ரூபாய் கொடுத்து சினிமா போகிறவர்களிடமிருந்து கேளிக்கை வரி வசூல் செய்கிற போது, இப்படி பல இலட்சக்கணக்கான ரூபாய் வசூலாகும் கொள்ளை லாபம் அடிக்கும் இந்த கிரிக்கெட் மாட்சுக்கு வரி போடாமல் இருப்பது சரியல்ல. ஆகவே, அரசாங்கம் நிச்சய மாக இதற்கு வரி போட வேண்டும். இது ஒரு கேளிக்கை,



1982 மார்ச் 9] [திரு. என். எஸ். வி. சித்தன்]

பொழுது போக்கு, உடல் வளத்துக்கு ஒரு பயிற்சி என்று சொல்லாமல், நிச்சயமாக இந்தக் கிரிக்கெட் மாட்ச் வருமானத் துக்கு வரி போட வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் தலைமை)

அடுத்தபடியாக, 1959 ஆம் ஆண்டிலிருந்து வணிக வரித் துறையில் பதிவு செய்வதற்காக, தமிழ்நாடு வணிக வரிச் சட் டத்தின் கீழ் பதிவு செய்வதற்கு ரூபாய் 10 பதிவுக் கட்டணம் என்றும், மத்திய வணிக வரிச் சட்டத்தின் மூலம் பதிவு செய் வதற்கு ரூபாய் 15 என்றும் இருக்கிறது. 1959(—)லிருந்து இது ஒன்று தான் உயராமல் இருக்கிறது. பல்வேறு இனங்களில் வரிகளை ஏற்றிய அரசாங்கம் இதை மட்டும் அப்படியே விட்டு வைத்து இருக்கிறது. வியாபாரிகளைப் பொறுத்த வரையில் இந்தப் பதிவுக் கட்டணத்தை ரூ. 50 என்று வைத்தாலும் அது அதிகம் இல்லை. ஆகவே, ஆண்டு ஒன்றுக்கு பதிவுக் கட்டண மாக ரூ. 50 என்று அதை ஆக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதன் மூலமாக அரசுக்கு 5 லிருந்து 6 கோடி ரூபாய் வரி வரும். அதன் மூலம் ஏழை எளிய மக்களுக்கு வரி விலக்கு கொடுக்க முடியும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

(முற்பகல் 11.40).

வரி வசூல் செய்வதிலே அதிகாரிகள் இன்னும் தீவிரமாக இருந்தால் முறையான நடவடிக்கை எடுத்தால், அதற்கான ஏற்பாடுகளை அதிகாரிகள் செய்தால் நிச்சயமாக அரசாங்கத்தின் வருவாய் கணிசமாக உயரும்.

இன்றைக்கு இருக்கின்ற எல்லா வணிக வரி அலுவலகங் களுக்கும் முழுமையாக தொலைபேசி வசதி செய்து கொடுக்க வேண்டும். அந்த வணிக வரியை பல்வேறு இனங்களில் வசூல் செய்ய வேண்டி யிருப்பதால் இன்றைக்கு அலுவலர்களுக்கு வேலைப் பளு அதிகமாக இருக்கிறது ; இந்தப் பளுவை குறைக்க வேண்டும். அதோடு வணிக வரி அலுவலகங்களுக்கு வரும் வணிகர்கள் அமர்வதற்கு தேவையான இட வசதியை செய்து கொடுக்க வேண்டும் ; தேவையான பொருட்களையும் அரசாங்கம் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வணிக வரியைப் பொறுத்த வரையில் மாவட்ட அள விலும், மாநில அளவிலும் அரசு ஆலோசனைக் குழுக்களை நியமித்திருப்பதாக அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். மாவட்ட அளவில் நியமிக்கப்பட்டிருக்கிற குழுவில் சட்ட மன்ற உறுப்பினர்கள் இடம் பெறவில்லை. இது வரை இல்லை என் றாலும் இனி வரும் காலத்திலாவது ஆளும் கட்சி உறுப்பினர்கள்

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1982 மார்ச் 9

மட்டுமல்லாமல் எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களையும் அந்தக் குழுவிலே நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாநில அளவிலே இருக்கிற இந்த ஆலோசனைக் குழுவின் பதவிக் காலம் இரண்டு ஆண்டுகள் என்றும் மேலும் இரண்டு ஆண்டுகள் நீட்டிக்கப்பட்டிருக்கிறது என்றும் அமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த ஆலோசனைக் குழு இது வரையில் என்னென்ன ஆலோசனைகளை அரசுக்கு அளித்திருக்கிறது ? அந்த ஆலோசனைகளில் எத்தனை ஏற்று செயல் படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலிலே தெரிவிப்பார்களானால் அது பயனுடையதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்குவரி விதிப்பு அதிகாரிகள் முயற்சி எல்லாம் எந்தளந்த இனங்களில் வரியை உயர்த்தலாம் அல்லது தன்னுடைய இலக்கை எந்த அளவுக்கு உயர்த்த முடியும் என்ற எண்ணத்திலே செயல்படுகிறார்களே அல்லாமல் நியாயமான அளவில் வரி விதிக்கப்பட்டிருக்கிறதா என்பதை அவர்கள் எண்ணிப் பார்ப்பதாகத் தெரியவில்லை. அதற்கும் அரசாங்கத்தின் நடவடிக்கை தான் காரணமாக இருக்கிறது. ஒரு அதிகாரி வரி விதிப்பில் குறைவு செய்திருந்தால் அதற்கு அவரிடம் காரணம் கேட்கப்படுவதாக அறிகிறேன். சென்ற ஆண்டு உங்கள் பகுதியிலே இவ்வளவு வரி இருக்கிறது ; ஆனால் இந்த ஆண்டு ஏன் குறைந்திருக்கிறது என்று அலுவலகத்திலிருந்து காரணம் கேட்கப்படுகிறது. அதன் காரணமாக அலுவலகத்திலிருந்து வருகின்ற தொல்லைகளுக்காக நியாயமற்ற முறையில், வரி உயர்த்தப்பட்டு, அதனால் வியாபாரிகள் தொல்லைப் பட்டு, பல்வேறு வழக்குகள் வழக்கு மன்றத்திற்குச் சென்று, அங்கே அந்த வழக்குகள்தள்ளாடி, தள்ளாடி, இறுதியில் வரி உயர்வு தள்ளுபடி செய்யப்படுகிறது ; அது தகர்த்து எறியப்படுகிறது. அதன் காரணமாக வரி உயர்வு செய்த பின்னர் வழக்கு மன்றத்திலே தோற்ற போது எந்த அதிகாரியிடமாவது அந்த அரசாங்கம்காரணம் கேட்டிருக்கிறதா வரி குறைந்தால் காரணம் கேட்கிற அலுவலகத்தால் வரி உயர்வால் ஏற்படுகின்ற இடையூறுகளுக்கு காரணம் கேட்டிருக்கிறதா என்றால் இல்லை என்று தான் சொல்லவேண்டும். அப்படி காரணம் கேட்டிருந்தால் நியாயம் இல்லாத வரி உயர்வு தவிர்க்கப்பட வாய்ப்பு இருக்கும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, சென்னை உயர் நீதிமன்றத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் எத்தனை ரிட் மனுக்கள் வந்திருக்கின்றன? எத்தனை ஸ்டே வாங்கியிருக்கிறார்கள் என்று பார்த்தால் 1981—82-ல் தினம்தோன்று பல வழக்குகள் வழக்கு மன்றம் போகக் காரணம் என்ன என்பதை அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலிலே விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1982 மார்ச் 9] [திரு. என். எஸ. வி. சித்தன்]

மதுவிலக்கைப் பொறுத்த வரையில் எங்கள் பேரியக்கத்தின் கொள்கையை பல்வேறு சமயங்களில் சொல்லி வந்திருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையில் மது விலக்கு உறுதியாக கடைபிடிக்கப்படுவதில் இந்த அரசாங்கம் தீவிரமாக இருக்கிறது ; நிச்சயமாக ரத்து செய்யப் போவதில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். துணைத் தலைவரவர்களே, உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். மதுவிலக்கை ரத்து செய்வதற்கு என்ன இருக்கிறது ? வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கிற மக்கள் படுகின்ற துயரங்களைத் தீர்க்க என்று சொல்லி அவர்களும் தாராளமாக மது அருந்துவதற்காகத்தான் தளர்த்தப்பட்டிருக்கிறதே தவிர இதிலே வேறு என்ன ஏற்பட்டிருக்கிறது என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

இந்த அறிக்கையிலே சில விபரங்களைக் கொடுத்திருக்கிறீர்கள். கள் அருந்துவதற்கு 4,31,047 பேர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதைப் போலவே சாராயம் அருந்துவதற்கு 2,76,320 பேர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, 11,000 கள்ளுக் கடைகள் திறக்க ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது ; அதைப் போலவே 5,300 சாராயக் கடைகள் திறக்க அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு நாட்டிலே சாராயமும் கள்ளும் மலிந்து தெருவெல்லாம் ஓடிக் கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்..

சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரையில் கருப்பஞ்சாறு கசண்டு தனிப்பட்டவர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. கால் நடைத் தீவனம், கோழித் தீவனம், தயாரிப்பதற்கு என்று வாங்கிச் செல்கிறார்கள். ஆனால் அவர்களால் அது தவறான முறையிலே பயன்படுத்தப்படுகிறது. அதை அவர்கள் அதிக விலைக்கு விற்று, கொள்ளை இலாபம் அடிக்கிறார்கள். அதைத் தவிர்க்க வேண்டும்.

அது மட்டுமல்ல, இன்றைய தினம் மது விலக்கு தளர்த்தப்பட்டு, பிளன்டிங் யூனிட் மூலம் கொள்ளை இலாபம் அடிக்க வழி வகைச் செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இன்னொரு விபரத்தையும் அமைச்சரவர்கள் தன்னுடைய அறிக்கையிலே கொடுத்திருக்கிறார்கள். 1—9—81-லிருந்து 31—12—81 வரையில் கள்ளத்தனமாக மது வடித்தவர்கள் 5,720 பேர்கள் என்று கொடுத்திருக்கிறார்கள். நிச்சயமாக அரசாங்கத்தின் கொள்கை காரணமாகத்தான் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. இதை தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1982 மார்ச் 9

இன்னும் ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். மூதறிஞர் இராஜாஜி அவர்கள் தன்னுடைய வாழ்நாள் முழுவதும் மது விலக்கைத் தீவிரமாகச் செயல்படுத்த வேண்டுமென்று நினைத்தவர், சொல்லியவர், செய்து காட்டியவர்.

அந்த மூதறிஞர் அவர்களுக்கு நினைவுச் சின்னமாக நான் வசிக்கின்ற திருமங்கலம் நகரத்திலே ராஜாஜி அவர்களின் சிலையினை நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அந்தக் காலத்திலே திறந்து வைத்தார்கள். ஆனால் இப்போது திருமங்கலத்திலே ஒரு கள்ளுக்கடை அந்த இராஜாஜி சிலையின் முன்னாலேயே திறக்கப்பட்டிருக்கின்றது. இதனை நான் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். ஆனாலும் அந்த கடை அந்த இடத்தை விட்டு நகருவதாக காணோம். அவ்வளவு [illegible] பற்றி [illegible] ன்றாக அ[illegible] ஆகிவிட்டது. ஆகவே எனக்குக்கூட ஒரு ஐயம் ஏற்பட்டது. ஒன்று கள்ளுக்கடையை நகர்த்த வேண்டும், அப்படி நகர்த்த முடியாவிட்டால் அந்தச் சிலையினையாவது நகர்த்தி விடலாமா என்று கூட நான் நினைத்துப் பார்க்க வேண்டிய நிலைமையில் அந்தக் கள்ளுக்கடை அந்த சிலைக்கு முன்னாலே இன்னும் இருந்துக் கொண்டிருக்கின்றது. ஆகவே மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களின் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன் அந்தக் கள்ளுக்கடையினை நகர்த்துவதற்கு வேண்டிய முயற்சி அரசு உடனே செய்ய வேண்டும் என்று கேட்டு உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

திரு. கே. குப்புசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982–83 ஆம் ஆண்டுக்கா வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கோரி இருக்கின்ற மாநில ஆயத் தீர்வைத் துறை மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்களை நான் எடுத்து வைக்க முன் வருகிறேன்.

மதுவிலக்குப் பிரச்சினையைப் பற்றியும் விற்பனை வரியினைப் பற்றியும் எனக்கு முன்னாலே பேசிய பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களும், காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்களும் சில கருத்துக்களை இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். ஆனால் மதுவிலக்குப் பிரச்சினை என்பதை ஒரு மாநில அளவிலே இருக்கின்ற பிரச்சினை என்று மட்டும் கருதாமல் அகில இந்தியாவிலே உள்ள ஒரு பிரச்சினையாக இது இருக்கின்றது என்பதைக் கருத்தில் கொண்டு பார்ப்போமேயானால் சில விளக்கங்கள் நமக்குக் கிடைக்கும் என்பதில் ஐயம் ஏதுமில்லை. காரணம் உலக உத்தமர் காந்தியடிகள். மூதறிஞர் இராஜாஜி ஆகியோர்களுக்கெல்லாம் மிக விருப்பமான இந்த மதுவிலக்குக் கொள்கையை இன்று மத்தியில் ஆளுகின்ற பேரியக்கமாக விளங்குகிற காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்கின்ற மாநிலங்களிலே இதை அமல்படுத்தாமல் ரத்து செய்திருக்கின்ற நிலையினை நாம் காண முடிகிறது.



1982 மார்ச் 9] [திரு. கே. குப்புசாமி]

காந்தியடிகள் பிறந்த குஜராத் மாநிலம் ஒன்றைத் தவிர காங்கிரஸ் பேரியக்கம் ஆளுகின்ற மற்ற மாநிலங்களிலே மது விலக்கு பூரணமாக ரத்து செய்யப்பட்டிருப்பதை அவையினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

En'orcemen' of pro.ibition in the St.te is the highest joke of this State

என்று வேடிக்கையாக இங்கே சொன்னார்கள். நான் எண்ணிப் பார்த்தேன். ஏன் அவ்வாறு இவர்கள் சொன்னார்கள் என்று. திராவிட முன்னேற்றக் கழகம் இங்கே ஆட்சிப் பீடத்திலே இருந்த காலத்திலே மதுவிலக்கு முழுமையாக ரத்து செய்யப்பட்டிருந்த நிலையினை மாற்றி இப்போது தளர்த்தி இருக்கிறீர்களே, ரத்து செய்யவில்லையே என்ற காரணத்தைத்தான் பிக்கஸ்ட் ஜோக் என்று சொன்னார்களோ என்று நான் எண்ண வேண்டி இருக்கின்றது. அந்த அளவுக்கு மதுவிலக்கு தளர்த்தப்பட்டிருக்கின்றது என்றால் அதற்குப் பின்னாலே இருக்கின்ற பின்னணியை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். மதுவிலக்கை மற்ற மாநிலங்களிலே தளர்த்தியது ஒரு வேளை பொருளாதார அபிவிருத்தியை மனதில் கொண்டதாக இருக்கலாம். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரை மதுவிலக்கை இந்த மாநிலத்திலே பூர்ணமாக அமுல்படுத்தவேண்டும் என்ற எண்ணம் இந்தியத் துணைக் கண்டத்திலே மற்ற மாநிலங்களிலே இருக்கின்ற அத்தனை பேர்களைக் காட்டிலும் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், இந்த அரசுக்கும் அதிகமாக இருக்கின்றது என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அந்த நிலை இருந்தால் கூட இங்கே சில சமுதாய விரோத தீய சக்திகள் பொது மக்களுடைய, ஏழை எளிய மக்களுடைய பணத்தை அரசாங்க கஜானாவுக்குப் போய்ச் சேர முடியாமல் இடையிலே தடுத்து அவர்கள் எக்ஸ்ப்ளாய்ட் பண்ணுவதற்குப் பயன்பட்டுவிடக்கூடாது என்ற ஒரு நல்ல நோக்கத்தோடுதான் இங்கே மதுவிலக்கு தளர்த்தப்பட்டிருக்கின்றது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்த நிலையிலேதான் இங்கே தமிழகத்தில் மதுவிலக்கு தளர்த்தப்பட்ட பிறகும் அதை எந்தெந்த வகையிலே இன்னும் அமல்படுத்த வேண்டும் என்ற ஒரு நிலையை உருவாக்கி 25 வயதுக்குக் குறைந்தவர்கள் மது அருந்தக் கூடாது என்ற நல்ல நோக்கத்தில் 25 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மட்டுமே மது அருந்துவதற்கு பெர்மிட்டுகள் வழங்கப்பட்டிருப்பதை நான் அந்த உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

காரணம் இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் கேட்டார்கள். ' மதுவிலக்கு தளர்த்தப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். மது விலக்கை ரத்து செய்வதற்கும்

[திரு. சே. குப்புசாமி] [1982 மார்ச் 9

தளர்த்துவதற்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது? இனி என்ன இருக்கிறது ரத்து செய்வதற்கு என்று கேட்டார்கள். நான் அதற்குத்தான் சொல்கிறேன்—தமிழகத்திலே இருக்கின்ற சிறிய வர்கள் வயதிலே குறைந்தவர்கள், வயது குறைந்த பெண்கள், தாய்மார்கள், மற்றும் 25 வயதுக்கு குறைவாக இருக்கும் இளை ஞர்கள் போன்றவர்களுக்கு பெர்மிட் கொடுக்கக்கூடாது என்று சொன்னால், உள்ளத்தளவில் மனப்பக்குவம் பெறாதவர்கள், அறிவு முதிர்ச்சி அடையாதவர்கள், எல்லாம் மது அருந்தக் கூடாது என்ற வகையிலே அவர்களுக்கு கொடுக்கக் கூடாது என்கிற நிலையை மட்டும் ஏற்படுத்தி மது விலக்கு மற்றவர்களுக்கு தளர்த்தப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)

(முற்பகல் 11—50)

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஈல்டு செய்ய விரும்பவில்லை. அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த தலைவர் கலைஞர் அவர்கள் பேசும்போது, ஏதாவது பதில் சொல்வதாக இருந்தால் சொல்வதற்கு வாய்ப்பிருக்கிறது என்கிற காரணத்தால் என்னைத் தொடர்ந்து பேசுவதற்கு அனுமதிக்கும் படி அந்த நண்பர்களை வேண்டுகிறேன். எனவே தான் மனப் பக்குவம் பெறாதவர்கள், அறிவு வளர்ச்சி பெறாதவர்கள் வயது குறைந்தவர்கள் எல்லாம் குடியின் பழக்கத்திற்கு அடிமையாகி விடக்கூடாது என்ற வகையில்தான் தமிழக அரசு மதுவிலக்கை ரத்து செய்யவில்லை. ஆனால் மற்றவர்களுக்கு மட்டும் சற்று தளர்த்தியிருக்கிறது என்பதை எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக் கிறேன்.

இந்த வகையில் இந்த மதுவிலக்குச் சட்டத்தை சீரான முறை யில் நடைமுறைப்படுத்துகின்றபோதே, குற்றங்களை தடுக்கும் வகையில் நீதித்துறையின் நிர்வாகமும் இப்போது சீரமைக்கப் பட்டிருக்கிறது என்பதையும் நான் இந்த அவையின் கவனத்திற் குக் கொண்டு வர விரும்புகிறேன். இதிலே பிடிபட்ட குற்ற வாளிகள் சம்பந்தப்பட்ட வழக்குகள் விரைவாக பைசல் செய்ய வேண்டும் என்ற காரணத்திற்காக கிட்டத்தட்ட 20க்கும் மேற் பட்ட அடிஷனல் பர்ஸ்ட் கிளாஸ் மேஜிஸ்ட்டிரேட் கோர்ட்டுகள் அதாவது முதல் வகுப்பு விசாரணை நீதி மன்றங்கள் மாநிலம் முழுவதும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அத்தோடு இரண்டாம் நிலை நடுவர் வழக்கு மன்றங்களிலும் இந்த மது விலக்கு சம்பந்தப் பட்ட குற்றங்களை விசாரணை செய்வதற்கான நடைமுறைகள் நீட்டிக்கப்படுவதற்கான முறைகளை அரசு ஆராய்ந்து வருகிறது எனவே மதுவிலக்கு சம்பந்தப்பட்ட புகார் வழக்குகளை விரை விலே பைசல் செய்து, குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை கொடுத்து, குற்றங்களை நாட்டிலே குறைக்கும் வகையில் நட வடிக்கைகளை அரசு எடுத்து ஏற்பாடு செய்து வருகிறது.



1982 மார்ச் 9] [திரு. சே.குப்புசாமி]

அத்தோடு மட்டும் அல்ல, கள்ளச் சாராயத்தை தடுக்கும் வகை யில், கள்ளச் சாராயம் தயாரித்து விற்று அதனால் பயன் அடைந்து தவறான முறையிலே பொருள்களை சேர்க்கும் நிலையினை தடுத்து நிறுத்துவதற்கு, இங்கே சட்டம் கொண்டு வரப்பட்டு இருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். முதலிலே ஆர் டினன்ஸ் 1/1982 மூலமாக அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு, பிறகு அது

"The Tamil N du Prevention of D ngerous Activities of Bootleggers Act 1982"

என்ற பெயரில் சட்டமாக ஆக்குவதற்காக இந்த அவையிலே கொண்டு வரப்பட்டு விவாதிக்கப்பட்டது. அதன் மீது நாம் அனைவரும் நம்முடைய கருத்துக்களை எடுத்துக் கூறி விவாதித் திருக்கிறோம். அதுபோன்ற சட்டம் இல்லாத காரணத்தால் தான் இத்தகைய செயல்களை செய்து, தவறான வழிகளில் பொருள்களை ஈட்டுகிற நிலையைத் தவிர்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த அரசு அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து இப்போது அது நடைமுறையில் செயல்பட்டுக் கொண்டு வருகிறது என்பதையும் நான் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

தீய சக்திகளிடமிருந்து இந்த சமுதாயத்தை காப்பாற்ற வேண்டிய உயரிய நோக்கம் மட்டுமன்றி, இதனால் வருகிற வருமானத்தைக் கொண்டு—சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் தேதி வரை 79 கோடி ரூபாய் அளவில் ஆயத் தீர்வை மூலமாக அரசுக்கு வருமானம் கிடைக்கிறது—அந்த வருமானத் தைக் கொண்டு, மாநிலத்தின் வளர்ச்சி திட்டங்களுக்கு, சாதாரண ஏழை எளிய பொதுமக்களின் நலனுக்குப் பயன்படுகிற வளர்ச்சித் திட்டங்களை, இந்தத் தொகை மூலமாக பயன்படுத்தி நல்ல முறை யில் செய்ய வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடும் தான் அரசு செயல் திட்டங்களை இங்கே தீட்டி வருகிறது.

இதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் சொன்னார்கள். விற்பனைவரி பற்றியெல்லாம் சொன்னார்கள். கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு விற்பனை வரி சில அத்தியாவசியப் பொருள்களின்மீது அதிகமாக்கப்பட்டிருக்கிறது. இவைகள் எல்லாம் குறைக்கப்பட வேண்டும் என்று சொன்னார் கள். அவர்களுக்கு நான் பணிவன்போடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதுபோன்ற சாதாரண மக்களைப் பாதிக்கிற வரி அவர்கள் கட்சி ஆட்சியில் இருக்கிற மத்திய அரசில் இந்த

ஆண்டு ரூ. 533 கோடி அளவிற்கு விதிக்கப்பட்டிருக்கிறது. ஏழை எளியவர்களைப் பாதிக்கிற அந்த வரியை அங்கே குறைக்கும்படி அவர்கள் இயக்கத்தைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களை அவர் வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு மத்திய அரசு மாநிலங்களுக்குத் தருகிற பங்குத் தொகையை வரிகள் மூலம் பல்வேறு மாநிலங்களிலிருந்து செல்கிற வருமானம் மாநில அரசுகளுக்கு பகிர்ந்து கொடுக்கப்படுமானால் மாநில அரசு விற்பனை வரியை உயர்த்துகிற ஒரு நிலைமையைத் தவிர்க்கலாம். மத்திய அரசும் மாநில அரசுகளும் சமபலத்தோடு விளங்க வேண்டும் என்ற எண்ணத்தில் மாநிலங்களிலிருந்து வருகிற வருமானத்தை மத்திய அரசு மாநிலங்களுக்கு அதிகமாக அளிக்க வேண்டும் என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் சித்தன் போன்றவர்கள் மத்திய அரசிடம் வலியுறுத்த வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மதுவிலக்கை அமல்படுத்தும் அதிகாரம் காவல்துறை அதிகாரிகளிடம் இருந்ததை, லோக்கல் போலீஸிடம் இருந்ததை எக்ஸைஸ் விங்குக்கு இப்போது மாற்றியிருக்கிறார்கள். இந்த எக்ஸைஸ் விங் ஒவ்வொரு ஊரிலும் இல்லாமல் ஒரு குறிப்பிட்ட சென்டரில்தான் இருக்கிறது. எனவே எக்ஸைஸ் அதிகாரிகள் லோக்கலில் தாசில்தார் அளவில் இருக்கிற அதிகாரியோடு, உள்ளூர் போலீஸ் உதவியோடு கள்ளச் சாராயம் காய்ச்சுபவர் களைக் கண்டு பிடிக்கும் விதத்தில் காவல்துறை அதிகாரிகளுக்கும் போதிய அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும். எக்ஸைஸ் அதிகாரிகளுக்கு இருக்கும் அதிகாரம் போன்று ஸப்ஸ்டான்ஷியலாக தாசில்தார்களுக்கும் இந்த அதிகாரத்தை வழங்கினால்தான் புகார்கள் வருகிறபோது உள்ளூர் போலீஸை வைத்துக்கொண்டு கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களைக் கண்டு பிடித்து வழக்குகள் போட உதவியாக இருக்கும். ஆகவே அவர்களுக்கும் போதிய அதிகாரம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஐ.எம்.எப்.எல். லைசென்ஸ் பெற்றவர்கள் சிலர் ரூ. 10,000 கட்டி ஆரம்பிக்காமல் இருக்கிறார்கள். அவர்களுக் கெல்லாம் இப்போது அந்த டெப்பாஸிட் திருப்பிக் கொடுக்கப் பட்டு வருகிறது. இங்கே அதிகமான கடைகளை ஆரம்பித்து உள்ளதாக உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே அப்படி ஆரம்பிக்காமல் இருப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்துள்ள தொகையை விரைந்து திருப்பிக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மது அருந்துவது கெடுதல் என்ற பிரச்சாரத்தைச் செய்ய மதுவினால் ஏற்படும் தீமைகளைப் பற்றி சாதாரண மக்களுக்கு விளக்கமாக எடுத்துச் சொல்ல வட்ட அளவில், மாவட்ட அளவில் மாநில அளவில் ஆலோசனைக் குழுக்கள், அறிவுரை குழுக்கள் போட வேண்டும். இது சம்பந்தப்பட்ட திரைப்படங்களை





எடுத்து, மதுவினால் ஏற்படும் தீமைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்ல திரைப்படங்கள் மூலம் மக்களுக்கு அறிவுரைகள் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அண்டை மாநிலங்களிலுள்ள ஆயத் தீர்வையை ஆராய்ந்து அதற்கேற்ப நம் ஆயத் தீர்வையை அமைக்க நம் அரசு முன் வர வேண்டும். மதுவிலக்கை தளர்த்துவதின் மூலம் இந்நாட்டு மக்களை மதுவின் கொடுமையிலிருந்து ஓரளவு காப்பாற்றி யிருக்கிறது இந்த அரசு என்று கூறி இந்த மானியக்கோரிக்கையை ஆதரித்து அமர்கிறேன். வணக்கம். நன்றி.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக்கோரிக்கையின்மீது காந்தி— காமராஜ் தேசீய காங்கிரஸ் சார்பாக என் கருத்துக்களை ஓரிரு மணித் துளிகளில் சொல்லி அமர விரும்புகிறேன். பிற மாநிலங்களோடு ஒப்பிட்டுக் பார்க்கிறபோது வருவாய்த்துறையினுடைய நிர்வாகம் இந்த மாநிலத்தில் செம்மையாக நடைபெறுகிறது என்பதனையும் குறைகளைக் கேட்டு மக்களுடைய மனதில் இருக்கிற துன்பங்களை துயரங்களைத் துடைக்கிற ஒரு எண்ணம் அமைச்சர் அவர் களுக்கும் முதல்வர் அவர்களுக்கும் இருக்கிறது என்பதைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறோம்.

(நண்பகல் 12·00)

சில செய்திகளை இங்கே சொல்வது, நம்முடைய கவனத்திற்கு தட்டுப்படாதது மட்டுமல்ல; கவனத்தைப் போதிய அளவில் ஈர்க்கவில்லையோ என்பதற்காக இதை நான் இங்கே குறிப் பிட விரும்புகிறேன். சென்ற ஆண்டு பத்திரப் பதிவு கட்டணம், 1978—79ஆம் ஆண்டைப் பார்த்தால் 35 கோடி வருமானம் வந்திருக்கிறது. இதிலே இந்த ஆண்டு எதிர் பார்க்கின்ற வருமானம் 68 கோடி என்றிருக்கிறது. ஆனால், நில விற்பனை, சென்னை நகரம் போன்ற இடங்களைப் பார்க்கின்றபோது, அதனுடைய விலை பல மடங்கு அதிகரித்திருக்கின்ற நேரத்தில், மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். நிலத்தின் விலை இன்றைய தினம் பல மடங்காக உயர்ந்திருக்கிற நேரத்தில், பத்திரப் பதிவு கட்டணம் பல மடங்காக உயராமல் இருப்பதற்குக் காரணம், எங்காவது ஏய்ப்பு இருக்குமோ என்ற எண்ணம் நமக்கு வருகிறது. அதன்மூலம் வருவாய் குறையலாம். எந்தெந்த வகைகளிலே எல்லாம் ஏய்க்க முடியும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். உதாரணத்திற்குப் பார்த்தால், வருமான வரியைக் குறைத்துக் கட்டுவார்கள்; பிறகு அதேபோல் செல்வ வரியைக் குறைத்துக் கட்டுவார்கள். இப்படி அரசாங்கத்திற்கு வருகின்ற வருவாய் எல்லாம் குறைத்துக் கட்டுகின்ற சூழ்நிலை இருக்கிறதோ என்ற ஒரு அச்சம் வருகிறது. காரணம், பல

[திரு. குமரி அனந்தன்] [1982 மார்ச் 9

மடங்காக நிலத்தின் விலை உயர்ந்திருக்கும்போது. இன்றைக்கு
இதிலே இந்த அளவுக்கு தான் வருவாய் வருகிறது என்று
கூறப்படுகிறது.

அடுத்து, விவசாய வருமான வரி. இன்னும் நல்ல முறையில்
இதை நீங்கள் வசூலிப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆனால், இந்த
பினாமி நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு இந்த அரசு முயற்சி
செய்தாலும், இந்த எண்ணம் ஈடேறாத காரணத்தினால்,
அவர்கள் இந்த உச்ச வரம்பில் தங்களுடைய இல்லங்களைக்கூட
பினாமி பெயர்களில் வைத்துக் கொண்டு, வரிகளைக் கொடுப்
பதிலே இருந்து தப்பித்துக் கொள்ளும் வாய்ப்பு அதிகரிக்க
அதிகரிக்க, விவசாய வருமான வரி நமக்குக் குறைகிறது. ஆகவே
இந்த விவசாய வருமான வரியைச் சரியாக வசூல் செய்தால், நில
வரி முழுவதையும் ரத்து செய்து விடலாம் என்பது எங்களுடைய
எண்ணம். 1967 ஆம் ஆண்டு பெருந்தலைவர் காமராஜ் அவர்கள்
தலைமையில், காங்கிரஸ் பேரியக்கம் ஒன்றாகிய இயங்கிய காலத்
தில், காரைக்குடியிலே சிறந்ததொரு தீர்மானத்தை அவர்கள்
நிறைவேற்றி வைத்தார்கள். இந்தத் தீர்மானத்திலே, காங்கிரஸ்
மீண்டும் ஆட்சிக்கு வருமானல், நில வரியை ரத்து செய்யும் என்று
சொல்லியிருந்தார்கள். மீண்டும் அவர்கள் ஆட்சிக்கு வந்திருந்
தால், அடியோடு நில வரியை அவர்கள் ரத்து செய்திருப்பார்கள்.
அவருடைய எண்ணங்களை நிறைவேற்றுவதாகச் சொல்லுகின்ற
இந்த அரசுக்கு நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன்.
காரணம், இன்று இந்த நில வரியால் கிடைக்கும் வருமானம்
ரூ. 4·20 கோடிதான். ஆனால், இந்த நிலவரியை வசூலிப்பதற்
காக செலவிடப்படும் பணம் ரூ. 11·60 கோடி என்றுசொல்லப்
படுகிறது. இந்த 11·60 கோடி ரூபாயில் பதிவுநாளதுவரை
எழுதிக் கொண்டு வருவதற்கும் சேர்த்து என்று சொல்லப்படு
கிறது. இப்படி பதிவு நாளதுவரை எழுதிக் கொண்டு வருவதற்கு
மட்டும் செலவிடப்படும் பணம் ரூ. 4·84 கோடி என்று சொல்லப்
படுகிறது. அப்படி இதற்கு ரூ 4·84 கோடி செலவிடப்படு
கின்றது என்று சொன்னாலும்கூட ரூ. 6·76 கோடி மற்றவற்றிற்கு
செலவிடப்படுகின்றது என்று கணக்கு சொல்லப்பட்டிருக்கிறது.
நில வரியை வசூலிப்பதற்கு ரூ. 6·76 கோடியா என்று கேட்டால்,
அதற்கு மட்டுமல்ல, மற்ற வேலைகளைச் செய்வதற்கும், மற்ற
வரிகளை வசூலிப்பதற்கும் என்று அமைசசர் அவர்கள் பதில்
அளிக்கலாம். இருந்தாலும்கூட, ரூ. 4·20 கோடி நிலவரியை
வசூலிப்பதற்காக எவ்வளவு செலவு செய்ய வேண்டும் என்ற
கணக்கைப் பார்த்தால், இந்த நிலவரி வசூலிப்பதை ஒட்டு
மொத்தமாக ரத்து செய்யலாம். அப்படிச் செய்தால் உங்களுக்கும்
ஒரு நல்ல நல்ல பெயர் உண்டாகும்; எங்கள் பெருந்
தலைவர் காமராஜ் அவர்களின் எண்ணத்தையும் நிறைவேற்றிய
பெருமை கிடைக்கும். எனவே, இந்த நிலவரியை ஒட்டு மொத்த
மாக ரத்து செய்ய வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்
கொள்கிறேன்.



1982 மார்ச் 9] [திரு. குமரி அனந்தன்]

அடுத்து, சென்னைக்கும், அதன் சுற்றுப்புற இடங்களுக்கும்
நீங்கள் உபரி வரி விதிப்பது தேவைதானா என்பதை மறுபரி
சீலனை செய்ய வேண்டும். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு
உறுப்பினர்கள் எல்லாம் ஒரு இடத்திற்கும், இன்னொரு இடத்
திற்கும் வரி வித்தியாசம் இருந்தால், அது ஒரு ஊரிலே இருந்து
இன்னொரு ஊராக இருந்தாலும் சரி அல்லது ஒரு மாநிலத்திலிருந்து
இன்னொரு மாநிலமாக இருந்தாலும்சரி அதிலே எத்தனை
எத்தனை தொல்லைகள் துயரங்கள் இருக்கின்றன என்பதைச்
சுட்டிக் காட்டினார்கள். ஆகவே, சென்னைக்கும், அதன் சுற்றுப்
புறத்திலே இருக்கின்ற இடங்களுக்கும் உபரி வரி தேவைதானா
என்பதை மீண்டும் நீங்கள் மறுபரிசீலனை செய்யும்படி
கேட்டுக் கொள்கிறேன். அப்படியே நீங்கள் விதித்தாலும்கூட,
அதிலே வருகின்ற 4 கோடி ரூபாயை மட்டும்தான் சென்னை நகர
மேம்பாட்டிற்குப் பயன்படுத்துவார்கள் என்று சொன்னால், அந்த
முழுவதையுமே ஒதுக்கினால் என்ன என்ற எண்ணமும் எங்களைப்
போன்றவர்களுக்கு எழாமல் இல்லை.

அடுத்து, 4 சதவீதத்திலிருந்து 5 சதவீதம் ஆக விற்பனை வரியை
உயர்த்தியுள்ளது. என்னமோ 1 சதவீதம் தான் வரியை உயர்த்தி
யுள்ளதுபோல் வெளியே தோற்றம் அளிக்கிறது. ஆனால், இந்த
விற்பனை வரியை அன்று இராஜாஜி அவர்கள் கொண்டு வருகின்ற
போது, ½ சதவிகிதமாக ஆரம்பித்ததிலிருந்து இப்பொழுது 4
சதவீதத்திலிருந்து 5 சதவீதம் என்று உயர்த்தியுள்ளதை எண்ணிப்
பார்க்கும்போது, இராஜாஜி அவர்கள் தொடங்கிய காலத்தி
லிருந்து எத்தனை மடங்கு இது அதிகமாக்கப்பட்டிருக்கிறது
என்பதை நாம் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.
இப்போது மத்திய அரசு ஒரு பற்றாக்குறை நிதி நிலை அறிக்கையை
சமர்ப்பித்திருக்கின்ற நேரத்தில் ஏற்கனவே விலைவாசிகள்
உயர்ந்து அதிகமான பண புழக்கம் ஏற்பட்டிருக்கின்ற காரணத்
தினால், இன்னும் நாம் எதிர் பார்ப்பதைவிட அதிகமான
அளவுக்கு வருவாய் வரும் என்று கருதுகிறேன்.

உதாரணத்திற்குச் சொல்லப் போனால் சென்ற தடவை நம்
முடைய அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது 1982—83-ல் நீங்கள்
எதிர்பார்த்தது 449 கோடி ரூபாய். ஆனால் வந்திருப்பது 552
கோடி ரூபாய். ஆக 449 கோடி ரூபாயை எதிர்பார்த்து 552
கோடிரூபாய் வசூலிக்கிறீர்கள் என்று சொன்னால் செம்மையாக
வசூலிக்கிறீர்கள் என்ற ஒரு பாராட்டை உங்களுக்குத் தருகிற
நேரத்திலே 103 கோடி ரூபாய் எதிர்பார்த்ததை விட அதிகமாக
கிடைத்திருக்கிறது. இப்போ விலைவாசிகள் ஏறியிருக்கிற
போது இதே 4 சதவீதம் இருந்தால் கூட நீங்கள் எதிர்பார்க்கிற
615 கோடியை விட 150 கோடி ரூபாய் அதிகம் வருமென்று
எதிர்பார்க்கலாம். நீங்கள் எதிர்பார்க்கிறதை விட அதிகமாக
வருமானால் நீங்கள் இன்னும் பல சலுகைகளை சில பொருள்
களுக்கு அளிக்கலாமென்று தெரிவித்துக் கொள்கிறேன். பட்டு
நெசவுத் தொழிலாளர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த வரியிலிருந்து

விலக்கு அளித்ததைப் போல கையால் செய்யப்படுகிற சில பொருள்களுக்கு வரிச்சலுகை அளிக்கலாம். உதாரணமாக நான் போன தடவையும் கேட்டுக் கொண்டேன், இப்போதும் அதை நினைவுப்படுத்த விரும்புகிறேன். கையால் செய்கிற சோப்பு போன்றவைகளுக்கு, டிடர்ஜன்ட் கேக்ஸ்களுக்கு நீங்கள் வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கு காரணம் இதிலே லட்சக்கணக்கான மக்கள் பயன்பெறுகிறார்கள். கந்தையானாலும் கசக்கி கட்டு, என்ற பழமொழி நமது நாட்டிலே உள்ளது. ஆள் பாதி ஆடை பாதி என்பது நம்முடைய ஆன்றோர்கள் வாக்கு. அதற்கேற்ப புத்தம் புதிய துணிகள் கட்ட முடியவில்லை என்றுச் சொன்னாலும், சுத்தம் செய்தாவது அவர்கள் காட்டுகிற வகையிலே சின்னஞ்சிறு கிராமங்களில் இருக்கிற மக்களும், ஏழை எளிய தொழிலாளர்களும் பயன்படுத்துகிற இந்த கையால் செய்யப்படுகிற பொருள்களுக்கு நீங்கள் முழுவதுமாக வரிவிலக்கு அளிக்க வேண்டும். அதேபோல டிடர்ஜன்ட் கேக்ஸ்களுக்கு நீங்கள் வரி விலக்கு அளிக்கலாம் என்று நான் சொன்ன போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அது பரிவோடு பரிசீலிக்கப்படும், தீவிரமாக பரிசீலிக்கப்படும் என்று சொன்னதற்கிணங்க இந்த தடவை அந்த பரிகாரம் கிடைக்கும் என்று நம்புகிறேன். அதைப்போல சத்துணவை கொடுக்க வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். அப்படி கொடுக்கக் கூடிய சத்துணவிலே மிக முக்கியமானது பால். பாலிலே எல்லா சத்துக்களும் அடங்கியிருக்கிறது என்று சொல்வார்கள். அந்த பால்காரர்கள் பயன்படுத்துகிற குச்சிக் கிழங்கினுடைய வேஸ்ட் என்று சொல்கிறோமே அதனுடைய சிப்பிகள், அதைப்போல பருத்திப்பொட்டிலே எல்லாவற்றையும் எடுத்து விட்டு பிறகு தூர எறிகிற அந்த பொட்டுத் துணுக்குகள் இவைகளுக்கு எல்லாம் வரி விலக்கு அளிக்க வேண்டும். மாட்டுத் தீவனம் என்கிற வகையிலே போன தடவை நான் வேண்டுகோள் விடுத்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அது பரிசீலிக்கப்படும் என்று சொன்னார்கள். அதைப்போல மெழுகு திரி, சோப்பு போன்றவை எல்லாம் வரி விலக்கு அளிப்பதற்கு உரியன என்று நான் கருதுகிறேன். கையால் செய்யப்படுகிறதாலே இந்த பொருள்களை பெரிய கோடீஸ்வரர்களுக்கு அளிக்கிற நிலைமைகளுக்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது. சோப்புகள் எங்கோ உரை போட்டு இங்கே வரவேண்டியதில்லை.

சாதாரணமாக கிராமங்களில் கூட சோடா தயாரிப்பது, சோப்பு தயாரிப்பது, மெழுகு திரி தயாரிப்பது போன்றவை எல்லாம் நாம் ஊக்குவிப்போமானால் வேலை வாய்ப்பு கிடைக்கும், வருவாய் கிடைக்கும் என்ற காரணத்தினால் நீங்கள் வரி விலக்கு அளிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொண்டு, குடி செய்கிற அதிகமான தீமைகளை பற்றி இங்கே அதிகமாகச் சொன்னார்கள். அது எந்தளவிற்கு எங்களுடைய உள்ளங்களை தளரச் செய்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். அதை ஒரு பக்கத்திலே நான் மீண்டும் சொல்லாமல் குடிசைத் தொழில்களுக்கு நீங்கள் நல்லமுறையிலே வரிச்சலுகை செய்து இந்த நாட்டு மக்களுடைய வளத்தை மேம்படுத்த வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொண்டு என்னுடைய கருத்தை இத்தோடு நிறைவுசெய்கிறேன்.



*திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களைக் மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விற்பனை வரி என்பது மறைமுகமான வரி. அத்யாவசிய பண்டங்கள் மீது போடக்கூடிய வரி விற்பனை வரி. விலை ஏற்றத்திற்கு முக்கியமான காரணமாக இருப்பது விற்பனை வரி. பொதுவாக சுதந்திரம் வாங்கிய காலத்தில், 1950-லே வருமான வரி போன்ற நேர்முக வரிகள் பாதிக்குமேல் வசூலிக்கப்பட்டன. தற்போது நாளுக்கு நாள் இந்த நேர்முக வரி குறைந்து கொண்டே போகிறது. இதுதான் மத்ய சர்க்காருடைய கொள்கையும் கூட.

[பிற்பகல் 12–10].

ஆனால் மக்கள் மீது போடக்கூடிய முறையில் அத்தியாவசியப் பண்டங்கள்மீது போடக்கூடிய வரியாக மறைமுக வரி இருக்கிறது, மொத்த வரியில் 81 சதவீதம் உயர்ந்துள்ளது. மறைமுக வரியைப் போட்டால் விலைவாசிகள் ஏறும். அரசாங்கத்தினுடைய கொள்கை, வசதி படைத்தவர்களிடம் தட்டி எடு, ஏழைகளிடம் தட்டிக்கொடு என்பது. விலைவாசியை ஏற்றக்கூடிய முறையிலே உள்ள மறைமுக வரியின்மூலம் சென்ற ஆண்டு இருந்ததை விட 28 சதவீதம் அதிகமாகப் பெற்றிருக்கிறோம் என்று சொல்லி அதன்மூலமாக 93 கோடி ரூபாய் பெற்றிருக்கிறோம் என்று பெருமைப்படுவது நியாயந்தானா? விலைவாசி ஏற்றத்திற்குக் காரணமாக இருக்கக்கூடிய மறைமுக வரியைக்கூடுமான அளவுக்குக் குறைக்கவேண்டுமென்பதுதான் எங்களுடைய கருத்து.

மாநிலத்திற்கு வருவாய் ஊற்றாக இருக்கக்கூடிய இந்த விற்பனை வரியை மத்திய அரசாங்கம் அடைக்க முயற்சி செய்கிறது. 1957-இல் துணி, சர்க்கரை, புகையிலை இவைகளின் மீது ஆயத் தீர்வையை மத்திய அரசு வசூலித்தது. வசூல் செய்ததில் தன் பங்கை மாநில அரசாங்கம் கையேந்தி வாங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஏற்கெனவே மாநில அரசாங்கம் விற்பனைவரி வசூலித்துக்கொண்டிருக்கின்ற பொருட்கள், வனஸ்பதி, மருந்துப் பொருட்கள், சிமின்ட், காகிதம், காகிதஅட்டைகள், பெட்ரோலியப் பொருட்கள் மீது மத்திய அரசாங்கம் கூடுதலாக ஆயத்

தீர்வை போட்டு வசூல் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த முயற்சியைத் தடுக்கின்ற வகையில் தமிழக அரசாங்கம் மூலமாகத்தேசிய வளர்ச்சிக் கூட்டத்தில் முதலமைச்சர்கள் மாநாட்டில் தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது உண்மை. வோட்டெடுப்பு நடந்தது. அந்த ஓட்டெடுப்பில் இந்த அரசாங்கம் கலந்து கொள்ளவில்லை. இது சம்பந்தமாக இங்கே திரு. உமாநாத் அவர்கள் கேட்டார்கள். நிதியமைச்சர் அவர்கள் வோட்டெடுப்புபற்றி தகவல் இல்லை என்று பொத்தாம் பொதுவாகக் கூறிவிட்டார்கள். எதிர்ப்பு தெரிவித்ததையெல்லாம் சொன்னார்கள். ஆனால் ஓட்டெடுப்பிலே கலந்துகொண்டீர்களா இல்லையா என்று கேட்டால் தெரியவில்லை என்று சொல்கிறார்கள். மாநில அரசுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்பது இந்த ஆளுங்கட்சியின் கொள்கை. அதற்கு நேர்மாறாக அதற்கு வேட்டு வைக்கக்கூடிய முறையிலே மத்திய அரசாங்கத்தின் கொள்கை, இந்த அரசாங்கம் அந்த ஓட்டெடுப்பில் கலந்துகொள்ளாதது சரிதானா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மண்ணெண்ணெய்க்கு 8 சதவீதமாக இருந்த வரியை 4 சதவீதமாகக் குறைத்திருப்பது பாராட்டுக்குரியது. ஏழைகள் அதைப் பயன்படுத்துகிறார்கள் என்பதால் அந்த 4 சதவீதத்தையும் ரத்து செய்யவேண்டும் என்பது எங்களுடைய கோரிக்கை.

பிஸ்கட், மிட்டாய் போன்றவற்றிற்கு வரியை உயர்த்தியிருக்கிறீர்கள். காட்பரீஸ், பிரிட்டானியா போன்ற பிஸ்கட் கம்பெனிகள்மீது போடுகிற வரி அல்ல, அந்தப் பொருட்கள் மீது போடப்படுவதால் வாங்கும் மக்கள்மீது போடுவதாகத்தான் ஆகிறது. ஆகவே பிஸ்கட், மிட்டாய் போன்றவற்றிற்கு உள்ள வரியை ரத்து செய்யவேண்டும் என்பது எங்களுடைய கோரிக்கை. தலைச்சுமை வியாபாரிகளுக்கு — ஹாக்கர்ஸ்க்கு — ஆண்டுக்கு 12 ஆயிரம் ரூபாய்க்குமேல் விற்பனை இருந்தால் வரி என்று சொல்லியிருக்கிறார்கள்.

## 6. தகவல் கோரல்

### சென்னை விமான நிலையத்தின் முன் ஏற்பட்ட கலவரம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் டெல்லியில் பாராளுமன்ற மாநிலங்கள் அவையில் உறுப்பினர் பதவி ஏற்றுக்கொண்டு விமான நிலையத்திற்கு வந்திருக்கின்ற நடிகர் திலகம் அவர்களின் வரவேற்பின்போது காவல் துறையினர் கூடியிருந்த கூட்டத்தினர் மீது தடியடிப்பிரயோகம், கண்ணீர்ப்புகை பிரயோகம் செய்து அங்கே அமளி ஏற்பட்டிருப்பதாகத் தெரி





கிறது. நம்முடைய உறுப்பினர் திரு. ராஜசேகரன் அவர்கள் படுகாயமுற்றதாக எங்களுக்குச் செய்தி வந்திருக்கிறது. அது சம்பந்தமாக செய்தி அரசுக்குக் கிடைத்து இருக்கிறதா? ஒரு விளக்கமான செய்தியை மன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பார்கள் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதுபற்றிய விவரம் ஒன்றும் தற்போது என்னிடத்தில் இல்லை.

## 5 வரவு-செலவுத் திட்டம் 1982-83 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

திரு. ரா. கிருஷ்ணன் : ஒரு நாளைக்கு அவர்களுக்கு 35 ரூபாய் விற்பனை என்று வைத்துக்கொண்டாலும்கூட ஆண்டுக்கு 12 ஆயிரம் ரூபாய் வந்து விடுகிறது.

ஆகவே, அந்த டர்ன் ஓவரைப் பொறுத்தவரையில் கூடுதலாக ஆக்க வேண்டும். அவர்கள் தலைச் சுமை வியாபாரிகள், அந்த அடிப்படையில் பரிசீலனை செய்து அந்தத் தொகையைக் கூட்டித் தர வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை.

சோடாவிற்கு வரி 5 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகக் கூட்டப்பட்டிருக்கிறது. சோடா லக்சுரி பொருள் அல்ல. பெட்ரோலுக்கு வரி 5 சதவீத்திலிருந்து 11 சதவீதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. டீசலுக்கு வரி 9 சதவீதத்திலிருந்து 11 சதவீதமாகக் கூட்டப்பட்டிருக்கிறது. மேலும் டயர், டியூப் போன்றவைகளுக்கும் வரி போடுவதானது சாதாரண ஏழை எளிய மக்களின் மீது போடப்படும் வரியாகும். இந்த வரி விதிப்பானது விவசாயிகளைத்தான் ஏற்றும். இதனால் பொது மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

நோட்டுப் புத்தகங்கள், கணக்குப் புத்தகங்கள், பேனா, பிளாஸ்டிக் பொருள்கள், மெழுகுவர்த்தி ஆகியவைகளுக்கு இருந்த ஒருமுனை விற்பனை வரியைப்பலமுனை விற்பனை வரியாகச் செய்யப் போவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் நோட்டுப் புத்தகங்கள், பேனா போன்றவைகளெல்லாம் எல்லாப் பகுதியினராலும், குறிப்பாக ஏழை எளிய மக்களால் வாங்கப்படும் பொருட்களாக இருப்பதால் இதையும் மறு பரிசீலனை செய்யும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

பற்பசை, ஐஸ் கிரீம் மீது போடப்பட்டிருக்கும் வரிகளைப் பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று சென்ற ஆண்டே கோரிக்கை விடப்பட்டது. எனவே, அது சம்பந்தமாக இந்த அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சினிமாத் தியேட்டர்களில் கள்ள டிக்கட்டுகள் விற்பனையாகின்றன. அந்த சினிமாத் தியேட்டர் உரிமையாளர்களின் அனுமதியோடு கள்ள மார்க்கெட்டில் டிக்கட்டுகள் விற்பனை செய்யப்படுகின்றன. இதைத் தடை செய்வதற்கு அரசாங்கம் முன் வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சினிமாத் தியேட்டர்களில் வேலை பார்க்கின்ற தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச சம்பளம், இன்னும் மற்ற வசதிகள் போன்றவைகள் கிடையாது. அப்படிப்பட்ட உத்தரவாதத்தை அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை.

சினிமாத் தியேட்டர்களைப் பொறுத்தவரையில் போதுமான வசதிகள் இல்லாத நிலைமையில் இருக்கின்றன. கிராமப்புறங்களிலேயும் சரி, நகரப் புறங்களிலேயும் சரி இருக்கின்ற தியேட்டர்களில் குறைந்த பட்ச வசதிகள் கூட இல்லாமல் ஏராளமான தியேட்டர்கள் இருப்பதை அரசு கவனத்தில் கொண்டு அதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குதிரைப் பந்தய ஒழிப்பு சம்பந்தமாக அரசாங்கம் ஏற்கெனவே முடிவு செய்து இருந்தும், கொள்கை ரீதியாக இது சம்பந்தமாக முடிவு இருந்தாலும் கடந்த காலங்களில் எந்த விதமான நடவடிக்கையும் கிடையாது. கொள்கை ஒருபுறம் இருந்தாலும் அதை நடைமுறைப்படுத்த அரசு முன் வரவேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை.

மது விலக்கைப் பொறுத்தவரையில் தளர்த்தப்பட்டது என்று கூறிக் கொண்டேயிருக்கிறார்கள். இது வீண் பாவனைதான். பொதுவாக மது விலக்கு என்பது கிடையாது. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் முழுமையாக அதை ரத்து செய்ய வேண்டுமென்பது மார்க்சிஸ்ட் கம்யூனிட் கட்சியின் வேண்டுகோள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2,76,320 அனுமதிச் சீட்டு வாங்கியிருப்பவர்கள் என்றால், 3,17,84,102 லிட்டர் சாராயம் விற்பனை செய்யப்பட்டிருக்கிறது என்றால் ஏதோ இதைக் குறைவாக அருந்துகிறார்களா அல்லது அனுமதிச் சீட்டுவாங்கியவர்கள் வேறு எந்தக் கம்பனியிடமிருந்தாவது வாங்குகிறார்கள் என்று பொருளா என்பது தெரியவில்லை.





எனவே, இப்படிப்பட்ட சூழ்நிலைகளையெல்லாம் மாற்றுவதற்கு இதை முழுமையாக ரத்து செய்வதுதான் பொருத்தமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விலையைப் பொறுத்தவரைக்கும் கூட மாக்சிமம் பிரைஸ் என்பது கிடையாது. ஆகவே, கள்ளச் சாராயம் அதிகமாக விற்பனை செய்யப்பட்டிருக்கிறது. எனவே, இதற்கு ரீசனபிள் பிரைஸ் நிர்ணயிப்பது பொருத்தமாக இருக்க வேண்டும். கள்ளச் சாராயம் விற்கப்படும் விலையை விடக் குறைவான விலையை நிர்ணயிக்க வேண்டும் அல்லது அதற்குச் சமமாகவாவது இருந்தால்தான் கள்ளச் சாராய விற்பனையைத் தடுக்க முடியும். இப்படிப்பட்ட நிலையை மனத்தில் கொள்ளும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளச் சாராயத்தைத் தடுப்பதற்காக சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தின் கீழ் இதுவரை 47 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஏற்கெனவே இதை தடுப்பதற்குப் பொருத்தமான சட்டங்கள் இருக்கின்றன. அதன் மூலம் நடவடிக்கை எடுத்தால் பொருத்தமாக இருக்கும். அப்படியில்லாமல், விசாரணை இல்லாமல் கைது செய்வது ஜனநாயகத்தில் உள்ள சுதந்திரத்தைப் பாதிக்கும். எனவே, இந்தச் சட்டத்தை ரத்து செய்வதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறி நான் என்னுடைய பேச்சை முடிக்கின்றேன்.

திரு. எம். எ. மாணிக்கம் : மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற வணிக வரிகள் மற்றும் ஆயத் தீர்வை பற்றிய மானியக் கோரிக்கைகளின் மீது பேச வாய்ப்பு அளித்தமைக்காக நன்றியைக் கூறி சில கருத்துக்களை நான் இங்கே கூற முற்படுகிறேன். வணிக வரித் துறை சிறப்பான முறையிலே பணியாற்றி, இதுவரையிலே எந்தவகையிலும் குறைபாடுகள் இல்லாமல் புரட்சித் தலைவர் அரசுதான் தமிழகத்திலே வணிக வரித் துறையைச் சீராக நிர்வகித்து, அதன் மூலம் ஒழுங்காக வரிகளை வசூல் செய்து இந்த நாட்டிலே வணிகர்களுக்கும், பொது மக்களுக்கும் பயன்படக்கூடிய வகையிலே செயலாற்றி வருகிறது என்பதை இங்கே நான் குறிப்பிட்டுக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இதற்கு முன்னால் ஆட்சி நடத்தியவர்கள் வணிக வரித்துறையைப் பயன்படுத்தி பல்வேறுவிதமான நிதிகளைப் பெறுவதற்காக அந்தத் துறையைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் புரட்சித் தலைவர் அரசு இந்தத் துறையை அதற்குப் பயன்படுத்தாமல், வணிக வரியை வசூலிப்பதிலே நேர்மையாக நடந்து, அதன்மூலமாக வணிகர்களுக்கு எந்தவிதமான தொல்லையையும் உருவாக்காமல், அதே நேரத்தில் வரியை வசூலித்து, ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்று சொன்னால், அது புரட்சித் தலைவருடைய அரசு என்றுதான் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-20)

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் குறிப்பிட்டார்கள். வணிக வரித் துறையில் இப்பொழுது 3 ரசீதுகளைப் பெற்றுக்கொண்டு பிறகு லாரிகளில் சரக்குகளை எடுத்துச் செல்ல வேண்டுமென்ற உத்தரவை இட்டிருப்பதாக, அந்த உத்திரவு வரி ஏய்ப்பினைத் தடுக்கக்கூடிய முறையிலே சிறப்பாகப் பணியாற்றுவதற்கு இந்த அரசு இட்டிருக்கிற உத்திரவு என்பதை நான் குறிப்பிடக்கடமைப்பட்டு இருக்கிறேன். இதற்கு முன்னாலே, இரண்டு ரசீதுகளை எடுத்துச் செல்ல வேண்டுமென்கிற நிலைமை இருந்தபொழுது, எந்த ஊரிலேயிருந்து அந்த லாரி புறப்படுகிறதோ, அந்தப் புறப்படுகிற ஊரிலே ஒரு ரசீதைக் கொடுத்து விட்டு மற்றொரு ரசீதை அவர்கள் வைத்துக்கொள்ள வேண்டுமென்று இருந்தது, ஆனால், இங்கே சென்னையிலேயிருந்து ஒருவர் லாரியெடுத்துச் செல்கிறவர் தான் திருநல்வேலிக்கோ அல்லது கன்னியாகுமரிக்கோ அல்லது திருநகருக்கோ தன்னுடைய சாமான்களை எடுத்துச் செல்வதாகச் சொல்லி விட்டு, சென்னையிலே இருக்கிற தாம்பரத்திலே ஒரு ரசீதைக் கொடுத்து விட்டு, அந்த லாரியை எடுத்துச் செல்கிறவர், திருச்சியிலேயே தன் சாமான்களை இறக்கி வைத்தால் அல்லது மதுரையிலே தன்னுடைய சாமான்களை இறக்கிவிட்டு வழியிலேயே இறக்கிவிட்டுவைத்தால் அந்தப் பொருள் எந்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்தது என்பதைக் கண்டு பிடிக்க முடியாமல் செய்து வந்தார்கள் ஆனால் இப்பொழுது எந்த இடத்திற்குச் செல்ல வேண்டுமென்று ரசீதில் போட்டிருக்கிற காரணத்தினாலே திருநெல்வேலிக்கு





போட்டிருக்கிற காரணத்தினாலே திருநல்வேலிக்கு லாரி போய்ச் சேரும் என்ற நிலைமை உருவாகியிருக்கிறது எனவே வரி ஏய்ப்பைத் தடுப்பதற்காக உருவாகியிருக்கிறது இந்த விதி இங்கே அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்றால் வரி ஏய்ப்பைத் தடுப்பதற்காக அரசு கொண்டு வந்திருக்கிறதே ஒழிய அதனாலே வியாபாரிகளுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்பட்டுவிடாது எந்தக் குறையும் இல்லை யென்பதை இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன் அதைபபோல் வணிக வரித் துறையிலே அதிகாரிகளுக்கு அலுவலர்களுக்குக் கட்டிடங்கள் கட்டுவதை இந்த அரசு துரிதபப்டுத்தி அதைச் செயலுக்குக் கொண்டு வருகிறது அதைபபோல் வணிக வரி அதிகாரிகளுக்குத் தொலைபேசி வசதி செய்து தர வேண்டுமென்பதையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

வணிக வரித் துறை எந்த வகையிலே சிறப்பாகச் செயல்படுகிறதோ அதைப் போல் மதுவிலக்கு ஆயத் தீர்வைத் துறையும் சிறப்பாக இன்று செயலுக்கு வருகிறது என்று சொன்னால், அதை மறுக்க முடியாது. இதற்கு முன்னாலே மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டிருந்த நேரத்திலே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்திலே, எப்படி இந்தத் துறை செயல்பட்டது என்பதை நான் இங்கே குறிப்பிட்டுக் காட்டுவது என்னுடைய கடமையாகும். அன்று தமிழகம் பூராவும் இரண்டே இரண்டு மொத்த விற்பனையாளர்கள்தான் நியமிக்கப்பட்டிருந்தார்கள். ஈ.ஐ.டி. பாரி, வி.எஸ்.டி. திருச்சி டிஸ்டில்லரீஸ் என்ற இரண்டு நிறுவனங்களே தமிழகம் பூராவிற்கும் மொத்த விற்பனையாளர்களாக இருந்தார்கள். ஆனால், அதே நேரத்திலே அவர்கள் சாராயத்தை உற்பத்தி செய்கிற தொழிற்சாலைகளை நடத்துபவர்களாக இருந்தார்கள். அதே நேரத்தில், மொத்த விற்பனைகளையும் அவர்களே செய்து வந்தார்கள். ஆனால், இப்பொழுது தமிழ்நாட்டில் சாராயம் உற்பத்தி செய்கிற எட்டு தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவர்கள் யாருக்கும் மொத்த விற்பனை உரிமை வழங்காமல், 16 மாவட்டங்களுக்கு ஒரு மாவட்டத்திற்கு ஒரு மொத்த விற்பனையாளர் என்று—அவர்கள் தவறு செய்வதைத் தடுத்து நிறுத்துவதற்கு இன்று அரசு முடிவெடுத்ததை அதைச் செயல்படுத்துகிறது. அதனாலே, தவறுகள் இல்லையென்று நான் கூறவில்லை. ஆனால், தவறுகளைக் குறைப்பதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக்கொள்கிறது ; புரட்சித் தலைவர் அரசு தவறுகளைக் குறைத்து, தவறுகள் இருந்தால் அதைத் திருத்திக்கொள்ள நடவடிக்கைகள் எடுத்து வருகிறது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதே போன்று வெளிநாட்டு மதுபானங்கள் மொத்த விற்பனையாளர்கள் பொறுத்தவரை, தனிப்பட்ட விற்பனையாளர்களாக இருப்பவர்களுக்கு ரீடெய்லராக இருப்பதற்கு அனு

மதி மறுக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக வரி ஏய்ப்பைத் தடுப்பதற்கும் அரசுக்கு வருவாய் இழப்பைத் தடுப்பதற்கும், இந்தத் துறை சிறப்பான முறையிலே செயலாற்றி வருகிறது.

இன்னும் ஒன்றைச் சொல்லப்போனால், இங்கே சாராய உற்பத்தியிலே ஊழல்கள் நடந்திருப்பதாக, விற்பனையிலே ஊழல்கள் நடந்திருப்பதாக திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நான் ஒன்றை மட்டும் குறிப்பிட்டுக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். 1972 ஆம் ஆண்டிற்கும் 1974-ஆம் ஆண்டிற்கும் இடையில் 35 இலட்சம் லிட்டர் சாராயம் ஆவியாகப் போய்விட்டது. அதுவும் திருச்சி டிஸ்டிலரீஸில் ஆவியாகப் போய்விட்டது என்று அவர்கள் கணக்கிட்டார்கள். அந்தச் சாராயம் எங்கே போனது? 10,000 லிட்டர் சாராயம் வெளி மாநிலத்திற்குச் சென்று விட்டதாகக் குற்றம் சாட்டுகிறவர்கள், அப்பொழுது 35 இலட்சம் லிட்டர் சாராயம் ஆவியாகப் போயிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதுவும், திருச்சி டிஸ்டிலரீசிலே, வடபாதி மங்கலம் வி.எஸ். தியாகராய முதலியாருக்குச் சொந்தமான அந்த டிஸ்டிலரீசிலே ஆவியாகப் போயிருக்கிறது என்று சொன்னார்கள். அதன் காரணமாக, தமிழக அரசுக்குரூ. 2 கோடியே 77 இலட்சம் வருவாய் இழப்பு ஏற்பட்டது. அதை எந்த வகையிலே ஈடு செய்வது? அந்தப் பணம் யாருக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறது?

அது எந்த வகையில் இருக்கிறது என்பதைப்புரட்சித் தலைவர் அவர்கள் விசாரித்து அந்தப் பணம் யாரிடத்தில் போய்ச் சேர்ந்திருக்கிறது என்பதைக் கண்டு பிடித்து தக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கோர விரும்புகிறேன். அந்த வகையிலே தமிழ்நாட்டினுடைய அரசு புரட்சித் தலைவர் அரசு இந்தத் துறையிலே சீர்திருத்தங்களைச் செய்தது. அதன் மூலமாக விதிகளை உருவாக்கி குறைகளைப் போக்கி குறைகள் நடப்பதைக் கண்டு பிடிக்கிற துறையாக இது செயலாற்றி வருகிறது. அந்த வகையில் புரட்சித் தலைவர் அவர்களுக்குபபாராட்டு தெரிவித்து பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

**திரு. மு. அம்பிகாபதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில முக்கியமான கருத்துக்களை இதன் மீது தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன். குறிப்பாக, வரிவிதிப்பு சம்பந்தமாக அனைத்துப் பொருள்களுக்கும் ஒரு முனை வரி, வரிஅமைப்பு முறையைக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் முயற்சி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உதாரணமாக, கும்பகோணம் பகுதியிலே தயாரிக்கப்படுகிற எவர்சில்வர் பாத்திரங்களுக்குப் பலமுனை வரி இருக்கின்ற காரணத்தால், அந்தத் தொழிலைப் புரிகிற சிறு



உற்பத்தியாளர்கள், பெரும் முதலாளிகள் அல்ல, வரி கட்ட முடியாமல் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுடைய வீடுகள் ஜப்திக்கு உள்ளாகும் நிலை இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த நிலையைப் பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாவதாக, சேலம் பகுதியிலே வெள்ளியிலே கொலுசு போன்ற பொருள்களைத் தயாரிக்கும் சிறு சிறு தொழிற்சாலைகள் இருக்கின்றன. இவர்கள் வெள்ளி வாங்கும்போது பர்ச்சேஸ் டாக்ஸ் கட்டுகிறார்கள். விற்பனை செய்யும்போது சேல்ஸ் டாக்ஸ் கட்ட வேண்டி இருக்கின்றது. அவர்களுக்கும் ஒரு முனை வரியாக ஆக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வெள்ளியை வாங்கி பட்டறைக்குக் கொண்டுபோகும் நேரத்தில் வழியிலே சில அதிகாரிகள் மறித்து ரசீதுகள் இல்லாமல் அவர்களிடத்திலே பணத்தைப் பெறுவதாகச் சொல்லப்படுகிறது. அரசாங்கம் அதைக் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த வெள்ளி வேலை செய்யும் தொழிலை சேலம் பகுதியிலே காப்பாற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக அரசாங்கத்தினுடைய அறிக்கையில் மிகுந்த லாபகரமாக இருப்பதாக இதிலே போடப்பட்டிருக்கிறது. மதுவிலக்குக் கொள்கையில் இந்த அரசாங்கம் மிகவும் கண்டிப்புடன் அமல் நடத்துகிறது. இந்த அரசு மதுவிலக்கில் அழுத்தமான நம்பிக்கைக் கொண்டிருக்கிறது என்பதை வலியுறுத்தி மதுவிலக்கை ரத்து செய்வதாக இல்லை என்பதையும் தெரிவிக்கிறது. இது மிகவும் பிரதானமாக உள்ளது. இது மாதிரி வாசகங்கள் போடவே முடியாது. ஏனென்றால் தமிழ்நாட்டில் லைசன்சு பெற்றிருக்கின்ற கள் குடிப்பவர்கள் 4,31,047 பேர்கள். சாராயம் சாப்பிட லைசன்சு பெற்றிருப்பவர்கள் 2,76,320 பேர்கள். அதேபோல இந்தியாவிலே தயார் செய்கின்ற அயல் நாட்டு மது குடிக்க லைசன்சு பெற்றவர்கள் 88,812 பேர்கள். இதற்கான கடைகளுக்கு, கள்ளுக் கடைகள் 9541-ம் சாராயக் கடைகள் 5067-ம் ஒயின்ஷாப் 1208-ம் ஆக மொத்தம் 15,816 கடைகளைத் தமிழகம் முழுவதும் திறந்துவிட்டு, நாங்கள் மதுவிலக்கை வலுவாக அமல்படுத்துகிறோம் என்றால்—மாயாவாதம் நடத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். நீங்கள் மாயாவாதம் நடத்திக் கொண்டு இருக்கிறீர்கள். யதார்த்தத்திலே கடைகள் இருக்கின்றன. இதிலே நாங்கள் கறாராக அமல் நடத்துகிறோம் என்று சொல்லுகிறீர்கள். மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் நான் ஆட்சியைவிட்டுப் போகும் முன்பாகக் கடைகளைச் சாத்திவிட்டுத்தான் போவேன் என்று கூறி இருக்கிறார்கள். இதிலே தெளிவாக நாங்கள் சொல்ல விரும்புகிறோம். மதுவிலக்கை ரத்து செய்வோம் என்று அறிவியுங்கள். தமிழகத்திலே 10

லட்சம் பேர்கள் இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த தொழில் இந்தியா முழுவதும் இருக்கின்றது. இங்கே மட்டும் காந்தி கண்ணீர் வடிப்பார் என்று சொன்னார்கள். காந்தி இருந்தால் கண்ணீர் வடிப்பார் நீங்கள் இந்தக் கடைகளைத் திறந்திருப்பதைப் பார்த்து. டெல்லியிலே வடிக்க மாட்டார். சென்னையில் மட்டும்தான் கண்ணீர் வடிப்பார். எனவே மதுமரத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு—கேரளாவில் இருப்பது போன்று ஒரு சட்டத்தைக் கொண்டு வர இந்த அரசு முயற்சிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இது நிரந்தரமான தொழில்.

(பிற்பகல் 12–30)

திருவள்ளுவர் காலத்தில் இருந்து, சிலப்பதிகார காலத்தில் இருந்து கள் இறக்குவது அனுமதிக்கப்பட்டது என்பதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. எனவே அதைச் சட்டம் போட்டு திருத்திவிடமுடியாது. சோசலிச நாடுகளில் சாப்பிடுவது தீமை என்று விளம்பரப்படுத்தி கட்டுப்படுத்தியிருக்கிறார்கள். சோவியத் யூனியன் போன்ற நாடுகளில் அதிலே இருக்கின்ற லிக்கர் கன்டென்ட் குறைத்து விற்கிறார்கள். விழாக்காலங்களில் கடைகள் மூடிவைக்கப்படுகின்றன. அங்கே தயாரிக்கப்படுகின்ற மது பானங்கள் உடல் நலத்தைப் பேணிப் பாதுகாக்கும் நிலையில் இருக்கின்றன. இங்கே அப்படியா இருக்கின்றன? அருமைத் தோழர் கிருஷ்ணன் சொன்னதைப்போல கடையிலே விற்கின்ற சாராயத்தை விட வடிசாராயம் விலை குறைவு. 100 மில்லி 75 பைசா அல்லது 1 ரூபாய் என்றுதான் சொல்கிறார்கள். எனவே கடையில் 2 ரூபாய் 2·50 என்று இருக்கிற காரணத்தால் ஓரமாகப் போய் குடித்து விட்டுப் போய்விடுகிறார்கள். இதற்குச் சட்டம் போட்டு இருக்கிறீர்கள். ஒரு காரணமும் இல்லாமல் அடைப்போம் என்று சொல்லியிருக்கிறீர்கள். இதிலே பலபேர் என்ன நினைப்பில் இருக்கிறார்கள் என்றால் வெளியிலே காய்ச்சினால் தானே அடைப்பார்கள், சிறையில் காய்ச்சினால் என்ன செய்வார்கள்? இந்த நாட்டிலே சிறையிலே நோட்டு அடித்து இருக்கிறார்கள். கோயம்புத்தூர் சிறைக்குள்ளேயே நோட்டு அடித்த அனுபவம் நமக்கு உண்டு. (குறுக்கீடு) நமக்கு உண்டு என்று சொன்னால், நம்நாட்டில் நடந்து இருக்கிறது. கோயம்புத்தூரில் நடந்து இருக்கிறது. அதுகுறித்து முழு விவரங்கள் தெரியும். அது ஒன்றும் தெரியாத ரகசியம் அல்ல. அதைப போலவே சிறையிலேயே காய்ச்சி விற்கப்படும் நிலை உண்டு. ஆகவே, இப்படிப்பட்ட சட்டங்கள் சாதாரண மக்களைப் பாதிப்பதாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

15,000 கடைகளைத் திறந்து விட்டு, நாங்கள் வலுவாக இந்தச் சட்டத்தை அமல் நடத்தப்போகிறோம் என்று சொல்கிறீர்கள். இது நியாயம்தானா? இது, உங்களால் முடியுமா





என்று நான் கேட்டுக் கொள்ளவிரும்புகிறேன். முழுமையாக மதுவிலக்கை ரத்து செய்யவேண்டும் என்கிற முறையில் நீங்கள் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

ஒயின் ஷாப் திறப்பதற்கான அனுமதி விடப்பட்டு இப்போது ஆறு மாதங்கள்தான் ஆகின்றன. அவர்களிடமிருந்து 10,000 ரூபாய் வசூலிக்கப்பட்டு இருக்கிறது. ஒரு ஆண்டுக்கு உரிமம் என்று சொல்லுகிறபோது இன்னும் 6 மாதத்திற்கு கடைகள் நடத்த அவர்கள் அனுமதிக்கவேண்டும். இல்லையென்றால் 10,000 ரூபாயிலிருந்து அவர்களுக்கு 5,000 திருப்பிக்கொடுக்க வேண்டும். பல பேர் 10,000 ரூபாய் கட்டியிருக்கிறார்கள். இன்னும் 6 மாதம் கடையை நடத்தவில்லை என்றால் அவர்கள் பாதிக்கப்படுவார்கள். இந்த சாராயக்கடை எடுத்தவர்களே ரொம்ப பேர் க்ளோஸ் ஆகும் நிலையில் இருக்கிறார்கள்.

* எரிசாராயக் கடைகள் காரணமாக நல்ல சாராயக் கடைகளை ஏலம் எடுத்தவர்கள் பாதிக்கப்படும் நிலை இருக்கிறது.

சாராயக் கடைகள், கள்ளுக்கடைகள் பகுதிக்குப் பக்கத்திலும், என்னுடைய சகோதரர் நெடுமாறன் அவர்கள் சொன்னதைப்போல பள்ளிக்கூடங்களுக்குப் பக்கத்திலும் கோவிலுக்குப் பக்கத்திலும் ராஜாஜி சிலைக்குப் பக்கத்திலும் இருக்கின்றன அந்தக் கடைகளுக்குக் கொடுக்கப்பட்ட அனுமதியை ரத்து செய்தால் அவர்கள் கோர்ட்டுக்குப் போவார்கள் என்ற பயம் உங்களுக்கு இருக்கிறது. அதன் மூலமாக வரும் வருமானம் பாதிக்கப்பட்டால், ஆடிட் ரிப்போர்ட்டில் அக்கௌன்ட்டென்ட் ஜெனரல் அப்ஜெக்ஷன் எழுதுவாரோ என்ற எண்ணம் இருக்கிறது. இவைகளையெல்லாம் போக்க நீங்கள் சட்டத்தை மாற்றிக்கொண்டு, ஒரு கடை பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் இடத்தில் இருந்தால் அனுமதியை ரத்து செய்வதற்கான உரிமையை அரசாங்கம் பெற்றுக் கொள்ளவேண்டும். கோர்ட்டிற்கு அதிலே தலையிட உரிமை கிடையாது என்று சட்டத்திற்கு மாற்றம் கொண்டு வாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட பகுதிகளிலே உதாரணமாக கீழக்கரை என்ற இடத்தில் பெண்கள் பள்ளிக்கூடத்திற்குப் பக்கத்தில் ஒரு கள்ளுக் கடை இருக்கிறது. ஆர்.டி.ஓ. நேரடியாக வந்து இடத்தைப் பார்வையிட்டு சிபார்சு செய்து இருந்தும் இன்று வரையில் அது மாற்றப்படவில்லை. இப்படி இருக்கின்றன என்று பல்வேறு இடங்களில் இருந்து எனக்குப் புகார் வந்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு விற்பனை வரித்துறையைப் பொறுத்தவரையில் என்ன நிலைமைகளில் அதிகாரிகள் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஒரு உதாரணத்திற்குச் சொல்கிறேன்.

டி.சி.டி.ஓ. பழனிமுத்து என்பவர் 2½ ஆண்டுகளுக்கு முன்பு சஸ்பென்ட் செய்யப்பட்டார், ரிப்போர்ட் வந்த 4 மாதங்களுக்குள் அதற்கான தீர்வு காணப்பட வேண்டும் என்று விதிமுறைகள் இருந்தாலும் 2½ ஆண்டுகள் ஆகியும் அந்தப் பிரச்சினை தீரவில்லை. அவர் இன்றைக்கு மிகவும் சிரமத்தில் இருக்கிறார். ரிடையர்டு ஆகும் நிலையில் இருக்கிறார். அந்த கேஸ் உள்ளே நான் செல்ல விரும்பவில்லை. இன்றைக்கு பழனிமுத்துவின் குடும்பம் மிகவும் கஷ்டத்தில் இருக்கிறது. ஆகவே, அந்தப் பிரச்னையில் தீர்வு உண்டா இல்லையா என்ற ஒரு நிலைக்கு 2½ ஆண்டு காலம் ஆகியும் முடிவு எடுக்கவில்லை. ஆகவே, இது குறித்து விரைவான ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்தில் இன்றைக்கு வடிசாராயம் சாப்பிட்டு பலர் குடல் அழற்சி நோய் அடைந்துள்ளனர். அதற்கு மாவட்டத் தலைநகரங்களில் இருக்கும் மருத்துவ மனைகளில் இந்த நோயைப் போக்குவதற்கு இத்தகைய பிரிவுகளை விசேஷமாக ஏற்படுத்தி அதற்காக டாக்டர்களை நியமித்து, அந்த நோயைப் போக்குவதற்கான முறையில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வடிசாராயத்தை ஒழிக்க நீங்கள் நல்ல சாராயக் கடைகள் திறந்த பின்பும் இத்தகைய நிலைமைகள் ஏற்பட்டு இருக்கின்றன.

மதுவிலக்கு ரத்து என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்களே இங்கே அறிவித்து விடுங்கள். அதற்கு நீங்கள் வெட்கப்பட வேண்டாம். தி.மு.க.வினர் ஒத்தி வைக்கிறோம் என்று கொஞ்சம் வெட்கப்பட்டார்கள். அண்ணா தி.மு.க.வினர் தளர்த்துகிறோம் என்று சொல்லி வெட்கப்படுகிறார்கள். அவர்கள் ஒத்தி வைத்தார்கள், நீங்கள் தளர்த்துகிறீர்கள். இந்த ஒத்தி வைத்தலும் வேண்டாம்; தளர்த்தலும் வேண்டாம்.

''குடி குடியைக் கெடுக்கும்''

''இங்கே நல்ல சாராயம் கிடைக்கும்''

என்று போர்டு இருக்கிறது. அப்படியானால் இது எதற்காக? எதற்காக இவ்வளவு முரணான உங்கள் வாதம்? மதுவிலக்கை அமுல்படுத்துவது எங்கள் தலையாய கொள்கை என்று சொல்லி விட்டு, மதுவிலக்கைத் தளர்த்தி இருக்கிறீர்கள்.

இன்னொரு வேடிக்கை என்னவென்றால், மது அருந்த பெர்மிட் வழங்குகிறோம் என்று சொல்கிறீர்கள். குடிக்கிறவர்கள் எங்கே பெர்மிட் வாங்குகிறார்கள்? கள் குடிப்பவர்களும், சாராயம் குடிப்பவர்களும் பெர்மிட் வாங்கி வைத்தா குடிக்கிறார்கள்? குடிகாரர்கள் யாரும் பெர்மிட் வாங்கவில்லை. உதாரணத்திற்கு எங்கள் பகுதியில் நடைபெறுகின்ற முறையைச்



சொல்கிறேன். சித்தமல்லியில் நண்பர் ஒருவர் வீட்டிற்குச் சென்றிருந்தேன். அவர் ஓட்டர் லிஸ்டை வைத்துக் கொண்டு 25 வயதுக்கு மேற்பட்டவர்கள் பெயரை எல்லாம் வரிசையாக எழுதிக் கொண்டிருந்தார். இது எதற்காக என்று கேட்டேன். பெர்மிட் வாங்குவதற்கு என்று சொன்னார். அதாவது வாக்காளர் பட்டியலை வைத்து பெர்மிட் வாங்குவதற்காகப்பெயர்களைக் குறித்துக்கொண்டிருந்தார். கடை நடத்துகின்ற நாங்களே குடிக்கிறவர்கள் வாங்க வேண்டிய பெர்மிட்டுகளை வாங்குகிறோம்; அதற்காகப் பெயர்களைக் குறித்துக் கொள்கிறேன் என்று சொன்னார். அவருடைய பெயரைச் சொன்னால் அமைச்சருக்கு நன்றாகத் தெரியும். அதனால் பெயரை நான் தனியாகத் தருகிறேன். மதுவிலக்கை முழுமையாக ரத்து செய்யுங்கள்; மது மரத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வாருங்கள்; கேரளாவைப் போல சட்டம் கொண்டு வாருங்கள் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டு, அமர்கிறேன். வணக்கம்.

* டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மதுவிலக்கு, விற்பனை வரி ஆகிய தலைப்புகளில் இந்த மன்றத்தில் வைக்கப்பட்டுள்ள கொள்கைக் குறிப்புகள் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விற்பனை வரியைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டு 620 கோடி ரூபாய் கிடைக்கும் என்று வரவு-செலவுத் திட்டத்திலே நிதி அமைச்சர் அவர்கள் கோடிட்டுக் காட்டி இருக்கிறார்கள். விற்பனை வரி என்ற ஒன்றை மூதறிஞர் இராஜாஜி அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது கொண்டுவந்ததற்குக் காரணமே மதுவிலக்கினால் ஏற்படுகின்ற கலால் வருமான இழப்பை ஈடுகட்ட வேண்டுமென்ற நோக்கம்தான். ஆனால் இப்போது மதுவிலக்கையும் ஏறத்தாழ, ஏன், முழுமையாகவே ரத்து செய்துவிட்டு, அதன் மூலமாக 100 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கிறது என்றும் அறிவித்து விட்டு, சுமார் 38 கோடி ரூபாய்க்கு, நேற்றைய தினம் விலக்களிக்கப்பட்ட பட்டு நூல் வரியைத் தவிர, மற்ற வரிகள் அனைத்தையும் உயர்த்தி, நிதி நிலை அறிக்கையிலே இந்த அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

இதிலே பலமுனை வரி 4 சதவீதம் என்பதை 5 சதவீதம் என்று உயர்த்தி இருப்பதால் ஏறத்தாழ 60 கோடி ரூபாய் கிடைக்கும் என்று நான் கூறியதை நிதி அமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் மறுத்து, 12 கோடி ரூபாய் அளவுக்குத்தான் இந்தப் பலமுனை வரி 4 சதவீதம் 5 சதவீதமாக உயர்ந்து இருப்பதன் மூலம் கிடைக்கும் என்ற அறிவிப்பைக் கூறியிருக்கிறார்கள். எப்படியும் திருத்த மதிப்பீடு அடுத்த நிதிநிலை அறிக்கையில்

வெளியிடப்படும்போது வியாபாரிகள் மூலமாக நான் அறிந்த இந்த 60 கோடி ரூபாய் சரியானதா அல்லது அதிகாரிகள் மூலமாக நிதி அமைச்சர் அவர்கள் அறிந்து கொண்டிருக்கிற 12 கோடி ரூபாய்தான் சரியானதா என்பது விளங்கிடும்.

**அவர்களுடைய** கூற்றுப்படியே பார்த்தாலும் 620 **கோடி** ரூபாய் விற்பனை வரி மூலமாக கிடைக்கின்ற இந்த பட்ஜெட்டில் ஒரு 12 கோடி ரூபாய், அவர்களுடைய கணக்குப்படி, இந்தப் பலமுனை விற்பனை வரியை உயர்த்துவதன் மூலம் பெறுகின்ற முயற்சியிலே அரசு ஈடுபட வேண்டுமா என்ற கேள்வியை நான் எழுப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-40.)

இந்த ஒரு சதவீத வரியின் மூலம் எந்தெந்தப் பொருட்களினுடைய விலை உயரும், எந்தெந்தப் பொருட்களுக்கு வரி உயரும் என்றால் புளி, மஞ்சள், மிளகாய், தனியா என்று சொல்லப்படுகிற மல்லி, வெல்லம், சீரகம், பூண்டு, கடுகு, சீயக்காய், குங்குமம், கற்பூரம், குண்டூசி, பொம்மை இது போன்ற பொருட்களுடைய விலைகளை உயர்த்துவதற்கும், அவைகளுக்கான வரிகளை உயர்த்துவதற்கும் வழி ஏற்பட்டிருக்கின்றது. எனவே இந்த 12 கோடி ரூபாயை 620 கோடி ரூபாய் விற்பனை வரியாகக் கிடைக்கும் என்பதோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்தில் இந்தக் குறைந்த அளவு வருகின்ற இந்தத் தொகையைக் கூட விட்டுக்கொடுக்க அரசு முன்வராதது வருந்தத்தக்கது என்பதை நான் இங்கே கோடிட்டுக் காட்டுகிறேன்.

நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே வைத்து இருக்கக்கூடிய அறிக்கையில் மதுவிலக்கைப் பற்றி திட்டவட்டமாக குறிப்பிட்டிருக்கின்ற வாசகம் குறித்து அனேகமாக எல்லாக் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களும் இங்கே எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இந்த அரசு மதுவிலக்கு கொள்கையிலே அழுத்தமான நம்பிக்கை கொண்டு இருக்கிறது என்பதை வலியுறுத்துவதோடு மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்வதாக இல்லை என்பதையும் தெரிவிக்கிறது என்று அமைச்சரவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இது இந்த ஆண்டின் தலைசிறந்த நகைச்சுவை என்று நம்முடைய நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். எனக்கு முன்னால் பேசிய அம்பிகாபதி அவர்களும் இதைப் போன்றே வேடிக்கையான ஒரு விளக்கம் இருக்கவே முடியாது என்று குறிப்பிட்டார்கள். மற்றும் பல கட்சியினுடைய தலைவர்களும் இது ஒரு முரண்பாடான வாசகம் என்றும் செயலுக்கும் இந்த வாசகத்துக்கும் எள்ளளவு பொருத்தமும் கிடையாது என்பதை இங்கே எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் சுட்டிக் காட்டியதைப்போல 9,541 கள் கடைகள் திறக்கப்பட்டு 5,067 சாராயக் கடைகள் திறக்கப்பட்டு



1,208 பிராந்தி, ஒயின் ஷாப்கள் திறக்கப்பட்டு ஒவ்வொரு சாராயக் கடைக்காரரும் 4 கிளைக் கடைகளைத் திறந்து கொள்ளலாம் என்ற அனுமதியையும் அளித்துவிட்டு இவைகள் அனைத்திற்கும் பிறகு நாங்கள் மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்வதாக இல்லை என்று சொல்வது ஒருவனுடைய இரண்டு கால்களையும் வெட்டிவிட்டு ''ஆஹா'' எவ்வளவு அருமையாக நடக்கிறான் பார்'' என்று சொல்வதைப் போலவும், ஒரு பெண்ணுடைய அருமையான கணவனைக் கொலை செய்துவிட்டு அவளைப் பார்த்து ''இவளைப் போல் சுமங்கிலி கிடையாது'' என்று கூறுவதைப் போலவும் நம்முடைய வருவாய்த்துறை அமைச்சரவர்கள் கிட்டத்தட்ட 15, 16 ஆயிரம் **கடைகள்—மதுக்** கடைகள், சாராய, கள் கடைகள், அன்னிய மது வகையறா கடைகள் அத்தனையையும் திறந்துவிட்டு அதற்குப் பிறகு கிளைக் கடைகளையும் திறக்கலாம் என்று அனுமதித்துவிட்டு நாங்கள் மதுவிலக்குக் கொள்கையில் தீவிரமாக இருக்கிறோம், திட்டவட்டமாக இருக்கிறோம், அதிலே எந்தத் தயக்கமும் கிடையாது, அந்தச் சட்டத்தை ரத்து செய்வதே இல்லை என்று கூறுவது மிகுந்த வேடிக்கையான, வேதனையான, விசித்திரமான வாதமாக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்கிடையிலே மற்றொரு விசித்திரம். கடந்த சில வாரங்களுக்கு முன்பு மூதறிஞர் ராஜாஜி அவர்களுடைய 104-வது பிறந்த நாள் விழா சென்னை மாநகரத்திலே நடைபெற்றபோது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அதிலே கலந்து கொண்டு ஒரு அறிவிப்பு செய்தார்கள். அவர்களுடைய கட்சி ஏட்டிலேயே அந்த அறிவிப்பு பெருந் தலைப்போடு வெளியாகி இருக்கின்றது. ''இந்த ஆண்டு பட்ஜெட்டின்போது மதுவை அருந்தக் கூடாது என்பதைச் செயல்படுத்த திட்டம் கொண்டுவர இருக்கிறோம்'' என்று அவர் குறிப்பிட்டார். 100 கோடி ரூபாய் வருமானம் வருகின்றது என்ற புள்ளி விவரத்தையும் தந்துவிட்டு, 15,000-க்கு மேற்பட்ட கடைகளையும் திறந்துவிட்டு மூன்று, நான்கு கட்டங்களில் இந்த வியாபாரம் எப்படி நடத்தப்படலாம் என்பதற்கான வழி வகைகளையும் செய்துவிட்டு முதலமைச்சர், ராஜாஜி விழாவின் போது—சில வாரங்களுக்கு முன்பு பேசுகிற நேரத்தில் ''இந்த ஆண்டு பட்ஜெட்டிலே மது அருந்தக் கூடாது என்பதை செயல்படுத்த திட்டம் கொண்டுவர இருக்கிறோம்'' என்று அறிவித்தது வேடிக்கையா, வினோதமா என்பது எனக்குப் புரியவில்லை. அவர்களுடைய அறிவிப்பை நடைமுறைப்படுத்துவதற்குச் சாத்தியக் கூறுகள் அல்லது அதற்கான வழி வகைகள் அல்லது அதற்கான திட்டங்கள் ஏதாவது நிதியமைச்சருடைய நிதிநிலை அறிக்கையிலே இடம் பெற்றிருக்கிறதா என்று எல்லாப் பக்கங்களையும் புரட்டிப் பார்த்துவிட்டேன். எங்கும் அந்த அறிவிப்பினுடைய சாயல் கூடத் தென்படவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

25 வயதுக்கு மேற்பட்டவர்கள்தான் மது அருந்தலாம் என்று இந்தச் சர்க்கார் அறிவித்து ஒரு அருமையான ஆணையைப் பிறப்பித்திருக்கிறது என்று ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் எல்லாம் இங்கே எடுத்துக்காட்டினார்கள். ஆனால், 25 வயதுக்குக் குறைந்தவர்கள், ஏன் 14 வயது, 16 வயது நிறைந்த சிறார்கள் கூட மதுக்கடைகளிலே மது அருந்துகிற காட்சியை, புகைப்படங்களாக ஆக்கி தமிழ்நாட்டிலே உள்ள சில கட்சி சார்பற்ற ஏடுகள் வெளியிட்ட செய்தியை யாவரும் அறிந்திருக்கிறோம்.

மற்றொன்று அமைச்சருடைய குறிப்பிலே காணப்படுகிறது. பொது இடங்களிலே குடிப்பதற்கு அனுமதியில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், சென்னையிலும் சரி, மற்ற நகரங்களிலேயும் சரி எல்லா உணவு விடுதிகளிலேயும், ஓட்டல்களிலேயும், பொதுவாக அமர்ந்து சாப்பிடுகின்ற இடங்களிலேயெல்லாம் மது வகையறாக்கள் பறிமாறப்படுகிறது. அல்லது மதுப்புட்டிகளை வைத்துக் கொண்டே பலரும் உணவு அருந்துகிற காட்சியை நேரிடையாக பார்க்க முடிகிறது. ஆனால், ஏட்டளவில் எழுத்தளவில் பொது இடங்களில் குடிப்பதற்கு அனுமதியில்லை என்ற வாசகங்கள் ஒளிவிட்டுக்கொண்டிருக்கிறது.

பெர்மிட் பெற்றவர்கள் மட்டும் தான் மது அருந்தலாம். அவர்களுக்கு மட்டும்தான் மது அருந்த அனுமதி கொடுக்கிறோம். அதுதான் நாங்கள் மதுவிலக்கை, மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்யவில்லை என்பதற்கு அடையாளம் என்ற வாதத்தை நம்முடைய அமைச்சர் அவர்கள் பல இடங்களிலே எடுத்து பேசி வருகிறார்கள். ஆனால், அவருடைய கணக்குப்படியே சாராயம் குடிப்பதற்கு வழங்கப்பட்டுள்ள பெர்மிட்டுகளின் எண்ணிக்கை இரண்டு இலட்சத்து எழுபத்தாறாயிரத்து முன்னூற்று இருபது. அவர் தந்துள்ள கணக்குப்படி சாராயக் கடைகளுடைய எண்ணிக்கை ஐயாயிரத்து அறுபத்தி ஏழு. (5,067). இங்கேதான் நாம் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். ஒரு கடையில் ஒரு நாளைக்கு 200 பேர்கள் அல்லது 500 பேர்கள் குடிக்கிறார்கள். என்றாலும்—இந்த 200, 500 கூட வேண்டாம்—குறைவாகவே மதிப்பிட்டுச்சொல்கிறேன், ஒரு சாராயக் கடையில் 300 பேர்கள் வந்து குடிக்கிறார்கள் என்று வைத்துக் கொண்டாலும், ஏறத்தாழ 15 இலட்சம் பேர்கள் குடிக்கிறார்கள். 15 இலட்சம் பேர்கள் குடிக்கிறார்கள், ஆனால், அமைச்சருடைய புள்ளி விவரப்படி, தரப்பட்டிருக்கிற மொத்த பெர்மிட்டுகள் 2,76,320 தான். மீதம் உள்ள 13 இலட்சம் பேர்கள், பெர்மிட் வாங்காமலேயே குடிக்கிறார்கள் என்பதை நான் முழு கணக்கையும் பார்த்து அல்ல, தோராயமாகக் கணக்கு வைத்தே என்னால் எடுத்துக் காட்ட முடிகிறது.





எனவே, இந்த நேரத்திலே நாங்கள் 2 இலட்சம் பேர்களுக்கு பெர்மிட் வழங்கியிருக்கிறோம். ஆனால், பல இலட்சம் பேர்கள் பெர்மிட் இல்லாமல் குடித்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற நிலை நாட்டிலே உருவாகிக்கொண்டிருக்கும்போது, நாங்கள் மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்யவில்லை, மதுவிலக்குக் கொள்கையிலிருந்து இந்த அரசு மாறவில்லை என்று கூறுவது முன்னுக்குப் பின் முரணான செய்தி என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக, மது சாராயக் கடைகளுக்கு விற்பனைக்கு உரிமங்கள் வழங்குவதற்கு இந்த அரசு முடிவு எடுத்தது. அமைச்சர் குறிப்பிடுகிறார். மொத்தம் உள்ள 16 மாவட்டங்களில் 13 மாவட்டங்களுக்கு வியாபாரிகள் நியமிக்கப்பட்டிருப்பதாகவும், எஞ்சிய 3 மாவட்டங்களில், 2 மாவட்டங்களில் உயர்நீதி மன்ற தடை ஆணையின் காரணமாகவும் (ஸ்டேயின் காரணமாகவும்); ஒரு மாவட்டத்திலே தகுந்த நபர் கிடைக்காததாலும், விற்பனையாளர்கள் இன்னும் நியமிக்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் இங்கே அச்சிட்டுத் தந்துள்ள கொள்கை விளக்கக்குறிப்பு அறிக்கையிலே 4 ஆவது பக்கத்திலே, 12 ஆவது பாராவிலே குறிப்பிட்டிருக்கிறார், ஆனால் அப்படிப்பட்ட ஸ்டே எதுவும் உயர்நீதி மன்றத்திலே, இந்த அவையிலே விவாதிக்கப்படுகிற நேரத்திலே இருக்கிறதா என்றால், இல்லை. எனவே, ஒரு தவறான திசைக்கு இந்த மன்றத்தில் உள்ளவர்களை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருப்புகிறாரோ என்ற ஐயப்பாடு எனக்கு எழுவதற்கு நியாயம் இருக்கிறது என்பதை இந்த மன்றத்திலே இருக்கிற உறுப்பினர்கள் அறிவார்கள்.

தடை காரணமாக நிறுத்தப்பட்டதாகச் சொன்ன இரண்டு மாவட்டங்களில் ஒன்று நெல்லை மாவட்டம், மற்றொன்று பெரியார் மாவட்டம். பெரியார் மாவட்டத்தைப் பற்றித்தான் நண்பர் கிருஷ்ணமூர்த்திஅவர்கள் பேசும்போது சொன்னார்கள். வேடியப்பனோ அல்லது வாடியப்பனோ பெயர் சரியாகத் தெரியவில்லை . உரிமம் கிடைக்காத காரணத்தால், வாடியிருந்ததின் காரணமாக,வாடியப்பன் என்று பெயர் பெற்றாரோ என்னவோ தெரியாது. அவர் வேடியப்பனாக இருந்தாலும் சரி, வாடியப்பனாக இருந்தாலும் சரி, அவர் உரிமம் பெறுவதற்கு தகுதியானவர் என்கிற சான்றை 14-7-1981 ஆம் தேதி மதுவிலக்குக் கமிஷனர், அவருக்கு அந்த உரிமத்தை வழங்கலாம் என்று முடிவு செய்த கருத்தை அறிவித்திருக்கிறார்கள்.

[பிற்பகல் 12—50]

ஆனால், அரசாங்கம் அந்த மனுவை நிராகரித்து விடுகிறது. காரணம்; அந்த வேடியப்பன் அல்லது வாடியப்பன் ஒரு லேவா தேவிக்காரர் என்ற காரணம் காட்டி, உடனடியாக அவர்கள் உயர்நீதிமன்றத்திற்குச் செல்கிறார். உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு சத்தியதேவ் அவர்கள் 1982 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 19 ஆம் நாள் அளித்த தீர்ப்பில் அரசு ஆணையை தள்ளுபடி செய்து சனவரி 30 ஆம் தேதிக்குள் அவருக்கு மது விற்பனை உரிமத்தை வழங்கிவிட்டு உடனடியாக உயர்நீதிமன்றத்திற்கு தகவல் கொடுக்க வேண்டும் என்று அரசுக்கு ஆணை பிறப்பிப்பதைப் போல் ஒரு தீர்ப்பை வழங்குகிறார். இதில் உயர்நீதிமன்றத் தடை எங்கே இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. அதற்குப் பிறகு புள் பெஞ்சுக்கு அரசாங்கச் சார்பில் இந்த வழக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. புள் பெஞ்ச் இடைக்கால தடையைக் கொடுத்து விட்டு மறுபடியும் புள் பெஞ்ச் விசாரணையில் நீதிபதி திரு. கோகுல கிருஷ்ணன் அவர்களும் மற்றவர்களும் விசாரித்து அவர்களுக்கு உரிமம் கொடுக்காமல் இருப்பது தவறு. அவருக்கு அந்த உரிமத்தைத் தர வேண்டும் என்று உயர்நீதிமன்றத்தில் புள் பெஞ்ச் அப்படிப்பட்டதொரு தீர்ப்பை வழங்குகிறார்கள். அதற்குப் பிறகு இந்த அரசு இதை எடுத்துக் கொண்டு உச்சநீதிமன்றத்திற்குச் செல்கிறது. சத்தியதேவ் அவர்களிடத்தில் இந்த வழக்கு வந்த நேரத்தில் ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு ஆணையைக் காட்டி, அரசாங்க ஆணையை வெவ்வேறு ஆணையைக் காட்டியதற்கு திரு. சத்தியதேவ் அவர்கள் கண்டனம் தெரிவிக்கிற அளவிற்கு நீங்கள் நீதிமன்றத்தினுடைய நேரத்தை வீணாக்குகிறீர்கள் என்று அரசாங்கத்தை கண்டிக்கிற அளவிற்கு சத்தியதேவ் அவர்கள் ஒரு கருத்துரை வழங்குகிற நிலை ஏற்பட்டு பிறகு புள் பெஞ்ச்சிலும் இந்த வாடியப்பன் அவர்களுக்குத் தான் வழங்கப்பட வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டு சுப்ரீம் கோர்ட்டுக்குச் செல்கிற நேரத்தில், அப்பீலுக்கு இந்த அரசு போன நேரத்தில் அவர்கள் அதை ஏற்க முடியாது என்றும் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பே சரியானது என்றும் கூறிவிட்ட பிறகு இன்று நீங்கள் இந்த மன்றத்தில் வைக்கிற அறிக்கையில் உயர்நீதிமன்றத் தடையாணையின் காரணமாக நாங்கள் இந்த மாவட்டத்திலே ஒருவரை நியமிக்கவில்லை என்று கூறியிருப்பது எப்படி பொருத்தமாகும் என்றுதான் நான் அமைச்சர் அவர்களைக் கேட்கக் கடமைப்பட்டுள்ளேன்.

உச்சநீதிமன்றத்திலே தீர்ப்பு அளிக்கப்படுகிறது வாடியப்பனுக்குக் கொடுங்கள் என்று, உச்சநீதிமன்ற தீர்ப்பை இந்த அரசு எந்தெந்த வகையில் தனக்கு சாதகமாக அல்லது பாதகமாக பயன்படுத்திக் கொள்கிறது என்பதற்கு ஒரு உதாரணம் நான நிதிநிலை அறிக்கையில் பேசுகிற நேரத்தில் குறிப்பிட்டேன்.. ஸ்டீல் ரீரோலிங் மில்ஸ் வரிகளை ரெட்ராஸ்பெக்டீவ் எபெக்ட்



கொடுத்து ஆறாண்டுக் காலம் 1976 முதல் 1982 ஆம் ஆண்டு வரை ரெட்ராஸ்பெக்டீவ் எபெக்ட் கொடுத்து அந்த வரியை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்ட போது வழக்கு நடைபெற்று உயர்நீதிமன்றத்தில் அந்தத் தொழில் அதிபர்களுக்குச் சாதகமாக தீர்ப்பு கிடைத்து அந்தத் தீர்ப்பை எதிர்த்து அரசாங்கம் உச்சநீதிமன்றத்திற்குச் சென்று, உச்சநீதிமன்றம் அரசுக்குச் சாதகமாக தீர்ப்பு அளிக்கிறது. ''அவர்கள் அந்த வரியை செலுத்தித் தான் தீர வேண்டும்'' ''ஸ்டீல்ரீரோலிங் மில்ஸ் அதிபர்கள் வரியை செலுத்தித்தான் தீர வேண்டும்'' என்று அரசாங்கத்திற்குச் சாதகமாக தீர்ப்பு அளிக்கிறது. அந்தத் தீர்ப்பை அரசாங்கம் பயன்படுத்திக்கொள்ளாமல் அந்தத் தீர்ப்பை ஒருபுறம் தள்ளிவிட்டு அதிபர்களுடைய கோரிக்கையை ஏற்று கிட்டத்தட்ட நேற்று நிதி அமைச்சர் அவர்கள் மூன்று அல்லது நான்கு கோடி என்றார்கள், நான் கேள்விப்பட்டவரை ஏழிலிருந்து எட்டு கோடி வரை வரி விலக்கு செய்யப்பட்டிருக்கிறது. ஏன் செய்யப்பட்டது, அதில் மறைந்திருக்கிற மர்மங்கள் என்னென்ன, இவைகளைப் பற்றியெல்லாம் நான் இப்போது கூற விரும்பவில்லை; அதற்குரிய காலம் வருகிற நேரத்தில் அதைப்பற்றியெல்லாம் நிச்சயமாக ஆதாரங்களோடு நான் சொல்ல முடியும். ஏன் இதை நான் இங்கே எடுத்துக் காட்டுகிறேன் என்றால் நீதிமன்றத்தினுடைய நேரங்கள் வீணாக்கப்பட்டன. அதிலும் குறிப்பாக, இந்த மதுவிலக்கைத்தளர்த்திய விவகாரத்தில், பலருக்கு லைசன்ஸ் தரப்பட்ட விவகாரத்தில் நீதிமன்றத்தின் நேரத்தை அரசாங்கச் சார்பில் எந்தளவிற்குபாழடித்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்ப்பதற்காகத்தான் நான் இவைகளை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

ஐ.எம்.எப்.எல். என்று அழைக்கப்பட்ட இந்தியன் மேட் பாரின் லிக்கர் என்று அழைக்கப்பட்டு இப்போது ஐ.எம்.எப்.எஸ். இந்தியன் மேட் பாரின் ஸ்பிரிட் என்று வழங்குகிற ஐ.எம்.எப்.எஸ். என்ற மதுவகைகளுக்கு 14 பேர்களுக்கு உரிமம் கொடுத்துள்ளார்கள். அதில், சென்னைக்கு, சுப்பராம ரெட்டி; மதுரைக்கு கிருஷ்ண மோகன் (அவர் யார் தெரியுமா ? சுப்பராம ரெட்டியின் மைத்துனர்); வட ஆற்காடுக்கு கோபாலகிருஷ்ணய்யா (அவர் யார் தெரியுமா ? சுப்பராம ரெட்டியினுடைய மானேஜர்; தர்மபுரிக்கு பி. ஸ்ரீதர் பிரசாத் ரெட்டி (அவர் யார் தெரியுமா ? சுப்பராம ரெட்டியின் பினாமி). சுப்பராம ரெட்டி க்ரூப்பிலுள்ள இந்த நான்கு பேர்களுக்கு சென்னை, மதுரை, வட ஆற்காடு, தர்மபுரி ஆகிய மாவட்டங்களுக்கு, ஐ.எம்.எப்.எல். உரிமங்கள் அளிக்கப்பட்டன.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை.)

செங்கற்பட்டு எம். விநாயகம் ; கோவை டி. எம். யூசுப் ; திருச்சி சுப்பையா செட்டியார் ; நீலகிரி கிருஷ்ணமூர்த்தி ; தஞ்சை உஸ்மான் அலி ; தென் ஆற்காடு ராமநாத் வேலு; இந்த 6 பேர்களும் கோடேஸ் குரூப்பைச் சேர்ந்தவர்கள் ; இந்த கோடேசின் பினாமி. இந்த 6 பேர்களுக்கும் தரப்படுகிறது. இதிலே வேடிக்கை. தஞ்சையிலே அந்தோணி ராஜ் என்பவரும் உஸ்மான் அலி என்பவரும் மனு செய்திருக்கிறார்கள். இந்த இருவரும் ஐ.எம்.எப்.எல். வேண்டுமென்று மனு செய்து கொள்ளுகிறார்கள். அவர்களைப் பற்றி அதிகாரிகள் என்ன எழுதுகிறார்கள். கமிஷனர், கலெக்டர் எழுதிய கருத்து என்ன ? அந்தோணி ராஜைப் பற்றி எழுதுகிறார்கள்.

" His application is in order. The Collector has reported that the applicant is dealing in Mopeds, Scooters, Matadar, etc., and that he was a licensee for wholesale made foreign Liquor, during 1973–74 and that he is suitable for issue of wholesale licence. " என்று அவரைப் பற்றி எழுதப்படுகிறது.

உஸ்மான் அலியைப் பற்றி என்ன எழுதப்படுகிறது ?

"The application is in order except for the fact that Thiru Gopalakrishna has not signed the application. The Collector has reported that A Usman Ali is the owner of Thanga Vilas Tobacco, which is a reputed firm in Thanjavur district. He proposes to locate the depot at Door No. 54 Bakthakudi Agraharam, Kumbakonam Town. He has categorically stated that he proposes to run wholesale business only in his name and not in partnership with Gopalakrishna who has not signed the application and who has not appeared for my enquiry.

இதிலே யாருக்குத் தரப்படுகிறது ? ஒருவரைப் பற்றி செம்மையாக எழுதப்பட்டிருக்கிறது. அந்தோணி ராஜைப்பற்றி 73 முதல் 74 வரை இப்படிப்பட்ட வியாபாரத்திலே ஈடுபட்டவர் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால், யாருக்கு உரிமம் தரப்படுகிறது ? திரு. அந்தோணி ராஜ்,

is doing business in Scooters and Matadars, etc., and it may not be possible for him to pay full attention to the wholesale liquor business. I therefore reject the application on the ground that he is not a suitable person for the grant of privilege.

அதாவது ஸ்கூட்டர் வியாபாரம் செய்கின்ற காரணத்தினால், இந்த வியாபாரத்திலே அவர் போதிய கவனம் செலுத்த முடியாது. எனவே, அவருடைய மனுவை நாங்கள் மறுக்கிறோம் என்று மறுத்துவிட்டு, உஸ்மான் அலிக்குத் தருகிறார்கள். இந்த உஸ்மான் அலி யார் ? கோடேஸ் குரூப்பைச் சேர்ந்தவர்.





இந்த கோடேஸ் குரூப்பைச் சேர்ந்தவருக்கு இந்த உரிமத்தைத் தருகிறார்கள். இதிலே, அந்தோணி ராஜுவிற்கு சொந்தக் கட்டிடம் இருக்கிறது ? உஸ்மான் அலிக்கு வாடகைக் கட்டிடம். ஆனால், உஸ்மான் அலி அவரை விட எந்த வகையிலே சிறந்தவர் என்று சொல்லப்படுவதற்குக் காரணம், அந்தோணி ராஜ் ஸ்கூட்டர் வியாபாரம் செய்து கொண்டிருப்பவர் ; எனவே, அவருக்குத் தர இயலாது. ஆகவேதான் நாங்கள் இந்த உஸ்மான் அலிக்குத் தருகிறோம் என்று சொல்லுகிறார்கள். உஸ்மான் அலியும், கோபாலகிருஷ்ணாவும் சேர்ந்து விண்ணப்பம் கொடுக்கிறார்கள். ஆனால், கோபாலகிருஷ்ணா அதிலே கையெழுத்து போடவில்லை. மனுவிலே கையெழுத்து போட்டாலும், போடாவிட்டாலும் பரவாயில்லை என்று அந்த உரிமம் தரப்படுகின்றது. அப்படி உரிமம் தரப்படுவதற்குக் காரணம், அந்தோணி ராஜ் ஸ்கூட்டர் வியாபாரம் செய்கிறார் என்று சொல்லப்படுகிறது. ஆனால், உஸ்மான் அலி தங்க பஸ்பம் புகையிலை வியாபாரம் செய்பவர் என்று கூறப்பட்டிருக்கிறது.

ஸ்கூட்டர் வியாபாரம் செய்தால் அவருக்கு லைசென்ஸ் கொடுக்கக் கூடாது ; தங்க பஸ்பம் புகையிலை வியாபாரம் செய்தால் கொடுக்கலாம் என்று எந்த உத்தரவிலே, எந்த விதிமுறையிலே இந்த அரசு இப்படிப்பட்ட உரிமத்தை வழங்கினார்கள் என்பதை நான் அறிந்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். உஸ்மான் அலிக்கு உரிமம் வழங்குவதற்கான தகுதியெல்லாம் அவர் கோடேஸ் கம்பெனியின் பினாமி என்ற ஒன்றைத் தவிர, வேறு என்ன தகுதி இருக்கிறது ? அது மாத்திரமல்ல. கமிஷனர் தன்னுடைய ஆணையிலே குறிப்பிடுகிறார்.

" The Government have accorded their prior approval for the grant of privilege in favour of A. Usman Ali. " அதாவது சர்க்கார் ஏற்கெனவே உரிமம் தர வேண்டுமென்று தீர்மானித்து விடுகின்ற காரணத்தினால், பிரையர் அப்ரூவல், ஒப்புதல் அளித்துவிட்டக் காரணத்தினால் தரப்படுகின்றது என்று கூறி,

" The Government have accorded prior approval for the grant of privilege in favour of A. Usman Ali " என்று கூறப்படுகிறது.

அதேபோல், வட ஆற்காடு மாவட்டத்தில் மொத்த வியாபாரம் இந்த ஐ.எம்.எப்.எஸ்.-இல் வேண்டுமென்று கோரி 7 பேர்கள் மனு செய்கிறார்கள்.

(பிற்பகல் 1-00)

அந்த ஏழு பேரிலே கோபாலகிருஷ்ணய்யா என்பவருக்கு இந்த உரிமம் அளிக்கப்படுகிறது. இந்த வியாபாரத்திலே முன் அனுபவமுள்ள பார்த்தசாரதி முதலியார் என்பவருக்கு அளிக்கப் படவில்லை. அதற்கு என்ன காரணம் தெரியுமா ? பார்த்தசாரதி முதலியார் வயது 71 ; 71 வயதாகிவிட்ட காரணத்தாலே

அவருடைய மனு நிராகரிக்கப்படுகிறது. 71 வயது ஆகிவிட்ட காரணத்தாலே மனு நிராகரிக்கப்படுகிறது என்று கூறி கோபாலகிருஷ்ணய்யாவிற்கு தருகிறார்கள். இந்த கோபாலகிருஷ்ணய்யாவிற்கு பேங்கிலே செக்யூரிட்டி கட்டுவது, டெபாசிட் கட்டுவது யார் என்றால், ஆந்திராவிலே உள்ள சுப்பராம ரெட்டி தான் ஏறத்தாழ மூன்று இலட்சம் ரூபாயை பாங்கிலே அவருக்கு டெபாசிட்டாகக் கட்டுகிறார். ஆக கோபாலகிருஷ்ணய்யாவிற்கு அனுமதி கிடைக்கிறது. 71 வயது ஆன காரணத்தாலே பார்த்தசாரதி முதலியார் அவர்களின் மனு நிராகரிக்கப்படுகிறது. வயது வரம்பு பார்த்துத் தான் இந்த தொழிலிலே ஈடுபட வேண்டுமென்று ஏற்கெனவே விதிமுறைகள் வகுத்திருக்கிறீர்களா ? அந்த விதிமுறைகளுக்கு மாறாக 71 வயது ஆனவர் மனு செய்த காரணத்தால் அவருக்கு தர முடியாமல் போய் விட்டது என்று கூறலாமா ? இதற்கெல்லாம் எனக்கு விளக்கம் தேவை.

மதுரை மாவட்டத்திலே இந்த மது வகைகள் ஐ.எம்.எப்.எல். மொத்த வியாபாரத்திற்கு பதிமூன்று பேர்கள் மனு செய்தார்கள். அதிலே கிருஷ்ணமோகன் என்பவருக்கு அளிக்கப்பட்டது. அவர் சுப்பராம ரெட்டியின் மைத்துனர். சென்னையிலே மொத்த வியாபார லைசென்ஸ் பெற்றிருக்கிறாரே சுப்பராம ரெட்டி, அவருக்கு மைத்துனர். அவருக்குத் தகுதி என்ன ? அவர் கேட்ட அதே உரிமத்தை ராமசாமி என்பவரும் கேட்டார். இந்த இரண்டு பேர்களுடைய தகுதியையும் பற்றி அதிகாரி என்ன எழுதுகிறார் ? கமிஷனர் என்ன எழுதுகிறார். முதலில் ராமசாமியைப் பற்றி தெரிவிக்கிறார்.

" His application is in order. The District Revenue Officer has reported that the applicant is financially sound and is capable for investing sufficient money and is suitable for the grant of licence. He has added that the building selected in Door Nos. 107-108, Melaperumal Maistry Street, Madurai, belongs to the applicant and has got a number of separate rooms with sufficient storage.. . . . . .

என்று குறிப்பிட்டு ராமசாமியைப் பற்றி எழுதியிருக்கிற குறிப்பிலே வரைகிற கமிஷனர் கிருஷ்ண மோகனைப் பற்றியும் சொல்கிறார்.

" His application is in order. The District Revenue Officer has reported that the applicant is from Andhra State and he is a resident of Madras that he hails from a respectable family and has got capacity to invest sufficient funds and that he has produced a certificate from the I.O.B. Mylapore to show that he has a bank balance of Rs. 6 lakhs.

இதிலே ராமசாமியினுடைய மனு நிராகரிக்கப்படுகிறது. கிருஷ்ண மோகனுடைய மனு ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இதற்கு என்ன காரணம் ? அதிகாரி எழுதுகிறார் காரணத்தை, இவருக்கு ஏன் தந்தேன் என்பதை எழுதுகிறார். எவ்வளவு விசித்திரமான காரணம் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.





" The sites and buildings selected by both the applicants—Ramaswamy and Krishna Mohan—are reported to be quite suitable, when Krishna Mohan appeared before me for enquiry, Ramaswamy has simply deputed his General Manager to appear before me on his behalf to give his statement."

இதிலே கிருஷ்ண மோகன் நேராக வந்து ஆஜர் ஆனாராம். ராமசாமி தன்னுடைய ஜெனரல் மேனேஜரை அனுப்பினாராம். அவர் சும்மா அனுப்பவில்லை. பவர் ஆப் அட்டர்னி கொடுத்து அனுப்பியிருக்கிறார். கமிஷனர் என்ன குறிப்பிட்டிருக்கிறார் என்றால்—

" In the circumstances, I consider that Thiru Krishna Mohan is a more suitable person for the grant of the privilege of supply of bottled liquour by wholesale. I accordingly reject the application of Thiru K. Ramaswamy."

கமிஷனருடைய ஆணையிலே இன்னொன்றையும் குறிப்பிடத் தவறவில்லை. அவருடைய ஆணை ஏழாவது பாராவிலே

" In the G.O. 16th cited, the Government have accorded their prior approval for the grant of privilege in favour of Thiru B. Krishnamohan."

இதிலே சர்க்கார் தன்னுடைய முன் ஒப்புதலை கிருஷ்ண மோகனுக்கே அளித்து இருக்கிற காரணத்தால் இந்த உரிமை அவருக்கு அளிக்கப்படுகிறது என்று சர்க்காரைக் காட்டி கமிஷனர் தப்பித்துக் கொள்கிற அந்த பணி இதிலேயும் நடைபெற்றிருக்கிறது. அடுத்து சென்னைக்கு மொத்த வியாபாரம் செய்ய 29 பேர் மனு போட்டிருக்கிறார்கள். பெரிய பெரிய கம்பெனிகள் எல்லாம் மனு போட்டிருக்கிறார்கள். நான் எல்லாவற்றையும் விளக்க நேரம் இல்லாத காரணத்தால் ஒன்று இரண்டினை மட்டும் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலே சுப்பராம ரெட்டி ஒருவர், மிகப் பெரிய கம்பெனிகளில் ஒன்றான ஸ்பென்சர் கம்பெனி ஒன்று. சென்னையிலே இருக்கின்ற ஸ்பென்சர் கம்பெனியும் ஆந்திராவிலே இருக்கின்ற சுப்பராம ரெட்டியும் ஐ. எம். எப். எஸ். மொத்த வியாபாரத்திற்காக சென்னை மாவட்டத்திற்கு மனுப் போட்டால் சாதாரண மனிதன்கூட என்ன கருதுவான். ஸ்பென்சர் கம்பெனிக்குத்தான் கிடைக்கும் என்றுதான் கருதுவான் ஆனால் கிடைத்தது யாருக்கு? சுப்பராம ரெட்டிக்குத்தான் கிடைத்தது. ஸ்பென்சர் கம்பெனிக்குக் கிடைக்கவில்லை? என்ன காரணம் சொல்கிறார்கள் தெரியுமா? ஸ்பென்சர் கம்பெனியைப்பற்றிச் சொல்கிறார்கள்.

The application is in order. As the applicant Company is already engaged in business in various fields.

அது ஒரு பெரிய குற்றமாம். பல துறைகளிலே வியாபாரம் செய்கிற கம்பெனியாம் ஸ்பென்சர்.

I consider that the privilege of wholes le supply of I.M.F.S. in the M dras Corporation limits should not also be given to them as it wo ld mean concentr tion of business activities in one company alone to the exclusion of others. I therefore reject the application of this comp ny on the ground that they are not suitable for the grant of privilege u der Rule 6A of the I.M.F.S. Rules 1981.

சுமார் 60 அல்லது 70 ஆண்டுகாலமாக இந்த ஐ. எம். எப். எஸ். போன்ற வியாபாரங்களிலே ஈடுபட்டிருக்கின்ற ஸ்பென்சர் கம்பெனிக்கு நிராகரிக்கப்பட்டு ஆந்திராவிலே இருக்கின்ற சுப்பராம ரெட்டிக்கு சென்னையில் தரப்படுகிறது. அப்படித் தரப்படுகிற நேரத்திலே சுப்பராம ரெட்டி எப்படியெல்லாம் வர்ணிக்கப்படுகிறார், அவருடைய சிறப்புகள் என்ன, அவருடைய மகிமைகள் என்ன, அவருடைய மாண்புகள் என்ன இவைகளை எல்லாம் பற்றி அதிகாரி எழுதுகிறார்.

'His application is in order. The applicant has proposed to locate the wholesale depot in the building at Door No. 9-B, Village Road, Nungambakkam. The Collector has reported that this is a pucca building with two floors and vacant site and that there are several rooms with sufficient space available. The total plinth area of the building is about 3,000 sq. fit. The owner of the building has given his consent for the location of a wholesale depot in the building by the applicant. I am satisfied that the applicant Thiru N. Subbarama Reedi, Madras is a s itable perons for the grant of licence and the site and building selected by him for the location of the wholesale depot are suitable and that applicaton is made *bonafide* on behalf of the applicant.'

இப்படி இடத்தைப்பற்றி வர்ணனை. ஆனால் அப்படிப்பட்ட ஒரு இடம் அவர் பெயரில் உண்டா என்றால் இல்லை. திரு. அம்பிகாபதி குறிப்பிட்டாரே மாயா பஜார் என்று, அந்த மாயா பஜார் இந்த சுப்பராம ரெட்டி விஷயத்தில் நடைபெற்றிருக்கிறது. இவ்வளவு அறைகள் கொண்டது இவ்வளவு பக்கா பில்டிங், இவ்வளவு பிளிந்த் ஏரியாவைக் கொண்டது, மூவாயிரம் சதுர அடிகள் கொண்டது என்றெல்லாம் அதிகாரியால் வர்ணித்துக் கூறப்பட்ட தொகுத்துக் கூறப்பட்ட சுப்பராமரெட்டியால் காட்டப்பட்ட அந்த இடம் அவருக்கு உரியதா அல்லது வாடகைதாரராகவாவது அவர் அங்கே உரிமை படைத்ததா என்றால் இல்லை. ஏதோ ஒரு இடத்தைக் காட்டி இந்த இடம்தான் என்று சொல்லி அதை அதிகாரிகள் ஏற்றுக்கொண்டு எவ்வளவு பெரியவர்ணனை இராமாயணம் போல் எழுதி அவர் தகுதியானவர் என்று குறிப்பிட்ட பிறகு பார்த்தால் அவருக்கு அப்படிப்பட்ட ஒரு இடமே இல்லையென்று தெரிகிறது. என்ன செய்து இருக்கவேண்டும்? நீ இல்லாத



இடத்தைக் காட்டி உரிமம் கேட்கிற பொல்லாத மனிதன், ஆகவே உனக்குத் தரமுடியாது என்று தடுத்தார்களா என்றால் தடுக்கவில்லை. என்ன செய்தார்கள்?

அவசரம் அவசரமாக ஒரு புதிய ஆணையையே பிறப்பிக்கிறார்கள். புதிய ஜி. ஓ. பிறப்பிக்கப்படுகிறது. என்ன ஜி. ஓ. தெரியுமா? 29—8—81 இல் சுப்பராம ரெட்டி சொன்ன இடம் இல்லை என்பது தெளிவாகிறது. தேதியை கவனமாக வைத்துக் கொள்ள வேண்டும், 29—8—81 இல் சுப்பராம ரெட்டி குறிப்பிட்ட இடம் நுங்கம்பாக்கத்தில் அவருக்கு சொந்தமானது இல்லை அவர் வாடகை தருகிற இடமும் இல்லை என்று தெளிவாகிறது. தெரிந்த பிறகு எப்படியும் சுப்பராம ரெட்டிக்குக் கொடுத்துத்தான் தீர வேண்டுமென்ற அப்படி ஒரு கட்டு. இக் கட்டு. எனவே அந்த நிலைமையைச் சமாளிப்பதற்காக 19—9—81 அன்று அடுத்த மாதம் ஒரு புதிய ஜி. ஓ. போடப்படுகிறது. என்ன ஜி. ஓ. தெரியுமா?

If at any time after the issue of the licence, the site and buildings specified in the licence ceased to be available to the licensee due to reasons beyond his control, the Commissioner may with the prior approval of the Government............

எல்லாம் அந்த பிரையர் அப்ரூவல் தான்.

permit the licence to change over to any other site and building apporved as suitable by the Commissioner.'

இப்படியொரு புது ஜீ. ஓ. வே. போடப்பட்டு லைசென்ஸ்தாரர் லைசென்ஸ் பெற்ற பிறகு இடம் இல்லை என்றால் அவர்களுக்கு, மறுபடியும் ஒரு இடத்தை அவர்கள் காட்டுவதற்கும், அந்தயிடத்தை ஒத்துக் கொள்வதற்கும் சர்க்காருடைய முன் ஒப்புதலோடு கமிஷனர் அதற்கு இணக்கம் தெரிவிக்கிறார் என்கின்ற வகையிலே ஒரு புது உத்தரவு, ஒரு ஜி.ஓ.வே. போடப்படுகின்றது.

(பிற்பகல் 1-10)

கன்னியாகுமரி மாவட்டத்திலே இன்னொரு வேடிக்கை அங்கு மது மொத்த வியாபார ஐ. எம். எஃப். எஸ். வியாபாரம் செய்ய நான்கு பேர்கள் மனுச் செய்தார்கள். அதிலே ஒருவர் லட்சுமணப் பொருமாள். அருவடைய மனு நிராகரிக்கப்பட்டது. கேட்டதற்கு அவர் துணி வியாபாரம் செய்கிறார், துணி வியாபாரம் செய்கின்ற காரணத்தினால் அவருடைய மனு நிராகரிக்கப்பட்டது என்று கூறப்பட்டது. அவர் நீதிமன்றத்திற்குச் சென்றார். நீதிமன்றத்தில் என்ன தீர்ப்பு அளிக்கப்பட்டது என்றால், நீதிமன்றத்திலே லட்சுமணப் பெருமாளுடைய கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு, 3—3—1982 ஆம் தேதிக்குள் லட்சுமணப் பெருமாளுக்கு

[டாக்டர் மு. கருணாநிதி] [1982 மார்ச் 9

இந்த அரசு லைசென்ஸைக் கொடுத்துவிட்டு, கொடுத்தோமா இல்லையா என்பதை 5—3—1982 ஆம் தேதிக்குள் நீதி மன்றத்திற்குக் கூற வேண்டுமென்று நீதிபதி உத்தரவு பிறப்பிக்கிறார். ஆக, துணி வியாபாரம் செய்கின்ற ஒரு காரணத்தைக் காட்டியது தவறு என்று லட்சுமணப்பெருமாளுக்குக் கன்னியாகுமரி மாவட்டத்திலே நடத்த நீதிபதி அவருக்கு உரிமை அளிக்கலாம், துணி வியாபாரம் செய்தாலும் வேறு வியாபாரம் செய்தாலும் அதுபற்றிக் கவலையில்லை என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறார். ஆனால் மற்ற வியாபாரங்கள் செய்கிறார்கள் என்று தஞ்சையிலே ஒருவரையும், மதுரையிலே ஒருவரையும், சென்னையிலே ஒருவரையும் காரணம் காட்டி இந்த அரசு முன் ஒப்புதலோடு அதிகாரிகள் மனுக்களை மறுத்திருப்பது நியாயம்தானா என்பதை நான் கேட்க விரும்புகிறேன். இதையெல்லாம் யாருக்குச் சலுகை செய்ய? எதற்காக? என்ன மர்மம் அடங்கியிருக்கின்ற காரணத்தால் இப்படிப்பட்ட காரியங்கள் அத்துமீறி நடைபெற்றிருக்கின்றன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

நான் கடைசியாக ஒன்றைச் சொல்லுகிறேன். பத்துப் பேருக்கு சாராயக் கலவை அதைப் போலவே சாராயத்தைப் புட்டியிலே அடைக்கின்ற தொழிற்சாலை, பிளெண்டிங் பாட்டிலிங் பேக்டரி வழங்கப்பட்டிருக்கின்றது தமிழ்நாட்டில். இந்தப் பத்து தொழிற்சாலைகளிலும் 5—2—1982-ஆம் தேதியன்று வருமான வரித்துறையினர் புகுந்து சோதனையிட்டிருக்கின்றார்கள். அவர்கள் சோதனையிட்டு வெளியிட்ட விவரங்களை நான் இங்கே சொல்வது மிகச் சரியாக இருக்குமென்று கருதுகிறேன். நம்முடைய அமைச்சரவர்கள் பினாமி என்றாலே ரொம்ப அலர்ஜி உடையவர். பினாமி நிலங்களை யாரும் வைத்திருக்கக் கூடாது; பினாமி வீடுகள் இருக்கக்கூடாது. பினாமிகளை ஒழித்துக் கட்டுவது என்னுடைய பிரதான கொள்கை என்று முரசறைகின்றவர் நம்முடைய அமைச்சர் எஸ். டி. எஸ். அவர்கள். ஆனால் நான் அவருக்கு நினைவுபடுத்துகிறேன். இந்த 5—2—1982 அன்று வருமானம் வரித் துறையினர் பத்து பேக்டரிகளில் அதாவது பிளெண்டிங் பாட்டிலிங் பேக்டரிகளில் புகுந்து சோதனை நடத்தி அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். எவ்வளவு பெரிய கொடுமை தமிழ்நாட்டிலே நடைபெறுகிறது என்று தமிழ்நாட்டிலே பிறந்துள்ள தமிழ்ப்பெருங்குடி மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்பதற்காக மிகுந்த வேதனையோடு நான் இதைச் சொல்ல விரும்புகிறேன்.

தஞ்சாவூரில், வி. ராமானுஜம் என்பவருக்கு இந்த உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அந்த பேக்டரி வருமான வரி இலாக்காவால் சோதனையிடப்பட்டிருக்கிறது. சோதனையிடப்



1982 மார்ச் 9] [டாக்டர் மு. கருணாநிதி)

பட்டதும் வருமான வரி இலாக்கா ராமானுஜத்தினுடைய பேக்டரியைப்பற்றிச் சொல்லியிருக்கின்ற விவரங்களை மாத்திரம் அமைச்சருடைய கவனத்திற்கும், நாட்டுமக்களுடைய கவனத்திற்கும், மன்ற உறுப்பினர்களுடைய கவனத்திற்கும் கொண்டு வருவது என்னுடைய கடமையாகும்.

On the basis of *suo motu* enquires which indicated that the 10 arrack blending units in Tamil Nadu were making exhorbitant profits and had obtained licences in benami names, all the 10 blending units, the factories, the residences of the registered licensees and the residences of some of the real owners were covered under Section 132 (1) on 5th February 1982 in terms of the Warrant issued by the Director of Inspection, Madras. In the assessee's case the factory and the residence are in one and the same premises at No. 14, Nani Kottai Road, Thanjavur. It is seen from the sworn statement recorded.

அவருடைய ஸ்டேட்மென்ட் ரெக்கார்டு செய்யப்பட்டது.

From Sri V. Ramanujam, the registered licence of this Unit.

அவர்தான் ரெஜிஸ்டர்ட் லைசென்சி அந்த யூனிட்டில்.

that he is only a partner having 2 per cent share

இரண்டு பர்செண்ட் ஷேர் உள்ள ராமானுஜத்திற்குத்தான் அந்த பிளெண்டிங் பாட்டிலிங் பேக்டரியினுடைய லைசென்ஸ் தரப்பட்டிருக்கிறது.

2 per cent share in the Partnership known as M/S. Matha Combines. Bottlers and exploiting the licence issued in the name of Sri V. Ramanujam This Partnership has 19 partners including Sri V. Ramanujam and some of the partners, according to the deposition of Sri Ramanujam, are Pothen Joseph, P.M. Mathew, V. A. John, Afeg John and others. Sri V. Ramanujam did not know the exact details of the other partners.

இராமனுஜத்திற்கு தன்னுடைய மற்ற பங்குதாரர்களைப் பற்றிய விவரம் தெரியாதாம், அவரே சொல்லியிருக்கிறார்

their capital contributions.

அவர்களுடைய முதலீடுகள் என்ன என்பதும் அந்த லைசன்ஸ் தாரருக்கு இராமானுஜத்திற்குத் தெரியாதாம்.

and their postal addresses

அவர்களுடைய முகவரிகளும் அந்த இராமானுஜத்திற்குத் தெரியாதாம்.

(டாக்டர் மு, கருணாநிதி) [1982 மார்ச் 9

There has been an initial total capital contribution of Rs. 2·00 lakhs and the total investment is around Rs. 15·00 lakhs as per the details given below. The licence fees and security deposit—Rs. 2·5 lakhs, Machinery Rs. 10·00 lakhs, Addition to factory buildings Rs. 2·5 lakhs, Total Rs. 15·00 lakhs. This unit has been functioning since 15th July 1981.

இங்கேதான் கவனிக்க வேண்டும்.

For manufacturing arrack, one litre of rectified spirit supplied to the assessee at the rate of Rs. 2·50 per litre is mixed with 1·37 litres of potable water

அதாவது, ஒரு லிட்டர் ரெக்டிஃபைட் ஸ்பிரிட்டை 1·37 லிட்டர் தண்ணீரோடு கலக்க வேண்டும். இந்த 1 லிட்டர் ரெக்டிஃபைட் ஸ்பிரிட்டினுடைய விலை ரூ. 2·50 காசு.

The capacity of each bottle is 750 ml.

750 மில்லி, ஒவ்வொரு பாட்டிலும்

and the permitted sale price of one 750 Ml. bottle of arrack is Rs. 7·39

ரூ. 7·39 காசு.

and the cost to the assessee per bottle works out to nearly Rs. 6·39

ரூ. 6·39 காசு.

and the average profit per bottle works out to R. 1.

அதாவது, ஒரு பாட்டிலுக்கு ஒரு. 1 இலாபம் கிடைக்கிறது. வருமான வரி இலாகா இவ்வளவு கணக்கையும் போட்டுச் சொல்கிறது. 1 லிட்டர் ரெக்டிஃபைட் ஸ்பிரிட்டோடு 1·37 லிட்டரைக் கலந்தால், கலப்பதற்கு முன்பு, ரூ. 2·50 காசாக இருந்த அந்த ஸ்பிரிட்டினுடைய விலை ரூ. 7·39 காசாக விற்கப்படுகிறது. அடக்கம் ரூ. 6·39 காசு. அந்த அடக்கம் ரூ. 6·39 காசு என்பது கூட வருமான வரி இலாகாவுக்காகச் சொல்லப்படுகிற கணக்கு. அதிலே, பாட்டில் போன்றவைகளுக்காகக் கழித்துக் கொண்டால் ரூ. 3 கூட மிச்சம் வரும். ஆகவே, அவர்களுடைய கணக்குப் படியே, கூட ரூ. 1 ஒரு பாட்டிலுக்கு இலாபம் வருகிறது.

It is seen that in October 1981 itself the assessee was supplied with 3 lakhs of litres of rectified spirit and on the basis of the figures given earlier in the report this would have been mixed with 4·11 lakhs of litres of potable water and 7·11 lakhs litres of arrack would have been manufactured and filled in 9·48 lakhs bottles, each containing 750 Ml. There fore in October 1981 itself a profit of Rs. 9·48 lakhs would have been made by this Unit.



1982 மார்ச் 9] (டாக்டர் மு கருணாநிதி)

அக்டோபர் மாதத்திலே, மாத்திரம், இந்த இராமானுஜத்தினுடைய கம்பெனிக்கு ஒரே மாதத்தில் வருகிற இலாபம் ரூ. 9·48 இலட்சம். அந்த ரூ. 1 கணக்கின்படி. இன்னும், ரூ. 2 அல்லது ரூ. 3 என்று கணக்கை வைத்துக் கொண்டால், ரூ. 27 இலட்சம் இலாபம் வருகிறது. வருமான வரித் துறையினுடைய கணக்கின் படியே வைத்துக் கொண்டால் கூட ஆண்டு ஒன்றுக்கு ரூ. 108 இலட்சம், கிட்டத்தட்ட ரூ. 1 கோடி 8 இலட்சம் இலாபம் வருகிறது. இந்த இராமானுஜத்தினுடைய ஒரே ஒரு யூனிட்டுக்கு. This confirms the information that fabulous profits are made by these blending Units. It is clear that the registered licensee Ramanujam is only a benamidar for a group of influential persons hailing from Kerala. Most of the employees running this unit are only Keralites. The Accountant is one E. K. Thomas. This Unit has account in the branch of South India Bank Limited, Thanjavur. The source for the capital contribution, the real owner of this blending Unit, etc., require further investigation. The seized accounts and other papers are under scrutiny.

என்று வருமான வரி இலாகா அதிகாரி கையெழுத்திட்டு இந்த அறிக்கையை மேலதிகாரிக்கு அனுப்பி இருக்கிறார்.

[பிற்பகல் 1-20]

இதற்கான ஆதாரம் கேட்டால், அந்த ஆதாரத்தைத் தருவதற்கு நான் தயாராக இருக்கிறேன். இதிலே இருந்து என்ன தெரிகிறது. பினாமிதாரர்களுக்கு நாங்கள் எதுவுமே கொடுக்க வில்லை என்று சொல்லுகிறீர்கள். தமிழகத்திலே கோவை, சேலம், மதுரை, இராமநாதபுரம், சென்னை இந்த இடங்களிலே கூட வேறு மாநிலத்தவர் வந்து தொழில் நடத்துவது இயற்கை இவ்வளவு மாவட்டங்களையும் தாண்டி, தஞ்சாவூரிலே ராமானுஜம் என்ற ஒரு ஆளைப் பிடித்து, அந்த ராமானுஜத்தினுடைய மறைவில் கேரளத்தைச் சேர்ந்தவர்கள் — வருமான வரி இலாகா சொல்கிறது, நான் சொல்லவில்லை—கேரளத்தைச் சேர்ந்தவர்கள், 2 பர்சன்ட் மாத்திரமே பார்ட்னர்ஷிப் வைத்திருக்கின்ற ஒரு ராமானுஜத்தினுடைய பேரால் தொழிற்சாலையை நடத்துகிறார்கள். இப்படிப்பட்ட தொழிற்சாலை மாதம் ஒன்றுக்கு 10 இலட்சம் ரூபாய் லாபம் கொடுகின்றது, கிட்டத்தட்ட வருடத்திற்கு 1 கோடி $1\frac{1}{2}$ கோடி ரூபாய் லாபம் பெறுகின்ற தொழிற்சாலை. இவைகளை ஏன் அரசாங்கம் தேசிய உடமையாக ஆக்கி நடத்தக் கூடாது ? என்ன காரணம் ? ஏன் அப்படிப்பட்ட எண்ணம் அரசுக்கு ஏற்படவில்லை.

பொதுவாகப் பார்த்தால் தமிழர்களுடைய பேரால், தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களுடைய பேரால், இங்கே லைசன்சுகள் உரிமங்கள் வழங்கப்பட்டிருந்தாலும் கூட, ஆந்திராவிலே இருக்கின்ற சுப்பராம ரெட்டி குரூப், அந்தக் குரூப்பின் பேரால் ஒரு

7, 8 பேர்; அது போலவே போத்தன் ஜோசப் அல்லது நெல்லிப்புழா ஜோஸ் பேரால் கேரளாவில் இருந்து ஒரு 7,8 நிறுவனங்கள் அதைபோலவே கர்நாடகாவில் இருக்கின்ற கோடேஸ், அதன் பேரால் ஒரு 7, 8 நிறுவனங்கள், ஆக நாம் அன்றைக்குக் கேட்ட திராவிட நாடு '' புல்பில் '' ஆகிவிட்டது. ஆந்திராவிலே இருந்து ஒரு குரூப், கேரளாவிலே இருந்து ஒரு குரூப், கர்நாடகத்திலே இருந்து ஒரு குரூப், தமிழன் தலையிலே கையை வைத்துக் கொண்டு இருக்க வேண்டியதுதான் யார் யாரோ அவர்களுடைய விட்டிலே பை நிரப்பிக்கொள்ள தமிழன் தன் தலையிலே கை வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டு இருக்கிறது என்பதை மாத்திரம் எடுத்துக் கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நம்முடைய அனைத்துக் கட்சித் தலைவர்களும் நாளை காலை அமைச்சரின் பதிலுரையை வைத்துக் கொள்ளலாம் என்றும், இன்று மாலை வேண்டாம் என்றும் விரும்புகிறார்கள். நாளை கேள்வி நேரம் வேண்டாம் என்றும் முடிவெடுத்து இருக்கிறார்கள். அதையே தாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

### (7) அரசினர் தீர்மானம்,

### விதி 31-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

'' ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப்பெற வேண்டும் என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 31-ஐ நாளை 10—3—1982 அன்று தளர்த்த வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 10—3—1982 அன்று காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-23 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



### (8) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

123. திருநெல்வேலி மாவட்டம் சங்கரன் கோயில் வட்டத்திலுள்ள சில கிராமங்களை கிராமதான கிராமங்களாக அறிவிப்பது குறித்து 1982 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 4 ஆம் தேதியிடப்பெற்ற ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 13ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958] 28 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பட்டது.).

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

69. கோரிக்கை எண். 4.—தமிழ்நாடு பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிருவாகம் குறித்த விளக்கக் குறிப்பு—(தமிழ், ஆங்கிலம்).

70. கோரிக்கை எண். 2.—மாநில ஆயத் தீர்வைத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1982—83 (தமிழ், ஆங்கிலம்).

71. தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம் பற்றிய ஆய்வுரை 1981—82 (தமிழ், ஆங்கிலம்).

## இணைப்புகள்.

(6-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

கோரிக்கை எண். 2.

### மதுவிலக்கு ஆயத் தீர்வைத்துறை—கொள்கை விளக்கம் குறிப்பு.

தமிழ்நாட்டில் மதுவிலக்குக் கொள்கை தொடர்ந்தாற்போல் தீவிரமாகச் செயற்படுத்தப்பட்டு வந்திருக்கிறது; இடையில் சிறிது காலமே மதுவிலக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

2. இந்த அரசு மதுவிலக்குக் கொள்கையில் அழுத்தமான நம்பிக்கை கொண்டிருக்கிறது என்பதை வலியுறுத்துவதோடு மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்வதாக இல்லை என்பதையும் தெரிவிக்கிறது. எனினும் மதுவிலக்குச் சட்டத்தைத் திருத்து வதன் மூலம் சமூக விரோதிகள் சிலரின் கைக்குச் செல்கின்ற பணத்தை அரசுக்குக் கிடைக்க வழிவகை செய்ய முடியும் என்று இந்த அரசு கருதுகிறது. எனவே கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மதுவிலக்குச சட்டத்தில் கீழ்க்கண்டவாறு சில திருத்தங்களை நிதியமைச்சர் அறிவித்தார்.

25 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டுமே மது அருந்த அனுமதிக்கப்படுவர். வரையறுத்துள்ள நடைமுறையின்படி மது அனுமதிச் சீட்டுகளை அவர்கள் பெற்றாக வேண்டும். புட்டியில் அசடக்கப்பட்ட சாராயம் மட்டுமே, உரிமை பெற்ற கடைகள் மூலமாக விற்பனை செய்ய அனுமதிக்கப்படும். உரிமை பெற்றவர்களே மது விற்க அனுமதிக்கப்படுவர். அனுமதி உரிமம் இன்றிச் சாராயம் காய்ச்சுவது, விற்பது, அருந்துவது போன்றவை தொடர்ந்து சட்டப்படி தடுக்கப்பட்டு, மீறுபவர்கள் சட்டப்படி தண்டனைக்குள்ளாக்கப்படுவார்கள். நிதி நிலை அறிக்கையில் அறிவித்தபடி தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மது விலக்குக் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1937) தக்கவாறு திருத்தப்பட்டது. ஆயத்தீர்வை விதித்து, வசூலிப்பதற்கு சட்டத்தின்படி புதிய விதிகள் இயற்றப்பட்டன. தளர்த்தப் பட்ட மதுவிலக்குத் திட்டத்தின்படி 25 வயதுக்கு மேற் பட்டவர்கள் தங்களுக்கென்று வாங்கியுள்ள அனுமதிச் சீட்டு களைக் கொண்டு மதுவை வாங்கி அருந்தலாம். கள் அருந்த அனுமதி சீட்டுக் கட்டணம் ஆண்டுக்கு 2 ரூபாயும், சாராயம் அருந்த அனுமதி சீட்டுக் கட்டணம் ஆண்டுக்கு 5 ரூபாயும், இந்தியாவில் தயாரான அயல் நாட்டுவகை மதுவகைகள் அருந்த அனுமதிச் சீட்டுக் கட்டணம் ஆண்டுக்கு 25 ரூபாயும் ஆகும். மது



அருந்த விரும்புவோர் விண்ணப்பம் செய்து கொள்வதன்பேரில் அனுமதிச் சீட்டுகள் வழங்க வட்ட ஆயத்தீர்வை அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை வழங்கப்பட்டுள்ள அனுமதிச் சீட்டுகளின் எண்ணிக்கை விவரம் வருமாறு :—

கள் : .. .. 4,31,047

சாராயம் 2,76,320

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள் :88,812

பொது இடத்தில் குடிப்பதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. மது அருந்தும் எவரும் தன்னிடத்தில் அதிக அளவு மதுவை வைத்துக் கொள்ளலாகாது. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல் நாட்டு மது வகைகளையும், சாராயத்தையும் இம்மாநிலத்தில் தயாரிப்பதற்கும் மது, கள், சாராயக்கடைகளைத் திறப்பதற்கும், இவ்விதிகளின்படி அனுமதிக்கப்படுகின்றன.

கள் :

3. சில்லறையில் கள் விற்பனை செய்யும் உரிமை, பொது ஏலத்தின் மூலமும் ஒப்பந்தப் புள்ளிகள் மூலமும் விற்பனை செய்யப்படுகிறது. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கள்–சாராயக் கடை (ஏலவிற்பனை) விதிகளைச் சேர்ந்த விதி துறைகளின்படி இவ்வாறு செய்யப்படுகிறது. ஒவ்வோராண்டும் ஜூலைத்திங்கள் 16 ஆம் நாளில் தொடங்கி அடுத்த ஆண்டு ஜூலைத் திங்கள் 15 ஆம் தேதி வரையிலான ஆயத்தீர்வை ஆண்டுக்கு, உரிமை விற்பனை செய்வது இந்த முறையில் அனுமதிக்கப்படுகிறது.

மதுவிலக்கு—ஆயத்தீர்வை ஆணையர் அல்லது மாவட்ட ஆட்சியர், மாநில அரசின் ஒப்புதல் பெற்று, எந்தெந்தப் பகுதி களில் எத்தனை கடைகள் திறக்கப்பட வேண்டும் என்பதை நிர்ணயிக்கிறார். ஏலத்திலோ, ஒப்பந்தப் புள்ளியிலோ எவர் அதிக விலைக்குக் கேட்டிருந்து அந்த விலை போதுமானது எனச் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அறிந்த பின்னர் அவருக்கு விற்பனை உரிமை அளிக்கப்படுகிறது.

4. கள்ளுக்கடைகள் 11,004க்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது ஆனால், 9,541 கள்ளுக் கடைகளுக்கு உரிமம் வழங்கப்பட்டது.

5. 1981–82 ஆம் ஆயத்தீர்வை ஆண்டில், கள்ளுக்கடை களை குத்தகைக்கு விற்ற வகையில் ரூ. 15.52 கோடி கிடைக்கு மென்று எதிர்ப்பார்க்கப்பட்டது. 31—1—1982 வரை ரூ. 7.78 கோடி கிடைத்துள்ளது.

மர வரி :

6. கள் இறக்கப்படும் அல்லது எடுக்கப்படும் ஒவ்வொரு மரத்திற்கும் பின்வரும் வீதத்தில் வரி விதிக்கும் முறையில் கள்ளைப் பொறுத்தவரை ஆயத்தீர்வை விதிக்கப்படுகிறது :—

| தொடர் எண். | மரத்தின் வகை. | ஒரு மரத்திற்கு விதிக்கப்படும் வீதம். | கால அளவு. | தவணைகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | ரூபாய். | | |
| 1. | தென்னைமரம் .. | 20 | ஆறு திங்கள் | இரண்டு |
| 2. | பனைமரம் .. .. | 13 | ஓர் ஆண்டு | இரண்டு |
| 3. | சவ்வரிசி பனைமரம் .. | 40 | ஆறு திங்கள் | இரண்டு |
| 4. | ச்சை மரம் .. | 13 | ஓர் ஆண்டு | இரண்டு |

ஆயத்தீர்வை ஆய்வாளரால் அடையாளமிட்டப்பட்ட மரங்களிலிருந்துதான் கள் இறக்க வேண்டும். 1981—82 ஆம் ஆயத்தீர்வை ஆண்டில் 5,29,907 மரங்களுக்கு வரி விதிக்கப்பட்டுள்ளது. 31—12—1981 வரை ரூ. 1.06 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

சாராயம் :

1 சில்லறையில் சாராய விற்பனை :

7. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கள்-சாராயக்கடைகள் (ஏல விற்பனை) விதிகளைச் சேர்ந்த விதித்துறைகளின்படி, சில்லறையில் சாராய விற்பனை செய்யும் உரிமை, பொது ஏலத்திலும் ஒப்பந்தப்புள்ளிகள் மூலமாகவும் விற்கப்படுகிறது. இவ்வாறு விற்கப்படுகிற உரிமைக் காலம் முழு ஆயத்தீர்வை ஆண்டிற்கு அனுமதிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஜூலைத் திங்கள் 16ஆம் நாள் தொடங்கி அடுத்த ஆண்டின் ஜூலைத் திங்கள் 15 ஆம் நாள் முடிய உள்ள காலம் ஆயத்தீர்வை ஆண்டாகக் கருதப்படுகிறது. மதுவிலக்கு—ஆயத் தீர்வைத் துறை ஆணையர் அல்லது மாவட்ட ஆட்சியர் மாநில அரசின் ஒப்புதல் பெற்று, ஒரு பகுதியில் எத்தனை கடைகள் திறக்கலாம் என்பதை நிர்ணயிக்கிறார். ஏலம் மற்றும் ஒப்பந்தப் புள்ளி முறையில் உயரளவுத் தொகைக்கு ஏலம் கேட்ட அல்லது உயர்ந்த ஒப்பந்தப் புள்ளி கொடுத்தவரது விலை, போதுமானதாக இருப்பதாக சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் கருதினால், அவருக்கு உரிமை வழங்கப்படுகிறது.



8. 1981—82 ஆம் ஆண்டு ஆயத்தீர்வை ஆண்டில் 5,282 சாராயச் சில்லறை விற்பனை கடைகள் திறக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது ; ஆனால் 5,067 கடைகளுக்குத்தான் உரிமம் வழங்கப்பட்டது. 1981—82 ஆம் ஆயத் தீர்வையாண்டில் சாராயச் சில்லறைக் கடைகளுக்கு கிஸ்தி தொகை ரூ. 61.33 கோடி கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 31—1—1982 வரை இந்தக் கடைகளிலிருந்து ரூ. 28.72 கோடி கிஸ்தி தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது.

9. சாராயச் சில்லறை விற்பனைக் கடைகள் புட்டியில் அடைக்கப்பட்ட சாராயத்தை மட்டுமே விற்க வேண்டும் இக் கடைகளில் சில்லறையாகச் சாராயம் விற்கக்கூடாது. சில சாராயக்கலவைத் தொழிற்சாலைகள் செயற்படத் தொடங்காததால், அல்லது முழு அளவு உற்பத்தியைத் தொடங்காததால் ஆரம்பத்தில் சாராயச் சில்லறை விற்பனைக் கடைகளுக்குப் போதுமான அளவு சாராயம் கிடைப்பதில் இடர்ப்பாடுகள் இருந்தன. அச்சமயம் தனிவகையில் தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சாராயம் வழங்கல் (தனி விதித்துறைகள்) விதிகளின்படி, புட்டிகளில் அல்லாமல் வேறு வகையில் சாராயம் வழங்க 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாள் வரை அனுமதிக்கப்பட்டது. இருந்தபோதிலும் 1—9—1981 ஆம் நாளிலிருந்தே எல்லா இடங்களிலும் புட்டிகளில் அடைத்த சாராயம் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. மொத்த விற்பனையாளர்கள் இயங்காத அல்லது நியமிக்கப்படாமலுள்ள சில மாவட்டங்களில் சாராயச் சில்லறை விற்பனைக் கடைக்காரர்கள் சாராயக் கலவைத் தொழிற்சாலையிலிருந்து நேரடியாக சாராயம் பெற அனுமதிக்கப்பட்டனர். குறிப்பிட்ட சில மாவட்டங்களில், மாவட்டத்திலுள்ள சாராயக் கலவைத் தொழிற்சாலைகள் செயல்படத் தொடங்கும் வரை சாராயச் சில்லறை விற்பனைக் கடைக்காரர்கள் அருகில் உள்ள மாவட்டங்களில் இருக்கும் சாராயக் கலவைத் தொழிற்சாலைகளிலிருந்து அவர்களுக்குரிய சாராயத்தை எடுத்துக் கொள்ளவும் அனுமதிக்கப்பட்டனர். மதுவிலக்கு ஆயத்தீர்வை ஆணையரால் இது அவ்வப்போது முறைப்படுத்தப்பட்டு வந்தது உரிமதாரர் கேட்டிருந்த அளவு சாராயத்தை வழங்க ஆயத்தீர்வை அதிகாரியால் மேலொப்பமிட்டிருந்து அதன் படி சாராயம் உரிமதாரருக்கு கிடைக்கப் பெறாமல் இருந்தால் அல்லது அதற்குக் குறைவாகக் கிடைக்குமானால் ஆணையர் மாவட்ட ஆட்சியருடன் கலந்தாலோசித்து உரிமதாரர் அந்த மாதத்திற்குக் கொடுக்கவேண்டிய குத்தகைத் தொகையை அல்லது அதில் ஒரு பகுதியை தள்ளுபடி செய்யலாம்.

10. சாராயம் இப்பொழுது, 750 மில்லி லிட்டர், 375 மில்லி லிட்டர், 180 மில்லி லிட்டர் கொண்ட புட்டிகளில்தான் விற்கப்படுகிறது. சில்லறை விற்பனை விலையை அரசோ, மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை ஆணையரோ நிர்ணயிக்கவில்லை.

11. சாராயம் சில்லறை விற்பனைக் கடைக்காரர்கள் நகர்ப் பகுதிகளில் உயர்ந்த அளவு 3 கிளைகளையும் கிராமப் பகுதிகளில் 4 கிளைகளையும் திறக்க அரசு அனுமதி தந்துள்ளது.

(2) சாராய மொத்த விற்பனை:

12. சாராயக்கலவை ஆலைகளிலிருந்து புட்டிகளில் நிரப்பப் பட்ட சாராயம் மொத்த விற்பனையாளர்களுக்கு விற்கப்படு கின்றது. மொத்த விற்பனை மூலம் சாராயத்தை விற்பதற்கான உரிமையை மதுவிலக்கு–ஆய த்தீர்வை ஆணையாளர் அரசின் முன் ஒப்புதல் பெற்ற பின்னர் வழங்குகிறார். ஆணையாளர், அரசின் ஒப்புதலுக்குட்பட்டு, புட்டியில் நிரப்பப்பட்ட சாராயத்தை மொத்த விற்பனையாளர் அல்லது சில்லறை விற்பனையாளர் விற்பனை செய்யும் இடங்களையும், எண்ணிக்கையையும் நிர்ண யிக்கலாம். ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் மொத்த விற்பனையாளர் ஒருவரை நியமிக்க அரசு ஏற்பளித்துள்ளது. அதன்படி, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒருவர் வீதம் இம்மா நிலத்தில் மொத்த விற்பனையாளர்கள் 16 பேரை நியமிக்க வேண்டும். சில்லறை விற்பனையாளர்களுக்குச் சாராயத்தை விற்பதற்கு வசதியாக இருக்கும் பொருட்டு ஒவ்வொரு வருவாய் கோட்டத்திலும் ஒவ்வொரு மொத்த விற்பனையாளரும் துணை விற்பணை நிலையம் ஒன்றை அமைக்க வேண்டும். 13 மாவட்டங் களுக்கு மொத்த விற்பனையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எஞ்சிய மூன்று மாவட்டங்களிலே, இரண்டு மாவட்டங்களில் உயர் நீதுமன்றத்தடையாணையின் காரணமாகவும் ஒரு மாவட்டத்தில் தகுந்த நபர் எவரும் கிடைக்காததாலும் மொத்த விற்பனை யாளர்கள் இன்னும் நியமிக்கப்படவில்லை.

13. மொத்த விற்பனையாளர்கள் இல்லாத இடங்களில், சில் லறைக்கடை வைத்திருப்போர் சாராயக்கலவை ஆலைகளிலிருந்து சரக்குகளை நேரடியாக எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ள டுள்ளனர்.

(3) சாராயம் தயாரித்தல் :

14. புட்டிகளில் நிரப்பப்படும் சாராயத்தைத் தயாரிப்பதற் காக 10 சாராயக் கலவை ஆலைகளை ஏற்படுத்த அரசு முடிவு செய்தது. அதன்படி மாநிலத்தில் 10 கலவை ஆலைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவை தமிழ்நாடு 1981 ஆண்டு சாராயம் (தயாரிப்பு) விதிகளின் விதித்துறைகளின் கீழ் செயற்படுகின்றன. மேற்கூறிய கலவை ஆலைகள் 16—7—81க்கு பின்னர் செயல்பட தொடங்கின. எனவே கலவை ஆலைகள் அமைக்கப்படாத இடங்களில், தொடக்க நிலையில் புட்டிகள் அல்லாமல் அப்படியே சாராயம் வழங்க அனுமதிக்கப்பட்டது. 1—9—1981 லிருந்து மாநிலத்திலுள்ள கலவை ஆலைகள் அனைத்



திலிருந்தும் புட்டிகளில் சாராயம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. 10 கலவை ஆலைகளிருந்தும் 31—12—1981 வரையில் 3,17,84,102 லிட்டர் சாராயம் வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு பல்க் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 4 வீதம் ரூ.12.71,36,408/— ஆயத்தீர்வை கிடைத்துள்ளது. கலவை ஆலைகளுடன் இணைக்கப்பட்டுள்ள வட்டார அறிவியல் ஆய்வுக்கூடத்தில் சாராயத்தின் தன்மையும், தரமும் பரிசோதிக்கப்பட்ட பின்னர் தான் கலவை ஆலைகளிலிருந்து புட்டிகளில் நிரப்பட்ட சாராயம் மொத்த விற்பனையளாளர்களுக்கு சில்லரை விற்பனை யாளர்களுக்கு அளிக்கப்படுகிறது.

## இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகள்

(1) சில்லறை விற்பனை :

15. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மது (உரிமம்-அனுமதி) விதிகளின்படி இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகள் சில்லறை விற்பனையாக விற்கும் உரிமைக்கு உரிமம் வழங்கப்பட்டு வருகிறது. சில்லரைக் கடைகளின் எண்ணிக்கை குறித்து வரையறை எதுவும் கிடையாது. தேவைக்கேற்ப, புட்டிகளில் நிரப்பப்பட்ட இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மது வகைகளை சில்லரையில் விற்பனை செய்வதற்காக தீர்வை ஆணையாளருக்கு அதிகாரமுண்டு. இந்த உரிமைகளுக் காக மனுக்கள் செய்யப்பட்டால் ஒவ்வொரு மனுவும் குறிப்பிட்ட பகுதிக்குத் தேவையாகதா ; உரிமம் வழங்கப்பட்டால் பொது நலனுக்கு பாதகம் ஏற்படுமா ; அநத உரிமம் தவறாகப் பயன் படுத்த ஏதுவுண்டா என்றெல்லாம் ஆய்வு செய்யப்பட்டு, உரிமம் அளிக்க தகுதி என்று ஆணையர் கருதிய பின்னரே உரிமம் வழங்கப்படும். இதுவரையில் 1208 F.L.1. உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் 210 உரிமைகள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

16. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகளில் மொத்த விற்பனை, சில்லரை விற்பனை உரிமை, மது விலக்கைத் தளர்த்துவதற்கு முன்னர், தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு மது (உரிமை-அனுமதி) விதிகளின் கீழ், முறைப்படுத்தப் பட்டு மொத்த விற்பனை, மற்றும் சில்லரை விற்பனை உரிமைக்கு ஒருங்கிணைந்த உரிமம் வழங்கப்பட்டு வந்தது. 23—5—81 லிருந்து செயலுக்கு வந்த திருந்திய நடைமுறையின்படி, மொத்த விற்பனையாளர் ஒருவர், சில்லறை விற்பனையாளராக இருப்பதும் சில்லரை விற்பனையாளர் மொத்தவிற்பனையாளராக இருப்பதும் கூடாது என்று தடை செய்யப்பட்டது. 1960 ஆம் ஆண்டு விதி களின்படி 313 சில்லறை விற்பனையாளர்கள்-இவர்களுள் 12 பேர் மொத்தவிற்பனையாளர்கள்-இருந்தனர். ஆனால், 1981 ஆம் விதி களின் படி 1208 சில்லறை விற்பனையாளர்கள் உள்ளனர்.

**இந்தியாவிற் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மது வகைகள் மொத்த வற்பனை.—**

17. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுவகைகள் (மொத்த விற்பனைக்கு வழங்குதல்) விதிகள், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மது வகைகளின் மொத்த விற்பனை உரிமை மற்றும் உரிமத்தை வழங்கல் மொத்த வியாபாரிகள் செயற்பட வேண்டிய முறைகள் ஆகியவற்றை முறைப்படுத்துகின்றன.

18. செங்கற்பட்டு, சென்னை நீங்கலாக, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒன்று வீதமும், சென்னை மாநகராட்சியில் அடங்கிய பகுதிகள் நீங்கலாக ஏனைய செங்கற்பட்டு மாவட்டம் சென்னை மாநகராட்சியில் அடங்கிய பகுதிகள் ஆகியவைகளுக்கு ஒவ்வொன்று வீதமும் மொத்த விற்பனை நிலையங்களின் எண்ணிக்கையை அரசின் ஒப்புதலுடன் மதுவிலக்கு ஆயத்தீர்வை ஆணையாளர் 16 ஆக நிர்ணயித்துள்ளார். மொத்த விற்பனையாளர்கள் 14 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். தகுந்த நபர்கள் கிடைக்காததால் சேலம், பெரியார் ஆகிய மாவட்டங்களுக்கு மொத்த விற்பனையாளர்கள் இன்னும் நியமிக்கப்படவில்லை.

19. மேலே குறிப்பிட்ட மொத்த விற்பனையாளர்கள் 16 பேரைத் தவிர, இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மது வகைகள் சில்லரையில் விற்பதற்கு மாநிலத்திலுள்ள பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்குவதற்கு மொத்த விற்பனையாளராகத் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் நியமிக்கப் பட்டுள்ளது.

20. முன்னரே குறிப்பிட்டுள்ளதுபோல், 1960 ஆம் ஆண்டு விதிகளின் படி வழங்கப்பட்ட ஒருங்கிணைந்த உரிமத்தின்படி சில்லறை விற்பனையாளர்களாகச் செயல்பட்டு வந்த மொத்த விற்பனையாளர்கள், 1981 ஆம் ஆண்டு விதிகளின் கீழ் அவ்வாறு செயல்படமுடியாது, தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு மது (உரிமம் அனுமதி) விதிகளின் கீழ் புட்டிகளில் நிரப்பப்பட்ட மதுவை வைத்திருக்க, விற்பனை செய்ய அல்லது வழங்குவதற்கான ஒவ்வொரு உரிமமும் 1981, செப்டம்பர் 30 ஆம் நாள் முடிந்ததும் செல்திறன் அற்றுப்போகும் என்றும், அவ்வாறு செல்திறனற்று போகும் உரிமத்தைப் வைத்துள்ள ஒவ்வொருவரும் தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுவகைகள் (மொத்த விற்பனைக்கு வழங்குதல்) விதிகள் அல்லது தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மது (உரிமம்-அனுமதி) விதிகளின்கீழ் உரிமத்தைப் பெறுவதற்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம் என்று தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மதுவிலக்கு





(இரண்டாவது திருத்த) ச்சட்டத்தின் மூலம் (தமிழ்நாடு சட்டம் 51/1981) கொண்டு வரப்பட்ட தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் 23-ஏ பிரிவில் கூறப்பட்டுள்ளது.

21. சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சில ரிட் மனுக்களில் உயர்நீதி மன்றம் இந்த விதித்துறைகள் செல்லுபடி ஆகும் என்று தீர்ப்பளித்துள்ளது. ஆனால், பாதிக்கப்பட்ட உரிமதாரர்கள் உச்ச நீதிமன்றத்துக்கு தாக்கல் செய்து கொண்ட மேல்முறையீடுகளின் மேல், உச்ச நீதி மன்றம் 31—3—82 வரையில் 1960 ஆம் ஆண்டு விதிகளின் கீழ் வழங்கப்பட்ட ஒருங்கிணைந்த உரிமத்தின் கீழ் அவர்கள் செயல்பட அனுமதித்துள்ளது.

**இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மது வகைகள் தயாரித்தல் :**

22. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மது வகைகள் தற்போது தமிழ்நாட்டில் தயாரிக்கப்படவில்லை. அதனால் மாநிலத்திற்குத் தேவைப்படும் இந்தியாவில் தாயரிக்க படும் அயல் நாட்டு மதுவகைகள் முழுவதையும் பிற மாநிலத்திலுள்ள தயாரிப்பாளர்களிடமிருந்து வாங்க வேண்டியுள்ளது,

23. இம்மாநிலத்திலுள்ள மொத்த விற்பனையாளர்களுக்குத் தயாராகச் சரக்குகளை வழங்குவதற்கு இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகள் தயாரிப்பாளர்களுக்கு இயலும் பொருட்டு, பொருட்களைச் சேமித்து வைத்து, மொத்த விற்பனையாளர்களின் தேவைக் குறிப்புகளுக்கு ஆயத்தீர்வை செலுத்துவதன் பேரில் சரக்குகளை வழங்குவதற்காக இம்மாநிலத்தில் பண்டகசாலைகளை அமைக்க அந்தத் தயாரிப்பாளர்களுக்கு அனுமதி அளிப்பது பற்றி அரசு ஆராய்ந்து வருகிறது.

எரிசாராயம் (Rectified spirit)

24. எரிசாராயம், சாராயம். தயாரிப்பதற்கு அடிப்படை பொருளாகும். மேலும், இது பல்வேறு தொழிற்சாலை காரியங்களுக்கும் விஷசாராவி (De Natured spirit) முதலியவை தயாரிப்பதற்கும் தேவைப்படுகிறது: எரிசாராயத்தைத் தயாரிப்பதற்குத் தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு வடிசாலை விதிகளின்கீழ் இம்மாநிலத்தில் எட்டு வடிசாலைகளுக்கு உரிமம் வழங்கப்பட்டிருந்தது. தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு வடிசாலைகள் விதிகளின் கீழ் வரும் அனைத்து வடிசாலைகளுக்குரிய வடிசாலை உரிமம், தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசர சட்டம் எண். 3/1981) அதிகார முறையில் வெளியிட்டபோது, அதாவது 23—5—1981 ஆம் நாளிலிருந்து 15 நாட்கள் முடிவடைந்த நாளன்று செல்திறனற்றுப்

போய்விட்டதாகக் கருதப்பட்டது. இவ்வாறு, உரிமம் செல்திறன் அற்றுப்போன வடிசாலைகள் அனைத்தும், தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வடிசாலை விதிகளின் கீழ்ப் புதிதாகச் சிறப்புரிமையையும் உரிமத்தையும் பெற விண்ணப்பிக்குமாறு வகை செய்யப்பட்டது. அதற்கிணங்க, இம் மாநிலத்திலுள்ள 8 வடிசாலைகளும் புதிதாக உரிமங்களைப் பெற்றுள்ளன.

25. தமிழ்நாட்டில் , ஆல்கஹால் உற்பத்தி மேம்பாட்டிற்காக நிலைக்குழு ஒன்று உள்ளது. தனிப்பட்ட வடிசாலைகளைப் பொறுத்த வரையில் நிலைக்குழு அளித்துள்ள பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. மேம்படுத்தப்பட்ட உற்பத்தி நடவடிக்கைகளைச் செயற்படுத்தியதன் காரணமாகவும், சர்க்கரை ஆலைகளிலும் வடிசாலைகளிலும் கருப்பஞ்சாற்றுக் கசண்டைச் சேமித்து வைக்கச் சிறந்த ஏற்பாடுகளைச் செய்ததன் காரணமாகவும். தமிழ்நாட்டின் சராசரி உற்பத்தி ஒரு டன் கருப்பஞ்சாற்று கசண்டுக்கு சுமார் 225 லிட்டர் என்று அதிகரித்துள்ளது. கருப்பஞ்சாற்று கசண்டுகளைச் சேமித்து வைப்பதற்குரிய மேம்பாட்டு வசதி பற்றி, மதுவிலக்கு-ஆயத்தீர்வை ஆணையாளர் தொடர்ந்து ஆய்வு செய்து வருகிறார்.

26. இந்திய அரசின் பெட்ரோலியம் அமைச்சகம், அமைத்துள்ள கருப்பஞ்சாற்று கசண்டுகள் மத்தியக் குழு கருப்பஞ்சாற்று கசண்டுகளும் (mol sses) ஆல்கஹாலும் உபரியாகயுள்ள மாநிலங்களிலிருந்து அவை பற்றாக்குறையுள்ள மாநிலங்களுக்குத் தற்காலிகமாக ஒதுக்கீடு செய்யும் பொருட்டு, தேவை, கிடைக்கப் பெறும் அளவு ஆகியவற்றை மதிப்பீடு செய்யவும், கருப்பஞ்சாற்றுக் கசண்டுகள்-ஆல்கஹால் ஆண்டின் தொடக்கத்தில் ஆண்டுதோறும் கூடி இது தொடர்பான பிற கூறுகள பற்றி கலந்துரையாடலும் இயலும் வகையில் கூடுகிறது.

27. இம்மாநிலத்தில் ஆல்கஹாலைப் பெரும் அளவில் பயன்படுத்துவோர், திருவாளர்கள் கெமிக்கல்ஸ் அண்டு பிளாஸ்டிக்ஸ் இந்தியா லிமிடெட், குன்னூருக்கு அருகில் அரவங்காட்டிலுள்ள திருவாளர்கள் கார்டைட் பேக்டரி, திருவாளர்கள் திருச்சி வடிசாலைகள் கெமிக்கல்ஸ் லிமிடெட் ஆவர், பிற மாநில அரசுகள் கேட்டுக்கொள்வதன் பேரிலும், இந்திய அரசு செய்துள்ள மாநிலங்களுக்கிடையிலான ஒதுக்கீடுகளின் அடிப்படையிலும் உள்ளூர் தேவைகளைப் பாதிக்காத வகையில் ஏனைய மாநிலங்களுக்கு ஆல்கஹால் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

28. தொழில் காரியங்களுக்காக ஒதுக்கப்பட்ட ஆல்கஹாலை அருந்துவதற்குப் பயன்படுத்துவதை திறம்படத் தடுத்து நிறுத்தும் நோக்கத்துடன் பிரஞ்சு பாலிஸ், வார்னிஷ் முதலியவை தயாரிப்பது பொறுத்துறையில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.



தொழிலுக்கென்று உண்மையாகப் பயன்படுத்துபவர்கள். தங்களுக்குரிய தேவைகளை நியாயமான விலையில் பெற இயலும் வண்ணம், அம்பத்தூரிலுள்ள டான்ஸி தொழிற்சாலையும், மதுரையிலும் வனத்துறை நடத்தி வரும் அரக்குத் தொழிற்சாலையும், வார்னிஷ், மெருகூட்டி, வார்னிஷ் இளக்கி (தின்னர்ஸ்) பிச்சர் வார்னிஷ், 'கேஷ்கட், ஷெல்லாக் முதலியவற்றைக் தயாரிக்கும் பணியை மேற்கொண்டுள்ளன. இத்தொழில் பிரிவுகளின் உற்பத்திப் பொருட்கள், அவற்றைப் பெருமளவில் பயன்படுத்துபவர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாகவும், நேரடியாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

கருப்பஞ்சாறு கசண்டு

29. சர்க்கரைஆலைகளில், சர்க்கரைத் தயாரிப்பதிலிருந்து கருப்பஞ்சாற்றுக் கசண்டு துறைப் பொருளாகக் கிடைக்கிறது. கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சாராவி தயாரிப்பதற்குரிய அடிப்படை மூலப் பொருளாகும். சர்க்கரை ஆலைகள் இயக்குநர் முன்னர், கருப்பஞ்சாற்றுக் கசண்டு மாநிலக் கட்டுப்பாட்டாளராகச் செயல்பட்டு வந்தார். இவருக்குப்பதிலாக இவருடைய பதவி இடத்தில் 23-7-1981-லிருந்து மதுவிலக்கு-ஆயத்தீர்வை ஆணையர் கருப்பஞ்சாற்று கசண்டு மாநிலக் கட்டுப்பாட்டாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அவற்றிலிருந்து தயாரிக்கப்பட்ட கருப்பஞ்சாற்று கசண்டுகள், ஆல்கஹால் ஆகியவற்றைச் சேமித்து வைத்தல், கொண்டு செல்லுதல், பயன்படுத்துதல் ஆகியவற்றைச் சிறந்த முறையில் கட்டுப்படுத்துவதை உறுதி செய்யும் பொருட்டு இவ்வாறு செய்யப்பட்டுள்ளது.

30. சாராயத்தையும் ஆல்கஹாலையும் கள்ளத்தனமாக வடிப்பதற்குப் பயன்படுத்தும் முக்கிய மூலப் பொருள்களில் ஒன்றான கருப்பஞ்சாற்றுக் கசண்டு, கள்ளச் சந்தைக்குச் செல்லுவதைத் தடுக்கும் வகையில், அதன் ஒதுக்கீடு கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. கருப்பஞ்சாற்றுக் கசண்டு விற்பனை செய்ய இடைத் தரகர்களுக்கு எப்போதுமே உரிமங்கள் வழங்கப்படுவதில்லை. வடிசாலைகள், கால்நடை தீவனம், கோழி இரை தயாரிப்பவர்கள், நல்லெண்ணய் தயாரிப்பவர்கள் போன்ற பயன்பாட்டாளர்களுக்கு மட்டுமே உரிமங்கள் வழங்கப்படுகின்றன சர்க்கரை ஆலைகள், வடிசாலைகள், ஏனைய உரிமதாரர்களின் வளாகங்கள் ஆகியவற்றைக் குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை சோதனையிடுமாறும், திடீர் சோதனைகள் வாயிலாகவும் முறை கேடுகளைத் தடுக்குமாறு மாவட்ட அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். காவல் துறையினரும் வனத்துறைப் பணியாளர்களும் இணைந்து செயலாற்றுமாறு பார்த்துக் கொள்ளப்பட்டது. இது வெகு தொலைவிலுள்ள வனப்பகுதிகளிலும் ஏனைய பகுதிகளிலும் கள்ளத்தனமாகச் சாராயம் வடித்தலைக் கண்டுபிடிப்பதில் உதவியுள்ளது. கள்ளச்சாராயம் காய்ச்சும் நேர்வுகள் துப்பு

துலக்கப்பட்டு குற்றவாளிகள் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இதே போன்று ஆல்கஹாலைக் கள்ளத்தனமாக விற்பனைக்குக் கொண்டு செல்லும் சாத்தியக் கூறுகளை அகற்றும் பொருட்டு வடிசாலைகள் மீதான கட்டுப்பாடு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இம்மாநிலத்திற்குள் காவல்துறை மெய்க்காவலர் துணையுடன் எரிசாராயம பாதுகாப்போடு கொண்டு செல்லப்படுகிறது சாராயம் தயாரிப்பதற்காக, சாராயக்கலவை ஆலைகள், சாராவியைக் (எரிசாராயம்) கொண்டு செல்லும்போது இக்காரியத்திற்காக நியமிக்கப்பட்டுள்ள ஆயத்தீர்வை ரோந்து ஆய்வாளர்களும் உடன் செல்கின்றனர். கருப்பஞ்சாற்றுக் கசண்டு நடமாட்டத்தைக் கண்காணிக்கும் பொருட்டு ஒவ்வொரு சர்க்கரை ஆலையிலும் தேவையான பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்தில் 8 வடிசாலைகளும் 21 சர்க்கரை ஆலைகளும் உள்ளன

விஷச்சாராவி. (Denatured Spirit)

31. விஷச் சாராவி, மெதனால், வார்னிஷ், ஆகியவற்றைப் பயன்படுத்தவும் விற்பனை செய்யவும், விஷச் சாராவி, மெதனால் ஆகியவற்றைக் கொண்டு பொருட்களைத் தயாரித்து விற்பதற்கும் D.L.வரிசை உரிமங்கள் வழங்கப்படுகின்றன.

32. சாராவியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் வார்னிஷ்,பிரஞ்சு பாலீஸ் முதலியவை போன்றவற்றைத் தயாரிப்பதற்காகப் பெருவாரியான உரிமதாரர்களுக்கு வழங்கப்படும் விஷச்சாராவி, கள்ளச் சாராயம் காய்ச்சவும் இடமளித்து விடுகிறது. எனவே உரிமதாரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள சாராவி குறையாகப் பயன்படுத்தப் படுகின்றதா என்பதை சரிபார்க்கும் நோக்கத்துடன், உரிமதாரர்களின் வளாகங்களையும், கணக்குகளையும் ஆய்வு செய்யச் சிறப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டது. புதுடில்லி, தொழில் நுட்ப மேம்பாட்டுத்துறை தலைமை இயக்குநரிடம் அல்லது சென்னை, தொழில் வணிகத் துறை இயக்குநரிடம் பதிவு செய்துள்ளவையும், சாராவியை அடிப்படையாகக் கொண்டு பொருட்களைத் தயாரிப்பவையுமான பிரிவுகளுக்கு மட்டுமே உரிமங்கள் வழங்கப்படுவதோடு, சாராவியையும் வார்னிஷையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்யவும் உரிமையை கூட்டுறவுச் சங்கங்களிடமும், பொதுத் துறைப் பிரிவுகளிடமும் ஒப்படைத்து, 1—10—1978 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வரும் வண்ணம், தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டம் திருத்தப்பட்டுள்ளது.

மருந்து—ஒப்பனைப் பொருள்கள் தயாரித்தல் :

33. 1955 ஆம் ஆண்டு மருந்து-ஒப்பனைப் பொருள்கள் தயாரித்தல் சட்டத்தின்படி சாராவி ஒதுக்கப்பட்டுள்ள உரிமதாரர்களின் நடவடிக்கைகள் ஆய்வுக்கு உட்பட்டவையாகும்.



டிஞ்சர் சிஞ்சிபெரி (Tin tcere zinigiberis) கள்ளத்தனமாக இம்மாநிலத்திற்குள் கொண்டுவருவதைத் தடுக்கும் பொருட்டு, மாநில எல்லைப் பகுதிகளில் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

34. கள்ளச்சாராய விற்பனைக்கு, ஆசவங்கள், அரிஷ்டங்கள், கஷாயங்கள் ஆகியவை ஆதாரப் பொருள்களாக அமைந்துவிட்டன. ஆசவங்கள், அரிஷ்டங்கள், கஷாயங்கள் என்கிற பெயரில் சாராயம் விற்கப்பட்டு வருகிறது. அவ்வாறு தவறாகப் பயன்படுத்துபவர்களைத் துப்பறிவதற்காகச் சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன் பயனாக, போலித் தயாரிப்புகள் அடங்கிய ஏராளமான மாதிரிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. எல்லா இனங்களிலும் தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் கீழாயினும், 1940 ஆம் ஆண்டு மருந்துகள்—ஒப்பனைப் பொருள்கள் சட்டத்தின் கீழாயினும் இயன்ற மட்டில் இவ்விருச் சட்டங்களின் கீழும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

35. ஆசவங்கள், அரிஷ்டங்கள், கஷாயங்கள் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கு அனுமதிக்கப்பெற்ற எல். 2. உரிமதாரர்களின் செய்முறைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு மருந்துகளைத் தயாரித்து, விற்பது முதலியவற்றை முறைப்படுத்த வகை செய்யும் 1940-ஆம் ஆண்டு மருந்துகள் ஒப்பனைப் பொருட்கள் சட்டத்தின் அத்தியாயம் IV-A 1—7—1977 முதல் தமிழ்நாட்டிற்கும் பொருந்தும் வகையில் நீட்டிக்கப்பட்டுள்ளது. இதன் பயனாக, எந்த நிபந்தனைகளின் கீழ் உள்நாட்டு மருந்து பொருட்கள் தயாரிக்கப்பட வேண்டும் என்பதையும், அத் தயாரிப்பாளர்கள் மற்றும் அவர்களது பணியாளர்கள் பெற்றிருக்க வேண்டிய கல்வித் தகுதிகள் தரக் கட்டுப்பாடு, விற்பனைகளை முறைப்படுத்தல் முதலியவற்றிற்காக அவர்களது உற்பத்தி பொருட்களை சோதனையிடுதல் ஆகியவை குறித்த நிபந்தனைகளைத் தற்போது வரையறுக்க இயலும், 1940 ஆம் ஆண்டு மருந்துகள் ஒப்பனைப் பொருட்கள் சட்டத்தின் IVA அததியாயத்தின் விதித்துறையை செயற்படுத்தியதன் பயனாக, ஆசவங்கள், அரிஷ்டங்கள் முதலியவற்றின் தயாரிப்பாளரின் நடவடிக்கைகள், கண்டிப்புடன் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அத்தகைய பொருட்கள் தயாரிக்க இப்போது உண்மைத் தயாரிப்பாளர்கள் மட்டுமே உரிமங்களைப் பெறவியலும்.

குளோரல் ஹைடிரேட் :

36. குளோரல் ஹைடிரேட் என்பது மிகவும் தீங்கு விளைவிக்கக்கூடிய ஒரு இராசாயனப் பொருளாகும். தமிழ்நாட்டில் குளோரல் ஹைடிரேட் தயாரிக்க முற்றிலும் தடை விதிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச்

சட்டத்தின்படிப் பிறப்பிக்கபட்ட தனி விதிகளின் கீழ் அதன் உபயோகம் முறைப்படுத்தப்படுகிறது. உண்மையில் பயன்படுத்துவோருக்கு மட்டுமே ஒரு சில உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து இம்மாநிலத்திற்குக் குளோரல் ஹைடிரேட் கள்ளத்தனமாகக் கொண்டுவருவதைத் தடுக்கும் பொருட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மதுவிலக்கைச் செயற்படுத்தல் :

37. தொடக்கத்தில் குறிப்பிட்டுள்ளதைப் போல், தமிழ்நாட்டில் மதுவிலக்கு தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. அதே நேரத்தில், கள்ளச் சாராயம் தொடர்பான உற்பத்தி, எடுத்துச் செல்லுதல், விற்பனை ஆகிய நடவடிக்கைகள் உறுதியாக ஒதுக்கப்படும் என்பதோடு, கடுமையான தண்டனையும் வழங்கப்படும். கள்ளச் சாராய விற்பனையாளர்கள் பொதுச் சுகாதாரத்திற்குக் கேடுவிளைவிக்கக் கூடியதும், சமுதாயத்திற்குத் தீங்கு விளைவிக்கக் கூடியதுமான மதுவகைகள், மயக்கம்தரும் மருந்துப் பொருட்ககள் ஏனைய பொருட்கள் ஆகியவற்றை நேரடியாக அல்லது தங்களது முகவர்கள் வாயிலாகச் சட்டத்திற்கு முரணாக அவற்றை வடித்தல், தயாரித்தல், கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல் அல்லது விநியோகித்தல் ஆகிய செயல்களில் ஈடுபடுகின்றனர். நச்சு கலந்த மதுவகைகளை உட்கொள்வதால் சில சமயங்களில் பலர் இறக்க நேரிடுகிறது. நல்ல வருவாய் தரக்கூடிய வியாபாரமாக கள்ளச்சாராய உற்பத்தி/ வியாபரம் அமைந்து விடுகிறது. மேலும், சமூகத்தின் தீய சக்திகள், சமுதாயத்தைச் சூறையாடும் அளவுக்கு பண பலமும் அடைவதற்குரிய வழியாக இது அமைந்து விடுவதை நாம் காண்கிறோம்.

38. கள்ளச்சாராயம் காய்ச்சுவோரான சமூக விரோதிகளின் நடவடிக்கைகளைத் தடுப்பதன் வாயிலாக இம்மாநிலத்தில் அமைதியையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதை உறுதி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ்க் குற்றம் செய்பவர்கள், குண்டர்கள், விபச்சாரக் குற்றம் செய்பவர்கள், சட்டவிரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் பற்றிய அவசரச் சட்டம் (தமிழ் நாடு அவசரச் சட்டம் 1/1982) 5—1—1982 அன்று ஆளுநர் அவர்களால் அதிகார முறையில் வெளியிடப்பட்டது. சட்டமன்றத்தில் இந்த அவசரச் சட்டத்திற்குப் பதிலாக, சட்ட முன்வடிவும் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இந்த சட்டத்தின் கீழ் இதுவரை 47 பேர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.



39. மேற்சொன்ன சட்டத்தைத்தவிர, தமிழ்நாடு 1937ஆம் ஆண்டு மது விலக்குச் சட்டத்தின் கீழ் குறிப்பிட்டுள்ள குற்றங்கள் செய்ததற்காகச் சம்பந்தப்பட்ட நபர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

40. 1980 செப்டம்பர் திங்களில் மதுவிலக்கைச் செயற்படுத்தும் அதிகாரம், உள்ளூர் காவலரின் அதிகார வரம்பிலிருந்து எடுக்கப்பட்டு, காவல் துறையில் இதற்கென்று தனியாக உள்ள மதுவிலக்கைச் செயற்படுத்தும் பிரிவிடம் முழுமையாக ஒப்படைக்கப்பட்டது. காவல்துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் (செயற்படுத்தல்) இதன் தலைவராவார். காவல்துறை டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் (செயற்படுத்தல்) ஒருவரும், ஏனைய பணியாளர்களும் அப்பிரிவில் பணியாற்றுகின்றனர். கள்ளத்தனமாக வடிக்கப்பட்ட மது, உடல் நலத்துக்குக் கேடுவிளைவிக்கும் என்பது மட்டுமல்லாமல் சாராயம், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மது வகைகள், இதர போதைப் பொருட்களை அதிக அளவில் கள்ளத்தனமாகக் கடத்துவதால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படாமலும் பார்த்துக் கொள்வதற்காக கள்ளத்தனமாக மதுவை வடிப்பவர்களையும், அவற்றைக் கள்ளத்தனமாகக் கடத்துபவர்களையும் கண்டுபிடிப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

1-9—1980-க்கும் 31-12-1980—க்கு மிடைப்பட்ட காலத்தில் கள்ளத்தனமாக மதுவை வடித்ததற்காக 5,720 நபர்களும், கள்ளத்தனமாக வடிக்கப்பட்ட மதுவையும், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல் நாட்டு மதுவகைகளையும் எடுத்து சென்றதற்காக 12,762 இனங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன 1-1-1981 முதல் 31-12-1981 வரை கள்ளத்தனமாக மதுவை வடித்ததற்காகவும், அவ்வாறு வடிக்கப்பட்ட மதுவையும் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல் நாட்டு மது வகைகளையும் எடுத்துச் சென்றதற்காகவும் 16,466, மற்றும் 31,237 இனங்களும் முறையே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

யது 1-9-1980 முதல் 31-12-1980 வரையுள்ள காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மொத்த இனங்களின் (59,083) 80 சதவீதமுமாகும். கடந்த ஐந்து ஆண்டுகளில் கண்டுபிடிக்கப்பட்ட மதுவிலக்கு சட்டத்தின் கீழ் உள்ள குற்றங்களின் பட்டியல் வருமாறு—

கண்டுபிடிக்கப்பட்ட மதுவிலக்குக் குற்றங்கள் பற்றிய விவரங்கள்

(40-ஆம் பத்தியைப் பார்க்கவும்.)

| தொடர் எண்ணும் விவரங்களும். | 1976–77 | 1977–78 | 1978–79 | 1979–80 | 1980–81 | 1981–82 (31–12–81) வரை. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 ஏனைய மாநிலங்களிலிருந்து மதுவைக் கள்ளத்தனமாக கடத்துதல். | 5,834 | 5,241 | 5,609 | 4,400 | 2,534 | 969 |
| 2 ஒரு மாவட்டத்திலிருந்து மற்ற மாவட்டத்திற்கு மதுவைக் கள்ளத்தனமாகக் கடத்துதல். | 193 | 429 | 597 | 193 | 801 | 286 |
| 3 கள்ளச் சாராயம் காய்ச்சுதல். | 59,262 | 54,075 | 44,512 | 34,697 | 29,504 | 16,466 |
| 4 எரி சாராயம் அல்லது கள்ளத்தனமாக வடிக்கப்பட்ட சாராயத்தை வைத்திருத்தல் | 1,87,141 | 1,77,853 | 1,29,111 | 64,878 | 25,022 | 2,643 |
| 5 கள்ளத்தனமாக வடிக்கப்பட்ட சாராயத்தை அல்லது எரி சாராயத்தை விற்பனை செய்தல். | 10,523 | 18,219 | 23,704 | 25,151 | 21,570 | 3,785 |
| 6 உரிமம் இல்லாமல் கள்ளைப் புளிக்க வைத்தல். | 6,488 | 9,663 | 5,462 | 1,258 | 3,089 | 1,503 |
| 7 உரிமம் இல்லாமல் பதநீரைப் புளிக்க வைத்தல். | 260 | 299 | 87 | 84 | 348 | 20 |
| 8 உரிமம் இல்லாமல் மரத்திலிருந்து பதநீரை இறக்குதல். | 743 | 1,213 | 468 | 179 | 295 | 104 |
| 9 மதுவை கள்ளத்தனமாக எடுத்துச் செல்லுதல். | 10,569 | 19,049 | 24,749 | 25,141 | 34,056 | 31 237 |

கண்டுபிடிக்கப்பட்ட மதுவிலக்குக் குற்றங்கள் பற்றிய விவரங்கள்—தொடர்ச்சி.
(40-ம் பத்தியை பார்க்கவும்.)

| தொடர் எண்ணும் விவரங்களும். | 1976–77 | 1977–78 | 1978–79 | 1979–80 | 1980–81 | 1981–82 (31-12-81 வரை.) |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 10 மதுவை உரிமம் இல்லாமல் விற்பனை செய்தல். | 436 | 409 | 206 | 63 | 27 | .. |
| 11 மதுவை உரிமம் இல்லாமல் வைத்திருத்தல். | 17,412 | 22,115 | 13,404 | 2,860 | 2,820 | 1,168 |
| 12 ஹேம்ப் மருந்துச் செடி வகைகளைப் பயிரிடுதல். | 42 | 195 | 207 | 206 | 88 | 2 |
| 13 பிற மாவட்டங்களிலிருந்து மற்ற மாவட்டங்களுக்கு மருந்து வகைகளைக் கள்ளத்தனமாகக் கடத்துதல். | .. | .. | .. | .. | .. | .. |
| 14 மருந்து வகைகளைக் கள்ளத்தனமாக எடுத்துச் செல்லுதல். | 37 | 75 | 115 | 159 | 141 | 198 |
| 15 மருந்து வகைகளை உரிமம் இல்லாமல் விற்பனை செய்தல். | 131 | 249 | 155 | 183 | 129 | 29 |
| 16 மருந்து வகைகளை உரிமம் இல்லாமல் வைத்திருத்தல். | 8,104 | 7,965 | 7,315 | 5,578 | 1,426 | 32 |
| 17 பல்வேறு குடிபோதையில் இருத்தல். | 1,05,125 | 67,249 | 76,440 | 62,566 | 10,816 | 217 |
| 18 விஷச் சாராயத்தைக் குடிக்கத்தக்கதாக அளித்தல். | 1,901 | 2,429 | 2,425 | 861 | 379 | 59 |
| 19 அபினை கள்ளத்தனமாகக் கடத்தல். | 2 | 1 | .. | .. | 21 | 6 |
| 20 அபினை எடுத்துச் செல்லுதல். | .. | .. | .. | .. | .. | .. |

| தொடர் எண்ணும் விவரங்களும். | 1976–77 | 1977–78 | 1978–79 | 1979–80 | 1980-81 | 1981–82 (31–12–81 வரை). |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 21 அபின்னை வைத்திருத்தல். | 314 | 418 | 357 | 639 | 235 | 31 |
| 22 அபினை விற்பனை செய்தல். | .. | .. | 1 | .. | .. | 1 |
| 23 அபாயகரமான மருந்துப் பொருள்கள் சட்டத்தின் கீழ்க் குற்றங்கள். | 262 | 171 | 28 | 84 | 98 | 35 |
| 24 ஏனைய பல்வகை இனங்கள். | .. | .. | .. | .. | 8 | 58 |
| மொத்தம் .. | 4,14,778 | 3,87,317 | 3,34,952 | 2,29,180 | 1,33,407 | 59,140 |





41. நீதித் துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றங்களில் முடிவடையாமலுள்ள பல மது விலக்குக் குற்ற வழக்குகளை விரைவில் முடிவு செய்வதற்காக கூடுதலாக 21 நீதித் துறை முதல் வகுப்பு மாஜிஸ்ரேட்டு நீதிமன்றங்களை ஏற்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டது.

42. முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் மட்டுமே விசாரணை செய்யக்கூடிய சில குற்றங்களை நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ரேட்டுகள் விசாரணை செய்ய இயலும் வகையில் உரியவாறு தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தை திருத்த அரசு முடிவு செய்துள்ளது.

43. பல்வகை மது மீது விதிக்கப்படும் ஆயத்தீர்வை விற்பனைக் கட்டண வீதங்கள் பற்றிய விவரங்கள் வருமாறு.

ஆயத்தீர்வை லெவி வீதங்களைக் காட்டும் விவர அறிக்கை.

| தொடர் எண்ணும் விவரங்களும். | ஆயத்தீர்வை ரூ. பை. | விற்பனைக் கட்டணம் ரூ. பை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 எரிசாராயம் (சாராவி) | 8.00 (புரூப் லிட்டர் ஒன்றுக்கு) | 1.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| 2 விஷச்சாராயம் மெதிலேடட் சாராவி, மெத்தனால். இந்தியாவில் தயாரிக்கப்பட்டஅயல் நாட்டு மது வகைகள் இறக்குமதி மீது விதிக்கப்படும் சரிசமத் தீர்வையும், காலனேஜ் கட்டணங்களும். | இல்லை | 1.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு). |

| . மொத்த உரிமதாரர்களின் இறக்குமதிக்காகவும், விற்பனைக்காகவும். | சரிசமத் தீர்வை | காலனேஜ் கட்டணம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (i) இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மது வகைகள். | 25.00 (புரூப் லிட்டர் ஒன்றுக்கு) | 2.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (ii) பீர் .. | 1·00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) | 0.35 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| B. கேன்டீன் ஸ்டோர்ஸ் துறையின் இறக்குமதிக்காக | | |
| (i) இந்தியாவில் தயாரிக்கப் பட்டஅயல் நாட்டு மது வகைகள்— | | |
| (a) ரம் .. .. | 2.75 (புரூப் லிட்டர் ஒன்றுக்கு) | 2.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (b) மற்ற மது வகைகள் | 25.00 (புரூப் லிட்டர் ஒன்றுக்கு) | 2.00 (பல்க் லிட்டர் ஒன்றுக்கு) |
| (ii) பீர் .. .. | 1.00 (புரூப் லிட்டர்) ஒன்றுக்கு) | 0.35 (பல்க் லிட்டர்) ஒன்றுக்கு) |
| C. சென்னை ஒருங்கிணைந்த உணவு சோதனைக் கூடத்தில் (ASC)— | | |
| (i) ரம் மட்டும் .. | 6.00 (புரூப் லிட்டர்) ஒன்றுக்கு) | 2.00 (பல்க் லிட்டர்) ஒன்றுக்கு) |

44. ''தீர்வை வருவாய்'' என்ற தலைப்பின் கீழ் 31–12–81 வரை கிடைத்த ரூபாய் 79 கோடியாகும். இது பற்றிய விவரங்கள் வருமாறு—

| (1) | (2) (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| 1 நாட்டு சாராவி (சாராயம்) .. .. | 50·66 |
| 2 புளிக்கவைக்கப்பட்ட நாட்டு மது (கள்) | 14.71 |
| 3 மாவூறல் மது (பீர்) .. .. | 1.35 |
| 4 அயல்நாட்டு மதுவும், சாராவியும் .. | 9.01 |
| 5 வணிக விஷச்சாராயம், மருந்து கலந்த திராட்சை ரசங்கள். | 1.51 |
| 6 அபின், சாராயம் முதலியவை அடங்கிய மருந்து ஒப்பனைத் தயாரிப்புப் பொருட்கள். | 1.48 |
| 7 அபின், மருந்துச் செடியும், ஏனைய மருந்து களும் (ரூ. 43,000 மட்டும்). | |
| 8 ஏனைய வருவாய்கள் .. .. .. | 0.967 |
| 9 அபராதத் தொகைகளும், பறிமுதல்களும் | 0.16 |
| 10 பணியும், பணிக் கட்டணங்களும். .. | 0.01 |
| திருப்பித் தந்த தொகைகளைக் கழிக்கவும் (—) | 0.62 |
| மொத்தம் .. | 79.24 |



நிர்வாக அமைப்பு :—

45. மாநில மதுவிலக்கு, ஆயத்தீர்வைத் துறைத் தலைவரான மதுவிலக்கு ஆயத்தீர்வை ஆணையாளர் தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் படியும் அதன் கீழ் இயற்றப்பட்ட பல விதிகளின் படியும், அவற்றின் கீழ் வெளியிடப்பட்ட அறிவிக்கைகளின் படியும் அவரிடம் நிலைப் பெற்றுள்ள பல்வேறு அதிகாரங்களைச் செலுத்துவார்.

46. மதுவிலக்கு ஆயத்தீர்வை ஆணையாளரின் நிர்வாக அலுவல்களில் சென்னையிலுள்ள தலைமையிடத்தில் 4 இணை ஆணையாளர்கள் பணியாற்றுகின்றனர் அவர்களுக்கு இம்மாநிலம் முழுவதும் அதிகார வரம்பு உள்ளது. ஒரு இணை ஆணையாளர் இந்திய ஆட்சிப் பணியை சேர்ந்தவராவார். இவர் முதுநிலை காலமுறை சம்பள விகிதத்தைப் பெறுகிறார். ஏனையோர் மாவட்ட வருவாய் அதிகாரிகளின் பதவித் தரத்தைச் சேர்ந்தவர்களாவர். அவர்கள் வடிசாலைகள், சாராயக் கலவை ஆலைகள், சாராய மொத்த விற்பனை நிலையங்கள் ஆயத் தீர்வையை பின்பு செலுத்தும் தொழிற்சாலைகள், ஆல்கஹாலை மூலப் பொருள்களாகக் கொண்ட தொழிற்சாலைகள், தீர்வைசெலுத்துவதன் பேரில் சரக்குகள் வழங்கும் கிடங்குகள், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகளின் மொத்த விற்பனை நிலையங்கள் ஆகியவற்றை மேற்பார்வையிட்டு ஆய்வு செய்கின்றனர்.

47. மாவட்ட அளவில் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் நிர்வாகம், மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கட்டுப்பாட்டின் கீழுள்ளது. மாவட்டங்களில் ஆயத்தீர்வை உதவி ஆணையாளர்கள் 22 பேர் உள்ளனர். அதாவது 16 மாவட்டத்திற்கு ஒவ்வொருவரும், ஒவ்வொரு ஆறு பெரிய மாவட்டங்களுக்கும் கூடுதலாக ஒரு உதவி ஆணையாளரும் உள்ளனர். அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் மதுவிலக்கு ஆயத்தீர்வை ஆணையாளரின் நேரடிப் பொறுப்பின் கீழ் உள்ளனர்.

48. வட்ட அளவில், வட்டாட்சியர் பதவித்தரத்தில் வட்ட ஆயத்தீர்வை அதிகாரி ஒருவரும், ஆயத்தீர்வை ஆய்வாளர்கள் இருவரும், துணைப் பணியாளர்களும் உள்ளனர். மது விலக்கு ஆயத்தீர்வைத் துறையின் பணியை இவர்கள் கவனிக்கின்றனர்.

49. இணை ஆணையாளர்களுக்கு, வடிசாலை அதிகாரிகளும், தொழிற்சாலையைச் சேர்ந்த தீர்வை வசூலிக்கும் அதிகாரிகளும், சர்க்கரை ஆலையைச் சேர்ந்த தீர்வை வசூலிக்கும் அதிகாரிகளும், ஆயத்தீர்வை மேற்பார்வை அதிகாரிகளும் உதவி செய்கின்றனர். வடிசாலை அதிகாரிகள் மாவட்ட துணை ஆட்சியர் பதவித் தரத்திலுள்ள அதிகாரிகளாவார். மதுரை கோயம்

புத்தூர் ஆகியவற்றில் இந்தியாவில்தயாரிக்கப்படும்அயல்நாட்டு மது வகைகளுக்கான தீர்வையை பின்பு செலுத்தும் சரக்குகள் வழங்கும் கிடங்குகளின் ஆயத்தீர்வை மேற்பார்வை அதிகாரி களும் மாவட்ட துணை ஆட்சியர் பதவித் தரத்தில் உள்ள வர்கள் ஆவர். ஏனையோர், வட்டாட்சியர், துணை வட் டாட்சியர் பதவித் தரத்தில் உள்ளனர். வருவாய் ஆய்வாளர் களின் பதவித் தரத்திலுள்ள ஆயத்தீர்வை போக்கு வரத்து ஆய்வாளர்கள் துணையுடன் சாராயக் கலவை ஆலைகளுக்கு எரிசாராயம் எடுத்து செல்லப்படுகின்றது.

50. வடிசாலை அதிகாரிகள், தொழிற்சாலையைச் சேர்ந்த தீர்வை வசூலிக்கும் அதிகாரிகள் உட்பட மாவட்டப் பணியாளர் கள் முக்கியமாக சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் வருவாய்த் துறைப் பணியாளர்களிடையேயிருந்து எடுக்கப்பட்டுள்ளனர். தலைமைச் செயலகத்தில் உதவியாளர், பிரிவு அலுவலர்கள் பதவித்தரத்திலுள்ள பணியாளர்களும் சிலர் இப்பதவிகளில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

[....ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பை காண்க]

## மானியக் கோரிக்கை எண். 4.

## தமிழ்நாடு பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்—கொள்கை விளக்கக் குறிப்பு.

### நிருவாகம்

தமிழ்நாடு பொது விற்பனை வரியும் ஏனைய வணிக வரி களும் மாநில அரசின் முக்கியமான வரி வருவாய்களாக அமைந் துள்ளன. 1980-81 ஆம் ஆண்டில் வணிக வரி வாயிலாக ரூ. 491·64 கோடி வருவாய் கிட்டியது. இது கடந்த ஆண்டான 1979-80 ஆம் ஆண்டில் கிடைத்த ரூ. 388.28 கோடியைக் காட்டிலும் 26.5 விழுக்காடு கூடுதலான தொகையாகும்.

2. வணிகவரிகள் துறை பின்வரும் சட்டங்களை நிருவகித்து வருகிறது :—

(1) தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம்.

(2) தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டம்.

(3) தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு மேல் வரிச் சட்டம்.

(4) 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச்சட்டம்.



(5) தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச்சட்டம்

(6) தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டம்.

(7) தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம்.

(8) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஓட்டல்கள், தங்கும் இல்லங்களில் ஆடம்பர வசதிகள் மீதான வரிச்சட்டம்.

3. கடந்த ஐந்து ஆண்டுகளில் வணிகவரித்துறையின் வரவு-செலவு விவரம் வருமாறு —

| ஆண்டு. | வருவாய். | செலவு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1976-77 .. .. .. | 2,55,58.04 | 466.87 |
| 1977-78 .. .. .. | 2,67,21,25 | 518·92 |
| 1978-79 .. .. .. | 3,19,40.05 | 558.57 |
| 1979-80 .. .. .. | 3,88,27.94 | 598.09 |
| 1980-81 .. .. .. | 4,91,63.93 | 669·00 |
| 1981-82 .. .. .. | 4,23,80.00 | 540.05 |
| | (1981 ஆம் ஆண்டு டிசம்பர் வரை) | (1981 ஆம் ஆண்டு நவம்பர் வரை). |

1981-82 ஆம் ஆண்டில் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் வரை ரூ. 4,23,80.00 இலட்சம் வசூலிக்கப்பட்டது. இதற்கு முந்தைய ஆண்டு வசூல் ரூ. 3,30,58·87 இலட்சமாகும். சென்ற ஆண்டு வசூலைவிட ரூ. 9,321.13 இலட்சம் அதிகரித்துள்ளதையே இது காட்டுகிறது. (அதாவது முந்தைய ஆண்டை விட 28 விழுக் காடு அதிகரித்துள்ளது).

4. வணிக வரி அலுவலகங்களுக்கு அரசுக்கட்டிடங்கள் கட்டுதல்.

வணிகவரி அலுவலகங்களுக்கு வரும் வணிகப் பெருமக்களுக்குத் தேவையான வசதிகளை நல்கும் நோக்கத்துடன் படிப்படியான முறையில் அலுவலகக் கட்டிடங்கள் கட்டும் பணியை அரசு மேற் கொண்டுள்ளது. தற்போது, காஞ்சிபுரம், கோவில்பட்டி, ஈரோடு, தஞ்சாவூர், திருநெல்வேலி, கும்பகோணம் கடலூர் தருமபுரி, சேலம், உதகமண்டலம், வேலூர், தூத்துக்குடி கோயம்புத்தூர், திண்டுக்கல், பொள்ளாச்சி, விருதுநகர், ஆகிய இடங்களில் அரசுக் கட்டிடங்களில் வணிக வரி அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. சென்னை, மதுரை ஆகிய இடங்களில் வணிக வரித் துறைக்கான முக்கிய அலுவலகக் கட்டிடங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு, சென்னை, நுங்கம்பாக்கத்தில் கட்டிடத்தின் தரைத் தளம் நிறைவுபெறும் தருவாயில் உள்ளது. மதுரையில், அலுவலகக் கட்டிட வேலை தொடர்ந்து நடைபெறுகிறது. இக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டவுடன், தற்பொழுது தனியார் கட்டிடங்களில் இயங்கிவரும் அனைத்து அலுவலங்களும் இந்த அரசுக் கட்டிடத்தில் இயங்கும். மேலும், கரூர், தேனி, மாயூரம், பட்டுக்கோட்டை, விழுப்புரம், சிதம்பரம் ஆகிய இடங்களில் அலுவலகக் கட்டிடங்கள் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. கட்டிடப் பணிகள் நடந்தேறி வருகின்றன. நாகர்கோவிலில் கூடுதல் கட்டிடங்கள் கட்ட நிதி ஒதுக்கப்பட்டு கட்டிடப் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

சோதனைச் சாவடிகள்—

கே.ஜி. சாவடி, களியக்காவிளை, புளியறை ஆகிய இடங்களில் 3 சோதனைச் சாவடிகளும், சின்னுராப்பட்டி, சின்னசேலம், மீனாட்சிபுரம் ஆகிய இடங்களில் 3 சிறு சோதனைச் சாவடிகளும் கட்ட அரசு இசைவளித்துள்ளது. மேற்கண்ட சோதனைச் சாவடிகள் ஆங்காங்கே கட்டப்பட்டு வருகின்றன. பூவிருந்தவல்லி, ஓசூர் ஆகிய இடங்களில் சோதனைச் சாவடி கட்டுமான பணி தொடங்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல்லில் வணிகவரிக் கட்டிடத்தில் மூன்றாம்மாடி கட்டும் பணியையும் திருச்சியில் புதிய பன்மாடிக் கட்டிடம்கட்டும் பணியையும் 1982-83 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ள அரசு கருதியிருக்கிறது. இப்பொழுது கட்டப்பட்டு வரும் அனைத்து அரசுக் கட்டிடங்களிலும் பார்வையாளர் கூடம் அமைக்க இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொலைபேசி வசதி :—

வணிகவரித்துறை அதிகாரிகளோடு தொலைபேசி மூலம் வணிகர்கள் தொடர்புகொள்ள இயலும் வகையில் தொலைபேசி வசதிகள் படிப்படியாக அனைத்து அலுவலகங்களுக்கும் செய்து



தர முடிவு செய்யப்பட்டுள்ளது. தொலைபேசி வசதி தேவைப் படுகிற 409 அலுவலகங்களில் தற்பொழுது 256 அலுவலகங்களில் தொலைபேசி வசதிகள் செய்துதரப்பட்டுள்ளன. 30 அலுவலகங்களுக்கு தொலைபேசி வசதி செய்துதரும் செயற்குறிப்பு அரசின் விரைந்த ஆய்வில் உள்ளது. 33 உதவி ஆணையா இல்லங்களுக்கும் தொலைபேசி வசதி செய்து தரும் செயற்குறிப்பு 1982-83 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் சேர்க்கப் பட்டுள்ளது.

6. மேசை நாற்காலி அலமாரி முதலியன :

பழைய மேசை நாற்காலி. அலமாரிகளை மாற்றி விட்டு அதற்குப் பதிலாக அலுவலகங்களில் பணிக்கு ஏற்ற போதுமான புதிய மேசை நாற்காலிகளையும் படிப்படியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக 1981–82 ஆம் ஆண்டில் ரூ. 4 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. 1982–83 ஆம் ஆண்டில் பகுதி II திட்டத்தின் கீழ் ரூ. 16 இலட்சம் சேர்த்துக்கொள்ள கருதப்பட்டுள்ளது.

7. பணியாளரமைப்பு

வரி விதிப்புப் பணியின் தரத்தை உயர்த்தவும், வரி ஏய்ப்பை தடுக்கவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன அவற்றின் விவரம் வருமாறு :—

(i) வரி ஏய்ப்பவர்கள் மீது கடும் நடவடிக்கைகள் மேற் கொள்ளும் பொருட்டு கூட்டாக இணைந்த முறையில் செயல் படுவதற்கு முடிந்த வண்ணம், வணிகவரித்துறையைச் சேர்ந்த புலனாய்வுப் பிரிவு, ஆய்வுப்பிரிவு, வணிகவரித்துறையின் ஏனைய பிரிவுகள் ஆகியவற்றை ஒன்றாக இணைத்து ''சட்டச் செயல் பிரிவு'' என்னும் புதிய அமைப்பினை வணிக வரித் துறையில் அரசு ஏற்படுத்தியது. வண்டிகளைச் சோதனையிடும் பணியை தொடர்ந்து கண்காணிப்பதன் மூலம் வரி ஏய்ப்பைத் தடுப்ப தற்கு வகை செய்யும் பொருட்டு, 9 ரோந்துப் படைப் பிரிவுகளை அமைக்கவும் (மதுரையில் 6 படை பிரிவுகள், சென்னையில் படைப் பிரிவுகள்) அரசு உத்திரவிட்டுள்ளது.

(ii) வணிக வரித்துறையின் எல்லையோரப் பகுதி உதவி ஆணையாளர் அலுவலகங்களில் 26 உதவி வணிகவரி அதிகாரி மேலாளர் பதவிகள், துணை வணிகவரி அதிகாரி பதவிகளாக நிலை உயர்த்தப்பட்டன.

(iii) சென்னை வணிக வரிக் கோட்டத்தைப் பின்வரும் அதிகார வரம்புகளுக்குட்பட்ட இரு வணிகவரி கோட்டங்களாகப் பிரித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது :—

| கோட்டத்தின் பெயர். | தலைமை இடம். | கோட்டத்திலுள்ள வணிகவரி மாவட்டத்தின் பெயர். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. சென்னை (வடக்கு). | சென்னை .. | I, II, III, V மண்டலங்கள், மத்திய வரி மதிப்பீட்டு வட்டம், I, II. |
| 2. சென்னை (தெற்கு). | சென்னை .. | IV, VII மண்டலங்கள், செங்கற்பட்டு மாவட்டம், மத்திய வரி மதிப்பீட்டு வட்டம். |

சென்னைக் கோட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு 1—4—81 ஆம் நாளிலிருந்து செயற் படல் தொடங்கியது:—

(iv) ஆணையர் அலுவலகத்தில், ஆணையரின் நேரடிப் கட்டுப்பாட்டின் கீழ்ப் பணிபுரிய பின்வரும் பணியாளர்களைக் கொண்ட தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டது.

| | |
|---|---|
| உதவி ஆணையர் .. .. .. | 1 |
| உதவியாளர் .. .. .. .. | 1 |
| சுருக்கெழுத்துத் தட்டச்சர் .. .. | 1 |
| அடிப்படைப் பணியாளர் .. .. .. | 1 |

திணை ஆணையர் அலுவலக ஆய்வுக் குறிப்புகளை மறு ஆய்வு செய்தல், வரி வசூலை நிறுத்தி வைத்து உத்தரவு விதிப்பது தொடர்பான இனங்களைக் கவனித்தல் போன்ற பணிகளுடன், வரி பாக்கி வசூலாவதைக் கண்காணித்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுதல் இப்பிரிவின் பணிகளாகும்.

(v) 15 சிறு சோதனைச் சாவடிகள் எடுக்கப்பட்டுவிட்டன. வரி ஏய்ப்பைத் தடுப்பதற்காக, பொருள்கள் எடுத்துச் செல்வதை சாதனை இடுவதற்காக 9 ரோந்துப் படைப் பிரிவுகள் அமைக்கப்பட்டன.



(vi) உதவி ஆணையர் (செயல் படுத்தல்) அலுவலகத்தில் வழக்கமான நிர்வாகப் பணிகளில் உதவி ஆணையருக்குத் துணை புரிவதற்காக, இருவணிக வரி அதிகாரிகள் பதவிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது

(vii) தமிழ்நாடு குதிரைப் பந்தய வரிச் சட்டம் தொடர்பான நிர்வாகப் பணிகளைக் கவனிக்க உதகமண்டலத்தில் ஒரு துணை வணிக வரி அதிகாரி பதவியும், ஒரு உதவி வணிக வரி அதிகாரி பதவியும் ஏற்படுத்த அனுமதி வழங்கப்படடது.

(viii) மதுரை, திருச்சி மாவட்டங்களில் சோதனைச்சாவடிகள் வழியாகக் குறிப்பிட்ட பருவகால விளைபொருள்களை வரி ஏய்ப்பு செய்து எடுத்துச் செல்வதைத் தடை செய்வதற்காக, மதுரை, செயற்பாட்டுப் பிரிவில் 12 உதவி வணிகவரி அதிகாரிகள், 2 பதிவேட்டு எழுத்தர்கள், 12 அடிப்படைப் பணியாளர் பதவிகளை ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டது. வேலூர், சேலம் ஆகிய இடங்களில் குறிப்பிட்ட பருவகாலப் பொருள்களை வரி ஏய்ப்பு செய்து எடுத்துச் செல்வதை தடுக்க உதவி வணிக வரி அதிகாரி பதவிகள் 8, பதிவேட்டு எழுத்தர் பதவிகள் 8, அடிப்படை பணியாளர் பதவிகள் 8 ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(ix) புதுச்சேரியிலிருந்து தமிழ்நாட்டிற்குக் கள்ளத்தனமாக மதுவகைகள் கடத்தி, தமிழ்நாடு அரசுக்கு வருவாயாக வர வேண்டிய வணிக வரி ஏய்க்கப்படுவதைத் தடுப்பதற்காகப் புதுச்சேரி மாநிலத்தைச் சுற்றியுள்ள தமிழ்நாட்டுப் பகுதிகளில் வணிக வரி உதவி அதிகாரிகள் 24 பேர், பதிவேட்டு எழுத்தர் 24 பேர், அடிப்படைப் பணியாளர்கள் 24 பேர் கொண்ட சோதனைச் சாவடிகள் 8 ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டது. இவை இரவும் பகலும் செயல்பட்டு வருகின்றன.

(x) சிறு சோதனைச் சாவடிகளை எடுத்து விட்டதன் காரணமாக வேலை இழக்கும் நிலையிலிருந்த உடரிப் பணியாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் கூடுதல் பதவிகள் ஏற்படுத்த அனுமதி வழங்கி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. வணிக வரி வகையில் பெருகிவரும் பணியைச் சமாளிப்பதற்கென சென்னையிலுள்ள உதவி ஆணையர் (சோதனைச் சாவடி) அலுவலகத்திற்கு உதவி வணிக வரி அதிகாரி/மேலாளர் பதவி ஒன்று, உதவியாளர் பதவி ஒன்று, அடிப்படைப் பணியாளர் பதவி ஒன்று ஆகியவற்றை ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டது.

வரி விதிப்புப் பணி அதிகமாக உள்ள வட்டங்களை இரண்டாகப் பிரிப்பதும் துணை ஆணையர், உதவி ஆணையர் அலுவலகங்களில் கூடுதல் பணியாளர்களை நியமிப்பதும் குறித்து விரிவான செயற் குறிப்புகள் அரசின் விரைந்த ஆய்வில் உள்ளன.

### வணிக வரித்துறை அலுவலர்களுக்கு தனிப் பயிற்சி நிறுவனம்

தமிழ்நாடு விற்பனை வரிக்குழு, 1977-ல், வணிக வரித்துறையில் உள்ள அலுவலர்களுக்குப் பயிற்சி தரும் தற்போதைய அமைப்பு மொத்தத்தில் போதுமானதாக இல்லை என்றும், ஆகவே, வணிக வரித் துறை அலுவலர்களுக்கு மட்டும் பயிற்சி யளிக்கக்கூடிய முழு அளவிலான தனிப் பயிற்சி நிறுவனம் ஒன்றை கூட்டுறவுத் துறையில் உள்ள பயிற்சி நிறுவனத்தைப் போல உருவாக்கலாம் என்று பரிந்துரை செய்தது. இப்பரிந்துரையினை அரசு ஏற்று, 1982 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6 ஆம் நாள் வணிக வரித்துறை அலுவலர்களுக்கு தனிப் பயிற்சி நிறுவனம் ஒன்றை நிறுவ ஆணை பிறப்பித்துள்ளது. இப்பயிற்சி நிறுவனத்தை நடத்திட ஆண்டொன்றுக்கு ரூ. 3,50,000-க்கு மிகாத தொடர் செலவினத்தையும், ரூ. 25,000-க்கு மிகாத தொடரா செலவினத்தையும் மேற்கொள்ள அரசு அனுமதியளித்துள்ளது.

### 8. ஆலோசனைக் குழுக்கள்—மாவட்ட விற்பனை வரி ஆலோசனைக் குழு

எல்லா மாவட்டங்களிலும் உள்ள விற்பனை வரி ஆலோசனை குழுக்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. விற்பனை வரிச் சட்டங்கள் நிர்வாகம் தொடர்பானவை குறித்து ஆலோசனை கூற ஒவ்வொரு மாவட்டக் குழுவிற்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைவராக இருப்பார். இக்குழுவில் அரசு உறுப்பினர்கள் மட்டுமின்றி, வர்த்தகசபை, வணிகச் சங்கங்கள், கூட்டுறவு துறை, வேளாண்மைத் துறை ஆகியவற்றைச் சேர்ந்த உறுப்பினர்களும் இருப்பர். விற்பனை வரிச் சட்ட நிர்வாகத்தை மேம்படுத்தவும் வணிகர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை கவனிக்கவும் இக்குழுக்களின் பரிந்துரைகள் கருத்திற் கொள்ளப் படுகின்றன.

### 9. மாநில விற்பனை வரி ஆலோசனைக் குழு

மாநில விற்பனை வரி ஆலோசனைக் குழு, கடைசியாக 1980 ஜனவரியில் மாற்றியமைக்கப்பட்டது. அதன் பணிக் காலம் இரண்டாண்டுகள் ஆகும். இக்குழுவில் பல்வேறு வணிகச் சங்கங்கள், வர்த்தக சபைகள் ஆகியவற்றைச் சேர்ந்த 48 உறுப்பினர்களும் சட்டப் பேரவையைச் சேர்ந்த 6 உறுப்பினர்களும் சட்ட மேலவை உறுப்பினர் ஒருவரும் அரசு உறுப்பினர் ஒருவரும் உள்ளனர். இக்குழுவின் பணிக் காலத்தை மேலும் இரண்டாண்டுகளுக்கு நீட்டித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது. விற்பனைவரிச் சட்டங்கள், விதிகள் நிர்வாகம் தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக வணிகர்களும் அரசினரும் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ள இது வாய்ப்பளிக்கிறது.



### 10. வணிகர்கள் நல ஆலோசனைக் குழு

இக்குழுவிற்கு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தலைவராவார். இக்குழுவில் மாண்புமிகு நிதி அமைச்சர், ஊரகத் தொழில் அமைச்சர், தொழில் அமைச்சர் ஆகியோர் அலுவல் முறை உறுப்பினர்களாக இருப்பதுடன் அரசு சார்பற்ற உறுப்பினர்கள் 15 பேரும் அரசு உறுப்பினர்கள் 3 பேரும் இடம் பெற்றுறுள்ளனர்.

வணிகர்களுக்கு ஏற்படும் இடையூறுகளை அறிந்து அவற்றைக் களைவதற்கான வழி வகைகளை எடுத்துக் கூற இக்குழு அமைக்கப்பட்டது.

### 11. தகவல் தொகுப்பு பிரிவு

பொருள் வாரியாக ஆண்டு மொத்த விற்பனைத் தொகை மீதான வரி, வட்டம் வாரியாக வரி விதிப்பு, வகை வாரியாக, வீதம் வாரியாக விற்பனை வரி விதிக்கத்தக்க ஆண்டு மொத்த விற்பனைத் தொகை, வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஆண்டு மொத்த விற்பனைத் தொகை, பல்வேறு ஆண்டுமொத்த விற்பனைத் தொகை வகைகளின் கீழ்வரும் வணிகர்களின் எண்ணிக்கை ஆகிய புள்ளி விவரங்களை மின்னணு தகவல் தொகுப்பு எந்திரம் மூலம் தொகுக்கும் முறை 1974 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டது. இப்பணியை கிண்டியிலுள்ள தகவல் தொகுப்பு நிலையம் தொடர்ந்து செய்து வருகிறது.

### 21. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு போது விற்பனை வரிச் சட்டம்

வரி விதிப்பு முறை பற்றியும், நீதிமன்றத்தீர்ப்புகளுக்கேற்ப சட்டத்தில் திருத்தங்கள் செய்ய வேண்டியதன் அவசியத்தையும் பல்வேறு விதித்துறைகளுக்குப் பொருள் விளக்கம் கூற வேண்டியதன் அவசியத்தையும், வரி விதிப்பு நடை முறையை எளிமையாக்கி சீரமைக்கும் அவசியத்தையும் தமிழ்நாடு விற்பனை வரி ஆலோசனைக் குழு பரிந்துரைத்துள்ளவாறு அரசு தொடர்ந்து ஆய்வு செய்து வருகிறது. அதிக வரி வீதத்திற்குட்பட்ட மூலப் பொருள்களின் மீது 4 சதவீதம் என்று சலுகை வீதத்தில் வரி விதிப்பதற்கு தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவில் சேர்க்கப்பட்ட புதிய விதித்துறை செயற் படுத்தப்பட்டு இது குறித்து ஒரு திட்டமும் வகுக்கப்பட்டது.

மேற்சொன்ன திட்டத்தின் கீழ் பின்வரும் பொருள்கள், அவற்றிற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள பொருள்களைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் மூலப் பொருள்களாக விற்பனை செய்கையில் சலுகை வீதத்தில் வரி விதிக்கப்படுவதற்கு அவ தந்தியுடையவையாகின்றன.

[1982 மார்ச் 9

| தொடர் எண். | மூலப் பொருள்களாக விற்பனையாகும் பொருள்கள் அல்லது பொருள்களின் வகை. | பத்தி (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள பொருள்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் பொருள்கள் அல்லது பொருள்களின் வகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | இச்சட்டத்தின் முதல் விவர அட்டவணையின் 95-ஆம் இனத்தின் கீழ் வரும் மருந்துப் பொருள்கள், மருந்துகள். | ஒவ்வொரு இனத்திலும் மூலப் பொருளாக விற்பனையாவதைத் தவிர இச்சட்டத்தின் முதல் விவர அட்டவணையின் 95-ஆம் இனத்தின்கீழ் வரும் மருந்துப் பொருள்கள், மருந்துகள். |
| 2 | இச்சட்டத்தின் முதல் விவர அட்டவணையின் 125ஆம் இனத்தின் கீழ் வரும் செயற்கை ரப்பர். | இச்சட்டத்தின் முதல் விவர அட்டவணையின் 126-ஆம் இனத்தின் கீழ்வரும் ரப்பர் பொருள்கள். |
| 3 | இச்சட்டத்தின் முதல் விவர அட்டவணையின் 138 ஆம் இனத்தின் கீழ்வரும் இரசாயனப் பொருள்கள். | 1 இச்சட்டத்தின் முதல் விவர அட்டவணையின் 95-ஆம் இனத்தின் கீழ்வரும் மருந்துப் பொருள்கள், மருந்துகள்.<br>2 இச்சட்டத்தின் முதல் விவர அட்டவணையின் 110 ஆம் இனத்தின் கீழ்வரும் இனங்கள்.<br>இச்சட்டத்தின் முதல் விவர அட்டவணையின் 110 ஆம் இனத்தின் கீழ் வரும் பொருள்கள்.<br>இச்சட்டத்தின் முதல் விவர அட்டவணையின் 125 ஆம் இனத்தின் கீழ் வரும் செயற்கை ரப்பர். |



1982 மார்ச் 9]

| தொடர் எண். | மூலப் பொருள்களாக விற்பனையாகும் பொருள்கள் அல்லது பொருள்களின் வகை. | பத்தி (2)இல் குறிப்பிடப்பட்டுள்ள பொருள்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் பொருள்கள் அல்லது பொருள்களின் வகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | 5 இச்சட்டத்தின் முதல் விவர அட்டவணையின் 126 ஆம் இனத்தின் கீழ் வரும் ரப்பர் பொருள்கள்.<br>6 ஒவ்வோர் இனத்திலும் மூலப் பொருள்களாக விற்பனையாவதைத் தவிர இச்சட்டத்தின் முதல் விவர அட்டவணையின் 138-ஆம் இனத்தின் கீழ் வரும் இரசாயனப் பொருள்களும் சாயமிடும் பொருள்களும். |
| 4 | இச்சட்டத்தின் முதல் விவர அட்டவணையின் 161ஆம் இனத்தின் கீழ் வரும் "கார்பன் பிளாக்குகள்" | 1 இச்சட்டத்தின் முதல் விவர அட்டவணையின் 126 ஆம் இனத்தின் கீழ் வரும் ரப்பர் பொருள்கள்.<br>2 இச்சட்டத்தின் முதல் விவர அட்டவணையின் 110 ஆம் இனத்தின் கீழ் வரும் பொருள்கள். |
| 5 | இச்சட்டத்தின் முதல் விவர அட்டவணையின் 157ஆம் இனத்தின் கீழ் வரும் டிரான்ஸ்பார்மர் ஆயில் பீட்ஸ்டாக் (feed stock) | இச்சட்டத்தின் முதல் விவர அட்டவணையின் 157 ஆம் இனத்தின் கீழ் வரும் டிரான்ஸ்பார்மர் ஆயில் சல்பானேட். |

விவர அட்டவணையில் கண்டுள்ள பதிவுகளில் திருத்தங்கள் :

தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பொருள்கள், ஒருமுனை வரி விதிப்பதற்கு உட்பட்டவையாகும். அட்டவணையின் கீழ்வரும் பொருள் விவரங்களில் பின்வரும் திருத்தங்கள் செய்யப்பட்டன:

இனம் எண் 3—வணிக வரிகள்-சமய அறநிலையத் துறை, 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19 ஆம் நாளிட்ட 683 ஆம் எண் ஆணையுடன் வெளியிடப்பட்ட அறிவிக்கையின்படி' மோட்டார் எஞ்சின்கள் பொருத்தப்பட்ட சைக்கிள் (இரு சக்கர சைக்கிள், மூன்று சக்கர சைக்கிள், சைக்கிள் ரிக்ஷாக்கள்' 'டான்டெம் சைக்கிள்கள்', சைக்கிள் பக்க வண்டிகள், தள்ளு வண்டிகள் உட்பட) சைக்கிளில் இரு சக்கர சைக்கிள்' மூன்று சக்கர சைக்கிள், சைக்கிள் ரிக்ஷா 'டான்டெம்' சைக்கிள் சைக்கிள் பக்க வண்டிகள், (தள்ளு வண்டிகள் உட்பட) பொருத்தப்படுவதற்காகப் பயன்படும் மோட்டார் என்ஜின்கள் இப்பதிவில் சேர்க்கப்பட்டன.

இனம் எண் 8—தொலைநோக்காடி உள்ளிட்ட நுண்ணுயிர் பெருக்காடி (பைனாகுலர்ஸ்) நுண்ணுயிர் பெருக்காடி (மைக்ராஸ் கோப்புகள்) 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 30 ஆம் நாள் முதல் இப்பதிவில் சேர்க்கப்பட்டன.

இனம் எண் 30—1981 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 3 ஆம் நாள் முதல் வைடூரியங்கள் (C ts-:yes) இப்பதிவில் சேர்க்கப் பட்டன.

இனம் 64—1981 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 3 ஆம் நாள் முதல் இரும்புக் கம்பிகள், சுருள் கம்பிகள் இப்பதிவில் சேர்க்கப் பட்டன.

இனம் எண் 74—முதல் கொள்முதல் முனையில், கச்சா ரப்பர் மீது வரி விதிக்க மூலப் பதிவில் வகை செய்யப்பட்டிருந் தது. குறிப்பாக எல்லா கச்சா ரப்பரில் எல்லா வகைகளையும்



தரங்களையும் சேர்க்கும் பொருட்டு பொருள் விளக்கம் விரிவுப் படுத்தப்பட்டது. வரி விதிக்கப்படும் முனை, முதல் கொள்முதல் முனையிலிருந்து இறுதிக் கொள்முதல் முனைக்கு மாற்றப்பட்டது.

இனம் எண் 104.—வாயு அளவை மானி, தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் வெப்பமானிகளும் அவற்றின் பாகங்களும், துணைப் பாகங்களும் இப்பதிவில் சேர்க்கப்பட்டன.

இனம் எண் 109.—எவர்சில்வர் நிப்புகள், தங்கமுலாம் பூசப்பட்டவையாக இருந்தாலும் அல்லது வேறு எதுவாக இருந்தாலும் அல்லது இரிடியம் தோய்த்த முனைபொருத்தப் பட்டவையாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அதன் மீது குறைந்த வீதத்தில் அதாவது 4 சதவீத வரி விதிக்க வகை செய்வதற்காகக் கொண்டுவரப்பட்ட புதிய பதிவான இனம் 109ஏ-ன் கீழ்வரும் "எவர்சில்வர்" பொருள்களை நீக்கும் வகையில் இப்பதிவு திருத்தப்பட்டது. எனினும், புதிய பதிவின் கீழ் வரும் நிப்புகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளன.

இனம் எண் 139.—"எசன்சுகள்" பழச்சாறுகளுடன் அடர் தன்மையுள்ள பொருள்களுக்கு (Concentr..tes) அவை திடப் பொருளாக அல்லது நீர்மப் பொருளாக இருந்தாலும் வரி விதிக்கவியலும் வகையில் தற்போதுள்ள பிரிவு மாற்றி அமைக்கப் பட்டது.

இனம் எண் 160.—'எம்பயர்' துணிகளும் 'எம்பயர் ஸ்லீவ்ஸ்' களும் (Emplre Sl eves) குறிப்பாக முதல் விவர அட்டவணையின் 10 சதவீத ஒரு முனை வரி விதிப்பின்கீழ்க் கொண்டுவரப்பட்டன.

இனம் எண் 161.—'கார்பன் பிளாக்கு' குறிப்பாக 8 சதவீத ஒரு முனை வரி விதிப்பின்கீழ்க் கொண்டுவரப்பட்டன. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு மோட்டார் எண்ணெய் வரி விதிப்புச் சட்டத்தை, தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்துடன் இணைத்து, பின்வரும் இனங்கள், 1980 ஆம்

ஆண்டு நவம்பர் திங்கள் 1 ஆம் நாள் முதல் தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் முதல் விவர அட்டவணையின்கீழ் சேர்க்கப்பட்டன.

| தொடர் எண். | பொருள்கள் பற்றிய விவரம். | வரி விதிப்பு முனை. | வரி வீதம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 151 | பெட்ரோல் .. .. | மாநிலத்தில் முதல் விற்பனை முனையில். | 1—11—1980 லிருந்து 5 சத வீதம். 1—4—1981 லிருந்து 11 சத வீதம். |
| 152 | வானூர்திகளுக்கான எரி பொருள். | ஷை | 1—11—1980 லிருந்து 7 சத வீதம். |
| 153 | உயர்வேக டீசல் எண்ணெய். | ஷை | 1—11—1980 லிருந்து 9 சத வீதம், 1—4—1981 லிருந்து 11 சத வீதம், |
| 154 | டீசல் எண்ணெய் .. | ஷை | 1—11—1980 லிருந்து 9 சத வீதம். 1—4—1981 லிருந்து 11 சத வீதம். |



வரி வீதங்களில் மாற்றங்கள்:

91ஆம் பதிவின் கீழ்வரும் சோடா பானங்கள், புட்டிகளில் அடைக்கப்பட்ட பானங்கள் ஆகியவற்றுக்கான ஒருமுனை வரி வீதங்கள் 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 3ஆம் நாள் முதல் 5 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாக உயர்த்தப்பட்டன.

பெட்ரோல் மீதான ஒருமுனை வரி வீதம் 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல் 5 சதவீதத்திலிருந்து 11 சத வீதமாக உயர்த்தப்பட்டன. முதல் அட்டவணையின் 153, 154 ஆகிய பதிவுகளின் கீழ்வரும் உயர்வேக டீசல் எண்ணெய் ஆகியவற்றுக்கான வரி வீதமும் 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1ஆம் நாள் முதல் 9 சதவீதத்திலிருந்து 11 சதவீதமாக உயர்த்தப்பட்டது.

முதல் அட்டவணையிலிருந்து பொருள்களை நீக்குதல் :

நோட்டுப் புத்தகங்கள், கணக்குப் புத்தகங்கள், பேனா முதலியவை உட்பட அனைத்து எழுது பொருள்கள், பிளாஸ்டிக் பொருள்கள், மெழுகுவர்த்தி ஆகியன 1980 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 3 ஆம் நாளன்றிலிருந்து முதல் விவர அட்டவணையில் சேர்க்கப்பட்டு ஒரு முனை வரிவிதிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டன. பின்னர், இந்தப் பொருள்களுக்கு ஒரு முனை வரி விதிப்பதில் உள்ள சிக்கல்கள் பற்றி முறையீடுகள் வந்தன. நிருவாக சிக்கல், வகைப்படுத்தல், பொருள் விளக்கம் அளித்தல் ஆகியவை தொடர்பான பிரச்சினைகள் உட்பட இச்சிக்கல்களைக் கருத்தில் கொண்டு மேற்சொன்ன பொருள்களை மீண்டும் பல்முனை வரி விதிப்பின்கீழ் கொண்டுவர முடிவு செய்யப்பட்டது. அதன்படி 144, 145, 147 ஆகிய தொடர் எண்கள், அட்டவணை 1லிருந்து நீக்கப்பட்டன.

சரக்கு ஏற்றிச் செல்கிற வண்டிகள், பொருள் விவரப் பட்டிகளில் மூன்று நகல்கள் வைத்திருக்க வேண்டுமென்பது :

சரக்கு வண்டி அல்லது படகுகளில் எடுத்துச் செல்லப்படும் பொருள்களைப் பொறுத்தமட்டில், பொருள்களை எடுத்துச் செல்லும் சரக்கு வண்டி விற்பனைப் பட்டி அல்லது அனுப்புகைக் குறிப்பு அல்லது அனுப்புகைச் சான்றிதழ் அல்லது உறுதிமொழி இவற்றில் மூன்று நகல்களை வைத்திருக்க வேண்டுமென்றும் சரக்கு வண்டி அல்லது படகு கடந்து செல்லக் கூடிய முதல் சோதனைச் சாவடி அல்லது எல்லைச் சாவடிப் பொறுப்பதிகாரியிடம் ஒரு நகல் கொடுக்கப்பட வேண்டுமென்றும் சரக்கு வண்டி அல்லது படகு கடந்து செல்லக்கூடிய கடைசி சோதனைச் சாவடி அல்லது எல்லைச்சாவடி பொறுப்பதிகாரியிடம் இரண்

டாம் நகல் கொடுக்கப்பட வேண்டுமென்றும், மூன்றாம் நகல் சரக்கு வண்டி அல்லது படகிற்குப் பொறுப்பு வகிக்கும் உரிமை யாளர் அல்லது ஏனையோர் வைத்திருக்க வேண்டும் என்பதற்கு வகை செய்து தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளின் 36(2)ஆம் விதி அண்மையில் திருத்தப்பட்டுள்ளது. இந்நடைமுறை 1982 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்துள்ளது.

தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வரி விலக்களித்தல் :

1. வட ஆற்காடு மாவட்டம் கரிகிரி 'ஷெஃப்ஃபெலின் தொழு நோய் ஆராய்ச்சி பயிற்சி நிலையத்தில் தொழு நோயா ளிக்குரிய தனிக் காலணிகளுக்குத் தேவைப்படும் மைக்ரோ-செல்லு லார் ரப்பர்களைத் தயாரிப்பதற்குத் தேவையான இராசாயனப் பொருள்கள், தொழு நோயாளிகளின் மரத்துப் போன கால் களுக்குப் பொருத்தமான தனி வகை மைக்ரோ செல்லுலார் ரப்பர் தயாரிப்பதற்குத் தேவைப்படும் கச்சா ரப்பர், தொழு நோயாளிகளுக்கு மருத்துவ சிகிச்சை-புது வாழ்வுக்குத் தேவை யான மருந்துகள், லினன், மேசை நாற்காலிகள் மருத்துவ மனைப் பொருள்கள், கருவிகள், சாதனங்கள், ஆகியவற்றின் விற்பனை யின் மீதும் மேற்சொன்ன பயிற்சி நிலையத்தில் செய்யப்படும் விற்பனை அனைத்தின் மீதும் வணிகர் ஒருவர் செலுத்த வேண் டிய வரியினின்றும் விலக்கு அளிக்கப்படுகின்றது.

2. மதுரை மாவட்டம் காந்தி கிராமம் தமிழ்நாடு சர் வோதய மண்டலத்தின் சோப்பு தயாரிக்கும் பிரிவில் தயாரிக்கப் படுகிற சோப்புக்களை விற்பனை செய்யும் வணிகர் செலுத்தத் தக்க வரியைப் பொறுத்த மட்டில் வரி விலக்கு அளிக்கப்படுகிறது.

3. இம்மாநிலத்திலுள்ள சர்க்கரை ஆலைகளிலிருந்து திருச்சி ராப்பள்ளி மாவட்டம் புகளூர் தமிழ்நாடு நியூஸ்பிரிண்ட் அண்டு பேப்பர்ஸ் லிமிடெட்டுக்குச் சர்க்கரை உற்பத்தி கழிவுப் பொருள் விற்பனை குறித்தும் இம்மாநிலத்திலுள்ள சர்க்கரை ஆலை களுக்குத் திருச்சிராப்பள்ளி மாவட்டம் புகளூரிலுள்ள தமிழ் நாடு நியூஸ் பிரிண்ட் அண்டு பேப்பர்ஸ் லிமிடெட் செய்யும் காகிதம் (Steam) விற்பனை குறித்தும் செலுத்தத்தக்க வரி யைப் பொறுத்தமட்டில் வரி விலக்கு அளிக்கப்படுகிறது.



4. சென்னை ஸ்ரீராமகிருஷ்ணா மிஷன் மாணவர் இல்லத் தால் நடத்தப்படும் தொழிற் பிரிவுகள் உருக்கு, தேனிரும்பு, நிலக்கரி, சுட்டகரி, விளையாட்டுப் பொருட்கள், கட்டடப் பொருள்கள் ஆகியவற்றிற்கு செலுத்த வேண்டிய வரி விதிப்பி லிருந்து விலக்களித்தல்.

5. நாகர்கோயில் உடல் ஊனமுற்றோர்க்கான மறுமலர்ச்சி மன்ற வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையம் தயாரித்த பொருள் களை மாநிலத்திலும் பல் மாநில வாணிபத்திலும் விற்கப்படு கின்றபோது அந்நிலையம் அதற்கு செலுத்த வேண்டிய வரி யிலிருந்து விலக்களித்தல்.

6. மதுரை மாவட்டம் காந்தி கிராமம் திருவாளர்கள் இலட்சுமி சேவா சங்கத்தால் தயாரிக்கப்பட்டு விற்பனை செய் யும் பொருள்களுக்கு மேற்சொன்ன சட்டத்தின்படி செலுத்த வேண்டிய வரிக்கு விலக்களித்தல்.

7. இராமநாதபுரம் மாவட்டம் அணைக்கரைப்பட்டி தொழிற் பிரிவு தயாரித்து வேலை நிறைவு செய்யப்பட்ட பொருள் களின் விற்பனை மீது சென்னை-18, திருவாளர்கள் என்பீல்டு இன்டியா நிறுவனம் செலுத்தத்தக்க வரிக்கு விலக்களித்தல்.

8. தங்க முலாம் பூசப்பட்ட அல்லது ஏனைய வகை எவர் சில்வர் பேனா நிப்புகள் இரிடியம் முனை கொண்ட அல்லது ஏனைய வகை எவர்சில்வர் பேனா நிப்புகள் ஆகியவற்றிற்கு 1981 ஆம் ஆண்டு மேத் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து விற்பனை யில் வரி விலக்கு அளித்தல்.

9. தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஆர். எஸ். சாக்கோட்டை அஞ்சல் புனித இதய தொழுநோய் இல்லத்தைச் சேர்ந்த சங்கத்திற்கு தொழுநோய் நோயாளிகளின் சிகிச்சைக் கும் மறுவாழ்வுப் பயிற்சிக்கும் தேவைப்படும் எக்ஸ் கதிர் சுருள் களை விற்பனை செய்யும் வணிகர் ஒருவரால் செலுத்தத்தக்க வரிக்கு விலக்களித்தல்.

10. சென்னை-17, பாலமந்திரைச் சேர்ந்த Foundling Hospital தச்சுத் தொழிற் பிரிவு தயாரித்து விற்பனை செய்யும் பொருள்களுக்கு அப்பிரிவு செலுத்த வேண்டிய வரியிலிருந்து விலக்களித்தல்.

11. இராமநாதபுரம் மாவட்டம், பள்ளத்தூர் ஸ்ரீசாரதா சேவா சிரமத்தில் உள்ளவர்கள் தயாரித்து அச்சேவாசிரமம், நடத்தும் பயிற்சி—தயாரிப்பு மையம் விற்பனை செய்யும் பொருள் களுக்காக செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தல்.

12. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் இரண்டாம் விவர அட்டவணையிலுள்ள 6 ஆம் இனத்தில் குறிப்பிட்டுள்ள எண்ணெய் வித்துக்களை விற்பனைக்காக எண்ணெய் ஆட்டுவதற்கு பயன்படுத்த கொள்முதல் செய்வதற்கு மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவு அல்லது 7-ஏ ஆம் பிரிவின்படி-

(i) நாட்டுச் செக்கு ஒன்றை அல்லது பலவற்றை சொந்தமாகப் பெற்று எண்ணெய் ஆட்டுவதிலும் அத்தகைய செக்குகளில் பொருட்களின் வணிகத்திலும் ஈடுபட்டோர்,

(ii) கையினால் ஆட்டி எண்ணெய் எடுக்கும் எந்திரம் ஒன்றை அல்லது பலவற்றை சொந்தமாகப் பெற்று எண்ணெய் ஆட்டுவதிலும் அத்தகைய கையினால் ஆட்டி எண்ணெய் எடுக்கும் எந்திரங்களிலிருந்து பெறப்பட்ட பொருள்களின் வணிகத்திலும் ஈடுபட்டோர்.

(iii) நாட்டுச் செக்குகள் கைவினை எண்ணெய் எந்திரங்களின் உரிமையாளர்கள் அமைத்துள்ள எண்ணெய் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்.

(iv) கதர். கிராமத் தொழில் வாரியம் அல்லது தமிழ்நாடு கதர், கிராமத்தொழில் வாரியத்தினால் அல்லது அதனுடைய உதவியினால் அமைக்கப்பட்ட மின்சக்தி எண்ணெய் ஆலைகள்.

(v) மின்சக்தி எண்ணெய் ஆலை ஒன்றை அல்லது பலவற்றை சொந்தமாகப்பெற்று எண்ணெய் உற்பத்தி செய்வதிலும் அல்லது அத்தகைய ஆலைகளில் உற்பத்தியான பொருட்களின் வணிகத்திலும் ஈடுபட்டோர்.



ஆகியவர்களுக்கு செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

13. சிறு கடை வணிகருக்கும் ஒருமுனை வரிக்கு உட்பட்ட பொருள்களை வியாபாரம் செய்துவரும் வியாபாரிகளுக்கும் அத்தகைய பொருட்களைத் தெருவில் கூவி விற்பனை செய்து வரும் வணிகர்களுக்கும் தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள வரியிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. ஆனால் அத்தகைய வியாபாரியின் மொத்த விற்பனைத் தொகை ஆண்டு ஒன்றுக்கு 12,000 ரூபாய்க்கு குறைவாக இருக்க வேண்டும். அவர் அத்தகைய பொருள்களை மாநிலத்தில் பதிவு செய்து கொண்ட ஏனைய வியாபாரிகளிடமிருந்தும் வாங்க வேண்டும்.

14. சென்னையில் உள்ள சமூக சேவை நிலையம் தயாரித்த பொருள்களை மாநிலத்திலும் பன்மாநில வாணிபத்திலும் விற்கும் போது அதற்குச் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தல்.

15. ஏலாமையுற்றோர், நோயாளிகள், முதியோர், ஆதரவற்றோர் அனாதைகள் ஆகியோருக்கான பாதுகாப்பு இல்லமான சென்னையில் உள்ள தயா சதன் 1979-80 ஆம் ஆண்டில் பழைய பாதுகாப்புப் பெட்டகம், காலிக் கோணிப்பைகள் உடைந்த பாத்திரங்கள் ஆகியவற்றை விற்பனை செய்ததற்கு அக்காப்பு இல்லம் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தல்.

16. சென்னை பல்லவன் போக்குவரத்துக் கழகம் (மாவட்டம்) கும்பகோணம் சோழன் போக்குவரத்துக் கழகத்திற்கு இருபத்தாறு பேருந்துகளை மாற்றியதற்கு செலுத்தத் தக்க வரியிலிருந்து விலக்களித்தல்.

17. காஞ்சிபுரம் தமிழ்நாடு ஜரிகை நிறுவனம், தயாரித்து விற்பனை செய்த ஜரிகைக்கு செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தல்.

18. மீண்டும் சக்தியளிக்கப்படத் தக்க கருவிகள், சாதனங்கள், சூரிய சக்தி, உயிர்பொருண்மை, காற்றுசக்தி ஆகியவற்றிற்குப் பயன்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட ஏற்பாடுகள் ஆகியவற்றின் விற்பனைமீது வணிகரால் இச்சட்டத்தின் கீழ் செலுத்தப்படத்தக்க வரியைப் பொறுத்தவரையில் 16-11-1981 லிருந்து 31—3—1982 வரை விலக்களித்தல்.

19. பானங்களாக விற்கப்படுவதற்கான சுத்தமான பால் மீண்டும் கலக்கப்பட்டால், பாலில் தயாரிக்கப்பட்ட பானங்கள் ஆகியவற்றின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரியைப் பொறுத்த வரையில் விலக்களித்தல்.

20. திருச்சிராப்பள்ளியிலுள்ள பர்மா அங்காடி வியாபாரிகள் சங்கத்தின் பர்மா அகதி வியாபாரிகளால் தயாரிக்கப்பட்ட பொருள்களின் விற்பனைமீது இச்சட்டத்தின் கீழ் செலுத்தப்படத்தக்க வரியைப் பொறுத்தவரையில், இந்த அறிவிக்கை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 6 மாத காலத்திற்கு விலக்களித்தல்

21. சென்னை மாநகர எல்லைக்குள்ளும் அதனைச் சுற்றி 32 கிலோ மீட்டருக்குள் உள்ள அதன் புறநகர் பகுதிக்குள்ளும் அறிவிக்கப்பட்ட பொருள்களின் விற்பனை அல்லது கொள்முதல் மீது கூடுதல் மேல் வரி விதிப்பிலிருந்து (10—6—81லிருந்து) விலக்களித்தல்.

22. எபோனேட் பேனாக்கள், எண்ணெயில் எரியக்கூடிய அரிக்கன் விளக்குகள், பெட்ரூம் விளக்குகள் ஆகியவற்றின்விற்பனை மீது செலுத்தத்தக்க வரியைப் பொறுதத வரையில் விலக்களித்தல்

23. 1,250 கிலோ லிட்டர் மின்னழுத்த மாற்றிக்குப்பயன்படும் எண்ணெய் தயாரிப்பதற்காக சென்னையிலுள்ள சென்னை பெட்ரோகெம் நிறுவனத்திற்கு அனுப்பப்படும் எண்ணெயின் விற்பனைமீது இச்சட்டத்தின் கீழ் சென்னை எண்ணெய் தூய்மைப் படுத்தும் நிறுவனத்தால் செலுத்தப்படத் தக்க வரி, சென்னை பெட்ரோகெம நிறுவனத்தால் போபாலிலுள்ள பாரதத்தின் கனரக எந்திர நிறுவனத்திற்கு விற்கப்பட்ட மின் அழுத்த மாற்றிக்குப் பயன்படும் 1,250 கிலோ லிட்டர் எண்ணெய் விற்பனை மீது செலுத்தப்படத் தக்க வரி ஆகியவற்றைப் பொறுத்த வரையில் விலக்களித்தல்,



24. சென்னை வேப்பேரியில் ஈ. வெ. கி. சம்பத் சாலையிலுள்ள (பெரியார் திடலென்று பதிவு செய்யப்பட்டுள்ள) பெரியார் சுயமரியாதை இயக்கத்தால் நடத்தப்படும் இலவச தனி மருந்தகத்திற்கு விற்கப்படும் மருந்துகளின் விற்பனைமீது இச்சட்டத்தின்கீழ் வணிகர் ஒருவரால் செலுத்தப்படத் தக்க வரியைப் பொறுத்த வரையில் விலக்களித்தல்.

### தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வரி வீதத்தில் குறைப்பு.

பின்வரும் இனங்களில் வரிவீதத்தை அரசு குறைத்துள்ளது —

(i) கோயம்புத்தூர், குன்னூர் ஆகிய இடங்களில் ஏலவிற்பனை நிலையங்களில் தயாரிக்கப்படும் தேயிலையின் விற்பனை மீது செலுத்தப்படத்தக்க வரியைப் பொறுத்தவரையில் வரிவீதத்தை 22—5—1981 லிருந்து 21—5—1982 வரை 6 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைத்தல்.

(ii) பஞ்சாப் மாநில மின்வாரியத்திற்கு 500 கிலோ லிட்டர்களும் கேரள மாநில மின்வாரியத்திற்கு 150 கிலோ லிட்டர்களும் ஜபல்பூரிலுள்ள மத்தியப் பிரதேச வித்யு எந்திர நிறுவனத்திற்கு 400 கிலோ லிட்டர்களுமாக மொத்தம் 1,050 கிலோ லிட்டர்கள் மின் அழுதத மாற்றி எந்திரத்திற்குப் பயன்படுததப்படும் எண்ணெயைத் தயாரித்து அனுப்புவதற்கு தேவைப்படக் கூடிய பீட்ஸ்டாக் (Transformer oil feed stock) சென்னை பெட்ரோலியம் நிறுவனத்திற்கு சென்னையிலுள்ள இந்திய எண்ணெய் கழகத்தால் செய்யப்படும் விற்டனை மீது அக்கழகம் செலுத்தத்தக்க வரிவீதத்தைப் பொறுத்த வரையில் ஒருமுனை வரியை மூன்று சதவீதமாகக் குறைத்தல்.

(iii) தமிழ்நாடு விற்பனை வரிச்சட்டத்தின் கீழும் மத்திய விற்பனை வரிச்சட்டத்தின் கீழும் இந்திய ஆர்கானிக் கெமிக்கல்ஸ் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட பாலீயஸ்டர் பைபர் விற்பனைமீது செலுத்தப்படததக்க வரி 3 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. இது 20—12—1981-லிருந்து மேலும் ஓராண்டு காலத்திற்கு தொடர்ந்து செயலிலிருக்கும்.

(iv) சென்னையிலுள்ள தமிழ்நாடு இரசாயனப் பொருள்கள் தயாரிப்பு நிறுவனத்தின் சோடியம் ஹைடிரோ சல்பேட் விற்பனைமீது செலுத்தந்தக்க வரியைப் பொறுத்த வரையில் வரி வீதத்தை 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைத்தல்.

(v) இராஜபாளையத்திலுள்ள சென்னை சிப்போர்டு நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட பல்வேறு வகை அட்டைத் தாள்களைப் பொறுத்த வரையில் வரி வீதத்தை 10 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைத்தல்.

(vi) உதகமண்டலம் பாஸ்டியூர் நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்படும் அம்மைப்பால் விற்பனை மீதான வரி வீதம் 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

13. புதிய சலுகைகள் :

சமுதாயத்தில் மண்ணெண்ணையை பெரிதும் பயன்படுத்தும் நலிந்த பிரிவினர்களான ஏழை எளிய மக்களுக்கு உதவும் பொருட்டு தமிழக அரசு மண்ணெண்ணை மீதான விற்பனை வரியை 1982 மார்சு திங்கள் 1 ஆம் நாளிலிருந்து 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைத்து ஆணையிட்டுள்ளது.

14. கூடுதல் ஆயத் தீர்வை :

துணி, சர்க்கரை மற்றும் புகையிலை மீது விற்பனை வரிக்குப் பதிலாக கூடுதல் ஆயத் தீர்வை 1957 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசினால் விதிக்கப்பட்டு வருகிறது. இப்பொருள்களின் மீது எவ்விதமான விற்பனை வரியையும் மாநில அரசு விதிப்பதில்லை. கூடுதல் ஆயத் தீர்வை விதிப்பின் மூலம் வரும் வருவாய் முழுவதும் மத்திய அரசுக்கு போய்ச் சேருகிறது. மொத்த கூடுதல் ஆயத் தீர்வை வருவாயின் ஒரு பங்கை இம்மாநில அரசு பெறு



கிறது. இதர சில பொருள்களின் மீது கூடுதல் ஆயத் தீர்வை விதிக்கும் முறையை நீட்டிப்பது குறித்த தங்களது விருப்பத்தினை மத்திய அரசு அவ்வப்போது தெரிவித்து வந்துள்ளது. தேசிய அபிவிருத்தி குழுவிலும், முதலமைச்சர்கள் மாநாடு மற்றும் பல இடங்களிலும் அத்தகைய கருத்துருவிற்கு இம்மாநில அரசு எதிர்ப்பு தெரிவித்து வந்துள்ளது.

விற்பனை வரிக்குப் பதிலாக கூடுதல் ஆயத் தீர்வையை கீழ்க்கண்ட பொருட்களுக்கு நீட்டிப்பது பற்றி ஆராய்வதற்காக மத்திய அரசு நிபுணர்கள் குழு ஒன்றை அமைத்துள்ளது :—

(1) வனஸ்பதி :

(2) மருந்து பொருட்கள் ;

(3) சிமெண்ட் ;

(4) காகிதம், காகித அட்டைகள் ; மற்றும்

(5) பெட்ரோலியப் பொருட்கள்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பொருள்களின் மீது விதிக்கப்பட்ட மாநில விற்பனை வரி மற்றும் மத்திய விற்பனை வரி ஆகியவைகள் மூலம் கிடைக்கப் பெற்ற விற்பனை வரி வருவாய் குறித்து நிபுணர் குழு சில விவரங்களைக் கேட்டுள்ளது.

15. 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம்—விலக்களித்தல்.

(1) சென்னை-18, திருவாளர்கள் என்பீல்டு இந்தியா நிறுவனம், மேற்சொன்ன சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க வரியைப் பொறுத்த வரையிலான விலக்கு, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள அவர்களது அணைக்கரைப்பட்டி பிரிவு தயாரிக்கிற வேலை நிறைவெய்திய முடிக்கப்பட்ட பொருள்களின் விற்பனையைப் பொறுத்த வரையில் 1-6-1981 முதல் மூன்றாண்டு காலத்திற்கு இருக்கும்.

(2) சென்னை-4, சமூகப் பணி நிலையம் செலுத்தத்தக்க வரியைப் பொறுத்த வரையில் மேற்சொன்ன நிறுவனம் தயாரித்துள்ள பொருட்களின் விற்பனை வரியின் மீது விலக்கு அளிக்கப்படுகிறது.

வரி வீதத்தைக் குறைத்தல் :

போராக்ஸின் விற்பனையைப் பொறுத்த வரையில், மாநிலங்களுக்கிடையில் நடைபெறும் வர்த்தகம் அல்லது வணிகம் தொடர்பாக சென்னையிலுள்ள போராக்ஸ் நிறுவனம் செலுத்தத்தக்க வரி ஒரு சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

16. வருவாய் :

தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம்.

1977–78 ஆம் ஆண்டிலிருந்து 1981–82ஆம் ஆண்டுவரையில் லான (1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை) ஆண்டுகளில் மேற்கூறிய சட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற வருவாய் குறித்த விவரங்கள் வருமாறு :—

| காலம். (1) | மொத்த வரவுகள். (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1977–78 .. .. .. .. .. | 17,845.59 |
| 1978–79 .. .. .. .. .. | 21,734.82 |
| 1979–80 .. .. .. .. .. | 25,827.90 |
| 1980–81 .. .. .. .. .. | 34,361.75 |
| 1981–82 .. .. .. .. .. | 32,538.00 (1981 டிசம்பர் வரையில்) |

1980–81 ஆம் ஆண்டில் 1980ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதி வரையில் இச்சட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற வருவாய் ரூ. 22,681.95 இலட்சம் ஆகும். 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரையிலான வருவாய் ரூ. 32,538.00 இலட்சமாகும். முந்தைய ஆண்டின் நிகரான காலத்திற்குரிய வருவாயோடு ஒப்பிடுகையில், 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 9,856.05 இலட்சம் உயர்ந்துள்ளது. இவ்வாறாக வருவாயில் ஏற்பட்ட உயர்வு 43 சதவீதமாகும்.



1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம் :

1977–78 ஆம் ஆண்டிலிருந்து 1981–82 ஆம் ஆண்டு வரையில் (1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை), 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட வருவாய் விவரம் வருமாறு :—

| காலம். (1) | மொத்த வரவுகள். (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1977–78 .. .. .. .. .. | 4,302.78 |
| 1978–79 .. .. .. .. .. | 4,984.25 |
| 1979–80 .. .. .. .. .. | 6,854.07 |
| 1980–81 .. .. .. .. .. | 8,574.67 |
| 1981–82 (1981 டிசம்பர் வரை) .. .. | 7,197.00 |

முந்தைய ஆண்டின் நிகரான காலத்திற்குரிய வருவாயோடு (ரூ. 5,770.55 இலட்சம்) ஒப்பிடுகையில், 1981–82 ஆம் ஆண்டில் (1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை) ரூ. 1,426.45 இலட்சம் வருவாய் உயர்ந்துள்ளது. இவ்வாறாக வருவாயில் ஏற்பட்ட உயர்வ 25 சதவீதமாகும்.

தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டமும், தமிழ்நாடு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதிச் சட்டமும்.

1977–78 ஆம் ஆண்டிலிந்து 1981–82 ஆம் ஆண்டு வரைலான (1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை) கால அளவில் மேற்கூறிய சட்டங்களின் கீழ் கிடைக்கப்பெற்ற வருவாய் குறித்த விவரங்கள் வருமாறு :—

| காலம். (1) | மொத்த வரவுகள். (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1977–78 .. .. .. .. .. | 2,081.70 |
| 1978–79 .. .. .. .. .. | 2,379.69 |
| 1979-80 .. .. .. .. .. | 2,671.13 |
| 1980-81 .. .. .. .. .. | 2,892.91 |
| 1981-82 (டிசம்பர் வரை) .. .. .. | 2,271.00 |

முந்தைய ஆண்டின் நிகரான காலத்திற்குரிய வருவாயோடு ஒப்பிடுகையில், 1981-82 ஆம் ஆண்டில் (1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை) ரூ. 145.54 இலட்சம் வரி வருவாய் அதிகரித்துள்ளது. இவ்வாறாக வருவாயில் ஏற்பட்ட உயர்வு 7 சதவீதமாகும்.

இவ்விரு சட்டங்களும் சேர்ந்து கேளிக்கைகளின் மீது வரி விதிக்க வகை செய்கின்றன. பணம் செலுத்துவதன் பேரில் மக்கள் அனுமதிக்கப்படும் திரைப்படக் காட்சிகள், குதிரைப் பந்தயங்கள் ஆகியவற்றிற்கு மட்டுமே வரி விதிக்க இச்சட்டங்களின் மூலம் வகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு 1961ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதிச்சட்டத்தின்படி வரிவிதிப்பதன் பேரில் கிடைக்கப்பெறும் தொகை முழுவதும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அதிகார மன்றங்களுக்கு ஒதுக்கப்படுகிறது. இது தவிர, தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் கீழ் கிடைக்கப்பெறும் அடிப்படை கேளிக்கை வரித்தொகையில் 90 சதவீதம் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அதிகார மன்றங்களுக்கு ஒதுக்கப்படுகிறது.

தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம்,

குதிரைப் பந்தயங்கள், சென்னையிலும் (கிண்டி) உதகமண்டலத்திலும் நடைபெறுகின்றன. கிண்டியில் நடைபெறும் குதிரைப் பந்தயங்களுக்கு 1981 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 4ஆம் தேதி வரையில் 20 சதவீதம் வரி விதிக்கப்பட்டது. அதன் பின்னர் தானியங்கப் பந்தய கணிப்புப் பொறி அமைவின் மூலம் குதிரைகள் மீது பந்தயம் கட்டுவதற்கும், சில இடங்களிலிருந்து டபுல், டிரிபில், தனாலா (Tanal) போர்காஸ்ட் (Forecast) ஜாக்பாட் ஆகிய பந்தயங்களுக்குப் பணம் கட்டி ஆடுவதற்கும் சென்னையில் பணைய ஒப்புநர்களிடம் பந்தயம் கட்டுவதற்கும் விதிக்கப்படும் வரி வீதம் 25 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது பந்தய வரி மீது 5 சதவீதம் மேல் வரியும் விதிக்கப்படுகிறது. உதகமண்டலத்தில் நடைபெறும் குதிரைப் பந்தயங்களைப் பொறுத்தவரையில், வரிவீதம் 1981ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 4ஆம் தேதிவரையில் 10 சதவீதமாக இருந்தது, 1981 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 5ஆம் தேதி முதல் 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23ஆம் தேதி வரையில் வரி மீதான 5 சதவீத மேல் வரியுடன் இது 25 சதவீதமாக இருந்தது. அதன் பின்னர் 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24ஆம் தேதி முதல் 1981ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30ஆம் தேதிவரையில் 5 சதவீதம் மேல் வரியுடன் 15 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.



ஊட்டி, ஐதராபாத், பெங்களூர், பம்பாய், கல்கத்தா ஆகிய இடங்களில் நடைபெறும் குதிரைப் பந்தயங்கள் தொடர்பாக கிண்டியில் பந்தயம்கட்டி ஆடுவதற்கும் அனுமதிப்பதுடன் 1981 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 4ஆம் தேதி வரையில் 10 சதவீதம் என்ற வீதத்தில் வரி விதிக்கப்பட்டதும் அதன் பின்னர் வரியின் 5 சதவீத மேல் வரியுடன் 25 சதவீதம் உயர் வீதத்தில் வரி விதிக்கப்பட்டது.

பல்வேறு இடங்களில் நடைபெறும் பந்தயம் தொடர்பாகப் பணம் கட்டி ஆடுவது குறித்து விதிக்கப்பட்டு வந்த வரி வீதம் 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24 ஆம் தேதி முதல் 25 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

கிண்டியில் நடைபெறும் குதிரைப்பந்தயங்கள் தொடர்பாக பணம் வைத்து ஆடுவது குறித்த வரி வீதம் 1982 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 7 ஆம் தேதியிலிருந்து மார்ச்சு திங்கள் 31 ஆம் தேதிவரையில் 25 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

1977-78 ஆம் ஆண்டிலிருந்து 1981-82ஆம் ஆண்டு வரையில் மேற்கூறிய சட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற வருவாய் குறித்த விவரங்கள் வருமாறு :—

| காலம். (1) | மொத்த வரவுகள். (2) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1977-78 .. .. .. .. .. | 270·02 |
| 1978-79 .. .. .. .. .. | 208·07 |
| 1979-80 .. .. .. .. .. | 266·08 |
| 1980-81 .. .. .. .. .. | 408·39 |
| 1981-82 (1981 டிசம்பர் வரை) .. .. | 301·90 |

1980ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரையில் கடந்த 1980-81 ஆம் ஆண்டின் நிகரான காலத்திற்குரிய வருவாயோடு (ரூ. 228.15 இலட்சம்) ஒப்பிடுகையில், 1981—82ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற வரித் தொகை (1981ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள்வரை) ரூ. 72·85 இலட்சம் உயர்ந்துள்ளது. இவ்வாறாக வருவாயில் ஏற்பட்ட உயர்வு 32 சதவீதமாகும்.

### தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஒட்டல்கள் தங்கும் விடுதிகளில் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகள் மீது வரி விதிப்புச் சட்டம்.

தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு ஓட்டல்கள்—தங்கும் விடுதிகளில் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகள்மீது வரி விதிப்புச் சட்டம் என்று அழைக்கப்படும் புதிய சட்டம் ஒன்று, தங்கும் வசதிக்காக (குளிர் பதனம், தொலைக்காட்சி, வானொலி, இசை, கூடுதல் படுக்கைகள் இதுபோன்றவற்றிற்குரிய கட்டணங்கள் உட்பட ஆனால், உணவு, பானங்கள், தொலைபேசி கட்டணங்கள் ஆகியவற்றிற்குரிய கட்டணங்கள நீங்கலாக) நாளொன்றுக்கு இருபது ரூபாய் அல்லது அதற்கு மேலும் கட்டணங்கள் விதிக்கப்பெறுகின்ற ஓட்டல்கள்—தங்கும் விடுதிகளில் வகை செய்யப்பட்டுள்ள ஆடம்பர வசதிகள் மீது வரி விதிக்கும் பொருட்டு, கொண்டு வரப்பட்டுள்ளது. அத்தகைய வரி, எந்த ஓட்டலில் ஆடம்பர வசதிகள் வகை செய்யப்பட்டுள்ளனவோ அந்த ஓட்டலில் தங்கியிருப்பவரிடமிருந்து அந்த ஓட்டல் உரிமையாளரால் வசூலிக்கப்பட வேண்டும்.

| | ஆடம்பர வசதிக்குரிய வரி. | வரி வீதம். |
|---|---|---|
| | (1) | (2) |
| (அ) | தங்கும் வசதிக்காக (குளிர்ப்பதனம், தொலைக்காட்சி, வானொலி, இசை, கூடுதல் படுக்கைகள் இதுபோன்றவற்றிற்கான கட்டணங்கள் உட்பட ஆனால் உணவு, பானங்கள், தொலைபேசி கட்டணங்கள் ஆகியவற்றிற்கான கட்டணங்கள் நீங்கலாக) நாளொன்றுக்கு ஒருவருக்கு இருபது ரூபாய் அல்லது அதற்கு மேலும் ஆனால் ஐம்பது ரூபாய்க்குக் குறைவான கட்டணம். | மேற்கண்ட கட்டணத்தில் ஐந்து சதவீதம். |
| (இ) | நாளொன்றுக்கு ஒருவருக்கு அத்தகைய கட்டணம் ஐம்பது ரூபாய் அல்லது அதற்கு மேல் இருந்தால். | அத்தகைய கட்டணத்தில் பத்து சதவீதம். |



1980—81ஆம் ஆண்டிலிருந்து 1981-82ஆம் ஆண்டு வரையிலான (1981ஆம் ஆண்டு டிசம்பர் வரை) கால அளவிற்கு, மேற்கூறிய சட்டத்தின்கீழ் வரப் பற்ற வருவாய் குறித்த விவரங்கள் வருமாறு :—

| காலம். | மொத்த வரவுகள். |
|---|---|
| (1) | (2) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1980—81 .. .. .. .. .. | 32·73 |
| 1981-82 (1981 டிசம்பர் வரை) .. .. | 73-00 |

17. 1981—82ஆம் ஆண்டில் வணிக வரிகள் துறையின் பணி அரசு எதிர்பார்த்தபடி செவ்வையாக நடைபெற்றுள்ளது. துறையில் செய்யப்பட்ட பல்வேறு மேம்பாடுகளின் பயனாகவும் வணிகர்களுக்கு அளிக்கப்பட்ட வசதிகளின் காரணமாகவும் இத்துறை அதிகாரிகளுக்கும் வரி விதிக்குட்பட்ட வணிகர்களுக்கும் இடையே நல்லுறவு நிலவுகிறது. இது வணிகவரி சட்டங்களின் நிர்வாகம் தடையின்றி நடைபெற துணையாக இருந்தது. இதே போன்ற நல்லுறவும் நெருங்கிய ஒத்துழைப்பும் பொது மக்களுக்கும் இத்துறைக்கும் இடையே தொடர்ந்து நிலவும் என்று அரசு கருதுகிறது.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

*புதன்கிழமை, 1982 மார்ச் 10*

*மாசி 26, துன்மதி—திருவள்ளுவர் 2013.*

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

''செயற்பாலது தோரும் அறனே ஒருவற்கு
உயற்பால தோரும் பழி.''

ஒருவன் வாழ்நாளில் முயற்சிமேற்கொண்டு செய்யத்தக்கது அறம்; செய்யாமல் காத்துக் கொள்ளத் தக்கது பழியே.

### 1. அறிவிப்பு.

நல்வாழ்வுத் துறை அமைச்சர் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:

தமிழ் நாட்டில் குறிப்பிட்ட பகுதிகளில் காலரா நோய் பரவி வருவதாக பல மாண்புமிகு உறுப்பினர்கள் பேரவையின் விதி 54, மற்றும் விதி 55-ன் கீழ் அறிவிப்புகள் கொடுத்துள்ளார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் கருத்துக்களுக்கு இணங்க மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் 106-வது விதியின் கீழ் தமிழ் நாடு பூராவும் உள்ள நிலை குறித்து ஒரு பொது அறிக்கையை அவைக்கு அளிப்பார்கள்.

டாக்டர் மு. கருணாநிதி : பாயின்ட் ஆப் ஆர்டர். பல உறுப்பினர்கள் பல்வேறு பகுதிகளில் இந்தக் காலரா நோய் பரவி வருவதைக் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம், ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர் என்று தெரிவித்துள்ளீர்கள். அப்படிப்பட்ட முறையில் எடுத்துக்கொண்டால் அது அந்த மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் பேச வாய்ப்பு அளிக்க உதவிகரமாக இருக்கும். அந்த வாய்ப்பை அவர்களுக்கு அளிக்காமல், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கை அளிப்பது முறையல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பகுதியைக் குறிப்பிட்டுக் காட்டிக் கொடுத்துள்ளார்கள். அவற்றை ஒவ்வொரு நாளைக்கு ஒன்று என்று எடுத்துக்கொண்டால் நேரம் அதிகமாகும்

என்பதால், பொதுவாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கை கொடுத்தால் போதுமானது என்று முடிவு செய்யப்பட்டது. வேண்டுமானால், எந்தெந்த உறுப்பினர்கள் அப்படிப்பட்ட தீர்மானங்களைக் கொடுத்துள்ளனர் என்று அவர்களின் பெயர்களைப் படித்து விடுகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் பங்குகொள்கிற வகையில் கவன ஈர்ப்புத் தீர்மானமாக இதை எடுத்துக்கொள்வது தான் முறையாக இருக்கும். இன்று இல்லாவிட்டால், நாளையோ அல்லது அதற்கு மறுநாளோ அதை எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் கேட்டுக்கொண்டது மாதிரி அதை கவனஈர்ப்புத் தீர்மான மாக எடுத்துக்கொண்டால் நன்றாக இருக்கும். ஏனென்றால் விவரமான முறையில் பதில் கொடுக்கமுடியும். ஆனால் நாளைய தினம் ஹெல்த் டிமான்ட் இருப்பதால் அதை ஒரு அறிக்கையாக இன்றைக்கே வைத்து விட்டால் நன்றாக இருக் கும் என்று தான் பேரவைத் தலைவர் அவர்கள் இந்த முறை யைப் பரிந்துரைத்தார்கள். பேரவைத் தலைவர் என்ன சொல் கிறாரோ அதை ஏற்றுக்கொள்வதற்கு நான் தயாராக இருக்கிறேன். நாளையோ அல்லது அதற்கு மறுநாளோ அதை எடுத்துக்கொள்வதில் எனக்கு ஒன்றும் பிரச்னை இல்லை. பேரவைத் தலைவர் சொல்வதை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவ : நாளைக் காலை அதை கவன ஈர்ப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்ளலாம். அது குறித்து அவை முன் வைக்கப்பட்டுள்ள அறிக்கை, அந்த கவனஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படுகிற வரையில் 'கான்பிடன்சியலாக' இருக்க வேண்டும்.

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தருகில் நடைபெற்ற கலவரம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் எஸ். சிவராமன், மு. அப்பாதுரை, நா. சுந்தரராஜ், இல. பலராமன், ப. பொன்னுரங்கம், கு. பா. பழனியப்பன், த. ஆறுமுகம், ப. சுந்தரம், பாபு ஜனார்த்தனன், த. வேணு கோபால், ஏ. டி. குலசேகர், என். எஸ். வி. சித்தன், ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன், எஸ். என். இராமசாமி, இ. முத்துராமலிங்கம், ஏ. சாகுல் ஹமீது, சோ. அழகர்சாமி, மு. அம்பிகாபதி, இரா. கருப்பையா, தி. கா. நல்லப்பன்,





ஏ. டி. கருப்பையா, எஸ். ஆண்டித்தேவர், ஆர். சுந்தரமூர்த்தி, ஜே. ஹேமச்சந்திரன், டி. மணி, கே. ஆர். சுந்தரம், கே. எம். தங்கமணி, ரா. கிருஷ்ணன் ஆகியோர் ''சென்னை மீனம் பாக்கம் விமான நிலையத்தருகில் நேற்று 9—3—1982 அன்று நடைபெற்ற கலவரம் குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என் பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி முதலில் திரு. நா. சுந்தரராஜ் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் அதாவது 9-3-1982 அன்று காலை டெல்லியிலே நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் மாநிலங்கள் அவை உறுப்பினர் பதவி பொறுப்பை ஏற்று, சென்னைக்கு திரும்பி வரும்போது அவர்களுக்கு தமிழகத்தினுடைய காங்கிரஸ் கட்சியும் சிவாஜி ரசிகர் மன்றங்களும் மற்றும் பல்வேறு பிரிவுகளும் ஒரு மாபெரும் வரவேற்பு கொடுக்கும் நோக்கத்தோடு பெரும் திரளான மக்கள் கூட்டம் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தை நோக்கி வந்துகொண்டிருக்கிறபோது அவர்களை அங்கே இருந்த காவல்துறை அதிகாரிகளும் காவலர்களும் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். பிரதான சாலையிலிருந்து விமான நிலையத்திற்கு உள்ளே செல்லும் வழியில் பெரிய கயிறை நுழை வாயிலிலும் வெளியிலும் கட்டி, யாரையும் உள்ளே செல்ல அனு மதிக்க முடியாது என்று தடுத்துவிட்டார்கள். காலை 8.00 மணியிலிருந்தே இந்த சம்பவம் நடைபெற்றுக்கொண் டிருந்தது.

அதன் பிறகு மிகப் பெரிய கூட்டம் வாயிலில் கூடியிருந் தது. அங்கே அமைக்கப்பட்டிருந்த மேடையில் வந்து சிவாஜி கணேசன் பேசுவார் என்று கருதி, மக்கள் கூட்டம் அங்கே கூடியிருந்தது. அங்கே இருக்கிற காவல் துறையின ரால் இடையிலே சிற்சில சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. அங்கே இருந்த சில முக்கியமான நண்பர்களைப் பார்[வ] கிண்டலும் கேலியும் செய்கின்ற வகையில் காவல்துறை [ரை] காரிகளும் காவலர்களும் பேசியிருக்கிறார்கள். ''[ல்ல] [ம்பி] பதவி வந்துவிட்டது, அவருக்கு இவ்வளவு பெரிய கூட் [என்] என்று அங்கே கூடியிருந்த மக்களைப் பார்த்து கிண் [லை] கேலியும் செய்திருக்கிறார்கள். அதன் பிறகு சிறிது [லை.] கழித்து நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. [ண்டு] சேகரன் அவர்கள் அங்கே வந்து, மாவட்ட காவல் துறை [ணீர்] காரியிடம் பேசி, நீங்கள் ஏன் உள்ளே விட அனுமதி [கள்.] கிறீர்கள் என்று கேட்டபோது நாங்கள் உள்ளே விட [ன்ற] டோம் என்று சொல்லி [ள்.]

தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். அதன் பிறகு அவர்கள் தான் ஒரு சட்ட மன்ற உறுப்பினர் என்று செல்லியும், அங்கே இருந்த காவல்துறை அதிகாரிகள் அதை இலட்சியம் செய்யாமல் யாராக இருந்தாலும் உள்ளே விடமுடியா:து என்று சொல்லி, அவர் கூறியதைப் புறக்கணித்து விட்டார்கள்.

அதுமட்டுமல்ல, திரு. இராஜசேகரன் அவர்கள் நாங்கள் உள்ளே போகவில்லை ; கார் நிறுத்தப்பட்டிருக்கிற இடத்திற்குப் போகிறோம் ; நாங்கள் எங்கள் தலைவருக்கு வரவேற்பு கொடுக்கச் செல்லும்போது இப்படி வெளியே நிற்பது சரியல்ல என்று சொன்ன பிறகும் அதிகாரிகள் அதற்குச் செவி சாய்க்கவில்லை.

இதற்கிடையில் ஒரு இளைஞனை காவல் துறையினர் அடித்து கையை ஒடித்துவிட்டார்கள். அந்த இளைஞன் திரு. இராஜசேகரன் அவர்களிடம் வந்து கையைக் காட்டிச் சொல்லியிருக்கிறார். அது மட்டுமல்லாமல் தாய்க் குலத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணையும் முதுகிலே அடித்து துன்புறுத்தியிருக்கிறார்கள். அவர்களை ஒரு ஓரமாக உட்கார வைத்துவிட்டு நான் பிறகு வந்து பேசிக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு, காவல் துறை அதிகாரியைக் கேட்டு, அனுமதி வாங்கிவிட்டு உள்ளே போயிருக்கிறார்கள். அவர்கள் உள்ளே சென்ற சிறிது நேரத்தில் சில காவல்துறை அதிகாரிகள் அடிபட்டு கை ஒடிந்த இளைஞனையும், அந்தப் பெண்மணியையும் அவர்களுடைய ஜீப்பிலே அழைத்துச் சென்று வேறு எங்காவது கொண்டுபோய் விட்டுவிடலாம் அல்லது பொய் வழக்குப் போடலாம் என்ற நோக்கத்தோடு ஜீப்பிலே ஏற்ற முயற்சி செய்திருக்கிறார்கள். அதைப் பார்த்த கூட்டத்திலிருந்த சிலர் தடுத்திருக்கிறார்கள். திரு. இராஜசேகரன் அவர்கள் அந்த இருவரையும் இங்கே உட்கார வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள் ; அவர்கள் வந்தபிறகு பார்த்துக்கொள்வார்கள், அதுவரையும் இங்கே இருக்கட்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இந்த நேரத்தில் அங்'க பெரிய கூட்டம் கூடிவிட்டது. போலீ ார்தடியடிப்பிரயோகம் நடத்த ஆரம்பித்துவிட்டர்கள். தடியடிப் யோகம் நடத்தியது மட்டுமல்ல. இன்றைக்கு சில பத்திரிகை லே அதுபற்றிய செய்தியையும் காவல்துறையினர் வெளியிட் கிறார்கள். பெரிய கூட்டம் டிக்கெட் வாங்காமல் உள்ளே மா;ம்போது லத்தி சார்ஜ் செய்யப்பட்டது என்ற ஒரு தவறான எஸ். தியைக் கொடுத்திருக்கிறார்கள். சென்னையிலிருந்து விமான இல. டயத்திற்கு வருகின்ற பிரதான சாலயிலேயே கூட்டம் தடுத்து த. ஆதப்பட்டது ; உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. அப்படி கோபகும்போது டிக்கட்டு வாங்குகின்ற பிரச்சினையே எழவில்லை. ஆர். ேவ, காவல் துறையினர் வேண்டுமென்றே, திட்டமிட்டு இ. தகைய செயல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை நான் மு. ட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



ஆகவே காவல் துறையினர் ஆரம்பத்திலிருந்தே வேண்டுமென்றே அங்கே வந்திருக்கக்கூடிய பொது மக்களையும், காங்கிரஸ் தொண்டர்களையும், சிவாஜி ரசிகர் மன்றத்தினரையும் கேலியும் கிண்டலும், நையாண்டியும் செய்து அவர்களுடைய அதிருப்தியைச் சம்பாதித்துக் கொண்டிருந்திருக்கிறார்கள். இவ்வாறு வேண்டுமென்றே காவல் துறையினைச் சேர்ந்தவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9.10)

அங்கே அதிகமான கூட்டம் கூடியதற்குப் பின்னால் அவர்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப்படவில்லை. ஆனால் வெளியே நிற்கவும் அனுமதிக்கவில்லை. ஆனால் அந்தச் சாலையின் வழியாக அப்போது பேருந்துகளும், கார்களும் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுக்கொண்டிருந்தன. ஆகவே இவைகளை அனுமதிக்கிறீர்களே, எங்களையும் உள்ளே செல்ல ஏன் அனுமதிக்கமாட்டேன் என்கிறீர்கள் என்று கேட்டதற்காக இந்த இரண்டு சம்பவங்களையும்வைத்து போலீசார் லத்தி சார்ஜ் செய்திருக்கிறார்கள். லத்தி சார்ஜ் என்றால் சாதாரண லத்தி சார்ஜ் அல்ல. கடுமையான லத்தி சார்ஜ் நடந்தது. கண்ணீர் புகை குண்டு விடப்பட்டது. துப்பாக்கிப் பிரயோகம் கூட நடந்திருக்கின்றது. அந்தச் சூழ்நிலையில்தான் நான் சட்டமன்ற உறுப்பினர் பழனிமுத்து, ராசாம்பாள் ஆகியோர் அந்தச் சாலையின் வழியாக உள்ளே செல்ல முயன்றோம். அந்தச் சமயத்திலே காவல் துறையினர் மிகக் கடுமையான முறையில் தாக்குதல் நடத்தினார்கள். அந்தத் தாக்குதலில் 30 பேர்களுக்கு மேலாகக் காயம் அடைந்திருக்கிறார்கள். அதிலே சட்ட மன்ற உறுப்பினர் திரு. இராஜசேகரன் அவர்கள் தாக்கப்பட்டு அந்த வடு இன்னும்கூட பார்க்க முடிகின்ற அளவுக்கு இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அளவுக்குக் கடுமையான முறையிலே காவல் துறையினர் நடந்திருக்கிறார்கள். ஆகவே நடந்திருக்கக் கூடிய சம்பவத்தைப் பார்க்கின்ற நேரத்திலே இதற்கு ஆரம்பமே காவல் துறையினர்தான். அவர்கள்தான் வேண்டுமென்றே தொந்தரவு செய்திருக்கிறார்கள். அங்கே வந்தவர்கள் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களை வரவேற்கத்தான் சென்றார்கள். ஆகவே வாழ்க என்று சொல்வதற்காகத்தான் வந்தார்களே தவிர, யாரையும் ஒழிக என்று சொல்லப்படுகின்ற கோஷத்தைச் சொல்ல வரவில்லை. ஆகவே அப்படி வருகின்றவர்கள் மோதலை விரும்பி வரவில்லை. வேண்டுமென்றே தகராறு செய்யவேண்டும் என்பதற்காக வரவில்லை. அடி படுகின்ற நோக்கத்தோடு வரவில்லை வன்முறையில் ஈடுபடவேண்டும் என்ற நோக்கத்தோடு வரவில்லை. ஆகவே கூடிய கூட்டத்தினை காவல் துறையினர் வேண்டுமென்றே கலைக்கவேண்டும் என்ற அடிப்படையிலே ான் கண்ணீர் புகைவீசியும், துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியும் இருக்கிறார்கள். அதனால் இன்று மிகப்பெரிய அளவில் பலபேர் காயம் அடைகின்ற வகையிலே இந்தச் சம்பவங்களை ஏற்படுத்தி இருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சம்பவத்திற்கு முழுப் பொறுப்பும் தமிழ்நாட்டிலே

[திரு. நா. சுந்தரராஜ்] [1982 மார்ச் 10

இருக்கக்கூடிய காவல் துறையினரைச் சார்ந்ததுதான் என்பதை நான் நிச்சயமாக மறுக்க மாட்டேன். அந்தப் பகுதிக்குப் பொறுப் பேற்றுக்கொண்டிருக்கின்ற காவல் துறையினரைச் சேர்ந்த டெபுட்டி சூப்பிரண்டன்ட் அவர்கள்தான் அதற்கு பொறுப்பேற்க வேண்டும். ஆகவே, இது குறித்து விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும். மற்ற சம்பவங்களைப் பொறுத்த வரையிலே சாதாரணமாக அவையின் இதர அலுவல் களை ஒத்தி வைப்பது இல்லை என்று சொல்வது போல் இந்தச் சம்பவத்தைப் பொறுத்தவரையிலே ஒத்திவைக்காமல் இருக்கக் கூடாது. கண்டிப்பாக அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதுகுறித்து விவாதிக்கவேண்டும். மேலும் காவல் துறை யினருக்கு சமீப காலங்களிலே சட்டமன்ற உறுப்பினர் என்றாலே அவர்களைக் கிள்ளுக்கீரையாக நினைக்கிறார்கள். பொது மக்க ளையும் காவல்துறையினர் அடித்து வருகின்ற சூழ்நிலை இருந்து வருகின்றது. ஆகவே இந்த நிலைமையினைத் தடுக்க வேண்டு மென்றால் அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அவ்வாறு தடுக்கவில்லை என்றால் வருங்காலத்திலே நிச்சயமாக மிகப் பெரிய இழப்புக்கு நாம் ஆளாகக்கூடிய சூழ்நிலை ஏற்படும். ஆகவே இது குறித்து விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் சென்னை விமான நிலை யத்திற்கு அருகிலே நடந்த இந்தச் சம்பவம் மிகவும் கண்டிக்கத் தக்கதாகும். நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் இராஜ்ய சபை உறுப்பினராகப் பதவி ஏற்றதைத் தொடர்ந்து அவர் சென் னைக்கு வருகிறார் என்றபோது அவரை வரவேற்று வாழ்த் துவதற்கு அவருடைய ரசிகர்கள் அங்கே திரண்டிருக்கிறார்கள். அவர்கள் விமான நிலையத்திற்குள்ளே போகட்டும், சிவாஜி கணேசன் அவர்களை வரவேற்கட்டும், அதிலே உங்களுக்கு என்ன நட்டம் வந்தது?

இதேபோன்றுதான் முன்பு மதுரையிலே சிவாஜி கணேசன் படத்தின் 100-வது நாள் விழாவின்போது ஒரு சம்பவம் நடந்தது. அப்போது திரு. நாஞ்சில் மனோகரன் அவர்கள் இங்கே நிதி யமைச்சராக இருந்தார். அப்போது ஒரு ஒத்திவைப்புத் தீர் மானம் கொடுக்கப்பட்டு இங்கே விவாதிக்கப்பட்டது. அதே போன்று நேற்றைய தினமும் விமான நிலையத்திற்கு அருகிலே சிவாஜி கணேசன் அவர்களை வரவேற்கச் சென்றிருந்தவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். கண்ணீர் புகைக் குண்டு வீசப்பட்டி ருக்கின்றது. துப்பாக்கிப் பிரயோகம் கூட நடந்திருக்கின்றது. ஒரு ராஜ்ய சபை உறுப்பினருக்கு எதிராகவே, ஒரு சட்டமன்ற உறுப்பினரையே தாக்கியிருக்கிறார்கள் என்கின்றபோது இந்தக் காவல் துறையினரைப்பற்றி யோசிக்கவேண்டி இருக்கின்றது. அவர்கள் இப்படி ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து கடைசி



1982 மார்ச் 10] [திரு. மு. அம்பிகாபதி]

யிலே மனிதனையே கடிக்கின்ற மாதிரி சட்டமன்ற உறுப்பினரை தான் ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்று சொன்னதற்குப் பிறகும் திரு. ராஜசேகரன் அவர்களை அடித்து இருக்கின்றார்கள். அடிக் கப்பட்ட அந்த அடியைப் பார்த்தால் அவர்களுடைய உடலிலே ஏற்பட்டிருக்கக்கூடிய புண்ணைப் பார்த்தால் மிகவும் நெஞ்சு பொறுக்காத ஒரு நிலைமை நமக்கு ஏற்படுகின்றது.

நான் காலையில் அந்தக் காயங்களைப் பார்த்தேன். சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் கூட இந்த அனுபவம் வரவேண்டும் என்று நினைக்கிறேன். ஏனென்றால் ராஜசேகரன் அவர்கள் —அவர் காங்கிரஸ்காரராக இருக்கலாம், ஆனால் ஒரு எம். எல். ஏ. அட்டாக் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதுதான் மெயின் பாயின்ட். இது நாளைக்கு அந்தப்புறம் இருக்கக் கூடியவர்களுக்கும் வரலாம். நீங்களும் எதிர்க்கட்சியில் வரக் கூடும். ஆக, ஒருசக சட்டமன்ற உறுப்பினர் தாக்கப்பட்டிருக் கிறார் என்றுதான் நாம் இந்த விஷயத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். அவர் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவராக இருக்க லாம் அல்லது கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவராக இருக்கலாம் அல்லது தி.மு.க.வைச் சார்ந்தவராக இருக்கலாம், அல்லது ஆளும் கட்சியைச் சேர்ந்த அ.தி.மு.க. உறுப்பினராக இருக்கலாம். ஒரு உறுப்பினர் தாக்கப்பட்டிருக்கிறார்.

திரு. சிவாஜி கணேசன் அவர்கள் ஒரு சிறந்த நடிகர். தமிழ் நாட்டிற்குப் பெருமை தேடித் தரக்கூடிய அளவிற்கு ஒரு சிறந்த நடிகர். சிம்மக்குரலோன். பராசக்திக்கு கலைஞர் அவர்கள் எழுதிய வசனங்களை அற்புதமாகப் பேசி நடித்தவர். மனோ கராவில் நடித்த சிறந்த ஒரு சொல்லாளர். கப்பலோட்டிய தமிழ னில் நடித்து தேசபக்தியை, தேசீய உணர்வை ஏற்படுத்தியவர். அவர் தமிழ்நாட்டில் பிறந்தது தமிழ்நாட்டுக்கே ஒரு பெருமை. அப்படிப்பட்டவர் ராஜ்யசபாவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டி ருக்கிறார்கள் என்றால் அது தமிழ்நாட்டுக்கு கிடைத்துள்ள பெருமை அல்லவா? (குறுக்கீடு) அம்பிகாபதியாகவும் நடித்திருக் கிறார். எனவே இப்படிப்பட்ட ஒரு சிறந்த நடிகரை தமிழ் நாட்டுக்கு பெருமை தேடி தருகிற வகையிலே ராஜ்யசபா உறுப் பினராக ஆக்கியிருக்கிறார்கள் என்றால் அவருக்காக வரவேற்பு அளிக்கச் சென்றிருக்கக்கூடிய அந்த ஊர்வலத்தை ஏன் கயிறு கட்டி தடுக்கவேண்டும்? ஏன் கண்ணீர்குண்டு வீசவேண்டும்? தாக்குவதுதான் போலீசார் வேலையா? இவ்வளவு கூட்டம் வரும் என்று தெரிந்திருந்தும் அதை ஒழுங்கு படுத்தி போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் அவர்கள் நிற்பதற்கு ஏதுவாக வகைப் படுத்துவதற்குப் பதிலாக மக்கள்திரண்டு விட்டால் லத்தி சார்ஜ் செய்வது, கண்ணீர் புகைக் குண்டு வீசுவது என்றால் என்ன பொருள்? காவல் துறையினரைத் தாக்கிவிட்டால் காவல் துறையினர் தாக்கப்பட்டார் என்று 307 படி வழக்கு போட்டு விடுவார்கள். இன்று இங்கு ஒரு சட்டமன்ற

உறுப்பினர் தாக்கப்பட்டிருக்கிறார். அவர் எந்தக் கட்சியைச் சார்ந்தவர் என்பதல்ல. இன்று இந்தப் பக்கத்தில் உள்ள உறுப்பினர் தாக்கப்பட்டிருக்கலாம், நாளை அந்தப் பக்கத்தில் உள்ளவர்களை தாக்க மாட்டார்கள் என்று எப்படிச் சொல்ல முடியும்? ஆகவே ஒரு சட்டமன்ற உறுப்பினர் தாக்கப்பட்டிருக்கிறார் என்பது ஒரு ஸீரியஸான விஷயம். இதன் மேல் ஒரு நீதி விசாரணை வேண்டும். ஹைகோர்ட் நீதிபதியைக் கொண்டு நீதி விசாரணை செய்ய உத்தரவிட வேண்டும். சம்பந்தப்பட்ட காவல் துறையினரைச் சார்ந்தவர்களை சஸ்பென்ட் செய்யவேண்டும். அதற்கு மேல் விசாரணை நடத்த வேண்டும். இப்போது சட்டமன்ற உறுப்பினர் தாக்கப்படுகிறார் என்று சொன்னால் நாளை மந்திரிகளுக்கே பாதுகாப்பு இருக்காது. காவல் துறையைச் சேர்ந்தவர்கள் மந்திரிகளை அடித்தாலும் அடிப்பார்கள், போகிற போக்கைப் பார்த்தால் அப்படித் தெரிகிறது. காவல் துறையினரை கண்ட்ரோல் செய்யவேண்டும்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களை வரவேற்கக் கூடி இருந்த அந்த மாபெரும் கூட்டத்தில் தடியடி நடத்தி, கண்ணீர்ப் புகை வீசி, துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியது, சட்ட மன்ற உறுப்பினர் ஒருவரும் தாக்கப்பட்டிருக்கிறார்கள். இது தமிழ் நாட்டுக்குப் பெருமை சேர்க்காது. சாதாரண மக்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே இந்த நிகழ்ச்சியின்மீது நீதி விசாரணைக்கு உத்தரவிட்டு, மற்ற பல்வேறு காரியங்கள் பற்றி விவாதிக்கவும் அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இது பற்றி விவாதிக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. பாபு ஜனார்த்தனன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் ராஜ்ய சபா உறுப்பினராக ஆகி சென்னை திரும்புகையில் அவர்களுக்கு அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்களும் அவர்களுடைய ரசிகர்களும் ஒரு சிறப்பான வரவேற்புக்கு ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். எந்தக் கட்சியும் அந்தக் கட்சித் தலைவர்கள் வருகிறார்கள் என்று சொன்னால் அந்தக் கட்சித் தொண்டர்கள் உணர்ச்சி பூர்வமாக, உணர்வு பூர்வமாக, வரவேற்பது இயற்கை. அந்த வகையில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களை வரவேற்பதற்காக அவர்களது ரசிகர்களும் காங்கிரஸ் கட்சித் தொண்டர்களும் வரவேற்கச் சென்றிருக்கிறார்கள். நடிகர் திலகம் அவர்களுக்கு வரவேற்பு அளிக்கிற நிகழ்ச்சிக்கு பெருவாரியான மக்கள் வருவார்கள், அங்கு அதற்காக தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று காவல் துறையினர் முன் ஏற்பாடு செய்யாத காரணத்தினால்தான் இப்படிப்பட்ட நிகழ்ச்சி ஏற்பட்டு எல்லோரும் வருந்தத்தக்க அளவிற்கு சட்டமன்ற உறுப்பினர் ராஜசேகரன் அவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள்.





காவல் துறையினர் போதுமான காவல் துறை ஏற்பாடுகளைச் செய்து, அந்த வழியிலே ஒரு டைவர்ஷன் ஏற்பாட்டைச் செய்திருக்கலாம். அப்படிச் செய்திருந்தால இந்த வருந்தத்தக்க நிகழ்ச்சி ஏற்பட்டிருக்காது. அப்படி ஒரு டைவர்ஷன் ஏற்பாட்டைச் செய்து, அங்கே போக்குவரத்திற்கு காவல் துறையினர் ஈடுபடாமல், வருகின்ற மக்கள் கூட்டத்தை வகைப்படுத்தாமல், எப்படியும் மக்கள் வருவார்கள் என்பதையெல்லாம் எதிர்பார்த்து, அதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கலாம். அந்த ஏற்பாடுகளைக் காவல் துறையினர் செய்யாத காரணத்தினால் தான், இப்படிப்பட்ட ஒரு மோசமான நிலைமை ஏற்பட்டு, 23 முறைக்கு மேல் கண்ணீர் குண்டுகள் வீசப்பட்டு, தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டு, அருமை நண்பர் இராஜசேகரன் உடல் நிலையைப் பார்க்கின்ற போது, ஒரு பயங்கரமான தழும்பு ஏற்படுகின்ற அளவுக்கு காவல் துறையினர் இத்தகைய கேவலமான நிகழ்ச்சியிலே ஈடுபட்டது ஒரு வருந்தத்தக்க நிகழ்ச்சியாக இருக்கிறது. காவல் துறையினருக்கு இருக்கின்ற பொறுப்பற்ற தன்மை காரணத்தினால், பல இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம், தடியடிப் பிரயோகம், இன்னும் சொல்லப் போனால் காவல் நிலையங்களில் கற்பழிப்பு, இன்னும் பல பயங்கரமான கொள்ளைகள் நடை பறுகின்றன ; சட்டம், ஒழுங்கு இல்லையோ என்கிற அளவிற்கு நாட்டிலே நிலைமைகள் இருக்கின்றன. இந்த நிலைமைகளைப் பார்க்கின்ற போது, இங்கே கண்ணீர் குண்டு 23 முறைகளுக்கு மேல் வீசியிருக்கிறார்கள். சட்டமன்றம் நடைபறுகின்ற காரணத்தினால், துப்பாக்கிப் பிரயோகம் நடக்கவில்லையோ என்கிற அளவுக்கு, இத்தகைய சம்பவம் நம் மக்கள் முன்னால் நடை பற்றிருக்கிறது. காவல் துறையினர் இதற்கான முன்னேற்பாடுகளைச் செய்திருந்தால் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்காது என்பதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே வன்மையாகக் கண்டித்து, இந்தச் சபையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

(முற்பகல் 9.20).

**திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் ராஜ்ய சபா உறுப்பினர் பதவியேற்ற பிறகு, இங்கே வருகை தந்தபோது, அவருக்கு வரவேற்பு கொடுக்க வந்த தோழர்கள்மீது நடந்த தாக்குதலைக் குறித்து, இங்கே எனக்கு முன்னால் பலர் விவரமாகப் பேசினார்கள். பொதுவாகவே, நடிகர் திலகம் சிவாஜி கணேசன் வருவதற்காக அனைவரும் மீனம்பாக்கம் விமான நிலையம் வருக வருக என்று ஏராளமான வால்போஸ்டர்கள் சென்னை நகரமெங்கும் ஒட்டப்பட்டிருந்தது, காவல் துறையினருக்கு நன்கு தெரிந்ததே. எனவே, ஏராளமான தோழர்கள் அதற்காக வருவார்கள், அதற்கான முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்ற வகையிலே, காவல்

துறையினர் செய்யாததினால்தான் இத்தகைய அசம்பாவிதம் நிகழ்ந்தது என்று நான் கருதுகிறேன்.

காவல் துறையினர் இங்கே மட்டுமல்ல, காவல் துறையினர் முன்னெச்சரிக்கையாக இல்லாத காரணத்தால், இப்படிப் பல சம்பவங்கள் ஏற்பட்டிருக்கின்றன. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். முந்தா நாள் நான் சென்னைக்கு, திருநெல்வேலியிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த போது, அப்போது மாசி மகம் திருவிழா என்று திருச்சியிலே மிகப் பெரிய கூட்டம் கூடி, கொள்ளிடம் பாலத்தில் 4 மணி நேரம் போக்குவரத்து பாதித்தது. மாசி மகம் சிறப்பாக நடக்கும் என்பது போலீசுக்கு முன்பே தெரிந்திருக்கும். அதற்காக, போக்குவரத்துத் துறையிலே மாற்று ஏற்பாடு செய்திருந்தால். இத்தகைய காலதாமதம் ஏற்பட்டிருக்காது. அதேபோன்று, இங்கே கட்டுக்கடங்காத கூட்டம் வருமென்று தெரிந்த பிறகு, காவல் துறையினர் அதற்கு மாற்று ஏற்பாடு செய்திருந்தால், இத்தகைய நிலைமை ஏற்பட்டிருக்காது. அதுவும் இந்த விழாவிற்கு முன்னேற்பாடுகளைச் செய்தவர் திரு. இராஜசேகரன் என்று தெரிந்திருந்தும், அவர் சிவாஜிகணேசன் ரசிகர் மன்றத்தின் தலைவர் என்று தெரிந்திருந்தும்கூட, அவர் தாக்கப்பட்டிருக்கிறார். மனிதர் உரிமையை, மனிதர் பறிக்கக் கூடிய அதேபோன்று மனிதர் உணர்வை, மனிதர் பறிக்கக் கூடிய வகையில் இப்படிப்பட்ட சம்பவம் நடந்திருக்கிறது. அதேபோன்று, அந்தக் கூட்டத்திலே பஸ் எரிக்கப்பட்டிருக்கிறது. எரித்தது யார் என்பது தெரியாது. இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறும்போது, சில சமூக விரோதிகள் இதிலே கலந்து கொண்டு விடுகிறார்கள். எத்தனைச் சட்டங்கள் போட்டாலும் கூட, அந்தச் சட்டங்களை மீறி விடுகிறார்கள். இப்படிப்பட்ட கூட்டங்கள் வருகின்றபோது, இப்படிப்பட்ட ஊர்வலங்கள் நடத்துகின்றபோது, இந்த சமூக விரோதிகள் அதற்குள் நுழைந்து விடுகிறார்கள், எனவே, காவல் துறையினர் முன்னெச்சரிக்கையாக இந்த சமூக விரோதிகளைக் கைது செய்திருந்தால், இந்த பஸ் எரிப்பு சம்பவம் நடைபெற்றிருக்காது, பொது மக்கள் பாதிக்கப்பட்டிருக்க மாட்டார்கள், இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறாமல் இருப்பதற்கு, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, விரிவாகப் பேச அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நன்றி.

*திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்று நடைபெற்ற சம்பவத்தை எண்ணிப் பார்க்கிறபோது, கடந்த சட்ட மன்றக் கூட்டத்திலே ஒத்திவைப்புத் தீர்மானங்கள் பெருமளவிற்கு காவல் துறையின் கட்டவிழ்க்கப்பட்ட கொடுமையைப் பற்றியும், அராஜகத்தைப் பற்றியும்தான் விவாதிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் போலீஸ் நிர்வாகம் சீர்குலைந்து பாசிச கொடுமையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மீனம்பாக்கத்திலே தமிழகத்தின் தனிப் பெரும்



தலைவராக, சிறந்த நடிகராக இருக்கிற சிவாஜி கணேசன் அவர்கள் பாராளுமன்றத்தில் பதவியேற்று, தமிழகத்தினுடைய காங்கிரஸ் தலைவர் திரு. சுப்பிரமணியம் அவர்களோடு வருகை தருகிற நேரத்திலே இந்த அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்கள். இன்றைக்கு தமிழகத்தில் போலீஸ் கொடுமைகள், கெடுபிடிகள் பரவலாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நம்முடைய சட்டமன்ற உறுப்பினருக்கே இது போன்ற நிலை ஏற்பட்டிருக்கிறது ; அவர்களுக்கு சம்பளம் கிடைக்க வகை செய்கிற சட்ட மன்ற உறுப்பினர்களுக்கே இந்த நிலை ஏற்படுகிற அளவிற்கு காவல் துறையின் அராஜக கொடுமை தலைவிரித்தாடுகிறது. அதன் காரணமாக சட்ட மன்ற உறுப்பினர் திரு. ராஜசேகரன் அவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார். இன்றைக்கு ஒரு முறை மட்டுமல்ல, போலீசாருடைய கொடுமையால் பல முறை இதற்கு முன் தாக்கப்பட்டிருக்கிறார். அவர் பெயராலேயே இந்த பேரவைக்கு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் வந்திருக்கின்றன. நம்முடைய நடிகர் பத்மஸ்ரீ பட்டம் பெற்றவர். அவருக்கு இந்த நிலை என்றால், பாராளுமன்ற உறுப்பினர் தாக்கப்படுகிற நிலை ஏற்படுகிறது என்றால் இங்கே இருக்கிற ஆளும் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு டெல்லியிலே என்ன பாதுகாப்பு கிடைக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே இந்த பதட்டமான நிலையை எண்ணி இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் சார்பிலே கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பிலே நேற்றைய தினம் சென்னை விமான நிலையத்தில் நடந்த போலீஸ் அத்து மீறல் குறித்து இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று, அதற்கான காரணங்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். நேற்றைய தினம் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் மாநிலங்கள் அவையின் உறுப்பினராக பதவியேற்று தமிழகத்திற்கு வருகிறார் என்று செய்தி அத்துணை பத்திரிகைகளிலும் தமிழகத்தில் இருக்கிறசிவாஜிரசிகர் மன்ற உறுப்பினர்கள் விமான நிலையத்திலேயே கொடுக்கிற வரவேற்பிற்கு வந்து கலந்து கொள்ள வேண்டுமென்று பெரும் விளம்பரம் செய்யப்பட்டிருந்தது காவல் துறைக்கு தெரியும் என்று கருதுகிறேன். கன்னியாகுமரி முதல் தமிழகத்தில் உள்ள அத்தனை மாவட்டங்களிலிருந்தும் லாரிகளில் திரண்டு வந்திருக்கிறார்கள். எத்தனையோ வரவேற்புகள் இதைவிட பெரிய அளவில் இந்திரா அம்மையார் வருகை தந்த போதும், மற்றவர்கள் வந்த போதும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதைவிட அதிகமான கூட்டம் வந்த நேரத்தில் போலீஸார் திட்டமிட்டு அந்த வழியிலே வருகிற வாகனங்களுக்கு மாற்று வழிகளை ஏற்படுத்தி, கூட்டத்தை ஒரு குறிப்பிட்ட இடத்திலே நிற்கிற அளவிற்கு வழிவகை செய்து இருக்கி

றார்கள். ஆனால் இந்தமுறை ஏன் அப்படிச் செய்யவில்லை என்பது தான் தெரியவில்லை. எதிர்ப்பு ஊர்வலங்கள் இருந்தன என்று சொன்னாலும் கூட இரு கோஷ்டிகளுக்கிடையில் இப்படிப் பட்ட சம்பவங்கள் நிகழ்ந்தன என்றுச் சொன்னாலும் அதை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் ஒரே கட்சியைச் சார்ந்தவர்கள் தங்கள் தலைவரை வரவேற்பதற்கு செல்கிறார்கள். இதில் கலவரம் ஏற்படுவதற்கு எந்தவிதமான காரணமும் இல்லை. விமான நிலையத்தில் நுழைவதற்கு முன்னால் பெரிய வடத்தை கட்டி போலீசார் வைத்திருந்தார்கள் என்று சொல்கிறபோது, அதிகமான போலீசை நிறுத்தி வருகிற வரவேற்கிற கூட்டத்தினரைஒரு பகுதியிலே நில்லுங்கள் என்று சொல்லியிருக்கலாம். ஏற்கனவே விமான நிலையத்தில் ஒரு மேடை போட்டு அதற்கு அனுமதியும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த மேடைப்பகுதியிலே வந்திருந்த கூட்டத்தை நிறுத்தியிருக்கலாம். அதற்கு மாறாக 23 முறை கண்ணீர் புகை வீசியிருக்கிறார்கள். லத்தி சார்ஜ் செய்திருக்கிறார்கள். துப்பாக்கி சூடும் 2 முறை நடந்திருக்கிறது என்று பத்திரிகைகள் வாயிலாக பார்க்கிறோம். இந்த நிலைக்கு மேலும் சட்டமன்ற உறுப்பினர் ராஜசேகரன் அவர்கள் இந்தக் கூட்டத்தை கட்டுப்படுத்தும் முறையிலே அங்கேயிருக்கிற போலீஸ் அதிகாரிகளிடம் தான் ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்றும் அங்கே வரவேற்கிற கூட்டத்தை ஒதுக்கி நிறுத்துவதற்கு முயற்சி செய்து கொண்டிருப்பதாகவும் கூறுகிற நேரத்தில் அவர் கடுமையாக தாக்கப்பட்டிருக்கிறார். இன்றைக்கு காலையிலே அவரை பார்க்கிற போது ஏதோ கூட்டத்திலே தெரியாமல் அடிபட்டது போலத் தெரியவில்லை. திட்டமிட்டு அடித்தது போல அவர் முதுகிலும், விலாவிலும் கடுமையாக தாக்கப்பட்டிருக்கிறார். அந்த இடத்தில் ஒரு பஸ் கொளுத்தப் பட்டிருக்கிறது. அங்கு அவ்வளவு பெரிய அளவிற்கு கூட்டம் வந்திருக்கிறது. லத்தி சார்ஜ் நடக்கிறது, கண்ணீர் புகை நடக்கிறது, அப்படி நடக்கிற நேரத்திலேவருகிற பஸ்களை தடத்தை மாற்றியனுப்புவதற்கு ஏற்பாடுகள் செய்யாத காரணத்தால் இந்த நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. போலீஸ் அத்துமீறி நடந்து கொண்ட காரணத்தினால் இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடந்திருப்பதால் இதைப் பற்றியெல்லாம் விரிவாக விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-30.)

**திரு. ரா. கிருஷ்ணன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் விமான நிலையத்திலே நடந்த சம்பவம் பற்றி போலீஸ்காரர்கள் நடந்துகொண்ட விதம்பற்றி இங்கே முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். மக்கள்கூடும் இடங்களில் இந்தக் காவல் துறை எப்படி நடந்து



கொள்ள வேண்டும் என்பதுதான் முக்கியமான பிரச்சினை. அந்தப் பிரச்சினை மட்டுமல்ல, இதற்கு முன்பாக நடந்த நிகழ்ச்சிகளும் இப்படித்தான் நடந்திருக்கின்றன. இது ஒரு தொடர்கதையாக இருக்கிறது என்பதை அரசு கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக ஜனவரி மாதம் 19 ஆம் தேதி நடந்த நிகழ்ச்சியை பொறுத்தவரையில் காவல் துறையினர் அத்து மீறி நடந்ததால் தான் துப்பாக்கிச் சூடு நடந்தது, 3 முறை சுட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த போலீஸ்காரர்களுடைய நடவடிக்கையை நியாயப்படுத்தக் கூடிய முறையிலே பேசினார்கள். போலீஸ்காரர்களுக்கு ஊக்கம் கொடுக்கக் கூடிய முறையிலே பேசியிருக்கக்கூடிய காரணத்தினால் இந்த நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. அதேபோன்று தான் மண்டைக் காட்டிலே மாசி விசாகம் என்பது விசேஷமான விழா என்பது அரசுக்குத் தெரியும்; போலீஸ்காரர்களுக்கும் தெரியும். இவ்வளவு மக்கள் கூடுவார்கள் என்று தெரியும், ஸ்பெஷல் பிராஞ்ச் இருக்கிறது. போதுமான ஏற்பாடுகள் செய்யப்படாததால் அங்கே துப்பாக்கிச் சூட்டால் 6 பேர்கள் இறந்துவிட்டார்கள். அதேபோன்று தான் தர்மபுரியிலே சட்டமன்ற உறுப்பினர் முன்னாலேயே காவல் துறையினர் என்ன செய்துவிடுவார்கள் என்ற முறையிலே அராஜகப் போக்கைக் காட்டினார்கள், அந்தக் காரணத்தினாலே அங்கே ஒரு நிகழ்ச்சி நடந்தது.

இங்கேயும்கூட தாம் ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்று தெரிவித்திருந்தும் கூட கடுமையாகத் தாக்கப்பட்டிருப்பது தொடர்ந்து இந்த நிகழ்ச்சிகள் நடப்பதையே எடுத்துக் காட்டுகிறது. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடந்துவருவதை அரசு கவனத்தில் கொண்டு இதுபோன்று தொடர்ந்து நடக்காமல் இருப்பதற்காக கறாராக உத்திரவிடுவது அவசியம். அப்படியில்லாமல் போனால் இப்படிப்பட்ட அத்துமீறிய நிகழ்ச்சிகள் நடைபெறத்தான் செய்யும். தடியடி, கண்ணீர் புகை, துப்பாக்கிச்சூடு எல்லாம் இந்த அளவுக்கு வேண்டுமா என்பதைப் பார்க்க வேண்டும்.

ஒரு கூட்டம் கூடுகிறது, இவ்வளவு பேர்கள் கூடுவார்கள் என்று ஸ்பெஷல் பிராஞ்ச் ரிப்போர்ட் கொடுக்க முடியும், அதைக் கவனித்து எவ்வளவு போலீஸ்காரர்களை அனுப்பவேண்டுமென்பது தெரியும். அப்படியிருந்தும்கூட போதுமான பாதுகாப்பு வகை செய்யாத காரணத்தினால் டிராப்பிக்கை சரியாகச் செய்ய வகை செய்யாததால் இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடந்திருக்கிறது. ஆகவே இதற்கு காரணமாக இருந்த போலீஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் தொடர்பாக பஸ் கொளுத்தப்பட்டு இருக்கிறது. பாளையங்கோட்டையிலே லூர்து நாதன் சம்பவம் நடந்தபோது நான் நேரடியாகப் பார்த்தவன், ஒரு மாணவன் அடிக்கப்பட்ட நிகழ்ச்சியில் போலீஸ்காரர்களே பஸ்ஸை கொளுத்துவதைப் பார்த்திருக்கிறேன். சில சமூக விரோதிகளும் கொளுத்துவார்கள். ஆனால் நடந்துவிட்ட

நிகழ்ச்சியை நியாயப்படுத்துவதற்காக இப்படிப்பட்ட சம்பவங்கள் நடப்பதும் உண்டு. போக்குவரத்துத் துறைக்கு நட்டம் ஏற்பட்டிருக்கிறது. சமூக விரோதிகளும் செய்வார்கள், தாங்கள் செய்யக்கூடிய காரியத்தை நியாயப்படுத்துவதற்காகவும் இப்படி நடந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கூட்டங்களைக் கட்டுப்படுத்த எந்த முறையை காவல் துறையினர் கையாளவேண்டுமென்று அரசு ஒரு வரையறை கொள்கை வைத்துக்கொள்ள வேண்டும். இதைப்பற்றி யெல்லாம் விரிவாகப் பேச வேண்டுமென்பதால் அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வே. இராஜசேகரன்: துணைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வேண்டாம். இத்தனை உறுப்பினர்கள் பேசிவிட்டார்கள்.

திரு. ரா. உமாநாத் : துணைத் தலைவர் அவர்களே, திரு. இராஜசேகரன் பேசுவது என்பது அவருடைய கட்சியில் இரண்டாவது ஆள் என்ற முறையில் எடுக்க வேண்டாம். நம்முடைய அவையின் உறுப்பினர், அவர் தாக்கப்பட்டு இருப்பதால் நிச்சயமாக அவருக்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி: சித்தன் : திரு. ராஜசேகரன் அவர்கள் பேசுவதற்கு ஒரு வாய்ப்புக் கொடுங்கள்.

திரு. வே. இராஜசேகரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில், அதற்கு முன்னால் வரவேற்புக்காகக் கூடியிருந்த காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர்களும் சிவாஜி மன்றத்தினுடைய தோழர்களும் காவல்துறையால் தாக்கப்பட்டது பற்றியும், நானும் அந்த நிகழ்ச்சியில் தாக்கப்பட்டது பற்றியும் அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த தலைவர்கள் ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மூலம் எடுத்துரைத்தார்கள். நான் ஒன்றே ஒன்றை மட்டும் இந்த அவையில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்ற காரணத்தால் ஒன்றைக் கூற விரும்புகிறேன்.

தமிழ் நாட்டினுடைய திரைப்படத் துறையிலும், இந்திய நாட்டினுடைய திரைப்படத் துறையிலும் மக்களால் போற்றப்பட்டு அவருடைய நடிப்பாற்றலால் இலட்சக் கணக்கான உள்ளங்களைக் கவர்ந்த அண்ணன் சிவாஜி அவர்களுக்கு இந்தியப் பாராளுமன்றத்தினுடைய திரைப்படத் துறையின், கலைத் துறையினுடைய உறுப்பினராக அண்ணன் சிவாஜி அவர்கள் இந்திய நாட்டினுடைய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டு அவர் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டு சென்னைக்கு திரும்புகின்ற போது தமிழ் நாட்டு மக்களின் சார்பாக காங்கிரஸ் கட்சியினுடைய





சார்பாக, சிவாஜி மன்றத்தினுடைய சார்பாக வரவேற்பு கொடுக்க வேண்டுமென்று அந்த நிகழ்ச்சி ஏற்பட்டு, காவல் துறையினருக்கு நாங்கள் வரவேற்பு கொடுக்கின்ற இடத்தைப் பற்றியும், ஊர்வலமாக அவர்கள் அழைத்து வரப்படுகின்ற தெருக்கள் பற்றியும் நானே முன் அனுமதி கேட்டு எழுதியிருக்கிறேன். நாங்கள் மேடை போட்டு கொள்வதற்கும், ஊர்வலம் செல்வதற்கும் காவல் துறையினர் எங்களிடம் நேரிடையாகப் பேசி அதுபற்றிய விவரங்களைத் தெரிந்து கொண்டு எங்களுக்கு அனுமதி தந்திருக்கிறார்கள்.

நேற்று காலை 7 மணிக்கே சென்னை விமான நிலையத்தின் இரண்டு வாயில்களும் பெரிய கயிறுகளால் கட்டப்பட்டு, இரண்டு வாயில்களிலும் நூற்றுக் கணக்கான காவல் துறை அதிகாரிகளும், காவலர்களும் நின்று கொண்டு வருகின்ற தோழர்கள் உள்ளே செல்ல முடியாமல் ரோட்டினுடைய மறுபுறத்திலே நிற்பதற்கு ஆரம்பத்திலேயே திட்டமிட்டு, வந்தவர்களை யெல்லாம் மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு வெளியே இருக்கின்ற ரோட்டின் எதிர்புறத்தில் உள்ள பிளாட்பாரத்திலே நிறுத்தி வைத்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், எங்கள் கட்சியினுடைய துணைத் தலைவர் மாண்புமிகு, திரு, சுந்தரராஜ் அவர்கள் கூறியபடி இழிசொல்லாலும், கேவலமான வார்த்தைகளாலும் வந்திருந்தவர்களை விமர்சித்துக்கொண்டு இருந்தார்கள். ஒரு தோழர் எட்டேகால் மணிக்குக் காவல் துறையால் தாக்கப்பட்டிருக்கிறார் ; சில பெண்மணிகள் கேவலமான வார்த்தைகளால் பேசப்பட்டிருந்திருக்கிறார்கள். வரவேற்க வந்த தோழர்களின் உணர்ச்சிகளையும், அந்த நிகழ்ச்சிகளையும் கேவலப்படுத்துகின்ற நோக்கத்தோடு காலை எட்டு மணியிலிருந்தே காவல் துறையினர் செய்து கொண்டிருக்கிறார்கள். நான் காலை 9—05 மணிக்குச் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்திற்குச் சென்றேன். நான் சென்ற ஜீப் விமான நிலையத்தின் வாயிலிலேயே தடுத்து நிறுத்தப்பட்டது. அப்படித் தடுத்து நிறுத்தியவர் செங்கற்பட்டு மாவட்டத்தினுடைய போலீஸ் அதிகாரி மதிப்பிற்குரிய ரமணன். நான் ஜீப்பை விட்டுக் கீழே இறங்கி என்னவென்று கேட்டபொழுது உள்ளே செல்வதற்கு அனுமதி கிடையாது; உள்ளேயிருக்கின்ற பிளாட்பாரத்திற்குக் கூடச் செல்ல முடியாது ; பிளாட்பாரத்திற்கு வெளியில் இருக்கின்ற மேடையிலே வரவேற்பை வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள்.

நான் சட்டமன்ற உறுப்பினர், அண்ணன் சிவாஜி அவர்களை வரவேற்க வந்திருப்பவர்கள் கைகளில் மாலைகளோடு வந்திருக்கிறார்கள், வாழ்க கோஷங்களை எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள் ; அன்னை இந்திரா வாழ்க என்ற கோஷங்களை எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள் ; தலைவர் காமராஜ் புகழ் ஓங்குக, அண்ணன் சிவாஜி வாழ்க என்ற கோஷங்களை

யிலிருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. அவர்கள் மேடையிலே ஏற்றப்பட்டு, ஒலிபெருக்கி மூலம், காவல் துறை அதிகாரிகள் செய்வது சரிதானா என்று காவல் துறை அதிகாரிகளைப் பார்த்துக் கேட்கின்ற சந்தர்ப்பத்தில், காவல் துறை அதிகாரிகள் மீண்டும் லத்தி சார்ஜ் செய்கின்ற பொழுது, நான் அவர்களிடம் கேட்டுக் கொண்டேன், தயவு செய்து அடிக்காதீர்கள். அமைதியாக இருக்கின்ற அவர்களை, வரவேற்க வந்தவர்களை, உங்களுடைய செயல் மாறுபாடான சூழ்நிலைக்கு உருவாக்கிக் கொண்டிருக்கின்றது. அந்நிலையை நீங்கள் செய்யாதீர்கள், அடிக்காதீர்கள் என்று நான் கேட்கின்றபொழுதே, கண்ணீர் புகைக் குண்டுகளை அவர்கள் வீசினார்கள், துப்பாக்கி இரண்டு முறை சுடப்பட்டது. அதே நேரத்தில், பல பேர் கலைந்து ஓடினார்கள். அதற்குப் பின்னால், பதட்டமான சூழ்நிலையை உருவாக்கக்கூடிய நிலையைக் காவல் துறை அதிகாரிகள் திட்டமிட்டே செய்தார்கள்.

நேற்றைய தினம் வந்த பத்திரிக்கையிலே விமான நிலையத்தில் டிக்கெட் வாங்காமல் உள்ளே சென்ற கூட்டத்தினை, சிவாஜி மன்றத்தினரை, போலீசார் தடுத்தி நிறுத்தி, அதன் மூலமாக லத்தி சார்ஜ் நடந்தது என்ற ஒரு உண்மைக்குப் புறம்பான் தகவலை, போலீசார் கொடுத்திருக்கிறார்கள் அதே நேரத்தில் விமான நிலையத்தினுடைய வெளியிலே நிறுததி வைதது விட்டு, ரோட்டிலே, நிறுத்தி வைத்து விட்டு, டிக்கெட் வாங்காமல் உள்ளே சென்றார்கள் என்ற உண்மைக்குப் புறம்பான தகவல் 500 அடிக்கு அப்பால் உள்ளது அந்த கவுண்டர்—மெயின் ரோட்டிலே நிறுத்தி வைத்து விட்டு, டிக்கட் வாங்காமல் போனதற்காக அடித்ததாக அவரர்கள் கூறுவது அவர்கள் அறிக்கை விடுவது, உண்மைதானா ? நியாயம் தானா ? என்பதை இந்த அவையில் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதே நேரத்தில் லத்தி சார்ஜ் நடப்பதைப் பற்றி நான் கேட்கின்ற பொழுது என்னையும் அந்தக் காவல் துறையைச் சேர்ந்தவர்கள், பின்புறமாக எனது வலது முதுகிலே, இடையிலே என்னைத் தாக்கினார்கள். அந்தக் காயம் இங்கே இருக்கிறது. இதைப் போல் உடம்பின் பல பகுதிகளிலே காயம் இருக்கிறது. அதைப் போல்தான் கடந்த சில மாதங்களுக்கு முன்பாக என்னுடைய தொகுதியிலே குடிசை மாற்று வாரியத்தினுடைய தவறுகளை நான் கண்டிக்கின்றபொழுது; காவல் துறை அதிகாரிகள் அதே இடத்திலே, விலாவிலே தாக்கினார்கள். நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்—விமான நிலையத்திலே நடந்திருக்கக்கூடிய அதே நிகழ்ச்சி, விமான நிலையத்திற்குள்ளே ஒரு சிறு கீறல் கூட, கார் பார்க்கிலேகூட ஒரு சிறிய தூசி கூட படாத சூழ்நிலையில், விமான நிலையத்திலே திட்டமிட்டு காவல் துறை அதிகாரிகள் அந்த ரோட்டிலே தாக்க வேண்டிய சூழ்நிலை ஏன் வந்தது என்பதை நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன் என்

னைத் தடுக்க வேண்டுமென்றோ, அல்லது காங்கிரஸ் கட்சியினுடைய இதுபோன்ற ஆர்ப்பாட்டங்கள் அல்லது வரவேற்புகள் அல்லது ஊர்வலங்கள் இவைகளைத் திட்டமிட்டே, நீங்கள் போலீஸ் துறையை, காவல் துறை அதிகாரிகளை வைத்துக் தாக்க வேண்டுமென்று நினைப்பீர்களானால், நிச்சயமாக நீங்கள் காண்பது பகல் கனவாகத் தான் இருக்க முடியும். ஒன்றைமட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன், என்னைத்தாக்கி இருக்கின்ற காவல் துறை அதிகாரி அவர்கள் இதோ (ஒரு கல்லைத் காண்பித்து) இந்தக் கல்லை என் கண்ணுக்கு நேரே, என்னை நோக்கி எறிந்தார். இதைப் பேரவைத் தலைவருடைய கவனத்திற்குக் கொண்டு வந்து அவரிடம் சமர்ப்பிக்கிறேன். அதே நேரத்தில் இந்தக் கண்ணீர் புகைக் குண்டு (வேறு ஒரு பொருளைக் காண்பித்து), துப்பாக்கிச் சூட்டினுடைய இந்தப் பகுதிகள் (வேறு ஒரு பொருளைக் காண்பித்து)—எல்லாம் திட்டமிட்டே செய்யப்பட்டவை. வரவேற்கச் சென்றவர்களுக்கு இந்தக் கதி என்றால்** (கூச்சல், குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதெல்லாம் வேண்டாம், உங்கள் உரையை முடித்துக் கொள்ளுங்கள். பேரவைத் தலைவரின் அனுமதியின்றி, பேரவைக்குள் எந்தப் பொருளையும் கொண்டு வந்து காட்டக் கூடாது.

திரு. வே. இராஜசேகரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்தக் குற்றத்திற்காக நான் தாக்கப்பட்டேன்? காவல் துறை அதிகாரிகள் ஏன் என்னை திட்டமிட்டுத் தாக்கினார்கள்? காங்கிரஸ் கட்சியினை ஒழித்துவிடவேண்டும் என்பதற்காகவா? அல்லது என்னை பயமுறுத்தி காங்கிரஸ் கட்சியினுடைய உணர்வுகளை, ஏழை மக்களுடைய உணர்வுகளை தடங்கல் பண்ணவேண்டும் என்பதற்காக........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் ஒத்து ழைக்கவேண்டும். **என்று தாங்கள் பேசியவை நீக்கப்படுகின்றன.

திரு. வே. இராஜசேகரன் : துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற காவல் துறை அதிகாரிகள் இந்த ஆட்சியினுடைய உத்தரவின் மேல் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்களா? கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசினார்களா? லத்தி சார்ஜ் செய்தார்களா ? நூற்றுக்கணக்கான தோழர்கள் இன்றையத்தினம் சென்னையில் உள்ள தனியார் மருத்துவ மனைகளிலும் அரசாங்க மருத்துவ மனைகளிலும் அட்மிஷன் செய்யப்பட்டு, சிகிச்சை பெற்று வருகிறார்கள். சென்னை விமான நிலையத்தினுடைய காவல்துறை நிலையத்தில் 16 பேர்களுக்கு மேல் கைது செய்யப்பட்டு நான்—பெயிலபிள் செக்ஷனிலே வைக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் வெளி ஊர்களிலிருந்து வந்த பல தோழர்கள்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



சுடப்பட்டதன் காரணமாக இறந்திருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு நிச்சயமாக இந்த அரசுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அவர்களுடைய உடல்கள் எங்கே வைக்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த அரசு தெளிவாக கூறவேண்டும். காரணம் வெளியூர்களிலிருந்து வந்த தோழர்கள் இன்னும் வீடுகளுக்குத் திரும்பவில்லை என்று அவர்களுடைய தகப்பனார்கள் சொல்லுகிறார்கள் எங்களுடைய குழந்தைகள் சிவாஜி அவர்கள் வரவேற்பிற்காக சென்னைக்குச் சென்றவர்கள் திரும்பவில்லை, என்ன ஆனார்கள், எங்கு இருக்கிறார்கள் என்று கேட்கிறார்கள். ஆனால் அவர்களுடைய உயிர் நிச்சயமாகப் பறிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவரமாகச் சொல்ல வேண்டும். ஊகத்திலே எதையும் சொல்லிவிடக்கூடாது. அதற்குத்தான் அமைச்சர் பதில் சொல்லப் போகிறார். உங்கள் சம்பந்தப்பட்ட விஷயமாக இருப்பதாலும், நீங்கள் அந்த இடத்திலே இருந்ததாலும் அதை அனுமதித்தேன்.

திரு. வே. இராஜசேகரன் : துணைத் தலைவர் அவர்களே, எங்கள் மேல் உண்மைக்குப் புறம்பான வழக்குகளைப் போட்டு, நீதி மன்றத்திலே நிறுத்தி பயமுறுத்த நினைத்தால், நாங்கள் அதற்குப் பயந்தவர்கள் இல்லை என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன் : துணைத்தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் வராது. மேலும் இந்தத் தீர்மானத்தில் நீங்கள் பெயர் கொடுக்கவில்லை. இப்போதே மணி 9-45 ஆகி விட்டது. தயவு செய்து உட்காருங்கள்.

டாக்டர் கே. சௌரிராஜன் : துணைத் தலைவர் அவர்களே, இது காவல் துறையைப் பற்றி இருக்கின்ற பிரச்சினையாகும். அதற்கு முதலமைச்சரே இங்கு வந்து விளக்கம் கொடுத்தால் அவர்களுடைய உணர்ச்சிகளை சமாதானப்படுத்துவதாக ஆகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முதல் அமைச்சரின் சார்பில் எந்த அமைச்சரும் பதில் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, இங்கே இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த

[திரு. ச. இராமச்சந்திரன்] [1982 மார்ச் 10

தவர்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவித்து இருக்கிறார்கள். இதிலே அரசின் சார்பில் நான் சில விளக்கங்களைத் தெரிவிப்பதற்குக் கடமைப் பட்டிருக்கிறேன்.

குறிப்பாக தங்களுடைய கவனத்திற்கு, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஒட்டி, 2 பிரச்சினைகளை மட்டும் கொண்டு வரலாம் எனக் கருதுகிறேன். அதை யாரும் தவறாகக் கருத வேண்டாம். ஒன்று இதைப்போல பல ஒத்திவைப்புத் தீர்மானங்கள் பல உறுப்பினர்கள் தருகிறபோது, கட்சிக்கு ஒருவர் பேசினால போதும் என்று அலுவல் ஆய்வுக்குழுவிலே ஏற்கெனவே முடிவெடுத்திருக்கிறோம். அந்த அடிப்படையில் பாதிக்கப்பட்ட உறுப்பினர் அவர்களே இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் பேசியிருப்பாரேயானால நமக்குக் கொஞ்சம் நேரமும் கிடைத்திருக்கும் என்பதை நான் எடுத்து சொல்லி ஒரு கட்சிக்கு ஒருவர் என்று பேசுகிறபோது அந்த ஒருவர் அவருடைய கட்சி சார்பாக சொல்ல வேண்டிய கருத்துககளை சொல்வதுதான் முறை. மாண்புமிகு உறுப்பினர் ராஜசேகரன் அவர்கள் பாதிக்கப்பட்டவர் என்கிற காரணத்தாலே தன்னிலை விளக்கம் என்கின்ற முறையிலே அவர் எழுந்து சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை ஒத்துக் கொள்கிறேன். இரண்டையும் சேர்த்து அவரே பேசியிருப்பாரேயானால் நமக்கு எதிர் காலத்திலே இத்தகைய பிரச்சினைகள் வருகிறபோது நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

அடுத்து ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய அவையில் எந்தெந்தப் பொருள்களைக் கொண்டு வந்து காட்டலாம் என்பதற்கு ஒரு வரன்முறை இருந்தால், நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன். எனக்கு ஞாபகம் ஒரு முறை மேற்கு வங்க சட்டமன்றத்தில் ஒரு அம்மையார் கைப்பையைத் திறந்து ஒரு துப்பாக்கியை எடுத்துக் காட்டினார்கள். ஆனால் அது நல்லவேளையாக பொம்மைத் துப்பாக்கி—டாய் கன்— என்கிற அளவில் இருந்தது. அந்த அம்மையார் பதவி எல்லாம விலகி, அதற்குப் பிறகு பல பிரச்சினைகள் எல்லாம் அங்கே ஏற்பட்டன. ஆனால் அந்தத் துப்பாக்கியை எடுத்துக் காட்டுகிற போது அத்தனை பேரும் பயப்படுகிற சூழ் நிலை அந்தப் பேரவையில் வந்து விட்டது. இதையெல்லாம் எண்ணிப் பார்க்கிறபோது. ஒரு வரைமுறை இருந்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றுகிறது. ஏனென்றால் எந்த ஆயுதங்கள், எங்கே, யாரால் பயன்படுத்தப்பட்டது என்பதை நாம் இந்த மன்றத்தில் நிரூபிக்க முடியாது. ஆகையால ஆபத்து இல்லாத பொருள்களைக் கொண்டு வந்து இங்கே காட்டுவது என்கிற ஒரு வரைமுறை வைத்துக் கொண்டால் நல்லது. ஏனென்றால் அவர் ஒரு பெரிய கல்லை எடுத்துக் காட்டினார். நான் கூட எதிர்க் கட்சித் துணைத் தலைவரிடத்தில் சொன்னேன்.



1982 மார்ச் 10] [திரு. ச. இராமச்சந்திரன்]

உணர்ச்சி வேகத்தில் அவர் எங்கேயாவது எறிந்தால் ஒன்று உங்கள் தலை அல்லது என்னுடைய தலையை அது பதம் பார்த்து இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவைத் தலைவரின் முன் அனுமதியின்றி இதுபோல எந்தப் பொருளையும் பேரவைக்குள் கொண்டு வந்து காட்டக்கூடாது என்கிற முறையை உறுப்பினர்கள் தான் தங்களுடைய பொறுப்பை உணர்ந்து வகுத்துக கொள்ள வேண்டும். எல்லா உறுப்பினர்களையும் செக் செய்து அனுப்புவது என்பது இயலாத காரியம்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அப்படிக் கொணடு வருகின்ற பொருள்களைப் பற்றி வேண்டுமானால் அடுத்த அலுவல் ஆய்வுக் குழுவில் பேசி முடிவு எடுக்கலாம். தாங்கள் அவற்றைப் பார்த்துத்தான் இங்கே சட்ட மன்றத்தில் காட்டுவதற்கு அனுமதிப்பது சரியானதாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநிலங்கள் அவை உறுப்பினர் திரு. சிவாஜி கணேசன் அவர்களுக்கு 9—3—1982-அன்று காலையில் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வரவேற்பு அளிப்பதற்காக சிவாஜி கணேசன ரசிகர் மன்றத்தினர் ஜி. எஸ். டி. சாலையின் மேற்குப் பகுதியில் ஒரு மேடையை அமைத்தனர். மேடை அமைக்கப்பட்ட இடம் தடைச் சட்டம் அமலில் உள்ள பகுதியாதலால் அதைச் சுட்டிக்காட்டியும் போக்குவரத்து பாதிக்கப்படும் என்பதாலும் அருகில் வேறு ஒரு இடத்தில் மேடையை அமைக்கும்படி மேடை அமைப்பாளர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது. ஆனால் அவர்கள் மேடையை அந்த இடத்தில இருந்து மாற்றவில்லை. போக்குவரத்துக்குத் தடை செய்யாமல் சாலை ஓரத்தில் இருக்கும்படியும் அவர்களுககு கூறப்பட்டது. காலை சுமார் 9 மணி அளவில் சுமார் 8,000 பேர் அடங்கிய கூட்டம் விமான நிலையத்திலும் சென்று வரவேற்புக் கொடுப்பதற்காக உள்ளே திடீரென்று செல்ல முயன்றது. காவல் துறைககு எதிராகவும் அரசுக்கு எதிராகவும் முழக்கங்கள் செய்து கொணடு காவல் துறை வளையங்களைத் தகர்க்க முற்பட்டனர் சிலர் சாலையின் குறுக்கே போக்குவரத்தைத் தடை செய்ய படுத்துக் கொணடனர். சிலர் வலைவைத் தாண்டி உள்ளே நுழைய முயன்றனர். அதே சமயத்தில் காவல் துறையினருக்கு எதிராக செயல்படுமாறும் வளைவை உடைத்துக் கொண்டு உள்ளே நுழையுமாறும் ஒலி பெருக்கி மூலம் கூட்டத்தினர் தூண்டப்பட்டனர்.

சாலையின் குறுக்கே படுத்திருந்தவர்களை காவல் துறையினர் அப்புறப்படுத்த முற்பட்டபோது காவல் துறையினர் மீது கற்கள் வீசப்பட்டன. சாலைகளில் சென்று கொண்டு இருந்த

பேருந்துகள் மற்ற வாகனங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டன. 9 பேருந்துகளும் டாக்சி ஒன்றும் சேதப்படுத்தப்பட்டன. ஒரு பேருந்து தீ வைக்கப்பட்டு முழுவதும் சேதப்படுத்தப்பட்டுள்ளது. கல் எறிந்ததன் காரணமாக செங்கற்பட்டு கிழக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர், பறங்கிமலை மாவட்ட துணைக் காவல் கண்காணிப்பாளர் மற்றும் காவல் துறையைச் சேர்ந்த 21 பேருக்கு காயம் ஏற்பட்டுள்ளது.

கூட்டத்தினர் மேலும் வன்முறையில் ஈடுபட்டதால பொது மக்கள் உயிருக்கும், உடைமைக்கும் ஆபத்து ஏற்படும் சூழ்நிலை உருவானதால் கூட்டத்தினர் கலைந்து செல்லுமாறு எச்சரிக்கப்பட்டனர். எச்சரிக்கையைக் கூட்டத்தினர் செவி மடுக்காததால சண்ணீர்ப் புகை குண்டுகள் வீசப்பட்டன. கண்ணீரப் புகை பயன் அளிக்காததால் தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டது. பின் வன்முறை கூட்டத்தினர் கலைந்து சென்றனர். தடியடிப் பிரயோகத்தின் காரணமாக 3 பேர் காயம் அடைந்துள்ளதாகத் தெரியவருகிறது. 20 பேர் கைது செய்யப்பட்டனர். காயம் அடைந்தவர்கள் மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். கூட்டத்தினர் விமான நிலையத்திலும் அத்து மீறி நுழையாமல தடுக்கப்பட்டனர். இந்தக் கலவரத்தின்போது திரு. ராஜசேகரன், எம். எல். ஏ., அவர்கள் தாக்கப்பட்டு காயம் ஏற்பட்டுள்ளதாகக் கூறி, இராயப்பேட்டை அரசு மருத்துவ மனையில மாலை 4.30 மணிக்கு உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டு இருக்கிறார். நல்ல வேளையாக அவர் இப்போது இங்கே வந்திருக்கிறார். அவருக்கு தக்க சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கிறது என்று இங்கே குறிப்பு இருக்கிறது; காவல் துறையினர் அவரைத் தாக்கியதாக அவர் கூறவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சிவாஜி கணேசன் அவர்களுக்கு தகுந்த பாதுகாப்பு அளிக்கப்பட்டது. இந்த சம்பவத்தின் மீது வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு புலனாய்வில் உள்ளது. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது துப்பாக்கிச் சூடு நடைபெற்றதாகக் குறிப்பிட்டார்கள். துப்பாக்கிச் சூடு நடைபெறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் இராஜசேகரன் அவர்கள் இந்த சம்பவத்திலே சிலர் இறந்துவிட்டிருப்பார்களோ என்று ஐயப்படுவதாகக் கூறினார்கள. யாரும் இறந்துவிடவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீதி விசாரணை வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் கேட்டார்கள். இதிலே நீதி விசாரணைக்கு இடமே இல்லை; தேவையும் இல்லை என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.





காவல் துறையினர் போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்ற கருத்தை வெளியிட்டார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய காவல் துறையைப் பொறுத்தவரையில் எந்த வகையான பாதுகாப்பு நடவடிக்கைகளை முன் எச்சரிக்கையாக எடுக்க வேண்டுமோ அதை எடுத்த வரலாறுதான் நமக்கு உண்டு. அது இங்கே இருக்கின்ற பலருக்கும் தெரியும். பிரதமர் இந்திரா காந்தி அவர்களும் அவரைப் போன்ற தலைவர்களும் வருகின்றபோது எத்தகைய பாதுகாப்பு நடவடிக்கைகளை நம்முடைய காவல் துறையினர் எடுத்திருக்கிறார்கள் என்பதை தெரிந்து கொண்டு இருப்பார்கள்.

அது மட்டுமல்ல. பல இலட்சக் கணக்கான மக்கள் கூடிய உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற நேரத்திலும் கூட காவல் துறையினர் எந்தவிதமான அசம்பாவிதமும் இல்லாமல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். ஆகையால் காவல் துறை பாதுகாப்பு நடவடிக்கை எடுப்பதில் தவறிவிட்டது என்று சொல்வது சரியல்ல.

காவல் துறையினர் சில வரைமுறைகளைச் சொன்னார்கள். அந்த வரை முறைகளுக்கு உட்பட்டு நாம் நடந்து கொண்டிருந்தால் இத்தகைய பிரச்சினைக்கு இடம் இருக்காது. ஏனென்றால் விமான நிலையம் என்று சொல்லும்போது, அதுவும், ''இன்டர் நேஷனல் ஏயர்போர்ட்' என்று சொல்லும்போது அங்கே சில வரன் முறைகள், கட்டுப்பாடுகள் இருக்க வேண்டும். அமைச்சர்களாக இருந்தாலும், யாராக இருந்தாலும் அதுதான் நிலைமை. விமான நிலையத்திற்கு உள்ளே சென்று வரவேற்க வேண்டுமென்ற ஆர்வம் அங்கே கூடியிருந்த மக்களின் உள்ளத்திலே இருந்தாலும் அவர்கள் உள்ளே செல்வது பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் விதி முறைகளுக்கும் முரணானது.

அங்கே கூடியிருந்த மக்கள் ஒழுங்காக இருந்து, அல்லது கூடி நின்று வரவேற்பு அளித்திருந்தால் இந்தப் பிரச்சினை எழுந்திருக்குமா என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எந்தக் காவல் துறை இந்த நடவடிக்கை எடுத்ததற்காக குற்றஞ் சாட்டுகிறார்களோ அதே காவல் துறைக்கு மாநிலங்கள் அவை உறுப்பினராக பொறுப்பேற்று வந்த மாண்புமிகு சிவாஜி கணேசன் அவர்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இருக்கிறது என்பதை மனதிலே கொள்ள வேண்டும். அவர்கள இந்த நடவடிக்கைகளை எடுத்து கூட்டத்தைக் கட்டுப் படுத்தி இராவிட்டால் இன்னும் என்னென்ன

நிலைமை ஏற்பட்டிருக்கும் என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜசேகரன் போன்றவர்கள் தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி தொண்டர்களை கட்டுப் படுத்த வேண்டும். பெரிய கூட்டத்தைக் கூட்டுபவர்கள் அந்தக் கூட்டத்தைக் கட்டுப்படுத்தக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். சில நேரங்களில் தொண்டர்கள் ஆர்வத்தால் அத்துமீறி போகிறபோது அவர்களுடைய ஆர்வத்தை அணை கட்டி நிறுத்த வேண்டுமே அல்லாமல் அவர்களும் அந்தக் கூட்டத்தோடு கூட்டமாக சேர்ந்துக் கொண்டால் அப்போது அவர்களுககு இப்படி ஏற்பட்டுவிடுகிறது என்பதை தயவு செய்து அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். மிகப் பெரிய கூட்டத்தை நடத்திக் காட்டுகிறவர்களுக்கு இத்தகைய சில கட்டுப்பாடும் இருக்கிறது என்பதை சுட்டிக்காட்டி, இதிலே காவல் துறையினர் பொறுப்பற்ற தன்மையில் நடக்கவில்லை ; மிகப் பொறுப்போடு அவர்கள் செயல்பட்டு, கூட்டத்தைக் கட்டுப் படுத்தி, மா நிலங்கள் அவை உறுப்பினர் விமான நிலையத்தில் வந்து இறங்கவும் அவர்களை ஊர்வலமாக அழைத்துச் செல்லவும் தகுந்த பாதுகாப்பை ஏற்படுத்தினார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, காவல் துறையினர் அத்து மீறி நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை ; இதனால் அவையை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை ; சட்டம், ஒழுங்கைக் கட்டிக்காப்பதில் நம் ஒவ்வொருவருக்கும் கடமை இருக்கிறது என்று கூறி அமர்கிறேன்.

**திரு. நா. சுந்தரராஜ் :** துணைத் தலைவரவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சனை எழுப்புகிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள படித்த அறிக்கையிலே திரு. இராஜசேகரன் அவர்கள் தானே மருத்துவமனைக்குச் சென்றதாகவும், அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும் படித்தார்களே தவிர அவர் அடிக்கப் பட்டதாகப் படிக்கவில்லை. மேலும் இராஜசேகரன் அவர்கள கூட்டத்தைக் கட்டுப்படுத்தியிருக்கிறார்கள. ஆனால் அவரும் கூட்டத்தோடு சேர்ந்துகொண்டதால் இப்படி ஏற்பட்டது என்ற உணர்வுபட சொல்வது சரியல்ல.

(முற்பகல் 10–00).

மேலும் எங்களுடைய கட்சியின் சார்பிலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, காவல் துறைக்கு அரசாங்கம் அதிக பட்சமான சலுகைகளை அளிப்பதன் காரணத்தால் அவர்கள்



எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற நிலைமைக்கு வந்ததற்குப் பிறகுதான் தமிழகத்தில் இந்தச் சூழ்நிலை உருவாகி இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள் முன்னமே பேசியாகிவிட்டது. ஆகவே இப்போது மீண்டும் பேசிக்கொண்டிருக்க வேண்டியதில்லை.

**திரு. நா. சுந்தரராஜ் :** தலைவரவர்களே, அரசாங்கத்தின் பதில் எங்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை என்பதையும் காவல் துறைதான் இந்த நிகழ்ச்சிக்கு முழுப்பொறுப்பு என்பதையும் சொல்லி நாங்கள் இன்று முழுநாளும் அவையின கூட்டத்திலே கலந்துகொள்வதில்லை என்று சொல்லி வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள வெளிநடப்பு செய்தனர்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையில் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

### 3. கவன ஈர்ப்பு.

### சிமெண்டிற்கு; மைய அரசின் இரு விலை அறிவிப்பு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், டி. மணி, ஜே. ஹேமச் சந்திரன், பாபு ஜனார்த்தனன், இரா. தாமரைக்கனி, இரா. கருப்பையா, சோ. அழகர்சாமி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவ ஒருவர் இதை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அ கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, " அண்மையில் சிமெண்டிற்கு மைய அரசின் இருவிலை அறிவிப்பின் காரணமாக சிமெண்ட் கிடைக்காதது குறித்து " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

28–2–1982 முதல் சிமெண்ட்டின் மீது இருந்த கட்டுப் பாட்டை மைய அரசு தளர்த்தியுள்ளது. சிமெண்ட்டின் விநியோகத்தின் புதிய முறைப்படி சிமெண்ட் தொழிற்சாலைகள் அவர்களுடைய உற்பத்தித் திறனில் மூன்றில் இரண்டு பாகம்

உள்ள உற்பத்தியாகும் சிமெண்ட்டை கட்டுப்பாடான விலைக்கு அரசுக்கு லெவி சிமெண்ட்டாக கொடுக்கவேண்டும். இதற்கு மேல் உற்பத்தியாகும் சிமெண்ட்டை வெளிச்சந்தையில் எந்த விதமான விலை அல்லது விநியோகக் கட்டுப்பாடு இல்லாமல் விற்கலாம். சிறிய சிமெண்ட் ஆலைகள் லெவி சிமெண்ட்டாக ஏதும் அரசுக்கு கொடுக்க வேண்டியதில்லை. அவைகளுடைய முழு உற்பத்தியும் விலை அல்லது விநியோகக் கட்டுப்பாடு ஆணையின் கீழ் வராது.

2. சிமெண்ட் விநியோகத்தின் மீது மைய அரசு கட்டுப்பாட்டை தளர்த்தியுள்ளதால் மாநில அரசு இப்போதுள்ள தமிழ்நாடு சிமெண்ட் விநியோகம் (உரிமம் மற்றும் ஒழுங்குப் படுத்துதல்) 1978 ஆணையை ரத்து செய்துவிட்டு புதிதாக தமிழ்நாடு லெவி சிமெண்ட் விநியோகம் (உரிமம் மற்றும் ஒழுங்குப்படுத்துதல்) ஆணை பிறப்பிக்க எண்ணியுள்ளது. இந்தப் புதிய ஆணையின் முக்கிய அம்சங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) முன் உரிமை பகுதிக்கும், சமூகத்தில் நலிந்த பிரிவினருடைய தேவைகளை நிறைவு செய்வதற்காக லெவி சிமென்ட் உபயோகப்படுத்தப்படும். இப்போது போலவே மாநிலங்கள் ஒவ்வொரு காலாண்டுக்கும் மைய அரசிடமிருந்து சிமெண்ட் ஒதுக்கீடுகளை பெறும் இந்த ஒதுக்கீடுகளை கொண்டு கீழே குறிப்பிட்டுள்ள இனங்களின் தேவைகள் நிறைவு செய்வதற்காக பயன்படுத்தப்படும்.

(1) அரசுத்துறைகள், அரசு சார்பு நிறுவனங்கள், மற்றும் உள்ளாட்சி அலுவலகங்கள்.

(2) ஆலை கட்டிடம் கட்டுவதற்காக சிறு தொழில் நிறுவனங்கள், சமூக மேம்பாட்டிற்காக அமைந்துள்ள கிராமங்களில் வீடுகட்டுதல், குடிசைவாழ் மக்கள் ஆதி திராவிடர்கள், ஆதிவாசிகள், சமூகத்திலுள்ள ஏழை எளிய மக்களுக்கு வீடு கச்ட்டுதல், கிராமங்களுக்கு தண்ணீர் வழங்கும் திட்டம், மேலும் புதிய 20 அம்ச திட்டத்தில் அடங்கிய எல்லா இனங்கள்.

(3) 80 சதுர மீட்டருக்கு மேற்படாமல் தரைமட்டம் அமையும் வீடுகள் கட்டுதல்.

(4) குடியிருப்பு வீடுகளுக்குப் பழுதுபார்த்தல்.

மேலும் நீர்ப்பாசனம், மின்சாரம் திட்டங்களுக்காக லெவி சிமெண்ட் வழங்கப்படும்.





(ஆ) திரை அரங்குகள், சிற்றுண்டிச் சாலைகள், வங்கிகள் பல மாடி அடுக்குக் கட்டிடங்கள், வியாபார கட்டிடங்கள் 80 சதுர மீட்டர் தரை மட்டம் மேலுள்ள கட்டிடங்கள் ஆகியவைகளுக்கு லெவி சிமெண்ட் வழங்கப்பட மாட்டாது. மேலும் சிமெண்ட்டை மூலப் பொருளாகக் கொண்டு இயங்கி வரும் தொழில்களுக்கு லெவி சிமெண்ட் வழங்கப்படமாட்டாது. அவர்கள் தங்களுடைய தேவைகளை வெளிச் சந்தையிலிருந்துதான் வாங்கிக் கொள்ள வேண்டும்.

(இ) புதிய கட்டுப்பாட்டு ஆணையின்படி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் மட்டுமே லெவி சிமெண்டை விற்பனை செய்வதற்காக உரிமம் வழங்கப்படுவார்கள்.

(ஈ) அரசுத் துறைகள், அரசு சார்பு நிறுவனங்களுக்கு, லெவி சிமெண்ட்டை தொழில் மற்றும் வணிகத்துறை இயக்குநரால் பகிர்ந்து அளிக்கப்படும். ஆலை கட்டிடங்கள் கட்டுவதற்கான சிறிய தொழில் தேவைகளுக்கு தொழில் வணிகத்துறை இயக்குநரோ அல்லது அவரால் நியமிக்கப்பட்ட வேறு ஒரு அலுவலரோ அனுமதிச் சீட்டுகள் வழங்குவார். இந்த அதிகாரம் மாவட்ட தொழில் மையத்தில் பொது மேலாளர்களுக்கும் வழங்கப்படும்.

(உ) 80 சதுர மீட்டர் தரைமட்டம் மேற்படாமல் கட்டிடம் கட்டும் நபர்களுக்கும், வீடுகளைப் பழுது பார்ப்பதற்கான தேவைகளை வழங்க மாவட்ட ஆட்சித்தலைவரோ, அல்லது அவரால் நியமிககப்பட்ட வேறு ஒரு அலுவலரோ அனுமதிச் சீட்டுகள் வழங்கலாம். தற்போது அனுமதிச் சீட்டுகள் வழங்கும் அதிகாரிகளான வட்டாட்சித் தலைவர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையர்களுக்கு இனிமேல் அதிகாரம் கிடையாது. ஆனால் கோட்ட ஆட்சித் தலைவர்கள் கோட்ட வளர்ச்சி அதிகாரிகள் அல்லது சென்னையில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவருடைய நேர்முக உதவியாளர்கள் மூலமே அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படுவதற்கான அதிகாரம் அளிக்கப்படும்.

(ஊ) லெவி சிமெண்ட்டை பெற தகுதியுடையவர்களின் அனுமதிச்சீட்டுகள் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு அந்த சிமெண்ட்டை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமோ அல்லது கூட்டுறவு நிறுவனங்கள் மூலமோ சிமெண்ட்டை பெறலாம். மற்றவர்கள் வெளிச் சந்தையிலிருந்துதான் சிமெண்ட்டைப் பெற வேண்டும்.

(எ) அண்மையில் பிறப்பிக்கப்பட்ட ஆணையின்படி லெவி போர்ட்லாண்டு சிமெண்ட் ஒரு மூட்டையின் விலை ரூ. 36.40. லெவி பொதுவான சிமெண்ட் ஒரு மூட்டையின் விலை ரூ. 35.55. வெளிச்சந்தையில் ஒரு மூட்டை சிமெண்ட்டின் விலை சுமார் ரூ. 55 ஆக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் அச்சந்தையில் மக்களுக்கு தேவையான சிமெண்ட்டும் போதுமான அளவு கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு லெவி சிமெண்ட் விநியோகம் (உரிமம் மற்றும் ஒழுங்கு படுத்துதல்) 1982 ஆணையின் நகல் @இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

* திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே சுமார் 80 சதுர மீட்டருக்குக் கீழ்ப்பட்டு வீடு கட்டுபவர்களுக்கு மட்டும்தான், அப்படிப்பட்ட தனியார்களுக்கு மட்டும்தான் சிமெண்ட் கொடுக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது அதன்படி பார்த்தால் சாதாரணமாக ஒரு நடு அறையினையும். சமையல் கட்டும்தான் கட்டக்கூடிய அளவுக்கு அது இருக்கும்., ஆகவே அந்த அடிப்படையிலே இந்த வரையறை கொண்டு வந்ததன் மூலமாக நடுத்தர மக்களுக்கு வீடு கட்டுவதற்கு போதிய அளவுக்கு சிமெண்ட் கிடைக்காத நிலைமை ஏற்படக்கூடிய அபாயம் இருக்கிறது. ஆகவே நடுத்தர மக்களுக்கும் கிடைக்கக்கூடிய முறையிலே இந்த உத்தரவைத் திருத்தி அரசாங்கம் அறிவிக்குமா ?

அடுத்து சிமெண்ட் வழங்குகின்ற அதிகாரத்தைப் பொறுத்தமட்டிலே முன்பு கமிஷனர் அவர்களும், வட்டாட்சியர் அவர்களும் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். ஆகவே அவர்களிடத்திலே போய் வாங்கக்கூடிய வசதி இருந்தது. ஆனால் இப்போதோ கோட்டாட்சித் தலைவரிடத்திலேயோ அல்லது மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலேயோ சென்றுதான் வாங்கவேண்டிய நிலைமை என்கின்றபோது சாதாரண ஏழை எளிய மக்களால் அவர்களிடம் போய் வாங்குவதற்கு பல கஷ்டங்கள் ஏற்படும்.

அடுத்து சிமெண்டின் விலையினைப் பொறுத்தமட்டிலே 55 ரூபாய் வெளி விலை என்றும், 35 ரூபாய் கன்ட்ரோல் விலை என்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. இதைக் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

---

@283 முதல் 291ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.





மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக ஏழைகள் ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள் மிகப் பின்தங்கிய நிலைமையிலே உள்ள மக்கள் இவர்களுக்கு வசதி செய்யவேண்டும் என்ற விதத்திலேதான் மத்திய அரசினுடைய இன்ஸ்ட்ரக்ஷன் பேரிலே சுமார் 80 சதுர மீட்டர் தரைமட்டத்திற்கு மேற்படாமல் உள்ள கட்டிடங்களுக்கு மட்டும் லெவி முறையிலே சிமெண்ட் வழங்குவது என்றும் அதற்கு மேற்பட்ட அளவுள்ள கட்டிடங்களுக்குத் தேவையான சிமெண்டை வெளியேதான் பெற்றுக் கொள்ளவேண்டும் என்று மத்திய அரசு அளித்த அறிவுரையின் பேரில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. விலையினைக் கூட மத்திய அரசுதான் நிர்ணயித்திருக்கின்றது. அந்த அடிப்படையிலேதான லெவி சிமெண்டுக்கான விலையும், வெளி மார்க்கெட்டிலே கிடைக்கின்ற சிமெண்டிற்கான விலையினையும் முறையே ரூ. 35 என்றும், ரூ. 55 என்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது.

அடுத்து மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட ஆட்சித் தலைவருடைய நேர்முக உதவியாளர், ஆர்.டி.ஒ., டீ.டீ.ஓ. சென்னையைப் பொறுத்தமட்டில் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் ஆகியவர்களுக்கு பெர்மிட் வழங்குவதற்குரிய அதிகாரம் வழங்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* திரு. டி. மணி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மைய அரசினுடைய புதிய கொள்கையின் விளைவாக நடுத்தரப் பகுதி மக்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு சிமெண்ட் கிடைப்பதில் பெரிய சிரமம் ஏற்பட்டிருக்கிறது. மைய அரசினுடைய கொள்கையை, இந்தக் கொள்கையை மாற்றி, நடுத்தரப் பகுதி மக்களுக்கு அதிகப்படியான சிமெண்ட் கொடுப்பதற்கு மாநில அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

இந்த வினியோக முறையைக் கையாளுகிறபோது தாலுகா மட்டத்திலே தனிப் பிரிவை ஏற்படுத்தி, தனித் தாசில்தார் போட்டு, அந்த தனித் தாசில்தார் மூலமாக சீனியாரிட்டி அடிப்படையிலே சீனியாரிட்டி லிஸ்டை பகிரங்கமாக போட்டு சிமெண்ட் வினியோகம் செய்வதிலே முறைகேடுகள் இல்லாமல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

சாதாரண மக்களும், ஏழை எளிய மக்களும், ஆதி திராவிட மக்களும் என்று சொல்கிற பெருவாரியான மக்கள் அரசாங்கம் கடன் கொடுத்தாலொழிய வீடுகள் கட்டுவது இல்லை. ஆகவே இந்தக் கொள்கையிலே, மைய அரசின் கொள்கையிலே இருக்கிற குறைகளை அகற்ற மாநில சர்க்கார் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுத் துறைகள், அரசு சார்பு நிறுவனங்கள், மற்றும் உள்ளாட்சி அலுவலகங்கள், சிறு தொழில் நிறுவனங்களுக்கான ஆலைக் கட்டிடங்கள், அதேபோல ஆதி திராவிடர்கள், ஆதிவாசிகள், சமூகத்திலுள்ள ஏழை எளிய மக்களுக்கு வீடுகள் கட்ட இப்படிப்பட்டவைகளுக்காக மட்டும் நமக்குத் தேவைப்படுகிற சிமெண்டின் அளவு சுமார் ஒரு காலாண்டிற்கு 3 லட்சம் மெட்ரிக் டன்களாக இருக்கும். இதிலேயிருந்து இன்னும் அதிகப் படியான அளவை பொது வினியோகத்திற்குத் தந்தால் அதனால் அரசுத் துறையின் மற்றப் பணிகள் தடைப்படும். ஆகவே இதிலே இருந்து பொது வினியோகத்திற்குத் தர இயலாது.

விலையைப் பொறுத்த வரையில் அல்லது கொள்கையைப் பொறுத்த வரையில் இது மைய அரசு எடுத்திருக்கிற முடிவு. நாம் எடுத்துச் சொன்னாலும் அதனாலே எந்தப் பயனும் இருக்கப்போவது இல்லை.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒன்றிரண்டு ஆண்டுகளாக மனுச் செய்து இன்றும் சிமின்ட் கிடைக்காத நிலையிலே பல மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அரசினுடைய லெவி சிமெண்டில் இருந்து பிரையாரிட்டி, முன் உரிமை கொடுத்து சிமெண்ட் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கப்படுமா?



ஏற்கெனவே ஹௌசிங் யூனிட் ஸ்கீமிலே லோன்கள் எடுத்துவிட்டு, வீடு கட்டுவதற்கு சிமேன்ட் கிடைக்காமல் இருக்கக் கூடியவர்களுக்கு முன் உரிமை கொடுக்கப்படுமா ?

தற்போது அரசினுடைய என். ஆர்.டி.பி. ஸ்கீமில் பாசனத் துறையிலே உள்ள வேலைகளுக்குக் கூட சிமெண்ட் கிடைக்கவில்லை என்ற எண்ணத்தைச் சொல்லி, சிமெண்ட் பயன்படுத்தாத நிலைமை இருக்கிறது. பாசனத் துறையின் வேலைகள், என்.ஆர்.டி.பி. வேலைகளுக்கு, தன்னிறைவுத் திட்டத்தில் இருக்கக்கூடிய வேலைகளுக்கு முன் உரிமை கொடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே இதே அறிக்கையிலே அதுவும் இருக்கிறது. ஆலைக் கட்டிடம் கட்டுவதற்காக சிறு தொழில் நிறுவனங்கள், சமூக மேம்பாட்டிற்காக அமைந்துள்ள கிராமங்களில் வீடுகட்டுதல், குடிசை வாழ் மக்கள் ஆதி திராவிடர்கள், ஆதிவாசிகள், சமூகத்திலுள்ள ஏழை எளிய மக்களுக்கு வீடு கட்டுதல், கிராமங்களுக்கு தண்ணீர் வழங்கும் திட்டம், மேலும் புதிய 20 அம்ச திட்டத்தில் அடங்கிய எல்லா இனங்கள், இதுபோன்ற திட்டங்களுக்கு பேர்மிட் மூலமாக லெவியில் வழங்கப்படும்.

**திரு. பாபு ஜனார்த்தனன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே கொடுக்கப்பட்ட பேர்மிட்களுக்கு தற்போது வீடு கட்டிக் கொண்டிருக்கிற எல்லோருக்கும் பெர்மிட்டை ரத்து செய்து விட்டார்கள். அவர்கள் இப்பொழுது எப்படி சிமெண்ட் வாங்குவது, என்ன நிலைமை? அவர்கள் எல்லாம் ஏற்கெனவே ப்ளூ பிரின்ட் போட்டு பெர்மிட் பெற்றிருக்கிறவர்கள். மீண்டும் அவர்கள் ப்ளூ பிரின்ட் போட்டு மனுச் செய்ய வேண்டுமா ?

அதை அடுத்து ஆர்.டி.ஓ. அளவிலேதான் பெர்மிட் வாங்க வேண்டுமென்று சொன்னால் ஒரு தாலுகாவிலே இருப்பவர்கள் அலைய வேண்டியிருக்கும். உதாரணமாக செய்யார் டிவிஷனை எடுத்துக்கொண்டால் வந்தவாசி, ஆரணி முதலிய வட்டங்களில் இருக்கிற மக்கள் செய்யார் ஆர்.டி.ஓ. அலுவலகத்திற்கு வருவது என்பது ஏழை, நலிந்த பிரிவினருக்கு மிகுந்த சிரமமாக அமையும். ஒரு வகையிலே எல்லோருக்கும் அந்த பேர்மிட் உடனடியாக முறைப்படுத்தி வழங்கிவிட்டு அந்த சீரியல் முறையிலே ஒன்றிய அல்லது தாசில்தார் அளவிலே பெர்மிட் அனுப்பிவிட்டு, எப்பொழுது சிமெண்ட் வருகிறதோ அப்பொழுது அவர்கள் பெற்றுக் கொள்ளலாம் என்ற முறையிலே அரசு முடிவு எடுக்குமா ?

[1982 மார்ச் 10

(முற்பகல் 10.10)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : 80 சதுர மீட்டர் தரைமட்டத்திற்கு மேற்படாத கட்டடங்களுக்கு ஏற்கனவே பெர்மிட் வழங்கப்பட்டிருந்தால் அது தொடர்ந்து வழங்கப்படும். அவற்றிற்கு அனுமதி உண்டு. அதற்கு மேற்பட்ட கட்டடங்களுக்கு ஏற்கனவே பெர்மிட் வழங்கப்பட்டிருந்தாலும் கூட அது செல்லுபடியாகாது. அவர்கள் வெளியிலேதான் வாங்கிக் கொள்ள வேண்டும். லெவி சிமெண்டிலிருந்து அவர்களுக்குக் கொடுக்க முடியாது.

அடுத்து, அவர்களது இரண்டாவது கேள்விக்குச் செல்கிறேன். ஏற்கெனவே இந்த மன்றத்திலும், மேலவையிலும், வெளியேயும் தாசில்தார் அளவிலும், பி. டி. ஓ. அளவிலும் சிமெண்ட் வழங்குகிற அதிகாரம் இருக்கிற காரணத்தால் அதிகமான அளவில் ஊழல்கள் நடைபெறுகின்றன, தவறுகள் நடைபெறுகின்றன, ஏழைகள் பாதிக்கப்படுகிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்துள்ள இயக்கம் உட்பட அநேகமாக அனைத்துக் கட்சிகளும் பேசியிருக்கிற காரணத்தினால் மாண்புமிகு முதல் அமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் அமைச்சரவையில் வைத்து இதை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு இந்த அதிகாரம் இருக்க வேண்டும் என்றும் அவர்களுடைய நேரடி கண்ட்ரோலின் கீழ் ஆர்.டி.ஓ. அளவில் அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்ற முடிவெடுத்து இன்றையதினம் அது அமலுக்குக் கொண்டு வரப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : மத்திய அரசின் புதிய லெவி முறையில் தனிப்பட்ட வியாபாரிகள் சிமெண்டில் கலப்படம் செய்ய ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது. ஆதலால் நம் தமிழக அரசு அந்தக் கலப்படம் இல்லாமல் தடுப்பதற்கு ஏதாவது பாதுகாப்பு கொடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : அரசு கண்காணிக்கும்.



1982 மார்ச் 10]

திரு. சோ. அழகர்சாமி : மத்திய அரசு போட்டிருக்கிற இந்தப் புது உத்திரவு இன்று சிமெண்ட் ஆலை முதலாளிகள் அதிகமான அளவில் கொள்ளை இலாபம் அடிக்க உதவக் கூடிய வகையில் உள்ளது. ஆகவே, இது சரியல்ல என்று மத்திய அரசைக் கண்டிக்கக்கூடிய முறையில், ஒரு கடுமையான ஆட்சேபணை தெவிக்கக்கூடிய முறையில் ஒரு தீர்மானத்தை இந்த அவை நிறைவேற்ற வேண்டும். கடந்த காலங்களில் சிமென்ட் பெர்மிட் கொடுக்கும் முறையில் இருந்த சீர்கேடுகள் அனைவரும் அறிந்த விஷயம். அனுமதிச் சீட்டு வழங்கும் முறையில் வட்டாட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் இவர்களிடமிருந்து கோட்டாட்சித் தலைவர்களுக்கு மாற்றி இருப்பது அதிகமான சிரமத்திற்கும், சிறு சிறு வீடுகள் கட்டக்கூடியவர்கள் இருக்கும் வீட்டை பழுது பார்ப்பவர்கள் ஆகியோருக்கு அதிகப்படியான கஷ்டங்களை, துன்பங்களை அளிக்கும் என்பதால் அனுமதிச் சீட்டுகள் வழங்கும் அதிகாரத்தை வட்டாட்சித் தலைவர்களுக்கும் ஒன்றிய ஆணையர்களுக்கும் வழங்கி. சீராக பெர்மிட்டுகள் வழங்கப்படுகிறதா என்பதைப் கண்காணிப்பதற்காக கொடுக்கப்பட்ட பிறகுகூட, சரியாக வழங்கப்பட்டுள்ளதா சீராக பயன்படுத்தப் பட்டுள்ளதா? என்பதைக் கண்காணிப்பதற்காக சர்வ கட்சிகளைக் கொண்ட குழுக்கள் ஆங்காங்கே நியமிக்க ஏற்பாடு செய்யப் படுமா? 30 ரூபாய்க்குக் கிடைக்கவேண்டிய சிமெண்ட்டை காண்ட்ராக்டர்களிடமிருந்து 80 ரூபாய் 85 ரூபாய் கொடுத்து பலர் அவசரத் தேவைக்கு வெளியேயிருந்து வாங்கிக் கொண்டிருப்பது அனைவரும் அறிந்த விஷயமாகும். பெர்மிட்ஸ் வாங்குகிறவர்கள் சொந்த உபயோகத்திற்காக என்று வாங்கி சிலர் அதிகமான விலைக்கு வெளியே விற்று கொள்ளை லாபம் சம்பாதிக்கிறார்கள். இதைக் கவனித்து சிமெண்ட் உபயோகிப்பவர்களுக்குச் சீராகக் கிடைக்கச் செய்ய வேண்டும். மத்திய அரசின் இந்த இரட்டை விலைக் கொள்கையைக் கண்டிக்கவேண்டும். இன்று வெளியே ரூ. 55 வரை சிமெண்ட் விற்கப்படுவதை அனுமதிப்பது சரியானது தானா? இன்று லெவி சிமெண்டிலிருந்து அதிகமான கோட்டாவை நாம் பெறுவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறீர்கள்? கிடைக்கக்கூடிய சிமெண்ட்டை நல்லமுறையில் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா? சிமெண்ட் விநியோகத்தைக் கண்காணிக்க சர்வகட்சிக் குழுக்கள் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்ட மன்றத்தைப் பொறுத்தவரை இங்கே ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால், இப்போது நாடாளு மன்றம் நடந்து கொண்டிருக்கிறது. அநேகமாக எல்லாக் கட்சிகளுக்கும் அங்கே, நாடாளுமன்றத்திலே பிரதிநிதிகள் இருக்கிறார்கள். எனவே, அந்தந்த கட்சிகளினுடைய உணர்வுகளையும், கருத்துக்களையும் நாடாளுமன்றத்திலே எடுத்துவைக்க, இப்போதே சொல்ல அங்கே வாய்ப்பிருக்கிறது.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் அல்லது எதிர்க் கட்சித் தலைவர்கள் அனைவரும் விரும்பினால், வெளியிலே கூட்டங்களை கூட்டி, அந்தக் கூட்டங்களின் வாயிலாக அந்தந்தக் கட்சிகளின் கருத்துக்களையும், உணர்வுகளையும் அறிந்து மத்திய அரசுக்கு அவை எழுதப்படும்; சொல்லப்படும். ஏற்கெனவே, நான் சொன்னதைப்போல் ஆர்.டி.ஓ., டி.டி.ஓ., ஆகியோருக்கு பர்மிட் வழங்குகின்ற அதிகாரம் இருக்க வேண்டும் என்று முடிவெடுத்ததற்குக் காரணம், இந்த மன்றத்திலும், மேலவையிலும், அநேகமாக எல்லாக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும், பத்திரிகைகளிலும் தாசில்தார், பி.டி.ஓ. அளவில், கீழ் மட்டத்திலே தவறு நடைபெறுகிறது, ஏழைகள் அதனால் சிமெண்ட் பெற இயலவில்லை, பர்மிட் வழங்கப்படவில்லை. தேங்கி நிற்கிறது என்றெல்லாம் சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில், இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது. இந்த முடிவு கொஞ்ச நாள் அமுலில் இருக்கட்டும். இதிலே பிரச்சினைகள் ஏதாவது வருமானால், அதைப்பற்றி பின்னால் எப்படி முறைகளை நிவர்த்திக்கலாம், யாரிடம் அதிகாரத்தைக் கொடுக்கலாம் என்பதைப் பற்றி இந்த அரசு பின்னால் முடிவு செய்யும்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆர்.டி.ஓ., டி.டி.ஓ., ஆகியோருக்கு பர்மிட் வழங்கும் அதிகாரம் மாற்றப்பட்டுள்ளது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சாதாரண கிராமப்புறங்களிலே இருக்கின்ற ஆரிசனங்கள், ஏழைகள், அவர்கள் இந்தப் பர்மிட்டைப் பெறுவதற்கு மாவட்டத் தலைநகரங்களுக்கு அல்லது ஆர்.டி.ஓ. அலுவலகங்களுக்கு தேடிச் செல்லுகின்ற சிரமத்தின் காரணமாக, வெளி மார்க்கெட்டிலே சிமெண்ட் வாங்கி விடலாம், இதற்கும் அதற்கும் மூட்டை ஒன்றுக்கு ரூ. 20 தான் வித்தியாசம், 10 மூட்டை சிமெண்டை கேட்பார்கள். அதற்குச்செலவாகக் கூடிய தொகை, சிரமம் கணக்கில் எடுத்துக் கொண்டால் ஆர்.டி.ஓ. அலுவலகத்திற்கு யாரும் போக முடியாது. ஆகவே, இதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு வட்ட தாசில்தார், அல்லது பி.டி.ஓ., அல்லது பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் ஆகியோர் மூலமாக மக்களுக்கு சிமெண்ட் வழங்குவதற்கு அரசு முன் வருமா என்று கேட்பதோடு, இன்றைய தினம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வீடுகள் கட்ட கடன் வழங்கப்படுகிறது : அதே போல் அரசாங்க ஊழியர்களும், அரசாங்கத்திடம் கடன் பெற்று வீடுகள் கட்டுகிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட மக்களுக்கும், நடுத்தர மக்களுக்கும், அடித்தளத்திலே இருக்கின்ற மக்களுக்கும் லெவி சிமெண்டைக் கொடுப்பதற்கான முறையிலே நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல், அதிகாரங்கள் ஆர்.டி.ஓ., டி.டி.ஓ., மட்டத்தில் இருக்க வேண்டும், தாசில்தார், பி.டி.ஓ., மட்டத்தில்





இருக்க வேண்டுமா என்ற பிரச்னை வந்தபோது, ஏற்கனவே இருந்த சங்கடங்கள் காரணமாக, சாதாரண மக்கள், ஏழைகள், ஆதி திராவிட வகுப்பினர், சமுதாயத்திலே பின்தங்கிய நிலையில் இருப்பவர்கள் சிரமப்படக் கூடாது என்ற காரணத்தினால், இந்த அதிகாரம் ஆர்.டி.ஓ., டி.டி.ஓ., ஆகியோருக்கு மாற்றப்பட்டது. கொஞ்ச காலத்திற்கு இது அமுலில் இருக்கட்டும். அதிலே சிரமங்கள் இருப்பது அரசின் கவனத்திற்கு வருமேயானால், அதற்குப் பின்னாலே அதை மாற்றிக் கொள்வதில் சிரமம் இருக்காது.

அதற்கடுத்து, மாண்புமிகு உறுப்பினர் அரசு அலுவலர், மற்றும் சம்பந்தப்பட்ட சிலர் பற்றி, அவர்களுக்கு பர்மிட் கொடுக்கும்போது லெவி சிமெண்ட் அளிக்கப்படுமா என்று கேட்டார்கள். இதிலே வித்தியாசம் பார்க்க முடியாது. நான் ஏற்கனவே சொன்னதைப் போல், 800 ஸ்கொயர் அடி பிளின்த் ஏரியாவுக்கு உட்பட்ட வீடுகளுக்குத்தான், யார் கட்டினாலும், அவர்களுக்குத்தான் பர்மிட் மூலமாக லெவி சிமெண்ட் கொடுக்க முடியும். மற்றவர்கள் ஓபன் மார்க்கெட்டில்தான் வாங்கிக் கொள்ள முடியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. இராஜசேகரன் அவர்கள் பேசும்போது, சொன்ன சில வார்த்தைகளை நீக்குகிறேன் என்று சொன்னேன். பத்திரிகைக்காரர்கள் அது என்னவென்று கேட்டார்கள்* என்று குறிப்பிட்ட பகுதி நீக்கப் பெறுகிறது.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு நாளும் நடைபெறுகின்ற நிகழ்ச்சியைப் பார்க்கின்ற போது, இந்த அவையினுடைய ஸ்டேடஸ் ரெட்டியூஸ் செய்யப்படுகிறது ; நீங்கள்தான் பாதுகாக்க வேண்டும். பார்லிமெண்டில பேசுவதற்கு அந்தந்தக் கட்சிகளுக்கு பிரதிநிதிகள் இருக்கின்றபடியால், இந்த அவையிலே தீர்மானம் போட வேண்டிய அவசியமில்லை என்று சொல்வது சரியல்ல. அங்கே பார்ட்டிஸ் இருக்கலாம், இல்லாமல் இருக்கலாம்.

They may talk or may not talk about this matter. This House is independent of Parliament. We have got every right to pass a resolution here within our competence. Let the Hon. Minister give some other reason. That is a different point.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அங்கே ஆப்பர்சூனிட்டி இருக்கிறதால் இங்கே தீர்மானம் தேவை இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இங்கே தீர்மானம் வேண்டாம் என்பதற்கு வேறு காரணம் சொன்னால் அது வேறு பாயின்ட், அங்கே வாய்ப்பு இருக்கிறதால் இங்கே வேண்டாம் என்று சொன்னால் எங்களுடைய, இந்த அவையினுடைய ரைட்ஸ் என்ன ஆகிறது? அதை நீங்கள்தான் புரொட்டக்ட் பண்ண வேண்டும்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு துணை தலைவர் அவர்களே, மாண்புமிகு உமாநாத் அவர்கள் இவ்வளவு சீரியசாக எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. நான் ஏற்கனவே சொல்லியபடி நாம் எடுத்துச் சொல்ல போவதாலே ஒரு பயனும் விளையப் போவதில்லை. அது ஒரு பாயின்ட், நம்முடைய உணர்வுகளைச் சொல்ல வேண்டுமென்றால் கட்சிகளுடையத் தலைவர்களை கேட்டு, அழைத்துப் பேசி அவர்களுடைய உணர்வுகளை மத்திய அரசுக்கு எழுத இந்த அரசு தயாராக உள்ளது. நாடாளுமன்றம் நடக்கிறது, தொடர்ந்து சட்டமன்றமும் இங்கே நடக்கிறது. அந்தக்கட்சிகளின் உணர்வுகளைச் சொல்ல அந்தக் கட்சிகளின் உறுப்பினர்களுக்கு அங்கே வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தான் நான் சொன்னேன்.

திரு. ரா. உமாநாத் : துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் ரைட்ஸ் பாதிக்கப்படுகிறது. நீங்கள் தான்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் கூட ஒரு தீர்மானம் கொண்டு வரலாம்.

4. வரவு செலவுத் திட்டம் 1982 83—வாக்கெடுப்பு.

(அ) மானியக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத்தீர்வைத் துறை.

(ஆ) மானியக் கோரிக்கை எண். 4—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்—தொடர்ச்சி.

*மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நேற்று மாண்புமிகு உறுப்பினர்கள் மானியக் கோரிக்கையைப் பற்றி தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். எல்லா உறுப்பினர்களுடைய உணர்வுகளையும் இந்த அரசு மதிக்கிறது. எல்லா உறுப்பினர்களுக்கும் என்னால் இயன்ற வரைக்கும், எந்த அளவிற்கு பதில் சொல்ல முடியுமோ சொல்ல முயற்சி செய்கிறேன். எங்கேயாவது பதில் சொல்லாவிட்டால் அதில் தவறியிருக்கிறேன் என்று அர்த்தமே தவிர, நான் ஏதோ அலட்சியப்படுத்திவிட்டதாக கருதக் கூடாது. ஆனால் சொன்ன நல்ல கருத்துக்களை இந்த அரசு எடுத்து வேண்டிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





முதலிலே வணிகவரியைப்பற்றி சொல்கிறபோது இங்கே இருக்கிற எல்லோரும் ஒருவிஷயத்தை ஒரே மாதிரியாக சொல்லி இருக்கிறார்கள். ஆனால்எந்த நாடும் ஒரு ஆட்சியை நடத்த வேண்டுமென்றால் வரி இல்லாயல் ஆட்சி நடத்த முடியாது. முன்பெல்லாம் ஆட்சி நடைபெறுகிறது என்றால் உள்நாட்டினுடைய பாதுகாப்பு, வெளிநாட்டினுடைய பாதுகாப்பு என்று அதை மட்டுமே அரசு கவனித்து வநதது. அப்போது மக்களிடத்திலே போடப்படுகிறவரி மிககுறைவாகத்தான் இருந்தது ஆனால் இன்றைக்கு அப்படியல்ல. உள் நாட்டு பாதுகாபபும, வெளிநாட்டு பாதுகாப்பும், வளர்ச்சித் திட்டங்களும், மக்களுடைய பொருளாதார வளர்ச்சியும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு மாநில அரசுகளுக்கு இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும் இப்படி இருக்கிறதாலேதான் அடிக்கடி நிலைமைகளுக்கு ஏற்றவாறு அரசுகள் வரி போட்டுக் கொண்டு வருகின்றன் என்பது உங்களுக்குத் தெரியும். மாநில அரசுகள் மாநில முன்னேற்றத்துற்காக திட்டங்களை செயல்படுத்த வேண்டிய நிலைமைகள் இருந்தாலும் அவைகள் போதுமான வரியில்லாத காரணத்தால் மத்திய அரசின் தயவை நாடுகிற நிலைமை ஏற்படுகிறது என்பது உங்களுக்குத் தெரியும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை)

கிராமங்களில்கூட ஏழை, எளியவர்கள் கடன் வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டால அங்கேயுள்ள வசதி வாய்ந்தவர்களிடம் ஏழை அடிமைப்படுத்தப்படுகிறான் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். இப்படி மாநில அரசு மத்திய அரசை நாடிக்கொண்டு இருக்கிறபோது பல சங்கடங்கள் வருகின்றன என்று சட்ட நிபுணர்கள் தெரிவித்துள்ளார்கள். திட்டக் குழுவும் அவ்வப்போது மாநில அரசுகள் நிதியாதாரங்களை பெருக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறது. மாநில அரசு நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கு தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது என்பதும் உங்களுக்கு நன்றாகத்தெரியும். இவைகளையெல்லாம் உங்களிடத்திலே சொல்லிக்கொண்டு இருக்கின்ற நான், ஒன்றை உங்களுக்குச் சொல்லவேண்டுமானால் இந்த நாடு விடுதலை அடைந்து 35 ஆண்டுகள் ஆகிவிட்டன என்பது உங்களுக்கு எல்லாம் தெரியும், விடுதலையடைவதற்கு முன்னால் இரட்டை ஆட்சி முறை இருந்தது. அப்படி இருந்தபோது பல மாநிலங்களிலே இன்றைக்கு ஆட்சி செய்கின்ற இந்தியப் பேரரசின் காங்கிரஸ் கட்சி அப்போது பல மாநிலங்களிலே இருந்தபோது முதல் மந்திரி அல்ல, பிரதம மந்திரி என்று இருந்தார்கள். அப்படி இருந்தபோது கூட, இரட்டை ஆட்சியின் போது கூட, அப்போது இருந்த மாநில அரசுகள்

[திரு எஸ். டி. சோமசுந்தரம்] [1982 மார்ச் 10

இவற்றை எல்லாம் எதிர்த்திருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியும். கவர்ன்மென்ட் ஆப் இண்டியா ஆக்ட் ஆப் 1935 என்ற ஒரு சட்டத்திலே வரிப் போடுகிற விதங்களைச் சொல்கிற போது மாநிலங்களுக்கு இவ்வளவு அதிகாரங்கள், மத்திய அரசுக்கு இவ்வளவு அதிகாரங்கள் என்று எல்லாம் வரையறுக்கப்பட்டு இருந்தது. அதற்குப் பிறகு 1950-ல் நம்முடைய அரசியல் சட்டம் வந்த பிறகு 1935 ஆம் ஆண்டு புரவின்ஷியல் ஆக்ட்டில் நமக்கு இருந்த பவர்களிலே எவ்வளவு எடுத்துக் கொண்டார்கள் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

இன்றைக்குப் பெருவாரியான வரிகளை வசூலிக்கின்ற இனங்கள் என்ன என்றால் Taxes on income other than agricultu al incom அக்ரிகல்சர் இன்கம் என்றால் என்ன என்று உங்களுக்குத் தெரியும், விவசாய வருமானம் வராது அதைத் தவிர மற்றவைகள் எல்லாம் போடுகிற அதிகாரம் மத்திய அரசுக்கு இருக்கிறது.

Customs duty

Duties of excise on tobacoo, etc.

Corporation tax

Taxes on the capital value of the assets

Estate duty

Duties in respect of succession to property other than agricultural land

Terminal taxes on goods, passengers, etc.

Taxes other than stamp duties on transactions in stock Exchanges and futures markets

Rates of stamp duty in respect of Bills of Exchange, etc.

Taxes on the sale or purchase of newspapers and on advertisements published therein

Taxes on the inter-State sale or purchase of goods.

இப்படிப்பட்ட பல்வேறுபட்ட அதிகாரங்கள் இன்றைக்கு மத்திய அரசுக்கு இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். அவைகளிலே ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால் There is no share for the State in the Corporation Tax எந்த வேகத்திலே



1982 மார்ச் 10] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

அது வளர்ந்து கொண்டிருக்கிறது என்றால் 1976-77-ல் மத்திய அரசுக்கு வந்தது ரூ. 984.23 கோடி, இன்றைக்கு எதிர்பார்ப்பது 1982-83-ல் ரூ 2,382 கோடி இதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அதைப்போல் no share for the state in thei ncome Tax 1976-77-ல் ரூ.1,194.3கோடி, ஆனால் இந்த ஆண்டு வருமானம் ரூ:1,572 கோடி. எக்சைஸ் டியூட்டியிலே இரண்டு வகை உண்டு. யூனியன் எக்சைஸ் டியூட்டியிலே அப்போது வந்திருப்பது எவ்வளவு என்றால்—ஒவ்வொரு ஆண்டிற்கும் விவரம் இருக்கிறது, அவைகளையெல்லாம் உங்களுக்குத் தெரிவிப்பது என்றால் காலம் அதிகமாகும் என்பதால் சுருக்கமாகச் சொல்கிறேன்—All India collection stat collection கிடையாது என்று அர்த்தம், ரூ. 3,964.32 கோடி. இந்த ஆண்டு எதிர் பார்ப்பது ரூ.7,809.63 கோடி

(முற்பகல் 10-30)

அதேபோல் அடிஷனல் எக்சைஸ் டியூட்டி; எஸ்டேட் டியூட்டி. இப்படியெல்லாம் பார்க்கிறபொழுது எவ்வளவு அதிகரித்துப் போகிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிச் சொல்கிறபொழுது ஒன்றைச் சொல்ல வேண்டுமானால், Customs duty, no share for the State என்பது உங்களுக்கு தெரியும். Wealth Tax, Property Tax, யாருக்காவது சந்ததியினருக்கு எழுதிக் கொடுத்தால் அதற்கும் போடலாம். இப்படி மூன்று வகைகளிலேயும் போடலாம். எக்சைஸ் டியூட்டி, இப்படி பலவிதமான வரிகளைப் போடும் பொழுது இவைகளெல்லாம் நமக்கு வராமல் இருக்கிறபொழுது நாம் கேட்டுப் பார்த்து, நாம் வரிகளைப் போட வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இப்படி ஒவ்வொன்றாக வரிகளைப் பற்றிச் சொல்லிக் கொண்டே போனால் நேரமாகிவிடும். அதுமட்டுமல்லாமல், இப்படிப் போடப்பட்ட வரிகள் சிலவற்றை அவர்கள் எடுத்துக் கொண்டார்கள். எடுத்துக் கொண்டு வரிகளைப் போட வேண்டும் ; போட்டு நமக்குக் கொடுக்கவேண்டும். சில வற்றில் வரிகளைப் போட்டுக் கொடுக்கிறார்கள் ; சிலவற்றில் கொடுக்கவில்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், 'Levy of Excise Duty on Medicines and Toilets' வரிகளைப் போடுகிறார்கள், கொடுக்கிறார்கள். பாதகமில்லை.

Taxes other than Stamp Duties in transaction in Stock Exchanges and futures markets.

அதுதான் முக்கியமானது. பெரிய பெரிய கம்பெனிகள் ஷேர்களை வைத்திருக்கின்றன. அந்த ஷேரை விற்கிறபொழுது அதற்கு வரி போடலாம். அதைப் போட்டு நமக்குத் தர வேண்டும்.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1982 மார்ச் 10

Taxes other than Stamp Duties on transactions in Stock Exchanges and futures markets.

அதைப்போல Taxes on the sale of purchase of Newspapers and on advertisements published therein.

என்பதிலே பெரிய நியூஸ் பேப்பர்களுக்கெல்லாம் போடுகின்ற விளம்பரங்களிலே வரி போடவேண்டும். நமககுக் கொடுக்க வேண்டும் என்பதுதான் சொல்லபட்டிருக்கிறது அதற்குப் போடுகிற வரி நமக்குத் தரப்படுவதில்லை. வரிகலைப் போடுவதும் இல்லை; நமக்குக் கொடுப்பதும இல்லை.

Taxies the inter-state sale or purchase of goods.
இப்படிப்பட்ட பல வகைகளிலும் வரிகள போடவில்லை.

Taxies other than Stamp Duties transactions in Stock Exchanges and futures markets.
இப்படிப்பட்டவைகளுக்கு வரி போடாததினால்தான் நமக்குச் சங்கடங்கள்வருகின்றன.

கஸ்டம்ஸ் ட்யூட்டி பற்றி முதலிலேயே சொன்னேன். 1981-82 ஆம் ஆண்டு 4,140 கோடி வந்திருக்கிறது. இந்த ஆண்டில் எவ்வளவு வருகிறது என்றால் 4,606 கோடி.

'No share for the State'
இப்படியெல்லாம் இருப்பதால்தான் நாம் வரிகளைப் போட வேண்டுமென்ற நிலைமைகள் வந்திருக்கின்றன என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்படி வரிகளைப் போடும்பொழுது எவ்வளவு சங்கடங்கள் இருக்கின்றன என்பதையும் சொல்லவேணடும். மத்திய அரசினுடைய பட்ஜெட்டில் சென்ற ஆண்டு எவ்வளவு என்று சொல்கிறபொழுது ரூ. 19,647கோடி; ஆனால் இந்த ஆண்டு ரூ. 21,846 கோடி. ஆனால் எல்லா மாநிலங்களுக்கும் அதிலே பிரித்து கொடுப்பது ரூ. 4,716கோடி என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பொழுது நாம் இங்கே வரி போட்டிருக்கிறோம் என்றாலும், பல ஆண்டுகள் நாம் வரி போடவில்லை என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் ஒவ்வொரு ஆண்டும் மத்திய அரசு வரி போட்டிருக்கிறது. இந்த ஆண்டு எவ்வளவு என்றால் ரூ. 533 கோடிக்கு வரி போட்டிருககிறது. என்ற விவரம் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசியல் சட்டத்திலே ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். அதைச் சொல்கிறபொழுது வளர்கின்ற வரிகள் சில மாநிலங்களுக்கு வர வேண்டுமென்ற அந்த நல்லெண்ணத்திலேதான் சொல்லியிருக்கிறார்கள். உதாரணம் சொல்ல வேண்டுமானால், 1957 ஆம் ஆண்டு ரெயில்வே பிரயாணிகள் பயண விதியிலே சில வரிகளைப் பேட்டார்கள். அந்த வரிகளைப் போட்டு, 1961-66 வரையிலும்



1982 மரர்ச் 10] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

ரூ. 12 கோடி மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1966-67-லே ரூ. 16 கோடி மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. அது அப்படியேதான் இன்றைக்கும் இருககிறது அதைப்பற்றி 7-வது நிதிநிலை ஆணைக்குழு தன் அறிக்கையில் 1961-68ல் சராசரி ஒரு கிலோ மீட்டருடைய பிரயாண கட்டணம் 2.01 பைசா. ஆனால், இன்றைககு 1976-77ல் ஒரு கிலோ மீட்டருக்குக் கிடைக்கும் பிரயாணக் கட்டணம் 4.3 பைசா; இந்த உயர்வு 100 மடங்காகும்' என்று சொல்லியிருக்கிறது.

அது மட்டுமல்ல, 1961-62ல் ரூ. 137.7 கோடி ரெயில்வேயினுடைய வருமானம் ஆகிறது. 1976-77ல் ரூ. 525.3 சோடி ஆகி இருக்கிறது. இவைகளையெல்லாம் பார்க்கிறபொழுது, மாநிலங்களுக்கு ரூ. 16.2 கோடி கொடுப்பது மிகக்குறைவு என்றும் அதை மாற்றியமைக்க வேண்டுமென்றும் நிதிநிலை ஆணைக் குழு சொல்லும்போது, மாநிலங்களுக்குத் தர வேண்டிய வரியில பிரயாணக் கட்டணத்தைச் சேர்த்திருப்பதை 7-வது நிதிக் குழு அறிக்கை வன்மையாக கண்டிக்கிறது. அந்த அறிக்கையின்படி, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைத் தொகுத்தவர்கள் வருவாயை அதிகரித்துக் கொணடுபோகும் வருவாயில ஒரு பகுதியை மாநிலங்களுக்குக் கொடுக்கவேண்டுமென்பதற்கு வழிவகை வகுத்துள்ளார்கள். அவர்கள் செய்ததன் உளநோக்கம் இம்மாதிரி மாநில அரசு முறைப்படி வரி விதிப்பதற்கு, ஒரு குறிப்பிட்ட தொகையைத் தொடர்ந்து கொடுப்பதன்மூலம் முறியடிக்கப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டை மாநில அரசு சொல்வது சரி என்று 7-வது நிதி கமிஷன் சொல்லி இருக்கிறது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, 1957ல் எல்லா முதலமைச்சர்களும் சேர்ந்து ஒரு முடிவு செய்தார்கள். அப்பொழுது எல்லா மாநிலங்களுடைய முதலமைச்சர்களும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். இருக்கிற பிரச்னைகளைப் பேசுகிறபொழுது, மாநிலங்களுடைய முதலமைச்சர்களும் மத்தியப் பேரரசும் கலந்து பேசுகிறபொழுது, எல்லா முதலமைச்சர்களும் ஒரே கட்சியைச் சேர்ந்திருக்கிறபொழுது. அரசியல் சட்டப்படி, மாநில அரசுகளுக்கும் மத்திய அரசுக்கும் உள்ள பேச்சுவார்த்தையாக இருந்தாலும், அது ஒரே கட்சியாக இருக்கும்போது, அது ஒரு கட்சியின் பிரச்சினையாகி ஆகிவிடக்கூடும் மென்றால் ஒரு கட்சிக்குள்ளே பல விவரங்களைப் பேசும்பொழுது, அந்தப் பிரச்னை எப்படி முடிவாகும் என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும். மாநில அரசுகளும், மத்திய அரசும் ஒரே கட்சியைச்சேர்ந்ததாக இருந்த போது எடுக்கப்பட்ட முடிவு அது. உங்களுக்கு உதாரணம் சொல்ல வேண்டுமானால், ஒராண்டுக்கு முன்னாலே, விற்பனை வரியைப் பற்றி முதலமைச்சர்கள மாநாடு நடக்கிறபொழுது முதல் நாள் எல்லா மாநில முதலமைச்சர்களும் எதிர்த்தார்கள், அந்த வரியை மைய அரசு எடுக்கக்கூடாது என்று, எல்லோ

ரும் எதிர்க்கின்ற பொழுது நான் மகிழ்ச்சி அடைந்தேன் ஏனென்றால, நான் சொல்வது மிகச் சுலபமானதாகி விடும் என்பதால், அப்பொழுது எல்லோரும் எதிர்த்தார்கள், ஆனால் அதற்கு மறுநாள், சரிக்கட்டி பேசியவுடன், எதிர்ப்பதைவ்ட்டு விட்டார்கள். இது போல்தான், துணி, சர்க்கரை, மற்றும் புகையிலை மீது விற்பனை வரிக்குப் பதிலாக, கூடுதல ஆய தீர்வை. 1957 ஆம் ஆண்டு மைய அரசால் கொண்டு வரப்பட்டது இப்பொருள்களின் மீது எந்தவிதமான வரிகளும் மாநில அரசால் விதிக்கப்படுவதில்லையென்றும் கூடுதல் ஆயத் தீர்வை விதிப்பதன் மூலமாக வரும் வருவாயில மத்திய அரசுக்குக கொடுககிறபோதுதான் இன்றைக்கு எவ்வளவு வர வேண்டுமோ அவ்வளவு வராமல், அப்பொழுது 1959-68ல் அடிப்படை கணக்கு எவ்வளவு வந்ததோ, அதே விகிதம்தான் வருகிறது, முறைப்படி வரவில்லையென்பதையும் இனறைக்கு பினான்ஸ் கமிஷன்கூடஅதை எடுத்துச் சொல்லியிருக்கிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

நான் முதலிலே சொன்னபடி அரசியல் அமைப்புச்சட்டம் 296 பிரிவின் கீழ், செய்தித் தாள்கள் விற்பனைஅல்லதுவாங்குவதறகு வசூலிக்கப்படும் விளம்பரம் இவைகளில் வரி விதிக்கப்பட்டு, திருப்பி தரவேண்டும் என்று இருக்கிறது. நான் முதலிலேயே தெரிவித்தபடி அதைக் கொடுக்கவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் சொன்னார்கள். வருமான வரி மீது சர்சார்ஜ் விதிக்க அரசியலமைப்பு பிரிவு 271-ல் வகை இருக்கின்றது. வருமான வரியில் இருந்து மாநிலங்களுக்குப் பங்கு உண்டு. ஆனால் சர்சார்ஜிலிருந்து கிடைக்கும் வருவாயில் மாநிலங்களுக்குப் பங்கு கிடையாது. ஏழாவது நிதிநிலைக் குழுவிற்கு தமிழ் நாடு கொடுத்துள்ள அறிக்கையில் சர்சார்ஜ்ஜை வருமானவரியோடு சேர்த்து ஒன்றாக்கி மாநிலங்களுக்கு பங்கு கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறது. இப்படி பலவற்றை எல்லாம் நாம் சொல்கின்றபோது, இப்போது மத்தியப்பேரரசு ஒன்று கேட்டுக் கொண்டிருக்கிறது. வனஸ்பதி, டிரக்ஸ் அண்டு மெடிசன், சிமெண்ட் பேப்பர்அண்டு பேப்பர் போர்டு, பெட்ரோலியம் பிராடக்ட்ஸ் இவைகளுக்கு எல்லாம் இன்றைக்கு எவ்வளவு வருமானம் வருகின்றது. அதை எடுத்துக் கொள்ளுகிறோம் என்று சொன்னார்கள். இன்றைக்கு நாம் அவைகளிலே 106 கோடி ரூபாய் எதிர்பார்க்கிறோம். 106 கோடி என்பது ஒரு மாநிலத்தைப் பொறுத்தவரையில் மிக அதிகமான தொகை ஆகும். அந்த அதிகமான தொகையை நம்முடைய





மேற்பார்வை இல்லாமல் அவர்களிடம் கொடுப்பது எவ்வளவு சங்கடமாக இருக்கும் என்பதை எல்லாம் நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். இவைகளை எல்லாம் கொடுப்பதற்கு இந்த அரசு சம்மதிக்கவில்லை என்று பலமுறை தெரிவித்தாலும் திருப்பித் திருப்பி அதைப் பேசியதால் இதை மீண்டும் தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு நாங்கள் வரிபோட்டோம் என்றால், இத்தனைக்கும் எல்லாம் முயன்று, வேறு வழி இல்லாமல் வரி போட்டிருக்கிறோம். ஆனால் இந்த வரியைப் போடுகிறபோது, எல்லோரும் எதிர்த்து இருக்கிறார்கள். திருமணம் ஆனவர்களும் எதிர்த்திருக்கிறார்கள். திருமணம் ஆகாதவர்களும் எதிர்த்திருக்கிறார்கள். அப்படி என்றால் திருமணம் ஆகாதவர்கள் யார் என்று நீங்கள் எண்ணக்கூடும். திருமணம் ஆகிவிட்டால் 2 ஆண்டு, 3 ஆண்டுகள் கழித்து மாற்றங்கள் ஏற்படவேண்டும். குழந்தைகள் பிறக்க வேண்டும் என்று உங்களுக்கு தெரியும். ஆனால் அடிக்கடி குழந்தைகள் பிறந்தால் நாட்டுக்குக் கெடுதல். ஆகவே அடிக்கடி வரிகளை போட்டுக் கொண்டிருப்பது கூடாது. திருமணம் ஆனவர்கள் என்றால், ஆளும் கட்சியாக இருந்தவர்கள், வரிகளைப் போட்டவர்களுக்கு அதிலே அனுபவம் உண்டு. ஆனால் திருமணம் ஆகாதவர்களுக்கு வேண்டுமானால, திருமணம் ஆகின்ற வரையில் அனுபவம் இல்லாவிட்டாலும் அவர்களும் அதை எதிர்த்து இருக்கிறார்கள் என்கிறபோது...

திரு. ர.ா உமாநாத் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திற்கு உண்மையிலேயே கிடைக்கவேண்டிய கணிசமான தொகை எதுவும் கிடைக்காமல் ரொம்ப நாம் கஷ்டப்படுகிறோம் என்பதற்கு விரிவான விளக்கத்தையும், புள்ளி விவரங்களையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ளார்கள். அதோடு பலமுறை அதைப்பற்றி கேட்டும், வற்புறுத்தியும் அதற்கு ரெஸ்பான்ஸ் போதிய அளவுக்கு இல்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு இன்டஸ்ட்ரீஸ் மினிஸ்டரும் இப்போது ஒரு கேள்விக்கு பதில் சொல்லுகிறபோது, கேட்டும் பிரயோசனம் இல்லை என்றும் சொல்லிவிட்டார் ஆகவே மத்திய அரசாங்கம் எடுத்து இருக்கக்கூடிய நிலை மாநிலங்களுக்கு எந்த வரிகளிலேயும் இனிமேல் கொடுக்கமாட்டோம் என்ற அவர்களுடைய பாலிசுக்கு நாம் பணிந்து போய்விட்டோமா / அதை கைவிட்டுவிட்டோமா, அதற்கு மாற்றாக நம்முடைய மாநில ஜனங்கள் மத்தியிலே வரி போடுவதால் நம்முடைய புதிய பாதை என்று முடிவுக்கு வந்துவிட்டீர்களா ?

**மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, வரியைப் பொறுத்தவரைக்கும் நான் சொல்லவேண்டுமானால் ஃபைனான்சியல் பவர், அதை என்றைக்குமே விடுவதற்கு மாநில அரசு தயாராக இல்லை என்பதையும், அதற்காக போராடுவதற்குத் தயாராக இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்வேன்.

In terms of the constitution the more elastic sources of revenue have been reserved for the centre withe tLe more expensive functions sueh as education and public health hate been assiged to the states

இது 1968—69-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் 28—2—1968 லே பேரறிஞர் அண்ணா அவர்கள் இங்கே பேசியது. அதை நாங்கள் பின்பற்றுவதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் எல்லா பைனான்ஸ் கமிஷன் ரிப்போர்ட்டும் என்னிடத்தில் இருக்கிறது. அவைகளையெல்லாம் படிக்க வேண்டாம் என்று எண்ணி, சுருக்கமாகச் சொன்னேன். நான் முதலிலே உங்களுக்கு ஒரு உதாரணம் சொன்னதற்குக் காரணம், திருமணமாகி ஏந்தவிதமான மாற்றமும் பல ஆண்டு காலமாக நடக்காவிட்டால், அவர்கள் நாட்டிற்குச் செய்ய வேண்டியவைகளைச் செய்யாவிட்டால், எதிர்காலத்திற்குச் சந்ததியை ஏற்படுத்தாவிட்டால் அது சரியானதாக இருக்காது. ஆனால், மாற்றங்கள் வேண்டும் என்பதற்காக மாற்றங்கள் இருந்து கொண்டே இருந்தால் சங்கடமாக இருக்குமே என்பதை எண்ணிப் பார்க்கவேண்டிய கடமை இருக்கிறது என்பதற்காக இதை நான் தெரிவித்தேனே தவிர வேறு ஒன்றும் இல்லை என்பதைத் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு முனை வரியைப் பற்றியும், பலமுனை வரியைப் பற்றியும் சொன்னார்கள். பலமுனை வரிகளை எல்லாம் ஒரு முனை வரியாக ஆக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள் அதிலே மாண்புமிகு உறுப்பினர் திரு அம்பிகாபதி போன்றவர்களும், மற்றவர்களும் ஒரு முனைவரியாகப் போடுங்கள், என்று சொல்கிறார்கள். அதைப்பற்றி நன்றாகப் புரிந்து கொண்டால் அப்படிச் சொல்ல மாட்டார்கள் என்று கருதுகிறேன். உங்களுக்குச் சொல்லவேண்டுமானால், பொருள்கள் உற்பத்தியிடம் (மனுபாக்சரிங் பாயிண்ட்) அல்லது பங்கீட்டு இடம் (டிஸ்ட்ரிபியூஷன் பாயிண்ட்) ஆகியவை தெளிவாக உள்ள பொருள்கள் மீது மட்டுமே ஒரு முனை வரி விதிக்கப்படும். பலமுனை வரி போடப் பெறும் பொருள்களை விற்பனை செய்யும் வணிகர்களுக்கு வணிக வரி விதிப்பில் இருந்து 50,000 ரூபாய் வரை விலக்கு அளிக்கப்படுகிறது இத்தகைய வணிகர்கள் காம்பவுண்ட் லெவி



தில் வரியைச் செலுத்தலாம். அவர்கள் கணக்கு வைத்துக்கொள்ளத் தேவையில்லை. இந்தச் சலுகை ஒரு முனை விற்பனை வரியின் கீழ் வரும் பொருள்களை விற்பனை செய்யும் வியாபாரிகளுக்கு கிடையாது. எல்லாப்பொருள்களையும் ஒரு முனை விற்பனை வரியின் கீழ் கொண்டு வந்தால் சில சிறிய வியாபாரிகள் பாதிக்கப்படுவார்கள். செய்வார் கமிட்டியும் எல்லாப் பொருள்களையும் உடனடியாக ஒரு முனை வரி விதிப்பதின் கீழ் கொண்டு வர இயலாது என்றாலும், படிப்படியாக அதைச் செய்ய இயலும் தருணத்தில் செய்யலாம் என்று தெரிவித்து இருக்கிறார்கள். இன்றைக்கு நம்முடைய அரசுக்கு வரும் வருமானத்தில் 90 சதவிகித ஒரு முனை வரியில் தான் இருக்கிறது. எதெதற்குக் கொண்டு வரமுடியாதோ அவற்றிற்கு மட்டும்தான் பல முனை வரியாக வைத்து இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசுகிறபோது அதிகமாக வரியைப் போட்டு இருக்கிறோம் என்று சொன்னார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொல்கிறபோது 4 சதவீதத்திலிருந்து 5 சதவீதம் என்றுவரியை உயர்த்தி இருக்கிறீர்களே, இதனால் எவ்வளவு வருமானம் வரும் என்று கேட்டார்கள். அதற்கு நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். உத்தேசமாக 1982—83 ஆம் ஆண்டுக்கு எவ்வளவு வரி கிடைக்கும் என்றால் 620 கோடி ரூபாய் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதில் மத்திய விற்பனை வரிச்சட்டத்தின் மூலம் வருவது சுமார் 110 கோடி ரூபாய். மாநில விற்பனை வரிச் சட்டத்தின் மூலம் வருவது சுமார் 510 கோடி ரூபாய். இதிலே, மாநில விற்பனை வரிச் சட்டத்தின் மூலம் வருவதிலே கூடுதல் வரி சுமார் ரூ. 39 கோடி, மேல வரி சுமார் ரூபாய் 34 கோடி, உரிமை கட்டின பத்திரப் படிவங்கள் மூலமாக சுமார் 31 கோடி ரூபாய். எஞ்சிய வரிகள் மூலமாக 12 கோடி ரூபாய். இவைகள், எல்லாம் போக மீதி விழுக்காடு 90 கோடி ரூபாய் என்று இருக்கிறது. ஆகவே, புதிய வரி 1 சதவிகிதம் அதிகரிப்பதால் கிட்டத்தட்ட 10 கோடி ரூபாய் தான் அதிகமாக வருமானம் வருவதற்கு இயலும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசுகிறபோது மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்களும், மற்றவர்களும், வரி வசூலில் தீவிரம் காட்ட வேண்டும் என்று சொன்னார்கள். எதிர்கட்சித் தலைவர் அவர்களும் சொன்னார்கள். இதிலே தீவிரம் காட்டினால் வரியை அதிகமாக வசூலிக்க முடியும். ஆகவே, அதிகாரிகளை அதிகம் நியமிக்கவேண்டும் என்றும் தெரிவித்தார்கள். அதன்படி இன்றைக்கு சொல்லவேண்டுமானால், அரசு

அதிகமான அதிகாரிகளை நியமிக்கவும், அவர்களுக்கு இருக்கும் பளுவை குறைக்கவும், தீவிரமாக வரி வசூல் செய்யவும் தயாராக இருக்கிறது. தற்போது அரசின் பரிசீலனையில் கமர்சியல் டாக்ஸ் ஆபீசர் 108 பதவிகளும், டிபுடி கமர்சியல் டாக்ஸ் ஆபீசர் 103 பதவிகளும், அசிஸ்டெண்ட் கமர்சியல் டாக்ஸ் ஆபீசர் 109 பதவிகளும், சுப்பிரண்டென்ட் 3 பதவிகளும் அசிஸ்டெண்ட்ஸ் 161 பதவிகளும் ஜூனியர் அசிஸ்டெண்ட் 470 பதவிகளும், ஸ்டெனோ டைபிஸ்ட் 33 பதவிகளும், டைப்பிஸ்ட் 50 பதவிகளும், ரிக்கார்ட் கிளார்க் 87 பதவிகளும், பேசிக் சர்வென்ட்ஸ் 374 பதவிகளும் சேல்ஸ்டாக்ஸ் ஆபீசர் 59 பதவிகளும் என்ற வகையில் ஏற்படுத்த அரசு எண்ணிக்கொண்டு இருக்கிறது என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இன்றைக்கு தீவிரமாக நாங்கள் வரி வசூல் நடவடிக்கைகளை எடுத்துவருவதால்தான் அதிகமான வரி வசூல் நடத்திருக்கிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

இங்கே பேசுகிறபோது கையால் செய்யப்படுகிற சோப்பு ''காட்டில் ஃபீட்'' போன்றவைகளுக்கு எல்லாம் வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அவை எல்லாம் அரசினுடைய தீவிர பரிசீலனையில் இருக்கின்றன. நிச்சயமாக அரசு கவனித்து ஆவன செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன.

மற்றபடி, இந்த மதுவிலக்கு, ஆயத்தீர்வை பற்றி இங்கே பல மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள. அது பற்றி நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, வரி வேண்டுமா, வேண்டாமா என்பதிலே திருமணம் ஆனவர்களும் திருமணம் ஆகாதவர்களும் அனைவரும் ஒரே கருத்தைத் தெரிவித்தாலும் அதிலே மாறுபட்ட கருத்தும் இருந்தது. மாறுபட்ட கருத்து என்றால், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு அம்பிகாபதி அவாகளும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணன அவர்களும் சொல்லுகிறபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள. அதைப்போல நம்முடைய சட்ட மன்ற உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்களும திரு. நெடுமாறன் அவர்களும் அதற்கு நேர் மாறான கருத்தைச் சொன்னார்கள்.



காங்கிரஸ்காரர்கள் சொல்லும்போது இதை ரத்து செய்ய வேண்டுமா இல்லை வைக்க வேண்டுமா என்று தெளிவாகச்சொல்லாவிட்டாலும் அவர்கள் ரத்துசெய்ய வேணடுமென்ற கருத்தை கொஞ்சம் மறைமுகமாகச் சொன்னார்கள். அப்போதும் கூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு அம்பிகாபதி அவர்கள் காங்கிரஸ்காரர்கள் இங்கே மட்டும் தான் இருக்கிறார்களா வேறு எந்த மாநிலத்திலும் இல்லையா என்று கேட்டார்கள.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச்சேர்ந்தஅருமை சகோதரர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இதைப் பற்றித் தெளிவாகச் சொல்லும்போது இதிலே பல தவறுகள் நடக்கின்றன. கள்ளச்சாராயம் மூலம் அரசுக்கு வருமானம் குறைந்து விட்டது என்று சொன்னார்கள். கள்ளச் சாராயம் மூலம் வருமானம் குறைந்து விட்டது என்று சொன்னார்களே தவிர மதுவிலக்கு வேண்டுமா வேணடாமா என்று தெளிவாகச் சொல்லவில்லை என்று நான் கருதுகிறேன். (குறுக்கீடு) அது எனக்குத் தெரியாது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: மதுவிலக்கு எங்கே இருக்கிறது என்று கேட்டால அது எனக்குத் தெரியாது என்று மினிஸ்டர் சொன்னார்; ரொம்ப நன்றி.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மதுவிலக்கு இருக்கிறதா இல்லையா என்பது தெரியாது என்று சொல்லும் போது மதுவிலக்கைத் தளர்த்தி இருக்கிறோம் என்பது மட்டும் தான் எனக்குத் தெரியும். அதிலே சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது என்பதையும் அதை நடைமுறைப் படுத்துவதற்கு தீவிர முயற்சிகளை எடுத்துக்கொண்டுவருகிறது என்பதையும் உங்களுக்கு சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

மதுவிலக்கு இன்றைக்குத் தளர்த்தப்பட்டதன் நோக்கம் பற்றி பல்வேறு சந்தர்ப்பங்களிலே தெரிவித்திருக்கிறோம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுகிற போது வருவாய்த் துறை அமைச்சர் எப்போதும் சொல்லுகிற மாதிரி இதற்கும் சொல்வார் என்று சொன்னார்கள். அது மட்டுமல்ல. சில உதாரணங்களையும் காட்டிச் சொன்னார்கள். இன்றைக்கு மதுவிலக்கு நிச்சயம் தேவை. ஆனால் சிலர் மதுவை குடித்து, குடித்து பழக்கப்பட்டுவிட்டார்கள. அவர்களைத் திருத்த முடியவில்லை.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவரைப் பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்களுக்கு ரொம்ப வேண்டியவர்களாக இருந்தாலும் ஆரம்பகாலம் முதலே கட்சிக்காக பல தியாகங்களைச் செய்தவர்களாக

இருந்தாலும் குடித்துவிட்டால் அதை அவர்களால் தாங்கிக் கொள்ள முடியாது. குடிப்பதனால் எப்படித் துன்பப்படுகிறார்கள் தண்டிக்கப்படுகிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். இருந்தாலும் குடிக்கிறார்கள். அதற்காகத்தான் மிகக் கடுமையான சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அதை அமுல்படுத்த வேண்டும், தாய்மார்களை காப்பாற்ற வேண்டும் என்று கொண்டுவந்தார்கள். ஆனால் அது முடியாத காரணத்தால், குடித்து குடித்துப் பழக்கப்பட்டவர்களைத் திருத்த முடியாது என்ற காரணத்தால் சில விதிகள் தளர்த்தப்பட்டிருக்கின்றன.

குடிப்பவர்களைப்பற்றி இங்கே பல கருத்துக்களைச் சொன்னார்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு திரு. அம்பிகாபதி அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு திரு. கிருஷ்ணன் அவர்களும் சொல்லுகிறபோது ஏழை எளிய மக்கள், அடித்தளத்தில் இருக்கிற மக்கள் உள்ளபடியே இந்த மதுவிலக்கை கண்டிப்பாக எடுத்துவிட்டால்தான் நன்மை அடைவார்கள் என்று தெளிவாகச் சொன்னார்கள். ஆனால் நம்முடைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. சித்தன் அவர்கள் பேசுகின்றபோது ஏழை எளியவர்கள் குடிப்பதனால் கெட்டுவிடுவார்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆகவே இந்த இரண்டு கருத்துக்களுக்கும் எவ்வளவு மாறுபாடு இருக்கின்றது என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கேட்டார்கள், நாம் 150 கோடி ரூபாய் வரும் என்று எதிர்பார்த்தோம். இன்றைக்கு அந்த 150 கோடி ரூபாய் பணம் எல்லாம் எங்கே போய்விட்டது, யாரிடம் போய் சேர்ந்துவிட்டது என்றெல்லாம் கேட்டார்கள். அதற்கு நான் பதில் சொல்லுகிறேன். யாரிடத்திலும் அது போகவில்லை. மேலும் 150 கோடி ரூபாய் வரும் என்று நான் சொல்லவில்லை. இந்த 7½ மாதக் காலத்திலே கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய்தான் வந்திருக்கிறது. ஆகவே இந்த 7½ மாதத்திற்கு வந்த பணம் எங்கேயும் போகவில்லை. அது அரசுக்குத்தான் வந்திருக்கின்றது என்பதை மாண்புமிகு சகோதரர் கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். இது அவர்களுக்கு தெரியும் என்றுதான் நான் கருதுகிறேன். அவர் சொன்னபடி வேண்டுமானால் 10, 12 மாதங்களுக்கு பிறகு 140 அல்லது 150 கோடி ரூபாய் அளவுக்கு வருவதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





அடுத்து இந்தக் குடியினால் எவ்வளவு சங்கடங்கள் இருக்கின்றன என்பது எல்லாம் எங்களுக்குப் புரியாமல் இல்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். மேல் நாடுகளில் மதுவை மனிதன் குடிக்கிறான், இங்கே மது மனிதனைக் குடிக்கின்றது என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். ஆனால் நான் ஜாக்கிரதையாகத்தான் சொன்னேன். இதைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னாரா என்று பார்த்து ஜாக்கிரதையாகதான் சொன்னேன்ஆகவேநான் அவர் சொன்னதை அப்படியே சொல்கிறேன் வேண்டுமானால் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை திருப்பிச்சொல்கின்ற போது அதையார் திருப்பிச் சொன்னார்களோ அவர்கள் அண்ணா அவர்களை மறந்துவிட்டுச் சொல்லி இருப்பார்கள் இதற்கு இன்னொரு உதாரணத்தைக் கூட நான் சொல்ல விரும்புகிறேன். எதிர்கட்சிகள் இல்லாத நாடு மூக்காணங்கயிறு இல்லாத மாடு என்று அண்ணா அவர்கள்தான் சொன்னார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குச் தெரியும்.

திரு. அ. ரகுமான்கான் : மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு மன்றத்தினுடைய மாற்றுத் தலைவரவர்களே, குடியினால் விளைகின்ற தீமைகளைப் பற்றி அண்ணா அவர்கள் சொன்னதைப்பற்றி எல்லாம்மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் 1981-82ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் குடிப்பதனால் விளையும் தீமைகளைப் பற்றிப் பிரசாரம் செய்வதை அரசு தீவிரமாக மேற்கொள்ளும் என்றும், திரைப் படங்கள், நாடகங்கள், கலைநிகழ்ச்சிகள், பாடல்கள் போன்றவற்றின் மூலம் மதுவிலக்கு பற்றிய பிரசாரம் செய்வதற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்று சொல்லி இருக்கிறார்களே நிதிநிலை அறிக்கையில். அந்த ஒரு கோடி ரூபாயினை என்ன காரியத்திற்காக பயன்படுத்தி இருக்கிறீர்கள்? ஒதுக்கியது செலவழிக்கப்பட்டிருக்கின்றதா? ஆனால் அந்த அடிப்படையிலே அது செலவழிக்கப்படவில்லை, எந்த விதமான காரியங்களும் செய்யப் படவில்லை. இப்போது அதுபற்றி நமது அமைச்சர் அவர்கள் விளக்கம் தருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாற்றுத் தலைவரவர்களே, ஏன் தளர்த்தினோம் என்பதைப் பற்றி நான் இங்கே சொல்லிக்கொண்டு வருகிறேன். நேற்று எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் இங்கே இரண்டு உதாரணங்களைச் சொன்னார்கள். ஒரு பெண்ணின் கணவனைக் கொலைசெய்துவிட்டு அதற்குப் பிறகு அந்த இளம் பெண்ணைப் பார்த்து அவளைப்போன்ற சுமங்கலி யாரும் இருக்க முடியாது என்று பாராட்டுவதைப் போலவும், ஒருவனுடைய காலை வெட்டிவிட்டு அதற்குப்பிறகு அவன் எவ்வளவு அழகாக நடக்கிறான் என்று சொல்வதை போலவும் இருக்கின்றது என்று சொன்னார்கள். அது நல்ல உதாரணம்தான். காலை வெட்டினால் யார் வெட்டினார்கள் என்பதைக் கண்டுபிடிக்க முடியும்—காலை வெட்டியது யார் என்று

சொல்கின்ற அளவுக்கு—கால்தான் போய்விட்டதே தவிர அவருடைய கண்கள், வாய் எல்லாம் வேலை செய்யும், காது கேட்கும். ஆனால் அந்தக் குடிப் பழக்கம் எப்படிப்பட்டது என்றால் சாதாரணமானதல்ல. ஆகவே குடிக்காமல் இருப்பது மிக மிக நல்லது. குடிப்பது எப்படிப்பட்டது என்றால், கள் சாராயத்தை குடிப்பது எப்படிப்பட்டது என்றால் சாக்கடைத் தண்ணீரைக் குடிப்பது போல்தான். சாக்கடைத் தண்ணீரைக் குடித்தால் என்ன ஆகும்? இறந்து விடுவான். ஆனால் இன்றைக்கு இந்த அரசு தருவது பாதுகாக்கப்பட்ட சாராயத்தை பாதுகாக்கப்பட்ட தண்ணீரைப் போல் இதுவும் கெடுதல் செய்யாது. அதைக் குடிப்பது கூடத் தவறுதான். ஆனால் சாக்கடைத் தண்ணீரைக் குடித்து குடும்பத் தலைவர் இறந்து விட்டால், அக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வழக்கு மன்றத்திற்குக் கூடப் போகமுடியாது. அப்போதும் அவர் மனைவி விதவையாக ஆகிவிடுவாள். அதை ஓரளவிற்குத் தடுப்பதற்குத்தான் இப்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-00)

இன்றைக்கு 25 வயதிற்கு மேற்பட்டவர்கள் மட்டும் தான் குடிக்கலாமென்று சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். எவ்வளவு சட்டங்கள் இருந்தாலும் இதை நிறைவேற்ற வேண்டுமென்பதற்குத்தான் தமிழக அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்கின்ற செய்தியையும் நான் உங்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு இது தவிர பல பதவிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. முன்பெல்லாம் இப்படி இல்லை. சாராயக் கடைகள் இருக்கும். என்ன வரும், என்ன போகும் என்று தெரியாது. இன்றைக்கு மாவட்ட அளவில் தீவிரப்படுத்த வேண்டுமென்பதற்காக, உதவி ஆணையளரை ஆர். டி. ஓ. லெவலில் 22 பேரைப் போட்டு இருக்கிறோம். ஆயத் தீர்வை அதிகாரிகள் 150 பேரைப் போட்டிருக்கிறோம். ஆயத் தீர்வை அதிகாரிகளுக்கு உதவியாளர்களாக 312 பேரைப் போட்டிருக்கிறோம். வடிசாலைகளில் இன்றைக்கு ஆர். டி. ஓ.க்களைப் போட்டிருக்கிறோம். துணை வட்ட ஆட்சியர்களைப் போட்டிருக்கிறோம். சாராயக் கடைகளில் கூட மூவ்மென்ட் ஆபீசரைப் போட்டு இருக்கிறோம். எந்த அளவிற்குக் கண்டிப்புப் படுத்த வேண்டுமோ அந்த அளவிற்கு நடவடிக்கை எடுத்து ஆபீசர்களைப் போட்டிருக்கிறோம்.





சர்க்கரை ஆலைகளில் முதலிலே தாசில்தார்கள் இருந்தார்கள். இன்றைக்கு அங்கேயெல்லாம் உயர்ந்த அதிகாரிகளைப் போட்டிருக்கிறோம். டிஸ்டில்லரிகளில் அதிகாரிகளைப் போட்டிருக்கிறோம். பல இடங்களை சோதனை செய்திருக்கிறோம். அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதெல்லாம் உங்களுக்குத் தெரியும்.

புதிதாகக் கொண்டுவரப்பட்ட " பூட் லெக்கர்ஸ் ஆரிடினன்ஸ் " மூலமாகக் கூட இதைக் கடுமைப்படுத்தி 47 பேரை இன்றைக்குக் கைது செய்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி இங்கே சொல்கிறபோது இன்னும் கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற முறையிலே சொன்னார்கள். அதை நான் பாராட்டுகிறேன். இந்த அரசு அதை ஏற்றுக் கொள்கிறது. மிகக் கடுமையாக நடவடிக்கை எடுக்கிறபோது இப்படியெல்லாம் எடுத்துவிட்டீர்களே என்று நிச்சயமாக அவர் சொல்லமாட்டார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஏனென்றால் இப்படி எல்லாம் நடக்கக் கூடாது என்ற நல்ல நோக்கம் அவருக்கு இருக்கிறது. அரசுக்கு வருமானம் வரவேண்டும்; தவறு நடக்கக் கூடாது; கள்ளச் சாராயம் குடித்து யாரும் இறந்து விடக் கூடாது என்ற எண்ணம் அவருக்கிருக்கிறது.

பல மாநிலங்களிலே கள்ளச் சாராயம் குடித்து பலர் இறந்து விடுகிறார்கள். ஆனால் நம்முடைய மாநிலத்தில 1—1—1981-ல் இருந்து இதுவரையிலும் 5 பேர்தான் இறந்திருக்கிறார்கள். யாருமே இறக்கவில்லை என்று நான் சொல்லவில்லை. குறைந்த எண்ணிக்கை என்றுதான் சொல்கிறேன். இன்னும் குறைக்க அரசு எல்லா விதமான நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். பொது இடங்களிலே எல்லாம் கள்ளு, சாராயக் கடைகள் வைத்து விடுகிறார்கள் என்று சொன்னார்கள். கூடிய வரையிலும் வைக்கக் கூடாது என்றுதான் இந்த அரசு சொல்லியிருக்கிறது. பள்ளிக் கூடங்கள், சந்தைகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், விடுதிகள், வழிபாட்டு இடங்கள் இப்படிப்பட்ட இடங்களிலெல்லாம் அந்த இடங்களிலிருந்து ½ கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால்தான் வைக்கவேண்டுமென்று அரசு சொல்லியிருக்கிறது. அப்படியும் எதிர்பாராமல் சில இடங்களில் வைத்திருந்தால், மாவட்ட ஆட்சித் தலைவர் நேரடியாகப் பார்த்து முடிவு செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு அவருக்கு அதிகாரம் இருக்கிறது. எந்த விதியைப் போட்டாலும் சில சமயங்

களில் ஒரு சில விதி விலக்குகள் தேவைப்படுகின்றன. பூராவும் நாம் ஏற்றுக் கொள்கிறோம் என்று சொல்வதற்கில்லை. அப்படி விதிவிலக்கு அளித்ததில் தவறுகள் இருக்கின்றன என்று எடுத்துக் கொண்டு பார்த்தாலும், அவ்வாறு ஏற்பட்டிருக்கின்ற தவறு கள்ளுக் கடைகளைப் பொறுத்தமட்டில் 4·9 சதவீதம்தான் என்று நான் உங்களுக்குச் சொல்லிக் கொள்வேன்.

விதிவிலக்கு அளிக்கப்பட்டது கள்ளுக் கடைகளுக்கு 4·9 சதவீதம், சாராயக் கடைகளுக்கு 9·1 சதவீதம் இவைகள் எல்லாம் எப்படி ஏற்பட்டிருக்கின்றன என்றால் சென்னை, மதுரை கோவை, சேலம், ஈரோடு போன்றயிடங்களில் ஒரு சில சங்கடங்கள் உள்ளன. அங்கே கடைகள் வைக்கக்கூடாது என்றால் அவை குடியிருப்புப் பகுதிகளுக்குப் போய் விடுகின்றன. சென்னையில் அந்தச் சட்டத்தைத் தளர்த்தாவிட்டால் அவை குடிசைப் பகுதிகளுக்குப் போய் விடுகின்றன, சேரிப் பகுதிகளுக்குப் போய் விடுகின்றன. அப்படி சேரிப்பகுதிகளுக்குப் போகிற நிலை வருகிறபோது அதைத் தடுத்து சிலவற்றைச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டு விடுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எப்படியிருந்தாலும் அதை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் தயாராயிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு மது விலக்கைத் தளர்த்தியது வேண்டத்தகாதது என்றும் வேண்டும் என்றும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. இன்றைக்கு இதனால் எவ்வளவு பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்றால், கள்ளுக் கடைகள் 9,541, ஒவ்வொன்றிலும் நான்கு பேர்கள் வேலை செய்கிறார்கள் என்றால் 38,164 பேர்கள் வேலை செய்கிறார்கள். அதைப் போல் மரம் ஏறுகிறவர்கள் 44,000 பேர்கள். மொத்த சாராயக் கடைகளில் வேலை செய்கிறவர்கள 24,000 பேர்கள் இந்தியாவில் தயார் செய்யும் அயல் நாட்டு மது வகைகளைத் தயார் செய்வதில் 5,000 பேர்கள் வேலை செய்கிறார்கள். சாராயக் கலவையில் 600 பேர்கள். சாராய மொத்த விற்பனையில் 250 பேர்கள். இந்தியாவில் தயாரிக்கப்படுகிற அயல் நாட்டு மதுப்பொருள் மொத்த வியாபாரிகள் 110 பேர்கள். இப்படி 1,08,718 பேர்கள் இதில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லும்போது ஓரளவு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

**திரு. ரா. உமாநாத் :** இப்போது இருக்கிற முறையின்படி எவ்வளவு பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பூர்ணமாக எடுத்துவிட்டால் இன்னும் அதிகம் பேர்களுக்கு வேலை கிடைக்கும் அல்லவா ?



**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாறுபட்ட கருத்து இங்கேயும் இருக்கிறது. பொதுவுடைமைக் கட்சியைச் சார்ந்த இருவர்கள்—நீண்ட நாட்களாக அந்தக் கட்சியிலிருந்து இப்படித்தான் வாதாடிக்கொண்டு வருகிறார்கள். மனதார நம்புகிறார்கள், சொல்கிறார்கள். அவர்கள் மேல் தவறு என்று நான் சொல்லவில்லை. அதுபோல் மற்றக் கட்சிகளிலும், பூர்ணமாக ரத்து செய்ய வேண்டும் என்ற உணர்வுகள் மற்ற எல்லாக் கட்சிகளுக்கும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இல்லை என்றால், கட்சிப் பிரச்னை அல்ல இது. மக்களுக்கு வருகிற கஷ்டங்கள் எவ்வளவு என்பதை ஒவ்வொரு கட்சிக்காரர்களும் எண்ணிப்பார்க்கிறார்கள். அப்படி எண்ணிப்பார்க்கிறபோது அதனால் ஏற்படுகிற கஷ்டங்களை எல்லாம் யோசித்துச் சொல்கிறார்கள் என்பதைத்தான் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு இதைப்பற்றியெல்லாம் உங்களிடம் ஓரளவிற்குத் தெரிவித்தாலும், இன்னும் உங்களிடம் சொல்ல முடியும் என்றாலும் அவைகளைச் சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். மதுவிலக்கினால் எவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன? இதை எப்படியெல்லாம் செய்ய வேண்டும் என்பதைப்பற்றியெல்லாம் இங்கே நீங்கள் எல்லாம் சொல்லியிருக்கிறீர்கள். அவற்றைப்பற்றியெல்லாம் நான் பலமுறை இங்கே தெரிவித்திருக்கிறேன்.

புதிய திட்டம் எப்படிக் கொண்டு வரப்பட்டது, அந்தப் புதுத் திட்டத்தைக் கொண்டுவந்தபோது ஏன் சில மாற்றங்கள் செய்யப்பட்டன என்பதைப் பற்றியெல்லாம் நான் இதற்கு முன்னாலே தெரிவித்திருக்கிறேன். புதுத் திட்டம் கொண்டுவந்தபோது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சாராயக் கலவைச் சாலைகள், சாராய மொத்த விற்பனைகள், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல் நாட்டு மது வகைகள், மொத்த விற்பனையாளர்கள் இவைகளைப்பற்றியெல்லாம் புகார்கள் எழுப்பி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மூன்று மட்டங்கள் மூலமாக ஏராளமாக இலாபம் கிடைக்க வழிவகை செய்யவும், அரசாங்கம் தனது விருப்பப்படி உரிமைகளை வழங்கி உள்ளதாகவும் இங்கே குற்றஞ் சாட்டினார்கள். ஆனால், அந்த அமைப்பை இப்படி உருவாக்குவதற்கு என்ன காரணம் என்பதை இந்தச் சட்ட முன்வடிவில் பேசுகிறபோது நான் இங்கே தெரிவித்திருக்கிறேன். பேசிவிட்டேன். அதைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று நான் சொல்லக் கூடாது. ஆகவே, சிலவற்றை மட்டும் இங்கே சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நோக்கத்தை விளக்க வேண்டியது அவசியமாகிறது. 1971—74-இல் என்ன நடந்தது என்பதையும் பார்க்கவேண்டியுள்ளது. 1971-ல் தமிழ்நாட்டில் நெல்லிக்குப்பத்தில் இ.ஐ.டி. பாரி வடிசாலை, திருச்சியில் உள்ள திருச்சி டிஸ்டிலர்ஸ் அன்ட் கெமிக்கல்ஸ் என்ற இரண்டு வடிசாலைகளில் மட்டும்தான் சாராயம் உற்பத்தி செய்தார்கள் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

[முற்பகல் 11–10]

சாராயத்தை அவர்கள் உற்பத்தி செய்தார்கள். அங்கேதான் கரும்புச் சக்கைகளிலே இருந்து, சாராயத்தை எடுத்தார்கள்; உற்பத்தி செய்தார்கள். அதற்குப் பிறகு அவர்கள்தான் அதை ஒல்சேலிலே விற்றார்கள். இப்படி வருகின்றபோது, அதிலே சில சங்கடங்கள் எல்லாம் ஏற்படுகிறது. தவறுகள் ஏற்படுகிறது. அந்தத் தவறுகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதால்தான், இன்றைக்கு வடிசாலைகள், டிஸ்டிலரிகள், ஒல்சேல்கள் இவைகள் எல்லாம் ஒரே இடத்தில் இருக்கக்கூடாது. அந்தச் சாராயத்தைத் தயாரிக்க வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறோம். அப்படித் தயாரிக்கப்படுகின்ற சாராயம் கரும்புச் சக்கைகளிலே இருந்து தயாரிக்கப்படுகிறது. எவ்வளவு சக்கைகளைக் கொடுத்திருக்கிறார்கள், எவ்வளவு சக்கைகளிலே இருந்து சாராயம் தயாரிக்கப்பட்டது என்ற கணக்குகளையெல்லாம், அதிலே தவறுகள் நடந்தால் கண்டுபிடிக்கப்பட்டு வருகிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்குப் பிறகு 1972 மே மாதத்தில், திருவாளர் அரவிந்த் டிஸ்டிலரிக்குச் சாராயம் தயாரிக்க அனுமதி அளிக்கப்பட்டது. 1972-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1-ஆம் நாள் முதல் திருவாளர் ஓரியன் கெமிகல் வடிசாலைக்கு இந்த அதிகாரம் வழங்கப்பட்டது. அதேபோல், மற்றவர்களுக்கும் தொடர்ந்து, கொடுக்கப்பட்டு வந்தாலும், 1971ஆம் ஆண்டு முதல் வடிசாலைகளிலே எரிசாராயம் உற்பத்தி செய்யும் மொத்த வியாபாரம் செய்வது இயங்கி வந்தன. அதிலே இருக்கின்ற சில சங்கடங்களை மாற்றியமைக்க வேண்டும் என்பதற்காகத்தான், இன்றைக்கு அதிலே மாவட்டந்தோறும் பிளென்டிங் யூனிட், ஒல்சேல் வியாபாரம் டிஸ்ட்ரிபியூஷன் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அதை டிஸ்ட்ரிபியூட் செய்துகொள்ள வேண்டும். யாரும் கலவை வைத்துக்கொள்ளக்கூடாது என்பதையெல்லாம் மனதிலே வைத்துதான், இதையெல்லாம் கொண்டு வந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி கொண்டு வந்திருப்பதை, நீங்கள் கற்பனையாக கொண்டு வந்திருப்பதாகச் சொல்லக்கூடும். இது கற்பனை அல்ல, நடைமுறையிலே இருக்கிறது. தவறு இருந்தால், மீண்டும் அந்தத் தவறு வந்துவிடாமல் காப்பாற்றுகின்ற, அதைச் செய்ய வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். நீங்கள் குற்றம் சாட்டுகின்றபோது, அந்தக் குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டு, அதற்கு விளக்கம் தருவது இந்த அரசினுடைய கடமையாக இருக்கிறது. அதற்கு முன்னாலே அவைகளைச் சரிப்படுத்தி, நிதானப்படுத்திச் சொல்வது இந்த அரசினுடைய கடமை என்பதும் உங்களுக்குத் தெரியும்.





1971–74-ஆம் ஆண்டிலே மதுவிலக்குக் கொள்கை நிறுத்தி வைக்கப்பட்டபோது, வடிசாலைகள் தவறான முறையிலே இயங்கி வந்தன என்பதைச் சுட்டிக்காட்டி, ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஆர். சதாசிவம் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழு 1977-ஆம் ஆண்டு தனது அறிக்கையிலே சுட்டிக்காட்டியுள்ளது. அதை உங்கள் கவனத்திற்கு எடுத்துக்காட்டுகிறேன். அவர்கள் அதிலே என்ன சொல்லியிருக்கிறார்கள் ?

One of the causes that led to the poor enforcement was the activities of some distilleries and the apparent immunity they had enjoyed because of patronage from above. That such a charge is based on truth and fact is reflected in the irregularities brought to notice after investigations.

இப்படியெல்லாம் சொல்லுகிறபோது, மீண்டும் இப்படி தவறுகள் வராமல் தடுக்க வேண்டும், காப்பாற்ற வேண்டும் மாற்றம் செய்வதற்கு வழி வகுத்து விட்டால், குற்றம் செய்கிறார்கள். மிக நல்லவர்களும் இருக்கிறார்கள் ; உண்மையிலே நல்லவர்கள்தான். அவர்களைக் கெடுக்க வேண்டுமென்றால், ஆசாபாசங்களை ஊட்டி—உதாரணம் சொல்ல வேண்டுமானால், ஓரிடத்திலே ஓயாமல் பணத்தை வைத்து, அவன் அதை ஓயாமல் பார்த்துக் கொண்டே இருந்தால், எப்போதாவது ஒரு தரம் அதை எடுத்துக்கொண்டு போனால் என்ன என்ற நிலைமை வரும். திருடுவதற்கு வழி செய்து விட்டால், அதிலே இருக்கின்ற எல்லாவிதமான மார்க்கங்களையும் ஒன்றாக வைத்துச் செய்கிறார்கள் இதைத் தடுக்க வேண்டியது அரசினுடைய கடமை என்பது உங்களுக்குத் தெரியும். விசுவாமித்திரரே ஏமாந்து போனார் என்பதும் உங்களுக்குத் தெரியும். அத்தகைய வாய்ப்புக்களை ஏற்படுத்திவிடக்கூடாது என்பதால், அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு பெண்ணை விசுவாமித்திரர் ஏமாற்றினாரே தவிர அவர் ஏமாறவில்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய உரையிலே சில குற்றச்சாட்டுக்களை கூறியிருக்கிறார்கள். அதை அப்படியே விட்டு விட்டால் இந்த அரசு ஏற்றுக்கொண்டதாக ஆகும். எதிர்க்கட்சித் தலைவரவர்கள் யாராக இருந்தாலும் அரசு செய்த தவறை சுட்டிக்காட்டுவது, என்பதில் இதுவும் ஒன்று. தவறு என்பது செய்யாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவே சொல்லி நிறுத்தி விடுவது. தவறு வந்து விட்

டால் மக்களுக்கு அதனால் கெடுதல் வந்து விடுமே என்பது ; தவறு செய்ய விட்டுவிட்டு இறுதியிலே மக்களிடத்திலே கூறுவது ஒன்று, இங்கே சொல்லப்பட்ட தவறுகள் எல்லாம் எப்படிப் பட்டவை என்பதை எல்லாம் நான் சொல்லிக்கொண்டே வருகிறேன். இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் நன்றாக தெளிவு பெற்றவர்கள். நான் சொல்கிற பொழுதே இந்தத் தவறுகள் எப்படிப்பட்டவை என்பதை நான் சொல்லாமலே நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் அதை முன்பீடிகையாக சொன்னேனே தவிர வேறு ஒன்றுமில்லை.

தடை காரணமாக இரண்டு மாவட்டங்களிலே நிறுத்தப்பட்டதாகச் சொல்லப்பட்டது. ஒன்று நெல்லை மாவட்டம், இன்னொன்று பெரியார் மாவட்டம். ஆனால், இது சரியில்லை. அதுமட்டுமல்ல, அவர்கள் சொன்னார்கள், சாராய மொத்த விற்பனையிலே 13 மாவட்டங்களுக்கு மொத்த விற்பனையாளர்கள் நியமிக்கப்பட்டு, எஞ்சியுள்ள மூன்று மாவட்டங்களிலே 2 மாவட்டங்களுக்கு உயர்நீதிமன்றத் தடையின் காரணமாக மொத்த விற்பனையாளர் நியமிக்கப்படவில்லை என்று கூறப்பட்டது. அதாவது இரண்டு மாவட்டங்கள் சேலம், இராமநாதபுரம் ஆகும். சேலத்தைப் பொறுத்தவரை உயர்நீதி மன்றத் தடை ஆணை தொடர்ந்து இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தை பொறுத்தவரையில் உயர்நீதிமன்றத் தீர்ப்பில் அரசு தடையை விலக்கியது. உயர்நீதிமன்றத் தீர்ப்பு அரசுக்கு 1982-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 4-ஆம் நாள் அன்று வந்தது. அந்தத் தீர்ப்பை ஒத்துக் கொண்டு அரசு 1982-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 6-ஆம் நாள் அன்று முன் ஒப்புதல் அளித்தது. கொளகை விளக்க குறிப்பைத்தயாரித்து அளிக்கும்போது தகவல்கள் இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரை தடை ஆணை தொடர்ந்து இருப்பதாலே என்றும், சேலத்திலே இன்றைக்கு தொடர்ந்து தடை ஆணை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு).

டாக்டர் மு. கருணாநிதி : மாற்றுத் தலைவர் அவர்களே, நேற்று இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பை அவையிலே வைத்து அமைச்சர் அவர்கள் தான் படித்ததாகக் கருதிக் கொள்ளும்படியும் அப்படியே ஏற்றுக் கொள்ளும்படியும் கேட்டுக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டார். அப்போது இந்தத் திருத்தத்தை அவர் ஏன் செய்யவில்லை என்பதுதான் நான் நேற்று எழுப்பிய வினா.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாற்றுத் தலைவர் அவர்களே, அந்தத் திருத்தத்தை நான் சொல்லாவிட்டாலும் அதற்குரிய திருத்தத்தை நான் சொன்னதாக இப்போது ஏற்றுக் கொள்ளுங்கள்.

நெல்லை மாவட்டம், பெரியார் மாவட்டம் இவற்றைப் பொறுத்தவரையில் உயர்நீதிமன்ற வழக்குகளைச் சுட்டிக்



காட்டி அவற்றின்மீது உள்ள தடை ஆணைகளைக் குறிப்பிட்டு கொள்கை விளக்கக் குறிப்பில் கூறியிருப்பது திசை திருப்புவதாகும் என்று சொன்னார்கள். நான் குறிப்பிடுகிறபோது நான் சொன்ன மாவட்டம் வேறு ; அவர்கள் தெரிவிப்பது பெரியார் மாவட்டம், பெயரையும் சொன்னார்கள் வாடியப்பன் என்று ; அவர்கள் பெயரை எல்லாம் குறிப்பிட்டுச் சொல்லும்போது சரியாகத்தான் சொல்லியிருக்க வேண்டும். நான் திசை திருப்புவதாகச் சொன்னார்கள். நான் திசை திருப்பவில்லை. பெரியார் மாவட்டத்திற்கும், நெல்லை மாவட்டத்திற்கும் தடையிருக்கிறது என்று நான் சொல்லவில்லை. தடை இருப்பதாகக் கேட்டு வாடியப்பன் வாடியே விட்டார், அதனால் வாடியப்பன் என்று வந்துவிட்டதோ என்று இலக்கிய நயத்தோடு பேசினார்கள். எனக்கு இலக்கிய நயத்தோடு பேச முடிவதில்லை. இருந்தாலும் சொல்ல வேண்டியதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் திசை திருப்பவில்லை ; அவர்கள் என்னை திசை திருப்பியதாகவும் சொல்லவில்லை ; ஆனால், அவர் சொன்னது உண்மைக்கு மாறான ஒன்று என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11–20)

கொள்கை விளக்கக் குறிப்பில் இருப்பது அந்த இரண்டு மாவட்டமும் அல்ல. அதிலே குறிப்பிட்டிருப்பது நான் முன்பே விளக்கியதைப்போல் சேலமும், இராமநாதபுரம் மாவட்டமும் என்பதை நான் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவிலே தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவுக்கு 14 பேர்களுக்கு உரிமம் கொடுத்தார்கள். அதிலே சென்னைக்கு சுப்பராம ரெட்டி. மதுரைக்கு கிருஷ்ண மோகன், சுப்பராம ரெட்டியின் மைத்துனர். வட ஆற்காடுக்கு கோபால கிருஷ்ணய்யா, சுப்பராம ரெட்டியினுடைய மானேஜர். தர்மபுரிக்கு பி. ஸ்ரீதர் பிரசாத் ரெட்டி, சுப்பராம ரெட்டியின் பினாமி என்று எல்லாம் சொன்னார்கள். பினாமிகளா இல்லையா என்பதுபற்றி அவர்கள் சொல்கிறபோது ஒன்றைச் சொன்னார்கள். வருவாய்த் துறை அமைச்சர் பினாமி என்றாலே எரிந்து விழுவார்கள் என்று சொன்னார்கள். நான் அப்படி வைத்திருப்பவர்களைக் கண்ணாலே கண்டால் தானே எரிந்து விழுவதற்கு. ரொம்ப பேர் வைத்திருக்கிறார்கள் நிலங்கள். ஆனால் அவற்றை நான் பார்த்தது இல்லை, எரிந்து விழுகிற அளவுக்கு என் கிட்டவே வரவில்லை. பினாமி கூடாது என்பதில் எல்லோருக்கும் மாறுபட்ட கருத்து இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விதிகளின்கீழ் விண்ணப்பதாரர்கள் தகுதிபற்றி மதுவிலக்குக் கமிஷனர் பரிசீலிக்கிறார்கள். அந்த அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் மது தயாரிக்கும் தகுதியின் அடிப்படையை விதிமுறைகளின்படி நிர்ணயித்த பின்னர் அரசின் முன் ஒப்புதல் வாங்க தன்னுடைய பரிந்துரையை அனுப்புகிறார்கள்.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1992 மார்ச் 10

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சுட்டிக் காட்டிய மதுரை வட ஆற்காடு, தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் விற்பனையாளர்களுடைய கையெழுத்தோடு வாக்குமூலத்தின் அடிப்படையிலே அவர்கள் சுப்பராமரெட்டி அல்லது வேறு யாருடைய பினாமி அல்ல என்று முன் ஒப்புதல் வாங்கி சிபாரிசு செய்து இருக்கிறார்கள். அது மட்டுமல்ல, தகுதி நிர்ணயிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் தாங்கள் யாருடைய பினாமியாகவும் விண்ணப்பித்துக் கொள்ளவில்லை என்ற அடிப்படையில்தான் விதியின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட தகுதி பெற்றவர்கள் ஆகிறார்கள். ஆகவே உரிமம் வழங்கப்பட்ட வட ஆற்காடு, மதுரை, தர்மபுரி மொத்த விற்பனையாளர்கள் சுப்பராம ரெட்டியின் பினாமிகள் என்று கூறுவது முறையற்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு வேண்டுமானால் அவர்கள் பினாமியா அல்லவா என்று தெரியாமல் இருக்கலாம். நான் சொல்வது எப்படி முறையற்றது என்று அமைச்சர் கூறுகிறார் என்று புரியவில்லை. நான் இப்போதும் சொல்கிறேன், அவர்கள் சுப்பராம ரெட்டியினுடைய பினாமிகள்தான்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பினாமி என்று கூறுவது முற்றிலும் உண்மைக்கு மாறானது என்று நான் கருதுகிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி :** மாற்றுத் தலைவர் அவர்களே, வருமான வரி இலாகாவினுடைய சோதனையிலே தஞ்சையிலே அளிக்கப்பட்ட ஒரு உரிமம் பினாமிக்குத்தான் தரப்பட்டிருக்கிறது. 2 சதவீதம் ஷேர் உள்ள ஒருவருக்குத் தரப்பட்டிருக்கிறது. அவருக்குத் தன்னுடைய பார்ட்னர்ஸ் யார் என்றே கூடத்தெரியவில்லை என்று வருமான வரி இலாகாவால் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது மாத்திரமல்ல, யார் யாருக்குத் தரவேண்டுமென்ற விதிமுறைகளிலே கூட

The matters to be taken into consideration by the Commissioner in granting the privilege. While granting the privilege of manufacturing arrack the Commissioner shall have regard to the following matters: (a) the suitablity of the applicant for the grant of privilege (*b*) whether the applicant is a person who will abide by the provisions of the Act and the rules made thereunder (c) whether the application is made *bona fide* on behalf of the applicant himself or any benami of any other person.

இப்படியெல்லாம் ஆராய்ந்து கமிஷனர் முடிவு எடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டு இருக்கின்ற நேரத்திலே எப்படி பினாமிகள் இடம் பெற்றார்கள் என்பதுதான் என்னுடைய கேள்வி.



1982 மார்ச் 10]

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை விட வயதில் மிகக் குறைந்தவன், வயதில் இளையவன். ஆனால் துடுக்குத்தனமாக அவசரமாக நான் சொல்லக் கூடாது அவர் சொல்வது சரி நான் இந்தப் புத்தகத்தைக் கையிலே வைத்திருக்கிறேன். நீங்கள் படித்திருப்பீர்கள். தஞ்சை மாவட்டத்தைப்பற்றிச் சொன்னபோது— நான் முடித்த பிறகு கேட்கட்டும், இடையிடையே கேட்கிறார்கள்— பாவம் கேட்டால் நல்லதுதான், நான் வேண்டாமென்று சொல்லவில்லை. அவர்கள் இங்கே படித்திருக்கிறார்கள். நான் மீண்டும அதைப் படித்துக் காண்பிக்க வேண்டியதில்லை ?

HON. THIRU S. D. SOMASUNDARAM : The suiltability of the applicant for the grant of privilege, whether the applicant is a person who will abide by the provisions of the Act and the Rules made thereunder, whether the application is made *bonafide* on behalf of the applicant himself or in benami of any other person.

தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். உங்களுக்குச் சொல்ல வேண்டுமானால், இதிலே தவறு நடக்க வேண்டுமென்று முன் கூட்டியே எண்ணியிருந்தால், இப்படிப்பட்ட விதிமுறைகளையெல்லாம் போடாமல், இதை அச்சடித்து ஆயிரக்கணக்கிலே தமிழ்நாடு பூராவும் கொடுக்காமல், இதைப் பேப்பரிலே விளம்பரம் செய்யாமல் கொடுத்து விட்டிருக்க முடியும். ஆனால், இப்படி விதிமுறைகள் போட்டதன் அரசினுடைய நோக்கமே முதல்வரவர்கள் சொல்லுகின்றபொழுது சொன்னார்கள். இதற்கு முன்னால் தவறு நடந்திருக்கிறது என்று நீதிபதி சதாசிவம் சொல்லியிருக்கிறார்களே, அப்படி நடக்காமல் இருப்பதற்கு என்ன வழிவகைகள் என்று, சட்டத்துறை செயலாளர், சட்ட அமைச்சர், உள்துறை செயலாளர், மற்றும் சம்பந்தப்பட்ட செயலாளர்களை வைத்து இதற்கு விதிமுறைகளைப் போட்டு, அந்த விதிமுறைகளை மீறி யார் நடந்தாலும் சரி, அல்லது எந்த அதிகாரி கொடுத்தாலும் சரி, நீதிமன்றம் போவதற்கு அதிலே வழிவகை செய்ய வேண்டுமென்று அவர்களுடைய விருப்பத்தின் பேரிலேதான் இப்படி விதிமுறைகளைப் போட்டிருக்கிறோம். இப்படி விதிமுறைகளைப் போட்டதற்குப் பிறகுதான் இது கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த விதிமுறைகள் இப்படியிருக்கின்றபொழுது அவர்கள் நன்றாகச் சொன்னார்கள். அதிலே பூரண அதிகாரம் யாருக்கு இருக்கிறது என்றால் கமிஷனருக்குத்தான் இருக்கிறது. அவர்தான் இதைச் செலக்ட் செய்ய வேண்டும். அவரிடத்தில் எழுதி வாங்கிக் கொள்வார்கள் ; போனஃபைடா இல்லையா என்று விசாரிப்பார்கள். பினாமிதாரர்கள் இருக்கிறார்களா இல்லையா என்பதை அவர்கள் ஆராய்ந்து பிறகுதான் அதை அரசுக்கு சிபார்சு செய்கிறார்கள் என்பதையும் உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1982 மார்ச் 10

**டாக்டர் மு. கருணாநிதி :** ஆனால் கமிஷனர் போடுகின்ற ஒவ்வொரு உத்தரவிலும் prior approval of the Government என்று ஏன் எழுதுகிறார்கள் ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** நான் முதலிலே சொன்னபடி அந்த இடத்திற்கு வருவதற்காக மார்க் செய்து வைத்திருக்கிறேன். அதை எப்பொழுது சொல்ல வேண்டுமோ அப்பொழுது சொல்ல வேண்டும். முன் கூட்டியே சொல்ல வேண்டுமென்று சொல்கிறார்கள் நான் அதற்குப் பதில் சொல்கிறேன்.

**செங்கற்பட்டு எம். விநாயகம் :** கோவை டி. எம். யூசப், திருச்சி சுப்பையா செட்டியார், நீலகிரி கிருஷ்ணமூர்த்தி, தஞ்சை உஸ்மான் அலி, தென் ஆற்காடு ரத்தினவேலு, இந்த ஆறு பேர்களும் கோட்டேஸ் குரூப்பைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லி இது கோடேஸ் பினாமி என்று எதிர்க்கட்சித் தலைவரவர்கள் தெரிவித்தார்கள்.

மேலே கூறப்பட்டது போல ஆணையாளர் செய்த விசாரணையில் ஆவணங்களை விண்ணப்பதாரர்கள் கொடுத்த கையொப்பமிட்ட வாக்கு மூலங்கள் இவற்றிலிருந்து செங்கல்பட்டு, கோவை, திருச்சி, நீலகிரி, தஞ்சை தென்னாற்காடு மாவட்டம் ஐ எம். எப். எஸ். மொத்த விற்பனைக்குத் தகுதி நியமிக்கப்பட்ட விற்பனையாளர்கள் கோடேஸ் பினாமி அல்ல என்பது தெளிவாகிறது. ஆவணத்தின்படி இந்தக் குற்றச்சாட்டுக்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை. விதிமுறைகளின்படி அவர்கள் யாருடைய பினாமியாக இருக்கக்கூடாது.

நம்முடைய விதிமுறைகள் என்று முதலிலேயே படித்துக் காட்டியிருக்கிறேன். தென்னார்க்காட்டைப் பொறுத்தவரையிலும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் ரத்தினவேலு என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தப் பெயருக்கு உரிமை ஒன்றும் வழங்கப்படவில்லை. பெயரிலே மாற்றம் இருந்தாலும் ஒன்றுமில்லை. தென்னார்க்காடு மாவட்டத்திலே உரிமை வழங்கப்பட்டவர் பெயர் ராமானந்தவேலு

இங்கே தஞ்சை மாவட்டத்தைப் பற்றிச் சொல்கிறபொழுது மொத்த விற்பனை உரிமை உஸ்மான் அலி என்பவருக்குக் கொடுக்கப்பட்டது பற்றிப் புகார் சொன்னார்கள்.



1982 மார்ச் 10] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஆணையாளர் 1981 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 3 ஆம் நாளிட்ட ஆணையில் தெளிவாக உஸ்மான் அலி அவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான காரணங்களை விளக்கியுள்ளார்கள். ஆணையாளர் ஏ. ஆர். அண்டோனி ராஜ், ஏ. உஸ்மான் அலி, இவர்களை ஒப்பிட்டு தனது அறிக்கையில் கூறியிருக்கிறார்கள்.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த அறிக்கைகளையெல்லாம் இங்கே படித்தார்கள். அதில் ஒன்றும் இரகசியம் இல்லை. கமிஷனர் அவர்கள் உத்தரவு போடுகிறபொழுது ஒவ்வொரு அப்ளிகேஷனையும் தனித் தனியாக எடுத்து அதனுடைய மெரிட், டிமெரிட், போனபைடா அல்லவா, ஃபைனான்ஷியல் ஸ்டெபிலிட்டி இவைகளையெல்லாம் பார்த்து அதற்குள்ள எல்லா விளக்கங்களையும் எழுதி அதைத் தேர்ந்தெடுக்கிறார்கள் அல்லது தள்ளுகிறார்கள்.

(முற்பகல் 11–30)

**டாக்டர் மு. கருணாநிதி ::** உஸ்மான் அலி, கோபால கிருஷ்ணா இரண்டு பேர் மனு செய்கிறார்கள். ஆனால், மனுவிலே உஸ்மான் அலி மாத்திரம்தான் கையெழுத்து போட்டிருக்கிறார். கமிஷனர் உத்தரவில் கோபால கிருஷ்ணா அதிலே கையெழுத்து போடாவிட்டாலுங்கூட உஸ்மான் அலிக்குத் தரலாம் என்று சொல்கிறார்கள், காரணம்,

prior approval of government

அதற்கு கவர்ன்மென்ட்டினுடைய பிரையர் அப்ரூவல் இருக்கிற காரணத்தால் என்று குறிப்பிடுகிறார். அது மாத்திரமல்ல. உஸ்மான் அலி அவர்கள் வியாபாரம் செய்கிறவர்தான். அதைப் போலத்தான் அந்தோணி ராஜூம் மற்றொரு வியாபாரம் செய்கிறவர். அந்தோணி ராஜுக்கு, மற்றொரு வியாபாரத்திலே ஈடுபட்டிருக்கிறார் என்று காரணம் காட்டி மறுத்து விட்டு, தங்க பஸ்பம் புகையிலை வியாபாரத்திலே ஈடுபட்டிருக்கிற உஸ்மான் அலிக்குத் தர வேண்டிய அவசியம் என்ன ?

அது மாத்திரமல்ல. கும்பகோணத்தில் ஒரு அக்ரகாரத்திலே அவருடைய அந்த பாக்டரியை வைக்கப் போவதை எதிர்த்து, அக்ரகாரத்திலே உள்ளவர்கள் 100 பேருக்கு மேற்பட்டவர்கள் கையெழுத்துப் போட்டு அதை மறுத்துங் கூட அந்த இடத்திலே அவ்வளவு பிடிவாதமாக உஸ்மான் அலிக்குத் தரப்பட்ட காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, அவர்கள் இங்கே இரண்டு பிரச்னைகளைச் சொல்கிறார்கள். ஒரு பிரச்னை, இடம் கொடுப்பதிலே, அந்த இடத்திலே ஏன் கொடுத்தீர்கள், என்பது; பல பேர்கள் மறுத்தார்கள் என்றார்கள். அப்படி மறுக்கிறபொழுது, முறைப்படி பொதுமக்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தால், அதை எப்பொழுது வேண்டுமானாலும் மாற்றிக்கொள்ளலாம், அது மிகச் சாதாரண பிரச்னை; அதிலே மிகக் கஷ்டம் இல்லை.

நேற்று அவர்கள் சொல்கிறபொழுது ஒன்று சொன்னார்கள்.

Antony Raj is doing business in mopeds, scooters etc.

It will not be possible for him to pay full attention to the wholesale liquor business

என்று நம்முடைய கமிஷனர் அவர்கள் உத்தரவு போட்டிருக்கிறார்கள் என்று தெரிவித்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, நான் உங்களுக்குத் தெரிவித்தால் தவறாகக் கருதமாட்டீர்கள்—அடுத்த வரியில் வருகிறபொழுது நான் சொல்கிறேன்.

He is solvent to the tune of Rs. 2 lakhs only.

இரண்டாவது வரியைப் படிக்க வேண்டும். அதாவது, சொல்கிறபொழுது, ஒவ்வொன்றாகச் சொல்வார்கள். அப்ளிக்கேஷன் வருகிறது, சூட்டபிலிட்டி இருக்கிறது, அப்ளிக்கேஷன் இன் ஆர்டர் என்று சொன்னார் என்று சொன்னால், எல்லா அப்ளிகேஷன்களும் ஆர்டர்தான். அதில் ஒன்றுதான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அதற்கு முன் ஒவ்வொன்றாக, மெரிட்ஸ், டிமெரிட்ஸ் கவனித்திருக்கிறார்கள் நம்முடைய கமிஷனர் அவர்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அவை பூராவற்றையும் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் விவர்கள் படித்திருப்பார்கள். படித்திருந்தாலும், விவைகள் எல்லாவற்றையும் சொல்லியிருக்க மாட்டார்கள் என்று நான் எண்ணுகிறேன்.

He is solvent to the tune of Rs. 2 lakhs only as per solvency certificate produced by him.

என்று போட்டார்கள்.

Also there are better qualified applicants in the field.

என்று அதிலே சொல்லியிருக்கிறார்கள்.

I therefore reject his application on the ground that he is the| not|suitable person for the grant of privilege.





அப்ளிகேஷன் இருக்கிற காரணத்தாலே, அப்படி பணம் இருக்கிறதா, எவ்வளவு பணம் இருக்கிறது? வியாபாரம் நடத்த முடியுமா என்பதை அவர் ஆராய்கிறார். அதற்குப் பிறகு அவர் சொல்கிறார்.

Thiru A. Usman Ali has produced solvency certificate for Rs. 5 lakhs from Tahsildar, Kumbakonam. Besides he has also sent a bank guarantee for Rs. lakhs for him from the State Bank of India, Kumbakonam. He has stated before me that he is going to the business independently. The buildings selected by him is suitable for the location of the wholesale depot. I therefore, consider, among the five applications, that Thiru Usman Ali is the suitable person for the grant of privilege, having suitable buildings for location of wholesale depot for Indian made foreign liquor and also financially sound.

இப்பொழுது இந்த இரண்டையும் சொல்லும்போது நீங்கள் தெரிந்துகொண்டிருப்பீர்கள். நான் உங்களுக்குத் தெரிவிக்கிறேன் ஆணையில், ஆணையாளர் அளித்துள்ள காரணங்கள் சரியானது என்பது நன்கு புலனாகும். மேலும், உரிமை தரப்பட வேண்டுமென்று சர்க்காரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிற காரணத்தால், பிரையர் அப்ரூவல், ஒப்புதல் அளித்துவிட்ட காரணத்தால், தரப்படுகிறது, என்று எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்கள். ஆனால் உண்மை அது அல்ல உள்ள நிலைமைகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது. பிரையர் அப்ரூவல் என்பது, கமிஷனர் அவர்கள் இவைகளை எல்லாம் ஆராய்ந்து ஒரு அப்ளிகேஷனை, ஒரு மனுதாரரைத் தேர்ந்தெடுக்கலாம்.

தேர்ந்தெடுக்கப்படுவதற்கு வேண்டிய விளக்கங்கள் அவர் எழுதி அனுப்பினாலும் அந்தக் காரணங்களை அரசு ஏற்றுக்கொள்கிறது என்று வைத்துக்கொள்வோம். இதை பூராவும் அவர்கள் படித்து இருந்தார்கள் என்றால் ஏன் அரசு முன் அனுமதி கொடுத்துவிட்டது, என்று எதிர் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லமாட்டார்கள். சட்டப்படி கமிஷனருக்கு அரசு அதிகாரம் கொடுத்திருக்கிறது அவர்கள் தேர்ந்தெடுத்துவிட்டு எல்லா அப்ளிகேஷனையும் ஒன்றாக அனுப்பி அவர்களில் இன்னின்ன காரணத்திற்காக இன்னின்னாரை தேர்ந்தெடுக்கிறேன். இன்னின்ன காரணத்திற்காக இன்னின்னாரைத் தள்ளிவிடுகிறேன் என்று சொல்லி, இதை அரசினுடைய முன்அனுமதிக்கு அனுப்புகிறார்—அரசினுடைய அப்ரூவலுக்கு, நாட் ஆர்டர். அரசு ஆர்டர் போட முடியாது. அரசு அப்பாயின்ட் பண்ண முடியாது. அப்பாயின்ட் பண்ணிவிட்டோம் என்று கமிஷனர் சொல்லவில்லை. ஆர்டர் போட்டு விட்டோம் என்று சொல்லவில்லை. அப்ரூவல் கொடுத்திருக்கிறார்கள் என்றால் அதை கமிஷனர், சொல்லி இருக்கிறார்கள். இது விதிமுறையிலே இருக்கிறது. இது முதலிலேயே விளக்கப்பட்டிருக்கின்றது........

டாக்டர் மு. கருணாநிதி : In the G.O. eighth cited the Government have accorded prior approval for the grant of privilege in favour of the applicant, Thiru A. Usman Ali, as required in the proviso.

என்று இருக்கிறது.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** அளதத்தான் தெரிவிக்கிறேன். அப்ரூவல். எப்படி அப்ரூவல் என்றால் இந்த கமிஷனர் யாரை வேண்டுமானாலும் அவர்களை இந்தச் சட்ட விதிக்கு உட்பட்டு அவர் தேர்ந்தெடுக்கலாம். தேர்ந்தெடுத்து அரசுக்கு அனுப்பலாம். அரசு அவர் அனுப்பியதை ஏற்றுக் கொள்ளலாம் அல்லது ஏற்றுக் கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் அரசுக்கு எந்த அதிகாரமும் இல்லை. நீங்கள் இன்னாரைப் போடுங்கள் என்று சொல்லுவதற்கு அதிகாரம் இல்லை. உயர்நீதிமன்றம் கூட அதை ஏற்றுக்கொண்டு இருக்கின்றது. பிரையர் அப்ரூவல் என்பது கவர்ன்மெண்டுக்கு தேர்ந்தெடுத்தது சரி என்றுசொல்லலாம். அல்லது இல்லை என்றுசொல்லலாம். தவிர, 'ஏ'-ஐ போட முடியும் இல்லை 'பி'-ஐப் போட முடியாது என்று சொல்ல அரசரல் முடியாது, சட்ட விதிகளில் இடம் இல்லை.

**டாக்டர் மு. கருணாநிதி :** மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த உஸ்மான் அலிக்கும், அந்தோணிராஜீக்கும் உள்ள வித்தியாசங்களை அமைச்சர் படித்துக் காட்டி, இதிலே சிறந்தவராக கருதியவர் உஸ்மான் அலி என்ற வாதத்தை எடுத்து வைத்தார், அதற்கு ஏதோ தாசில்தார் கொடுத்த சால்வன்சி சர்டிபிகேட்டைக் காட்டினார். உஸ்கமான் அலியைப் பற்றி கமிஷனர் எழுதுவது.

The application is in order except for the fact that Thiru Gopalakrishnayya has not signed the application

இதுவே இதிலே இருக்கின்ற குறைபாடு அல்லவா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

The application is in order except for the fact that Thiru Gopalakrishnayya has not signed the application

உஸ்மான் அலியினுடைய அப்ளிகேஷனில் கோபாலகிருஷ்ணன் என்று இன்னொரு பார்ட்னர் கையெழுத்து இடவில்லை என்று சொல்லுகிறார்கள். மறுபடியும்

He has categorically stated that he has proposed to run wholesale business only in his name and not in partnership with Gopalakrishnaya who has not signed the application and who has not appeared for any inquiry.





என்குயரிக்கு வராதவர். அவர் அதிலே பார்ட்னர் என்று குறிப்பிடப்பட்டு இருந்தாலும், நான்தான் நடத்தப்போகிறேன் என்று உஸ்மான் அலி சொன்னால் அதை நம்புகிறார். ஏதோ அந்தோணி ராஜ் சொத்து இலலாதவர், பணம் இல்லாதவர், என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த கமிஷனர் சொல்கிறார், அந்தோணி ராஜைப் பற்றி

During may personal enquiry the application has stated that his properties are worth Rs. 7 lakhs and that he could invest Rs. 20 lakhs in the business, that his turnover in his present business is Rs. 36 lakhs.

இந்த அளவு தகுதிவாய்ந்தவர்தான் அந்தோணிராஜ், அவர்தான் விடப்பட்டிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, எப்படியோ நான் சொல்ல வருவதை அவர் முன் கூட்டியே சொல்லிக்கொண்டு வருகிறார்கள். காரணம் என்னவென்றால் எப்படி நான் வருகிறேன், எப்படி போகிறேன் என்பதை நன்றாக அறிந்தவர் என்பதாலே அவர் சொல்லிக்கொண்டு வருகிறார். அதைத்தான் நான் சொல்ல வேண்டும். அந்த அப்ளிக்கேஷனிலே அவர் கையெழுத்துப் போடவில்லை என்பதாலே அவர் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அதுமட்டுமல்ல இன்னொருவரையும் கமிஷன் கன்சிடர் பண்ணவில்லை. அந்த அப்ளிகேஷனில் அவர் கையெழுத்துப் போடவில்லை என்பது சால்வன்யைச் சேர்த்துக் கொடுக்கவில்லை என்பது, இவைகளை நான் தனியாக நடத்துகிறேன், நான்தான் கையெழுத்துப் போடுகிறேன், நான்தான் அப்ளிகன்ட் என்று நேரடியாக எழுதிக் கொடுத்தார்கள் ஆனகயினால் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

**டாக்டர் மு. கருணாநிதி :** ஒரு பார்ட்னர்ஷீப் கன்சர்ன் போடுகின்ற அப்ளிகேஷனில் ஒரு பார்ட்னர் கையெழுத்துப் போடவில்லை. போடாவிட்டாலும் பரவாயில்லை என்று கமிஷனர் கொடுக்கிறார். இது முறையா !

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** அந்த கோபாலகிருஷ்ணன் பற்றித்தான் நான் சொல்கிறேன். கன்பியூஸ் செய்துகொள்ளவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள், கோபாலகிருஷ்ணன் என்பவர் அப்ளிகேஷனில் கையெழுத்துப்போடவில்லை, சர்ட்டிபிகேட் கொடுக்கவில்லை, நானும் பிசினெஸ் ல் கலந்து கொள்கிறேன் என்றும் சொல்லவில்லை,

கொடுத்து இருக்கிறார் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாற்றுத் தலைவர் அவர்களே, அப்ளிகேஷன் போடுகின்ற சமயத்தில் உஸ்மான் அலி என்பவர் ஒரு தனிநபர், அதேபோல கோபாலகிருஷ்ணன் என்பவரும் ஒரு தனிநபர். அந்த இரண்டு பேரும் சேர்ந்து ஒரு பார்ட்னர் ஷிப் கன்சர்ன் என்ற முறையில் அப்ளிகேஷன் போடுகிறார்கள். உஸ்மான் அலி தனியாக அப்ளிகேஷன் போடவில்லை. ஆகவே, அந்த பார்ட்னர்ஷீப் அடிப்படையில் போட்ட அப்ளிகேஷனை ரிஜெக்ட் செய்து இருக்கவேண்டும். உஸ்மான் அலிக்குக் கொடுக்க வேண்டும் என்று சொன்னால், அவர் தனியாக அப்ளிகேஷன் போட்டு இருக்கவேண்டும். பார்ட்னர்ஷிப் அடிப்படையில் கொடுத்த அப்ளிகேஷன் டிபெக்டிவ்வாக இருக்கிறபோது அப்ளிகேஷனை ரிஜெக்ட் செய்வதற்கு பதிலாக எப்படி நீங்கள் உஸ்மான் அலிக்குக் கொடுத்தீர்கள் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாற்றுத் தலைவர் அவர்களே, பார்ட்னர்ஷீப் அப்ளிகேஷன் போடவில்லை.

No registration, no agreement noted there

அப்படி எதுவுமே இல்லை. முதலில் அவருடைய பெயரை எழுதியிருப்பார்கள். பின்னால் அவர் வராமல் இருந்து இருக்கக் கூடும். அதனால் அவர் தனியாக நடத்திக்கொள்ளலாம் என்று எண்ணி இருப்பார். அதை எழுத்து மூலமாக எழுதிக்கொடுத்து இருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே அந்தோணி ராஜ் என்பவர் வசதி படைத்தவர் என்று சொல்கிறார்கள். வசதி படைத்தவர்கள் எத்தனையோ பேர் இருப்பார்கள். நாம் சால்வன்சி சர்டிபிகேட் அடிப்படையில் தான் இதைச் செய்கிறோம். பாங்க் காரன்டி அடிப்படையில் தான் செய்கிறோம். அந்த வகையில் தான் உஸ்மான் அலிக்குக் கொடுக்கப்பட்டது.

விதியின்படி விண்ணப்பங்கள் பெறுவது ஆணையாளர். அவற்றை பரிசீலித்து, விசாரித்து, தகுதிகளை நிர்ணயிப்பது ஆணையாளர். தகுதிகளை நிர்ணயிக்க ஆணையாளர் விதிமுறையில் கண்டுள்ள கோட்பாடுகளைக் கருத்தில் கொள்கிறார்கள். அந்த அடிப்படையில் தான் அவர் ஒரு நபரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அவருக்கு உரிமை வழங்க அரசின் முன் அனுமதி கேட்கிறார். அரசும் பரிசீலித்து முன் அனுமதி வழங்குகிறது.





ஆணையாளர் விண்ணப்பதாரர் ஒருவரை தகுதி இல்லாதவர் என்று நிர்ணயித்து விட்டால் அப்படிப்பட்டவர் தகுதி உடையவர் என்று நிர்ணயிக்க அரசுக்கு அதிகாரம் இல்லை. ஆனால் அதே நேரத்தில் ஆணையாளர் ஒரு நபரைத் தகுதி உள்ளவர் என்று கருதி பரிந்துரை செய்து இருந்தாலும் விதிமுறைப்படி அவர் தகுதி இல்லாதவர் என்று முடிவு செய்ய அரசுக்கு அதிகாரம் உண்டு. இந்தக் கருத்தை நான் ஏற்கனவே தெரிவித்து இருக்கிறேன். இந்தக் கருத்தை உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு இருக்கிறது என்பதையும் முதலிலேயே தெரிவித்து இருக்கிறேன்.

வடாற்காடு மாவட்டத்தில் மொத்த வியாபாரம் செய்ய அனுமதி கேட்டு 7 பேர் கோரிக்கை மனு கொடுத்தார்கள். அந்த 7 பேரில் கோபாலகிருஷ்ணய்யா என்பவருக்கு உரிமை அளிக்கப் பட்டு இருக்கிறது. அந்த வியாபாரத்தில் முன் அனுபவம் உள்ள பார்த்தசாரதி முதலியாருக்கு அளிக்கப்படவில்லை. அவருக்கு வயது 71 ஆகிவிட்ட காரணத்தால் மனு நிராகரிக்கப்பட்டு இருக்கிறது. அதனால் கோபாலகிருஷ்ணய்யாவுக்குத் தரப்பட்டு இருக்கிறது. இவருக்கு ஆந்திராவில் உள்ள சுப்பாரெட்டி என்பவர் ரூ. 3 லட்சத்திற்கு பாங்கில் டெபாசிட் கட்டியிருக்கிறார் என்றெல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் இங்கே சொன்னார்கள்.

நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பார்த்தசாரதி முதலியாருக்கு தகுதி இல்லை என்கிற நிலையை ஆணையாளர் 4.8.81 அன்று எடுத்து, பின்வருமாறு கருத்துக்களைச் சொல்லி யிருக்கிறார்கள்,

"The application is in order. He is aged 71. He is very old.

71 வயது என்றால் வெரி ஓல்ட் என்று சொல்லிவிட முடியாது. எல்லோரும் வெரி ஓல்ட் ஆகிவிடமாட்டார்கள் அது வேறு. அந்த ஒரு காரணத்தால் மட்டுமே அது மறுக்கப்படவில்லை என்பதற்கு சான்றுகள் உள்ளன.

He cannot function as wholesaler in bottled liquor business in the entire district of North Arcot.

According to solvency certificate issued by Tahsildar, Vellore the applicant is solvent to the tune of Rs. 65,000 only. I therefore consider him not suitable to undertake the wholesale business which requires heavy investment. Accordingly I reject his application Rule 6 (a) read with Rule 5 of Tamil Nadu Indian made Foreign Spirit Supply Rules, 1981.

இந்தக் காரணத்தால்தான் இது மறுக்கப்படுகிறது. நான் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய எதிர்க்கட்சி தலைவர் அவர்களுடைய பிள்ளைகள் எல்லோருக்கும் திருமணம் ஆகிவிட்டது, அவர்கள் இன்னும் நீண்டநாள் இருக்க வேண்டும். அவர்கள் தன்னுடைய பேரப்பிள்ளைக்கு திருமணம் செய்ய பெண் பார்க்கப் போகிறார்கள் என்று வைத்துக்கொள்

வோம். அந்த பெண் ஆரஞ்சுப்பழம் போல நல்ல சிவப்பாக இருக்கிறது. புருவம் நல்ல நீண்ட புருவம், கூந்தல் நீண்டு வளர்ந்த கூந்தல். இவ்வளவு எல்லாம் இருந்தாலும் எதிர்ககட்சித் தலைவர் ஏற்றுக்கொள்ளமாட்டார். அந்தப் பெண் பேசுகிறதா என்று பேசவைத்துப் பார்க்கிறார். ஆனால் இங்கே பேசவேண்டுமென்றால் பணம் இருக்கவேண்டும். இத்தனையும் இருந்தும் '' உள்ளுவதெல்லாம் உயர் உள்ளம் '' (சிரிப்பு) பேராசிரியர் இங்கே இருக்கிறார். அவர்களுக்கு நான் திருக்குறளைச் சொல்வது சரியல்ல. 'குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை '.

இத்தனையும் பார்த்துவிட்டுதான் எடுத்த எடுப்பிலேயே பெண்ணை பார்த்துவிட்டு சரி யென்று ஏற்றுக்கொள்வதில்லை. பெண்ணைப் பார்க்கிறார்கள், அந்தப் பெண் பேசுகிறதா என்று பார்க்கிறார்கள். அதன் பிறகுதான் எதிர்க்கட்சித் தலைவர் அந்தப் பெண்ணை பேரனுக்குத் திருமணம் செய்ய ஒப்புக்கொள்வார். அதைப்போலதான் அப்ளிகேஷனைப் பார்த்து முதலிலே சொல்லுகிறபோது இது ஆர்டர்தான் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ' பங்ஷன் ' பண்ணுவதற்கு 'இட் ரிக்குயர்ஸ் ஹெவி இன்வெஸ்ட்மென்ட்ஸ் ' என்று சொல்லுகிறபோது தகுதி இல்லை என்று நான் நினைத்து அதை மறுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அடுத்து அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

The application is in order. According to the report of Assistant Commissioner, Excise, Vellore in the building No. 26|2 Sembikulam, Vellore selected by the applicant for the location of the wholesale depot is quite suitable for the purpose. The owner of this building has given the written consent for letting it out on rent to the applicant. He owns immovable properties of about Rs. 7 lakhs in Nellore district. The Bank of Baroda, Nungambakkam has given bank guarantee in favour of this applicant to the tune of Rs. 3 lakhs. I consider him solvent to run the wholesale business. The applicant is financially sound and is a person who will abide by the provisions of the Tamil Nadu Prohibition Act.

என்றெல்லாம் சொல்லத்தான் இதை அவர்கள் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்பதை நான் உங்களுககுத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி :** எல்லாவற்றையும்விட முக்கியமான காரணம் இந்த கோபாலகிருஷ்ண ஐயர் என்று வடாற்காடு மாவட்டத்திலே உரிமம் பெற்றவர் சுப்பராமரெட்டியுடைய மானேஜர் என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

**மாண்புமிகு திரு எஸ்.டி. சோமசுந்தரம் :** நான் முதலிலேயே தெரிவித்திருக்கிறேன். யார், யாருடைய மானேஜர் என்று அந்த அப்ளிகேஷனில் போடவில்லை. அவர் அவருடைய மானேஜர் என்பது உங்களுடைய குற்றச்சாட்டு, நீங்கள் சொல்கிற குற்றச்





சாட்டை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். சரிதான் என்று அதை நிரூபிக்க வேண்டும். நம்முடைய கமிஷனர் வேலை அப்ளிகேஷனை வாங்குகிறார். என்குயர் செய்கிறார். தாசில்தார் என்குயர் செய்கிறார். கலெக்டர் மூலமாக என்குயர் செய்கிறார்கள். அதன் பிறகு நேரடியாக விசாரிக்கிறார்கள். இதையெல்லாம் பார்த்து, சரி சால்வன்சி இருக்கிறதா, சூட்டபிலிட்டி இருக்கிறதா, விதிமுறைகளுக்கு சரியாக இருக்கிறதா என்பதை எல்லாம் பார்த்து தேர்ந்தெடுக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ரா. உமாநாத் :** அந்த விஷயத்தில் ஒரு பாயின்ட், அது எல்லாம் விசாரிக்க வேண்டியது அப்ளிகேஷனை வைத்து அப்படி என்பது. இங்கே படித்த ரூல்சில் ஒன்று இருக்கிறது, பினாமியும் கூடாது என்று, அந்த என்குயரியில் இந்த சுப்பராமரெட்டியார், சம்படி, மற்ற அப்ளிக்கன்ட்ஸ் இந்த சுப்பராமரெட்டிக்கு சொந்தக்காரர்களா ? அப்படி பினாமியா அல்லது அவர்கள் மானேஜரா? எனிவே இஸ் இட் கனக்டட் வித் என்று என்குயரி நடத்த வேண்டுமா இல்லையா ? நடத்தவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சொல்கிறார். நீங்கள் என்குயரி நடத்தினீர்களா !

(முற்பகல் 11.50)

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, இப்படி பலர் அப்ளிகேஷன் போட்டிருக்கின்றபோது அப்ளிகேஷன் போட்டவர் இன்னாருடைய பினாமி என்று எழுத்து மூலமாக தெரிவிக்கப்பட்டிருக்குமானால் அதுபற்றி ஆணையாளர் அவர்கள் விசாரிக்கிறார்கள். அப்படி சில கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதன்படி விசாரிக்கிறார்கள். அதாவது கற்பனையிலே என்னென்ன தவறுகள் இருக்கக்கூடும் என்று கருதுகிறார்களோ அத்தனையும் விசாரிக்க சுப்பராமரெட்டியின் மேனேஜரா என்று விசாரிப்பதா அல்லது இன்னொருவருக்கு இவர் மேனேஜரா என்றெல்லாம் விசாரிப்பதா என்றால் அவ்வாறு விசாரிப்பதற்கு என்ன அத்தாட்சி ? அதைப்பற்றி ஒரு ரிப்போர்ட் கொடுக்க வேண்டும்.

**திரு. ரா. உமாநாத் :** மாற்றுத் தலைவர் அவர்களே, பினாமி இருக்கக்கூடாது என்ற ரீதியிலே அப்ளிக்கேன்ட்ஸோடு ஏதாவது கூட்டு பினாமி இருக்கின்றதா என்றெல்லாம் விசாரிக்கவேண்டியது கடமையல்லவா ?

Is it not a statutory responsibility ? Has he carried it out. That is the question.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** இதற்கு ஒரே வரியிலே எஸ். என்று சொல்விடலாம், நம்முடைய கமிஷனர் அவர்கள் அவர்களை நேரடியாகக் கூப்பிடுவதன் நோக்கமே

இதுதான் 1971, 1972, 1973-லே எல்லாம் இதற்காக 6 பேர், 7 பேர் இருந்தார்கள். அப்போது இப்படிப்பட்ட சட்ட திட்டங்கள் போடப்படவில்லை. விதிமுறைகள் இல்லை. நேரடியாக விசாரிப்பதில்லை. அதை எதிர்த்து கோர்ட்டுக்கு போவதில்லை. ஆகவே இதற்காக இவ்வளவு தூரம் விதிமுறைகள் இப்போதுதான் இருக்கின்றன. இதிலே பினாமியா இல்லையா, மேனேஜரா இல்லையா தகுதி இருக்கின்றதா இல்லையா சால்வன்ட் இருக்கின்றதா இல்லையா என்றெல்லாம் விசாரிக்கின்ற வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுத்ததே இங்கே இருக்கின்ற இந்தச் சட்டதிட்டங்கள் தான். அப்படி உருவாக்கியதற்கு ஏற்றாற்போலத்தான் அவர்கள் விசாரிக்கிறார்கள். அப்படி விசாரித்ததற்குப்பிறகு பினாமி இல்லை என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அந்த விதிமுறைகள் சட்டதிட்டங்கள் இருக்கின்றன. ஆகவே பினாமிஎன்று இருக்குமேயானால் கிடைக்காதவர்கள் அதைவைத்து நிச்சயமாக கோர்ட்டுக்குப் போகலாம். ஆகவேதான் நாமே அந்த விதிமுறைகளைப் போட்டிருக்கிறோம். அவர்களும் அதை வைத்து ஆராய்ந்து வழங்குகிறார்கள். பினாமிக்கு தந்தார் என்ற ஆர்டரை வைத்துக்கொண்டே நீதிமன்றத்திற்குப் போய் பினாமி என்று நிரூபித்தபின் அவர்கள் மாற்றிக் கொள்ளலாம். அந்த வாய்ப்பினையும் நாம் இந்த விதிமுறைகளின் மூலம் அவர்களுக்குத் தந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : மாற்றுத் தலைவரவர்களே, இஷ்யூவை வேறு முறையிலே டைவர்ட் பண்ணுகிறார்கள்.

The charge is that rules have been violated. Whether they go to Court or not is a different thing.

கோர்ட்டுக்குப் போகலாம் அவர்கள் என்பது அவர்களுடையது. ஆனால் ஹவுசிலே குறிப்பிடுகின்றபோது நடந்த அந்த முறையிலே ரூல்ஸ் வயலேட் பண்ணப்பட்டிருக்கின்றது என்று நம்முடைய உரிமைப்படி ஒரு சார்ஜ் வைக்கப்பட்டிருக்கின்றது. அதற்குத் தான் அவர்கள் பதில் சொல்ல வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாற்றுத் தலைவரவர்களே, நம்முடைய உமாநாத் அவர்கள் கேட்டதற்கு ஒரே வரியிலே எஸ். என்று சொல்லி விட்டேன். அப்படி அந்த விதிமுறைகளின்படி கமிஷனர் அவர்கள் கடைப்பிடித்தார்கள். அந்த விதிமுறைகளின்படி நன்றாகப் பார்த்துத்தான் சொன்னார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே அவர்கள் வேண்டுமானால் நீதிமன்றத்திற்குப் போகட்டுமே நமக்கென்ன, சுப்பராமரெட்டி வந்தாலும் சரி, கந்தசாமி ரெட்டி வந்தாலும் சரி, நமக்கென்ன....(குறுக்கீடு)........ நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏதோ பிரித்துப் பிரித்துச்சொல்லி எதை எல்லாமோ மாறி மாறிச் சொல்வதற்கு





Thiru Krishna Mohan has produced certificate from Bank of Baroda at he is solvent to the tune of Rs. 80 lakhs and bank guarantee for Rs. 20 khs for wholesale and bottle liquor. The site and buildings selected y both applicants are reported to be quite suitable. Thiru Krishna Mohan appeared before me for my enquiry but Thiru K. Ramaswami id not appear before me for enquiry.

நான் நிறுத்தி படித்ததில் காரணம் இருக்கிறது.

He has simply deputed his General Manager who appeared on his behalf before me and gave the statement. In the circumstances I consider Thiru Krishna Mohan is more suitable for the grant of privilege for wholesale liquor. I accordingly reject the application of Thiru K. Ramaswami.

நான் இங்கே சொல்வது, ராமசாமியே சூட்டபிள் இல்லை என்று அல்ல. 'கிருஷ்ணமோகன் ஈஸ் மோர் சூட்டபிள்' என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்றுதான் சொல்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : மாற்று தலைவர் அவர்களே, இராமசாமி என்பவர் குவையத்திலே தொழிற்சாலை நடத்துகின்ற ஒரே காரணத்திற்காக அப்ளிகேஷன் மறுக்கப்படுகிறது.

இன்னொரு காரணம், அவர் நேரடியாக வரவில்லை, மானேஜரை அனுப்பினார் என்கொயரிக்கு என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர், மானேஜருக்கு பவர் ஆப் அட்டார்னி கொடுத்து அனுப்பி இருக்கிறார். உரிமையாளர் நேராக வருவதற்குப் பதில் பவர் ஆப் அட்டர்னியை அனுப்புவது தவறா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாற்றுத் தலைவர் அவர்களே, இராமசாமி சூட்டபிளே இல்லை என்று சொல்லவில்லை. கிருஷ்ணமோகன் ஈஸ் மோர் சூட்டபிள் என்று தான் சொல்லியிருக்கிறார்கள். அவரைவிட இவருக்கு அதிகமான பைனான்ஸ் இருக்கிறது. இவர் நேராக வந்திருக்கிறார். அவர் குவையத்திலே இருக்கிறார். வேறு ஒருவரிடத்திலே எழுதிக் கொடுத்திருக்கிறார்.

திரு. கிருஷ்ணமோகனை செலக்ட் பண்ணாமல் இராமசாமியை செலக்ட் பண்ணியிருந்தால், இதே வாதத்தை திருப்பி வைக்கமுடியும். கிருஷ்ணமோகனைவிட குறைந்த சால்வன்சி தான் இராமசாமிக்கு இருக்கிறது. கிருஷ்ணமோகனுக்கு பல இலட்சங்கள் இருப்பு இருக்கிறது. அவர் நேரடியாக வந்திருக்கிறார். இராமசாமி நேரடியாக வரவில்லை, குவையத்தில் இருக்கிறார். கிருஷ்ணமோகன் இங்கே இருக்கிறார். ஏன்

நினைக்கிறார்கள். ஆகவே என்னையும் மற்றவர்களையும்.. ......(குறுக்கீடு)........ அடுத்து மதுரை மொத்த உரிமை பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறுகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிருஷ்ணமோகன் என்பவர் சுப்பராம ரெட்டியின் மைத்துனன் என்று கூறியுள்ளார்கள். அப்ளிகேஷனிலே எழுதி இருந்தால்தானே தெரியும்.........

திரு. ரா. உமாநாத் : மாற்றுத் தலைவரவர்களே, அப்ளிகேஷனிலே மைத்துனராக இருந்தாலும் கூட மைத்துனன் என்று எழுத மாட்டார்கள். அப்படி எழுதினால் கிடைக்காது என்பதால் எழுத மாட்டார்கள். ஆகவே என்கொயரி பண்ணவேண்டிய ஆஃபீஸர்தான், அதைப்பற்றி என்கொயரி பண்ணவேண்டும்,

மாண்புமிகு திரு. எஸ. டி, சோமசுந்தரம் : மாற்றுத் தலைவரவர்களே, அரசியல் சட்டத்திலே சில விதிமுறைகள் இருக்கின்றன. அதன்படி தகப்பன் மகன் என்று வருகின்றபோது, ஒரு பிசினஸ் செய்கின்றபோது தகப்பன் தவறு செய்து விட்டால் அதற்காக அவருடைய மகன் அன்குவாலிபைட் என்று சொல்ல முடியாது. தனிப்பட்ட முறையிலே அவருக்கு அந்த உரிமை இருக்கின்றது. உதாரணமாக நான் தவறு செய்துவிட்டேன் என்றால் என்னுடைய பிள்ளையும் அந்தத் தவறுக்கு உடந்தை என்றோ அல்லது அவன் பிசினசிலே முன்னுக்கு வரக்கூடாது என்றோ சட்டத்திலே இடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்...... (குறுக்கீடு).... ஏதாவது சொல்ல வேண்டும் என்றால் அதை உங்கள் தலைவர் மூலமாகவே சொல்லிவிடுங்கள், அப்போது எனக்கும் வசதியாகi இருக்கும், உங்களுக்கும் வசதியாக இருக்கும். மதுரை மாவட்டத்தில் மொத்த விற்பனை உரிமை வழங்குவதைப் பொறுத்த வரையில், திரு. கே. இராமசாமி மற்றும் திரு. கிருஷ்ண மோகன் இருவரின் தகுதியையும் ஒப்பிட்டு திரு. கிருஷ்ண மோகன் கூடுதல் தகுதி உடையவர் என்பதைத் தெளிவாக ஆணையாளர் சொல்லியிருக்கிறார்.

Thiru K. Ramaswami is repotted to execute contract in Kuwait in Arab country. His concentration is likely to be more in execution of works in Kuwait than in running wholesale business in bottling liquor there. He has produced solvency certificate for Rs. 15 lakhs for his immovable properties and certificate from I.O.B. Madras for having fixed deposits in various banks for Rs. 35 lakhs. He is reported to own two buildings in Madurai but no solvency certificate has been produced for this purpose. நேற்று அவர்கள் படித்தார்கள்.







கிருஷ்ணமோகனுக்குக் கொடுக்காமல் இராமசாமிக்குக் கொடுத்தீர்கள் என்று இதே கேள்வியை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்கமாட்டார்கள் என்பதற்கு என்ன உறுதி இருக்கிறது

(நண்பகல் 12-00)

டாக்டர் மு. கருணாநிதி : இது முழுவதும் ஒரு மொணாப்பலியாக ஏகபோகமாக இருக்கிறது. சுப்பராம ரெட்டியினுடைய வலை பல பகுதிகளில் பின்னப்பட்டிருக்கிறது என்பதற்காகத்தான் சொல்கிறேனே தவிர வேறு அல்ல. சுப்பராம ரெட்டியின் மைத்துனர் அல்லது மானேஜர் இவர்களால் தான் இத்தகைய உரிமைகளை பெறமுடிகிறது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நான் இப்போது ராமசாமியைப் பற்றியும், கிருஷ்ணமோகனைப் பற்றியும் பேசிக்கொண்டிருக்கிறேன். அவர்களைப் பற்றி நான் சொல்லுகிறபோது இவர்கள் இரண்டு பேர்களையும் ஒப்பிட்டுப் பாருங்கள். அப்படி ஒப்பிட்டுப் பார்க்கிறபோது அந்தக் கமிஷனர் இரண்டையும் குறிப்பிட்டு அவர்கள் வரவில்லை. ஸூட்டபிலிட்டி கேட்டிருக்கிறார்கள். பினாமியா என்று கேட்டிருக்கிறார்கள். பிசினஸ் செய்தாயா என்று கேட்டிருக்கிறார்கள். இடம் இருக்றதா என்று கேட்டிருக்கிறார்கள். சால்வன்சி பற்றிக் கேட்டிருக்கிறார்கள். க்யூவட்டில் இருக்கிறவரிடம் எப்படிக் கேட்பது? ராமசாமிக்குக் கொடுத்து விட்டால், ராமசாமிக்குக் கொடுத்து விட்டீர்களே, அவருக்கு சால்வன்சி குறைவுதானே அவர் குவயட்டில் இருக்கிறாரே, ஏன் கொடுத்தீர்கள் என்று கேட்கமுடியாதா, கோர்ட்டுக்குப் போகமுடியாதா, முடியுமே. இதில் ஒன்றும் இரகசியம் இல்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பூராவையும் படிக்கவில்லை. அவர்களுக்கு எந்தளவிற்கு வேண்டுமோ அதைப் படித்து விட்டு கீழே வைத்து விடுவார். நேற்று அவர்கள் பூராவையும் படிக்கவில்லை.

டாக்டர் மு. கருணாநிதி : நேரம் இல்லாத காரணத்தால் முழுதும் படிக்கவில்லை. முழுவதும் படித்தால் எனக்குத்தான் அதிகமான ஆதாரங்கள் இதிலே இருக்கின்றன. சால்வன்சி சர்டிபிகேட் என்பது தாசில்தார் எவ்வளவு வேண்டுமானாலும் கொடுக்கலாம். அவையெல்லாம் மறுபடியும் விசாரித்து அறிய வேண்டியவை. வசதி உள்ளவர்கள், செல்வாக்கு உள்ளவர்கள் தாசில்தாரைப் பார்த்து எவ்வளவு ரூபாய்க்கு வேண்டுமானாலும் சர்டிபிகேட் வாங்கிவிடலாம். இந்த சால்வன்சி சர்டிபிகேட்டை மாத்திரம் வைத்து சமாளிக்கப் பார்க்காதீர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தாசில்தார் மட்டும் கொடுக்கவில்லை. பாங்க் காரண்டியும் கொடுக்கப்பட்டிருக்கிறது. கொடுத்திருப்பது, இவர்களுக்குத்தான் அதிகமாகக் கொடுத்திருக்கிறது. இவருக்கு எண்பது இலட்சம் ரூபாய்க்கு கொடுத்திருக்கிறது. அவர்களுக்கு எவ்வளவு கொடுத்திருக்கிறது என்று தெரியாது.

டாக்டர் மு. கருணாநிதி : இந்தத் தொழிலை ஆரம்பிக்க எண்பது இலட்சம் ரூபாய் வேண்டுமா? இரண்டு இலட்சத்தில் ஆரம்பித்ததைத்தானே இன்கம் டாக்ஸ் கண்டுபிடித்திருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தஞ்சாவூருக்கு நான் அப்புறம் வருகிறேன். இப்போது நான் மதுரையில் இருக்கிறேன். சால்வன்சி சர்டிபிகேட், ஸூட்டபிலிட்டி எல்லாம் பார்க்க வேண்டும். கிருஷ்ண மோகன் விதிமுறைப்படி எல்லா வகைகளிலும் பொருத்தமானவர் என்பது இங்கு நன்கு தெளிவாகிறது.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஸ்பென்ஸர் கம்பெனி போட்ட மனுவை தள்ளுபடி செய்துவிட்டு சுப்பராப ரெட்டிக்குக் கொடுத்திருப்பது பற்றிப் பேசினார்கள் எனக் கருதுகிறேன். ஸ்பென்ஸர் கம்பெனியைப் பொறுத்தவரையில் ஆணையாளர் தெளிவாக இதைத் தெரிவித்திருக்கிறார்கள்.

The application of the company is in order.

The applicant company is a firm catering in multifarious activities, manufacturing and dealing with electrical goods, various consumer goods, soft drinks, running Hotels, etc. etc. As the applicant company is already engaged in business in various fields, I consider that the privilege of wholesale supply of I.M.F.S. in the Madras Corporation limits should not also be given to them, as it would mean concentration of business activities in one company alone to the exclusion of other. I therefore reject the application of this company on the ground that they are not suitable for the grant o privilege under rule 6.(a) of the I.M.F.S. Rul 1981.

சுப்புராம ரெட்டி பொறுத்த வரையில் ஆணையாளர் பின் வருமாறு கூறுகிறார்கள்.

His application is in order. The aplicant has proposed to lot tea wholesale depot in the building at No. 9-B, Village Road, Nungambakkam. The Collector has reported that this is a pucca buildings with two floors and vacant site and that there are several rooms with sufficienl space available.

கலெக்டர் அவர்கள் எழுதுகிறார்கள்.

The owner of the building has given his consent for the location of wholesale depot in the building by the applicant. The Vijaya Bank, Madras, has given a certificate that the applicant has got a balance of Rs. 15 lakhs in the bank. He has produced a solvent certificate given by





the Tahsildar, Nellore and also a solvent certificate for Rs. 15 lakhs. and a guarantee certificate for Rs. 75 lakhs issued by the Bank of Baroda for Rs. 75 lakhs valid upto 15st. July 1982 issued by the above Bank and also a solvency certificate for Rs. 60 lakhs is used by the Tahsildar Guindy Mambalam-Taluk. The Collector has stated that the applicant is financially sound. On the report got from the Collector of Madras I am satisfied that the applicant Thiru M. Subbarama Reddy, Madras is a suitable person for the grant of licence and that the site and the buildings selected by him or the location of the wholesale depot are suitable and that the application is made *bona fide* on behalf of the applicant.

டாக்டர் மு. கருணாநிதி : அந்த இடம், சுப்பராம ரெட்டியாருக்கு உரிமையானதல்ல அல்லது அவர் வாடகைக்காக உரிமைப் பெற்ற இடமாகவும் இல்லை என்று சொல்லப்படுகிறது. அப்படி உரிமையில்லாமல், அங்கே வேறு சென்ட்ரல் கவர்ன்மென்ட் நிறுவனம் ஒன்று அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற நேரத்தில், அந்தக் கட்டிடத்தை அவர் எப்படி அடையாளம் காட்டி, உரிமை பெற முடிந்தது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எதி க்கட்சித் தலைவர் அவர்கள் இப்படிச் சொல்லுகிறார்கள். நான் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்வதை நம்புவதா அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொல்வதை நம்புவதா? மாவட்ட ஆட்சித் தலைவர் இப்படி எழுதிக்கொடுத்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல, எதிர்க்கட்சித் தலைவர் . .

டாக்டர் மு. கருணாநிதி : அந்த இடம் அவருடையதில்லை. என்பதற்காக, அவருக்கு அந்த உரிமை மறுக்கப்பட்டு, ஏன் ஸ்பென்சர் கம்பெனிக்கு கொடுக்கப்படவில்லை? ஸ்பென்சர் கம்பெனி பல வியாபாரத்தை நடத்துகிறது, எனவே அதற்குத் தகுதியில்லை என்று சொல்லுகிற அதிகாரி, அதைப்போல் சுப்பராம ரெட்டி பல வியாபாரங்களை, பல தொழில்களை, ஏன் பல சினிமாக் கொட்டகைகள்கூட நடத்தப்படுவதாகச் சொல்லப்படுகிறது. எனவே, அவருக்கு மாத்திரம் அந்தத் தகுதி எங்கே இருந்து வந்தது? அந்த மாதிரி இடமில்லை என்று தெரிந்தபிறகு, இந்த அரசு புதியதரக ஒரு·ஜி.ஓ. வை, அவருக்கு இடமில்லாவிட்டாலும் பரவாயில்லை, உரிமையை கொடுத்து விட்டப் பிறகு, இடத்தை அவர் பார்த்துக் கொள்ளட்டும் என்று புதியதாக ஒரு ஜி. ஓ.வை ஏன் போட்டது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே நான் சொல்லுகிறபோது, தெளிவாக முதலிலே படித்தேன். அப்போது, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏதோ படித்துக் கொண்டிருந்தார் என்று நம்புகிறேன். The applicant has got the agreement from the owner.

என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்திருக்கிறர்ாகள் என்பதை நான் தெரிவித்தேன். அது மட்டுமல்ல. இந்த ஜி.ஓ. போடப்பட்டதைப் பற்றிச் சொன்னார்கள். ஒரு ஜி.ஓ. போடுவது என்பதைத் தவறாக எடுத்துக்கொள்ளக் கூடாது. ஜி. ஓ. போடுவது என்பது, ஒரு சில நிலைகளிலே இருந்து முதலிலே அதன்படி நடைமுறைப் படுத்த போடப்படுகிறது. அதற்குப் பிறகு எத்தனையோ மாற்றங்களைச் செய்திருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், ½ கிலோ மீட்டருக்கு அருகாமையில் மருத்துவமனை, பள்ளிக்கூடம் போன்றவைகள் லெல்லாம் இருக்கக்கூடாது என்று சொன்னோம். அப்படிச் சொன்னாலும், நடைமுறைப்படுத்துகின்றபோது தேவைபட்டால் இந்த விதியை மாற்றிக் கொள்ளுங்கள் என்று கலெக்டருக்கு சொல்லியிருக்கிறோம். இப்படிச் சொல்வதற்குக் காரணம், இல்லாவிட்டால் குடியிருக்கும் பகுதியிலேகூட கடைகள் திறந்துவிடக்கூடிய நிலைமை வந்துவிடுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாங்கள் அப்படி ஆணை போட்டிருந்தாலும், திருப்பி சுப்பராம ரெட்டியாருக்கு அந்த இடத்தை மாற்றிக் கொடுக்கவில்லை என்பதைத் பற்றி உங்களுக்கு நான் சொல்லியிருக்கிறேன்.

வழங்கப்பட்ட உரிமம்படி திரு சுப்பராம ரெட்டி சென்னை நுங்கம்பாக்கத்திலுள்ள வில்லேஜ் ரோட்டிலுள்ள 9-ம் எண். கட்டிடத்தில் மொதத விற்பனை டிப்போவைத் தொடங்க வேண்டும் ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை வேறு இடத்திலே மொத்த விற்பனைக்காக டிப்போவைத் தொடங்க திரு சுப்பராம ரெட்டி ஆணையாளருக்கு அனுமதி கோரி, இருந்தார். ஆணையாளர் அந்தக் கோரிக்கையை அப்போதே மறுத்திருக்கிறார்.

(பிற்பகல் 12—10)

அது மட்டுமல்ல இங்கே சொல்கிறபோது சுப்பராம ரெட்டி பற்றி வேறு சிலவற்றையெல்லாம் சொன்னார்கள். நான் முதலிலே சொன்னதை திருப்பிச் சொல்ல வேண்டியதில்லை. 'ஏ'-க்கு கொடுத்தால் 'பி', பி-க்கு கொடுத்தால் ஏ. ஆனால் இந்த ஏ-யில்; பி-யும் ஒரே மாதிரியான காரணத்தைக் கொடுத்து இருந்தால் ஏன நீங்கள் சுப்பராம ரெட்டிக்குக் கொடுத்தீர்கள்! ஏன் ஸ்பென்சருக்கு கொடுக்கக் கூடாது என்று கேட்பீர்கள். ஸ்பென்சருக்குக் கொடுத்தாலும் இதே காரணத்தைத்தான் சொல்வர்கள், ஸ்பென்சருக்கு ஏன் கொடுத்தீர்கள் என்று.

**திரு. க. அன்பழகன் :** மாற்றுத் தலைவரவர்களே, இந்த விவாதத்தில் அரசாங்கத்தினுடைய நடைமுறையிலே உள்ள விதிமுறைகள் பின்பற்றப்பட்டனவா என்ற அடிப்படையிலே கேட்கப்படுகிறது. நம்முடைய அமைச்சரவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் மறுத்திருக்கிறார்கள் என்று இங்கே தெரிவித்





திருக்கிறார்கள். நுங்கம்பாக்கத்திலுள்ள அந்த கட்டிடத்தில் நடத்துவதற்கு வாய்ப்பு இல்லாத காரணத்தால் அதை மறுத்திருப்பார்களேயானால், வேறு இடத்திலே நடத்துவதற்கு அனுமதித்ததற்கு என்ன அவசியம் வந்தது! எப்படி அனுமதிக்கப்பட்டது? சட்டம் எப்படி அனுமதித்தது என்பதைத் தான் அமைச்சரவர்கள் விளக்க வேண்டும்

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாற்றுத் தலைவரவர்களே, நம்முடைய ஆணையாளர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவருடைய சிபாரிசின் பேரிலும் மற்றவைகள் பேரிலும் இங்கே வழங்கியிருக்கிறார்கள். வேறு இடம் கேட்கிறபோது அதைக் கொடுப்பதற்கு முடியாது என்று மறுத்து இருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் 'ஐ.எம்.எப்.எல்.' மொத்த வியாபார உரிமையாளர்களைப் பொறுத்த வரையில் உயர்நீதி மன்றத் தீர்ப்பின்படி திரு. இலட்சுமணபெருமாளுக்கு உரிமம் வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. க. அன்பழகன் :** தயவுசெய்து நாங்கள் கேட்டதற்கு நீங்கள் பதில் சொல்லுங்கள். சென்னை நகரில் யாருக்கு வழங்கப்பட்டிக்ருகிறது என்று அரசாங்கம் தெரிவிக்க வேண்டாமா! சுப்பராம ரெட்டிக்கு வழங்க மறுத்திருக்கிறார்கள் என்பது வரையிலே தெரிவிக்கப்பட்டது. அவருக்கு வழங்க மறுக்கப்பட்டது என்று தாங்கள் சொன்னீர்கள். அப்படி என்றால் வேறு யாருக்கு வழங்கப்பட்டது? வேறு யாருக்காவது வழங்கப்பட்டால் அது மறுக்கப்பட்டது என்ற பொருள் உண்மையாகும். ஆகவே, யாருக்கு வழங்கப்பட்டது என்று அரசாங்கம் தெரிவிக்குமா!

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாற்றுத் தலைவரவர்களே, ஒருவர் தன்னுடைய இடத்தை மாற்றி, வேறு இடம் வேண்டுமென்று கேட்கிறார். ஆனால் அதை வேண்டாம் என்று கமிஷனர் மறுத்திருக்கிறார். அதற்குப் பிறகும் அந்த இடம்தான் வேண்டும். முதலிலே சொன்ன இடத்திலே முடியவில்லை என்று அவர்கள் சொல்வார்களானால் அதற்குப் பிறகு இருக்கிற விதிப்படி என்ன முடிவ எடுக்கவேண்டுமோ அந்த முடிவை எடுக்கவேண்டும் என்பது ஒன்று. அதற்குப் பிறகு ஒருவருக்கு சொடுத்துவிட்டு,. அவர் அதை மறுத்துவிட்டாலும் இருக்கிற நம்முடைய ரூல்படி மறுமுறை விளம்பரம் செய்து, அப்ளிகேஷன் வாங்கித்தான் போட முடியுமே தவிர உடனே போட்டுவிட முடியாது. இங்கே இருந்து சந்தைக்குப் போகிறோம் மாடு வாங்க என்று வைத்துக்கொள்வோம். 10 ஜோடி மாடு வருகிறது. 10 ஜோடியையும் பார்க்கிறோம். பார்த்துவிட்டு, ஒன்றை பிடித்துவருகிறோம். சந்தைக்குப் போவதுமாடு வாங்க.

டாக்டர் மு. கருணாநிதி : மாற்றுத் தலைவரவர்களே, இந்த மாடு பிடிக்கிற வேலை, பேத்திக்கு பிள்ளை பார்க்கிற வேலை அல்லது பேரனுக்கு பெண் பார்க்கிற வேலை—இந்த மாதிரி உதாரணத்தை மாத்திரம் சொல்லி அமைச்சர் அவர்கள் சமாளித்துவிட முயல்வது சரியல்ல. இங்கே திரு. சுப்பராம ரெட்டியினுடைய மனு நிராகரிக்கப்பட்டது என்று சொன்னீர்கள். அது நிராகரிக்கப்பட்ட பிறகு வேறு யாருக்குத் தரப்பட்டது என்பது எதிர்க்கட்சித் துணைத் தலைவருடைய கேள்வி. அதற்குத்தான் பதில் வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நான் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. நான் கிராமத்திலிருந்து வந்தவன். ஆகையால் இன்னமும் அந்த கிராமத்தினுடைய உணர்வுகளைப் பெற்றிருக்கிறேன். ஆகவே, கிராமத்திலிருந்து சந்தைக்கு மாடு வாங்கப் போய், 10 அல்லது 15 ஜோடி மாடுகளைப் பார்த்து, ஒன்றை வாங்கிக்கொண்டு வருகிறார்கள்.

ஆனால் பெண் பார்க்கப்போகிறோம் என்றால், வரிசையாகப் பார்த்து போவதில்லை. முதலிலே ஒரு வீட்டுக்குப் போவார்கள். அங்கே பெண் பார்த்து , பிடிக்கவில்லை என்றால் வீட்டுக்கு வந்துவிடுவார்கள். வீட்டுக்கு வந்த பிறகு உற்றார், உறவினர்களைக் கேட்டு, தன்னுடைய மனைவியைக் கேட்டு, அண்ணன் தம்பியைக் கேட்டு வேறு எங்கே பெண் பார்க்கப் போகலாம் என்று கேட்டுத்தான் போவார்கள். அதைப் போல திரு. சுப்பராம ரெட்டி இல்லை என்றால் வேறு யார்? இரண்டாவது, மூன்றாவது பேர்களுக்கு கொடுக்க முடியாது. கிராமத்திலிருந்து போட்ட விதிமுறைகள் அப்படி சரியாகப் போட்டிருக்கிறார்கள். இங்கே விதி எப்படி போட்டிருக்கிறார்கள் என்றால்—அந்த விதிப்படி கொடுத்தாக வேண்டும். செலக்ஷன் செய்தாகிவிட்டது. கொடுத்தாகிவிட்டது. ஆக, எந்தக் காரணத்தாலோ அந்த அப்ளிகேஷன்—அந்த ஹோல் சேல் வியாபாரியால் அது அங்கே முடியாவிட்டால் விதிமுறைப்படி அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை கமிஷனர் எடுத்தார் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் ....

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. க. அன்பழகன் : மாற்றுத் தலைவர் அவர்களே, யாருக்கும் கொடுக்கப்படவில்லை என்று இந்த அரசாங்கம் தெரிவிக்குமானால் அமைச்சர் அவர்கள் சொல்லும் மாடு பிடிக்கும், பெண் பார்க்கும் உதாரணங்கள் எல்லாம் பொருத்தமானதாக இருக்கும். யாருக்காவது வழங்கப் பட்டிருக்குமானால் அமைச்சர் அவர்கள்



உண்மையை மறைக்கிறார்கள் என்று பொருள் ஏற்படும். எனவே யாருக்கும் வழங்கப்படவில்லை என்றால் அதை இந்த அவைக்கு தெரிவிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாற்றுத் தலைவர் அவர்களே, நான் சொல்கிற உதாரணத்தை பேராசிரியர் அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதற்கு ஒரு பதிலும், பேராசிரியர் ஏற்றுக்கொள்ளாவிட்டால் ஒரு பதிலும் அளிக்கிற தன்மையில் நான் என்றைக்குமே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். சுப்பராம ரெட்டிக்கு கொடுத்திருக்கிறோம், அதை தெரிவித்திருக்கிறேன். (கூச்சல், குழப்பம்). பேராசிரியர் அவர்கள் உள்ளத்தை

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

எங்காவது எள் அளவாவது புண்பட்டிருந்தால் நான் உண்மையிலேயே அதை திருப்பிப் பெற்றுக்கொள்கிறேன். நான் பேராசிரியரை மிகவும் மதிப்பவன். நான் சொல்கிற போது யாருடைய உள்ளத்தையும் புண்படுத்த வேண்டுமென்று எதையும் தெரிவிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (கூச்சல் குழப்பம்), (குறுக்கீடுகள்) துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர்களை கேட்டுக்கொள்கிறேன். இசிலே உணர்ச்சி வசப்படுவதற்கோ, வேகப்படுவதற்கோ எதுமில்லை. நேற்று எதிர்க்கட்சித் தலவர் அவர்கள் பேசினார்கள். அரசின் சார்பிலே பதில் சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். நான் சொல்கிறபோது தவறான பதிலாக இருந்தால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், பேராசிரியர், அவர்களும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். தவறாக நினைக்காமல் இருந்தால் திராவிட முன்னேற்றக் கழக சட்ட மன்ற உறுப்பினர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் ஏதாவது சொல்லவேண்டுமென்றால் இவர்களிடத்திலே சொன்னால் அவர்களே சொல்வார்கள். இடையிடையே குறுக்கிடுவதால் சங்கடங்கள் இருக்கின்றன. அதேபோல அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் எதற்கும் பேச வேண்டாம். எனக்குத் தெரிந்த பதிலைச் சொல்கிறேன்?

டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் கேட்பது, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேராசிரியர் கேட்பதெல்லாம் கமிஷனர் அல்லது கலெக்டர் மறுத்து விட்டார் அந்த இடத்தை என்று சொல்லிவிட்டீர்கள். அப்படி மறுக்கப்பட்ட பிறகு எப்படி அதே சுப்பராம ரெட்டிக்கு கொடுக்கப்பட்டது? எப்படிக் கொடுத்தீர்கள்!

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, முன்பின் சொன்னதாலே தவறாக வந்துவிட்டதோ என்னவோ தெரியவில்லை. இதற்கு முன்னாலே சுப்பராம ரெட்டியை பற்றி சொன்னது எவ்வளவு இருந்தாலும் இது தான் பதிலாக ஏற்றுக்கொள்ள வேண்டும். எழுதிக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சுப்பராம ரெட்டிக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டது என்று தான் தெரிவித்தேன். லைசென்ஸ் கொடுக்கப்பட்டது. ஆனால் அந்த இடத்தை மாற்றவேண்டுமென்று கேட்டார்கள். முடியாது என்று அவர்களுக்குச் சொல்லியாகிவிட்டது. அதற்குப் பிறகு அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் இங்கேதான் கொடுக்க வேண்டுமென்றால் அதற்கு இருக்கின்ற சட்டதிட்டப்படி நடவடிக்கை எடுக்கவேண்டும். மறுத்ததற்குப் பிறகு அவருக்கு வாய்ப்பே தராமல் மறுநாளே விளம்பரம் போட்டு எல்லாம் பண்ணினால் உடனே சுப்ரீம் கோர்ட்டிற்குப் போய்விடுவார்கள். உங்களுக்குத் தெரியும். சுப்ரீம் கோர்ட்டிற்கு எதற்கும் செல்கிறார்கள் என்பதை நான் சரியாகத்தான் சொல்லியிருக்கிறேன். அவர்களுக்கு மற்ற இடம் மறுக்கப்பட்டிருக்கிறது. லைசன்ஸ் இருக்கிறது என்பதை நான் சொல்லுகிறபோது சரியாகச் சொன்னேன்.

[பிற்பகல் 12—20]

**டாக்டர் மு. கருணாநிதி :** எத்தனையோ பேர்களுக்கு மறுத்து அவர்கள் எல்லாம் கோர்ட்டிற்குப் போயிருக்கிறார்களே இந்த நியாயமான காரணத்திற்காக மறுத்து நீங்கள் இவரை கோர்ட்டிற்கு அனுப்பியிருந்தால் என்ன!

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** யார் கோர்ட்டிற்குப் போனாலும் போகட்டும், அதைப்பற்றி இல்லை. அவர்கள் கேட்டதை மறுத்திருக்கிறோம். மறுத்த பிறகு அவர்கள் என்ன செய்ய வேண்டுமென்பது அவர்களுடைய கடமையாக இருக்கிறது. நம்முடைய கடமை இல்லை.

**டாக்டர் மு. கருணாநிதி :** மறுத்தீர்கள். அவர் குறிப்பிட்ட இடம் அவர் காட்டிய இடம் உள்ளபடியே இல்லை. அவர் தவறான ஒரு இடத்தைக் காட்டினார். அதற்குப் பிறகு அவருக்காகவே ஒரு புதிய ஜி. ஓ.வைப் போட்டு அவருக்கு அந்த இடத்தைத் தந்திருக்கிறீர்கள்; அந்த இடத்தில் உரிமம் கொடுத்திருக்கிறீர்கள், அதுதான் குற்றச்சாட்டு.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** குற்றச்சாட்டு செய்வதற்கு முன்பே குற்றச்சாட்டு, நல்ல குற்றச்சாட்டு, வேடிக்கையான குற்றச் சாட்டு. நான் முதலிலேயே குறிப்பிட்டேன். எனேபிளிங் பவர் சில நேரங்களிலே எல்லா சட்டங்களுக்கும் விதிகளுக்கும் உண்டு என்று சொல்லியிருக்கிறேன். அதைப் போலவே அதை மாற்றியிருக்கிறோமே யொழிய நாங்கள் சட்டம் போட்டு எத்தனையோ மாதமாகிவிட்டது. இந்த மாதிரி எங்கேயும் இக்கட்டான நிலை ஏற்படவில்லை. அவர் வைத்திருக்கிற இடத்தைக் கொடுப்பதற்கு தேவைப்பட்டால் கொடுக்கலாம் என்று போட்டிருந்தாலும்





அவர்கள் அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தவில்லை. ஆகவே அந்தச் சட்டம் போடப்பட்ட பிறகுகூட எனேபிளிங் பவர் கமிஷனருக்கு நீங்கள் இடத்தை மாற்றிக் கொடுக்கலாம் என்று அரசு உத்திரவு போட்டு அவர்களுக்கு வழிவகை செய்த பிறகுதான் சுப்பராம ரெட்டி மனுக்கொடுத்து வேறு இடம் கேட்டு மறுக்கப்பட்டுள்ளது. உங்களுக்குத் தெரியும் மறுத்திருக்கிறார்கள் என்றால் கொடுக்கவில்லை. அந்தச் சட்டம் சுப்பராமரெட்டிக்குப் போட்டு இருந்தால் மறுநாளே—முதலமைச்சராக இருந்திருக்கிறீர்கள், உங்களுக்குத் தெரியாததல்ல—அரசு முதல்நாளே சட்டம் போட்ட பிறகு மறுநாளே நடைமுறைப்படுத்த முடியும் என்பது தெரியும். எந்த அளவுக்கு அரசு நியாயமாக நடந்திருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும்.........

**திரு. க. அன்பழகன் :** அமைச்சர் அவர்கள் சொன்னதிலிருந்து எனக்கு விளங்கியது இவ்வளவுதான். லைசென்ஸும் கொடுத்தோம், அந்த இடத்தில் வைப்பதற்கு மறுப்பும் தெரிவித்து விட்டோம். அப்படியே பென்டிங்காக இருக்கிறது என்று பொருள்பட அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்கிறார்கள். அமைச்சர் அவர்கள் சொல்வது உண்மையாக இருக்குமானால் The licence is not in vogue, is not used, is not utilised. The business is not conducted என்று பொருளாகும். அப்படி அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** துணைத் தலைவர் அவர்களே, பேராசிரியர் நான் சொன்னதை சரியாகத்தான் சொல்லியிருக்கிறார்கள். நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். இதுவரையிலும் லைசென்ஸ் கொடுத்து அந்த இடத்தை பயன்படுத்தவில்லை வேறு இடத்திற்கு மறுக்கப்பட்டது என்றால், அவர் செய்யமுடியாது. அவர் செய்தால் சட்டப்படி குற்றவாளி. அப்படிச் செய்தால் அதை வைத்தேகூட காலி செய்துவிடலாம். பேராசிரியர் நான் சொன்னதைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் புரிந்துகொண்டிருக்கின்ற அளவுக்கு நான் விளக்கம் தந்திருக்கிறேன் என்பதிலே எனக்கு மகிழ்ச்சி.

**திரு. க. அன்பழகன் :** நான் சொன்ன அந்த வார்த்தைகள் அமைச்சருடைய கருத்து என்று சொல்வதாக இருந்தால் அந்த லைசென்ஸ் அடிப்படையிலேயே இன்றைக்கும் அந்த வியாபாரம் வேறுமுறையில் நடைபெறுகிறதா அல்லவா என்பதைப் பற்றி அரசாங்கம் இந்த அவைக்கு உறுதியாகத் தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சுப்பராமரெட்டிக்குக் கொடுக்கப்பட்ட லைசென்ஸ் அவர் வேறு இடம் கேட்கப்பட்டது மாற்றிக் கொடுக்க மறுக்கப்பட்டது. மறுக்கப்பட்ட பிறகு அவர் வேறு எந்த இடத்திலேயும் நடத்திருக்க முடியாது, நடத்தக்கூடாது. நடந்தினால் மதுவிலக்குச் சட்டத்திற்கு மீறியவராக அவர் கருதப்படுவார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: சபைக்குத் தவறான தகவல் வருவதாக நான் அறிகிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி: துணைத் தலைவரவர்களே, அவருக்கு இந்த அரசு லைசென்ஸ் கொடுத்ததா இல்லையா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: லைசென்ஸ் கொடுத்ததா இல்லையா என்பதை நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரிடத்திலே லைசென்ஸ் காப்பியிருக்கிறது. அதைப் படித்தால் நன்றாகத் தெரியும். கொடுத்திருக்கிறது. அடுத்து, நான் அவைக்குத் தவறான தகவலைக் கொடுக்கிறேன். அதைப்பற்றி உடனே பரிசீலிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எண்ணுவதற்குக் காரணம், இன்றைக்கு தவறான தகவலைக் கொடுத்து விட்டால் நாளைக்கு இந்த அவையின் முன்னால் சங்கடப்பட வேண்டுமே, அவ்வாறு சங்கடப்படக்கூடாது என்ற நல்லெண்ணத்தில் சொன்னதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் தவறான தகவலைக் கொடுக்கவில்லை. அப்படிக் கொடுக்கின்றபொழுது அதைத் திருத்திக் கொள்வதற்கும் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஐ. எம். எஃப். எஸ். மொத்த வியாபார உரிமையைப் பொறுத்தவரைக்கும் உயர்நீதிமன்றத் தீர்ப்புப்படி லட்சுமணப் பெருமாளுக்கு உரிமை வழங்கப்பட்டது. இந்த நேரத்தில் ஒன்றைச் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் தஞ்சாவூர் சாராயக் கலவை ஆலையைப் பொறுத்தவரையிலும் வருமான வரி இலாக்காவால் சோதிக்கப்பட்டதாகவும், அந்தச் சோதனையில் பின்வருமாறு தெரிவித்ததாகவும் சிலவற்றை இங்கே படித்தார். நான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆலையில் வருமானவரி துறையினால் சோதனை நடத்தப்பட்ட விவரம் அரசிடம் இல்லை. உரிமைதாரர் திரு. ராமானுஜம் என்பவருக்கு பினாமி இல்லை. தனது சொந்த மதிப்பின்



அடிப்படையிலேயே உரிமம் பெற தகுதியுள்ளவர் என்ற உண்மையை விசாரணையின் மூலம் அறியப்பட்டது. உரிமைதாரர்தான் விண்ணப்பம் போடும்பொழுது தகுதிக்குத் தேவையான எல்லா நிபந்தனைகளையும் உட்படுவதாகவும் உறுதிமொழி அளித்தார். அந்த அடிப்படையிலே ஆணையாளர் முடிவெடுத்தபொழுது அவரைப் பினாமியாகக் கருதவோ அல்லது எதிர்க்கட்சித் தலைவர் கூறுவதுபோல, நிறுவனத்தின் ஒரு சிறிய பங்குதாரர் என்றோ கருவதற்கோ இடமில்லை. ஆகவே, அவர் தகுதியுடையவர் என்று தேர்ந்தெடுக்கப்பட்டு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் வருமான வரித் துறையினர் கூறியுள்ளதாகச் சொல்லப்படும் கருத்தை அரசு மறுக்கிறது.

அதேநேரத்தில் இன்னொன்றைச் சொல்லவேண்டும். இப்பொழுது நான் தஞ்சாவூர் பற்றி வந்துவிட்டேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் இதுபற்றிப் பேசும்பொழுது, சோதனை செய்தவர்களின் தகவல்படி 1981 அக்டோபர் மாதம் 3 இலட்சம் லிட்டர் எரிசாராயம் கொடுக்கப்பட்டிருப்பதாகக் கூறினார். அந்த அடிப்படையில் 7 இலட்சம் லிட்டர் சாராயம் தயாரிக்கப்பட்டதாகக் கூறினார். துறையின் தகவல்படி இந்தச்செய்தி தவறானது. 1981 அக்டோபர் மாதம் தஞ்சையில் கலவை ஆலைக்கு ஒதுக்கப்பட்ட எரிசாராய அளவு 3 இலட்சம். அது எடுத்துக்கொண்ட அளவு 2.01 இலட்சம். அது சாராயம் செய்த அளவு 1.9 இலட்சம். உற்பத்தியான சாராயம் 4.5 இலட்சம். விற்பனையான சாராயம் 4.38 இலட்சம் ஆகவே, 7 இலட்சம் லிட்டர் தயாரிக்கப்பட்டது. என்ற செய்தி தவறானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12·30]

திரு. க. அன்பழகன்: துணைத் தலைவர் அவர்களே அமைச்சர் அவர்கள் சொன்ன ஒரு புள்ளி விவரத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது, வாங்கியது, 2.1 இலட்சம் என்று தெரிவித்தார்கள். அமைச்சருடைய புள்ளி விவரத்தைப் பற்றிதான் கேட்கிறேன். அதிலிருந்து தயாரான சாராயம், அதைவிட குறைவான அளவுக்கு வடித்தார்கள்; மூன்று புள்ளி என்றார்கள். ஆகவே, உண்மையான புள்ளி என்ன என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: நான் சரியாகத்தான் படித்தேன். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் சொல்லுகிறபொழுது, 3 புள்ளி இலட்சம் லிட்டர் சாராயம் எடுத்து, 7½ இலட்சம் லிட்டர் சாராயம் தயாரிக்கப்பட்டது. அதில் எவ்வளவு இலாபம் என்பதை இன்றைக்கு இந்த

வருமான வரி இலாகாவினர் சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவருக்கு வருமான வரி இலாகாவினர் சொன்னதை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதிலே ஒன்றும் தவறில்லை................

டாக்டர் மு. கருணாநிதி : வருமான வரி இலாகாவினுடைய தகவலின்படி, அவர்கள் தங்கள் மேலதிகாரிகளுக்குத் தந்திருக்கிற தகவலின்படி, ரூ. 10 இலட்சம் மாதம் ஒன்றுக்கு இந்த பாக்டரிக்கு வருகிறது. அமைச்சர் கூறுவது, ரூ. 10 இலட்சம் அல்ல, ரூ. 7 இலட்சம் அல்லது ரூ. 8 இலட்சம் என்ற அளவுக்குச் சொல்கிறார். எப்படியும் ரூ. 1 கோடியை எட்டுகிற அளவுக்குதான் ஒவ்வொரு ஆண்டும் அவர்களுக்கு வருமானம் வருகிறது. ஆனால், இந்த இராமானுஜம் பினாமிதார் என்று வருமான வரி இலாகா அழுத்தந்திருத்தமாகச் சொல்லியிருக்கிறது. அவருக்கு 2 சதவிதம் ஷேர்தான் இருக்கிறது என்பதையும் வருமான வரி இலாகா சொல்லியிருக்கிறது. அதையும் அமைச்சர் மறுத்தால் அதற்கு வருமான வரி இலாகாதான் பதில் சொல்லவேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருமான வரி இலாக்காவைப் பற்றி, என்னைப் பொறுத்த வரையிலே என்றைக்குமே எனக்குக் கவலை இல்லை. அந்த வருமான வரி இலாகா சொல்வது தவறு என்று எனக்குப் பட்டால், துணிந்து, தெளிவாக, உறுதியாக, தவறு என்று என்னாலே சொல்ல முடியும். ஆனால், அங்கே வருமானவரி இலாகா என்ன சொல்லியதோ அதை நீங்கள் சொன்னீர்கள். நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், வருமான வரி இலாகா சொல்வது, 3 இலட்சம் என்றிருக்கும்போது, இதிலே 1.9 இலட்சம்தான் உபயோகப்படுத்தியிருக்கிறார்கள் என்ற கணக்கு எனக்கு வருகிறபோது வருமான வரி இலாகா சரியான கணக்கு வைக்கவில்லல யென்பதுதான் பொருளாகும். வருமான வரி இலாகா மேல்வாரியாக 3 இலட்சம் போட்ட அந்த அரசு ஆர்டரை வைத்துக்கொண்டு அந்த முடிவுக்கு வந்திருக்கக் கூடும். ஆனால், இன்றைக்கு நடைமுறையில் எவ்வளவு கொடுத்தோம், எவ்வளவு எடுத்தார்கள், எவ்வளவு பயன்படுத்தினார்கள், எவ்வளவு விற்றார்கள் என்பநுதான் இன்றுள்ள கணக்குகள். அந்தக் கணக்கைச் சொல்லும்போது பேராசிரியர் அவர்கள் ஒரு சந்தேகத்தை கிளப்பினார்கள். சாராயம் எடுத்த அளவு 1.9 இலட்சம், அதிலே, உற்பத்தியான சாராயம் 1.9 இலட்சத்தில் 4.5 இலட்சம்தான் என்று நான் கணக்குக் கொடுத்தேன். விற்பனையானது 4.38 இலட்சம்தான் என்பதைச் சொன்னேன், 7 இலட்சம் இல்லை என்பதைத்தான் நான் தெரிவித்தேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



மது விலக்குக் கொள்கையைத் திருத்திய பொழுது புதிய உரிமங்கள் வழங்குவது பற்றி விவரமாகப் பரிசீலனை செய்து, சாராயக் கலவை ஆலைகள், சராாய மது விற்பனை, ஐ. எம். எப். எஸ். மது விற்பனை, சாராயம், அதைப்போல் சில்லரை விற்பனைக்கு விரிவாகவும் தெளிவாகவும் விதிமுறைகளைத்தயார் செய்து அவற்றின் அடிப்படையிலேதான் நிர்வாகம் இயங்க வேண்டுமென்ற ஒரே குறிக்கோளில் இயங்கி 1981-மே, ஜூலை மாதங்களில் எல்லா விதிகளும் எழுதப்பட்டன. பழைய அரசு இயங்கி வந்தபொழுது சில தவறுகள் இருந்திருக்கும் என்று முதலிலே நம்முடைய ஜஸ்டிஸ் சதாசிவம் அவர்கள் சொன்னதை மனதில் வைத்து, அவை எவையும் இல்லாமல் இருப்பதற்காகத்தான் இவைகளையெல்லாம் செய்தது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். உதாரணத்திற்கு, இதைப்போல் எல்லா மது விற்பனை உரிமைகள் பெற்றவர்கள் சில நேரங்களில், உயர்நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். எல்லோரும் செல்லவில்லையென்பதையும் நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு 1970—71-ல் மது விலக்கு நிறுத்தியிருந்தபொழுது இருந்த நிலைமைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அப்பொழுது வடிசாலைகளுக்கு சாராயக்கலவை செய்ய அனுமதி இருந்தன அவர்களுக்குச் சாராய மொத்த விற்பனை உரிமை, 1972—73ல் 1973—74-ல் அளிக்கப்பட்டது. முறைகேடுகள் அதனால் நிகழ்ந்தன. ஐ. எம். எப். எஸ்.களைப் பொறுத்தவரை, சென்னையில் 7, 8 உரிமையாளர்கள் மாநிலம் முழுவதும் மொத்த விற்பனை செய்து, ஏகபோக உரிமை கொண்டாடி, பெரும் அளவில் இலாபம் சம்பாதித்தார்கள். இந்த நிலமையை மாற்ற, மாவட்டத்திற்கு ஒரு ஐ. எம். எப். எஸ். மொத்த விற்பனையாளர் தேர்தெடுக்கப்பட வேண்டும். அதுவும் விதிமுறைகளுக்குட்பட்டு, கட்டுப்பாட்டுடன் இயங்கி வரவேண்டுமென்ற அடிப்படையில்தான் இவைகளை எல்லாம் செய்திருக்கிறேன் என்பதையும் நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம். இவற்றின் மூலமாக அரசுக்கு எவ்வளவு கூடுதலாக வருமானம் கிடைக்கவேண்டுமோ அந்த அளவுக்கு வழி செய்திருக்கிறாம். 1971—72-ல் அரசுக்கு மொத்த வருமானம் ரூ. 22.37 கோடி 1972—73-ல் வருமானம், அரசுக்கு ரூ. 39.31 கோடி, 1973—74-ல் வருமானம் ரூ. 56·5 கோடி. புதிய மது விலக்குக் கொள்கை இவ்வாண்டு அமுலுக்கு வந்த பிறகு, 1981—ஆம் ஆண்டு ஜூலை 16-ஆம் தேதி முதல் 1982 வரை, 7½ மாதத்திற்கு அரசு எதிர்பார்த்த வருமானம் ரூ. 100 கோடிக்கு மேல் 1983-ஆம் ஆண்டில் ரூ. 140 கோடி எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, முன்பிருந்ததைவிட பல மடங்கு கூடுதலாக அரசுக்கு இந்தத் துறையிலிருந்து வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது என்றால் அதை நஷ்டம் என்று எப்படி கூற முடியும்?

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1982 மார்ச் 10

மேலும் புதிய மதுவிலக்குக் கொள்கை மூலம் ஒரு லட்சம் பேர்களுக்கு மேலாக வேலைவாய்ப்புகள் கிடைத்து வருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

அதே நேரத்தில் 1969ஆம் ஆண்டு, 1975 ஆம் ஆண்டுகளில் என்ன நடந்தது என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். 1974—75—லே மேற்கு வங்கத்திற்கு எரிசாராயம் ஏற்றுமதி செய்யக் கோரி, அந்த மாநில அரசு உரிய ஆயத்தீர்வை கட்டவும் சம்மதித்துக் கடிதம் எழுதியும் அப்போது இருந்த அரசு டிநேச்சர்டு ஸ்பிரிட் அனுப்பியதிலே எக்சைஸ் டூட்டி கொடுக்காமல் அனுப்பியதால் அரசுக்கு 73 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. 1975 ஆம் ஆண்டு போலி நபர்கள், போலி கம்பெனிகள் பேரில் டிநேச்சர்டு ஸ்பிரிட் என்ற பெயரால் எரி சாராயத்தை அனுப்பி அதை இந்த மாநிலத்தில் கள்ளச் சாராயம் காய்ச்ச பயன்படுத்திய வகையிலே ரூபாய் 5.6 லட்சம் இழப்பு ஏற்பட்டதாக கணக்குகள் கூறுகின்றன. 1975 ஆம் ஆண்டு வெளிமாநிலங்களுக்கு அனுப்பியதாகச் சொல்லி, தமிழ்நாட்டிலே கள்ளச்சாராயத்துக்குப் பயன்படுத்த ஏதுவான வகையில் செய்த நடவடிக்கையால் அரசுக்குத் தீர்வையாக 50 இலட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டது. 1975 ஆம் ஆண்டு தொழில் செய்யாமல் இருந்தவர்கள் தொழில் செய்வதற்காக ஸ்பிரிட் என்ற பெயரால் எரிசாராயத்தை வழங்கியதில் அரசுக்கு 11 இலட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டது. (குறுக்கீடு) இப்படி எல்லாம் நான் சொல்லுகிறபோது ஏதோ நான் படித்துக் கொண்டே போகிறேன் என்று கருதக் கூடாது. உங்களுக்கு சொல்லவேண்டுமானால்...........

The report of the Committee on Public Accounts and the report of Comptroller and Auditor-General of India for 1974-75 and 1975-76

அதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

Rectified spirit is produced by distillation of fermented wash prepared out of molasses. The minimum yield of alcohol is fixed as 200 litres per metric tonne of molasses. The Audit has pointed out a short fall of 38.99 lakh litres in the production of alcohol in two distilleries during April 1972 to June 1974 on the basis of the minimum yield referred to above and the consequent loss of revenue is Rs. 277.80 lakhs under the excise and gallonage fee. இப்படிப்பட்டவைகள் எல்லாம் வந்திருக்கின்றன.



1982 மார்ச் 10]

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** துணைத் தலைவர் அவர்களே அந்த 2 டிஸ்டிலரிஸ்கள் மீதும் அவைகள் தப்பு செய்திருந்தால் அவர்களுடைய லைசன்ஸ்களை ரத்து செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** துணைத் தலைவர் அவர்களே ஆடிட் ரிப்போர்ட்டை படித்தேனே ஒழிய, நாங்கள் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்போவதில்லை. நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று சொல்வோம் என்றோ நான் சொல்லவில்லை. நீங்களும் அப்படி கருதமாட்டீர்கள் என்று கருதுகிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி :** துணைத் தலைவர் அவர்களே, ஆடிட் ரிப்போர்ட்படி அந்த தொழிற்சாலைகள் தவறு செய்திருக்குமானால் அந்தத் தொழிற்சாலைகளின் மீது எந்த நடவடிக்கையை இந்த அரசு எடுத்தாலும் அதை திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பாக நாங்கள் ஆதரிக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் இங்கே சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு, இவைகள் எல்லாம் மாற்றுக் குற்றச்சாட்டுகளாக அமைச்சர் அவர்கள் கருதுவார்களேயானால் அது வேறு விவகாரம். எடுத்துச் சொல்லப்பட்டக் குற்றச்சாட்டுகள் தனிப்பட்ட சில பேர்களுக்கு சலுகை அளிக்கின்ற முறையிலே வேண்டியவர் வேண்டாதவர்கள் என்ற வகையிலே இங்கே உரிமங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றது, என்று நேற்றைய தினம் எடுத்துக் காட்டப்பட்டன. அதற்கு அமைச்சர் அவர்களுடைய எந்தப் பதிலும் திருப்திகரமாக இல்லை என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே நான் சொல்கிறபோது ஒவ்வொன்றையும் சொல்லிவிட்டு, எதிர்க்கட்சித் தலைவரைப் பார்த்து நீங்கள் ஏதாவது மேற்கொண்டு சொல்கிறீர்களா என்று பார்த்து, ஒவ்வொன்றையும் சொல்லியிருக்கிறேன். அதிலிருந்தே நான் எந்த அளவிற்கு அவர்களைத் திருப்திப் படுத்த வேண்டும் என்று நினைக்கிறேன். என்பதைப் புரிந்து கொள்ள முடியும். உண்மை எந்த அளவிற்கு இருக்கிறது, அந்த உண்மையைச் சொல்கிறபோது தெளிவாகச் சொல்லவேண்டும் என்று எண்ணித்தான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எவ்வளவு முறை வேண்டுமானாலும் எழுந்து கேட்கட்டும் நாம் திரும்ப அதற்கு பதில் சொல்லிக்கொள்ளலாம் என்று உட்கார்ந்து அவருக்குப் பேச வாய்ப்புக்கொடுத்தேன்.

(பிற்பகல் 12-40)

அதுமட்டுமல்ல, சில சட்டமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சித் தலைவர் எங்கே சில பிரச்சனைகளைப் பற்றிக் கேட்காமல் விட்டு விடுவார்களோ என்று நம்பிக்கைக் குறைவு இருக்குமானால், நீங்களே எழுந்து அதை என்னிடத்தில் சொல்லலாம், என்றும் நான் அவர்களிடம் உள்ள அன்பின் காரணமாக

தெரிவித்தேன். அதற்குப் பிறகும் திருப்திப் படவில்லை என்று சொன்னால் நான் என்ன சொல்வது. எல்லாவற்றையும் பற்றி கிளியராகத்தான் பேசியிருக்கிறேன் என்பதைக் சொல்லிக்கொள்கிறேன்.

இங்கே ஸ்பிரிட் எல்லாம் எங்கே அனுப்பினார்கள் என்பதை குறிப்பிடப்பட்டு இருக்கிறது. பொறுப்பில் இருந்தபோது சாராய உற்பத்தி, வினியோகம், விற்பனை, இதர மாநிலகளுக்கு அனுப்புதல் போன்ற பல நிலைகளில் ஏற்பட்ட முறைகேடுகள் நமது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. இதனால் அரசின் வருவாய் மெதுமாக பாதிக்கப்பட்டு, மது விலக்குத் திட்டம் சரியாக இயங்க முடியாத நிலையில் இருந்தது என்பதை யாவரும் அறிந்ததே. 1976– ஆம் ஆண்டு குடியரசுத்தலைவர் ஆட்சியில் இந்த முறைகேடுகளைக் களைந்து எரிய முதல்கட்டமாக நீதிபதி சதாசிவம் அவர்கள் தலைமையில் விசாரணைக்குழு ஆரம்பிக்கப்பட்டது. எப்படிப் பட்ட முறைகேடுகள் நடந்து உள்ளன என்பதைப்பற்றியும் நான் பேசுகிறபோது சொல்லவிரும்புகிறேன்.

சென்னையிலும் அதன் பகுதியிலும் பல பேருக்கு வார்னிஷ் செய்வதற்கு, மோட்டார் ஸ்பிரிட் செய்வதற்கு பல விதிகளைக் காரணம் காட்டி அவற்றின் அடிப்படையில் எரி சாராயத்தை தயாரிக்க அனுமதி கொடுக்கப்பட்டது. அதனை அவர்கள் கள்ளச்சாராயமாக விற்க வகை செய்தார்கள். இதனை டிநேச்சர்ட் ஸ்பிரிட் என்று கணக்கு எடுத்துக் காட்டியதால் அரசுக்கு எரி நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது. இது போல் அவர்களுக்கு முக்கியமானவர்களுக்கு மட்டும் ஏறக்குறைய 5 இலட்சம் மாமூலாக ஆண்டு ஒன்றுக்கு வழங்கப் பட்டது. இதனால் அரசுக்கு கணிசமான அளவில் இழப்பு ஏற்பட்டது. இதில் சம்மந்தப்பட்ட தட்சிணாமூர்த்தி என்பவர் சாராயம் கலந்த மருந்துப் பொருள்களை தயாரிப்பு செய்வதற்காக கொடுக்கப்பட்ட உரிமையின பேரில் சென்னை குரோம்பேட்டை தமிழ்நாடு கெமிக்கல்ஸ் என்ற சிறிய நிறுவனம் மருந்துப்பொருள்கள் செய்யாமல் சாராயமாக மாற்றி விற்று இருக்கிறார்கள். அந்த மருந்துப் பொருள்களை அரசு மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டு இருப்பதாக ஆவணங்கள் தயார் செய்து பல இலட்சக்கணக்கான தொகைக்கு வரி விலக்கு அனுமதிக்கப்பட்டுவிட்டது. இவைகள் எல்லாம் அன்றைக்கு இருந்த முதலமைச்சருக்கு, அவருடைய கவனத்திற்கு அப்போதே கொண்டு வரப்பட்டு இருக்கலாம் என்று கருதுகிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி :** அமைச்சர் குறிப்பிட்ட தட்சிணாமூர்த்தி என்பவர் எமர்ஜென்சி காலத்தில், தி.மு.க. ஆட்சிக் காலத்திலேயே மிசா கைதியாக அவர் இப்படிப்பட்ட கள்ளச்சாராயம் போன்றவைகளில் ஈடுபட்டார் என்பதற்காகக் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார் என்பதையும் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.



**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** துணைத் தலைவர் அவர்களே, இதை நான் படிக்கிறபோது என்ன என்னவோ படிக்கிறேன் என்று நினைக்கக்கூடாது. அக்கௌண்டென்ட் ஜெனரல் அவர்கள் கணக்கைப் பரிசோதனை செய்து பெரிய மோசடி நடந்து இருப்பதாகவும் மற்றும் எரிசாராயம் தயாரித்தல் போன்ற தவறுகள் நடந்து இருப்பதாகவும் தெரிவித்துள்ள அறிக்கையைப் படித்தேனே தவிர வேறு ஒன்றுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரியார் மாவட்டம் பவானி வட்டத்தில் பெரியபுலியூர் காமதேனு டிஸ்டில்லரி என்ற நிறுவனத்தில் சாராயம் கலவி செய்ய ஆரம்பித்தல் வழிவகை செய்யப்பட்டது. சக்தி சுகர் ஆலையில் வடிசாலையிலிருந்து கொண்டு வந்த சாராயம் தயார் செய்தார்கள். இதில் நடந்த முறைகேடுகள் யாவும் அறித்து பின்னர் இதற்கு வடிசாலை உரிமம் வழஙகப்பட்டது. 1975 ஆம் ஆண்டு வடிசாலையிலிருந்து போலியான நபர்களின் பெயர்களில் போலியான கம்பெனிகளுக்கு வெளிமாநிலங்களுக்கு ஸ்பிரிட் அனுப்புவதாகக் கூறி நம்முடைய மாநிலத்திலேயே கள்ளச் சாராயத்துக்குப் பெருவாரியாகட் பயன்படுத்தப் பட்டது. குறிப்பாக ஏகாம்பரம் என்பவருக்கு ஆந்திர மாநிலத்தில் 30–9–75, 7–11–75 தேதிகளில் 17 இலட்சம் டிநேச்சர்ட் ஸ்பிரிட் அனுப்புவதாகச் சொல்லி அனுமதி கொடுத்தது. அதுவும் ரெக்டிபைட் ஸ்ப்பிரிட்டாகவே கொடுக்கப்பட்டு நமது மாநிலத்திலே கள்ளச்சாராயத்துக்குப் பயன்படுத்தப்பட்டுவிட்டது. இதனால் அரசுக்கு பெருத்த நஷ்டம்.....

**டாக்டர் மு. கருணாநிதி :** துணைத் தலைவரவர்களே, போத் பெர்மிட் தயாரித்து இப்படி மோசடி செய்தவர் கைது செய்யப்-பட்டாரா இல்லையா ? அவர் மீது வழக்கு தொடரப்பட்டதா ? இல்லையா ? அப்படி நடைபெற்ற வழககிலிருந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் ஆட்சிகாலத்திலேதான் அவர் விடுதலை பெற்றார் என்பது உண்மையா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இதே போன்று 18–3–75–லே காடாம்புலியூர் வடிசாலையிலிருந்து கோவா மாநிலத்திற்குப் போலியான நிறுவனத்துக்கு அனுப்ப 16 ஆயிரம் லிட்டர் அனுமதி வழங்கப்பட்டு, அதையும் நம்முடைய மாநிலத்திலே கள்ளச்சாராயம் தயாரிக்க பயன்படுத்தப்பட்டது. மேலும் 18–5–75, 20–5–75 ஆகிய தேதிகளில் கேரளாவுக்கு டினேச்சர்ட் ஸ்பிரிட் அனுப்புவதாகச் சொல்லி போலியான நபர்களின் பெயரால் பெர்மிட் தயார் செய்து திரு. ரோசாரியோ என்பவர் மூலம் அனுப்பியதாகச் சொல்லி ரெக்டிபைட் ஸ்பிரிட் வடிவங்களிலிருந்து எடுத்து இந்த மாநிலத்தில் கள்ளச்சாராயமாக வினியோகிக்கப்பட்டது.

இதேபோன்று செங்கற்பட்டு ஓரியன் வடிசாலையிலிருந்து போலி பெர்மிட்கள் மூலம் சுமார் ஒரு இலட்சம் லிட்டர் டினேச்சர்ட் ஸ்ப்ரிட் ஆந்திர மாநிலத்திறகு அனுப்பியதாக கூறி ரெக்டி பைட் ஸ்பிரிட் 28–12–74, 26—6—75 ஆகிய தேதிகளில் கொடுக்கப்பட்டு அத்தனையும் இந்த மாநிலத்திலே கள்ளச்சாராய வியாபாரிகளுக்குத் திருப்பப்பட்டுள்ளது. இப்படி வெளிமாநிலஙகளுக்கு அனுப்பப் பெர்மிட் வழங்கும் போது 1974–75 ஆகிய ஆண்டுகளில் வெளிமாநிலத்தின் அனுமதிச் சீட்டு இல்லாமலேயே பெர்மிட் வழஙகப் பட்டுள்ளது. கள்ளச்சாராயம் தொடர்ந்து கிடைக்க வேறு முறைகேடான வழிகளில் வடிசாலையிலிருந்து எரிசாராயம் வழங்கப்பட்டபோது இதற்கு வடிசாராயம் பல விதிமுறைகளின்படி பயன்படுத்தப் பட்டிருக்கிறபோது.... (குறுக்கீடு)வடிசாலையில் ரெக்டிபைட் ஸ்பிரிட் குறைத்து சணக்கில் வைக்க அனுமதிக்கப்பட்டு இருக்கின்றது. இது எல்லாம் நானே சொல்லவில்லை—இது குறித்து அக்கவுன்டென்ட் ஜெனரல் அவர்கள் திருச்சி வடிசாலையிலிருந்தும் இதர வடிசாலையில் இருந்தும் உரிமம் வீதத்தில் ஸ்பிரிட் தயார் செய்ய தவறி விட்டதால் அரசுக்குப் பல கோடி ரூபாய் நஷ்டம் என்று எழுதி உள்ளார்கள்.

1975 ஆம் ஆண்டு ஈரோடு காமதேனு வடிசாலையிலிருந்து கேரளாவிலுள்ள சித்தோறு சர்க்கரை ஆலைக்கு என 12 லட்சம் லிட்டர் கொடுக்கப்டட்டு அதில் 4.69 லட்சம் ஸ்பிரிட் போய் சேர்ந்ததற்கு ஆதாரம் இல்லை. இதையும் நமது மாநிலத்திலே கள்ளச்சாராயத்துக்கு பயன்படுத்திய வகையிலே அரசுக்கு பல கோடிரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. (குறுக்கீடு) 20–10–75–ல் காமதேனு வடிசாலையிலிருந்து வெளி மாநிலஙகளுக்குச் அனுமதிச் சீட்டு இல்லாமலேயே ஒரு இலட்சத்து 30 ஆயிரம் லிட்டர் ரெக்டி. பைட் ஸ்பிரிட் அனுப்பியதாக எழுதி அதையும் நம்முடைய மாநிலத்திலேயே கள்ளச்சாராயத்துக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

1975-ல் அரவிந்த் வடிசாலையிலிருந்து கல்கத்தாவிலுள்ள .........(குறுக்கீடு).

(பிறபகல் 12.50)

**திரு. க. அன்பழகன் :** சட்டமன்றத்திலே அமைச்சரவர்கள் விடை அளிக்கிற போது ஒரு புள்ளி விவரம் தெரியாவிட்டால் படித்துக் காட்டலாமே தவிர எழுதி வைத்துக்கொண்டிருக்கிற விடை முழுவதையும் படிப்பது என்பது அமைச்சருடைய நிலைக்கு பதிலளிக்கிற நேரத்தில் 2 மணி நேரம் பதிலளித்த பிறகும் படித்துக் கொண்டே இருப்பது என்பது எப்படிப் பொருத்தமாகும் என்பது ஒன்று.

ஏற்கெனவே வந்திருக்கிற ரிப்போர்ட்களிலே வந்திருப்பதை அப்படியே படிப்பதற்கு ஒரு அமைச்சருடைய தகுதி வேண்டியது அவசியம் இல்லை. ரிப்போர்ட்டில் வந்திருப்பது ஏற்கெனவே நாங்கள் படித்ததுதான். சதாசிவம் கமிஷன் ரிப்போர்ட்டும் நாங்கள் படித்ததுதான். ஏற்கெனவே இருந்த அரசாங்கத்தின் மீது ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்ட்டும் நாங்கள் படித்தது தான். ஏதோ அவைக்குத் தெரியாத ஒரு செய்தியை இந்த அவைக்குத் தெரிவிப்பதைப் போல எழுதி வைத்துத் தொடர்ந்து படிப்பது ஒரு அமைச்சருடைய நடைமுறையிலே ஏற்றுக் கொள்ள தக்கதுதானா ? என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** துணைத் தலைவர் அவாகளே, அவையிலே சில குறிப்புகளை வைத்துக் கொண்டு பேசுவது உண்டு. சில நேரங்களிலே குறிப்புகள் தவறாமல் இருப்பதற்காக குறிப்புகளைப் பார்த்து படிப்பதும் உண்டு. நான் பேசியபோது தேதிகளைச் சொல்ல வேண்டும் என்பதற்கும், பெயர்களைச் சொல்லவேண்டும் என்பதற்கும், எவ்வளவு லிட்டர்கள் என்பதைச் சொல்லவேண்டும் என்பதற்காகவும் படித்தேன். 3, 3 வரிகள் வருகின்றன. அவைகளை நான் எப்படி மனப்பாடம் செய்ய முடியும்.

**திரு.க. அன்பழகன் :** நீங்கள் சொன்ன அத்தனையையும் நான் ஒப்புக் கொள்கிறேன். நீங்கள் சொன்ன அத்தனையும் உண்மைதான். ஆனால் என்ன நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது. அதன்மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது இந்த அரசு என்று தெரிவிப்பதாக இருந்தால் அதைத் தெரிவிக்கிறபோது அதற்கு ஒரு மரியாதை உண்டு. ஆனால், நடந்தது, நடந்தது, நடந்தது என்று நடந்துகொண்டிருக்கிற முறையிலே படித்துக் கொண்டிருப்பது ஏற்றதல்ல.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** யார் தவறு செய்தாலும் நிச்சயமாக நடவடிக்கை எடுப்போம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

1975-ல் அரவிந்த் வடிசாலையில் இருந்து கல்கத்தாவில் இருக்கிற ''ஸ்பிரிட் ஹேவர்வுஸ்'' என்னும் நிறுவனத்திற்கு 14·34 லட்சம் லிட்டர் டிநேச்சர்ட் ஸ்பிரிட் அனுப்பியதாக உள்ளது. ஆனால் இதில் 7.1 லட்சம் லிட்டர் ரெக்டிபைட் ஸ்பிரிட்டாகக் கொடுக்கப்பட்டு இந்த மாநிலத்திலே கள்ளச் சாராயமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதனால் அரசுக்கு ஏராளமாக நஷ்டம் வந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1975ஆம் வருடம் பிப்ரவரி மாதம் வரையில்........

**திரு. க. அன்பழகன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், தொடர்ந்து அமைச்சர் அவர்கள் படிக்கிற முறை இருக்குமானால் நாங்கள் இந்த அவையை விட்டே வெளியேற வேண்டியிருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர்கள் தாங்கள் விரும்பும் விததில் பதில் கொடுக்கலாம்.

திரு. க. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குற்றச் சாட்டை சொல்லட்டும். உரிமை இல்லை என்று சொல்லவில்லை. அவர்கள் மீது ஆயிரக் கணக்கில் சொல்கிறபோது அவர்களும் சொல்லவேண்டாமா ? தாராளமாகச் சொல்லட்டும். ஆனால் அந்தக் குற்றச் சாட்டு யார் மீது குற்றம் என்று இன்னும் நிரூபிக்கப்பட வில்லை. ஏற்கெனவே சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகளை இந்த அரசு இத்தனை ஆண்டுகாலம் பரிசீலனை பண்ணவில்லையென்றால் ஆட்சியிலே இருப்பதேகூட அவ்வளவு நல்லதல்ல. பரிசீலனை பண்ணியிருந்தால் நடவடிக்கை கூட நீங்கள் எடுத்திருக்கலாம். அந்தக் குற்றச்சாட்டை, பழைய கணக்கிலே இருக்கிற பாக்கியைச் சொல்வதன் மூலமாக இன்றைக்குச் சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு பதிலாகக் கருதி, தொடர்ந்து படித்துக் கொண்டிருக்கிற முறையை நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாரா யில்லை. வேண்டுமானால் நீங்கள் சொல்லுங்கள், ''அப்பொழுது நடைபெற்றது, இப்பொழுது நடைபெறுகிறது'' என்று. ஆனால் குற்றச் சாட்டைத் திரும்ப ரிப்போர்ட்டிலே இருந்து எடுத்துப் படித்துக் கொண்டே இருப்பதுதான் விடை என்று சொன்னால் இந்த அமைச்சரவையிலே ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு முறையாக இருக்குமானால் இந்த சட்டமன்றத்தை மதிக்கிற ஒரு முறை அல்ல அது என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மமாண்புகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத்தலைவர் அவர்களே, நான் சட்டமன்றத்தையும் மதிக்கிறேன் ; அமைச்சர் களையும் மதிக்கிறேன் ; எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும் மதிக்கிறேன். எல்லா உறுப்பினர்களையும் மதிக்கிறேன். ஆனால் சில புள்ளிவிவரங்களைச் சொல்லுகிறபோது அதைப் படிக்கிறேன். நன்றாகப் பேசுகிற உறுப்பினர் திரு. ரகுமான் கான் கூட சில காகிதங்களை வைத்துக் கொண்டு பேசுகிறார் புள்ளிவிவரத்தைத்தான் நான் படிக்கிறேன்.

1975 பிப்ரவரி முதல் 1976 பிப்ரவரி வரை வடிசாலையில் மொலாசசைப் பயன்படுத்தி குறைவாக எரிசாராயம் உற்பத்தி செய்ததாக அரசுக்குத் தவறான கணக்குக் காட்டியதால் அரசுக்கு ஏற்பட்ட வருமான இழப்பு ரூ. 75 இலட்சம் என்று நான் சொல்லவில்லை, ஆடிட்டர் ஜெனரல் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட கள்ளச் சாராயம் எங்கே போகும் ? மற்றவர்கள் உடந்தையா இல்லையா என்பதைப் பற்றி ஆடிட்டர் ஜெனரல் அவர்கள் அங்கே அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.



இவைகளிலிருந்து பல கோடி ரூபாய் அரசுக்கு பல்வேறு விதங்களில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இவைகள் மீது அரசு நடவடிக்கை எடுக்கும்.

டாக்டர் மு. கருணாநிதி : சதாசிவம் கமிஷன் என்று ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டு அதிலே என்னென்ன குறைபாடுகள் ஏற்கெனவே 1969ல் இருந்து 1976 வரை நடைபெற்றது என்று குறிப்பிட்டுக் காட்டி, பத்திரிகைகளில் வெளிவந்ததை எல்லாம் மறுபடியும், இப்போது அமைச்சர் அவர்கள் படித்துக்கொண்டிருக்கிறார்கள். அது எல்லோரும் படித்து முடிந்த விஷயம். இப்போது கிளப்பப்பட்ட பிரச்னைகளுக்கு எந்தப் பதிலும் சரியாகச் சொல்லமுடியாத காரணத்தால் அந்தப் பழைய பல்லவியைப் பாடிக்கொண்டிருக்கிறார்கள். நானும் திருப்பி மறுபடியும் அம்த்கான், எரிசாராய ஊழல், கிளி என்றெல்லாம் சொல்லி மிக மோசமாக ஆகிவிடும். அதில் பல கோடி இதில் பல கோடி என்று சொல்லி மிகவும் மோசமாகிவிடும். பிறகு ப்ளண்டிங் யூனிட், பாட்லிங் யூனிட் எவ்வளவு முறைகேடுகள் நடைபெற்றன. யார் யார் எவ்வளவு பெற்றார்கள் பிறகு ஸ்டீல் ரிரோலிங் மில்ஸ் எவ்வளவு பேர்கள் வரி விலக்கில் அறுபது இலட்சம், எழுபது இலட்சம் பெற்றார்கள் என்று எடுத்துக்காட்ட முடியும், என்னால். அந்தளவிற்கு விவாதத்தை வளர்க்க வேண்டுமென்று விரும்பினால் வளர்த்தலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பதில் கொடுக்கும்போது சில நேரங்களில் ஸ்டாடிஸ்டிக்ஸ் கொடுத்துத்தான் கொடுக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் எந்தக் குற்றச்சாட்டை சாட்டினாலும் அதற்கு பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். உறுப்பினர்கள் தெரிவித்துள்ள கருத்துக்களுக் கெல்லாம் அவற்றைக் கவனித்து எந்த அளவிற்கு பதில் சொல்ல முடியுமோ சொல்லி இருக்கிறேன். சில விடப்பட்டிருந்தால் அவை கவனிக்கப்படும் என்று சொல்லி மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் திரும்பப் பெற்றுக் கொண்டு மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

### கோரிக்கை எண் 2. மாநில ஆயத்தீர்வை

திருவாளர்கள் தத. வேணுகோபால், செ. சிவசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

திரு இல. பலராமன் : அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையில் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

[1982 மார்ச் 10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''மானியக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத்தீர்வைத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,68,44,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 4 பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்— நிர்வாகம்.

திரு பாபு ஜனார்த்தனன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

திருவாளர்கள் கே. எம். தங்கமணி, கு. ரமணி ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றன.

திரு தி. கா. நல்லப்பன் அவர்களுடைய வெட்டுத் தீ:மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை ) னுள்ள கேள்வி—

''மானியக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,24,62,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

இ. கோரிக்கை எண் 12 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,21,79,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''

திரு. இ. ர. இராசமாணிக்கம்: துணைத் தலைவரவர்களே, கோவில் மடங்களுக்குச் சொந்தமான நிலங்களை சாகுபடி செய்யும் சாகுபடியாளர்களுக்கு சொந்தமாகப் பட்டா செய்து கொடுக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்..



1982 மார்ச் 10] [திரு. இரெ. இராசமாணிக்கம்]

''மானியக் கோரிக்கை எண் 12—தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,21,79,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : துணைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆலையங்களில் வேலை செய்யும் தொழிலாளிகளை அரசு ஊழியர்களாக அங்கீகரித்து அரசு கடை ,நிலை ஊழியர்களுக்கு உள்ள ஊதியம் வழங்காதது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 12—தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய—அறக்கட்டளைகள்—சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,21,79,000ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

[பிற்பகல் 1·00]

திரு. செ. சிவசாமி : துணைத் தலைவரவர்களே, பரமக்குடி வட்டம், இனமலூரிலுள்ள அச்சனிந்த கோவிலின் நிலங்கள் சம்பந்தமாக நடக்கும் வழக்கிற்காக பரமக்குடி அனுமார் கோதண்டராமசாமி கோவில் நிதியிலிருந்து செலவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 12—தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய—அறக்கட்டளைகள்—சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,21,79,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

ஈ. கோரிக்கை எண் 25— சின்கோனா.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 25—சின்கோனா என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,45,81,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்''.

திரு. ஈ. பாலன் : துணைத் தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்டங்களில் சின்கோனா மரங்கள் வளர்ப்பதற்கான திட்டங்களை நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 25—சின்கோனா என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,45,81,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, சின்கோனா மரங்களை மேற்கு தொடர்மலை பகுதிகளான செங்கோட்டை, புளியங்குடி, இராசபாளையம் பகுதிகளில் வளர்க்க ஆவன செய்யப்பட வேண்டியதன் அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 25—சின்கோனா என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,45,81,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

திரு. மு. அப்பாத்துரை : துணைத் தலைவரவர்களே, கொள்கைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 25—சின்கோனா என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,45,81,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்.''

(உ) கோரிக்கை எண் 45—காட்டு வளத் துறை

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 45—காட்டுவளத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 9,31,58,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்''.

திரு. ப. சுந்தரம் : துணைத் தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டம் ஜவ்வாது மலை மற்றும் ஏலகிரி மலை ஆகிய இடங்களில் விளையும் சந்தன மரத்தை கொண்டு சந்தன ஆயில் தயாரிக்க புதிய தொழிற்சாலை ஏற்படுத்துவதை குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 45—காட்டுவளத் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 9,31,58,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : துணைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான டன் ரப்பர் உற்பத்தி செய்த பிறகும் அதை பயன்படுத்தி ஒரு டயர் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 45—காட்டுவளத் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 9,31,58,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.



(ஊ) கோரிக்கை எண் 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 47—செய்தி, சுற்றுலா, திரைப் படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,21,75,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்''.

திரு. சு. பாலன் : துணைத் தலைவரவர்களே, அரசு நடத்தும் விழாக்களில் அமைச்சர்களும் மற்றும் எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களும் கலந்து கொள்ளும் நடவடிக்கைகளில், அமைச்சர்களை மட்டும் திரையிடுவதும், பேச்சுக்களை வெளியிடுவதும், நிலைமைகளை மாற்ற எல்லோருக்கும் சமபங்கு அளிக்க மேற்கொள்ளாதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 47, செய்தி, சுற்றுலா, திரைப் படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,21,75,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. ரா. கிருஷ்ணன் : துணைத் தலைவரவர்களே, பொருளாதார, சமூகக் குற்றவாளிகள் பற்றி கருப்பு பட்டியலிட்டு பத்திரிகை, திரைப்படம் மூலம் நிரந்தரமாக அம்பலப் படுத்த ஏற்பாடு செய்யாமலிருப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 47—செய்தி, சுற்றுலா, திரைப் படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,21,75,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்''.

திரு. பொ. உத்திராபதி : துணைத் தலைவரவர்களே, வேதாரண்யம் கோடிக்கரையில் ஒரு சுற்றுலா விடுதி கட்டுவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண் 47—செய்தி, சுற்றுலா, திரைப் படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,21,75,000-இல் ரூ.100 குறைக்கவேண்டும்''.

(ஏ) கோரிக்கை எண் 54—காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 54—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 14,89,68,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்''.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** துணைத் தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்ண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானிய கோரிக்கை எண் 54—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 14,89,68,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

**திரு. தி. கா. நல்லப்பன் :** துணைத் தலைவரவர்களே, காடுகளில் வெட்டுவதற்கு ஏலம் விடுகின்ற மரங்கள் மட்டுமே ஏலத்தில் எடுப்பவர்கள் வெட்டுவதைக் கண்காணிக்க வேண்டிய தன் அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 54—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 14,89,68,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளின் மீது அரசினுடைய விளக்கங்களை கொள்கை விளக்கக் குறிப்புகளாக * * * தமிழிலே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப் பெற்றிருக்கின்றன. அந்த தமிழ்க் குறிப்புகளை நான் இந்த அவையில் ஆற்றிய உரையாக ஏற்றுக் கொண்டு, குறிப்பேட்டிலே பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்களை கேட்டறிந்ததற்குப் பிறகு, இறுதியில் அரசின் சார்பிலே விளக்கம் அளிக்க வேண்டிய விவரமிருந்தால், அதற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

---

* 291 முதல் 394ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளன.



**திரு. துரை முருகன் :** பாயின்ட் ஆர் கிளாரிபிகேஷன், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போதே மணி பிற்பகல் 1.04 ஆகி விட்டது. நாளைக்கு எடுத்துக் கொள்ளுங்கள். இன்று பிற்பகல் 4 மணிக்கு எங்களுக்கு கூட்டம் இருக்கிறது. எனவே, இன்றைக்குப் பிற்பகல் எங்களால் வர முடியாது........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்றைக்கு காலையிலிருந்து இவ்வளவு நேரம் ஆகி விட்டது. நாளைக்கு என்றால் இப்படியே ஒவ்வொரு நாளும் சட்டமன்ற நடவடிக்கை டிஸ்-லொகேட் ஆகிவிடும். ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டும். இப்போது திரு. கு. பா. பழனியப்பன் பேசுவார்.

**டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, அலுவல் ஆய்வுக் குழுவிலே சில முடிவுகளை எடுக்கிறோம். அன்றைக்கு நிதி நிலை அறிக்கையிலே நான் பேசிய பிறகு அன்றைக்கே நமது நிதியமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருந்தால் இப்படிப்பட்ட தகராறுகள் ஏற்பட்டிருக்காது. நாங்கள் யாரும் காரணமில்லை. இன்றைக்கு மாலையில் எங்களுக்கு கலந்து கொள்வதற்கான வசதியில்லை. நாளைக்கு காலையில் எடுத்துக் கொள்ளுங்கள்.

**திரு. கு. பா. பழனியப்பன் :** மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்வதற்காக என்னைப் பணித்த டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்து உரையை துவங்குகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் தான் உங்களை பேச அழைத்திருக்கிறேன். இங்கு கட்சியெல்லாம் கிடையாது.

**திரு. கு. பா. பழனியப்பன் :** மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆண்டவன் பெயரிலே நம்பிக்கை உள்ளவர் என்ற கருத்திலே வீரவேல், வைரவேல், திருச்செந்தூர் முருகா நினைவிருக்கட்டும் என்று தொடங்கி என்னுடைய பேச்சை ஆரம்பிக்கிறேன்.

அறநிலையத் துறை மானியக் கோரிக்கை எண். 12 கொள்கை விளக்கக் குறிப்பில் கடைசி பக்கத்தில், அவர்கள் ஒரு கருத்தை சொல்லியிருக்கிறார்கள். நாகரீகத்தையும், கலையினையும், பண்பாட்டினையும் கட்டிக் காக்கும் கருவூலப் பெட்டகங்களாக, இருப்பது தான் கோவில், எனவே இதனை பேணிப் பாதுகாக்கிற பகுதியிலே அரசு பாடுபடுகிறது என்று சொல்லப்படுகிறது.

இது வரவேற்கக் கூடியது தான், மகிழ்ச்சிகரமானதுதான். ஆனால் இன்றைக்கு பல இடங்களில் பண்டைய நாகரீகத்தின் எடுத்துக் காட்டாகவும், கலைத் திறனுக்கு எடுத்துக் காட்டாகவும் உள்ள உருவச் சிலைகளும், உலோகச் சிலைகளும், மரத்தால் ஆன விலை உயர்ந்த மரச் சிலைகளும், இவைகள் எல்லாம் கோவில்களிலேயிருந்து திருடு போவது நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டே போகிறது. பத்திரிக்கைகளிலே அன்றாடம் பார்த்து வருகிறோம். கோவில் களிலே உண்டியல் திருட்டு ஒரு வகை. உருவச் சிலைகள் திருடு வது ஒரு வகை. அங்கே இருக்கிற மரச்சிலைகளை திருடுவது இன்னொரு வகையாக இன்றைக்கு வளர்ந்து வருகிறது. ஆறு மாதங்களுக்கு முன்னாலே திருவண்ணாமலையிலே அங்கேயிருக் கிற அருணாசலேசுஸ்வரர் ஆலயத்தில் (குறுக்கீடு).

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்பு பேப்பரிலே எழுதி வைத்தது படிக்கக் கூடாது என்று தீர்ப்பு அளித்திருக்கிறீர்கள். இப்போது உறுப்பினர் படிக்கிறார்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் திரு. பழனியப்பன் குறிப்புகளை வைத்து மட்டுமே பேசுவேண்டும்.

திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, தங்களுடைய உத்தரவை மேற் கொண்டு அதை குறிப்பாகத்தான் வைத்திருக்கிறேன். முழுவதும் எழுதிப் படிக்கிற பழக்கம் இல்லை. அங்கே கண்ணன் என்பவரும் கிருஷ்ணமூர்த்தி என்பவரும் ஆகிய இரண்டு அறங்காவலர்கள் மேலே அறநிலையத் துறையால் ஷோ-காஸ் நோட்டீஸ் கொடுக்கப் பட்டிருக்கிறது. அந்த நோட்டீஸ் கொடுக்கப்பட்டு ஆறு மாதங்களாகி இன்றைக்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. எதற்கு ஷோ-காஸ் நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக் கிறது என்ற விவரத்தை பார்த்தால் அங்கே மிகப் பெரிய 2 தேர்கள் இருக்கின்றன. ஒன்று சுவாமி தேர், இன்னொன்று அம்மன் தேர் என்று சொல்கிறார்கள். 70, 80 ஆண்டுகளுக்கு முன்னால் செட்டிநாட்டு வள்ளல்கள் உருவாக்கி தந்திருக்கிறார்கள் பல லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள அந்த தேர்களை பர்மாவிலிருந்து வரவழைக்கப்பட்ட தேக்கு மரத்தினால் செய்யப் பட்டது. அன்றைய மதிப்பே கூட ஒரு லட்சம் ரூபாய் என்று சொல்கிறார்கள். இன்றைக்கு நிச்சயமாக ஒரு கோடிக்கு மேல் பெறும் என்று சொல்கிறார்கள்.

(பிற்பகல் 1.10)

அதிலே அறங்காவலர் தலைவரையும் அதற்குப் பொறுப் பேற்ற இன்னொருவரையும் குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள். அதைப் பற்றிய தகவல் எல்லாம் அரசுக்கு வந்து இருக்கிறது ஆனா இவ்வளவுக்கும் பிறகு அவர்கள் பேரிலே நடவடிக்கை





எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. ஒரு கண் துடைப்பாக வழக்கு ஒன்று போடப்பட்டதாக கேள்வியுற்றேன். அந்த வழக்கு முடிவிலே வழக்கு விசாரணையில் இருக்கிறபோது யாரோ சென்னையிலே வீரர்களாம், மாவீரர்களாம் அவர்கள் எல்லாம் தலையிட்டு அந்த வழக்கை ஒரு வகையாக முடித்து விட சில மரச்சிலைகளை வேறு கடையிலிருந்து வாங்கிக் கொடுத்து அந்த வழக்கிற்காக ஜோடனை செய்திருப்பதாக நான் அறிகிறேன். அது உண்மைதான் என்று தெரிவதற்கு இன்னொரு சான்று, இன்றைய வரையிலும் வழக்கு முடிவுற்ற பிறகும் கூட அங்கே இருக்கின்ற நிர்வாக அதிகாரி, எக்சிகியூடிவ் அதிகாரி அந்தச் சிலைகளை மீண்டும் கோயிலுக்கு எடுத்துப் போக மறுத்து வருவ தாக செய்தி வருகிறதே உண்மையா என்று அமைச்சர் தெளிவு படுத்த வேண்டும். நான் எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால் அறங்காவலர்கள் இன்றைக்கு எப்படிப்பட்ட நிலையில் இருந் தாலும் அவர்களைக் காப்பாற்ற வேண்டிய சூழ்நிலை பல நேரங்களிலே அமைச்சரவைக்கு ஏற்பட்டு விடுகிற நிலைமையை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இன்னொரு வேடிக்கை என்ன வென்றால் அறங்காவலர்களைப் பாராட்டுவதற்கு விழாக்கள் எல்லாம் கூட இப்போது நடைபெறுகின்றன. என்னுடைய பகுதியிலே கூட ஒரு விழா நடைபெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. பழனியப்பன் அவர்கள் நீதி மன்றத்திலே உள்ள ஒரு வழக்கைப் பற்றிப் பேசுகிறார்கள். அது சப்-ஜுடிஸ் என்ற காரணத்தினால் பேசலாமா என்று தாங்கள் முடிவு செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வழக்கு நீதி மன்றத்திலே இருந்தால் அது பற்றிப் பேச முடியாது. அது சப்-ஜுடிஸ் ஆகும். வழக்கு நீதி மன்றத்திலே இருப்பதால் அவர் பேசிய அந்த வார்த்தைகள் எல்லாம் அவைக் குறிப்பிலே இருக்கத் தேவையில்லை.

திரு. கு. பா. பழனியப்பன் : துணைத் தலைவர் அவர்களே, வழக்கு நடை பெற்றால் தான் சப்-ஜுடிஸ் ; வழக்கு முடிவுற்றால் சப்-ஜுடிஸ் அல்ல, யு நோ தட். வழக்கு நடைபெற்று முடி வுற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வழக்கு பெண் டிங்காக இருக்கிறதா ? முடிவுற்று விட்டதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வழக்கு இன்னும் பெண்டிங்காக இருக்கிறது என்று மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் என்னிடம் சொன்னார்கள்.

திரு. கு. பா. பழனியப்பன் : அது தவறான தகவல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் சொல்கிற தகவல் தவறு என்றால் வேறு யார் சொல்வதைக் கேட்பது? பெண்டிங்காக இருக்கிறது. ஆகவே அது வேண்டாம். நீங்கள் வேறு ஏதாவது சொன்னீர்கள் என்றால் அதைப் பற்றிப் பிறகு பார்க்கலாம்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவிக்கின்ற திருவண்ணாமலை தேரிலே திருட்டுப் போன பொம்மைகளைப் பற்றிய வழக்கு முன்னாலே பதிவு செய்யப் பெற்று ஒரு சிலர் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். சிலர் பிடிபடாமல் விடப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிந்ததற்குப் பிறகு மீண்டும் காவல் துறைக்குத் தகவல் கொடுத்து மீண்டும் அந்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே பொதுவாக மாண்புமிகு உறுப்பினர் அந்தத் தகவலைத் தருவதிலே தவறு இல்லை. ஆனால் யார் மீதாவது குற்றம் சுமத்திப் பேசுவார்களேயானால் அதற்கு பொறுப்பை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

திரு கு. பா. பழனியப்பன் : நான் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறேன். நான் பேசியதை நீக்கியதை மீண்டும் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏன் என்றால் நான் சொன்னதில் தவறு இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பெண்டிங் என்பதால் சப்-ஜூடிஸ் ஆகிறது, ஆகவே நீக்கியிருக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் திரு. பழனியப்பன் பேசுகின்ற விஷயங்கள் சப்-ஜூடிஸ் என்று வரவே வராது. ஆகவே ஏற்கனவே அவர் பேசிய பகுதிகள் எல்லாம் குறிப்பிலே இணைக்கப்பட வேண்டும், அவர் தொடர்ந்து அதைப் பேச அனுமதிக்கப்பட வேண்டும். இன்னொன்றையும் நான் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஏற்கனவே ஞானசவுந்தரி கேஸ் கோர்ட்டிலே இருக்கிறபோதுதான் பேசினோம், அதைப் போல் வில்லேஜ் ஆபீசர்ஸ் கேஸ் கோர்ட்டிலே இருக்கிறபோதுதான் பேசினோம். அந்த விஷயத்திற்குள்ளே போகக் கூடாது. ஆனால் பேக்ட்ஸைச் சொல்வதிலே தப்பில்லை. ஆகவே அது சப்-ஜூடிஸ் ஆகாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : குற்றச்சாட்டாகச் சொல்லக் கூடாது. வழக்கையே பேசக்கூடாது என்று நான் சொல்லவில்லை. குற்றச்சாட்டுச் சொல்லிப் பேசியதால் நீக்கப்பட்டது. (குறுக்கீடு). நான் அதைப் பார்த்துவிட்டு தீர்ப்புச் சொல்கிறேன்.





திரு. கு. பா. பழனியப்பன் : சப்-ஜூடிஸ் என்பது வேறு, குற்றச்சாட்டுச் சொல்வதை நீக்குவது என்பது வேறு. ஒன்றோடொன்று குழப்ப வேண்டாம். ஏற்கனவே தீர்ப்பாகிவிட்டது என்று சொன்னார்கள். ஆகவே சப்-ஜூடிஸ்க்கு இடம் இல்லை. அறங்காவலர்களைக் காப்பாற்றுவதற்காக இந்த அரசு எந்தக் காரியத்தையும் செய்வதற்கு ஈடுபடுவதற்குத் தயாராக இருக்கிற சூழ்நிலை பல்வேறு காலகட்டங்களிலே வந்திருக்கிறது. இப்போதெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர்களே அறங்காவலர்களாகப் போட்டிருப்பவர்களைப் பாராட்டுகிற விழாக்களை எல்லாம் நடத்துகிறார்கள். என்னுடைய பகுதியிலே நடந்திருக்கிறது. இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு அமைச்சர் ஒருவரேகூட வந்திருந்தார்கள். அறங்காவலர் குழுத் தலைவராக ஒருவர் போடப்பட்டதற்காகப் பாராட்டு விழா. அதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி சந்திரலேகா அவர்கள் தலைமை தாங்குகிறார்கள். இது கட்சி விழா. இதிலே மாவட்ட ஆட்சித் தலைவர் கலந்து கொள்வது எந்த வகையிலே நியாயம்? இது முறைதானா? இப்படியே எந்தக் கட்சி விழாவிற்கும் அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் கலந்து கொள்வார்களா? இதையே பழக்கமாக வைக்கப் போகிறார்களா? வேண்டுமானால் ஆதாரத்திற்கு அந்த நோட்டீசும், புகைப்படமும் என்னிடத்தில் இருக்கிறது. அவற்றை அமைச்சரிடத்தில் தருவதற்குத் தயாராக இருக்கிறேன். இப்படி, சட்டம்-ஒங்குமுகைக் காப்பாற்ற வேண்டியவர்கள் சட்டத்திற்கு ஒவ்வாத பல காரியங்களில் ஈடுபடுவது என்பது அங்கே மட்டுமல்ல, வேலூர் கோட்டையிலே, மத்திய அரசாங்கத்திற்குச் சொந்தமான அந்த இடத்திலே, முன் அனுமதி இல்லாமல், சட்டத்தைக் காக்கின்ற மாவட்ட ஆட்சித் தவைரவர்கள் முன்னிருந்து சாமி சிலை வைப்பதற்கு உடந்தையாக இருந்தார் என்று சொல்லப்படுகிறது. வழக்கு இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. இதுகுறித்து அமைச்சரவர்கள் விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் கொடுத்திருக்கின்ற குறிப்புப் புத்தகத்திலே உண்டியல் திறப்பதற்கான விதிமுறைகளை ஏற்படுத்தியிருப்பதாகச் சொல்கிறீர்கள். ஏற்கனவே நீதிபதி பால் கமிஷன் அமைக்கப்பட்டது. அந்த பால் கமிஷன் அமைக்கப்பட்டபொழுது இரண்டு டெர்ம்ஸ் ஆஃப் ரெஃப்ரென்ஸ் வைத்திருந்தார்கள். ஒன்று, அது கொலையா, தற்கொலையா என்பது. இரண்டாவதாக இதுபோன்ற நிகழ்ச்சிகள் எங்கேயும் நடைபெறக்கூடாது என்பதற்கான பரிந்துரைகள் தர வேண்டும் என்பது.

நான் இங்கே குறிப்பிட விரும்புவது, கொலையா, தற்கொலையா என்ற பிரச்னைபற்றி நீண்ட நேரம் பேசியாகிவிட்டது. அடுத்து, பரிந்துரையின் அடிப்படையிலே அவர்கள் எப்படி உண்டியலைத் திறப்பது, அதற்கான விதிமுறைகள் என்ன என்பதை வகுத்திருக்கிறார்கள். பக்கம் 92-லே விளக்க

மாக வந்திருக்கிறது. அவைகளைப் பின்பற்ற ஏன் இந்த அரசு மறுக்கிறது ? பால் கமிஷன் அறிக்கையிலே இது கொலையா, தற்கொலையா என்பதில் ஆதங்கப்பட்ட இந்த அமைச்சரவை, பரிந்துரைகள் சொல்ல வேண்டுமென்று சொல்லி, அந்தப் பரிந்துரைகள் வந்ததையும் பின்பற்றுவதற்கு இந்த அரசு ஏன் மறுக்கிறது ? இங்கே குறிப்பிட்டிருக்கின்ற உண்டியல் திறப்பு விதிமுறைகளுக்கும் அவர் குறிப்பிட்டிருக்கின்ற விதி முறைகளுக்கும் மாறுபாடு இருப்பதற்கு என்ன காரணம் அதிலேகூட சொல்கிறீர்கள், பொதுமக்களின் பார்வைக்காக ஒரு சில நாட்களுக்கு முன்னதாகவே அறிவிப்பு செய்யப்பட வேண்டுமென்று. ஆனால் பால் கமிஷன் அறிக்கையிலே மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது, ஒரு வாரம் அல்லது பத்து நாட்களுக்கு முன்னதாக அது அறிவிக்கப்பட வேண்டுமென்று ஆனால் இங்கே சில நாட்களுக்கு முன்னதாகவே என்று (Vag e) ஆக இருப்பதற்கு என்ன உள்நோக்கம் என்பது எனக்குத் தெரியவில்லை.

உண்டியல் சாவிக்கொத்து ஒன்று நிர்வாக அதிகாரியிடமும், இன்னொரு சாவிக்கொத்து அறங்காவலர் குழுத் தலைவரிடமும் இருக்க வேண்டும் என்றும், அந்த அறங்காவலர் குழுத் தலைவரிடம் இருக்கின்ற சாவிக்கொத்துக்களை வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியரிடம் ஒப்படைத்து, என்றைக்கு அது திறக்கப்படவேண்டுமோ அன்றைக்கே அவர் வந்து திறப்பார் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுதான் பால் கமிஷனின் பரிந்துரை. அதை முழுவதுமாக மாற்றி இங்கே வேறொரு விதமான குறிப்பு வந்திருக்கிறது. இதற்கான காரணமும் எனக்குத் தெரியவில்லை.

நிர்வாக அதிகாரி, அறங்காவலர் குழுத் தலைவர், அறங்காவல் குழு உறுப்பினர் முன்னாலேயே அந்தக் கருவூலப் பெட்டகத்தைத் திறப்பதற்கான நேரத்தை உருவாக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் இங்கேயிருக்கின்ற உங்களுடைய உண்டியல் திறப்பு விதிகளிலே அது ஏன் பின்பற்றப்படவில்லை என்று கேட்கிறேன்.

தனியாக முத்திரைகள் சரிபார்ப்பு அதிகாரிகளுக்கு இருக்க வேண்டும், அரசாங்க முத்திரை அல்ல, அவருக்கென்று ஸ்பெஷலாக, தனியாக ஒரு முத்திரை இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை நீங்கள் ஒத்துக்கொள்ளவில்லை. இங்கே கூடையிலே வைத்து சாக்காலே மூடி நகையையோ, பொருளையோ எடுத்துச் செல்ல வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் ஒரு விளக்கத்திற்காகச் சொல்லிவிட்டால் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வசதியாக இருக்கும். கொள்கை விளக்கக் குறிப்பிலே தந்துள்ள விவரங்கள் இதற்கு



முன்னால் உண்டியல்கள் திறப்பதற்காக அவ்வப்பொழுது ஏற்பட்டிருக்கின்ற நிலைமைகளையொட்டி விதிக்கப்பட்டிருக்கின்ற ஆணைகளைத்தான் தெரிவித்திருக்கிறோம். பால் கமிஷன் பரிந்துரை மீது எடுக்கப்பட்டிருக்கின்ற நடவடிக்கைகள் பற்றி இதிலே குறிப்பிடப்படவில்லை. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விதிகளைத் திருத்தமாகவோ, சட்டத் திருத்தமாகவோ கொண்டு வர முடியுமா என்பது பரிசீலனையில் இருக்கிறது. ஆகவே, பால் கமிஷன் அறிக்கைக்கு மாற்றாக இந்த யோசனைகள் இல்லை. முன்னாலே அவ்வப்பொழுது ஏற்படுகின்ற சூழ்நிலைகளையொட்டி ஆணைகளாகப் பிறப்பிக்கப்பட்டிருக்கின்ற அந்த அறிவிப்புகள்தான் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. பா. பழனியப்பன் : அமைச்சரவர்களின் விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் கேட்பதெல்லாம் பால் கமிஷன் பரிந்துரை செய்து பலநாட்களாகியும் பரிசீலனையில் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் ஒரு பகுதிக்கு மட்டும் அவசரம் அவசரமாகக் கருத்துரை வழங்கி சில முடிவுகளுக்கு வந்து விட்டீர்கள். ஆனால் இவ்வளவு காலத்திற்கும் பிறகும்கூட இந்த அமைச்சரவையாலே இந்தக் குறிப்புச்களெல்லாம் இன்னும் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பதற்காக வருந்துகிறேன்.

இந்தக்குறிப்பிலே உள்ளது. ஆலய நிலங்களில் குத்தகை 16 கோடி நிலுவை இருக்கிறது என்று சொல்கிறார்கள். அரசாங்கம் அதை என்ன செய்யப்போவதாக உத்தேசம் என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். கடன் நிவாரணச் சட்டங்களாலோ, குத்தகைதாரர் பாக்கிச் சட்டங்களாலோ, மற்ற சட்டங்களாலோ அவர்கள் கொடுக்காமல் நிலுவையில் இருக்கிறது என்று குறிப்பிடுகிறார்கள். அதற்கு அரசாங்கம் என்ன முடிவு செய்துள்ளது ? என்ன நினைக்கிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். இருக்கிறது என்று சொன்னால் மட்டும் போதாது. அரசாங்கத்தினுடைய நிலைமைகளை எடுத்துச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-20.)

அடுத்து, சமுதாய நலப் பணிகளிலே இந்த அரசும் ஈடுபடுகின்றது என்று சொல்வது மகிழ்ச்சிக்குரிய காரியம்தான். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்திலே கருணை இல்லம் போன்று பல்வேறு திட்டபபணிக்காக அதிலேயிருந்து தொகையை ஒதுக்கியிருப்பதாக அறிகிறேன். இப்பொழுது இருக்கிற அன்பு இல்லங்கள் கட்சி பாகுபாடற்ற நிலையில் நிறைவேற்றப்பட

வேண்டும். அதிலே அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன். இன்னும் சொல்லப் போனால், முந்தைய அரசு செய்த திட்டங்கள் என்ற காரணத்தாலே சில திட்டங்கள் சரிவர கவனிக்கப்படவில்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டு.. உதாரணத்திற்கு, பூம்புகார் இன்றைக்கு மிகவும் மோசமான நிலைமையிலே பராமரிக்கப்படுகிறது. வள்ளுவர் கோட்டமும் அப்படித்தான். அமைச்சர் அவர்கள் அன்று மிக வேடிக்கையாகப் பதில் சொன்னார்கள். அவைகளை எல்லாம் கட்சிப்பாகுபாடற்ற நாட்டினுடைய சொத்து என்ற முறையிலே முறையாகப் பராமரிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ஆகஸ்ட் 15 சுதந்திர நாளிலே சமபந்தி போஜனம் நடந்தது என்று இதிலே சொல்லியிருக்கிறார்கள். அதிலே, சாதி வேறுபாடு களையப்பட வேண்டுமென்ற நோக்கம் என்று சொல்கிறார்கள். அது உள்ளபடியே வரவேற்கப்பட வேண்டிய நோக்கம். அது நல்ல நோக்கம்தான். ஆனால், நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, இந்த நோக்கம் எழுத்திலே மட்டும்தான் இருக்கிறதா ? அமைச்சர் அவர்களின் தனிப்பட்ட கருத்துக்கள் அதற்கு முரணாக இருக்கிறதே என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காரணம், 'சமய இலக்கியங்கள்' என்ற புத்தகத்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் எழுதி, அமைச்சர் அவர்கள் முன் நின்று வெளியிட்டார்கள். அதற்கு விழா நடந்தது. அது கற்பகம் ஓட்டல் என்ற இடத்திலே நடந்ததாக அறிகிறேன். அதிலே பேசுகின்றபொழுது சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களுடைய குறிப்புகளை மாத்திரம் சொல்கிறேன், வேண்டுமானால் பத்திரிகையைக் கொண்டு வந்து காட்டுகிறேன்.

'சமயங்களிலே பிளவு இருக்கிறது. அதைப் போலத்தான் சாதியிலே பிளவு இருக்கட்டுமே', இது அமைச்சருடைய கருத்தாக இருந்தால் நான் மிகவும் வருத்தப்படுகிறேன். இன்னொன்று சொல்கிறார்கள். நான் சாகின்றபொழுது இந்து என்று சொல்லப்பட்டால் அதற்காக நான் வெட்கப்பட மாட்டேன் என்று கூடச் சொன்னார்கள். இறந்தபிறகு யார் வெட்கப்பட்டு என்ன பயன் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் அவர்கள் இறந்த பிறகு வெட்கப்பட மாட்டேன் என்று சொல்கிறார்கள். ஆனால், இதிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கெட்டிக்காரர். அவர் இந்து என்று சொன்னால் வெட்கப்படுவேன் என்ற வார்த்தையை உபயோகப்படுத்தவில்லை 1981 மக்கட்தொகை கணக்கெடுப்பு நடந்த நேரத்திலே அவரைப் பார்த்து, நீங்கள் என்ன மதம் என்று கேட்ட நேரத்திலே ரொம்ப புத்திசாலிதனமாக திராவிட மதம் என்று சொல்லி தப்பித்து விட்டார். (குறுக்கீடு) ஆனால், நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்து மதம் என்று மிக..............





திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனியப்பன் அவர்கள் முதலமைச்சர் மீது ஒரு பிரச்னையைச் சொல்கிறார். அதுபோன்று பத்திரிக்கையிலே ஒரு செய்தி வந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அது போன்று நான் சொல்லவில்லை என்று மறுப்பு தெரிவித்திருக்கிறார். இதுபோன்ற தவறான தகவலை முதலமைச்சர் மீது சுமத்தலாமா என்று கேட்கிறேன்.

திரு. கு. பா. பழனியப்பன் : துணைத் தலைவர் அவர்களே, ஆதாரம் இல்லாமல் சொல்லவில்லை. அந்தப் பத்திரிகைச்செய்தி அதனுடைய புகைப்படம்—துணை ஆளோடு, அதிகாரியோடு உட்கார்ந்திருப்பதை—கையிலே வைத்திருக்கிறேன். அதற்கு மறுப்பு இருந்தால் உள்ளபடியே, ஆதாரம் இருந்தால், உறுப்பினர் தெரிவித்தால் நான் வாபஸ் வாங்கிக் கொள்கிறேன். இங்கே நான் ஆதாரத்தோடுதான் வந்திருக்கிறேன். எந்தப் பத்திரிகையிலே வந்திருக்கின்றது என்பதையாவது அவர் சொல்லட்டும்.

அதிலே, இன்னுங்கூட, அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள், 'காஞ்சிப் பெரியவாளை வணங்குவதிலே என்ன தவறு' என்று சொன்னார்கள். நான் அதிலே குறுக்கிடவில்லை. ஆனால், நான் சொல்ல விரும்புவது, ஜாதி மத வேறுபாடற்ற தன்மை ஆலய வழிபாட்டிற்கு மட்டும்தான் என்று சொல்கிறார்களா? வாழ்க்கை முறையிலே இல்லையா ? அரசியலமைப்புச் சட்டத்திலே கூட, இப்படி ஜாதி மதங்களை விரும்புகிற தன்மையில்லை. அல்லது தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டுமென்ற தன்மை வலிறுயுத்தப்படுகின்றபொழுது, அந்தத் தீண்டாமைக் கொள்கையை வலியுறுத்துகிற பெரியவாளை, வலியுறுத்துகின்ற மதத் தலைவர்களை, நீங்கள் விரும்புவதும், வணங்குவதும், போற்றுவதும், உங்கள் கொள்கைக்கு முரண்பாடு இல்லையாயென்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

கெஜகத்குரு சங்கராச்சாரியாருடைய உபதேசங்கள் என்ற புத்தகத்திலே 'தீண்டாமை என்பது ஷேமகரமானது' என்ற எண்ணம் நமக்கு இருக்கிறது என்று அவர்கள் தெரிவித்ததாக இரண்டாவது பாகத்திலே அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அதை விட வேடிக்கை, சிருங்கேரி சங்கராச்சாரியாரைப் பற்றி நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெருமையாகக் கூடப் பேசி இருக்கிறார்கள். பத்திரிகையிலே கூட வந்திருக்கின்றது. 'ஹிந்து ஐடியல்' என்ற புத்தகத்திலே 230-வது பக்கத்திலே ஒரு குறிப்பு இருக்கிறது. அதை மாத்திரம் படித்துவிடுகிறேன்.

"The Panchama is asked to be at a distance because of the inborn impurity of his body. Any amount of washing of the body with the best available soap and any clothing and decora-

tion of it in the best upto date style cannot remove from it, its ill-laid filth that has originated from the deep rooted contamination of filthy in heredity."

என்று அங்கே குறிப்பிட்டு, அவ்வளவு கோபமாகச் சொல்லியிருக்கிற அந்த சிருங்கேரி சங்கராச்சாரியாரைக்கூட நீங்கள் புகழ்ந்து பேசியதைப் பத்திரிகையிலே பார்த்திருக்கிறோம். (மணி அடிக்கப்பட்டது) 1932-லே கூட காந்தியார் அவர்களுடைய விருப்பப்படி ராஜாஜி அவர்களும், ராஜன்பாபு அவர்களும் சென்னையிலே காஞ்சி சங்கராச்சாரியார் அவர்களிடத்திலே 2 மணி நேரம் ஆலோசனை செய்திருக்கிறார்கள். அப்போதுகூட தீண்டாமை குறித்து எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. தீண்டாமை இருக்கவேண்டும் என்ற கருத்தைத்தான் அவர்கள் வலியுறுத்தினார்கள் என்று ராஜாஜி அவர்கள் சொன்னதாக ரா. கணபதி அவர்கள் எழுதிய புத்தகத்திலே எழுதி இருக்கிறார்கள்.

ஜாதி இருக்கின்ற காரணத்தினாலேதான் இந்து என்ற வார்த்தையைக் கூட பேரறிஞர் அண்ணா அவர்கள் எதிர்த்ததாக ஆரியமாயை என்ற புத்தகத்திலே மிகத் தெளிவாக எழுதியிருக்கிறார்கள். ஜாதி வேறுபாடுகள் களையப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள். ஜாதியே இருக்ககக் கூடாது என்று சொல்லுகின்ற பேரறிஞர் அண்ணா அவர்கள் பேரிலேஆட்சிநடத்துகின்ற நீங்கள் ஜாதிவேறுபாடு இருக்க வேண்டும் என்று சொல்லுகிற பெரியவர்களின் கருத்துக்களை வணங்குகிறேன் என்று சொல்வது எந்தவிதத்திலே பொருத்தமாக இருக்கும்? இன்னும் சொல்லுகிறார்கள். மதமாற்றம் என்று சொல்லுகின்ற நேரத்தில் ஆதிதிராவிடர்களுக்கும் ஜாதி இந்துக்களுக்கும் சண்டை என்று சில நேரங்களிலே பத்திரிகைகளிலே போடுகிறார்கள். ஆதி திராவிட தோழர்கள் நம்மிடம் கேட்பது எல்லாம். நாங்கள் ஜாதி இந்துக்கள் இல்லையா? இந்துக்கள் என்ற ஜாதியில் நாங்கள் இல்லையா? பிறகு ஏன் மதமாற்றம் என்பதற்காக வருத்தப்படுகிறீர்கள்? இந்துக்கள் என்று இருந்தால்தானே நாங்கள் மாற்றம் என்று சொல்லுகின்றபோது வருத்தப்பட வேண்டும். ஜாதி இந்துக்கள் ஆதி திராவிடர்கள் சண்டை என்று சொல்லுகிறீர்கள். அப்போது நாங்கள் ஜாதி இந்துக்கள் இல்லையா என்று சொல்லுகிறார்கள். இதற்குக் கூட அமைச்சர் என்ன விளக்கம் சொல்லப்போகிறார் என்று நான் எதிர்பார்க்கிறேன்.



அடுத்து அர்ச்சகர்கள் சட்டம். யாரும் அர்ச்சகர் ஆகலாம் என்று ஒரு சட்டம் இயற்றி அது கிடப்பிலே போடப்பட்டு இருப்பதாக சொல்லுகிறார்கள். அது இந்த குறிப்பிலேயும் இருக்கின்றது. இதிலே 3—2—1982 அன்று, மகாராஜன் குழு அறிக்கை வந்திருக்கிறது. அதையும் இந்த அவையிலே வைத்திருந்தால் இன்னும் விளக்கம் கொடுப்பதற்குச் சௌகரியமாக இருக்கும். இதிலே ஆகம கல்லூரி ஒன்றும், ஆகம சபை ஒன்றும் ஏற்படுத்துவதாகச் சொல்லி இருக்கிறார்கள். அதிலே நுழைவு முறை மற்றவைகளிலே கூட இந்த ஆகம சபைத்தான் நிர்ணயிக்கவேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். அதை மாற்றும்படி கேட்டுக் கொள்கிறோம். ஏனென்று சொன்னால் அதிலே யாரும் வரலாம் என்பதையே இந்த ஆகமசபையிலே இருப்பவர்கள் தடுத்து விடக்கூடிய சூழ்நிலை உருவாகும். அதை அமைச்சர் அவர்கள் விளையாட்டாகக் கருதக் கூடாது. இதிலே கொஞ்சம் அழுத்தம் திருத்தமாக பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

(5) அறிவிப்பு—பேரவை அலுவல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிகளின் தலைவர்களுடைய விருப்பத்தின் பேரிலும், அவர்களுடைய ஒப்புதலின் பேரிலும் இன்று நடைபெறுகின்ற இந்த மானியக் கோரிக்கை எண். 12, 25, 45, 47, 54 ஆகியவைகள் தொடர்ந்து நாளைக் காலை நடைபெற்று, நாளைக் காலை இந்த மானியத்தினுடைய விவாதம் முடிந்து, காலையிலே பதிலுரையும் தரப்படும். நாளை மாலை 4 மணி அளவிலே, நாளைக் காலையிலே எடுத்துக் கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த மானியக் கோரிக்கை எண். 18, 19 மருத்துவம், பொதுச் சுகாதாரம் ஆகிய இரண்டும் நாளை மாலை 4 மணிக்கு எடுத்துக்கொள்ளலாம் என்ற அளவுக்கு செய்த முடிவுகளுக்கு இணங்க, அந்த அளவுக்கு ஒத்திவைக்கலாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ரா. உமாநாத் :** துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க என்று மாண்புமிகு அவை முன்னவர் சொன்னார்கள். அரசு தரப்பிலே இருந்து கேட்டுக் கொண்டார்கள் நாங்கள் ஏற்றுக் கொண்டோம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நான் சொன்ன சொற்களை மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் கவனிக்கவில்லை. மாண்புமிகு எதிர் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் விருப்பத்திற்கு இணங்கவும், ஒப்புதலுக்கு இணங்கவும்—நீங்கள் கேட்டு கொண்டதற்கு இணங்க என்று சொல்லவில்லை—உங்களுடைய விருப்பமும் அதற்குத் ஒப்புதலும் தெரிவிக்கப்பட்டது என்று சொன்னேன், நீங்கள் கேட்டுக் கொண்டீர்கள் என்று சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 11—3—82 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும். பேரவை நாளை மாலையும் 4-00 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-29 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

(6) பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்—எதுவும் இல்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்,

72. கோரிக்கை எண். 12—1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய-அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

73. கோரிக்கை எண். 25—சின்கோனாத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1982-83 (தமிழ், ஆங்கிலம்).

74. 1982-83 ஆம் ஆண்டிற்கான சின்கோனாத்துறை பற்றிய சாதனைத் திட்டம் (ஆங்கிலம்).

75. 1982-83ஆம் ஆண்டிற்கான சின்கோனாத் துறை பற்றிய வணிக சம்பந்தமான வரவு-செலவுத் திட்டம் (ஆங்கிலம்).

76. கோரிக்கை எண். 45—வனத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1982-83 (தமிழ், ஆங்கிலம்).

77. 1982-83 ஆம் ஆண்டிற்கான வனத்துறை பற்றிய சாதனைத் திட்டம் (ஆங்கிலம்).

78. கோரிக்கை எண். 47.—சுற்றுலா குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1982-83 (தமிழ், ஆங்கிலம்).

79. கோரிக்கை எண். 47—செய்தி திரைப்படத் தொழில்நுட்பவியல் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1982 83 (தமிழ், ஆங்கிலம்).



## இணைப்பு—1

(200ம் பக்கத்திலுள்ள கவன ஈர்ப்பு அறிக்கையில் அடிக் குறிப்பைக் காண்க.)

ABSTRACT.

CEMENT—Tamil Nadu Levy Cement Distribution (Licensing and Regulation) Order, 1982—Issued.

*G.O. Ms. No.* 301, *Industries, 9th March* 1982.

READ AGAIN :

G.O. Ms. No. 1539, Industries Department, dated 29th November 1978.

READ :

From the Cement Controller No. CC/CO/6(2)/82/2041, dated 1st March 1982.

ORDER.

The Government of India have announced partial de-control of cement effective from 28th February 1982. Under the new system of cement distribution, the cement factories will be required to make available to the Government for sale at controlled price 66.6 per cent of their production as levy cement while the production inexcess of the quantity of levy cement will be sold by them in the openmarket without any price and distribution control.

2. After careful examination, the Government have decided to supercede the Tamil Nadu Cement Distribution (Licensing and Regulation) Order 1978 issued in the G.O. read above by a fresh Order called "Tamil Nadu Levy Cement Distribution (Licensing and Regulation) Order 1982.

3. The appended Notification viz. Tamil Nadu Levy Cement Distribution (Licensing and Regulation) Order 1982 shall be published in English in the Tamil Nadu Government Gazette, Extraordinary, dated 9th March 1982 and in Tamil in all the District Gazettes. A Malayalam version will also be published in the District Gazettes of Kanyakumari, Tirunelveli and the Nilgiris.

4. Six copies of the notification are sent to the Public (Tamil Translation) Department. That Department is requested to forward immediately a Tamil and Malayalam Version of the Notification to the Works Manager and he is requested to arrange for the immediate publication in the District Gazettes concerned.

5. The Works Manager is requested to send 200 copies of the English Notification to Government and 300 copies to the Director of Industries and Commerce, Madras-600 005, and 25 copies to each of the Collectors.

(By Order of the Governor)

C. RAMACHANDRAN,
*Commissioner and Secretary to Government.*

APPENDIX

NOTIFICATION

In exercise of the powers conferred by section 3 of the Essential Commodities Act, 1955 (Central Act 10 of 1955), read with the Government of India, Ministry of Commerce, Order Nos. 681 (E) and 682 (E), dated the 30th November 1974, published in the Extraordinary issue of Part II – Section 3, sub-section (ii) of the *Gazette of India*, dated the 30th November 1974 and in supersession of the Tamil Nadu Cement Distribution (Licensing and Regulation) Order, 1978, issued with the Indutries Department Notification SRO No. A/281 (*a*)/78, dated the 29th November 1978, published at pages 1-8 of Part III– Section 1-A of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 29th November 1978, the Governor of Tamil Nadu hereby makes the following order, namely :—

ORDER

1. *Short title, extent and commencement.*—(*a*) This Order may be called the Tamil Nadu Levy Cement Distribution (Licensing and Regulation) Order, 1982.

(*b*) It extends to the whole of the State of Tamil Nadu.

(*c*) It shall come into force with immediate effect.

2. *Definitions.*—In this Order, unless the context otherwise requires.—

(i) 'Cement' means any variety of cement manufactured in India or imported and includes Portland Cement, Pozzolana cement, blast furnace slag cement, water proof (hydrophobic cement) rapid hardening cement, low heat cement, masonry cement and high strength ordinary Portland cement and coloured cement ;



(ii) "Levy cement" means that part of production of cement with reference to the installed capacity of a cement plant as may be determined by the Central Government, from time to time, not being more than 66.6 per cent of the installed capacity of the cement plant ;

(iii) "Collector" means the Collector of a district ;

(iv) "Director" means the Director of Industries and Commerce, Madras ;

(v) "Government" means the Government of Tamil Nadu ;

(vi) "Licence" means a licence issued under the provisions of this Order ;

(vii) "Licensee" means the holder of a licence issued under the provision of this order ; and

(viii) "Licensing Authority" means the Collector and or any other officer authorised by him to perform all or any of the functions of the licensing authority under this order.

3. *Eligibility for licence.*– The Tamil Nadu Civil Supplies Corporation Limited, the Co-operative Societies or any other body, so notified by the Government, shall be eligible for issue of licence to deal in levy cement under this order.

4. *Application for licence.*—(*a*) The application for licence shall be made to the licensing authority in Form I annexed to this order.

(*b*) A separate licence shall be necessary for each place of business.

(*c*) A licence fee of Rs. 50 for a new licence, Rs. 10 for renewal and Rs. 25 for a duplicate copy of the licence shall be paid by each applicant along with the application.

(*d*) The licences held by the Tamil Nadu Civil Supplies Corporatino Limited and the Co-operative Societies under the Tamil Nadu Cement Distribution (Licencing and Regulation) Order, 1978. shall be valid under this order till the date of expiry of the licence.

(*e*) The licence held by the persons other than Tamil Nadu Civil Supplies Corporation Limited and the Co-operative Societies under the Tamil Nadu Cement Distribution (Licensing and Regulation) Order, 1978, shall cease to be in force with immediate effect. Such Licencees shall be entitled to refund of the proportionate fee for the unexpired period of licence. The unsold stock of cement held by them shall be handed over to the licencee specified by the Collector.

5. *Issue of licences.*—(*a*) The licensing authority shall have the right to issue or renew any licence, or for valid reasons, to refuse to grant or renew any licence.

(*b*) The licence will be in Form II valid for a period of one year and renewable every year.

6. *Cancellation of licence.*—(*a*) The licensing authority may, after giving the licencee a reasonable opportunity of being heard cancel or suspend the licence, without prejudice to any other action that may be taken against him, if he or any other person acting on his behalf, contravenes any of the provisions of this Order or any conditions of the licence.

(*b*) When a licence issued under clause 5 is cancelled or suspended the stock of levy cement available with the licencee at the time of such cancellation or suspension shall be disposed of in accordance with the directions of the licensing authority.

7. *Power to give direction.*—The licencee shall comply with any general or special directions that may be given to him from time to time, by the licensing authority, regarding purchase, storage and sale of levy cement.

8. *Allotment of levy cement.*—Allotment of levy cement to different licensees in each district shall be made by the Director of the Collector, as the case may be, according to the quota fixed for each licensee and depending on the availability of levy cement for this purpose.

9. *Eligibility for issue of levy cement.*—The following categories of consumers and works shall be eligible for issue of levy cement, namely :

(i) Government departments, Public Sector undertakings, local bodies, quasi-Government Organisations, etc.;

(ii) Small-scale Industries for construction of factory building only ;

(iii) Socially oriented schemes like rural housing, housing for slum dwellers, harijans, adivasis, and other poorer sections of society, rural water supply schemes and other items included in the new 20 Point Programme ;

(iv) Construction of dwelling units having plinth area upto [illegible] square metres ;



(v) Small repairs to residential houses ;

(vi) any other category so notified by the Government.

10. *Permit Issuing Authority.*—(a) The Director of any officer authorised by him shall be the authority to issue permits for levy cement for categories (i), (ii) and (iii) specified in Clause 9 above.

(*b*) The Collector or any officer authorised by him shall be the authority to issue permits for levy cement for categories (iv) (v) and (vi) specified in clause 9 above, according to the availability of levy cement for this purpose.

11. *Application for Permit for purchase of levy cement.*—(*a*) An application to the permit issuing authority for a permit for the supply of levy cement to construct a dwelling unit having plinth area upto a total of 80 square metres shall contain the details of the work, together with the certificate in form III from any recognised engineer and a copy of the approved plan of the building and estimates for the construction and of the requirement of cement.

*Explanation.*—"Recognised Engineer" for purpose of this clause shall mean all engineers and architects working under the Government in Government Institution or Local Bodies and Chartered Engineers, Consulting Engineers and Architects.

(*b*) An application to the permit issuing authority for a permit for supply of levy cement upto twenty bags, for repairs to residential buildings, shall be accompanied with such particulars or documentaty proof as may be specified.

12. *Sale of levy cement.*—No licencee shall sell levy cement to any institution person or any other consumers other than those for whom permits have been issued under this order except in accordance with the terms and conditions of the permit in Form IV issued by a permit issuing authority.

13. *Display of stocks.*—Every licencee shall display at conspicuous part of the premises were he carries on business, the details of the daily stock of levy cement with him and the price therefor.

14. *Maintenance of register.*—Every licencee shall maintain register in Form V giving an account of all receipts and sales of levy cement.

15. *Submission of returns.*—Every licencee shall submit to the licensing authority and also to the permit issuing authority a return for every month ending with last day of each month, showing all receipts and sales of levy cement effected during the aforesaid period.

[1982 மார்ச் 10

16. *Sanction of Prosecution.*— No prosecution for contravention of any of the provisions of this order shall be instituted except with the previous sanction of the Collector concerned.

17. *Exemption.*— The Government may, by general or special order, exempt any person or classes of persons from all or any of the provisions of this order, if it is necessary so to do in the public interest.

18. *Savings.*—The provisions of this order shall be in addition to and not in derogation of the provisions of the Cement Control Order 1967, issued by the Government of India and amended from time to time.

FORM I

(*See* Clause 4)

To
The Collector of

I, Thiru Name and Address hereby apply for the issue of a licence to deal in levy cement in D. No. Street No. Village/Town/District. I will abide by the condition prescribed by the Government. I enclose Chalan No. dated for having remitted the licence fee of Rs. (Rupees ) in Treasury.

*Signature of the Applicant.*

NOTE.— The amount shall be remitted under the following Head of Account :

120. Industries —A. General— ab. Licence fees— 03. Licence fees under the Tamil Nadu Levy Cement Distribution (Licensing and Regulation) Order, 1982.

FORM II.

(*See* Clause 5)

Licence granted under the Tamil Nadu Levy Cement Distribution (Licensing and Regulation) Order, 1982.

**Name of the Licensee :**

**Place of Business :**



1982 மார்ச் 10]

(1) This licence is subject to the provisions of the Tamil Nadu Levy Cement Distribution (Licensing and Regulation) Order, 1982 and to the conditions specified below :

(i) The licensee shall sell levy cement at the rates notified by the Government of Tamil Nadu from time to time.

(ii) The licensee shall not sell levy cement to any person other than the permit holder.

(iii) The licensee shall abide by the instructions/issued by the Government / Director of industries and Commerce Collector as the case may be, from time to time.

(2) This licence is valid for a period of one year upto........

Issued by :
(Signature)
(Designation)

(Office Seal)

FORM III

(*See* Clause II)

From
(Name and full address of the Recognised Engineer)

To
(The Permit Issuing Authority)

Thiru (Name and address) is approaching you for the issue of a permit to purchase levy cement for the construction of residential building having a total plinth area of 80 square metre. I have satisfied myself that this application is bonafide and he requires minimum quantity of cement to execute the work.

I recommend that he may be givem a permit for of cement.

(*Signature*)
(Name and address of the recognised Engineer with date and seal.)

## FORM IV.

(*See* Clause 12)

Permit for sale of levy cement.

Permit No. Valid from
198 to 198

To

(Name and address of the licensee)

You are hereby directed to sell levy cement as per particulars given below to (Name and address of the consumers)

Quantity of cement
Purpose
Valid upto

Station :
Date :

Signature and designation of permit Issuing Authority.

Copy to the applicant.

## FORM V.

(*See* Clause 14)

Return showing the stock, purchase and sale of levy cement during the month to be submitted to the Collector.

1. Name and full address of licensee
2. Exact location of depot :
   1. Village.
   2. Taluk.
   3. District.
   4. Road/Street.



(1) *Month ending with.*
(2) *Category of cement.*
(3) *Opening balance (stock in hand at the commencement of the month (Quantity of cement).*
(4) *Purchased during the month.*
(5) *Total of columns (3) and (4).*
(6) *Sales during the month.*
(7) *Closing balance of the last day of the month.*
(8) *Remarks.*

Station :
Date :

*Signature of the Licensee.*

## இணைப்பு II.

(270ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண். 12.

1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்—கொள்கை விளக்கக் குறிப்பு.

நிர்வாக அமைப்பு

1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்த சமய அறக்கட்டளைகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 1960 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1 ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வந்தது. இச் சட்டத்தின் கீழ் இந்து சமய அறநிலையத் துறைக்கு பொது நிர்வாகத்திற்காக ஆணையாளர் ஒருவரும், அவருக்குக் கீழ் 7 துணை ஆணையாளர்களும், 17 உதவி ஆணையாளர்களும் உள்ளனர். இவர்களில், தருமபுரி மாவட்டத்திற்கு மட்டும், தருமபுரியினை தலைமையிடமாகக் கொண்டு ஒரு உதவி ஆணையாளர் பதவியிடம் ஏற்படுத்தப்பட்டு 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1 ஆம் நாள் முதல் இயங்கி வருகிறது. மேற் சொன்ன அதிகாரிகள் இச்சட்டத்தை செயல்படுத்துவதற்கு சட்டத்தின்படி அமைந்த அதிகாரிகளாவர்.

இவர்கள் தவிர உதவி ஆணையாளர் பதவித் தரத்தில் சரிபார்ப்பு அதிகாரிகள் எண்மரும் அவர்களுக்கு தேவையான துணைப் பணியாளர்களும் சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான திருவாபரணங்களையும் மற்ற விலையுயர்ந்த பொருள்களையும் ஆய்வு செய்து மதிப்பிடும் பணியை கவனித்து வருகின்றனர்.

ஒரு துணை ஆணையர் நிலையில், ஆணையரின் நேர்முக உதவியாளரும், ஒரு உதவி ஆணையர் நிலையில், ஆணையரின் கூடுதல் நேர்முக உதவியாளரும் உள்ளனர்.

துணை ஆணையர்களிடம் நீண்ட காலமாக நிலுவையிலிருக்கும் வழக்குகளை விசாரித்து விரைவில் முடிப்பதற்காக துணை ஆணையாளர் (நீதி) ஒருவர் நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகின்றார்.

அறநிலையத் துறையில் தலைமைத் தணிக்கை அதிகாரி ஒருவரும் அவருக்குத் தேவையான சார்நிலை அலுவலர்கள் பணியாளர்களுடன் ஒரு தணிக்கைப் பிரிவு இருந்துவருகிறது. இரு தணிக்கைப் பிரிவு சமய நிறுவனங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்து வருகின்றது.

மேலும், மேற்பார்வை பொறியாளர் ஒருவரின் தலைமையில் கோட்டப் பொறியாளர் ஒருவரும், தேவையான மேற்பார்வை அலுவலர்களும், பணியாளர்களும் மாவட்டங்களில் இந்து சமய நிறுவனங்களின் திருப்பணி மதிப்பீடுகளைத் தயாரித்தும் மற்றும் அப்பணிகளையும் மற்ற கட்டிட வேலைகளையும் மேற்பார்வையிட்டு கவனித்து வருகின்றனர்.

மாவட்ட துணை ஆட்சியர் பதவித் தரத்தில் தனி அதிகாரி ஒருவரும், தனி வட்டாட்சியர் ஐந்து பேரும் அடங்கிய வருவாய்த் தனிப்பிரிவு ஒன்று திருக்கோயில் நிலங்களை ஆய்வு செய்தல், பதிவேடுகள் தயாரித்தல் ஆகிய பணிகளை செய்து வருகிறது.

இது தவிர, பணியாளர் மீது சுமத்தப்படுகிற கடுமையான புகார்களையும் குற்றச்சாட்டுகளையும் விசாரணை செய்வதற்கு ஆணையாளருக்கு உதவியாக உதவி ஆணையாளர் பதவித் தரத்தில் தனி அதிகாரி பதவி ஒன்று 1979-ல் ஏற்படுத்தப்பட்டு தொடர்ந்து இயங்கி வருகிறது.

இம் மாநிலத்தில் சில திருமடங்கள் செயல்படுவதில் நிர்வாகக் கேடுகள், முறைகேடுகள் காணப்படுவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களை ஆராய்ந்து தனிப்பட புலானய்வு நடத்தும் பொருட்டு துணை ஆணையாளர் ஒருவரும் அவருக்கு உதவி புரிவதற்கென தனிப் பணியாளர்களும் 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் முதல் நியமிக்கப்பட்டுத் தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர்.

துணை ஆணையாளர் உள்ள ஒவ்வொரு வட்டாரத்திற்கும், வட்டார தணிக்கை அலுவலகம் ஒன்று ஏற்படுத்துவது குறித்து அரசின் கொள்கை படிப்படியாக செயல்படுத்தப்பட்டு இறுதியாக 1981 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1 ஆம் நாள் முதல் நாகப்பட்டினம் கோட்டத்திலும் ஏழாவது வட்டார தணிக்கை அலுவலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

### நிர்வாக அதிகாரிகள்.

பழநி அருள்மிகு தண்டாயுதபாணி ஆலயதில் துணை ஆணையர் நிலையில் ஒரு செயல் அலுவலர் உள்ளார். உதவி ஆணையர் நிலையில் நிர்வாக அதிகாரிகள் 10 கோயில்களில் பணியாற்றுகின்றனர்.



1978 ஆம் ஆண்டு ஜனவரித்திங்கள் 1 ஆம் நாளில் நிர்வாக அதிகாரி நிலை 1 முதல் நிலை 4 உள்ள கோவில்கள் 1,362 ஆக இருந்தது. அதற்குப்பின் மூன்று ஆண்டுகளில் 87 திருக்கோவில்களுக்கு செயல் அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். பிறகு 1980 ஆம் ஆண்டு 125 திருக்கோவில்களுக்கு செயல் அலுவலர்கள் நியமிக்கப்படுவதற்கு ஆணையர் ஆணைகள் பிறப்பித்தார்: தறபொழுது மொத்தம் 33,604 திருக்கோவில்களில் 1,574 திருக்கோவில்களுக்குத்தான் 444 செயல் அலுவலர்கள் நிர்வாகத்தை கவனித்து வருகின்றார்கள். கோவில்களின் நிர்வாகத்தை மேம்படுத்துவதற்காக அதிக எண்ணிக்கையில் செயல் அலுவலர்களை நியமிக்க வேண்டியது அவசியம் ஆகிறது. ஆகவே 35 கூடுதல் செயல் அலுவலர்கள் பதவிகள் ஏற்படுத்துவதற்காக கருத்துரு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

1980 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் திருமடங்களைச் சார்ந் ஆலயங்களுக்கென சட்டப்பிரிவு 43-ஏ-ன் கீழ் 32 செயல் அலுவலர்களின் பதவியிடங்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்த நியமனத்தை திருவாடுதுறை, தருமபுரம் மற்றும் குன்றக்குடி திருமடத்துத் தலைவர்கள் உயர்நீதி மன்றத்தில் ரிட் மனுக்கள் மூலம் எதிர்த்து இடைக்காலத் தடையை 1980 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 16 ஆம் நாளில் பெற்றுள்ளனர். இந்த ரிட் மனுக்கள் இன்னும் நிலுவையில் உள்ளன.

இந்து சமய அறக்கட்டளைகள் நிர்வாகத் துறைப் பொறுப்பின்கீழ் இருந்த சமய நிறுவனங்களின் எண்ணிக்கை 1980-81 ஆம் ஆண்டில் 33,455 ஆக இருந்தது, 1981—82 ஆம் ஆண்டில் 33,604 ஆக உயர்ந்துள்ளது. இந்நிறுவனங்களில் 31,567 திருக்கோயில்கள் 55 திருமடங்கள், திருமடங்களைச் சார்ந்த 59 கோயில்கள், 1,721 குறிப்பிட்ட சமய அறக்கட்டளைகள் 185 சமூக அறக்கட்டளைகள், 17 சமணசமய நிறுவனங்கள் ஆகியவை அடங்கும்.

### தணிக்கை.

தணிக்கை செய்வதில் முன்பு உபயோகத்தில் இருநத தணிக்கை அட்டவணைகளை மாற்றி தேவையான விவரங்கள் அடங்கப்பெற்ற வினா படிவத்தின் மூலம் மாற்றி அமைத்து தீவிர திடீர் தணிக்கை சோதனைகளால் ஆலயங்கள் திருமடங்கள், மடங்களைச் சார்ந்த ஆலயங்கள், திருப்பணி வேலைகள் இவற்றில் ஏற்படும் தணிக்கை மறுப்புகள் உடனுக்குடன் நிவர்த்தி செய்வதற்கு ஏதுவாக இருப்பதுடன் தணிக்கையின் தரமும் நன்கு உயர்ந்துள்ளது. தணிக்கைப் பிரிவிற்கு ஆகும் செலவு தணிக்கை கட்டணத்தைக் காட்டிலும் அதிகமாக உள்ளது. தற்சமயம் சமய நிறுவனங்களின் ஆண்டு வருமானத்திலிருந்து ஒரே சீராக $1\frac{1}{2}$ சதவீத தணிக்கை கட்டணமாக அறநிலையச் சட்டம் பிரிவு 92(2)-ன் கீழ் வசூலிக்கப்படுகிறது. இந்தச் கட்டண விகிதம் 1951-ம் ஆண்டு முதல் அமுலில்

இருக்கிறது. தணிக்கை பணியாளர்களுக்குச் சம்பளம் மற்றும் படிகள் உயர்த்தப்பட்டதால் செலவு அதிகமாக ஆகி உள்ளது. இந்த செலவை சரிக்கட்டும்பொருட்டு தணிக்கைச் கட்டணத்தை சமய நிறுவனங்களின் ஆண்டு வருமானத்தில் 3 சதவீதம் ஆக உயர்த்தக்கூடிய குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

### திருக்கோயில் பணியாளர்கள்.

அர்ச்சகர்கள் உள்பட சுமார் 82,000 பணியாளர்கள் இந்து சமய நிறுவனங்களில் பணியாற்றி வருகின்றனர். பணியாளர்களின் சம்பளம், படி முதலியவைகளுக்காகச் செலவு ஆண்டு உதவித் தொகை நிர்ணய வருமானத்தில் 30 சதவீதத்திற்குள் இருக்க வேண்டுமென்ற வரம்பு 1—4—1981 முதல் 40 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

பழநித் திருக்கோயிலிலும் உதவி ஆணையர் நிலையில் உள்ள செயல் அலுவலர் நிர்வகிக்கும் ஆலயங்களிலும் உள்ள பணியாளர்களுக்கு அகவிலைப்படி ரூ. 650 வரையுள்ள அடிப்படைச் சம்பளத்திற்கு 20 சதவீதமாக இருந்ததை 1—12—1981 முதல் 27.5 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. ரூ. 650-க்கு மேல் அடிப்படை சம்பளம் உள்ளவர்களுக்கு 15 சதவீதமாக கொடுக்கப்பட்ட அகவிலைப்படி 1—12—1981 முதல் 20.625 சதவீதமாக உயர்த்தப்பட்டது.

இதர திருக்கோயில்களில் ரூ. 400 வரை அடிப்படை சம்பளம் பெறும் பணியாளர்களுக்கு அகவிலைப்படி 1—7—1981 முதல் ரூ. 45 என்றிருந்தது 1—12—1981 முதல் ரூ. 50 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அவ்வாறே ரூ.400-ம் அதற்கு மேலும் அடிப்படை சம்பளமுள்ளவர்களுக்கு அகவிலைப்படி 1—7—1981 முதல் ரூ. 60 என்றுள்ளதை 1—12—1981 முதல் ரூ. 70 ஆக உயர்த்தப்பட்டது. நகர ஈட்டுப்படியும் வீட்டு வாடகைப் படியும் கொடுக்கப்படாத கிராமப்புறங்களிலுள்ள ஆலயங்களின் பணியாளர்களுக்கு 1—1—1981 முதல் மாதத்திற்கு ரூ. 5 வழங்கப்பட்டுள்ளது.

பணிக்காலத்தில் இறந்துவிடும் கோவில் பணியாளர்களுக்கு இறுதிச் சடங்குச் செலவுகளுக்காக ரூ. 250 கொடுக்கப்பட்டு பின்பு அத்தொகை அவருடைய பணிக்கால நிதியிலிருந்து (சி.பி.எப்.) எடுத்துக் கொள்ளப்படுகிறது.

1981 ஆம் ஆண்டில் ரூ. 400 அல்லது இரண்டு மாத அடிப்படைச் சம்பளம் அவற்றில் எது குறைவோ அது பண்டிகை முன் பணமாக வழங்கப்படுகிறது.



ஆண்டுக்கு ரூ. 10,000 அல்லது அதற்கு மேலும் வருமானம் வரும் 334 திருக்கோவில்களில் பணியாற்றுபவர்களுக்கு பணிக் காலக் கொடைநிதி (சி. பி. எப்.) திட்டம் நடைமுறையில் உள்ளது.

கன்னியாகுமரி தேவஸ்தலங்களில் பணியாளர் அமைப்பில் உள்ள 131 பணியாளர்கள் 1—1—75 முதல் அரசுப் பணியாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளார்கள்.

### இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் 1959-க்கு திருத்தம்,

இந்து சமய அறநிலைய நிறுவனங்களை சீரான கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கும் சட்ட நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்காகவும் பலவிதமான சட்டத்திருத்தங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன. அவைகளில் சில முக்கியமானவை என்றும் உடன் அமுல்படுத்துவது அவசியம் என கருதப்பட்டவைகளை இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட திருத்த முன் வடிவு எண் 64/81 1981ஆம் ஆண்டு ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் நிறைவேற்றப்பட்டு இந்திய குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலைப் பெறும் பொருட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குடியரசுத் தலைவர் ஒப்புதல் எதிர்ப்பார்க்கப்படுகிறது.

### திருவுருவச் சிலைகள் ஏனைய விலை மதிப்புள்ள பொருட்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள்.

181 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 1,115 சிலைகள் போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகளுடைய அருகில் உள்ள கோயில்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. 1972 ஆம் ஆண்டு தொன்மைக்கால அரும்பொருட்கள் கலைப் பொருட்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 52/1972) 12 ஆம் பிரிவின் கீழ் திருவுருவச் சிலைகள் தொல் பொருள் ஆய்வியல் துறையில் பதிவு செய்யப்படுகின்றன. இதுவரையில் இச்சட்டத்தின் கீழ் 3,984 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 23,001 சிலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இப்பணி தொடர்ந்து நடைபெறுகிறது. சிலைகளைப் புகைப்படமெடுத்து தொகுப்பேடு தயாரிக்கப்படுகிறது. இதுவரையில் 3,100 திருக்கோயில்களில் புகைப்படத் தொகுப்பேடுகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

சிலைப் பாதுகாப்பு முறைகளைப் பற்றி ஆராய்ந்து பார்த்து அரசு கீழ்க்கண்ட கருத்துக்களை பரிசீலித்து வருகிறது:—

1. ஆலயங்களில் களவு போன சிலைகள் பற்றி தகவல் கொடுப்போருக்கு கணிசமான சன்மானம் வழங்க வேண்டும்.

2. இரயில்வே சொத்துக்களும் மற்றும் தந்தி பொருள்களை வைத்திருப்பது குற்றம் என்று இயற்றப்பட்டுள்ள சட்டங்களைப் போல் சான்றில்லாமல் ஆலய சிலைகளை தன்னிடம் வைத்திருப்பது குற்றம் என்று சட்டம் இயற்றப்படவேண்டும்.

3. விலையுயர்ந்த சிலைகள் வெளிநாட்டிற்கு கடத்தப்படுவதை தடுப்பதற்காக சுங்க இலாகா அதிகாரிகள் தடுக்கும் பொழுது சிலைகளின் தன்மைகளையும் மதிப்பையும் தெரிந்து கொள்ள சுங்க இலாகா அதிகாரிகளுக்கு அறநிலையத் துறையிலும் தொல்பொருள் ஆய்வுத் துறையிலும் பயிற்சி அளிக்கப்படவேண்டும்.

4. விமான தளம் மற்றும் துறைமுகத்தின் வழியாக எடுத்துச் செல்லப்படும் சிலைகளின் தன்மைகளை அறிய சுங்க இலாக்காவுக்கு துணையாக தொல்பொருள் ஆய்வுத் துறை அதிகாரிகளை அனுப்பவேண்டும்.

5. ஆலயங்களில் பணியாற்றும் காவலாளிகளுக்கு காவல் துறையினர் தற்காப்பு பயிற்சிக்கான பயிற்சிகளை அளிக்க வேண்டும்.

6. சிலைத் திருட்டைதடுக்கும் காவல் துறையின் குற்றப் பிரிவு தஞ்சைப் பகுதியில் பலப்படுத்த வேண்டும்.

7. தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் கலைக் கூடங்களில் உள்ள தொன்மைவாய்ந்த சிலைகளை காவல்துறையும், தொல் பொருள் ஆராய்ச்சித் துறையும் அவ்வப்போது திடீர் சோதனைகள் நடத்தவேண்டும்.

1979 ஆம் ஆண்டு மே மாதத்தில் தஞ்சை மாவட்டம் புஞ்செய் கிராமத்தில் உள்ள அருள்மிகு நல்துணை ஈஸ்வரர் ஆலயத்தில் இருந்து 8 பஞ்சலோக சிலைகள் திருடப்பட்டு பம்பாயில் விற்கப்பட்டு பிறகு அவை லண்டன் மாநகரத்திற்கு கடத்திச் செல்லப்பட்டன. சர்வதேச குற்றவியல் காவல் துறை பிரிவின் (Interpol) உதவியுடன் துப்பு துலக்கப்பட்டு இங்கிலாந்தில் வழக்கு நடத்தப்பட்டு வருகிறது. இந்த சிலைகளை அடையாளம் காண்பிக்க அந்த ஆலயத்தைச் சேர்ந்த திரு முத்தைய்யா குருக்கள் 1982 சனவரியில் லண்டன் நீதி மன்றத்திற்கு அரசினால் அனுப்பப்பட்டார். அவரால் அடையாளம் காண்பிக்கப்பட்டு சிலைகளை மீட்க காவல்துறை மேல்நடவடிக்கை எடுத்துவருகிறது.



தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவிளக்குடி கிராமத்தில் உள்ள அருள்மிகு ஈஸ்வரன் ஆலயத்தில் இருந்து 1978 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20 ஆம் நாள் இரவு திருடப்பட்ட பெருமதிப்புள்ள நடராஜர் சிலை அமெரிக்க ஐக்கிய நாட்டில் இருப்பதாக செய்தி வந்துள்ளது. இந்த சிலையும் முதலில் லண்டனுக்கு கடத்தப்பட்டு அங்கிருந்து அமெரிக்காவுக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக தெரிய வருகிறது. இச் சிலையை மீட்க காவல் துறையினர் தக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

சிலை திருட்டை பொருத்த மட்டில் குற்றவியல் சட்டத்தில் கடுமையான தண்டனைகள் வழங்குவதற்காக சட்ட திருத்தங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

## உண்டியல்கள்.

உண்டியல்கள் திறப்பதற்கும் மற்றும் அதில் உள்ளவற்றை எண்ணுவதற்குமான முறைகள் கீழ்க்கண்ட விதத்தில் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன:—

(1) உண்டியல் திறப்பதற்கு முன் அதன் மீதுள்ள முத்திரைகளை சரி பார்க்கும் நேரத்தில் அனைத்து இரட்டைப் பூட்டு அதிகாரிகளும் அங்கு இருக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

(2) துணை ஆணையர், உதவி ஆணையர் அல்லது ஆய்வாளர், நகை சரி பார்க்கும் அதிகாரி மற்றும் பொது மக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் உண்டியல்களின் முத்திரைகளை நன்கு சரி பார்த்த பின்னர் பதிவுகளை தயார் செய்ய வேண்டும்.

(3) இது மட்டுமின்றி அங்கு குழுமியிருக்கும் அனைவரிடமும் சரி பார்த்ததற்கான சான்றிதழ் பெற வேண்டும். மற்றும் சரி பார்க்கும் அதிகாரியிடத்திலிருந்து தனியாக சான்றிதழ் ஒன்று பெறப்பட வேண்டும்.

(4) உண்டியல்களை திறப்பதற்கு முன்பாக திறக்கும் நாள் எண்ணும் நேரம் போன்றவற்றை பொதுமக்களின் பார்வைக்காக ஒரு சில நாட்களுக்கு முன்னதாகவே அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

(5) உதவி ஆணையர்கள் செயல் அலுவலர்களாக பணியாற்றும் கோயில்களில் உண்டியல்கள் திறக்கப்படும் போதும். எண்ணும்போதும் துணை ஆணையர்கள் நடவடிக்கைகளை மேற்பார்வையிடவேண்டும்.

(6) முதல் நிலை செயல் அலுவலர் மற்றும் இதர நிலை செயல் அலுவலர் ஆகியோரின் கட்டுப்பாட்டிலுள்ள, கணிசமான அளவு உண்டியலின் பணம் சேரும் ஆலயங்களின் உண்டியல்கள் திறக்கப்படும் போதும் அதில் இருப்பவற்றை எண்ணும்போதும் உதவி ஆணையாளர்கள் அங்கிருந்து நடவடிக்கைகளை மேற்பார்வையிட வேண்டும்.

(7) ஆவணங்களில் ஒவ்வொரு நிலையிலும் தனித்தனி பதிவுகள் செய்யப்பட வேண்டும்.

(8) ஆலயங்களுக்கு வழக்கமாக வந்து வழிபடும் பொது மக்களுள் ஒரு சிலரையும் மாவட்டங்களில் உள்ள உயர்மட்ட ஆலோசனைக்குழு உறுப்பினர்களையும் உண்டியல்களைத் திறக்கும்பொழுது அதில் உள்ளவற்றை எண்ணும்போதும் அங்கு இருக்குமாறு கேட்டுக்கொள்ள வேண்டும்.

(9) உண்டியல்களின் மேலுள்ள முத்திரை சரி பார்க்கப்பட்டபின் அந்த உண்டியலிலுள்ள பொருட்கள் அதிலிருந்து எடுக்கப்பட்டு இரட்டை பூட்டுகள் உள்ள பெட்டிகளில் போட்டுப் பூட்டி அதை எண்ணுமிடத்திற்கு தகுந்த பாதுகாப்புடனும் மேற்பார்வையுடனும் அனுப்பப்பட வேண்டும்.

(10) உண்டியல் காலி செய்யப்பட்டவுடன் அங்கிருக்கும் அனைவர்களின் முன்பாகவே மீண்டும் மூடப்பட்டு முத்திரை இட வேண்டும்.

(11) உண்டியலில் உள்ளவற்றை பிரித்து எண்ணுவது இரட்டை பூட்டு அதிகாரி துணை ஆணையர், உதவி ஆணையர், ஆய்வாளர், சரி பார்க்கும் அதிகாரி மற்றும் பொது மக்களின் பிரதிநிதிகள் ஆகியோரின் முன்பாக தகுந்த பாதுகாப்புடன் நடத்தப்பட வேண்டும்.

(12) அந்த இடத்திற்கு வந்து செல்வதற்கு ஒரே ஒரு வழியை மட்டும் விட்டு விட்டு (உள்ளே வரவும் வெளியே செல்லவும்) இதர வழிகள் மூடப்பட வேண்டும்.

(13) எண்ணுவதற்காக வந்திருக்கும் அனைத்து அலுவலர்களும் தகுந்த முறையில் பரிசோதிக்கப்பட்டு எண்ணும் இடத்திற்கு திறந்திருக்கும் ஒரே வழியில் உள்ளே அனுப்பப்பட வேண்டும். மற்றும் அவர்கள் பெயர்கள், உள்ளே நுழையும் நேரம் போன்றவற்றை ஒரு தனி பதிவேட்டில் குறிக்கப்பட வேண்டும்.

(14) எண்ணும் இடத்தில் ஆண்கள் இடுப்புக்கு மேல் ஆடை அணியாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.



(15) எண்ணும் இடத்திலுள்ள எவரும் அவர்களது சொந்த பணத்தையோ அல்லது மதிப்புமிக்க பொருட்களையோ வைத்திருக்க அனுமதிக்கப்படக் கூடாது. மேலும் அவர்கள் எந்தவித மான அணிகலன்களையும் அணிந்திருக்கக் கூடாது.

(16) எண்ணும் இடத்திலேயே அங்குள்ளவர்களுக்கு உணவு வழங்கப்பட வேண்டும்.

(17) எண்ணும் வேலை முடிந்து அனைவரும் வெளியே செல்லும்போது தகுந்த முறையில் பரிசோதனை செய்யப்பட்டு வெளியே அனுப்பப்பட வேண்டும். அவ்விவரங்கள் அங்கிருக்கும் பதிவேட்டில் குறிக்கப்பட வேண்டும்.

### ஆலய நிலங்கள், கட்டிடங்கள்.

நமது மாநிலத்தில் சுமார் 5 இலட்சம் ஏக்கர் நிலங்கள் இந்து சமய நிறுவனங்களுக்கு சொந்தமாக உள்ளன. பல் வேறான, நிலச் சீர்திருத்த நடவடிக்கைகளால் குத்தகைதாரர்களின் நலன்கள் பாதுகாக்கப்படுவதாலும், கடனிலிருந்து அவர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படுவதாலும், ஆலயங்களுக்குச் சேர வேண்டிய குத்தகை சுமார் 16 கோடி நிகர நிலுவையாக உள்ளது. இதன் விளைவாக ஆலயங்கள் பெருமளவில் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளன.

இவ்வாண்டு சுமார் 4,000 ஏக்கர் நிலத்திலிருந்து ரூபாய் 1,26,715 கூடுதல் வருமானம் பெறப்பட்டது.

நடப்பாண்டில் 3,309 மனைகள் மற்றும் கட்டிடங்கள் ஆகியவற்றிலிருந்து ரூபாய் 1.2 இலட்சம் கூடுதல் வருமானம் பெறப்பட்டது.

### செப்பனிடுதலும் திருப்பணிகளும்.

1981-82 ஆம் ஆண்டில் ரூபாய் 5·68 கோடி மதிப்புள்ள 1,005 திருப்பணிகள் மற்றும் ஏனைய பணிகளுக்கும் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது. இப்பணிகள் பின்வருமாறு :—

| பணி. | வகைகளின் எண்ணிக்கை. | பணியின் மதிப்பு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் கோடியில்) |
| திருப்பணி .. .. .. | 530 | 3·52 |
| மற்ற பணிகள் .. .. .. | 475 | 2·16 |
| மொத்தம் | 1,005 | 5·68 |

ரூபாய் 67 இலட்சம் மதிப்புள்ள 243 திருப்பணி பணிகளும் ரூபாய் 27 இலட்சம் மதிப்புள்ள 221 இதர பணிகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

நடைபெற்றுக் கொண்டிருக்கும் முக்கிய பணிகள் பின்வருமாறு :—

(1) அருள்மிகு அரங்கநாதசாமி கோயில், ஸ்ரீரங்கம்.

சுமார் ரூபாய் ஒரு கோடி மதிப்புச் செலவில், தவத்திரு அகோபில மடத்து ஜீயர் சுவாமிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ள தெற்கு இராய கோபுரத் திருப்பணி நடைபெற்று வருகிறது. கோபுரத்தின் 13 அடுக்கில் மூன்று அடுக்கு வேலை ரூபாய் 40 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டு நான்காவது அடுக்கிற்கான வேலை முனைப்பாக நடைபெற்று வருகிறது.

(2) அருள்மிகு சபாநாயகர் கோயில், சிதம்பரம்.

இக் கோவிலுக்கான முக்கியத் திருப்பணிக்கு 39 இனங்களுக்கான செலவு ரூபாய் 38·45 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது. மூன்று இராஜ கோபுரங்கள் வேலை முடிவடைந்துள்ளது. இதுவரை ரூபாய் 28 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. ரூ. 9·50 இலட்சம் அரசு மானியமும் ஆணையரின் பொது நல நிதியிலிருந்து ரூபாய் 20,000 பழனி திருக்கோயில் நிதியிலிருந்து ரூ. 2·65 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை பொது மக்களிடமிருந்து நன்கொடையாக பெற்று திருப்பணியினை முடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

| | (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| (3) அருள்மிகு தண்டபாணி சுவாமி கோயில், பழனி தெற்கு பிரகார மண்டபம் கட்டுதல் மற்றும் வடக்கு பிரகார மண்டபத்தை அகலப் படுத்துதல். .. .. .. .. | 12·40 |
| (4) திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயில். இராஜ கோபுரத்தைப் புதுப்பித்தல் மற்றும் ஜெயந்திநாதர் விடுதியில் முதல் மற்றும் இரண்டாம் தளங்கள் ஓட்டுதல் .. .. | 24·35 |
| (5) சேலம் கோட்டை அருள்மிகு மாரியம்மன் கோயில் புதிய இராஜ கோபுரம் கட்டுதல் .. .. | 18·00 |



| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| (6) உத்திரகோசமங்கை அருள்மிகு மங்களநாத சுவாமிகள் கோவில் அன்னியொட்டி மண்டபம் கட்டுதல் .. | 9·50 |
| (7) மைலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் கோயில் இராஜகோபுரம் கட்டுதல் மற்றும் இதர திருப்பணிகள் .. .. .. .. | 6·00 |
| (8) ஸ்ரீபெரும்புத்தூர் அருள்மிகு பாஷ்யகார ஆதிகேசவ பெருமாள் கோவில் இராஜகோபுரம் புதுப்பித்தல் .. .. | 4·00 |
| (9) தஞ்சாவூர் மாவட்டம் பொன்னப்பூர் அருள்மிகு சொர்ணபுரீஸ்வரர் கோயில் சன்னதியைத் திரும்பக் கட்டுதல் மற்றும் புதுப்பித்தல் வேலைகள் .. .. .. | 3·30 |
| (10) செங்கற்பட்டு மாவட்டம், கரிம்பெடு அருள்மிகு நாததீஸ்வரர் கோயில் கோபுரம் புதுப்பித்தல் மற்றும் திருமண மண்டபம் கட்டுதல் .. .. .. | 2·39 |
| (11) புதுக்கோட்டை மாவட்டம், திருக்கோகர்ணம், அருள்மிகு பிரகதாம்பாள் கோயில் செப்பனிடுதல் மற்றும் புதுப்பித்தல் .. | 3·00 |
| (12) திருச்சி மாவட்டம் ஸ்ரீ ரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி ஆலயம் பணியாளருக்கான குடியிருப்புகள் கட்டுதல் | 2·50 |
| (13) பெரியார் மாவட்டம், மூலனூர் அருள்மிகு வஞ்சியம்மன் கோயில் கோயில் திரும்பக் கட்டுதல் .. .. | 3·00 |
| (14) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைகழி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயில இராஜ கோபுரம் கட்டுதல் .. .. | 2·10 |
| (15) மதுரை மாவட்டம் சின்னமனூர் அருள்மிகு பூலானந்தீஸ்வரர் கோயில் இராஜ கோபுரம் கட்டுதல். .. .. | 2·05 |

| | | |
|---|---|---|
| (16) சென்னை புரசைவாக்கம் அருள்மிகு சங்காதீஸ்வரர் கோயில இராஜ கோபுரம் கட்டுதல் | .. .. | 2·00 |
| (17) சென்னை கோடம்பாககம் அருள்மிகு வேங்கீஸ்வரர் கோயில பிரகார மண்டபம் கட்டுதல் | .. .. | 4·00 |
| (18) திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் அருளமிகு சுப்பிரமணிய சுவாமி கோயில் குற்றாலத்தில் தகவல நிலையம் கட்டுதல் | | 1·33 |

### முடிவு பெறாப் பணிகளும் முடிக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் :—

1978 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள 1-ஆம் தேதிக்கு முன் முடிக்கப்பட வேண்டிய ரூபாய் 1,62,66,150 மதிப்பிலான மொத்தம் 315 பணிகளில் ரூ. 85,65,850 மதிப்பிற்கான 216 பணிகள் நிறைவேற்றப்பட்டன. 1978-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1-ஆம் நாளுக்கு முன் முடிக்கப்பட வேண்டிய ரூபாய் 30,80,700 மதிப்பிலான 27 திருமண மண்டபப் பணிகளில் ரூ. 21,00 இலட்சம் மதிப்பிலான 18 திருமண மண்டபங்கள் இதுவரை கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதர திருமண மண்டபங்கள் கட்டுமானப் பணி பல்வேறு நிலையில் உளளன.

### குடமுழுக்கு :

1981ஆம் ஆண்டில் 93 முக்கிய கோவில்களில் குடமுழுக்கு விழா நடத்தப்பட்டது.

### பக்தர்களுக்குத் தங்கும் வசதிகள்.

தற்போது 46 தங்கும் விடுதிகளும். 231 குடில்களும். 900 அறைகளும் 49 திருமண மண்டபங்களும் யாத்திரை தலங்களில் உள்ள பெரிய ஆலயங்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

### சமுதாய நலப் பணிகள்.

கல்வி. மருத்துவம். கலாச்சாரம் மற்றும் சமூக நலம் பற்றிய நிறுவனங்கள் கீழ்க்கண்டவாறு பல்வேறு ஆலயங்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.—



| | |
|---|---|
| கல்லூரிகள் .. .. .. | 5 |
| மகளிர் தொழில் நுட்பக் கல்வி நிலையம் .. .. | 1 |
| மேல் நிலைப் பள்ளிகள் .. .. .. .. | 5 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. .. .. .. | 15 |
| நடுநிலைப் பள்ளிகள் .. .. .. | 3 |
| தொடக்கப்பள்ளிகள் .. .. .. .. | 4 |
| ஆகம பாடசாலைகள் .. .. .. .. | 3 |
| வேத பாடசாலைகள் .. .. .. .. | 3 |
| தேவார பாடசாலைகள் .. .. .. | 7 |
| நாதஸ்வரம் மற்றும் தவில் பள்ளிகள் .. .. | 3 |
| நூலகங்கள் .. .. .. .. .. | 203 |
| அலோபதி மருத்துவமனைகள் .. .. .. | 2 |
| சித்த வைத்திய சாலைகள்.. .. .. .. | 25 |
| செவிடர் மற்றும் ஊமையர் பள்ளி .. .. | 1 |
| பரிவு இல்லங்கள் .. .. .. .. .. | 3 |
| முற்றிலும் கோவில் நிதிகளால் நடத்தப்படும் அன்பு இல்லங்கள் .. .. .. .. .. | 7 |
| 25 சதவீத அரசு மானியத்துடன் கோவில்களால் பராமரிக்கப்படும் அன்பு இல்லங்கள் .. .. | 31 |

பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்நிதியிலிருந்து ரூ. 48·5 இலட்சம் தொடரா செலவிலும் ரூ. 4·52 இலட்சம் ஆண்டு செலவிலும் மகளிர்க்கான ஒரு தொழில் நுட்ப பள்ளி 2-10-81 அன்று தொடங்கப்பட்டுள்ளது.

மாமல்லபுரத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு கட்டிடக்கலை மற்றும் சிற்பக்கலை கல்வி நிறுவனம். கட்டிடக்கலை பட்டப் படிப்பு திட்டத்திற்குத் தேவையான கூடுதல் கட்டிட வசதி செய்வதற்கும். 6 காட்சிக் கூடங்கள் அமைப்பதற்கும். திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலயம். திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலயம். மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம். பழனி அருள்மிகு பழனி ஆண்டவர் ஆலயம் முதலான ஆலயங்களின் உபரி நிதியிலிருந்து ரூபாய் பத்து லட்சம் நிதி உதவி செய்ய அரசு அனுமதி அளித்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறையில் கன்னியாகுமரி தேவஸ்வம் சார்பில் நடத்தப்படும் தேவி குமரி அம்மன் மகளிர் கல்லூரிக்காக புதுக் கட்டிடங்கள் கட்ட ரூ. 7 இலட்சம் அனுமதிக்கப்பட்டது.

### 25 சதவித அரசு மானியத்தைக் கொண்டு அன்பு இல்லங்கள் பராமரித்தல்.

கோயில்களின் ஆதரவில் 2,460 சிறார்களைக் கொண்டு (1850 சிறுவர்கள் மற்றும் 610 சிறுமிகள்) 31 அன்பு இல்லங்கள் நடத்தப் பட்டு வருகின்றன. இல்லங்களை நடத்துவதற்கு ஆகும் தொடர் செலவில் நான்கில் மூன்று பங்கை, சம்பந்தப்பட்ட

கோயில்கள் ஏற்றுக் கொள்கின்றன. எஞ்சிய ஒரு பாகத்தை அரசு ஏற்கிறது. 1980–81 ஆம் ஆண்டில் ரூ. 8·77 இலட்சம் இப்பணிக்கு செலவிடப்பட்டது.

இதைத் தவிர சமய நிறுவனங்கள் முழுமையாக தங்கள் நிதியைக் கொண்டு 7 அன்பு நிலையங்களைப் பராமரித்து வருகின்றன. இந்த 7 நிலையங்களில் தற்போது 400 பேர் உள்ளனர்.

### திருக்கோயில்களில் தமிழ்ப் புலவர்களை நியமித்தல்.

தற்போது கோயில்களில் 88 தமிழ்ப் புலவர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர். அவர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு தலா ரூபாய் 165 வழங்கப்படுகிறது. மேலும் நிதி நிலமைக்கு ஏற்ப, தேவைப்படும்போது கூடுதல் தமிழ்ப் புலவர்களை நியமனம் செய்ய துணை ஆணையர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

### தமிழ் இசை வளர்ச்சி.

தமிழிசை வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் நோக்கத்துடன், நாதஸ்வரத்திலும் தவிலிலும் ஒவ்வொரு துறையிலும் 5 மாணவர்களுக்கு நாதஸ்வரத்தில் மேற் பயிற்சி பெற திங்கள் ஒன்றுக்கு ரூ. 500-ம், 5 மாணவர்கள் தவிலில் மேற் பயிற்சி பெற திங்கள் ஒன்றுக்கு ரூ. 300-ம், 3 வேலையில்லாத ஓதுவார்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,000 உதவித் தொகை வழங்குவதற்கான திட்டம் ஒன்றை அரசு நடைமுறைப்படுத்துகிறது.

இத்திட்டத்தின் கீழ், 1978-ல் ஒரு மாணவரும், 1979-ல் இரண்டு மாணவர்களும், 1980-ல் இரண்டு மாணவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு, நாதஸ்வரம் மற்றும் தவிலில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இது தவிர மூன்று வேலையில்லா ஓதுவார்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு, 1980 மற்றும் 1981 ஆண்டுகளில் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும் அவர்களுக்கு வேலை கிடைக்கும் வரை உதவித் தொகை வழங்கப்படும்.

### 1981ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 சுதந்திர நாள் அன்று நடந்த சிறப்பு வழிப்பாடும், பொது விருந்தும்.

தமிழகத்தில் இந்துக்கள் அனைவரும் சாதி வேறுபாடின்றி ஆலய வழிபாடு செய்வதற்கு எந்த இடையூறும் இல்லை. இந்த நிலைமையை எடுத்துக் காட்டும் வகையிலும், ஆதி திராவிட மக்கள் இந்து சமய நிகழ்ச்சிகளில் அதிக அளவில் பங்கு கொள்வதற்கான வழிவகைகளை உயர்த்தும் பொருட்டும் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்தும் தமிழகம் முழுவதும்



3,800-க்கும் அதிகமான திருக்கோயில்களில் 1981 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15-ஆம் தேதி சுதந்திர நாளன்று நடத்தப் பட்டன. இதில் சுமார் 8 இலட்சம் மக்கள் கலந்து கொண்டனர். பல்வேறு இடங்களில் நடந்த இந்த விழாக்களில் மாண்புமிகு முதலமைச்சர், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது வாழ்வில் உள்ள தலைவர்கள் அனைவரும் பங்கு கொண்டனர்.

### இந்து ஆதிதிராவிடர், இந்து ஏழை பிற்பட்ட வகுப்பினர் திருமணங்கள்.

இந்து ஆதி திராவிடர், பிற்பட்ட வகுப்பினர் மற்றும் ஏழை இந்துக்கள் ஆகியோர் திருமணங்கள் ஒவ்வொன்றிற்கும் ரூபாய் 750-லிருந்து ரூபாய் 1,000 வரை ஆலய நிதியிலிருந்து உதவியாக வழங்குவது என்ற அரசின் கொள்கை 1981 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1981 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15 ஆம் தேதி முதல் 1982 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 22 ஆம் தேதி வரையிலான காலகட்டத்தில் 16 பெரிய திருக்கோயில்களில் 379 திருமணங்கள் நடந்தன.

### " திருக்கோயில் "

"திருக்கோயில்" மாத இதழின் 5,000 பிரதிகள் அச்சடிக்கப் பட்டு, உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் தொடர்ந்து விநியோகமும், விற்பனையும் செய்யப்படுகின்றன.

### உலகத் தமிழ் மாநாடு மற்றும் பொருட்காட்சிகள்.

1981 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் உலகத் தமிழ் மாநாடு தொடர்பாக மதுரையில் நடைபெற்ற பொருட்காட்சியில் இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித் துறை முதல் பரிசு பெற்றது.

மாவட்ட தலைமையிடங்களில் நடைபெற்ற பொருட்காட்சிகளிலும் இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித் துறை கீழ்க் கண்ட பரிசுகளைப்பெற்றன :—

(1) அரசு பொருட்காட்சி, தஞ்சாவூர்—முதல் பரிசு.

(2) அரசு பொருட்காட்சி, கோயம்புத்தூர்—முதல் பரிசு.

[1982 மார்ச் 10

## உயர்மட்ட ஆலோசனைக் குழு.

தமிழ்நாட்டிலுள்ள இந்து சமய நிறுவனங்களைப் பொறுத்து எழும் பொது பிரச்சனைகளைப் பற்றி கருத்துக்களை அரசுக்கு அவ்வப்போது எடுத்துக் கூறுவதற்குச் செய்தி மற்றும் அற நிலையத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில, ஓர் உயர் மட்ட ஆலோசனைக் குழு 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் அங்கத்தினர்கள் பின்வருமாறு :—

1. மாண்புமிகு டாக்டர் ம.பொ. சிவஞானம், சட்டமன்ற மேலவைத் தலைவர்.

2. திரு. எஸ். கிருஷ்ணசாமி ரெட்டியார், ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி.

3. தவத்திரு ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள், சங்கராச்சாரியார் மடம், காஞ்சீபுரம்.

4. தவத்திரு அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை.

5. தவத்திரு சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், தருமபுர ஆதீனம், தருமபுரம்.

6. தவத்திரு அருணகிரி ஞானசம்மந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், ஆதீனகர்த்தர், மதுரை ஆதீனம், மதுரை.

7. தவத்திரு காசிவாசி முத்துக்குமாரசுவாமி தம்பிரான சுவாமிகள், திருப்பனந்தாள்.

8. தவத்திரு அழகிய சிங்கர் ஜீயர் சுவாமிகள், அகோபில மடம், மதுராந்தகம்.

9. தவத்திரு ஆண்டவன் சுவாமிகள், திருவரங்கம்.

10. தவத்திரு குன்றக்குடி அடிகளார், குன்றக்குடி.

11. தவத்திரு சாந்தலிங்க அடிகளார், பேரூர்.

12. தவத்திரு வானமாமலை ஜீயர் சுவாமிகள், வானமாமலைமடம், நாங்குநேரி.

13. தவத்திரு சுந்தர சுவாமிகள், கௌமாரமடம், சரவணம் பட்டி.



1982 மார்ச் 10]

14. ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள் மைலம் பொம்மையபுரம் ஆதீனம்.

15. திருமுருக கிருபானந்தவாரியார், சென்னை.

16. முத்தமிழ்க்காவலர் திரு. கி.ஆ. பெ. விசுவநாதம், திருச்சிராப்பள்ளி.

17. டாக்டர் ராஜா சர் எம். ஏ. முத்தையா செட்டியார், எம்.எல்.சி., சென்னை.

18. திரு. கம்பன் அடிப்பொடி, காரைக்குடி.

19. திரு. என். மகாலிங்கம், பி.எஸ்.சி., எம்.ஐ.இ., சென்னை.

20. தவத்திரு குருஜி சுந்தரராமன், சென்னை.

21. திரு. எல். இளையபெருமாள், எம். எல். ஏ.

22. திரு. கே. பாலசுப்பிரமணியன், எம். எல் ஏ.

23. திரு. பி. முனுசாமி, எம்.எல்.சி.

24. திரு. அ. வெ.ர. கிருஷ்ணசாமி ரெட்டியார், திருச்சிராப்பள்ளி.

25. திரு. மு. அருணாசலம், காந்தி வித்தியாலயம், திருமேனியார் கோவில்.

26. டாக்டர் ராதா தியாகராஜன், எம்.ஏ., பி.எச்.டி., மதுரை.

27. திருமதி சௌந்தரா கைலாசம், சென்னை.

28. திரு. கே. எஸ். இராமசாமி, பி.ஏ., பி.எல்., கோபிச்செட்டிபாளையம்.

29. டாக்டர் என். தேவநாதன், சென்னை.

30. திரு. வித்வான் வே. இலட்சுமணன், பால சோதிடம், சென்னை.

31. திரு. எம். இராமசாமி, தலைவர், இந்து ஆலயப பாதுகாப்புக்குழு, சேலம்.

32. திரு. டி. ச. சாம்பமூர்த்தி சிவாச்சாரியர், பொதுக் காரியதரிசி, தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை.

33. திரு. என். ரங்கராஜபட்டர், திருவரங்கம்.

34. திரு. ஆர். டி. பார்த்தசாரதி, எம்.ஏ., பி.எல்.

35. பொதுக்காரியதரிசி, ஆரியசமாஜம், சென்னை.

36. ஆணையர் மற்றும், செயலர், வணிகவரி மற்றும் அறநிலயத்துறை.

37. ஆணையர், இந்துசமய அற நிலயததுறை, சென்னை; (உறுப்பினர்—செயலர்).

இக்குழுவின் முதல் கூட்டம் 1981 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் நடைபெற்றது. மேற்கண்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட பல்வேறு முடிவுகள் பரிசீலனையில் உள்ளன.

ஏற்கனவே கூறியவாறு பல நிலச்சீர்த்திருத்த சட்டங்களினால் ஆலய நிலங்களின் குத்தகை தாரர்களிடமிருந்து வரவேண்டிய குத்தகைத் தொகை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதால், தற்போது ஆலயங்களுக்குச் சேரவேண்டிய நிலுவை குத்தகை ரூபாய் 16 கோடி ஆகிறது. ஆலய நிலங்களின் சாகுபடி தாரர்களிடமிருந்து குத்தகையை ஒழுங்காக அவ்வப்போது வசூல் செய்ய முடியாததால், ஆலய வருமானம் பாதிக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் ஏற்படுத்திய சட்ட திருத்தத்தின் விளைவாக ஆலயத்தின் விளை பொருள் பங்கு 40 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. நிலச் சீர்த்திருத்த சட்டங்களின் சட்ட விதிகளை ஆராய்ந்து இந்த குறைந்த அளவு குத்தகையையாவது சரியாக வசூலித்து ஆலயத்திற்குக் கொடுப்பதற்கு வேண்டிய வழி வகைகளை ஆராய்ந்து கருத்துக்களைத் தெரிவிக்க உயர்மட்ட ஆலோசனைக்குழுவில் கீழ்க்கண்டவர்கள் அடங்கிய உட்குழு ஒன்று, செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது :—

1. மாண்புமிகு டாக்டர் மா.பொ. சிவஞானம், சட்ட மன்ற மேலவைத் தலைவர்.

2. திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார், ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி.

3. தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

4. திரு. என். மகாலிங்கம்.

5. திரு. அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார்.

6. திரு. எல். இளையபெருமாள், எம்.எல்.ஏ.



7. திரு. கே. பாலசுப்பிரமணியன், எம்.எல்.ஏ.

8. திரு. கே. எஸ். இராமசாமி.

9. திரு. ஆர். டி. பார்த்தசாரதி.

10. திரு. எம். இராமசாமி.

11. டாக்டர் என். தேவநாதன்.

12. ஆணையர் மற்றும் செயலர், வணிகவரி மற்றும் அறநிலையத்துறை.

13. ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை.

**இந்து சமய நிறுவனங்களில் சாதி இன / உட்பிரிவு அல்லாது பாகுபாடின்றி அர்ச்சகர்களை நியமித்தல்.**

தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் பூசை செய்யும் பூசகர்களின் பரம்பரை உரிமையை நீக்கும்பொருட்டு, 1959-ஆம் ஆண்டின் 22-ஆவது சட்டமாகிய இந்து சமய அறநிலையச் சட்டத்தின் 55-ஆவது பிரிவு தமிழ்நாடு அரசின் 1971-ஆம் ஆண்டு 2-ஆவது சட்டமாகிய இந்து சமய அறநிலையச் சட்டத்தின் திருத்தச்சட்டம் மூலம் திருத்தப்பெற்றது. இதை எதிர்த்து, தங்கள் முன்வந்த மனுக்களை உச்சநீதி மன்றத்தார் தள்ளுபடி செய்தனர். என்றாலும் அர்ச்சகரின் பரம்பரை உரிமை நீக்கப்பட்ட நிலையில் அர்ச்சகர்களின் நியமனம் ஆகமத்திற்குப் புறம்பாக இருக்ககூடும் என்று மனுதாரர்கள் தெரிவித்திருந்த அச்சத்தைக் குறிப்பிட்டு, ஒவ்வொரு கோயிலின் மரபு, அதில் வழக்கமாக நடைபெற்று வரும் வழிப்பாட்டு முறை, சடங்குமுறை, ஆகியவற்றிற்கு முரணான செயல் நடைபெறாமல் இருக்க இந்து சமய அறநிலையத்துறை சட்டத்தில் போதிய விதிகள் இருக்கின்றன, ஆக மனுதாரர்களின் அச்சத்திற்கு ஆதாரமில்லை என்ற கருத்தைத் தெரிவித்துள்ளனர். எல்லோருக்கும் வேலை வாய்ப்பு சமமாக இருக்கவேண்டும் என இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டிருப்பதையும், உச்சநீதி மன்றத் தீர்ப்பினையும் கருத்தில் கொண்டு, சாதி இன வேறுபாடு இன்றி, பூசகரையும் இதர உள்துறை பணியாளரையும் நியமனம் செய்வது குறித்து ஆராய்ந்து அரசுக்குத் தக்க ஆலோசனை கூறுமாறு சென்னை உயர்நீதி மன்ற ஓய்வு பெற்ற நீதிபதி டாக்டர் எஸ். மகராஜன் தலைமையில் வல்லுநர் குழு ஒன்றைத் தமிழ்நாடு அரசு 1979-ல் அமைத்தது. இக்குழு கீழ்க்கண்ட சமயத் தலைவர்களையும் இதர பெரியோர்களையும் சந்தித்து தனது அறிக்கையை 3—2—1982ம் நாளன்று அரசுக்கு அளித்துள்ளது :—

(1) காஞ்சி காமகோடி பீடம் தவத்திரு சங்கராச்சாரிய சுவாமிகள்.

(2) சிருங்கேரி தவத்திரு சங்காரச்சாரிய சுவாமிகள்.

(3) தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

(4) அகோபில மடம் தவத்திரு ஜீயர் சுவாமிகள்.

(5) ஸ்ரீரங்கம் தவத்திரு ஆண்டவன் சுவாமிகள்.

(6) தவத்திரு ஜீயர் சுவாமிகள் வானமாமலை மடம்.

(7) தருமபுரம் ஆதினகர்த்தர் அவர்கள்.

(8) மதுரை ஆதினகர்த்தர் அவர்கள்.

(9) கர்நாடக மாநிலம், கெஞ்சன ஹல்ல் கைலாச ஆசிரமம், தவத்திரு திருச்சி சுவாமிகள், மற்றும்.

(10) கர்நாடக மாநிலம் மைசூர் சமஸ்கிருத கல்லூரி முதல்வர்.

அறிக்கையிலுள்ள முக்கியமான பரிந்துரைகள் பின்வருமாறு—

1. இன்றைய சூழ்நிலையில் எதிர்காலத்தில் இந்து சமயம் சிறப்பாக வளரும் பொருட்டு இந்துக்களுக்கு சாதி வேறுபாடின்றி தீவிரமான பயிற்சி அளித்து கோயில்களில் பூசகர்களாக நியமிப்பது ஆகமத்திற்கு மாறுபட்டதாகுமென்று கருதுவதற்கு இடமில்லை.

2. (அ) அர்ச்சகராக தேர்ந்தெடுக்கப்படுபவருக்கு ஐந்தாண்டு கால தீவிரமான ஆகம கல்விப் பயிற்சி செயல் முறை பயிற்சி இவைகளை ஆகம கல்லூரிகள் அமைத்து அறநிலையத்துறையின் பொறுப்பில் அளிக்க வேண்டும்.

(ஆ) பயிற்சி சம்பந்தமாக சேர்க்கை விதிகள் பயிற்சித் திட்டம் தேர்வுத் திட்டம் பாடப்புத்தகங்கள் முதலான அனைத்து காரியங்களையும் நிர்வகிப்பதற்கு அறநிலையத்துறை ஆகம சபை ஒன்றை நிறுவ வேண்டும்.

(இ) இப்பொழுது நடந்துவருகின்ற ஆகமபாடசாலைகள் அனைத்தையும் ஒரே தரமான நிலைக்குக் கொண்டுவரும் பொருட்டு அங்குள்ள நுழைவு முறை கல்விமுறை தேர்வு முதலிய அனைத்து அம்சங்களையும் முன் கூறிய ஆகம சபை நிர்வகித்து வரவேண்டும்.





(ஈ) இப்போது பூசகராய் உள்ளவர்களின் குடும்பங்களில் இருந்துவரும் மாணவர்களுக்கு ஆகம கல்லூரியில் சேர்க்கும் பொழுது கூடுமானவரை முன்னுரிமையளிக்க வேண்டும்.

(உ) வெற்றிகரமாக தேர்வை முடித்து வருகின்ற அர்ச்சக மாணாக்கர்களுக்கு உடனே வேலைக்கும் தகுந்த ஊதியத்திற்கும் உறுதியளித்து பிற எல்லா வசதிகளையும் செய்து தர வேண்டும்.

(ஊ) அறநிலையத்துறை ஆகம நூல்களை உரையோடு வெளியிட்டு மாணாக்கர்க்குத் தேவையான புத்தகங்களையும் அச்சிட்டுத் தர வேண்டும்.

(3) பூசகர் சுமாரான வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய வாழ்க்கை வசதியும் தொடர்ந்து தொழிலுக்கு வேலைவாய்ப்பு உண்டு என்ற உறுதியையும் சமூகத்தில் போதிய அந்தஸ்தும், குறைந்த அளவிலேனும் அரசு செய்து தர வேண்டும்.

(4) தமிழ் அர்ச்சனை செய்வது ஆகமத்திற்கு உடன்பாடே ஆதலால் தமிழ் அர்ச்சனைப் பயிற்சியை கல்லூரிப் பாடத் திட்டத்தின் பகுதியாக செயல்படுத்துவதோடு கூட அறநிலையத் துறை அஷ்டோத்திரம் சகஸ்சரநாமம் முதலியவற்றை தயாரித்து வெளியிட்டு கோயில்களில் கடைப்பிடிக்க வேண்டும்.

(5) உள்துறை ஊழியர்களைப் பொறுத்தவரையில் முக்கியமாக பாசகா பரிசாரகர் என்ற நிலையில் பணிபுரிவோர்களை அவர்களுடைய பண்பாடு, பக்தி, ஆசாரம் ஆகியவற்றை அனுசரித்து தேர்ந்தெடுக்க வேண்டும். ஆகமத்தில் சொல்லியபடி இவர்களுக்கும் தீட்ஷை அளிப்பது அவசியம்.

குழுவின் பரிந்துரைகள் அரசின் பரிசீலனையிலுள்ளது.

### தமிழ் அர்ச்சனை.

ஆலயங்களில் தமிழ் அர்ச்சனை செய்யலாம் என்று அனுமதி 1961-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ஆம் தேதி அன்று தரப்பட்டு, தகுந்த அறிவுரைகளும் வழங்கப்பட்டன. இதனை ஒட்டித் தொடரப்பட்ட வழக்கில் அரசு உத்தரவு மற்றும் அறநிலையத்துறையின் சுற்றாணைக்குறிப்பு ஆகியவற்றின் செயல்பாடுகளை நிறுத்தி வைத்து இடைக்காலத் தடை விதித்து உச்ச நீதி மன்றம், தனது 1974ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 26ஆம் நாளிட்ட ஆணையில், '' இதுகாறும் ஒவ்வொரு திருக்கோயிலும் எந்த முறையில் அர்ச்சனை செய்து வந்ததோ அதே முறையை மேலே குறிப்பிட்ட ரிட் மனுக்களின்மீது விசாரணை முடியும் வரை பின்பற்ற வேண்டும் '' என்றும் உத்தரவிட்டுள்ளது. வழக்கு இன்னும் நிலுவையிலுள்ளது.

பல ஆலயங்களில் தமிழ் அர்ச்சனை பக்தர்களின் வேண்டுகோளின்படி நடந்து வருகிறது. ஒவ்வொரு ஆலயத்திலும் அறிவிப்புப் பலகைகளில் தமிழ் அர்ச்சனைகளும் நடத்தப்படும்

என்று எழுதி வைக்கும்படி அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான புத்தகங்களை அர்ச்சகர்களுக்கு வழங்க துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

திருவாவடுதுறை மடம், திருவாவடுதுறை.

அதிகமான சொத்துக்களும், அதிக வருமானமும் உள்ள திருவாவடுதுறை திருமடம் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கீழ் உள்ள திருமடங்களில் ஒன்று ஆகும்.

2. இத்திருமடத்தின் கீழ் 19 கோயில்கள் உள்ளன. கும்பகோணம் உப நீதிமன்ற வழக்கு ஓ.எஸ். எண். 46/33-இல் ஏற்படுத்தப்பட்டு, சென்னை உயர்நீதி மன்றத்தால் ஓ. எஸ். எண். 57/1936-இல் திருத்தப்பட்ட ஓர் திட்டத்தின்படி இத்திருமடம் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இத்திருமடத்தைச் சார்ந்த கோயில்களுக்கு திருமடத்தின் மடாதிபதி பரம்பரை அறங்காவலராக செயல்பட்டு வருகிறார். ஆண்டு ஒன்றுக்கு, சுமார் ரூபாய் 30 இலட்சம் வருமானம் வரக்கூடிய 26,527 ஏக்கர் நன்செய் மற்றும் புன்செய் நிலங்கள் இத்திருமடத்திற்கு சொந்தமாக, இருந்து இவருடைய பொறுப்பில் உள்ளது. மேலும், இவர், 19 கோயில்களுக்குப் பரம்பரை அறங்காவலராக இருப்பதால் ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 13 இலட்சம் வருமானம் வரக்கூடிய 6,641 ஏக்கர் நன்செய் மற்றும் புன்செய் நிலங்களும் இவருடைய பொறுப்பில் உள்ளன.

3. தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் (சட்டம் 22) பிரிவு 44-இன்படி பிரிவுகள் 45 முதல் 58 வரை நீங்கலாக மற்ற பிரிவுகள் இத்திரு மடத்திற்குப் பொருந்தும். இத்திருமடத்தின் கீழ் உள்ள கோயில்கள் மற்றும் அவைகளின் கட்டளைகளுக்கு எல்லா விதிகளும் பொருந்தும். இத்திருமடத்தின் நிர்வாகத்திலும் இதைச் சேர்ந்த திருக் கோயில்களின் நிர்வாகத்திலும் பல குறைபாடுகளும் பல முறை கேடுகளும் நிகழுகின்றன என்று புகார்கள் வரப்பெற்றன.

கல்வி மற்றும் தகுதி குறைபாடுகள் உடையவரை தனக்கு வாரிசாக திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் நியமித்தது பற்றி, ஆணையர் கேட்ட விளக்கத்தை எதிர்த்து ஆதீனகர்த்தர் தாக்கல் செய்த ரிட் மனுவினை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இதனை எதிர்த்து ஆதீனகர்த்தர் உயர்நீதிமன்றத்தில் ரிட் அப்பீல் தாக்கல் செய்து உயர்நீதி மன்றத்தின் தீர்ப்புக்கு தடையாணை பெற்றுள்ளார். ரிட் அப்பீல் ஓராண்டுக்கு மேலாக நிலுவையிலுள்ளது.

திருமடங்களின் நிர்வாகத்தினை ஆராய்ந்து தனிப்பட்ட புலனாய்வு செய்வதற்கு துணைஆணையரின் தலைமையில் அமைக்கப்பட்ட பணியாளர் அமைப்பினால் தணிக்கை செய்யப்பட்டுள்ள திருவாவடுதுறை மடத்தின் நிர்வாகத்தில் கீழ்க் கண்ட **கடுமையான முறை**கேடுகள் நிகழ்ந்திருப்பது **தெரியவருகிறது:—**



செலவுச் சீட்டு இல்லாத செலவு

பசலி 1371 முதல் 1389 வரை செலவுச் சீட்டு இல்லாமல் செலவு செய்த மொத்தத் தொகை ரூபாய் 12,71,476.96 ஆகும். இந்தச் செலவுச் சீட்டுகள் அடுத்த முறை தணிக்கைப் பார்க்கும் நேரத்தில் தணிக்கையாளர்களிடம் கொடுக்கப்படும் என்று ஆதீனகர்த்தர் கூறியுள்ளார். மேலும் அவர் தன்னுடைய 1981 ஆம் ஆண்டு மே மாதம் 20-ஆம் நாளிட்ட கடிதத்தில் அந்தச் செலவுச் சீட்டுகள் காலப்போக்கில் கிடைக்கப் பெறாமல் போய் விட்டன எனவும் கூறியுள்ளார். இதன் தொடர்பாக நாகப்பட்டினம் துணை ஆணையர் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்.

வரவு-செலவுத் திட்டத்திற்கு மேல் செலவழிக்கப்பட்டவை

ஒவ்வொரு பசலி ஆண்டிலும் செலவழித்தத் தொகை வருடமானியத்தினை விடக் கூடுதலாக இருக்கிறது. பசலி ஆண்டுகள் 1371 முதல் 1389 முடிய இவ்வாறான கூடுதல் செலவு ரூபாய் 1,46,85,958.60 ஆகும்.

அங்கீகரிக்கப்படாத செலவுகள்.

(அ) முக்கியஸ்தர்களுக்கும், கலைஞர்களுக்கும் பரிசு வழங்கப்பட்டவைகள்.

திருமடத்து நிதியிலிருந்து 1385 பசலி ஆண்டு முதல் 1389 பசலி ஆண்டு வரை பரிவட்டம், சவ்வாது, சரிகை மற்றும் ருத்தராட்ச மாலைகள் போன்றவைகளை முக்கியஸ்தர்களுக்கும் கலைஞர்களுக்கும், பக்தர்களுக்கும், பரிசாக வழங்கியதில் ரூபாய் 2,20,381.53 செலவு ஏற்பட்டுள்ளது. ஆனால், விதிகளின்படி ஆதீனகர்த்தரின் பாத காணிக்கை தொகையிலிருந்து மேற்கண்ட செலவுகள் செலவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(ஆ) தகுந்த அனுமதியின்றி தள்ளுபடி செய்யப்பட்டவைகள்

பசலி ஆண்டு 1371 முதல் 1389 வரையில் தகுந்த அனுமதியின்றி நிலுவையில் உள்ள குத்தகைப் பாக்கியில் ரூபாய் 42,38,271.80 மதிப்பிற்கு பொருள் மற்றும் பணம் வகையறாக்களில் ஆதீன கர்த்தரால் சொந்த விருப்பப்படி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

கடனும், முன்பணமும்.
கடன்.

இந்த ஆதீனகர்த்தர், பரம்பரை அறங்காவலராக இருக்கும் கட்டளைகள் மற்றும் கோயில்களிலிருந்தும் கடன்கள் பெறப்பட்டு, ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் ஏராளமான தொகை திரும்பப் பெறப்படாமல் நிலுவையில் உள்ளன.

1389 ஆம் பசலியின் இறுதியில் திருமடத்தினால் ரூ. 7,05,535.79 திரும்ப செலுத்த வேண்டியுள்ளது. இம்மாதிரியான முறைகேடுகளின் மேல் தக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.

முன்பணம்.

திருமடத்துப் பணியாளர்களுக்கும் வெளியாட்களுக்கும் முன் பணம் கொடுக்கப்படுகிறது ஆயின், அவைகளைத் திரும்பப் பெறவுமில்லை. சரிக்கட்டவுமில்லை. ஒவ்வொரு பசலி இறுதியிலும் ஏராளமான முன் பணம் நிலுவையில் உள்ளன. 1389 ஆம் பசலி ஆண்டு இறுதியில் ரூ. 7,51,743.33 நிலுவையில் இருந்தது.

கட்டிடம் பழுது பார்த்தல்.

பசலி 1371 முதல் கடந்த 20 ஆண்டுகளாக ரூ. 12,83,379.15 கட்டிடம் பழுது பார்க்க செலவு செய்யப்பட்டுள்ளது. இவ் வேலைகளுக்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்படவில்லை. உரிய அதிகாரிகளின் ஒப்புதலும் பெறப்படவில்லை. சட்டத்தின் கீழ் செய்யப்பட்டுள்ள விதிகளையும் ஆணையரின் சுற்றறிக்கைகளையும் பின்பற்றப்படவில்லை. இவ்வேலைகள் ஒப்பந்தக்காரர்கள் மூலமாகவோ அல்லது டெண்டர் மூலமாகவோ செய்யாமல், மடத்தின் பணியாளர்களே செய்துள்ளார்கள்.

வழக்குகள் குறித்த செலவு.

1371 முதல் 1389 வரையிலான பசலிகளுக்கு நீதிமன்ற வழக்குகள் குறித்து மொத்தம் ரூ. 11,44,824.51 செலவாகக் காட்டப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி செலவு பற்றிய விவரங்கள் அதாவது வழக்கறிஞர் ஊதியம் இன்னும் மற்ற செலவுகள் இவைகளுக்கான பற்றுச்சீட்டு வழக்கின் முடிவு இவைகள் யாவும் வழக்குப் பதிவேட்டில் குறிக்கப்படவில்லை.

கேட்பு வசூல் பாக்கி.

வசூல் செய்யத் தக்க நடவடிக்கை எடுக்காத காரணத்தால் 1389 ஆம் பசலி இறுதியில் பல்வேறு தலைப்புகளின் கீழ், நெல்லின் மதிப்பினையும் சேர்த்து மிக அதிகத் தொகையான, ரூ. 1,40,54,548.78 வசூல் செய்யப்படாமல் இருந்தது. திருமடத்துப் பணியாளர்களிடம் குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்களில் குத்தகை பாக்கியினைகூட வசூல் செய்ய தக்க நடவடிக்கை எடுக்காமலும், அவர்கள் சம்பளத்திலிருந்து வசூல் செய்யாமலும் ஏராளமான தொகை பாக்கி உள்ளது.



பாதகாணிக்கை.

சட்டத்தின் விதி 62(1)ன் கீழ் ஆதீனகர்த்தர் பணமாகவும் பொருள்களாகவும் பெற்ற பாதகாணிக்கைக்குச் சரியான கணக்கு வைத்திருக்க வேண்டும். ஆயினும் பாதகாணிக்கைக்கான கணக்கினைப் பார்வையிடக் கேட்டபோது ஆதினகர்த்தர் தன்னுடைய கடித எண். 277/90 1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ஆம் நாளில், 1371 முதல் 1389 பசலி வரை பணமாகவோ பொருளாகவோ தான் பாதகாணிக்கை எதுவும் பெறவில்லை எனக் கூறிவிட்டார். இவர் தன்னுடைய சொந்தக் கணக்கில் இருந்து ஒரு இலட்சத்திற்கு மேல் திருமடத்திற்குக் கடனாகக் கொடுத்துள்ளதால், இவருடைய இந்தப் பதிலை சரியானதாக ஏற்றுக் கொள்வதற்கில்லை.

குத்தகைகள்—குறைபாடுகள்.

14,350 குத்தகைகளில், குத்தகைக்கான பத்திரங்கள் 10,607-க்கு மட்டும் வாங்கப்பட்டுள்ளன. எல்லா குத்தகைதாரர்களும் குறைந்த வாடகையில் திருமடத்து நிலங்களை அனுபவித்து வருகின்றனர். புதிய குத்தகைக்கு மாற்றிக் கொடுக்கும் போது முறையான அனுமதி இலாகாவிடமிருந்தோ அல்லது முறையான குத்தகைத் தொகையோ நிர்ணயிக்கவில்லை.

ஐந்து வருடத்திற்கு மேற்பட்ட குத்தகை

இந்து சமய அறநிலையத் துறை ஆணையரிடம் சட்டப் பிரிவு 34 இன் படி அனுமதி ஏதும் பெறாது 8,222 குத்தகைதாரர்கள் ஐந்து வருடங்களுக்கு மேலாக இருந்து வருகின்றனர்.

காலியிடங்களில் குத்தகை.

பெரும்பான்மையான கிராமங்களிலுள்ள, குறிப்பாக திருவாவடுதுறை கிராமத்திலுள்ள புஞ்சை நிலங்கள் சிறு பகுதிகளாக பிரிக்கப்பட்டு, காலியிடமாக குறைந்த வாடகையில், சொல்லப்போனால் ஒரு செண்டுக்கு ஒரு மாதத்திற்கு 1½ பைசாவுக்கு குத்தகை விடப்பட்டுள்ளது. அவர்கள் அந்த காலியிடங்களில் கட்டிடங்கள் கட்டுவதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அந்த குத்தகைதாரர்களில் பலர் குறைந்த வாடகையில் நிரந்தரமான குத்தகை உரிமைப் பெற்றவர்கள்.

தோப்புகளின் குத்தகை.

திருமடத்தின்பால் சொந்தமான நிலங்களில் உள்ள தோப்புகள் மற்றும் மரங்களை கணக்கிட்டு, அதற்கான பதிவேட்டினை வழக்கத்தில் கொண்டு ஒப்புதல் பெற வேண்டி அறிவுறுத்தப்பட்டும் இதுவரை முயற்சிகள் ஏதும் செய்யப்படவில்லை.

இதனால் ஏற்படும் முறைகேடுகளினால், மரங்களின் மேல் மகசூல் வருவாய் இழக்க ஏதுவாகிறது. குறிப்பாக புஞ்சை மற்றும் காலியிடங்களில் உள்ள மரங்களின் எண்ணிக்கை மற்றும் அதனால் ஏற்படும் வருவாய் குறித்து ஏதும் விவரங்கள் இல்லை. தோப்பிலுள்ள பலன் தரும் மரங்களிலிருந்து குறைந்த பட்ச வருவாய்க்கூட பெறப்படுவதில்லை. மடத்திற்கு சொந்தமான தென்னை மற்றும் புளியந் தோப்புகள் மிகக் குறைந்த வாடகைக்கு ஒரே குடும்பத்தாருக்கு தொடர்ந்து குத்தகைக்கு விடப்பட்டதின் காரணமாக திருமடத்திற்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் திருமடத்திற்கு 1385 பசலியிலிருந்து 1389 பசலி முடிய ஏற்பட்டுள்ள இழப்பு சுமார் ரூ. 17,08,506.30 என்று கணக்கிடப்புட்டு அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### அங்கீகாரமற்ற மாற்றங்கள்.

ஆதீனகர்த்தர், பரம்பரை அறங்காவலர் என்ற முறையில் தகுதிபெற்ற அதிகாரிகளின் உத்தரவு ஏதுமின்றி திருமடங்களைச் சார்ந்த கட்டளைகள் மற்றும் ஆலயங்களின் நிதி நிலைமைகளையோ அதனுடைய தேவைகளையோ கருத்தில் கொள்ளாது அவைகளின் நிதிகள் திருமடத்திற்கு மாற்றம் செய்துள்ளதைக் கண்டறியப்பட்டுள்ளது. சட்டத்தின் விதிமுறைகளுக்குப் புறம்பாக, திருமடத்திலிருந்து கொடுக்கப்படவேண்டிய உதவித் தொகை மற்றும் தணிக்கைக் கட்டணம் கூட ஆலயங்கள் மற்றும் கட்டளைகளினின்றும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொகையினை வட்டியுடன் ஆலயங்களுக்குத் திரும்பக் கொடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திருமடங்களின் நிர்வாகங்களில் உள்ள முறைகேடுகளைக் களைந்து அவைகளின் நிர்வாகத்தை சீராக்கும் நோக்கத்தோடு தான் கடந்த ஆண்டு ஆகஸ்டு, செப்டம்பர் திங்களில் அரசால் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### அருள்மிகு சபாநாயகர் ஆலயம், சிதம்பரம்.

சிதம்பரத்தில் அமைந்துள்ள அருள்மிகு சபாநாயகர் கோயில் இந்தியாவின் தொன்மை வாய்ந்த புகழ் பெற்ற ஆலயமாகும். இவ்வாலயம் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது. இவ்வாலயத்தின் ஆண்டு வருமானம் ரூ. 41,150 ஆக, 1390 ஆம் பசலியில் நிர்ணயிக்கப்பட்டு உதவித் தொகையும் தணிக்கைக் கட்டணமும் வசூலிக்கப்பட்டு வருகிறது இதற்குமுன் தீட்சிதர்கள் கொடுத்த கணக்குப்படி, இதன் ஆண்டு வருமானம் ரூ. 3,215 மட்டுமே ஆகும்.





1926 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை சட்டத்தின் சில பிரிவுகளில் இருந்து இவ்வாலய நிர்வாகத்திற்கு அரசு விலக்களித்தது. ஆலய அறங்காவலர்கள் சட்டப்பிரிவு 61 (பி) இன் கீழ் தாக்கல் செய்ய வேண்டிய வருவாய் பட்டியலை தாக்கல் செய்யத் தவறியதாலும், அறநிலைய ஆட்சித்துறைக்குச் செலுத்த வேண்டிய உதவித் தொகையினை செலுத்தத் தவறியதாலும், அரசு விலக்களித்திருந்த பிரிவுகளை 1936ல் மீண்டும் செயல்படுத்தியது.

ஆலயத்தின் நிர்வாகம் ஆலயத்திற்குச் சொந்தமான நிலங்கள் மற்றும் மனைகள் ஆலயத்தைச் சேர்ந்த கட்டளைகளின் சொத்துக்கள் ஆகியவற்றின் நிர்வாகம் பற்றி வந்த புகார்களின் பேரில் அன்றைய அறநிலைய வாரியம் விசாரணை செய்து, ஓ.எ. எண் 73/1932, நாள் 8-5-1933 இல் ஒரு நிர்வாகத் திட்டத்தை வகுத்தது. அப்பொழுது ஆர். சூர்யராவ்காரு, பி.ஏ., பி.எல்., வாரியத்தின் தலைவராகவும், டி. கே. சிதம்பரநாத முதலியார், கே. சீதாராம ரெட்டியார் ஆணையாளர்களாகவும் இருந்தனர். இந்தத் திட்டத்தை எதிர்த்து தீட்சிதர்கள் தென்னாற்காடு மாவட்ட நீதிமன்றத்தில் ஓ.எஸ். எண் 16/33 இல் வழக்குத் தொடுத்தனர். அதில் இந்த ஆலயம் தங்களின் தனிப்பட்ட சொத்து என்றும், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் சட்ட வரம்பிற்கு அப்பாற்பட்டது என்றும் கூறி, வாரியத்தின் உத்தரவை ரத்து செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர். மாவட்ட நீதிமன்றம் 9-9-1936 இல் ஓ.எஸ். எண் 16/33 இல் தீட்சிதர்களின் முக்கிய கோரிக்கைகளை நிராகரித்து வாரியத்தின் நிர்வாகத் திட்டத்தை சில மாறுதல்களுடன், ஊர்ஜிதம் செய்தது. அந்தத் தீர்ப்பை எதிர்த்து தீட்சிதர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல்முறையீடு எ.எஸ். எண் 306/1936 இல் செய்தனர். உயர்நீதிமன்றம் இம்மேல் முறையீட்டை தள்ளுபடி செய்து மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பை ஊர்ஜிதம் செய்தது.

1950ல் அறநிலைய வாரியம் இவ்வாலயத்திற்கு ஒரு செயல் அலுவலரை நியமிக்க நடவடிக்கை எடுத்தது. வாரியத்தின் நடவடிக்கையினை அரசு ஏற்றுக் கொண்டு 28-8-1951 நாளிட்ட ஆணையில் இவ்வாலயத்தை இந்து சமய அறநிலைய சட்டம் 2 இன் அத்தியாயம் 6 (எ) இன் கீழ் இந்தக் கோவிலுக்குச் செயல் அலுவலர் நியமிப்பதை ஏற்றுக் கொண்டது. இந்த அரசு ஆணையை எதிர்த்து தீட்சிதர்கள் உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு எண் 379/51, 350/5 ஆகியவற்றைத் தாக்கல் செய்து, இக்கோயில் பொது தீட்சிதர்களுக்குச் சொந்தமான ஒன்று என்றும், இந்த ஆலயத்தற்குச் சொத்துக்கள் இல்லை எனறும், தங்களின் வருமானத்திலிருந்து ஆலயம் நிர்வகிக்கப்படுவதாகவும், இதில் அரசோ வாரியமோ தலையிடுவதற்கு எந்த உரிமைகளும் கிடையாது என்றும், ஆகவே அரசின் ஆணையை ரத்து செய்யும் படியும் கோரினர். இந்த ரிட் மனுக்கள் விசாரணையில் இருக்கும்

(1982 மார்ச் 10

போது, அறநிலையச் சட்டம் 1951 (சட்டம் 19/1951) செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. உயர்நீதிமன்றம் தீட்சிதர்களின் ரிட்மனுக்களை ஏற்றுக் கொண்டும், அரசின் ஆணையை ரத்து செய்தும் தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து அரசாங்கம் உச்ச நீதிமன்றத்தில் ஒரு சிவில் மேல்முறையீடு எண் 39/1953 இல் தாக்கல் செய்திருந்தது. இவ்வழக்கு நிலுவையில் இருக்கும்போது, அரசாங்கம் தனது ஆணையை 21—5—1954 இல் ரத்து செய்து, உச்சநீதிமன்றத்தில் நிலுவையில்ருந்த வழக்கை மேற்கொண்டு நடத்தவில்லை.

இவ்வாலயத்திற்காக ஏற்கெனவே வகுக்கப்பட்டுள்ள நிர்வாகத் திட்டத்தினை, 1951 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்டம் 19/1951 பிரிவு 62 (3) (எ)-இன் கீழ் மாற்றியமைக்க நீதிமன்றத்தை நாடும்படி, துணை ஆணையருக்கு உத்தரவு இடும்படி, அரசாங்கம் 1957 இல் இந்து சமய அறநிலைய ஆணையரைக் கேட்டுக் கொண்டது. 1961 இல் அறநிலையச் சட்டம் 22/1959, பிரிவு 64 (5) இன் கீழ் துணை ஆணையர் ஓ.எ. எண் 106/61 இல் நிர்வாகத் திட்டத்தில் சில மாறுதல்களைச் செய்ய செயல்பட்டார். ஆனால் சட்டப்பிரிவு 73 இன் படி இந்த நடவடிக்கைகள் தொடர முடியாததாகையால் மேற்கண்ட நடவடிக்கை 24—1—1969 இல் கைவிடப்பட்டது. அந்த நடைமுறைத் திட்டத்தில் சில ஷரத்துக்கள், சட்டப்பிரிவுகளுக்கு முரணாக உள்ளன. மேலும் தீட்சிதர்கள் நிர்வாகத்தில் நிலவி வந்த ஊழல்கள் குறித்து பல முறையீடுகள் பெறப்பட்டன. ஆகவே திருச்சி துணை ஆணையர், 1980 இல், பொது தீட்சிதர்களின் செயலாளருக்கு நிர்வாகத்தின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியும், திட்டத்தின் நடைமுறைப் பிரிவுகளின் உள்ளது போல் நிர்வாகத்தைச் செயல்படுத்தக் கோரியும் தாக்கீது ஒன்றை அனுப்பினார். அறநிலைய ஆட்சித்துறை ஆலய நிர்வாகத்தை மேம்படுத்த வேண்டி நடவடிக்கை எடுக்க முற்படும்போதெல்லாம் தீட்சிதர்கள் ஏதாவது காரணத்தைக் காண்பித்து பிடிவாதமாக எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். பொது தீட்சிதர்களின் செயலர், துணை ஆணையரின் மேற்கூறிய தாக்கீதுக்கு 11—11—1980 இல் பதில் அனுப்பினர்.

இந்த ஆலயத்தின் நிர்வாகத் திட்டத்தின் ஷரத்து 12 இல் கண்டபடி, 1981 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில், ஆணையர் இக்கோவிலுக்குச் கௌரவப் பார்வையாளர்களை நியமனம் செய்தார். இந்த கௌரவப் பார்வையாளர்கள் நியமனத்தை எதிர்த்து பொது தீட்சிதர்களின் செயலாளர் உயர்நீதி மன்றத்தில் ரிட்மனு டபிள்யூ. பி. எண் 416/81 இல் தாக்கல் செய்தார். நிர்வாகத் திட்டம் செல்லத்தக்கதல்ல. அதனால் அதன் கீழ் ஆணையர் பிறப்பித்த உத்தரவும் செல்லாது என்பது தீட்சிதர் வாதம். நிர்வாகத் திட்டம் செல்லாது என்ற வாதம் துறைக்கு ஏற்புடையது. அதனால் அவ்வாறே தீர்ப்பளிக்கலாம் என்று



1982 மார்ச் 10)

ஆணையர் தரப்பில் உயர்நீதி மன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. உயர்நீதிமன்றம் அவ்வாறே தீர்ப்பளித்து ஆணையர் உத்தரவை ரத்து செய்தது. இதை அடுத்து, சட்டத்தில் விதித்துறைகளின் படி இக்கோயிலின் நிர்வாகத்தைச் சீர்படுத்த ஆணையர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

அறநிலையத் துறையின் முயற்சியால் ஆலயத்திற்குச் சொந்தமான நஞ்சை நிலம் 460.55 ஏக்கரும், புன்செய் நிலம் 449.54 ஏக்கரும் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அந்நிலங்களில் நன்செய் நிலம் 187.28 ஏக்கரும், புன்செய் நிலம் 244.29 ஏக்கரும் குத்தகைக்கு விடப்பட்டு, ஆண்டு குத்தகையாக ரூ. 39,159 கிடைக்கிறது. மீதமுள்ள நிலங்களையும் குத்தகைக்கு விட அறநிலையத்துறையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இக்கோயிலுக்கு சுமார் 2,000 ஏக்கர் நிலம் உள்ள அறக்கட்டளைகளும் உள்ளன. இந்த அறக்கட்டளைகள் சம்பந்தமாகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1863 ஆம் ஆண்டே சென்னை உயர்நீதிமன்றத்தின் அப்போதைய நீதிபதியான நீதிபதி முத்துசாமி ஐயர் மற்றும் நீதிபதி செப்பர்ட் ஆகியோர் இந்தக் கோவில் ஒரு பொதுக் கோயில் தான் என்றும் தீட்சிதர்களின் தனிப்பட்ட சொத்து என்று கூறுவதற்கு ஒரு துளி ஆதாரம் கூட இல்லை என்று கூறி தீட்சிதர்களின் கோரிக்கையினை நிராகரித்துள்ளனர்.

தீட்சிதர்களால் கொடுக்கப்பட்ட ஓ.எஸ். 16!1933 இன் கீழ் தீர்ப்பளிக்கும்போது அப்போதைய தென்னாற்காடு மாவட்ட நீதிபதி சி. என். குப்புசாமி ஐயர் அவர்கள் இந்தக் கோயில் ஒரு பொதுக் கோயில்தான் என்றும் தீட்சிதர்கள் இக்கோயிலை அறநிலைய நிர்வாகச் சட்டத்தின் சில பிரிவுகளில் இருந்து விலக்களிக்க வேண்டும் என்று கேட்டு அவற்றை பெற்றுள்ளதனாலேயே இக்கோயிலைப் பொதுக் கோயில் என்று அவர்கள் ஏற்றுக் கொண்டதேயாகும். அதற்கு மாறான நிலையை இப்பொழுது ஏற்க முடியாது என்றும் தீர்ப்பு கூறியுள்ளார். சென்னை உயர்நீதிமன்றமும் ரிட் மனுக்கள் 379 மற்றும் 380!1951 இன் மீது தனது 13—12—1951 நாளைத் தீர்ப்பில் இந்தக் கோயில், தொன்மை வாய்ந்த பொதுக் கோயில் என்றும், இந்தியா முழுவதுமுள்ள சைவ சமயத்தவர்களால் புனிதமாகக் கருதப்படுகிறது என்றும் கூறியுள்ளது.

இந்து சமய நிறுவனங்களையும், அவைகளின் சொத்துக்களையும் நன்முறையில் நிர்வகிப்பதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு நமது பண்டைய நாகரீகத்தையும் கலையினையும் பண்பாட்டினையும் கட்டிக்காக்கும் கருவூலப் பெட்டகங்களாக, நம் முன்னோர்கள் உருவாக்கி விளங்கிக் கொண்டிருக்கும் கோயில்களைப் பேணிப் பாதுகாக்க அரசு அயராது பாடுபடும்

மானியக் கோரிக்கை எண் 25.

சின்கோனாத்துறை—கொள்கை விளக்கக் குறிப்பு.

1982-83 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம்.

கோரிக்கை 25—சின்கோனா மற்றும் 54 மூலதனச் செலவு

1. முன்னுரை. :

1.1. கடந்த 121 ஆண்டுகளாக, தமிழ்நாடு அரசால் வணிக அடிப்படையில் நடத்தப்படும் ஒரு அமைப்பாக சின்கோனாத் துறை விளங்குகிறது. இத்துறை, குனைன் சல்பேட், குனிடின் சல்பேட், மருந்துத் தாவர வகைத் தைலங்கள் ஆகியவற்றைத் தயாரித்து வருகிறது. 2,000 நிரந்தரப் பணியாளர்களும், 2,030 தற்காலிகப் பணியாளர்களும் ஆக மொத்தம் 4,030 பணியாளர்கள் இத்துறையில் பணியாற்றி வருகின்றனர். இத்துறை தயாரிக்கும் பொருள்களுக்குத் தேவையான தாவரப் பொருள்கள் நீலகிரி, கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள ஆனைமலை, மதுரை மாவட்டத்திலுள்ள மேல் பழனி மலை ஆகிய இடங்களில் உள்ள துறையின் மலைத் தோட்டங்களிலேயே பயிரிடப்படுகின்றன.

1.2. துறையின் பணியாளர்களில், பெரும்பான்மையோர் ஆதி திராவிடர்கள் (60 சதவீதம்) (Adidravidas Scheduled Castes) பின்தங்கிய வகுப்பினர் 30 சதவீதம் (Backward Classes) ஆவர் என்பதைக் குறிப்பதில் இத்துறை பெருமையடைகிறது. சின்கோனாத்துறையின் நடவடிக்கைகள் இரு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. மலேரியா நோயை ஒழிப்பதற்காக ஒரு பிரிவு பயன்படுத்தப்படுகிறது. மேலும் குனைன் சல்பேட், இதய நோய்களைக் குணப்படுத்த பயன்படும் குனிடின் சல்பேட் போன்ற உயிர்காக்கும் மருந்துகள் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது; மற்றொரு பிரிவு, மருந்துகள், தாவர வகைத் தைலங்களை தயாரிக்கிறது. தைல வகைத் தாவரங்களைப் பயிரிடும் பணி, 1950 ஆம் ஆண்டு முதல் இத்துறையில் நடைபெற்று வருகிறது. துறையின் பணிகளைப் பல்திறப் படுத்துவதற்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2. தயாரிப்பு.—

சின்கோனாப் பொருள்கள்.—

2.1. உலக நாடுகளின் தேவைகள், உள்நாட்டுத் தேவைகளுக்கேற்ப சின்கோனாப் பொருள்களின் விற்பனை அமைந்துள்ளது. எடுத்துக் காட்டாக, இரண்டாம் உலகப் போரின்போது இப்பொருள்களுக்கான தேவை அதிகமாக இருந்தது ; போர் முடிந்தும் இப்பொருள்களின் தேவை குறைந்து விட்டது. ஆனால்,



1960 ஆம் ஆண்டிற்கும் 1970 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் இப்பொருள்களின் தேவை அதிகரித்தது. உலக நாடுகளில் கொய்னாப் பொருள்களின் விற்பனை சீராக அதிகரித்து வரும் நிலையில், நம் நாட்டில் மலேரியா நோய் மீண்டும் தோன்றிப் பரவி வருவதால், இந்திய அரசு, 1978 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் கொய்னாப் பொருள்களின் ஏற்றுமதிக்குத் தடை விதித்தது. மாநில அரசு பலமுறை வேண்டியதற்கிணங்க 1978–79, 1979–80, 1980–81 மற்றும் 1981–82 ஆம் ஆண்டுக் காலத்தில் மத்திய அரசு இப்பொருட்களை ஓரளவிற்கு ஏற்றுமதி செய்ய அனுமதித்தது. ஆனால் இத்தகைய உயிர் காக்கும் மருந்துகள் நிலையாகவும் தடையேதுமில்லாமலும் கிட்ட வேண்டும் என்று அனைத்து நாடுகளும் கருதுவதால் இவற்றை ஏற்றுமதி செய்வதற்குத் திடுமெனத் தடை விதிக்கப்பட்டதன் காரணமாக நீண்ட காலமாக நிலவிய அனைத்து நாட்டு விற்பனையை பெரிதும் பாதித்தது. மேலும் தொடர்ந்து ஏற்றுமதிக்குத் தடை விதிக்கப்பட்ட காலத்து அனைத்து நாடுகளில் விற்பனையில் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்வது கடினமானதாகும். தற்போது சரக்குகள் அவ்வளவாக விற்பனையாகாமல் தேங்கியிருப்பதால் சுமார் ரூபாய் 50 லட்சம் மதிப்புள்ள கொய்னாப் பொருள்கள் கைவசம் உள்ளன.

2.2. விற்பனை செய்யப்பட்ட கொய்னாப் பொருள்களின் அளவு, அவற்றின் மூலம் கிடைத்த வருவாய் ஆகியவற்றின் விவரம் வருமாறு :—

| ஆண்டு. | விவரம். | அளவு. | வருவாய். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (கிலோ கிராம்களில்.) | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1978–79 | உள்நாட்டு விற்பனை .. | 4,286 | 34.45 |
| | வெளிநாட்டு விற்பனை .. | 20,700 | 23.67 |
| | மொத்தம் .. | 24,986 | 58.12 |

| ஆண்டு. (1) | விவரம். (2) | அளவு. (3) (கிலோ கிராம் களில்). | வருவாய். (4) (ரூபாய் இலட்சத் தில்.) |
|---|---|---|---|
| 1979–80 | உள்நாட்டு விற்பனை | 2,828 | 23·39 |
| (உள்ளபடி) | வெளிநாட்டு விற்பனை | 10,600 | 42·55 |
| | மொத்தம் .. | 13,428 | 65·94 |
| 1980–81 | உள்நாட்டு விற்பனை.. | 1,792 | 14·56 |
| (உள்ளபடி) | வெளிநாட்டு விற்பனை. | 1,600 | 17·42 |
| | மொத்தம் .. | 3,392 | 31·98 |
| 1981–82 | உள்நாட்டு விற்பனை.. | 2,400 | 18·00 |
| (மதிப்பிடப் பட்டது.) | வெளிநாட்டு விற்பனை. | 9,000* | 0·54 |
| | மொத்தம் .. | 11,400 | 18·54 |

*சிங்கோனா, அல்கலாய்டு



| ஆண்டு. (1) | விவரம். (2) | அளவு. (3) (கிலோ கிராம் | வருவாய். (4) (ரூபாய் இலட்சத் தில்). |
|---|---|---|---|
| 1982–83 | உள்நாட்டு விற்பனை.. | 2,400 | 18·00 |
| (எதிர்பார்க்கப் பட்டது.) | வெளிநாட்டு விற்பனை | 5,100 | 42·00 |
| | மொத்தம் .. | 7,500 | 60·00 |

2·3. கொய்னாப் பொருள்களின் விற்பனை விலையை, மருந்துகள் விலை கட்டுப்பாட்டு ஆணையின்படி இந்திய அரசு நிர்ணயிக்கிறது. இவ்வாறு நிருணயிக்கப்பட்ட விலை, பொருள்களின் உற்பத்தி விலையை விட குறைவாக உள்ளதால், விற்பனை விலையை உயர்த்த வேண்டுமென்று, மாநில அரசு இந்திய அரசைக் கேட்டுள்ளது. இது இந்திய அரசின் ஆய்வில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(விலைகள் கிலோகிராம் ஒன்றிற்கு ரூபாய்.)

| பொருள்களின் பெயர். (1) | உற்பத்தி விலை. ஒரு கிலோ கிராம் விலை (ரூபாயில்.) (2) | இந்திய அரசு நிர்ணயித்துள்ள விலை. (3) |
|---|---|---|
| 1. குனைன் சல்பேட் (Quinine Sulphate) | 841·45 | 788·00 |
| 2. குனிடின் சல்பேட் (Quinidine Sulphate). | 2,717·53 | 1,313·00 |
| 3. குனைன் ஹைட்ரோ குளோரைடு (Quinine Hydrochloride) | 904·09 | 1,088·00 |

மருந்து மற்றும் நறுமணத் தைலங்கள்.

2·4. இத்தகைய மருந்து தைலங்கள் ஆகியவற்றின் வாயிலாகக் கிடைக்கும் வருவாய் சீராக அதிகரித்து வருகிறது. தற்போதுள்ள நிலையிலேயே வருவாய் வீதத்தையும் வளர்ச்சி வேகத்தையும் நிலைநிறுத்த முற்படுகிறோம்.

| ஆண்டு. | விற்பனையின் அளவு. (கிலோ கிராமில்.) | ஈட்டிய வருவாய் (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1979–80 .. .. .. | 7,646 | 14·81 |
| 1980–81 .. .. .. | 11,117 | 21·76 |
| 1981–82 (திருத்த மதிப்பீடு) .. | 11,275 | 24·30 |
| 1982–83 (வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு). | 11,275 | 27·30 |

பொருள்களின் விபரம் வருமாறு.

| பொருள்களின் பெயர். | 79-80 (உள்ள படி) | 80-81 (உள்ள படி) | 81-82 (திட்ட மதிப்பீடு) | 81-82 (திருத்தப் பட்ட மதிப்பீடு) | 82-83 (திட்ட மதிப்பீடு) |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. யூகலிப்டஸ் தைலம் பி.பி. (B.P) (கிலோ கிராம்). | 766 | 929 | 1,500 | 1,750 | 2,000 |
| 2. யூகலிப்டஸ் தைலம் ஐ.பி. (I.P) (கிலோ கிராம்). | 1,350 | 632 | 3,000 | 3,000 | 3,50[illegible] |
| 3. ஜெரேனியம் தைலம் (Jeranium Oil.) | 930 | 1,320 | 1,800 | 2,000 | 2,00[illegible] |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 4. யூகலிப்டஸ் சிட்ரியோடோரா தைலம் (கிலோ கிராம்). | 2,984 | 4,430 | 3,500 | 3,500 | 3,500 |
| 5. ஜாவா சிட்ரோனெல்லா தைலம் (கிலோ கிராம்). | 2,746 | 2,438 | 3,200 | 2,700 | 2,800 |
| 6. லெமன் கிராஸ் தைலம் (கிலோ கிராம்). | 79 | 103 | 50 | 60 | 60 |
| 7. பச்சோலித் தைலம் (கிலோ கிராம்). | 11 | 20 | 20 | 20 | 25 |
| 8. சின்பிரஸ் (500 மி.லி. புட்டிகள்). | 26,000 | 52,000 | 40,000 | 55,000 | 60,000 |

பொதுமக்கள் விரும்புகின்ற சின்பிரஸ், சினோமாஸ் போன்ற புதிய பொருள்களை பயன்பெறுவோர் கூட்டுறவு பண்டகசாலைகளிலும், விற்பனை நிலையங்களிலும் காட்டி வைத்து விற்பனை நிலையங்களை விரிவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

2.5. கொய்னாப் பொருள்களின் விலை ஏற்ற இறக்கம் காரணமாக, கொய்னாப் பொருள்களைத் தேவையான அளவிற்கு உற்பத்தி செய்துகொண்டு, மருந்து மற்றும் நறுமணத் தைலம் ஆகியவை உற்பத்தி செய்யும் பணியை அதிக அளவு மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

கற்பூரத் தைலம், கற்பூர வில்லைகள் தயாரிப்பு.

2·6. பல்திறத் திட்டத்தின் ஒரு பகுதியாக, நீலகிரி மாவட்டத்திலுள்ள நடுவட்டத்தில் மருந்துகள், நறுமணத் தைலங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையில் 1980–81 ஆம் ஆண்டு கா

கற்பூரத் தைலம், கற்பூர வில்லைகள் தயாரிக்கப்பட்டன. உற்பத்தி மனநிறைவளிக்கும் வகையில் உள்ளது. இதனைப் பின் வரும் அட்டவணையில் காணலாம்,

| பொருள். | 1980–81 (உள்ள படி). | 1981–82 (திருத்த மதிப்பீடு). | 1982–83 (திட்ட மதிப்பீடு). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| கற்பூரத் தைலம் (கிலோ கிராம்) | 31 | 64 | 65 |
| கற்பூர வில்லைகள் (ஆயிரத்தில்). | 78 | 200 | 200 |

2.7. திருவரங்கத்திலுள்ள அருள்மிகு அரங்கநாதசாமி கோயில், மதுரையிலுள்ள அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில், திருச்சிராப்பள்ளியிலுள்ள அருள்மிகு தாயுமானவர் கோயில், வடபழனி (சென்னை) யிலுள்ள அருள்மிகு வடபழனி ஆண்டவர் கோயில், பழனியிலுள்ள அருள்மிகு தண்டபாணி கோயில் முதலியவற்றிற்குக் கற்பூர வில்லைகளை இத்துறை தயாரித்து வழங்கி வருகிறது.

## மலைத் தோட்டங்கள்.

3.1. பல்வேறு பொருள்களைத் தயாரிப்பதற்காகத் தேவைப்படும் மலைத் தோட்டப் பயிர்களைப் பயிரிடுவதற்கு பல்வேறு பணிகளை இத்துறையே மேற்கொண்டுள்ளது. 1964.82 எக்டேர் பரப்புள்ள சின்கோனா மலைத் தோட்டத்தையும், 1328.77 எக்டேர் பரப்புள்ள மருந்து, மற்றும் நறுமணத் தைல மரத் தோட்டத்தையும் இத்துறை தனது நேரடி மேற்பார்வையில் வைத்துள்ளது. அவற்றின் விவரம் வருமாறு:—



| | நீலகிரி. | (கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள) ஆனைமலை. | (மதுரை மாவட்டத்திலுள்ள) கொடைக்கானல். | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| சின்கோனா | 451.11 | 1,513.71 | .. | 1,964.82 |
| மருந்துவகைத் தைல மரங்கள் | 752.96 | 366.56 | 209.25 | 1,328.77 |
| மொத்தம் | 1,204.07 | 1,880.27 | 209.25 | 3,293.59 |

## மலைத் தோட்டத் திட்டம்.

4.1. புதிய மலைத் தோட்டங்கள் அமைத்தல். பதியன் முறையில் மரங்களை வளர்த்தல் ஆகிய முறைகளின்கீழ் 1980–81ஆம் ஆண்டில், 169 எக்டேர் பரப்பளவில் சின்கோனா பயிரிடப்பட்டது. 1980 81 ஆம் ஆண்டில் 154 எக்டேரிலும், 1982–83 ஆம் ஆண்டில் இதே அளவு பரப்பளவிலும் சின்கோனா பயிரிடப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 1980 81 ஆம் ஆண்டில், மருந்து நறுமணத் தைலவகை மரங்கள் 145.56 எக்டேர் பரப்பளவில் புதிதாகப் பயிரிடப்பட்டன. 1981–82 ஆம் ஆண்டில், 192.50 எக்டேர் பரப்பிலும், 1982க83 ஆம் ஆண்டில் 211.50 எக்டேர் பரப்பளவிலும் இவ்வகை மரங்கள் பயிரிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மதுரை மாவட்டத்தில், கொடைக்கானல் வட்டம் மேல் பழனியில் (பேரிஜம்) 160 எக்டேரிலும், பெரும்பள்ளத்தில் 200 எக்டேரிலும் ஜெரேனியம் பயிரிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். 1981–82 ஆம் ஆண்டில் 75 எக்டேர் பர்ப்பில் ஜெரேனியம் பயிரிட இலக்கிடப்பட்டு, நிறைவேற்றப்பட்டுள்ளது. 1982–83ல் மேலும் 96 எக்டேர் பரப்பில் ஜெரேனியம் பயிரிடக் கருதப்பட்டுள்ளது. மேலும், மலைப்பகுதிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஜாவா சிட்ரோனெல்லா புல், நறுமண தைல மரங்கள் ஆகியவை பயிரிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டம் 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் தொடங்கப்பட்டது. 1981–82 ஆம் ஆண்டில் 15 எக்டேர் பரப்பளவில் மரங்கள் நடப்பட்டன. 1982–83 ஆம் ஆண்டில் 25 எக்டேர் பரப்பளவில் மரங்கள் நடுவதற்கு கருதப்பட்டுள்ளது.

[1982 மார்ச் 10

4.2. துறையின் மலைத் தோட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தேவைப்படும் நிலம் வனத்துறையிடமிருந்து பெற வேண்டியுள்ளது. மருந்து மற்றும் நறுமணத் தைல எண்ணெய் தயாரிப்பை மேம்படுத்த தேவைப்படக்கூடிய மலைத் தோட்டங்களை மேம்படுத்துவதைக் கருத்தில் கொண்டு, இந்த வகை மலைத் தோட்டங்களைத் தனியார் நிலச் சொந்தக்காரர்கள் வளர்ப்பதற்கு ஊக்கமளிக்கவும், அவர்களிடமிருந்து இருசாராரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய விலையில் இலைகளை வாங்கவும் கருதப்பட்டுள்ளது.

## ஆராய்ச்சி

5. அதிக விளைச்சலை கொடுக்கக் கூடிய மருந்து, மற்றும் நறுமணத் தைல மரங்கள் நோய் எதிர்ப்பாற்றலைக் கொண்ட சின்கோனா மரங்களையும். ஏனைய மருந்துச் செடிகள், நறுமணத் தைல மரங்கள் ஆகியவற்றை வளர்க்கவும் முறைகளை மேம்படுத்துவதற்கும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சின்கோனா மருந்துகள், மற்றும் நறுமணத் தைலப் பயிர்கள் ஆகியவற்றைக் குறித்து முறையான, தீவிர ஆராய்ச்சிகள் மேற்கொள்ளும் வகையில் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை நிறுவ அரசு அனுமதியளித்துள்ளது, 1976 ஆம் ஆண்டு முதல் இவ்வாராய்ச்சி நிலையம் செயற்படத் தொடங்கியுள்ளது. நடப்பாண்டில் (1981 82 ஆம் ஆண்டில்) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் உடனுழைப்புடன், சின்கோனா, மருந்து மற்றும் நறுமணத் தைல மரங்களைப் பயிரிடுதல் குறித்த ஆராய்ச்சி தொடங்கப்பட்டுள்ளது. இதற்காகச் செலவிடப்படும் தொகையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் சின்கோனாத்துறை ஆகிய இரு துறைகளும் சமமாக எற்றுக் கொள்ளும். மேலும் குனைனிலிருந்து, குனிடின் தயாரிப்பது பற்றிய ஆராய்ச்சிப் பணி லக்னோவிலுள்ள மத்திய மருந்தாய்வுக்கூடத்திடம் ஒப்படைக்கப்படும்.

## தொழிலாளர் நலன்.

6. தொழிலாளர் இத்துறையின் உற்பத்தியில் பெரும் பங்காற்றுகின்றனர்; மலைத் தோட்டம் அமைக்கும் திட்டங்கள் ஆகியவை செவ்விய வகையில் செயற்படுவதற்கும் நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்குமிடையே நல்லுறவு நிலவுவதற்கும் தொழிலாளர்கள் நலனைக் காப்பதற்கும். அதிகக் கவனம் செலுத்தப்படுகிறது. ஆடவர் மகளிர் தொழிலாளர்களுக்கு நிகரான ஊதியம் வழங்கப்படுகிறது; விலைவாசிப் புள்ளியின் அடிப்படையில் அகவிலைப்படி வழங்கப்படுகிறது. வயது வந்த தொழிலாளருக்கு நாட்கூலியாக மொத்தம் ரூ. 8.29 வழங்கப்படுகிறது. தொழிலாளர்களுக்காக 1,281 தொழிலாளர் குடியிருப்புகள் உள்ளன. இத்துறையின் தொழிலாளர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளதால் புதிய குடியிருப்புகளை கட்ட



1982 மார்ச் 10]

வேண்டியதன் அவசியத்தையும் பழைய குடியிருப்புகளைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியத்தையும் உணர்ந்து, பணியாளர் குடியிருப்புத் தொகுதி கட்டுவதற்கான திட்டம் முறையாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. 1981 82 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 9.80 இலட்சம் செலவிடப்பட்டது. 1982-83 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக இதே அளவு தொகை செலவிடப்படும். இத்திட்டத்தின்படி இந்த ஆண்டுகள் ஒவ்வொன்றிலும். தொழிலாளர்களுக்கு 50 வீடுகளும், இரு அலுவலர் குடியிருப்புகளும் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. புதிய குடியிருப்புகளில் மின் வசதி, நீரடிக் கழிப்பிட வசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. துறையின் மருந்தகங்கள் ஆனைமலையில் உள்ள அனைத்து வசதிகளுடன் கூடிய மருத்துவமனை ஆகியவற்றின் வாயிலாக அனைத்து மருத்துவ வசதிகளும் இத்துறையின் தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்டுவருகின்றன. மேலும் கடலூரிலுள்ள அரசு மருத்துவமனையில், சின்கோனாத் தொழிலாளர்களுக்கென்றே படுக்கைகள் தனியாக ஒதுக்கப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களின் நடமாடும் பிரிவு, தொழிலாளர்களுக்குத் தேவையான நல்வாழ்வு மருத்துவ வசதிகளைச் செய்து கொடுக்கின்றன.

## வருதாய இழப்பு கணக்குகள் :

7. அனைத்து நாடுகள் அங்காடியில் விலை ஏற்ற இறக்கம், குனைன் பொருள்கள் ஏற்றுமதிக்கு இந்திய அரசு விதித்த தடை ஆகியவற்றின் விளைவாக இத்துறையின் பொருளாதாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டது. 1979-80ஆம் ஆண்டில் மூலதனத்திற்குச் செலுத்த வேண்டிய வட்டித் தொகை ரூ. 32.41 இலட்சம் செலுத்தப்பட்ட பிறகு இத்துறைக்கு 1.70 இலட்சம் ரூபாய் ஆதாயம் கிடைத்தது. ஆனால்,1980-81 ஆம் ஆண்டில் மூலதனத்திற்குச் செலுத்த வேண்டிய வட்டித் தொகை ரூ. 41.98 இலட்சம் செலுத்திய பிறகு இத்துறைக்கு ரூ. 5.02 இலட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டிற்குரிய திருத்த மதிப்பீட்டில் வட்டித் தொகை ரூ. 53.00 இலட்சம் செலுத்தியபிறகு 9.03 இலட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டு மதிப்பீட்டில் வட்டித் தொகை ரூ. 67.00 இலட்சம் செலுத்திய பிறகு ரூ. 2,62 இலட்சம் இழப்பு கிடைத்துள்ளதாகக் காட்டப்பட்டுள்ளது. எனினும், 1965—66 முதல் 1980 81 ஆம் ஆண்டு வரை மொத்தம் ரூ. 1.42 கோடி இலாபம் கிடைத்துள்ளது. 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 86.35 இலட்சம் ஊதியமாக வழங்கப்பட்டது. இது 1981—82 ஆம் ஆண்டில் ரூ. 100.17 இலட்சமாக அதிகரிக்கலாம். என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளில், நிலையான சொத்துக்கள் ரூபாய் 4.42 கோடி,

[ 1982 மார்ச் 10

பண்டகசாலை இருப்புகள், முடிக்கப்பட்ட பொருள்கள் நடைபெற்று வரும் பணிகள், சில்லறைக் கடன்கள் ஆகியவற்றின் வாயிலாக ரூ. 2.40 கோடி உட்பட, இத்துறையின் சொத்துக்கள் 6.82 கோடியாகும்.

**இத்துறையின் வளர்ச்சித் திட்டங்கள்.**

8.1. சின்கோனா பெப்ரிபியூஜிலிருந்து குனைன் சல்பேட், குனிடின் சல்பேட் ஆகியவற்றைத் தயாரித்தல், தேயிலைக் கழிவிலிருந்து 'காபின்' (Coffeinc) தயாரித்தல் போன்ற பணிகளே இத்துறையின் அண்மைக்கால முக்கிய சாதனைகளாகும். 1981]-82ஆம் ஆண்டில் 200 கிலோகிராம் 'காபின்' (Coffeine) உற்பத்தி செய்யப்பட்டது. குடும்பநலத் திட்டத்திற்காகத் தயாரிக்கப்படும் கருத்தடை மாத்திரைகளில் உள்ள கார்டிசோன், ஸ்டெராய்டு ஹார்மோன் போன்றவற்றைத் தயாரிக்கும் மூலப் பொருளான டயாஸ் ஜெனின் என்ற பொருளைத் தயாரித்தல், கொசுக்களை விரட்டும் ''சினோமாஸ்'' என்னும் களிம்பையும், ''சின்ஸ்ப்ரே' என்னும் தெளிப்பான் மருந்தையும், தரையைத் தூய்மையாக்கப் பயன்படும் கிருமி நாசினி ''சின் பிரஸ்'' என்ற தெளிப்பான் மருந்தையும் தயாரித்து விற்பனை செய்தல்; ''சினோரமா'', 'தொட்டபெட்டா மிஸ்ட்'' ஆகிய வாசனைத் திரவியங்களை தயாரித்தல் போன்றவை உற்பத்தியைப் பல்திறப்படுத்தும் இத்துறையின் பணிகளாகும்.

8.2. மேற்சொன்ன பல்வேறு வளர்ச்சிப் பணிகள், மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகியவை திட்டப் பணிகளின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன; அவற்றின் விவரம் வருமாறு;

**மாநிலத் திட்டப் பணிகள்.**

1. சின்கோனா, முனைப்புச் சாகுபடி, பதியன் முறையில் பயிரிடுதல்.

2. மருந்து மற்றும் நறுமணத் தைல மரங்களை வாணிப முறையில் பயிரிடுதல்.

3. மருந்து மற்றும் நறுமணத் தைல மரங்களின் வளர்ச்சிக்காக முனைப்பு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுதல்.

4. இத்துறையின் அலுவலகக் கட்டிடம், குடியிருப்புகள் கட்டுதல்.

5. தொழிற்சாலையின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக தொழிற்சாலைக்குத் தேவைப்படும் கருவிகளை வாங்குதல்.



1982 மார்ச் 10]

6. தேயிலைக் கழிவிலிருந்து 'காபின்' தயாரித்தல்.

**மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் :**

இத்திட்டத்தின் கீழ் ஜாவா சிட்ரொனெல்லா புல் பயிரிட்டுத் தைலம் எடுத்தல் பணி செயல்படுத்தப்படுகிறது.

**மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம்,.**

மத்திய அரசு பொறுப்பேற்கும் மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சில பயனளிக்கும் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

(1) டயஸ்கோரியா பயிரிடுதல், அதிலிருந்து ஆண்டொன்றிற்கு 3 டன் டயஸ்ஜெனின் பிழிந்தெடுத்து பதப்படுத்துவதற்குத் தொழிற்சாலையை நிறுவுதல். இதுவரை 115 எக்டேர் பரப்பளவில் டயஸ்கோரியா பயிரிடப்பட்டுள்ளது; 1982-83 ஆம் ஆண்டில் இதனை மேலும் 20 எக்டேருக்கு உயர்த்தக் கருதப்பட்டுள்ளது. டயஸ்ஜெனின் உற்பதி செய்வதற்கான தொழிற்சாலை விரைவில் நிறுவப்படும்.

(2) பெரிஜம், பெரும்பள்ளம் ஆகிய இடங்களில் ஜெரேனியம் பயிரிடுதல்.

9. திட்டப் பணிகளின் கீழ் செலவிடப்பட்டுள்ள மொத்த தொகையின் விவரம் வருமாறு:—

(ரூபாய் இலட்சத்தில்)

| ஆண்டு. | மாநிலத் திட்டப் பணிகள். | மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம். | மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம். | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1979-80 (உள்ளபடி) | 28.38 | .. | 13.95 | 42.33 |
| 1980-81 (உள்ளபடி) | 42.37 | 1.98 | 23.46 | 67.81 |

| | | | | |
|---|---|---|---|---|
| 1981-82 (வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு). | 46.23 | 7.05 | 54.78 | 108.06 |
| 1981-82 (திருத்த மதிப்பீடு) | 53.33 | 4.62 | 32.04 | 89.99 |
| 1982-83 வரவு-செலவுத் (திட்ட மதிப்பீடு). | 54.97 | 6.52 | 46.98 | 108.47 |

10. வரவு செலவுத் திட்டம்.

(ரூபாய் இலட்சத்தில்)

| விவரங்கள். | 1989-81 (உள்ள படி) | 1981-82 (வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு). | 1981-82 (திருத்த மதிப்பீடு) | 1982-83 (வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| **கோரிக்கை எண் 25.** | | | | |
| சின்கோனா— 320. தொழில்கள் நெறிமுறைப் படுத்துதல் | 9.96 | 10.36 | 11.03 | 11.73 |
| மலைத்தோட்டங்கள் (நீலகிரி, ஆனைமலை.) | 60.92 | 58.23 | 60.03 | 58.91 |
| தொழில்சாலைகள் (மருந்து தைலத் தொழிற்சாலை, நடுவட்டம்-அரசு கொய்னா தொழிற்சாலை ஆனைமலை.) | 13.99 | 14.66 | 13.54 | 14.[illegible] |





10. வரவு செலவுத் திட்டம்—தொடர்ச்சி.

| விவரங்கள் | 1980-81 (உள்ள படி) | 1981-82 (வரவு செலவுத் திட்ட மதிப்பீடு) | 1981-82 (திருத்த மதிப்பீடு) | 1982-83 (வரவு செலவுத் திட்ட மதிப்பீடு) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| விற்பனை .. | 1.35 | 1.47 | 1.53 | 1.58 |
| திட்டங்கள் ஆராய்ச்சித் திட்டங்கள், மாநிலத் திட்டங்கள், மத்திய அரசுத் திட்டங்கள்) | 64.83 | 88.22 | 83.67 | 92.29 |
| வட்டி .. | 36.00 | 36.00 | 53.00 | 67.00 |
| மொத்தம் | 187.05 | 208.94 | 222.80 | 245.81 |
| **கோரிக்கை எண் 54** | | | | |
| 526. மூலதனச் செலவு. | | | | |
| கட்டிடங்கள் | 20.26 | 40.50 | 26.60 | 37.80 |
| இயந்திர தளவாடங்கள். | 4.00 | 2.61 | 3.00 | 2.00 |
| மொத்தம் | 24.26 | 43.11 | 29.60 | 39.80 |
| பெரு மொத்தம் | 211.31 | 252.05 | 252.40 | 285.61 |

## மானியக் கோரிக்கை எண் 45

### காட்டுவளத்துறை.

### கொள்கை விளக்கக் குறிப்பு.

1.1. ‘ நல்ல காடுகள் வளர்ப்போம் ’ என்று பாடிய, நாட்டின் விடுதலை இயக்கத்திற்கு உரம் ஊட்டிய, மாபெரும் கவிஞர் பாரதியாரின் நூற்றாண்டு விழாவினை நாம் கொண்டாடிக்கொண்டிருக்கிறோம். இயற்கையன்னை நமக்கு அளித்துள்ள காடுகள் நாட்டுக்கும் நமக்கும் பெரிதும் இன்றியமையாதவை. வனங்களுக்கு அழிவே இல்லை. அவை என்றும் நின்று நிலைத்து வாழ்பவையாகும். மக்களின் வாழ்க்கைக்கும், நாட்டின் பொருளாதார வளத்திற்கும் வனங்களின் வளர்ச்சி பெரிதும் உதவுகின்றது. மரம், விறகு, பசுந்தழை உரம், காகிதம் அட்டைகள், தயாரிப்பதற்கான மரக்கூழ் போன்ற பொருள்கள் ரேயான் எனும் செயற்கைப்பட்டு, பட்டைகள், தோல், பதப்படுத்துவதற்கான பொருள்கள், உலர்வகைத் தைலங்கள், உணவிற்கு உதவும் காடுபடு சிறு பொருட்கள் முதலியவற்றோடு வளம் பலவற்றை நல்கும் காடுகள் மக்களுக்கு பெரும்பயன் அளிக்கின்றன. வெள்ளப்பெருக்கு, மண் அரிப்பு முதலியவற்றைத் தடுப்பதில், காடுகள் பெரும் பங்கேற்கின்றன. அவை உயிரின வாழ்க்கைச் சூழலைப் பாதுகாத்து வருகின்றன. வற்றாத ஆறுகள், ஓடை கள் பெருக்கெடுத்தோட உறுதுணை புரிகின்றன. சுற்றுப்புறச் சூழல் கெடாமல் பாதுகாத்து துணை நிற்கின்றன. எனவே இயற்கையாக அமைந்த வளங்கொழிக்கும் காடுகளைப் பாதுகாப்பதோடு கூடுமானவரை நாமே காடுகளை உருவாக்குவதும் அரசின் கொள்கையாகும். இச்சூழலின் பின்னணியில் காடு சார்ந்த தொழில்களுக்கு வேண்டிய மூலப் பொருட்களை நீண்ட கால அடிப்படையில் தடையின்றி வழங்க முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

1.2. நம் முன்னோர்களும், பிற்கால மன்னர்களும் மரங்களையும் வனங்களையும் உண்டாக்கி வளர்த்தனர். பேணிக் காத்தனர். ஆயினும், மக்கள் தொகைப் பெருக்கத்தின் காரணமாகவும், குறுகிய கால ஆதாயங்களைக் கருதியும் காடுகளை மக்கள் அழிக்க ஆரம்பித்தனர். இப்பொழுது அரசு இப்போக்கினைத் தடுத்து நிறுத்துவதோடு மட்டுமின்றி, காடு வளர்க்க வேண்டும் என்ற உணர்வை மக்களின் மனத்தில் மீண்டும் பதிய வைத்து காடு வளர்ப்பு, மரம் வளர்ப்புத் திட்டங்களில் அவர்களைப் பங்கேற்கச் செய்துவருகிறது. மனிதன் அல்லது இயற்கை என்றல்லாமல், பொருளாதாரம் அல்லது முருகியல்உணர்வு என்ற பேதமின்றி, இன்று அல்லது நாளை என்றில்லாமல் மனிதனும் இயற்கையும், பொருளாதாரமும் முருகியல் உணர்வும், பின்னிப் பிணைத்து, இயற்கை வளம் கொழிக்கும் காடுகளை செறிவாக வளர்ப்பதே நமது நோக்கமாகும்,.



1.3. மலைகளிலும், தனியார் தோட்டங்களிலும், பரந்த அளவில் மரங்கள் வெட்டப்படுவதைத் தவிர்க்க மரம் வெட்டுவதற்கு அனுமதி கோரிவரும் விண்ணப்பங்களை கூர்ந்து ஆய்வு செய்ய ஓர் அமைப்பை ஏற்படுத்தியுள்ளோம். மாவட்ட ஆட்சியரின் தலைமையிலான குழு, இவ்விண்ணப்பங்களை ஆராய்கிறது. பல்வேறு கோணங்களில் இவ்விண்ணப்பங்களைப் பரிசீலிக்க அதிகாரிகளுக்குக் குழுவின் ஆய்வரை பெரிதும் உதவும். சாலைகளுக்கு இருபுறமும் நான்கு மீட்டர் தொலைவுக்கு மரங்களை வெட்டக்கூடாது என ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### வனப்பரப்பு.

2. 1981–82 ஆம் ஆண்டு உள்ளகணக்கின்படி மொத்த வனப்பரப்பு 21·88 இலட்சம் எக்டேராகும். சென்ற ஆண்டு, இது 21.79 இலட்சம் எக்டேராக இருந்தது. ஒதுக்க காடுகள் ஒதுக்க நிலங்கள், தனியார் தோட்டங்கள் இவற்றின் பரப்பு முறையே 17·94 இலட்சம், 3·45 இலட்சம், 0·49 இலட்சம் எக்டேர்களாகும்.

### நிதி ஒதுக்கீடு.

3·1. 1980-81 ஆம் ஆண்டில் வன வளத்திற்கு 14·59 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. இது 1981-82 ஆம் ஆண்டில் சுமார் 22·30 கோடி ரூபாயாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 1982-83 ஆம் ஆண்டில் காட்டு வளத்திற்கு 23·82 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. காடுகளின் உற்பத்தித் திறனைப் பெருக்கவேண்டி, தொடர்ந்து காடுகளை வளர்க்க இத்தொகையில் பெருமளவு செலவிடப்படும், மரச்சாமான்கள். விறகு வகைகள், தொழிற்சாலைகளுக்குத் தேவையான மரப் பொருள்கள் ஆகியவை தடையின்றி கிடைக்க வழிவகை செய்யும் பொருட்டு பெருமளவில் வனத் தோட்டங்கள் பயிரிடப்படுகின்றன.

3.2. 1982-83 ஆம் ஆண்டில் பயிரிடக் கருதப்பட்டுள்ள மொத்த வனத் தோட்டங்களின் பரப்பு 61,300 எக்டேராகும். ‘‘ காடு வளர்ப்பு ’’ என்பது, முதலீட்டிற்கும், அதன் மூலம் வருவாயைப் பெருக்குவதற்கும் இடையே நீண்ட கால இடைவெளி கொண்ட ஒரு நீண்ட காலத் திட்டம் என்றாலும், அரசின் தனிக் கவனம், சிறப்பு நடவடிக்கைகள் காரணமாக, முந்தய ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டுள்ள பல திட்டங்கள் தற்போது பலன் தரத் தொடங்கியுள்ளதால் இம்மாநிலத்தின் தொழில், பொருளாதார வளர்ச்சியில் காடுகள் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கின்றன.

## வனப் பாதுகாவலகம்.

4.1. உதவி வனப்பாதுகாவலர்களின் தலைமையில் இயங்கும் ஒன்பது பாதுகாப்புக் குழுக்கள், கூடலூர் பகுதியிலுள்ள பறக்கும் படை, 68 வன சோதனைச் சாவடிகள் ஆகியவை வன வளத்தினை பாதுகாக்கும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டுள்ளன. இவை வட்டார அலுவலர்களுக்கு உதவி புரிகின்றன. சந்தன மரம், தேக்குமரம், ஏனைய அட்டவணையிடப்பட்ட விலை மதிப்புள்ள மரங்களைக் கள்ளத்தனமாக வெட்டி, அகற்றி அவற்றை ஏற்றிச் செல்லும் முயற்சிகளை முறியடிப்பதில் தனிக் கவனம் செலுத்தப்படுகிறது. பாதுகாப்புப் படையினருக்கும், பறக்கும் படையினருக்கும் மோட்டார் வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மரங்கள் அதிக அளவில் கடத்தப்பட வாய்ப்பு உள்ள இடங்களில், வட்டாரப் பணியாளர்கள் திறமையுடன் பணியாற்ற வகை செய்யும் பொருட்டு அவர்களுக்கு 40 துப்பாக்கிகளும், 24 ஜீப்புகளும் 1982-83 ஆம் ஆண்டில் வழங்கக் கருதப்பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டில், வனப்பாதுகாப்புக்காக ரூ. 31.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் தொலைபேசிகள் நிறுவுவதன் மூலம் போதுமான செய்தித் தொடர்பு வசதிகள் செய்து கொடுக்கப்படும். வனங்களில் ஆங்காங்கு மின் அணுக்கருவிகளை நிறுவி, தொடர்ந்து ஒலி அடையாளக் குறி காட்டும் அமைப்பின் மூலம் வனப் பகுதிக்குள் அனுமதி பெறாத வண்டிகள் நுழைதல், அல்லது அவற்றின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும் அந்தச் செய்தியை மைய நிலையத்திற்கு உடன் அறிவிக்கவும் வகை செய்யக் கருதப்பட்டுள்ளது. இது குறித்து தொடக்க ஆய்வுப் பணிகள், தமிழ்நாடு மின்னணுக் கழகத்தால் மேற்கொள்ளப்படும் ; இக்கழகம், இந்த மின்னணுக் கருவிகளை நிறுவும் பணியில் வனத்துறைக்கு உதவி புரியும். கம்பி இல்லாத தந்தி செய்தித் தொடர்பு முறையை நிறுவதற்கான ஆய்வு ஒன்றும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

4.2. 1981-82 ஆம் ஆண்டில் 1981 டிசம்பர் திங்கள் வரை 271 சந்தன மரத் திருட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. 16.18 இலட்ச ரூபாய் மதிப்புள்ள சந்தனக் கட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டன.

## வருவாய் தரும் மரங்கள்.

5.1. காடுபடு பொருட்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்களுக்கு அவசியமான சந்தனம், மிலாறு, மரக்கூழ் உற்பத்திக்கான மென் மரங்களும் ரப்பரும், இத்துறையின் வருவாயில் பெரும் பகுதியைத் தருகின்றன. என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவர்.





## சந்தன மரம்.

5·2. சந்தன மரங்கள் இயற்கையாக பீடபூமிகளிலும், வட ஆற்காடு, சேலம், தருமபுரி, கோயம்பத்தூர் ஆகிய மாவட்டங்களின் மலைப் பகுதிகளிலும், நீலகிரி, தென் ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் குறைந்த அளவிலும் வளர்கின்றன. பட்டுப்போன சந்தன மரங்கள் மட்டுமே, மூன்றாண்டுகட்கு ஒரு முறை வெட்டி எடுக்கப்படுகின்றன. வெட்டப்பட்ட சந்தன மரங்கள் கிடங்குகளுக்குக் கொண்டுவரப்பட்டு, சுத்தப்படுத்தப்பட்டு ஏலத்திற்கு விடப்படுகின்றன. 1980 ஆம் ஆண்டில், சந்தன மரங்கள் ஏற்றுமதிக்கு இந்திய அரசு தடை விதித்ததன் காரணமாக, சந்தனமரங்களின் விலை குறைந்ததால், இத்துறைக்குக் கிடைக்க வேண்டிய வருவாய், பெருமளவு குறைந்துள்ளது. பன்னாட்டுச் சந்தையில் விலை மதிப்புடைய ஏற்றுமதித் தரம் வாய்ந்த சந்தனக் கட்டைகளை ஏற்றுமதி செய்வதால் உள்நாட்டுத் தேவையை நிறைவு செய்வது எந்த வகையிலும் பாதிக்கப்படாது என்று பலமுறை நாம் விரிவான விளக்கம் அளித்தும், வேண்டுகோள் விடுத்தும், மைய அரசு இந்தத் தடையை நீக்கவில்லை. 1982-83 ஆம் ஆண்டுக்கான ஏற்றுமதி கொள்கையை வகுக்கும்போது நமது வேண்டுகோள் கவனத்தில் கொண்டு ஏற்கப்படும் என்று நம்புகிறோம்.

5.3. செயற்கை முறையில் சந்தனம் பதியன்போடும் முறை பற்றிய முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1980-81ஆம் ஆண்டில் 226 எக்டேர் பரப்பளவில் சந்தன மரங்கள் வளர்க்கப்பட்டன. 1981–82ஆம் ஆண்டில் ரூ. 16.72 இலட்சம் செலவில் 245 எக்டேர் பரப்பளவில் சந்தன மரங்கள் வளர்க்கப்படுகின்றன. 1982–83ஆம் ஆண்டில் இயற்கை முறையிலும் செயற்கை முறையிலும் சந்தன மரங்கள் 650 எக்டேர் பரப்பில் வளர்க்கப்படும். வடாற்காடு மாவட்டத்தில் திருப்பத்தூரில் கட்டப்பட்டுவரும் கூடுதல் சந்தனக்கட்டைக் கிடங்கு விரைவில் கட்டி முடிக்கப்படும். 1982–83ஆம் ஆண்டில் சேலத்தில் புதிய கிடங்கு கட்டும் பணி மேற்கொள்ளப்படும். இவற்றுக்காக 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 18.29 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

5.4. வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஆண்டொன்றுக்கு 400 டன் சந்தனக் கட்டைகளை பதப்படுத்தி சந்தனத் தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை ரூ. 49.99 இலட்சம் மூலதனத்தில் நிறுவும் திட்டம் முனைப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்தொழிற்சாலைக்கு நிறைந்த அளவில் நல்ல தண்ணீர் கிடைக்க வேண்டியிருப்பதால் பலவேறு இடங்களில் நீர் ஊற்று ஆய்வுச் சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவை முடிந்ததும் தொழிற்சாலை கட்டுமிடம் விரைவில் உறுதி செய்யப்படும்.

இதற்கிடையில் தொழிற்சாலைக்கான ஆலோசகர் நியமிக்கப்படவுள்ளார். தொழிற்சாலைக்கான கொதிகலன்கள் போன்ற ஒரு சில அடிப்படை இயந்திரங்கள் வாங்குவதற்குரிய ஒப்பந்தப் புள்ளிகள்/விலைப்புள்ளி முதலியன பெறப்பட்டுள்ளன. திட்ட மேலாளர் ஒருவர் விரைவில் நியமிக்கப்படுவார். வனத்துறைக்காக இத்திட்டத்தை 'டான்சி' நிறுவனம் முறைமாற்றுப் பணி அடிப்படையில் செயலாற்றி வருகிறது.

### வன அடிப்படைத் தொழில்களுக்கான மரக்கூழ், மிலாறு பட்டைகள் முதலியன.

5.5 கற்பூரத் தைல மரங்கள், தைல மரங்கள் (யூகலிப்டஸ் கிராண்டிஸ்), தைல மரங்கள் (யூகலிப்டஸ் ஹைபிரிட்), பட்டை உரித்த மிலாறு மரங்கள், மிலாறு பட்டைகள், மூங்கில் முதலியன தமிழ்நாட்டில் உள்ள தொழிற்சாலைகளுக்கு கச்சா பொருட்களாக தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளிலிருந்து இவற்றிற்கு நல்ல விலை பெற அரசு தீவிர முயற்சிகளை எடுத்து வருகிறது. 1980–81ஆம் ஆண்டு 1.73 இலட்சம் டன் எடையுள்ள மரங்கள், பட்டைகள் வழங்கப்பட்டு 2.36 கோடி ரூபாய் வருவாய் பெறப்பட்டது. 1981–82இல் வழங்கப்படும் மரங்கள், பட்டைகள் ஆகியவற்றின் எடை 2.37 இலட்சம் டன்களாகவும், வருவாய் ரூ. 4.70 கோடியாகவும் இருக்குமென எதிர்ப்பார்க்கப்படுகிறது. மரக்கூழ் உற்பத்திக்கான மரத்தோட்டங்களைப் பயிரிடும் முயற்சி பல்வேறு திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 1981–82ஆம் ஆண்டில், 3,700 எக்டேர் பரப்பில் வளர்க்கப்பட்ட மென்மரத் தோட்டங்கள் 1982–83ஆம் ஆண்டில் ரூ. 49 இலட்சம் ஒதுக்கீட்டில், 4,000 எக்டேர் பரப்பிற்கு மேல் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### ரப்பர்.

5.6. கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள சுமார் 4,800 எக்டேர் பரப்புள்ள ரப்பர் தோட்டத்தை துறை நிருவாகம் செய்து வருகிறது. சுமார் 2,000 எக்டேர் பரப்பிளவில் உள்ள ரப்பர் மரங்களிலிருந்து ரப்பர்பால் இறக்கப்பட்டு வருகிறது. அண்மையில் நடப்பட்ட ரப்பர் மரங்கள் வளர்ந்து பயன்தரும் போது, இப்பரப்பளவு படிப்படியாக உயரும். 1980–81ஆம் ஆண்டில் இதன் வருவாய் ரூ. 2.15 கோடியாகும். 1981–82ஆம் ஆண்டில் இதன் வருவாய் ரூ. 2.50 கோடியை எட்டும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. இதுவரை பெற்ற மொத்த வருவாய் சுமார் ரூ. 8.60 கோடியாகும். இதற்கான செலவு சுமார் ரூ. 12.60 கோடியாகும். இவ்வாறாக, இத்துறையில் இதுவரை ஏற்பட்டுள்ள அதிக செலவு ரூபாய் 4 கோடியாகும்.



5. 7. கீரிப்பாறை, பெருஞ்சானி ஆகிய இடங்களிலுள்ள ரப்பர் தொழிற்சாலைகளின் உற்பத்தி நாள் ஒன்றுக்கு 13.5 டன் ஆகும். ரப்பர் மரங்களில் பால் அதிகமாக உற்பத்தியாகும் காலத்தில் தொழிற்சாலை முழுத் திறனுடன் செயலாற்றி வந்தபோதிலும் ரப்பர் பாலை அதிகச் செலவு செய்து நீண்ட தொலைவுக்குக் கொண்டு செல்வதையும், பால் உறைந்து விடும் இடர்ப்பாட்டையும் தவிர்ப்பதற்காக, மேற்கு ரப்பர் வட்டப் பிரிவில் செய்முறை வசதிகளை நிறுவுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. மூலதன, இயக்கும் செலவுகளைக் கருத்தில் கொண்டும், அங்காடியின் ஏற்ற இறக்க நிலைமைகளுக்கேற்பவும், எந்தவிதமான பொருளை உற்பத்தி செய்வது பாதுகாப்பானதாகவும், ஆதாயம் தரத்தக்கதாகவும் இருக்குமென்று தீவிரமாக ஆராய்ந்து விரைவில் முடிவு செய்யப்பட்டு தொழிற்சாலை விரைவிலே தொடங்கப்படும். ரப்பர் மரங்களைப் பாராமரிக்கவும் குடியிருப்புகள் கட்டுவதற்கும் 1981-82 இல் எதிர்பார்க்கப்படும் செலவு ரூபாய் இரண்டு கோடி இருபத்திரண்டு இலட்சமும், 1982-83 இல் ரூபாய் இரண்டு கோடி முப்பது லட்சமும் ஆகும். 1982-83 ஆம் ஆண்டில் இந்தத் தோட்டத்தில் கிடைக்கும் ரப்பரின் அளவு ஒரு எக்டேருக்கு 1,000 கி. கிராம். இது அனைத்திந்திய சராசரியான எக்டேர் ஒன்றுக்கு 770 கி.கிராமைவிட அதிகமாகவே இருந்தாலும், உற்பத்தித் திறனை இன்னும் அதிகரிக்கக் கருதப்பட்டுள்ளது. இதன் பொருட்டு, ரப்பர் வாரியத்தின் ஆலோசனைப் பணிகள் பெறப்படும். மேலும், நிர்வாகத் திறனை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு இந்த ரப்பர் தோட்டத்திலும், தொழிற்சாலைகளிலும் வணிக முறையில் கணக்குகள் வைத்துக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### முந்திரி.

5. 8. தென் ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் முந்திரித் தோட்டங்களை வளர்க்கும் பணி தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தைச் சேர்ந்ததாகும். இக்கழகம் 23,000 எக்டேர் முந்திரித் தோட்டங்களைக் கொண்டுள்ளது. இவ்வளர்ச்சிப் பணியில் துறையும் நடவடிக்கை எடுத்து வருகிறது. வனத்துறை, தமிழ் நாடு வனத் தோட்டக் கழகம், தனியார் ஆகியோரின் தேவைகளை நிறைவு செய்யும்பொருட்டு விருத்தாசலத்தில் பெரிய அளவிலான முந்திரி நாற்றங்கால் ஒன்று பாராமரிக்கப்பட்டு வருகிறது. முந்திரித் தோட்டங்களில் தீவிர வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. புதியத் தோட்டங்களும் வளர்க்கப்படுகின்றன. 1980-81 ஆம் ஆண்டில் பயிர் வளர்ப்பின்கீழ் 824 எக்டேரும் புதிய தோட்டங்கள் 250 எக்டேரும் 1981-82 ஆம் ஆண்டில் பயிர் வளர்ப்பின்கீழ் 2,000 எக்டேரும் புதிய தோட்டங்கள் 250 எக்டேரும் பயிரிடப்பட்டன. தமிழ் நாடு வனத் தோட்டக் கழகம், துறை ஆகியவற்றின் மேற்பார்வையில் 20,000 எக்டேர் நிலப்பரப்பில், கலப்பு இனத்தில்

உருவான சிறந்த வகை முந்திரி நாற்றுக்களை ஊடுபயிராக வளர்க்க, அரசு ஒரு பெரிய திட்டத்தை வகுக்க உள்ளது. உலக வங்கியிடமிருந்து நிதி யுதவி பெறுவதற்கு இந்திய அரசின் கவனத்திற்கு இத்திட்டத்தைக்கொண்டு செல்லக் கருதியுள்ளது.

### காடுபடு சிறுபொருள்கள்.

5. 9. வனங்கள் வழங்கும் காடுபடு சிறு பொருள்களின் வளர்ச்சிக்காக ஆறாம ஐந்தாண்டுத் திட்டத்தில் 75 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும் என்று கருதப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் புளியமரம், கசப்புக்காய், சீயக்காய், தைல மரங்கள் ஆகியவை வளர்க்கப்படும். 1981-82 ஆம் ஆண்டில் 12.27 இலட்சம் ரூபாய் செலவில் 1,300 எக்டேர் நிலப்பரப்பிலும் 1982-83 ஆம் ஆண்டில் 13.23 இலட்சம் ரூபாய் செலவில் 1,600 எக்டேர் நிலப்பரப்பிலும் இத்தகைய மரங்கள் வளர்க்கப்படும். 1982-83 ஆம் ஆண்டின் திட்டம் தீவிர வளர்ப்புப் பணிகளையும் உள்ளடக்கியதாகும்.

### தேக்கு, செம்மரங்கள் முதலியன.

5. 10. தமிழ்நாட்டில் மரங்களைப் பெருக்கும் பொருட்டு தேக்கு, செம்மரங்கள் ஏனைய மரங்கள் வளர்ப்புக்காக ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 25 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். 1980-81 ஆம் ஆண்டில் 5.43 இலட்சம்ரூபாய் செலவில் சுமார் 450 எக்டேருக்கும் அதிகமான நிலப் பரப்பில் இத்தகைய மரங்கள் வளர்க்கப்பட்டன. 1981-82 ஆம் ஆண்டில் 6.32 இலட்சம் ரூபாய் செலவில் 500 எக்டேர் நிலப்பரப்பில் இந்த மரங்கள் வளர்க்கப்பட்டன. 1982-83 ஆம் ஆண்டிலும் இந்த அளவிற்கு மரங்கள் வளர்ப்பு இருக்கும்.

### மென்மரம்.

5. 11. தமிழ்நாட்டில் தீப்பெட்டித் தயாரிக்கும் தொழில் முக்கியமானத் தொழிலாக இருக்கிறது. ஆனாலும் இத்தொழிலுக்கு வேண்டிய மரங்களைப் பெறுவதற்கு ஏனைய மாநிலங்களையே நம்பியிருக்க வேண்டியுள்ளது. வெளி மாநிலங்களை நம்பியிருப்பதைக் குறைக்க வேண்டும் என்பதைக் கருத்திற் கொண்டும், தீப்பெட்டித் தயாரிக்கும் தொழிலுக்குத் தேவையான மரங்களைத் தங்கு தடையில்லாமல் வழங்கும் பொருட்டும், வனத்துறை மென்மரங்களை வளர்க்கத் தொடங்கியுள்ளது. 1980-81 ஆம் ஆண்டில் 82 எக்டேர் நிலப் பரப்பில் மென் மரங்கள் வளர்க்கப்பட்டன. 1981-82 ஆம் ஆண்டில் 205 எக்டேர் நிலப்பரப்பிலும் 1982-83 ஆம் ஆண்டில் அதே அளவு நிலப்பரப்பிலும் மென்மரங்கள் வளர்க்கப்படும். தீக்குச்சிகள், பலகைகள் தயாரிக்க சாத்தூர் கூட்டுறவு தீப்பெட்டி தயாரிக்கும் கூட்டமைப்பிற்கு அரசு வளர்த்துவரும் மென் மரங்கள் அனைத்தையும் நியாயமான விலைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.



6. 3. இத்திட்டத்தின் நோக்கங்களையும், இலக்குகளையும் எய்துவதை உறுதிப்படுத்தும்பொருட்டு, சமூகக் காடு வளர்ப்புப் பிரிவு தனியாகச் செயல் படத் தொடங்கியுள்ளது. தேவைப்படும் முறையானத் தொழில்நுட்ப நிருவாகப் பணியாளர்கள் தவிர, கிராம சமூகக் காடு வளர்ப்புப் பணியாளர்கள் தற்காலிகமாக அந்தப் பணிகள் நிறைவேற்றப்படும் உள்ளூர்ப் பகுதியிலிருந்து அமர்த்தப்படுவர். அவர்களுக்குத் தக்கப் பயிற்சி அளிக்கப்படும். அவர்கள் கிராம மக்களுக்கும் சமூகக் காடு வளர்ப்புப் பிரிவுக்கும் இடையில் இணைப்புப் பாலமாக இருந்து ஊராட்சிகளுடன் ஒத்துழைத்துப் பணியாற்றுவர்.

6. 4. கிராம, வட்ட, மாவட்ட, மாநில அளவுகளில் சமூகக் காடு வளர்ப்புக் குழுக்கள் அமைக்கப்படும். வேலைக்கமர்த்தப்படும் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு வளர்ச்சிப் பணிகளில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும். அப்போதுதான் அவர்கள், இத்திட்டத்தை மக்கள் புரிந்துகொண்டு பங்கு கொள்ள அவர்களை ஊக்குவிக்க இயலும்.

6.5. இத்திட்டம் முதலில் 1981.82 முதல் 1985-86 வரை நிறைவேற்றப்படும். மொத்தத் திட்டச் செலவாகிய 45 கோடி ரூபாயில், பத்து கோடி ரூபாய் அடுத்த திட்டத்தின் முதல் ஆண்டில் ஒதுக்கப்படும். விறகு மரத் தோட்டங்களை வளர்ப்பதே இத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். 1.76 இலட்சம் எக்டேரி லும் 6,075 கிலோ மீட்டர் தொலைவிற்கு நிழற்சாலைகள், கால் வாய்க்கரைகள், இருப்புப் பாதைகளை ஒட்டியுள்ள நிலங்கள் ஆகியவற்றிலும் தோட்டங்கள் ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. அத்துடன் 501 இலட்சம் நாற்றங்கால் பொது மக்களுக்கு வழங்கப் படும். அவர்கள் தங்கள் நிலங்களில் அவற்றை நடுவார்கள். ஏழை களுக்கு அவை இலவசமாக அளிக்கப்படும். ஆண்டு உதவி தொகையும் அவர்களுக்குக் கிடைக்கும். தற்போது சமூகக் காடு வளர்ப்புத் திட்டம் 1,67,459 (1960 ஆம் ஆண்டில் இருந்து 2 ஆண்டு காலங்களில் ஏற்படுத்தப்பட்ட பரப்பு) எக்டேரில் நிறை வேற்றப்பட்டுள்ளது. மேற் சொன்ன திட்டத்தை நிறைவேற்றி னால் சமூகக் கர்டு வளர்ப்பு தற்போதைய அளவினைக் காட்டிலும் பெருமளவிற்கு வளர்ச்சி அடையும். 1982-83ல் இத்திட்டத் திற்காக 7.94 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தனியார் நிலங்

[1982 மார்ச் 10

### விறகு மரங்கள்

5.12. ஆறாம் ஐந்தாண்டு திட்டத்தில் 1.77 கோடி ரூபாய் செலவில் வனத்திலும் படுகை நிலப்பகுதியிலும் விரைவாக வளரக்கூடிய விறகு மரங்களை வளர்ப்பது ஒரு திட்ட மாகும். 1980—81 ஆம் ஆண்டில் சுமார் 5,500 எக்டேர் நிலப்பரப்பில் விறகு மரங்கள் வளர்க்கப்பட்டன. 1981—82 ஆம் ஆண்டில் 56.56 இலட்சம் ரூபாய் செலவில் 4,500 எக்டேர் நிலப்பரப்பில் இம்மரங்கள் வளர்க்கப்படும். 1982-83 ஆம் ஆண்டில் 61.31 இலட்சம் ரூபாய் செலவில் 4,760 எக்டேர் நிலப்பரப்பில் இம்மரங்களை வளர்க்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

### சமூக காடு வளர்ப்பும், சுவீடன் அனைத்து நாட்டு வளர்ச்சி அமைப்பின் உதவித் திட்டமும்.

6.1. சமூகக் காடு வளர்ப்பில் நம் மாநிலம் முன்னோடியாக விளங்கும் பெருமையைப் பெற்றுள்ளது. 1960 ஆம் ஆண்டையொட்டி, குறைந்த அளவில் சுமார் 5,000 எக்டேர் நிலப்பரப்பில் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டம் நாளடைவில் கணிசமாக விரிவடைந்து தற்போது ஆண்டு ஒன்றுக்கு 36,000 எக்டேர் நிலப்பரப்பில் காடுகள் வளர்க்கப்படுகின்றன.

6. 2. மதிப்புமிகு உறுப்பினர்கள் அறிந்துள்ளபடி 1—4—1981 ஆம் நாளிலிருந்து சுவீடன் அனைத்து நாட்டு வளர்ச்சி அமைப்பின் நிதி உதவியுடன் வன எல்லைகளுக்கு வெளியே பெருமளவிலான காடு வளர்ப்புத் திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது. ஏரி நிலங்கள், கிராமத்திலுள்ள காலி நிலங்கள், சாலை, கடற்கரை ஓரங்கள், ரயில்வே நிலங்கள் போன்ற அரசு ஊராட்சி நிலங்களையும் தனியாரிடம் உள்ள வளம் குன்றிய நிலங்களையும் பயன்படுத்திக் காடுகளும் மரங்களும் வளர்க்கப்படும். கிராமப்புற மக்களின் தேவைகளான விறகு, சிறிய மரங்கள், தீவனம், காடுபடு சிறு பொருள்கள் ஆகியவற்றின் தேவையை இது நிறைய செய்கிறது. இதன்மூலம் ஒரு நிலையான நில அடிப்படையிலான சொத்துக்களை உருவாக்குதல் இத் திட்டத்தின் நோக்கமாகும். தனியார் நிலங்களில் தோட்டங்களை வளர்ப்பது இத்திட்டத்தின் மற்றொரு கூறாகும். இத் திட்டத்தை நிறைவேற்ற ஊராட்சிகள், கிராமப்புற குழுக்கள் ஆகியவற்றின் முழு ஒத்துழைப்பையும் பெற கருதப்படுகிறது. நாளடைவில் படிப்படியாக, வன நிலங்களுக்கு வெளியே வளர்க்கப்படும் மரப்பயிர்களைப் பராமரித்து பாதுகாத்து அறுவடை செய்யும் பொறுப்பு கிராமக் குழுக்களிடமே விட்டு விடப்படும். தோட்டங்களும், வளர்க்கப்படும் மரங்களும் சுற்றுப்புறச் சூழ்நிலையை நன் முறையில் பாதுகாக்க உதவும் என்பதுடன், கிராமப்புற ஏழை மக்களுக்குக் குறிப்பாக, நிலமற்றோருக்கு வேலைவாய்ப்பையும் நல்கும்.



1982 மார்ச் 10)

களில் நடுவதற்காக 100 இலட்சம் நாற்றுகள் வழங்குதல் 34,607 எக்டேரில் அரசு, ஊராட்சி நிலங்களில் புதிய தோட்டங்களை ஏற்படுத்துதல். 1,775 கிலோமீட்டர் தொலைவிற்கு ஆங்காங்கு தோட்டங்கள் அமைத்தல் ஆகிய பணிகளை நிறைவேற்றும் இலக்குகள் 1982 83 ஆம் ஆண்டுக்காக வகுக்கப்பட்டுள்ளன. 1981-82 அளவைக் காட்டிலும் இது பெருமளவிலான முன்னேற்றமாகும். அந்த (1981-82) ஆண்டில் 43 இலட்சம் நாற்றுகள் வழங்குதல், 23,000 எக்டேரில் தோட்டப்பயிர் மேம்பாடு, 805 கிலோ மீட்டர் தொலைவிற்கு ஆங்காங்கு தோட்டங்கள் வளர்த்தல் ஆகிய பணிகள் நிறைவேற்றப்பட்டன.

6.6. இத் திட்டத்தை நிறைவேற்ற திருவள்ளூர், திருப்பூர், திருச்செந்தூர், இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் 6 விரிவாக்கக் காடு வளர்ப்புப் பிரிவுகள் தேவையான பணியாளர்களுடன் அமைக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே உள்ள விரிவாக்கக் காடு வளர்ப்புப் பிரிவுகளுக்குக் கூடுதலாக அப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. மத்திய அரசு ஆதரவு பெறும் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட நான்கு கிராமப்புற விறகு மரத் திட்டப் பிரிவுகள் உட்பட 21 வளர்ச்சிப் பிரிவுகள் 4 வட்டாரங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு புதிதாக ஏற்படுத்தப்பட்ட வட்டங்களின் கட்டுப்பாட்டின் கீழ் அவை செயல் படும். இத் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட கூடுதல் வனத்துறைத் தலைவரின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் சமூகக் காடு வளர்ப்புப் பிரிவு முழுவதும் செயற்படும். சமூகக் காடு வளர்ப்புத் திட்டம் முழுவதற்கும் வனத்துறைத் தலைவர் பொதுவாக பொறுப்பேற்றிருப்பார்.

6.7. விதிகளின்படி ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலங்களில் வளர்க்கப்படும் சமூகக் காடுகளிடமிருந்து கிடைக்கும் வருவாயை அரசும் இந்த உள்ளாட்சி மன்றங்களும் சமமாகப் பிரித்துக் கொள்கின்றன. சமூகக் காடுகள் ஊராட்சி நிலங்களில் வளர்க்கப்படுகின்றனவா அல்லது அரசாங்க நிலங்களில் வளர்க்கப்படுகின்றனவா என்பதைக் கருதாமல் அதே முறையில் வருவாயை பகிர்ந்தளிக்க அண்மையில் வகை செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே

உள்ள சமூகக் காடுகளுக்கும் இவ்வசதியை நீட்டிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த முறையில் உள்ளாட்சி மன்றங்களுக்குக் கிடைக்கும் ஏராளமான வன வாயில்களைக் கருத்தில் கொண்டு இந்த விற்று முதலில் குறைந்தது 20 சதவீதமாவது உள்ளாட்சி மன்றங்கள் மேற்கொள்ளவிருக்கிற காடு வளர்ப்புத் திட்டங்களுக்காக அவற்றுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று வகை செய்யப்பட்டுள்ளது. ஊராட்சி தோட்டங்களை வளர்க்க இந்த ஏற்பாடு ஊக்கமளிக்கும் என்பதுடன் அடிமட்டத்திலுள்ள மக்கள் காடு வளர்ப்புப் பணிகளில் ஈடுபடுவதை உறுதிப்படுத்தும்.

6.8. இத்திட்டத்தைச் செயலாக்குவதன் மூலம், ஐந்து ஆண்டுகளில் 306 இலட்சம் வேலை நாட்கள் ஏற்படுத்தப்படும் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

6.9 அத்துடன் விறகுமரத் தோட்டங்களை ளெர்ப்பதற்கான சமூகக் காடு வளர்ப்புத் திட்டமொன்றை (மத்திய அரசு ஆதரவு பெறும் திட்டம்) நாம் நிறைவேற்றி வருகிறோம். அதன் பணித் திட்டங்களும் நிதிக் கூறுகளும் இங்குக் குறிக்கப் பட்டுள்ளன.

| | 1981–82 | 1982–83 (மதிப்பிட்டது). | ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| வளர்க்கப்பட்ட பரப்பு (எக்டேர்) .. .. | 8,200 | 7,000 | 26,700 |
| ஆங்காங்குள்ள தோட்டம் (கி.மீ.). .. .. | 200 | 160 | 630 |
| வழங்கப்பட்ட நாற்றுகள் எண்ணிக்கை (இலட்சத்தில்) .. .. | 12 | 40 | 135 |
| செலவு (ரூபாய் இலட்சத்தில்) | 110.40 | 119.06 | 575.00 |



இத் திட்டத்திற்காக இந்திய அரசின் பங்கு 2.33 கோடி ரூபாயாகும். எஞ்சிய 3.42 கோடி ரூபாய் செலவை மாநில அரசே ஏற்கும். பொது மக்களுக்கு வழங்கப்படவிருக்கிற நாற்றுகள் என்பதில் ''குழந்தைக்கு ஒரு மரம்'' என்னும் திட்டம் அடங்கும்.

**கிராம ஒருங்கிணைந்த வளர்ச்சி திட்டமும், வறட்சிப் பகுதித் திட்டமும்**

7.1 கிராம ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வளர்ச்சி வட்டாரம் ஒன்றுக்கு 10,000 ரூபாய் செலவில் நாற்றங்கால் பண்ணைகளை அமைத்து, வட்டார வளர்ச்சி அதிகாரிகள் மூலமாக நாற்றுகள் உழவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

7.2 தருமபுரி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் மத்திய அரசின் நிதியுதவி பெறும் வறட்சிப் பகுதித் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. காடு வளர்ப்பு, மேய்ச்சல் நிலம் ஆகியவற்றை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். 1981–82ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காகும் முலதனச் செலவு ரூ. 83 இலட்சம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாண்டில் காடு வளர்ப்பு, மேய்ச்சல் நிலப் பகுதி மேம்பாடு ஆகியவை 4,500 எக்டேர் பரப்பளவிலும் 2,250 எக்டேர் பரப்பளவுள்ள பழைய தோட்டங்களைப் பராமரித்தலும் 90 கிலோ மீட்டர் அளவிற்கு நிழல்தரும் மரங்களை வளர்த்தலும் இதில் அடங்கும். இத்திட்டம் 1982–83ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயற்படுத்தப்படும்.

**வறட்சித் துயர் தணிப்புத் திட்டம்.**

8. 1981–82ஆம் ஆண்டில் இம்மாநிலத்தில் வறட்சித் துயர் தணிப்புப் பணிகளின் கீழ் வனத்துறையும், தமிழ்நாடு வனத் தோட்டக் கழகமும் மேற்கொண்ட காடு வளர்ப்பு மற்றும் ஏனைய பணிகளுக்காக (பணிகளுக்கும் பணியாளர்களுக்கும்) அரசு ரூ. 1,01.00 இலட்சம் அனுமதித்துள்ளது. பருவ நிலைகளின் ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கவும் மண் வளத்தைப் பாதுகாக்கவும், எரிபொருள், சிறுவெட்டு மரங்கள், கால்நடைத் தீவனம், காடுபடு சிறுபொருட்கள் ஆகியவற்றிற்கு வகை செய்யவும், கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கவும் வகையிலும் தோட்டங்கள் என்ற வடிவில் நிலையான சொத்துக்களை ஏற்படுத்துவதில், காடு வளர்ப்புப் பணி பெரிதும் துணையாக இருக்கும் என்று அரசு கருதியுள்ளது. இத் திட்டத்திற்காக ரூ. 97.43 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

**ஏலக்காய்.**

9. ஏலக்காய் பயிரிடுவதற்காகத் தனிப்பட்டவர்களுக்கு ஒதுக்கக் காட்டு நிலங்களைக் குத்தகைக்கு விடும் திட்டம் பற்றி இதுகாறும் இருந்துவந்த நிலையை அரசு நுணுக்கமாக ஆய்வு செய்துள்ளது. சிறு உழவர்கள், சொற்ப நில உழவர்கள் வேளாண்மை தொழிலாளர்கள் ஆகியோர் பயனடைவதை உறுதி

செய்யும் நோக்கத்துடன் ஒவ்வொருவருக்கும் குத்தகைக்கு வழங்கப்படும் நிலத்தின் அளவு 2 எக்டேராக ஏற்கனவே குறைக்கப்பட்டுள்ளது. குத்தகை நிலத்தை வைத்திருக்கக்கூடிய சிறு உழவர்கள் சொற்ப நில உழவர்கள், நிலமில்லா வேளாண்மை தொழிலாளர்கள் ஆகியோருக்கு, வங்கியின் நிதியுதவி கிட்டுமாறு செய்வது மூலம் இப்புதிய திட்டத்தைத் தீவிரப்படுத்த கருதப்பட்டுள்ளது. குத்தகைக்கால அளவு, இயல்பாகவே புதுப்பிக்கப்படும் அல்லது நீட்டிக்கப்படும் என்றில்லாமல் 20 ஆண்டாக அமைக்கப்படவுள்ளது.

### தோட்டக் கழக நடவடிக்கைகள்

10.1 நீலகிரி மாவட்டத்திலுள்ள தேயிலைத் தோட்டங்கள், திருச்சிராப்பள்ளி, தென் ஆர்க்காடு, புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலுள்ள முந்திரி. யூகலிப்டஸ் மரங்கள் ( Eucalyptus hybrid ) போன்ற வணிகத் தன்மை வாய்ந்த தோட்டங்கள் வனத் தோட்டக் கழகங்கள் மூலமாக, அதாவது முறையே இதற்கென்றே அமைக்கப்பட்ட தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் (Tan ea) தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் (Tafcorn) ஆகியவற்றின் மூலமாக நிருவகிக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர்.

10.2 வனத்துறையிடமிருந்து தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் சுமார் 945 எக்டேர் பரப்பளவுள்ள தேயிலைத் தோட்டங்களைப் பெற்றது. இக்கழகம், படிப்படியாக நிறைவேற்றப்படும் திட்டத்தின்கீழ், 2,100 எக்டேர் பரப்பளவில் தேயிலைத் தோட்டங்களை ஏற்படுத்தியுள்ளது. 1982—85ஆம ஆண்டு கால அளவில் செயற்படுத்தப்படவுள்ள மலைத் தோட்டத் திட்டத்தின் III ஆம் நிறைவில் மேலும் கூடுதலாக 1,000 எக்டேர் பரப்பளவில் தேயிலை பயிரிடப்படும். நமது தேயிலை தோட்டக் கழகம் தயாரித்துள்ள தேயிலைக்கு, அங்காடியில் நல்ல விலை கிட்டியுள்ளது என்பதை இப்பேரவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். சேரம்பாடியில் சுமார் 1.40 கோடி ரூபாய்ச் செலவில் தேயிலைத் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதன் மூலம் குன்னூர், சேரங்கோடு ஆகிய இடங்களில் தற்போதுள்ள உற்பத்தி வசதிகள் விரிவாக்கப்படும். புதிய தோட்டங்கள் உரிய விளைச்சல் நிலையை அடையாத காரணத்தால் இக்கழகத்திற்கு இது வரையில் இழப்பு ஏற்பட்டு வந்தது. ஆனால் இனிமேல் நல்ல பயனை அளிக்கும். தேயிலைப் பயிர்கள் பயனளிக்க உரிய நிலையை அடைந்ததால் மட்டுமின்றி, நிர்வாகம், தேயிலை பறிக்கும் முறை, தயாரிப்பு முறை ஆகியவை சிறந்த முறையில் அமைக்கப்பட்டுள்ளதாலும், இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1981 ஜூன் திங்களுடன் முடிவடைந்த ஆண்டில், 20.50 இலட்சம் கிலோ கிராம் தேயிலைத் தயாரிக்கப்பட்டது. இது நடப்பாண்டில் குறைந்தளவு 20 சதமாவது உயரும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.



10.3 தமிழ்நாடு, வனத் தோட்டக் கழகத்தைப் பொறுத்த வரையில், கடந்த ஆண்டின் செயல்திறன் கடுமையான வறட்சி நிலையின் காரணமாகக் குறைந்தளவிலே இருந்தது. முந்திரியின் உற்பத்தி மிகவும் குறைந்துவிட்டது. ஆனால் தற்போதுள்ள சிறந்த பருவ நிலைகளாலும், செயற்பாடுகளை உன்னிப்பாகக் கண்காணிப்பதாலும், இக்கழகம் 1982 ஜூன் திங்களுடன் முடிவடையும் ஆண்டில் சுமார் ரூ. 3 கோடி வருவாயை எய்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், இக்கழகத்திற்கு 1880—81ஆம் ஆண்டில் கிடைத்த வருவாய் ரூ 2.08 கோடியே ஆகும்.

### பணியாள நலன்.

11.1 வனத்துறையும், வனத்தோட்டக் கழகங்களும் நிருவகித்து வரும் பகுதிகளில் மேம்படுத்தப்பட்ட உற்பத்தி குறித்தும் உற்பத்தித் திறன் பற்றியும் கவனம் செலுத்துகையில் பணியாளர்—தொழிலாளர் நலன் குறித்தும் தனிக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. வனச்சரகர்களுக்குச் சீருடைகள் வழங்குதல், தகுதி பெற்ற காவலாட்கள் அனைவரையும் முறையான பணியின் கீழ்க் கொண்டு வருதல் ஆகிய நலப் பணிகள் நடந்துள்ளன. அரசு ரப்பர் தோட்டங்களிலும், தேயிலைத் தோட்டங்களிலும் உள்ள பணியாளர்களுக்குப் போதிய மருத்துவ வசதிகள் அளிக்க வகை செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்காக அனுமதிக்கப்பட்டுள்ள 2,213 வீடுகளில், சுமார் 2,000 வீடுகளைக் கட்டி முடித்ததால், வீட்டு வசதித் தேவைகள், பெரும்பாலும் நிறைவு பெற்றுள்ளன. ஆயினும், 1982—83ஆம் ஆண்டில் மேலும் 475 வீடுகள் கட்டக் கருதப்பட்டுள்ளது. இது மூன்றாம் கட்டப் பணிகளில் உள்ளடங்கும். ரப்பர் தோட்டத்தில் படிப்படியாகக் குடியிருப்பு வசதிகள் செய்து தரப்படுகின்றன. இது வரையில் 964 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 465 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. வனத்துறையில் களப் பணியாளர்களுக்கு ரூ. 80 இலட்சம் செலவில் மூன்று ஆண்டு காலத்தில் வீட்டு வசதியளிக்கும் சிறப்புத் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்செயல் நோக்கத்திற்காக 1981—82 ஆம் ஆண்டில் ரூ. 24.39 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இது 1982—83 ஆம் ஆண்டில் ரூ. 35.63 இலட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. 1982—83 ஆம் ஆண்டில் 53 வீடுகள் கட்டப்படும்.

11.2 ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து வாழ்வளிப்பதில் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் தொடர்ந்து முதலிடம் வகிக்கிறது. இது வரையில் சுமார் 2,200 குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. 1982 ஜூன் வரையில் மேலும் 105 குடும்பங்களையும் 1983 ஜூன் திங்களுடன் முடிவடையும் ஆண்டில் மேலும் 253 குடும்பங்களையும் வேலை வாய்ப்பு அளித்து ஏற்கத் கருதப்

பட்டுள்ளது. ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு அரசு ரப்பர் தோட்டங்களில் இதுவரையில் புதுவாழ்வு அளிக்கப் பட்ட குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை 246 ஆகும்.

நாற்றுகள் விற்பனை

12. செடி நாற்றுகளை வாங்குவதில் மக்கள்காட்டும் ஆர்வத் தால் வனத்துறை இந்நாற்றுகளை வழங்கும் திட்டத்தில் ஊக்கம் பெற்றுள்ளது. 1981-82 ஆம் ஆண்டில் மாநில திட்டத் தின் கீழ் 36.42 இலட்சம் செடி நாற்றுகள் வழங்கப்பட்டுள்ளன. மத்திய அரசு உதவியுடன், செயலாக்கப்பட்டு வரும் திட்டம், சுவீடன் நாட்டு நிதி உதவியுடன் நிறைவேற்றப்பட்டு வரும் திட்டம் போன்றவற்றையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் 110 இலட்சத்திற்கும் அதிகமான நாற்றுகள் விற்பனை செய்யப் பட்டுள்ளன. இந்த நிலை தொடர்ந்து நீடிக்கும்.

பழங்குடியினர் மேம்பாடு.

13. இம்மாநிலத்தின் பல்வேறு இடங்களிலும் மொத்தம் 41 இனத்தைச் சேர்ந்த பழங்குடியினர் வாழ்ந்து வருகின்றனர். பழங்குடியினரின் மொத்த எண்ணிக்கை சுமார் 3.6 இலட்சம் ஆகும். இது, இம் மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 0.8 சதவீதமே ஆகும் என்ற போதிலும் அவர்களுடைய நலத்திலும் பொருளாதார மேம்பாட்டிலும் அரசு தனிப்பட்ட வகையில் கவனம் செலுத்தியுள்ளது. அரசின் இந்நோக்கத்தை நிறை வேற்றும் வகையில் ஏராளமான திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வட ஆற்காடு, தென்னாற்காடு, சேலம், தர்மபுரி, திருச்சி மாவட்டங்களில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வனத்துறை பழங்குடி யினர் வாழும் பகுதியிலுள்ள பலநோக்கு சங்கங்களுக்கு (Lamp சங்கங்கள்) காடுபடு சிறு பொருட்களைப் பெரும் அளவில் சலுகை விலையில் பழங்குடியினருக்கு வழங்கி வருவதோடு, பயிரிடு வதற்கு நிலங்களை குத்தகைக்கு விடுதல், பணிக்கேற்ற ஆள் சேர்க்கும்போது தேவையான உடற் கட்டமைப்பு குறித்த தகுதி களைத் தளர்த்துதல், 15 தொடக்கப் பள்ளிகளையும், 2 உயர் நிலைப் பள்ளிகளையும் நடத்துதல், இப்பள்ளிகள் சிலவற்றில் மாணவர் இல்ல வசதிகளை அளித்தல், 19 தொழிலாளர் கூட்டுற வுச் சங்கங்களுக்கு முன்னுரிமை அளித்தல் போன்று பழங்குடி யினருக்கு தனிச் சலுகைகளை அளித்து வருகிறது. பழங் குடியினர் வாழும் பகுதிகளில் ஆசிரியர்கள், பள்ளி செல்லும் குழந்தைகள் ஆகியோருக்கான அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டு வரு கின்றன. 1982-83 ஆம் ஆண்டில், இத்திட்டங்களுக்காக ரூ. 46.52 இலட்சம் நிதி ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது.



போக்குவரத்து வசதிகள்.

14. வனப்பகுதிகளில் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்து வது பற்றி மூன்று கோணங்களிலிருந்து கருதிப் பார்க்க வேண்டி யுள்ளது. வனத்தை எம்முறையில் பாதுகாக்க வேண்டுமோ அதனைச் செய்ய வனத்துறைப் பணியாளர்கள் எளிதில் இயங்கு வதற்கு வசதியாக இருப்பதற்கு அவசியமான, திறம்பட்ட போக்குவரத்து வசதிகளை முதற்கண் ஏற்படுத்த வேண்டும். இரண்டாவதாக, பொருளாதார மேம்பாடு அடையாத வனங் களின் மையப் பகுதிகளில் வாழும் பழங்குடியினர், பொருளாதார அளவில் நலிந்த மக்கள் பிரிவினர் ஆகியோரை வனப் பகுதிகளுக்கு வெளியே உள்ள வளர்ச்சி நிலையங்களுடன் தொடர்பு கொள்ள வசதி ஏற்படுத்தி, நாட்டின் முன்னேற்றப் பாதையில் அவர்களை யும் இணைத்துச் செல்ல வேண்டும். மூன்றாவதாக, சமூக விரோத சக்திகள், வனச் செல்வத்தையும் வன விலங்குகளையும் கொள்ளை கொண்டு செல்வதற்கு இச்சாலைகள் வாய்ப்பு அளித்து விடக் கூடாது. இவையனைத்தையும் கருத்தில் கொண்டு, வனப்பகுதிகளில் சாலைகளை முன்னெச்சரிக்கையோடு அமைக்க வேண்டும். அவ்வாறு அமைத்தால், மேற்கூறிய மூன்று முனைப் பணிகளையும் உரிய முறையில் செயற்படுத்த முடியும். இதனைக் கருத்திற் கொண்டு ஒவ்வோராண்டும் சாலைகள் அமைக்கப்பட்டு வருவதோடு தற்போதுள்ள சாலைகளும் மேம்படுத்தப்பட்டு வரு கின்றன. 1980-81, 1981-82 ஆம் ஆண்டுகளில் மொத்தம் 64.14 இலட்சம் ரூபாய் செலவில் 10 சாலைகள் அமைக்க எடுத் துக் கொள்ளப்பட்டன. 1982-83 ஆம் ஆண்டில், 30 கிலோ மீட்டர் நீள சாலைகளை அமைப்பதற்கும் மேம்படுத்துவதற் கும், ரூ. 39.51 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

செயல் திட்டம், ஆராய்ச்சி, வள வாயில்களை ஆய்வு செய்தல் திட்டமிடுதல், மதிப்பீடு செய்தல்.

15. செயல் திட்டங்கள், வனங்களை நிருவகிப்பதற்கு அடிப் படையாக அமைகின்றன. ஒவ்வொரு கோட்டமும், அனு மதிக்கப்பட்ட செயல் திட்டங்களின்கீழ் வருகின்றன. இத் திட்டங்கள் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப்படு கின்றன. காடுகளை மீண்டும் உருவாக்குதல், அவற்றைப் பயன் படுத்தல், வன நிருவாகத்தின் ஏனைய அனைத்துக் கூறுகள், ஆகியவற்றிற்கு குறிப்பிட்ட முக்கியத்துவத்தை இச்செயல் திட் டங்கள் அளிக்கின்றன. பல்வேறு தட்ப வெப்ப நிலை கள், மண்வள நிலைமைகள், ஆகியவற்றுக்கிணங்க வளர்க்கத் தக்க சிறந்த மர வகைகள், காடு வளர்த்தற்குரிய மிகச் சிறந்த தொழில் நுட்பங்கள் ஆகியவற்றைக் கண்டறியும் நோக்குடன் வன வளர்ப்பு, அது தொடர்பானவை, ஆகியவற்றின் பல்வேறு கூறுகள் பற்றி ஆய்வு செய்ய இத்துறையின் ஆராய்ச்சித் திட்டம் கருதுகிறது. இத்திட்டத்திற்கான 1981-82 ஆம் ஆண்டில் 7.5 இலட்சம் ரூபாய் ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்

நடவடிக்கைகள் 1982–83 ஆம் ஆண்டிலும் 5,53 இலட்சம் ரூபாய் செலவில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். வன வளங்களைத் திறம்படவும், சீராகவும் பயன்படுத்த வசதி செய்வதற்கு வளவாயில்களின் மூலம் கிட்டும் பொருள் நிலை குறித்த விரிவான பட்டியல் தயாரிக்கப்படவிருக்கிறது. வன வளர்ப்பின் பல்வேறு கூறுகள் பற்றித் திட்டமிடல், புள்ளி விவரம் சேகரித்தல் மதிப்பிடுதல் பிரிவு புள்ளி விவரங்களைச் சேகரிக்கிறது.

அழிந்த காடுகளில் மீண்டும் மரங்களை வளர்த்தல்.

16. அழிந்த காடுகளில் மீண்டும் மரங்களை வளர்த்து, வனங்களில் உற்பத்தித் திறனை மேம்படுத்துவது அரசின் கொள்கையாகும். இவ்வாறாக 1980–81 ஆம் ஆண்டில் ரூ. 37.20 இலட்சம் செலவில் சுமார் 2,850 எக்டேருக்கும் அதிகமான பரப்பளவில் மீண்டும் காடுகள் வளர்க்கப்பட்டன. 1981–82 ஆம் ஆண்டில் ரூ. 37,45 இலட்சம் செலவில் 3,000 எக்டேர் பரப்பளவில் காடுகள் வளர்க்கப்பட்டன. 1982–83 ஆம் ஆண்டில் 2,860 எக்டேர் பரப்பளவில் காடுகளை வளர்க்க 40.53 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

ஏனைய இனங்கள்.

17.1 இத்துறையின் பிற பணிகளாக முன்னாள் ஜமீன் வனப் பகுதிகளை ஒதுக்கக் காடுகளாக அமைத்து, வன வாயில்களை ஒருங்கிணைப்பது, வெட்டு மரங்களையும் காடுபடு பொருட்களையும் கொண்டு செல்வதற்கு மேம்படுத்தப்பட்ட வசதிகளுக்கு வகை செய்தல், மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பங்களையும் மரங்களை வெட்டும் பணிகளையும் மேற்கொள்ளுதல் காடுகள் குறித்த தகவல்களைப் பிரச்சாரத்தின் மூலம் பொது மக்களுக்குத் தெரிவித்தல் ஆகியவை நடந்து வருகின்றன.

17.2. வைகை மற்றும் மேட்டூர் ஸ்டான்லி நீர்க்கோள் பகுதியில் மண் அரிப்பினை தடுத்து மண் வளத்தினை பாதுகாப்பதற்கு 1982–83 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு ரூ. 73.75 இலட்ச செலவில் 5,400 எக்டேர் பரப்பில் மரங்கள் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

வன விலங்கு — இயற்கை பாதுகாப்பு.

18.1. வன விலங்குகளை காத்து வாழ்விப்பதில் வன விலங்குகள் உய்விடங்கள் முதன்மை பெறுவதோடு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் கவினார்ந்த நிலையங்களாகவும் திகழ்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். நமது நாட்டில் உள்ள முக்கியமான உய்விடங்களில் சில தமிழகத்திலேயே உள்ளன. அவை முதுமலை வன விலங்குகள் உய்விடம், வேடந்தாங்கல் பறவைகள் உய்விடம், கோடிக்கரை, களக்காடு உய்விடங்கள் முதலியவையாகும். இவற்றுள் நகர எல்லைக்குள் கிண்டி தேசியப் பூங்கா பெருமை மிக்க இடத்தை வகிக்கிறது. நல்ல வசதிகளையுடைய, இம்மாதிரியான பூங்கா



நாட்டிலேயே வேறு எங்கும் இல்லை. இந்நிலப் பரப்பினையும் உய்விடங்களையும் முறையாக மேம்படுத்தவும், பராமரிக்கவும் புதிய பகுதிகளை உருவாக்கவும் கருதப்பட்டுள்ளது.

முதுமலை உய்விடம்.

18.2. முதுமலை உய்விடத்தைச் செம்மைப்படுத்துவதற்காக 190 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு, ஒப்புதலுக்காகவும், நிதியுதவிக்காகவும் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆனால், ஒவ்வொரு ஆண்டிலும் சில அடிப்படை மேம்பாட்டுத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

வேடந்தாங்கல் பறவைகள் உய்விடம்.

18.3. வேடந்தாங்கல் பறவைகள் உய்விடத்தைப் பொறுத்தவரையில், அதன் எதிர்காலம் குறித்து கவலைகள் தெரிவிக்கப்பட்டதற்கு மாறாக, இவ்வாண்டில் அங்கு எண்ணற்ற பறவைகள் வந்துள்ளன என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஏரியில் கடம்பை மரங்களை நடுவதற்கும், கூடு கட்டத் தேவையான பொருட்களுக்கு வகை செய்வதற்கும் எடுத்துக் கொண்ட முயற்சிகள் வெற்றி பெற்றுள்ளன. மேலும், இந்த ஏரியில் நீண்ட காலத்திற்கு நீர் மட்டம் குறையாமல் பார்த்துக் கொள்ளவும் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவும் கருதப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளினால் உய்விடத்திற்கு வரும் பறவைகளின் எண்ணிக்கை மேலும் உயரும். வேடந்தாங்கல் உய்விடத்திற்கு அளிக்கும் முக்கியத்துவத்தால், இதன் அருகில் உள்ளதும், இதற்கு நிகராக எழிலுடையதுமான கரிக்கிளி என்ற இடம் உரிய புகழ் அடையவில்லை. இவ்விடத்தை உய்விடமாக உருவாக்குவதற்கும், பொது மக்கள் அதனைக் கண்டு மகிழ்வதற்கும் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கவும், உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

கோடிக்கரை உய்விடம்.

18.4. தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கோடிக்கரை உய்விடம் கடம்பமான் இனம் வளர்ந்து வரும் சில உய்விடங்களில் ஒன்றாகும். 1980—81 ஆம் ஆண்டில் ரூ. 2.2 லட்சம் செலவிலும் 1981—82 ஆம் ஆண்டில் ரூ. 1.24 இலட்சம் செலவிலும் இந்த உய்விடம் மேம்படுத்தப்பட்டது. 1982—83 ஆம் ஆண்டிலும் மேம்பாட்டுப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். மேலும், இவ்விடம் சதுப்பு நிலப்பகுதியாதலால், ஏராளமான நீர்ப் பறவைகளும், நீரில் நடக்கும் பறவைகளும் இங்கு தங்குவதற்காக வருகின்றன. இச் சதுப்பு நிலங்களில் பொருளாதார வளர்ச்சியை முன்னிட்டு, பெரு மளவில் இங்கு உப்பு தயாரிப்பு வசதிகளை அமைப்பது அவசியமாக இருப்பினும், கடலுக்கும் நீரோடைக்கும் அருகில் உள்ள இப்பகுதியைப் பறவைகள் உய்விடமாக வரையறுக்கவும் கருதப்பட்டுள்ளது.

இது, தொடக்கத்திலேயே குறிப்பிட்டவாறு பொருளாதார வளர்ச்சியும் பாதுகாப்பு நடவடிக்கைகளும் ஒன்றுக் கொன்று விலகிச் செல்ல வேண்டிய அவசியமில்லை என்ற அரசின் அணுகு முறைக்குட்பட்டதாகும்.

களக்காடு உய்விடம்.

18.5. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள களக்காடு உய்விடம், சிங்கவால் குரங்குகள் வளர்ந்து வரும் ஒரு பகுதியாகும். 1980 81 ஆம் ஆண்டில் ரூ. 1.24 இலட்சமும், 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 10.73 இலட்சமும் செலவிட்டு இந்த உய்விடம் மேம்படுத்தப்பட்டது. 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 11.28 இலட்சம் தொகை ஒதுக்கவும் கருதப்பட்டுள்ளது.

முண்டந்துறை உய்விடம்.

18.6. பெரிய அளவு பரப்புள்ள முண்டந்துறை உய்விடம், அரசின் சிறப்பான கவனத்துடன் தொடர்ந்து பராமரிக்கப் பட்டு வருகிறது.

நீர்த்தேக்கங்களில் 'மக்கர்' இன (Mugger) முதலைகளை வளர்த்தல்

18.7. சாத்தனூர் நீர்த்தேக்கத்தில் 'மக்கர்' இன முதலைகளை வளர்க்கும் திட்டம் 1980—81 ஆம் ஆண்டில் ரூ. 3.77 இலட்சம் செலவில் வெற்றிகரமாகச் செயல்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கென, 1981—82 ஆம் ஆண்டில் மேலும் ரூ. 1.03 இலட்சம் செலவு செய்யப்பட்டது. இத்திட்டத்தில் தொடர்ந்து முழுக் கவனம் செலுத்தப்படும். இம் மாநிலத்தில் கிடைத்த சில விவரங்களின்படி, தமிழ் நாட்டில் முதலை வளர்ப்புக்கு நல்ல வாய்ப்பு உள்ளதென்று தெரிகிறது. இத்திட்டம் அமராவதி, பவானிசாகர் முதலிய இடங்களுக்கும் நீட்டிக்கப் பட்டுள்ளது.

கடல் ஆமைகளைப் பாதுகாத்தல்.

18.8. கடல் ஆமைகள் அழிந்து வருகின்றன. இக்கடலாமைகள் குஞ்சு பொரிக்கும் கால அளவில், அதாவது சனவரி முதல் மார்ச்சு திங்கள் வரை, தகுந்த பாதுகாப்பு அளிப்பதில் மத்திய அரசும், மாநில அரசும் மிக்க அக்கறை கொண்டுள்ளன. இக் கடலாமை முட்டைகள் சேதம் அடைவதினின்றும், களவு போவதினின்றும் தடுப்பதற்காகவும், கரையோரத்திலுள்ள குஞ்சு பொரிப்பு நிலையங்களுக்கு எடுத்துச் செல்வதற்கும் தனிப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நீலகிரி மலை ஆடுகள் (உய்விடம்).

18.9. நீலகிரி மலை ஆடுகளைப் பாதுகாப்பதற்காக ரூ. 6.42 இலட்சம் செலவில் உய்விடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.





குரும்பப்பட்டியல் மேம்பாட்டுத் திட்டம்.

18.10. சேலம் குரும்பப்பட்டியில் தற்போதுள்ள பூங்காவில் குழந்தைகள் பூங்கா, தாவரயியல் தோட்டம், மான் காப்பிடம், உய்விடம் ஆகியவற்றை அமைக்கவும் கருதப்பட்டுள்ளது இதற்காக 1982—83 ஆம் ஆண்டில் ரூ. 2.31 இலட்ச ரூபாய் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஏனைய திட்டங்கள்.

18.11. பூங்காக்களும், உய்விடங்களும், செல்வர்களுக்கும் மேல் மட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கும் மட்டுமே உரியது என்ற நிலையை மாற்றுவதே இவ்வரசின் முக்கிய நோக்கமாகும். இவ்வசதிகளைப் பரவலாக்கி எளிய மக்களுக்கும் கிடைக்கச் செய்யும் நமது முயற்சிக்கேற்ப, திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள மேல் அணைக்கட்டில் முக்கொம்பு, தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள பிச்சாவரம் ஆகிய இடங்களில் மான் உய் விடங்களை அமைக்கவும் கருதப்பட்டுள்ளது.

18.12. இத்திட்டங்களில் சிலவற்றைச் செயற் படுத்துவதற்காக, மத்திய அரசின் உதவியை நாடியுள்ளோம் என்பதையும் வன விலங்குப் பாதுகாப்பு, இயற்கைப் பாதுகாப்பு தொடர்பான நமது திட்டங்களுக்கு சாதகமாக மத்திய அரசு பதில் அளித்துள்ளது என்பதையும் மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வண்டலூர் விலங்ககம்.

19. சென்னை மாநகரிலிருந்து வண்டலூருக்கு விலங்ககத்தை மாற்றும் திட்டத்தை மூன்று கோடி ரூபாய் செலவில் நாம் மேற்கொண்டுள்ளோம் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். இப்புதிய விலங்ககம் வனத்துறையினரால் நிருவகிக்கப்படும். விலங்ககத்திற்கு தேவையான நிலத்தில் ஒரு பகுதி கையகப்படுத்தப்பட்டு மரங்களும் நடப்பட்டு விட்டன. திட்டத்தின் பிற கட்டிடப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. 'விலங்ககத்தை வேறு இடத்திற்கு மாற்றுவது' என்றால் தற்போதுள்ள நிலையிலேயே மாற்றுவது என்று தவறாகப் பொருள் கொள்ளக் கூடாது. விலங்குகளுக்கு ஏற்ற வாறு இயற்கைச் சூழலும், எழிலும் வாய்ந்த மேடு பள்ளங்களுடன் அமைந்த 362 எகடேர் கொண்ட நிலப் பரப்பில் இது விளையும்; இந்த விலங்ககத்தில் விலங்குகள் தமக்கே வாய்ந்த இயற்கைச் சூழலில் உலாவி மகிழ வகை செய்யப்படும். அடுத்துள்ள குன்றுகளில் சிங்கம், புலி காப்பிடம் அமைக்கப்படவுள்ளது. இந்த விலங்குக் காட்சியகத்தின் சிறப்புக் கூறாகும்.

பொது மக்கள், கயிற்றுப் பாலங்களில் சென்று இவ்வன விலங்குகளைக் காண்பதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்படும். நம் நாட்டிலேயே இணையற்ற விலங்ககமாகவும், வெளி நாடுகளில் உள்ள சிறந்த விலங்ககங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய வகையில் இந்த வன விலங்ககம் திட்டமிட்டு அமைக்கப்பட்டு வருகிறது. இதன் பணிகளுக்காக 1981–82 ஆம் ஆண்டில் ரூ. 38.25 இலட்சம் நிதியொதுக்கப்பட்டது. 1982–83 ஆம் ஆண்டில் இது ரூ. 54.70 இலட்சமாக உயர்த்தப்படும்.

### நிருவாக அமைப்பு.

20. வனத்துறை ஒரு காலத்தில் முறைப்படுத்தல் மற்றும் பாதுகாப்புப் பணிகளை நிருவகிக்கிற ஒரு துறையாகவே கருதப்பட்டது. மலைத் தோட்ட மேம்பாடு வளர்ச்சிப் பணிகள், வனவிலங்குப் பாதுகாப்பு, இயற்கைப் பாதுகாப்பு ஆகிய பணிகளுக்கு கற்பனை வளத்துடன் கூடிய செயலாற்றல் தேவை. இதற்கு நிருவாக அமைப்பைக் கண்காணித்து தேவைகளுக்கேற்ப மாற்றியமைக்க வேண்டியது அவசியம். இத் தேவைகளைக் கருத்திற் கொண்டு துறையின் அமைப்பு மேம்படுத்தப்பட்டுள்ளது. சுவீடன் நாட்டின் அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவன நிதியுதவியுடன் சமூக நலக்காடு வளர்ப்புத்திட்டங்களைச் செயற் படுத்த நான்கு தனி வட்டங்களும், 6 புதிய கோட்டங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. திட்டங்கள், தனிப் பட்டவையாகக் கருதப்படாமல் ஒருங்கிணைந்து அமைய வேண்டுமாதலால், காடு வளர்ப்பு விரிவாக்கக் கோட்டங்களும், சுவீடன் நாட்டின் அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் உதவி பெறும் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. மொத்தத்தில், இவ்வமைப்பு கூடுதல் வனத்துறைத் தலைவரின் தலைமையில் நான்கு வட்டங்களையும் 17 கோட்டங்களையும் கொண்டதாக இருக்கும். இவற்றுடன் மத்திய அரசின் ஆதரவுப் பெற்ற துறைகளில், கிராமப் புற விறகு மர வளர்ப்பு திட்டத்தை நிறைவேற்ற 4 சிறப்புக் கோட்டங்கள் நிருவாக முறையில் (திட்ட வகையில் அல்லாமல்) சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்துடன் இணைக்கப்படும். கொடைக்கானல் வட்டத்தின் பணிகளை, திண்டுக்கல்லில் உள்ள மாவட்ட வன அதிகாரி தற்போது மேற்பார்வையிடுகிறார். மேற்பார்வை நிருவாகத்தை மேம்படுத்தும் பொருட்டு, கொடைக்கானலில் அதன் தலைமையிடமாக ஒரு புதிய பிரிவு தொடங்கப்படவுள்ளது. தேனியில், ஏலக்காய் வளர்ப்புக்கென ஒரு தனிப் பிரிவு ஒன்றும் அமைக்கப்படும். திருச்சிராப்பள்ளி, கிருஷ்ணகிரி ஆகிய இடங்களைத் தலைமையிடங்களாகக் கொண்ட தீவிர காடு வளர்ப்பு பிரிவுகள் அழிந்த காடுகளை மீண்டும் வளர்ப்பதில் ஈடுபட்டுள்ளன.





### திட்ட ஒதுக்கீடு.

21.1. மேற் குறிப்பிட்ட திட்டங்களில் பல, மாநில அரசுத் திட்டங்களாகச் செயற் படுத்தப்பட்டுள்ளன. சில திட்டங்கள் மத்திய அரசின் ஆதரவு பெற்ற திட்டங்களாக உள்ளன. தேயிலை-ரப்பர் தோட்டங்களை வளர்க்கும் திட்டத்தின் ஒரு பகுதிக்கு புதுவாழ்வுத் திட்டங்களின் கீழ் நிதியுதவி கிடைக்கிறது. ஏனெனில், இத்தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களில் பெரும்பான்மையோர் ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியவர்களாவர். கிராமப்புற விறகு மரத் தோட்டங்கள் வறட்சிப் பாங்கான பகுதித் திட்டம், மேற்கு மலைத் தொடர் மேம் பாட்டுத் திட்டம் ஆகியவை மத்திய அரசு ஆதரவு பெற்ற திட்டங்களாகச் செயற்படுகின்றன.

21.2. மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கற்பூரத் தைல மரம் போன்ற மரக்கூழ் தயாரிப்பதற்கான மரங்களை வளர்க்கும் பணியும், ரப்பர், தேயிலை, இலவங்கம், பயிரிடும் பணியும் நடை பெறுகிறது.

இது குறித்த விவரங்கள் வருமாறு :

| | 1980–81 (கணக்குகள்) | 1981–82 (திருத்த வரவு–செலவுத் மதிப்பீடு). | 1982–83 திட்ட மதிப்பீடு) |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| கற்பூரத் தைலமரம், கூழ்மரம் முதலியன | 9.55 | 12.00 | 5.57 |
| ரப்பர் .. | 35.27 | 44.00 | 44.53 |
| தேயிலை .. | 12.57 | 34.13 | 24.79 |
| இலவங்கம் .. | 8.29 | 7.09 | 10.41 |

### மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (மாநில திட்டம்)

21.3. கற்பூரத் தைல மரம், மிலாறு மரம், நீலகிரித் தைல மரம், ' பைன் ' மரம் போன்ற தொழிற்சாலைகளுக்குத் தேவையான மரங்களை வளர்த்தல், கிராமப் புறங்களிலுள்ள சுதரிப் நிலங்களில் பயிர் செய்தலை மேம்படுத்தல் போன்ற திட்டங்கள் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளன. 1980–81, 1981–82-இல்' ஒன்பது சாலைகள் அமைக்க அங்கீகாரம் அளிக்கப்பட்டு அவைகள் வனத்துறையாலும் நெடுஞ்சாலை, கிராமப் பணித்துறையினராலும் மேற் கொள்ளப் பட்டன. 505 எக்டேரில், 1982–83 இல் காடுகளும் ஏற்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக, வரும் நிதியாண்டில் ரூ. 27.04 இலட்சம் செலவிடப்படும்.

21.4. இத்துறையின் பல்வேறு திட்டங்களுக்காகச் செலவிடப்பட்ட தொகையும், நிதி ஒதுக்கீடும் குறித்த விவரங்கள் வருமாறு :

| (1) | 1980 81 (கணக்குகள்) (2) | 1981 82 (திருத்த மதிப்பீடு). (3) | 1982 83 (வரவு செலவுத் திட்ட மதிப்பீடு.) (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| கற்பூரத் தைலமரக், கூழ்மரம் முதலியன .. | 9.55 | 12.00 | 5.57 |
| ரப்பர் .. .. .. .. .. | 35.27 | 44.00 | 44.53 |
| தேயிலை .. .. .. .. | 12.57 | 34.13 | 24.79 |
| இலவங்கம் .. .. .. .. | 8.29 | 7·09 | 10.41 |



| (1) | 1980-81 (கணக்குகள்) (2) | 1981 82 (வரவு செலவுத் திட்ட மதிப்பீடு.) (3) | 1981 82 (திருத்த மதிப்பீடு.) (4) | 1982 83 (வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு.) (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1. மாநிலத் திட்டம் .. .. | 623.42 | 764.95 | 1,103.71 | 1,351.82 |
| 2. மண்வளப் பாதுகாப்புத் திட்டம் | 18.78 | 57.88 | 62.45 | 73.75 |
| 3. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள். | 64.95 | 6.50 | 124.07 | 137.31 |
| 4. மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம். | 101·55 | 92.41 | 97.22 | 85.39 |
| 5. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம். | 23.65 | 60.61 | 23.49 | 27.04 |
| மொத்தம் .. | 832.35 | 982.35 | 1,410.94 | 1,675.22 |

22. வரவு செலவுத் திட்டம் :

வனத்துறையின் வரவு செலவுத் திட்டம் குறித்த விவரங்கள் வருமாறு :

| கணக்கின் தலைப்பு. | 1980 81 (கணக்குகள்) | 1981 82 (வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு). | 1981 82 திருத்த மதிப்பீடு). | 1982 83 (வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு). |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 259. பொதுப்பணிகள் .. .. | 0.02 | 0.10 | 0.10 | 0.10 |
| 288. சமூகப் பாதுகாப்பும் நலனும் | 28.86 | 10.98 | 22.99 | 11.72 |
| 307 மண் வள-நீர்வள பாதுகாப்பு | 12 77 | 12·04 | 15.48 | 16·55 |
| 308. பகுதி மேம்பாடு .. .. | 2·88 | 5·67 | 6·49 | 6·59 |
| 313. ஏ காட்டுவளம் .. .. | 691·80 | 679·52 | 871·89 | 895·75 |
| 320 தொழில்கள் .. .. | 0·51 | 1·07 | 0·63 | 0·95 |
| 488 சமூகப் பாதுகாப்பு நலன் குறித்த மூலதனச் செலவு | 21.80 | 26·80 | 28.88 | 30·35 |
| 506. ஏ. சிறுபாசனம் மண்வளப் பாதுகாப்பு, பகுதி மேம்பாட்டு குறித்த மூலதனச் செலவு. | 72.51 | 106.94 | 72.00 | 85.86 |
| 513. ஏ. காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு. | 627.53 | 781.75 | 1,204.76 | 1,311.07 |
| 256. நுகர்பொருள் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | .. | 0.01 | 7.10 | 22.60 |
| மொத்தம் .. | 1 453.68 | 1,624.88 | 2,230.32 | 2,381.54 |

23. காடு வளர்ப்பு பெருமளவில் தொழிலாளர்கள் ஈடுபடும் ஒரு பணியாக இருப்பதால். இது அதிக அளவில் வேலை வாய்ப்பை அளிக்கிறது. இத்துறைப் பணிகள் வாயிலாக பழங் குடியினருக்கும், சமூகத்தின் நலிந்த பிரிவினர்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கிறது. இம்மாநிலத்திலுள்ள சில பெரிய தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் அடிப்படைப் பொருள் கள் வழங்கவும் பொது மக்களுக்குத் தேவைப்படும் எரி பொருள்களை (விறகுகளை) வழங்கவும் வனத் தோட்டங்கள் பயன்படுகின்றன. பல தரப்பட்ட காடுபடு சிறு பொருள்கள் பெருமளவில் வேலை வாய்ப்பை ஏற்படுத்தக்கூடிய வழிகளில் மக்களைச் சென்றடைகின்றன. சுற்றுப்புற சூழலைப் பாது காத்தல், இயற்கை வளத்தைப் பாதுகாத்தல், வன விலங்கு களைப் பாதுகாத்தல் ஆகிய பணிகள், பொருளாதார வளர்ச்சி யுடன் செயற்பட வேண்டியவையாகும். காடுகளில் உள்ள பல இடங்கள், மக்கள் ஓய்வு எடுக்கவும், இளைப்பாறவும் ஏதுவா யுள்ளன. மேலும் அவை அன்றாட வாழ்க்கையில் கடும் உழைப்பில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் மக்களுக்கு சோர்வை நீக்கி, புத்துணர்ச்சி ஊட்டுகின்றன. வனத் துறை, மனிதனை இயற்கைச் சூழலில் ஈடுபடுத்தி, தமிழ் நாட்டில் பசுமைப் புரட்சியைத் தோற்றுவிக்கும் முயற்சியை மேற் கொண்டுள்ளது. இந்நோக்கம் நிறைவேற, அனைத்து தரப்பினரின் உதவியும், உடலுழைப்பும் தேவைப்படுகின்றது.

### கோரிக்கை எண். 47.

### செய்தி—மக்கள் தொடர்புத் துறை—கொள்கை விளக்கக் குறிப்பு.

செய்தி—மக்கள் தொடர்புத்துறை அரசுக்கும் பொது மக்கள் மற்றும் பத்திரிகைத் துறைக்கும் இடையே தொடர்புகளை வளர்க்கும் ஒரு பொதுத் தொடர்பு அமைப்பாக இயங்கி வருகி றது. அரசின் கொள்கைகள் பல்வேறு அரசுத் துறைகளின், திட்டங்கள், செயல்கள், சாதனைகள் ஆகியவை பற்றி பத்திரிகை களுக்கான செய்திக் குறிப்புக்கள் அளித்தல் மற்றும் திரைப்படங் கள், பொருட்காட்சிகள், நாடகம், கலைநிகழ்ச்சிகள் மற்றும் நூல் வெளியீடுகளாக இத்துறையின் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன.

அரசின் பல்வேறு துறைகளும், அரசின் பொறுப்பிலுள்ள பல் வேறு கழகங்கள், வாரியங்கள், நிறுவனங்கள் ஆகியவைகளும் தருகின்ற விளம்பரங்கள் அனைத்தும் ஒருமுகப்படுத்தப்பெற்று இந்தத் துறையின் வாயிலாக பத்திரிகைகளுக்கு வழங்கப்படு கின்றன. இத்துடன் செய்தி—மக்கள் தொடர்புத் துறை பல விளம்பரங்களைத் தானே தயாரித்து அரசின் சார்பில் வெளி யிடுகிறது. இந்த விளம்பரங்கள் பொதுவாக அரசின் கொள்கை களையும் திட்டங்களையும் பொது மக்களுக்கு விளக்கும் முறை யில் அமைகின்றன.



### விழாக்கள்

நாட்டு மக்களுக்கு வரலாற்று நிகழ்ச்சிகளையும் மக்களுக் காகப் பாடுபட்ட தேசத் தலைவர்களின் பெருமைகளையும், எடுத்து விளக்குவதற்காக விழாக்களையும் பெருந்தலைவர்களின் பிறந்த நாள், விழா நினைவு நாள் நிகழ்ச்சிகளையும் இத்துறை நடத்துகின்றது.

வழக்கம் போலவே, 1981-82 ஆம் ஆண்டிலும் மகாகவி பாரதி யார், பாவேந்தர் பாரதிதாசன், காயிதேமில்லத், பெருந் தலைவர் காமராசர், வ. உ. சிதம்பரனார், பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார், அண்ணல் காந்தியடிகள், டாக்டர் அம்பேத் கார், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், ஜவஹர்லால்நேரு, இராஜாஜி, நேதாஜி, நாமக்கல் கவிஞர், இராமலிங்கனார், செய் குத்தம்பி பாவலர், வ. வே. சுப்பிரமணியம், டி. கே. சிதம்பர நாதனார், செட்டி நாட்டரசர், அண்ணாமலையார் ஆகியோரின் விழாக்கள் கொண்டாடப்பட்டன. தீயணைப்புத் தொண்டு நாள் சித்திரை முழு நிலவு விழா, வீரபாண்டிய கட்டபொம்மன் விழா, சுதந்திர தின விழா, மனித உரிமை நாள் ஆகியவையும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன.

மேலும் தமிழ் மாநிலம் அமைந்த வெள்ளி விழா ஆண்டு 1—11—1981 அன்று கொண்டாடப்பட்டது. எல்லைப் போராட் டத்தில் ஈடுபட்டு உயிர் நீத்த தியாகிகளின் குடும்பங்கள் ஒவ் வொன்றுக்கும் ரூபாய் 10,000 வீதம் 13 பேர்களுக்கு வழங்கப்பட் டது. எல்லைப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகளின் குழந் தைகளுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை கல்வியில் சலுகை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

### மகாகவி சுப்ரமனி பாரதியாரின் நூற்றாண்டு விழா :

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் நூற்றாண்டை 1981ஆம் டிசம்பர் மாதம் 11-ம் தேதி முதல் 1982 டிசம்பர் மாதம் 11-ஆம் தேதி முடிய மிகச் சிறந்த அளவில் கொண்டாடுவது என்று தமிழக அரசு முடிவு செய்தது. துவக்க விழா டிசம்பர் மாதம் 11, 12, 13 நாட்களில் திருநெல்வேலி மாவட்டம் எட்டைய புரத்தில் நடைபெற்றது. துவக்க விழாவிற்குப் பிறகு, நிறைவு விழா நாளான 1982 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11-ம் தேதிக் குள் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்கள், மாநிலத்திலுள்ள எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும், நகராட்சிகளிலும், மற்ற மாநிலத் தலைநகரங்களிலும் டெல்லி மற்றும் சில குறிப்பிட்ட அயல் நாட்டுத் தலைநகரங்களிலும், நடைபெறும். நிறைவு விழாவைச் சிறப்பான முறையில் நடத்தத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

[1982 மார்ச் 10

**1981** ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் தேதி ஆரம்பமாகிய பாரதி நூற்றாண்டை '' தேசிய ஒருமைப்பாடு ஆண்டாக'' தமிழக அரசு அறிவித்துள்ளது. பாரதியின் பணியையும் வாழ்க்கையையும் வெளிப்படுத்தும் வகையில் எட்டையபுரத்தில் நூற்றாண்டு விழா கண்காட்சி அமைக்கப்பட்டது. எட்டையபுரத்தில் 20 தினங்கள் நடைபெற்ற அக்கண்காட்சி மாநிலத்தின் பல்வேறு இடங்களிலும் நடத்தப்படும். மாநிலத்தில் எந்த ஒரு பகுதியிலாவது, தினமும் ஒரு சீரிய நிகழ்ச்சி நடைபெறும் வகையில் எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும், நகராட்சிகளிலும் மாவட்டத் தலைநகரங்களிலும் மற்றும் பல இடங்களிலும், ஓராண்டு முழுவதும், பாரதி நூற்றாண்டைக் கொண்டாட அரசு முடிவு செய்திருக்கின்றது. மற்ற மாநிலத் தலைநகரங்களிலும், டெல்லி, மற்றும் முக்கியமான அயல்நாடுகளிலும் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மகாகவி பாரதியார் நூற்றாண்டு நிறைவு விழா 1982 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் தேதி சென்னையில் நடைபெறுவதாக உள்ளது. நிறைவு விழா நாளன்று, பாரதி நினைவு தபால் தலை வெளியிடுவதை மீண்டும் பரிசீலிக்குமாறு மத்திய அரசிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. நிறைவு விழா நாளன்று, தகுந்த மதிப்புள்ள பாரதி நினைவு நாணயத்தை வெளியிட பரிசீலிக்குமாறு மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டு இருக்கிறது. பல்வேறு மாநில மொழிகளில் வானொலியிலும் தொலைக்காட்சியிலும் சிறப்பு நிகழ்ச்சிகள் ஒலி, ஒளி, பரப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பல்வேறு விளம்பர அமைப்புகள் மூலம் பாரதி நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளுக்கு விளம்பரம் தருவதில் சிறப்பிடம் தரவேண்டுமென்றும், மத்திய அரசிற்கு வேண்டுகோள் விடப்பட்டிருக்கிறது. பாரிசிலிருந்து 'யுனெஸ்கோ' வினரால் வெளியிடப்படும் '' கூரியர் '' இதழை, பாரதி நூற்றாண்டு விழா சிறப்பிதழாக, 1982 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பாரதியின் நினைவாக வெளியிட ஏற்பாடு செய்யுமாறும், மாநில பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பாரதி நூற்றாண்டு விழாக்கள் நடத்தும்படி மற்ற மாநிலக் கல்வித் துறைகளுக்கு வேண்டுகோள் விடுமாறும் மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்தியாவிலுள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களில், பாரதி இருக்கைக்கும், பாரதி நினைவுச் சொற்பொழிவுகளுக்கும் ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எட்டையபுரத்திலுள்ள பாரதி மணிமண்டபத்தை அரசு ஏற்றுக் கொண்டு அதை ரூபாய் 2·5 லட்சம் செலவில் புதுப்பித்து எட்டையபுரத்திலுள்ள மணிமண்டபம் முன்பு பாரதியின் முழுவுருவச் சிலை நிறுவி 1981 டிசம்பர் மாதம் 11 ஆம் தேதி திறந்து வைக்கப்பட்டது. எட்டையபுரம் மணிமண்டபத்திற்கு



1982 மார்ச் 10]

அருகிலுள்ள இடத்தில் பாரதியைப் பற்றி கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் கலைக்கூடம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 10 ஏக்கர் நிலப்பரப்பு கையகப்படுத்தப்படுகிறது. கலைக்கூடத்தை நன்முறையில் அமைக்க ஒரு நிபுணர் குழு அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதி உதவியை அளிப்பது பற்றிப் பரிசீலிக்குமாறு மத்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. பாரதியின் நினைவாக நூற்றாண்டுத் தோரணவாயில் ஒன்று எட்டையபுரத்திலுள்ள மணிமண்டபம் அருகில் கோவில்பட்டி—எட்டையபுரம் சாலையில் நிறுவப்படும் பாரதியைப்பற்றிய நினைவு மலர் ஒன்று 1982 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ம் தேதி நடைபெறும் நிறைவு விழாவன்று வெளியிடப்படும். இந்த நினைவு மலரில், பாரதியின் பல்வேறு சிறப்புக்களைத் தவிர, இந்தியாவிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் பிரபல எழுத்தாளர்களின் கட்டுரைகள் இடம்பெறும். அது ஒரு சிறப்பு வெளியீடாக இருக்கும். இந்த வெளியீட்டிற்கு இந்திய அரசின் நிதி உதவியும் நாடப்பட்டிருக்கிறது. பாரதியின் சில படைப்புக்களைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் மற்றும் இந்திய மொழிகளிலும் பதிப்பித்து வெளியிடுவதையும், வெளியீட்டுக்குழு பரிசீலிக்கும். சாகித்திய அகாடமியும் வெளியீட்டுக் குழுவும் இந்தப் புத்தகங்களைப் பதிப்பிக்கவோ அல்லது நாடகமாக்கவோ பரிசீலிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். இந்தத் திட்டத்திற்கும், இந்திய அரசாங்கத்தின் நிதியுதவி நாடப்பட்டுள்ளது. பாரதியைப் பற்றி முழுநீளத் திரைப்படம், நூற்றாண்டு நிறைவையொட்டி தயாரிப்பதென அரசு முடிவெடுத்திருக்கிறது.

எட்டையபுரத்தில் நடைபெற்ற தொடக்க விழாவின்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட திட்டங்களை அறிவித்துள்ளார். அவை அனைத்தையும் நிறைவேற்றும் அடிப்படையில் தேவையான நடவடிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

(1) பெண்களுக்கென்று தனியாக ஒரு பல்கலைக் கழகம் 1982-83 கல்வியாண்டில் தொடங்குவது.

(2) பாரதியார் பிறந்த நாளான டிசம்பர் 11-ம் தேதியை ஒவ்வொரு ஆண்டும் '' தேசிய ஒருமைப்பாடு நாளாக '' கொண்டாடுவது. பாரதியார் நூற்றாண்டினை '' தேசிய ஒருமைப்பாட்டு வருடமாக '' அறிவிப்பதன் மூலம் தேசிய அளவில் பாரதியாரின் பெருமையை வெளிப்படுத்தும்.

(3) பெண்களுக்கென்று தொழிற் பயிற்சிக் கல்லூரி ஒன்றைத் திருநெல்வேலி மாவட்டத்தில் நிறுவுவது.

(4) பெண்களுக்கென்று தனிப்பட்ட பள்ளிகள் பல ஏற்படுத்துவது.

(5) பெண்களுக்கென்று உள்ள பள்ளிகளில் இசைப் பயிற்சி ஆசிரியைகள் நியமிப்பது.

(6) ஆண், பெண் இணைந்து படிக்கும் பள்ளிகளில் 100-க்கு மேற்பட்ட பெண்கள் இருப்பின், பெண் உடற்பயிற்சி ஆசிரியைகள் நியமிப்பது.

(7) பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி ஆகியவைகளை நடத்துவது, பாரதியாரால் சொல்லப்பட்ட உடல் ஊனமுற்றோர்க்கான சீர்திருத்தங்களை நடைமுறைக்கு கொண்டு வருவது.

(8) புதிய நூற்பு ஆலை ஒன்றை எட்டையபுரத்தில் அமைக்கும்போது உள்ளூரிலுள்ளவர்களுக்கு பணியிடங்களில் முன்னுரிமை வழங்குவது.

(9) பாரதியாரின் அனைத்துப் படைப்புகளையும் மூன்று பிரிவுகளாகப் பிரித்து அரசு வெளியிடுவது.

(10) பாரதியாரின் நினைவுச் சின்னங்கள் அவர் வாழ்ந்த பணிபுரிந்த இடங்களில் அமைப்பது.

தந்தை பெரியார் நூற்றாண்டு விழா தொடர் பணி.

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாக்களின் தொடர்ச்சியாக அவரது வாழ்க்கையையும் கொள்கைகளையும் விளக்கும் ஒலி ஒளி அரங்கக் காட்சிகள் இவ்வாண்டு திருநெல்வேலியிலும், ஈரோட்டிலும் நடத்தப்பெற்றன. இந்த ஒலி-ஒளி அரங்கக் காட்சிகள் பல்லாயிரக்கணக்கான மக்களையும், பல்வேறு அறிஞர் பெருமக்களையும் கவர்ந்து அவர்களின் பாராட்டுக்களையும் பெற்றுள்ளன.

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாக் குழுவின் பரிந்துரைப்படி அமைக்கப்பட்ட வல்லுநர் குழு "பெரியார் வாழ்க்கை வரலாறு" என்ற நூலையும், "குழந்தைகளுக்கான பெரியாரின் வாழ்க்கை பட விளக்கம்" என்ற நூலையும் தயாரித்து வருகிறது. "பெரியாரின் வாழ்க்கை வரலாறு" என்ற நூல் இப் வெளியீட்டு பணி முடிவுற்றதும், பிற மொழிகளிலும் புத்தகத்தை வெளியிடும் திட்டத்தை அரசு ஆலோசிக்கும். 1922 ஆம் ஆண்டில் கேரளத்தில் "வைக்கம்" என்ற இடத்தில் பெரியார் அவர்கள், தீண்டாமைக்கு எதிராகப் போராடிய வரலாற்றின் நினைவாக நினைவுச் சின்னம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.





சென்னையில் 1.6 கோடி ரூபாய் செலவில் பெரிய அளவில் மாநாட்டு அரங்கம் ஒன்றையும், அறிவியல் அருங்காட்சியகம் ஒன்றையும் அமைத்திடவும் திட்டம் ஆராய பரிசீலனையில் இருக்கிறது. பெரியார் சிறைப்பட்டிருந்த சிறைகளில் நினைவுக் கற்பலகைகள் நிறுவிடவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எல்லா மாவட்டங்களிலும், பெரியாரின் பொன்மொழிகளைக் கொண்ட பெரியார் நூற்றாண்டு நினைவுத் தூண்கள் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, இந்த ஆண்டு திருச்சி, ஈரோடு, காஞ்சிபுரம் ஆகிய நகரங்களில் நிறுவப்பட்டுள்ளன. தொடர்ந்து பிற மாவட்டங்களில் நிறுவ ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

தந்தை பெரியாரின் வயதை நினைவுறுத்தும் வகையில் 95 அடி உயரத்தில் நினைவுத் தூண் ஒன்றை சென்னையில் நிறுவுவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

பொருட்காட்சிகள் :

மாநிலத்தில் அரசு பொருட்காட்சிகளை நடத்துவதுடன் பிற மாநிலங்களில் நடைபெறும் பொருட்காட்சிகளில் அரசின் சார்பாக இத்துறை பங்கு பெற்று அரசின் பல்வேறு துறைகளின் செயற்பாடுகளையும் சாதனைகளையும் விளக்கும் பணியினை ஆற்றி வருகிறது.

அரசுக்கும் உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் சொந்தமான பொதுவிடங்களில் தனி நபர்களோ அல்லது தனி நிறுவனங்களோ பொருட்காட்சி நடத்த அனுமதி அளிப்பதில்லையென்று அரசு கொள்கை அளவில் முடிவெடுத்துள்ளது. எனினும், அரசின் முன் அனுமதி பெற்று பொது நன்மைக்காக உள்ளாட்சி நிறுவனங்களும், அங்கீகாரம் பெற்ற தொழில் வர்த்தகக் கல்வித் தொண்டு நிறுவனங்களும் பொருட்காட்சிகளை நடத்த அனுமதிக்கப்படுகின்றன. இத்துறை 1981-ல் மதுரையில் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு-பொருட்காட்சியினை ஜனவரியிலிருந்து ஏப்ரல் முடிய நடத்தியது. 1981-ல் திருச்சியில் அரசு பொருட்காட்சியினை மார்ச்—மே மாதங்களிலும், கோவையில் ஜூன்-ஜூலை மாதங்களிலும், சேலத்தில் ஆகஸ்டு-செப்டம்பர் மாதங்களிலும் நடத்தியது. மேற்கண்ட பொருட்காட்சிகளில் அரசின் பல்வேறு துறைகளும், தனியார் நிறுவனங்களும் பங்கு கொண்டன. இத்துறை முதன் முறையாக வேலூர் நகரில் அரசு பொருட்காட்சியினை 24—1—1982 முதல் நடத்தி வருகிறது. அரசு நடத்தும் பொருட்காட்சிகள் அரசுக்கு லாபத்தை ஈட்டித் தந்துள்ளது.

1978 ஆம் ஆண்டு முதல் 1981 முடிய அரசு நடத்திய (பொருட்காட்சிகளில் நுழைவுக் கட்டணம், கடை வாடகை, முழு உரிமை ஏலம், மின் இணைப்பு கட்டணம் மூலம் கிடைத்த மொத்த வருமானம் ரூ. 126.41 லட்சம். இதில் கட்டுமானச் செலவுகள், மின் செலவுகள் கலை நிகழ்ச்சிச் செலவு, அரசுத் துறைகள் கலந்துகொள்ள அளிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு ஆகியவை மொத்தமாக ரூ. 90.26 இலட்சம், ஆக அரசிற்கு வந்துள்ள வருமானம் ரூ. 36.15 இலட்சமாகும்.

1978-79 ஆம் ஆண்டுகளில் சேலத்தில் நடத்திய பொருட்காட்சியிலிருந்து சேலம் நகராட்சிக்கு, லாபத்திலிருந்து 50 சதவீதம் தொகையான ரூ. 5.66 இலட்சம் அளிக்கப்பட்டது. 1980-81 ஆம் ஆண்டிற்கு சேலத்திற்கு அளிக்கவேண்டிய தொகையும், 1980-ல் மதுரையில் நடத்திய சித்திரை பொருட்காட்சிக்குள்ள தொகையும் விரைவில் அளிக்கப்படும்.

இத்துறை தமிழ் நாட்டின் சார்பாக டெல்லியில் அக்டோபர் மாதத்தில் நடைபெற்ற பூல்-வாலன்-கி சாயர் விழாவில் பங்கு கொண்டது. மேலும் டெல்லியில் நவம்பர்-டிசம்பர் மாதங்களில் இந்திய உலக வர்த்தகப் பொருட்காட்சியில் அமைக்கப் பட்ட தமிழ்நாடு அரங்கில் செய்தித்துறையும் பங்கு கொண்டது. 'தமிழ்நாடு தினம்' இவ்வரங்கில், மாண்புமிகு மத்திய அமைச்சர்களைச் சிறப்பு விருந்தினர்களாகக் கொண்டு நடத்தப்பட்டது. சென்னையில் 1982-ல் நடைபெற்ற குடியரசு தின அணிவகுப்பில், அலங்கார ஊர்திகள் பங்குகொள்ளும் பணியினை செய்தது. ஊர்திகளில், தேசிய ஒருமைப்பாட்டினை விளக்கும் வண்ணமும், பெண்கள் முன்னேற்றம், ஆதி திராவிடர்கள் பழங்குடியினர், முன்னேற்றம், அவர்களது கலாச்சாரம் மற்றும் மாநிலத் தொழில் வளர்ச்சி, கைத்தறி, கல்வி போன்ற துறைகளில் வளர்ச்சியை சித்தரிக்கும் வண்ணம் அமைந்திருந்தன.

அரசின் திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள் ஆகியவற்றை மக்கள் மத்தியில் பிரபலப்படுத்தும் நோக்கத்துடன் யாநிலத்தில் சென்னை நீங்கலாக மற்ற மாவட்டங்களில் செய்தித் துறை விளக்கக் கண்காட்சியினை நடத்துவதற்காக ரூ. 2 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும் கோவை அரசுப் பொருட்காட்சி மூலம் கிடைத்த வருமானத்திலிருந்து கோவையில் ஒரு கலை அரங்கம் கட்ட அரசு ஆணையிட்டுள்ளது. மேலும் பொருட்காட்சியினை மற்ற மாவட்டத் தலைநகரங்களில் நடத்த திட்டம் உள்ளது.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் முக்கியப் பணிகளை மாவட்டங்களில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் நிறைவேற்றி வருகிறார்கள். அரசின் கொள்கைகளையும், திட்டங்களையும் பல்வேறு வகையில் மக்களுக்கு எடுத்துக் காட்டும்,





களுக்கு மாவட்டத்திலுள்ள அன்றாட முக்கிய நிகழ்ச்சிகளைப் பத்திரிகைச் செய்திகளாக வெளியிட்டு வருகின்றனர். மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு இவர்கள் இவ்வகையில் மிகவும் உதவியாகச் செயல்பட்டு வருகின்றனர். பல்முனை விளக்க விழாக்களுக்கு ஏற்பாடு செய்கின்றனர். அரசு விழாக்களைப் பொறுப்பேற்று மாவட்டங்களில நடத்துகின்றனர் அரசின் கொள்கைகளை முக்கியமாக ''மதுவிலக்கு'' ''தீண்டாமை ஒழிப்பு'' பற்றி நாடகங்கள் மூலமாக மாவட்டங்களில் நடத்த ஏற்பாடு செய்கின்றனர். 16 மி.மீ. செய்திப் படங்களை (குடும்ப நலத்திட்டம் சிறுசேமிப்பு போன்றவை) ஊர்ஊராகச் சென்று திரையிட ஏற்பாடு செய்கின்றனர். அனைத்துத் துறைகளும் இவ்வலுவலகம் மூலமே செய்தி வெளியீடுகள் வெளியிடுகின்றன. சிறு பொருட்காட்சிகளை அடிக்கடி ஏற்பாடு செய்கின்றனர். பத்திரிகையாளர்களை மாவட்டத்திலுள்ள முக்கிய இடங்களுக்கும் கூட்டிச் செல்கின்றனர் இவ்வலுவலர்கள்.

செய்தியாளர்களின் கூட்டங்கள், மாநாடுகள் நடத்த ஏற்பாடுகளை இவர்கள் செய்கின்றனர். மாவட்ட விளம்பர ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் நடத்த ஏற்பாடு செய்கின்றனர்.

மாவட்டங்களிலுள்ள நினைவுச் சின்னங்களையும் இவர்கள் மேற்பார்வையிட்டு வருகின்றனர். ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறு செய்தி நிலையம் ஒன்று நடத்தப்பட்டு வருகிறது. அதனையும் இவர்களே மேற்பார்வையிட்டு வருகின்றனர்.

தமிழக அரசு செய்திப் படம் திரை அரங்குகளில் ஒழுங்காக நடத்தப்படுகிறதா என்பதை இவர்கள் ஆய்வு செய்கின்றனர். இவ்வாறு அரசின் ஒருங்கிணைந்த திட்டங்களைப் பொது மக்களுக்கு அறிவிக்கும் பணி இவர்களின் முக்கிய பணியாகும்.

தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, மகாகவி பாரதியார் ஆகியவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடும் வகையில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் ஏற்பாடு செய்யப்படும் விழாக்களில், சாதிசமய வேறுபாடற்ற சமுதாயத்தை நிறுவுவதன் தேவையைப் பற்றியும், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் ஆகியவர்களின் நலத்திற்காக அரசு அளித்திடும் சலுகைகள் பற்றியும் விளக்கிச் சொல்லப்படுகிறது.

### செய்தி நிலையங்கள் :

சென்னை, மதுரை ஆகிய இடங்களிலுள்ள இத்துறையின் செய்தி நிலையங்கள் பல்வேறு பொருள்கள் குறித்தும், மற்றும் அரசின் கொள்கைகள், சாதனைகள் பற்றியும், செய்திகளையும், விளக்கங்களையும் பொது மக்களுக்கு வழங்குகின்றன. படிப்பகங்களை நடத்தி வருகின்றன.

*நினைவுச் சின்னங்கள் :*

தமிழ்நாடு அரசைச் சார்ந்த நினைவுச் சின்னங்கள் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் நிர்வாகப் பொறுப்பில் இருந்து வருகின்றன.

சென்னை, அண்ணா சதுக்கத்தில், இருபுறமும் செடி கொடியால் கூரையிடப்பட்ட நடைபாதை அமைத்தல், நூலகக் கட்டிடம் கட்டுதல், நுழைவு வாயில் பகுதியிலுள்ள கற்தளத்தைப் புதுப்பித்தல் போன்ற மேம்பாட்டுப் பணிகள் ரூ. 3,26,000 செலவு மதிப்பீட்டில் செய்யப்பட்டு வருகின்றன. கன்னியாகுமரியில் உள்ள காந்தி மண்டபத்திலும், மதிற்சுவர் எழுப்புதல், பூங்கா அமைத்தல் போன்ற மேம்பாட்டுப் பணிகள் ரூ. 1,15,000 செலவு மதிப்பீட்டில் செய்யப்பட்டு வருகின்றன.

சென்னை வள்ளுவர் கோட்டத்துக்கு வருகை தரும் பார்வையாளர்களின் வசதிக்காகக் கோட்டத்தின் வடபுறத்தில் ஓர் அங்காடிக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

உலகச் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் கன்னியாகுமரியில் விவேகானந்தர் நினைவு மண்டபத்துக்கு அருகில் உள்ள மற்றொரு சிறிய பாறையின்மீது உலகப் பொதுமறை தந்த திருவள்ளுவர் சிலை நிறுவும் திட்டத்தின் பல்வேறு அம்சங்களை ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை தருவதற்கான நிபுணர் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இந்தக் குழு தனது அறிக்கையை தற்போது அளித்துள்ளது. நிபுணர் குழுவின் அறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது.

நாகர்கோவிலில் அமரர் ஜீவானந்தம் சிலை அமைத்தல், கன்னியாகுமரி மாவட்டத்தில் அதங்கோடு என்னுமிடத்தில் அதங்கோட்டாசான் சிலை அமைத்தல், சேலத்தில் விஜயராகவாச்சாரியார் சிலை அமைத்தல் ஆகிய பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

சென்னையில் கத்திப்பாரா சந்திப்பில் நேருஜியின் சிலையைச் சிறப்பான வகையில் நிறுவுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குற்றாலத்தில், ரசிகமணி டி. கே. சிதம்பரநாதனார் வாழ்ந்த இல்லத்தை அவரது நினைவு இல்லமாகப் பாதுகாக்கும் வகையில் அரசு எடுத்துக்கொண்டுள்ளது.

எட்டயபுரத்தில் உள்ள பாரதி மண்டபத்தையும், ஓட்டப்பிடாரத்தில் உள்ள வ.உ. சிதம்பரனார் நினைவு இல்லத்தையும் அரசு ஏற்றுக்கொண்டு பராமரித்து வருகிறது. எட்டயபுரத்தில் உமறுப் புலவர் நினைவு மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

புதுக்கோட்டையில் சத்தியமூர்த்தி நினைவுச் சின்னம், பாப்பாரப்பட்டியில் சுப்பிரமணிய சிவா நினைவுத் தூண் காரைக்குடியில் கவியரசு கண்ணதாசன் மணி மண்டபம், நாகர்கோவிலில்



செய்குத்தம்பி பாவலர் நினைவுச் சின்னம், செங்கோட்டையில் வாஞ்சிநாதனார் சிலை ஆகியவற்றை அமைக்கும் திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

மேலும் நாகர்கோவிலில் உள்ள கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் பிறந்து, வாழ்ந்த இல்லத்தையும் திருச்சியில் உள்ள விடுதலை வீரர் வ. வே. சுப்பிரமணியம் பிறந்து வாழ்ந்த இல்லத்தையும் அரசு எடுத்துக்கொண்டு நினைவு இல்லங்களாகப் பாதுகாக்கும் செயற்குறிப்புகளும் அரசின் பரிசீலனையில் உள்ளன.

பல்வேறு தலைவர்களுக்குச் சிலைகள் அமைக்க வேண்டுமென அவ்வப்போது அரசுக்கு வரும் கோரிக்கைகளில், எந்த வகையான கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளலாம் என ஆராய்ந்து அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்காக மாண்புமிகு முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

**கலைவாணர் அரங்கம், சென்னை, அண்ணா கலையரங்கம், வேலூர்.**

சென்னையிலுள்ள கலைவாணர் அரங்கத்தையும், வேலூரிலுள்ள அண்ணா கலையரங்கத்தையும் இத்துறை நிர்வகித்து வருகிறது. வேலூர் அண்ணா கலையரங்கில், கலை நிகழ்ச்சிகளை அனுமதிப்பதோடு திரைப்படங்களும் காட்டப்படுகின்றன.

குளிர் சாதன வசதியுள்ள கலைவாணர் அரங்கம், அரசாங்க விழாக்கள், பிற விழாக்கள் கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு ஒதுக்கப்படுகிறது. விழாக்கள் நடைபெறாத சமயங்களில் நாளொன்றுக்கு இரண்டு காட்சிகள் வீதம் திரைப்படம் நடத்த சில விதிகளின் கீழ் அனுமதிக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் பயனாக சில ஆண்டுகளாக இந்த அரங்கின் வருமானம் பெருகியுள்ளது. தனிப்பட்ட அமைப்புகளிடமிருந்து திட்டமிட்டப்படி வாடகை பெறப்படுகிறது. ஆனால் அரசுத் துறைகளுக்குச் சலுகையில் அனுமதிக்கப்படுகிறது.

இராஜாஜி மண்டபம், பரணி அரங்கம் ஆகியவையும் இத்துறையின் நிர்வாகத்தில் உள்ளன.

தமிழரசு :

''தமிழரசு'' (தமிழ்-ஆங்கிலம்) இத்துறையினரால் வெளியிடப்படும் இதழாகும். 1970 ஆம் ஆண்டு சூலையில் இந்த இதழ் தமிழில் மாதம் இருமுறை வெளியீடாகவும், ஆங்கிலத்தில் மாதம் ஒரு முறை வெளியீடாகவும் துவக்கப்பட்டது. இந்த இதழ் அரசின் செய்திகளையும், கொள்கைகளையும் பரப்புவதுடன் அரசின் ஒருங்கிணைந்த திட்டங்களையும் பொது மக்களுக்கு அறிவிக்கிறது. மாதம் இரு முறை வரும் தமிழ்

இதழ் சராசரி 47,500 பிரதிகளும், மாதம் ஒரு முறை வரும் ஆங்கில இதழ் சராசரி 3,750 பிரதிகளும் அச்சிடப்படுகின்றன. இவை முகவர்கள், சந்தாதாரர்கள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் வாயிலாக விற்பனையாகின்றன. ஒவ்வொரு இதழிலும் சுமார் 900 பிரதிகள் வரை தமிழக பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்ட மன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்கள், அரசுச் செயலர்கள், துறைத் தலைவர்கள், நாளேடு, வார இதழ் ஆசிரியர்கள் ஆகியோருக்கு இலவசமாக அனுப்பப்படுகின்றன. இவர்கள் தவிர குடியரசுத் தலைவர், பிரதமர் மற்றும் மத்திய அமைச்சர்கள், பிற மாநில செய்தித் துறை அமைச்சர்கள் மற்றும் தலைமைச் செயலர்கள் ஆகியோருக்கு அனுப்பப்படுகின்றன.

அரசின் பல்வேறு துறைச் சாதனையை விளக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் சாதனைத் தொகுப்பு மலர் அதிக பக்கங்களுடன் (96 பக்கங்கள்) வெளியிடப்பட்டது. மற்றும் தந்தை பெரியார், அமரர் பேரறிஞர் அண்ணா, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், மகாகவி பாரதியார், ரசிகமணி டி. கே. சி. சிறப்பு மலர்கள், உலகத் தமிழ் மாநாட்டையொட்டி சிறப்பு மலர் ஆகியவை வெளியிடப்பட்டன.

"தமிழரசு" தமிழ், ஆங்கிலம், ஒரு பிரதியின் விலை 1-1-1982-லிருந்து 75 காசாக உயர்த்தப்பட்டுள்ளது.

"தமிழரசு" இதழ்களும் மற்றும் செய்தி-மக்கள் தொடர்புத் துறை வெளியிடும் பிரசுரங்களும் இத்துறையின் நிர்வாகத்திலுள்ள தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன. இந்திய அரசின் வெளியீடான "திட்டம்" அறநிலையத் துறையின் "திருக்கோயில்", தொழிலாளர் துறையின் "உழைப்பவர் உலகம்", தமிழ்நாடு மின்சாரத் துறையின் "மின் குடும்பம்", கல்வித் துறையின் "தமிழகக் கல்வி" விளையாட்டுத் துறையின் "விளையாட்டு மடல்" ஆகிய இதழ்களும் இங்கு அச்சிடப்படுகின்றன. இவற்றுடன் அரசின் அழைப்பிதழ்கள், சுவரொட்டிகள், சிறு வெளியீடுகள், விண்ணப்பங்கள் முதலியனவும் இந்த அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன.

**திரைப்படங்களுக்கு உதவித் தொகை :**

இம்மாநிலத்தில் திரைப்படத் தொழிலை எதிர் நோக்கியுள்ள பல இடர்ப்பாடுகளில், கூடுதலான தயாரிப்புச் செலவு, படங்களின் தரக் குறைவு இவை இரண்டும் அடங்கும். தேசிய அளவில் மக்களின் நலத்தை அடிப்படையாகக் கொண்டு சமூக பொருளாதாரத்தை முன்னேற்ற உதவும் கருத்துக்களான மதுவிலக்கு, சாதி ஒழிப்பு, தீண்டாமை, நாட்டின் ஒருமைப்பாடு இவற்றில் ஏதாவது ஒன்றை மையக் கருத்தாக வைத்து திரைப்படம் தயாரிப்பவர்களுக்கு உதவுவதற்காக "நிதி உதவித் திட்டம்" பிப்ரவரி 1978-ல் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் 1 படத்திற்கு 1 இலட்ச ரூபாய் வீதம் தேர்வு செய்யப்பட்ட 5 படங்களுக்கு அரசு உதவித் தொகை அளித்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 1 ஆம் நாள் முதல் அடுத்த ஆண்டு மார்ச்சு 31 ஆம் நாள் வரையுள்ள காலவரம்பிற்குள் தயாரித்து, தணிக்கை குழுவினரால் சான்றிதழ் வழங்கப்பட்ட படங்களே தேர்வு செய்ய தகுதி வாய்ந்த படங்களாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இத்தகைய திரைப்படங்களைத் தேர்ந்தெடுக்க அமைக்கப்படும் குழு அரசுக்கு ஆலோசனை நல்குகிறது. இத்திட்டத்தின் கீழ் 1979-80 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டு, தணிக்கைக்கு வந்த தமிழ்ப் படங்களுக்கு உதவித் தொகை அளிக்கப்பட்டது.



**சிறந்த திரைபடங்கள்-கலைஞர்களுக்குப் பரிசுகள் :**

உயர்ந்த கலைத் திறம் சிறந்த தொழில் நுணுக்கம் செறிந்த பாராட்டுக்குரிய சிறப்பான படங்கள் தயாரிப்பதை ஊக்குவிப்பதற்காக, ஆண்டு தோறும் பரிசுகள் வழங்கும் திட்டம் 1978-79 ஆம் நிதி ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 1 ஆம் நாள் முதல் அடுத்த ஆண்டு மார்ச்சு 31 ஆம் நாள் வரையுள்ள கால வரம்பிற்குள் தயாரித்து தணிக்கை குழுவினரால் சான்றிதழ் வழங்கப்பட்ட படங்களே தேர்வு செய்ய தகுதி வாய்ந்தவைகளாகக் கருதப்படுகின்றன. இதற்காக அமைக்கப்பட்ட குழுவில் இவை தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

1979-80 ஆம் ஆண்டுத் தயாரிப்புகளுக்கான பரிசுகள் ரூ. 2,30,000 செலவில், சிறந்த படம், சிறந்த நடிகர், நடிகை, இயக்குநர், கதாசிரியர், வசனகர்த்தா, ஒளிப்பதிவாளர், இசை அமைப்பாளர், பின்னணி பாடகர், பாடகி, துணை நடிகர், துணை நடிகை, சிறந்த குழந்தைகள் படம், ராஜா சாண்டோ நினைவுப் பரிசு ஆகியவை அளிக்கப்பட்டன.

**குழந்தைகள் திரைப்படங்களுக்கு உதவி :**

இந்திய குழந்தைகள் திரைப்படச் சங்கத்தின் வேண்டுகோளின்படி சிறந்த குழந்தைகள் திரைப்படங்களைத் தமிழில் தயாரிக்கவும், சிறந்த மற்ற மொழிக் குழந்தைகள் படங்களை தமிழில் மொழி மாற்றம் செய்யவும் ரூ. 4 லட்சம் உதவி செய்ய இவ்வரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதில் ரூ. 2 லட்சம், குழந்தைகள் திரைப்படச் சங்கத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

மேலும் நவம்பர் 14, 1981 முதல் நவம்பர் 23, 1981 வரை சென்னையில் நடை பெற்ற இரண்டாவது உலகக் குழந்தைகள் திரைப்படவிழாவைச் சிறப்புற தமிழக அரசு முன்னின்று நடத்தி பல விதங்களில் உதவி செய்தது. இதற்காக அரசு ரூ. 2.80 லட்சம் ஒப்புதல் அளித்து, இத்தொகை முழுவதும் விழாவின் மேம்பாட்டிற்காகச் செலவு செய்து, உலகக் குழந்தைகள் திரைப்பட விழா வெற்றிகரமாக நடைபெற வழிவகை செய்தது. இவ்வரசின் உதவியை விழாக்குழுவினர் மிகவும் பாராட்டியுள்ளனர்.

திறமை மற்றும் இதர வசதிகள் இருந்தும் நிதி வசதியின்மை காரணமாக குழந்தைகளுக்காக படம் எடுக்க முடியாத நிலையில் இருக்கும் தயாரிப்பாளர்களுக்கு விரைவில் செயல்படத் துவங்கவிருக்கும் திரைப்பட நிதி நிறுவனம் மூலம் உதவலாம் என்பது பற்றிய கருத்துரு தற்பொழுது அரசின் ஆய்விலுள்ளது.

அரசு தற்பொழுது குழந்தைகளுக்கான சிறந்த திரைப்படத்திற்கு ரூ.25,000 ரொக்கப்பரிசும், ரூ.200 மதிப்புள்ள வெள்ளிப் பதக்கமும் அளிக்கும் திட்டத்தில் மாறுதல் செய்து ரூ. 5,000 மதிப்புள்ள மூன்று தங்கப் பதக்கங்கள் மற்றும் ரொக்கப் பரிசு ரூ. 10,000 இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களின் நினைவாக வழங்குவது அரசின் பரிசீலனையில் உள்ளது.

நாட்டின் கலாச்சாரம், ஒழுக்கம், பண்பாடு, கண்ணியம் ஆகியவற்றை கருத்திற் கொண்டு குழந்தைகள் மனதைக் கவரும்படி எடுக்கப்படும் படங்களுக்கு வரிவிலக்கு அளிப்பதைப் பற்றியும் அரசு ஆலோசித்து வருகிறது.

தமிழ்நாடு திரைப்பட நிதியுதவிக் கழகம் :

நிதி நிலையற்ற திறம் வாய்ந்த திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு, நிதி உதவி செய்திட திரைப்பட நிதி உதவிக் கழகம் ஏற்படுத்தும் விதத்தில், அரசு நிலை ஆணை எண். 122, செய்தி, சுற்றுலா, மற்றும் (தமிழ்) பண்பாட்டுத் துறை, நாள் 28.8.1981 ஆணை ஒன்று வெளியிட்டது. இதனுடைய தலைமையகம் சென்னையில் இருக்கும். இந்த நிறுவனத்தின் ஒப்பிய முதலீடு சுமார் ரூ. 2 கோடியாக இருக்கும். இந் நிறுவனத்தின் நடைமுதல் ரூ. 50 லட்சம். மேலும், இந் நிறுவனத்தின் பங்கு முதலீடாக ரூ. 10 இலட்சம் அளிக்க அரசு உத்தேசித்துள்ளது. விரைவில் இந்நிறுவனத்தைப் பதிவு செய்யவும், முறைப்படி தொடர்ந்து செயல்படச் செய்யவும் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரைப்பட, தொலைக் காட்சி தொழிற் பயிற்சி நிறுவனம் :

திரைப்படத் தயாரிப்பில் பல பிரிவுகள், மற்றும் நடிப்பு இவற்றில் பயிற்சி அளிப்பதற்காக இந்நாட்டில் நிறுவப்பட்டுள்ள இரு நிறுவனங்களில் ஒன்றுதான் சென்னையில் உள்ள தமிழ்நாடு திரைப்



படம் மற்றும் தொலைக் காட்சி தொழில் நுட்பப் பயிற்சி நிறுவனம். இந் நிறுவனம் தமிழ்நாடு அரசின் செய்தி, சுற்றுலா மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறையின்கீழ் இயங்கி வருகிறது. 1948 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்நிறுவனம் கணிசமான வளர்ச்சி பெற்று வந்துள்ளது. திரைப்படத் தயாரிப்பு தொலைக் காட்சி சம்பந்தப்பட்ட எல்லாப் பிரிவுகளிலும் பயிற்சி அளித்து தேர்வு நடத்தி, வெற்றி பெற்றோர்க்குச் சான்றிதழ் வழங்குவதுடன், திரைப்படத்திற்குள்ள ஆற்றலை மக்களுக்கு உணர்த்துதல், திரைப்படத் தொழில் பற்றிய ஆய்வு நிகழ்த்துதல் ஆகியவை இந்நிறுவனத்தின் குறிக்கோளாகும். படப்பிடிப்பு, ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு, படச்சுருள் கழுவுதல், திரைப்படம் இயக்குதல், திரைக்கதை வசனம் எழுதுதல், படத் தொகுப்பு, நடிப்பு, தொலைக்காட்சி இயக்குதல் ஆகியவற்றில் இங்கு பயிற்சியளிக்கப்படுகிறது. மேற்கூறியவற்றில் நடிப்புப் பயிற்சி சான்றிதழ் பயிற்சியாகும். மற்றவை டிப்ளமோ பயிற்சிகளாகும். தமிழ்நாடு அரசின் மாநில தொழில் நுட்பக் கல்விக் குழுவினரால் டிப்ளமோ தேர்வுகள் கடைசி ஆண்டில் நடத்தப்பட்டு, டிப்ளமோக்கள் வழங்கப்படுகின்றன.

பிரிவு வாரியாக மாணவர்களின் எண்ணிக்கை.

| | | | முதல் ஆண்டு. | இரண்டாம் ஆண்டு. | மூன்றாம் ஆண்டு. |
|---|---|---|---|---|---|
| ஒளிப்பதிவு | .. | .. | 15 | 10 | 10 |
| ஒலிப்பதிவு | .. | .. | 10 | 10 | 9 |
| படம் கழுவுதல் | | .. | 9 | 4 | 5 |
| படத் தொகுப்பு— | | | | | |
| ஆண் | .. | 7 | 9 | 4 } 5 | .. |
| பெண் | .. | 2 | | 1 | |
| இயக்குதல் | .. | .. | 10 | 19 | 8 |
| நடிப்பு— | | | | | |
| ஆண் | .. | 14 | | .. | 20 |
| பெண் | .. | 6 | | | |

மொத்த மாணவர்கள்—144.

பல்வேறு பிரிவுகளில் பயிலும் மாணவர்கள் பல குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவும் கல்வியாண்டில் செய்முறைப் பயிற்சியின் ஒரு பகுதியாக ஒரு சிறிய கதைப்படமும், ஒரு கருத்து விளக்கப் படமும் தயாரிக்கின்றனர். மாணவர்களுக்கு பல்வேறு பிரிவுகளில் பயிற்சி அளிப்பதை முதன்மைக் குறிக்கோளாகக் கொண்டு செயலாற்றுவதுடன், தொழில் முறையில் மற்றும் அரசின் படத் தயாரிப்பு வேலைகளும் இந்நிறுவனத்தால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

[1982 மார்ச் 10

படப்பிடிப்புத் தளங்களும் திரைப்படத்தொழில் நுட்பக் கல்லூரியிலுள்ள சாதனங்களும் விரும்புகின்ற தனிப்பட்ட திரைப் படத் தயாரிப்பாளர்களுக்கு வாடகைக்குக் கொடுக்கப்படுகின்றன. இதனால் வருமானம் ஓரளவுக்குக் கிடைப்பதுடன் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள புகழ்பெற்ற தொழில் நுட்பப் பணியாளர்களின் ஆற்றலை நேரில் கண்டு அவர்களோடு பணிபுரிய மாணவர்களுக்கு நல்ல வாய்ப்பாகவும் அமைகிறது. இந்நிறுவனத்தில் பயின்று வெற்றியுடன் திரும்பும் மாணவர்களுக்கு பொதுத்துறையிலும் தனியார் துறையிலும் வேலை வாய்ப்புகள் நன்முறையில் உள்ளன.

இந்நிறுவனத்தின் பணிகளை மேம்படுத்த இவ்வாண்டு குரல் மாற்றும் (டப்பிங்) அரங்கு அமைப்பதற்கும், புதிய கருவிகள் வாங்குவதற்கும், மாணவர் விடுதி கட்டுவதற்கும், மொத்தம் ரூ. 16 லட்சம் செலவில் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு :

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு மாநிலத்தில் நடைபெறும் அரசின் ஆக்கப்பணிகளை, மக்கள் பங்கேற்கும் பொதுநிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுத்து, படமாக்கி, செய்திப் படங்களாக மத்திய அரசின் திரைப்படப் பிரிவின் மூலம் வெளியிடுகிறது.

இத்துடன் அரசின் பல்வேறு துறைகளின் பணிகளை, மக்களுக்குத் தேவையான செய்திகளை கருத்து விளக்கப்படங்களாக (டாகுமென்டரி) எடுத்து இத்திரைப்படப்பிரிவு வெளியிடுகிறது. இப்படங்களும் (35 மில்லி மீட்டர் அளவில்) திரையரங்கங்களுக்கு மத்திய அரசின் திரைப்படப் பிரிவின்மூலம் வெளியிடப்படுகின்றன. 16 மில்லி மீட்டர் அளவில் அரசின் செய்தி, விளம்பரப் பிரிவுகளுக்கும் அனுப்பப்பட்டு பொது மக்களுக்குக் காட்டப்படுகின்றன.

தமிழ்நாடு திரையரங்குக் கழகம், சென்னை.

தமிழ்நாடு திரையரங்குக் கழகம் பொறுப்பு வரையறுக்கப்பட்ட அரசு தனி நிறுவனமாக தொடங்கப்பட்டது. தமிழ்நாட்டில் பகுதி நிலைத் திரையரங்குகளைக் கட்டவும் அவற்றை நிலையான திரையரங்குகளாக, மாற்றவும் புதிதாக நிலையான திரையரங்குகள், டூரிங் திரையரங்குகள், திறந்த வெளி திரையரங்குகள் கட்டவும், திரைப்படக் கருவிகள் வாங்கவும் நிதி உதவி செய்வது இக்கழகத்தின் நோக்கமாகும். இதுவரை இக்கழகம் பகுதி நிலைத் திரையரங்குகள் கட்டவும், அவற்றை நிலையான திரையரங்குகளாக மாற்றவும் மட்டுமே கடனுதவி செய்துள்ளது, இக்கழகத்திற்கு அரசால் முழுவதுமாக செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 35.00 இலட்சம். மேலும் ரூ. 15·00 லட்சம் நீண்டகாலக் கடனாக அரசு அளித்துள்ளது.

இந்நாள் வரையில் சட்டப்படி செல்லத்தக்க ஒப்பளிப்புகள் 81 ஆகும். இவற்றில் 74 பேர் திரையரங்குகளைக் கட்டி முடித்து திரைப்படக் காட்சிகள் நடத்துகின்றனர். ஒரு திரையரங்கிற்கு அதிகபட்சம் அளிக்கும் தொகை ரூ. 1·20 லட்சம் ஆகும். இக்



1982 ம்ார்சு 10]

கழகம் இதுவரை ரூ. 93!23 லட்சம் கடன் தொகை அளிக்க ஒப்பளித்துள்ளது. ஒப்பளித்துள்ளதில் ரூ. 87.25 லட்சம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இக்கடன் தொகை ஆண்டு ஒன்றுக்கு 17 சதவீத வட்டி வீதம் 60 சமமான தவணைகளில் வசூலிக்கப்படுகிறது.

பகுதிநிலைத் திரையரங்கம் கட்டுவதற்கு இந்நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்ட கடன்கள், வசூலான தொகை, வசூலாக வேண்டிய கடன்கள் ஆகியவை பின்வருமாறு ;—

(ரூபாய் இலட்சத்தில்.)

| | |
|---|---|
| பகுதி நிலை திரையரங்கம் கட்டுவதற்கு இந்நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்ட கடன் தொகை. | 87!25 |

பயன் அடைந்தோர் எண்ணிக்கை—80

காட்சி நடைபெறும் திரையரங்குகள் எண்ணிக்கை—74.

முழுவதுமாக கடன் தொகை திரும்பச் செலுத்தி, கடன் கணக்கை முடித்துக் கொண்டோர் எண்ணிக்கை—28.

இதுவரை திரும்பச் செலுத்தப்பட்டுள்ள தொகை—

(ரூபாய் இலட்சத்தில்.)

| | |
|---|---|
| அசல் .. .. .. .. .. | 47.35 |
| வட்டி .. .. .. .. .. | 36.03 |
| அபராத வட்டி .. .. .. .. | 1.90 |
| மொத்தம் .. .. | 85.51 |

கொடுக்கப்பட்ட கடன்களில் திரும்பச் செலுத்தப்பட வேண்டியதில் வசூலாகாத தொகை (46 நபர்கள்)—

(ரூபாய் லட்சத்தில்)

| | |
|---|---|
| அசல் .. .. .. .. .. | 30.3[illegible] |
| வட்டி .. .. .. .. .. | 31.05 |
| அபராத வட்டி .. .. .. .. | 6.66 |
| மொத்தம் .. .. | 680.2 |

[1982 மார்ச் 10

மாவட்ட வாரியாக கட்டி முடிக்கப்பட்டு திரைப்படக் காட்சிகள் நடத்தப்பட்டுவரும் திரையரங்குகளின் எண்ணிக்கை :

| மாவட்டம். | திரையரங்குகளின் எண்ணிக்கை. |
|---|---|
| செங்கற்பட்டு .. .. .. .. | 16 |
| கோயம்புத்தூர் .. .. .. .. | 4 |
| தர்மபுரி .. .. .. .. .. | 2 |
| மதுரை .. .. .. .. .. | 7 |
| வட ஆற்காடு .. .. .. .. | 14 |
| புதுக்கோட்டை .. .. .. .. | 3 |
| இராமநாதபுரம் .. .. .. .. | 6 |
| சேலம் .. .. .. .. .. | 4 |
| தென் ஆற்காடு .. .. .. .. | 3 |
| தஞ்சாவூர் .. .. .. .. .. | 2 |
| திருநெல்வேலி .. .. .. .. | 6 |
| திருச்சிராப்பள்ளி .. .. .. .. | 5 |
| பெரியார் .. .. .. .. .. | 2 |
| மொத்தம் .. .. | 74 |

தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1955 மற்றும் தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்கு படுத்துதல்), விதிகள் 1957.

தமிழ்நாட்டு மக்களில் பெரும்பகுதி மக்களுக்கு குறிப்பாக ஏழை எளிய நடுத்தர மக்களுக்கு பொழுது போக்குவதற்குரிய சாதனமாகவும் பெரும்பகுதி ஊராட்சி நகராட்சிகளுக்கும் ஒரு பகுதி அரசுக்கும் வருவாய் திரட்டக்கூடிய துறையாகவுள்ளது.



1982 மார்ச் 10]

திரைப் படத்துறை வளர்ச்சி அடைய ஊக்கமளிக்கும் வகையில், திரை அரங்குகள் அதிகப்படுத்தும் முயற்சியாக, இக்காலத்திற்குப் பொருந்தாத விதிகளையும், கட்டுப்பாடுகளையும் தளர்த்தியுள்ளது. இதன் விளைவாக தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் எல்லாம், நல்ல வசதிமிக்க தரமான திரை அரங்குகள் குறிப்பிடத் தக்க அளவில் பெருகியுள்ளன. பொதுமக்களுக்குப் பாதுகாப்பளிக்கும் வகையில் டூரிங் திரை அரங்குகளில் சுலபத்தில் நெருப்புப் பிடிக்கும் கூரைகளை அகற்றிவிட்டு, சுலபத்தில் நெருப்புப் பிடிக்காத கூரைகளை அமைக்கவேண்டும் என்ற ஆணைக்கிணங்க அமைக்கப்படும் டூரிங் திரை அரங்குகளின் கட்டுமானச் செலவு பெரிய அளவில் உயர்ந்துள்ள நிலையில் உரிமக் காலத்தை ஐந்து ஆண்டுகளாக உயர்த்த வேண்டுமென்ற பரவலான கோரிக்கைகளை ஆழ்ந்து பரிசீலித்து ஐந்து ஆண்டுகளாக இப்பொழுது உயர்த்தப்பட்டுள்ளது. அதே சமயத்தில் இவ்வரசு திரைப்படங்களுக்குச் செல்லும் பொதுமக்களுக்குத் தேவையான எல்லா வசதிகளும்—பாதுகாப்புகளும் கிடைக்குமாறு பார்த்துக் கொள்வதில் கண்டிப்பாக இருக்கிறது.

ஆபாச திரைப்படச் சுவரொட்டிகள், விளம்பரங்கள் ஆகியவைகளை தடுக்கும் நோக்கத்தோடு ஒரு சட்டம் இயற்ற தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

## சுற்றுலாத்துறை—கொள்கை விளக்கக் குறிப்பு.

விரைந்து பறந்து செல்லும் ''ஜெட்'' விமான ஊர்திகளின் பெருக்கமும், பிறவகைப் போக்குவரத்து வசதிகளின் மேம்பாடும் சுற்றுலாப் பயணிகளின் பயணத்தை உலகெங்கும் மிகப்பெரிதும் விரிவாக்கியுள்ளது. சுற்றுலாத் துறையில் மலர்ந்துள்ள இந்த வளர்ச்சிப் போக்குக்கு நம்நாடு விதி விலக்கன்று. உலக நாடுகள் எங்கணும் வளரும் கலைத் தொழிலாகச் சுற்றுலா உருவாகி வருகிறது. அயல்நாட்டுச் செலாவணியை பெருமளவில் ஈட்டித்தரும் சிறந்த வாயிலாகவும் சுற்றுலா அமைகிறது. சுற்றுலா வளர்ச்சியால் அயல்நாட்டு செலாவணி கொழிப்பது ஒரு புறமிருக்க, சுற்றுலாத் தலங்களிலும், அவற்றைச் சுற்றிலும் நேராகவும், மறைமுகமாகவும் பல்திறப்பட்ட வேலைவாய்ப்புக்கள் உருவாகின்றன. இந்நாட்டில் தொன்றுதொட்டு நிலவி வரும் கைவினைத் தொழில்கள், குடிசைத் தொழில்கள் போன்ற தொழில் வகைகள் வளர்ச்சி பெறுவதற்கும் வாய்ப்புகள் அமைகின்றன. கைவினைப் பொருள்களையும் குடிசைத் தொழில் பொருள்களையும் சுற்றுலாப் பயணிகள் ஆர்வத்தோடு விரும்பி வாங்குவதால் அத்தொழில்கள் ஊக்குவிக்கப்படுவதோடு, உள்ளூர் மக்களின் வாழ்க்கை தரம் உயரவும் வழிகோலி உள்ளது. சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் இந்நாட்டிற்கும், இம்மாநிலத்திற்கும் வருகை தருவதால் இந்நாட்டின் சமூக, பொருளாதார, பண்பாட்டு வாழ்க்கை நிலைமைகளில் சீரிய மாறுதல்கள் ஏற்பட்டு

வருகின்றன. இதனால் அனைத்து நாட்டு மக்களின் நட்புறவும் நல்லெண்ணமும் வளர்கிறது. இத்தகைய பண்பாட்டுப் பரிமாற்றம் வரவேற்கத்தக்க இனிய சூழ்நிலை உருவாக்குகிறது. இவ்வாறு சுற்றுலாத் தொழில் அனைத்து நாடுகளிடையே ஒற்றுமை உணர்வையும் நம்மிடையே தேசிய ஒருமைப்பாட்டையும் வளர்ப்பதில் பெரும் பங்கேற்கிறது.

2. கதிரவன் எழுவதையும், வீழ்வதையும், காட்சியாக்கும் கவினார்ந்த கடற்கரையைக் கொண்டுள்ள தமிழ்நாடு, சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்ற சுற்றுலாத்தலமாக அமைகின்றது. இங்குள்ள காடுகளும், கண்டோர் வியக்கும் அருவிகளும், நீர் நிலைகளும், கலை நுட்பமும், கற்பனைத் திறனும் வாய்ந்த திருக்கோயில்களும் பொலிவார்ந்த விலங்குப் புகலிடங்களும், மகிழ்வூட்டும் மலைப் பகுதிகளும், சுற்றுலாப்பயணிகளின் சிந்தையைக் கவர்ந்து அவர்களை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்துகின்றன. சாலைப் போக்கு வரத்து, இரயில் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து ஆகியவற்றின் மூலம் இவ்விடங்கள் அனைத்திற்கும் எளிதில் சென்று வரத்தக்க வகையில் ஆவன செய்யப்பட்டுள்ளன. அறிவியல், தொழிலியல், தொழில் நுணுக்கவியல் வளர்ச்சிகளால் புதுமைகள் மலர்ந்தாலும் தொல்மரபு, கலைத்திறம், பண்பாடு தழுவிய பழக்க வழக்கங்கள் முதலிய பழமையான நல்லியல்புகள் புதுமையோடு இணைந்து பொலிவுறுவதைச் சுற்றுலாப் பயணிகள் ஆர்வத்தோடு கண்டு மகிழ்ந்து போற்றுகின்றனர்.

3. அண்மைக் காலம் வரையில் இம்மாநிலத்தில் சுற்றுலாப் பயணிகளுக்கு அரசு ஓரளவே முதன்மை அளித்து வந்தது. சுற்றுலா இடங்களை மேம்படுத்துவதற்கும், தேவையான வசதிகளுக்கு வகை செய்வதற்கும் அதிகச் செலவாகிறது. சுற்றுலா வாயிலின் மூலம் கிட்டும் நலன்களை இந்த அரசு முழுவதுமாக அறிந்துள்ளதால் சுற்றுலா வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி உதவி அண்மை ஆண்டுகளில் அதிகரித்துள்ளது. இதற்காக 1975–76 ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 22.70 இலட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது. இத்தொகையின் அளவு படிப்படியாக உயர்த்தப்பட்டு 1982–83 ஆம் ஆண்டில் ரூபாய் 140.40 இலட்சமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

4. தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக் கொள்கையின் நோக்கங்கள் குறித்து சுருக்கமாகக் குறிக்க விழைகிறோம்.

(1) அயல்நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகளை அதிக அளவிற்கு ஈர்க்கும் வண்ணம் அனைத்து நாட்டு முதன்மை வாய்ந்த இடங்களை மேலும் மேம்படுத்துதல், அயல்நாடுகளிலிருந்து இந்நாட்டிற்கு அந்நியச் செலாவணியை அதிக அளவிற்கு ஈட்டித் தருவதற்கு வழி வகுத்தல் ;



(2) உள்நாட்டுப் பகுதியில் சுற்றுலாவை வளர்ப்பதற்காகச் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை மேம்படுத்துதல், அதன் மூலம் தேசிய ஒருமைப்பாட்டை வளர்ப்பதோடு பயணிகளுக்கும் கைவினைத் தொழில்களுக்கும் ஊக்கமளித்தல் ;

(3) தமிழ்நாட்டின் சிறந்த பண்பாட்டு மரபைத் தமிழ் நாட்டு மக்கள் அறிந்துகொள்ளச் செய்வதற்கு ஊக்கமளிக்கவும் பொழுதுபோக்கு வாய்ப்புகளுடன் கல்வி அறிவையும் இணைத்து அளிப்பதற்காக இம்மாநிலத்தில் அதிகமாக நம் நாட்டவர் அறியாத சுற்றுலா இடங்களை மேம்படுத்தி, இம் மாநிலத்திற்குள் சுற்றுலாப் பணியை வளர்த்தல் :

(4) சுற்றுலாப் பயணிகளுக்கு, சுற்றுலாவில் கிடைக்கும் பயன்கள் உரிய வகையில் கிடைக்கப் பெறவில்லை எனும் குறையை போக்கும் வண்ணம் ஓரளவு வசதி வாய்ப்புள்ள சுற்றுலாப் பயணிகளுக்கும் அதிகச் செலவு இல்லாத வகையில் இடவசதிக்கு வகை செய்தல் :

சுற்றுலா பயண வட்டங்கள் மேம்பாடு :

5. கடந்த ஆண்டின் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டதை போல் முக்கியச் சுற்றுலா பயண வட்டங்களை திட்டமிட்டு ஒருங்கிணைத்து மேம்படுத்துவதற்கு உறுதி செய்யும் பொருட்டு இந்திய அரசோடு கலந்தாலோசித்து மூன்று சுற்றுலா பயண வட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

(1) சென்னை—மாமல்லபுரம்—திருக்கழுக்குன்றம்—காஞ்சிபுரம்—திருச்சிராப்பள்ளி—தஞ்சாவூர்—புதுக்கோட்டை—மதுரை—இராமேசுவரம்—கன்னியாகுமரி—குற்றாலம்—திருவனந்தபுரம்

(2) சென்னை—கிருஷ்ணகிரி—ஒகேனக்கல்—ஏர்க்காடு—கோயம்புத்தூர்—உதகமண்டலம்—முதுமலை—மைசூர்— பங்களூர்.

(3) இராமேசுவரம்—மதுரை—கொடைக்கானல்—புதுக்கோட்டை—திருச்சிராப்பள்ளி—தஞ்சாவூர்—மாமல்லபுரம்—சென்னை.

6. சுற்றுலா பயண வட்டங்களை மேம்படுத்துவதற்காக சுமார் 70 கோடி ரூபாய் மொத்த மூலதனச் செலவில் பெருந்திட்டம் ஒன்றை தயாரித்து மத்திய அரசு நிதி உதவி வேண்டி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இச் சுற்றுலா பயண வட்டங்களின் அடிப்படையில் மேம்பாட்டுக்குரிய வரை படத்தையும் இந்திய அரசுக்கு அனுப்பியுள்ளோம். 1981 ஆம் ஆண்டு டிசம்பரில் புதுடில்லியில் நடைபெற்ற மாநில சுற்றுலாத் துறை அமைச்சர்களின் மாநாட்டில் இத்திட்டம் குறித்து முழுமையாக விவாதிக்கப்பட்டது. மத்திய அரசின் நிதியுதவி குறித்த நமது செயற் குறிப்புகள் இந்திய அரசின் ஆய்வில் உள்ளது.

[1982 மார்ச் 10

மாமல்லபுரம் :

7. மாமல்லபுரம் மேம்பாட்டிற்காக ரூபாய் 6 கோடி செலவில் பெருந்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டத்தில் முன்னுரிமை அளிக்கும் வகையில் பின்வரும் ஐந்து திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன :—

(1) சுற்றுச் சாலை ஒன்றை அமைத்தல்.
(2) போக்குவரத்து முனைகளை அமைத்தல்.
(3) விற்பனை கடைகளைக் கட்டுதல்.
(4) எழில் வளாகம் (Vista formation) உருவாக்குதல்.
(5) மனமகிழ்வு வசதிகள்.

மேற்கூறிய ஐந்து திட்டங்களை மேம்படுத்துவதற்காக முதல் தவணையாக 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கும்படி இந்திய அரசைக் கேட்டுள்ளோம். மைய அரசு இன்னும் அதற்கு ஏற்பளிக்க வில்லை.

மாமல்லபுரத்தில் உள்ள கற்றேர்ப்புறத்தில் (ஐந்து தேர் பகுதி) அல்லது கடற்கரைக் கோயிலுக்கு அருகில் '' ஒலி—ஒளிக் '' காட்சி அமைப்பது குறித்து மாமல்லபுரம் மேம்பாட்டிற்கான சுற்றுலாப் பெருந்திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதன் படி இம்மாநில அரசு இத்திட்டத்தை ரூபாய் 47·00 இலட்சம் செலவில் நிறைவேற்ற வேண்டுமென முடிவு செய்தது. இத் திட்டத்தின் மூலதனச் செலவிற்காக ரூபாய் 20·00 இலட்சம் வழங்க மத்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளது. இத் திட்டத்தைத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நிறைவேற்றும். மேலும் இத்திட்டத்தைத் தொடர்ந்து பராமரிப்பதற்காகும் செலவையும் அக்கழகமே ஏற்கும்.

9. மாமல்லபுரத்தைக் காண வரும் குறைந்த வருமானமுள்ள சுற்றுலாப் பயணிகளின் பயனுக்காக அடிப்படை வசதிகளுடன் கூடிய ஓய்வுக் கூடத்தைக் கட்டுவதற்கென்று 1978-79-ல் ரூ. 1,81,814 வழங்கப்பட்டது. விடுமுறை நாட்களில் பயணிகள் தங்கவும், உணவு சமைக்கவும் ஏற்ற தங்குமிடங்களை அமைப் பதற்கென்று 1979-80-ல் ரூ. 3·50 இலட்சம் வழங்கப்பட்டது. அடுத்த ஆண்டு கடற்கரைக் கோயிலுக்கருகில் உள்ள தங்கு மிடத்தைச் சுற்றி வேலி அமைப்பதற்கும் சிற்றுண்டிச்சாலை, பாதுகாவலர் அறை ஆகியவற்றைக் கட்டுவதற்கும் ரூபாய் 2·20 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேற்கூறிய மூன்று பணிகளை யும் மேற்கொள்ளும் பொருட்டு 1981-82-ல் கூடுதல் ஆக ரூ. 1·63 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

10. மாமல்லபுரத்தில் ரூ. 40·00 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் திறந்தவெளி அரும்பொருட்காட்சியகம் ஒன்றை அமைப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த அரும் பொருட் காட்சியகத்தில் முக்கியமான வரலாற்று நிகழ்ச்சிகளும், தமிழ் இலக்கியக் காட்சிகளும் சிற்பங்களாகச் செதுக்கப்படும். கடற் கரைக்கருகில் சுமார் 25 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள பூங் காவில் இக்காட்சியகத்தை அமைக்க கருதப்பட்டுள்ளது. இது



1982 மார்ச் 10]

தொடர்பான தொடக்கப் பணிகளை நிறைவேற்றும் பொருட்டு 1980-81-ல் ரூ. 9·80 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு 1981-82-ல் கூடுதல் ஆக ரூ. 10·00 இலட்சம் வழங்கப் பட்டது. இக்காட்சியகத்தில் சிற்பங்களைச் செதுக்குவதற்குரிய மூலக் கருத்துக்களை தெரிந்தெடுப்பதற்கென துணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிக்கையை துணைக் குழு முடிவு செய்யும் நிலையில் உள்ளது.

11. மாமல்லபுரத்தில் '' ஒலி-ஒளிக் '' காட்சிக்கு வகை செய்யும் பொருட்டு 1982-83-ல் ரூபாய் 10·00 இலட்சம் ஒதுக்கீடு செய்யவும் தற்போதுள்ள தங்குமிடங்களை 1982-83-ல் ரூபாய் 5·00 இலட்சம் செலவில் மேம்படுத்தவும் குறைந்த வருமானமுள்ள சுற்றுலாப் பயணிகளுக்கென்று கூடுதல் தங்கு மிட வசதிகளை அளிக்கவும், கருதப்பட்டுள்ளது. மாமல்லபுரத் தில் சுற்றுலா அலுவலகக் கட்டிடம் ஒன்றைக் கட்டுவதற்கென்று ரூபாய் 2·50 இலட்சம் ஒதுக்கக் கருதியுள்ளது.

இராமேசுவரம் :

12. இராமேசுவரத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிப்பதை கருத்திற் கொண்டு இராமேசுவரத்தையும், அதைச் சுற்றியுள்ள இடங்களையும் மேம்படுத்தும் வகையில் ரூபாய் 28·00 கோடி மூலதன ஒதுக் கீட்டுடன் பத்து ஆண்டுகளில் நிறைவேற்றும் பொருட்டு பெரும் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இராமேசுவர மேம் பாட்டு திட்டம் பல வகையிலும் அனைத்து நாட்டு உதவி பெறத் தகுதி வாய்ந்த திட்டமாக விளங்குவதால், குறிப்பாக இத் திட்டம் நம் நாட்டிற்கு கூடுதல் அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் என்பதாலும், உலக வங்கி போன்ற அனைத்து நாட்டு நிதி யுதவி அளிக்கும் நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெறும் பொருட்டு 1980-ல் மத்திய அரசை நாம் அணுகினோம். மைய அரசின் பதிலை எதிர் நோக்கியுள்ளோம். இதற்கிடையில் இம் மாநில அரசின் நிதி நிலைக் கேற்ப முக்கியமான மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1979-80-ஆம் ஆண்டில் இராமேசுவரத்தில் ரூ. 3·00 இலட்சம் செலவில் துயில் கூடம், சுற்றுலாத் தகவல் நிலையம், ஆகியவற்றைக் கட்ட அனுமதி வழங்கப்பட்டு கட்டிடப் பணிகள் முடிக்கப்பட்டு விட் டன. செலவு வரம்பிட்டுச் சுற்றுலாப் பயணம் மேற்கொள்ளும் பயணிகளுக்காக ( Budget Tourists ) இராமேசுவரத்தில் இளைஞர் இல்லம் (Youth Hostel) ஒன்றைக் கட்டவும், ரூ. 10·00 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இந்த இல்லத்தைக் கட்டி வருகிறது. பாம்பன் சாலைப் பாலம் கட்டி முடிக்கப்பட்டவுடன் வடஇந்தியாவிலிருந்து ஏராளமான சுற்றுலாப் பயணிகள் இராமேசுவரத்திற்கு வருவர். இராமேசுவரம் காசிக்கு இணையாக திருத்தலமாகவும் இந்தியா

லுள்ள பயணத் தலங்களுள் மிக முக்கியமானதாகவும் இருப்பதால் இங்கு வடஇந்தியத் திருத்தல பயணிகள் ஏராளமாக வரும் வாய்ப்புள்ளது. இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கான இட வசதி அறவே போதாது. சாலைப் பாலம் கட்டிமுடிக்கப்பட்ட வுடன் ஏராளமான பயணிகள் இங்கு வருவர் என்பதை எதிர் பார்த்து இராமேசுவரத்தில் அடிப்படை வசதிகளை மேலும் பெருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே குறைந்த வருமானமுள்ள சுற்றுலாப் பயணிகளுக்கு இட வசதி செய்து கொடுக்கவும், வெளி நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் கூடாரங் களில் தங்குவதை விரும்புவர் என்பதால் அவர்களுக்குக் கூடா ரம் அமைத்துக் கொடுக்கவும், அதற்குப் பக்கத்தில் குடில் களையும், படகுத் துறையையும் கட்டவும் கருதப்பட்டுள்ளது. இதற்கு 1982-83-ஆம் ஆண்டில் ரூ. 20·00 இலட்சம் செலவாகும்.

கன்னியாகுமரி.

13. கன்னியாகுமரி சுற்றுலாப் பயணிகள் ஏராளமாய் வரக் கூடிய இடமாக இருப்பதால், இதனையும் வட்டக்கோட்டை உட்பட சுற்றுப் புறங்களையும் சுமார் ரூபாய் 16.00 கோடி செல வில் மேம்படுத்த பெருந்திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. மதிப்பு மிக்க இத்திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசிடம் இருந்தோ உலக வங்கியிடமிருந்தோ நிதி உதவி தேவைப்படுகிறது. மாமல்லபுரம், இராமேஸ்வரம் ஆகிய இவ்விரு சுற்றுலாத் தலங் களில் நிறைவேற்றப்பட்டு வருவது போலவே மாநிலத் திட்ட வரம்பிற்குள் முன்னுரிமைப் பணிகளை நிறைவேற்ற நடவடிக் கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. செலவு வரம்பிட்டுச் சுற் றுலாப் பயணம் மேற்கொள்ளும் பயணிகளுக்கு துயிற்கூடம் (இளைஞர் இல்லம்) கட்ட 1980-81—ஆம் ஆண்டில் ரூபாய் 5.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. கன்னியாகுமரியில் சுற்றுலா அலுவலகம் கட்ட ரூபாய் 1.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. இப்பணிகளை நிறைவேற்றும் பொறுப்பு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாலையில் கதி ரவன் மறையும் அழகுக் காட்சியைக் சுற்றுலாப் பயணிகள் கண்டு களித்த பின்னர் இரவில் அங்கு தங்கி மறுநாள் காலைக் கதிரவன் கீழ்வானில் உதயமாகும் கவின் காட்சியினைக் காணப் பயணிகள் விழைவர்.

அதுவரை அவர்கள் உல்லாசமாகப் பொழுதுபோக்க கன்னியா குமரியில் போதிய வசதிகள் இல்லை. இந்தியாவில் சுற்றுலாச் சிறப்பு வாய்ந்த கன்னியாகுமரியில் கலை நிகழ்ச்சிகள். இசை நிகழ்சசிகள் நடத்தவும் பொது விழாக்கள் மாநாடுகள் பட்டி மன்றங்கள் நடத்தவும் கலையரங்கு ஒன்று அமைக்க வேண்டியது அவசியமான உணரப்பட்டுள்ளது. எனவே ரூ. 15 இலட்சம் செல வில் கன்னியாகுமரியில் அரங்கம் ஒன்று கட்ட கருதப்பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் இதற்கு ரூபாய் 5·00 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.





தகமண்டலம்.

14. மலைப் பகுதி வளர்ச்சித்திட்டத்தின் கீழ் உதகமண்டலம் ஏரியையும் அதன் சுற்றுப்புறங்களையும் மேம்படுத்தும் பணியை நாம் மேற்கொண்டுள்ளோம். உதகமண்டலத்தையும் முதுமலை யையும் இணையாக மேம்படுத்த முதல்வர் விரிவான உத்தரவுகள் அளித்துள்ளார். அவ்வாறே அரசு துறைகளிடமிருந்தும், நிதி உதவி நிறுவனங்களிடமிருந்தும் நிதி திரட்டி, அதனைக்கொண்டு உகதமண்டலத்தையும், முதுமலையையும் மேம்படுத்தக் கருதப் பட்டுள்ளது. ஏற்கெனவே மேற்கொண்டுள்ள பணிகளில் உதக மண்டலம் ஏரியும் ஒன்றாகும். மலைப்பகுதி வளர்ச்சித் திட் டத்தின் கீழ் இதனை நிறைவேற்ற 1976–77 முதல் 1978–79 வரை ரூபாய் 16.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது உதகமண்ட லத்தில் துயிற்கூடம் ஒன்று கட்டுவதற்காக ரூபாய் 10.00 இலட் சமும், தொட்டபெட்டாவில தொலைநோக்கி இல்லம் (Delescore House) ஒன்று கட்ட ரூபாய் 2.00 இலட்சமும் செலவிட 1978–79-ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இப்பணி கள் நிறைவேறி வருகின்றன. இயற்கைக் காட்சிகளை எதிரொ ளிக்கும் கண்ணாடி மாளிகைக் கட்டவும் (Mirror image Building) சிறுவர் பூங்கா, இரயில் வண்டி வாங்கவும் அதற்கு வேண்டிய இருப்புப் பாதை அமைக்கவும், பிற சாதனங்கள் வாங்கவும், சிறுவர் களியாட்டப் பூங்கா அமைக்கவும் 1980–81-ஆம் ஆண்டில் ரூபாய் 20.50 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. தமிழ்நாடு சுற் றுலா வளர்ச்சிக் கழகம் இதனை நிறைவேற்றி வருகிறது. இயற்கை எழில்கொஞ்சும் உதகமண்டலம் ஏரிக்கு மேலும் எழில் ஊட்டவும் முதுமலையில் துயிற்கூடமும், சிற்றுண்டியகமும் கட்டவும் 198182 ஆம் ஆண்டில் ரூபாய் 10.00 இலட்சமும் அனுமதிக்கப்பட்டது. உதகமண்டலம் ஏரியை மேலும் எழில் படுத்த 1982–83 ஆம் ஆண்டில் ரூபாய் 5.00 இலட்சம் ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது. முதுமலையில் இளைஞர் இல்லம் கட்டுவதற்கு ஏற்கெனவே அனு மதிக்கப்பட்ட தொகைக்கு மேல் ரூபாய் 4.00 இலட்சம் ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது. நீலகிரி மலையில் குன்னூர் நகரைக் காண ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். ஆனால், அங்கு இடவசதி போதாது என்பதால், அங்கும் இளைஞர் இல்லம் ஒன்று கட்டக் கருதப்பட்டுள்ளது. 1982–83 ஆம் ஆண்டில் இதற்கு ரூபாய் 4.00 இலட்சம் ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது. உதகமண்டலத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் பொதுவாக அங்கும் அதை சுற்றியுள்ள இயற்கை எழில் கொஞ்சும் பல இடங்களைக் காண விரும்புவர். ஆனால், இவ்விடங்களையெல் லாம் சுற்றி பார்ப்பதற்குச் சரியான போக்குவரத்து வசதி இல் லாமையால் அவர்கள் இவற்றைக் காண அதிக நேரம் செலவிட வேண்டியிருக்கும். உதகமண்டலத்திற்கு வரும் சுற்றுலாப் பயணி களின் வசதிக்காக சிறு பேருந்துகள் (Mini Buses) விடுவதற் கெக 1982–83 ஆம் ஆண்டில் ரூபாய் 2.00 இலட்சம் ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது. தொட்டபெட்டாவுக்கும், சாரிங்கிராசுக்கும மின்கம்பிப்பாதை (Rope Way) அமைக்கக் கருதி அதற்கான சாத்தியக்கூறு அறிக்கை கேட்கப்படவுள்ளது.

கொடைக்கானல்.

15. இங்குள்ள ஏரியை மேலும் எழிலூட்டும் வகையில் சிறு
பணிகள் சிலவற்றை நிறைவேற்ற 1977–78-ஆம் ஆண்டு ரூபாய்
58,100 அனுமதிக்கப்பட்டது. இப்பணி நிறைவுற்றது. இங்
குள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக வளாகத்திற்குள்
சிற்றுண்டியகம் ஒன்றைக் கட்ட 1979–80-ஆம் ஆண்டு ரூபாய்
2.80 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. மேற்குத் தொடர்ச்சிமலை
வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 'கொடைக்கானலில் கோக்கர்ஸ்வாக்
( Coakers walk) என்னுமிடத்திலும் குறிஞ்சி ஆண்டவர் கோயிலி
லும் தொலை நோக்கி இல்லங்கள் ரூபாய் 1.60 இலட்சம் செலவில்
கட்டப்பட்டுள்ளன. மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சித்
திட்டத்தின்கீழ் கொடைக்கானலில் துயிற்கூடம் ஒன்றைக் கட்ட
வும் 1978–79 ஆம் ஆண்டு ரூபாய் 7.03 இலட்சம் அனுமதிக்கப்
பட்டது. கொடைக்கானல் மிகவும் புகழ்வாய்ந்த மலைவாழ் நகர
மாகும். எனவே, இங்கு வரும் சுற்றுப் பயணிகளுக்கு மேலும்,
இடவசதி செய்து கொடுக்க வேண்டும். இதற்காக 1982–83
ஆம் ஆண்டில் கொடைக்கானலில் மாளிகை ஒன்றையும், அதனை
சுற்றியுள்ள நிலங்களையும் கையகப்படுத்த அரசு ஆய்ந்து வரு
கிறது.

பிச்சாவரம்.

16. தென்னாற்காடு மாவட்டத்தில் பிச்சாவரத்தை சுற்றுலா
இடமாக மேம்படுத்தும் திட்டத்தின் முதற்கட்டமாகச் சில
பணிகள் மேற்கொள்ளப்பட்டன. சமையலறை கொண்ட இரு
துயிற்கூடங்களையும், உணவருந்தும் கூடமும், ஒரு குடிலும் படகு
துறையும் கட்டவும் சாலை போட நிலத்தைக் கையகப்படுத்தவும்
1978–79 ஆம் ஆண்டில் ரூபாய் 4.50 இலட்சம் அனுமதிக்கப்
பட்டது. இரண்டாம் கட்டமாக செங்கற் சுவருடன் வளைவு
கூரை அமைந்த குடில்கள் கட்டவும் சிறு சிற்றுண்டியகம், வர
வேற்பு இல்லம், சமையற் கூடம், கழிவறை கட்டவும் படகும்
துறை கட்டவும் 1979–80 ஆம் ஆண்டில் ரூபாய் 3.00 இலட்சத்
அனுமதிக்கப்பட்டது. படகு இல்லம் கட்டவும் பிச்சாவரத்தைக்
காணவரும் சுற்றுலாப் பயணிகளுக்கு உல்லாசப் படகுகள் வாங்
கவும் 1981–82 ஆம் ஆண்டில் ரூபாய் 5.00 இலட்சம் அனுமதிக்
கப்பட்டது. இது மேற்படி திட்டத்தின் மூன்றாம் கட்டப் பணி
யாகும். இப்பணிகள் நடந்தேறி வருகின்றன. 1982–83 ஆம்
ஆண்டில் ரூபாய் 5.00 இலட்சம் செலவில் குடில்கள் கட்டவும்,
உல்லாசப் படகுகள் வாங்கவும் கருதப்பட்டுள்ளது. இவை தவிர,
பிச்சாவரத்தை மாவட்ட உலாத் தலமாக மேம்படுத்த கருதப்



குற்றாளம்—

17. அருவி என்றாலே குற்றாலம் தான் நம் நினைவுக்கு
வரும். குற்றாலம் புகழ் பெற்ற சீரிய அருவியாகவும், நோய்
தீர்க்கும் மருந்து மலையாகவும் திகழ்கிறது. எனவே, ஆண்டுக்கு
ஆண்டு சுற்றுலாப் பயணிகள் இங்கு திரண்டு வருகின்றனர். இவர்
களுக்கு இட வசதியும், போக்குவரத்து வசதியும் செய்து
கொடுக்க வேண்டும். மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத்
திட்டத்தின் கீழ் குற்றாலத்தில் துயிற்கூடம் கட்ட 1978–79 ஆம்
ஆண்டில் ரூபாய் 7.97 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. குற்றால
நகரியம் அதனுடைய நிலத்தில் துயிற்கூடம் கட்டப்போவதால்
இத்தொகையை மேற்படி நகரியத்திடம் அளிக்கக் கருதப்பட்
டுள்ளது. குற்றாலத்தில் மேலும் இட வசதியும், போக்குவரத்து
வசதியும் செய்து கொடுக்க வேண்டும். சுற்றுலாப் பயணிகளுக்கு
மேலும் அதிக இட வசதி செய்து கொடுப்பதற்காகக் குற்றாலத்தில்
மாளிகை ஒன்றை சுற்றுப்புற நிலங்களுடன் கையகப்படுத்து
வது பற்றியும் அரசு ஆய்ந்து வருகிறது. குற்றாலத்தை மாவட்ட
உலாத்தலமாக மேம்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

ஏர்க்காடு—

18. ஏர்க்காடு ஏரியை மேலும் எழில் கூடிய மையமாக்கும் திட்டத்தின்
முதற்கட்டமாக, சிறு சிற்றுண்டியகம்-சமையற்கூடம், கழிப்பறைகள்,
இருக்கைகள், தங்குமிடங்கள் கட்டவும், இயற்கை எழில் கொஞ்சும் சூழலை
அமைக்கவும், பாதை, நடைபாதை, படகுத்துறை அமைக்கவும் 1977-78 ஆம்
ரூ. 2·06 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. இரண்டாம் கட்டமாக
ஏரியைச் சுற்றியுள்ள தோட்டத்தை மேம்படுத்தவும் உல்லாசப்
படகுகள் வாங்கவும். படகுத் துறையையும். சிற்றுண்டிச் சாலை
யையும் இணைத்து வழி ஒன்று அமைக்கவும். குழந்தைகளுக்கு
விளையாட்டுத் திடல் வசதி செய்து கொடுக்கவும் 1978-79 ஆம்
ஆண்டில் ரூ. 1·66 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது.
இத்திட்டத்தின் மூன்றாவது கட்டமாக. 1979-80 ஆம் ஆண்டில்
துயில் கூடம் ஒன்று கட்டுவதற்காக ரூ. 3·00 இலட்சம் அனுமதிக்
கப்பட்டது. மேற்கூரிய பணிக்ாக 1981-82 ஆம் ஆண்டில் கூடு
தலாக ரூ. 44,000 வழங்கப்பட்டது. இரவு நேரத்தில் சேலம்
நகரில் கண்ணைச் சிமிட்டும் வண்ண விளக்குகளைக் கண்டு களிக்
கவும் பரந்த நிலப்பரப்பின் இயற்கை எழிலை ரசிக்கவும், "லேடீஸ்
சீட்'' என்ற இடத்தில் 'தொலை நோக்கி இல்லம், ஒன்று அமைக்
கவும் ரூ. 1.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டது.

ஒகேனக்கல் :

19. ஒகேனக்கல்லில் துயில் கூடம்—சமுதாயக் கூடம் ஒன்று
கட்டுவதற்காக 1979-80 ஆம் ஆண்டில் ரூ. 3·00 இலட்சத்திற்கு
அனுமதி வழங்கப்பட்டது. இதற்காக அண்மையில் மேலும்
ரூ. 30,000 அனுமதிக்கப்பட்டது. ஒகேனக்கல்லில் காவிரிக்கு

குறுக்கே தொங்கு பாலம் ஒன்று அமைக்க 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 7.50 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. ஒகேனக்கல்லை மாவட்ட உலாத் தலமாக மேம்படுத்துவதென முடிவு செய்யப் பட்டுள்ளது.

ஏலகிரி :

20. ஏலகிரியில், ஒவ்வொன்றும் இரண்டு தொகுதிகள் கொண்ட இரண்டு குடில்கள் கட்டுவதற்காக 1978–79 ஆம் ஆண்டில் ரூ. 1.00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. இந்தக் குடில்கள் வனத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன அக்குடில்களுக்கு குடிநீர் வசதியையும் ஏனைய அடிப்படை வசதி களும் செய்து கொடுப்பதற்காக 1980–81 ஆம் ஆண்டில் கூடுத லாக ரூ. 1.00 இலட்சம் வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. ஏலகிரி மலையை மேம்படுத்துவதற்காக மாவட்ட அளவில் செயற் குறிப்புகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

மண்டபம்.

21. மண்டபத்தில் படகுத் துறை, துயிற்கூடம், பொது குளியல் அறை, சமையல் கூடம் ஆகியவற்றை அமைப்பதற்காக 1978–79 இல் ரூபாய் 2.30 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. அப்பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. சிற்றுண் யகம் ஒன்று கட்டுவதற்காக 1980–81 ஆம் ஆண்டில் ரூ. 3.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டது.

சென்னை.

22. சென்னை மாநகருக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருகிறது. இதனால், சுற்றுலாப் பயணிகளுக்கு, அவர்களின் செலவு வரம் பிற்குள் சென்னையில் இட வசதி கிடைப்பது மிகவும் கடினமாக இருக்கிறது. இந்தக் குறைபாட்டைப் போக்கி சென்னை மாநக ரில் குறைந்த வருமானமுள்ள சுற்றுலாப் பயணிகளுக்குப் போதிய இட வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார். இதனால், உள்நாட்டுச் சுற்றுலாப் பயணி களோடு சென்னை வழியாக நமது நாட்டுக்கு வரும் அனைத்து நாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் பயனடைவர். துயில் கூடம் சிற்றுண்டியகம், சுற்றுலாப் பேருந்துகளை நிறுத்துவதற்கு இட வசதி ஆகியவற்றுடன் கூடிய சுற்றுலா முகாமுக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்காக 1982–83 ஆம் ஆண்டில் ரூ. 12.50 இலட்சம் ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி.

23. திருச்சிராப்பள்ளி, இயல்பாகவே ஒரு சுற்றுலாத்தல மாக விளங்குவதோடு, திருவரங்கம், சமயபுரம், திருவானைக் காவல், குமாரவயலூர் ஆகிய திருத்தலங்களுக்குச் செல்வதற் கான ஒரு மையமாகவும் விளங்குகிறது. காவிரியிலிருந்து கொள்ளிடம் பிரிந்து செல்கின்ற இடமான முக்கொம்பில்





அண்மையில் சுற்றுலா மையம் ஒன்று தொடங்கி வைக்கப்பட்டது. திருச்சிராபபள்ளியில் செலவு வரம்பினைத் திட்டமிட்டுக் கொள்கிற சுற்றுலா பயணிகளுக்கு போதிய இடவசதி இல்லை. எனவே, இங்கு இளைஞர் இல்லம் ஒன்று கட்டவேண்டிய அவசர அவசியம் ஏற்பட்டுள்ளது. இளைஞர் இல்லம் ஒன்று அமைப்பதற் காக 1982–83 ஆம் ஆண்டில் ரூ. 10.00 இலட்சம் ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகளுக்கு சிறந்த முறையில் பணியாற்ற சுற்றுலா அலுவலகத்திற்காக கட்டிடம் கட்ட ரூ. 2.50 இலட்சம் ஒதுக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட உலாத்தலங்கள் :

24. மாவட்டங்களில் உள்ள உள்ளூர் மக்களுக்குக் குறிப்பாக கிராமப் புறங்களில் வாழ்கின்றவர்களின் பயனுக்கென உள்ளூர் சுற்றுலா வசதியை மேம்படுத்துவதற்காக மாவட்டம் ஒன்றுக்கு இரண்டு மையங்கள் **வீதம்** மாவட்ட உலாத் தலங்கள் ஏற்படுத்த அரசு திட்டம் வகுத்து **வருகிறது.** இதற்காக உலாத் தலங்களாக மேம்படுத்துவதற்கு வாய்ப்புள்ள பகுதிகள் தெரிந்து எடுக்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதிகளில் போக்குவரத்துப் பணி நடத்தும் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், அங்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கும் அவற்றை மேலும் கவர்ச்சி யூட்டி எழிற்படுத்துவதற்கும் தங்கள் உபரி நிதிகளிலிருந்து ரூ. 3.00 இலட்சம் முதலீடு செய்யும் என்று எதிர்பார்க்கப்படு கிறது. அவ்வாறு அந்த இடங்களில் வசதிகளை மேம்படுத்து வதால் அங்கு சென்று வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து, அதன் வாயிலாக முதலீடு செய்கின்ற அந்தந்தப் போக்குவரத்துக் கழகங்களின் வருவாயும் பெருகும். இந்தத் திட்டம் 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களிலேயே வகுக்கப் பட்டாலும் கூட பல போக்குவரத்துக் கழகங்களின் நிதி நிலைமை சரியில்லாததால் செயற்படுத்தப்படுவது தொடக்கத்தில் சற்று மந்தமாகவே இருந்தது. நிலைமை தற்போது சீரடைந்து வருகிறது. அடுத்து வரும் ஆண்டுகளில் இப்பணியில் நல்ல முன் னேற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பூம்புகார் சுற்றுலாத் தொகுதி கட்டபொம்மன் நினைவுக் கோட்டை :

25. பூம்புகார் சுற்றுலாத் தொகுதியையும், பாஞ்சாலங் குறிச்சி, கட்டபொம்மன் நினைவுக் கோட்டையையும் சுற்றுலாத் துறை மேற்கொண்ட பின்னர், கட்டிடங்களை நன்கு பராமரித்து சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதில் முக்கியத்துவம் அளிக்கப் பட்டு வருகிறது. பூம்புகாரில் உள்ள ஓய்வு இல்லத்தையும், சிலப்பதிகாரக் கலைக்கூடத்தையும் மேம்படுத்துவதற்காக 1981–82 ஆம் ஆண்டில் ரூ. 0.18 லட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. ரூ. 0.30 இலட்சம் செலவில் இலஞ்சி மன்றம் பாவை மன்றம், சங்கு, கிளிஞ்சல் வகைக் குடில்கள் ஆகியவற்றை சுற்றிலும் சுற்றுச் சுவர் கட்டுவதற்கும் ரூபாய் 0.95 இலட்சம்

செலவில் பார்வையாளர்கள் ஓய்வுக் கூடத்தைப் பழுது பார்ப்ப
தற்கும் 1982—83 ஆம் ஆண்டில் உத்தேசிக்கப்பட்டுள்ளன.
மாமல்லபுரத்தில் செய்யப்பட்டதுபோலவே பூம்புகார்ச் சுற்றுலாத்
தொகுதிகளில் கடல் அரிப்புத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்
படும். உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலா பயணிகளைக் கவரும்
வகையில், பூம்புகார் சுற்றுலாத் தொகுதி முழுவதையும் அழகு
படுத்த செயற்குறிப்புகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.
பாஞ்சாலங்குறிச்சி, கட்டபொம்மன் நினைவுக்கோட்டையில்
மின்சார விசையேற்றங்கள் மீண்டும் பொருத்தப்பட்டு விட்டன.
அடுத்து வரும் ஆண்டுகளில் அக்கோட்டையை மேலும் அழகு
படுத்த நடவடிககை எடுக்கப்படும். தேவி ஜக்கம்மாள் விழா
வின் போதும் மகாகவி சுப்பரமணிய பாரதியாரின் நூற்றாண்டு
விழாக் கொண்டாட்டங்களின் போதும் புதுக்கோட்டை வண்ண
விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டது.

வழிகாட்டிகளுக்குப் பயிற்சி அளித்தலும் சுற்றுலாத் தகவல் நிலையங்கள் தொடங்குதலும் :

26. தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களுக்கு வரும் வெளி
நாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கும், பிற மாநிலத்தைச் சேர்ந்த
உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கும் உதவுவதற்காகவும்,
பல்வேறு சுற்றுலாத் தலங்களைப் பற்றிய முழுமையான, அதிகார
பூர்வமான தகவல்கள் கொடுக்கவும், சுற்றுலா வழிகாட்டிகளுக்குப்
பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சுற்றுலா வளர்ச்சியின்
ஓர் அங்கமாக திருச்சிராப்பள்ளி விமான நிலையம், மதுரை
விமான நிலையம், தஞ்சாவூர், பம்பாய் மாநகர் ஆகிய இடங்களில்
1982—83 ஆம் ஆண்டுகளில் சுற்றுலாத் தகவல் நிலையங்கள்
ஏற்படுத்தவும் கருதப்பட்டுள்ளது. இதற்கு மொத்தம் ரூ. 5.00
இலட்சம் செலவாகும். இத்திட்டத்தின் முதல் கட்டமாக 1982—
83 ஆம் ஆண்டில் ரூ. 2.20 இலட்சம் ஒதுக்க உத்தேசிக்கப்பட்
டுள்ளது.

விளம்பரமும் மேம்பாடும் :

27. சுற்றுலாப் பணியை மேம்படுத்த வேண்டுமானால்,
விளம்பரம் இதற்கு இன்றியமையாத கருவியாகும். எந்த அள
வுக்கு சுற்றுலாப் பயணிகளைக் கவர்கிறோமோ அந்த
அளவுக்கு சுற்றுலாத்தலங்களையும் மேம்படுத்தமுடியும். அதிக
அளவிலான சுற்றுலாப் பயணிகளைக் கவர சுற்றுலா முக்கி
யத்துவம் வாய்ந்த இடங்கள் பற்றியும் அங்குள்ள வசதிகள்
பற்றியும் பல்வேறு விளம்பர வாயில்கள் மூலமாக உள்நாட்டிலும்
வெளி நாட்டிலும் பிரச்சாரம் செய்ய வேண்டியது மிகவும்
அவசியமாகும். இதற்காக துறை பல பிரசாரத் திட்டங்களை
மேற்கொண்டுள்ளது. இத்துறையின் வெளியீட்டுப் பிரிவு,
கையேடுகள், சிறு வெளியீடுகள், புத்தக வடிவிலான வெளியீடு
கள், விளம்பரத் தட்டிகள், வண்ணப்பட அஞ்சல் அட்டைகள்,
ஆகியவற்றை வெளியிட்டுள்ளது. இத்துறை ஏற்படுத்தப்



பட்டதிலிருந்து, பல வண்ணக் கையேடுகள், பல வண்ணச்
சிறு வெளியீடுகள், பல வண்ணச் சிற்றேடுகள் தமிழ்நாட்டி
லுள்ள சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இடங்களைப் பற்றி
குறிப்பிடுகிற கையேடுகள் தமிழ்நாட்டைப் பற்றி பல வண்ணங்
களாலான சிறு வெளியீடுகள் சென்னை, மதுரை, இராமேஸ்வரம்
திருச்சி, மாமல்லபுரம், உதகமண்டலம் போன்ற இடங்களைப்
பற்றிக் குறிப்பிடும் துண்டு வெளியீடுகளை வெளியிட்டுள்ளது. இத்
துறை சென்னை மாநகர சுற்றுலாப் பயணிகள் வழிகாட்டி
வரைபடம், 25 படங்கள் கொண்ட வண்ண அஞ்சலட்டை
கள், எட்டு வகையான விளம்பரத் தட்டிகள் ஆகியவற்றை
வெளியிட்டுள்ளது. ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில் பங்கு
கொண்ட சார்பாளர்களின் பயனுக்காக தமிழ்நாட்டைப்
பற்றிய வண்ணக் கையேடுகளை இத்துறை தமிழில் வெளி
யிட்டது. இத்துறையின் விளம்பர வெளியீடுகள், சுற்றுலா
அலுவலகங்கள் வாயிலாகவும் வேறு வகைகளிலும் இம்மாநி
லத்தைச் சுற்றிப்பார்க்க வந்த சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்
கப்பட்டன. விமானங்களில் பயணம் செய்வோருக்கு, இத்
துண்டு வெளியீடுகளை அளிப்பதற்காக இவை மத்திய அரசு
சுற்றுலா அலுவலகங்களுக்கும் வெளிநாட்டிலுள்ள ஏர் இந்தியா
அலுவலகங்களுக்கும் அனுப்பப்பட்டன. பயண முகவரமைப்
புகள், ஓட்டல்கள், ஏனையோருக்கும், இச் சுற்றுலா வெளி
யீடுகள் வழங்கப்படுகின்றன. சுற்றுலா விளம்பரத்தில் நிழற்
படங்கள், பயணப் பட்டிகை, விளம்பர சிலைடுகள் ஆகியவை
முக்கியமானவையாகும். நிழற்படங்கள், பயணப் பட்டிகை
விளம்பர சிலைடுகள் ஆகியவற்றைத் தொகுத்து வைப்பதற்
காக இத்துறையின் வெளியீட்டுப் பிரிவில் தனி நிழற்படப்
பிரிவு உள்ளது. சுற்றுலா முதன்மை வாய்ந்த இடங்களின்
நிழற்பட நெகடிவ்கள், வண்ண சிலைடுகள் சேகரிக்கப்பட்டு
அட்டவணையிடப்பட்டு, துறையில் வைத்து வரப்படுகின்றன.
இவை துறை வெளியீடுகள், பொருட்காட்சிகள், விளம்பரங்
கள், ஆகியவற்றில் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. செய்
தித் தாள்களுக்கும், பத்திரிகைகளுக்கும் இவை கொடுக்கப்படு
கின்றன. 1981—82-ல், "தென்னிந்தியாவை நோக்கி"
(Destination South India) என்ற திட்டத்தின் கீழ்
அயல்நாடுகளிலிருந்து வந்த பயண எழுத்தாளர்களுக்கும், நிழற்
படம் எடுப்பவர்களுக்கும், நிழற்படத் தொகுப்புகள் வழங்கப்
பட்டன.

பொருட்காட்சிகள் :

28. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகமும் கடந்த 9
ஆண்டுகளாக சென்னையில், போர் நினைவுச் சின்னத்திற்கு
அருகிலுள்ள "பொருட்காட்சித் திடலில்" அனைத்திந்திய
சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியை நடத்தி வருகிறது.
1981-ல் நடந்த பொருட்காட்சியின் வாயிலாக கழகத்திற்கு
ரூ. 14.80 இலட்சம் கிடைத்தது. ஆண்டுக்காண்டு பொருட்

காட்சி முதன்மையடைந்து வருவதை இது காட்டுகிறது. பொருட் காட்சித் திடலை மேம்படுத்தி, அதை நிலையான பொருட் காட்சியகமாக உருவாக்க அரசு திட்டமிட்டுள்ளது. நமது வேண்டுகோளுக்குச் செவிமடுத்து இந்திய அரசு, தீவுத் திடலில் 6.5 ஏக்கர் நிலத்தை மாநில அரசுக்கு மாற்றிக் கொடுத்துள்ளது. நிரந்தர பொருட் காட்சியகத்தை வடிவமைப்பதற்காகத் திறமைசான்ற கட்டடக் கலைஞர்களுக்கிடையே வடிவமைப்புப் போட்டி ஒன்று நடத்தக் கருதப்பட்டுள்ளது. மக்களிடையே சுற்றுலா மனப்பான்மையை உருவாக்கும் நோக்குடன் மாவட்ட மையங்களில் செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர் அலுவலகம் நடத்தும் முக்கியமான பொருட் காட்சிகளில் சுற்றுலாத் துறையும் பங்கேற்கிறது. புதுடில்லியில் அண்மையில் நடந்த 1981ஆம் ஆண்டு இந்திய அனைத்து நாட்டு வர்த்தகப் பொருட்காட்சியிலும் சுற்றுலாத் துறை பங்கு கொண்டது.

**பொருட்காட்சிகளும், விழாக்களும் :**

29. மாவட்டங்களில் சுற்றுலா முதன்மை வாய்ந்த இடங்களில் இத்துறை பொங்கல் சுற்றுலா விழாக்களை நடத்துகிறது. பொங்கல் விழாக் காலம்தான் தமிழ்நாட்டில் சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் வரும் காலமாகும். உதகமண்டலம், கொடைக்கானல், ஏர்க்காடு, ஏலகிரி போன்ற குறிஞ்சி நகர்களில் நடத்தப்படும் ''கோடை விழா'' செவ்வையாக நடைபெற இத்துறை உதவுகிறது. இப்பணி 1982-83ஆம் ஆண்டிலும் தொடரும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் :

30. 1971ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பெருமளவில் தனது பணிகளை விரிவுபடுத்துவதில் விரைவாக முன்னேறியுள்ளது. தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்குத் தகுந்த அடிப்படையான வசதிகளுக்கு வகை செய்வதற்கு 1977ஆம் ஆண்டிலிருந்து இக்கழகம் வணிக அடிப்படையில் சீரிய மாற்றம் பெற்றது. இக்கழகத்தின் வருமானம் 1971—72ல் ரூ. 4.58 இலட்சமாக இருந்து; 1980—81ல் ரூ. 164.51 இலட்சமாக உயர்ந்துள்ளது. 1981-82-ல் ரூ. 225 இலட்சம் எதிர்பார்க்கப்படுகிறது. 1982-83ஆம் ஆண்டு திட்ட மதிப்பீடு ரூ. 300 இலட்சமாகும். இக்கழகம் மேற்கொண்டுள்ள முக்கிய வளர்ச்சிப் பணிகளாவன.

உணவகங்கள் (ஓட்டல்கள்)

31. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1971-ல் அமைக்கப்பட்டபோது அரசிடமிருந்து ஆறு சுற்றுலா மாளிகைகளை மேற்கொண்டது. எனினும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மேலும் பல புதிய பணிகளைத் தொடங்க வேண்டுமென்ற ஆர்வத்துடன் சுற்றுலா மாளிகைகளை சுற்றுலாப் பயணிகள் செலுத்தும் கட்டணத்திற்கேற்ப சிறந்த வசதியுடன் கூடிய உயர்வகை உணவகங்களாக (ஓட்டல்களாக) மாற்றியது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலா முதன்மை வாய்ந்த இடங்களில் ''ஓட்டல் தமிழ்நாடு'' ''கடற்கரைப் பொழுது போக்கிடங்கள்'' போன்றவற்றையும் பெருவழி விடுதிகளையும் (motels) நடத்துகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பின்வரும் ஓட்டல்களை நடத்தி வருகிறது.



| கோயில் நகரங்கள். | குறிஞ்சி நகரங்கள். | பொழுது போக்கு இடங்கள். | பெருவழி விடுதிகள். |
|---|---|---|---|
| சிதம்பரம் | உதகமண்டலம். | ஒகேனேக்கல் | இராணிப் பேட்டை. |
| தஞ்சாவூர் | கொடைக் கானல் | மாமல்ல புரம். | உளுந்தூர் பேட்டை. |
| திருச்சிராப்பள்ளி | ஏர்க்காடு. | | |
| மதுரை (2 பிரிவுகள்) | | | |
| இராமேசுவரம் | | | |
| திருச்செந்தூர் | | | |
| கன்னியாகுமரி | | | |

1971ஆம் ஆண்டில் தங்குமிடங்களில் மொத்த படுக்கை வசதிகள் 253ஆக இருந்தன. தற்போது 1,059ஆகப் பெருகியுள்ளன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தி வரும் பல ஓட்டல்களில் மதுரையிலுள்ள 'ஓட்டல் தமிழ்நாடு' நட்சத்திர ஓட்டலாகும். பிறிதொரு நட்சத்திர ஓட்டல் கோயம்புத்தூரில் விரைவில் தொடங்கப்படும், மூன்றாவது பெருவழி விடுதி (Motel) கிருஷ்ணகிரியில் விரைவில் உருவாகும்.

இளைஞர் இல்லங்கள் :

32. நடுத்தர வகுப்பினர், இளைய தலைமுறையினர் முதலியோரின் தேவைகளை நிறைவு செய்ய தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் முன்னோடித் திட்டமாக இளைஞர் இல்லங்கள் பலவற்றைக் கட்டுவதற்குத் திட்டமிட்டுள்ளது. 2—8—1981 அன்று ஏர்க்காட்டில் தொடங்கப்பட்ட இளைஞர் இல்லம் சுற்றுலாப் பயணிகளிடையே புகழ்பெற்றுள்ளது. மண்டபம்,

ஒகேனேக்கல், உதகமண்டலம், இராமேசுவரம் ஆகிய இடங்களில்
உள்ள இளைஞர் இல்லங்கள் கட்டி முடிக்கப்பட்டுத் தங்கு
வதற்குத் தயார் நிலையில் உள்ளன. அவை விரைவில்
தொடங்கப்படும். பிச்சாவரம், கொடைக்கானல், கன்னியாகுமரி
ஆகிய இடங்களில் இளைஞர் இல்லங்கள் கட்டப்பட்டு
வருகின்றன. சுற்றுலாப் பயணிகள் தங்கிச் சமைத்துச் சாப்பிடு
வதற்கான வசதிகளுக்கு வகை செய்வதற்காக மாமல்லபுரத்தில்
முகாமிடம் (Camping site) ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.
இருபத்தெட்டு படுக்கை வசதிகளுடன் கூடிய குடில்கள் மாமல்ல
புரத்தில் அமைக்கப்பட்டு வருகின்றன. அவை விரைவில் கட்டி
முடிக்கப்படும். கூடுதல் வசதிகளைச் செய்து தருவதன் மூலம்
உதகமண்டலம், மாமல்லபுரத்திலுள்ள ஓட்டல்களின் தரத்தை
உயர்த்தக் கருதப்பட்டுள்ளது. மாமல்லபுரத்தில் கடற்கரைப்
பொழுதுபோக்குத் தொகுதிகளை (Beach Resar Compl x) விரிவு
படுத்தும் பணி முடியுந் தருவாயில் உள்ளது. புதுக்கோட்டை,
முதுமலை, காஞ்சீபுரம், சென்னை ஆகிய இடங்களில் புதிய
ஓட்டல்களும், திருத்தணியில் பெருவழி விடுதியும் கட்டுவது
குறித்து ஆய்வில் உள்ளது.

போக்குவரத்து :

33. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் சொகுசுப்
பேருந்துகள் பதினாறு உள்ளன. இந்தியாவில் பல்வேறு இடங்
களிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் தமிழ்நாட்டிற்கு வருகின்ற
சுற்றுலாப் பயணிகள் இந்த சொகுசுப் பேருந்துகளில் சுற்றுலா
செல்வது பற்றி நன்கு அறிந்துள்ளனர். சுற்றுலா செல்ல
விழைவோருக்கு இவ்வண்டிகள் வாடகைக்குக் கொடுக்கப்
படுகின்றன. இக்கழகம் தமிழ்நாடு மற்றும் தென்னிந்தியாவில் ஏழு
நாட்கள் சுற்றுலா நடத்துகிறது. மேலும் காஞ்சீபுரம், திருக்கழுக்
குன்றம், மாமல்லபுரம் ஆகிய இடங்களுக்கு நாள்தோறும்
சுற்றுலாக்களை நடத்துகிறது. இக்கழகம் திருப்பதிக்கு அன்றாடம்
போக்குவரத்துப் பணிகளை நடத்துகிறது. நகர்வலப் பயணமும்
இக்கழகத்தால் அன்றாடம் மேற்கொள்ளப்படுகிறது. சுற்றுலா
செல்ல விழையும் பயணிகளிடம் சுற்றுலாவின் சிறப்புகளை எடுத்
துறைத்து பயணிகளை சேர்க்கும் பணிக்கென சிங்கப்பூர்,
மலேசியாவில் முகவர்களை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்
கழகம் பெற்றுள்ளது. இந்தியாவிலேயே தமிழ்நாடு சுற்றுலா
வளர்ச்சிக் கழகந்தான் இத்தகையதொரு வசதியை முதன்
முதலாகப் பெற்றுள்ளது. 1972 ஆம் ஆண்டில் இரண்டே
இரண்டு சொகுசுப் பேருந்துகளுடன் தொடங்கப்பட்ட இக்
கழகத்தின் போக்குவரத்துப் பிரிவில் தற்போது பதினாறு
சொகுசுப் பேருந்துகள் உள்ளன. அவற்றில் மூன்று சீர்வளி
வசதி (Air conditioned) பெற்றவை. இன்னும் நான்கு வண்டி
கள் இப்பேருந்துத் தொடரில் விரைவில் சேர்க்கப்படும் 1972-ல்
போக்குவரத்துப் பிரிவின் வாயிலாகக் கிடைத்த வருவாய்
ரூ. 1.75 இலட்சமே ஆகும். 1980—81-ல் இது ரூ. 37·33



இலட்சமாக உயர்ந்தது. 1981—82-ல் ரூ. 60 இலட்சமும்
1982—83-ல் ரூ. 1.00 கோடியும் இப்பிரிவின் வாயிலாகக் கிட்டு
மென எதிர்பார்க்கப்படுகிறது. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி
செய்யப்பட்ட சீர்வளி வசதிப் பேருந்துகளின் மூலம் பேருந்து
களின் எண்ணிக்கையை மேற்கொண்டும் அதிகரிக்க கருதப்
பட்டுள்ளது. பயணிகளுக்கு தொலைநோக்கி இல்ல வசதி
செய்து கொடுப்பது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்
ஆற்றும் சிறப்புப் பணிகளில் ஒன்றாகும். இத்தகைய தொலை
நோக்கி இல்லம் கொடைக்கானலில் உள்ளது. ஏர்க்காட்டிலும்
உதகமண்டலத்திலும் இரண்டு தொலை நோக்கி இல்லங்களை
நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்
கழகத்தின் படகு இல்லங்களும் சுற்றுப் பயணிகளின் நன்
மதிப்பைப் பெற்றுள்ளன. உதகமண்டலத்தில் உள்ள படகு
இல்லத்துடன் ஏர்காட்டிலும் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 1980
ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட கழகத்தின் மலர் வெளியீட்டுப்
பிரிவு பட அஞ்சலட்டை, சுற்றுலா நில வரைபடம், பர்ஸ்-பை
(அழகுப்பை-பண உறை) போன்ற நினைவுப்பொருள்கள் ஆகிய
வற்றைத் தயாரிக்கின்றன.

34. தற்போதுள்ள ஓட்டல் இடவசதியை விரிவுபடுத்துதல்,
புதிய ஓட்டல்கள் கட்டுதல், சென்னையில் அலுவலகக் கட்டிடத்
தொகுதி கட்டுதல், சுற்றுலா வண்டிகள் வாங்குதல் போன்ற பல்
வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்காக 1982—83 ஆம் ஆண்
டில் இக்கழகத்திற்கு பங்கு மூலதனமாக ரூ. 20 இலட்சமும்
கடனாக ரூ. 20 இலட்சமும் ஆக ரூ. 40 இலட்சம் அளிக்கக்
கருதப்பட்டுள்ளது.

35. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் தற்போது
சுமார் 700 ஊழியர்கள் பணியாற்றுகிறார்கள். இன்னும் இரண்டு
மாதங்களில், அதாவது உதகமண்டலத்தில் இளைஞர் இல்லமும்
மாமல்லபுரத்தில் முகாமிடமும், கோயம்புத்தூரில் நட்சத்திர
ஓட்டலும் துவங்கப்பட்டதும், பணியாளர்களின் எண்ணிக்கை
800 ஆக உயரும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. இக்கழகத்தின்
பணியாளர்கள் பலதரப்பட்ட சட்டங்களில் வரையறுக்கப்பட்ட
ஊதியத்தைவிட அதிகமாகவும் ஒப்பிடத்தக்க மற்ற ஓட்டல்களில்
பணிபுரிவோர் பெறும் ஊதியத்தைவிட சிறப்பாகவும், ஊதியம்
பெறுகிறார்கள், ஓட்டல் மற்றும் போக்குவரத்துப் பிரிவுகளில்
பணிபுரிவோர் பஞ்சப்படியாக ரூ. 45—பெறுகிறார்கள். பஞ்சப்
படியினை மேலும் ரூ. 30 உயர்த்துவது குறித்த கருத்துரு கழகத்
தின் பரிசீலனையில் உள்ளது. தேர்வு நிலை ஊதிய விகிதங்
களை கழகத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்குவது
குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது. 1980—81 ஆம் ஆண்டில்
கழகம் தன் பணியாளர்களுக்கு 8.33 சதவீதம் ஊதியக்
கொடையும் (Bonus) 6.67 சதவீதம் கருணைப்படியும் (Ex-gratia
payment) வழங்கியுள்ளது, ஒரு பணியாளருக்கு ஆண்டுக்கு ரூபாச்
56 வீதம் செலுத்தி போக்குவரத்து மற்றும் ஓட்டல் பிரிவுகளைச்

சார்ந்த பணியாளர்களுக்கு மருத்துவ வசதிகளை அளிக்கும் திட்டத்தினையும் கழகம் துவக்கியுள்ளது. கன்னியாகுமரி, மாமல்லபுரம், திருச்சி, உதகமண்டலம், கொடைக்கானல், ஒகேனேக்கல், மற்றும் மதுரை ஆகிய இடங்களில் பணியாளர் குடியிருப்புகள் துவக்கப்பட்டுள்ளன. ஏர்க்காட்டில் பணியாளர் குடியிருப்பு கட்டப்பட்டு வருகிறது. உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏர்க்காடு ஆகிய இடங்களில் மலைப்பகுதிகளுக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள படி வழங்கப்பட்டு வருகிறது. ஓட்டல் மற்றும் போக்குவரத்துப் பணியாளர்களுக்கு கடந்த ஆண்டு முதல் உற்பத்தியினை இணைத்து ஊக்க உதவித்தொகை (Incentive Bonus) அளிக்கப்பட்டுள்ளது. கழகத்தில் பணியாற்றும் பணியாளர்கள் தொகுப்பு ஈட்டுறுதித் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். இத்திட்டத்தின்படி பணியிலிருக்கும்போது இறக்கும் பணியாளர்களின் வாரிசுதாரர்கள் ரூ. 10,000 பெறுவார்கள். இதற்கான சந்தாத் தொகையினை கழகமே செலுத்தும். பணியாளர்களுக்கு பணிக்கொடை விரைவாக கிடைக்கும் பொருட்டு பணிக்கொடை பொறுப்பு நிதி ஒன்று நிறுவப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் பணியாளர்களுக்கு இரண்டு ஜோடி பருத்தியினால் ஆன சீருடைகள் வழங்கப்படுகின்றன. இதைத் தவிர மலைப்பகுதிகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை இரண்டு ஜோடி கம்பளி சீருடைகள் வழங்கப்படுகின்றன.

36. தமிழ்நாட்டில் சுற்றுலா முதன்மை வாய்ந்த இடங்களை மேம்படுத்துவதற்கும், சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்ற வசதிகளைச் செய்து கொடுப்பதற்கும் இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது என்பதை இதுகாறும் கூறிய குறிப்புகளால் அறியலாம். சுற்றுலா வளர்ச்சிக்கு ஆகும் பெரும் செலவில் ஒரு பகுதியை ஏற்பதன் மூலம் மத்திய அரசு மாநில சுற்றுலா வளர்ச்சிக்கு உதவிக்கரம் நீட்ட வேண்டுமென மத்திய அரசை நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். சுற்றுலா வளர்ச்சிக்கான முக்கியத் திட்டங்களை மேற்கொள்வதற்கு மாநில அரசுகளுக்கு உதவும் வகையில் இப்பிரிவுக்கு பல்வகை வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலம் முதன்மை நல்க வேண்டுமென இவ்வரசு மத்திய அரசை மீண்டும் வலியுறுத்தும்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வியாழக்கிழமை, 1982, மார்ச் 11.

மாசி 27, துன்மதி—திருவள்ளுவர் 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :**

''உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்''

மருத்துவ நூலைக் கற்றவன், நோயுற்றவனுடைய வயது முதலியவற்றையும் நோயின் அளவையும் காலத்தையும் ஆராய்ந்து செய்ய வேண்டும்.

## 1. வினாக்கள்—விடைகள் :

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

**சேர்வலாறு அணைக்கட்டுத் திட்டம்.**

*வினா எண் 461—திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேர்வலாறு அணைக்கட்டுத் திட்ட மதிப்பீடு என்ன ?

(ஆ) எப்பொழுது வேலை முடிவடையும் ?

(இ) இந்த அணைக்கட்டுத் தண்ணீரின் முன்னுரிமை பாசனத்திற்கா அல்லது மின்சாரத்திற்கா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :**

(அ) சேர்வலாறு அணைக்கட்டுத் திட்ட மதிப்பீடு 1977-ம் ஆண்டில் கணித்தபடி ரூ. 2,157 இலட்சங்களாகும். தற்போது உள்ள விலைவாசிக்கேற்ப இத்திட்ட மதிப்பீடு திருத்தப்பட்டு வருகிறது.

[1982 மார்ச் 11

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : மாண்புமிகு துணைத் தலைவரவர்க்ளே, இந்தத் திட்டம் 1978—லே 21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. தற்போது எங்கே போய் நிற்கும் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் நாளுக்கு நாள் விலை வாசி ஏறிக்கொண்டே இருக்கிறது. வேலை காலாகாலத்தில் முடியாத நிலை ஏற்பட்டால் பல கோடி ரூபாய் அதிக மாகச் செலவு செய்யப்பட்டு பணம் விரையம் ஏற்படும். ஆகையால் இந்த வேலையை சீக்கிரமாக் முடிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா? அதற்கு என்ன ஏற்பாடு என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கூறுவது உண்மை. 1974 ஆம் ஆண்டில் இந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப்படும்போது 8.35 கோடி ரூபாய் என்று திட்டமிடப் பட்டது. ஆனால்,திட்டம் எடுக்கப்பட்டதே தவிர நிதி ஒதுக்கப் படவில்லை. அதனால் அப்படியே இந்தத் திட்டம் கிடந்தது. இப்போது நாங்கள் வந்த பிறகு அந்தத் திட்டத்தைச் செயல் படுத்த அதற்கான நிதி ஒதுக்கீடு செய்து, விரைவில் முடிக்க வேண்டுமென்று நடவடிக்கை எடுத்து வருகிறோம். 1983 ஜூன் மாதத்திற்குள் இது முடிந்துவிடும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : துணைத் தலைவரவர்களே, இந்த சேர்வலாறு அணைத் திட்டத்தையும், காரையாறு அணைத் திட்டத்தையும் இணைக்கும் வகையில் ஒரு டன்னல் திட்டம் உருவாக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகின்றன. அந்த டன்னல் திட்டத்தை துரிதமாக எடுத்து செயல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ? அதன் மூலம் என்னென்ன பலன் ஏற்படும் என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, சேர்வலாறு திட்டம் பற்றித்தான் என்னிடம் தகவல் இருக்கிறது. வேறு ஒரு திட்டத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அந்த விவரம் தற்போது என்னிடம் இல்லை.

சைக்கிள் டயர், டியூப் தயாரிக்கும் தொழிலுக்கு அரசு உதவி.

*வினா எண் 462—திரு. என். எஸ். வி. சித்தன்—மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் சிறு தொழில்களாக Small Sc le indust ies இயங்கும் சைக்கிள் டயர், சைக்கிள் டியூப் தயாரிக்கும் தொழிற் சாலைகள் கடந்த சில ஆண்டுகளாகவே நட்டத்தில் இயங்கு கின்றனவா ?



1982 மார்ச் 11]

(ஆ) ஆம் எனில் அரசு அவைகளுக்கு என்ன உதவிகள் செய்ய உத்தேசித்துள்ளது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :

(அ) தமிழகத்தில் ஏழு சிறு தொழில் பிரிவிலுள்ள சைக்கிள் டயர் மற்றும் டியூப் தயாரிக்கும் தொழிற்சாலைகள் எல்லாம் தற்போது நட்டத்தில் இயங்குவதாக தொழில் வணிக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

(ஆ) இத்தகைய தனிப்பட்ட சிறு தொழில் நிறுவனங்கள் இவ்வரசினையோ அல்லது சிறு தொழில் நலவாழ்வு புனரமைப்புக் குழுவினையோ தங்களுடைய குறைகளைப் பற்றி அணுகினால், அக் குறைகளை பரிசீலித்து தன்னாலான உதவிகளைச் செய்து அவைகளை நல்ல முறையில் இயங்க ஆவன செய்ய இயலும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : துணைத் தலைவரவர்களே, இந்த சிறு தொழில் நிறுவனங்கள் கார், டிரக் போன்றவைகளை உற்பத்திச் செய்யும் டன்லப் போன்ற பெரிய தொழில் நிறு வனங்களும் சைக்கிள் டயர், டியூப்களை உற்பத்தி செய்து மார்க்கெட்டுக்கு அனுப்புவதால் அந்தப் பெரிய தொழில் நிறு வனங்களோடு போட்டியிட முடியாமல் நசிந்துப் போகின்றன. அதனால் இந்த சிறு தொழில் நிறுவனங்கள் மூடப்படும் நிலையில் இருக்கின்றன. ஆகவே, அரசாங்கம் இந்த மாதிரியான நிறு வனங்களை ''சிக்'' யூனிட்ஸ் என்று எடுத்துக் கொண்டு அவை களுக்கு நிதி உதவி அளித்து, சிறப்பு சலுகைகள் அளித்து எதிர் காலத்திலே நல்ல முறையில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்குமா ? அரசாங்கத்திடம் இது பற்றி சைக்கிள் டயர் தயாரிப்போர் சங்கம் ஏற்கனவே முறையிட்டிருக்கின்றது. அந்த முறையீட்டை அரசு பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாகவும் இது சம்பந்தமாக மனு கொடுத்திருக்கிறார்கள். அதன் அடிப்படை யில் இந்தத் தொழில்களுக்கு புது உத்வேகம் கொடுக்கின்ற வகையில் தமிழக அரசு முயற்சிகளை எடுத்திருக்கிறது.

ஆறுமுனைகளில் இதற்கு ஒரு பரிகாரத்தைத் தேடினால் இது முழுமையான தொழிலாக இருக்கும் என்ற வகையிலே சுங்க வரியினின்று சிறு தொழில்களுக்கு விலக்களித்தல், உள்நாட்டு வணிகத்தை சிறு தொழில்கள் பிரிவுக்கு மட்டுமே ஒதுக்கீடு செய்வது, வெளிநாட்டு வியாபாரத்திற்காக பெரிய தொழிற் சாலைகளின் உற்பத்தியை ஏற்றுமதிக்காக ஒதுக்கீடு செய்வது இயற்கை ரப்பரின் மீதான ரப்பர் மேல் வரி, செஸ் வசூலிப்பதை சிறு தொழில் பிரிவுக்கு நீக்குவது, ரப்பர் சுத்திகரிப்பு, ரப்பர்

மூலம் டயர், ட்யூப் உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருள்கள் மற்றும் இரசாயனப் பொருட்களின் மீதான சுங்க வரியைக் குறைத்து இவ்வத்தியாவசியமான மூலப் பொருட்களைக் குறைந்த விலையில் சிறு தொழில்களுக்கு அளிக்க வழி வகை செய்தல்; இப்போது உள்ள விற்பனை வரியில் ஒரு கணிசமான அளவுக்கு நீக்குதல், சிறு தொழில் பிரிவுகளுக்குக் கடன் வசதிகளைத் தாராளமாக நீட்டிக் கொடுத்தல் ஆகிய 6 வகைகளில் முயன்றால் ஓரளவுக்குக் இது சிறப்பாக இருக்கும் என்று கருதி அரசு அதன் மீது ஆலோசனை செய்து வருகிறது. மத்திய அரசு செய்ய வேண்டிய பணிகளுக்காகவும் அங்கே முனைந்து தகவலைச் சொல்லி வருகிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நலிந்த தொழிற்சாலைகளினுடைய முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு அரசாங்கம் செய்கின்ற முயற்சிகளோடு—அரசாங்கம் பெரிய நடுத்தர தொழில்களுக்கு அவைகள் ஏற்கனவே செலுத்தியுள்ள வணிக வரியிலிருந்து வட்டியில்லா கடன் கொடுத்து வருகிறார்கள். அதேபோன்று சிறு தொழில்களுக்கும் செலுத்திய வரியிலிருந்து வட்டியில்லாக் கடன் 1978-ஆம் ஆண்டுக்கு பின்னாலே ஆரம்பிக்கப்பட்ட தொழில்களுக்குக் கொடுத்து வருகிறார்கள்—. இந்தச் சலுகைகளை 1972-லிருந்து ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைகளுக்கும் அளித்தால் அதுவே அந்தத் தொழிற்சாலைகளுக்குப் பெரிய உதவிகரமாக இருக்கும். ஆகவே இவ்வரசு தன்னுடைய அதிகாரத்தை வைத்துக் கொண்டு இதைச் செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகள் தக்க முறையிலே கலந்து ஆலோசனை செய்யப்படும்.

**திரு. கு. ரமணி :** துணைத் தலைவர் அவர்களே, சைக்கிள் ட்யூப் டையர் என்பது சாதாரண மக்களுக்கு மிக மிகத் தேவையான ஒரு அத்தியாவசியப் பொருளாக இருக்கின்றது. பொதுவாக எல்லாவிதமான தொழில்களுக்கும் போகக்கூடிய இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கும் மற்றவர்களுக்கும் பயன்படுவது சைக்கிள். ஆகவே இதற்கான ட்யூப், டையர் போன்றவற்றின் விலை உயர்ந்துவிட்ட காரணத்தால் அவர்கள் தற்போது வாங்க முடியாத நெருக்கடியில் இருக்கிறார்கள். சின்னச் சின்ன தொழில்கள் ஆரம்பிக்கின்றபோதும், நலிந்து போகின்ற தொழில்களுக்கும் அரசாங்கம் உதவி செய்கிறது. ஆனால் இப்படிப்பட்ட சிறு தொழில்களை அதாவது டயர், ட்யூப், போன்றவை தயாரிக்கின்ற தொழிற்சாலைகளை அரசாங்கமே ஏன் ஆரம்பித்து நடத்தக்கூடாது ? அதற்கு ஏதாவது முயற்சி செய்வார்களா ? அப்படி ஏற்படுத்தினால் விலையையும் கூடக் குறைக்க முடியும் அல்லவா ?



**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் சொன்ன அந்த ஆலோசனையை ஒட்டியே கன்னியாக்குமரி மாவட்டத்தில் கிடைக்கின்ற ரப்பரை வைத்துக் கொண்டு அரசு கூட்டுறவுச் சங்கங்களின் சார்பாக ஒரு தொழிற்சாலை உருவாக்க வேண்டும் என்ற கருத்தை அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்து வருகிறது.

**திரு. க. அன்பழகன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறு தொழில்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் விற்பனை ஆகாமல் தேங்குவதால் பஞ்சாப், ஹரியானா போன்ற மாநிலங்களில் செய்வதுபோல் தமிழக அரசும் அவற்றை விற்பனை செய்வதற்குரிய நடவடிக்கையினை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** துணைத் தலைவர் அவர்களே, சிட்கோ நிறுவனத்தின் மூலமாக மார்க்கெட்டிங் டிவிஷன் வைத்து சிறு தொழில் முனைவர்களுக்கு உதவி செய்து வருகிறோம். ஆகவே தேவைப்பட்டவர்கள் சிட்கோவை நாடலாம்.

**திரு. எல். இளையபெருமாள் :** துணைத் தலைவரவர்களே, இதுபோன்ற சிக் யூனிட்டுகளுக்கு ரப்பர் போன்ற மூலப் பொருட்களை மானிய விலையில், குறைந்த விலையில் கொடுத்து அவர்களை ஊக்குவிப்பதற்கு அரசு பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** துணைத் தலைவரவர்களே, நான் மூலக் கேள்விக்குப் பதில் சொல்கின்ற நேரத்திலே 6 வகையான முயற்சிகளைச் செய்துக் கொண்டிருப்பதாகச் சொன்னேன். அது நடந்தாலே பொதுமான அளவுக்கு நன்மைகள் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. எஸ். துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்திலே காவிரி ரப்பர் நிறுவனம் மின்சாரம் இல்லாத காரணத்தால் மூடி வைக்கப்பட்டுள்ளது. அது மிகவும் நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருந்தது. ஆகவே அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** துணைத் தலைவரவர்களே, காவிரி ரப்பர் நிறுவனம் அரசை உரிய முறையிலே நாடினால் தக்க பரிகாரம் காணப்படும்.

[1982 மார்ச் 11

பிற மாநிலத்தில் பூம்புகார் விற்பனை நிலையம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 463. திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

பூம்புகார் விற்பனை நிலையத்தை வெளி மாநிலங்களில் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ; தமிழ்நாடு கைத்திற வளர்ச்சி நிறுவனத்தின் நிதி நிலையைப் பொருத்து பாண்டிச்சேரி, ஹைதராபாத், திருப்பதி, ஜெய்ப்பூர், கல்கத்தா மற்றும் மைசூரில் பூம்புகார் விற்பனை நிலையங்களை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு நிறுவனத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

(முற்பகல் 9—10)

திரு. இரா. தாமரைக்கனி : கல்லணை கட்டி புகழ்பெற்ற கரிகால் பெருவளத்தானின் காவிரிப் பூம்பட்டினத்தைப் போல் இந்த விற்பனைக் கூடங்கள் சின்னக் கோட்டை மாடலில் ஆரம்பிக்கப்படுமா ?

(விடை இல்லை.)

திரு. கோவைத் தம்பி : தமிழ் நாட்டில் செய்யப்படுகிற கைவினைப் பொருட்களுக்கு வெளி நாடுகளில் நல்ல மதிப்பு இருக்கிறது. இப்போது கைத்தறித் துணிகளுக்கு சிங்கப்பூரில் ஒரு கூடத்தைத் திறந்திருப்பதுபோல் சிலைகள், சிற்பங்கள், கைவினைப் பொருள்கள் விற்பனை செய்வதற்கு பூம்புகார் விற்பனை நிலயங்களை சிங்கப்பூர் போன்ற கிழக்கிந்திய நாடுகளில் அவற்றின் கிளைகளைத் துவக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : சிங்கப்பூர், மலேசியா போன்ற தூரக் கிழக்கு நாடுகளில் பூம்புகார் விற்பனை நிலையத்தின் கிளைகளை துவங்குவதற்கு அரசாங்கம் ஆவன செய்து வருகிறது. அதே நேரத்தில் அண்மைக் காலத்தில் கடந்த இரண்டு மூன்று மாதங்களுக்குள்ளாக மொரீஷியஸ் நாட்டிலிருந்தும் வெஸ்ட் ஜெர்மனியிலிருந்தும் வந்தவர்கள் சம்பந்தப்பட்ட நண்பர்கள் மொரீஷியஸ் நாட்டிலும், வெஸ்ட் ஜெர்மனிலிருந்து பூம்புகார் விற்பனை நிலையங்களை துவக்க வேண்டும் என்று கருத்து சொல்லியிருக்கிறார்கள். அதனையும் அரசு பரிசீலனை செய்துவருகிறது.



1982 மார்ச் 11]

திரு. இரா. தாமரைக்கனி: பூம்புகார் நகரில் யவனர்களும் கிரேக்கர்களும்மற்றுமுள்ளவர்களும் தமிழ்நாட்டிலிருந்து முத்துக்கள், பவழங்கள், மயில் பீலிகள் ஆகியவற்றை வாங்கிச் சென்றதாக சிலப்பதிகாரம் கூறுகிறது. எனவே பூம்புகார் விற்பனை நிலையங்களை ரோம், ஏதன்ஸ் போன்ற நாடுகளில் துவங்கி அவற்றுடன் நமக்கு இருந்த உறவைப் புதுப்பித்துக் கொள்ள ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வுகளை மனதில் வைத்துக் கொண்டு படிப்படியாக அந்தக் காரியங்கள் செய்யப்படும்.

திரு. இல. பலராமன் : பூம்புகார் விற்பனை நிலையங்களின் மூலம் என்னென்ன பொருள்கள் அதிகமாக விற்பனையாகின்றது? வட ஆற்காடு மாவட்டத்தில் கார்பட்ஸ், தரை விரிப்புகள், அதிகமாகத் தயாராகிறது. அவை தேங்கிக் கிடப்பதை அரசு அறியுமா ? அதற்காக என்ன நடவடிக்கைகளை அரசு எடுக்க இருக்கிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பூம்புகார் நிறுவனம் வாயிலாக தஞ்சாவூரில் தொன்மைதொட்டு உருவாக்கி வருகிற உலோக சிற்பங்களும் அதைப் போலவே திருச்சிப் பகுதி அரும்பாவூரில் உருவாக்கி வருகிற மரச் சிற்பங்களும் அதை போல நீண்ட காலமாக உள்ள கலைப் பொருள்கள் இவைகளை எல்லாம் வெளி நாடுகளுக்கு இந்த பூம்புகார் நிறுவனம் மூலமாக ஏற்றுமதி செய்து வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. பலராமன் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பொருள்களுக்கு அங்கே ஒரு தொழில் கூட்டுறவுச் சங்கம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இரண்டு நாட்களுக்கு முன்னால் அங்கு நடைபெற்ற தொழில் கண்காட்சியில் கூட அது வைக்கப்பட்டிருந்தது. நானே அதைக் கண்ணுற்றேன். அவற்றை விற்பனை செய்வதற்கு தக்க ஏற்பாடுகளை அரசு செய்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண்கள் 464, 465, 466 மாண்புமிகு செய்தி—அறநிலைய அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப் பெறுகின்றன.

1979—1981 மார்ச் முடிய வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட சின்ன வெங்காயத்தின் அளவு.

*வினா எண். 383—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1979—1980, 1980—1981 மார்ச் முடிய தமிழகத்தில் விளையும் சின்ன வெங்காயம் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு எவ்வளவு ?

[1982 மார்ச் 11

(ஆ) அவ்வாறு ஏற்றுமதி செய்யப்படுகிற சின்ன வெங்
காயம் யார் மூலம் கொள்முதல் செய்யப்படுகிறது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : : (அ) 1979–80,
1980–81 மார்ச் முடிய தமிழகத்தில் விளையும் சின்ன வெங்
காயம் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு
வருமாறு :—

1979–80 .. 5,199·06 மெட்ரிக் டன்கள்.

1980–81 .. 7,138·60 மெட்ரிக் டன்கள்.

(ஆ) கூட்டுறவு விற்பனை சங்க அங்கத்தினர்களிடமிருந்
தும் மற்றும் மண்டிகளிடமிருந்தும் வாங்கியதை " நேபட் "
(N. A. F. E. D.) நிறுவனம் கொள்முதல் செய்து சிங்கப்பூர்,
மலேசியா, ஸ்ரீ லங்கா முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்
கிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்ரமணியன் : தமிழ்
நாட்டில் விளையும் வெங்காயம் சிங்கப்பூர், மலேசியா போன்ற
நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாக அமைச்சர் அவர்கள்
குறிப்பிட்டார்கள். " நேபட் " நிறுவனம் வெளி நாடுகளுக்கு
ஏற்றுமதி செய்யும் பெரிய வெங்காயம், சின்ன வெங்காயம்
இவற்றிற்கு ஒரே விலை நிர்ணயித்திருந்தபோதிலும் விலைக்கு
வாங்கும்போது பெல்லாரி வெங்காயம் என்று சொல்லப்படு
கிற பெரிய வெங்காயத்திற்கு ஒரு விலையும் சின்ன வெங்காயத்
திற்கு ஒரு விலையும் நிர்ணயித்திருப்பது அரசுக்குத் தெரியுமா ?
எனவே வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பெரிய வெங்கா
யம், சின்ன வெங்காயம் இந்த இரண்டுக்கும் ஒரே விலை கொடுக்க
அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர்
அவர்களே, நேபட் நிறுவனம் நேரடியாக விவசாயிகளிடம்
வாங்குவதில்லை. ஏஜெண்ட் மூலமாகத் தான் வாங்குகிறது.
அது நேரடியாக வாங்க வேண்டுமென்பது விவசாயி
களுடைய வேண்டுகோளாக இருக்கிறது. நேபட் நிறுவனத்தை
நாம் கேட்டதற்கு, அவர்கள் எந்த விலைக்கு வெளி நாடுகளுக்கு
ஏற்றுமதி செய்கிறோம் என்ற விவரத்தை நமக்குத் தெரிவிக்க
வில்லை. இருந்தாலும் விவசாய பெருமக்களுக்கு நல்ல விலை
கிடைக்கச் செய்வதற்கான ஏற்பாடுகளை விற்பனைத் துறை
ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெங்காயத்தை
நேபட் நிறுவனம் மட்டும்தான் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி



1982 மார்ச் 11]

செய்வதால், தனிப்பட்டவர்கள் தங்களுக்கும் உரிமை வேண்டு
மென்று நீதி மன்றங்களை, அணுகியிருக்கிறார்கள். ஆகவே,
மாநில வேளாண்மைத் துறை தமிழகத்திலே உற்பத்தியாகும்
வெங்காயத்தை நேரடியாக இந்த மாநில அரசே பிற நாடு
களுக்கு ஏற்றுமதி செய்ய அனுமதி கொடுக்க வேண்டுமென்று
இந்த நேபட் நிறுவனத்தையும், மைய அரசையும் மாநில
அரசு சோருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர்
அவர்களே, நாம் நேபட் நிறுவனத்திடம் இதுபோன்ற வேண்டு
கோளைத் தெரிவித்தோம். அவர்கள் நேரடியாக வாங்குவ
தில்லை. நம்முடைய விருப்பம் உள்ளீட்டுக் கழகம் வாங்க
வேண்டுமென்பது. அவர்கள் குறுவை நெல், சம்பா நெல்,
போன்றவற்றைக் கொள்முதல் செய்கின்ற காரணத்தினால்,
வெங்காயத்தைக் கொள்முதல் செய்ய இயலாது என்று தெரி
வித்து விட்டார்கள் நம்முடைய விற்பனைக் கழகங்களிலே
போதிய வசதியில்லை. இது அழுகு பொருளாக இருக்கின்ற
காரணத்தினால், சேமித்து வைக்கும் வசதி நம்மிடம் இல்லை.
இருக்கின்ற இந்த சூழ் நிலையில் எப்படி விவசாயிகளுக்கு நல்ல
விலை பெற்றுத் தருவது என்பதை அரசு ஆராயும்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இந்த வெங்காயம் ஏறக்குறைய 90
நாட்களிலிருந்து 100 நாட்களில் விவசாயம் செய்யக் கூடிய
ஒரு வெள்ளாமை. ஆனால், வெங்காயத்தை நடுகின்றபோது
ஒரு விலையும், அதை வெளியே எடுக்கும் சமயம் ஒரு விலையும்,
விலை மிகவும் குறைந்து போய் வீழ்ச்சி அடைகின்ற நேரங்களில்
இந்த விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்க அரசு முன்வருமா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர்
அவர்களே, இயலாது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இந்த வெங்காயம் விவசாயம் செய்யக்
கூடிய விவசாயிகள் ஒவ்வொரு ஆண்டும் மிகவும் நஷ்டமடைந்து
வருகிறார்கள். அப்படி நஷ்டமடைகின்ற சூழ்நிலை ஏற்படு
கிறது. ஏனென்றால், ஓராண்டு அதிக விற்பனையும், அடுத்த
ஆண்டு மிகக் குறைந்த அளவு விற்பனையும், வாங்காமலேயே
போகக்கூடிய சூழ் நிலையும் ஏற்படுகிறது. ஆகவே, அவர்
களைப் பாதுகாக்கக்கூடிய முறையில் அரசு ஏதாவது தனித்
திட்டத்தைத் தயாரித்துள்ளதா ? அதோடு, இந்தவெங்கா
யத்தை ஏற்றுமதி செய்யும்போது அதற்கு உள்நாட்டிற்கும்
வெளிநாட்டிற்கும் விலை வித்தியாசம் எவ்வளவு இருக்கிறது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர்
அவர்களே, முதலிலேயே இதற்கு நான் விடையளித்தேன்.
நேபட் நிறுவனம் இதை வாங்குகிறார்கள். அவர்கள் விவசாயி
களிடம் நேரடியாக இதை வாங்குவதில்லை. ஆகவேதான்,
இந்த விலைவாசியில் ஏற்றம் இறக்கம் எல்லாம் இருக்கின்ற சூழ்
நிலை ஏற்படுகிறது. வெங்காயத்தை விளைவிக்கின்ற நிலப் பரப்
பும் கொஞ்சம் குறைந்து கொண்டு வருகிறது. எனவே, இந்தச்
சிக்கல்களையெல்லாம் தீர்ப்பதற்கு இந்த அரசு முயற்சி செய்து
கொண்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, இந்த வெங்காய உற்பத்தியானது குறிப்பாக தெற்கு
மாவட்டங்களிலேதான் அதிகமாக விளைந்து, இலங்கை போன்ற
வெளிநாடுகளுக்கு இந்த வெங்காயம் மார்க்கெட்டிங் சொசைடி
மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. அதற்கு நல்ல விலை
கிடைத்தது. இப்போது ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில்
அதைச் சேமித்து வைப்பதற்கு வசதியில்லாமல் இருக்கின்றது
என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, வெளிநாடு
களுக்கு ஏற்றுமதி செய்வதற்கு எவ்வளவு தேவைப்படுகின்றது
என்பதை அறிந்து, மார்க்கெட்டிங் சொசைடி மூலமாக நேரடி
யாக இந்த வெங்காயத்தை ஏற்றுமதி செய்வதற்கு அரசு
நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர்
அவர்களே, அதற்கு வேண்டிய சேமிப்பு வசதிகளை முதலிலே
மேற்கொண்டு, அதிலே வெற்றி கிடைத்த பிறகு, அதைப்பற்றிச்
சிந்திக்கலாம்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, வெங்காயத்திலே ஏராளமான சத்திருப்ப
தாக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். ஈரான் நாட்டிலே 70 வயதா
னவர் 16 மனைவிகளோடு சுகமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்
அவரைக் கேட்டபோது, தினமும் ஒரு கிலோ வெங்காயம் சாப்பிடு
வதாகச் சொல்லி, அது பத்திரிகைகளிலே வெளி வந்திருக்கிறது.
எனவே, சத்துள்ள வெங்காயத்தை மக்களுக்கு அதிகமான
அளவு கிடைக்கச் செய்து சாப்பிடச் செய்வதற்கும், குறைந்த
விலையில் அதைக் கிடைக்கச் செய்வதற்கும் அரசு ஆவன
செய்யுமா என்று அறிய விரும்புகிறேன் ?

(முற்பகல் 9—20)

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு துணைத்
**தலைவர் அவர்களே, அந்தப் பிரச்சாரத்தை உறுப்பினர் தாமரைக்**
**கனியே மேற்கொள்ளலாம்.**





திரு. என். வரதராஜன் : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, வெங்காய பயிர் 90 நாட்களில் இன்றைக்கு பயிரா
கிறது என்று தெரிந்து, அது ஒரு அழுகு பொருள் என்று தெரிந்து
இன்றைக்கு விலையை குறைக்கக் கூடிய ஏற்பாடு தொடர்ச்சியாக
இருக்கிறது. திண்டுக்கல் போன்ற நகரங்கள் வெங்காய ஏற்று
மதியில் முக்கிய பங்கு வகித்து பலவித சங்கடங்களில் மாட்டிக்
கொண்டிருக்கின்றன. நம்முடைய மாநில அரசு ஒரு ஸ்டேட்
டிரேடிங் கார்ப்பரேஷன் போன்று ஒன்றை நிறுவி அதன்மூலம்
ஏற்றுமதிக்கு உத்தரவாதம் செய்தால், நாம் அதை ஸ்டாக்
வைக்கக் கூடிய கொடவுன்கள் கூட தேவையில்லை. ஏற்கனவே
வியாபாரக் செய்யக் கூடியவர்கள் கொடவுன்களை வைத்திருக்
கிறார்கள். சிறுவிவசாயிகள் கூட மூன்று, நாலு மாதங்கள்
தேக்கி வைக்கக் கூடிய அளவிற்கு இன்றைக்கு தேர்ச்சி பெற்றி
ருக்கிறார்கள். ஆகவே அரசு இன்றைய தினம் கொள்முதல்
செய்து ஏற்றுமதிக்கு ஏற்பாடு செய்யுமா, தமிழக விவசாயி
களுக்கு இப்படிப்பட்ட நிலையிலிருந்து பாதுகாப்பு கிடைக்குமா
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, அதற்கான வாய்ப்புக் கூறுகள்பற்றி அரசு
ஆராயும்.

## சிறு குட்டைகள் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 384 திரு. ஆர். ரங்கசாமி: மாண்புமிகு
வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) மழைத் தண்ணீரை தேக்குகின்ற வகையில் சிறுகுட்
டைகள் (செக்டேம்) அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) இந்தக் குட்டைகள் கட்டும் திட்டத்தை ஒவ்வொரு
ஊராட்சி ஒன்றியமாக எடுத்து செயல்படுத்தும் திட்டம் அரசிடம்
உள்ளதா ?

மாண்புமிகு திரு. கா காளிமுத்து (அ) ஆம். நீலகிரி
மாவட்டத்தில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மழைத்
தண்ணீரைத் தடுத்து சிறுகுட்டைகள் அமைக்கும் பணிகள் நடந்து
வருகின்றன. மற்றும் ஒருங்கிணைந்த மலைவாழ் மக்களின்
மேம்பாட்டுத் துணைத் திட்டத்தின்கீழ் வடாற்காடு, சேலம்,
திருச்சி ஆகிய மாவட்டங்களின் மலைப் பகுதிகளில் மழைத்
தண்ணீரைத் தேக்கிக் குட்டைகள் அமைக்கும் பணிகள் நடை
பெற்று வருகின்றன.

மேலும் நீர்பிடிப்புப் பகுதிகளில் செயல்படுத்தப்படும் மண்வளப் பாதுகாப்புத் திட்டப் பணிகளில் மழைக்கால வெள்ள வேகத்தைக் கட்டுப்படுத்த ஓடைகளின் குறுக்கே செக்டேம்கள் தேவையான இடங்களில் கட்டப்படுகின்றன.

(ஆ) தற்போது இவ்விதமான குட்டைகள் கட்டும் திட்டம் அரசிடம் ஒன்றுமில்லை.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கோவை, அவிநாசி, மேட்டுப்பாளையம் போன்ற தாலுக்காக்களில் குட்டைகள், செக்டேம்கள் அமைப்பதைத் தவிர நீர்ப்பாசன திட்டங்கள் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. கடந்த ஓராண்டிற்கு மேலாக இந்த குட்டைகளை பொதுப்பணித்துறை அமைப்பதா, அல்லது வேளாண்மைத் துறையே மேற்கொள்வதா என்ற ஒரு பிரச்னையின் காரணமாக குட்டைகள் அமைப்பது தடை செய்யப்பட்டுள்ளது. என்று அறிகிறேன். தடை செய்யப்பட்டது உண்மையா ? அது விவசாயிகளை பாதிப்பதால் உடனடியாக அதை நீக்குவதற்கு அரசு முயற்சிகளை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுந்து : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தடை செய்யப்பட்டது உண்மை, அந்த தடையை நீக்க வேண்டுமென்று வந்த வேண்டுகோளை பொதுப் பணித்துறை பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்திலே எத்தனை செக்டேம்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது ? இந்தத் திட்டத்தின் மூலம் அதற்கு எவ்வளவு ரூபாய் செலவழிக்கப்படும் ? ஏற்கனவே கட்டப்பட்ட சிறு செக்டேம்கள் மண்ணால் மூடப்பட்டு பயனில் லாமல் இருப்பதை அரசு அறியுமா ? அவற்றை செப்பனிட ஏதாவது திட்டம் உண்டா என்பதை அறிய விரும்புகின்.

மாண்புமிகு திரு.கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்திலே 33 லட்சம் ரூபாய் செலவில் தடுப்பு அணை மற்றும் நீர் பிரிவு வாய்க்கால் கட்டும் திட்டத்தை ஐந்தாவது ஐந்தாண்டு திட்டத்தில் மலைப் பகுதி மேம்பாடு திட்டத்தின்கீழ் செயல்படுத்த மத்திய திட்டக் குழு ஒப்புதல் வழங்கியுள்ளது. வேளாண்மைத்துறை நாள் 9—11—1977 உத்திரவின்படி தடுப்பு அணைகள் கட்டும் பணி பொதுப்பணித் துறையின் நீர்ப் பாசன பிரிவில் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட ஆற்காடு மாவட்டத்திலே செக்டேம் செயல்படுத்தப்பட்ட



தாகச் சொன்னார்கள். எந்த எந்த பகுதிகளில் இந்தத் திட்டம் செயல்பட்டன ? இதற்காக செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கா காளிமுத்து : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் இல்லை. தனியாக கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

திரு. கே. கல்லன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர் களே, இந்த திட்டத்திற்காக மத்திய அரசு எவ்வளவு தொகை கொடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுந்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், மண்வளப் பாதுகாப்பு திட்டம் போன்ற பல திட்டங் களின் மூலமாக இது செயல்படுத்தப்படுகிறது. ஆகவே ஒட்டு மொத்தமாக குறிப்பு இல்லை.

திரு. எல். இளையபெருமாள் : : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலில் தற்போது இது போன்ற திட்டம் இல்லை என்று சொன்னார்கள் ; ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் செய்யப்பட்டது என்று சொன்னார்கள். ஆகவே மத்திய அரசு பணம் கொடுத்தால் தான் நாம் செய்யக் கூடிய நிலையில் இருக்கிறோமா ? மத்திய அரசு கொடுக்கா விட்டாலும் நாம் தனித்து செய்வதற்கு முயற்சி செய்யப்படுமா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1979ஆம் வருடம் வரையில் பொதுப்பணித் துறையின் மூலமாக இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வந்தன. இப்போது நம்முடைய மண்வளப் பாதுகாப்பு திட்டத் தின் அடிப்படையிலும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத் தின் அடிப்படையிலும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிற பணத்தை வைத்து அதற்கேற்ற அளவிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர் களே, இங்கே அமைச்சர் அவர்கள் வடஆற்காடு மாவட்டத்தில் எந்தெந்த இடங்களில் செக்டேம் கட்டப்படுகின்றன என்ற விவரம் இல்லை என்று சொன்னாலும், வட ஆற்காடு மாவட்டத் திலுள்ள ஏலகிரி மலையில் மழைக்காலங்களில் நிறைய வெள்ளம் வருகிறது. அந்த வெள்ளத்தைத் தேக்கி வைப்பதற்கு ஏலகிரி அடிவாரத்திலே இதுபோன்ற செக்டேம் கட்டுவதற்கு அரசு முன் வருமா ? ஏற்கனவே நான் மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் இதுபோன்று எங்கெங்கு கட்ட வேண்டுமென்று கொடுத்தி ருக்கிறேன். இதை உடனடியாக முயற்சியெடுத்து அந்தத் தண்ணீரைத் தேக்கி வைக்க செக்டேம் கட்ட அரசு முன் வருமா ?

[1982 மார்ச் 11

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவரவர்களே, வடாற்காடு, சேலம் மாவட்டங்களில் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் துணைத் திட்டத்தின்கீழ் ஆறாவது, ஏழாவது திட்டக் காலத்திலே இப்படிப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமென்று பொதுப் பணித்துறைக்குத் திட்டங்கள் அனுப்பப் பட்டிருக்கின்றன என்று தெரிய வருகிறது.

திரு. ஏ. எம். சேதுராமன் : துணைத் தலைவரவர்களே, வடாற்க்காடு மாவட்டத்தில் ஆற்காடு தொகுதியில், திமிரி ஒன்றியத்தில் ஆற்காடுக்கும் வேலூருக்கும் இடையில் உள்ள வெங்கடாபுரம் என்ற கிராமத்தில் இப்படியொரு டேம் கட்டுவதற்காக ஏற்கனவே கலெக்டரிடத்தில் மனுக் கொடுத்து அது பரிசீலனையில் இருந்து வருகிறது. இது பொதுப் பணித்துறை மூலம் எடுக்கப் படுமா ? அல்லது ஒன்றியத்தின் சார்பாக எடுக்கப்படுமா அல்லது வேளாண்மைத் துறையின் சார்பாக எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதுபற்றித்தான் அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

போச்சம்பள்ளி ஆலையில் கடலை எண்ணெய் தயாரிக்கும் திட்டம்.

* வினா எண். 385 திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக எண்ணெய் ஆலையில் (தருமபுரி மாவட்டம், போச்சம்பள்ளி) கடலை எண்ணெய் தயாரிப்பதற்கு அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) தருமபுரி மாவட்டம், போச்சம்பள்ளியில் உள்ள தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகத்தின், சூரியகாந்தி எண்ணெய்த் தொழிற்சாலையில் கடலெண்ணெய் தயாரிக்க மைய அரசு ஜூலை 1981-ல் அனுமதி வழங்கியுள்ளது. நிலக்கடலை பருவத்தில் அவற்றை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் கொள்முதல் செய்து கடோலா என்ற பெயரில் சுத்தரிக்கப்பட்ட கடலெண்ணெய் தயாரித்து விற்பனை செய்ய திட்டமிடப் பட்டுள்ளது.



1982 மார்ச் 11]

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இதுபோன்ற எண்ணெய் ஆலைகள் தமிழகத்தில் எத்தனை அமைக்க அரசு கருதியுள்ளது என்று அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவரவர்களே, போச்சம்பள்ளியைப்பற்றி மட்டும்தான் விளக்கம் இருக்கிறது.

திரு. என் எஸ், வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தக் கடலை எண்ணெய் பொதுவாக சமுதாயத்தில் இருக்கின்ற எல்லா மக்களுக்கும், குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால் நடுத்தர மக்களால் அதிகமாகப் பயன்படுத்தப்படும் எண்ணெயாக இருக்கின்ற காரணத்தால் மக்களுக்குக் குறைந்த விலையிலே அரசிலே கொடுக்க முடியும் என்கின்ற நினைவு இருக்கின்ற காரணத்தினாலேயும், மாவட்டத்திற்கு ஒன்று என்ற முறையிலே அரசாங்கமே மணிலாப் பருப்புகளைக் கொள்முதல் செய்து இதுபோன்ற ஆலைகளை அமைக்க இனியாவது அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே வேளாண்மைத்துறை மானியத்தின் மூலமும் தெரிவித்ததைப் போல வடாற்காடு, தென்னாற்காடு, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் வைத்து நாம் '' ஆனந்த் '' பாணியில் ஒரு நிலக்கடலை உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுடைய கூட்டுறவு இணையம் ஒன்றைத்தொடங்கியிருக்கிறோம். அவைகள் உற்பத்தியைத் தொடங்க ஆரம்பிக்கின்ற நேரத்தில் சமையல் எண்ணெய் பற்றாக் குறை முற்றிலுமாக நீங்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

டாக்டர் கே. சமரசம் : : பேரவைத் துணைத் தலைவரவர்களே, தர்மபுரி மாவட்டத்திலுள்ள அந்த எண்ணெய் ஆலையில்—கடோலா என்கின்ற எண்ணெய் தயார் செய்கின்ற நிலை ஏற்பட்டு ஒரு ஆண்டுக் காலம் ஆகி, ஓராண்டு விழா கூட இரண்டு நாட்களுக்கு முன்னால் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்றிருக்கிறது. அங்கே எவ்வளவு கடலை எண்ணெய் அடைக்கப்பட்டிருக்கிறது ? இது வரையிலும் தயாரிக்கப்பட்டிருப்பது எவ்வளவு ? அது எவ்வளவு தயாரிக்க முடியும் என்ற நிலையில் இருக்கிறது என்ற விவரங்களை அறிய விரும்பவதோடு, மேற்கொண்டு அது வளர்ச்சி உறுவதற்கு அரசு எடுக்கின்ற நடவடிக்கைகளையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவரவர்களே, 12,000 மெட்ரிக் டன் நிலக்கடலைப் பருப்பிலேயிருந்து எண்ணெய் எடுக்கின்ற அனுமதியை மைய அரசு வழங்கியிருக்கிறது. அந்த வகையிலேதான் திட்டமிட்டு நாம் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம்.

[1982 மார்ச்

கூவம் ஆற்றின்மீது பூவிருந்தவல்லி—பட்டாபிராம் சாலையில் உள்ள பழுதடைந்த பாலம்.

*வினா எண். 467—திரு. து. இராசரத்தினம் : மாண்புமி உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூவிருந்தவல்லி—பட்டாபிராம் சாலையில் உள்ள கூவம் ஆற்றின் மீது கட்டப்பட்ட பாலம் உடைந்திருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) எப்போது அப்பாலம் செப்பனிடப்படும்?

(இ) அதன் மதிப்பீட்டுத்தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) (ஆ) மற்றும் (இ) இப்பாலத்தை ரூ. 55 இலட்சம் மதிப்பீட்டில் திருத்தி அமைக்கத் தலைமைப் பொறியாளரால் அனுப்பப்பட்டுள்ள செயற் குறிப்பு அரசின் தீவிர பரிசீலனையிலே இருக்கிறது.

திரு. து. இராசரத்தினம் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கடந்த நான்காண்டுக் காலத்திற்கு முன்பு 12 இலட்சம் ரூபாயிலிருந்து, இப்பொழுது 55 இலட்சம் ரூபாய்க்குத் திருத்தி அமைப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டாவது அந்த வேலை துவக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவரவர்களே, பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன். அதுவும் சாதாரண பரிசீலனை இல்லை, தீவிர பரிசீலனையிலே இருக்கிறது. ஆகவே, வெகு சீக்கிரமாக எடுக்கப்படும்.

திரு. து. இராசரத்தினம் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்த நிதியாண்டில் எடுத்துக்கொள்ளப்படுமா என்று மாண்புமிகு அமைச்சரர்கள் அறிவிப்பார்களா? அவரே சொல்கிறார், தீவிர பரிசிலனை என்று. அந்தத் தீவிர பரிசிலனையின் கீழ் இந்த ஆண்டே எடுத்துக்கொள்ளப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு, ப. குறந்தைவேலு : துணைத் தலைவரவர்களே, தீவிர பரிசிலனை இந்த ஆண்டிலே முடிவடைந்தால் இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும். தீவிர. பரிசிலனை காலங்கடந்தால் கொஞ்சம் காலமாகும்.



1982 மார்ச் 11]

திரு. து. இராசரத்தினம் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தீவிரம், அதிதீவிரம், தீவிரம் அல்லாதது என்று பிரச்னைகள் மூன்று விதமாகப் பிரிக்கப்படுகின்ற நேரத்தில் தீவிரம் என்றால் எத்தனை ஆண்டுகளாகும் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப.குழந்தைவேலு : துணைத் தலைவரவர்களே, தீவிரம் என்பது சீக்கிரமாக விரைவாக, எவ்வளவு வேகமாகப் போக முடியுமோ அவ்வளவு வேகமாக.

ஸ்ரீவைகுண்டம் அருகேயுள்ள தாமிரபரணியில் மேல் உள்ள பாலம்.

*வினா எண் 468—திரு. கேசவ ஆதித்தன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் ஸ்ரீவைகுண்டம், தாமிரபரணி ஆற்றின் குறுக்கேயுள்ள பாலம் மிகவும் குறுகலாக உள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதை விரிவுபடுத்தும் திட்டம் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப.குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) இல்லை.

(முற்பகல் 9-30)

திரு. மு. அப்பாத்துரை ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் நெல்லை மாவட்டத்தில் மையப் பகுதியிலிருக்கிற காரணத்தால் அதிகமான போக்குவரத்து இருக்கிற காரணத்தால், குறிப்பாக, திருச்செந்தூர் ஆலயத்திற்குச் செல்ல வேண்டியவர்கள் இந்தப் பாலத்தின் வழியாகச் செல்ல வேண்டியிருப்பதால், வருங்காலத்திலாவது இந்தப் பாலத்தை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாணபுமிகு திரு. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பாலத்தின் அகலம் இப்பொழுதே 5½ மீட்டர் அளவுக்கு இருக்கிறது. ஆகவே, விரிவுபடுத்த வேண்டுமென்றால், முதலிலே பாலமே இல்லாத ஊர்களுக்குப் பாலம் அமைக்க வேண்டும். ஆகவே, இருக்கின்ற பாலத்தை விரிவு படுத்த வேண்டுமென்று சொன்னால், பாலம் இல்லாத ஊர்களுக்குப் பாலம் அமைக்கின்ற பணிகள் எல்லாம் முடிந்த பிறகுதான் இவைகளை எடுத்துக் கொள்வது நியாயமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

## உப்புப்பேட்டை தோல் பதனிடும் சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர்.

*வினா எண் 469—திரு. ஏ. எம். சேதுராமன் : : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு ஒன்றியத்திலுள்ள உப்புப்பேட்டை Tannery யிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரால் சாத்தூர், கலர், தாசிபுரம் கிராமங்களுக்குட்பட்ட ஆயிரக்கணக்கான நஞ்சை நிலங்கள் பாதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் கழிவு நீரை அப்புறப்படுத்த வழி வகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) 23—4—1981 நாளிட்ட அரசாணை எண். 726-ன் படி இம்மாநிலத்திலுள்ள அனைத்து தோல் பதனிடும் தொழிற்சாலைகளும் கழிவு நீரை ரசாயன முறையில் சுத்தப்படுத்த தக்க ஏற்பாடுகளை 3—12—1981-ல் செய்து முடிக்க வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது. தொழிற்சாலை அதிபர்கள் மேற்கொண்டு அவகாசம் கோரியதால், 30—6—1982 வரை அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. அதற்குள் அவ்வாறு செய்யத் தவறினால் அவைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமங்கள் ரத்து செய்யப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆற்காடு ஒன்றியத்தில் உப்புப்பேட்டையில் இருக்கிற டானரியை சென்னையிலே இருக்கிற ஒரு முதலாளியால் பெரிய அளவில் நடத்தப்பட்டு வருகிறது. அதனாலே, தமிழகத்திற்கும் இந்தியாவிற்கும் அன்னியச் செலாவணி அதிகமாகக் கிடைத்தாலும்கூட, அங்கேயிருக்கிற 3,000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கிற நிலைமையை அரசு அறியுமா! அதைத் தவிர்க்க இப்பொழுது அவர்களுக்கு 6 மாதங்கள் அவகாசம் கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பின்னால் அதைத் தடுத்து நிறுத்தும் முயற்சியில் அல்லது, கழிவுநீரை ஆவியாகப் போக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, உப்புப் பேட்டையிலே இரண்டு தோல் பதனிடும் அமைப்புகள் இருக்கின்றன. வெளியேற்றுகின்ற கழிவுநீர் கெட்ட பொருளைப்பாதி அளவு முடிப்பதும், மற்றொன்று முழு அளவு முடிப்பதும், ஆகவே, இந்த இரண்டு தோல் பதனிடும் ஆலைகளிலிருந்து வெளிவரும் கழிவுச் சாராய வடி நீரை ஆவியாக்க அங்கே டாங்குகள் அமைக்க வெண்டுமென்று நாம் கேட்டிருந்தோம்.





அம்மாதிரி இருந்தும்கூட கழிவுநீர் பக்கத்திலே இருக்கக்கூடிய நிலங்களுக்குப் போய் அதன் மூலமாக, அங்கே உள்ள பயிர்கள் நாசப்படுகின்ற சூழ்நிலை இருக்கிற காரணத்தினால்தான் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனாலும் அவர்கள் 30—6—1982 வரையிலும் அவகாசம் கேட்டிருக்கிறார்கள். ஆகவே, 30—6—1982-க்குள் அவர்கள் அப்படிச் செய்யவில்லை என்றால், அவர்களுடைய உரிமங்கள் ரத்து செய்யப்படும்.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே இது போன்ற பல தோல் பதனிடும் தொழிற்சாலைகள் உள்ளன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். அதே போல், 7 நகராட்சி மன்றங்களுக்கும் நீர் தருவது பாலாறு. அந்தத் தொழிற்சாலைகள் பூராவும் ஆற்றங்கரையில் இருப்பதனால், அந்தக் கழிவு நீர் நேராக ஆற்றுக்குச் செல்வதால், குடிதண்ணீர் பாதிக்கக்கூடிய நிலை இருக்கிறது; ஆயிரக்கணக்கான விவசாய நிலங்கள் பாதிக்கக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, ஜூன் மாதம் 30 ஆம் தேதிக்குள் அவர்கள் கட்டி முடிக்க, தீவிர நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, பாலாற்றிலே இது போன்ற கழிவுநீர் விழுவதன் மூலமாக, வெள்ளக் காலங்களில் பாலாற்றிலே வருகின்ற தண்ணீரோடு கழிவுநீர் கலக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. அவைகளையெல்லாம் கவனத்திலே கொண்டு, அந்தத் தோல் பதனிடும் ஆலைகளிலிருந்து வெளியேறுகின்ற கழிவுநீரை எந்த அளவு அகற்றமுடியுமோ, அப்புறப்படுத்த முடியுமோ, பொது மக்களுக்கு இடைஞ்சல்கள் ஏற்படுத்தாத வண்ணம் தவிர்க்க முடியுமோ, அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலையிலேயிருந்து வெளியேறுகிற கழிவு நீரை அப்புறப்படுத்த, அல்லது சுத்தப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்திரவிட்டிருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனாலும் இது ஒரு நீண்ட பிரச்னையாக இருந்து திண்டுக்கல் வட்டாரம், திருச்சி வட்டாரம், ஈரோடு வட்டாரம், வட ஆற்காடு மாவட்டத்திலே பெரும் பகுதி, இவ்வாறு பல்லாயிரக்கணக்கான விவசாயிகளின் நிலங்களை அது பாதித்துக் கொண்டிருக்கிறது. சமீபத்திலேகூட சில மாதங்களுக்கு முன்னாலே, மேட்டூரிலே சுற்றியிருக்கிற விவசாயிகளுடைய பயிர்கள் பாதிக்கப்பட்டதாலே, ஓரளவு நஷ்ட ஈடு வாங்கிக் கொடுத்திருக்கிறோம். எனக்குத் தெரிந்தவரை, ஏக்கருக்கு ரூ. 1,000 சமீபத்திலே பெற்றுக் கொடுத்திருக்கிறோம். அது போல், இதை அப்புறப்படுத்துகிற காரியத்தை நிறைவேற்றுகிறபொழுது, மிகப்பெரிய அளவு பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய

விவசாயிகளுக்கு, வருமானம் வரக்கூடியஅந்தத் தொழிற்சாலையி லேயிருந்து ஓரளவுக்காவது நஷ்டஈடு கொடுக்க அரசு ஏதாவது பேச்சு வார்த்தை நடத்த முயற்சி எடுக்குமா என்று அறியவிரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** துணைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்புகள் என்னிடத்திலே இல்லை. இருந்தாலும் நீங்கள் சொன்ன யோசனையை வேண்டுமானால் அரசினுடைய பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

**திரு. ஏ.எம். சேதுராமன் :** துணைத் தலைவர் அவர்களே, இந்த டானரி தொழில் அதிகமான அளவுக்கு முதலிலே இராணிப் பேட்டையிலும், அடுத்த படியாக வாணியம்பாடி பகுதியிலும் இந்தக் கழிவு நீர் அதிகமாக பாலாற்றில் விட்டுவிடுகிறார்கள். அதன் காரணமாக இராணிப்பேட்டையிலே உள்ள மக்கள் ஆற் காட்டுக்கே குடி வந்துவிடலாமா என்று அச்சப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே இதை உடனடியாகக் கவனித்து இந்தக் கழிவு நீர் பாலாற்றிலே கலப்பதைத் தடுக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** துணைத் தலைவர் அவர்களே, அதையும் அரசு உடனடியாகப் பரிசீலிக்கும்.

## கிராமங்களில் சாண எறிவாயு உற்பத்தி செய்யும் திட்டம்

*வினா எண் 470—திரு. த. புருஷோத்தமன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புறங்களில் பெரிய அளவில் மாட்டுச்சாண எரிவாயு உற்பத்தி செய்வதற்கு அரசிடம் ஏதேனும் செயற் குறிப்புள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) ஆம்.

(ஆ) தமிழகத்தில் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 35,000 சாண எரிவாயு அமைப்புக்களை நிறுவ திட்டமிடப் பட்டுள்ளது. அவற்றில் நடப்பு ஆண்டில் 3,500 அமைப்புகளை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.





**திரு. ந. சிவஞானம்:** துணைத் தலைவர் அவர்களே, கிராமப் புறத்தில் மாட்டுச் சாண எரிவாயுத் திட்டம், தமிழ் நாட்டிலே எல்லா இடங்களிலும் தீவிரமாக அமல்படுத்துவதற்கு மாவட்ட அளவிலும் வட்டார அளவிலும் அதிகாரிகளை நியமிக்க உத்தேசம் உண்டா என்பதை அறிவதோடு, அங்கே உள்ள ஏழை மக்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், தேசிய வங்கிகளின் மூலமாகவும் கடன் வசதி பெறுவதற்கு—ஏனென்றால் இப்போது அவர்களுக்குச் சரியாக கடன் கிடைப்பதில்லை—கடன் கொடுக்க அரசு வற்புறுத்துமா என்பதை அறிவதோடு தற்போது 20% தான் மானியமாக அளிக்கப்படுகிறது, அதை 30 சதமாக உயர்த்தி அளிக்க அரசு உத்தேசிக்குமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** துணைத் தலைவர் அவர்களே, இது மத்திய அரசின் திட்டம். இந்தத் திட்டம் பிரதமர் அவர்கள் அறிவித்த 20 அம்சத் திட்டத்திலே இதுவும் ஒன்று. இந்தத் திட்டத்தில் மொத்தம் இந்தியா முழுவதும் 4 லட்சம் சாண எரிவாயு அமைப்புகளை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதிலே 35 ஆயிரம் அமைப்புகளை ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தில் தமிழகத்தில் நிறுவ கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இந்த ஆண்டில் 3,500 சாண எரிவாயு அமைப்புகள் ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக கொடுக்கின்ற மானியம் பழம்குடி மற்றும் ஆதிதிராவிட மக்களாக இருந்தால் அவர்களுக்கு 50 சதவிகிதம் இன்று மானியமாக கொடுக்கப்படுகின்றது. சிறிய, நடுத்தர விவசாயப் பெருங்குடி மக்களுக்கு 33 சதவிகிதம் மானியமும், மற்றவர்களுக்கு 25 சதவிகிதம் இதிலே மானியமாகக் கொடுக்கப்படுகின்றது. இன்று இந்த திட்டத்தின் மூலமாக ஒரு 10 பேர் கொண்ட குடும்பத்திற்கு ஒரு சாண எரிவாயு அடுப்பு ஏற்படுத்தவேண்டும் என்று சொன்னால் 5,500 ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடு செய்யப்பட்டிருக்கின்றது. இந்தத் தொகை தேசிய வங்கிகள் மூலமாகக் கடன் கொடுப்பதற்கும், கால்நடை அதிகமாக வைத்திருப்பவர்களுடைய நிலையை கவனத்தில் எடுத்துக் கொண்டு, இது போன்று திட்டங்களை அமல் படுத்த தமிழகத்திற்கு ஒப்புதல் கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் :** துணைத் தலைவர் அவர்களே, சாணம் பொதுவாக நோய்களைக் கொல்லும் என்பது விதி. அதை அறிந்துதான் நம் முன்னோர்கள் காலையில் எழுந்தவுடனே வீட்டுக்கு முன்னால் சாணம் தெளிக்கும் பழக்கத்தை உண்டாக்கி இருந்தார்கள். இன்றைக்கு அந்தப் பழக்கம் வர வர குறைந்து வருகிறது. அதனால் இந்த நோய் பரவுவது அதிகமாகிக் கொண்டு வருகிறது. எனவே கிராமப்புறங்களில் இந்த சாண எரிவாயுவைக் கொண்டு அதன் மூலமாகத் தெரு விளக்குகளைப் போட்டால், மின்சாரப் பற்றாக்குறையும் குறையும். அதனாலே விஷக் கிருமிகளும் கொல்லப்படும். எனவே

[1982 மார்ச் 1

எல்லா கிராமங்களிலும் அரசு செலவிலே சாண எரிவாயு கிட்டங்கிகளை செய்வதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, இது யார் யாருக்குத் தேவையோ அவர்களுக்கு அந்த அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற மக்களுக்கு நன்மை செய்வதற்காக இந்தத் திட்டம் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது— ஊர் நல அலுவலர்களின்மூலமாக யார் யார் விண்ணப்பங்கள் கொடுக்கிறார்களோ அவர்களுடைய விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு கொடுக்கப்படும். அதற்காகத்தான், ஒரு சாண எரிவாயு அடுப்புக்கு ஊக்கத் தொகையாக 30 ரூபாய் என்ற அளவிலே ஊர் நல அலுவலர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அதற்கான பயிற்சியும்கூட கோவை மாவட்டத்திலே வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலே கொடுக்கப்படுகிறது. ஆகவே இந்தத் திட்டத்தை மிகச் சிறப்பாக அமல் நடத்தமுடியும் என்று நம்புகிறோம். இதற்கு வேறு என்ன என்ன தேவை இருந்தாலும் எல்லோருக்கும் இந்தத் திட்டத்தினை விரிவாக்கவேண்டுமென்று நாம் கூறமுடியாது. உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் யார் யார் இதிலே முன்வருகிறார்களோ தேவையின் அடிப்படையில் கொடுக்க ஏற்பாடு செய்கிறோம். இந்த 35 ஆயிரத்தை அதிகமாக்க வேண்டுமென்று அரசின் சார்பில் பிரதம அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்தால் ஒப்புக்கொள்வார்கள், ஆகவே எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படலாம்.

திரு. சோ. அழகர்சாமி: துணைத் தலைவர் அவர்களே, இந்த சாண எரி வாயு அடுப்பின் மூலமாக மின்சாரத் தட்டுப்பாடு விறகுக்காக காடுகளை அழித்தல் போன்றவைகளைத் தடுக்க முடியும். இதற்காக ஏறத்தாழ 5 ஆயிரம் ரூபாய் தேவைப்படுகிறது. 35 சதவீதம் என்ற அளவுக்கு கொடுக்கும் மானியத்தை 50 சதவீதம் மானியமாகக் கொடுக்கக்கூடிய முறையிலே ஏற்பாடு செய்ய வேண்டும். அதோடு வங்கிகளின் மூலமாகக் கடன்கொடுக்கப்படுகிற போது காலதாமதம் ஏற்படுகின்றன. ஆகவே ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாகக் கடனை காலாகாலத்திலே கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா? அதோடு மானியத் தொகையை உயர்த்துவதற்கும் அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இது ஒரு பெரிய திட்டம் என்று ஏற்கனவே சொன்னேன். 20 அம்சத் திட்டத்திலே இதுவும் ஒரு திட்டம். இப்போதுதான் நடைமுறைக்கே எடுத்துக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் இதன் விளைவுகள் என்ன என்பதைப் பார்த்து கொடுக்கக்கூடிய மானியத்தை எவ்வளவு அதிகரிக்கவேண்டுமென்று மைய அரசுக்குத் தெரிவிக்கலாம். இது 100 சதவீதம் மத்திய அரசின் திட்டம், ஆகவே



1982 மார்ச் 11]

மத்திய அரசின் ஒப்புதல் வேண்டும், மாநில அரசின் திட்டம் என்றால் நாமே பரிசீலனை செய்து முடிவு செய்யலாம். ஆகவே மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி கொடுக்கக்கூடிய மானியத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. பெ. க. திருவேங்கடம்: துணைத் தலைவர் அவர்களே, சாண எரிவாயு தயாரிக்கும் திட்டம்ஒன்றுக்குகிட்டத்தட்ட 5 ஆயிரம்ரூபாய் மதிப்பீடு ஆகிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள் அதிலே மானியம் போக மீதித் தொகை பூராவுமே வங்கியினால் கொடுக்கப்படுகிறதா? இல்லையென்றால் அரசாங்கம் மானியம் கொடுப்பதைப்போல் மீதித் தொகையை அரசாங்கமே கடனாக வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின்மூலமாககடனாகக் கொடுக்கப்படுகிறது. இந்தத் திட்டத்திலே அரசாங்கம் கொடுக்கிற மானியம் 50 சதவீதம் என்றால் 2,750 ரூபாய் கடனாகக் கொடுக்கப்படுகிறது. அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும். ஆகவே பாக்கியிருக்கிற தொகை கடனாகத்தான் கொடுக்கப்படுகிறது.

திரு. த. வீராசாமி: துணைத் தலைவர் அவர்களே, மாட்டுச் சாணம் தொழு உரம் தயாரிப்பதற்கும் முக்கியப் பயன்படுத்தப்படுகிற பொருள் என்பது எல்லோரும் ஏற்றுக்கொள்வது ஆகும். என்னதான் விஞ்ஞான முறையிலே நவீன முறையிலே உரங்களை நாம் பயன்படுத்தலாம் என்று இருந்தாலும்கூட அடி உரம் என்ற முறையிலே தொழு உரம் அவசியமாகிறது. அது இல்லா விட்டால் வேளாண்மை உற்பத்தி இருக்காது என்று சொல்கிறார்கள். ஆகவே மாட்டுச் சாணம் எரிவாயுவாக தயாரிக்கப்படுவதற்குப் பயன்படுத்தப்படுவதால் வேளாண்மை உற்பத்தி பாதிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மை உற்பத்தி பாதிக்கப்படும் என்ற நிலை இருக்காது என்று நினைக்கிறேன்.

## சுற்றுலா கார்களுக்கு அகில இந்திய உரிமம் வழங்கும் திட்டம்

*வினா எண். 471—திரு. பெ. க. திருவேங்கடம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு அரசு 1981 82-ல் அகில இந்திய அளவில் செல்லக்கூடிய "சுற்றுலா கார்களுக்கு" உரிமம் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[1982 மார்ச் 11

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

(இ) எத்தனைக் கார்களுக்கு உரிமம் வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ), (ஆ) மற்றும் (இ) : மத்திய அரசு 5—1—1981 நாளிட்ட தனது அறிக்கையில் தமிழ்நாட்டிற்கு 50 அகில இந்திய சுற்றுலா டாக்சி உரிமங்களை வழங்க அனுமதித்தது. இந்த உரிமங்களைக் கோரி 346 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இவற்றை மாநில போக்குவரத்து அதிகாரி பரிசீலித்து 11—11—1981 அன்று தகுதி வாய்ந்த 50 நபர்களுக்கு உரிமங்கள் வழங்க உத்தரவிட்டுள்ளார்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : துணைத் தலைவர் அவர்களே, இந்த உரிமங்கள் வழங்கக்கூடிய அந்த 50 நபர்களுக்கு எந்த எந்தத் தகுதியின் அடிப்படையிலே உரிமங்கள் வழங்கப்பட்டன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக நாம் வைத்திருக்கிற தகுதி இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகம், மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகம், மாநில சுற்றுலாத் துறை, மத்திய சுற்றுலாத் துறை, இப்படிப் பட்டவைகளுக்குக் கொடுக்கவேண்டுமென்றும் அதிலே தேவையான அளவுக்கு விண்ணப்பங்கள் இல்லாத அளவுக்கு இருந்தால் சொந்த ஓட்டுநர் உரிமம் வைத்திருக்கிறவர்கள் சுற்றுலாப் பேருந்துகளை ஓட்டும் என்டார்ஸ்மென்ட் போட்டு உரிமம் வைத்திருக்கின்றவர்கள் தொழில் கூட்டுறவுத் துறை அமைப்பின் கீழ் வருகின்றவர்கள் வேலையில்லாத பட்டதாரிகள் மற்றும் ஊனமுற்றவர்களுக்கு கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையிலே நாம் வழிவகை செய்திருக்கிறோம். இந்த வகையிலே தான் நாம் இப்போது கொடுத்திருக்கிறோம்.

திரு. இ. முத்துராமலிங்கம் : தமிழ்நாட்டிலே இதுவரை மொத்தம் எத்தனை பெர்மிட்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன? ஏற்கெனவே கொடுத்த பெர்மிட்களில் வண்டிகள் எடுக்காமல் சரண்டர் செய்யப்பட்ட பெர்மிட்கள் எத்தனை? சரண்டர் செய்யப்பட்டவர்களிடமிருந்து புதிதாக விண்ணப்பங்கள் கோருவதற்குத் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவரவர்களே, இந்தக் கேள்வியே 1981—82-ஆம் ஆண்டுக்கு வழங்கப்பட்ட உரிமங்கள் பற்றியது, எனவே அதற்கான பதிலை சொன்னேன். இதுவரை எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற கணக்கு தற்போது என்னிடம் இல்லை. 1981–82-ல் 50 உரிமங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற கணக்கு மட்டும் இருக்கிறது.



1982 மார்ச் 11]

திரு பெ. சு. திருவேங்கடம் : துணைத் தலைவரவர்களே, இந்த 50 உரிமங்கள் வழங்கியதிலே எல்லா மாவட்டங்களையும் சேர்ந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா? இந்த 50 உரிமங்கள் என்பது ஒவ்வொரு ஆண்டுக்கும் ஐம்பதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவரவர்களே, பெரும்பாலும் எல்லா மாவட்டங்களையும் சேர்ந்தவர்களுக்கு தந்திருப்பதாகத் தெரிகிறது. இருந்தாலும் மனுச் செய்த எல்லோருக்கும் தந்திருப்பதாகச் சொல்ல முடியாது. ஒருசில மாவட்டங்களிலிருந்து அதிகமாக மனுக்கள் வருகின்றன ; ஒரு சில மாவட்டங்களிலிருந்து குறைவாக வருகின்றன ; சில மாவட்டங்களிலிருந்து மனுக்கள் வராமல் இருக்கும் இங்கே வந்த மனுக்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள் ஆண்டு ஒன்றுக்கு 50 உரிமங்கள் என்று உறுதியாகச் சொல்ல முடியாது. மத்திய அரசு எப்போதெல்லாம் அனுமதிக்கிறார்களோ அப்போதெல்லாம் கொடுக்கிறோம்.

## உபயோகமற்ற அரசுப் பேருந்துகள்

*வினா எண் 472—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரசு பஸ்களில் condemn ஆவதை அரசு பள்ளிகட்கு மான்ய விலையில் அல்லது இலவசமாக தரும் யோசனை அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது முதல் அமுலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) மற்றும் (ஆ) : போக்குவரத்துக் கழகங்களின் பழைய பேருந்துகளைப் பள்ளிகட்கு இலவசமாக தரும் யோசனை அரசின் ஆய்வில் இல்லை. ஆனால் அத்தகைய பேருந்துகளை மான்ய விலையில் பள்ளிகட்கு விற்கும் பொருட்டு எல்லா போக்குவரத்துக் கழக இயக்குநர்களுக்கு அரசு அறிவுரை வழங்கியுள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : துணைத் தலைவரவர்களே, இந்த அரசு கண்டமான பழைய பேருந்துகளை மானிய விலையில் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஒரு பஸ்ஸை என்ன விலைக்குக் கொடுக்க யோசனைக் கூறப்பட்டிருக்கிறது? அரசினுடைய பள்ளிகளுக்கு அரசாங்கமே இனாமாகக் கொடுத்து உதவ முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவரவர்களே, அரசினுடைய பள்ளியாக இருந்தாலும் அரசாங்கம்தான் அதற்குப் பணம் கொடுக்கிறது. போக்குவரத்துக் கழகம் என்பது

[1982 மார்ச் 11

தனியாக இருப்பதால், அதற்கு தனியாக வரவு-செலவுத் திட்டம் இருப்பதால் இனாமாக கொடுப்பதில்லை, மானிய விலையில் அரசாங்கப் பள்ளியாக இருந்தால் 40,000 ரூபாய்க்குக் கொடுக்கிறோம், அரசு உதவி பெறும் தனியார் பள்ளியாக இருந்தால் 45,000 ரூபாய்க்குக் கொடுக்கிறோம், அங்கீகாரம் இல்லாமல் இயங்கி வருகின்ற பள்ளியாக இருந்தால் 50,000 ரூபாய்க்குக் கொடுக்கிறோம்,

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : துணைத் தலைவரவர்களே, போக்கு வரத்து இலாகாவிலுள்ள கண்டம் செய்த கார்களைப் பார்லிமெண்ட் உறுப்பினர்களுக்கு மத்திய அரசு வழங்குவதைப் போல சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாநில அரசு வழங்க திட்டம் ஏதாவது இருக்கிறதா? இல்லை என்றால் அதை பரிசீலனை செய்வார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய யோசனை மிக நல்ல யோசனை. அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும் இதை வரவேற்பார்கள். என்று கருதுகிறேன். ஆனால் 234 உறுப்பினர்களுக்கும் கார்கள் கொடுக்கக்கூடிய அளவில் போக்குவரத்துத் துறையில் கார்கள் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. சி. டிஜீ பிரபாகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்படி கண்டம் ஆகிற பேருந்துகளை பள்ளிகளுக்கு மானிய விலையில் தருவதை விட போக்குவரத்துத் துறையே அந்த பேருந்துகளை மினி பஸ்களாக மாற்றி சிறு பேருந்துகளாக பல்வேறு கிராமங்களுக்கும் விடுவதாக இருந்தால் நலமாக இருக்கும் இந்த யோசனையை அரசு பரிசீலிக்குமா?

மாபுண்மிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவரவர்களே, மினி பேருந்துகளாக மாற்ற வேண்டும் என்பதற்காக பள்ளிக்கூடங்களுக்குக் கொடுக்கின்ற பேருந்துகளை நிறுத்த வேண்டியதில்லை. கொடுத்தது போக மீதம் இருக்கிற பேருந்துகளை பெருநகர்ப் பிரிவில் அப்படி மாற்றி இயக்குகிறோம். அது தொடர்ந்து நடக்கிறது.

திரு. இல. பலராமன் : துணை தலைவரவர்களே, இந்த பழுதுபட்ட பேருந்துகளை பள்ளிக்கு மட்டுமல்லாமல் கலலூரிகளுக்கு வழங்க அரசு ஆலோசிக்குமா? பாலிடெக்னிக் போன்ற தொழில் பள்ளிகளுக்கும் வழங்கப்படுமா ? சில இடங்களுக்கு அளிப்பதில் சில நிர்ப்பந்தங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த நிர்ப்பந்தங்கள் தவிர்க்கப்பட்டு, எந்த இடமாக இருந்தாலும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?



1982 மார்ச் 11]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவரவர் களே, ஏற்கெனவே பள்ளிகள், கல்லூரிகள் மற்றுமுள்ள கல்வி நிறுவனங்களுக்கு எல்லாம் வழங்க இடமிருக்கிறது. சட்டக் கல் லூரிக்குக் கொடுத்திருக்கிறோம் ; மருத்துவக் கல்லூரிக்குக் கொடுத்திருக்கிறோம் ; எல்லா இடங்களிலும் படிப்பு நிறுவனங் கள் எல்லாவற்றுக்கும் கொடுக்கும் வாய்ப்பு இருக்கிறது.

வஞ்சிபாளையத்தில் ரயில்பெட்டி தொழிற்சாலை

*வினா எண் 473— திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாவட்டம், அவினாசி தாலுகா, அவினாசிக்கு அருகாமையிலுள்ள வஞ்சிபாளையம் என்ற கிராமத்தில் ரயில் பெட்டி தொழிற்சாலை ஆரம்பிக்க திட்டமுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

(இ) மத்திய அரசிடம் வற்புறுத்தி இதை பெற நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் உள்ள போக்குவரத்து நெரிசல்.

வினா எண் 474— திரு. எம். சின்னசாமி, திரு. இராதாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை-சென்ட்ரல் நிலையத்தில் போக்குவரத்து நெரிசல் மிகுந்து இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் மாற்று ஏற்பாடு செய்வதற்கு மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1982 மார்ச் 11

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) தென்னக ரயில்வே மூர் மார்க்கெட், உள்ள இடத்தை எடுத்துக் கொண்டு சென்னை சென்டிரல் ரயில் நிலையத்தை விரிவு படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது. மேற்கண்ட விரிவாக்கப் பணியில் வளர்ந்து வரும் மக்கள் தொகை காரணமாக ஏற்படும் போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்க, ஆட்டோ, டாக்சி மற்றும் பிற வாகனங்கள் ரயிலடிக்குச் சுலபமாக வந்து போக வழி வகை செய்யும் திட்டம் ஒன்றை நிறைவேற்றி வருகிறது.

(முற்பகல் 9-50)

திரு எம் சின்னசாமி: துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு இப்போது விரிவாக்கப் பணியிலே ஈடுபட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எவ்வளவு காலத்திற்குள் அந்தப் பணி முடிக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? ஆனால் தற்போது அதிகமான நெருக்கடி ஏற்பட்டிருப்பதால் தற்காலிகமாக ஆட்டோ, ரிக்ஷா, டாக்சிகள் போன்றவற்றை அருகிலே இருக்கின்ற வால்டாக்ஸ் ரோட்டிலே நிறுத்துவதற்குரிய ஆலோசனையை அரசு செய்யுமா?

மாண்மிகு திரு. சு. முத்துசாமி: துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினை அவர்கள் பெரிய திட்டமாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இரயில்வே நிலையத்தினை விரிவு படுத்துவதோடு வருகின்றவர்களுக்கும், போகின்றவர்களுக்கும் வசதியாக வாகனங்களை நிறுத்துவதற்கான வழியிலேயும் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதனை எப்போது முடிப்பார்கள் என்ற குறிப்பு என்னிடத்திலே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் தற்காலிகமாக அங்கே நெரிசலைக் குறைப்பதற்காக டாக்சிகளையும், ஆட்டோ ரிக்ஷாக்களையும் வேறிடத்திலே நிறுத்தினால் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படும். ஆகவே காவல் துறையினரிடம் சொல்லி வருகின்ற நெரிசலைக் கட்டுப்படுத்தி கொஞ்சம் ஒழுங்காக வைத்திருந்தாலே அது சுலபமாக இருக்கும் என்ற வகையிலே அந்த ஏற்பாட்டை செய்து அதனை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது சென்ட்ரல் ஸ்டேஷன் உள்ள பகுதியை ஒட்டி ஜெனரல் ஆஸ்பத்திரி, மூர் மார்க்கெட் மற்றும் பூந்தமல்லி ஐரோடு முதலியவை இருப்பதால் ஜன நெருக்கடி மிகவும் அதிகமாக இருக்கிறது. இந்த நெரிசலைச் சமாளிக்க, சென்ட்ரல் ஸ்டேஷனையே அங்கிருந்து நீக்கி, பாடிகாட் ரோட்டின் அருகே பல்லவன் பணிமனை எதிரேயுள்ள காலி இடத்துக்கு மாற்றும் யோசனை பற்றி சிபாரிசு செய்து மத்திய அரசுக்கு அனுப்பப்படுமா?



1982 மார்ச் 11

மாண்புமிகு திரு.சு. முத்துசாமி: துணைத் தலைவர் அவர்களே, ஏதாவது நடக்கக்கூடிய சிபாரிசு என்றால் அதை நான் செய்வதற்கு ஆசைப்படுகிறேன். எனவே இந்த சிபாரிசினைச் செய்ய அரசாங்கம் தயாராக இல்லை என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாய் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கான கடனுதவி.

வினா எண் 399— திரு. ஏ. சாகுல் ஹமீது: மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தொழில் வணிகத் துறையில் இருந்த பாய் நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களை, காதி வாரியத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அச்சங்கங்களுக்கு காதி வாரியம் கடனுதவி அளிக்க மறுப்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: (அ) ஆம்.

(ஆ) பாய் நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு, தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் கடனுதவி வழங்கி வருகிறது. ஆகவே, இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ரா. கிருஷ்ணன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பாய் தொழில் செய்யக் கூடியவர்கள் பொருளாதார ரீதியாக மிகவும் நலிந்தவர்கள். குறிப்பாக பத்தமடை மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களின் தொகுதி. அங்கே உள்ள பெரும்பகுதியான மக்கள் இந்தப் பாய் செய்யும் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் பொருளாதார ரீதியாக மிகவும் அவதிப்படக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்குப் போதுமான அளவுக்குக் கடன் உதவி செய்து தரவேண்டும். பத்தமடை பாய் என்பது உலகப் பிரசித்தி பெற்றது. அதேபோல் வீரவநல்லூர் பகுதியிலேயும் இந்தத் தொழிலிலே மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களை எல்லாம் பொருளாதார ரீதியாக உயர்த்துவதற்குரிய திட்டம் ஏதாவது உள்ளதா? அப்படியானால் அதுபற்றி அரசாங்கத்தின் நிலைமை என்ன என்பதைத் தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: துணைத் தலைவரவர்களே, பத்தமடை பாய் முடைவோர் கூட்டுறவுச் சங்கம், வீரவநல்லூர் பாய் முடைவோர் கூட்டுறவுச் சங்கம்

போன்ற சங்கங்கள் தமிழ்நாட்டில் 9 சங்கங்கள் இருக்கின்றன. இவற்றுக்கு நமது வாரியத்தின் வாயிலாக முதலீட்டுக் கடன்களும் கொடுக்கிறோம். மூலதனக் கடன்களும் கொடுக்கிறோம். ஆகவே அந்த அடிப்படையிலே அவர்களை ஊக்குவிக்கும் வகையிலே கடன்கள் ஏற்கெனவே கொடுக்கப்படுவது போக ஆரம்பத்திலே இந்தச் சங்கத்தை எடுத்துக் கொண்ட நிலையிலே பத்தமடை கூட்டுறவுச் சங்கத்திற்கு 7,500 ரூபாய் கடன் கொடுக்கப்பட்டிருக்கின்றது. வீரவநல்லூர் பகுதியிலே உள்ள சங்கத்திற்கு 7,500 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இது தவிர தற்சமயம் இதற்காக ஏறக்குறைய 35,000 ரூபாய் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்து கொண்டு வருகின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எல். இளைய பெருமாள் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நூற்றுக்கணக்கான ஆண்களுக்கும், பெண்களுக்கும் பாய் முடைவதற்குரிய பயிற்சி கொடுக்கப்படுகின்றது. அப்படி பயிற்சி பெற்றவர்கள் வேலை வாய்ப்புக் கேட்டு வாரியத்தின் மூலமாக மனுச் செய்தும் அவர்களுக்கு உதவி செய்யப்படாத காரணத்தால் ஸ்டைபன்ட் கொடுத்து பயிற்சி அளிக்கப்பட்ட அந்த நூற்றுக் கணக்கான ஆண்களும், பெண்களும் வேலை வாய்ப்பில்லாமல் அவதிப்படுவது உண்மை தானா? இதை மனதில் கொண்டு அரசாங்கம் தனியாகத் தொழில் தொடங்கி அவர்களுக்கு உதவி செய்யுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :** காந்திய வழியில் கிராமங்களில் சுய வேலை வாய்ப்பிற்காகத்தான் இப்போது கடன் உதவி செய்யப்படுகிறது. ஆகவே இதில் பயிற்சி பெற்றவர்கள் தனிப்பட்ட முறையில் தொழில் செய்ய விரும்பினால் வாரியத்திற்கு முறைப்படி மனு செய்தால் அதைப் பரிசீலித்து கடன் கொடுக்கப்படும்.

**திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் :** இந்த பாய் நெய்தல் தொழில் சிரமமான தொழில. அதில் பெரும்பாலாக பெண்கள் தான் ஈடுபட்டிருக்கிறார்கள். காலை நீட்டி வைத்துத்தான், அந்தக காரியத்தைச் செய்ய வேண்டியிருப்பதால் சில நேரங்களில் அவர்களுக்கு வாதம் போன்ற நோய், குறிப்பாக முடக்கு வாதம் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. ஆகவே அப்படி முடக்குவாதம் போன்ற நோய் ஏற்பட்டால் அவர்களுக்கு அரசிடமிருந்து நிவாரண உதவி செய்வதற்கான செயற் குறிப்பு ஏதாவது உள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :** மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் அளிக்கலாம்.





**திரு. இ. முத்துராமலிங்கம் :** நெல்லை மாவட்டத்தில் உள்ள இந்தப் பத்தமடைப் பாய் பிரசித்திப் பெற்றது. அந்த பத்தமடைப் பாய்களை கதர் வாரியம் மூலமாக கொள்முதல் செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிற திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ. என். இராசேந்திரன்:** பத்தமடையில் நெய்கிற பாய்கள் மட்டுமல்ல. இந்தச் சங்கங்கள் எல்லோரும் போற்றக் கூடிய வகையில் நல்ல அருமையான பாய்களை நெய்து வருகிறார்கள். அவற்றை காதி க்ராப்ட் மூலம் விற்பனை செய்து வருவதை உறுப்பினர்கள் அறிவர். அப்படி அறியாவிட்டால் குறளகத்திற்குச் சென்று பார்த்தால் அதன் பெருமை வெளியாகும். அருமையான பாய்கள் அங்கே வைக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இ. முத்துராமலிங்கம் :** நான் கேட்டது, அவற்றை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிற திட்டம் அரசிடம் உண்டா என்பதுதான்.

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :** வாரியம் 34 நாடுகளுக்கு பல பொருள்களை ஏற்றுமதி செய்வதைப்போல் இதையும் ஒரு பொருளாக வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்கிறோம். அதை மிகவும் விரும்பி வாங்குகிற நாடுகளில் குறிப்பாக அரபு நாடுகளைச் சார்ந்தவர்கள் இதை விரும்பி வாங்குகிறார்கள்.

**திரு. மு. அப்பாதுரை :** பாய் நெய்வதற்கான கோரைகள் வெளி மாநிலங்களிலிருந்துதான் வருகிறது. அந்த மூலப் பொருளின் விலை அதிகமாக இருப்பதால் பாயின் விலையையும் உயர்த்த வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே அந்த மூலப் பொருளை இந்தத் தொழில் நடத்துகிற கிராமங்களில் உற்பத்தி செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :** மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. இருந்தாலும், சொல்கிறேன். இதற்கான மூலப் பொருள் விக்கிரமசிங்கபுரம், அம்பாசமுத்திரம் போன்ற இடங்களில் கிடைக்கின்றன. அந்தச் சங்கங்கள் நல்ல முறையில் இயங்கி வருகின்றன.

**திரு. எம். சின்னசாமி :** இந்த பாய் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் அதிகமாக ஆதி திராவிடர்களாவார்கள். அவர்கள் நெய்கிற பாய்களை தனி வியாபாரிகள் குறைந்த விலைக்கு வாங்கி அவர்களை ஏமாற்றி விடுகிறார்கள். ஆகவே கூட்டுறவுத் துறை மூலம் அந்தப் பாய்களை விற்க வேண்டும் என்ற ஒரு திட்டத்தை தீட்ட அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :** சங்கங்களைத் தான் கட்டுப்படுத்த முடியும். தனியார்கள் பாய் முடைகிறார்கள், தனியார்களுக்கு விற்பனை செய்கிறார்கள், அதை நாம் கட்டுப்படுத்த முடியாது.

[1982 மார்ச் 11

திரு. என். வரதராஜன் : இந்தப் பாய் உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் ஆவார்கள். இதற்கு மார்க்கெட் விலை கிடைக்காத காரணத்தால் அவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தனியார்களுக்கு அவர்கள் விற்பனை செய்வதையோ அல்லது தனியார்களிடம் வாங்குவதையோ தடை செய்யாமலேயே இன்று உற்பத்தியாகக் கூடிய பொருள்களை மிகக் குறைந்த விலையில் வாங்கக் கூடிய சூழ்நிலை இருப்பதால் அவர்கள் உற்பத்தி செய்வதை அரசாங்கத் துறைக்குக் கொண்டு வந்து விற்றால் அவற்றை வாங்கிக் கொள்வது என்ற கொள்கையை யாவது அரசு பின்பற்றுமா ? திண்டுக்கல், வேடசந்தூர், கரூர், பத்தமடை போன்ற பகுதிகளில் இப்படி உற்பத்தி செய்யப்பட்டதை வாங்குவதற்கு கடைகள் நிறுவப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : இதுவரையில் அந்த முடிவு இல்லை. அது அவசியமானால் அரசாங்கம் பரிசீலிக்கும்.

### சேலம் மாவட்டத்தில் உள்ள கிராமிய நூற்புநிலையங்கள்

வினா எண் 475—திரு. செ. செம்மலை : மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் மொத்த கிராமிய நூற்பு நிலையங்கள் எத்தனை ?

(ஆ) அவற்றை அதிகரிக்கும் எண்ணம் அரசுக்கு உள்ளதா?

(இ) ஆம் எனில் அமைக்க இருக்கும் நூற்பு நிலையங்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) தற்சமயம் சேலம் மாவட்டத்தில் 19 கிராமிய நூற்பு நிலையங்கள் செயல்படுகின்றன.

(ஆ) மற்றும் (இ) கதர் கிராமத் தொழில் வாரியம் கீழ்க் கண்ட நான்கு இடங்களில் நூற்பு நிலையங்களைத் துவங்கிட உத்தேசித்துள்ளது.

(1) கோலிப்பட்டி,
(2) தாராமங்கலம்,
(3) தோப்பூர்,
(4) முத்துகாபட்டி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.



1982 மார்ச் 11]

(முற்பகல் 10-00).

திரு. செ. செம்மலை : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நூற்பு மையங்கள் மூலம் எத்தனை பேர்கள் வேலை வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள். அதோடு, நடப்பு ஆண்டில் நூற்பு மையங்களை அதிகரிக்க அரசுக்கு உத்தேசம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நூற்பு நிலையங்கள் தற்சமயம் 373 இயங்கிக் கொண்டு வருகின்றன. மேலும் 150 கிராம நூற்பு நிலையங்கள் துவக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நூற்பு மையங்கள் மூலம் அதிக அளவில் கிராமப்புற பெண்கள் வேலை வாய்ப்பு பெறக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது. ஆனால், இந்த நூற்பு மையங்கள் மூலம் கிடைக்கக்கூடிய கூலி ரூபாய் 4 முதல் 4½ என்றிருக்கிறது. எனவே, அந்தக் கூலியை உயர்த்தித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் .

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமத்திலே வேலை செய்கின்ற ஒரு நபருக்கு ரூபாய் 4 லிருந்து ரூபாய் 4½ பெற்று வந்ததை, தற்சமயம் ஆகஸ்டு திங்கள் 1 ஆம் நாள் முதல் உயர்த்தப்பட்டு, ஒவ்வொரு நூற்பாளரும் சராசரி ரூபாய் 5 லிருந்து ரூபாய் 5½ தற்சமயம் பெற்று வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் செம்மலை அவர்கள் கூறியது போல் கிராமத்தில் வேலையில்லாமல் இருக்கின்ற பெண்களுக்கு சிறு ஊதியம் கிடைக்கக்கூடிய தொழிலாக இருக்கிறது. அமைச்சர் அவர்கள் ரூபாய் 5 லிருந்து ரூபாய் 5½ வரை தற்போது பெற்று வருகிறார்கள் என்று சொன்னார்கள். இன்றைக்கு விலைவாசி ஏறியிருக்கின்ற காரணத்தால் இன்னும் கொஞ்சம் அந்தக் கூலியை உயர்த்திக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ? அதோடு, இந்த நூற்பு நிலையங்களுக்கு சொந்த இடங்கள் இல்லாது, பல இடங்களில் சொந்தக் கட்டிடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கியிருந்தும் கூட, அதற்கான மனையை அங்குள்ளவர் கள் இலவசமாக கொடுக்க வேண்டுமென்று சொல்வதால், யானையை வாங்கி விட்டு கொறடா வாங்க கஷ்டப்படுவதைப் போல் இல்லாமல், அதற்கான இடத்தையும் சேர்த்து வாங்குவதற்கு, அங்கே அப்படிக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் .

[1982 மார்ச் 11

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காமராஜ் அவர்கள் காலத்திலே இப்படிப்பட்ட நூற்பு நிலையங்கள்ஆரம்பிக்கப் பட்டு, அன்றிலிருந்து இன்றுவரை அதே தொகையைத் தான் கொடுத்து வந்தார்கள். இந்த அரசு வந்ததற்குப் பின்னர்தான், கூலி உயர்வை ரூபாய் $1\frac{1}{2}$ அளவுக்கு உயர்த்திக் கொடுத்திருக்கிறது. அதுவும் 81 ஆம் ஆண்டிலேதான். இது காணவில்லை என்றால், உயர்த்திக் கொடுப்பது குறித்து இந்த அரசு அனுதாபத் தோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செல்வி ப. விசயலட்சுமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே எத்தனை பெண்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. புதியதாக ஆரம்பிக்கும் கிராம நூற்பு நிலையங்களில் எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் ? மேலும், என்னுடைய வீரபாண்டி தொகுதி யில் இரண்டு நூற்பு நிலையங்களை அமைக்க அமைச்சர் அவர் கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன் .

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே தற் சமயம் 373 நூற்பு நிலையங்கள் இயங்கிக் கொண்டு வருகின்றன. அவைகளிலே படித்துவிட்டு, வேலை வாய்ப்பு பெற்றிருப்பவர்கள் 10,890 பெண்கள். இப்போது 150 கிராம நூற்புநிலையங்கள் துவக்கப்பட இருக்கின்றன. அவற்றில் 4,500 பெண்களுக்கு புதிய தாக வேலை வாய்ப்பு கிடைக்க இருக்கிறது. மாண்புமிகு உறுப் பினர் அவர்களுடைய தொகுதியிலே தேவையான அளவுக்கு நூற்பாளர்களும், மின் இணைப்போடு கூடிய கட்டிடவசதியும் இருக்குமானால், ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். இந்தத் திட்டத்தை அங்கே விரிவுபடுத்துவதற்கு ஆவனசெய்வது பற்றி பரிசீலிக்கப்படும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, படித்த பெண்கள் இன்றைக்கு கிராமப்புறங்களிலே அதிகமான பேர்கள் இருக்கிறார்கள். ஆனால், நூற்பு நிலையங்கள் இருக்கின்றப் பகுதிகளிலே, ஒரு சிட்டத்திற்கு இவ்வளவு என்ற அடிப்படையிலே பணம் கொடுத்து கொண்டு வருகிறார்கள் என்று தெரிகிறது. ஆகவே ஒரு சிட்டத்திற்கு இவ்வளவு என்று கொடுக்கப்படு கிறதா, அல்லது மொத்தமாக தினக் கூலியாக ஐந்து ரூபாய், ஆறு ரூபாய் என்று கொடுக்கப்படுகிறதா ? இந்த நூற்புக் கூடங் கள் யூனியன் மூலமாக கட்டிக் கொடுப்பதற்கு வழிவகை செய்யப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1982 மார்ச் 11]

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த நூற்பு நிலையங்கள் வாயி லாக பெண்களுக்கு தினக் கூலியாக கொடுக்கப்படவில்லை. சிட் டத்திற்கு 30 பைசா, 40 பைசா என்று கொடுக்கிறோம். சாராசரி யாக 4 ரூபாய், 5 ரூபாய் என்று பெற்று வருகிறார்கள். திறமை யாக வேலை பார்க்கிற பெண்கள் சில இடங்களில் 8 ரூபாய் முதல் 9 ரூபாய் வரை பெற்று வருகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த கிராம நூற்பு நிலையங்களில் பி.எஸ்சி., பி.ஏ. படித்த பட்டதாரி பெண்கள் வேலை பார்த்து வருகிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரி யும். அந்த அடிப்படையிலே சராசரியாக 10 ரூபாய் கொடுப்ப தற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பட்டதாரியாக இருக்கிற கிராமப் பெண்கள், மற்றும் வேலை வாய்ப்பு இல்லாதவர்கள் இந்த நிலை யத்தைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இவர்களுக்கு கூடுத லாக கூலி கொடுக்க வேண்டும் என்பதற்காகததான் பாலியஸ்டர் சிட்டம் தயாரிப்பதை அறிமுகப்படுத்தி, இப்போது ஆறு ஸ்பின்டல்கள் வேலை பார்த்து வருவது 12 ஸ்பின்டல்கள் என்று மாற்றப்பட்டு வருகிறது. இதன் மூலம் அதிகபட்ச கூலி கிடைப் பதற்கு வழிவகை இருக்கிறது.

திரு. இ.ா. கருப்பையா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, புதியதாக 150 கிராம நூற்பு நிலையங்கள் துவங்க விருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். மாவட்ட வாரியாக அதன் விவரத்தை அறிவிக்க இயலுமா ? திருச்சி மாவட்டத்திலே எத்தனை நிலையங்கள் துவங்கவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி சேலம் மாவட்டத் தைப் பொறுத்து அமைந்திருக்கிறது. தனிக் கேள்வி போட் டால் விவரம் தருகிறேன்.

### Palm Leaves ındustries in Thanjavur District

* Q. No. 476 THIRU S. RAJARAMAN: Will the Hon. the Minister for Khadi and Public Works be plearsed to state—

(a) whether there are proposals under the consideration of the Government to set up a chain of sm ll industries with Palm Leaves at Senganur in Thiruvidaimarudur Taluk in Thajnavur District and

(b) if so, the details there of?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) இல்லை இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது குறிப்பிட்டது போல வருங்காலத்திலாவது ஏழ்மை நிலையில் இருக்கிற கிராம மக்கள் சிறு தொழில்களை மேற்கொள்வதற்கு அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறதா? இந்தத் தொழில் தெரிந்து, பயிற்சி பெற்றுள்ளவர்கள் ஊக்கம் பெறுகிறஅளவில் அரசாங்கம் முன் உதவி அளிக்க முன் வருமா என்பதைஅறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கேள்வி திருவிடைமருதூர் வட்டத்திலுள்ள செங்கனூரில் பனை ஓலைகளைக் கொண்டு முடைவோர் சங்கம் துவங்கப்படுமா என்பது. அதிலே வேலை பார்ப்பவருகளுக்கு 4 ரூபாய் முதல் 5 ரூபாய் வரையில் தான் கூலி கிடைக்கும். தஞ்சாவூர் மாவட்டத்திலே விவசாயம் செய்யக் கூடிய காலங்களில் அவர்களுக்கு கூலி 10 ரூபாய் முதல் 15 ரூபாய் வரையில் கிடைக்கும் என்பதால் இதிலே வேலை பார்ப்பதற்கு முன்னுக்கு வர தயங்குகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டது சிறு தொழில்கள் பார்ப்பதற்கு பயிற்சி பெற்றவர்களுக்கு கதர் வாரியத்தின் மூலமாக கடனுதவி அளிப்பதற்கு முன் வருவார்களா என்று கேட்டார்கள். திறமை பெற்றவர்கள் ஆர்வம் உள்ளவர்கள் மனு செய்தால் எந்த தொழிலாக இருந்தாலும் கடனுதவி செய்வதற்கு கதர் வாரியம் தயாராக இருக்கிறது. இதற்காக தக்க விளம்பரம் செய்திருக்கிறோம். ஆகவே வேண்டியவர்கள் உதவி பெறலாம்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிறபோது தஞ்சாவூர் மாவட்டத்திலே விவசாய கூலி அதிகமாக இருப்பதால் இந்தத் தொழில்களுக்கு வருவது கடினம் என்று சொன்னார்கள்.

நான் கேட்டுக் கொள்வது ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக பனை ஓலையின் மூலமாக பயிற்சி அளிக்கிறார்கள். அந்தப் பயிற்சிக்குப் பிறகு வேலை கிடைக்காமல் ஆயிரக்கணக்கானவர்கள் இருந்துக் கொண்டிருக்கிறார்கள். இதை அமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு தஞ்சை மாவட்டத்தில் பனை மூலமாக செய்யப்படுகின்ற பொருட்களைத் தயாரிப்பவர்கள் நிரந்தரமாக்கப்படக்கூடிய முறையிலே வேலை கொடுக்கக்கூடிய முறையிலே அந்தத் தொழிற்சாலையை அமைக்க பரிசீலனை செய்யப்படுமா? அதை நிறைவேற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளிப்பார்களா?





[முற்பகல் 10·10]

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, பனை ஓலை மூலம் தயாரிக்கப் படுகின்ற பொருட்களுக்கு வெளி நாடுகளிலே மிக அதிகமாக கிராக்கி இருக்கின்ற காரணத்தினால் டிரெயினிங் சென்டர்ஸ் பயிற்சி நிலையங்கள் தமிழகத்திலே உருவாக்கி டிரெய்னிங் முடிந்த பிறகு அதே சென்டரை புரடக்ஷன் சென்டராக மாற்றி யமைத்து அங்கே உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு வாரியம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. எஸ். என். இராமசாமி : துணைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்திலே பூச்சிக் காட்டிலே அதிகப் பனைகள் இருப்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அங்கே சிறு தொழில் ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, தஞ்சையிலே அமைக்கப்படுமா என்ற கேள்வி பூச்சிக் காட்டிற்குச் சென்றிருக்கிறது. எங்கெங்கே பனை மரங்கள் அதிகமாக இருக்கின்றனவோ எங்கெங்கே பெண்கள் படித்து விட்டு வேலையில்லாமல் இருக்கின்றார்களோ அந்தப் பகுதிகளிலே அதற்கான வாய்ப்பு இருக்குமானால், வசதி இருக்குமானால் இப்படிப்பட்ட டிரெயினிங் சென்டரை வாரியம் உருவாக்கிக் கொண்டிருக்கிறது. அந்தப் பகுதியில் வாய்ப்பு இருக்குமானால் வாரியம் பரிசீலனை செய்யும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : துணைத் தலைவர் அவர்களே, கேள்வி "தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் வட்டத்திலுள்ள செங்கனூரில் பனை ஓலைகளைக் கொண்டு சிறு தொழில்களைத் தொடர்ந்து அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?" என்று கேட்கப்பட்டு இருக்கிறது. அந்தத் தொழில்களைத் தொடர்ந்து அமைக்கும் செயற்குறிப்பு இருக்கிறதா என்று கேட்கிறபோது பனைமரத் தொழில் நடைபெற்று வருகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். தொடர்ந்து செய்யப்படுமா என்று கேட்டதற்கு அமைச்சர் அவர்கள் என்ன பதிலைச் சொல்கிறார்கள்?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: ஏற்கெனவே விடை அளித்திருக்கிறேன். தொடர்ந்து கொடுக்க முடியுமா என்பதற்கு விடை (அ) இல்லை என்றும், (ஆ) இவ்வினாவிற்கு விடை இல்லை என்றும் சொல்லி இருக்கிறேன். காரணத்தையும் நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் கேட்டதற்குப் பதில் சொல்கிறபோது சொல்லியிருக்கிறேன்.

[1982 மார்ச் 11

திரு. செ. சிவசாமி : துணைத் தலைவர் அவர்களே, பனைப் பொருட்கள் தயாரிக்கும்போது அந்த ஓலை வெள்ளையாக இருப்பது சில நாட்களில் மங்கி விடுகிறது என்று கூறுகிறார்கள். அதற்காக ஆராய்ச்சி செய்து அந்த மங்காத வெள்ளை கலரிலேயே அது இருக்கும்படி செய்யப்படும் என்று சொல்லப்பட்டதே, அது எந்த நிலையில் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : பனை ஓலை காய்ந்த பின்னர்தான் அந்தப் பொருள்களைத் தயாரிக்கிறார்கள். அதிலே கலரை மாற்றவோ கலரைக் கொடுக்கவோ போன்ற காரியங்களை வாரியம் செய்து கொண்டிருக்கிறது. வெளிநாடுகளிலே தொப்பி போன்ற பொருட்களை அவர்கள் விரும்பி வாங்குகிறார்கள். விவசாயிகள் வெய்யில் நேரத்திலே வேலை செய்கிறபோது வெய்யில் அவர்கள் மீது படாமல் இருப்பதற்காக அகலமான தொப்பிகளைப் பயன்படுத்துகிறார்கள். அதுபோன்ற தொப்பிகளை தமிழ்நாட்டிலே உள்ள விவசாயிகளும் பயன்படுத்தினால் வெய்யிலிலிருந்து பாதுகாத்துக் கொள்வது மட்டுமல்ல, ஆரோக்கியத்துக்கும் நல்லது என்ற சூழ்நிலை இருக்கிறது; பாதுகாப்பிற்காகப் பயன்படுத்துகிறார்கள் ஆகவே மாற்றம் ஏற்படுவதாக இல்லை.

### ஆ. உடுக்குறியிடாத வினாக்கள்

எண் 1—650 உடுக்குறியிடாத வினாக்களையும், அவற்றுக்கான விடைகளையும் இணைப்பில் காண்க.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள்* முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### (2) தகவல் கோரல்.

### பேரவை நிகழ்ச்சிகளின் சுருக்க வெளியீடு.

திரு. வெ. இராஜசேகரன் : * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல. நேற்றைய விஷயம் நேற்றோடு முடிந்து விட்டது. அந்தப் பிரச்சினையை எழுப்ப வேண்டாம். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறுகிறது.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1982 மார்ச் 11]

திரு. வெ. இராஜசேகரன் : நேற்று நான் சொன்ன விவ
களை சபையிலே நீக்காமல், நாங்கள் வெளிநடப்பு செய்த
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் சுரு
வெளியீடு என்ற அறிக்கையிலே நீக்கி இருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வெளி நட
கள் சுருக்க வெளியீட்டிலே எப்போதும் வந்தது. இல்
சுருக்க வெளியீட்டில் அதைச் சேர்ப்பதும் வழக்கம் இல்
அந்தப் பிரச்சினையை இங்கு எழுப்ப வேண்டாம்.

[முற்பகல் 10.20]

திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு பேரவைத் துணை
தலைவர் அவர்களே, இங்கே நடக்கின்ற நடவடிக்கைகளை
பற்றி செய்தித்தாள் என்ற குறிப்பில் தினம் அங்கத்தினர்களு
அச்சடித்து அனுப்புகிறீர்கள்.

நேற்று 'சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தி
அருகில் திரு. இராஜசேகரன் அவர்கள் தாக்கப்பட்டது குறித்
பல உறுப்பினர்கள் ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொடு
தார்கள். நானும் என். எஸ். வி. சித்தன் அவர்களு
சேர்ந்து தீர்மானத்தைக் கொடுத்திருந்தோம். நேற்
படிக்கும்போது என் பெயரைத் தாங்கள் விட்டு விட்டீர்கள்
என்ன காரணத்தால் ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேற்றே சொ
தாயிற்று.

திரு. கே. எம். தங்கமணி : துறை வெளியிட்டுள்ள 'செ
ய்தித்தாளில்' என்னுடைய பெயர் இல்லையே.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது 'டை
மிஸ்டேக்'. அதை சேர்த்துக்சொள்ளலாம்

* * * * * *

### (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்

திரு. வ. சத்தியமூர்த்தி : பேரவைத் துணைத் தலைவர
களே, 54-வது விதியின் கீழ் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மா
கொடுத்து ஒரு மாத காலம் ஆகிறது. காலை பத்து மணிச்
இங்கே தகராறு செய்பவர்களுக்குத்தான் கவன ஈர்ப்புச்
முன்னுரிமை கொடுக்கப்படும் என்றால் எங்களைப்போன்
உறுப்பினர்களின் நிலைமை என்ன ஆவது ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : : சில நேரங்கள
அப்படியாகி விடுகிறது, என்ன செய்ய முடியும்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிண
அகற்றப்பெற்றது.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் சொல்ல விரும்புவது மிகவும் முக்கியமான விஷயம். திருச்சியில் சுமார் 20,000 பீடித் தொழிலாளர்கள் பட்டினி கிடக்கிறார்கள். அது சம்பந்தமாக ஒத்தி வைப்புப் பிரேரணை கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்றைக்கு இரண்டு மானியங்களை எடுத்துக்கொண்டு அவையிலே விவாதிக்க இருக்கிறோம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : துணைத் தலைவரவர்களே, எல்லோருக்கும் வாய்ப்பு கொடுத்தீர்கள். நான் ஒன்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எல்லோரும் கேட்கிறார்கள் என்று கேட்க வேண்டுமென்றால் நேரம் ஆகிவிடும். என்னுடன் உறுப்பினர்கள் ஒத்துழைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

* * * * * * *

திரு ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கச்சத் தீவிலே நாம் கலந்து கொள்வதைத் தடுப்பதற்காக இலங்கை அரசு போட்டிருப்பதைப்பற்றி ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தோம். மூன்று நாட்கள்தான் அங்கே திருவிழா. நேற்று விழா ஆரம்பித்திருக்கிறது, நாளை ஒரு நாள் தான் பாக்கியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு நாளைக்கு ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தைத்தான் எடுக்கிறோம்.

* * * * * * *

இருக்கின்ற நேரத்திலே இவ்வளவுதான் செய்ய முடியும். இதற்கு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## (3) கவன ஈர்ப்புகள்.

### சேலம் கூட்டுறவு சக்கரை ஆலை ஒப்பந்தக்காரர்களிடம் கரும்பு எடுத்துக் கொள்வது

அடுத்து, 54-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்த கவன ஈர்ப்பு, திரு. ரா. பெரியசாமி,. திரு. ரா. பெரியசாமி இருக்கையில் இல்லை ; எனினும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கையை பேரவைக்கு அளிக்கலாம்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



### அறிக்கை.

மோகனூரில் உள்ள சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 1981—82 பிரதம பட்டம் கரும்பு அரவை நடந்து கொண்டிருக்கிறது. சர்க்கரை ஆலைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட கரும்பே காய்ந்துபோகும் நிலையில் உள்ளது. இப்படி இருக்க நாமக்கல் தாலுக்கா செங்கம்பள்ளி கிராமத்தின் முன்னால் கிராம அதிகாரி திரு. வேலு கவுண்டர் ஒப்பந்தம் இல்லாத கரும்பை முறைகேடாக சட்டத்திற்கு புறம்பாக மோகனூரில் உள்ள சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை தலைமை அதிகாரி வெட்டி அறைத்தால் முறையாக ஒப்பந்தம் செய்த கரும்பு உற்பத்தியாளர்களிடம் பெரும் அவதி நிலை நிலவுவது குறித்து.

வேளாண்மைத்துறை: செங்கப்பள்ளியைச் சேர்ந்த திரு. வேலு சாமி அவர்களிட மிருந்த பதிவு செய்யப்படாத கரும்பு மோகனூர் சேலம் கூட்டுறவு சர்க்கரை அலையால் பெறப்படவில்லை.

திரு. வேலுசாமி கவுண்டரின் தந்தை திரு. எஸ். எம். பழனியாண்டி கவுண்டர் (அங்கத்தினர் எண். 852) சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு 1981—82 பருவ அரவைக்கு 6.77 ஏக்கர் கரும்பு பதிவு செய்திருந்தார். அவரிடம் பதிவு செய்யப்படாத 1.30 ஏக்கர் கரும்பும் இருந்தது. 1981 —82 ஆம் பருவ அரவை 2—11—1981 ஆம் ஆண்டில் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் தொடங்கப்பட்டது. 29—10—1981 ஆம் ஆண்டில் திரு. எஸ். எம். பழனியாண்டி கவுண்டர் தன்னிடம் உள்ள 1.30 ஏக்கர் பதிவு இல்லாத கரும்பை ஆலையில் எடுத்துக்கொண்டு அதற்கு ஈடான பதிவு செய்யப்பட்ட 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி மாத கரும்பை ஆலையின் பதிவிலிருந்து விடுவிக்குமாறு விண்ணப்பித்துக் கொண்டார். ஆலையின் 1981 ஆம் ஆண்டு நவம்பர் மாத அரவைக்கு முதிர்ச்சி அடைந்த கரும்பு பதிவு செய்யப்பட்ட அளவுக்கு மேற்கொண்டும் தேவையாக இருந்ததாலும், திரு. பழனியாண்டி கவுண்டரால் அளிக்கப்பட்ட பதிவு இல்லாத கரும்பின் தரம் நன்றாக இருந்ததாலும் அவருடைய விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மேற்கண்ட முடிவின்படி திரு. மு. பழனியாண்டி கவுண்டருக்கு ஆலையால் வெட்டு உத்திரவு வழங்கப்பட்டது. அச்சமயம் ஆலையின் பிற அங்கத்தினர்கள் திரு. பழனியாண்டி கவுண்டர் அவர்களின் பதிவு இல்லாத கரும்பை ஆலை ஒப்புக் கொண்டதைப் போல தங்களிடம் உள்ள பதிவு இல்லாத கரும்பையும் ஆலை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று விண்ணப்பித்தார்கள். இப்புதிய சூழ்நிலை ஆலையினரால் பரிசீலிக்கப்பட்டு திரு. பழனியாண்டி கவுண்டர் அவர்களிடம் இருந்து பதிவு இல்லாத கரும்பை ஆலை எடுத்துக் கொள்வதை நிறுத்திக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது. அதன்பேரில் அவருக்கு அளிக்கப்பட்ட

[திரு. கா. காளிமுத்து] [1982 மார்ச் 11

வெட்டு உத்திரவு நிறுத்தப்பட்டது. இதற்கு இடையில் திரு பழனியாண்டி கவுண்டர் அளிப்பதாக இருந்த 1.30 ஏக்கர் பரப்பளவில் இருந்த பதிவில்லாத கரும்பிலிருந்து சுமார் 0.70 ஏக்கர் அளவு கரும்புமட்டுமே எடுக்கப்பட்டிருந்தது. அத்துடன் மேற்கொண்டு கரும்பு அவரிடம் இருந்து பெறப்படவில்லை. மேலும் அவரிடம் மீதமிருந்த கரும்பை அவருடைய விருப்பம் போல் உபயோகிக்கலாம் என்றும் ஆலையால் தெரிவிக்கப்பட்டது.

ஆலையின் தினசரி திறனுக்கு வேண்டிய முதிர்ச்சியான கரும்பு கிடைக்காத மாதங்களில், சர்க்கரை ஆலைகள் ஆலையின் அங்கத்தினர்கள் அல்லது அங்கத்தினர்கள் அல்லாதவர்களிடம் இருக்கும் பதிவு இல்லாத கரும்பையினை தேவையான அளவிற்கு ஆலைகளை இலாபகரமாக இயக்கும் நோக்கத்தோடு எடுப்பது வழக்கம். எனினும், ஒரு அங்கத்தினரிடமிருந்து பதிவு செய்யாத கரும்பை ஆலையார் ஏற்றுக்கொண்டால், பிற அங்கத்தினர்களிடமிருந்து வரும் விண்ணப்பங்களின் பேரில் அவர்களிடமுள்ள அனைத்து பதிவு செய்யாத கரும்பினை ஆலை அரைக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டதைக் கருத்தில்கொண்டு, சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை திரு. பழனியாண்டி கவுண்டர் அவர்களிடமிருந்து பெறுவதாக இருந்த பதிவில்லாத சுமார் 46 சதவீத கரும்பை எடுப்பதை நிறுத்திவிட்டது.

(ஆ) தமிழ்நாட்டில் பல பகுதிகளில் காலரா நோய் பரவியுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர்கள் இரெ. இராசமாணிக்கம், இ. முத்துராமலிங்கம், எஸ். என். இராமசாமி, ஆர். நவநீதகிருஷ்ணன் பாண்டியன், ப. நெடுமாறன், க. பாரமலை, உ. சுப்பிரமணியன், செ. சிவசாமி, தி. கா. நல்லப்பன், ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம், எஸ். சிவராமன், பெ. சு. திருவேங்கடம், ப. பொன்னுரங்கம், கு. பா. பழனியப்பன், கே. எம். தங்கமணி, சி. பழனிமுத்து, இரா. தாமரைக்கனி, ஏ. தங்கராசு ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவனஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார். அமைச்சர் அறிக்கைக்குப் பிறகு ஒவ்வொரு கட்சியின் சார்பிலும் ஒவ்வொருவருக்குக் கேள்வி கேட்க அனுமதி அளிக்கிறேன். (குறுக்கீடுகள்) நேரத்தை ஒட்டித்தான், இந்த ஏற்பாடு.

**திரு. இரா. இராசமாணிக்கம்:** தலைவர் அவர்களே, " தமிழ்நாட்டில் பல பகுதிகளில் காலரா நோய் பரவியுள்ளது குறித்த " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன்.



1982 மார்ச் 11]

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் கடுமையான குடல் அழற்சி, வாந்தி பேதி நோய்களினால் 1981 மற்றும் 1982-ல் பாதிக்கப்பட்டவர்களின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

கடுமையான குடல் அழற்சி (Acute Gastro Enteristis) :

| மாவட்டம். | 1981 | | 1982 (பிப்ரவரி முடிய) | |
|---|---|---|---|---|
| | பாதிப்பு. | இறப்பு. | பாதிப்பு. | இறப்பு. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| சென்னை நகரம் .. | 2,025 | 16 | 161 | 0 |
| செங்கல்பட்டு (வ) .. | 657 | 19 | 101 | 2 |
| செங்கல்பட்டு (தெ) .. | 642 | 13 | 131 | 4 |
| தென் ஆற்காடு .. | 432 | 43 | 82 | 5 |
| தஞ்சாவூர் .. | 2,086 | 44 | 300 | 7 |
| புதுக்கோட்டை .. | 205 | 14 | 43 | 3 |
| திருச்சிராப்பள்ளி .. | 1,749 | 10 | 318 | 1 |
| மதுரை .. .. | 2,050 | 66 | 226 | 8 |
| ராமநாதபுரம் .. | 313 | 41 | 10 | [illegible] |
| திருநெல்வேலி .. | 284 | 20 | 59 | 7 |
| கன்னியாகுமரி | 86 | 7 | .. | .. |
| வட ஆற்காடு .. | 2,311 | 144 | 164 | 2 |
| சேலம் .. .. | 1,413 | 25 | 184 | 3 |
| தர்மபுரி .. .. | 332 | 50 | 11 | 2 |
| கோயம்புத்தூர் .. | 966 | 15 | 228 | 2 |
| பெரியார் .. .. | 81 | 12 | 20 | 2 |
| நீலகிரி .. .. | 36 | 1 | 54 | 0 |
| மொத்தம் | 15,668 | 540 | 2,092 | 48 |

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1982 மார்ச் 11

வாந்தி பேதி (Cholera).

| மாவட்டம். | 1981 | | 1982 (பிப்ரவரி முடிய) | |
|---|---|---|---|---|
| | பாதிப்பு. | இறப்பு. | பாதிப்பு. | இறப்பு. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| சென்னை நகரம் .. | 1,237 | 20 | 45 | 1 |
| செங்கல்பட்டு (வ) .. | 220 | 3 | 23 | 0 |
| செங்கல்பட்டு (தெ) .. | 12 | 0 | 4 | 0 |
| தென் ஆற்காடு .. | 12 | 0 | 15 | 1 |
| தஞ்சாவூர் .. .. | 47 | 2 | 9 | 0 |
| புதுக்கோட்டை .. | .. | .. | 3 | 0 |
| திருச்சிராப்பள்ளி .. | 14 | 0 | 4 | 0 |
| மதுரை .. .. | 37 | 2 | 22 | 0 |
| ராமநாதபுரம் .. | 7 | 0 | .. | .. |
| திருநெல்வேலி .. | 36 | 1 | 11 | 2 |
| கன்னியாகுமரி .. | .. | .. | .. | .. |
| வட ஆற்காடு .. | 133 | 3 | 6 | 0 |
| சேலம் .. .. | 133 | 1 | 12 | 0 |
| தர்மபுரி .. .. | 13 | 0 | 1 | 0 |
| கோயம்புத்தூர் .. | 5 | 0 | .. | .. |
| பெரியார் .. .. | 12 | .. | .. | .. |
| நீலகிரி .. .. | .. | .. | .. | .. |
| மொத்தம் | 1,918 | 32 | 155 | 4 |



1982 மார்ச் 11] [டாக்டர் எச். வி. ஹண்டே]

எந்த ஒரு பகுதியிலாவது குடல் அழற்சி அல்லது வாந்திபேதி நோய் தோன்றியதாக தகவல்வரின் தொடர்புள்ள நகராட்சி சுகாதார அலுவலர் அல்லது சுகாதார ஆய்வாளர்அல்லது துப்புறவு ஆய்வாளர் அந்தப் பகுதிக்கு விரைந்து பாதிக்கப்பட்டோரின் இல்லத்தையும், பாதிக்கப்பட்ட பகுதியையும் பார்வையிட்டு அப் பகுதியில் பூச்சி கொல்லி மருந்துகளை தெளிக்கவும், பாதிக்கப்பட்டோரை அருகில் உள்ள மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லவும் நடவடிக்கை எடுக்கிறார். பாதிக்கப்பட்டவர் வாந்தி எடுத்த இடத்திலும் மலம் கழித்த இடத்திலும் பூச்சி கொல்லி (Disinfecat) மருந்துகள் தெளிக்கப்படுகிறது. தவிர அப் பகுதியிலுள்ள அனைவருக்கும் காலாரா தடுப்பு ஊசி போடப்படுவதுடன் அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் அறிவுறுத்தப்படுகிறது. மேலும் குடிநீரில் குளோரின் மருந்து கலக்கப்படுகிறது. நன்றாக காய்ச்சிய நீரை குடிப்பது, சுற்றுப்புற சுகாதாரத்தைப் பேணிக் காப்பது பற்றி பொதுமக்களுக்கு அறிவுரை வழங்கப்படுகிறது.

நிலைமையை பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் உன்னிப்பாக கண்காணித்து தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார் என்றும் தேவைப்படின் மக்கள் நலம் காக்க வேண்டி மேலும் நடவடிக்கை எடுப்பார் என்றும் கூறிக்கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவை துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விவர அறிக்கை ஒன்றை நேற்றையதினமே அவையில் வைத்ததாக அறிவித்தார்கள், நான் இதன்மீது கேட்பதற்கு முன்பாக, காலரா போன்ற தொத்து நோய் பரவலாக நடைபெறுகிற நேரத்தில் இந்தக் கவனஈர்ப்புத் தீர்மானம் 1—3—1982 அன்றே கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முக்கியத்துவம் கொடுத்து இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறாமல் தடுத்து நிறுத்துவதற்கு, இதை விரைவாக எடுத்துக் கொள்ளவேண்டும், எடுக்கவில்லை. தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த விவர அறிக்கையிலே 1981ஆம் ஆண்டு காலரா நோயால் பாதிக்கப்பட்டவர்கள் 1918 பேர்கள் என்றும் அதிலே இறந்தவர்கள் 32 பேர்கள் என்றும், 1982 ஆம் ஆண்டு பிப்ரவரி முடிய பாதிக்கப்பட்டவர்கள் 155 பேர்கள் என்றும் இறந்தவர்கள் 4 பேர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எங்களுடைய தஞ்சை மாவட்டத்தில் இந்த ஒரு வருடம் 2 மாதத்தில் 56 பேர்கள் காலரா நோயினால் பாதிக்கப்பட்டு அதிலே 2 பேர்கள் தான் இறந்திருக்கிறார்கள் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. கடுமையான குடல் அழற்சி நோயினால் 1981 ஆம் ஆண்டு 15,668 பேர்கள் பாதிக்கப்பட்டு அதில் 540 பேர்கள் இறந்திருக்கிறார்கள். அதேபோன்று 1982 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் முடிய 2,092 பேர்கள் பாதிக்கப்பட்டதாகவும் அதிலே 48 பேர்கள்

இறந்திருக்கிறார்கள் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இப்ப அதிகமான அளவுக்கு மக்கள் இறந்திருக்கிறார்கள், பாதிக்க பட்டிருக்கிறார்கள். இந்த நிலையில் அதற்குத் தேவையான மருந்துகள் பல முக்கியமான வட்டமருத்துவமனைகளில் இல்லை தடுப்பு மருந்துகள் இருப்பதில்லை. இவ்வாறு பாதிக்கப்பட்டவ களுக்குப் பாதுகாக்கின்ற மருந்துகள் மாயவரம் வட்ட மருத்துவ மனை போன்ற மருத்துவமனைகளிலே இருப்பது இல்லை ஆகையினால் இந்தக் கொடுமையான நோயினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான மருந்துகளை தாமதம் இல்லாமல் எல்லா வட்ட மருத்துவமனைகளிலும் உடனடியாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தைப் பற்றி சொல்லி இருக் கிறார்கள், தஞ்சையைப் பொறுத்தவரையிலே 2,086 பேர்களுக்கு அங்கே ( ll :ic g:.t -e t i.i ) 1981-லே 47 பேர்கள் இறந்திருக்கிறார்கள். இந்த ஆண்டு அதே மாதிரி 300 பேர்களுக்கு ( c te ; St -c t iti ) வந்து அதிலே 7 பேர்கள் இறந்திருக்கிறார்கள் நான் அதுபற்றி விசாரித்துப் பார்த்தபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னோடு ஒத்துழைக்கவேண்டும். இப்படிப்பட்ட நோய் வந்த உடனே அவர்கள் மருத்துவமனைக்கு வந்தால் (Intr ven:ıs gl c s s li ( ) போட்டுக்கொண்டால் அவர் களை உடனடியாகக் காப்பாற்ற முடியும். ஆனால் மூட நம்பிக் கையின் காரணமாக அவர்கள் இந்த மாதிரி (all r;i g . t -ertriti ) வருமானால் அதை தோஷம் என்று சொல்லி மந்திரம் செய்து கொண்டு போகும் காரணத்தினால் இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டிருக்கிற . அங்கே இருக்கின்ற (Di t i t He lt Offi e ) இடம் சொல்லி, எங் கெங்கே இதுமாதிரி வந்துள்ளதோ, எப்போது அவர்களுக்குத் தகவல் கிடைத்திருக்கிறதோ, அங்கே சென்று அவர்களை வற் புறுத்தியாவது ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரவேண்டும் என்று நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்லி இருக்கிறோம். காலரா தடுப்பு ஊசியும் அந்த மாவட்டத்திலே கொடுக்கப் பட்டிருக்கிறது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இ முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அளித்துள்ள விவர அறிக்கையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட வர்கள் 7 பேர்கள் என்றும் இறப்பு இல்லை என்றும் குறிப் பிட்டுள்ளார்கள். ஆனால் அங்கே உண்மை நிலை மாறு பட்டுள்ளது, ஏற்கனவே அந்தக் காலரா நோய் வந்து மக்கள் இறந்ததன் காரணமாக தற்போது அங்கே கச்சத்தீவில் நடை பெறவிருந்த திருவிழாவே தள்ளிப்போடப்பட்டுள்ளது என்ற



செய்தித் தாள்களின் மூலமாக அறிந்திருக்கிறோம். தலை மன்னாரில் இருந்து இராமேஸ்வரம் படகுப் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டுள்ளது என்பதை அமைச்சரும் அரசும் அறிவார் களா! அதுகுறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30]

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே: துணைத் தலைவர வர்களே, இந்த அறிக்கையிலே நான் கொடுத்திருக்கின்ற விவரம்தான் உண்மையானது. இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டு, இரண்டு மாதத்தில் 10 பேர் 'காஸ்ட்ரோ என்ட்ராலஜி' அல்ர்ச்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறார் கள். ஆனால் காலராவால் பாதிக் ப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொரு கேள்வியையும் எழுப்பினார் கள், அது கொஞ்சம் விசித்திரமாக இருக்கிறது. கச்சத்தீவில் இந்த விழா நடைபெறுகிற நேரத்தில் இங்கே காலரா பரவி யிருக்கிறது என்ற செய்தி தரப்பட்டு, அதனுடைய விளைவாக விழா நிறுத்தப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. உடனடியாக தகவல் கிடைத்தது. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. நெடு மாறன் அவர்களும் குமரி அனந்தன் அவர்களும் அதுபற்றி சொன்னார்கள், திரு. மரியபிச்சை என்பவர் அங்கே காலரா இருக்கிறது என்று தந்தி அனுப்பியிருக்கிறார். தகவல் கிடைத்த உடனே அங்கே இருக்கிற டிஸ்டிரிக்ட் ஹெல்த் ஆபீசருக்குச் சொல்லி நடவடிக்கை எடுக்கச் சொன்னோம். அவர் அந்த மரியபிச்சை என்பவரைச் சந்தித்து விசாரித்தபோது அவரால் ஒரு கேசைக்கூட காட்ட முடியவில்லை. வேறு ஏதோ ஒரு காரணத் திற்காக தந்தி கொடுத்திருக்கிறார்கள். என்ன காரணம் என் பதைக் கண்டுபிடிக்க க லக்டருக்கும் தாசில்தாருக்கும் சொல்லி யிருக்கிறோம். அந்த விழா நடைபெறாமல் தடுக்கப்பட்டதற் கான உண்மையான காரணம் என்ன என்பதையும் விசாரிக்கச் சொல்லியிருக்கிறோம்; இன்றுவரையில் அந்த காரணத்தை அறிய முடியவில்லை. அங்கே காலரா பரவியிருக்கிறது என்று அவர் தந்தி கொடுத்தது மட்டுமல்ல; பத்திரிகைகளுக்கும் அந்தச் செய்தி கொடுக்கப்பட்டு, பத்திரிகைகளிலேயும் வந்திருக்கிறது. அதன் விளைவுதான் அந்த வி ா நிறுத்தப்பட்டதற்கான காரணம்.

திரு. க. பாரமலை : துணைத் தலைவரவர்களே, அமைச் சரவர்கள் விரிவான இந்த இராமேஸ்வரம் காலரா பற்றிச் சொன்னார்கள். தந்தி மட்டுமல்லாமல், பத்திரிகையிலும் அந்தச் செய்தி வந்திருக்கிறது. அதனால் தான் அவசரமாக அமைச் சருடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு இந்தத் தீர்மானத்தைக் கொடுத்தோம். இப்போது அமைச்சரவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் இறப்பு இல்லை என்று சொன்னதற்கு மகிழ்ச்சி. இப்படிப்பட்ட நோய் பரவாமல் தடுப்பதற்கும் தோன்றாமல் இருப்பதற்கும் கடுமை யான நடவடிக்கை எடுக்க அரசு தகுந்த ஏற்பாடுகளைச் செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** : துணைத் தலைவரவர்களே, காலராவைப் பொறுத்தவரையில் தோன்றாமல் இருக்க வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் இறுதி இலட்சியம், அதற்கு பொதுமக்களும் ஒத்துழைக்க வேண்டும். காலரா தடுப்பு ஊசி போட்டுக்கொள்ள பயந்து, வலிக்கும் என்று சொல்லி பொதுமக்கள் ஏற்கெனவே ஊசிபோட்டுவிட்டோம் என்று சொல்லி தப்பித்துவிடுகிறார்கள். திட்டவட்டமாக எல்லோரும் போட்டுக் கொள்ள வேண்டும், எப்படியாவது எல்லோருக்கும் தடுப்பு ஊசி போட வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டு, படிப்படியாக குறைத்துவிட முடியும் என்று கருதுகிறேன்.

**திரு. கே. எம். தங்கமணி :** துணைத் தலைவரவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் குடல் அழர்ச்சியால் 514 பேர் பாதிக்கப்பட்டார்கள் என்றும் இறப்பு 48 பேர்கள் என்றும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் காலராவால் பாதிக்கப்பட்டு, 270 பேர்கள் இறந்திருக்கிறார்கள் என்று இன்றும் கூறப்பட்டு வருகிறது: அரசுத் தரப்பிலே கொடுத்திருப்பதைவிட இறந்தவர்கள் எண்ணிக்கை அதிகம் என்று நிச்சயமாகத் தெரிகிறது. எனவே, காலரா நோயால் இறந்தவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் இந்த நோயைத் தடுப்பதற்கு பிரத்யேகமாக ஒரு பிரிவை அரசு ஏற்படுத்தி இப்படிப்பட்ட நோய்கள் மேலும் தோன்றாமல் தடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும், சென்ற ஞாயிற்றுக்கிழமை நான் திண்டிவனத்தில்தான் இருந்தேன். அங்கே டிஸ்டிரிக்ட் ஹெல்த் ஆபீசரும் வந்திருந்தார். இதுபற்றி விசாரித்தேன், இந்த நோய் தோன்றியிருக்கிறது அல்லது அதற்கான அறிகுறி இருக்கிறது என்று தெரிந்தவுடனே உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு தகுந்த ஆலோசனைகளை வழங்கியிருக்கிறோம். கடலூரில் இருக்கிற டானிடா பிராஜக்டுக்கும் போயிருந்தோம். மாண்புமிகு மின்சார அமைச்சரும் நானும் கடலூருக்குச் சென்றிருந்தோம், டிஸ்டிரிக்ட் ஹெல்த் ஆபீசர் மட்டுமல்லாமல் தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள மற்ற அதிகாரிகளையும் அழைத்து இதுபற்றி பேசியிருக்கிறோம். பொதுமக்கள் இதுபற்றி எந்தவிதமான புகாரும் கொடுக்கவில்லை. ஆகவே, இது இல்லாமல் வேறு ஏதாவது நடந்திருக்கிறதா என்று பார்க்க வேண்டும். நான் இங்கே கொடுத்திருக்கிற புள்ளிவிவரம் தவறு என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதினால், அவர்கள் உரிய முறையிலே தகவலைத் தந்தால் உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுக்கலாம். அதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது. இந்தப் பிரச்சனையைப் பொறுத்தவரையில் எதையும் மூடிமறைக்க வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இல்லை. சரியான தகவல் கொடுத்தால் உடனடியாக தகுந்த நடவடிக்கைகளை எடுக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. ப. பொன்னுரங்கம் :** சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர் கட்சிக்கு ஒருவர் என்ற முடிவால் எங்கள் பெயரை விட்டுவிடுவது சரியல்ல, எல்லோருக்கும் வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** துணைத் தலைவரவர்களே, கட்சிக்கு ஒருவர் என்ற முடிவு கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு பொருந்தாது. ஆகவே, தீர்மானம் கொடுத்திருக்கிறவர்கள் எல்லோருக்கும் துணை வினா கேட்பதற்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் ஏற்கெனவே இதுப்பற்றிச் சொன்னேன். என்னுடைய கருத்தை ஏற்று, கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நேரம் இல்லாததால், நீங்கள் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். இப்போது அந்த நடைமுறையை மாற்ற வேண்டாம், அடுத்து திரு. சிவசாமி அவர்கள்.

**திரு. செ. சிவசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இளையங்குடி, பரமக்குடி, இராமேஸ்வரம் போன்ற பகுதிகளிலே இந்த காலாரா நோய் தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கின்றது. அதுமட்டுமல்ல, எனக்குத் கிடைத்த தகவலின்படி இராமேஸ்வரத்திலே கிட்டதட்ட 300 பேர்களுக்கு மேல் பாதிக்கப்பட்டதாகச் கேள்விப்பட்டேன். அது பற்றிய குறிப்புகளை என்னிடத்திலே நேரடியாகக் கொடுத்து விட்டுப் போய் இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இந்த ஆண்டு நமக்கு முன்பாகவே இலங்கை அரசாங்கம் இப்படிப்பட்ட ஆபத்து வரும் என்ற ரீதியிலே அங்கே நடக்கக்கூடிய திருவிழாவினைக் கூட நிறுத்தி வைத்திருக்கிறார்கள். இந்தியாவிலுள்ள பல பகுதிகளிலிருந்தும் வரக்கூடிய முக்கியமான இடமாக இராமேஸ்வரம் இருக்கின்றது. அப்படிப்பட்ட இடத்திலே தொத்து நோய் வராமல் இருப்பதற்கான முறைகளை கவனித்து முன் ஜாக்கிரதையாக நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் எச், வி. ஹண்டே :** தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். கச்சத்தீவைப் பற்றி சொல்லி இருக்கிறேன். டாக்டர் கபாலி, டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த் அவர்களிடத்திலே இருந்து செக்கரட்டரி மூலமாக ஒரு பதிலினை வரவழைத்திருககிறோம்.

'The District Health Officer, Ramanathapuram and Assistant Director of Public Health paid immediately a visit to Rameswaram on 26–2–82 with necessary contents to make arrangements'

நாங்கள் எல்லாவற்றையும் கொண்டு போனோம். நம்முடைய அதிகாரிகள் ப்ரிகாஷனரி மெஷராக் அங்கே வேண்டிய சாதனங்களை எல்லாம் எடுத்துச் சென்றோம். ஆனால் அங்கே ஒன்றும்

கிடைக்கவில்லை. மரியபிச்சை என்பவர் கூட என்ன காரணத்திற்காக அந்தத் தந்தி கொடுத்தார் என்றால்—இப்படிப் பரவலாக செய்தி வந்தாலும் அங்கே பிரச்சனை எதுவும் இல்லை. இராமநாதபுரம் மிகவும் நன்றாக இருக்கிறது. ஒரு வாரத்திற்கு முன்பு கூட நான் கடலாடிக்குச் சென்றிருந்தேன். ஒவ்வொரு இடங்களுக்கும் செல்கின்றபோது அங்குள்ள டி.எச்.ஓ. அவர்களிடம் விவரங்களைக் கேட்பேன். இங்கே நீங்கள் என்னிடத்திலே கேட்பதை விட மிகக் கடுமையாக கேட்கும் பழக்கம் உடையவன் நான். ஆகவே அந்த எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம்: துணைத் தலைவரவர்களே, இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையின் அடிப்படையிலே பார்த்தால்கூட 625-க்கு மேற்பட்டவர்கள் இறந்து இருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம்; போதிய மருந்து கிடைக்கவில்லையா? அல்லது அரசாங்க ஆஸ்பத்திரியிலே போதிய கவனம் செலுத்தப்படவில்லையா? அல்லது பொது சுகாதாரத் துறையினர் கவனம் செலுத்தவில்லையா? அப்படி என்றால் சம்பந்தப்பட்டவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா? மருந்துகள் கிடைக்கவில்லை என்றால் காலா காலத்தில் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: துணைத் தலைவரவர்களே, வாந்தி பேதியினைப் பொறுத்தவரையில் மருந்து பற்றிய பிரச்சினை கிடையாது. குளுகோஸ் சலைன் ஒரு ஆயிரம் டீ.சி. கொடுத்தோமேயானால் அவர்களை உடனடியாகக் காப்பாற்ற முடியும். ஆனால் ஏதோ ஒரு மூட நம்பிக்கையின் காரணமாக வாந்திபேதி ஏற்பட்ட உடனேயே மக்கள் மருத்துவமனைக்கு வருவதில்லை. இதுதான் ஒரு பெரிய பிரச்சினை. 540 என்பது காஸ்ட்ரோ அலர்ஜி நோயால் பாதிக்கப்பட்டவர்கள். காலராவின் மூலம் 1981 ஆம் ஆண்டு இறந்தவர்கள் 32 பேர், 1982ஆம் ஆண்டு இறந்தவர்கள் 4 பேர். காலராவுக்குத் தடுப்பு ஊசி இருக்கின்றது. காஸ்ட்ரோ அலர்ஜிக்குத் தடுப்பு ஊசி கிடையாது. காலராவைப் பொறுத்தவரையில் எல்லா பகுதிகளிலும் இந்த ஊசி போடவேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆண்டுக்காண்டு ஜாஸ்தியான நபர்களுக்கு நாம் பாதுகாப்புத் தந்துகொண்டிருக்கிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி: துணைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே எந்த எந்தப் பகுதிகளில் காலரா வருகின்றதோ அந்தந்த இடங்களில் உள்ள பெரிய அதிகாரிகளும், நகரத்தின் சுகாதார அதிகாரிகளும், ஊராட்சி சுகாதார அதிகாரிகளும் காலரா ஒழிப்பு வாரம் என்றும் காலரா ஒழிப்பு மாதம் என்றும் வீடு வீடாகச் சென்று யார் யாருக்குக் காலரா இருக்கின்றது என்பதைக் கண்காணித்துத் தடுப்பதற்குரிய நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: துணைத் தலைவரவர்களே, இது பற்றிய தகவல் நமக்குக் கிடைத்த உடனேயே அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதற்காகத் தான் தடுப்பு ஊசி போடுகின்ற நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. குழந்தைகளைப் பொறுத்த வரையிலே டபிள்யு, எச்.ஓ. என்ன பரிந்துரை செய்திருக்கின்றதோ அந்த அடிப்படையிலே செய்து கொண்டு இருக்கிறோம். குழந்தைகளுக்கு இருக்ககூடிய வாந்தி பேதியைப் பொறுத்த வரையில் அதனைப் படிப்படியாகக் குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக ஓரல் ரீஹைட்ரேஷன் என்ற, உப்பு, சர்க்கரை ஆகியவற்றைச் சேர்த்துக் கொடுக்க கூடிய ஒரு பாக்கெட் வினியோகம் செய்து கொண்டிருக்கிறோம்.

(முற்பகல் 10-40).

அதன் மூலமாக குழந்தைகளின் இறப்பு விகிதம் மற்ற மாநிலங்களை விட நம் மாநிலத்தில் குறைவாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து மானியக் கோரிக்கைகள் எண் 12, 35, 45, 47, 54......(குறுக்கீடுகள்.)

திரு. குமரி அனந்தன்: * * * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர் உட்கார வேண்டும். விளக்கம் முடிந்து விட்டது. இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன.

திரு. குமரி அனந்தன்: * * (குறுக்கீடுகள்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதுபோல் உறுப்பினர்கள் அவையில் திடீர் திடீர் என்று எழுந்து பேசுவது முறையல்ல. இவற்றை அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி ஆணையிடுகிறேன்.

திரு. துரைமுருகன்: * * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் உட்கார வேண்டும். ஒவ்வொருவரும் எழுந்து இப்படி ஏதாவது கேட்பதென்றால், அவை நிகழ்ச்சியை ஒழுங்காக நடத்த முடியாது. அவையை நல்லபடி நடத்த ஒத்துழையுங்கள். இப்போது பேசியவை எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1982 மார்ச் 11

4. வரவு-செலவு திட்டம், 1982-83—வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண். 12. தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு இந்த சமயக் அறக்கட்டளைகள்.—சட்ட நிர்வாகம்

(ஆ) கோரிக்கை எண். 25. சின்கோனா.

(இ) கோரிக்கை எண். 45. காட்டு வளத்துறை.

(ஈ) கோரிக்கை எண். 47. செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்.

(உ) கோரிக்கை எண். 54. காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு—(தொடர்ச்சி)

*திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், வைத்திருக்கக்கூடிய சின்கோனா, காட்டு வளத் துறை, செய்தி, சுற்றுலா திரைப்பட தொழில் நுட்பவியல், காட்டுவளம் குறித்த மூலதனச்செலவு, இந்து சமய அறக்கட்டளைகள் – சட்ட நிர்வாகம் ஆகிய மானியங்களின்மீது பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, இந்து சமய நிர்வாகங்களையும் அவற்றின் சொத்துக்களையும் நல்ல முறையிலே பாதுகாத்து, நமது பண்டைய நாகரீகத்தையும் கலையையும், பண்பாட்டையும் கட்டிக் காத்து, தமிழகக் கோயில்களைப் பாதுக்காப்பதிலே தமிழக அரசு பாடுப்பட்டு வருகின்றது என்பதையும், தமிழக அரசின் அறநிலையத் துறை எந்த அளவிற்குச் சீர்ப்படுத்தி சிறப்பாக நடைபெற்று வருகின்றது. என்பதையும் சமயப் பற்றுடைய பெரியவர்களும், நடுநிலையாளர்களும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு தமிழக கோயில்களின் நிர்வாகத்தை சீர்ப்படுத்தி, சிறப்பாகவும், செம்மையாகவும் செயல்படச் செய்து, கோயில்களின் வருமானங்களையும், உண்டியல்களின் வருமானங்களையும் அதிகரிக்கின்ற முறையிலே நடைபெற்று வருகிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் பழனியப்பன் அவர்கள் நேற்றைய தினம் பேசும் போது, கோவில்களிலே கொலையும், கொள்ளையும் நடைபெறுவதாகச் சொன்னார்கள். இதுபோன்ற தவறுகள் நடைபெறுகின்றபோது, அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. தவறு செய்கின்றவர்கள், தண்டிக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தில் அரசு



1982 மார்ச் 11] [திரு. தி. அன்பழகன்]

தயங்காமல் நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். திருடப்படுகின்ற சிலைகள் பம்பாய்க்குகடத்தப்பட்டாலும் அல்லது பம்பாயிலிருந்து லண்டனுக்கு சென்றாலும், அமெரிக்காவிற்குச் சென்றாலும், அவ்வகைகளையெல்லாம் கண்டுபிடித்து, வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. எப்படியும் திரும்பக் கொண்டு வரவேண்டுமென்ற எண்ணத்தோடு, இந்த அரசு செயல்பட்டு கொண்டு வருகிறது என்பதை நான் அவருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

சிலை களவாடுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் நிலை கலங்குகின்ற அளவிற்கு இந்த அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் பேசும் போதுஉண்டியல் பணம் களவாடப்படுவதாகவும், கோவில் நிர்வாகம் சரியான முறையில் நடக்கவில்லையென்றும் குற்றம் சாட்டினார்கள். நான் ஒன்றை அவர்களுக்கு ஒரு உதாரணத்தின் மூலம் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிற்கு வருவதற்கு முன்பாக கோவில் வருமானங்கள் எந்த அளவிற்கு இருந்தன என்பதையும், இந்த 4 ஆண்டுக்குப் பிறகு எப்படி அவை இருக்கின்றன என்பதையும் கோடிட்டு காட்ட விரும்புகிறேன். பழனி பாலதண்டாயுதபானி சுவாமி கோவில் வருமானம் 4 ஆண்டுகளுக்கு முன்பாக 1 கோடியே 24 ஆயிரத்து 349 ரூபாயாக இருந்தது, இன்றைக்கு 1 கோடியே 95 ஆயிரத்து 350 ஆக உயர்ந்திருக்கிறது. திருச்செந்தூர் முருகன் கோவில் வருமானம் 4 ஆண்டுகளுக்கு முன்பாக 28 லட்சத்து 58 ஆயிரத்து 603 ரூபாய் 92 பைசாவாக இருந்தது, இன்றைக்கு 55 லட்சத்து 24 ஆயிரத்து 323 ஆக உயர்ந்திருக்கிறது. கபாலி கோவில் வருமானம் முன்பு 9 லட்சத்து 41 ஆயிரத்து 747 ரூபாய் 38 பைசாவாக இருந்தது, இன்றைக்கு 18 லட்சத்து 30 ஆயிரத்து 479 ஆக உயர்ந்திருக்கிறது. கபாலி கோவில் உண்டியல் வருமானம் அன்றைக்கு 1 லட்சத்து 5' ஆயிரத்து 296 ரூபாய் 68 பைசா. ஆனால் அது இன்றைக்கு 2 லட்சத்து 92 ஆயிரத்து 510 ஆக உயர்ந்து இருக்கிறது. 78-ம் ஆண்டு ஜூன் மாதம் வரையில் மிச்சம் பிடிக்கப்பட்ட பணம், நாங்கள் ஆட்சி பொறுப்பிற்கு வருவதற்கு முன்பாக 4 கோடியே 69 லட்சத்து 38 ஆயிரத்து 325 ரூபாய் 88 பைசா, இன்றைக்கு நான்கு ஆண்டுகளுக்கு பிறகு 15 கோடியே 27 லட்சத்து 86 ஆயிரத்து 588-ஆக உயர்ந்திருக்கிறது. ஏறத்தாழ $10\frac{3}{4}$ கோடி ரூபாயை மிச்சப்படுத்தி வருமானமாக இந்த அரசு உயர்த்திக் காட்டியிருக்கிறது. உண்டியல் பணம் களவாடப் படுவதற்கும், தவறுகள் நேர்வதற்கும் இந்த அரசு காரணமாக இருந்திருந்தால் இன்றைக்கு இந்த அளவு பணம் மிச்சப்படுத்தப்பட்டிருக்குமா என்பதை எண்ணி பார்க்க வேண்டும். இன்றைக்கு அறநிலையத் துறை இந்த அளவிற்குச் சிறப்பாக

நடைபெற்று அமைச்சர் அவர்கள் பாராட்டப்படுகிற அளவில் இருக்கும் போது, பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் பால் கமிஷனை உதாரணத்திற்கு அழைக்கலாம். இந்த பால் கமிஷன் அறிக்கையில் அரசைப் பற்றியோ, குறிப்பாக அறநிலைய அமைச்சர் அவர்களைப் பற்றியோ, தமிழக முதல்வர் அவர்களைப் பற்றியோ ஏதாவது ஒரு வரி குறையாக அங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறதா என்பதை கேட்க ஆசைப்படுகிறேன். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தக் காலத்தில் கிருஷ்ணசாமி நாயுடு கமிஷனுடைய அறிக்கையிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை அவர்களுக்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 74ம் ஆண்டு கோவையிலே இடைத் தேர்தல் வந்தப் போது, தேர்தல் செலவுகளுக்காக மருதமலை கோவில் உண்டியல் பணத்தை எடுக்க சொல்லி உத்தரவு தந்தார்கள். அந்தப் பணத்தை எடுப்பதற்கு கோவில் அதிகாரி மறுக்கிறார், மறுக்கிற அதிகாரி மீது பழி வாங்குகிறார்கள். கிருஷ்ணசாமி நாயுடு கமிஷன் முன்பாக அவர் விளக்கியிருக்கிறார். கிருஷ்ணசாமி நாயுடு சமிஷன் அறிக்கையில் அவர்களைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறது என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாடு கோவில்களை, மடங்களை நிர்வகிக்கின்ற இத்தகைய ஒருவரை தேர்ந்தெடுத்திருப்பது பரிதாபத்திற்குரியது ; இவர் நேர்மை குறித்து அதிகம் சொல்வதற்கில்லை ; இவர் தனது அமைச்சர் பதவியை சமய வளர்ச்சிக்கு அல்லாது தனது கட்சிக்கு அதிகம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார் என்று அன்றைய அறநிலையத் துறை அமைச்சர் கண்ணப்பன் அவர்களைப் பற்றி கிருஷ்ணசாமி நாயுடு தன்னுடைய அறிக்கையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள், இந்த பெருமைக்கு உரியவர்கள் எங்களைப் பார்த்து குறை சொல்வது, அதிலே மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களைக் குறை சொல்வது விந்தையாக இருக்கிறது. அலறுகிற கோட்டான் கூவுகிற குயிலைப் பார்த்து பழிப்பது போல உங்களுடைய பேச்சும், செயலும் இருக்கிறது என்பதை நீங்கள் உணர வேண்டும்.

இன்றைக்குச் சுற்றுலாத் துறையைப் பொறுத்த வரையில் வளரும் கலையாக இந்தத் துறை உருவாக்கப்பட்டிருக்கிறது. நாட்டின் மேம்பாட்டிற்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் இது ஒரு அங்கமாக இருக்கிறது. சுற்றுலாத் தொழிற் வளர்ச்சி நாட்டின் பொருளாதார, சமூக, கலாச்சார வளர்ச்சி மற்றும் நாடுகளுக்கிடையே நம்பிக்கை, நல்லுறவு, நல்லெண்ணம் ஆகியவற்றையும் வளர்க்கின்ற ஒரு ஸ்தாபனமாக இன்றைக்கு இத்துறை செயல்பட்டு வருகிறது. தமிழகத்திலுள்ள சுற்றுலாத் தளங்களை மேலும் மக்கள் மனத்தை கவர்கின்ற வகையில் திருத்தி அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



தமிழகத்திலே மாமல்லபுரம், இராமேஸ்வரம், கன்னியாகுமரி, உதகை, கோடைக்கானல், பிச்சாவரம், குற்றாலம், ஹோகனக்கல் போன்ற இடங்களில் போக்குவரத்து வசதிகள், தங்கும் விடுதிகள் போன்றவற்றை அதிகப்படுத்தி மக்களைக் கவரும் வகையில் ஏராளமான சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்திலே ஏழைகளின் ஊட்டி என்று சொல்லப்படுகிற ஏலகிரி மலை இருக்கிற . அதைச் சுற்றுலாத் தலமாக்க அரசு அறிவித்ததன் வாயிலாக அந்தப் பகுதியிலே பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை உருவாக்குவதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று செய்தி சுற்றுலாத் துறையின் மூலமாக தமிழகத்திலே பல மாவட்டங்களிலே தலைமையிடங்களிலே பொருட்காட்சிகள் சிறப்பாக நடைபெறுகின்றன. நாங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வருவதற்கு முன்னதாக அரசு பொருட்காட்சியை நடத்தியதால் எந்த அளவுக்குப் பொருட்காட்சிகளில் சூதாட்டங்களை களியாட்டங்களை நடத்தினார்கள் என்பது தெரியும். அதைப் போக்குகின்ற அளவுக்கு சிறப்பாக மக்கள் பாராட்டுகின்ற அளவுக்கு அதே நேரத்திலே அரசு வருவாயை அதிகமாக ஈட்டுகின்ற அளவுக்கு தற்போது அரசு பொருட்காட்சியை நடத்தி வருவது பாராட்டுக்குரியது.

அதைப்போலவே வனத்துறையைப் பொறுத்தவரையில் அறநிலையத் துறையைவிட அதிகமான பல காரியங்கள் செய்து அமைச்சர் அவர்கள் சாதனையைச் செய்திருக்கிறார்கள். ஒரு நாட்டிற்கு நீர்வளம், நிலவளம் நன்றாக இருக்கவேண்டுமென்றால் அதற்கு வனவளமும் இருக்கவேண்டும், அந்த வகையிலே வன வளத்தைப் பாதுகாக்கவேண்டும் என்பதற்காகவும் ஒரு நாட்டிலே மூன்றில் ஒரு பங்கு காடாக இருக்க வேண்டுமென்று சொல்வார்கள். ஆனால் தமிழகத்திலே 16 சதவீதம் தான் காட்டுப் பகுதி இருக்கிறது. அந்த வனப்பகுதியை அதிகப்படுத்துவதற்கும் வனவளத்தைப் பற்றி மக்கள் நன்றாகப் புரிந்துகொள்வதற்கும் வனத்தைக் காக்கக்கூடிய முறையிலே பருவமழையைப் பெறுவதற்கும், குடியிருப்புச் சாதனங்களைப் பெறுவதற்கும் உணவுப் பொருட்களை சமைப்பதற்கும், மருந்துப் பொருட்களைப் பெறுவதற்கும் பல்வேறு மூலப்பொருள்களைப் பெறுவதற்கும் அடிப்படையாக அது இருக்கின்ற காரணத்தினாலே வனத்துறையைச் சிறப்பாக்குவதற்காகவும் அரசு மேலும் பல முயற்சிகளைச் செய்ய வேண்டும். இங்கே வனத்துறைக்காக 1982-83ஆம் ஆண்டிற்கு காட்டு வளத்திற்கு 23.82 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதே போன்று 1982-83ஆம் ஆண்டு வனப் பாதுகாப்பிற்காக 31.15 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வனத் துறையிலே வருவாயில்

[திரு. தி. அன்பழகன்] [1982 மார்ச் 11

40 சதவீதம் சந்தன மரங்களில் இருந்து கிடைக்கிறது. வட ஆற்காடு மாவட்டம் ஜவ்வாது மலையில் ஏராளமான சந்தன மரங்கள் இருக்கின்றன. ஆண்டுக்குப் பலகோடி ரூபாய் வருமானத்தை ஈட்டிக்கொண்டிருக்கிற நிலை இருந்தாலும் அப்படி வருவாயைத் தருகின்ற சந்தன மரங்கள் சமூக விரோதிகளால் திருடப்படுகின்றன. அதைத் தடுப்பதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. இந்தக் குறிப்பிலே கூட 1981 டிசம்பர் வரை ஏறத்தாழ 271 சந்தன மரத் திருட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு 16.8 லட்சம் ரூபாய் மதிப்பீடு உள்ள சந்தன மரக் கட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அளவுக்கு அரசு நடவடிக்கை எடுத்தும் திருடு போகிறது என்றால் மேலும் சிறப்பாக வனங்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்ற முறையிலே அதிக அளவு காவலர்களை ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்வதின்மூலம் திருட்டைக் குறைப்பதற்கும் சந்தனக் கட்டைகளைக் கடத்துகிறவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். காடுகளிலே மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை வெட்டப்பட்ட சந்தன மரங்கள் அங்கேயே விடப்படுகின்றன. இதனால் அவைகளை சுலபமாக கடத்துவதற்கு வழி ஏற்படுகிறது. ஆகவே வெட்டப்பட்ட சந்தன மரங்கள் உடனடியாக பாதுகாக்கப்பட்ட கிடங்குகளுக்குக் கொண்டுவருவதற்கு வழிவகைகள் செய்யப்படவேண்டும். அதன் மூலமாகத் கடத்தலை ஓரளவு குறைக்க முடியும். 1980ஆம் ஆண்டு மத்திய அரசு சந்தன மர ஏற்றுமதியைத் தடை செய்தது. அதனால் நமக்கு வருவாய் குறைந்தது. சந்தன மரத்தை ஏற்றுமதி செய்வதால் உள்நாட்டுத் தேவை எந்த அளவுக்கும் பாதிக்கப்படாது என்று மாநில அரசு வற்புறுத்தி இருக்கிறது. ஆனாலும் மத்திய அரசு அந்தச் சந்தன மர ஏற்றுமதித் தடையை இதுவரையில் நீக்கவில்லை. ஆகவே, மத்திய அரசு அந்தத் தடையை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-00]

வடார்க்காடு மாவட்டம் திருப்பத்தூர் பகுதியில் புதிய சந்தனத் தொழிற்சாலையை அமைக்க அரசு ஏற்பாடு செய்து வருகிறது. ஏறத்தாழ 49.99 இலட்சம் ரூபாய் செலவில் 400 டன் சந்தனக் கட்டை பதப்படுத்தும் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அதற்காக அரசைப் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வனத்துறையைப் பொறுத்தவரையில் அதிகாரிகளுக்கு, குறிப்பாக ஃபாரஸ்ட் ரேஞ்ச் ஆபீசர்களுக்குப் பாதுகாப்புக்காகவும், பெரிய வனக் குற்றங்களைக் கண்டுபிடிக்கவும் போலீஸ் சாருக்குக் கொடுக்கப்பட்டதைப்போல ரிவால்வர் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.



982 மார்ச் 11] [திரு. தி. அன்பழகன்]

கம்பியில்லாத் தந்தி மூலம் கடத்தலைத் தடுக்கும் நடவடிக்கைகளை எடுக்க வனத் துறை வழிவகை செய்ய வேண்டும்.

பலயிடங்களில் வனத்துறை அலுவலர்களுக்கு வாகன வசதிகள் இல்லை. போலீஸ் நிலையங்களில் கொடுக்கப்பட்டிருப்பதைப்போல மோட்டார் சைக்கிள் அல்லது ஜீப் வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முக்கியமாக தேக்கு மரம், ஈட்டி மரம், சந்தன மரம் ஆகியவைகள் கடத்தப்படுவதைத் தடுக்க வனத்துறையினருக்கு வாகன வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பலயிடங்களில் வனத் துறை அதிகாரிகள் வனக் குற்றங்களைக் கண்டு பிடிக்கும்பொழுது அந்தப் பகுதியில் உள்ள காவல் துறையினருக்கும் அவர்களுக்கும் ஏற்படுகின்ற கருத்து வேறுபாடுகளின் காரணமாக சில குற்றங்களைக் கண்டுபிடிக்க முடியாத அளவிற்குத் தவிர்க்கப்படுகின்றன. எனவே, வனத் துறையினரும், காவல்துறையினரும் இணைந்து செயல்படும் அளவிற்கு அரசு அவர்களுக்கு வழிவகைகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேக்கு மரங்களையும், தீக்குச்சி மரங்களையும், பழவகை மரங்களையும் கூடக் கிராமப் பகுதிகளில் உள்ள வனப் பகுதிகளிலே நட்டு அரசுக்கு அதிக வருவாயை ஈட்டித் தருகின்ற திட்டங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சரவர்கள் வைத்திருக்கின்ற இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்றுப் பாராட்டி அமைகின்றேன். வணக்கம்.

திரு. கே. கல்லன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைக்கு முக்கியமான நான்கு கோரிக்கைகளை நாம் எடுத்திருக்கின்றோம். ஆனால் ஒரே நாளில் இந்த நான்கையும் விவாதிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, அதற்குக் கொடுக்கப்பட வேண்டிய முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்று நான் நினைக்கிறேன். எதிர்காலத்திலேயாவது இம்மாதிரி முக்கியமான கோரிக்கைகளை, நல்ல வருவாய் தரும் கோரிக்கைகளை, எதிர்கால சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் கோரிக்கைகளை இரண்டு நாட்களாவது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று முதலில் கேட்டுக் கொள்கிறேன்.

உலகமெங்கும் காட்டுவளத்தைக் காத்து வரும் நாடுகள் செழிப்பாகவும், செல்வாக்காகவும் இருக்கின்றன. ஆனால் இந்தியாவில், குறிப்பாகத் தமிழ் நாட்டில் இந்தத் துறைக்குப் போதிய அளவில் நல்ல முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. அதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கே. கல்லன்] [1982 மார்ச் 11

இந்திய அரசு ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு பரப்பளவில் உள்ள பாகத்தில் காட்டு வளம் இருக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறது. அதற்கு உதவியும் செய்து வருகிறது. ஆனால் தமிழ்நாட்டிலே ஏறத்தாழ ஆறில் ஒரு பாகத்திற்குக் கூட இல்லாமல் இருப்பது மிகவும் வருந்தத் தக்கது. எதிர்காலத்திலேயாவது நாம் இதற்காகப் பல திட்டங்களை வகுத்து இந்த வளத்தை அதிகமாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாகக் கிராமப்புறங்களில் உள்ள காட்டு வளங்களைப் பொறுத்தவரையில் கிராம அதிகாரிகளை நீக்கிய பிறகு நிலைமைகள் மிகவும் மோசமடைந்துகொண்டு வருகிறது. உதாரணத்திற்கு நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஒருசில மேற்கோள்களை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில ஆண்டுகளாக ஏறத்தாழ பல கோடி ரூபாய் அளவில் மரங்கள் கடத்தப்பட்டுள்ளன. இன்னும் இந்த மரங்கள் கடத்தப்பட்டுத்தான் வருகின்றன. தற்போது சுமார் 300, 400 டன் வரையில் மரங்களும், விறகுகளும் கடத்தப்பட்டு வருகின்றன. இது குறித்து டி.டி.சி. கூட்டங்களிலும், மற்ற அதிகாரிகளிடத்திலும் நானும், இம்மாவட்டத்தைச் சேர்ந்த மற்ற சட்டமன்ற உறுப்பினர்களும் கலெக்டரிடத்திலும், மற்றவர்களிடத்திலும் புகார் செய்தும் அதிகமாகப் பலன் கிடைக்கவில்லை. அதை அரசாங்கம் உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீலகிரியில் இந்த நிலைமை ஏற்பட்டிருப்பதால், 'இக்காலாஜிக்கல் பாலன்ஸ்', தட்பவெட்ப நிலைமை அதிகம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதனால் பெய்ய வேண்டிய மழை பருவகாலத்தில் பெய்யவில்லை. ஆனால், வேண்டாத காலங்களில் பேய்மழையும் புயலும் பெய்து அதிக நட்டத்தை ஏற்படுத்துகிறது. அதனால், மின் உற்பத்தி மற்றும் ஜில்லாவில் பல முக்கியமான நல்ல நடவடிக்கைகள் செய்ய முடியாமல் போகிறது.

காட்டு வளத்தினால் நமக்குக் கிடைக்கும் நன்மைகளைப் பற்றி நாம் அதிகம் கூறவேண்டியதில்லை. பிராணவாயு முதற்கொண்டு, விறகு மற்றும் நமக்கு வேண்டிய பொருள்கள், மற்றும், தொழிற்சாலைக்கு வேண்டிய மூலதனங்கள் அனைத்தும் கிடைக்கின்றன. இந்த மாதிரி முக்கியமான இந்த வளத்தை நாம் நன்றாகப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தை இந்த அரசு கவனித்து, நல்ல நடவடிக்கை எடுத்து காக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக, ஃப்ளையிங் ஸ்குவாடு ஒன்றை ஏற்படுத்தி, எதிர்காலத்தில் இந்த மாதிரி களவுகளைப் போக்க வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.



1982 மார்ச் 11] [திரு. கே. கல்லன்]

ஒரு சில சிறுவிவசாயிகள் அவர்களின் பூமியில் இரண்டு ஏக்கர், 3 ஏக்கர் என்று மரம் நட்டிருக்கிறார்கள். தற்போதுள்ள முறைப்படி அவர்களுக்கு பர்மிட் வழங்கப்படுவதில்லை. அவர்களை தயவு செய்து மனதில் கொண்டு வேறு வழியில்லாததால் அவர்களுக்குப் பர்மிட் வழங்குவதில் வேண்டிய சலுகை தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சில்வர் ஓக் என்ற மரத்தை ஷெடியூலில் கொண்டு வந்திருக்கிறார்கள். சாதாரண சிறு விவசாயிகள், சில்வர் ஓக் என்ற அந்த மரத்தை 5 மரங்கள், 10 மரங்கள், அல்லது சிலர் 50 மரங்கள், 100 மரங்கள் வைத்திருக்கிறார்கள். அதற்குப் பர்மிட் வழங்கும்போது சலுகை தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நீர்த்தேக்கத்திற்குப் பக்கத்தில் கற்பூர மரங்களை நடுவதால் நீர்த் தேக்கங்கள் வற்றி விடுகின்றன. மேற்கத்திய அறிஞர்கள் கருத்துப்படி 10, 15 ஆண்டு வளர்ந்த மரங்கள் ஏறக்குறைய 400 காலன் தண்ணீரைக் குடிக்கும் என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகவே, நீர்த்தேக்கங்கள் பக்கத்தில் கற்பூர மரங்களை நட வேண்டாம் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

எஸ்.ஐ.டி.ஏ. என்ற அமைப்பின்கீழ் அடுத்த 10 ஆண்டுகளில் ஏறத்தாழ ரூ. 108 கோடி தமிழகத்திற்கு வழங்கப்பட இருக்கிறது. அந்த ரூ. 108 கோடியில், இந்த ஐந்தாண்டிற்கு ஏறக்குறைய ரூ. 48 கோடி வழங்கப்பட இருக்கிறது. இந்த ஆண்டிற்கு ரூ. 8 கோடி செலவிட இருக்கிறோம். இந்த ரூ. 8 கோடியை நல்ல முறையில் செலவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாலை ஓரங்களில், மற்றும் ரெயில் லைன் ரோடு ஓரங்களில் சர்க்கார் பூமியில் மரங்களைப் பயிரிட்டு, பஞ்சாயத்துக்கும் சர்க்காருக்கும் வருமானத்தைப் பெருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சுற்றுலாத் துறை உலகிலே மிகவும் கணிசமான வளர்ச்சி அடைந்துள்ளது. ஆனால் மற்ற நாடுகளோடு ஒப்பிட்டால், குறிப்பாக, தமிழகத்தில் நாம் அதிக வளர்ச்சியடையவில்லை. அதற்குப் பல காரணங்கள் உள்ளன. இந்தத் துறையை ஒரு தொழில் துறையாகக் கருதி நாம் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் தமிழ்நாட்டில் ஏராளமான இடங்கள் உள்ளன.

அவற்றை நல்லவிதமாக விளம்பரங்கள் செய்து, முக்கியமான இடங்களை, சுத்தமாகவும், கவர்ச்சிகரமாகவும் வைத்திருப்பதுடன் பயணிகள் தங்குவதற்கான இடங்களையும் நவீனமான முறையில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்

[திரு. கே. கல்லன்] [1982 மார்ச் 11

கிறேன். மெரினா கடற்கரை ஒன்றை மட்டும் தூய்மையாக வைத்திருந்தால் போதாது. மாநகரத்தின் மற்ற பகுதிகளுக்கும் அந்த நிலைமையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த எல்லா நகரங்களிலும் அந்த வசதிகளை ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக, கோவில் உள்ள இடங்களையும், மலைப் பிரதேசங்களையும் மேம்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாரதத்தின் முதல் பிரதமர் பண்டித நேரு அவர்கள், நீலகிரி மலையை, மலைகளின் ராணி என்று அழைத்தார். அவர் அது அகில உலக மையமாக ஆக்கப்பட வேண்டுமென்று எண்ணினார். ஆனால், அவர் விருப்பம் இன்னும் நிறைவேறாமல் இருக்கிறது. அதற்காக பல திட்டங்களை போட்டு மேம்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உதகைக்கும், தென்னகத்தின் மிக உயரமாக உள்ள தொட்டபெட்டாவுக்கும் 'ரோப்வே லைன்' மலை ரெயில் ஏற்படுத்த வேண்டும். மத்திய அமைச்சர் ஒருவர், உங்களுக்கு Do you want safety travel or hill train? என்று கேட்கிறார்.

(முற்பகல் 11.10)

அதே சமயத்தில் மத்திய ரயில்வே அமைச்சர் அவர்கள் டூரிசம் டெவலப்மெண்ட்டுக்காக பல புதிய ரயில் தடங்களை செய்ய இருப்பதாகச் தெரிவிக்கிறார். அப்படி இருக்கும் போது, இப்போது அங்கே இருக்கும் நீலகிரி மலை ரயில்பாதையை நவீனப்படுத்தி ஊட்டிக்கும், குன்னூருக்கும் இடையே எலக்ட்ரிபை செய்து கொடுக்கும்படி இந்த அரசு மத்திய அரசை வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊட்டியிலே ஏற்கனவே Micro wave tower இருக்கிறது. சாதாரணமாக செய்யும் செலவில் மொத்தத்தில் மூன்றில் ஒரு பங்கு செலவு செய்தால் அதை டி.வி. சென்டராக மாற்றலாம் என்று நிபுணர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள். அப்படி அதை டி. வி. சென்டராக மாற்றினால், பல்வேறு பகுதிகளில் இருந்து உல்லாசப் பயணமாக வரும் மக்கள் அங்கே நல்ல திரைப்படங்களைப் பார்க்கும் வாய்ப்பு ஏற்படும். எனவே இதை டி.வி. சென்டராக மாற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன். உதகையில் ஒரு heli-pad அமைப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துவருவதாக நான் அறிகிறேன். அது heli-pad இல்லாமல் ஒரு ஏரோடிராமாக மாற்றி அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உதகை அரசினர் பூங்காவில் தற்போது வசூலிக்கப்படும் கட்டணங்களை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உதகை முதலிலே Ootacamund என்று இருந்தது.



1982 மார்ச் 11] [திரு. கே. கல்லன்]

இப்போது அதை உதகமண்டலம் என்று அண்மையில் மாற்றி வைத்திருக்கிறார்கள். இதனால் அங்கே உள்ளவர்களுக்கு பல விதமான இடர்பாடுகளும் தொந்தரவுகளும் ஏற்படுகின்றன. குறிப்பாக அங்கே வாழ்கின்ற தோதவர்கள் feelings மிகவும் hurt ஆகியிருக்கிறது. அதைப் போக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு பழைய படியே அதை (Ootacamund) என்று மாற்றினால், வருகின்ற உல்லாசப் பயணிகளுக்கும், அயல நாடுகளிலே இருந்து வருகின்றவர்களுக்கும் சௌகரியமாக இருக்கும் என்று கேட்டு அதை Ootacamund என்று மாற்றும்படி கேட்டுக் கொள்கிறேன். உதகையிலே இதுவரையில் அவுட்டோர் ஸ்டேடியம் இல்லை. அங்கே வருகின்ற உல்லாசப் பயணிகளைக் கவரும் வண்ணம் அங்கே அவுட்டோர ஸ்டேடியம் ஏற்படுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது உதகையிலே ஆப்கோர்ஸ் பெட்டிங் என்ற மோசமான சூதாட்டம் நடைபெறுகின்றது. ஒரு மாதத்தில் 20 நாட்களுக்கும் மேலாக இந்த சூதாட்டம் நடத்துவதற்கு இந்த அரசு அனுமதி அளித்து இருக்கிறது. அந்த ஆப்கோர்ஸ் பெட்டிங்கை யார் யார் ஆடுகிறார்கள் என்றால், மாணவர்கள், அலுவலகத்திற்கு போகிறவர்கள், அதிகாரிகள், காவல் துறையினர் ஆகியோர் ஆடுகிறார்கள். இதனால் நீலகிரியின் பொருளாதாரம் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. எனவே இந்த ஆப்கோர்ஸ் பெட்டிங் வந்தபிறகு எனக்குத் தெரிந்தவரை, 2, 3 மாணவர்கள் அங்கே உள்ள ஏரியில் விழுந்து இறந்திருக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. அதை உடனடியாக எடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

சின்கோனாவைப் பற்றி அதிகமாக ஒன்றும் சொல்லப்போவதில்லை. இருந்தாலும் ஏறக்குறைய ஆயிரமாயிரம் வகையான செடிகள் இருப்பதால் அதற்கு ஒரு நல்ல ரிசாச் சென்டரை அமைத்து அதன் மூலம் எதிர்காலத்தில் நல்ல வருவாய் கிடைக்க வழி செய்யவேண்டும். Horticulture and Agriculture College நீலகிரியில் நிறுவினால், அங்கே உள்ள மக்கள் அதிக மேம்பாடு அடைய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து கோவில் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கோவில்களில் ஒரு சில சம்பவங்கள், திருச்செந்தூரைப் போல நடந்து விடுகின்றன. அதற்குக் காரணம் அரசு கடைபிடிக்கும் நாமினேஷன் முறைதான். தயவு செய்து கடவுள் நம்பிக்கை உள்ள நல்லவர்களுக்கு, அந்தப் பகுதி மக்களுக்கு, கட்சி அடிப்படை இல்லாமல் நியாயமாகக் கொடுத்தால் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறாமல் இருக்கும். குறிப்பாக சிதம்பரம் கோவிலில் ஒரு தனிப்பட்ட நபர் ஒரு சில ஆதிக்கம் செய்திருக்கிறார். சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்து, அதில்

ஆவன செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன். உதகையிலே இந்தக் கோவில்களைப் பொறுத்தவரையிலும் ஒன்றும் செய்யப்படவில்லை. உல்லாசப் பயணிகளைக் கவரும் வகையில் அங்கே ஏற்கெனவே உள்ள 2, 3 கோவில்களை சீர்திருத்தி, அதற்குக் கணிசமான தொகை ஒதுக்கிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

**திரு. வெ. அரங்கராசன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சரவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற அறநிலையத்துறை, சுற்றுலாத் துறை, வனத்துறை, சிங்கோனாத்துறை ஆகிய இந்த 4 துறைகள்மீதும் கருத்துக்களைச் சொல்ல எனக்கு சந்தர்ப்பம் அளித்ததற்காக முதலிலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் வனத் துறைக்கு மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சரவர்கள் இந்த ஆண்டுக்கு 23.82 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். ஆனால் இதற்கு முன்னால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1973-74-ல் 5.25 கோடி ரூபாய் வனத் துறைக்கு ஒதுக்கியிருந்தார்கள்.

வனத்துறையின் மூலம் கிடைத்த வருமானம் 1972-73 ஆம் ஆண்டில் 3.57 இலட்சம் ரூபாய். 1971-72-ல் 4.56 இலட்சம் ரூபாயாக இருந்த வருமானத்தைவிட ஒரு இலட்சம் ரூபாய் குறைவாக அவர்கள் காலத்தில் வந்திருக்கிறது. ஆனால் நம்முடைய மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சரவர்கள் பொறுப்பேற்ற பிறகு 1981-82 ஆம் ஆண்டில் இரண்டு கோடி ரூபாய் அரசுக்கு வருமானம் வந்திருக்கிறது. அரசு அதற்காக ஒதுக்கியிருக்கிற நிதி 22.30 கோடி ரூபாய். அதிலிருந்து கிட்டத்தட்ட 2 கோடி ரூபாய் வருமானம் ஈட்டியிருக்கிறார்கள்.

இந்த ஆண்டு வனத்துறையின் மூலம் 3 கோடி ரூபாய் வருமானம் வரும் என்று எதிர்பார்க்கிறார்கள். இந்த ஆண்டிற்கு 23.82 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 5.25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து 3.5 இலட்சம் ரூபாய்தான் வருமானம் கிடைத்திருக்கிறது. இன்றையதினம் 23 கோடி ஒதுக்கீடு செய்து கிட்டத்தட்ட 3 கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு வருமானம் வருகிறது என்றால் கிட்டத்தட்ட 200 மடங்குக்குமேல் மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு வருமானம் ஈட்டுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அளவுக்கு இன்றையதினம் வனத்துறை சீரோடும் சிறப்போடும் செயல்படுவதை நாம் கண்கூடாகப் பார்க்க முடிகிறது. இவ்வாறு இந்த வருமானம் அவர்கள் காலத்தில் வரவில்லை என்றால் இந்த பணம் யாருக்கு எந்த வகையில் எப்படி போய்ச் சேர்ந்திருக்கிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.





மேலும் கிட்டத்தட்ட 1/3 பகுதி வனத்துறையாக இருக்க வேண்டுமென்று இருந்தாலும் இன்றைக்கு தமிழ் நாட்டில் 16.5 சதவீதம்தான் காடுகள் இருக்கின்றன. இதை அதிக அளவில் உயர்த்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முயற்சி செய்யவேண்டும். நிலப்பரப்பில் 33 சதவீதம் வனத்துறை இருக்க வேண்டும் என்ற அந்த அளவுக்கு உயர்த்த தீவிரமாக நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் பாடுபட்டு வருவதை நாம் எல்லாம் கண்கூடாகப் பார்க்க முடிகிறது. அதற்கு ஒரு உதாரணம், திருச்சி மாவட்டத்தில் ஒரு இலட்சம் கன்றுகளை நடுவதற்காக விழா அங்கே இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவரால் உருவாக்கப்பட்டு, திருவரம்பூரில் அந்த விழாவை நடத்தியிருக்கிறார்கள்.

இன்றையதினம் எங்கெங்கு அரசின் நிலங்கள் இருக்கிறதோ, அங்கெல்லாம், மரங்களை நட ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். குளம், குட்டை, ஏரிகள் இருக்கிற இடங்களில் எல்லாம் மரங்களை வைத்து பயிர் செய்கிற நிலைமையை அரசு உருவாக்கி, மிகத் தீவிரமாக வனத்துறை செயல்பட்டு வருகிறது.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் ஊட்டியிலே இருந்த மரங்களை எல்லாம் அதிக அளவில் வெட்டி, அவர்கள் பெற்ற பலன்கள் காரணமாக 1978-ல் ஏற்பட்ட பெரிய நிலச்சரிவின் காரணமாக கிட்டத்தட்ட 11பேர்கள் இறந்துவிட்டார்கள். 40 வீடுகள் சேதம் அடைந்தன. அதை நம்முடைய தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் பார்வையிட்டு, அங்கே சேதம் அடைந்த வீடுகளுக்குப் பதிலாக புதிதாக 40 வீடுகளை கட்டிக் கொடுத்திருக்கிறார்கள்.

வனத்துறையில் இருக்கிற அதிகாரிகளுக்கு வாகன வசதி போதுமான அளவுக்கு இல்லாமல் சிரமப்படுகிறார்கள். அதற்கு இப்போது 24 ஜீப்களையும், அவர்களுடைய பாதுகாப்புக்காக 40 துப்பாக்கிகளையும் இந்த 1982-83 ஆம் ஆண்டில் வழங்க இருப்பதாக இந்த அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார்கள். மேலும் அதிக அளவில் வனத்துறை அதிகாரிகளுக்கு வாகன வசதிகளைச் செய்து கொடுத்தால் வனத் திருட்டுகளைத் தடுக்க முடியும். வனங்களிலிருந்து சந்தன மரங்களைக் கடத்துதல், மற்றும் பல்வேறுபட்ட விலை உயர்ந்த மரங்களைக் கடத்துதல் போன்ற திருட்டுகளைத் தடுக்க வழிவகை ஏற்படும். எனவே, அரசு அதற்கு அதிக அளவில் நிதி ஒதுக்கி, வனத்துறை அதிகாரிகளுக்கு வாகன வசதிகளை உருவாக்கித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

மேலும் அவர்களைக் கைது செய்து மரத்தினைக் கடத்தியவர்களைக் கோர்ட்டுக்குக் கொண்டு செல்வதாக இருந்தால் அதிகாரிகள் தங்களுடைய கைப் பணத்தின் மூலமாக செலவு செய்து அவர்களைக் கொண்டு போகவேண்டிய நிலைமை இருப்பதாகக்

கூறுகிறார்கள். ஆகவே எப்படி காவல் துறையினருக்கு கைது செய்பவர்களை அழைத்துச் செல்வதற்கு கூப்பன் வழங்கப்பட்டிருக்கின்றதோ அதே போன்று வனத்துறையினர் கைது செய்து கொண்டு செல்வதற்காகவும் அவ்வாறு வசதி வாய்ப்புகளை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இந்த ஆண்டு மலைப் பகுதிகளில் கிட்டத்தட்ட 30 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூ. 39.5 இலட்சம் ரூபாய் செலவிலே சாலைகள் போட இருப்பதாகத் தெரிவித்திருக்கிறீர்கள். என்னுடைய பகுதியான பச்சைமலைப் பகுதி நீண்டகாலமாகச் சாலைப் போக்குவரத்து வசதி இல்லாமல் மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அங்கே மூங்கில் மரம், சந்தன மரம் போன்ற பலவகையான மரங்கள் இருக்கின்றன. எனவே, அங்கே இருக்கின்ற சாலையினைக் தார் சாலையாக மாற்றியமைத்துக் கொடுப்பதன் மூலமாக அங்கே இருககின்ற மக்கள் மலையின் கீழ்ப்பகுதியிலே இருக்கின்ற மக்களோடு பழகுவதற்கும் அங்குள்ள பள்ளிகளிலே சென்று படிப்பதற்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் வழிவகை ஏற்படும். ஆகவே இந்த ஆண்டு அந்த பச்சைமலைப் பகுதியில் சோபனாபுரத்திலிருந்து டாப்செங்காட்டுப்பட்டிக்குச் செல்கின்ற சாலையினைத் தார் சாலையாக உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஜப்பான் நாடுகளில் இருப்பதுபோன்று பயன் உள்ள மரங்களை அந்த மலைப்பகுதிகளிலே உருவாக்கினால் நல்ல வருமானம் வருவதற்குரிய வழிவகைகள் ஏற்படும். குறிப்பாக எங்களுடைய பச்சைமலைப் பகுதியில், ஜப்பானிலே ஏற்படுத்தி இருப்பது போன்று வரிசை வரிசையாக அழகாக நன்கு பயன்தருகின்ற மரங்களை வைத்தால் பார்ப்பதற்கு அழகாகவும் இருக்கும். பயன் உள்ளதாகவும் இருக்கும். ஆகவே, அவ்வாறு ஜப்பானிலே மரங்களை உருவாக்குகின்ற திட்டம்போல் தமிழகத்திலேயும் அப்படிப்பட்ட திட்டத்தை உருவாக்கி தேவையற்ற புதர் போன்ற மரங்களை நீக்கிவிட்டு, வெட்டிவிட்டு, பயன் உள்ள மரங்களை வரிசை வரிசையாக நட்டு பார்ப்பதற்கு அழகான முறையிலேயும் அரசுக்கு அதிகமான வருமானம் வருகின்ற வகையிலேயும் ஏற்பாடு செய்யவேண்டும். அதற்குரிய வழிவகை இருப்பதன் காரணத்தால் அவ்வாறு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, சுற்றுலாத் துறை இந்த ஆண்டு கிட்டத்தட்ட 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். தமிழகத்தின் சுற்றுலாத் துறை இன்றையதினம் மிகத் தலைசிறந்ததாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. இதற்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தபோது 1971–72லே மிகக் குறைந்த அளவிலேதான் நிதி ஒதுக்கினார்கள். ஆனால், புரட்சித் தலைவர் அவர்களின் அரசு 3 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து வெளிநாட்டிலே இருந்து வருகின்றவர்களும், நம்முடைய தமிழக மக்களும்





நன்கு பார்த்து அனுபவிக்கின்ற வகையிலே ஆலயங்களின் சுற்றுப்புற சூழ்நிலைகளையும், வசதிகளையும் ஏற்படுத்துவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டு வருகின்றது. அந்த வகையிலே இங்கே சுற்றுலாத்துறைக்கு அதிக அளவிலே நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். என்னுடைய பகுதியான பச்சைமலைப் பகுதியினை ஒரு சுற்றுலாத் தலமாக அமைக்க வேண்டும். அது இயற்கை எழில் கொஞ்சும் பகுதியாக இருக்கின்றது. ஊட்டி போன்ற இடங்களில் மக்கள் சென்று கண்டுகளிக்கின்ற அளவுக்கு இருப்பதுபோன்று அதைவிடவும் நல்ல முறையிலே பச்சைமலைப் பகுதி இருக்கின்றது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்கள் பச்சைமலைப் பகுதிக்கு ஒருமுறை வரவேண்டும். அப்படி வந்து அந்தப் பகுதியினைப் பார்த்ததற்குப் பிறகு அது கண்டிப்பாக சுற்றுலாத் தலமாக இருப்பதற்குரிய சூழ்நிலை இருப்பதை உணருவார்கள். ஆகவே கண்டிப்பாகச் பச்சைமலைப் பகுதியை சுற்றுலாத்தலமாக ஆக்குவதற்குரிய வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திருச்சியிலே இந்த ஆண்டு இளைஞர் இல்லத்திற்காக 10 இலட்சம் ரூபாயும், சுற்றுலா அலுவலகத்திற்காக 2 இலட்ச ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதற்காக அந்த இடத்தைச் சேர்ந்தவன் என்ற வகையிலே நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, அறநிலையத் துறையினைப் பொறுத்தமட்டிலே தமிழக அரசு புரட்சித் தலைவரின் அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் ஆலயங்களுக்கு வருகின்ற வருமானமும் பல கோடியாக உயர்ந்து வருகின்ற நிலைமையைத் தமிழகத்திலே நாம் பார்க்கிறோம்.

ஆனால், இதற்கு முன்னால் இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் ஆலயங்களுடைய பணம் திருக்கோயில் புத்தகம் வாயிலாக அவர்களுக்கு தேவையானபோதெல்லாம் உண்டியல்களை உடைத்து அந்த நிதியை அவர்கள் தனிப்பட்ட வகையில் பயன்படுத்திக்கொள்கிற அளவில் பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள் என்பதை கிருஷ்ணசாமி நாயுடு அறிக்கையில் தெளிவாக எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அந்தளவிற்கு அவர்கள் காலத்தில் நடந்ததையெல்லாம் மறந்து விட்டு இன்றையதினம் ஏதோ நடக்காத ஒன்றை நடந்ததாக இவர்கள் பால் கமிஷனை வைத்துக்கொண்டு அரசின் மீது இல்லாத பழியைப் போட்டு மக்களுடைய எண்ணத்தை மாற்றிவிடவேண்டும் என்ற வகையில் வழிநடைப் பயணமாகச் சென்றார்கள். ஆனால், மக்கள் என்ன நடந்தது, என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை எல்லாம் மிக உன்னிப்பாக தெளிவாக தெரிந்துகொண்டிருக்கிறார்கள். எனவே, உங்களுடைய வழிநடைப் பயணத்தின்

மூலமாக மக்கள் மனதை மாற்றி அவர்கள் உங்களுக்குச் சாதகமாக வந்துவிடுவார்கள் என்ற எண்ணம் உங்களுக்கு இருக்குமானால் அது உங்களை ஏமாற்றுவதாக இருக்குமே தவிர கண்டிப்பாக அது உங்களுக்குச் சாதகமாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆலயங்களுக்கு வருகின்ற குத்தகை பாக்கி கிட்டத்தட்ட 19 கோடி ரூபாய் இருப்பதாக அறிக்கையில் கொடுத்திருக்கிறார்கள். ஆலயங்களுக்கு வரவேண்டிய குத்தகை பாக்கி எவ்வளவு காலம் கடந்தாலும் அதற்கு தள்ளுபடி இல்லை என்ற ஒரு நிலையை சட்டத்தின் மூலம் உருவாக்கியாவது ஆலயங்களுக்கு வர வேண்டிய குத்தகை பாக்கிகளை வசூலிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக அமைந்திருக்கிற குழுவின் அறிக்கையை விரைவில் வாங்கி அதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிலைகள் அதிகமான அளவில் திருட்டுப் போவதாக எதிர்க் கட்சி உறுப்பினர் திரு. பழனியப்பன் அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். இந்தச் சிலைகள் திருட்டும், உண்டியல் திருட்டும் அதிகமாகக் குறைந்திருக்கிறது. உங்கள் ஆட்சிக் காலத்தில் தான் அவை மிக அதிக அளவில் இருந்தது என்று எடுத்துச் சொல்லி, சிலைகளைப் பாதுகாப்பதற்காக, கிராமங்களில் உள்ள கோவில் சிலைகளை பெரிய கோவில்களில் கொண்டு போய் வைப்பதன் மூலம் சிலைகளைப் பாதுகாக்கும் நடவடிக்கையை இந்த அரசு மிகத் தீவிரமாக செய்து கொண்டிருக்கிறது என்று எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், 16 கோவில்களில் கிட்டத்தட்ட 379 திருமணங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த அரசினால், அரிஜனங்களுக்கும் பிற்பட்ட வகுப்பு மக்களுக்கும், திருமணத்திற்கு தங்கம் எங்கே என்ற வினாக்களை எல்லாம் இங்கே எழுப்பினார்கள். (மணியடிக்கப்பட்டது). கோயில்கள் மூலம், நல்ல வருமானம் வரும் கோவில்கள் மூலம் ஒவ்வொரு திருமணத்திற்கும் ரூ. 750 முதல் ரூ. 1,000 வரை செலவு செய்து ஏழை மக்களுக்கு, அரிஜனங்களுக்கு, பிற்படுத்தப்பட்ட வகுப்புமக்களுக்கு பயன்படுகிற வகையில் திருமணங்களை இந்த அரசு நடத்திக் கொண்டிருக்கிறது என்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால் 1981ல் மட்டும் 93 பெரிய ஆலயங்களில் குடமுழுக்கு செய்திருக்கிறது.

சேலம் மாவட்டத்தில் உள்ள கொல்லிமலையை சுற்றுலா ஸ்தலமாக அறிவித்து— அங்கே ஆகாச நீர்வீழ்ச்சிக்கு தொலை நோக்கி நிலையமும், பூங்கா ஒன்றும் நிறுவவேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன், வணக்கம்.





திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது 16 சதவீதம் என்றிருக்கக்கூடிய காடுகளை 33 சத வீதமாக மாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் சமூக காடு வளர்ப்புத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதில் ஏரி, குளங்கள், சாகுபடிக்கு லாயக்கான சாகுபடிக்கு உள்ள புறம்போக்கு நிலங்களிலும் மரங்கள் நட ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதன்விளைவாக நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பல ஆண்டுகளாக விவசாயம் செய்து கொண்டிருக்கக்கூடிய ஏழை விவசாயிகளை அங்கிருந்து வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இது சரியல்ல. ஏனென்றால், நீர்ப்பிடிப்புப் பகுதிகளில்தான் ஏழை விவசாயிகள் விவசாயம் செய்ய வாய்ப்பிருக்கிறது. அந்த இடங்களிலிருந்து அந்த ஏழைகளை வெளியேற்றவேண்டும் என்ற ஒரு நிலையை நிலச்சுவான்தார்களும் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படி அந்த விவசாயிகளுக்கு விவசாயம் செய்ய முடியாத ஒரு நிலை ஏற்பட்டால் அவர்களை கூலி விவசாயிகளாக மாற்றும் ஒரு நிலையை ஏற்படுத்தவேண்டும் என்பதற்காகத்தான் அந்த ஏற்பாட்டைச் செய்ய நினைக்கிறார்கள். ஆகவே, அந்த ஏழை விவசாயிகளை அந்தப் பகுதியிலிருந்து வெளியேற்ற நினைக்கிறார்கள். அது சரியல்ல. அந்தப் போக்கை அரசு கைவிடவேண்டும். அதற்குப் பதிலாக இன்று காலியாக இருக்கக்கூடிய வன இலாகா நிலங்கள் பல உள்ளன.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

அந்த இடங்களிலே காடுகளை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும், அதுதான் சரியாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11.30)

அதே போன்று, இந்த ரிசர்வ் பாரஸ்டுகளைப் பாதுகாப்பதற்கு நாம் அதிகமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். உதாரணமாக சொல்ல வேண்டுமானால், வீரபுலி ரிசர்வ்ட் பாரஸ்ட்டில் மரங்களை வெட்டி எடுத்துச் செல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. அங்கு முக்கம்பாலா, அல்பாசி போன்ற மரங்கள் போடப்பட்டு, குத்தகைக்கு கொடுக்கப்பட்டு, அவைகளை அவர்கள் அதிகமான அளவுக்கு வெட்டிச் செல்வதாகத் தகவல் வந்திருக்கிறது. இதிலே வனத் துறை அதிகாரிகளின் ஒத்துழைப்பும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட முறையிலே காடுகளை அழிப்பதற்கு, மரங்களை வெட்டிச் செல்வதைத் தடுப்பதற்கு என்ன முறையிலே நடவடிக்கைகளை எடுக்க முடியுமோ, அதை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், பழங்குடியினர் குடியேறியுள்ள பகுதிகளிலேயிருந்து வெளியேற்றுவதற்கு ஒருசில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தகவல் இருக்கிறது. அது சரியல்ல. அவர்கள் அங்கே விவசாயம் செய்வதற்கும், வாழ்க்கைத் தரத்தை அமைத்துக் கொள்வதற்கும், தகுந்த அளவிலே நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக்கொள்ள வேண்டும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் குமரி மாவட்டத்தில் மோதிரமலை, பத்து காணி, வேளாம்பிகாணி இப்படிப்பட்ட 48 பகுதிகளில் 1,500 பேர்கள் குடியேறியிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரம் எந்தவிதத்திலும் முன்னேற்றம் அடையவில்லை. ஆகவே அவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் நல்ல முறையில் வாழ்க்கைத் தரத்தை அமைத்துக்கொள்வதற்கு, வெஸ்டர்ன் காட் ஸ்கீம் கீழ் பழத் தோட்டங்கள் போட்டுச் கொடுத்தால் அதிகமான பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். அரசுக்கும் நல்ல வருமானம் கிடைக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே, கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சேஷசாயி பேப்பர் மில்லைப் பொறுத்த அளவில், அவர்களுக்கு தேவையான மூங்கில் கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறது அவர்களுக்கு காட்டு நிலத்தை குத்தகையாகக் கொடுக்கப்படும் ஒரு திட்டம் அரசின் பரிசீலனையில் இருப்பதாகத் தெரிகிறது. அது சரியல்ல. அரசே அதை எடுத்து வன இலாகா மூலம் மூங்கில்களை வளர்த்து, அவர்களுக்கு கொடுக்கவேண்டும். தவிர, இப்படி தனியார்களுக்கு வன நிலங்களைக் கொடுப்பது சரியல்ல. இது அரசுக்கு வருகின்ற வருவாயைக் குறைக்கும், அதற்குக் காரணமாக இருக்கிறது என்பதைத் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், மூங்கில், சந்தன மரம் ஆகியவைகளைக் கொண்டு அதிகமான தொழில்களை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்படித் தொழில்களை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும், அதேபோன்று, ரப்பரை உபயோகப்படுத்தி ஒரு மிகப் பெரிய டயர் தொழிற்சாலை ஏற்படுத்த தமிழகத்திலே குமரியில் வாய்ப்பிருக்கின்றது. இதிலே ரப்பர் டயரை அதிகமாக உபயோகப்படுத்தும், பிக்கஸ்ட் கன்சியூமராக அரசே இருக்கிறது. அந்த முறையிலே ரப்பரை உபயோகித்து டயர் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டும் அதேபோன்று, இந்த வன இலாகாவுக்கு பார்டர் போடக்கூடிய நேரத்திலே 75 அடி விடப்பட்டிருக்கிறது. இன்று அந்த 75 அடி நிலத்தைகூட வன இலாகா தன்னிடம் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதால் அதற்கு அருகாமையில் உள்ள ஏழை விவசாயிகள் துன்புறுத்தப் படுகிறார்கள். அது தவிர்க்கப்பட வேண்டும்.

அரசு ரப்பர் தோட்டத்தைப் பொறுத்தவரை, மொத்த வருவாய் 8.60 கோடி என்றும், அதற்குச் செலவு ரூ. 12.60 கோடி என்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நேரத்திலே,





ஒருவேளை அரசு ரப்பர் தோட்டத்திலே உள்ள தொழிலாளர்கள் போனசு கேட்பதினால், வருவாய் இல்லை என்று இந்த குறிப்பிலே இந்தக் கணக்குச் சொல்லப்படுகிறதா என்று தெரியவில்லை, ஆனால் ஒன்றை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் தோட்டத்தை அமைப்பதற்கு பல ஆயிரக்கணக்கான விலை மதிப்புடைய மரங்கள் வெட்டப் பட்டு, விற்கப்பட்டது. கேபிடல் எக்ஸ்பென்டிச்சராக வரக் கூடிய ரூ. 12.60 கோடியில் இந்த மரங்களின் கணக்கு சேர்க்கப்பட வேண்டாமா ? அரசு ரப்பர் தோட்டத்தைப் பொறுத்தவரையில் வருவாய் அதிகரிக்கப்பட்டிருக்கிறது என்று இந்தக் கொள்கைக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. 1979–80-லே 131 இலட்சமாக இருந்தது , 1981–82-ல் 2.5 கோடியாக உயர்ந்திருக்கிறது. இதற்கு அந்த உழைப்பாளர்களுடைய உழைப்பிற்கு பங்கில்லையா ? இந்தத் தொழிலாளர்களைப் பொறுத்த அளவிலே, இன்று அவர்கள் போனசு கேட்பதிலே நியாயம் இல்லையா ?

இன்று ஒன்றை தெளிவாக சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 700 கிலோ ஆவ்ரேஜ் புரொடக்ஷனாக இருக்கிற காலத்தில் 1000 கிலோ அரசு ரப்பர் தோட்டத்திலே வந்திருக்கிறது என்பதில் அரசு பெருமை அடைகிறது. அதே நேரத்தில் தனியார் தோட்டங்களில் 1,500 கிலோ ஒரு ஹெக்டேருக்கு ஆவ்ரேஜ் புரொடக்ஷனாக இருக்கிறது என்பதை அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். இன்று அரசு ரப்பர் தோட்டத்தினுடைய பராமரிப்பு முறையிலே எந்தளவிற்கு அபிவிருத்தி இருக்கவேண்டுமோ அந்தளவிற்கு இல்லை என்பதை சுட்டிக் காட்டி, அதன் காரணமாக இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை சொல்லிக்கொள்கிறேன். அரசு ரப்பர் தோட்டத்தில் அனுபவம் இல்லாதவர்கள் வேலைக்கு வந்துவிடுகிறார்கள். ரேஞ்சர்கள், பாரஸ்டர்கள் அடிக்கடி மாற்றுகிற நிலை இருக்கிறது. அனுபவம் உள்ளவர்கள் சூப்பர்வைஸ் பண்ணுகிற நிலை இல்லை. இதனால் தனியார் தோட்டங்களில் ஏற்படுகிற வளர்ச்சி இவைகளில் இல்லை. அங்கே இருக்கிற மற்றொரு பிரச்சினை என்னவென்றால், தொழிலாளர்களை பொறுத்தவரையில் ரப்பர் போர்டினுடைய உதவியோடு அவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தனியார் துறையிலே மிகப்பெரிய தோட்டமாக இருக்கிற நீவுஆம்பாடி தோட்டத்திலே தொழிலாளர்களை வேலைக்கு எடுக்கிற நேரத்தில் அவர்களுக்கு பயிற்சி கொடுக்கிற நிலை இருக்கிறது. இந்த நிலைமை அரசு தோட்டங்களிலும் கடைப்பிடிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தீ பிடிப்பது தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருகிறது. காடுகளிலே பிடிப்பது போக இப்போது பாக்டரியிலே பிடிக்கக்கூடிய நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை ஏன் ஏற்படுகிறது என்பதை அரசு தீவிரமாக பரிசீலிக்க

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1982 மார்ச் 11

வேண்டும். இதன் காரணமாக லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இதை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும்.

இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுவதால் அரசு ரப்பர் தோட்டங்களை கார்ப்பரேஷனாக மாற்றுவதற்கு ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக சொல்லவேண்டுமென்றால் போக்குவரத்து இலாக்காவை கழகங்களாக மாற்றியதற்கு பிறகு அந்தத் துறையிலே வந்திருக்கிற அபிவிருத்தியை நாம் இன்றைக்கு பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்த முறையிலே அரசு ரப்பர் தோட்டத்தை ஒரு கார்ப்பரேஷனாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்த தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுப்பதற்கு ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டும். மத்திய அரசு கூட ரெயில்வேக்கும், போஸ்டல் டெலிகிராப்ஸ்ஸில் இருக்கிற தொழிலாளர்களுக்கும் போனஸ் கொடுக்கிற நிலை வந்திருக்கிறது. இந்த நிலைதான் இன்றைக்கு சின்கோனா தோட்டத்திலே இருக்கிற பிரச்சினை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேயிலைத் தோட்டங்களில் வேலை பார்க்கிற தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்படுகிற ஊதியம் அவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. அவர்களுக்கு போனஸ் இல்லை. மருத்துவ வசதியும் போதுமான அளவிற்கு இல்லை. இந்த நிலை தான் அரசு ரப்பர் தோட்டங்களிலும் இருக்கிறது. குறிப்பாக சொல்லவேண்டுமென்றால் குத்தியார், மருதம்பாறை, காளிதேசம் போன்ற டிவிஷன்களில் இன்றும் மருத்துவ வசதி, குடிதண்ணீர் வசதி போன்றவை சரியாக இல்லை.

அதேபோல வன இலாகா ஏற்படுத்தியிருக்கிற மற்றொரு பிரச்சினை. சிலாட்டர் மரங்களை வெட்டிச் செல்வதிலே இன்று சில தடங்கலை ஏற்படுத்தியிருக்கிறது. இதன் காரணமாக ஏழை நடுத்தர மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய மரங்கள் 20, 30 வருடங்களுக்கு பிறகு வெட்டி எடுத்துச் செல்ல முடியாத நிலை. விறகு என்றால் வெட்டுவதற்கு ஏழைகளுக்கு அனுமதி கொடுத்து அதை வன இலாக்கா வாங்கி டெப்போக்கள் வழியாக அனுப்பினால் இன்றைக்கு விறகுக்கு ஏற்பட்டிருக்கிற தேவை நிவர்த்தி செய்கிற வகையிலே நடவடிக்கை எடுத்துக் கொள்வோம் என்றால், மக்களுக்கு விறகு கிடைப்பதற்கும், சிலருக்கு வேலை கிடைப்பதற்கும் வழி ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் 1980—81-ல், 1981—82-ல் உள்ள குறிப்புகளில் மயிலார் கம் ரப்பர் பாக்டரி அமைப்பதாக சொல்லப்பட்டிருந்தது. ஆனால் இந்த வருடத்தில் அந்த குறிப்புகள் இல்லை. மத்திய அரசு அனுமதி வழங்கவில்லை என்று கேள்விப்படுகிறேன். மத்திய அரசிடம் அந்த அனுமதியை பெற நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1982 மார்ச்சு 11] [திரு ஜே. ஹேமச்சந்திரன்]

(முற்பகல் 11-40)

அதேபோன்று மத்திய அரசிடமிருந்து அக்ரிகல்சர் ரிசர்ச் சென்டருக்கும், ரப்பர் பொருள் பற்றிய ரிசர்ச் சென்டருக்கும் வன இலாகாவிடமிருந்து இடம் கேட்கப்பட்டிருக்கிறது என்று தகவல். இந்த இரண்டும் அதிகமான உற்பத்தியைப் பெருக்குவதற்கும் விவசாயிகளுக்கு உதவி செய்யக்கூடிய முறையிலே இருக்கிறது. ரப்பர் ரிசர்ச் சென்டர் அரசு ரப்பர் தோட்டத்திற்கும்உதவியாக இருக்கும் என்பதாலும் வன இலாகாவிலே இடம் கொடுக்க வேண்டுமென்று நான் மக்கள் சார்பிலே கேட்டுக் கொள்கிறேன்.

அறநிலையத்துறையைப் பொறுத்தவரையில் ஒரு விஷயத்தைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். குத்தகை பாக்கிகளை ஏழை விவசாயிகளிடமிருந்து துன்புறுத்தி வசூலிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஏழை விவசாயிகளிடமிருந்து வசூலிப்பது என்பதை கைவிடவேண்டும், அதை கேன்சல் செய்யவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்சினை. அறங்காவலர் குழுவிலே ஆளுங்கட்சியினுடைய ஆதிக்கமே பல வருடங்களாக இருக்கின்றது. அரசியல் ரீதியாக ஆளுங்கட்சியினுடைய ஆட்களைப் போடக்கூடிய முறையை மாற்றி அவர்கள் அட்மினிஸ்ட்ரேஷன் செய்கிறவர்களாக இருக்கவேண்டுமென்ற முறையிலே பார்த்து இந்து மதத்திலே பக்தியிருக்கிறவர்களாகப் பார்த்து அவைகளை பராமரிக்கக் கூடியவர்களைப் பார்த்து பாகுபாடு இல்லாமல் டிஸ்கிரிமினேஷன் இல்லாமல், போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பரம்பரை முறை இருக்கக்கூடிய முறையே ஒழிக்கவேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆலயங்களிலே உள்ள கணக்குகளை சரியான முறையிலே தணிக்கை செய்து வெளியிடக்கூடிய நிலைமை மிகக் கம்மியாக இருக்கிறது. கணக்குகளை தணிக்கை செய்து வெளியிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நியமனங்களைப் பொறுத்தவரையிலே தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட மக்களுக்கு 18 சதவீதம் ஒதுக்கீடு அந்த இலாகாவிலே இல்லை என்று தெரிகிறது. அந்த இலாகாவிலே அவர்களுக்கு 18 சத வீதம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஊழல் அந்த இலாகாவில் அதிகமாக நடக்கிறது என்று தகவல். கன்னியாகுமரி மாவட்டத்திலே ஒரு விஷயத்தை நான் உதாரணமாக சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அங்கே இருக்கக்கூடிய அறங்காவலர்கள், அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள் அரசினுடைய விதிமுறைகளை மீறி அவர்களுக்கு வேண்டியவர்களுக்கு நியமனம் செய்து கொடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அங்கேயே அனுபவம் உள்ளவர்கள், சர்வீஸ் உள்ளவர்கள், தகுதி

யுள்ள ஊழியர்கள் எல்லாம் இருந்தும் அவர்களுக்குத்தான் புரமோஷன் கொடுக்கவேண்டுமென்று அரசின் கொள்கை இருந்தும் அவர்களைப் புறக்கணித்து வேண்டியவர்களுக்கு நியமனம் செய்து கொடுக்கிற நிலைமை இருக்கிறது. அதிலே ரொம்ப ஊழல் இருக்கிறது என்று மக்கள் பேசிக் கொள்கிறார்கள்.

அறங்காவலர் குழு, தேவஸ்வம் போர்டிலே பொறுப்பிலே உள்ள அதிகாரிகள் மத வெறியை ஊக்குவிக்கக்கூடிய மாநாடுகளிலே கலந்து கொள்ளக்கூடிய நிலைமை இருக்கிறது. அவர்கள் முன்னிலையிலேயே மதவெறியை ஊட்டக்கூடிய பேச்சுக்கள் நடந்திருப்பதாக தகவல்கள் இருக்கின்றன. தமிழகத்திலே இப்போதைய சூழ்நிலையைக் கணக்கிலே எடுத்துக்கொண்டு அப்படிப்பட்ட முறைக்கு .ஊக்கம் அளிக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கெனவே பால் கமிஷன் அறிக்கை பற்றி இந்த அவையிலே இரண்டு நாட்கள் விவாதிக்கப்பட்டது. பால் கமிஷன் அறிக்கையின் மேலே போலீஸ் நடவடிக்கைக்கு கொடுக்கப்பட்டது என்று சொல்லப்பட்டது. அந்த என்குயரி என்ன நிலையிலே எந்த ஸ்டேஜில் இருக்கிறது என்பதை அவைக்கு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்து ரிலிஜியஸ் எண்டோமெண்ட் பண்டை வைத்து பள்ளிக்கூடங்களைப் பொறுத்தவரைக்கும் மருந்தகத்தை பொறுத்தவரைக்கும் நடத்தக் கூடிய நிலைமை இருக்ப்பதைப்போல் தொழில்களை நடத்துவதற்கும்—இன்றைக்கு வேலையில்லாத் திண்டாட்டம்தான் இப்படிப்பட்ட மத வெறிக்கு, மதக் கலவரங்களுக்கு அஸ்திவாரமாக இருக்கின்ற ஒன்று என்ற முறையிலே கோயில் பண்டை தொழில்களை நடத்துவதற்கு—பயன்படுத்தினால் தமிழகத்திலே படித்தவர்கள், படிக்காதவர்கள் ஆகியவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஊழியர்களைப் பொறுத்தவரையில் கன்னியாகுமரி மாவட்டத்திலே லாஸ்ட் கிரேட் சர்வன்ட்கள் அரசு ஊழியர்களாக ஆக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திருவிதாங்கூர்-ஏகாச்சி ராஜ்யத்திலே தேவஸ்வம் டிபார்ட்மெண்டிலே அவர்கள் ஏற்கெனவே ஊழியர்களாக இருந்தவர்கள். சுற்றுலாத்துறையைப் பொறுத்தவரையில் தற்போது பணக்காரர்களுக்கு வசதிகானவர்களுக்குத்தான் அவர்கள்தான் அனுபவிக்க முடியும்யன்ற நிலைமை இருக்கிறது.அதை மாற்றி ஏழைகளுக்கும், நடுத்எர மக்களுக்கும் சுற்றுலாவின் அனுபவம் கிடைக்கும் முறையிலே அதை என்ஜாய் பண்ணும் முறையிலே அவர்களுக்கு மலிவான தன்செஷன் ரேட்டிலே என்னென்ன உதவிகள் வேண்டுமென்று





கவனித்து, சுற்றுலாத் தலங்களை அமைத்துக் கொடுத்து, தங்குவதற்கான வசதிகளை செய்து கொடுக்க சுற்றுலா இலாக்கா முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாகப்பட்டினத்தை ஒரு சுற்றுலாத் தலமாக மாற்றுவதற்கு எல்லா வாய்ப்புகளும் இருக்கின்றன. வேளாங்கண்ணி, சிக்கல், நாகூர் போன்ற இடங்களைச் சேர்த்து நாகப்பட்டினத்தை ஒரு சுற்றுலாத் தலமாக மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ள பேச்சிப் பாறை அணை இருக்கும் இடம் அழகான இடம். இப்படிப் பட்ட இடத்தை ஒரு சுற்றுலாத் தலமாக மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று வால்பாறையில் எல்லா இடங்களையும் சேர்த்து அமைத்து சுற்றுலாத் தலமாக மாற்றுவதற்கு வாய்ப்பிருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்த வரையிலும் அதிகமான டிமாண்ட் இருக்கும் பொருள் பாம் ஆயில். பாமாயிலைப் பொறுத்தவரையிலும் ஆயில் பாம் பிளாண்டேஷன் வைப்பதற்காக மத்திய அரசினுடைய உதவியுடன் நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது என்று தெரிய வருகிறது. ஆகவே, ரெட் ஆயில் பாம்பிளான்டேஷன் வைப்பதற்கு வன இலாக்கா ஒத்துழைத்தால்தான் முடியும் என்ற நிலையிருக்கிறது. 1980ஆம் வருஷம் நவம்பர் மாதத்தில் மத்திய அரசால் இயற்றப்பட்ட ந்தச் சட்டத்தைப் பொறுத்த அளவில் இன்று விஞ்ஞானிகளிடையே அந்தச் சட்டம் சரியல்ல என்று கருத்துக்கள் ஏற்பட்டிருக்கிறது. பல முறையிலே உள்ள, உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமேயானால்,

In international Standards the Indian council of Research Centre,

—ஒரு ஆராய்ச்சி நிலையத்தை அமைப்பதற்காக பல இடங்களைத் தேடி அவர்களுக்கு இடம் கிடைக்காமல் இன்று வன இலாக்காவிடம் வரப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு அப்படிப்பட்ட வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால் எங்கள் மாவட்டத்திலே ஒரு நீர்ப்பாசனத் திட்டம் இப்பொழுது அரசால் கொடுக்கப்பட்டிருக்கிறது. திருப்பரப்பு, எக்ஸ்டென்ஷன் ஸ்கீம் என்று. அதற்கும் அரசுக்கு இந்த நேரத்திலே நன்றியைக் கூறிக் கொள்கிறேன். அதே நேரத்தில் இப்படிப் பட்ட நடவடிக்கைகளின் வழியாக விவசாயிகளுக்கு அதிக லாபம் கிடைக்க வேண்டுமென்றால் வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள் வர வேண்டும். அப்படி வேளாண்மை ஆராய்ச்சிக்கு நிலையங்கள் வருவதற்கு இண்டர் நேஷனல் அந்த ஹில் சென்டரிலே

மத்திய அரசே ஒரு ஆராய்ச்சி நிலையத்தை அமைப்பதற்கு முன் வந்திருக்கும் நேரத்திலே வன இலாக்கா, தமிழகத்திற்குக் கிடைக்கக் கூடிய ஒரு பிரத்தியேகமான நல்ல சந்தர்ப்பத்தை நழுவ விடக்கூடாது, அதற்கான இடத்தை கொடுப்பதற்கு வன இலாக்கா முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்ததற்காக நன்றி கூறி முடிக்கிறேன்.

திரு ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் ரவர்கள் கொண்டு வந்துள்ள இந்து சமய அறக்கட்டளைகள் மற்றும் காட்டு வனத்துறை மானியத்தின்மீது பேச வாய்ப்பளித் தமைக்காக நன்றி கூறி என்னுடைய உரையைத் துவக்குகிறேன்

நமது மாநிலத்தில் சுவீடன் நாட்டைச் சேர்ந்த அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் நிதி உதவியுடன் 1981ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நாளிலிருந்து நிறைவேற்றப்பட்டு வருகின்ற சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தை முழு மனதுடன் வரவேற்கிறேன்.

மேலும், 1948ஆம் ஆண்டு ஜமீன்தாரி நிலம் ஒழிப்பின் விளை வாக சில குடியானவர்களுக்கு இனாம் பட்டா வழங்கப்பட வில்லை என்று தெரிகிறது. இதை மாண்புமிகு வருவாய்த் துறை அசைச்சரவர்களும், மாண்புமிகு அறநிலையத் துறை அமைச் சரவர்களுக்கும் கவனித்து ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள் கிறேன்.

இந்து சமய அறக்கட்டளைகள் சம்பந்தப்பட்ட ஒரு கருத்தை சொல்ல விரும்புகிறேன். அதாவது, அண்மையிலே களவாடப் பட்ட நமது பண்டைக் காலத்துக் கோயில் சிலைகள் அமெரிக்கா வில் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.எவ்வளவோ கட்டுக் காவல் இருந்தும் அதையெல்லாம் மீறி இவ்வாறு சிலைகளை, நமது பண்டைக் காலச் செல்வங்களை, விலைமதிப்பற்றப் படைப்புக்களை இவ்விதம் திருடியவர்களுக்கு எவ்விதக் கொடிய தண்டனை கொடுத்தாலும் தகும் என்பது என் கருத்தாகும்.

அதோடு மட்டுமல்ல, திருடப்பட்டுள்ள சிலைகள் இந்துக்கள் வழிபடும் தெய்வங்களின் திருச்சிலைகளாகும். அவ்வாறு வழி படுகின்ற தெய்வச் சிலைகளைத் திருடுகின்ற ஆட்களுக்கு மிக அதிக பட்சத் தண்டனையை, ஏன், மரண தண்டனையே கொடுத் தாலும் பரவாயில்லை என்பது என் கருத்து. இதை அரசு ஆழ்ந்து பரிசிலனை செய்து இவ்வாறு தண்டனையை உயர்த்துவ தற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் எனது கம்பம் தொகுதியிலே குமுளிப் பகுதியிலே கேரளா பார்டரிலே சுரங்கனார் பகுதியிலே கிட்டத்தட்ட இரு நூறு ஏழைக் குடும்பங்கள் 14 ஆண்டுகளுக்கு முன்பே அங்கே குடியேறி அவர்காகவே விவசாயம் செய்து ஒரு நல்ல நிலைக்கு அந்த இடத்தைளக்கா ண்டுவந்திருக்கிறார்கள்.





அங்கே பல ஜாதி மரங்களைப் பயிரிட்டு வருகிறார்கள். மேலும் கரும்பு, மிளகு, ஏலம், கப்பை போன்ற பலன் தரக் கூடிய பயிர்களைப் பயிரிட்டு ஜீவனம் செய்து வருகிறார்கள். மேலும். எல்லைப் பகுதியாக இருக்கிற அவ்விடத்தில் அவர்கள் எல்லைக் காவலர்களாகவும் இருக்கிறார்கள். இந்த வன இலாகாவினர் அங்கே சர்வே செய்வது போன்ற பல காரியங்களிலே ஈடுபட்டு அவர்களுக்கு சில தொல்லைகளைக் கொடுத்து, அவர்களை வெளியேற்றும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 14 ஆண்டுகளாக அங்கே குடி யிருக்கும் அந்த ஏழை, எளியவர்களுக்கு வாழ்வளிக்கும் வகை யிலே, அவர்களுக்குப் பட்டா அளித்தோ அல்லது, நீண்ட காலக் குத்தகை கொடுத்தோ, அந்த நிலங்களை அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-50.)

மேலும், மதுரை மாவட்டம் உத்தமபாளையம் மேகமலைப் பகுதி கூத்தநாச்சியம்மன் ஏரியாவில் ஏலம் பயிரிடுவதற்காக, 24—11—1978 ஆம் தேதியன்று வன இலாகாவினரால் ஏலம் விடப்பட்டது. ஏலம் எடுத்தவர்கள், உடனே பணமும் கட்டி விட்டார்கள். ஏலம் எடுத்தவர்களுக்கு 8—12—1978-ல் உத்தரவு வழங்கப்பட்டது. ஆனால், இது வரைக்கும் ஏலம் பயிரிட அவர்களுக்கு உரிமம் வழங்கப்படவில்லை. கிட்டத்தட்ட 4 ஆண்டுகள் ஆகின்றன, அவர்கள் ஏலம் எடுத்து, ஆனால், இன்னமும் உரிமம் வழங்கப்படாத நிலைமையிலே அவர்கள் மிகவும கஷ்டப்படும் நிலையிலே இருக்கிறார்கள். அதிலே, சிலர் எங்களுக்குப் பணம் திருப்பிக் கொடுத்தால் போதும் என்று சொல்கின்ற நிலைமைக்குக் கூட வந்திருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக, ஏலம் எடுத்தவர்களுக்கு ஏலம் பயிரிடும் உரிமை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள் கிறேன்.

மேலும், மதுரை மாவட்டம் கம்பம் தொகுதியில், கூடலூர் பகுதியிலே குமரிக் காடு வன இலாகாவினர் பராமரிப்பிலே இருக்கின்றது. அது கிட்டத்தட்ட 15,000 விருந்து 20,000 ஏக்கர் வரை உள்ளது. இந்தக் காடுகளைப் பல ஆண்டுகளுக்கு முன்பு ஏலம் விட்டார்கள். அதை ஏலம் எடுத்தவர்கள் பாஸ் கொடுத்து, அங்கே விறகு வெட்ட அனுமதித்தார்கள். அங்கே அப்படி விறகு வெட்டிப் பிழைத்தவர்கள் கிட்டத்தட்ட 100 குடும்பங்கள் இருந்தன. ஆனால், இன்று கிட்டத்தட்ட 2,000 குடும்பங்கள் விறகு வெட்டிப் பிழைப்பதையே தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மாற்றுத் தொழில் இல்லை. எனவே, இந்தக் குமரிக் காட்டை அந்த ஏழை, எளியவர்களுக்கு 5 ஏக்கர் வீதம் நீண்ட காலக் குத்தகைக்கு கொடுத்து அவர்கள் வாழ்வை ஒளி மயமாக்கித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அறநிலையத் துறையைப் பொறுத்த வரையில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்தவுடன் பல நல்ல சிறப்பான காரியங்களைச் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் மிகையாகாது. மேலும், பல அபிவிருத்திகள் செய்து, இன்று பல கோயில்கள் சிறப்பாக இருக்கின்றன. மேலும் வருமானமும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. மேலும், அதிகாரிகள் கோயிலுக்குப் போகும்போது நிர்வாக அதிகாரியோடு மட்டும் பேசி விட்டுப் போகாமல், அங்கங்கு உள்ள அறங்காவலர் குழுவைச் சந்தித்துப் பல ஆக்கபூர்வமான ஆலோசனைகள் செய்து, கோவிலை அபிவிருத்தி செய்யவும், வருமானத்தைப் பெருக்கவும் யோசனை சொல்ல வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்ல விரும்புகிறேன்.

கோவில்களிலே, தமிழாசிரியர்களுக்கு வேலை வாய்ப்பளித்தமைக்கு இந்த அரசை மனதாரப் பாராட்டுகிறேன். ஆனால், அவர்களுக்கு ரூ. 165 தான் மாதம் கொடுக்கப்படுகிறது. அதைச் சற்று உயர்த்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். கோவில் நிலங்கள் முழுவதையும் அரசு எடுத்து, நிலம் இல்லாத ஏழைகளுக்குக் குத்தகைக்குத்தர வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

கம்பம் ஸ்ரீகாசி விசுவநாத கம்பராயர் திருக்கோவில் சிறப்பு வாய்ந்த, தொன்மை வாய்ந்த ஒரு கோவிலாகும். ஆனால், அந்தக் கோவில் இப்பொழுது ஏழ்மை நிலைமையிலே உள்ளது. அந்தக் கோவிலுக்குச் சொந்தமாக கடைகள் அதிகமாக இருந்தாலும் அந்தக் கடையை வைத்திருப்பவர்கள் வாடகை தர மறுக்கிறார்கள். காரணம், 4, 5 ஆண்டுக்காலமாகி இன்னும் அந்தக் கோவிலுக்கு வாடகை நிர்ணயம் செய்யவில்லை. எனவே, அரசு அந்தக் கடைகளுடைய வாடகையை நிர்ணயம் செய்ய உடனடியாக உத்தரவிட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். இவ்வளவு பிரசித்திப் பெற்ற கோவிலை சுற்றி காம்பவுண்டு சுவர் இல்லாத ஒரு நிலைமை உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் கோவிலுக்குக் காம்பவுண்டு சுவர் கட்டுவதற்கு கணிசமான தொகை அளிப்பதோடு, ஒரு கல்யாண மண்டபம் கட்டித்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், குமுளி நீர்வீழ்ச்சியிலுள்ள விபூதி குகைக்கு அருகிலே ஒரு முருகன் கோவில் மிகவும் இயற்கையான சூழ்நிலையிலே அமைந்துள்ளது. அந்தக் கோவிலின் மேலே பாறையினாலே கூரை வேயப்பட்டது போல் ஒரு அற்புதமான காட்சி இருக்கிறது. அந்தக் கோவிலன் மேலே ஒரு நீர்வீழ்ச்சி இருக்கிறது. அந்த நீர் வீழ்ச்சி அந்தச் சிலையின் முன்னாலே விழுவது உண்மையிலே ஒரு அற்புதமான காட்சி. அந்தக் கோவிலை இப்பொழுது அரசு எடுத்திருப்பதாக நான் அறிகிறேன். அந்தக் கோவிலுக்குப் பல நல்ல அபிவிருத்தி செய்து, அதிகமான நிதியை ஒதுக்கி





அந்தக் கோவிலை மிகவும் சிறப்படையச் செய்வீர்களானால், அதுவும் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சாமி கோவிலைப் போலவும், திருத்தணி கோவிலைப் போலவும் மிகவும் சிறப்பாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

அப்படி அந்தக் கோவிலில் ஒரு அபிவிருத்தி ஏற்பட்டால் அங்கே உள்ள ஏழை எளிய மக்களுக்கு கல்லூரி மற்றும் சமூக ஸ்தாபனங்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது என்பதை மனதிலே கொண்டு அந்தக் கோவிலுக்கு அதிக நிதி உதவி அளிக்க வேண்டும் என்று கேட்டு, அந்தக் கோவிலை மேலும் சிறப்படையச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் கண்ணகி கோவில் பற்றி கேரள அரசுடன் பேச்சு நடத்தி அது நமது என்பதை உறுதிப் படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தக் கோவிலில் நமது என்பதற்கு பல சான்றுகள் இருக்கின்றது என்பது அனைவருக்கும் தெரியும். அதை நமது என்று உறுதிப் படுத்தி, அந்தக் கோவிலுக்கு அதிக நிதி உதவி அளித்துப் பல அபிவிருத்தித் திட்டங்களை ஏற்படுத்தி அந்தக் கோவிலின் சிறப்பை வெளி உலகத்திற்கு காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, நமது மாநிலத்தில் இருந்து அந்தக் கோவிலுக்குக் போகின்ற வகையிலே நல்ல, உறுதியான பெரிய சாலை ஒன்றைப் போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் கம்பம் தொகுதியில் உள்ள சிறப்புடைய சுருளி நீர்வீழ்ச்சி பச்சைகுமாச்சி நகரியத்தையும் வெகு விரைவில் சுற்றுலா மையமாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் கம்பம் நகரிலே இது வரையில் சுற்றுலா பயணிகள் வந்து தங்கும் விடுதிகள் இல்லை. அருகிலே தேக்கடி, இருக்கிறது. சுருளி நீர்வீழ்ச்சி இருக்கின்றது, கண்ணகி கோவில் இருக்கின்றது. அதைப் பார்க்க நாள் தோறும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வந்து கொண்டே இருக்கிறார்கள். எனவே சுற்றுலா பயணிகள் வந்து கொண்டே இருக்கிறார்கள். எனவே கம்பம் நகரில் சுற்றுலா பயணிகள் விடுதியைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று, பாராட்டி அமைகிறேன்.

திரு. ஏ. டி. கருப்பையா : பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த நேரத்திலே உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நான் பேச விழைகிறேன். அறநிலையத் துறை, சின்சோனாத் துறை, வனம், சுற்றுலா சம்பந்தமாக 16,19,93,000 நிதி கேட்டிருக்கிறீர்கள். அதிலே இன்று அறக்கட்டளைச் சம்பந்தமாக 2,21,79,000 நிதி ஒதுக்கும்படி கேட்டிருக்கிறார்கள்.

[திரு. ஏ. டி. கருப்பையா] [1982 மார்ச் 11

நான் கேட்டுக் கொள்கிறேன். கோவில் சம்பந்தப் பட்ட வரையில், கூடாது என்பதல்ல, அதிலே சில கொள்ளையர்கள் குடியேறிவிடக் கூடாது என்பதிலே அமைச்சர் அவர்கள் கண் காணிப்போடு இருக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். காரணம் இடையிலே பல நிகழ்ச்சிகள் நடந்து விட்டது என்பதைச் சொல்லக் கடமைப் பட்டவனாக இருக்க முடியாது, காரணம் அதற்குக் கமிஷன் இருக்கின்றது. வேறு சில நடவடிக்கைகள் இருக்கின்றன. அதே நேரத்தில் கோவில் களுக்குச் சொந்தமான லட்சக்கணக்கான நிலங்கள் இன்றைக்கு இருக்கின்றன என்பது அமைச்சர் அவர்களுடைய அறிக்கையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

அந்த நிலங்களிலே விவசாயம் செய்து கொண்டு இருக்கக் கூடிய சாதாரண ஏழை மக்கள், அரிசன மக்கள், பிற்படுத்தப் பட்ட மக்கள் இன்றைக்கு குத்தகைக்கு விவசாயம் செய்து கொண்டு இருக்கும் போது அவர்கள் குத்தகைத் தொகையைக் கூட கட்ட முடியாத சூழ்நிலையில் நெருக்கடியில் இருக்கிறார்கள், என்பது அமைச்சருக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். இந்த விவசாயிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படாமல், அவர்கள் நீண்ட தவணைகளில் அவர்கள் செலுத்த வேண்டிய குத்தகை பாக்கிகளை வசூலிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். ஒரு குறிப்பிட்ட தொகையை நீண்ட கால தவணையில் வசூலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வ தோடு மட்டுமல்லாமல் அந்தக் கோவில் நிலங்களில் விவசாயம் செய்து கொண்டிருக்கின்ற அந்த ஏழை மக்களுக்கு அந்த நிலங் களை ஒப்படைக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள் கிறேன்.

சின்கோனா சம்பந்தமாக 2,45,81,000 ரூபாய் நிதி ஒதுக்கக் கேட்டிருக்கிறார்கள்.

(நண்பகல் 12—00.)

நான் கேட்டுக்கொள்கிறேன். சின்கோனாத் துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கும் சாதாரண ஏழைத் தொழிலாளர் கள் பற்றி சென்ற ஆண்டு நான் குறிப்பிட்டேன். அப்போது 2,000 நிரந்தரத் தொழிலாளர்களும் 2,200 டெம்பரரி தொழி லாளர்களும் இருந்தார்கள். இது சென்ற ஆண்டு கணக்கு. இன்றைக்கும் அதே அளவில்தான் இருக்கிறார்கள். 2,000 நிரந்தரத் தொழிலாளர்கள்தான் இருக்கிறார்கள். ஆனால் டெம்பரரி தொழிலாளர்கள் 2,200 பேர் இருந்த இடத்தில் இந்த ஆண்டு 1,030 பேர்கள்தான் இருக்கிறார்கள். அவர் களுடைய எண்ணிக்கை குறைக்கப்பட்டிருக்கிறது. நான் அதிக மான தொழிலாளர்களை நியமிக்க வேண்டுமென்று சொன்னேன். ஆனால் அவர்களுடைய எண்ணிக்கை குறைக்கப்பட்டிருக்கிறது.



1982 மார்ச் 11] [திரு ஏ. டி. கருப்பையா]

அங்கே இருக்கிற நிரந்தரத் தொழிலாளர்களின் வாரிசுதாரர் களை, அவர்களுடைய வயது வந்த பிள்ளைகளை, ஆண்களையும், பெண்களையும் பதிவு செய்ய வேண்டுமென்று சென்ற ஆண்டு கேட்டுக் கொண்டேன். அப்படி பதிவு செய்ததாகத் தெரிய வில்லை. அதற்குப் பதிலாக இருந்த தொழிலாளர்கள் குறைக் கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த அறிக்கையின் மூலம் தெரிந்துகொள்ள முடிகிறது.

அதேநேரத்தில் சின்கோனாத் துறையில் என்ன உற்பத்திச் செய்கிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்த நாட்டின் நலனைக் கருதி, அங்கே கர்ப்பத்தடை மாத்திரை களை உற்பத்திச் செய்கிறார்கள். அந்த மாத்திரைகள் நம் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின் றன. அதன் மூலமாக அந்நியச் செலவாணி நம் நாட்டிற்குக் கிடைக்கிறது என்று சொல்லும்போது அந்தத் தொழிலாளர் களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆகவே அந்தத் தொழிலை மேலும் வளர்ப்பதிலே அக்கறையோடு கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. இரண்டு நாட்களுக்கு முன்னால்கூட பொருட்காட்சியிலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இனாமாக மணம் கமழும் வாசனைத் திரவியங்களைக் கொடுத்தார்களே, அந்தத் தைலங்கள் யாரால் செய்யப்படுகிறது ? அதை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் அன்போடு பெற்றுக்கொண் டார்கள் என்று கருதுகிறேன். அது யாருடைய கரத்தால் உற்பத்திச் செய்யப்படுகிறது என்றால் சின்கோனாத் துறையில் இருக்கிற அந்த சாதாரண தொழிலாளர்களுடைய கரங்களால்தான் இப்படிப்பட்ட நறுமணம் கமழக்கூடிய சிறந்த வாசனைத் திர வியங்களை அவர்கள் தயார் செய்கிறார்கள். அவர்களுக்கு என்ன சம்பளம் தெரியுமா ? 8 ரூபாய் 29 காசுகள். இது நியாயம்தானா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமல்ல. அவர்கள் உற்பத்திச் செய்கின்ற பொருட் களால் வெளிநாட்டுச் செலவாணியை நாம் உள்நாட்டுக்குக் கொண்டுவர முடிகிறது. அப்படிப்பட்ட மருந்துப் பொருட் களை உற்பத்திச் செய்கின்ற தொழிலாளர்களுக்குச் சம்பளம் 8 ரூபாய் 29 காசுகள் என்று சொல்லும்போது நான் வேதனைப் படுகிறேன். காரணம் நானும் ஒரு தொழிலாளி. ஒரு தொழி லாளியின் நிலை இன்னொரு தொழிலாளிக்குத்தான் தெரியும். அதேநேரத்தில் பக்கத்தில் இருக்கிற பிர்லா கம்பெனி, டீ கம் பெனிகளில் இருக்கிற தொழிலாளர்களுக்கு 11 ரூபாய் 62 காசு சம்பளம் கொடுக்கிறார்கள், என்பதை எண்ணிப்பார்க்கும்போது இது நியாயத்திற்கு அப்பாற்பட்டது. நேர்மைக்கு அப்பாற் பட்டது, சட்டத்திற்கு விரோதமானது என்பதைத் தெரிவித்து, அவர்களுக்கும் அந்த அளவுக்குச் சம்பளத்தை உயர்த்த வேண்டு

மென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். சம்பளத்தை உயர்த்திக்கொடுத்து மேலும் அந்தத் தொழிலை அவர்கள் நல்ல முறையில் செய்வதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. அவர்களுக்கு போனசே கொடுப்பதில்லை. தொழிலாளர்களுடைய நலனுக்காக எல்லாவிதமான சட்டங்களும் செயல் படுத்தப்படும் என்று சொல்கிறார்கள். அறிக்கையில் அதைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அந்தத் தொழிலாளர்களுக்கு இதுவரை போனஸ் கொடுக்கப்படவில்லை. ஏன் கொடுக்க வில்லை என்று தெரிய வில்லை. சட்டத்தில் இடம் இருக்கிறது. இலாபம் என்றாலும் நஷ்டம் என்றாலும் குறைந்த பட்ச போனஸ் 8.33 சதவீதம் கொடுக்க வேண்டுமென்று சட்டம் இருக்கும்போது அவர்களுக்கு ஏன் கொடுக்கக்கூடாது என்று கேட்கிறேன். அவர்களுக்கு பல்வேறு சலுகைகளையும் செய்து கொடுத்து, சம்பளத்தையும் உயர்த்திக் கொடுத்து, போனசும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டு மல்ல. அங்கே அரசு உயர்நிலைப் பள்ளி ஒன்று இருக்கிறது. அந்தப் பள்ளியைப்பற்றி நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அதை விரிவு படுத்தி, அந்தப் பள்ளிக்கான பல்வேறு உதவிகளையும் செய்து கொடுத்து, அந்தத் தொழிலாளர்களுடைய குழந்தைகள் நல்லமுறையில் படிப்பதற்கு தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சின்கோனாத் துறையிலே பணிபுரியும் தொழிலாளர்களைப் பொறுத்தமட்டிலே வால்பாறைப்பகுதியிலே அவர்களுடைய குழந்தைகள் 7 மைல் துாரத்தில் இருக்கின்ற பள்ளிக்கு வந்து படிக்க வேண்டி இருக்கிறது. அந்தத் தொழிலாளர்களின் குழந்தைகள், அதிகாரிகளுடைய குழந்தைகள், அரசு ஊழியர்களின் குழந்தைகள் ஆகிய எல்லோரும் பள்ளிக்கு வரவேண்டிய நிலைமை இருப்பதால் அந்தக் குழந்தைகளுக்கு பஸ் பாஸ் இனாமாகக் கொடுக்க வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வனம். வனம் சம்பந்தப்பட்ட வகையிலே ஒதுக்கப்பட்ட தொகை 9,31,58,000 ரூபாய். நான் சென்ற கூட்டத்திலே கூட வனங்கள் அழிக்கப்படுகின்றது, ஒழிக்கப்படுகின்றது என்பது பற்றிச் சொன்னேன். அது கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கப்பட்டு வருகின்றது. அது தடுக்கப்படவில்லை என்றால், அதற்காகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால் வனங்கள் அழிந்து விடும், அப்படி வனங்களில் உள்ள மரங்கள் எல்லாம் அழிந்து விட்டால் மழை குறைந்து விடும். அதனால் விவசாயமும் இந்த நாட்டிலே பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டு விடும். 4 மாதங்களுக்கு முன்பு கூட தர்மபுரி பகுதி



யிலே அருமையான சந்தன மரம் போன்றவற்றை வெட்டிச் செல்வதன் காரணமாக அங்கே போலீஸ்காரர்களுக்கும், வன அதிகாரிகளுக்கும் கடுமையான மோதல் ஏற்பட்டது. அதனால் அந்தப் பகுதியின் கிராமங்களிலே பெரிய ஊர்வலமும், போராட்டங்களும் நடைபெற்றன. அந்தப் பகுதியிலே பஞ்சாயத்து செய்யப்பட்டு சமாதானம் செய்யப்பட்டதற்குப் பிறகும் கூட அங்கே இப்படிப்பட்ட பிரச்சினை இருந்து வருவதாக குறிப்புகள் வந்திருக்கின்றன. இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து யானைகள் வேட்டையாடப்படுவது பற்றிய தகவல் இருக்கின்றது. வால்பாறை தொகுதியில் பன்னிமேடு என்ற எஸ்டேட் பக்கத்திலே 16 வயதுடைய ஒரு இளம் யானை இறந்து கிடந்து அழுகி நாற்றம் எடுத்து அந்தப் பகுதியிலே ஜனங்கள் நடமாடுகிறபோது அதுபற்றித் தெரிந்து அதன் தந்தத்தை எடுத்துக்கொண்டுபோய் போலீஸ் பாதுகாப்பிலே வைத்தார்கள். நானும் அந்தத் தந்தத்தைப் பார்த்தேன். அவர்கள் கூறினார்கள் இதற்கு வயது 16 இருக்கும் என்று. ஆனால் அதே நேரத்திலே அந்த யானை எப்படி இறந்தது என்பதிலே சந்தேகம் இருக்கின்றது. அது தானே இறந்ததா அல்லது கொலை செய்யப்பட்டதா என்பதைப் பற்றி அரசு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே அங்கே ஏதோ ஒரு கூட்டம் இருந்து கொண்டு யானையை வேட்டையாடி வருகின்றதா என்பதைக் கவனமாக பரிசீலனை செய்ய வேண்டும்.

அடுத்து சுற்றுலா சம்பந்தமாக 2,21,75,000 ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கின்றது. எங்களுடையவால்பாறை பகுதியிலே அருமையான இயற்கை வளங்கள் இருக்கின்றன. அணைக்கட்டுகள் ஏராளமாக இருக்கின்றன. சோலையாறு அணை இருக்கின்றது. ஆழியாறு அணை இருக்கின்றது. காடாம்பாறை அணை இருக்கின்றது. இப்போது கூட நீரேற்றும் மின் திட்டம் அங்கே கட்டப்பட்டு வருகின்றது. இப்படி இயற்கை வளங்கள் நிறைந்த அந்த மலைப் பகுதியில் பலவகையான அடர்ந்த மரங்கள் இருக்கின்றன. குரங்குகள் குளிக்கின்ற ஒரு அருமையான நீர்வீழ்ச்சி இருக்கின்றதா ? ஆகவே அந்த இடத்தினைச் சுற்றுலாத் தலமாக அமைக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டு என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்டவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

மணியாண்டிப்பட்டணம் என்ற ஊரிலே மனோன்மணி செல்லமுத்து என்ற ஒரு அம்மையார் 3 ஏக்கர் நிலத்தை அந்த ஊரிலே உள்ள உயர்நிலைப்பள்ளிக்குத் தானம் வழங்கினார்கள். அந்தப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டுவதற்காக மாவட்டக் கல்வி அலுவலர் அவர்களுடைய பரிந்துரை அனுப்பப்பட்டது. 5 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாயிலே கட்டலாம் என்று பரிந்துரை செய்யப்பட்டு அதற்கான ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டு, இது கிட்டத்

தட்ட 1975-லே தொடங்கப்பட்டது. ஆனால் இதன்மீது எந்தவிதமான முயற்சியும் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை அந்தப் பள்ளியினைக் கட்டுவதற்காக 3 ஏக்கர் நிலம் இனாமாகக் கொடுக்கப்பட்டபிறகும் கூட அந்தப் பள்ளி கட்டப்படாமல் இருப்பது வருந்தத் தக்கது. ஆகவே உடனடியாக நடவடிக்கை எடுத்து அந்தப் பள்ளிக் கூடத்தை கட்ட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் எட்டயபுரம் முன்னாள் ஜமீந்தாருக்கு பட்டா கிடைத்து உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் மிச்ச நிலமாக அறிவித்த ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் இருக்கிறது. இந்தக் காடுகள் முன்பு மேய்ச்சல் நிலங்களாக, சிறைக்காடுகளாக இருந்தன. அந்த இடங்களில் கிராமக் காடுகள் வளர்க்க திட்டம் இட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, சுற்றுலா. கொடைக்கானலுக்கு ஏராளமான வெளிநாட்டுப் பயணிகள் வருகின்றனர். அவர்களுக்கு அங்கு தங்குவதற்கு கொடைக்கானலில் ஹோட்டல் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். எனவே, கொடைக்கானலில் சுற்றுலாப் பயணிகளுக்காக சிறந்த ஒரு ஹோட்டலை அங்கே கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12·10]

திரு. த.மாரிமுத்து : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நடந்து கொண்டிருக்கின்ற இந்த மானியக் கோரிக்கையில் கலந்து கொள்கிற வாய்ப்பு அளித்தமைக்கு முதலில் நான் என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். கோவில் பணத்தையெல்லாம் கொள்ளையோ கொள்ளை என்று கொள்ளையடித்து காலம் போய் இன்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் கோவில்கள் எல்லாம் புண்ணியஸ்தலமாக போற்றி பாதுகாக்கப்பட்டு வருகின்றன. என்று நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்வேன். மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுடைய மேற்பார்வையில் இந்து சமய அறக்கட்டளைகள் நிர்வாகம் சீரும் சிறப்புமாக நடைபெற்று வருவதை பக்தர் பெருமக்கள் பாராட்டுகிறார்கள். ஆன்றோர்களும் சான்றோர்களும் பெருமைப்படுகிறார்கள். இந்த வாழ்த்தையும் வரவேற்பையும் காணப்பெறாதவர்கள் காழ்ப்புணர்ச்சி கொண்டு பொது மக்களிடம் பொல்லாங்கு பல சொல்லி அவை எடுபடாமல் போகவே நம் ஆசை நிறைவேறுமா என்று நடையாக நடந்தார்கள். அவர்கள் ஆசை கடல் அலையைப் போல் மறைந்து போனதை நாடு கண்டது.

அறங்காவலர்கள் குழுக்கள் நியமிப்பதில் கட்சி பாகுபாடு இல்லாமல் நியமிக்க வேண்டும் என்று ஒரு சில உறுப்பினர்கள் சொன்னார்கள். மதுரை மீனாட்சி அம்மன் கோவில் அறங்





காவலர் குழுவும், பழனி அறங்காவலர் குழுவும், அவற்றில் கட்சி பாகுபாடு இன்றி பொறுப்பானவர்களை இந்த அரசு நியமித்திருக்கின்றது. இவையே இருகண்கள் என சாட்சியம் அளித்துக் கொண்டிருக்கின்றது.

இன்று அறநிலையத் துறை சீரும் சிறப்புமாக நடைபெற்று வருகிறது. கோவில் பணத்தை கொள்ளையடிக்காத அரசு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு. மருதமலை உண்டியலை காப்பாற்றும்அரசு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு. கோவில் சிலைகளைக் காப்பாற்றுகின்ற அரசு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு. கும்பாபிஷேகம் என்ற பெயரிலே கொள்ளையடிக்காத அரசு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு. கோவில் நிலங்களை சொந்தமாக்கிக் கொள்ளாத அரசு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு. கோவில் நிலங்களை குறைந்த குத்தகைக்குவிட்டு கொள்ளை இலாபம் சம்பாதிக்காத அரசு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு. ஆலயங்களில் சமபந்தி போஜனம் நடத்தி ஆதி திராவிட மக்களுக்கு பெருமை தேடித் தந்த ஒரே அரசு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு. இப்படி நல்ல முறையில் நடைபெற்று வருகிற இந்தத் துறைக்கான மானியக் கோரிக்கையை வரவேற்கிறேன்.

அடுத்தபடியாக, காட்டு இலாகா, காட்டின் நல்ல வளர்ச்சியில்தான் நாட்டின் வளர்ச்சி அடங்கியிருக்கிறது. காடுகள் மக்களுக்கு பெரும் பயன் அளிக்கின்றன என்பதால் காடு வளர்ப்பதிலே காடுகளை காப்பதிலே மிகுந்த நாட்டம் கொண்டிருக்கிறது இந்த அரசு என்பதற்கு மாவட்ட ஆட்சியாளர்களின் தலைமையிலே அமைக்கப்பட்டுள்ள குழுவே சான்றாக விளங்குகின்றது. வனப் பரப்புகளை அதிகப்படுத்தி முறையாக நிதி ஒதுக்கீடும் செய்து பெருமளவில் வனத் தோட்டங்கள் பயிரிடப்படும், "காடு வளர்ப்பு" திட்டத்தை வரவேற்கிறேன். திருச்சி மாவட்டத்தில் நடந்த சந்தன மரத்திருட்டு சர்க்காரியா கண்டுபிடிப்பை காட்டிலும் பல மடங்கு பிரசித்தி பெற்று விளங்கியதை நாட்டு மக்கள் நன்கு அறிவர். ஆகவேதான் இன்றைய ஆட்சி வனத்துறை பாதுகாப்புக் குழுக்கள், பறக்கும் படை வனசோதனைச் சாவடிகள் ஆகிய வனப்பாதுகாப்புகளை அமைத்து கள்ளத்தனமாக மரங்களை வெட்டிக் கடத்தும்முயற்சிகளை முறியடிப்பதில் தனிக் கவனம் செலுத்தப்படுவதைப் பாராட்டுகிறேன்.

1981 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள 271 சந்தன மரத் திருட்டும் 16·18 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சந்தன மரக் கட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதும் இந்தத் துறையை மேற்கொண்டிருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய தூய்மை நிறைந்த சிறந்த நிர்வாகத்திற்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகும். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்கள்.

வனத் தோட்டங்களை வளர்த்தும் கண்போல் காத்தும் வருகின்ற இந்த அரசு வன அடிப்படைத் தொழில்களுக்கான மரக்கூழ், மிலாறு, பட்டைகள், உற்பத்திக்கான மரத் தோட்டங்களை பயிரிடும் முயற்சி பல்வேறு திட்டங்களின் கீழ் செயல் படுத்தப்பட்டுவருவதும், 1981-82-ல் 3,700 ஹெக்டேர் பரப்பில் வளர்க்கப்பட்ட மென்மரத் தோட்டங்கள் 1982-83-ல் 49 லட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில் 4,000 ஹெக்டேர் பரப்பிற்கு மேல் வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது என்பதும் திட்டமிட்ட குடும்பமே தெவிட்டாத குடும்பம் என்பதற்கேற்ப மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு திட்டமிட்ட அரசு என்று பாராட்டுவதில் பெருமைப்படுகிறேன்.

ரப்பர், முந்திரி, தேக்கு, செம்மரம், விறகு மரங்கள், ஏலக்காய் போன்ற வளர்ச்சிகளில் திட்டங்களை தீவிரப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு பழங்குடியினர் வளர்ச்சியில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டு அதற்கான மேம்பாட்டுத் திட்டங்களை செய்துவருகிறது.

திரு. கே. உச்சி: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, சின்கோனா, வனத்துறை, செய்தி, சுற்றுலாத் துறை, அறநிலையத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்த வன இலாகாவைப் பொறுத்த வரையில் நீலகிரி மாவட்டத்தில் மத்திய சர்க்காருடைய கொள்கையாகிய மூன்றில் ஒரு பங்குக்கு மேல் அங்கே காடு இருக்கிறது என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த வன இலாகாவை இந்த தமிழக அரசு மிக நல்லமுறையில் பயன்படுத்தி, அங்குள்ள தேயிலைத் தோட்டங்கள், மற்றும் உற்பத்தி செய்யக்கூடிய புதிய மரங்களை வளர்ப்பதற்கு, அவைகளைப் பாதுகாப்பு செய்வதற்கு ஏற்பாடுகள் செய்திருக்கிறது என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த வன இலாகாவில் ஏறத்தாழ கிராமப் பகுதிகளில் பார்ம் பாரஸ்ட் பகுதிகளில் ஒருசில மரங்கள் களவாடப்படுகின்றன. அங்குள்ள வாட்சர்கள், கார்டுகள் போதுமான அளவிலே இல்லை என்ற அந்தக் குறையை நான் சொல்கிறேன். இந்தக் குறையைக் களைய வேண்டும். இப்போது 2, 3கிராமங்களுக்கு ஒரு வாட்சர், கார்டு என்றிருக்கிறார்கள். அதிக அளவிலே வாட்சர்கள், கார்டுகள் போட்டால், இந்த ஒரு சில மரங்கள் திருடு போவதையும் கண்டுபிடிக்க வசதியாக இருக்கும். அதே நேரத்தில் அந்த வாட்சர்களுக்கும், கார்டுகளுக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் துப்பாக்கி கொடுத்திருப்பதையும் வண்டி வாகனங்கள் கொடுத்திருப்பதையும் நான் பாராட்டுகிறேன். துப்பாக்கி கொடுத்திருப்பதால், அங்கே மரங்களை வெட்டுவது யாராக் இருந்தாலும், அவர்களை சுடுவதற்கான அதிகாரமும் வழங்கப் படவேண்டும். நான் கேள்விப்படுகிறேன் துப்பாக்கிக் கொடுக்கப்



பட்டிருக்கின்றதே தவிர, அவர்களுக்கு சுடுவதற்கு அதிகாரம் இல்லை என்று. எனவே, அந்த அதிகாரத்தையும் அவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நீலகிரியில் இந்த வன இலாகா காடுகளிலுள்ள கற்பூர மரங்களை விஸ்கோஸ் நிறுவனத்திற்கு கான்ட்ராக்ட் கொடுக்கப் படுகிறது. ஆனால், நீலகிரியில் 11 கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. இந்தத் தொழிற்சாலைகளுக்கு எரி பொருள்களாக அந்த மரங்களைக் கொடுப்பதற்கு இந்த தமிழக அரசு, நமது ஆற்றல் மிக்க அமைச்சர் ஆர். எம். வீ. அவர்கள் வழிவகை கண்டாக வேண்டும். தேயிலைத் தொழிற்சாலைகளுக்குத் எரிபொருள்கள் எவ்வளவு அவசியம் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து இங்கே சின்கோனாவைப் பற்றிப் பேசினார்கள். உயிர் காக்கும் மருந்துகளையெல்லாம் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு இலாகா. அந்த இலாகாவினுடைய மருந்துகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய போதுமான நிலை, அதிகாரமில்லை என்றும், மத்திய சர்க்கார் பல்வேறு நேரங்களில் தடை செய்து இருப்பதாகவும் அறிகிறேன். அந்தத் தடையை தமிழக அரசு ஒவ்வொரு ஆண்டும் வற்புறுத்திக் கேட்டு, நீக்குவதாக அறிகிறேன். எனவே அந்தத் தடையை நிரந்தரமாக நீக்க அந்த உயிர் காக்கும் மருந்துகளை உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வழிவகை காணவேண்டும். அதற்கு நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களும், நமது அமைச்சர் அவர்களும் மத்திய சர்க்காரோடு போராடியாவது இந்த அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

இந்த வனத் துறை இலாகாவிலே உள்ள காடுகளில் மென் மரங்கள் வளர்க்கப்பட்டு, நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் பகுதியில் ஒரு ஒட்டுப் பலகைத் தொழிற்சாலை, இன்னும் பல்வேறு தொழிற்சாலைகளை ஏற்படுத்தித்தர இந்த அரசு முன்வந்து இருப்பதை நான் பாராட்டுகிறேன். அதற்காக, அந்த மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20).

அடுத்து நீலகிரி மாவட்டத்திலே உள்ள சில்வர் பக்ஸ் மரங்கள் வெள்ளைக்காரர்கள் காலத்திலேயிருந்து ஷெட்யூலில் சேர்க்கப் படவில்லை. ஆனால் அந்த மரங்கள் இப்போது சேர்க்கப்பட்டு உள்ளது இதை அருள்கூர்ந்து அமைச்சர் அவர்கள் நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் சாதாரண கிராமவாசிகள் 10 மரங்கள், 20 மரங்கள் என்று அவர்களுடைய தோட்டங்களிலே வைத்து வளர்த்து வருகிறார்கள். அதை வெட்டுவதிலே, கட்டிங் பெர்மிட் வாங்குவதிலே சிரமங்கள் ஏற்படுகின்றன. அந்த மரங்களை வைக்க வேண்டும், வளர்க்க வேண்டுமென்ற எண்ணத்தையே அவர்கள் விட்டுவிடுகிற ஒரு அபாயம் இருக்கிறது. அதற்கு அரசு ஒரு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. கே உச்சி] [1982 மார்ச் 11

உதகையிலே சுற்றுலாப் பயணிகளை கவரும்படி சேரிங் கிராசையும், தொட்டபெட்டாவையும் இணைக்க ஒரு ரோப்-வே வேண்டுமென்று அந்த பகுதி மக்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கல்லன் அவர்களும் இதை கேட்டுக் கொண்டிருக்கிறார். இதை அமைத்துத் தர கேட்டுக் கொள்கிறேன்.

நீலகிரியிலே கர்நாடகப் பகுதியிலே தெரியக்கூடிய டி.வி.யை பார்ப்பதற்கு டி.வி. ஸ்டேஷனை அமைக்க அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மலைப் பகுதியில் ஆடு மாடுகளை வளர்த்துக் கொண்டிருப்பவர்கள் பட்டிகளிலே அடைக்கும் போது அங்கு சாணத்தை எடுக்கும் உரிமை அப் பகுதி மக்களுக்கு கொடுக்கப்படவில்லை. அந்த உரிமையை அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நிலச் சீர்திருத்தம் செய்த காலத்தில் வெளியேற்றப்பட்டபோது கிட்டதட்ட 6,000 ஏக்கர் நிலங்கள் அரசு கையகப்படுத்தியுள்ளது. அந்த இடங்களில் மென்மரங்களை வளர்த்தால் மரத் தொழிற்சாலைகள் அதிகமாக ஏற்பட வாய்ப்பாக இருக்கும். அந்த பகுதியிலே தேயிலை தோட்டங்களில் வேலை செய்பவர்களுக்கு மத்திய அரசு ஒரு குடும்பத்திற்கு மூன்று பேர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்ற திட்டத்தை தமிழக அரசு வற்புறுத்தி இருப்பதாக அறிகிறேன். இதை மேலும் வற்புறுத்தி வேலை வாய்ப்பை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மானியக் கோரிக்கையை வரவேற்று அமர்கிறேன்.

* **திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆண்டபோது எதிர்க் கட்சி வரிசையிலே உள்ளவர்களில் ஒருவர் உங்களுடைய நாட்கள் எண்ணப்படுகிறது என்று சொன்னார். ஆனால் பேரறிஞர் அண்ணா அவர்கள், நான் அடியை அளந்து தான் வைக்கிறேன் என்று சொன்னார்கள். அதை போல தூற்றுவார் தூற்றட்டும், போற்றுவோர் போற்றட்டும் என்று ஏற்றமிகு கொள்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய காலத்திலே அமுலாக்க வேண்டுமென்று மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த இந்து சமய அறநிலைய மானியத்தை நான் வரவேற்று பேசுகிறேன்.

கடந்த கால அரசுகளை விட புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் கோவில் வருமானம் பெருகியிருப்பதோடு, பல கோவில்களுக்கு திருப்பணிகள் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. என்னைப் பொறுத்த வரையிலே சிதம்பரத்திலே, நண்பர் இளையபெருமாள் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நந்தனார் என்பவருக்கு தமிழ்நாட்டிலே கோவிலே கிடையாது. புரட்சித் தலைவருடைய ஆட்சியிலே தான் சிதம்பரத்திலே ஒரு காட்டிற்கு இடையே இருந்த நந்தனார் கோவிலை கண்டுபிடித்து அதற்கு கும்பாபிஷேகமும் நடத்த ஒரு குழுவை நியமிப்பதோடு அல்லாமல்



1982 மார்ச் 11] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

அந்த கோவிலுக்குச் செல்கிற முக்கியமான பாதையில் ஒரு தோரண வாயில் கட்ட வேண்டுமென்றும், மகாகவி வரகவி என்று சொல்லப்படுகிற வள்ளலார் இராமலிங்க அடிகளார் பிறந்த ஊரில் அருமையான நினைவு சின்னத்தை ஏற்படுத்த வேண்டுமென்றும் நம்முடைய மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறநிலையத் துறையில் பல சீர்திருத்தங்கள் கொண்டு வர வேண்டும் என்பதற்காக மாநில அளவில் ஒரு ஆலோசனைக் குழுவையும், இதன் கீழ் இன்னொரு உட்குழுவையும் அமைத்து கோவில் நிலங்களிலேயிருந்து குத்தகைதாரர்களிடமிருந்து வர வேண்டிய 16 கோடி ரூபாய் எப்படி வசூலிக்கலாம் என்றும் அது ஒரு பக்கம் இருக்க இனி எதிர்காலத்திலாவது அந்தக் குத்தகைகளை வசூலிப்பதற்காக நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக, அறிவுரை கூறுவதற்காக ஒரு உட்குழுவை நியமித்ததையும் சமயம், இனம், பேதம் இல்லாமல் அர்ச்சகர்களை நியமிப்பதற்காக ஆலோசனை கூறவேண்டும் என்று ஓய்வு பெற்ற நீதிபதி திரு. மகராஜனைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவை நியமித்து அறிக்கை பெற்றதும் சிலைகள் திருடுவதைக் கண்டுபிடித்ததோடு மட்டுமல்லாமல் கடுமையான தண்டனை கிடைப்பதற்காக சம்பந்தப்பட்ட சட்டங்களைத் திருத்துவதற்கும் பல பேர்களால் கேட்பாரற்று இருக்கின்ற அறக் கட்டளை சொத்துக்களை மைனர் சொத்துக்களை எப்படி விற்க முடியாதோ அதைப்போல் ஒரு பாதுகாப்புக் கொண்டுவர வேண்டும் என்பதற்காக அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது என்பதையும் கொண்டு வந்திருப்பது பல்வேறு சீர்திருத்தங்களின் முன்னேற்றப் பாதையில் உள்ள முக்கியமான மைல் கற்கள் ஆகும்.

நம்முடைய அறிக்கையிலே தமிழருடைய நாகரீகம், பண்பாடு, கலாச்சாரம் ஆகியவைகளைக் கட்டிக்காக்கும் கருவூலங்களாக கோயில்கள் திகழ்கின்றன. அதை தொடர்ந்து இந்த அரசு அமலாக்குவதற்கு பாடுபடும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். நேற்றைக்கு முதல் நாள் புவனகிரித் தொகுதியில் கிள்ளை பேரூரில் இந்து மூஸ்லீம் ஒற்றுமையை நினைவுபடுத்துவதற்காக ஷேக் சின்ன மௌலானா என்ற பெரிய நாதஸ்வர வித்வானை வரவழைத்து கவி க. மு. ஷெரீப்பையும் வரவழைத்து அங்கு பெரிய சிறப்பான நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்த மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களையும், புரட்சித் தலைவர் அரசையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தியாவின் வட புலங்களிலே மசூதிக்குப் பக்கத்திலே யாராவது தாரை தப்பட்டை ஊதினால், மேளம் வாசித்தால் நாதஸ்வரம் வாசித்தால் உடனே கலவரம் ஏற்படும். இதுவரை கலவரங்கள் சம்பந்தமாக ஏற்படுத்திய விசாரணைக் கமிஷன்கள் அப்படித்தான் ரிப்போர்டில் கொடுத்திருக்கின்றன. ஆனால்

கிள்ளைக்குப் பக்கத்திலே உள்ள தர்க்காவிலே மகான் சுத்தாரி அடக்கமாகி இருக்கிற அந்த மசூதிக்கு எதிரே திருமுட்டத்தைச் சேர்ந்த பெருமாள் வந்து இருந்ததும் அந்த திருமுட்டப் பெருமாள் சாமிக்கு சூட்டப்பட்ட மாலையை எடுத்து அந்த தர்க்காவில் கொண்டு போய் அந்தப் பெருமாளினுடைய அர்ச்சகர் அய்யங்கார் போட்டதும் சர்க்கரை வைத்து பாத்தியா ஓதுவதும் அதைப் பலபேர் கண்டு களித்ததும் தர்க்காவிற்கு நாதஸ்வரம், தாரை, தப்பட்டை, நகடா போன்ற பல்வேறு வாத்தியங்களை முழங்கிக் கொண்டு முஸ்லீம் பெருமக்கள் உள்ள 2, 3 வீதிகளில் வந்ததையும் அதை முஸ்லீம்கள் பார்த்து அமைதியாக மகிழ்ந்ததும் வேறு எங்கும் இந்தியாவில் நடக்காத நிகழ்ச்சி. ஆகவே இந்திய ஒருமைப்பாட்டை நிலைநாட்டுவதற்கு அதை முக்கியமான ஒரு நிகழ்ச்சியாக ஏற்பாடு செய்து தொடர்ந்து நடத்த வேண்டுமென்ற முறையிலே சிறப்பாக அந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தார்கள். அது போன்ற நிகழ்ச்சிகள் நடப்பது மட்டுமல்லாமல் சிதம்பரத்தைப் பொறுத்த வரையில் ஒரு சீர்திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கல்லன் பேசுகின்ற போது சிதம்பரத்தைப் பொறுத்த வரையில் வழக்குக்கு அப்பீல் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சமர்ப்பித்த அறிக்கையிலே ஒரு மடத்தைப் பொறுத்தவரையில் 4 கோடி ரூபாய் பாழாக்கப்பட்டிருக்கிறது. ஆண்டு வருமானம் 49 இலட்சம் ரூபாய் உள்ள அந்த மடம் போன்ற பல மடங்களை சர்க்கார் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு சென்ற ஆண்டு கொண்டுவரப்பட்ட அந்தச் சட்டமுன்வடிவு 64 ஆம் எண்ணுள்ள சட்டத்தை இதுவரை மத்திய சர்க்கார் அனுமதிக்காமல் இருக்கிறது. அந்தக் குறிப்பிட்ட மடம் மாத்திரம் 4 கோடி ரூபாய் பாழடிக்கக் கூடிய அந்த மடம் சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட்டுக்குப் போய் அதற்குச் சாதகம் இல்லையென்றவுடன் மேலுரிட்டுக்கு மேல் அப்பீல் செய்து நிலுவையில் இருக்கிறது என்று சொன்னார்கள். அந்தக் காலத்திலே சொல்வார்கள், அரசு அன்று கொல்லும், ஆண்டவன் நின்று கொல்லும் என்று. இன்றைக்கு நடைபெறுகின்ற நிலைமையைப் பார்த்தால் எதற்கெடுத்தாலும் ஸ்டே கொடுப்பதும் அப்பீலுக்கு மேல் அப்பீல் போவதும் முன்னேற்றமான பல சட்டங்கள் அமலாக்கப்படாமல் தடைப்படுத்தப்படுவதும் நித்திய நிகழ்ச்சியாக இருக்கின்றது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். அது மாத்திரமல்ல பல்வேறு ஊர்களிலே கேட்பாரற்று ஹெர்டிட்டரி டிரஸ்டி என்ற பெயரால் அறக்கட்டளைகளுக்குப் பாத்தியமான பல்வேறு சொத்துக்கள், தர்மங்கள் சீராகச் செய்யப்படாமல் பாழாகிக் கொண்டிருக்கின்றன. மாதம் 75 ரூபாய் 100 ரூபாய் என்று சொற்ப குத்தகைக்கு வாடகைக்கு வாங்கிக் கொண்டு பலமுள்ளவர்கள் அந்த அந்த ஊரில் உள்ள போக்கிரிகள் அந்த இடங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் இதுவரையில் மன்னர்கள் வேண்டாம் என்று



சொன்னோம். மன்னர்கள் மானியத்தை ஒழித்தோம், ஜமீன்தார்களை ஒழித்தோம். வாரிசுப் பரம்பரை என்ற முறையிலே மணியக்காரர்கள் பதவிகளை வேண்டாம் என்று ஹைகோர்ட் தீர்ப்பு அளித்திருக்கிறது. அந்த நிலைமையில் தொடர்ந்து ஹெர்டிட்டரி டிரஸ்டி என்பதை வைத்திருக்க வேண்டுமா ஹெர்டிட்டரி டிரஸ்டி என்று சொல்வது இந்திய அரசியல் சட்டத்தின் ஆர்டிகள் 19-ன் கீழ் ''பிராப்பர்ட்டி'' என்று வராது என்று கோர்ட்டுகள் தீர்ப்பளித்திருக்கின்றன. அந்த முறையில் இந்தச் சீர்திருத்தமான கருத்துக்கள் இருக்கிறபோது தர்மபாகங்கள் தர்மத்திற்குச் சொந்தமான கட்டடங்கள், நிலங்கள் வீணாகாமல் இருப்பதற்கு பரம்பரை தர்மகர்த்தா முறையை ஒழிக்க ஒரு சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். அல்லது ஓய்வு பெற்ற நீதிபதி மகராஜன் தலைமையிலே குழு ஏற்பத்தியதைப்போல எந்தவொரு நீதிபதி தலைமையிலேயாவது ஒரு குழுவைப் போட்டு ஆய்வு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30).

''டினாமினேஷன் டெம்பிள்'' என்ற போர்வையிலே நாங்கள் பரம்பரை தர்மகர்த்தாக்கள் என்ற போர்வையிலே சட்டத்தில் பலபேர் தப்பிக்கப் பார்க்கிறார்கள். எனக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் சில பல ஆண்டுகளுக்கு முன்பு செல்வாக்குள்ள சில பேர்கள் டெபுடி கமிஷனர் அல்லது அந்த ஊருக்குச் சம்பந்தப்பட்ட துணை ஆணையாளரிடம் வழக்குகள் போட்டு இருக்கிறார்கள். அந்த வழக்குகளிலே பிரதிவாதிகளைச் சேர்ப்பதில்லை. பிரதிவாதிகள் இருந்தால் அல்லவா கேட்பார்கள் அதிலே ஏதாவது சொல்லுவார்கள், இந்த ஊரிலே இது உண்மை, இது உண்மைக்கு மாறானது என்று சொல்ல முடியும். அப்படி வழி இல்லாமல் பிரதிவாதிகளையே போடாமல் வழக்கை மட்டும் போட்டு தாங்கள் இந்தக் கோயிலுக்குப் பரம்பரை தர்மகர்த்தாக்கள் என்று சொல்லிக் கொண்டு சொத்துக்களை வீணாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த முறையிலே ஒரு பட்டியலைப் போட்டு, கடந்த பத்தாண்டுகளுக்கு முன்பிருந்து பிரதிவாதிகளே இல்லாமல், எக்ஸ்பார்ட்டியாக இந்தந்தக் கோயில்களுக்கு அல்லது இந்தந்த தர்மஸ்தாபனங்களுக்கு தாங்கள் தான் பரம்பரை தர்மகர்த்தாக்கள் என்று யார் யார் தீர்ப்பு வாங்கியிருக்கிறார்களோ அந்தத் தீர்ப்புகளையெல்லாம் மறுபரிசீலனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்த டினாமினேஷன் டெம்பிள் என்ற போர்வையில்தான் நான் சார்ந்திருக்கின்ற சிதம்பரத்திலுள்ள நடராஜர் கோயிலும், கோயில் என்றாலே அதுதான், பெரிய கோயில் என்றாலே அது தான் என்று சொல்லப்படுகின்ற கோயில். நேற்றைய தினம் கூட ஒரு பத்திரிகையிலே பார்த்தேன். சிதம்பர ரகசியம் தொடர்ந்து எழுதப் போகிறேன் என்று சொல்கிறார்கள். ஆனால்

பலபேருக்கு சிதம்பர ரகசியம் என்று சொன்னால் அந்த நடராஜர் நடனம் ஆடுகின்ற இடத்திற்குப் பக்கத்திலே, வலது புறத்திலே உள்ள வில்வ இலைகளை, கற்சுவர் மாதிரி இருக்கிறது. அதிலே ஏதோ உருவமெல்லாம் பொறிக்கப்பட்டிருக்கிறது. அதைப் பக்கதர்களுக்கு தீபாராதனை காட்டி அதுதான் ரகசியம் என்று சொல்கிறார்களே தவிர அதிலே என்ன ரகசியம் இருக்கிறது என்பதை யாரும் சொல்லவில்லை. தொடர்ந்து 120 ஆண்டுகளுக்கு முன்பு நீதிபதி முத்துசாமி ஐயரும், முப்பது ஆண்டுகளுக்கு முன்பு சென்னை உயர்நீதிமன்றமும் இந்தத் தில்லை நடராஜர் கோயில் என்பது தமிழனுக்குச் சொந்தமானது, சைவர்களுக்குச் சொந்தமானது, பொதுக் கோயில் என்று தீர்ப்பளித்த பிற்பாடும் துணிந்து அவர்கள் இது எங்கள் கோயில், கோயில் மாத்திரம் அல்ல, நடராஜரும் தங்கள் கூடவே, 3,000 பேர்கள் வந்ததாகவும், பூலோகத்தில் சிதம்பரத்திற்கு வந்தவுடன் எண்ணிப் பார்த்ததாகவும், 2,999 பேர்தானே நாம் இருக்கிறோம் எங்கே இன்னொருவரைக் காணவில்லையே என்று கேட்ட பொழுது பக்தா, நானும் உங்களிலே சேர்ந்தவன் என்று நடராஜரே சொன்னதாகவும் அவர்கள் சொல்லிக்கொண்டு பல தகாத காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

நான் அந்த ஊரைச் சேர்ந்தவன் என்ற முறையில் சொல்கிறேன். கோயிலைச் சேர்ந்த தீட்சதர்கள் கோயில் முன்னாள் செக்கரட்டரியாக இருந்தவர்கள், முன்னாள் இரண்டு பேர், இப்பொழுதுள்ள நிர்வாகத்திலே உள்ள உறுப்பினர்கள் இவர்கள் அத்தனை பேரும் மாண்புமிகு நம்முடைய முதல்வர் அவர்களுக்கும், இந்தியப் பிரதமர் அவர்களுக்கும், பெரியவர் சங்கராச்சாரியார் அவர்களுக்கும் தங்களுடைய குறைகளை, அங்கே நடக்கிற தகாத முறைகளைப் பற்றியும் மனுப் போட்டிருக்கிறார்கள். அந்த மனுவிலே சொன்ன விஷயங்களை இந்த மாமன்றம் அறிய வேண்டும். ஏனென்றால் இந்த சிதம்பர ரகசியம்தான் முக்கியமான ரகசியம். மாமன்ற உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய ரகசியம்.

நடராஜர் கோயிலில் உள்ள பாண்டிய நாயகம் என்ற கோயிலில் அம்மனுக்கு சொந்தமான ஒரு பவுன் தாலி மாங்கல்யம் மூன்று மாதங்களுக்கு முன் களவு போய்விட்டது. ஆறு மாதங்களுக்கு முன்பு சென்னையை சேர்ந்த செகரடேரியட் காலனியிலே உள்ள சிலபேர் பக்தர்கள் நடராஜர் கோயிலுக்கு போய் நடராஜருக்கு முன்பு நான்கு கிராம் பவுன் உள்ள ஒரு பவுன் பதுமையை காணிக்கையாகச் செலுத்தியிருக்கிறாகள். உண்டியலில் ஏன் போடக்கூடாது என்று மாமன்ற உறுப்பினர்கள் கேட்கலாம். உண்டியல் வைக்கக்கூடாது என்பது தீட்சதர்களுடைய வாதம். உண்டியல் எது என்று கேட்டால் அந்த ஆண்டவனுடைய சந்நிதானம்தான், படிக்கட்டிலே வையுங்கள் என்று வைத்தபிற்பாடு ஒருவர் அந்த நான்கு கிராம் பவுன் எடையுள்ள பதுமையை கணக்கில் காட்





டாமல் எடுத்துக்கொண்டு போய்விட்டதாகவும், பிற்பாடு புகார் கிளம்பிய பிறகு, சரி, ஆளுக்குப் பாதி, பாதி என்று பாதி எடுத்துப் போனவருக்கு மற்றொரு பாதி கோயிலுக்கு என்று தீர்ப்பு சொன்னதாகவும் சொல்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, நடராஜர் குஞ்சிதபாதம் என்று சொல்கிறார்களே, அதிலேயிருந்த வைரக் கற்கள் நான்கைக் காணோம். அது மாத்திரமல்ல, நடராஜருக்கும் இடது புறம் உள்ள ஹஸ்தராஜா இடுப்பிலே உள்ள ஒன்றரை பவுன் கிண்கிணி – தங்க அரைஞான் காணோம். அது மாத்திரமல்ல, இதற்கு முன்பு ஒரு செம்பு அரை கிலோ வெள்ளி எடை உடையது. அப்படிப்பட்ட 16 வெள்ளிச் சொம்புகளைக் காணோம். பழைய தங்கநகைகளை உருக்கி சுவாமிக்குத் தங்க கவசம் செய்கிறோம் என்று சொல்லி 16 பவுன் களவு போய், கணக்குக் கேட்டதற்குப் புகைச்சலிலே போய்விட்டது என்று சொல்லிவிட்டார்கள்.

இது மாதிரி பல்வேறு குறைகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, தீட்சதர்களைப் பொறுத்தவரையில் தாங்கள்தான் பரம்பரை தாமகர்த்தாக்கள் என்றும், அவர்களுடைய ஜீவனத்திற்கு, வாழ்க்கையே தினம் பூஜை செய்வது என்றும், அந்தப் பூஜை செய்கிறபொழுது பக்தர்கள் கொடுக்கின்ற காணிக்கையைப் பெற்றுக்கொள்வது என்றும், அத்துடன் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு பட்டை சாதம் கொடுப்பதும் தான் இதுவரை நடந்து வருகிற முறையாகும். ஆனால் அப்படிக் கொடுக்கிற முறையைத் தர்மமாக நடத்துகிறார்களா, ஜனநாயகப்படி நடத்துகிறார்களா என்றால் இல்லை என்று மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அண்மையில் மதுரையில் சுப்ரீம் கோர்ட் நீதிபதி சந்திரசூட் அவர்கள் பேசுகின்றபொழுது சொன்னார்கள், நான் ஏதோ கொத்தடிமை என்பது இதுவரை ஆதிதிராவிடாகள், ஆதிவாசிகள் உள்ள பகுதியிலே மாத்திரம்தான் இருக்கிறது என்று கருதினேன். பாவம், வழக்கறிஞர்கள் சமூகத்தின் மத்தியிலேயும் இருக்கிறது என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன் என்று சந்திரசூட் அவர்கள் சொன்னார்கள். அவர் மதுரைக்குப் போனவர், சிதம்பரத்திற்கு வந்திருந்தால் பொதுத் தீட்சதர்கள் சமூகத்திலேயும் நடராஜர் கோயில் உள்ளேயும் இந்தக் கொத்தடிமை முறை இருப்பதை நன்றாகப் புரிந்து கொண்டிருப்பார்கள். பூஜை செய்கிற ஜீவாதார உரிமை—திருமணமான பிறகு நடராஜர் கோயிலுக்கும், மற்றுமுள்ள சின்ன ஆலயங்களுக்கும் ஒருவர் சென்று பூஜை செய்ய உரிமை உண்டு. ஆனால், 'விடோயருக்கு' உரிமை கிடையாது. திருமணமாகி, மனைவி இறந்துபோனால் கூட அவருக்கு உரிமை கிடையாது. வேறு

தொழிலும் இல்லை. தினம் சாப்பாட்டிற்காக ஒரு பட்டை சாப்பாடு கொடுப்பதும் அல்லது, ஆண்டவனை பூஜிப்பதற்கு கொடுக்கப்பட்ட உரிமையும்தான். அப்படிச் செய்தவர்கள் சென்ற ஆண்டு சர்க்கார் கணக்கிலே காட்டாமல் 2 கட்டி மூசைத் தங்கமும், 26 தங்க நாணயங்களும் வேறுபல கட்டிகளும் வைத்திருந்தார்கள். அதுபற்றி கிடைத்த தகவலின் பேரில் சர்க்காரும், இந்து அறைய நிலைத் துறை ஆணையாளர் அவர்களும் வந்து பார்வையிட்டுக் கண்டு பிடித்து விட்டார்கள். அதைச் சொன்னார்கள் என்ற சந்தேகத்தில், அங்கே சில தீட்சதர்கள்மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. கடந்த 7 வருடங்களாக குணசேகர தீட்சதரும், 8 மாதங்களாக ஆர். வி. ராஜா தீட்சதரும், கே. நடராஜா தீட்சதரும், வி. சந்திர மௌலி தீட்சிதரும், ஆகிய நால்வரும் தினம் ஒரு பட்டைச் சோறு கூட இல்லாமல், பூஜை உரிமை அடியோடு பறிக்கப்பட்டு, சோற்றுக்கு வழியில்லாமல், அகதிகளாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.

தில்லை நாக வெங்கடேச தீட்சிதர், ஆர். வி. கிருஷ்ணசாமி தீட்சிதர், ஆர். தங்கதுரை தீட்சிதர் ஆகிய 3 பேர்களுக்கும் தினம் ஒரு பட்டைச் சாதம் மாத்திரம் கொடுத்துவிட்டு வேறு பூஜை உரிமை அவர்களுக்கு இருக்கக் கூடாது என்று சொல்லி விட்டார்கள். மாடுகளையும் ஆடுகளையும் விறகுகளையும் ஏலம் விடுவதுபோல் அவர்கள் ஜீவாதார உரிமையை, பூஜை செய்கிற உரிமையைப் பறித்து ஏலம் விட்டு விட்டார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நாகராஜருக்குப் பக்கத்தில் பரமானந்த கூபம் என்ற ஒரு கிணறு இருக்கிறது. அதிலேயிருந்துதான் சாமிக்கெல்லாம் அபிஷேகம் நடக்கும். யாராவது பக்தர்கள் போய் நாணயமாக நான் உண்டியலிலே போட வேண்டும் என்றால், அதோ உள்ள அந்தக் கிணற்றில் போடுங்கள் என்று சொல்வார்கள். அங்கே போடுகிற வழக்கம் உண்டு. அந்தக் காசை, 2, 3 மாதங்களுக்கு ஒரு முறை ஏலத்தில் விடுவது வழக்கம். அப்படி ஒரு நாள் பொது ஏலம் விடாமல் சில பேர் கிணற்றிலே ஆட்களை மூழ்க வைத்து ஒரு துணியை போட்டு, காசுகளை மூட்டை கட்டி வெளியே எடுத்திருக்கிறார்கள். அதைச் சொன்ன ஆர். கிருஷ்ணசாமி தீட்சதரைத் தாக்கும் வன்முறை முயற்சியில் அங்கே இறங்கி இருக்கிறார்கள். அவரது ஜீவாதார உரிமைகள் பறிக்கப்பட்டிருக்கின்றன. கோவிலில் முறைப்படி ஒரு தீட்சதரை, செயலாளராக எல்லோரும் ஒட்டுப்போடும் முறையில் தேர்ந்தெடுப்பதில்லை. செல்வாக்குள்ள சிலபேர்கள்தான் அந்தக் காரியத்தை நடத்திவருகிறார்கள். நம்முடைய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் பல்வேறு முன்னேற்றமான ர்திருத்தக் கருத்துக்களைக் கொண்டுவருகிறார்கள்.



ஆனால் தீட்சதர்கள் கோர்ட்டிலே தீர்ப்புகள் இருக்கின்றன என்று சொல்லி பயமுறுத்துகிறார்கள். எனக்கும் தெரியும், நம்முடைய நண்பர் மாண்புமிகு துரைமுருகன் அவர்களுக்கும் தெரியும், கோர்ட்டிலே டினாமினேஷனல் டெம்புளுக்கு கூட தீர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். நமது உயர்நீதி மன்றமும் உச்ச நீதி மன்றமும் தீர்ப்பளித்திருக்கின்றன.

Eve for denomination emple the right o administer is no he right to misappropriate or misrule.

என்றுதான் தீர்ப்பு சொல்கின்றன. ஆகவே, டினாமினேஷனல் டெம்பில் என்று இருந்தாலும், எக்சிகியூடிவ் ஆபீஸர் போடுவதற்கு அரசுக்குப் பூரண அதிகாரம் இருக்கிறது. 10, 15, வருடங்களுக்கு முன்பு நடந்த தீர்ப்புகளை வைத்துக் கொண்டு, நாம் பேசாமல் உடனடியான அப்பீலுக்குப் போகவேண்டியதில்லை. நியாயம் வழங்குவதற்காக, அங்குள்ள பாதிக்கப்பட்டுள்ள தீட்சதர்களுக்கு ஜீவனம் கிடைப்பதற்காக, அவர்களுடைய வயிற்றிலே அடிக்காமல், அங்கு அவர்களுக்கு உணவு பூஜை உரிமைகள் கிடைப்பதற்காக ஒரு சீர்திருத்தத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பழனியில் பண்டா என்பார்கள். திருப்பதியில் மகந்தா என்பார்கள். பண்டாவிடமிருந்து பழனியையும் மகந்தாவிடமிருந்து திருப்பதியையும் மீட்பதைப் போல் தீட்சதர்களிடமிருந்து இந்தக் கோவிலை மீட்டாக வேண்டும்.

தமிழிசைப் பற்றியும், தமிழில் பாட வேண்டுமென்றும் சொன்னார்கள். எல்லாம் தமிழாகவே இருக்க வேண்டும், நானும் தமிழும் ஒன்றுதான் என்று ஆடல் வல்லோன் அந்த நடராஜ பெருமான் அங்கு பெரியபுராணம் பாடிய பொழுது, முதல் அடியையும் கடைசி அடியையும் அவர்தான் எடுத்துக் கொடுத்தார் என்று சொல்வார்கள். மாணிக்கவாசகரது மாணிக்க திருவாசகத்திற்கு உருகாதவர் யார் என்று கேட்கிறார்கள். உருகாதவர்கள் தில்லையிலே தீட்சதர்கள் இருக்கிறார்கள். ஆனால் அந்தத் தில்லை நடராஜன் அந்த திருவாசகருக்கு உருகி, அந்த வாசகத்தை மாணிக்க வாசகர் சொல்ல சொல்ல அப்படியே எழுதி, கீழே நான் தான் எழுதினேன் என்று கையொப்பமிட்டதாகச் சொல்கிறார்கள். அந்தக் கையொப்பமிட்ட ஒரு சுவடி ஒரு வெள்ளிப்பேழையில் வைக்கப்பட்டு புதுவையிலே ஒரு தர்மகர்த்தாவிடம் இருப்பதாகவும் அதைத் திறந்து பார்த்தால் ஊமையாகி விடுவோம் என்று பயந்து கொண்டு திறக்காமல் இருப்பதாகவும் சொல்கிறார்கள். மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன், அப்படி இருக்குமானால், தாங்கள் அதை விசாரணை செய்து, மீட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழில் வழிபடலாம் என்று சொல்கிறார்கள். எல்லோருக்கும் தெரியும், அழகான தமிழ், தேனினும் இனிய தமிழ், அமிழ்திலும் இனிய தமிழ், யாழினும் குழலினும் குழந்தை மழலையினும் இனிய தமிழ் என்று சொல்கிறார்கள். கரும்புக் கூட நுனி போகப்போக உவர்க்கும்; பால் கூட அதிகமானால் திகட்டும். ஆனால் தமிழில் தெவிட்டாதது. பல மன்னர்கள் குறிப்பாக 1-வது ராஜராஜன், 1-வது ராஜேந்திர சோழன் அவர்களின் மனைவி, தங்கைமார்கள், 40 வேலி, 50 வேலி நிலங்களை எழுதி வைத்தார்கள். எதற்காக எழுதி வைத்தார்கள். நடராஜர் முன் தேவாரம், திருவாசகம் பாடப்பட வேண்டுமென்று எழுதி வைத்தார்கள். திருவாரூரில் தியாகேசன் என்ற ஆண்டவன் முன் தேவாரம் இசைக்கப்பட்டபொழுது, கடல் கடந்து வெற்றிகள் பல பெற்ற ராஜராஜசோழன்—அந்தப் பேரரசன்—அந்த இசையிலே மயங்கினான் என்று சொல்கிறார்கள். அது மாத்திரம்தானா? தேவாரம் திருவாசகத்தை வைத்து மகேந்திர பல்லவன், பாண்டிய நாட்டு மன்னன், பல்வேறு மன்னர்களை ஜைன மதத்திலிருந்து மாற்றினார்கள் என்று சொல்கிறார்கள்.

(பிற் பகல் 12–40)

அதுமாத்திரமல்ல. இலங்கையிலே இருந்து வந்த புத்த மன்னன் சிதம்பரத்தை முற்றுகை இட்டுவிட்டான். தெருக்களின் பெயரை மாற்றிவிட்டான். ஜைனர் வீதி என்று கூட வைத்துவிட்டான். அப்போது மன்னனை எதிர்த்து யாருமே வாதத்திற்கு வரமுடியாமல் இருந்தபோது, அப்போது இலங்கை மன்னனை எதிர்த்து யாருமே வாதத்திற்கு வரமுடியாமல் இருந்தபோது மாணிக்கவாசகரைக் கொண்டுவந்தார்கள் தீட்சிதர்கள். தீட்சிதர்கள் கொண்டு வந்தபிறகு, மாணிக்கவாசகர்தான் அருமையாகப் பாடினான். பாட்டைச் சொல்லி பிரயோசனம் இல்லை. புத்த மன்னன் கேட்பதாக இல்லை. பிடிவாதமாக இருந்தான். உடனே அவன் சொன்னான், என்னுடைய மகள் ஊமையாக இருக்கிறாள். அவளைப் பேசவைக்க முடியுமா என்று அந்த இலங்கை நாட்டு புத்த மன்னன் கேட்டதாகவும், உடனே திருச்சுழால் என்ற திருப்பதிகத்தை மாணிக்கவாசகர் தமிழில் பாடியதாகவும் அந்த ஊமைப் பெண் பேசியதாகவும் சொல்லுகிறார்கள். தமிழ் முதலை வாயிலே போன பாலகனை மீட்டதாகச் சொல்லுகிறார்கள். ஆற்று நீரை எதிர்த்ததாகச் சொல்லுகிறார்கள். தமிழ் நாட்டு வியாசர் என்று சொல்லப்படும் நம்பி யாண்டார் நம்பி என்பவர் தமிழுக்கு அந்த தேவாரத் திருமறைகளுக்குப் பண் அமைக்க வேண்டும் என்று சொன்னபோது ஆண்டவனே சொன்னாராம், எருக்காட்டான் புலியூரில் ஒரு ஊமைப் பெண் இருக்கின்றது. அதை அழைத்து வந்து என் சன்னதியில் நீ பாடு, பல்வேறு ராகங்களைப் பாடு. எந்த ராகத்துக்கு அந்த ஊமைப் பெண் கண்ணில் இருந்து கண்ணீர் வருகிறதோ அந்த ராகம் தான் அற்புதமான ராகம். சிறந்த பண் என்றுசொன்னதாகவும் சொல்லுகிறார்கள்.



ஆனால், இன்றையதினம் அந்த அமிழ்தினும் இனிய தமிழ் மொழியிலே அங்கே வழிபாடு செய்ய முடியாது. அந்தக் கனக சபை என்ற இடத்திலே நாம் சட்டை போடக்கூடாது. ஆனால் சட்டை போடாமலே நாம்போனாலும் ஓதுவார்கள் போனாலும் அந்தணர் போனாலும், மடாதிபதி போனாலும் யார்போனாலும் தமிழில் பாட முடியாது. எவ்வளவு கடுமை என்பதைப் பார்க்க வேண்டும். தீட்சிதரும் தேவாரம் பாட முடியாது, அனுமதிப்பது இல்லை. ஒரு லட்சம் தருகிறேன் அந்த கனகசபையிலே பாடுங்கள் என்று சொன்னாலும் பாட அனுமதிக்க முடியாது என்று சொல்லுகிறார்கள். தீட்சிதர்கள் அதை நன்றாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஏற்கெனவே வள்ளலார் இராமலிங்க அடிகள் சிதம்பரம் நடராஜர் கோவிலுக்குப் போய் தன்னுடைய பாக்களைப்பாடி வழிபட முயன்றபோது தீட்சிதர்கள், நீங்கள் பாட முடியாது என்று சொன்னதால் கோபித்துக் கொண்டு தான் வடலூர் போனார் என்பது வரலாறு ஆகும்.

சில நாட்களுக்கு முன்பு சிதம்பரத்திற்கு வந்த மதுரை பல்கலைக் கழக துணை வேந்தர் திரு. வ. சு. ப. மாணிக்கம் அவர்கள் சொன்னார்கள். அந்த இராமலிங்க அடிகளுக்குப் பிற்பாடு இவர் சொல்லித்தான் என் காதிலே கேட்டேன். தமிழ் மொழிக்கு இடம் கொடுக்காத அந்தத் தில்லை ஆண்டவனை நான் பார்க்க மாட்டேன். அது சூன்யம் நிறைந்த இடம், நான் போகமாட்டேன் என்று சபதம் எடுத்தார்.

தமிழிலே பாடவேண்டும், அர்ச்சனை செய்ய வேண்டும் என்று சொல்லுகிற நாம் திருமணங்களில் எல்லாம் தமிழ் நடவடிக்கைகள் வரவேண்டும் என்பதற்காகவும் மேடைகளில் தமிழ் இசைக்கப்படவேண்டும் என்பதற்காகவும் ஒரு தனி இயக்கம் ஏற்பட்டது போல எல்லோரும் சேர்ந்து தமிழில் அர்ச்சனை வேண்டும் என்பதற்காக ஒரு இயக்கத்தை ஆரம்பிக்க வேண்டும்.

தமிழிலே அர்ச்சனை வேண்டாம் என்பதற்காக 1974-லே ஒரு தடை உத்தரவை வாங்கியதாகச் சொல்லுகிறார்கள். நமது உயர் நீதி மன்றம் மறுத்தால் அதற்கு மேல் உச்சநீதி மன்றம் தடை கொடுத்ததாகச் சொல்லுகிறார்கள். கிட்டத்தட்ட 7½ ஆண்டுகள் ஆகின்றன. அப்படி என்ன அதிலே அவ்வளவு பெரிய சிக்கலான காரியம். அங்கே தீர்ப்பு தரப்பட முடியாத நிலை எப்படி ஏற்பட்டது. இப்படி அந்தக் கோர்ட்டு கொடுத்தத் தடை உத்தரவினால் 'தமிழிலும் பாடலாம்' என்று பயந்து கொண்டு நாம் போர்டு வைக்க வேண்டி இருக்கிறது தவிர இல்லை என்றால் தமிழில் தான் அர்ச்சனை செய்ய வேண்டும் என்றால் சப்ஜூடிஸ் ஆகிவிடும் என்று சொல்லுவார்கள். அந்த முறையில் எல்லோரும் ஒன்று கூடி நாம் தமிழில் அர்ச்சனை செய்வதற்கு பாடுபட வேண்டும் என்றும், ஜாதி இன பேதம் இல்லாமல் அர்ச்சகரை நியமிக்க மகராஜன் கமிட்டி ஒரு ரிப்போர்ட் கொடுத்திருப்பதாகவும், அதன் மீது அரசு ஆய்வு

செய்து வருகிறது என்றும் சொல்லுகிறார்கள். தயவு செய்து
அதன் மீது ஒரு நல்ல நடவடிக்கையை வெகு விரைவிலே எடுக்க
வேண்டும். சிதம்பரம் நடராஜர் கோவிலைப் பொறுத்தவரைக்
கும் ஒரு காலக்கட்டத்தை குறித்து இந்தக் காலக்கட்டத்திற்குள்
— எப்படியும் நிச்சயம் கோர்ட்டுக்குப் போவார்கள், இந்த
கோர்ட்டு அந்த கோர்ட் என்று போவார்கள். ஆனால் பாதிக்
கப்பட்ட தீட்சிதர்கள் நான் இல்லை, பிராமணர் அல்லாதார்
அல்ல, பாதிக்கப்பட்ட தீட்சிதர்கள் உச்ச நீதி மன்றத்திற்கும்,
உயர் நீதி மன்றத்திற்கும் பரிகாரம் தேடி அவைகளின் கதவு
களைத் தட்டுகிற காலம் வெகு தூரத்தில் இல்லை, என்று
சொல்லி, தேவாரம் திருவாசகத்தை மீட்ட ஒண்ணாவது ராஜ
ராஜ சோழன் போல நம்முடைய புரட்சித் தலைவர் காலத்திலே
தீட்சிதர்களிடம் இருந்து அந்தக் கோவிலை மீட்டு தமிழகத்தின்
சரித்திரம் அமைக்கவேண்டும். குறிப்பாக இந்தக் கோவிலைப்
பற்றி ஒரு வரலாற்றை அரசாங்கம் அதிகாரப்பூர்வமாக வெளி
யிட வேண்டும். ஏனென்றால் தீட்சதர்கள் நாங்கள் குளங்களும்
கட்டினோம் என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டு
இருக்கிறார்கள். அந்த நடராஜர் தன்னுடைய நண்பர் என்று
சொல்லுகிற்ார்கள். தீட்சிதர்களுக்கு ஒரு டிரேட்மார்க் இருக்
கிறது. முன்னாலே தலை மயிரை கொஞ்சம் மழித்து, கொண்
டையை ஒரு பக்கமாக போட்டுக் கொண்டு இருப்பார்கள்.
நடராஜர் அப்படி அல்ல. அருமையான பாகவதர் மாதிரி
அவர் தோள்களிலே வழிகின்ற மாதிரி விரிசடை இருக்கிறது.
இவருக்கும் அவர்களுக்கும் சம்பந்தம் இல்லை. தமிழும் நானும்
ஒன்று என்று ஒரு தெய்வத்தை தமிழே கூடாது என்று சொல்லு
கிற கூட்டத்தில் சேர்க்கக் கூடாது என்று கூறி, வாய்ப்பு கொடுத்
தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

**திரு. இ. முத்துராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவரவர்களே, மாண்புமிகு செய்தி அற நிலையத்துறை
அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற சுற்றுலாத்துறை,
செய்தி திரைப்படத் துறை, வனத்துறை ஆகிய மானியக் கோரிக்
கைகள் மீது காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்
பாக என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

முதன் முதலாக ஆயிரம் ஆண்டு பழமை வரலாறு கொண்ட
திருவெற்றியூர் தியாகராஜா கோவிலை தனியார் ஆதிக்கத்தி
லிருந்து மீட்டு, அதை அறநிலையத் துறையின் கீழ் கொண்டுவர
வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று அறநிலையத் துறையின்
கீழ் கொண்டுவந்ததற்காக என் சார்பாகவும் எங்களுடைய இயக்
கத்தின் சார்பாகவும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் அந்த திருவொற்றியூர் தியாகராஜா கோவிலிலே பல
ஆண்டுகாலமாக ஓடாமல் இருக்கிற தேர் அங்கே போக்குவரத்
திற்கு இடையூராக இருக்கிறது. அந்தத் தேரை சீர் செய்து,
ஓடச் செய்கின்ற பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது. அதை
யும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





மேலும் நெல்லை மாவட்டத்தில் உவரியில் சுயம்புலிங்கசுவாமி
கோவில் இருக்கிறது. அந்தக் கோவிலுக்கு பல இலட்சக்
கணக்கான ரூபாய் வருமானம் வருகிறது. அந்தக் கோவிலுக்கு
பல நூறு ஏக்கர் நிலம் சொந்தமாக இருக்கிறது.
அந்தக் கோவிலையும் தனி நபர் ஆதிக்கத்திலிருந்து மீட்டு,
அறநிலையத்துறையின் கீழ் கொண்டுவர வேண்டும் என்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.

செய்தி மற்றும் திரைப்படத் துறையைப் பொறுத்தவரையில்
தியேட்டர் சம்பந்தமாக இந்த அரசு வந்த பிறகு ஆங்காங்கே
உள்ள கிராமங்களில் எல்லாம் புரட்சித் தலைவர் ஒட்டு மொத்த
வரி விதிப்பு என்ற முறையை ஏற்படுத்தி நலிந்து கொண்டிருந்த
அந்தத் தொழிலுக்கு புத்துயிர் ஊட்டினார்கள். அதைப்
போன்று நகராட்சிகளிலும் மாநகராட்சிகளிலும் உள்ள தியேட்
டர்களுக்கு வரி விதிப்பு செய்து, அந்தத் திட்டத்தை விரிவு
படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை அவை முன் வைக்க
விரும்புகிறேன்.

அடுத்து இந்த ஒட்டுமொத்த வரியைச் செலுத்துவதற்கு
தியேட்டர்காரர்கள் துணை வணிகவரி அலுவலகத்திற்குச்
சென்று தியேட்டரில் பயன்படுத்தும் டிக்கட்டுகளுக்கு சீல் வைக்க
வேண்டுமென்று இருக்கிறது. அதை மாற்றி தியேட்டர்காரர்
களே டிக்கட்டை அளிக்கின்ற முறையை ஏற்படுத்தி, அவர்
களுக்கு இருக்கிற அந்த சிரமத்தைப் போக்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது கிராமங்களில் எல்லாம் 16 எம். எம். திரைப்படங்
கள் ஏராளமாகக் காட்டப்பட்டு கிராமங்களில் இருக்கிற தியேட்
டர்கள் எல்லாம் அதனால் இன்றைக்கு பாதிக்கப்படுகிற சூழ்
நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒரு திரைப்படம் வெளியிடப்படும்
போது 16 எம். எம். திரைப்படம் 3 ஆண்டுகளுக்குப் பிறகு
தான் வெளியிடப்பட வேண்டுமென்ற விதிமுறையை ஏற்படுத்தி
கிராமங்களில் பொதுவாக ஆங்காங்கே இருக்கிற காவல்
நிலையங்களுக்கு இந்த விதிமுறையைச் செயல்படுத்தும் அதிகாரத்
தைக் கொடுத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி இல்லாமல்
வெளியிலே திரைப்படம் காட்டப்பட்டால் அதை பறிமுதல்
செய்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையில் இங்கே பாரதிக்கு
நாம் நூற்றாண்டு விழா கொண்டாடுகிறோம்.
எங்களுடைய இயக்கத்தின் சார்பாக இந்த மாமன்றத்தில்
பாரதியாருடைய திருவுருவப் படத்தைத் திறந்து வைக்க வேண்டு
மென்ற கோரிக்கையை இங்கே வைக்க விரும்புகிறேன்.

[திரு. இ. முத்துராமலிங்கம்] [1982 மார்ச் 11

குமரி முனையில் பெரும் தலைவர் காமராஜர் அவர்களுடைய ஆஸ்தி வைக்கப்பட்ட இடத்தில் அவர்களுக்கு ஒரு நினைவுச் சின்னம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே சென்னையிலுள்ள பெரும் தலைவர் காமராஜ் அவர்களுடைய நினைவு மண்டபம் சரியான முறையில் பராமரிக்கப்படடவில்லை. அந்த நினைவு மண்டபத்தை நல்ல முறையில் பராமரிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் குமரி முனையில் விவேகானந்தர் பாறை இருக்கிறது. அங்கே படகு போக்குவரத்து சம்பந்தமாக பல பிரச்சினைகள் எழுகின்றன. அந்தப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுகின்ற வகையில் அங்கே ஒரு மேம்பாலத்தை அமைத்து அனைவரும் அந்தப் பாலத்தின் வழியாக அந்தப் பாறைக்குச் செல்ல வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெல்லை மாவட்டத்தில் களக்காட்டில் சிங்கவால் குரங்குகள் சரணாலயம் இருக்கிறது. அங்கே செல்வதற்கு சாலை அமைப்பு சரியாக இல்லை. மக்கள் வசதியாகச் சென்று பார்ப்பதற்கு ஏற்ற முறையில் சாலை அமைப்புக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல மூன்றடைப்பில் வெளிநாட்டுப் பறவைகள் வந்து தங்கும் பறவைகள் சரணாலயம் இருக்கிறது. அதை மேம்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வனத்துறையில் ஆங்காங்கே முந்திரித் தோட்டம், இரப்பர் தோட்டம் அமைக்கும் திட்டம் இருக்கிறது. இராதாபுரம் தொகுதி, சாத்தான்குளம் தொகுதி, திருச்செந்தூர் தொகுதி ஆகிய தொகுதிகளில் நெல்லை மாவட்டத்தில் சிறப்பாக முந்திரித் தோட்டம் அமைக்க நல்ல வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அந்தத் தொகுதிகளில் முந்திரித் தோட்டம் அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது பல்வேறு குளங்களிலும், ஆங்காங்கே இருக்கிற அரசு நிலங்களிலும் வனத்துறையின் மூலமாக மரங்களை நட்டு வருகிறார்கள். அதை எல்லா இடங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

(பிற்பகல் 12—50)

**திரு. துரைமுருகன் :** மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட மானியக் கோரிக்கையின்மீது நான் சார்ந்து இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே சில கருத்துக்களை நான் இந்த மன்றத்திலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1982 மார்ச் 11] [திரு. துரைமுருகன்]

அறநிலையங்களைக் குறித்து, காடுகளைப்பற்றி, காட்டுவள மூலதனச் செலவு பற்றி, சின்கோனா பற்றி அதற்குமேலே விளம்பரம் செய்து, சினிமா என்று ஒரு ஐந்தாறு மானியக் கோரிக்கைகளை ஒன்றாக இணைத்து சற்றொப்ப 35 கோடி ரூபாய்க்கு மேலே இந்த அவையினுடைய அனுமதியைப் பெறப் போவதற்காக இந்த மன்றத்திலே இன்றைக்கு விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அறநிலையத் துறைக்கு என்று ஒரு தனி விவாதமும் காடு காட்டு வளத்தை சுற்றி இருப்பவைகளுக்காக ஒரு தனி விவாதமும் தான் இந்த மன்றத்திலே நடைபெறுவது வழக்கம். சென்ற ஆண்டுகூட அப்படி அறநிலையத் துறைக்கு ஒரு நாளும், காடும் காடு பற்றிய மானியக் கோரிக்கைகளின் மீதும் ஒரு நாள் விவாதமும் நடைபெற்றது. ஆனால் இன்றைக்கு எல்லாவற்றையும் சேர்த்து ஐந்தாறு இனங்களை ஒன்றாகச் சேர்த்து அதிலே உறுப்பினர்கள் 10 நிமிடத்திற்குள்ளாப் பேசி முடிக்க வேண்டும் என்று சொன்னால் இந்தப் பெயர்களைச் சொல்லி முடிப்பதிலேயே 5 நிமிடங்கள் போய் விடும். அதற்குப் பின்னாலே அவர்கள் பொதுவான கருத்துகளைச் சொல்வதற்கும் அதற்குப் பிறகு தொகுதியின் விவகாரங்களை எடுத்து வைப்பதற்கும் நேரம் போதாமல் எதைப் பேசினோம் எதை விட்டோம் என்று எண்ணக் கூடிய நிலைமை இருக்கின்றது. நான் ஒன்று நினைக்கிறேன். தனித் தனியாக வைத்தால்தானே டீட்டெய்லாகப் பேசுகிறார்கள். எனவே ஒன்றாக வைத்து விட்டால் ஓடி ஓடிப் பேசி விடுவார்கள், ஆகவே ஆளை விட்டால் போதும் என்ற முடிவுக்கு சர்க்கார் வந்திருப்பதாக நான் கருதுவதிலே நியாயம் இருக்கும் என்று கருதுகிறேன்.

இந்த அறநிலையத் துறையினைப் பொறுத்த மட்டிலே ஒரு காலத்திலே பலபட்டறையிலே சேர்த்திருந்தார்கள். அதாவது அறநிலையத்தினைப்பற்றி இங்கே விவாதமே கிடையாது. அதற்காக ஒரு மானியப் கோரிக்கை வைப்பது இல்லை. பத்தோடு பதினொன்று அத்தோடு இதுவும் ஒன்று என்று வைத்திருந்தார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்திலேதான் அதற்காக என்று ஒரு தனி அமைச்சர், தனி இலாக்கா, தனி விவாதம் என்ற நிலைமை உருவாயிற்று. ஆனால் இப்போது மீண்டும் அதைப் கொண்டு வந்து, அந்த அறநிலையத்தினைக் கொண்டு வந்து பல பட்டறையிலே சேர்த்து விட்டீர்களே என்று நான் வருத்தப்படுகிறேன். எனவே இது குறித்து பல்வேறு கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கூறி இருக்கிறார்கள்.

நானும் இது குறித்து ஓடி, ஓடி, முடிந்த அளவுக்கு பெரிதாக இருக்கின்ற அறநிலயைத் துறையினையும், அதைவிடப் பெரியதாக இருக்கின்ற காட்டைப் பற்றியும் பின்னாலே வைத்துக் கொண்டு சின்னச் சின்னதாக இருக்கின்ற மற்ற விவகாரங்களை முதலிலே என்னால் முடிந்த அளவுக்குச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

சினிமாவைப் பற்றி ஓரிரு கருத்துக்களை வைப்பது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். இப்போது காம்பவுண்ட் டாக்ஸ் என்ற முறையினை கொண்டு வந்திருக்கிறீர்கள். நகரங்களில் மற்றப் பகுதிகளில் இந்த டாக்ஸ் வசூலிக்கப்படுகின்றது. வேலூரை எடுத்துக் கொள்ளுங்கள். வேலூருக்கு இந்த முறை கிடையாது. அங்கே 60 பெர்சன்ட் என்று வசூலிங்கிறார்கள். ஆனால் பக்கத்திலே இருப்பவர்களுக்கெல்லாம் காம்பவுண்ட் டாக்ஸ் போடப்படுகிறது. மேஜர் பஞ்சாயத்துக்களுக்கெல்லாம் காம்பவுண்ட் டாக்ஸ் போடப்படுகிறது. காம்பவுண்ட் டாக்ஸ் முறையினைக் கொண்டு வந்து சினிமா தியேட்டர் நடத்துகின்றவர்களின் சுமையைக் குறைத்திருக்கிறோம் என்று சொல்கிற நீங்கள் இதிலே கொள்ளை அடிப்பதற்கு ஒரு வழி வகுத்திருக்கிறீர்கள் என்று நான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதை யார் அடிக்கிறார்கள் சினிமா தியேட்டரிலே பலபேர் அடிக்கிறார்கள். உதாரணம் சொல்ல விரும்புகிறேன். குடியாத்தம் என்று வைத்துக் கொள்ளுங்கள். குடியாத்தத்திற்குப் பக்கத்திலே குடியாத்தத்தை ஒட்டிய நகர எல்லைப் பகுதியிலே செருவங்கி பஞ்சாயத்து இருக்கின்றது. அங்கே சரவணா தியேட்டர் இருக்கின்றது. குடியாத்தத்திற்கும் அதற்கும் வித்தியாசம் கிடையாது. ஆனால் அங்கே ஒரு புதுப் படத்தைக் கொண்டு வந்து போடுகிறார்கள். மக்கள் அங்கே பறந்து போகிறார்கள். ஆனால் அந்தத் தியேட்டர்காரர்கள் காம்பவுண்ட் டாக்ஸ் கொடுக்கிறார்கள். ஆகவே, வசூலிலே 60 சதவீதம் என்பதை ஏமாற்றுகிறார்கள். ஆகவே பல்லாயிரக் கணக்கான ரூபாய் அங்கே அடிப்பட்டுப் போகிறது.

அதேபோல் வேலூரை எடுத்துக் கொள்ளுங்கள். வேலூரிலே என்ன நிலைமை, அங்கே 60 சதவீதம். ஆனால் அதற்குப் பக்கத்திலே இருக்கின்ற சேம்பாக்கம் பஞ்சாயத்திலே சண்முகா தியேட்டர் ஒரு பக்கம் இருக்கின்றது. அமைச்சருக்குத் தெரியும் சாயிநாதபுரம் வேலூரிலே இருந்து பிரிக்கப்படவில்லை. அங்கே ஒரு தியேட்டர். அங்கே புதுப்படத்தைக் கொண்டு வந்து ரிலீஸ் செய்கிறார்கள். கொள்ளை லாபம் அடிக்கிறார்கள். சர்க்காருக்கு வர வேண்டிய பணம் வராமல் போய் விடுகிறது.

பக்கத்திலே இருக்கின்ற காஞ்சிபுரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். தோல் கேட்டிலே ஒரு தியேட்டர். வரதராஜப் பெருமாள் கோவிலிலே ஒரு தியேட்டர், பிள்ளையார் குப்பத்திலே ஒரு தியேட்டர் என்று நான்கு பக்கமும் நகர எல்லையை ஒட்டி டென்ட் போட்டுக் கொண்டு காம்பவுண்ட் டாக்ஸ் கட்டிவிட்டுப் போகிறார்கள். புதுப்படம் போட்டு வசூல் செய்து கொள்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை உருவாகிக் கொண்டு இருக்கின்றது. இதற்காக நான் என்ன சொல்கிறேன் என்றால், நகரம், நகரத்தை சுற்றி இருக்கின்ற ரேடியஸ், ஒரு குறிப்பிட்ட இத்தனை சுற்றளவுக்குள்ளே எவன் டென்ட் போட்டாலும் சரி அவர்களுக்கு எல்லாம் 60 சதவீதம் தான். வசூலிப்பதிலே அங்கே காம்பவுண்ட் டாக்ஸ் அமலில் இருக்காது. என்ற நிலைமையினைக் கொண்டு வர வேண்டும்.





ஒரு காலத்திலே, எங்களுடைய ஆட்சி இருந்தபோது பொள்ளாச்சி பக்கத்திலே—அரசு பார்த்து அன்றைக்கு சில இடங் களிலே காம்பவுண்ட டாக்ஸ் கொடுத்திருந்த நாங்கள் அதிலே அப்படிப்பட்ட முறையைக் கொண்டு வந்தோம். ஆனால் உங்க ளுடைய ஆட்சியில் அதை எடுத்து விட்டீர்கள். எனவே அதன் மூலமாக மட்டும், நகரம் நகரத்தைச் சுற்றி இருக்கின்ற இடம், சென்னையைச் சுற்றிப் பக்கத்திலே பாருங்கள்.

சென்னை சுற்றுப் பக்கத்தில் பாருங்கள். எல்லாம் ஒட்டு மொத்தமாகப் போட்டுக் கொண்டு கொள்ளை இலாபம் அடிக் கிறார்கள். பல லட்சக் கணக்கான, கோடிக் கணக்கான பணத்தை பல சினிமா முதலாளிகள் எடுத்து விடுகிறார்கள். அந்தப் பணத்தை வசூல் செய்தால் கூட நீங்கள் பிஸ்கட்டுக்கு வரி போட்டிருக்கத் தேவை இல்லை. அரசாங்கத்திற்கும் வர வில்லை. தனிப்பட்டவர்கள் அப்படி கொள்ளை அடிக்கிறார்கள். எனவே நான் அரசுக்கு அனுசரணையாகத்தான் சொல்கிறேன். எனவே பெரிய நகரங்களிலே, இப்படி இருக்கிற இடங்களில் ஒரு ரேடியஸ் வைத்துக் கொண்டு நீங்கள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையில் மேஜர் பஞ்சாயத்துக்களுக்கு 19 சதவீதம் என்று வசூல் செய்கி றீர்கள். பஞ்சாயத்துக்கு 16 சதவீதம் வசூல் செய்கிறீர்கள். ஆனால் மேஜர் பஞ்சாயத்துக்கள் என்று பெயர் இருக்கிறதே தவிர எல்லா பஞ்சாயத்துகளும் மேஜர் பஞ்சாயத்துக்களாக இல்லை. க்ரேட் 1, க்ரேட் 2 என்றிருக்கின்றன. சில பஞ்சா யத்துக்களில் இருக்கிற எக்ஸிக்யூட்டிவ் ஆபீஸருக்கு சம்பளம் கொடுக்கக்கூட முடியாமல் பல பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. தத்தளித்துக் கொண்டிருக்கின்றன. சோளிங்கர் மேஜர் பஞ்சாயத்து. வந்தவாசி மேஜர் பஞ்சாயத்து. செங்கம், பேரணாம்பேட் நிறைய வருமானம் வரக்கூடிய பகுதிகள். அதுவும் மேஜர் பஞ்சாயத்து, அதற்கும் 19 சதவீதம். திருவலம், காட்பாடி இவற்றிற்கும் 19 சதவீதம். எனவே கிரேட் 1க்கு ஒரு முறையும் கிரேட் 2க்கு ஒரு முறையும் என்று மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று. ஒட்டு மொத்தமாக காம்பவுண்ட் வரி வாங்கு கிறீர்கள். அப்போதும் சினிமாக் கொட்டகைக்காரர்களை சேல்ஸ் டாக்ஸ் டிப்பார்டுமென்ட் விடுகிறதா ? பழைய மாமூலை எடு என்று தியேட்டர்களுக்குள் புகுந்து கொண்டு எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்று கணக்கெடுத்து வசூலில் ஈடுபடு கிறார்கள். இன்னொன்று, அமைச்சர் அவர்கள் கூடச் சொன்னார்கள். பல்வேறு வழக்குமன்றங்களுக்கு போயிருக்கிறது. ஒரு சினிமா தியேட்டர் என்றிருந்தால் அதில் நிச்சயமாக தமிழ்ப் படங்கள் காட்டப்பட வேண்டும் என்று சட்டம் போட்டார்கள். அதில் மாறுபட்ட கருத்து இல்லை எனக்கு. ஒவ்வொரு சினிமாத்

தியேட்டர்களிலும் தமிழ் படம் போடவேண்டும், தமிழ் உணர்வு,
தமிழ்ப் படங்கள் வசூல் பெருக வேண்டும். அந்தக் கோணத்தில்
வேண்டுமானால் அந்தச் சட்டம் இருந்திருக்கலாம். நான் மறுக்க
வில்லை. ஏன், சினிமாத் தியேட்டர்களுக்கு மட்டும்தான் அது
இருக்க வேண்டுமா ? நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.
இந்த நாட்டில் எவ்வளவோ ஹோட்டல்கள் இருக்கின்றன.
ஃபை ஸ்டார் ஹோட்டல்ஸ். உங்களிடம் கணக்கு இருக்கிறது.
போய்ப் பாருங்கள். பெயருக்கு ஒரு தமிழ் இருக்கிறதா ? அங்கு
தமிழ் பாட்டு போடுகிறார்களா ? எடுத்தவுடனே டமால் டமால்
என்று அடிக்கிறார்கள். காது பிய்த்துக் கொண்டு போகிறதே
தவிர ஒரு தமிழ் பாட்டாவது இருக்கிறதா ? ஒரு தமிழ் பாட்டா
வது போடுகிறார்களா ? கேட்டால் முடியாது என்று சொல்
கிறார்கள். ஃபை ஸ்டார் ஹோட்டல்களானாலும் சரி அல்லது
டென் ஸ்டார் ஹோட்டல்களானாலும் சரி ஒரு நாதஸ்வரம்
போடப்படுகிறதா, ஒரு தமிழ் பாட்டு பாடப்படுகிறதா ?
கேட்டால் வெளிநாட்டிலிருந்து வருகிறவர்களுக்கு அடிக்கிறார்
களாம். வெளிநாட்டுக்காரர்கள் மட்டுமா வருகிறார்கள் ? இங்கி
ருந்து யாரும் போவதில்லையா ? இவர்களுக்கு என்ன பாதிக்
காசா போடுகிறார்கள் ? டமார் டமார் என்று அடிக்கிறார்கள்.
ஒரு சட்டம் கொண்டு வர வேண்டும். ஃபைவ் ஸ்டார்
ஹோட்டல்களாக இருந்தாலும் சரி எந்த ஸ்டார் ஹோட்டல்
களாக இருந்தாலும் சரி தமிழ் போர்ட் இருக்க வேண்டும்,
விலைப் பட்டியல் தமிழில் இருக்க வேண்டும், அங்கே பாடுகிற
பாட்டு தமிழில் இருக்க வேண்டும் என்று அந்த முறையில் ஒரு
சட்டம் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்.ஓ.சி. வழங்குவதில் ரொம்ப கால தாமதம் ஏற்படுகிறது.
அமைச்சர் அவர்களுக்கே தெரியும். சில தியேட்டர்களில் லட்சக்
கணக்கில் கட்டிவிட்டு அமைச்சர்கள் போய்க் காத்துக் கொண்டி
ருக்கிற நேரத்தில் கூட பா்ம் வராது இருப்பது அவர்களுக்குத்
தெரியும். அதிகாரிகளின் டிலே காரணமாக லட்சக் கணக்கில்
பணம் போட்டு நடத்துகிறவர்கள் பணம் முடக்கப்படுகிறது.
ஆகவே அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

இந்தத் தியேட்டர்கள் ஆயுள் ஒரு ஆண்டாக இருந்து பிறகு
இரண்டரை ஆண்டுகளாக மாறி, கடைசியில் மூன்று ஆண்டுகள்,
இன்று ஐந்து ஆண்டுகள் என்றிருக்கிறது. அவற்றிற்கு பர்ம
னென்ட் கணக்ஷன் கொடுத்தால் என்ன. சிலருக்கு மூன்றாண்டு
கள் கொடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். சிலர் சொல்கி
றார்கள் டெம்பரரியாக 28 நாட்கள் தான் கொடுத்திருக்கிறார்கள்
என்று சொல்கிறார்கள். 28 நாட்களுக்கு ஒருமுறை மாமூல்
கொடுக்க வேண்டும் என்கிறார்கள். ஐந்து ஆண்டுகள் பெர்ம
னன்டாக கொடுத்து விட்டுப் போய் விடலாமே. அதைச் செய்ய
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்து, விளம்பரத் துறை. விளம்பரத் துறை நம் அமைச்
ரவர்கள் கையில் வைத்திருக்கிறார்கள். இந்த ஆட்சியின் மகத்
தான சாதனை என்று சொல்வது இந்த விளம்பரத் துறைதான்.
விளம்பரத்தில் உங்களை வின் செய்ய ஆளே கிடையாது. உலகத்
திலேயே நோபல் ப்ரைஸ் கொடுக்கலாம். உலகத்திலேயே எந்த
அரசு அதிகமாக தன்னை விளம்பரப்படுத்திக் கொள்கிறது என்று
போட்டி அகில உலகத்தில் நடைபெறுமானால் The Prize will
go to the A. I. A. D. M. K. Government. அதில் ஒன்றும்
மாறுபட்ட கருத்தே கிடையாது. காரணம், உங்களை விளம்பரம்
செய்யவில்லை என்றால், யாராக இருந்தாலும் ஒத்துக் கொள்ள
மாட்டீர்கள். இந்த டி.வி. இருக்கிறது. அது ஒரு சாதனம்.

(பிற்பகல் 1.00)

இது மத்திய சர்க்காருடையது. அவர்கள் இஷ்டப்பட்டால்
காட்டுவார்கள். இல்லாவிட்டால், விட்டு விடுவார்கள். உடனே
அதற்குக்கூட நீங்கள் ஏன் காட்டவில்லை என்று கேட்கிறீர்கள்.
மத்திய சர்க்காரின் சாதனம், தமிழ்நாட்டிலே இருக்கிறது.
இன்றைக்கு, தமிழரசு என்ற பத்திரிகை இருக்கிறது. எங்கள்
படங்களைப் போட்டிருக்கிறீர்களா ? எங்கள் பேச்சுக்களைப்
போட்டிருக்கிறீர்களா ? போட மாட்டீர்கள், தமிழ் சினிமா
டாகுமென்டரி எடுக்கிறீர்களே, அதிலே எங்களைக் காட்டியிருக்
கிறீர்களா ? எங்களைக் காட்ட மாட்டீர்கள். ஏனென்றால்,
அது உங்கள் கையில் இருக்கிறது. அதிலே எங்கள் முகத்தைக்
கூட காட்ட மாட்டீர்கள். கேட்டால், அது எங்கள் இஷ்டம்,
எங்கள் அரசு, எதையும் செய்யும் என்று கூறுவீர்கள். அதே
மாதிரிதான் இந்த டெல்லி சர்க்காரும் சொல்லும். அதைக்
கேட்க வேண்டும்.

பொன் விழா கொண்டாடப்பட்டது. டி.வி. எடுக்கப்பட்டது.
அந்த டி.வி.யிலே ஒரு நடிகையின் படத்தைக் காட்டவில்லை.
அதனால் டி.வி. வந்தாலே, தேவையில்லை என்று சொல்லி
விட்டீர்கள். ஒரு தடவையா, இரண்டு தடவையா ? கிட்டத்
தட்ட 3 முறைகள்கூட இந்த மாதிரி அந்த டி.வி.காரரை நடத்தி
யிருக்கிறீர்கள். டி.வி.யில் அந்த நடிகையை சரியாகக் காட்ட
வில்லை என்பதற்காக, உங்களுக்குப் பொங்கி வந்த கோபம்தான்
என்ன? அந்தப் கோபம் டி.வி.யில் பேரறிஞர் அண்ணா அவர்கள்
பிறந்த நாள் விழாவைக் கொண்டாடுகிறபோது, அண்ணாத்துரை
பிறந்த நாள் விழா, அண்ணாத்துரைக்கு அஞ்சலி என்று போட்டுங்
காட்டினார்களே, அன்றைக்கு உங்களுக்குக் கோபம் பொங்கி
வந்ததா ? மகாகவி சுப்பிரமணிய பாரதியார் என்கிறீர்கள்,
நான் பாராட்டுகிறேன். சி. இராஜகோபாலாச்சாரி அவர்களை,
மூதறிஞர் இராஜாஜி என்று சொல்கிறீர்கள் ; அதைப்பற்றி நான்
கவலைப்படவில்லை. ஆனால், பேரறிஞர் அண்ணா அவர்களை,
'அண்ணாத்துரைக்கு அஞ்சலி' என்று சொல்லுகிறார்கள்,
யாருக்காவது கோபம் வந்ததா ? கண்டனக் குரல் அதற்காக

எழுப்பினீர்களா? அரசாங்கத்திலாவது கூப்பிட்டுச் கேட்டீர்களா? யாரும் செய்யவில்லை. ஒன்றும் கிடையாது. யாருக்காவது வந்ததா அந்த எண்ணம்? இல்லை. நான் வருத்தப்படுகிறேன். அந்தத் தலைவனுடைய விவகாரத்திலே நமக்கு வேறுபாடு இல்லை; ஆனால், அண்ணாத்துரை என்று எழுதிய அந்த டி.வி.யின்மீது கோபம் வந்ததா? எப்படி எழுதலாம் என்று இந்த சர்க்காரிலே செய்தி—விளம்பரப் பொறுப்பை ஏற்றிருக்கும் அமைச்சராவது கண்டனம் விட்டாரா? இல்லையே..

திரு. வ. சத்தியமூர்த்தி : பாயின்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களை அண்ணாத்துரை என்று எழுதப்பட்டது தவறு, ஏன் அதைப்பற்றிக் கேட்கவில்லை என்று சொல்லுகிறாரே, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பார்லிமென்டில் இருக்கிறார்களே, அங்கே இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கிறார்களா? டி.வி. மத்திய சர்க்காரின் சார்பில் இயங்குகிறது என்பதை அறிவார்களா?

திரு. துரை முருகன் : இதைத் தான் நான் முதலிலே சொன்னேன். நான் கேட்கிறேன். உங்கள் சர்க்கார் அந்த நடிகையின் படம் சரியாக வரவில்லை என்பதற்காக அந்த டி.வி. காரரை வெளியே போ என்று சொன்னீர்களே, அந்த உணர்வு அன்று உங்களுக்கு வந்ததா? என்பதைத்தான் சுட்டிக்காட்டுகிறேன். பார்லிமென்டிலே கேட்டிருக்கிறார்கள்.

இன்னொரு விவகாரம். அந்த விழாவிலே கலந்து கொண்ட கவர்னர் படம் போட்டிருக்கிறார்கள். அப்படி போடப்பட்ட அந்தப் படத்திலே நடிகைப் படம் வந்திருக்கிறது. பிரிசிடென்ட் ஒரு பக்கம், முதலமைச்சர் ஒரு பக்கம், கவர்னர் ஒரு பின்னால் தலையைக் காட்டுகிறார், தலையைக் காட்டி, எட்டிப் பார்க்கிறார். அந்தப் படத்தை வெளியிட்டிருக்கலாமா? உங்கள் 'தமிழரசு' பத்திரிகையிலும், 'இந்து' பத்திரிகையிலே முதல் பக்கத்திலும் வெளியிட்டிருக்கிறார்கள். முதலமைச்சர் பின்னால் கவர்னர் இருந்து கொண்டு, கழுத்துவரை உள்ள படத்தைப் போட்டிருக்கிறீர்கள்.

டாக்டர் கே. சமரசம் : பாயின்ட் ஆப் ஆர்டர்,..........

திரு. துரைமுருகன் : ஐ ஆம் நாட் ஈல்டிங்.

டாக்டர் கே. சமரசம் : உள்நோக்கம் கற்பித்து சொல்லக் கூடாது. ஏதோ ஒரு நடிகை என்று சொல்கிறார்...........

திரு. துரைமுருகன் : இங்கே இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். எதிலே வேண்டுமானாலும். விளம்பரம்தான். எடுத்துக் காட்டுகிறேன். பாரதி விழாவைக் கொண்டாடுகிறீர்கள்,



அந்த பாரதியின் அழகான படத்தை தமிழரசிலே வெளியிட்டிருக்கிறீர்களா? இல்லை. ஆனால், முதலமைச்சருடைய படத்தை, சிம்மாசனத்திலே உட்கார்ந்து இருப்பதைப்போல் ஒரு படத்தைப் போட்டிருக்கிறீர்கள். தன்னிறைவுத் திட்டத்தைப் போடுகிறீர்கள். தன்னிறைவுத் திட்டம் நல்ல திட்டம். இத்திட்டம் ஒவ்வொரு இடத்திலும் நடக்கிறது. திருபுவனம் ஒன்றியத்திலும் நடக்கிறது. ஆனால், பத்திரிகை விளம்பரத்திலே முதலமைச்சர் படம் தான் வருகிறது. முதலமைச்சரோடு இராசாவானந்தமும் சேர்ந்து வந்து விடுகிறார். நான் கேட்கிறேன். இந்திரா காந்தி அவர்கள் 20 அம்சத் திட்டத்தை வெளியிட்டார்கள். அந்தத் திட்டத்தை பற்றி விளம்பரம் செய்கிறபோது, என்னுடைய படத்தைப் போட்டு விளம்பரம் செய்யக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த விளம்பரத்திலே இருக்கின்ற அடக்கம் ஏன், உங்களிடத்தில் இல்லை. எல்லாவற்றிலும் படத்தோடு விளம்பரம் போடுகிறீர்கள். இதிலே நான் ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பத்திரிகை விஷயத்தில், உங்களை எந்தப் பத்திரிகை புகழ்கிறதோ, அந்தப் பத்திரிகைக்கு விளம்பரம் கொடுக்கிறீர்கள். 'மக்கள் குரல்' பத்திரிகை ஒரு மலர் வெளியிடுகிறது.

அந்த பத்திரிகை மலர் வெளியிடுகிறது. ஆனால் அந்த மலரிலே, தலைவர் அவர்களே பக்கத்திற்கு பக்கம் இந்த அரசினுடைய அத்தனை துறைகளிலேயிருந்தும் விளம்பரம் தரப்பட்டிருக்கிறது. என்ன அப்பேற்பட்ட மலர் அது, லட்சக்கணக்கான மக்கள் கரங்களிலே புரண்டுகொண்டிருக்கிற மலர். காரணம் உங்களைப் பற்றி புகழ்ந்து எழுதுகிறது என்பதைத் தவிர —அந்த மலரை வேண்டுமென்றால் அமைச்சர் அவர்களுக்குத் தருகிறேன், அவர் பார்த்திருப்பார். அவருக்கு வராத மலரா; அந்த மலரிலே ப்க்கத்திற்கு பக்கம் முதலமைச்சர் படமும், பக்கத்திற்கு பக்கம் ஒரு நடிகையின் படமும், இதைத்தவிர அதிலே வேறு என்ன எழுதியிருக்கிறது. உங்களுக்கு உங்களைப் பற்றி போட வேண்டும். இன்னொன்றைக் கூட நான் சொல்கிறேன், பால் கமிஷன் அறிக்கையை கலைஞர் அவர்கள் வெளியிட்டு இங்கே விவாதம் நடந்தது. அந்த விவாதம் முடிந்தவுடனே, அமைச்சர் அவர்கள் இதயத்தில் கை வைத்துக் கொண்டு நான் சொல்வதை மறுக்க மாட்டார் என்று கருதுகிறேன், உடனடியாக உங்களுடைய செய்தித்துறை டைரக்டர்களோ, அல்லது செய்தித் துறையிலே பணியாற்றுகின்றவர்களோ ஒவ்வொரு பத்திரிகைக்கும் போய் எங்களுடைய அமைச்சர் பேசியதை முதல் பக்கத்திலே பெரியதாக போட்டாக வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். நேற்று முன் தினம் ஒரு அமைச்சருடைய அறிக்கை; அந்த அறிக்கைக்கு முதலிடம் போட வேண்டுமாம். திருச்செந்தூரிலே சுப்பிரமணிய பிள்ளைக்கு பின்னாலே, அங்கே அதுபோல திருடு எண்ணுகிற போது ஏற்பட்டு விட்டது. ஏன் அந்த திருட்டை போடவேண்டுமென்று எல்லோரும் போய் பத்திரிகை அலுவலகங்களிலே உட்கார்ந்து கொண்டு,

[திரு. துரைமுருகன்] [1982 மார்ச் 11

அந்தத் துறையினுடைய செயலாளர் போய் அதை, பெரியதாக போடுங்கள் என்று கேட்க வேண்டும். பல பத்திரிகைகளுடைய நிருபர்கள் மட்டுமல்ல ஓனர்களே என்னிடத்திலே கண்ணீர் விடுகிறார்கள், இது நியாயம் தானா ? அந்த திருட்டை ஏன் போடச் சொல்கிறீர்கள். அதைப்போலவே தான் முன்னாலே சுப்பிரமணியம் பிள்ளை பணம் எடுத்திருக்கலாம் என்று ஜோடிப் பதற்கு எல்லா பத்திரிகைகளிலும் முக்கியத்துவம் கொடுத்து போடச் சொன்னீர்கள். அப்படியென்றால் அது '' மிஸ்யூஸ் ஆப் பவர் '' இல்லையா, பத்திரிகைக்காரர்களுக்கு எதைப் போட வேண்டும், எதை போடக்கூடாது என்பது தெரியுமே ; நீங்கள் அதிகாரம் இருக்கிறது, விளம்பரம் கொடுக்கிறோம் என்ற காரணத்தால் அங்கே போய் உட்கார்ந்து கொண்டு இதைப் போடு, அதைப்போடு என்று சொல்வது என்ன முறை ? உங்களை தாக்குகிற, உங்கள் குற்றங்களை சுட்டிக்காட்டுகிற பத்திரிகைகளுக்கு அதை மட்டும் தரமாட்டார்கள். எங்ஃள் எதிரொலி பத்திரிகைக்கு '' அக்ரிடிஷன் '' என்ற கார்டு இன்னும் வழங்கப்படவில்லை. ஒரு விண்ணப்பம் செய்து 9 மாதங்கள் ஆகிறது. இன்னும் அந்த கமிட்டி கூடவில்லை, விளம்பரம் கொடுக்கவில்லை. அதேமாதிரி பத்திரிகையாளர்கள் பாஸ் தரவில்லை என்று பல பிரச்னைகள் இருக்கிறபோது நீங்கள் அவற்றின் மீது நடவடிக்கை எடுப்பது கிடையாது. விளம்பரம் மூலமாக எல்லாவற்றையும் முடித்து விடலாம் என்ற எண்ணம் உங்கள் மனதிலே ஏற்பட்டிருக்கிறது, என்பதற்காகத் தான் இதை சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அற நிலையங்கள் துறைப்பற்றி மற்ற நண்பர்கள் விளக்கமாக பேசினார்கள். அறநிலையத் துறை உங்களுடைய ஆட்சிக் காலத்திலே தான் பொற்காலம் போல இருப்பதாக சொன்னார்கள். அறநிலையத் துறை என்று ஒரு துறை, அதன் மீது ஒரு விவாதம், இந்த மன்றத்து உறுப்பினர்களுடைய கருத்து, அதற்கு பிறகு அரசாங்கம் எடுத்திருக்கிற முடிவுகள் இதுபோன்ற ஒரு நிலையை உருவாக்கினதே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே தான். அதற்கு முன்னாலே கிடையாது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இந்த மாநிலத்திலே ஆண்ட போது 1967-க்கு முன்னாலே; 1967 வரையில் அறநிலையங்கள் எண்ணிக்கை 9·0 ; 1976-லே நாங்கள் விட்டுப் போன காலத்திலே 24,246 ; அறநிலையங்களுடைய வருமானம் 1967-லே 3 கோடி ; நாங்சள் விட்டுப் போன காலத்திலே 12 கோடி ; திருப்பணி செய்ய அரசு உதவிய நிதி 1967 வரையில் 3 லட்சம் ; ஆனால் திராவிட முன்னேற்ற கழக ஆட்சி காலத்தில் 1976-லே 15 லட்சம்; 1967 முதல் 1975 வரை திருப்பணி, குட முழுக்கு செய்த கோவில்கள் 4,125 ; கிட்டத்தட்ட 16·5 கோடி செலவில் தனி அதிகாரியை நியமித்து தனியார் ஆதிக்கத்திலிருந்த கண்டுபிடிக்கப்பட்ட அறநிலையங்கள் 1—3—1975 வரை 41,306 ; அதற்கு இருந்த நிலம் மட்டும் கண்டுபிடிக்கப்பட்டது 2 லட்சத்து 1,343 ஏக்கர்; கண்டுபிடிக்கப்பட்ட அற நிலையங்களிலே துறையினுடைய



1982 மார்ச் 11] [திரு. துரைமுருகன்]

கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டவை 25,000; இவைகளுக்குச் சொந்தமான நிலம் 65,000 ஏக்கர் ; அதேபோல தான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அறநிலைய துறைக்கென்று ஒரு அமைச்சர். சட்டமன்றத்திலே தனி விவாதம், அறங்காவலர் குழுவிலே ஒரு அரிசன தோழர் கண்டிப்பாக இருக்கவேண்டும் என்கிற சட்டம்; அனைவரும் ஜாதி வித்தியாசம் இல்லாமல் அர்ச்சகராகலாம் என்று புரட்சிகரமான அனுமதி ; கோவில்களிலே தமிழ் அர்ச்சனை நடைபெற வேண்டுமென்று போட்ட சட்டம்.

அறநிலையங்களுக்கு வாடகையிலிருந்து விதிவிலக்கு அளித்து அதனாலே சென்னைக்கு மட்டும் அன்றைக்கு வந்துள்ள புள்ளி விவரப்படி மட்டும் வந்த லாபம் 20 இலட்ச ரூபாய். இதை ஒழுங்காகப் பயன்படுத்தி இருந்தால் தமிழ்நாடு முழுவதும் 6 கோடி ரூபாய்க்கு வருமானம் வரவேண்டிய நிலை இருக்கிறது. வருமானம் வரவேண்டியவைகளை விட்டுவிட்டு நீங்கள் பிஸ்கட்டிற்கு வரிப் போட்டுக்கொண்டு இருக்கிறீர்கள்.

(பிற்பகல் 1—10)

அது மட்டுமல்ல, ஆண்டவன், அவனுடைய பிள்ளைகள் நாம் ஏழைகளின் சிரிப்பிலே இறைவனைக் காண்கிறோம் என்றும் சொன்னவர் அண்ணா. அந்த ஏழைகளுக்காக உடல் ஊனமுற்றோர்களுக்கு உதவி நிதி, செவிடர், ஊமைகளுக்கு பள்ளி 2, அனாதைக் குழந்தைகளைப் பராமரிக்க கருணை இல்லம், சிறார் காப்பகங்கள் 5, முதியோர் இல்லங்கள் 3, ஏழைக் குழந்தைகளுக்கு இலவச பால் வழங்கு திட்டம், ஏழை எளியவர் களுக்கு இலவசத் திருமணக் கூடங்கள், ஏழைகளுக்கென கட்டி முடிக்கப்பட்ட திருமண மண்டபங்கள் 79, பணி தொடரப் பட்ட திருமண மண்டபங்கள் 128, நூல்நிலையங்கள் 204, சித்த வைத்திய மனைகள் 23, ஆ..கில வைத்திய மனை 1, கலைக்கூடங்கள் 5, இந்து சமயப் பண்பாட்டுக் கல்லூரி 1, கீழ்த்திசை மொழி கல்லூரி 1, ஆண்கள் கலைக்கல்லூரி 4, மகளிர் கலைக் கல்லூரி 4, உயர்நிலைப் பள்ளி, நடுநிலைப்பள்ளி 14, நாதஸ்வரப் பள்ளி 2, இவைகள் எல்லாம் திராவிட முன் னேற்றக் கழக ஆட்சிக்காலத்திலே அறநிலையத் துறையிலே செய்யப்பட்ட திருப்பணிகள் ஆகும் அது மட்டுமல்ல, ஆலய ஊழியர்களுக்கு அரசு ஊழியர்களைப் போலவே குடும்பப் பாது காப்புத் திட்டம் வழங்கப்பட்டதும் எங்கள் ஆட்சியிலேதான். ஆனால் இன்றைக்கு இவ்வளவு பாருட்கள் குவிந்து இருக்கின்ற அந்த அறநிலைய துறையின் மானியக் கோரிக்கை அறிக்கை யிலே இவை இருக்கவேண்டும். ஆனால் அந்த அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன். அதிலே பெரும் பகுதி ஆக்கிர மித்து இருப்பது—நான் பின்னாலே மற்றவைகளைச் சொன் னாலும்—முக்கியமாக உணர்வைத் தூண்டக் கூடியது தமிழ் அர்ச்சனை பிரச்சினைதான். இதிலே சொல்லியிருக்கிறீர்கள். 'தமிழிலும் அர்ச்சனை செய்யப்படும்' என்று. தமிழிலும் அர்ச்

சனையப்படவேண்டுமென்ற எண்ணம் திரு.பக்தவச்சலம் அவர்கள் முதல் அமைச்சராக இருந்த காலத்திலே வந்து போரூரிலே ஒரு கோயிலிலே அவர் கொண்டுவந்தார். அதற்குப் பிறகு 1974-ஆம் ஆண்டு தமிழிலே மட்டும் அர்ச்சனை செய்யப்படும் என்று திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒரு தாக்கீதை அனுப்பிற்று. அதற்கு வழக்கிற்குப் போனார்கள். உயர்நீதி மன்றத்திலே. இராமேஸ்வரம் மடாதிபதி உச்ச நீதி மன்றத்திற்குப் போனார் என்று கேள்விப்படுகிறேன். ஆனால் இவ்வளவுக்கும் பிறகு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் என்ன செய்தோம். சமஸ்கிருதத்திலும் அர்ச்சனை செய்யப்படும் என்று நாங்கள் எழுதி வைத்தோம். அப்படித்தான் நாங்கள் எழுதி வைத்தோம். ஆனால் நீங்கள் தமிழிலும் அர்ச்சனை செய்யப்படும் என்று எழுதி இருப்பது சமஸ்கிருதத்தை முன்னாலே நிறுத்தி தமிழைப் பின்னாலே நிறுத்தி நீங்கள் செய்திருப்பது எப்படித் தொண்டாகும். இதுதான் நீங்கள் தமிழுக்கு ஆற்றுகிற பணியா என்று நான் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, எல்லோரும் சொன்னார்கள். தி.மு.க. ஆட்சிக் காலத்திலே உண்டியல் உடைக்கப்பட்டது. மருதமலை உண்டியல் உடைக்கப்பட்டது அதை எடுத்து தேர்தல் செலவு செய்தார்கள் என்று, இங்கே இருக்கின்ற திரு. க. அன்பழகன் உட்பட பலர் சொன்னார்கள். நான் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். தி.மு.க. ஆட்சியின்மீது எடுத்து வீசப்பட்ட சேற்றிலே ஒன்றாகத்தான் நான் அதை எடுத்து கொள்கிறேன். தவிர அதிலே கடுகளவு கூட உண்மை கிடையாது. நான் உண்மைகளைச் சொல்கிறேன். புத்தம்புதியதாக வந்திருக்கின்ற சில பேர்களுக்கு வேண்டுமானால் அது தெரியாமல் இருக்கலாம். 1974-ஆம் ஆண்டு அந்த கோயிலை தணிக்கை செய்கிறார்கள். மருத மலைக் கோயிலை தணிக்கை செய்கிற அதிகாரி அப்போது கண்டுபிடிக்கிறார். என்ன! அர்ச்சனை டிக்கட்டுகள் நுழைவு சீட்டுகள் போலியாக அச்சடிக்கப்பட்டிருப்பதாக தணிக்கை அதிகாரி கண்டு பிடிக்கிறார். உடனே மேல் அதிகாரியின் கவனத்திற்கு கொண்டுவருகிறார். மேல் அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டுவந்தவுடன் நிர்வாக அதிகாரியை வேலை நீக்கம் செய்கிறார்கள், சஸ்பென்ட் செய்கிறார்கள் நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். அதற்குப் பிறகு ஒரு ஆணையாளர் பூர்வாங்க விசாரணை செய்கிறார். பூர்வாங்க விசாரணை செய்கிறபோது அவர் டிக்கட் மட்டும் அச்சடிக்கவில்லை, உண்டியலையே உடைத்து இருக்கிறார் என்ற உண்மையைக் கண்டுபிடிக்கிறார்கள். கண்டுபிடித்து நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம். எடுக்கிற நேரத்திலே எங்கள் ஆட்சி கலைக்கப்பட்டது. அப்படியே பைல்கள் தேங்கிப் போயிற்று. இந்த மாநிலத்திலே குடியரசுத்தலைவர் ஆட்சி கவர்னர் கையிலே இந்த நாடு இருக்கிறது.



உடனே அவரிடத்திலே போய் முறையிடுகிறார்கள். தி.மு.க. ஆட்சி எங்களை சஸ்பென்ட் செய்து விட்டது என்று. உடனே கவர்னர் அவர்கள் அன்றைக்கு இரண்டையும் வரவழைத்துகி பார்க்கிறார்கள். பார்த்த பிறகு கவர்னர் சொல்கின்றார் மோசமான குற்றத்தைச் செய்திருக்கிறாய் உன்னை வேலை நீக்கம் செய்ததே தப்பு எனவே கவர்னராகிய நான் உத்தரவிடுகிறேன் உன்னை வேலைநீக்கமே செய்கிறேன் என்கிறார். வேலை நீக்கத்திற்குப் போய்விடுகிறது. (மணியடிக்கப்பட்டது) நான் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உடனே முடித்து விடுங்கள். மாலையில் பேரவைகூட வேண்டியிருக்கிறது.

**திரு. துரைமுருகன் :** நான் முடித்து விடுகிறேன். உங்களுடைய நிலைமைகளை நான் புரிந்து கொண்டிருக்கிறேன். பிறகு குடியரசுத் தலைவருடைய ஆட்சி போய் நம்முடைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வருகிறது. அப்பொழுது முதல் முறையாக இந்த இலாக்காவைக் கையில் வைத்திருந்தவர் மாண்புமிகு முதலமைச்சரவர்கள். முதலமைச்சரவர்களிடத்திலே கொண்டு போய் அதேபோல் இந்த விவாகாரத்தைச் சொல்கிறார்கள். முதலமைச்சர் பைல்களைப் புரட்டிப் பார்த்துச் சொன்னார் உன்னை வேலை நீக்கம் செய்தது மட்டும் போதாது உன் மீது வழக்கே தொடரப்பட வேண்டுமென்று சொல்லி அதற்குப் பிறகு அவர் மீது கிரிமினல் வழக்கு தொடரப்பட்டு கோவை நீதிமன்றத்திலே வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த நேரத்திலே தான் உங்களுடைய நாயுடு கமிஷன் தேவைப்படுகிறது. நாயுடு கமிஷன் வந்தவுடனே சொன்னார் யாரை நாங்கள் வேலைநீக்கம் செய்தோமோ அவர் மீதே எதிர்த்து இதையெல்லாம் தி.மு.க. அமைச்சர்கள் சொன்னார்கள். என்று அந்த ஆள் கொடுத்தார். பிறகு அதற்குத் தக்கபடி ஒரு விசித்திரமான அறிக்கையை அவர் கொடுத்திருக்கிறார். நான் அவற்றில்கூட உள்ளே போகவில்லை. நாயுடு கமிஷன் அறிக்கை கொடுத்து இரண்டாண்டுக் காலம் ஆயிற்று. நான் கேட்கிறேன் அந்த அறிக்கை மீது நடவடிக்கை எடுக்க அமைச்சருக்கு உரிமை உண்டு. நான் இப்பொழுதுகூடச் சொல்லுகிறேன். அந்த அறிக்கையின்மீது நீங்கள் இரண்டாண்டுக் காலம் நடவடிக்கை எடுக்காதது ஏன்? நீங்கள் எடுங்கள். அந்த அறிக்கை எவ்வளவு பொய்யும் புனைச் சுருட்டும் கொண்டது என்பதை நீதிமன்றத்திலே சுக்கு நூறாக எடுத்து உடைப்பதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் தயாராக இருக்கிறது என்பதையும் இந்த மாமன்றத்திலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இத்துடன் முடித்து விட வேண்டும். அமைச்சர் பதில் சொல்லி பிறகு மாலையில் அவை கூட வேண்டும். எல்லோரையும் விட அதிகமாக இரண்டு நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். 27 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. துரைமுருகன் :** நான் முடித்து விடுகிறேன். சொத்தை நல்ல வாயன் சேர்க்க வேறு வாயன் அழித்தான் என்பதைப் போல திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஓகோ என்று வளர்ந்த அறநிலையம் இப்பொழுது எப்படியிருக்கிறது என்று கேட்டால் கோயில் கூடாது என்பது அல்ல எங்கள் கொள்கை கோயில் கொடியவர்களின் கூடாரமாக இருக்கக் கூடாது என்ற பராசக்தியில் கலைஞர் எழுதினாரே அதுவும் போய் இன்றைக்குக் கொலைகாரர்களுடைய உறைவிடமாக ஆலயங்கள் மாற்றப்பட்டிருக்கின்றன என்ற குற்றச்சாட்டை இந்த அமைச்சரிடத்திலே விட்டு கொள்ளைக்காரர்கள். கொலைகாரர்கள் ஊரை ஏய்ப்பவர்களின் உறைவிடமாக நமது கோயில்கள் இருக்கின்றன என்று கூறி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

* **மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே நேரம் அதிகமாகி விட்டது. மாலை நான்கு மணிக்கு மீண்டும் சட்ட மன்றம் கூடவிருக்கிறது என்கின்ற உணர்வோடு பேரவை உறுப்பினர்கள் அனைவரும் இங்கே அமர்ந்திருக்கிறார்கள் என்பதையும் கருத்தில் கொண்டிருக்கிறேன். அதே நேரத்தில் அதிக நேரத்தை நான் எடுத்துக் கொள்ளவேண்டிய நிலையில் மாண்புமிகு உறுப்பினர்கள் என்னை வைக்கவில்லை என்பதை மகிழ்ச்சியோடு முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே செய்தி சுற்றுலாத் துறை, அறநிலையத் துறை, வனத் துறை, சின்கோனாத் துறை ஆகிய துறைகளின் சார்பில் வைத்திருக்கிற மானியக் கோரிக்கைகளின்மீது பல்வேறு கட்சிகளைச் சார்ந்த 12 மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். சில வேண்டுகோள்களை வைத்திருக்கிறார்கள். சிலயிடங்களில் நடைபெறுவதாக அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட குறைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஒரு மகிழ்ச்சி. யாரும் மிகப் பெரிய அளவிலே குற்றஞ்சுமத்தவில்லை என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதிகாரபூர்வமான எதிர்க்கட்சியாக விளங்குகிற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இருவர் பேசினார்கள். அதிலே நேற்று பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனியப்பன் அவர்கள் ஒரு தவறான தகவலை இங்கே தந்திருக்கிறார்கள். அதை நான் இறுதியிலே விளக்குவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

செய்தித் துறையை, சுற்றுலாத் துறையைப் பற்றி யாரும் இங்கே அதிகமாக, அதிக அளவிற்கு விமர்சனம் செய்யவில்லை. அதைக் காட்டிலும் சுற்றுலாத் துறையைப் பெரிய அளவிலே





பாராட்டியிருக்கிறார்கள். இன்னும் சில சாதனைகளை, சில பகுதிகளை சுற்றுலாத் தலங்களாக ஆக்க வேண்டுமென்று இங்கே கேட்டிருக்கின்ற அந்தக் கருத்துத்தான் அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது.

[பிற்பகல் 1-20.]

ஆனால், சுற்றுலாத் துறை என்பது இந்திய துணைக் கண்டத்தைப் பொறுத்தவரை எந்தவித முதலீடும் இல்லாமல் சுமார் 500 கோடி ரூபாய்க்கு மேல் இந்திய அரசிற்கு வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டித் தருகிற துறையாக வளர்ந்திருந்தும் கூட, மத்திய அரசு அந்த சுற்றுலாத் துறையை இன்னும் பிரையாரிட்டி செக்டார் என்கிற அளவிலே சேர்க்காமல் 5 ஆண்டுகளுக்குச் சுமார் 200 கோடி ரூபாய் ஒதுக்கலாம் என்கிற அளவிலேதான் திட்டத்திலே அவர்கள் சேர்க்கிற நிலைமையில் சுற்றுலாத் துறை இருக்கிறது. அதை ஒட்டித்தான் மாநிலங்களும் இந்தச் சுற்றுலாத் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்ய முடிகிறது. இருந்தாலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தச் சுற்றுலாத் துறையின்மீது காட்டுகிற அக்கறையின் காரணமாக 5 இலட்சம், 10 இலட்சம் ரூபாய் என்று ஒதுக்கிக் கொண்டிருக்கிற இந்தத் துறைக்கு இந்த ஆண்டு $1\frac{1}{2}$ கோடி ரூபாய்க்கு ஒதுக்கி நாம் சுற்றுலாத் துறைக்கு முக்கியத்துவம் அளித்திருக்கிறோம் என்பதை மாத்திரம் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்வேறு உறுப்பினர்கள் பல்வேறு பகுதிகளைச் சுட்டிக் காட்டி சுற்றுலா வளர்ச்சியில் அதற்கு முதலிடம் தந்து உருவாக்க வேண்டுமென்று தெரிவித்து இருக்கிறார்கள். அவை தக்க நேரத்திலே அரசின் கவனத்திலே எடுத்துக்கொள்ளப்படும். முடிந்த அளவு நிறைவேற்றப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் இறுதியாகப் பேசுகிற பொழுது இங்கே இந்தத் திரைப்படக் கொட்டகைகளுக்கு கம்பவுண்டிங் வரி விதிக்கிற அந்த நிலைமைகளையும், அதனாலே ஏற்பட்டிருக்கிற சில சூழ்நிலைகளையும் நகரத்திலே ஒரு விதமான வரியும், நகரத்தின் எல்லையிலே இருக்கிற சில கிராமங்கள் என்கிற பெயராலே அவைகளுக்கு விதிக்கப்படுகிற அந்த வரி விதிப்பு முறைகளையும் சுட்டிக்காட்டி இதிலே விமர்சித்தார்கள். அவர் நீண்ட அனுபவம் பெற்ற ஒரு உறுப்பினராக இருந்தும் எந்த அமைச்சரிடத்திலே எந்தப் பொறுப்பு இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளாமல் அவருக்குக் கொடுத்த நேரத்தைச் செலவழித்துவிட்டார் என்பதிலேதான் எனக்கு மிகப் பெரிய கவலை. என்னிடத்திலே இருப்பது சினிமாட்டோகிராப் என்கிற அந்தத் துறைதான். அதாவது திரைப்படக் கொட்டகைகளுக்கு உரிமம் வழங்குகிற, அந்த விதிகளை நிர்ணயிக்கிற அந்தப்

பொறுப்புத்தான் என்னிடத்திலே இருக்கிறது. அதற்கு விதிக்கிற அந்தக் கேளிக்கை வரி. வருவாய்த் துறை அமைச்சரிடத்திலே இருக்கிறது. அது என்டர்டெயின்மெண்ட் டாக்ஸ் என்ற அமைப்பின் கீழே வருகிறது — அந்த வரி விதிப்பு முறை வருவாய்த் துறை அமைச்சரிடத்திலே இருக்கிறது. வருவாய்த் துறையினுடைய மானியம் இங்கே நடைபெறுகிறபொழுது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுபற்றி பேசியிருப்பார்களானால், இன்றைக்கும் கொஞ்சம் நேரம் மிச்சமாகியிருக்கும் அதனுடைய பலனையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலேயிருந்து பெற்றிருக்க முடியும்.

ஆனால் என். ஓ. சி.யைப் பற்றியெல்லாம் சில விவரங்களைச் சொல்லியிருக்கிறார்கள். மிகத் தெளிவாக அரசாங்கம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தெரிவித்து இருக்கிறது. என்.ஓ.சி. மனு செய்த 45 நாட்களுக்குள் அவர்களுக்குப் பதில் தந்தாக வேண்டும்; உண்டு, இல்லை என்பதைத் தெரிவித்தாக வேண்டுமென்கிற நிபந்தனைகளையெல்லாம் கண்டிப்பாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் பல மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இதைப் பொருட்படுத்தவில்லையென்ற புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. அது பற்றிய மிகுந்த கண்டிப்பான நடைமுறையை அரசு மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

விளம்பர மோகத்தைப்பற்றி இங்கே மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் பேசினார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த துரைமுருகன் அவர்கள் பேசுகிறார்களே என்பதிலேதான் எனக்கு மிக பெரிய மகிழ்ச்சி. விளம்பரத்தைப் பற்றியும், விளம்பர மோகத்தைப் பற்றியும் மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் பேசுவதுதான் ஆச்சரியங்களிலே மிகத் தலைசிறந்த ஆச்சிரியம். ஆனால், விளம்பர மோகம் எப்படி இருக்கிறது என்பது அல்ல. இங்கே ஒரு நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டி, நம்முடைய தொலைக்காட்சி நிலையத்தோடு தமிழக அரசு ஏதோ தகராறு செய்து கொண்டது, ஊடல் செய்து கொண்டது என்றெல்லாம் பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதையாவது நினைத்து கொண்டு அதற்கு இப்படியும் காரணம் இருக்கலாம் என்று எண்ணிக் கொள்வார்களானால் அது அவர்களுக்குள்ள உரிமை, அதற்குள்ளே நான் தலையிட விரும்பவில்லை. ஆனால், அரசு சில கருத்துக்களை எடுத்து அந்தக் கருத்துக்களின் அடிப்படையிலே சில நடைமுறைகளை மேற்கொள்கிறபோது, அதற்கு ஒரு உள்நோக்கம் கற்பித்து இந்த நோக்கத்திற்காகத்தான் செய்தார்கள் என்று சொல்வார்களானால், அது அவரவர்களுடைய நிலைக்கேற்ற நினைப்பு; அல்லது, அவர்கள் காலத்திலே அவர்கள் அப்படி செய்து கொண்டிருந்தார்கள். அதுதான் இப்பொழுதும் நினைவிற்கு வருகிறது என்று சொல்வதைத் தவிர மேலும் அதற்கு நான் பதில் அளிக்கவில்லை.





'அண்ணாத்துரை' என்று சொன்னார்களே, நீங்கள்
ஆனால்
கொதித்தெழவில்லையே என்று கேட்டார். எப்படி கேட்டிருக்க
வேண்டும்? அவர் கொதித்தெழுந்துவிட்டு, நான் கொதித்தெழுந்
தேன், நீங்கள் கொதித்தெழவில்லையே என்று கேட்டிருப்பார்
களானால், 'ஓகோ, தவறு செய்து விட்டோம் போல் இருக்கிறது'
என்று நானும் அதற்காக வருந்தியிருப்பேன்.

ஆனால் ஒன்றை நான் நினைவுபடுத்துகிறேன். (குறுக்கீடு)
இறுதியிலே சொல்லலாம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி
இந்த மாநிலத்திலே இருந்து அகற்றப்பட்டபோது, இந்த அரசு
அலுவலகங்களிலே வைக்கப்பட்டிருந்த அறிஞர் அண்ணா அவர்
களுடைய படத்தை அன்றைக்கு இருந்த ஆளுநர் ஆட்சி அகற்ற
முற்பட்டபோது, அதைத் தட்டிக் கேட்பதற்கு ஆளுநர் அலுவல
கத்திற்குச் சென்று அதை எடுக்கக்கூடாது என்று கேட்ட கட்சி
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்
பதை அருள்கூர்ந்து மாண்புமிகு துரை முருகன் அவர்களுக்கு.
நண்பர் என்கின்ற முறையிலே, தோழர் என்கின்ற முறையிலே
நினைவுபடுத்துகிறேன். அண்ணாவை மறந்துவிட்டோம் என்று
எங்களையா குற்றம் சொல்வது? அண்ணாவைக் கொடியிலே
வைத்துக்கொண்டு இருந்தால்தான், அண்ணாவை மறைக்க முற்
படுகிறவர்களுக்குக் கொஞ்சம் புத்தி வரும் என்று கொடியிலே,
போட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்
தைப் பார்த்தா, அண்ணாத்துரை என்று கேட்டவரை நீங்கள்
கேட்கவில்லை என்று நீங்கள் சொல்வது. இருந்தாலும் நாங்கள்
மறந்து இருந்த நேரத்திலே நீங்கள் நினைவு படுத்தி இருக்கிறீர்
கள். ஒருவேளை அந்த தொலைக்காட்சி நிலையம் அப்படி
சொல்லுமேயானால், அதை நாங்கள் மீண்டும் கேட்போம். விட
மாட்டோம். அதற்காக அடிபணிய மட்டோம் என்பதையும்
இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, பத்திரிகை விளம்பரத்தைப் பற்றி எல்லாம்
சொன்னார்கள். நான் வேறு விவகாரங்களைப்பற்றி இங்கே பேசக்
கூடாது. நான் எதிர்க்கட்சியில் இருந்து மிகப்பெரிய கணைகள்
எல்லாம் வரும் என்று எதிர்ப்பார்த்து நான் இங்கே தற்காப்பு ஆயு
தங்களோடு இங்கே உட்கார்ந்து கொண்டு இருந்தேன். ஆனால்
நண்பர் துரைமுருகன் அவர்கள் மிகப் பெரிய மனதோடு அந்தக்
கணைகளை எல்லாம் பாவம் இந்த அப்பாவி வீரப்பன் மீது ஏன்
ஏவ வேண்டும் என்று கருதியோ என்னவோ, அவர்கள் ஏவ
வில்லை. ஆனால் விளம்பர மோகத்தைப் பற்றியும், பத்திரி
கைகளுக்கு எப்படி விளம்பரம் தருகிறோம் என்பதைப் பற்றியும்
சொன்னார்கள். எந்தப் பத்திரிகைக்கு எப்படி விளம்பரம்
கொடுத்தால் அது பலனளிக்கும் என்பதைப் பற்றி முடிவெடுக்க
வேண்டிய உரிமை அரசாங்கத்திற்கு இருக்கிறது என்பதை இந்த
அவையிலே முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலை
ஞர் கருணாநிதி அவர்களுடைய கருத்தையும், அவர்களுக்கு அனு
சரணையாக இந்திய பிரதமர் அவர்களுடைய கருத்தையும்,

1973 ஆம் ஆண்டிலே எடுத்துச் சொன்ன ஒரு கருத்தை மாத்திரம்
மாண்புமிகு துரைமுருகன் அவர்களுக்குப் பயன்படும் என்று, நான்
இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்தப்
பத்திரிகை விளம்பரங்களைப் பற்றி பேச்சு வருகிற போது அன்
றைக்கு டாக்டர் ஹண்டே அவர்கள்தான் இடைமறித்து கருத்துக்
களைச் சொல்லுவார். அப்போது மாண்புமிகு முன்னாள் முத
லமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே சொல்லுகிறார்—
''விளம்பரச் செலவு இங்கே மாத்திரம் உயர்ந்திருக்கவில்லை.
மத்திய அரசில் பார்த்தால் கூட 1963—64-லே, 55 லட்சம்
ரூபாயாக இருந்தது, 1971—72-லே 115 லட்சமாக அங்கே உயர்ந்
திருக்கிறது''. எந்த அடிப்படையிலே தரப்படுகிறது என்றெல்
லாம் சொன்னார்கள். ''அன்றைக்கு செய்தித் துறை அமைச்சர்
கள் மாநாட்டில் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் எந்த அடிப்
படையில் விளம்பரங்கள் தரவேண்டும் என்று சொன்னார்கள்
என்றால், இதைப் படிக்கிறேன் கேட்டுப் பாருங்கள்'' என்று முன்
னாள் முதல்வர் அவர்கள் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த
அவையிலே படிக்கிறார்கள். ''டிசம்பர் மாதம் 8-ந் தேதி புது
டில்லியிலே செய்தி விளம்பரத் துறை அமைச்சர்கள் மாநாட்டை
ஆரம்பித்து வைத்து பேசும்போது, அரசாங்க விளம்பரச் சாதனங்
கள் அரசாங்கத்தினுடைய கொள்கைகளை பரப்புவதற்காகத்தான்
பயன்படுத்த முடியுமே தவிர அரசாங்கத்தினுடைய கொள்கை
களை கடுமையாக விமர்சிக்கக் கூடியவர்களுக்காக அல்ல என்பதை
இந்தியப் பிரதமர் தெரிவித்தார்''. என்று இதே மன்றத்தில்
1973 ஆம் ஆண்டு நம்முடைய முன்னாள் முதலமைச்சர் இங்கே
தெரிவித்தார் என்கிற இந்தக் கருத்தை மாத்திரம் நான் அவ
ருக்குத் தெவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே எதிரொலி
யினுடைய நிருபருக்கு 'அக்ரிடேசன்' தரப்படவில்லை என்று
தெரிவித்தார்கள். அதை அந்தக் குழுவினிடத்திலே பரிசீலிக்கச்
சொல்லி யிருக்கிறோம். அந்த நிருபருக்கு நியாயமாக வழங்க
வேண்டிய உரிமைகள், தகுதிகள் அவருக்கு இருந்தால் அந்தக்
குழுவினுடைய பரிந்துரை கிடைத்த உடனே தரப்படும் என்பதை
நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைத் தவிர இங்கே அறநிலையத் துறையைப் பற்றி இன்
றைக்கு அதுதான் மிக மிக முக்கியமான துறையாக விவாதத்திலே
எடுத்து கொள்ளப்பட்டது. எனக்கு இருக்கின்ற மகிழ்ச்சி
எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகமே அதைப் பற்றி இவ்
வளவு அக்கறையோடு விவாதிக்கிறதே என்பதுதான். அவர்கள்
வெளியே எப்படி பேசுகிறார்கள் என்பது முக்கியமல்ல. சட்ட
மன்றத்திலே பேசினால் இந்த நாட்டு மக்கள் அனைவரும் கவனிப்
பார்கள் என்ற காரணத்தாலே இங்கே சொல்லுகிற கருத்துக்களை
நான் உண்மையிலேயே மதிக்கிறேன். வரவேற்கிறேன்.

(பிற்பகல் 1—30)

ஆனால், அறநிலையத்துறை பற்றிய விவாதத்தை திராவிட
முன்னேற்றக் கழகம்தான் இந்த அவைக்கு கொண்டுவந்தது
என்று அந்த பெருமையைச் சொல்லிவிட்டு, ஒரு நாள் விவா





தத்திற்கு எடுத்துக்கொண்டோம் என்ற பெருமையைச் சொல்லி
விட்டு, மிஸ்ஸலேனியஸ் என்று இருந்ததை நாங்கள் தான் தனி
யாக ஆக்கி பெருமை தந்தோம் என்ற பட்டியலை எல்லாம்
தந்தார்கள். நான் அதை மறுக்கவில்லை. செய்த காரியங்
களை நான் மறுக்கவில்லை. ஆனால் செய்த காரியங்கள் எல்
லாம் அரைகுறையாக நின்றுவிட்டன. திட்டத்திற்கான பணம்
இருக்கிறதா என்று பார்க்காமலே திட்டங்கள் போட்டு, பாதி
யிலே நின்றுவிட்டன. அந்த பரிதாபகரமான நிலையைத்தான்
எடுத்துச்சொல்ல வேண்டியவனாக நான் இருக்கிறேனே தவிர
எடுத்த முயற்சிகளிலே நான் குறைகாணவில்லை. இப்படி அன்
றைக்கு மிஸ்ஸலேனியசாக இருந்த அறநிலையத் துறையை
இன்றைக்கும் மிஸ்ஸலேனியசோடு சேர்த்து கொடுத்துவிட்
டார்கள் என்று மாண்புமிகு துரை முருகன் அவர்கள் சொல்லு
கிறார்கள். துரை முருகன் அவர்களே அறநிலையத்துறை
பற்றி ஒருநாள் விவாதம் வேண்டுமென்று கேட்கிற அளவுக்கு
இன்றைக்கு அறநிலையத்துறை விளங்குகிறது என்றால் எந்த
அளவுக்கு மக்கள் கவனத்தை அது பெற்றிருக்கிறது என்பதைப்
பற்றி மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பெருமைப்பட்டுக்
கொள்ளலாம்.

ஆனால் ஒன்றை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த
மானியக் கோரிக்கைகள் பற்றிய விவாதங்களை எல்லாம் எத்
தனை நாள் விவாதம் என்று நிர்ணயம் செய்தது நானும் அல்ல;
இந்த அரசாங்கமும் அல்ல. இங்கே சட்டமன்றத்திலே இருக்
கின்ற எதிர்கட்சித் தலைவர் அவர்கள், மற்றக் கட்சித் தலை
வர்கள், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், அவைத் தலைவர
வர்கள், மற்றவர்கள் எல்லாம் உட்கார்ந்து நாள் நிர்ணயம்
செய்கிறார்களே தவிர நான் அல்ல. அதையும் ஏன் அவசரத்
திலே சேர்த்துக்கொண்டார்கள் என்றால் எப்படியாவது 2,
3 குற்றச்சாட்டுக்களை இந்த வீரப்பன் மேல் சுமத்திவிடலாம்
என்ற முறையிலே சொல்ல முன் வந்திருக்கிறார்கள். இது அர
சாங்கம் செய்த முடிவு அல்ல. அலுவல் ஆய்வுக்குழு செய்த
முடிவு ; எல்லாக் கட்சிகளும் சேர்ந்து செய்த முடிவு என்பதை
மட்டும் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வனத்துறை பற்றி பல்வேறு உறுப்பினர்கள் கருத்துக்களைச்
சொன்னார்கள். குறிப்பாக திரு. ஹேமசந்திரன் அவர்கள்,
ஆனமலைப்பகுதியைச் சேர்ந்த உறுப்பினர்கள், குமரி மாவட்
டத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் பல கருத்துக்களைச் சொன்
னார்கள். அவர்கள் சொல்லுகிறபோது இந்த வனங்களை
எல்லாம் நாம் காப்பாற்ற வேண்டும், காப்பாற்ற வேண்டும்
என்ற கருத்தைச் சொன்னார்கள். வனங்களைச் காப்பாற்று
வதற்கு எந்த அளவுக்கு முயற்சிகள் எடுத்துக்கொண்டு வருகி
றோம் என்பதை நான் ஒரு சிறிய புள்ளிவிவரம் மூலம் தெரிவிக்கக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

பலபேர் இப்போது லாரி லாரியாக மரங்களை வெட்டிக்
கொண்டு போகிறார்கள், என்று சொல்கிறார்கள். லாரிலாரியாக
வெட்டிக்கொண்டு போகிறார்கள் என்ற உண்மையான விவரங்கள்
தெரியாமல் இன்றைக்கு இங்கே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.
நான் அரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.
லாரி லாரியாக மரங்கள் எல்லாம் வெட்டிக் கொண்டு போகி
றார்கள். அது எந்த மரங்கள் என்றால் வெட்டுவதற்கு
என்றே வளர்க்கப்படுகிற மரங்கள். அதை முதலிலே தெரிந்து
கொள்ள வேண்டும். தமிழகத்தில் இருக்கிற தொழிற்சாலை
களுக்கு அரசாங்கம் மரங்களை வழங்குகிறது. அந்த மரங்கள்
8 ஆண்டு அல்லது 10 ஆண்டு காலத்தில் வெட்டுவதற்காகவே
வளர்க்கப்படுகின்ற மரங்கள். அது 'பிளான்டேஷன் ட்ரீஸ்'
எப்படி வேளாண்மையில் விதைப்போட்டு, நாற்று நட்டு, பயி
ராக்கி அதை எப்படி அறுவடை செய்கிறோமோ அதைப் போல
தான் அந்த மரங்கள் எல்லாம் வெட்டுவதற்காகவே பயிர் செய்
யப்படுகின்ற மரங்கள். அது கிட்டத்தட்ட 2 இலட்சம் டன்
இந்த நாட்டிலே தொழிற்சாலைகளுக்கு ஆண்டுதோறும் நாம்
வழங்கிக் கொண்டிருக்கிறோம். அதில் இந்த ஆண்டு சுமார் 4½
கோடி ரூபாய் வருமானத்தை ஈட்டியிருக்கிறோம். ஒரு கோடி
யாக இருந்ததை 4½ கோடிக்கு உயர்த்தி இருக்கிறோம். ஆகவே,
வெட்டுவதற்கு என்று வளர்த்து 8 ஆண்டு அல்லது 10 ஆண்டு
களுக்கு ஒருமுறை வெட்டிவிட்டால் அந்த அடிக்கடையிலிருந்து
மீண்டும் துளிர்த்து வரும். இப்படி மூன்று முறை ஒரு மரத்தை
பயிர் செய்யாமல் வெட்டுகிறோம். அப்படி 2½ இலட்சம் டன்
மரங்களை தொடர்ந்து ரொட்டேஷன் முறையிலே வழங்கிக்
கொண்டிருக்கிறோம். அதைப்பார்த்து, வெட்டி லாரி லாரி
யாகக் கொண்டு போகிறார்கள், லர்ரி லாரியாகக் கொண்டு
போகிறார்கள், என்று நம்முடைய உறுப்பினர்கள் பலரும்,
பொதுமக்கள் பலரும் குறைசொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.
உண்மை அது அல்ல.

இதிலே கூட ஒரு உத்தரவை நாங்கள் போட்டிருக்கிறோம்.
அப்படி வெட்டுகிற மரங்கள் சாலை ஓரங்களில் அல்லது
சாலைக்கு அருகாமையில் இருந்தால் வெட்டக்கூடாது ; சாலை
யிலிருந்து 10 மீட்டர் தூரம் வரையில் உள்ள மரங்களை வெட்
டக்கூடாது ; அது மலைப்பகுதியாக இருந்தாலும் சரி, மற்றப்
பகுதியாக இருந்தாலும் சரி 10 மீட்டர் தூரத்திற்கு மரங்களை
வெட்டக்கூடாது; எத்தனை ஆண்டுகள் ஆனாலும் அந்த
மரங்கள் அப்படியே இருக்கட்டும் ; வெட்ட வேண்டாம்
என்று உத்தரவிட்டிருக்கிறோம்.

காடுகளை பாதுகாப்பதில் இந்த அரசாங்கம் எவ்வளவு
கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறது
என்பதை குறிப்பிட விரும்புகிறேன். 'ஃபியூவல் கூப்' என்ற ஒரு
முறை இந்த மாநிலத்திலே இருக்கிறது; அது இந்தியா முழு
வதும் இருக்கிறது.



விறகுக்காக மலைகளிலே கூப்புக்கள் விடுவது என்பதைப்
பொறுத்த வரையிலே ஏலம் எடுத்தவர்கள், ஏலம் எடுத்த உடனே
கூப்பை வெட்ட மாட்டான், பக்கத்தில் இருக்கின்ற மரத்தை
எல்லாம் வெட்டி வீழ்த்திவிட்டு கடைசியில் கூப்பை வெட்ட
முடியவில்லை என்று சொல்லி எக்ஸ்டென்ஷன் வேண்டும்
வாய்தா வேண்டும் என்று கேட்பான். இதுதான் வழக்கம்.
இப்படியே அழித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நம்
முடைய அரசு வந்த 3, 4 ஆண்டு காலத்திலே மலைப் பகுதி
களிலே கூப்புக்கள் விடுவதை நிறுத்தியாகவேண்டும் என்று
சொல்லி கடுமையாக நிறுத்தினோம். விறகு வெட்டுபவர்கள்
சோஷியல் பாரஸ்ட் என்ற ஏரி புறம்போக்குப் பகுதியிலே நீண்ட
காலமாக இருக்கின்ற கருவேல மரத்தைத்தான் பயன்படுத்தி
யாகவேண்டும் என்று நாம் அதற்கு ஆணையிட்டோம். அதைப்
போல தைல மரங்களிலே இருந்து வெட்டப்பட்ட பயன்படுத்
தப்பட முடியாத கிளைகளையும், மரங்களையும் விறகுக்குத்
தரவேண்டும் என்று ஆணையிட்டோம். எப்படி இது வந்தது
என்பதைத் தயவுசெய்து பார்க்கவேண்டும் 1974–75-லே விறகுக்
காக வெட்டப்பட்ட பகுதி 4,508 ஹெக்டேர். ஒரு ஹெக்டேர்
என்பது இரண்டரை ஏக்கர். 1975--76-லே 3,826 ஹெக்டேர்,
1976–77-லே 3229 ஹெக்டேர், 1977–78-லே இந்த அரசு
பொறுப்பேற்றுக்கொண்டதில் இருந்து 2,467 ஹெக்டேர், அடுத்த
ஆண்டு 1579 ஹெக்டேர், அடுத்த ஆண்டு 1,462 ஹெக்டேர்,
இதற்கு முந்தைய ஆண்டு 847 ஹெக்டேர். போன ஆண்டு
527 ஹெக்டேர். இப்படி மலைப் பகுதிகளில் 4,500 ஹெக்டேர்
என்று வெட்டி அழித்துக்கொண்டிருந்த நிலைமையினை நாங்கள்
527 ஹெக்டேராக குறைத்து இருக்கிறோம். பாதுகாத்து
இருக்கிறோம்.

இந்த அடிப்படையிலே இருக்கின்ற நிலைமையினை இங்கே
இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அருள்கூர்ந்து தெரிந்து
கொள்ளவேண்டும்.

அடுத்து ரப்பர் தோட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்
திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் சொன்னார்கள். ரப்பர் தோட்
டத்தைப் பொறுத்தவரையிலே 10 ஆயிரம் ஏக்கரிலே உற்பத்தி
செய்துகொண்டிருக்கிறோம். ஆனால் எல்லாப் பகுதிகளிலும்
மரங்கள் ரப்பர் எடுக்கின்ற நிலைமைக்கு இன்னும் வரவில்லை.
அதுமாத்திரமல்ல. மரங்களை எல்லாம் வெட்டி விட்டார்களே,
அவற்றுக்கு வரவு வைத்துக்கொண்டு இருக்கிறீர்களா? என்று
மாண்புமிகு உறுப்பினர் தொழிற்சங்கத்தலைவர் என்ற முறை
யிலே கேட்டார். எப்படி மரங்களை வெட்டுவதை எல்லாம்
வரவு வைத்துக்கொள்ள முடியும்? இதையும் ஒரு தனியார் நடத்
தினால் பத்தாயிரம் ஏக்கருக்கு ஒரு விலை போட்டால்
அந்த விலையை யார் கொடுப்பது? அரசாங்கம் 10,000 ஏக்கர்

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1982 மார்ச் 11

நிலத்தை ரப்பர் ப்ளான்டேஷனுக்காகக் கொடுக்கின்றது. அதிலே
இருக்கிற மரங்களை அரசாங்கக் கணக்கிலே வரவு வைத்
துக் கொண்டிருக்கிறார்களா என்றால் எப்படி ரப்பர் ப்ளான்
டேஷன் கணக்கிலே அது வரும்? இந்தப் பத்தாயிரம் ஏக்கரி
லேயும் முதலீடு போட்டு ஆரம்பித்தால் என்ன வரும்? ஆகவே
வரும் லாபத்தைக் காட்டினால் தொழிலாளர்களுக்கு போனஸ்
கொடுக்க வேண்டி வரும், எனவே அதனை மறைத்துக்கொள்ள
வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை.

இன்னொரு மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள்
எனக்கு வாரம் தவறாமல் கடிதம் அனுப்பிக்கொண்டிருக்கிறார்.
புகார்களும் அனுப்புகிறார். ஆலோசனைகளையும் அனுப்புகிறார்.
அந்தக் கடிதங்களை எல்லாம் உடனடியாக நான் துறையினருக்கு
அனுப்பி நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறேன் என்பது
திரு. மணி அவர்களுக்கும் தெரியும். இன்னும் சொல்கிறேன். மிக
விரைவிலே கன்னியாகுமரி மாவட்டத்திலே வனத்துறை
யினைப் பற்றிய ஆலோசனைகளைச் சொல்வதற்காக தொழிற்
சங்கத் தலைவர்கள் மற்றும் முக்கியஸ்தர்களைக் கொண்ட
ஒரு குழுவினை அமைப்பது என்ற முடிவினை அரசாங்கம் எடுத்
திருக்கின்றது. அங்கே இருக்கின்ற ரப்பர் தோட்டத்தை மிகப்
பெரிய அளவிலே விரிவு படுத்தவேண்டும் என்ற திட்டம் அர
சினிடத்திலே இருக்கின்றது. அதனை ஒரு ஒரு தொழில் அடிப்படை
யிலே அணுக வேண்டும் என்ற அந்த உணர்வும் இருக்கின்றது.
க்ரம் தொழிற்சாலையைப் பற்றிச் சொன்னார்கள். இன்றைய
சூழ்நிலையில் மிகப்பெரிய அளவிலே மின்சாரம் தேவைப்படு
கின்ற அந்த க்ரம் தொழிற்சாலையினை ஆரம்பித்தால் அது
லாபமாக இருக்காது என்பதுதான் இன்றைக்குப் புள்ளி விவ
ரங்களிலே இருந்து கிடைத்திருக்கின்றது. ஆகவே அந்த
முதலீட்டை வேறு சில வகை ரப்பர் தொழிற்சாலைகளிலே
நாம் முதலீடு செய்யலாம் என்ற முடிவுக்கு தோட்டத்துறை
வந்திருக்கின்றது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்
கிறேன். மாண்புமிகு ஹேமச்சந்திரன் அவர்கள் ரப்பர் தோட்
டத்தைப் பற்றிச் சொன்னார். அந்த விவரங்களையும்
நான் உங்களுக்குச் சொல்கின்றபோது, போனஸ் கொடுக்க
வில்லையே, நீங்கள் கணக்கைத் தவறாகக் காட்டி போனஸ்
கொடுக்கவேண்டாம் என்று பார்க்கிறீர்கள் என்று கேட்
டார்கள். தொழிலாளர்களுக்கு ஊதியம் தருவதைப்
பொறுத்தவரையிலே கன்னியாகுமரியிலே தனியார் தோட்
டத்திலே தருவதை விட நாம் அதிகமாக அரசு தோட்டத்திலே
தருகிறோம். இதனை அவர்கள் தெரிந்து கொண்டு மறைக்
கிறார்களா அல்லது தெரியவில்லையா என்பது எனக்குத் தெரிய
வில்லை. நான் இந்த அவைக்குத் தெரிவிக்கிறேன். இந்த
ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு கேரளாவிலே 13·66
காசும் தனியார் தோட்டங்களிலே 14·21 காசும் நம்முடைய
அரசுத் தோட்டத்திலே 14·31 காசும் கொடுக்கிறோம்.



1982 மார்ச் 11] [திரு. ஆர். எம். வீரப்பன்]

[பிற்பகல் 1–40]

அங்கே மற்ற தொழிலாளர்களுக்கு, கேரளாவில் 13.75
நம்முடைய தோட்டத்தில் 15.6. பால் வடிக்கும் தொழி
லாளர்களுக்கு கேரளாவில் 13.80. நம் தோட்டத்தில் 14.61.
இதையெல்லாம் பாராட்டக்கூடாதா ? இதை தொழிலாளர்க
ளிடத்தில் சொல்லக்கூடாதா ? தினசரி நாம் ஊதியத்தை உயர்த்
திக் கொண்டிருக்கிறோமே, இதையெல்லாம் சேர்த்துத்தான்
போனஸ் வருகிறது. ஆகவே, தொழிலாளர்களுக்கு எல்லாவித
மான வசதிகளையும் செய்து தரவேண்டுமென்று, அதற்கான
முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று—நீங்கள் ஒரு ஏக்
கருக்கு 1,700 கிலோ கிடைக்கிறது என்கிறீர்கள். அங்கே மரங்
கள் எல்லாம் பட்டுப்போய்விடுகிறது. நெருப்புக்கு இரையாகி
விடுகிறது. இதில், தொழிலாளர்களும் சேர்ந்து இதைப் பாது
காக்க வேண்டும். இந்த வனத்துறை அலுவலர்கள் தவறு செய்
வார்களானால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுப்
பதற்குத் துறை தயாராக இருக்கிறது.

சின்கோனா துறைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு.
கருப்பையா அவர்கள் சொன்னார்கள். சின்கோனா ஒரு நூறாண்
டுக் காலமாக இருக்கிற ஒரு துறை. ஆனால், அந்தத் துறையை
இவ்வளவு காலமாக வளர்க்காமல் வைத்திருந்தார்களே அதுதான்
எனக்கிருக்கிற கவலை எல்லாம். நம் சுற்றுலாப் பொருட்காட்
சிக்கு வந்திருந்த உறுப்பினர்களுக்கு சில பொருள்களை வழங்கு
வதாகச் சொன்னார்கள். வழங்கினார்களா இல்லையா என்று
தெரியவில்லை. இன்று நாம் உபயோகப்படுத்துகிறோமே
கொசுக்கடிக்காக ஓடோமாஸ் என்கிற அது தனிப்புகழ் பெற்ற
மருந்தாக இருக்கிறது. அதை விட புகழ்பெற்ற ஒரு அருமையான
மேலே தடவுகிற மருந்தை சின்கோனாத் துறை தயார் செய்கிறது.
அதேபோல், கற்பூரத்தைத் தயார் செய்கிறது. அதைப்போல்,
தலைவலித் தைலம் தயார் செய்கிறது. அதைப்போல் இந்த
குடும்பக் கட்டுப்பாட்டுக்கான அடிப்படை மருந்தைத் தயார்
செய்கிறது. கொய்னா மருந்து தயார் செய்கிறது. ஆனால்,
மத்திய அரசு விலை நிர்ணயிப்பதிலே நம்முடைய கழுத்தைப்
பிடிக்கிறார்கள். சந்தன மரத்தை ஏற்றுமதியை தடைப்படுத்தி
அதன் மூலம் மூன்று கோடி ரூபாய் வருவாயை இழக்கச் செய்
திருக்கிறார்களே அதேபோல் இந்தச் சின்கோனாத் துறையிலும்
தடை செய்திருக்கிறார்கள்—இந்தியாவிலேயே இரண்டு மாநிலங்
களில் தான் இந்த சின்கோனாத் துறை இருக்கிறது. ஒன்று
மேற்கு வங்காளம், மற்றொன்று நம் மாநிலம். இன்று அதை
வியாபார ரீதியாக மிகப் பெரிய அளவில் வளர்க்க வேண்டும்
என்று அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. இரண்டாயிரம்
தொழிலாளர்கள் நிரந்தரமில்லாத தொழிலாளர்கள். ஆனால்
கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளில் 400 தொழிலாளர்களை
நிரந்தரத் தொழிலாளர்களாக ஆக்கியிருக்கிறோம். அதையும்,
நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆகவே, சின்கோனாத்

தொழிலாளர்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் நிறை
வேற்றித்தருவதற்கு அரசு முயன்று கொண்டிருக்கிறது. மலைப்
பகுதி என்ற காரணத்தால் பல திட்டங்களை நிறைவேற்றுவதில்
காலதாமதம் ஏற்படுகிறது. அதனால்தான் இந்தத் தாமதம்
என்று எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன்.

வனத்துறையைப் பொறுத்த வரையில் தென் இந்தியாவி
தமிழ் மாநிலத்தில் இந்த முறைதான் ஏறத்தாழ 24 கோடி
ரூபாய்க்கு ஒரு மானியக் கோரிக்கையை வைக்கிற அளவுக்கு
ஒரு மிகப் பெரிய சிறப்பைப் பெற்றிருக்கிறது. அதற்கு சோஷி
யல் பாரஸ்ட்ரி என்று அழைக்கப்படுகிற, ஸ்வீடன் நாடு, நம்
மாநிலத்தில் நடைபெற்ற அந்தப் பணியைப் பாராட்டி அவர்கள்
அளித்த உதவி காரணமாக முதல் முறையாக 24 கோடி
ரூபாய்க்கு மேல் நாம் மானியம் வைக்கிற அளவிற்கு வனத்
துறையை வளர்த்திருக்கிறோம் என்பதை நான் இங்கே பணி
வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அற நிலையங்கள், அற நிலையத்துறை பற்றியெல்லாம் சொன்
னார்கள். நான் அதற்குள்ளே அதிகமாகச் செல்ல விரும்பவில்லை.
திரு. துரைமுருகன் அவர்கள் சொன்னது எல்லாம் உண்மைதான்.
எல்லாம் அறைகுறையாக நின்றுவிட்டது. அதுதான்!எனக்கிருக்கிற
கவலையே தவிர வேறு அல்ல. என்னென்ன மற்றப் பணிகளை
யெல்லாம் செய்திருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்
கிறோம். ஆனால், அவர்கள் கடைசியில் கொள்ளைக்காரர்கள்
கொலைகாரர்கள் என்றெல்லாம் சொல்லி அந்த க்ளைமாக்
ஸோடு முடித்தார்கள். அவர்கள் ஏற்கெனவே நடிகராக வேண்டு
மென்று விரும்பியவர், நல்ல காலம் நடிகராக வராமல் சட்ட
மன்றத்தில் வந்து அமர்ந்திருக்கிறார்கள். ஆகவே, அவர்கள்,
அந்த நடிப்பு உணர்ச்சியைக் காட்டுகிற அந்த வேகத்தில் சொன்
னார்கள். நான் அவர்களுடைய உணர்ச்சியைப் புரிந்து கொள்
கிறேன். அந்த இடத்தில் நின்று அவர்கள் அதைத்தான் சொல்
லியாக வேண்டும், சொல்வதற்காகத்தானே இருக்கிறார்கள். அந்
தச் சூழ்நிலையில் அவர்கள் சொன்னதை ஒன்றும் தவறாக எடுத்
துக் கொள்ளவில்லை. இன்று நாடு பார்த்துக் கொண்டிருக்கிறது.
யார் கொலைகாரர்கள், யார் கொள்ளைக்காரர்கள் என்பதை
யெல்லாம். 99 3/4 சதவீதம் உள்ளவர்கள் அந்த ஆன்மீக நெறி
யில் இருக்கிற ஆத்திகர்கள் தீர்ப்பளித்துக் கொண்டிருக்கிறார்கள்.
ஆகவே, நான் அதற்குள்ளே நுழைய விரும்பவில்லை.

நேற்று பேசிய திரு. பழனியப்பன் அவர்கள் திருவண்ணாமலை
யில் நடைபெற்ற அந்தத் தேரில் இருந்து களவாடப்பட்ட பொம்
மைகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். பொம்மைகள் களவாடப்
பட்டன, உடனடியாக காலையிலேயே அங்கிருந்த நிர்வாக அலு
வலர்களும் அறங்காவலர் குழுவைச் சார்ந்தவர்களும் போலீஸில்
புகார் செய்தார்கள். போலீஸில் என்ன செய்தார்கள் என்றால்
முதல் புகாரில் தெரிவித்த நான்கு பொம்மைகள் பற்றி மாத்திரம்



வழக்கு பதிவு செய்து ஒருவனை கைது செய்து அவனுக்கு ஏதோ
தண்டனையும் வழங்கிவிட்டார்கள். நான் இரத்தினகிரிக்குப்
போனபோது இந்தச் செய்தியை அறிந்து உடனடியாக ஐ.ஜி.
அவர்களுடன் தொடர்பு கொண்டு பிறகு, மீண்டும் அதைக்
கண்டுபிடித்தாக வேண்டும் என்றதற்குப் பிறகு இரண்டாவது
வழக்கை அவர்கள் விசாரணைக்கு எடுத்து பிறகு, இரண்டு பேர்
களைப் பிடித்திருக்கிறார்கள். அவருக்கும் தண்டனை வழங்கப்
பட்டிருக்கிறது. ஏறக்குறைய 100 சிலைகள், அந்த பொம்மை
கள் திரும்பப் பெறப்பட்டிருக்கின்றன. இதிலே என்ன கஷ்டம்
என்றால், இந்தத் திருட்டுச் சாமான்களை வாங்கி வைத்திருக்கக்
கூடிய மனிதனை கைது செய்ய முடியவில்லை. சட்டத்திலே
இடமில்லை. இதைத்தான் கொள்கை குறிப்பிலே சொல்லியிருக்
கிறோம். இரயில்வே சாமான்களை யார் வைத்திருந்தாலும்,
அவர் குற்றவாளி என்று கருதப்படுகிறது. அதைப்போல் ஆலய
சிலைகளானாலும் சரி, பொருள்களானாலும் சரி, அதை யார்
வைத்திருக்கிறார்களோ, அவர்களும் இந்தக் குற்றத்திற்கு உடந்
தையானவர்கள், தண்டனைக்கு உரியவர்கள் என்று சொல்கிற
அளவிலே, இந்த வழக்கு அங்கே நடைபெற்று முடிந்திருக்கிறது.
இன்னும் நூற்று சொச்சம் சிலைகளைக் கண்டுபிடித்தாக வேண்
டும் என்று காவல் துறைக்குச் சொல்லியிருக்கிறோம். இதிலே
அறங்காவலர்கள் சம்பந்தப்படவில்லை. அறங்காவலர்களைப்
பற்றி வேறு புகார்கள் வந்திருக்கின்றன. பொது மக்களிடத்
திலே இருந்து கையெழுத்து போட்ட புகார்கள் வந்து சேர்ந்திருக்
கின்றன. அதைக் காரணம் காட்டி, விளக்கம் கேட்டிருக்கிறோம்.
விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். ஆணையர் அறிக்கை வந்
திருக்கிறது. அரசுத் துறையிலே பரிசீலிக்கிறார்கள். அந்தக்
காரணங்கள் சரியில்லை, குற்றம் என்று நிருபிக்கப்பட்டது என்று
சொன்னால், அது திருவண்ணாமலை மாத்திரமல்ல ; எந்த
அண்ணாமலையாக இருந்தாலும், நடவடிக்கை எடுப்போம் என்
பதை நான் இங்கே தெளிவாக தெரிவித்துக் கொள்கிறேன்.
யாரிடத்திலும் தயவு தாட்சண்யம் காட்ட வேண்டிய அவசியம்
இந்த அரசுக்கு இல்லை. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்
களுக்கும் இல்லை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்
கிறேன்.

அப்படிப்பட்ட சூழ்நிலையில் மாண்புமிகு துரைமுருகன் அவர்
கள் இங்கே கிருஷ்ணசாமி நாயுடு கமிஷனைப் பற்றிச் சொல்லி,
கிளைமாக்சிலே முடித்தார்கள். அதையே நானும் சொல்லி
முடித்து விடுகிறேன. அவர்களுக்கு பால் கமிஷன் இனிக்கிறது.
அந்தப் பால் கமிஷன் மிக அதிகமாக இனிக்கிறது. கிருஷ்ணசாமி
நாயுடு கமிஷன் என்றால், அது புளிக்கிறது. இதற்கு நான்
என்ன செய்ய முடியும் ? இரண்டும் கமிஷன் தான். அந்தக்
கமிஷனில் வந்திருக்கின்ற தீர்ப்பை இங்கே தெரிவித்தார்கள்.
அந்தத் தீர்ப்பின் விளைவாகத்தான் இங்கே குற்றச்சாட்டு தெரி
விக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் என்ன நடந்தது என்பதைத் தெரி
வித்தீர்கள். அதைக் கமிஷன் விரிவாக ஆராய்ந்திருக்கிறது.

இவர்கள் சொன்ன அத்தனைக் குறிப்புக்களையும், அத்தனை விவரங்களையும் கமிஷன் ஆராய்ந்திருக்கிறது. படித்துப் பாருங்கள் அந்த ரிப்போர்ட்டை. ஆராய்ந்து தான் கமிஷன் தீர்ப்பளித்திருக்கிறது. அந்தத் தீர்ப்பை நான் மீண்டும் சொல்வதற்காக என்னை மன்னிக்க வேண்டும். நான் யாரையும் புண்படுத்த வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. கிருஷ்ணசாமி நாயுடு கமிஷனிலே என்ன சொல்கிறார். இந்த நாட்டிலே முந்நாள் அறநிலையத் துறை அமைச்சராக இருந்தவரைப் பற்றிக் குறிப்பிடுகிறார். அவர் இந்த அறநிலைய, மடங்கள் துறை அமைச்சராக இருந்தது, இந்த நாட்டினுடைய ரதிருஷ்டம் என்று குறிப்பிட்டிருக்கிறார். நான் யாரையும் குறைவு படுத்த வேண்டும் என்பதற்காக, குற்றம் சுமத்த வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. ஆனால், நீங்கள் எந்தப் பழியைச் சுமத்தினாலும், அதைத் தாங்கிக்கொள்ளும் வலிவோடு நான் இருக்கிறேன்.

தமிழிலே அர்ச்சனையைப் பற்றிச் சொன்னார்கள். ஆனால், இதிலே தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள். 1962-ஆம் ஆண்டு முந்நாள் முதலமைச்சராக இருந்த பெரியவர் பக்தவத்சலம் அவர்களால் இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டது. அப்போதுதான், தமிழிலும் அர்ச்சனை என்ற போர்டு வைக்கப்பட்டது. 1974-லே முன்னேற்றக்கழகம் ஆட்சியின்போது, அதற்குள்ளே ஒரு விவகாரத்தை உண்டாக்கி விட்டீர்கள். அதனால் வந்ததே இந்த வம்பு. இவர்கள் ஒரு ஆணையைப் போடச் சொல்லி உத்திரவிடுகிறார்கள். மதுரையிலே, டி.புடி கமிஷனராக இருந்தவர், தமிழில்தான் அர்ச்சனை செய்ய வேண்டுமென்று ஒரு உத்திரவைப் போட்டார். உடனே, சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய்விட்டார்கள், கூடாது என்று. உடனே, சுப்ரீம் கோர்ட் ஆணை பிறப்பித்தது. இதுவரையில் நடைமுறையில் என்ன பழக்கம் இருக்கிறதோ, அதைத்தான், இந்த வழக்கினுடைய இறுதித் தீர்ப்பு வரும்வரை கடைப்பிடிக்க வேண்டுமென்பது சுப்ரீம் கோட்டினுடையத் தீர்ப்பு. 1974-லே இருந்து 1976 ஜனவரி 31-ஆம் தேதி வரை ஆட்சியிலே இருந்தீர்கள். அந்தத் தீர்ப்பின் மேல் என்ன செய்ய முடிந்தது? நாங்கள் ஒன்றும் தமிழிலும் அர்ச்சனை செய்யலாம் என்று வைக்கவில்லை. அது பக்தவத்சலம் அவர்கள் காலத்தில் வைத்தது. இப்போது நாங்கள் அதை மாற்றச் சொல்லியிருக்கிறோம். '' தமிழிலும் அர்ச்சனை செய்யலாம் '' என்பது வேண்டாம்; '' தமிழில் அர்ச்சனை செய்யப்படும் '' என்று போர்டு வையுங்கள் என்று சொல்லியிருக்கிறோம். ஆகவே, இந்த அர்ச்சனையை தமிழில் செய்வதா அல்லது சமஸ்கிருதத்தில் செய்வதா என்பதை எடுத்துக் கொண்டு வாதிடுகிறவர்களைப் பற்றி மக்களிடத்திலே ஒரு நம்பிக்கை வர வேண்டும்.

'' ஒன்றே குலம், ஒருவனே தேவன் '' என்றார்கள் அண்ணா. அண்ணாவின் கொள்கைகளைப் பின்பற்றுகிறார்கள், அதைச் சொன்னால் அதற்கு மரியாதை இருக்கும். '' கடவுளைப்





டைத்தவன் காட்டுமிராண்டி '' கடவுளை நம்புகிறவன் முட்
டாள்; கடவுளை வணங்குகிறவன் அயோக்கியன்;'' என்று
சொல்லுகிற ஒருவர், தமிழிலே அர்ச்சனை செய் என்கிறபோது
தான், இது விவாதமாக வருகிறது; விவகாரமாக வருகிறது.
இந்தப் பிரச்சினையினுடைய உயிர்த் தன்மை போய் விடுகிறது.
ஆகவே, யார் அந்தப் பிரச்னையை, எந்த இடத்திலே எடுத்துச்
சொல்ல வேண்டுமோ, அவர்கள் சொன்னால் மரியாதை கிடைக்
கும்—அதனால் தான் சொல்கிறோம்—நாம் எல்லோருமே
சேர்ந்து வெளியிலே பிரசாரம் செய்ய வேண்டும். இன்றைக்கு,
ஆலையத்திற்குச் செல்லுகின்றவர்களிடத்திலே இந்த உணர்வை
வளர்ப்போம். ஆலையத்திற்குச் செல்லுகின்ற பக்தர்களை,
'' அருள்கூர்ந்து தமிழில் அர்ச்சனை வேண்டுமென்று கேளுங்கள் ''
என்று பேசுவோம். அப்படி கேட்கும்போது, அந்த ஆலையத்
திற்குச் செல்லுகின்றவர்களை மதிக்கின்ற உணர்வு நமக்கு வர
வேண்டும்.

(பிற்பகல் 1—50)

அவர்களை மதித்தால் தான் கேட்க முடியும். போகிறவர்கள்
அனைவரும் அயோக்கியன், காட்டுமிராண்டி என்று சொன்னால்
எப்படி அவர்களுக்கு உபதேசம் செய்ய முடியும். அதுதான்
இன்றைக்கு இருக்கிற பிரச்சினை. இதை நாம் அறிஞர் அண்ணா
அவர்கள் வழியிலே நின்று செய்ய வேண்டும். அறிஞர் அண்ணா
அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். ஒன்றே குலம், ஒருவனே
தேவன் என்று. அதை நாம் ஒத்துக் கொள்வது உண்மையானால்
நம்பிச் செல்கிறவர்களை மதிக்க வேண்டும். நமக்குள்ளே ஆயிரம்
வேறுபாடுகள் இருக்கலாம், கருத்து மாறுபாடு இருக்கலாம்;
மற்றவர்களை மதிக்க கற்றுக் கொடுத்தவர் அண்ணா. மாற்
றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்று சொன்ன
வர் அண்ணா; இல்லையானால் குல்லூகபட்டர் என்று அழைத்
தவரைத் தான் அவர்களே சொல்ல முடியாத அருமையான
புகழ் பெயரோடு மூதறிஞர் இராஜாஜி என்று அண்ணா அவர்கள்
முதலிலே அறிமுகப்படுத்தினார். அவைகளை எல்லாம் மனதிலே
வைத்துக் கொள்ள வேண்டும். பல்வேறு உணர்வுகளை நேற்று
நம்முடைய பழனியப்பன் அவர்கள் சொன்னார்கள். சங்கராச்
சாரியாரை எல்லாம் பாராட்டினேன் என்று; அங்கே நான்
என்ன பேசினேன் என்ற முழு விவரம், உங்களுக்கு அந்த பேச்சு,
கிடைக்கவில்லை. கிடைத்தால் தெரிந்திருக்கும். எங்கே தந்தை
பெரியார் அவர்களுடைய பெயரை சொல்ல முடியாத இடம்
என்று கருதினார்களோ அங்கே எல்லாம் போய் சொல்கிறேன்,
எங்கே தந்தை பெரியாரை வேறு கோணத்திலே பார்க்கிறார்
களோ அங்கே போய் அவருடைய உண்மையான உருவத்தைக்
காட்டிக் கொண்டிருக்கிறேன். மற்றவர்களை ஒன்று சேராமல்
தடுத்துக் கொண்டிருக்கிற செயலை ' நெகட்டிவ் ஆஸ்பெக்ட்
டிலே '' மற்றவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். பெரி
யாரை புறக்கணித்து விட்டு, அண்ணாவை தூஷிக்க விட்டுவிட்டு
இந்த நாட்டிலே எப்படி ஒற்றுமையை வளர்க்க முடியும் என்று

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1982 மார்ச் 11]

நாம் கருதுகிறோம். ஆகவே தந்தை பெரியார் யார், பேரறிஞர் அண்ணா யார் என்பதை சந்தேகப்படுகிறவர்கள் மத்தியிலே போய் சொல்லக் கூடிய துணிவை இன்றைக்கு நான் அறநிலைய அமைச்சர் என்ற முறையிலே பெற்றிருக்கிறேன். ஆனால் நம்முடைய வணக்கத்திற்குரிய சிருங்கேரி மடம் சங்கராச்சாரியார் அவர்கள் முன்னிலையிலே 45 நிமிடம் பேசினேன். இங்கே மடாதிபதிகள் பற்றி அரசாங்கம் சட்டம் கொண்டு வந்திருக்கிறதை எதிர்க்கிறார்கள், நியாயம் தானா என்று கேட்டேன். இங்கே ஜாதி மத வேறுபாடுகளை புகுத்துகிறார்களே என்று அந்த ஆதி சங்கரர் வழியிலே வந்திருக்கிற நீங்கள் இதை போக்க வேண்டாமா என்று கேட்டேன். இதற்கெல்லாம் அவர் பதில் அளித்தார். இதெல்லாம் வரவில்லை; அவரை பாராட்டினார், என்று குறிப்பிட்டார்கள். ஏன் பெரியோர்களை பாராட்டக் கூடாதா? வாழ்த்தக் கூடாதா? தவத்திரு குன்றக்குடி அடிகளாரை இன்றைக்கு நாம் வாழ்த்துகிறோம். அவர் எல்லாவற்றிலும் நம்மோடு ஒத்து வந்து விட்டாரா? அப்படியானால் காவியை களைந்து விட்டு அல்லவா அவர் வர வேண்டும். தாடியே வைத்து இருக்கக் கூடாது அல்லவா? இன்னும் சொல்கிறேன், வேறு எங்கெங்கோ ஜாதி, ஜாதி என்று சொல்கிறோமே இங்கேயிருக்கிற ஆதீன கர்த்தாக்கள் இந்த ஜாதிக்காரர்கள் தான் ஆதீன கர்த்தர்களாக வர வேண்டுமென்று இருக்கிறதே, இது என்ன ஜாதியை ஒழிக்கக் கூடிய வேலையா? நாம் மற்றவர்களை குறை சொல்லிவிட்டு இங்கே ஜாதியை வளர்த்துக் கொண்டிருப்பதிலே பிரயோசனம் இல்லை. ஜாதி ஒழிய வேண்டுமென்றால் எல்லா ஆதீன கர்த்தர்கள், மதத் தலைவர்களிடத்திலேயும் ஜாதி ஒழிய வேண்டும். நம்முடைய குன்றக்குடி ஆதீனத்தை நாம் பாராட்டுகிறோம். வரவேற்கிறோம். அவர் என்ன, கடவுளை நம்புகிறவன் பைத்தியக்காரன் என்பதை ஒத்துக் கொண்டு வருகிறாரா? கடவுளை கற்பித்தவன் காட்டுமிராண்டி என்பதை ஒத்துக் கொண்டு வருகிறாரா? எதை ஏற்றுக் கொண்டு அவரை பாராட்டுகிறோம். கருத்து வேற்றுமைகள் பல இருந்தாலும், ஓரளவிற்கு கருத்து ஒற்றுமை கொண்டு ஒற்றுமைப் படுத்த முயற்சிக்க வேண்டும். அது தான் அறிஞர் அண்ணா அவர்கள் கற்றுத் தந்த பாடம். அதைத்தான் அறநிலையத் துறை இன்று, புரட்சித் தலைவர் அவர்களுடைய இலட்சியமாக செய்து கொண்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைத தெரிவித்து இருக்கிறார்கள். அந்த கருத்துக்கள் அனைத்தும் நேரம் வருகிறபோது அரசு கவனிக்கும் என்று சொல்லி, சிதம்பரத்தைப் பொறுத்த வரையில் இன்றைக்கு உயர் நீதிமன்றத்திலே வழக்கு தோல்வி அடையவில்லை. அரசாங்கமே முடிவு எடுத்துதான் அந்த கருத்தை ஏற்க வைத்திருக்கிறோம், காரணம் அவர்கள் ஸ்கீம் கூடாது என்று சொன்னார்கள். அதை உயர் நீதிமன்றம் சொல்லட்டும். 59 ஆம் வருட சட்டத்திற்குள், போவோம் என்று நாங்கள் E. O. போடப் போகிறோம். அவர்கள் மீண்டும் நீதிமன்றத்திற்கு வரப் போகிறார்கள். அதை



1982 மார்ச் 11] [திரு. ஆர். எம். வீரப்பன்]

அரசாங்கம் சந்திக்க இருக்கிறது; அரசாங்கம் என்கிறபோது இந்த நாட்டு மக்கள் சந்திக்க இருக்கிறார்கள் என்ற பொருளிலே சொல்கிறேன். தனிப்பட்ட முறையிலே எங்களுக்கு யார் மீதும் காழ்ப்புணர்ச்சி கிடையாது, எந்த கோபமும் இல்லை; எந்த விதமான விரோதமும் இல்லை. இந்த நாட்டினுடைய பொதுவுடமை சொத்து, அதைப்பற்றி விஜயநகர சாம்ராஜ்யத்தின் மன்னன் அந்தக் கல்லிலே செதுக்கி இருப்பதை நம்முடைய பேராசிரியர் ஒருவர் ஆராய்ந்து சொல்லியிருக்கிறார். யார், யார் அந்த சிதம்பரம் கோவிலை நிர்வகிக்க வேண்டுமென்ற விவரத்தையும் கல்லிலே செதுக்கியிருக்கிறார்கள். இதையெல்லாம் மறைத்து விட்டு அங்கே இருக்கிற நம்முடைய மதிப்பிற்குரிய தீட்சிதர்கள் இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறார்கள். அதை பொதுமக்கள் சார்பிலே அறநிலையத்துறை பொதுமக்களுடை சொத்தாக மாற்றுவதற்கு முயற்சி எடுக்கும் என்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் வெட்டுத் தீர் மானங்களை திரும்பப் பெற்றுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு அமர் கிறேன்.

**திரு. எல். இளையபெருமாள்** : துணைத் தலைவர் அவர்களே, சிதம்பரத்தை பற்றி சொல்கிறபோது ஒன்றை நினைவுபடுத்தி னார்கள். நான் உள்பட ஐந்து பேரை ட்ரஸ்டிகளாக அமைத்தார் கள். ஆனால் 1948–49 லே சுப்ரீம் கோர்ட்டிலே பதஞ்சலி சாஸ்திரி அவர்கள் இருக்கிறபோது ஒரு தீர்ப்பை அளித்திருக்கிறார் கள். அதைப் போலவே 1954ஆம் ஆண்டு சர். சி.பி. இராமசாமி அய்யர் அவர்கள் இருந்து அகில இந்திய அறநிலையக் குழு செயல் பட்டபோது சிதம்பரத்தை விட்டுவிட்டு மற்றக் கோயில்களைச் சேர்த்திருக்கிறார்கள். நான் அமைச்சர் அவர்களிடம் இதை யெல்லாம் தனிப்பட்ட முறையிலே சொல்லியிருக்கிறேன். தாங்கள் கல் வெட்டுக்களை எடுத்துக் கொள்கிற போது கூடவே சுப்ரீம் கோர்ட் தீர்ப்பையும் சர் சி. பி. இராமசாமி அய்யர் அவர் களின் அகில இந்திய அறநிலையப் பாதுகாப்புக் குழுவின் நகலை யும் சட்ட வல்லுநர்களைக் கொண்டு பார்த்து மேற்கொண்டு நாம் அமைத்த டிரஸ்ட்களுக்கு அல்லது அரசாங்கத்தின் நல்ல எண்ணங்களுக்கு ஊறு வராத நிலையிலே நாம் என்ன முயற்சியை செய்திருக்கிறோம் என்பதை அறிய விரும்புவதோடு மீண்டும் தாங்கள் கொண்ட முயற்சிக்காக சோழர் காலத்திலேயும் கிருஷ்ணதேவராயர் காலத்திலேயும் இருந்த கல் வெட்டுக்களையும் குறிப்புகளையும் கோர்ட்டுகளுக்கு எடுத்துச் செல்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்** : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் முன்னாலேயே நான் சுருக்க மாகச் சொன்னேன். இப்போது சிதம்பரம் ஆலயத்திற்கு உடனடி யாக அறநிலையத் துறை ஒரு நிர்வாக அதிகாரியைப் போட இருக்கிறது. அதைப் போட்டதற்குப் பிறகு அவர்கள் என்ன

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1982 மார்ச் 11

செய்ய இருக்கிறார்கள் அவர்களுடைய நடவடிக்கை என்ன என்பதைப் பார்த்ததற்குப் பிறகு தான் சட்ட நடவடிக்கைகளிலே அரசு ஈடுபடும். உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு முன்னாலே 1883 ஆம் ஆண்டிலேயே முத்துசாமி அய்யர் காலத்திலேயே அதற்கான தீர்ப்புகள் இருக்கின்றன. கல்வெட்டுக்கள் இருக்கின்றன, தனி மனிதர்கள் இவ்வளவு பெரிய ஆலயம் தங்களுடைய சொந்த சொத்து என்று சொல்வதற்கு சட்டத்தில் இடம் இல்லை என்கின்ற தீர்ப்பு தெளிவாக இருக்கிறது. ஆனால் நீண்ட காலமாக அரசாங்கம் முயற்சி எடுப்பதும், அவர்கள் தலையிட்டு தடுத்து நிறுத்துவதுமாக இப்படிப்பட்ட ஒரு ஊஞ்சலாடுகிற நிலைமை நடந்து வந்துக் கொண்டே இருக்கிறது. ஆனால் இனி மேல் நாட்டு மக்கள் அதற்கு அடிபணியப் போவதில்லை என்பதை நான் தெரிவித்துக் கொண்டு, நான் இங்கே சில அறிவிப்புக்களைச் செய்யவேண்டுமென்று விரும்புகிறேன். நம்முடைய தொழிலாளர் தலைவர்களுக்கு அது பயன் அளிக்கும்.

சின்கோனாத் தொழிலாளர்களுக்கு அகவிலைப் படியை பெரியவர்களுக்கு 67 காசு, இளைஞர்களுக்கு 42 காசு, சிறார்களுக்கு 33 காசு என்று சேர்த்துக் கொடுக்க அரசு முடிவு செய்திருக்கிறது. இலவசமாகத் தேநீர் வழங்கவும் அரசு முடிவு எடுத்திருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி).

அறநிலையத் துறையில் பணி புரிகிற அறநிலையத் துறை அலுவலர்களுக்கு தற்போது ஆலயப் பணியாளர்களுக்கு 22 பணி நாட்களுக்கு ஒரு நாள் ஈட்டிய விடுப்பு கொடுக்கப்பட்டு வருகிறது. இதனை மாற்றி அரசு ஊழியர்களுக்கு வழங்குவதைப்போல் நிரந்தர ஆலயப் பணியாளர்களுக்கு 11 பணி நாட்களுக்கு நாள் ஈட்டிய விடுப்பும் அதிகபட்சமாக 180 நாட்கள் ஈட்டிய விடுப்பு சேமிக்கவும், அவ்வாறே தற்காலிகப் பணியாளர்களுக்கு 22 பணி நாட்களுக்கு ஒரு நாள் ஈட்டிய விடுப்பும் அதிகபட்சமாக 30 நாட்கள் சேமிக்கவும் அனுமதிக்கப் படும். மருத்துவச் சான்றிதழ் பேரில் ஈட்டாத விடுப்பு அரசு ஊழியர்களுக்குக் கொடுப்பதைப்போல் கொடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

வீடு கட்ட முன்பணம். ரூபாய் 250-ம் அதற்கு மேலும் சம்பள விகிதம் பெறும் ஆலயப் பணியாளர்களுக்கு குறைந்த பட்சம் 10 வருடங்கள் பணிக் காலம் பூர்த்தியான பிறகும் பதவிக் காலம் 15 ஆண்டுகளாக எஞ்சி இருக்கும் நிலையில் வீடு கட்டுவதற்கு முன் பணம் பத்தாயிரமும் அதைப் போன்று 250 ரூபாய்க்குக் குறைவாக உள்ள குறைந்த பட்ச சம்பள விகிதம் பெறுவோர்க்கு மேற் சொல்லப்பட்ட பணிக்கால நிபந்தனைகளுக்குட்பட்டு ரூபாய் ஐயாயிரமும் அவர்கள் பணி புரியும் ஆலயத்தின் நிதி நிலைமையையும் அனுசரித்து வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி.)



1982 மார்ச் 11] [திரு. ஆர். எம். வீரப்பன்]

திருமணத்திற்கு முன் பணம். நிதி வசதியுள்ள ஆலயங்களில் ரூபாய் 250-ம் அதற்கு மேல் சம்பள விகிதம் பெறும் நிரந்தரப் பணியாளர்களுக்கு தனது திருமணத்திற்கோ அல்லது தனது மகள் அல்லது மகன் திருமணத்திற்கோ திருமணம் செய்து கொள்பவர் பெண்ணாக இருந்தால் ஆயிரத்து ஐநூறு ரூபாயும், ஆணாக இருந்தால் ஆயிரம் ரூபாயும் முன் பணமாகக் கொடுக்கப்படும். அவ்வாறே 250 ரூபாய்க்கு கீழ் குறைந்த பட்சம் சம்பள விகிதம் பெறும் நிரந்தரப் பணியாளர்களுக்கு தனது திருமணத்திற்கோ அல்லது மகள் அல்லது மகன் திருமணத்திற்கோ ஆயிரம் ரூபாய் முன் பணமாகக் கொடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி.)

கடந்த ஒரு ஆண்டுக் காலத்திலே அறநிலையத் துறை ஆலயப் பணியாளர்களிலே மிகப் பெரிய ஆலயங்களிலே வருமானம் இருக்கின்ற ஆலயங்களிலே அநேகமாக அரசு அலுவலர்களுக்குக் கொடுக்கிற அளவுக்கு சம்பளத்தை அதிகப்படுத்தி இருக்கிறோம். அதையெல்லாம் குறிப்புகளிலேயே சொல்லியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 2—00)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம்.**

திருவாளர்கள் இரெ. இராசமாணிக்கம், ஜே. ஹேமச்சந்திரன், செ. சிவசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி '' மானியக் கோரிக்கை எண் 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள்—சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 2,21,79,000 ரூபாய்க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும் ''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**கோரிக்கை எண். 25.—சின்கோனா.**

திரு. சு. பாலன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்ப பெற்றுக் கொள்ளப் பெற்றது.

திருவாளர்கள் ரா. கிருஷ்ணன், மு. அப்பாத்துரை ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

'' மானியக் கோரிக்கை எண் 25—சின்கோனா என்ற, தலைப்பின் கீழ் ரூபாய் 2,45,81,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் ''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

### கோரிக்கை எண். 45.—காட்டுவளத்துறை.

திருவாளர்கள் ப. சுந்தரம், ஜே. ஹேமச்சந்திரன் ஆகியவர்வர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாக கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

'' மானியக் கோரிக்கை எண். 45.—காட்டுவளத்துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,31,58,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும். ''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

### கோரிக்கை எண். 47.—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்.

திருவாளர்கள் சு. பாலன், பொ. உத்திராபதி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திரு. ரா. கிருஷ்ணன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

'' மானியக் கோரிக்கை எண். 47.—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில், நுட்பவியல் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,21,75,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும். ''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

### கோரிக்கை எண் 54—காட்டுவளம் குறித்த மூலதனசெலவு.

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், தி. கா. நல்லப்பன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

'' மானியக் கோரிக்கை எண். 54.—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 14,89,68,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மாலை 4-30 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-02 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(மாலை 4-30)

மாலை 4-30 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

(ஊ) கோரிக்கை எண். 18.— மருத்துவம்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண். 18.—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 76,56,72,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. இரா. இராசமாணிக்கம் : துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், குற்றாலம் தொகுதி, கேரழுந்தூர் அரசு மருந்தகத்திற்கு உள் நோயாளிகள் தங்கி சிகிச்சை பெற பத்து படுக்கைகள் கொண்ட தனி வார்டு அமைக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண். 18.—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெருகின்ற ரூ. 76,56,72,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. சி. பழனிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் அரசு மருத்துவ மனைக்கு ஈ.சி.ஜி. ஏற்படுத்துவதைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண். 18.—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெருகின்ற ரூ. 76,56,72,000-இல் ரூ. 100 ஐ குறைக்க வேண்டும்."

திரு. டி. மணி : துணைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் நாகர் கோவிலுள்ள தலைமை மருத்துவ மனையில் காது, மூக்கு, தொண்டை தோல் முதலிய பிரிவுகளுக்கு போதிய மருத்துவ நிபுணர்கள் நியமிக்க வேண்டியதன் அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண். 18.—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 76,56,72,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(எ) கோரிக்கை எண். 19.— பொதுச் சுகாதாரம்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 19.—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 74,45,47,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."





திரு. சு. பாலன் : துணைத் தலைவர் அவர்களே, வியாசர்பாடி பகுதியில் பொது மருத்துவ மனை வசதி ஏற்படுத்த நடவடிக்கை எடுக்காதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 19.—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 74,45,47,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

திரு. கே. எம். தங்கமணி : துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு கிராமத்திலும் சுகாதார ஆய்வாளர்கள் மூலம் குழந்தைகளுக்கு முத்தடுப்பு ஊசி போடுவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 19.—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 74,45,47,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

திரு. டி. மணி : துணைத் தலைவர் அவர்களே, தோவாளை வட்டத்தில் ஆதிவாசி பழங்குடியினர் பெருவாரியாகக் குடியிருக்கும் வாழையத்திவயல், கூவக்காடு, கீரிப்பாறை ஆகியவற்றின் மையப் பகுதியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 19.—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 74,45,47,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண். 18.—மருத்துவம் மற்றும் மானியக் கோரிக்கை எண். 19.—பொதுச் சுகாதாரம் ஆகியவை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள்* இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளன. அச்சிடப்பெற்று அவைகளை நான் படித்ததாக இந்த அவைக் குறிப்பில் ஏற்றுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்களைத் தங்கள் கருத்துக்களை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இறுதியாக நான் அவற்றிற்குப் பதில் சொல்கிறேன் என்று கூறி அமர்கிறேன்.

* 648-733-ம் பக்கங்களில் இணைப்புகளாக அச்சிடப் பெற்றுள்ளன

[1982 மார்ச் 11

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண். 18.—மருத்துவம் மற்றும் கோரிக்கை எண். 19.—மக்கள் நல்வாழ்வு ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கி.பி. 2000-த்திற்குள் தமிழ் நாட்டிலிருக்கின்ற அனைவருக்கும் நல்வாழ்வு வழங்கப் போவதாக இக்கோரிக்கைக் குறிப்பிலே கொடுத்திருக்கிறார்கள். சென்னை மருத்துவக் கல்லூரி உட்பட மாநிலத்தில் உள்ள எல்லா மருத்துவக் கல்லூரிகளுக்கும் சேர்த்து, தமிழ்நாட்டில் ஒரு மருத்துவப் பல்கலைக் கழகம் ஏற்படுத்தப்படும் என்று இங்கே அறிவித்திருக்கிறார்கள். உண்மையிலேயே மருத்துவப் பல்கலைக் கழகம் ஏற்படுத்துவதாக இருந்தால் அதை நாங்கள் வரவேற்கிறோம். அதே நேரத்தில், மருத்துவப் பல்கலைக் கழகத்தில் எந்த , எந்த மருத்துவம், எந்த எந்த பிரிவுகள் அடங்குகின்றன என்பதை எல்லாம் இங்கே குறிப்பிடப்படவில்லையென்பதை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசாங்கத்தின் சார்பாக 8 மருத்துவக் கல்லூரிகளும், பல் மருத்துவக் கல்லூரியும் நடத்தப்படுவதாக அறிவித்திருக்கிறார்கள். அதோடுமட்டுமல்லாமல், தென்னாற்காட்டில் உள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஒரு பல் மருத்துவக் கல்லூரி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதிலே சேர்க்கப்படுகிற மாணவர்கள் முறையாக, அரசாங்கத்தின் விதிமுறைகளுக்கேற்ப அங்கே சேர்க்கப்படுகிறார்களா ? பின்தங்கிய மாணவர்கள், தாழ்த்தப்பட்ட மாணவர்கள் முறையாகச் சேர்க்கப்படுகிறார்களா? என்பதை அரசாங்கம் கண்காணிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இந்தக் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கப்படுகிற நேரத்தில் வேற்று மொழி மாணவர்கள் அதிகமாகச் சேர்க்கப்படுகிறார்கள் என்ற புகார் இருக்கிறது.

அந்தப் புகாரின் அடிப்படையில் தமிழைத் தாய்மொழியாக அல்லது பயிற்சி மொழியாகக் கொண்டவர்கள், அல்லது இந்த நாட்டில் தொடர்ந்து வாழ்கின்ற மக்கள் அந்தக் கல்லூரியில் சேரமுடியாத நிலை தமிழகத்திலே ஏற்படுமானால் அந்த நிலையைப் போக்குகின்ற அளவுக்கு இந்த மருத்துவக் கல்லூரிகளில் எத்தனை மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கல்லூரிகளிலே அல்லது பள்ளிகளிலே படிக்கின்றபோது அவர்கள் படித்த மொழி என்ன என்பதையும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் உரையிலே தெரிவிப்பார்கள் என்று நான் நம்புகிறேன். காரணம் மருத்துவக் கல்லூரிகளிலே இந்த மாநிலத்திலே படித்த மாணவர்களுக்கு சேரும் வாய்ப்பு இல்லை என்ற குறைபாடு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



1982 மார்ச் 11] [திரு, ந. இராமச்சந்திரன்]

அதேபோல இன்றைக்கு பெரும்பாலான ஆரம்ப சுகாதார நிலையங்களில் டாக்டர்கள் இல்லாமல் இருக்கிறார்கள். குறிப்பாக பல்வேறு மருத்துவமனைகளிலே பெண் டாக்டர்கள் இன்னும் போடப்படாமல், சில மருத்துவமனைகளிலே 6 மாதங்கள், ஒரு ஆண்டுக்கு மேல் கூட பெண் டாக்டர்கள் இல்லாமல் இருக்கிறார்கள். இது குறித்து பல இடங்களிலே இருந்து அமைச்சருக்கும், இயக்குநருக்கும் தெரிவிக்கப்பட்டும், இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கை இல்லை என்பதைக் கூறிக் கொள்ள விரும்புவதோடு, குறிப்பாக குற்றாலம் தொகுதியில் உள்ள தேரழந்தூர் மருத்துவமனையில் 6 மாத காலமாக பெண் டாக்டர்கள் போடப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களே தெரிவித்தும் இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் அரசாங்கத்தினுடைய தலையீடு காரணமாக அரசியல் காரணங்களுக்காக மருத்துவர்கள் அடிக்கடி மாற்றப்படுகின்ற நிலை இருக்கிறது. பல்வேறு மருத்துவமனைகளில் முறையாக பணிகள் செய்ய விடாமல், ஆங்காங்கே இருக்கின்ற சூழ்நிலைக்கேற்ப, சாதாரணமாக சான்றிதழ் வழங்குவதற்கே அதிகமான அளவில் கையூட்டு வாங்குகின்ற நிலைமை இருக்கின்றது. அப்படி பல்வேறு பகுதியில் டாக்டர்களே இல்லாத நேரத்தில், படித்த மருத்துவர்கள் பலபேர்கள் வேலை இல்லாமல் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துகொண்டு இருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம்? இப்படிப்பட்ட குறைபாடுகள் களையப்படவேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று அவுஸ் சர்ஜன் கோர்ஸ் முடித்த பிறகு நம்முடைய டாக்டர்கள் எல்லாம் கிராமப் பகுதியிலே மூன்று ஆண்டு கண்டிப்பாக பணியாற்றவேண்டும் என்று இருக்கின்றது. அதை கட்டாயமாக்கி அப்படி 3 ஆண்டுகள் பணிபுரிந்து வந்தால்தான் அவர்களுக்குப் பட்டம் வழங்கப்படும் என்று விதிமுறையை வகுத்தால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒவ்வொரு ஆரம்பசுகாதார நிலையத்துக்கும் கூடுதலாக ஒரு டாக்டரைப் போடப்போவதாக அறிவித்திருக்கிறார்கள். அப்படி கூடுதலான முறையில் எத்தனை டாக்டர்கள் போடப்பட்டிருக்கிறார்கள் என்று பார்த்தால், நான் வசிக்கின்ற பகுதியிலே இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையத்தில் அப்படிப்பட்ட டாக்டர்கள் போடப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்

கொள்கிறேன். அப்படிப்பட்ட அறிவிப்புகள் எல்லாம் ஏட்டுச் சுரக்காயாக இல்லாமல், முறையான அந்த டாக்டர்களைப் போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று நர்சஸ் பயிற்சி பணிக்கு மாணவிகளை சேர்க்கின்ற முறையிலே ஏற்கனவே குறிப்பிட்டவாறு குறைபாடுகள் உள்ளது. குறிப்பாக ஸ்டான்லி மருத்துவ மனையில் பயில்கின்ற மாணவிகளுக்கு போதுமான இடவசதி இல்லை. ஒரே அறையில் 7, 8 பேர்கள் ஒன்றாக இருக்கவேண்டிய நிலை உள்ளது. அவர்கள் அனைவரும் ஒன்றாக நிற்பதற்கே முடியாத நிலை இருக்கின்றது. என்பதாகக் கேள்விப்படுகிறேன். அந்தத் குறைபாடுகளை போக்கும் வண்ணம் புதிதாக கட்டிடம் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பல்மருத்துவ கல்லூரிக்கு மருத்துவ மாணவர்களைச் சேர்ப்பதில் மார்க்குகள் திருத்தப்பட்டதாகவும் அதைப்பற்றி மறு பரிசீலனை செய்யவேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்று அமைச்சர் தெரிவித்திருக்கிறார் என்று அறிகிறேன். என்ன சூழ்நிலையில் அந்த மார்க்குகள் திருத்தப்பட்டன. அதற்கு யார் காரணம்? அதன் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது. பல்கலைக் கழகம் மூலமாகவா அல்லது மாணவர்களின் பெற்றோர்களின் மூலமாகவா இந்தத் தவறுகள் நடைபெற்றன என்பதை அமைச்சர் அவர்கள் கட்டாயம் தெரிவிக்கவேண்டும்.

அடுத்து என்னுடைய தொகுதியான பின்தங்கிய பகுதியான செஞ்சியில் உள்ள மருத்துவமனையில் நீண்டகாலமாக ஒரு குறை இருக்கின்றது.

(மாலை 4.40)

எக்ஸ்-ரே என்று சொல்லப்படுகிற கதிர் படம் எடுக்கும் கருவியை அறுவை சிகிச்சை செய்வதற்குத் தேவைப்படும் அந்தக் கருவியை அங்கே அமைக்க வேண்டுமென்று பல ஆண்டுகளாகக் கேட்கப்பட்டும் இதுவரை அது நிறுவப்படவில்லை. அதையும் அமைச்சரவர்கள் செய்து தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திண்டிவனம் பொது மருத்துவமனையில் ஓவர்ஹெட் டாங்க் வேலை செய்யவில்லை என்று அந்த மக்கள் சார்பாக ஏற்கனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் தெரிவித்தும், சட்ட மன்ற உறுப்பினர்கள் தெரிவித்தும் அதற்கு முறையான நடவடிக்கை எடுக்காமல் அந்தப்பகுதியிலே இருக்கிற, அந்த மருத்துவமன்னக்கு வருகிற நோயாளிகள் தங்களுடைய நோய்களைப் போக்குவதற்குத் தேவையான குடிநீர் வசதி கூடப்பெற முடியாத நிலைமையிருக்கிறது.





மருத்துவ மனைகளில் எல்லாம் சுகாதார வசதிகள் இல்லாத நிலைமையில், மருத்துவ மனைக்குச் சென்றாலே நோய் வருமோ என்று அஞ்சுகின்ற நிலைமை உருவாகியிருக்கிறது.

மக்கள் நல்வாழ்வு வாழ வேண்டும் என்று சொல்லுகிற இந்த அரசாங்கம், ஏழை எளிய மக்கள் அதிகமாக வசிக்கின்ற கிராமங்களுக்கு முறையான முறையில் மருத்துவ வசதி செய்து தர, கிராமப்புற மருத்துவ மனைகளுக்கு பல்வேறு திட்டங்கள் போட்டிருக்கிறோம், பல்வேறு பணியாளர்களை நியமித்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். திட்டங்கள் இருக்கிறதே அல்லாமல், அந்த கிராமங்களுக்கு சென்று கேட்டால் மருத்துவர்கள் வந்தார்களா என்று கேட்டால் இல்லை என்று பதில் தான் வருகிறது. ஆரம்ப சுகாதார நிலையங்களில் 3 டாக்டர்கள் போட்டிருக்கிறோம். ஒரு டாக்டர் மருத்துவப் பணி செய்கிறார். மீதி இரண்டு டாக்டர்கள் கிராமங்களுக்கு சென்று பணி ஆற்றுகிறார்கள் என்று தெரிவித்திருக்கிறார்கள். இதைக் கண்காணிக்க ஒரு குழு ஏற்படுத்தப்படவேண்டும். அப்படிச் செய்தால்தான் அவர்கள் உண்மையாகப் பணி செய்கிறார்களா என்று தெரிந்து கொள்ள முடியும். எல்லா கிராமத்து மக்களுக்கும், ஏழை எளிய, சாதாரண மக்களுக்கும், நோய்களைத் தீர்ப்பதற்கான மருந்துகள் தருவதற்கான வாய்ப்புக்களை உருவாக்கவேண்டும்.

கிராமப்புற மருத்துவமனைகளுக்கு மருந்துகள் வாங்குவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்த தொகையான ரூ. 10,000-த்தை ரூ. 20,000 என்று சென்ற ஆண்டு உயர்த்தி அரசு அறிவித்தது. ஆனால் இந்த ஆண்டும் அதே தொகைதான் இருக்கும் என்று அறிவித்திருக்கிறீர்கள். ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்குவதன் மூலமாக அங்கே இருக்கிற நோய்களைத் தீர்த்துவிட முடியும் என்று நான் நம்பவில்லை. யாருக்கு நோய் வந்தாலும் ஏழையாக இருந்தாலும், பணக்காரராக இருந்தாலும், அந்த நோய்களைத் தீர்க்கவேண்டிய கடமை அரசினுடையதாகும். ஏழை எளிய மக்களுக்கு அவர்கள் வாழ்கின்ற பகுதியிலேயே மருந்துகள் வழங்குகின்ற ஏற்பாட்டைச் செய்யவேண்டும். ரூ. 20,000 என்று ஒதுக்குவது அந்த ஒதுக்கிய தொகையிலே மருந்துகள் இல்லையென்று பதில் சொல்வதற்குத்தான் வாய்ப்பாக இருக்கும். அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்கு சரியான முறையிலே மருந்துகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

தொற்றுநோய்கள் பரவுவதற்கு உருவாவதற்கு அடிப்படைக் காரணம் குடிநீர்ப் பிரச்னைதான். மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரிடம் குடிநீர் வடிகால் வாரியம் போன்ற அமைப்புகள் இல்லாவிட்டாலும் கூட, பாதுகாக்கப்பட்ட குடிநீரை மருத்துவ மனைகளில் வழங்குவதற்கு அவர் ஏற்பாடு செய்யவேண்டும். காலரா போன்ற நோய்கள் பரவுவதற்குக் காரணம் குடிதண்ணீர்

தான், இந்தக் குடிநீரை ஒவ்வொரு கிராமத்திற்கும் பாதுகாக்கப்பட்ட முறையிலே வழங்கவேண்டும். அதற்கு இப்பொழுது சீரான முறையிலே நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

குறிப்பாக, செஞ்சி போன்ற பகுதியிலே வறட்சி அதிகமாக இருக்கிறது. அதை வறட்சிப் பகுதி என்று அறிவிக்கவேண்டும். செஞ்சி மக்கள் எல்லாம் குடிநீர் இல்லாமல் வெளியிலே சென்று குடிநீர் எடுத்து வருகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. தண்ணீர் இல்லாத குறைகள் எல்லாம் தீர்க்கப்படவேண்டும். இன்றைக்குத் தண்ணீர் இல்லாமல் மக்கள் வாடுகின்ற ஒரு நிலைமை தீர்க்கப்படாவிட்டால், தண்ணீர் தண்ணீர் என்ற படத்திலே காட்டியது போல செஞ்சியிலே ஒரு தண்ணீர் தண்ணீர் படம் எடுக்கவேண்டிய நிலைமை வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. எல்லா கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க சீரான முயற்சிகளை எடுக்கவேண்டும். ஆகவேதான் குடிநீர் வடிகால் வாரியம் போன்ற அமைப்புகள், சரியான முறையிலே தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு சீரான முறையிலே செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சாலை விபத்து, தீ விபத்து போன்றவைகளுக்கு சிகிச்சை அளிக்க வட்டாரத்தில் இருக்கிற அந்தந்த மருத்துவ மனைகளில் தனிப் பிரிவு அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழுநோய் பிச்சைக்காரர்களைப்பற்றி சொல்ல வேண்டுமானால், தொழுநோய் பிச்சைக்காரர்களாக இருப்பவர்கள் ஏழைகளாக இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய நோயை குணப்படுத்த வாய்ப்பு இல்லை என்பதால் தான் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்களை ஏற்படுத்தி, எல்லா தொழுநோய் பிச்சைக்காரர்களையும் அந்த இல்லங்களிலே சேர்த்து, அவர்களுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துத் தந்தார்கள். இன்றைக்கு அவர்கள் எல்லாம் பேருந்து நிற்கும் இடங்கள், பொதுமக்கள் கூடும் இடங்கள் போன்ற இடங்களில் அதிகமாகக் காணப்படுகிறார்கள். அவர்களை எல்லாம் கட்டாயமாக கொண்டுவந்து மறு வாழ்வு இல்லங்களிலே சேர்த்து, அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

குடும்பக் கட்டுப்பாட்டைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு இன்றைக்கு முன்னணியில் இருந்தாலும், மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தியதன் மூலம் தமிழகத்திலிருந்து மாநிலங்கள் அவைக்கு அனுப்பும் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்து இருக்கிறது. அதைத் தட்டிக்கேட்க இந்த அரசு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். குடும்பக்கட்டுப்பாட்டைச் செயல்படுத்துவதினால் நம்முடைய மாநிலத்தின் உறுப்பினர்கள் எண்ணிக்கை குறையாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





குடும்பக்கட்டுப்பாடு துறையில் சம்பூர்ணம் என்று ஒரு துணை
இயக்குநர் இருக்கிறார். அவர் குடும்பக் கட்டுப்பாட்டுக்கு
விரோதமாக செயல்படுகிறார். அவரைப்பற்றி அமைச்சரவர்
களுக்கும் பல தந்திகள் வந்திருப்பதாக நான் அறிகிறேன். அவர்
மீது வந்திருக்கிற புகார்களை விசாரித்து, உரிய நடவடிக்கை
எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செஞ்சி பகுதியில் மேற்குகிராமத்தில் இருக்கிற ஆரம்ப சுகா
தார நிலையத்தில் கூடுதலாக ஒரு பெண் டாக்டரை நியமிக்க
வேண்டும். உளக்கூர் ஒன்றியத்தில் டாக்டர் வருவதில்லை.
சாரம், உளக்கூர் என்று இரண்டு ஒன்றியங்கள் இருக்கின்றன
அந்த இரண்டு ஃபேமிலி வெல்பேர் சென்டர்களில் உளக்கூர்
சென்டருக்கு டாக்டர் வராததால் அங்கே செய்யவேண்டிய
சிகிச்சைகளை சாரத்தில்தான் செய்கிறார்கள். பணிக்குவராத
மருத்துவர்மீது நடவடிக்கை எடுத்து, உளக்கூரில் செய்ய
வேண்டிய சிகிச்சையை அங்கேயே செய்வதற்கு ஏற்பாடு செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

5000 மக்கள் தொகை உள்ள கிராமங்களுக்கு எல்லாம் சிறு
சுகாதார நிலையங்கள்—மினி ஹெல்த் சென்டர்ஸ்—ஏற்படுத்தப்
படும் என்று சொல்லியிருக்கிறார்கள். சொல்லியதோடு நிற்
காமல் 5,000 மக்கள் தொகை கொண்ட எல்லா கிராமங்களிலும்
மினி சென்டர்களை ஏற்படுத்த தகுந்த நடவடிக்கைகளை விரை
வாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொற்றுநோயைப் பொறுத்தவரையில், குறிப்பாக சென்னை
மாநகராட்சியில் தொற்றுநோய்ப் பிரிவு ஒன்று இருக்கிறது.
எந்த இடத்தில் அங்கே மலஜலம் கழிப்பதற்கு இடம் ஒதுக்கப்
பட்டிருக்கிறதோ அதே இடத்தில்தான் குடிதண்ணீரும் இருக்
கிறது அங்கேதான் தண்ணீர் குடிக்கிறார்கள். அதனால் பல
நோய்கள் பரவும் வாய்ப்பு இருக்கிறது. அதைப்பார்க்கும்போது
உண்மையில் தொற்றுநோயை பரப்புகிறார்களா அல்லது தடுக்
கிறார்களா என்று தெரியவில்லை. சென்னை போன்ற பெரிய
நகரில் குடிநீர் வடிகால் வாரியம் முறையாக செயல்படாத கார
ணத்தால் பல இடங்களில் சுகாதார கேடு ஏற்பட்டு, மாநகராட்சி
யில் கொசுத் தொல்லை ஏற்பட்டு, காய்ச்சல், மூளைக்காய்ச்சல்
போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. ஒதுக்குப்புறமாக மலஜலம்
கழிப்பதற்கு நல்ல கழிப்பிட வசதி இல்லை. சென்னை மாநகர்
இந்த கழிப்பிட வசதியில் மிக்வும் பின்தங்கிய நிலையிலே இருக்
கிறது. "நாங்கள் சிறிய கிராமங்களை சிறிய நகரங்களாக்கு
வோம்" என்று சொன்னீர்கள். இப்போது பெரிய நகரமான
சென்னையை ஒரு பெரிய கிராமமாக்கியிருக்கிறீர்கள் என்று நான்
குற்றஞ்சாட்டுகிறேன்.

[திரு. ந. இராமச்சந்திரன்] [1982 மார்ச் 11

அது மட்டுமல்ல. சுகாதார கேட்டினால் பெருமளவில் இன்றைக்கு மூளைக்காய்ச்சல் நோய் மட்டுமல்லாமல் யானைக்கால் நோயும் பரவிக் கொண்டிருக்கிறது. அதை எல்லாம் தடுப்பதற்கு திட்டமிட்டு, ஒரு கால வரையறையை நிர்ணயித்து, அந்த குறிப்பிட்ட காலத்திற்குள் செய்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு 42 ஆவது அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி மத்திய மாநில அரசாங்கப் பட்டியலில் கல்வி சேர்க்கப்பட்டிருக்கிறது. அந்த விதியிலே விரைவிலே ஒரு திருத்தம் வரும் என்று தெரிகிறது. எம்.பி.பி.எஸ். கோர்ஸ், எஞ்சினீயரிங் கோர்ஸ் போன்றவைகளில் மாநில அரசு எப்படி இருக்க வேண்டுமென்று ஒரு கட்டளையை, டைரக்ஷனை கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. இப்படி மத்திய அரசு மாநில அரசினுடைய அதிகாரங்களில் தலையிடும் நிலையை அண்ணாவின் கொள்கையை ஏற்றுக் கொண்டிருப்பதாகச் சொல்கிற நீங்கள் கண்டிக்க வேண்டும். மாநில அரசின் அதிகாரங்களில் மத்திய அரசு தலையிடக்கூடாது என்று முறையான அறிவிப்பை அல்லது எதிர்ப்பை தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 4-50)

பெரிய பணக்காரர்கள் பயன்படுத்துகின்ற அந்த மருந்துகளை எல்லாம் ஏழை எளிய மக்கள் பயன்படுத்த முடியாத அளவுக்கு இந்தத் திட்டம் இருக்கிறது. ஆகவே ஏழை எளிய மக்களும் இந்த மருந்துகளைப் பயன்படுத்துகின்ற வகையிலே எல்லோருக்கும் சமமான வகையிலே சிகிச்சை அளிக்கின்ற வகையிலை சரியான திட்டத்தை வகுக்கவில்லை. எனவே பொதுநல அரசாங்கம் என்று இதைச் சொல்வதற்கில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து குத்தாலம் ஒன்றியத்தில் 6 மாதங்களாக நான்கு சித்த வைததிய மருத்துவ மனைகளில் டாக்டர்கள் இல்லாமல் இருப்பதால் மூடப்பட்டு கிடக்கின்றன. கட்டடம் கட்டப்படாமல் இருக்கின்றது. இப்படிப் பல்வேறு இடங்களில் முறையாக டாக்டர்களே இல்லாமல், கட்டிடங்கள் கட்டப்படாமல் இருக்கின்ற நிலைகைள எல்லாம் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து என்னுடைய உரையினை முடித்துக் கொள்கிறேன். நன்றி.

திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற ஒருநல்ல வாய்ப்பு கிடைத்தமைக்காக முதலிலே நன்றியறிதலை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.



1982 மார்ச் 11] [திரு. கே. சௌந்திரராசன்]

பொது சுகாதாரம், மருததுவம், மருத்துக் கல்வி என்ற தலைப்புக் களின் கீழ் இன்றைய தினம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தமிழகத்தினுடைய 1982—83 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகளை சமர்ப்பித்து இருக்கிறார்கள். அப்படி சமர்ப்பிக்கப்பட்ட நேரத்திலே எப்படிபட்ட காரியங்களுக்காக அந்தத் தொகைகள் எல்லாம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்பதை குறிப்பிட்டுச் சொல்லி யிருக்கிறார்கள். நான் இன்றைய தினம் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது எல்லாம் மக்கள் நல்வாழ்வுப் பணியின் செயல்பாடுகளின் முக்கியக் குறிக்கோள் நோய்கள் ஏற்படுவதற்கான காரணங்களை அறிந்து அவற்றை நீக்குதல், நல்ல சுகாதாரமான முறையில் மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படச் செய்தால் அதற்கேற்ற வகையிலே நல்ல சாக்கடைத் திட்டம், சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டம், சமுதாயத்தின் அனைத்து பிரிவினருக்கும் சுகாதாரக் கல்வியைப் போதித்து அறியாமை, மூட நம்பிக்கை ஆகியவற்றை நீக்குதல் என்ற அடிப்படையிலே இன்றைக்குத் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன.

இன்றைய தினம் பொதுவாக இந்த மானியக் கோரிக்கையில் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சென்னை மருத்துவக் கல்லூரியில் பட்ட மேற்படிப்புகல்வி மற்றும் ஆராய்ச்சிகான முயற்சிகளிலே ஈடுபட்டு அதற்கு வேண்டிய தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட இருக்கின்றது என்பதை இந்த மானியக் கோரிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். உள்ளபடியே நான் இதை வரவேற்பகற்குக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து மருத்துவத்திற்கு என்று தனியாக பல்கலை கழகம் உருவாவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட இருக்கின்றது என்பதையும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அவற்றை எல்லாம் நான் உளமாற வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன். இன்றைனதினம் தமிழகத்திலே நோயாளிகள் அதிகமாகப் பெருகி வருவதால் அதைக் கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து தமிழக அரசும் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நல்ல வகையிலே திட்டங்களைத் தீட்டி பணியாற்றுகிறார்கள் என்பதைப் பார்க்கின்றபோது நான் உள்ளபடியே பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்

அதே நேரத்திலே ஒன்றே நான் குறிப்பிட்டாக வேண்டும். இங்கே குறிப்பிட்டுள்ளதைப் போல மூட நம்பிக்கைகளை நீக்குதல், அறியாமையினை அகற்றுதல் ஆகிய பணிகள் ஒருபுறத்திலே நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் மக்களுக்குத் தேவையான மருந்துகளை வழங்குகின்றபோது தீவிரமாக அவை வழங்கப்பட வேண்டும் என்றும் சிகிச்சைகள் அளிக்கப்படவேண்டும் என்பதைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை எதற்காகத் தேவைப்படுகின்றது என்றால் வள்ளுவர் கூட குறிப்பிட்டிருக்கிறார்,

" வருமுன்னர்க் காவா தான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறுக் போலக் கெடும்."

என்று வள்ளுவர் குறிப்பிட்டிருக்கிறார். நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட In culati n is better then insecti n. அரசியலுக்கும் கூட அந்தக் கருத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். ஆகவே தமிழகத்திலே பொதுச் சுகாதாரம் என்ற வகையிலே பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருந்தாலும் நான் குறிப்பிட விரும்புவதெல்லாம் இன்றைய தினம் பொதுச்சுகாதாரம் கெடுவதற்குரிய காரணங்கள் பெருகிக்கொண்டிருக்கின்றது என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

அதற்குக் காரணம் என்னவென்றால், மேல் நிலையிலே இருக்கின்றவர்கள் தங்கள் வசதிகளைப் பெருக்குகின்றபோது, கழிவு நீரால் எந்த அளவுக்கு அசுத்தப்படுகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பெரிய பெரிய தொழிற்சாலைகளை உருவாக்குகின்ற முதலாளிகள், கோடிகோடியாக சம்பாதித்து, வெளியே காற்றோட்டம் இல்லாத அளவுக்கு செய்வதால், புறசூழ்நிலை எந்த அளவுக்கு கெடுகிறது என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். இவைகளையெல்லாம் கூறுவதற்குக் காரணம், இன்றைய தினம் ஒருபுறத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மானியக் கோரிக்கையிலே இந்தக் கருத்தை வைத்தாலும், அதிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற தொகை மூலமாக இந்த ஆண்டிற்குத் தேவைப்படுகின்ற பொது சுகாதாரத்தைப் பெறுவதற்கு, மருத்துவத்தைப் பெறுவதற்கு வாய்ப்பிருக்கிறதா என்று கேட்டால், நிச்சயமாக போதுமானதாக இல்லை ; காரணம் நம்முடைய தேவைகள் இன்னும் அதிகமாக இருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. நம்முடைய நிதி ஆதாரங்களை வைத்து திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன என்று சொன்னாலும், நான் குறிப்பிட விரும்புவது, பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த சட்ட மன்றத்திலே உறுப்பினராக இருந்தபோது, குறிப்பிட்டார்கள், கல்விக்காகவும், பொதுச் சுகாதாரத்திற்காகவும், நிதி வேண்டுமென்று சொன்னால், நாங்கள் எல்லாம் வரியை எதிர்ப்பவர்கள் என்றாலும், அவைகளுக்கு வரி போடலாம், அதை ஏற்றுக்கொள்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைத் தான் ஆரம்ப காலத்திலே, இந்த மானிய கோரிக்கையிலே மூட நம்பிக்கை அகற்றி, கல்வி அறிவைப் புகட்டுவதன் மூலம், நாட்டு மக்களுடைய உள்ளத்தில் நள்ள சூழ்நிலையை உருவாக்கினால், சுகாதாரக் கேடுகள் இருக்கின்ற இடத்தை தூய்மைப் படுத்துவதற்கு, தங்களைத் தூய்மைப்படுத்துவதற்கு நல்ல வாய்ப்பை உருவாக்கும். பெரிய முதலாளிகள், பெரிய தொழிலதிபர்கள் ஆகியோருக்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்கு வரியைப் போடலாம். அப்படிப்பட்ட வகையிலே சுகாதாரத் துறையை மேம்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்





அடுத்து நான் குறிப்பிட விரும்புவது, சாலைப் போக்குவரத்து இன்று பெருகியிருக்கிறது. சாலைகளில் விபத்துகள் பெருகியிருக்கின்ற சூழ்நிலையில் தமிழக அரசு அவைகளைத் தவிர்ப்பதற்கு பலவேறு முன்னோடித் திட்டங்களைத் தீட்டியிருக்கிறது. அவைகளைச் சிறந்த முவையில்தீட்டுவதோடு அல்லாமல், ₹5 மைல் அல்லது 30 மைல் தூரத்தில், சுற்றுலாத் துறையில் மோட்டல்கள் வைத்திருப்பதுபோல், மக்களுக்குத் தேவையான அளவிற்கு அங்கே சாலைகளில் ₹5 மைல் அல்லது 50 மைல் தூரத்தில் ஒரு மருத்துவமனையை ஏற்படுத்தி, அதிலே விலையுயர்ந்த மருந்துகள் தேவையான அளவிற்கு வைத்து, திடீரென்று சாலை விபத்துகள் ஏற்பட்டால், அதற்கு உதவுவதற்கான வகையிலே ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட மருத்துவமனைகளை உருவாக்குகின்ற திட்டங்களைத் தீட்ட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து இன்றைய தினம், நோயாளிகள் எண்ணிக்கை நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் திருச்சி மருத்துவ மனையில் நாளுக்குநாள் அங்கே உள்ள நோயாளிகளின் எண்ணிக்கை உயர்ந்துகொண்டே வந்தாலும், அங்கே இருக்கிற மருத்துவர்களின் எண்ணிக்கை 10, 15 ஆண்டுகளுக்கு முன்னால் இப்படி இருந்ததோ, அதே நிலையில் தான் இருக்கிறது. வளர்ந்து வரக்கூடிய அளவுக்கு எண்ணிக்கை இல்லை. இதனால், அந்த நோயாளிகளை கவனிக்கின்ற தரம் எந்த அளவுக்கு இருக்கும் என்பதை அருள்கூர்ந்து எண்ணிப் பார்த்து, அதற்கேற்ற வகையில் திட்டங்களைத் தீட்ட வேண்டும். அந்த வகையில் திட்டங்களைப் போட்டு பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நான் கூற விரும்புவதெல்லாம், மக்களிடையே ஒரு எண்ணம் உருவாகியிருக்கிறது. தனியார் மருத்துவமனைகளிலே நல்ல வைத்திய வசதி கிடைக்கின்ற ஒரு சூழ்நிலை இன்றைக்கு இருக்கிறது என்ற எண்ணம் அவர்களுக்கு உருவாகியிருக்கிறது அவர்கள் இந்த உணர்விற்கு இன்று அடிமைப்பட்டிருக்கிறார்கள் எனவே, கொஞ்சம் பணம் கட்டிவிட்டு, பாளீ கிளினிக் என்று சொல்லப்படுகின்ற வகையிலே சிறு சிறு மருத்துவமனைகளை உருவாக்குவதன் முலம், இன்றைய தினம் மக்களிடத்திலே உள்ள அந்த நம்பிக்கையை, உணர்வைப் போக்கி, நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அதே நேரத்திலே, மருத்துவம் படித்த பட்டதாரிகளுக்கும் நல்ல வேலை வாய்ப்பு கொடுத்ததாகும். தமிழகத்திலே முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், அறுவை நிலையங்களிலே குளிர் சாதனம் அமைக்க வேண்டுமென்று ஆங்காங்கு எடுத்துக் கூறி வருகிறார்கள். அதற்கேற்ற வகையில் பல்வேறு திட்டங்கள் தீட்டப் படுகின்ற சூழ்நிலையில் அறுவை நிலையங்களிலே குளிர் சாதன வசதியை உருவாக்கித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

[திரு. கே. சௌந்திரராசன்] [1982 மார்ச் 11

அடுத்து, அவசர மருத்துப் பிரிவில் பல நேரங்களில் மருந்து இல்லை என்று கூறப்படுகிறது. நோயாளிகள் அவசர காலத்திலே வருவதால், அங்கே மருந்துகள் இல்லை என்று சொல்லாமல், தேவையான மருந்துகள் அங்கே நிரப்பி வைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டு கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாலை 5-00.)

அடுத்து, இன்றைய தினம் அரசுக்கு சப்ளை செய்யப்படுகின்ற மாத்திரைகளில் அரசாங்கத்தின் பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் இன்செக்ஷன்களிலும் அரசின் பெயர் பொறிக்கப்பட்டால் தவறுகள் செய்வதற்கு வாய்ப்பு ஏற்படாமல் இருக்கும்.

திருச்சியைப் பொறுத்தவரையில் அங்குள்ள மருத்துவமனையில் பத்தாண்டுகளுக்கு முன்னால் எவ்வளவு படுக்கைகள் இருந்தனவோ அந்தளவிற்குத்தான் இப்போதும் இருக்கிறது. எனவே அங்குள்ள படுக்கை வசதியைப் பெருக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் இன்டன்ஸிவ் கேர் சென்டர் மானிட்டர் என்ற வகையிலும் உருவாக்கித் தர வேண்டும்.

அடுத்து, இன்றைக்கு திருச்சி தொழிலாளர்கள் நிறைந்த பகுதியாகும். அங்கு பீடி சுற்றும் தொழிலாளர்கள் 50,000க்கு மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். தொழிலாளர்கள் நல துறை அமைச்சர் அவர்கள் அதை நன்கு அறிவர். அங்கிருக்கின்ற ராஜாஜி காச நோய் மருத்துவமனையில் அறுபதுபடுக்கைகள்தான் இருக்கின்றன. பீடி சுற்றும் தொழிலாளர்களில் 90 சதவிகிதம் பேர்கள் காச நோயால் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே அப்படி காசநோயால் பாதிக்கப்படுகிற தொழிலாளர்களுக்கு உடனடியாக வைத்திய வசதி கிடைக்கக்கூடிய வகையில் அந்த காசநோய் பிரிவினை விரிவுப்படுத்த வேண்டும். அங்கு அமைந்திருக்கின்ற ராஜாஜி மருத்துவ மனை நகரில் மையப் பகுதியாக மாறியிருக்கிறது. அதைப் புறநகருக்குக் கொண்டு சென்று காற்றோட்டம் உள்ள பகுதியில் அது அமைக்கப்பட வேண்டும். திருச்சி பொதுவாக காசநோய்க்கு பெயர் போன இடமாகும். அந்த நிலையை மாற்றுகின்ற வகையில் இந்த அரசு விரைந்து செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பீடி சுற்றுகிறவர்களுக்கு செஸ் நிதி என்ற நிதி இருக்கிறது. தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அதைப் பெற்று அந்த தொழிலாளர்களுக்கு வேண்டிய வசதிகளை செய்து தரவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சி பக்கத்திலுள்ள மாயனூரிலிருந்து பேட்டவாய்த்தலைவரை தொழுநோய் இருப்பதாக கண்டுகொண்டு வருகிறார்களே தவிர உரிய வசதிகளை சரியான முறையில் பெற முடியவில்லை. எனவே அதற்கான சிகிச்சை வசதிகளைப் பெற்றுத் தரவேண்டும். இறுதியாக ஒன்று குறிப்பிட விரும்புகிறேன்.



1982 மார்ச் 11] [திரு. கே. சௌந்திரராசன்]

" இன்றையதினம் வெளிநாட்டு மாணவர்களுக்கு மருத்துவக் கல்வி பயில்வதற்கு ரூபாய் நான்கு இலட்சம் வரை கட்டணம் வசூலிக்கலாம் என்ற செய்தி வந்திருக்கிறது. அப்படி வெளிநாட்டு மாணவர்களை இங்கே மருத்துவக் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளும்போது அவர்களுக்காக என்று தனியாக ஒரு கல்லூரி அமைக்கவேண்டும். அப்படி கமர்ஷியலாக ஒரு கல்லூரியை உருவாக்குவதன் மூலம் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு கிடைக்கிற இடத்தின் எண்ணிக்கை குறையாதிருக்கும். எப்படியும் தமிழ்நாட்டு மாணவர்களின் எண்ணிக்கையை குறைக்காத அளவிற்கு நிலை உருவாக்கப்பட வேண்டும். துறையூரில் உள்ள அரசு மருத்துவ மனையில அவசர காலப் பிரிவு ஒன்றைச் சேர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கையை வரவேற்று அமர்கிறேன்.

*திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு டாக்டராக அமைந்திருப்பது பாராட்டுக்குரியது. இத்துறையில் உள்ள பல்வேறு குறைகளை நீக்கிட வேண்டும். பொது மக்கள் நலன் கருதி என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் சில ஆண்டுகளுக்கு முன்னால் இந்தப் பகுதியில் இருந்து சண்டப் பிரசண்டமாகப் பேசிய பேச்சுக்கள், கேட்ட கேள்விகள் எல்லாம் எனக்கு நினைவிற்கு வருகின்றன. ஆகவே எதிர்க்கட்சிக்காரர்கள் குறை கூறுகிறார்களே என்று எடுத்துக்கொள்ளாமல் குறைபாடுகளைக் களைய ஆவன செய்வார்கள் என நம்பி என் பேச்சை ஆரம்பிக்கிறேன்.

சென்னை கீழ்ப்பாக்கத்தில உள்ள கல்லூரி, ஸ்டான்லி கல்லூரி கோவையில் உள்ள கல்லூரி இவைகளில் இன்னும் டீன்ஸ் நியமிக்கப்படாமல் இருப்பதற்கான காரணம் என்ன என்று தெரியவில்லை. அப்படி டீன்ஸ் நியமிக்கப்படாததால் பொது மக்கள் மத்தியில் ஒரு பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைத் தவிர்க்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்கள் என நம்புகின்றேன்.

போஸ்ட் க்ராஜுவேட் வகுப்புகள் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் முதல் தேதி அன்றே துவங்கப்படவேண்டும் என்று யூனிவர்ஸிடி சொல்வதாகத் தெரிகிறது. சென்ற ஆண்டு ஆறு மாதங்கள் கழிந்துதான், ஆகஸ்டில்தான் அவை துவங்கப்பட்டிருக்கின்றன, ஆனால் யூனிவர்சிடியிலிருந்து ஒரு ஆண்டு முழுப் படிப்பும் படித்துத்தான் ஆக வேண்டும் என்று சொல்வதால் வேலையில் இருப்பவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படுகிறது. ஆகவே ஒவ்வொரு ஆண்டும் இந்த போஸ்ட் க்ராஜுவேட் வகுப்புகள் ஏப்ரல் மாதம் முதல் தேதியன்றே துவங்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்,

[திரு. உ. சுப்பிரமணியன்] [1982 மார்ச் 11

எம். டி., எம். எஸ்., போன்ற வகுப்புகளுக்கு தகுதியில்லாதவர்களைத் தேர்ந்தெடுத்த காரணத்தால், அது தவறு என்று ஹைகோர்டில் ஸ்டிக்காஸ் போடப்பட்டதாக கேள்விப்படுகிறேன். அது உண்மையானால், நிச்சயமாக அது தவிர்க்கப்பட வேண்டும். மாநில அரசுக்கு அது நல்ல பெயரைத் தராது. அமைச்சர் அவர்கள் ஒரு டாக்டராக இருப்பதால் இதைக் கவனிக்க வேண்டும்.

சென்னையிலே உள்ள லேடீஸ் ஆஸ்டலில் 10, 12 வருடங்களாக ஒரு வார்டன் தொடர்ந்து இருந்து வருகிறார். அவர் மீது பல்வேறு குற்றங்களை மாணவர்களும், மற்றவர்களும் கையெழுத்து போட்டு கொடுத்திருந்தும், அவரே தொடர்ந்து நீடிப்பதற்கு என்ன அவசியம் என்று தெரியவில்லை. காரணம், அங்கே அடிப்படைத் தேவையான கக்கூஸ் வசதி கூட சரியான முறையில் செய்யப்படவில்லை. அந்த மாணவர்கள் கையெழுத்து போட்டு, அமைச்சருக்கு அந்த மனுவைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அந்த வார்டனை மேலும் நீடிக்க வைப்பதற்கு என்ன நியாயம்?

அது மட்டுமல்ல, பல (வாலண்டரி) ஏஜென்சிகளிடமிருந்து வாங்கிய நன்கொடைகளை எந்த இனாவிற்கு ஒதுக்குவது என்ற முடிவு உரிய காலத்தில் செய்யாத காரணத்தினால், அது லாப்ஸ் ஆகி, காலாவதியாகி பயன்படாமல் போய்விட்டதாகச் சொல்லப்படுகிறது. இதையெல்லாம் தடுத்து நிறுத்த உடனடியாக அவைகள் எல்லாம் முழுப் பயன் பெறத்தக்க வகையிலே நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நீரிழிவு நோய்க்கு ஓ.பி. பகுதியில் அங்கே வருகின்ற வியாதியஸ்தர்கள் சிறுநீரை மறைவிடத்திலே இருந்து சேகரிப்பதற்கு வசதிகூட இல்லாமல் அங்கே இருக்கிறது. சென்னையிலே உள்ள இந்த பெரிய ஆஸ்பத்திரியிலேயே இப்படி இருக்கிறது. இதைக் கவனிக்க வேண்டும். ஜுவைனல் ரீஆபிலிடேஷன் திட்டத்தைக் கொண்டுவந்திருப்பதாக நீங்கள் சொன்னீர்கள். பள்ளியில் படிக்கும் சிறு பையன் கூட தினசரி தாம்பரத்திலிருந்து அன்றாடம் வரவேண்டியிருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு ஏற்றமுறையில் இந்த வசதியை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னையிலுள்ள பெரிய ஆஸ்பத்திரியில் நெருக்கடி அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், கே. கே. நகர், அண்ணா நகர் ஆகிய இடங்களில் பெரியபரல ஆஸ்பத்திரி ஏற்படுத்தியும், அங்கே சரியான வசதியில்லை என்ற காரணத்தினால், அங்கே கூட்டம் குறைந்து, இங்கே உள்ள ஜெனரல் ஆஸ்பத்திரியில் அதிகமாக ஜனங்கள் கூடுகின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, அந்த அண்ணா நகர், கே. கே. நகர் போன்ற இடங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளை தன்னிறைவு கொண்டதாக ஆக்கி, எல்லாவிதமான வசதிகளும் கிடைக்கும்படி செய்தால், இங்கே கூட்டம் குறையும். நம்முடைய நோக்கமும் நிறைவேறும்.



1982 மார்ச் 11] [திரு. உ. சுப்பிரமணியன்]

தாலுகா தலைமை இடங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளில் அடிப்படைத் தேவையான வீல் சேர் கூட கிடையாது. அவற்றையெல்லாம் கவனித்து, அவைகளையெல்லாம் நிறைவு செய்ய வேண்டும். மதராஸ் மெடிகல் காலேஜிலுள்ள நியூரோபேதாலஜி டிபார்ட்மெண்டில் 15 இலட்சம் செலவில் ஒரு எலக்ட்ரானிக் மைக்ரோஸ்கோப் வாங்கி இரண்டு ஆண்டுகள் ஆகிறது. விலை உயர்ந்த அந்த சாதனம் ஆராய்ச்சிக்குரிய கருவி. ஆனால் அந்தக் கருவியை இயக்குவதற்கு ஸ்கில்ட் ஆப்ரேட்டர் இதுவரையில் போடவில்லை. மேலும், அதற்கு பொறுப்பாக இருக்கின்ற முதல்வர் அடிக்கடி லீவில், வெளியூர் செல்கின்ற காரணத்தால், அந்தக் கருவியை அவர்கள் பூட்டிவைத்துச் சென்று விடுகிறபடியால், அந்தச் சாதனத்தை மற்றவர்கள் பயன் படுத்தாத வகையில் இருக்கிறது. அது முக்கியமான கருவி. பல லட்சக்கணக்கான ரூபாய் செலவில் அந்தச் சாதனம் வாங்கி, மக்களுக்கு பயன்படாத நிலையில் இருப்பதைத் தவிர்க்கவேண்டும்.

பேமிலி பிளானிங் புரோசிராம் பற்றி எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் சொன்னார்கள். அவற்றில் தனியார் ஆஸ்பத்திரிகளில் பிரசவ மாணவர்கள் குடும்பக் கட்டுப்பாடு ஆபரேஷன் செய்துக்கொள்ளக்கூடாது என்ற தடை உத்தரவு பேடாப்பட்டிருப்பதாக சொல்லுகிறார்கள். 20 அம்ச திட்டத்தில், இது 13–வது அம்சமாக இருக்கின்றது. இந்த குடும்ப நலத் திட்டத்தில் அகில இந்தியாவிலே, நம் மாநிலத்தில் நல்லமுறையில் செயல்படுகிறது. அதற்கு உதவி செய்வதற்கு பதிலாக, இன்றைக்கு இந்த உத்தரவு போடப்பட்டிருப்பது உண்மையா? அது உண்மை என்றால், மிகவும் விசனிக்க வேண்டிய ஒன்று. இது அமைச்சருக்குத் தெரியாதா? அரசாங்கத்தின் கொள்கையா? அல்லது அதிகாரிகளின் முடிவா? ஆகவே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் உள்ள இடைஞ்சலை நீக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

டைரக்டர் ஆப் பிரைமரி ஹெல்த், 76 ஆம் ஆண்டில் ரிடையரான ஒருவரை தொடர்ந்து நியமனம் செய்வது என்ன காரணம் என்று தெரியவில்லை. அதனால், இன்றைக்கு தமிழ்நாடு மெடிகல் அசோசியேஷன், அதற்கு ஆட்சேபம் தெரிவித்து, அதற்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்கள். அவ்வாறு மேலும், மேலும் தொடர்ந்து நீடிப்பு செய்யப்படுவதால், பல இளைஞர்களுக்கு அந்த ஸ்தானதிற்கு வர வாய்ப்பில்லாமல் போகிறது. எனவே, அதையும் பரிசீலிக்க வேண்டு மன்று கேட்டுக் கொள்கிறேன்.

காச நோய் கழகத்தின் சார்பாக இராமநாதபுரம் மாவட்டம் கிளையில் பணம் மிகுதியாக இருந்தபோது நெசவாளிகள் மிகுதியாக இருக்கிற ஸ்ரீவில்லிபுத்தூர், அருப்புக்கோட்டை

போன்ற பகுதியிலே மொபைல எக்ஸ்ரே யூனிட் வாங்கி நோயாளிகளை ஸ்கிரின் செய்து சிகிச்சையளிப்பதற்கு வசதி செய்ய வேண்டுமென்று ஒரு தீர்மானம் கூட போடப்பட்டது. ஆனால என்ன காரணமோ நான்கு ஆண்டுகளாக நிறுவப்படாமலே இருக்கிறது. ஆகவே தேவையையும், அவசியத்தையும் உணர்ந்து அந்த பகுதி மக்களுக்கு வசதி செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 5-10)

காரைக்குடிக்கு அருகில் இருக்கிற சோமநாதபுரம் டி. பி. சானடோரியத்தை மேலும் சீர்படுத்தி நல்ல வசதிகளை செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திருமங்கலம் அருகில் கள்ளிக்குடியில் பிரைமரி ஹெல்த் சென்டரில் கட்டடம் கட்டவும் பொதுமக்களால் 10 ஆயிரம் பணம் வழங்கியும், இடமும் கொடுக்கப்பட்டு பல ஆண்டுகளாகியும் இதுவரையில் கட்டடம் கட்டப்படவில்லை.

எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்ற டாக்டர்கள் தொடர்ந்து நகரங்களிலேயே இருக்க விரும்புகிறார்கள். இந்த நிலை மாற்றப்பட வேண்டும். உதாரணமாக எங்கள் ஊரிலே, மத்திய அமைச்சர் ஒருவர் இருக்கிற, மாநில சட்டமன்ற உறுப்பினராக நான் இருக்கிற ஊரிலே இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கு உமன் அண்டு சில்ரன் ஆஸ்பத்திரி ஒன்று இருக்கிறது. அதற்கு டாக்டர்களே வருவதில்லை. வந்தாலும் அங்கு தங்குவதில்லை. 40 மைல்களுக்கு அப்பாலுள்ள மதுரையில் தங்கி தினமும் பஸ்ஸில் வந்து கொண்டிருக்கிறார்கள். தினமும் சிகிச்சை செய்கிற நேரம் கூட ஒரு மணி நேரத்திற்கு குறைவாகவே இருக்கிறது. இந்த நிலையை மாற்ற வேண்டுமென்றால் டாக்டர்களுக்கு இருக்கும் சிரமத்தை உணர்ந்து கிராமப்பகுதிகளில் வேலை பார்க்கிறவர்களுக்கு இன்சென்டிவ் போனஸ் போன்ற சலுகையை அவர்களுக்கு கொடுத்தால் நல்லது என்று என்னுடைய யோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்குவதற்கு இடம் இல்லாததாலும்தான் டாக்டர்கள் வெளியூர்களுக்கு சென்று விடுகிறார்கள். ஒவ்வொரு ஊரிலும் அவர்களுக்கு குவார்ட்டர்ஸ் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநிலத்தில் மொத்தம் 48 மிலியன் ஜனத்தொகை என்றும் ஏறக்குறைய 32 மிலியன் கிராமத்திலே வாழ்கிறார்கள் என்றும் அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இருக்கிற நிலைமை என்னவென்றால் சென்னை நகரத்திலேதான் எல்லாவிதமான வைத்திய வசதிகளும் குவிக்கப்பட்டிருக்கின்றன. நான்கில் 3 பகுதி இருக்கிற கிராம பகுதி



மக்களுக்கு உரிய பங்கு ஈக்குவல் புரோர்போஷன் கொடுக்கப்படவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. இந்த குறைபாடு நீண்டகாலமாக இருப்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காலத்தில் அதை மாற்றுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் எம். எஸ். படிப்புக்கு இரண்டு ஆண்டு காலம் என்று நிர்ணயம் செய்து ஸ்டைபண்ட் இரண்டு ஆண்டுகளுக்கும் கொடுத்து வந்தார்கள். ஆனால் தற்சமயம் மூன்று ஆண்டுகளாக மாற்றி இரண்டு ஆண்டுகளுக்கு மட்டும் ஸ்டைபன்ட் என்று வைத்து ஒரு ஆண்டிற்கு கொடுக்காமல் இருப்பதால் ஏழை மாணவர்கள் படித்து முன்னேறுவதற்கு முடியாத நிலை இருக்கிறது. இதை நிவர்த்தி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். டி. பார்மசி போன்ற பயிற்சி ஸ்தாபனங்களை தனியாருக்கு ஒப்படைக்காமல் அரசே நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

20 ஆண்டுகளுக்கு மேல் அசிஸ்டென்ட் சர்ஜன்களாக இருக்கிறவர்களை சிவில் சர்ஜன்களாக மாற்றவேண்டும். இதிலே அவர்களுக்கு மனக்குறை இருக்கிறதாலே பல இடங்களிலே இதையே சொல்லிக்கொண்டு, வேலையில் அவர்களுக்கு ஊக்கமில்லாத நிலை இருக்கிறது. ஆகவே அவர்கள் உரு பதவி உயர்வு உரிய காலத்தில் பெறவேண்டும்.

ஹானரரி டாக்டர்ஸ் என்று பல இடங்களில் நியமிக்கப்படுகிறார்கள். தகுதியானவர்களாக திறமையானவர்களாக இருக்கலாம் ஆட்சேபணை இல்லை. ஆனால் அவர்கள் தங்கள் சொந்த கிளினிக்குகளுக்கு வருகிற நோயாளிகளை அரசு ஆஸ்பத்திரியிலே தங்கி வசதிகளைப் பெறுகிற நிலையை செய்கிறார்கள் என்ற நிலை இருக்கிறதாலே அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிரைமரி ஹெல்த் சென்டர்களில் பணிபுரியும் டாக்டர்கள் பென்சிலின் இன்ஜெக்ஷன் போடக்கூடாது என்று தடை செய்யப்பட்டிருப்பதாக கேள்விப்படுகிறேன். அது உண்மையானால் அது எந்த அடிப்படையில் செய்திருக்கிறார்கள். எம்.பி.,பி.எஸ் படித்து ஒரே மாதிரியாக இருக்கிறபோது ஒரு ஸ்தாபனத்திலே ஒரு தடையும், வேறு இடத்திலே பணிபுரிகிறவர்களுக்கு அந்த தடையில்லாதபடி தகுதியை நிர்ணயம் செய்வது எந்த விதத்தில் நியாயம் என்று தெரியவில்லை.

கும்பகோணம் போன்ற பெரிய ஜனத்தொகை அதிகமாக உள்ள நகரங்களில் ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரி வசதியையும், அதிகமான படுக்கை வசதிகளையும் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. உ. சுப்பிரமணியன்] [1982 மார்ச் 11

நம்முடைய அரசு நிறுவனத்தின் சார்பாக செய்யப்படுகின்ற மாத்திரைகள் தரக்குரைவாக இருப்பதாக சொல்லப்படுகிறது. அவைகளின் தரத்தை உயர்த்துவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

ஊட்டியிலே ஹெட்குவாட்டர்ஸ் ஆஸ்பத்திரியிலே வேலை பார்த்தவர்கள்மீது கோர்ட்டில் வழக்கு போடப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் எல்லாம் விடுவிக்கப்பட்ட பிறகும்கூட உட னடியாக அவர்கள் எல்லாம் வேலையில் சேர்க்கப்படாமல் கால தாமதம் செய்யப்படுகிறது. அவர்களை உடனடியாக வேலையில் சேர்ப்பதற்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அக்கிரடிட்டட் நியூஸ்மென் இருக்கிறார்கள், அவர்களுக்கு சென்ற முறையே மருத்துவ வசதி கொடுக்கப்படும் என்று அரசின் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டது. அதற்காக வழிவகை செய்யப்பட்டாலும்கூட இன்றுவரை அமல்படுத்த வில்லை. அவர்களும் இன்றியமையாதவர்கள். அமைச்சர்களாக இருந்தாலும் அங்கத்தினர்களாக இருந்தாலும் நம்முடைய சேவையிலே அவர்கள் கண்காணிப்பாக இருப்பதால் அவர்களுக் கும் அந்த வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

15 வருடங்களாக உத்தியோகம் பார்த்த டாக்டர்கள் எல்லாம் அக்கவுன்ட் டெஸ்ட் பரீட்சை எழுதவேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்தப்படுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அவசியமில்லை. அது அவர்களுக்கு என்ன தேவை என்று தெரியவில்லை. இதுபோன்ற குறைபாடுகளை நீக்கவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடும்பக்கட்டுப்பாட்டிலே நாம் தீவிரமாக அமல்படுத்திக் கொண்டு வருகின்ற நிலையிலே தாலுகா மருத்துவமனைகளிலே பிளட் பாங்க் இல்லை, ரொம்ப தூரத்திலிருந்து கொண்டுவர வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே தாலுகா மருத்துவ மனைகளிலே ரத்த சேமிப்பு வசதிகளை ஏற்படுத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று சொல்லப்படுகிறது. இந்த நேரத்திலே எங்களுக்குக் கொடுக்கப்படுகிற புத்தகங்களில் முக்கால்வாசி ஆங்கிலத்திலேதான் இருக்கின்றன. அவைகளை நாங்கள் படித்துவிட்டு ஏதாவது பேசவேண்டுமென்றால் நேர மில்லை, நேற்று இரவு 10 மணிக்கு மேல்தான் எங்களுக்குக் கிடைக்கிறது. அதற்கு மேல் நாங்கள் எப்படி படித்து கருத்துக் களைச் சொல்ல முடியும்?



1982 மார்ச் 11]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : நேற்றுக் காலை யிலேயே இங்கேவைக்கப்பட்டது. இப்படிப்பட்ட ஒரு குற்றச் சாட்டு வரக்கூடும் என்பதால்—நானே ஒரு காலத்திலே அப்படி குற்றச்சாட்டை எழுப்பியிருக்கிறேன், என்பதால்—இஙகே வைக்கப்பட்டிருக்கிறது. அதைத்தவிர உங்களுக்கு அங்கேயும் அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. உ. சுப்பிரமணியன் : இந்தப் புத்தகங்கள் இன்னும் மற்றப் புத்தகங்களையெல்லாம் சேர்த்து ஒரு பெரிய பாக்கெட்டிலே நேற்று இரவு 10 மணிக்குத்தான் எஙகளுக்குக் கொடுத்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேற்றே டேபிளிலே வைக்கப்பட்டது.

திரு. உ. சுப்பிரமணியன் : நான் சிறிய விவகாரத்திற்கு எல்லாம் இங்கே பேசமாட்டேன். நேற்று காலை பத்தரை மணிக்கு நான் இன்று பேசப்போகிறேன். வேண்டிய விவரங் களைச் சேகரிக்கவேண்டும் என்று பில் செக்ஷனிலே கேட்ட போது அங்கே பெரும் கூட்டமாக அவர்கள் நாங்கள் அடுக்கிக் கொண்டிருக்கிறோம். பின்னால்தான் கொடுப்போம் என்று சொன்னதை நான் அவ்வளவு சீக்கிரமாக மறந்திருக்க முடியாது. ஆகவே நான் ஞாபகப் பிசகாகச் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கொடுக்கப்பட்டிருக்கின்ற மருத்துவத் துறை சம்பந்தப்பட்ட இந்தப் புத்தகத்தின் 34வது பக்கத்திலே 'கருத்துருவை ஏற்று' என்று எழுதியிருக்கிறது. எனக்கு அந்த வார்த்தை புரியவில்லை. ஆங்கிலப் புத்தகத்தை படித்துத்தான் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. அதே மாதிரி தமிழ்நாட்டிலே உள்ள ஊர்கள் மாயவரம் என்பதை மாயூரம் என்றும் மயிலாடுதுறை என்றும் எழுதுகிறோம். அதைப் போல இராமநாதபுரம் மாவட்டத்திலே வத்திராயிருப்பு என்ற அழகான வார்த்தையை ஆஙகிலத்திலே 'வட்ராப்' என்று சொல்லப்படுகின்ற நிலைமை இருக்கிறது. நான் சொல்லியவற்றை குற்றச்சாட்டாகக் கருதாமல் திருத்திக் கொள்கின்ற முறை யிலே பொதுமக்கள் நலனுக்கு ஏற்றது என்ற முறையிலே அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பல சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்ற முறையிலே அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொள்வார்கள் உடனடி யாக குறைகள் நீக்கப்படும் என்ற நம்பிக்கையில் அமர்கிறேன்.

(மாலை 5.20)

திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்பு மிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற மருத்துவ மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்தமைக்காக முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியக் துணைக் கண்டத்திலே தமிழ்நாடு பல்வேறு துறைகளிலும் தலைசிறந்து நிற்கும் வகையிலே, மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் வகையில் புரட்சித் தலைவரவர்களுடைய அரசு இந்த மருத்துவ துறையிலேயும் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி மற்ற மாநிலங்கள் வியக்கும் வகையிலேயும், பின்பற்றத் தக்க வகையிலேயும் செயலாற்றி வருகிறது. அதில் ஒன்று மருத்துவப் பல்கலைக் கழகம் காண இருப்பதாகும். சென்னை மருத்துவக் கல்லூரியில் மேல் பட்டப்படிப்பு தொடங்குவதும், அதேபோல் இந்தியாவிலேயே அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாக பிறந்த குழந்தைகளின் இறப்புத் தொகையைக் குறைக்கும் திட்டம் ஆகியவைகளுக்காக இந்த மருத்துவத் துறையை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படிப்பட்ட பல்வேறு வகைகளில் செயலாற்றும்பொழுது, அல்மா ஆடா உடன்படிக்கையின்படி கி.பி. 2000—த்திற்குள் அனைவருக்கும் சுகாதரராம் என்ற வகையில் முனைப்போடு பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கின்ற அந்தத் திட்டங்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த வகையில் கிராமப்புற மக்களுக்கு அவர்களின் பற்களைப் பாதுகாத்துக்கொள்ள பல்பொடியை ஆரம்ப சுகாதார நிலையங்களின் மூலமாக வழங்க வேண்டுமென்ற திட்டம் மிகச் சிறப்பான திட்டம் என்ற முறையில் நான் வரவேற்கிறேன். காரணம், மருத்துவத் துறை நிபுணர்கள் சொல்கிறார்கள், 30 சதவீதத்திலிருந்து 40 சதவீதம் வரை நோய்கள் வருவதற்குக் காரணம் பற்களைப் பாதுகாக்காத முறைதான். என்று சொல்லப்படுகிறது. எனவே, 'Pr·vention is bett r than cure' வருமுன் காக்க என்ற முறையில் அந்தப் பற்கள் பாதுகாக்கப் பட வேண்டும் என்ற அந்த வகையில் செய்யப்பட்டிருக்கிறது. கிராமப்புறத்து மக்கள் தங்களுக்காகாக் குரல் கொடுக்கத் தெரியாத ஊமைகள். அவர்கள் கேட்காத நிலையிலும்கூட அவர்களுக்கு அடிப்படை வசதிகயைச் செய்து தரும் முறையில் கிராமப்புற மக்களுக்கு பற்பொடிகளை ஆரம்ப சுகாதார நிலையங்களின் மூலம் தர இருப்பதை நான் வரவேற்கிறேன்.

அதே சமயத்தில் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும், வேறு சில அமைப்புகளும் இந்தத் திட்டத்தைக் கேலி செய்கிறார்கள். நகைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதை நான் சொல்வதற்குக் காரணம், பட்ஜெட் விவாதத்தின் பொழுது பேசிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் ஒருவர் பல்பொடி பட்ஜெட் என்று வர்ணித்தார்கள். சேலத்திலே என்.ஜி.ஓ.—க்கள் ஊதிய உயர்வு கேட்கின்ற நேரத்தில் கிராமப்புற மக்களுக்குப் பல்பொடி கொடுக்க வேண்டுமென்ற இந்தத் திட்டத்தைக் கேலி செய்யும் வகையில் போஸ்டர் போடுகின்ற நிலைமை இருக்கிறது.





கிராமப்புறத்து மக்கள் தங்களுக்காக எதையும் கேட்க
முடியாதவர்களாக இருக்கிறார்கள். பல வியாதிகளை, பற்
களைப் பாதுகாப்பதன் மூலம் ஒழிக்க முடியும் என்ற நிலையில்
இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. வேறு பல நாடுகளில்
பல் விஷயத்தில் மகத்தான சாதனைகளைச் செய்திருக்கிறார்கள்
என்பதைப் புரிந்து கொண்டு மிகவும் தீர்க்க தரிசனத்தோடு
இந்த மாநிலத்தில் உள்ள கிராமப்புறத்து மக்களின் பற்களைப்
பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணத்தில் புரட்சித் தலைவருடைய
அரசு இந்தத் திட்டத்தை அறிவித்திருக்கிறது. கோஸ்டா
ரீகாவில் 1948 ஆம் ஆண்டிலிருந்து 1964 ஆம் ஆண்டு வரையில்
அரசு மலிவு விலையில் சோப்பு, டூத் பேஸ்ட் என்கின்ற பற்பசை
களை வழங்கியிருக்கிறது. இதன் காரணமாக வயிற்றுப் போக்
கின் காரணமாக இ க்கின்ற குழந்தைகளின் எண்ணிக்கையை
47 சதவீதம் குறைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

சுவீடன் நாட்டிலே ஏறத்தாழ 60 சதவீதம் மக்களுக்கு
பற்களைப் பாதுகாக்கத் தெரியவில்லை. அவர்கள் தங்களுடைய
பற்களைப் பாதுகாக்கின்ற நிலையை உருவாக்கிவிட்டால்
நாட்டிலே 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட வியாதிகளைக்
குறைக்க முடியும் என்று சுவீடன் நாட்டிலே தண்ணீரிலேயே
குளோரைடைக் கலந்து பல வியாதிகளைத் தடுக்கலாம் என்று
சொல்லி, ஏராளமான நோய்களைத் தடுத்தார்கள். இதனால்
சுவீடன் நாட்டிலே ஏற்பட்ட மருத்துவச் செலவிலே 40 சத
வீதம் குறைந்து விட்டது என்ற முறையில் செயல்பட்டுக்
கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட திட்டத்தை தீர்க்க
தரிசனத்துடன் ஆராய்ந்து இந்த மாநிலத்தில் அறிமுகப்படுத்தி,
கிராமப்புறத்து மக்கள் தங்களுக்கு என்று கேட்கத் தெரியாத
ஊமைகளாக இருக்கின்ற காரணத்தால், இப்படிப்பட்ட வசதி
களைக் கொடுக்கின்ற இந்தத் திட்டத்தை நான் வரவேற்
கிறேன்.

கி.பி. 2000-த்திற்குள் அனைவருக்கும் மருத்துவம் என்பது
மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கோஸ்டா ரீகா
பற்றி உலக சுகாதார நிறுவனம் சொல்லும்பொழுது
The personnel hygiene has improved by s les of tooth-paste and
soaps at a low prices by the Government.
என்று அந்த அளவிற்குச் செய்திருக்கிறார்கள். சுவீடன்
நாட்டிலே இதைப்பற்றி நினைத்திருக்கிறார்கள். கி.பி.
2000-த்திற்குள் அனைவருக்கும் மருத்துவம் என்ற இயக்கத்தின்
மூலம் மருந்துகள் கொடுப்பதன் மூலம், மருத்துவ வசதியைச்
கொடுப்பதன் மூலம் அறியாமையில் உள்ள மக்கள் சுகாதாரத்
துடன் எப்படி வாழ வேண்டுமென்று இப்படிப்பட்டவைகளை
யெல்லாம் சொல்ல வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட பல்வேறு முன்னேறி இருக்கிற நாடுகளிலே வைத்தியத் துறையிலே ஏற்படுகின்ற செலவைக் குறைப்பதற்கு மட்டுமல்ல, பல்வேறு விதமான நோய்களைத் குறைக்க முடியும் ; பல பிரச்னைகளுக்கு அடிப்படைக் காரணமாக இருப்பது இந்தப் பல் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே நோய்களைப் போக்க இம்முறையை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டுமென்று தீர்க்க திருஷ்டியுடன் எந்த ஒரு மாநிலமும் செய்ய முன்வராத பொழுது, தமிழகத்தில் இந்தத் திட்டத்தை அமுல் நடத்தியிருக்கிற மருத்துவத் துறையையும் அமைச்சர் அவர்களையும் நான் பாராட்டுகிறேன். இப்படி எல்லா வகையிலும் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாகவும் வழி காட்டியாகவும் தமிழகம் விளங்குகிறது.

வைத்தியக் கல்லூரியில் இடம் அளிப்பதிலே கூட, திராவிட முன்னேற்றக் கழகம் இந்த மாநிலத்தை ஆண்டபொழுது, பின் தங்கியவர்களுக்கு 49 சதவீதமே, வைத்தியக் கல்லூரிகளில் இடம் அளித்தது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற பிறகு 60.7 சதவீதம், பின்தங்கியவர்கள் வைத்தியக் கல்லூரிகளில் சேர்க்கப்படுகின்ற நிலையிருக்கிறது. அதே போல் குடும்பக் கட்டுப்பாட்டிலே, இந்த நாட்டிற்கே வழிகாட்டுகின்ற வகையில்..

**திரு. க. அன்பழகன் :** திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பின்தங்கியவர்களுக்கு ஓதுக்கப்பட்ட இடம் 49 சதவீதம் என்பதை அவர்கள் தெரிவிக்கிறார்கள். பின்னால், ஓதுக்கப்பட்ட இடம் அதிகமான காரணத்தால், அந்தப் புள்ளி விவரம் அதிகம் என்று தெரிவிக்கிறார்கள். ஆனால், ஓதுக்கப்படாத பொது இடங்களில் பின்தங்கியவர்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், இன்றையதினம் எந்த அளவு இடம் பெறுகிறார்களோ, அந்த அளவைவிட அதிக அளவு இடம் பெற்றார்கள் என்பதை நான் புள்ளி விவரத்தோடு நினைவூட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மொத்தம் அனுமதித்தது 1974—75—ல் 49 சதவீதம்.

**திரு. க. அன்பழகன் :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தெரிவிப்பது அப்போது விதியின்படி 31 சத வீதம் பிற்படுத்தப் பட்டோர், 18 சத வீதம் தாழ்த்தப்பட்டோர் என்று அந்தப் பிரிவில் இருப்பது. ஆனால், பொதுப் பிரிவிலேயேும் தாழ்த்தப் பட்டவர்களும், பிற்படுத்தப்பட்டவர்களும் ஆண்டுதோறும் இடம் பெற்றார்கள் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அதனுடைய முழு விவரத்தை நான் பதில் அளிக்கின்ற நேரத்தில் சொல்கிறேன்.





**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** அதே போல் குடும்பக் கட்டுப்பாட்டுத் துறையிலே, இந்திய துணைக் கண்டத்திற்கு வழிகாட்டுகின்ற வகையில் எல்லா மாநிலங்களை விட தமிழகம் தலைசிறந்து நிற்கிறது. அதைப் பார்த்து பிரதம அமைச்சர் அவர்கள்கூட, இந்த மாநிலத்தினுடைய செயல் திட்டங்களைப் பார்வையிட்டு வந்த பொழுது இந்த மாநிலத்தின் நிர்வாகத்தைப் பாராட்டினார். இப்படி, அத்தனை துறைகளிலும் முன்னேற்றப் பாதையிலே, இந்திய துணைக் கண்டத்திலே மற்றைய மாநிலங்களுக்கு வழிகாட்டுகின்ற வகையில் செயல்படுகின்ற நேரத்தில், கி.பி. 2,000லே அனைவருக்கும் சுகாதாரம் என்ற திட்டத்திற்கு இந்தியப் பேரரசு கையொப்பமிட்டிருக்கிறது. இந்தத் திட்டத்திலே, இந்த மாநில அரசு முனைப்பாகச் செயல்பட இருக்கின்றது என்கின்ற கருத்தினை, ஹாத்தி கமிட்டியினுடைய சிபாரிசுகளை அமுல்படுத்தவதற்குப் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறது என்று ஆளுநர் உரையிலே குறிப்பிட்டது மருத்துவத் துறைக் குறிப்பிலே இடம் பெற்றிருக்கிறது. அமைச்சர் அவர்கள் அந்தக் கருத்தைத் தெரிவித்திருந்தாலும்கூட, கி.பி.2,000லே அனைவருக்கும் சுகாதாரம் என்கின்ற கொள்கையில், இந்த மாநில அரசும், புரட்சித் தலைவரும் நினைக்கின்ற அளவுக்கு மிகச் சிறப்பாக நடைபெற வேண்டுமென்றால், அனைவருக்கும் சுகாதாரம் என்ற தத்துவத்தை இந்த மாநிலம் மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டம் முழுவதுமே நாம் ஒப்பந்தத்திலே கையெழுத்திட்டபடி அமுல் நடத்த வேண்டுமென்றால், மைய அரசு தனது கொள்கையிலே பலவற்றைத் திருத்தியாக வேண்டும். இது மிக முக்கியமானது. மாண்புமிகு உறுப்பினர் சுப்பிரமணியம் அவர்கள் பேசுகின்றபொழுது பல்வேறுபட்ட கம்பெனிகளால் தயாரிக்கப்பட்டு அளிக்கப்படுகின்ற மருந்துகள் தரமானவையாக இல்லையென்று சொன்னார்கள். இதை இந்திய விஞ்ஞானக் கழகம் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறது. நான் இவைகளைக் குறிப்பிடுவதற்குக் காரணம், இவ்வளவு செயல்களையும் சாதனைகளையும் செய்கின்ற நமது அரசு, இந்த மருந்து தயாரிப்புத் துறையில், மத்திய சர்க்காரைத் தட்டிக் கேட்க வேண்டும். எப்படிப்பட்டவைகளை அமுல் நடத்த வேண்டுமென்று சுட்டிக்காட்ட வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். இந்திய விஞ்ஞானக் கழகம் சுட்டிக்காட்டுகின்ற பொழுது, இந்த நாட்டிலே மருந்து உற்பத்தி 5 பன்னாட்டு நிறுவனங்களிடம் சிக்கியிருக்கிறது. இந்த நாட்டுக்குத் தேவையான மருந்துகளை அந்த நிறுவனங்கள் உற்பத்தி செய்யவில்லையென்பதை மிகத் தெளிவாக புள்ளி விவரங்களுடன் உதாரணங்களை எல்லாம் சுட்டிக்காட்டிச் சொல்லியிருக்கிறது. 'ஏ' வைட்டமின் இல்லாத காரணத்தால், இந்த நாட்டில் 25 சத வீதம் பிறந்த குழந்தைகள் இறக்கின்றன ; 17 சதவீதம் குழந்தைகள் ரிக்கெட் என்கின்ற வியாதிக்கு ஆளாகின்றன என்றாலுங் கூட, அந்த 'ஏ' மற்றும் 'சி' வைட்டமின்களை, அந்த பன்னாட்டு நிறுவனங்கள் 3 சதவீதம்தான் உற்பத்தி செய்கின்றன என்று கூறியிருக்கிறது.

[திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்] [1982 மார்ச் 11

அதே போல், பி. 12 என்ற அந்த மருந்து தேவையில்லையென்று வெளிநாடுகள் கைவிட்டுக் கொண்டிருக்கிற நேரத்திலே, இந்திய துணைத் கண்டத்திலே இருக்கின்ற வெளிநாட்டு நிறுவனங்கள் அந்த மருந்துகளை 70 சத வீதம் உற்பத்தி செய்து கொண்டிருக்கின்றன என்றும் இந்திய விஞ்ஞான மருந்துக் கழகம் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறது. அந்த மருந்து நிறுவனங்கள் தயாரிக்கின்ற ஆயிரத்திற்கு மேற்பட்ட மருந்துகள் இந்திய துணைக் கண்டத்திலே தேவையில்லாதது, வேண்டாதது; ஐம்பதே, ஐம்பது மருந்துகளை உற்பத்தி செய்தால் அவைகளை வைத்து, இங்கு 90 சதவீதம் வியாதிகளைப் போக்க முடியும் என்று அக்கழகம் சுட்டிக்காட்டியிருக்கிறது. ஆகவே பன்னாட்டு நிறுவனங்களுக்கான மூலதனங்களை சுருக்க வேண்டுமென்று ஹாத்தி கமிட்டி சுட்டிக்காட்டியிருக்கிறது.

(மாலை 5-30)

ஆக இந்த சுதேசி மருந்து உற்பத்தித் திட்டத்தை தீவிரமாக அமல்படுத்த வேண்டும். அந்த வகையிலே மாநில அரசே மருந்து உற்பத்தியை இங்கே இருக்கின்றவைகளை வைத்து; (செல்ப் ரிலையன்ஸ்) இங்கே இருக்கின்றவைகளை வைத்து அந்த சூழ்நிலைகளுக்கு ஏற்ப மலிவான விலையில் உற்பத்தி செய்வதற்கு ஆராய்ச்சித் துறையை மிகவும் தீவிரப்படுத்த வேண்டும் இப்போது சித்த வைத்தியர்கள் என்கிறவர்கள் தனியாக செய்து கொண்டிருக்கிறார்கள். பார்மகாலஜி தனியாக இருக்கின்றது. கிளினிக்கல் டிப்பார்ட்மெண்டு தனியாக இருக்கிறது. இவைகளை இணைத்து புதிய மருந்துகளை கண்டுபிடிக்கின்ற உத்திகளை மாநில அரசு கண்டுபிடித்து அவைகளை உற்பத்தி செய்கின்ற உரிமைகளை பெற வேண்டும் இந்த மாநில அரசே உற்பத்தி செய்யும் என்று மத்திய அரசை வற்புறுத்தி அதற்கான அனுமதியை வாங்கவேண்டும். ஏனென்றால், வைத்திய செலவு குறைய வேண்டும். என்று கருதுவதிலே மாற்றுக் கருத்து யாருக்கும் இல்லை..

மிகச் சாதாரணமாக இந்தப் பகுதியிலே இருக்கின்றவைகளை வைத்து மிக உயர்ந்த விலைக்கு மருந்துகளைத் தயாரித்து வெளிநாட்டு நிறுவனங்கள் விற்றுக் கொண்டிருக்கின்றன. நித்திய கல்யாணி என்ற வேரிலே இருந்து பிளட் கான்சர், ரத்தப்புற்று நோய்க்கு வேண்டிய மருந்துகளைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். வின்கிரிஸ்டின், வின்பிளாஸ்டர் என்று. அதை 60 70 ரூபாய் என்று விற்கிறார்கள். சாதாரணமாக தமிழகத்துக் கிராமங்களிலே விளைகின்ற நித்திய கல்யாணி வேர், ஜப்பானுக்கு சென்று திரும்பி வரும்போது 60, 70 ரூபாய் என்று விற்கிறது. அப்படி எத்தனையோ? சமீபத்தில் ஆராய்ச்சியிலேகூட, இந்தியத் துணைக்கண்டத்திலே ஏற்படுகின்ற அதிகமான மரணங்களுக்குக்காரணம் ஹார்ட் அட்டாக். கொலஸ்ட்ரால்என்று சொல்லுகிறார்கள். அவைகளைத் தடுப்பதற்கு நமது தமிழகத்திலே விளையக் கூடிய வெள்ளைப் பூண்டு சாறு போதும் என்று சொல்லுகிறார்கள். அதனுடைய



1982 மார்ச் 11] [திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]

மருந்தை இத்தாலிய நாட்டிலே கண்டு பிடித்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட ஆராய்ச்சிகளை ஊக்குவிக்கின்ற வகையிலே ஒவ்வொரு துறையிலும், துறைத் தலைவர்களை, மாநிலத்திலே உள்ள மருத்துவக் கல்லூரியிலே பணியாற்றுகின்ற துறைத் தலைவர்களை ஒவ்வொரு ஆண்டும் இப்படி புதிய மருந்துகளைக் கண்டுபிடிப்பதற்கு ஊக்குவிக்க வேண்டும். ஊக்குவிக்கப்படுகின்ற அதே நேரத்தில் ஒவ்வொரு துறைத் தலைவர்களையும் இந்த ஆண்டு என்ன செய்தீர்கள் என்ன மருந்து கண்டுபிடித்தீர்கள் இந்த தமிழகத்திலே இருக்கின்ற மூலப் பொருள்களை வைத்து என்று கேட்க வேண்டும். ஏனென்றால் இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கின்ற அந்த 50 பன்னாட்டு நிறுவனங்களுக்கு அந்த மருந்தை உற்பத்தி செய்கின்ற நிறுவனங்களுக்கான மூலப் பொருள்கள் இங்கேதான் கிடைக்கின்றன. மூலப் பொருள்களை உற்பத்தி செய்து தருவதும் நாம்தான். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த நாட்டினுடைய செல்வம் கொள்ளை அடிக்கப்படுகிறது என்பதை விட, இந்தச் சூழ்நிலையிலே இந்த மாநிலத்திலே கிடைக்கின்ற பொருள்களை வைத்தே மருந்துகளை செய்வதற்கான ஆக்கத்தையும், ஊக்கத்தையும் தருகின்ற வகையிலே அந்த ஆராய்ச்சித் துறைகள் ஒருங்கிணைக்கப் படவேண்டும். எத்தனையோ ரகசியங்கள் சித்த வைத்திய இரகசியங்கள் அப்படியே மறைந்து போகின்றன. ஆகவே ஒவ்வொரு துறையைச் சேர்ந்த தலைவர்களையும் இந்த ஓராண்டில் என்ன செய்தீர்கள், என்ன புது மருந்தைக் கண்டுபிடிப்பதற்கான நட வடிக்கையை எடுத்தீர்கள் என்று அந்த சித்த வைத்தியப் பிரிவைச் சேர்ந்தவர்கள், அந்த மருந்தாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள், ஆஸ்பத்திரி பிரிவைச் சேர்ந்தவர்கள், 3 பேர்களும் இணைந்து செயல்பட்டு ஒவ்வொரு ஆண்டும் என்ன செய்தீர்கள் என்ற கணக்கை அரசுக்கு கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள் கிறேன். அதேபோல இப்படி சிரமப்பட்டு இந்த மாநில மக்களுக்காக புதிய மருந்துகளைக் கண்டு பிடிக்கின்ற பேராசிரியர்கள் மருத்துவர்கள் போன்றவர்களை ஊக்குவிக்க வேண்டும். அப்படி ஊக்குவிக்கின்ற வகையிலே அவர்களுக்கு ஒரு கணிசமான தொகையை வழங்குவதற்கும் அரசு முயற்சி செய்யவேண்டும். இப்படி ஏராளமான மருந்துகள் இங்கே இருந்து செய்கிறார்கள் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். சாதாரணமாக நம்முடைய தமிழகத்தில் வயிற்றுப் போக்கு என்றால், எலுமிச்சை பழத்தை அறைத்து கொடுப்பார்கள் என்று சொல்லுவார்கள். அதே எலுமிச்சை பழத்திலே 'பெக்டின்' என்று மருந்தைக் கண்டுபிடித்து இங்கே கொண்டு வந்து விற்கிறார்கள். அப்படி பெக்டின் போன்ற மருந்துகள் இந்திய துணைக்கண்டத்திலே எங்கும் உற்பத்தியாகவில்லை என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட பெக்டின் போன்ற மருந்துகளை இங்கே உற்பத்தி செய்யவேண்டும். அதற்கான நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கான நிலைகளை செய்யவேண்டும். அதேபோல சிறந்த சித்த வைத்தியத்திலே பலர் தொழில் இரகசியங்களை சொல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே ஒரு

குறிப்பிட்ட நோயை அரசாங்கமே மருத்துவத் துறையில் விளம்பரம் செய்து, இப்படி ஒரு நோய் சம்பந்தமாக—காசநோய் சம்பந்தமாக புதிய மருந்தைக் கண்டு பிடிக்கப்போகிறோம். தமிழகத்திலே இருக்கின்ற யார் வேண்டுமானாலும் சித்த வைத்திதிய ஆலோசனையைச் சொல்லலாம். அப்படிச் சொல்லக்கூடியவர்களுக்கு பரிசு கொடுக்கப்படும் என்று ஒரு பரிசு திட்டத்தை அறிவித்து இப்படி புதிய கண்டுபிடிப்புகளுக்கு நாம் ஊக்கம் தரவேண்டும்.

அதேபோல மாநிலத்தை இரண்டாகப் பிரித்து ரெபரல் ஆஸ்பிட்டல் சிஸ்டத்தை இந்த மாநிலத்தில் முதன்முறையாக வழிகாட்டுகின்ற வகையில்—பல்வேறு துறைகளிலே வழிகாட்டிக் கொண்டு இருக்கின்ற நாம்—இந்த ரெபரல் சிஸ்டத்தை இந்த மாநிலத்தில் அறிமுகம் செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பரிசீலனைக்கு வைக்கிறேன். ஏனென்றால், மிகச் சாதாரணமாக நோய்களுக்கு கூட, அம்பத்தூரிலே தலைவலி என்று ஒருவர் ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு வந்து, அங்கே இருக்கின்ற ஒரு சூப்பர் ஸ்பெஷலிஸ்ட்டினுடைய நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறார். சாதாரணமாக காயம் அல்லது கட்டி போன்றவைகளை அங்கே இருக்கின்ற ஆரம்ப சுகாதார டாக்டர்களே அதற்கான சிகிச்சை செய்ய முடியும். இருந்தாலும் கூட பெரிய ஆஸ்பத்திரி பெரிய மருத்துவமனை என்று அங்கே போகின்றார்கள். அங்கே பணிபுரிகின்ற மருத்துவர்கள் உண்மையிலேயே சிறப்பாக செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருந்தாலும்கூட, காலமும் பொதுமக்களுடைய கூட்டமும் அவர்களைத் தடுக்கிறது. ஆகவே, மிகவும் முக்கியமான வியாதிகள் சம்பந்தமாக பார்ப்பதற்கு, இந்த மாநிலத்தையே இரண்டாகப் பிரித்து, சென்னையிலே இருக்கின்ற ஜெனரல் ஆஸ்பத்திரி ஒரு ரெபரல் ஆஸ்பிட்டல் மதுரை ராஜாஜி ஆஸ்பத்திரி ஒரு ரெபரல் ஆஸ்பிட்டல் என்று வைக்கப்படவேண்டும். ஓ.பி. டிக்கட் வாங்கவேண்டும் என்றால், கீழே இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையத்திலே இருக்கின்ற டாக்டரின் அனுமதி சீட்டோ, அல்லது தாலுகா மருத்துவமனை அல்லது வேறு ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பிட்டல் டாக்டர்கள் இங்கே எங்களால் பார்க்க முடியவில்லை முதன்மை மருத்துவமனை—ரெபரல் ஆஸ்பிட்டலுக்குப் போங்கள் என்று சொன்னால் தான் அனுமதி வழங்க வேண்டும் என்கின்ற ஒரு நிலையை உருவாக்குகின்ற வகையில் ரெபரல் ஆஸ்பத்திரிகளை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சில மருத்துவர்கள் 15 ஆண்டுகளுக்கு முன் பட்டம் பெற்றிருப்பார்கள். அதனால் மருத்துவத் துறையிலே ஏற்பட்டிருக்கின்ற பல்வேறு மாற்றங்கள் அவர்களைச் சென்றடைவதில்லை. ஆகையால் நவீன மருத்துவ வசதி அவர்களிடம் செல்கின்ற மக்களுக்குக் கிடைப்பதில்லை என்பதைவிட, அது பல சமயங்களிலே ஆபத்தாகவும் முடிந்து விடுகிறது.



மஞ்சள்காமாலை நோய்க்கு கார்டிசான் என்ற மாத்திரை கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால், இந்த மாத்திரை மஞ்சள்காமாலை நோயைக் குணப்படுத்துவதைவிட அதை அதிகமாகத் தூண்டிவிடக் கூடியது என்று உலக சுகாதார நிறுவனம் கண்டுபிடித்து அறிவித்துள்ளது. இதை மஞ்சள்காமாலை நோய்க்கு கொடுக்கக்கூடாது என்று அறிவித்துள்ளது. இந்த மாற்றம் இதுவரை நம் கிராமப்புறங்களுக்குப் போய்ச் சேரவில்லை. அங்கேயெல்லாம் இன்னும் இந்த மாத்திரையைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதைத் தடுக்க எல்லா மருத்துவர்களுக்கும், தனியாகப் பயிற்சி செய்யும் டாக்டர்களுக்குக்கூட ஒரு 10, 15 நாட்களுக்கு ஒரு ரெப்ரஷர் கோர்ஸ் நடத்த ஏற்பாடு செய்தால், உலகிலே ஏற்பட்டிருக்கிற மாற்றங்களை, பொதுவாக இந்தத் துறையிலே என்ன என்ன கண்டுபிடிப்புகள் ஏற்பட்டிருக்கிறது என்று, எல்லா மருத்துவர்களும், தனியாகப் பயிற்சி செய்பவர்கள் உட்பட தெரிந்துகொள்கின்ற வகையிலே அந்த ரெப்ரஷர் கோர்ஸ் பயன்படும். பல்வேறு கண்டுபிடிப்புகள் மருத்துவர்களுக்கே தெரிவதில்லை. அதனால் அந்தப் பயன் கிராமப்புற மக்களுக்குக் கிடைக்காமல் போய்விடுகிறது.

அதேபோல ஒரு மிகப்பெரிய கண்டுபிடிப்பு என்று உலக சுகாதார நிறுவனம் கண்டுபிடித்தும் கூட, இந்த மாநில அளவிலே கூட இந்த சுகாதார பட்ஜெட்டிலே அதிகமான தொகை செலவிட வேண்டியது இல்லையென்ற அளவிற்கு கண்டுபிடித்தும் கூட அது, இந்த மாநிலத்திலே மட்டும் அல்ல, இந்தியாவிலேயே எந்த மாநிலமும் அமல்படுத்தாத நிலை இருக்கிறது.

மருத்துவ மனைக்குச் செல்கிறபோது வயிற்றுப் போக்கு நோய், அது சம்பந்தமான நோய்களுக்கு ஐ.வி. ப்ளூய்ட் கொடுக்கிறார்கள். ஐ.வி. ப்ளூய்ட் என்பது ஒரு நோயாளிக்கு இரண்டு பாட்டில்கள் தேவை என்றால் கூட 10-ம் 10-ம் 20 ரூபாய் ஆகிறது. ஒவ்வொரு மருத்துவ மனையிலும், இந்த ஐ.வி. ப்ளூய்ட் குடல் புண் நோய், வயிற்றுப்போக்கு நோய் வருகின்றவர்களுக்கு கொடுக்கவேண்டிய நிலை இருக்கிறது. இந்த முறையிலே கொடுக்கவேண்டுமென்றால் ஒரு நோயாளிக்கு குறைந்தது ரூ. 20 செலவழிக்க வேண்டுமென்ற நிலை. உலக சுகாதார நிறுவனம் இதைவிட எளிய முறையில் I.V. Fluid ரூ. 20-க்கு வாங்கி நோயாளிகளுக்குக் கொடுக்கின்ற அந்த முறைக்குப் பதில் இந்த Or.1 rehydration s lution கொடுப்பதன் மூலம் செலவு ரூ. 1.50 கூட ஆகாது. அது 4 லிட்டர் ஐ.வி. ப்ளுயிட்டுக்கு சமமானது. மருத்துவ நிபுணர்களே கண்டுபிடித்துச் சொல்லியிருக்கிறார்கள். வயிற்றுப் போக்கு போகின்ற சூழ்நிலையில அந்தக் குடல் குளுகோஸை ஏற்கின்ற தன்மை இருக்கிறது என்றும், குளுகோஸ் உள்ளே போகின்ற அதே நேரத்தில் சாதாரண உப்பையும், கண்ணீரையும் ஈர்க்கக் கொள்ளும் சக்தி இருக்கிறது என்றும் இப்படி

[திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்] [1982 மார்ச் 11

பட்ட தண்ணீரை நீங்கள் எடுத்துக் கொள்ளலாம் என்றும், ரூ. 20 செலவு ஆகின்ற ஐ.வி. ப்ளூயிடுக்குப் பதில் தேவைப்படுவது 1 லிட்டர் தண்ணீர், 3½ கிராம் உப்பு, 2½ கிராம் சோடியம், 20 கிராம் குளுகோஸ் என்ற முறையிலே கண்டுபிடித்து பல்வேறு நாடுகள், பரீட்சார்த்தமாக முயற்சி செய்திருக்கின்றன. உதாரணமாக ஜமைகா, ஈஜிப்ட் போன்ற நாடுகளிலும் கிழக்கு வங்கத்திலும் இந்த முறையை பரீட்சார்த்தமாகப் பார்த்திருக்கிறார்கள். கிழக்கு வங்கத்தில, இந்த முறையைப் பயன்படுத்தி, 4 மாதம் ஐ.வி. ப்ளூயிட்டுக்குப் பதில் Or l rehydroti n soluti n பயன்படுத்தி வயிற்றுப் போக்கு காரணமாக மரணம் அடைகிறவர்களின் சதவிகிதத்தை 34 சதவீதம் குறைத்திருக்கிறார்கள்.

ஜமைக்காவில் இதைப் பயன்படுத்தியதில் வயிற்றுப் போக்கினால் ஏற்படும் குழந்தைகள் மரணம் 40 சதவீதம் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் இருக்கிற 2 தனியார் மருத்துவமனைகளில் இந்த முறையைப் பயன்படுத்தி இருப்பதைப் பாாத்து W rld Health F rum என்ற பத்திரிகைகூட எழுதியிருக்கிறது. அரசாங்க மருத்துவமனையிலே பயன்படுத்தாத நிலையில்கூட தனியார் மருத்துவமனையிலே இதைப் பயன்படுத்தி, ஐ.வி. ப்ளூயிடைப் பயன்படுத்துவதால் ஏற்படுகிற செலவினை குறைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்டவைகளை நான் சொல்கின்ற ரிப்ரஷர் கோர்ஸில் சொல்லிக் கொடுப்போமானால் இந்த வயிற்றுப் போக்கு நோயினால் ஏற்படுகின்ற ஏராளமான இறப்புக்களை மருத்துவமனைக்கு வந்துதான், மருத்துவமனையிலே சேர்த்துத்தான் போக்கவேண்டுமென்ற நிலைமை இல்லாமல் இந்த ஓரல் ரீஹைட்ரேஷன் சொலயூஷன் கிராமத்திலே எப்படித் தயாரிக்கவேண்டும் என்று, கிராமத்திலே இருக்கிறவர்களுக்குச் சொல்லிவிட்டால், ஜமைக்காவிலே இப்படி கிராமத்திலே இருக்கிறவர்களைப் பழக்கி இருக்கிறார்கள்— மருத்துவ மனைகளில் படுக்கை நெரிசல் குறையும். மருத்துவச் செலவு குறையும். மருத்துவத் துறைக்கு ஏற்படுகிற செலவு குறையும். இப்படிப்பட்ட ரெப்ரஷர் கோர்ஸில், புதிதாகக் கண்டுபிடித்திருக்கிற மருந்துகள், முறைகள் ஆகியவைகளை ஆங்காங்கு பணியாற்றுகின்ற மருத்துவர்கள் தெரிந்துகொள்ளுகின்ற வகையிலே செய்யலாம். மருத்துவர்களை ஆண்டுக்கு ஒரு 15 நாள் ரெப்ரஷர் கோர்ஸிற்கு வரவேண்டும், அப்படி வரவில்லையென்றால் இன்க்ரிமெண்டை அப்ஹெல்ட் செய்வோம், இன்கிரிமென்ட் கொடுக்க மாட்டோம் என்று சொல்ல வேண்டும். ஏனென்றால் ஏற்படுகின்ற மாற்றங்கள், தொடர்ந்து ஏற்படுகிற ஆராய்ச்சிகள் காரணமாக கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற உண்மைகளுக்கு முரணாக தேவையில்லாத மருந்துகளைக் கொடுக்கின்ற நிலையில நோயாளிகள் சில நேரங்களில் மரணத்தைச் சந்திக்கின்ற நிலைமைகள் கூட ஏற்படுகிறது.



1982 மார்ச் 11] [திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]

'பத்து ஆண்டுகளுக்கு முன் படித்த ஒரு டாக்டர் கிராமங்களிலே பணியாற்றிக் கொண்டிருந்தாலும் உலக சுகாதார நிறுவனம் கண்டுபிடித்த மருந்துகளை அறிந்து பயன்படுத்துவதற்கும் அல்லது அவர்கள் எதைக் கூடாது என்று சொல்கிறார்களோ அந்த மருந்தைக் கொடுக்காமல் இருப்பதற்கும் ஆன வாய்ப்பை ஏற்படுத்தும். ஆகவே, அந்த ரெஃப்ரஷர் கோர்சுக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[மாலை 5.40]

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் சொன்னதைப் போல தனியார் மருத்துவமனைகளைக் கட்டுப்படுத்தும் ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். நமது அரசு அதுபற்றி யோசிக்க வேண்டும் என்ற கருத்தை தெரிவிக்க விரும்புகிறேன். ஏனென்றால் தனியார் மருத்துவ மனையில் முறையாகப் படித்த நர்சுகள் கிடையாது; டெக்னிக்கலி குவாலிஃபைட் பர்சன்ஸ் கிடையாது. அவர்கள் இஷ்டம்போல் யாரைச் சொல்கிறார்களோ அவர்கள்தான ஃபார்மசிஸ்ட், அவர்கள் சொல்பவர்கள்தான் நர்ஸ் என்ற நிலை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. ஆகையால் குறைந்தபட்சம் முறையாகப் படித்தவர்களைத்தான் மருத்துவ மனையில் நியமிக்க வேண்டும் என்ற நிலையை உருவாக்க வேண்டும்.

அது மட்டுமல்ல, அவர்கள் வசூல் செய்கின்ற கட்டணத்திற்கும் ஒரு முறை இல்லை. அவர்களுடைய விருப்டம்போல் வசூல் செய்கிறார்கள். அதையும் கட்டுப்படுத்த வேண்டும். அதற்கு ஏற்றமுறையில் தனியார் மருத்துவ மனைகளைக் கட்டுப்படுத்தும் ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன.

அடுத்தபடியாக இன்றைக்கு கிராமப்புறங்களில் பணியாற்ற மருத்துவர்கள் விருப்பமற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் கிராமங்களில் பணியாற்ற தகுந்த ஊக்குவிப்புகளை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும். அப்படியானால் தான் கிராம மக்களுக்கு நல்ல சிகிச்சை கிடைக்கும்.

அதைப்போல பல்வேறு கிராமங்களில் பணியாற்ற டாக்டர்களை தேர்ந்தெடுத்தாலும் கூட பல மருத்துவர்கள் பணிக்கு போகாமல் இருக்கிறார்கள். சர்வீஸ் கமிஷன் மூலம் தேர்ந்தெடுத்த பின்னால் அங்கே பணிக்கு போய் சேராத டாக்டர்களை பிளாக் லிஸ்ட் செய்து, அவர்களுக்கு எந்தக் காலத்திலும் வேலை கொடுப்பதில்லை என்ற ஒரு நிலையை நம்முடைய அரசு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான கருத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இப்போது சென்னையில மட்டும்தான் காஸ்ட்ரோ என்டாலஜி'— குடல் புண் சிகிச்சை பிரிவு இருக்கிரது. இன்றைக்கு மதுரை இராஜாஜி மருத்துவ் மனையில உள்நோயாளிகளாக இருப்பவர்களில் 35 சதவீதம் பேர்கள் இந்த குடல் புண் நோயால் அவதிப்படுகிறவர்கள்தான். இந்த காஸ்ட்ரோ என்டாலஜி பிரிவு அங்கே இல்லாத காரணத்தால் அவர்களுக்கு முறையான சிகிச்சை அளிக்க முடியவில்லை.

அது மட்டுமல்ல. எம்.பி.பி.எஸ். சென்னை மருத்துவ மனையிலும் 200 மாணவர்கள் படிக்கிறார்கள். மதுரை இராஜாஜி மருத்துவ மனையிலும் 200 மாணவர்கள் படிக்கிறார்கள். சென்னையிலே படிககின்றவர்களுக்கு இந்த குடல் புண் நோய்க்கு சிகிச்சை அளிக்கும் முறையை பார்த்து, படித்துக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. ஆனால் மதுரையில் படிக்கின்ற மாணவர்களுக்கு அந்த வாய்ப்பு இல்லை. மேலும் இந்த சிகிச்சைக்காக தென் மாவட்டங்களில இருக்கிறவர்கள் சென்னைக்குத்தான் வர வேண்டியிருக்கிறது. இதனால் அவர்களுக்கு அதிகமான செலவு ஏற்படுகிறது. வேறு பல கஷ்டங்களும் ஏற்படுகின்றன. இந்த காஸ்ட்ரோ என்டாலஜி பிரிவை மதுரையில் ஏற்படுத்த செலவு குறைவாகத்தான் பிடிக்கும் என்று சொல்கிறார்கள். அதனால் மதுரை இராஜாஜி மருத்துவ மனையில் ஒரு பிரிவை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதி பிரச்சினைகள் பற்றி சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். வேடசந்தூர் ஒரு வட்டமாக மாற்றப்பட்டு 15 ஆண்டுகள் ஆகியும் இன்னும் அங்கே ஒரு தாலூகா மருத்துவமனை அமையவில்லை. அது ஒரு முழு தாலுகாவாக இருந்தும், 35 முதல் 70 கிலோ மீட்டர் வரையில் சென்று திண்டுக்கல்லிலிருக்கும் மாவட்ட தலைமை மருத்துவ மனைக்குச் சென்றுதான் சிகிச்சை பெற வேண்டியிருக்கிறது. அங்கே 20 படுக்கைகள்கொண்ட ஒரு ஆரம்பச் சுகாதார நிலையத்தை ஏற்படுத்திக் கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் ஒரு தாலுகா தலைமை மருத்துவ மனையையும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

இறுதியாக, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே உங்கள் மூலமாக, உங்கள் சார்பாக ஒரு சில வேண்டுகோள்களை விடுக்க விரும்புகிறேன். நெல்லை மாவட்டத்தில் சேரன் மாதேவி பகுதியில் முக்கூடலில் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையத்தை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட காலமாக இருந்து கொண்டிருக்கிறது. அங்கே பீடித் தொழிலாளர்கள் மிகவும் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு சிகிச்சை





அளிப்பதற்கு வசதியாக, அங்கே ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை விரைவில் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போல அங்கே சேரன்மாதேவியில் இருக்கிற தாலுகா மருத்துவமனையில் 3·வது பெண் டாக்டர் போட வேண்டுமென்று பரிந்துரை மாநில சுகாதாரத் துறை டைரக்டரிடமிருந்து இன்றைக்கு அரசு வந்திருப்பதால் அந்த தாலுகா தலைமை மருத்துவமனையில் 3-வது பெண் டாக்டரை உடனடியாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போல கடையம் பஞ்சாயத்து யூனியனில் வெங்கடாபுரத்தில் ஒரு ஆஸ்பத்திரியை தொடங்க வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் அதற்கான தொகையை செலுத்தியிருக்கிறார்கள். அதையும் அரசு கவனித்து, பரிசீலனை செய்து அங்கே ஒரு ஆஸ்பத்திரியை கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பாக மருத்துவத் துறை குறித்தும் மக்கள் நல்வாழ்வுத் துறை குறித்தும் இங்கே முன் வைக்கப்பட்டிருக்கக் கூடிய மானியக் கோரிக்கைகளைக் குறித்து மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன். ஏற்கெனவே சென்ற ஆண்டிலே இதே விவாதத்திலே நான் கலந்து கொண்டபோது அதற்குப் பிறகு இப்போது இந்த இரண்டு துறைகளிலும் பல் வேறு வறட்சி நடவடிக்கைகளைப் பற்றி இப்போது அறிக்கைகளிலே கொள்கைகளையும் அதற்கான திட்டங்களையும் கூறி இருக்கின்றது என்பதை நான் வரவேற்கிறேன்.

கல்விக்கு அடுத்தபடியாக தமிழகத்தினுடைய செலவிலே மிக அதிகமான பங்கு வகிக்கக்கூடிய இந்தத் துறை சம்பந்தப்பட்ட வரைக்கும் அது மேலும் நல்ல முறையிலே மக்களுக்குப் பயன்படுவதற்காக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் சில ஆலோசனைகளை இங்கே வைக்க விரும்புகிறேன்.

முதலாவதாக ஏராளமான கிராமப் புற மக்கள் உள்ள தமிழகத்திலே இந்திய முறை மருத்துவம் என்பது மிகச் சிறந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை வற்புறுத்த விரும்புகிறேன்.

குறிப்பாகத் தமிழகத்திலே நீண்டகால பாரம்பரியம் மிக்க சித்த வைத்தியத்தின் மருந்துகள் நீண்டகாலமாக தமிழக மக்கள் மத்தியிலே பழக்கப்பட்டது. இடைக்காலத்திலே அது கவனிப்பாரற்றுக் கிடந்த காரணத்தால் அதனுடைய வளர்ச்சி மங்கி விட்டது என்பதை நான் இன்றைக்குச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த சித்த வைத்திய முறையிலே தயாரிக்கப்பட்ட மருந்துகளை, சாதாரணமான நோய்களுக்கு அரசாங்கத்தின் நிறுவனத்தின் மூலமாகத் தயாரித்து விற்பனைக்குக் கொண்டு வருவது ஒரு பெரிய நிவாரணமாக இருக்கும். சாதாரணமான நோய்களான காய்ச்சல் ஜலதோஷம் போன்ற நோய்களுக்கு அலோபதி மருந்துகள் விற்கப்படுவது போன்று இந்த மருந்துகளையும் அரசாங்கமே உற்பத்தி செய்து விற்பனைக்குக் கொண்டு வந்தால் கோடிக் கணக்கான மக்களுக்குப் பயன்படும். இந்த மானியக் கோரிக்கையிலே 2 கோடியே 35 இலட்சம் ரூபாய் தான் இந்திய முறை மருத்துவத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றது இது மொத்தமாக இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கக் கூடிய தொகையிலே மிகச் சிறிய சதவீதம். உண்மையிலே இந்தத் துறையிலே மேலும் அதிகமாக ஒதுக்க வேண்டும் என்ற கருத்தை நான் வற்புறுத்துகிறேன்.

இந்த சித்த வைத்தியத்தைப் பொறுத்த வரையிலே சூரணங்கள், லேகியங்கள் போன்றவைகளை இயந்திரத்தின் மூலம் செய்வது பற்றி அதற்காக ஏற்பாடு செய்தாலும் அதனுடைய அளவினைப் பற்றி மக்களுக்குத் தெரியாத காரணத்தால் அதனை மாத்திரைகளாகத் தயாரித்துக் கொடுத்தால் தமிழ் நாட்டிலே உள்ள சித்த மருத்துவ நிலையங்கள் அதைப் பெரிதும் பயன்படுத்திக் கொள்ளும். இல்லாவிட்டால் மக்கள் தாங்களாகவே அதனுடைய அளவினைப் பற்றி தீர்மானிப்பதற்கு மிகவும் சிரமங்கள் ஏற்படும்.

அதே போன்று இந்த லேகியம் போன்ற மருந்துகள் உரிய குப்பிகளிலே கொடுக்கப்படுவதில்லை ஆகவே இந்த மருந்துகளை சிறிய ( பரிய குப்பிகளிலே கடைகளிலே கொடுக்கப்படுகின்ற வகையிலே அரசாங்கம் ஏற்பாடு செய்து அந்த வகையிலே தயாரித்து இந்த சித்த மருந்துகளைக் கொடுக்க ஏற்பாடு செய்தால் அது பெருமளவுக்குப் பயன்படும்.

(மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் தலைமை.)

இந்த சித்த வைத்திய முறை மட்டுமல்லாத மற்றும் இந்திய முறைகளான ஹோமியோபதி ஆயுர்வேதம் போன்ற மருத்துவ முறைகளும் பயன் படுத்தப்பட வேண்டும்.

அடுத்தபடியாக சில கொள்கைப் பிரச்சினைகளைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒரே நிலையைத்தான் கையாளுகின்றது. மாணவர் தேர்வு பிரச்சினையைப் பற்றி நீண்ட சர்ச்சை நடக்கின்றது. சமீபத்திலே கேரளாவிலே மார்க் லிஸ்டிலே மோசடி செய்யப்பட்டது பற்றியும் அதனால் பலர் கைது செய்யப்பட்டது பற்றியும் வழக்கு நடைபெறுவதைப் பற்றியும் நாம் அறிவோம். தமிழ் நாட்டிலேயும் அவ்வாறு சிலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.





ஆனால் இந்த பரீட்சையினைக் கறாராக நடத்தி, கண்டிப்பாக நடத்தி அதிலே ஒரு மாணவனுடைய உண்மையான அறிவு என்ன என்பதைச் சோதனையாக வைத்து அதை அடிப்படையாக வைத்து இந்த மருத்துவக் கல்லூரிகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதுதான் நியாயமானதாகவும், பொருத்தமானதாகவும், ஊழலற்றதாகவும் இருக்கும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. இந்த நேரடித் தேர்வின் மூலம் பல ஊழல்களுக்கு, பல பாராபட்சங்களுக்கு இடம் ஏற்படுகின்றது. ஆகவே இன்றைக்கு பல்வேறு ஒதுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு என்று தனித்தனியாகக் கோட்டாக்கள் இருக்கின்றன. ஆகவே இந்த மார்க்குகளின் அடிப்படையிலே தேர்ந்தெடுக்கப்படுகின்றபோது அந்தப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் ஒதுக்கப்பட்ட மக்களுக்கும் உரிய கோட்டா உரிய அளவிலே நிறைவேற்றப்படும். அதே போல் அந்தப் பகுதியிலே இருந்து சிறப்பான மார்க் பெற்றிருக்கக் கூடியவர்களுள் பொதுவான கோட்டாவிலே இருந்து தேர்ந்தெடுக்கப்படக் கூடிய வாய்ப்புக்களும் இருக்கும். ஆகவே இது தான் இன்றைக்கு பல சர்ச்சைகளுக்கு முற்றுப் புள்ளி வைப்பதற்கும் பல ஊழல்களை ஒழிப்பதற்கும் உள்ள வழிவகையாக இருக்கும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

(பிற்பகல் 5-50)

அடுத்தபடியாக, நான் குறிப்பிட விரும்புவது, எவ்வாறு
சித்தவைத்தியம் தமிழ்நாட்டிலே சிறந்து விளங்கியது என்று தமிழ்
மொழியிலே நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இப்போதுகூட
அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டிலே சொன்னபடி, அரசாங்க
சார்பிலே இத்தகைய புத்தகங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன
அதற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன்.

தஞ்சையிலே, தமிழ்க் கல்லூரியிலே நேற்று முன்தினம் நடை
பெற்ற கருத்தரங்கில், அந்த பல்கலைக்கழக துணை வேந்த
அதை ஆரம்பித்து வைக்கும்போது, அதிலே பல அறிஞர்க
கலந்துகொண்டு, 85, 86-ஆம் ஆண்டு முதல் மருத்துவக் கல்லூ
களில் தமிழ் மூலம் போதனா மொழி இருக்கவேண்டும் என்
தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறார்கள். அதை மார்க்சிஸ்ட
கம்யூனிஸ்ட் கட்சி மனப்பூர்வமாக வரவேற்கிறது. அதற்காக
அவர்கள் சுகாதார அமைச்சரை மருத்துவப்புத்தகங்களை வெளிய
டுவதற்கு ரூபாய் 50 இலட்சம் ஒதுக்கும்படி கேட்டிருக்கிறார்கள்
மருத்துவக் களஞ்சியத்தை பல்கலைக்கழகம் வெளியிட வேண்
மென்று கேட்டிருக்கிறார்கள். இன்றைக்கு எதிர்க் கட்சித் தரப்
லும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தரப்பிலும் மட்டுமல்
எந்தப் பொருளையும் படிப்பதற்கு தாய் மொழியின் மூல
படித்தால் நல்லது. அது சிறப்பாக அமையும். பிரிட்
ஷாரால் இடைக்காலத்தில் அது தடைப்பட்டது. ஆகவே
சாதாரணமாக, தமிழ்நாட்டிலுள்ள மக்கள் மருத்துவத்தை
சிறந்த முறையில் படிப்பதற்கும், எதிர்காலத்தில் அதற்

வித்திடுவதற்கு வேண்டிய முறையில் தமிழ் மொழியில் இந்த மருத்துவப் படிப்பிற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இலங்கையில் இந்த மருத்துவப் படிப்பு படிப்பதற்கு வேண்டிய புத்தகங்களைத் தமிழில் வெளியிட்டிருக்கிறார்கள். ஆகவே, அது முடியும்; சாத்தியமானது. தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் வி. ஐ. சுப்பிரமணியம் அவர்கள் இந்த அறிவிப்பைச் செய்தது, ஒரு சிறந்த யோசனை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தனி மருந்தியல் கல்லூரி வேண்டுமென்று அந்த மருத்துவ பட்டதாரிகள் சங்கம் கோரி வருகிறார்கள். இதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். மாவட்ட மருத்துவ மனைகளுக்கு வேண்டிய சாதாரண மருந்துகள் தயாரிப்பதன் மூலம் இன்றைக்கு சிறந்த முறையை உருவாக்க முடியும் என்று நான் கூற விரும்புகிறேன். ஆகவே, மருந்தியல், கல்லூரியை ஆரம்பிப்பதற்கான முக்கியத்துவத்தை உணர்ந்து கருநாடக மாநிலத்திலே அது அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, நம்முடைய அரசாங்கம் இதை நல்லமுறையில் யோசித்து, அதைப் போல் ஆரம்பிப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள், இந்த கவுரவ டாக்டர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இந்த கவுரவ டாக்டர்கள் பதவி வேண்டாம் என்பது மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் திட்டவட்டமான கருத்து. காரணம் அதனால் பயனில்லை. அவர்கள் எல்லாம் அந்த மருத்துவ மனைகளில் தங்கள் அனுபவத்தைச் செலவழிக்கும் நேரம் குறைவு. பெரும் பாலான நேரத்தை அவர்கள் தங்கள் சொந்த கிளினிக்கிலே செலவழித்து, அந்தத் தொழிலுக்கு இதைத் தொடர்பாக பயன் படுத்துகிறார்கள். அதுமட்டுமல்ல. 15, 20 ஆண்டுகளாக அரசாங்கத்தில் பணிபுரியக்கூடியவர்களுக்கு அந்த பதவி உயர்வு கிடைப்பதற்குப் பதிலாக, இந்த கவுரவ டாக்டர்கள் இடையூறாக இருக்கிறார்கள். எனவே, இந்தக் கவுரவ டாக்டர் முறையை நீக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றொரு பிரச்சினை. இன்றைக்குப் பொதுவாக, மத்திய அரசாங்க சர்வீசிலே இருப்பதைப்போல், அரசாங்கத் துறையிலே பணியாற்றுகின்ற மருத்துவர்களுக்கு அவர்கள் நான்—பிராக்டிசிங் அலவன்சு கொடுப்பதைப் போல், இந்தத் துறையிலே பணியாற்றுகின்றவர்களுக்கும் உதவித் தொகை கொடுத்து, அவர்கள் தனித் தொழில் புரியாமல், சொந்த முறையில் தொழில் நடத்தக் கூடாதா என்று தடுத்தால், அது மக்களுக்கு சிறந்த பாதுகாப்பாக இருக்கும். அந்த அலவன்சு அவர்களுக்கு இல்லை என்று சொல்லக்கூடாது. அவர்களும் இந்த வருமானம் போதாது என்று சொல்லக்கூடாது. காரணம், ஜட்ஜுகள் தங்கள் வருமானத்தைக் கொண்டுதானே பணிபுரிகிறார்கள். அதேபோல் ஐ ஏ. எஸ். அதிகாரிகள் தங்கள் வருமானத்தைக்கொண்டு தானே பணிபுரிகிறார்கள். பல்வேறு அரசாங்கத் துறைகளிலே



உள்ள உயர் அதிகாரிகள் சம்பளம் மட்டும் வாங்கி பணிபுரிகிறார் கள். மருத்துவத் துறையிலே இருக்கக்கூடியவர்களுக்கு மட்டும் இத்தகைய அளவுக்கு சலுகைகள் கொடுக்க வேண்டுமென்று சொல் வது இந்த நாட்டின் தேசீய கொள்கைக்கு முரணானது. இந்தியா விடுதலை பெற்று, அந்த தேசீய பாராம்பரியத்தின் அடிப்படை யிலே சிறப்பான பணியை மக்களுக்கு சேவை உணர்வோடு செய்ய வேண்டும் என்பது அவர்களது தலையாய கடமையாக இருந் தது. அதேபோல் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற உணர்வை அவர்களுக்கு கொண்டு வர வேண்டும். இன்றைக்கு அரசாங்கத்துறையிலே பெரிய பெரிய டாக்டர்கள் அதிகப்படி யான நேரத்தை, தங்களுடைய சொந்த கிளினிக்கிலேதான் செல வழிப்பார்கள். அதுவும் ஒருசிலர் 2, 3 கிளினிக்குகளை வைத் திருப்பார்கள். ஒரு மனிதர் எப்படி பல கிளினிக்குகளை கவனிக்க முடியும்? அதோடு அவர்கள் அரசாங்க மருத்துவ மனைகளிலே எப்படித் தங்கள் கவனத்தைச் செலுத்த முடியும்? அதுவும் இன்றைக்கு டாக்டர்கள் பற்றாக்குறை இருக்கிறதா? ஏராள மான டாக்டர்கள் இருக்கிறார்கள். ஆனால், அரசுத் துறையிலே உள்ள டாக்டர்கள் அரசு மருத்துவ மனைகளிலே தங்கள் முழுக் கவனத்தையும் செலுத்தாமல், தனிப்பட்ட கிளினிக்குகளிலே கவனம் செலுத்துவதால், ஏராளமான வருமானம் வருகிறது.

அவர்களுக்கும் அது வருமானத்தைக் கொடுக்கும். ஆகவே, மக்களின் நலனைக் கருத்தில் கொண்டுதான் பார்க்க வேண்டும்.

அடுத்தபடியாக, மாநில ரீதியில் சட்டமன்றத்தில் இருக்கக் கூடிய அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு ஆலோசனைக் குழு அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், ஆண்டுக்கு ஒருமுறைதான் வரவு செலவுத் திட்டத்தின்போது மருத்துவம் பற்றியும், பொது சுகாதாரம் பற்றியும் பேச முடிகிறது. இப்படிப்பட்ட ஒரு குழு இருந்தால் இடைக்காலத்தில் ஏற்படுகின்ற பல பிரச்சினைகள் குறித்து மக்கள் பிரதிநிதிகளின் ஆலோசனைகளைக் கூற முடியும். மாநில ரீதியில் கல்வித் துறையைப் பொறுத்து ஒரு குழு அமைக் கப்பட்டிருக்கிறது. அதேபோல் நீர்ப்பாசனம் பொறுத்தும் அமைக்கப்பட்டிருக்கிறது என்று கருதுகின்றேன். அதேபோல் மருத்துவ துறைக்கும் அவசியம் ஒரு குழு அமைக்கப்பட வேண்டும். அப்போது இடைக்காலத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் பற்றிய யோசனைகளைக் கூறலாம். அது அரசுக்கும் உதவியாக இருக்கும். அதோடு பிரச்சினைகளை ஆழமாக பரிசீலிக்கவும் அது உதவியாக இருக்கும்.

அதேபோல் மாவட்டங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளில் அவற்றைக் கண்காணிக்க என்று போட்டிருக்கக்கூடிய குழுக்களில் அங்கீகரிக்கப்பட்ட அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளைப் போடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். மதுரை இராஜாஜி மருத்துவ மனையில் போடப்பட்டுள்ள அந்தக் குழுவில் அப்படி

[திரு. என். சங்கரய்யா] [1982 மார்ச் 11

பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவில்லை. அதைப்பற்றிக்கூட
நான் முதல் அமைச்சர் அவர்களுக்கு எழுதியிருந்தேன். பல்வேறு
அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் இருந்தால் விவாதத்திற்கும்
நல்லது. ஒருவருக்கொருவர் யோசனைகளைப் பகிர்ந்து கொள்ள
வும் முடியும். அப்போது மக்களுக்கும் ஒரு நம்பிக்கை ஏற்படும்.
ஒரு கட்சியின் பிரதிநிதித்துவம் அதிகமாக இருந்தால் மக்களுக்கு
அதில் நம்பிக்கை ஏற்படாது. இதில் அரசியலைக் கொண்டு
வராமல் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் பிரதிநிதிகளைப் போட
வேண்டும் அந்தக் குழுக்களில். அப்படிப் பிரதநிதிகளைப்
போடும்போது அந்தக் கட்சிகளைக் கேட்கவேண்டும், யாரைப்பிரதி
நிதியா போடவேண்டும் என்று. உதாரணமாக தொழிலாளர் நல
இலாகாவில் பல்வேறு குழுக்களுக்கு உறுப்பினர்களைப் போடும்
போது பல்வேறு தொழிற்சங்கத் தலைவர்களிடம் பேசுகிறார்
கள் கேட்கிறார்கள், கேட்டு அவர்கள் சொல்பவர்களை
போடுகிறார்கள். அந்தக் கட்சியைக் கேட்டு அவர்கள் பொருத்
தமாக வேலைசெய்யக்கூடியவர்கள் யார் என்று பார்த்து
அவர்கள் சொல்லக்கூடிய பிரதிநிதிகளைப் போடுகிறார்கள்.
அப்படிப் பல்வேறு மாவட்டங்களில் உள்ள பெரிய மருத்துவ
மனைகளிலுள்ள குழுக்களில் போடவேண்டும்.

அடுத்தபடியாக, 1,400 பேர்கள் டாக்டர்களாக தேர்வு
செய்யப் பெற்றாலும் கிராமப்புறங்களில் உள்ள பொது சுகாதார
நிலையங்களில் பல இடங்களில் இன்று டாக்டர்கள் இல்லை.
ஆகவே டாக்டர்களாக வருபவர்கள் எல்லோரும் கிராமப்புறங்
களுக்குச் சென்று இரண்டு ஆண்டுகளாவது சேவை செய்ய
வேண்டும் என்று வற்புறுத்தவேண்டும். பணம்படைத்தவர்கள்
அல்லது செல்வாக்கு உள்ளவர்கள் அவர்கள் செல்வாக்கைப் பயன்
படுத்திக்கொண்டு கிராமப்புறங்களுக்குச் செல்லமாட்டோம்
என்று சொல்வதும், செல்வாக்கு இல்லாதவர்கள் கிராமங்களில்
அதிக காலமாக இருப்பது என்பது நியாயமல்ல. ஆகவே,
எல்லா டாக்டர்களும் இரண்டு ஆண்டுகள் கிராமப்புறங்களில்
கண்டிப்பாக சேவை செய்ய வேண்டும் என்று அரசு வற்புறுத்த
வேண்டும்.

சித்தம், ஆயுர்வேதம் படிப்பவர்களுக்கு உதவித் தொகை
யாக கொடுக்கக்கூடிய இந்த ரூபாய் 30 என்பது மிகவும் குறை
வானதாகும். அந்த உதவித் தொகையை வைத்துக் கொண்டு
யாரும் படிக்க முடியாது. எனவே உண்மையில் இந்திய மருத்துவ
முறை வளர வேண்டுமென்றால் அந்த உதவித் தொகையை
அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 1976-ல் இருந்து 1982 வரை அரசாங்க
அறிக்கைகளின்படி 3,452 படுக்கைகள்தான் அதிகரிக்கப்பட்டிருக்
கிறது. உங்கள் கணக்குப்படி பார்த்தால், தமிழ்நாட்டிலுள்ள அரசு
மருத்துவ மனைகளில் இருக்கக் கூடிய படுக்கைகளின் எண்ணிக்கை
28,697. ஐந்து கோடி மக்கள் வாழக்கூடிய ஒரு மாநிலத்தில்



1982 மார்ச் 11] [திரு. என். சங்கரய்யா]

இந்த படுக்கைகளின் எண்ணிக்கை மிகவும் குறைவானதாகும்
எங்கள் கட்சியின் கருத்து, இது 25 சதவீதம் திட்டமிட்ட
முறையில் உயர்த்தப்பட வேண்டும். அவ்வாறு செய்ய
வேண்டியது இன்றைக்கு மிகவும் அவசியமாகிறது. அதற்கேற்ற
வாறு டாக்டர்களின் எண்ணிக்கையையும் உயர்த்த வேண்டும்

சுகாதார ஊழியர்களை, துப்புரவு ஊழியர்களை அதிகமாக
நியமித்து ஆஸ்பத்திரிகள் சுத்தமாக இருக்கும்படி பார்த்துக்
கொள்ள வேண்டும். பல ஆஸ்பத்திரிகளுக்குச் சென்று பார்த்
தால் அங்குள்ள நோயாளிகளுக்கு அந்த ஆஸ்பத்திரியிலேயே
பலவித தொத்து நோய்கள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. கழிப்பிடங்
கள் தண்ணீர் இல்லாத காரணத்தால் சுத்தம் செய்யப்படுவது
இல்லை. ஆகவே ஆஸ்பத்திரிகளை சுத்தமாக வைத்திருக்க அரசு
நடவடிக்கை எடுக்க வேண்டும்.

15 மாவட்ட மருத்துவ மனைகளில் 5,138 படுக்கைகள்தான்
உள்ளன. 116 வட்ட மருத்துவமனைகளில் 6,152 படுக்கைகள்
தான் உள்ளன. ஆக மொத்தம் வட்ட மருத்துவ மனைகள்,
மாவட்ட மருத்துவமனைகளில் உள்ள மொத்தப் படுக்கைகளின்
எண்ணிக்கை 11,292 ஆகும். இது மிகவும் குறைவு. ஆகவே,
படுக்கை வசதியை அதிகரிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஆஸ்பத்திரிகளில் புறநோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாக
இருப்பதால் அங்கே டாக்டர்களை அதிகமாகப் போட வேண்டும்.

(மாலை 6.00)

இதனால் என்ன ஏற்படுகிறது? வெகு வேகமாக பார்த்து
அனுப்பிவிடுவதால், சரிவர டையக்னைஸ் பண்ணமுடியாமல்
போகிறது. நோயாளிகளை கொஞ்சம் ஆற அமர 5, 10 நிமிடங்
கள் அவர்களைப் பரிசோதனை செய்தால், பயன் ஏற்படும்.
இல்லாவிட்டால், பல இடங்களில் தப்பு செய்கின்ற சூழ்நிலை
ஏற்படுகிறது. அமீபியாசிசுக்கு, அபென்டிசைட்டிஸ் என்று எழுதி
விடுகிறார்கள். காரணம், அவசரம். ஆனால், இதனால் எப்படிப்
பட்ட விபரீதமான விளைவு ஏற்படும் என்பதை அனுபவபூர்வ
மாகச் சொல்கிறேன். ஒருவர் அபென்டிசைசீஸ் என்று எழுது
கிறார். அடுத்தாற் போல், ஸ்பெஷலிஸ்ட் ஒருவர், அதே
அரசாங்கத் துறையிலே பணிபுரிபவர், இது ஆபரேஷன் கேஸ்
இல்லை, இது அமீயாபிஸ் என்று கூறுகிறார். இதற்கு மருந்து
கொடுத்தால் போதும் என்று சொல்கிறார். ஆகவே, இரண்டு,
மூன்று டாக்டர்கள் கலந்து ஒரு முடிவு எடுக்கவேண்டும்.

வெளி நோயாளிகள் கூட்டம் ஆஸ்பத்திரிகளிலே அதிகமாக
இருக்கிறது. அதற்கேற்றவாறு டாக்டர்களைப் போடவேண்டும்.
மருந்து வாங்கும் இடத்திலும் கூட்டம் அதிகமாக இருக்கிறது.

அதனால், பல மணி நேரம் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இதனால் ஜனங்களுக்கு பல சிரமங்கள் ஏற்படு கிறது. இதைப் போக்க வேண்டும் என்று அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மதுரையிலே இராஜாஜி மருத்துவமனையில், ஆபரேஷனுக்குத் தேவையான நைட்ரிக் ஆசிட், ஈதர் போன்றவைகள் இல்லாமல், ஆபரேஷன் ஒத்திவைக்கப்படுவது துரதிருஷ்டவசமானது. அப் பேர்ப்பட்ட ஆபரேஷன் செய்யக்கூடிய அரசாங்க மருத்துவ மனையிலே தேவையான மருந்துகள் போன்றவற்றிற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். சர்க்கரை வியாதி, இரத்தக் கொதிப்பு, போலீயோ போன்ற வியாதிகளுக்கும், ஆன்டி-பையாடிக் மருந்து களும் போதுமானதாக இல்லாமல் இருக்கிறது. இதற்கு அரசாங்கம் உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டும்.

மதுரை, இராஜாஜி ஆஸ்பத்திரி ஒரு முக்கியமான பெரிய ஆஸ்பத்திரி. அங்கே தண்ணீர் சப்ளை இல்லை. எப்பாடு பட்டாவது இந்த மருத்துவமனைக்குத் தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டும்.

காரணம், அது தென் மாவட்டங்களுக்கு ஒரு பெரிய முக்கியம் வாய்ந்த ஆஸ்பத்திரி. இந்த ஆஸ்பத்திரியைப் பொறுத்தவரை யில், அதன் தன்னிறைவுக்கு ஏற்ற ஒரு திட்டத்தை உண்டாக்கி, ஒரு நல்லத் திட்டம் போட்டு, தண்ணீர் வசதியை செய்து தர வேண்டும். தண்ணீர் இல்லாமல் பல நேரங்களில் ஆபரேஷனை நிறுத்தி விடுகிறார்கள். பல இடங்கள் அசுத்தமாக இருக்கிறது. சென்னை பொது மருத்துவமனைக்கு அடுத்தாற்போல் இரண் டாம் இடத்தை வகிக்கும் இந்த ஆஸ்பத்திரியிலே சரியான கழிப்பிடம் இல்லை ; சுத்தமாக இல்லை. தண்ணீர் இருந்தால், அந்தக் கழிப்பிடங்களை சுத்தமாக வைத்துக் கொள்ள முடியும். அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு, அதே போல் எங்களுடைய கட்சியைச் சார்ந்த எம்.எல்.ஏ.க்கள் இளையாங்குடி, நெல்லை மாவட்டத்திலே சிவகிரி ஆகிய இடங்களில் மருத்துவமனை கட்ட வேண்டும் என்று கோரியிருக்கிறார்கள். அதே போல், வாசுதேவநல்லூரில் பப்ளிக் ஹெல்த் சென்டர், இடிந்த கட்டிடம் இன்னும் கட்டப்படாமல் அப்படியே இருக்கிறது. பழனியில், ஆயக்குடியில் உள்ள மருத்துவ மனையை விஸ்தரிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த புற நகர் ஆஸ்பத்திரியைப் பற்றிச் சொன்னார்கள். உதாரணத்திற்காக மதுரையிலே, பாலகங்காதர் ஆஸ்பத்திரியில் அறுவை சிகிச்சை பிரிவு உட்பட பல பிரிவுகளை ஏற்படுத்தி, அனைத்துப் பிரிவுகளும் நல்ல முறையிலே இயங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இங்கே, அவசர சிகிச்சை செய்வதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கு அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





எனக்கு முன்னால் பேசிய சில நண்பர்கள் குறிப்பிட்டார்கள்
சாலைகளில் விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்றது என்று குறிப்
பிட்டார்கள். பல இடங்களில், மருத்துவமனைகளில் உடனடி
யாக கவனிப்பதற்கு அங்கே எல்லாம் ஏற்பாடுகள் செய்ய வேண்
டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த ஆஸ்பத்திரிகளில்
டாக்டர்களும், ஊழியர்களும், நல்ல முறையில் பணி செய்வதற்
காக, அவர்களோடு கலந்துரையாடி, அவர்களுடைய ஒத்து
ழைப்பு, யோசனைகளைப் பெற்று, செயல்பட்டால் நிர்வாகம்
இன்னும் நல்லமுறையில் மக்களுக்கு நன்மைபெறத்தக்க அளவில்
செயல்பட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
அவர்களுக்கு பல்வேறு ஸ்தாபனங்கள் இருக்கின்றன. நர்சஸ்
அசோசியேஷன் ; அவர்கள் இப்போது ஒரு கிளர்ச்சி நடத்து
கிறார்கள். அதே போல், ஜூனியர் டாக்டர்கள், சிவில் சர்ஜன்
கள் ஆகியோர்களைக் கொண்ட கூட்டத்தைக் நடத்தி, மாண்பு
மிகு சுகாதார அமைச்சரும், மற்ற அதிகாரிகளும், அவர்களுடைய
ஆக்கபூர்வமான யோசனைகளைக் கேட்டு செயல்பட்டால், இன்
னும் இந்த மருத்துவமனை நிர்வாகம் சிறப்பாக நடத்த முடியும்
என்பதை நான் நிச்சயமாகச் சொல்கிறேன்.

எவ்வளவு பெரிய டாக்டராக இருந்தாலும் குறிப்பிட்ட
ஆப்பரேஷனை செய்ய வேண்டுமென்றால் தனியாக அவர்
களிடத்திலே பணம் கொடுத்தால்தான் அரசாங்க ஆஸ்பத்திரி
யிலே ஆப்பரேஷன் பண்ண முடியும் என்று சொல்கிறார்கள்.
ஆகவே இதில் தக்க கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். நோயாளிகளுக்கு கொடுக்கப்படும் உணவு
போன்றவை திருடப்படாமல் பாதுகாப்பு கொடுக்க வேண்டும்.

அடுத்து பிணப் பரிசோதனை செய்வதற்கு நீண்டகாலம் ஏற்
படுகிறது. அதிகமான நேரம் காத்திருக்க வேண்டிய நிலை இருக்
கிறது. ஆகவே ஒருசில மணி நேரத்தில் போஸ்ட் மார்ட்டத்தை
செய்து அனுப்ப வழிவகை செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பொறுத்த
வரையில் 16 ஆயிரம் முதல் 20 ஆயிரம் ரூபாய் வரையில் தான்
மருந்துகள் கொடுக்கிறீர்கள். இந்தத் தொகையில் என்ன
மருந்தை வாங்க முடியும். ஊர்தியிலே போனால் அந்த டாக்டர்
கள் என்ன சொல்கிறார்கள் என்றால் மருந்து கொடுப்பதில்லை.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு
மாற்றுத் தலைவர் அவர்களே, 20 ஆயிரம் ரூபாய் ஊர்திகளுக்கு
கொடுக்கப்படுகிறது. ஊர்தியிலே சென்று வைத்தியம் செய்கிற
அந்த துறைக்கு 20 ஆயிரம் கொடுக்கப்படுகிறது ; பிரைமரி
ஹெல்த் சென்டருக்கு அந்த இடத்திலே வைத்தியம் செய்கிற
துறைக்கு 20 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. ஆக
40 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படுகிறது.

திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, அந்த ஊர்தி இல்லாத இடங்களுக்கு 20 ஆயிரம் தான் அதிகபட்சமாக கொடுக்கப்படுகிறது என்று அறிகிறேன். அது போதாது என்பது தான் என்னுடைய வாதம். அடுத்தபடியாக 1,000 குழந்தைகள் பிறந்தால் இவ்வளவு வளர்ச்சி ஏற்பட்டும் 1980 ஆம் ஆண்டிலே கூட நாம் பார்த்தால் 100.2 சதவீதம் குழந்தைகள் இறந்திருக்கிறது. இது 1979-லே 98.5 சதவீதமாக இருந்தது. இப்போது அதிகரித்துள்ளது. ஆகவே இவ்வளவு ஏற்பாடுகள் செய்தும் கூட 1,000 குழந்தைகளிலே 100 குழந்தைகள் இறப்பதை குறைப்பதற்கு தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல நோக்கு நல்வாழ்வுத் திட்டங்கள் பணியாளர்களை வைத்திருக்கிறீர்கள், நல்லது. ஆனால் அதை மதிப்பீடு செய்து பாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன் ; மலேரியா திட்டம், யானைக் கால் ஒழிப்புத் திட்டம் என்று திட்டம் எல்லாம் இருக்கிறது. அதில் நிர்ணயிப்பு என்ன ; என்ன பலன் கிடைத்திருக்கிறது என்பதை அரசாங்கம் பார்த்து அதை மதிப்பீடு செய்வது அவசியம் என்று கருதுகிறேன். இல்லாவிட்டால் பணத்தை செலவழித்துக்கொண்டே இருப்போம். அதில் பலன் என்ன என்பது தெரியாமல் போய்விடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இறுதியாக நான் சொல்ல விரும்புவது உணவிலே கலப்படம் செய்வதை தடுப்பதற்கு 1981–82-லே 490 பேர்கள் அபராதம் போடப்பட்டிருக்கிறது ; சிறை தண்டனை 179 பேர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. மொத்தம் 15,179 மாதிரி குறிப்புகள் தான் பகுப்பாய்வு செய்யப்பட்டிருக்கிறது. அது போதாது என்று கருதுகிறேன். இதில் ஏற்படக்கூடிய அபாயம் மிகக் கடுமையானது.

மருந்து கட்டுப்பாடு நிர்வாகத்திற்கு நீங்கள் செய்திருக்கக் கூடிய நடவடிக்கைகளை நான் ஆதரிக்கிறேன். அதிலே பணத்தை கொடுத்தோ, அதிகாரிகளை ஏமாற்றியோ தங்களுடைய சரக்குகளை, அதாவது தரத்திற்கு குறைவான சரக்குகளை மார்க்கெட்டிற்கு கொண்டு வருவதற்கு முயற்சிக்கிறார்கள். அதை தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தொழிற்சாலை கழிவுப்பொருள்கள் கலப்பதிலிருந்து அரசாங்கம் பாதுகாப்பு நடவடிக்கை எடுத்திருக்கிறது. குடி தண்ணீரை தூய்மை செய்வதற்கு எவ்வளவு செலவு செய்தாலும் பொது சுகாதாரத்திற்கு உதவி செய்யும். அந்த தொழில்களுக்கு சான்றிதழ்கள் வழங்கக்கூடிய ஏற்பாட்டை செய்திருக்கிறீர்கள். ஆனால் பாரபட்சம் இல்லாமல் மக்கள், கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ்களிலிருந்து, தோல் பதனிடும் இடங்களிலிருந்து வரக்கூடிய கழிவுகளிலிருந்து தக்க பரிகாரம் செய்து கொண்டு, குடிதண்ணீரை பாதுகாப்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டுதான் தொழிற்சாலைகளுக்கு லைசன்ஸ் கொடுக்க வேண்டும். மேட்டூர்





வட்டாரத்தில் இது போன்ற நிலைமையில் விவசாயமே பாதிக்கப்
பட்டிருக்கிறது ; ஆடு மாடுகள் சாகிறது ; ஆகவே இது மிகவும்
கடுமையான பிரச்னை. அரசாங்கம் சான்றிதழ் வழங்குவதற்கு
முன்னால் ஆழ்ந்து ஆய்வு செய்து, அந்த முதலாளிகள் தண்ணீரை
வெளியே விடும்போது ஆபத்தில்லாமல் செய்ய வேண்டுமென்று
கேட்டு, இன்னும் சில விஷயங்கள் இருக்கின்றன. ஆனால்
மாண்புமிகு தற்காலிக சபாநாயகர் அவர்கள் வற்புறுத்துகிற
காரணத்தால் என்னுடைய உரையை இத்தோடு முடித்துக்
கொள்கிறேன்.

(இரவு 6-10.)

திரு. செ. செம்மலை : மாண்புமிகு மாற்றுத் தலைவ
வர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்
அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற இந்த மானியக் கோரிக்கை
களை வரவேற்று என்னுடைய கருத்துக்கள் ஒரு சிலவற்றை
எடுத்து வைக்க விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் இந்தத் துறையில் பெற்ற அனுபவத்தின் அடிப்படை
யில் இந்தத் துறையில் பல சீர்த்திருத்தங்களைச் செய்து
கொண்டிருக்கிறார்கள். அனுபவரீதியாக ஆக்கப்பூர்வ
மான சில செயல்முறைகள் இந்த மானியக் கோரிக்கைகளிலே
அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். உலக சுகாதார
நிறுவனம் கி.பி. இரண்டாயிரத்திற்குள் அனைவருக்கும் சுகா
தார வசதி செய்ய வேண்டுமென்று தீர்மானித்து இருக்கிறது.
அந்த இலக்கை அடைய முனைப்போடு அமைச்சர் அவர்கள்
நல்ல பல திட்டங்களை தீட்டியிருக்கிறார்கள், அவற்றை இந்த
மானியக் கோரிக்கைகளிலே தெளிவாக்கியிருக்கிறார்கள்.

நகரத்திற்கு மட்டுமே மருத்துவ வசதி என்ற நிலைமை
மாறி கிராமங்களுக்கும் அது நீட்டிக்கப்பட வேண்டுமென்று
புரட்சித் தலைவர் அவர்களின் எண்ணத்திற்கு மாண்புமிகு
மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் செயல்வடிவம்
கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதுநாள் வரையில் இந்
தத் துறையில் இருந்த தேக்க நிலை மாறி நம்முடைய மக்கள்
நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய காலத்திலே
செயல்படத் தொடங்கியிருக்கிறது என்று சொன்னால் மிகை
யாகாது. இந்தத் துறையைப் பொறுத்தவரையில் நாம் இரண்டு
பிரிவாகப் பிரித்து பார்த்தால், ஒன்று சுகாதாரம், மற்றொன்று
மருத்துவம்—இந்த இரண்டு துறைகளையும் பொறுத்த வரையில்
—பிரிவென்ஷன் இஸ் பெட்டர் தேன் கியூர் என்று சொல்வார்கள்.
வந்தபின் காப்பதைவிட வருமுன் காப்பதே மேல் என்று சொல்
வார்கள். இந்தத் துறையைப் பொறுத்த வரையில் வர இருக்
கின்ற நோயையும் கட்டுப்படுத்த வேண்டும், வராமல் பார்க்க
வேண்டும். அதைப்போலவே நோய் வந்தபிறகு அதைக்
குணப்படுத்துகிற காரியத்திலே ஈடுபடவேண்டும். அந்த
அடிப்படையில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களின்

பணி மிகவும் சிறப்பானதாகக் கருதப்படுகிறது. அமைச்சர் அவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு கிராமப்புறங்களினுடைய மருத்துவ வசதியைப் பெருக்கு கிற வகையில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அனைத்திலும் மருத்துவர்களை நியமிக்க முயற்சிகளை எடுத்துக்கொண் டிருக்கிறார்கள் என்பது பாராட்டத்தக்கது.

இதனால் ஆரம்ப சுகாதார நிலையங்களிலே மருந்து தட்டுப் பாடு இருந்த நிலை மாறி அமைச்சர் அவர்கள் இந்தப் பொறுப் பேற்றதன் காரணமாக மருந்துகள் தாராளமாகக் கிடைக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆரம்ப சுகாதார நிலை யங்களின் நிலையை உயர்த்தி ஒரு தாலுகா மருத்துவ மனையிலே என்ன என்ன வசதிகள் கிடைக்குமோ அத்தனை வசதிகளையும் ஒன்றிய சுகாதார நிலையங்களில் கிடைக்கக்கூடிய முறையிலே ஏற்பாடு செய்து தந்து கிராமப்புறங்களிலே உள்ள மக்களுக்கு மருத்துவ வசதிகளை நீட்டிக்கிற அந்தப் பணியைச் செய்வதற் காக நான் அதை உள்ளபடியே வரவேற்கக் கடமைப்பட்டிருக் கிறேன். அந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் எத்தனை டாக்டர்கள் நியமிக்கப்பட்டாலும் அவர்கள் தொடர்ந்து அங்கே பணிபுரிவது இல்லை. அப்படியே பணி புரிந்தாலும் அதிகமாக நீடிப்பது இல்லை எனபதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய மதிப்பிற்குரிய பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் கூட சென்ற வாரம் டெல்லியிலே நடைபெற்ற ஒரு கருத்தரங் கிலே பேசுகின்றபோது கிராமப்புறங்களிலே பணியாற்றுகின்ற டாக்டர்களுக்கு கிராமப்புறங்களிலே பணியாற்ற ஆர்வமாக உள்ள டாக்டர்களுக்கு ஊக்க ஊதியம் ஏதாவது அளிக்குமாறு அதை இந்தத் துறை பரிசீலிக்க வேண்டுமென்ற முறையிலே பேசி இருக்கிறார்கள். நான் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவது எல்லாம் இது போன்று கிராமப்புறங்களிலே பணியாற்றுகின்ற டாக்டர்களுக்கு அல்லது அங்கே பணிபுரிய ஆர்வமாக இருக் கின்ற டாக்டர்களுக்கு ஊதியமாகவோ அல்லது சில சலுகை களாகவோ அளிக்க முன்வர வேண்டும். அப்படிச் செய்வதன் மூலமாக கிராமப்புற மக்களுக்கு மருத்துவ வசதியை ஏற்படுத்திக் கொடுத்து அந்த டாக்டர்களை நல்ல முறையிலே பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள் கிறேன்.

கிராமப்புறங்களைப் பொறுத்த வரையில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நாம் பல மருததுவ வசதிகளைச் செய்து கொண்டு இருக்கின்ற நேரத்திலே கிராமப்புற மக்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தேடி வரவேண்டுமானால் சுமார் 40, 50 கிலோ மீட்டர் வரவேண்டிய நிலைமையிலே இருக்கிறார்கள். ஒரு சில ஆரம்ப சுகாதார நிலையங்களிலேதான் மொபைல் வேன், நடமாடும் ஊர்தி இருக்கிறது. எனவே அனைத்து ஆரம்ப சுகாதார



நிலையங்களுக்கும் அந்த ஊர்தியை வழங்குவதன் மூலமாக கிராமப்புற மக்களுக்கு மருத்துவ அலுவலர்கள் வாரத்திற்கு 2, 3 முறைகள் சப்சென்டரிலிருந்து சென்று கிராம மக்களுக்கு மருத்துவ வசதியை அளிக்க முடியும். ஆகவே அப்படிப்பட்ட சூழ்நிலையை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கி றேன். ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பொறுத்த வரையில் குழந்தைகளுக்கு தடுப்பு ஊசிகள் போடப்படுகின்றன. கிராமங் களிலே பலதரப்பட்ட குழந்தைகள் இளம்பிள்ளை வாதம் என்ற நோயால் அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதைத் தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைத் தடுப்பதற்கு அங்கே போலியோ மருந்து களை வைப்பதற்கு ஏற்ற முறையிலே குளிர்சாதனப் பெட்டி வசதிகள் இல்லை. ஆகவே ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலை யத்திற்கும் குளிர் சாதனப் பெட்டிகளை வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர வர்கள் இந்த மானியக் கோரிக்கையிலே ஒரு நல்ல திட்டத்தைப் பற்றிச் சொல்லி இருக்கிறார்கள். பள்ளியிலே படிக்கின்ற குழந்தைகளுக்குத் தொழு நோய் இருக்கிறதா என்பதைக் கண் டறிய பரிசோதனை முறையை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். அந்தச் சோதனைத் திட்டம் வரவேற்கத் தக்க திட்டமாகும். இன்றைய தினம் குழந்தைகளின் இறப்பு விகிதம், தமிழ்நாட்டில் ஆயிரம் குழந்தைகள் என்றால் 100 முதல் 120 குழந்தைகள் வரையில் இறந்து விடுகின்றன. மற்ற வெளி நாடுகளில், குறிப் பாக இங்கிலாந்தில் 13 ஆகவும், டென்மார்க், சுவீடன், நர்வே ஆகிய இடங்களில் 6 ஆகவும் இருக்கிறது. வருங்காலச் சந்ததி யினரைக் காப்பாற்ற முடியும் என்ற வகையில் இந்தத் திட்டத்தை யும், நிதிநிலை அறிக்கையில் நோய்க்குக் காரணமாக இருக்கின்ற சத்துணவுக் குறைவை நீக்கும் வகையில் சத்துணவுத் திட்டத்தைக் அறிவித்திருப்பதும் வரவேற்கக் கூடிய ஒன்றாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மலேரியா, பைலேரியா என்ற வியாதிகளை ஒழிப்பதிலே வெற்றி கண்டாலும் கூட மீண்டும் இது போன்ற வியாதிகள் தலை தூக்க ஆரம்பித்திருக்கின்றன. மூளைக் காய்ச்சல் என்ற பெரு வியாதி பயமுறுத்திக் கொண்டிருக்கின்ற நிலையில் இருக் கிறது. எனவே, அதற்குக் காரணமாக இருக்கின்ற கொசுக்களை ஒழிப்பதற்குப் போர்க்கால நடவடிக்கையாகக் கருதி ஒழிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். வளர்ந்துவிட்ட கொசுக்களை ஒழிப்பதைவிட, இன்றைக்குக் கொசுக்கள் உற்பத்தியாகாமல் இருக்க, அப்படிப் பட்ட கொசுக்கள் பரவாமல் இருக்க கிராமப் புறங்களாகட்டும் நகரப்புறங்களாகட்டும் அங்குள்ள மக்களுக்கு ஹெல்த் எஜூ கேஷன் என்ற முறையிலே, இது போன்ற பணிகளில் ஈடுபட்டு இருக்கின்ற அலுவலர்கள் கொசு உற்பத்தியைத் தடுக்கின்ற முறையிலே தடுப்பு முறைகளை எடுத்துச் சொல்லும் வகையிலே திறம்பட செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தைப் பொறுத்த வரையிலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதவியேற்றிருக்கின்ற இந்தக் காலத்தில் டேனிடா என்ற அருமையான திட்டத்தை அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள். டென்மார்க் நாட்டின் உதவியோடு செயல்படுத்தப்படும் இந்தத் திட்டம் சேலம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் வரப்பிரசாதம் என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன். இந்தத் திட்டத்தை 14.40 கோடி உதவித் தொகையாக அந்த நாடு வழங்குகின்ற நேரத்தில் அதன் மூலம் 3,230 கிராமங்களிலுள்ள 70 இலட்சம் மக்கள் பயனடையும் சூழ்நிலையில் அனைத்துக் கிராமங்களுக்கும் இப்படிப்பட்ட சுகாதார வசதிகளையும், பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வசதிகளையும் அளிக்கின்ற முயற்சியை நான் உள்ளபடியே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த உதவியை அளிக்கின்ற டென்மார்க் அரசாங்கத்திற்கும், அந்த உதவியைச் செயல்படுத்துகின்ற புரட்சித் தலைவரின் அரசுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்களுக்கும் என்னுடைய சார்பிலேயும், பொது மக்கள் சார்பிலேயும், அந்த மாவட்டப் பிரதிநிதி என்ற முறையிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌந்திரராசன் அவர்கள் சொன்னதைப் போல இன்றைக்குப் போக்குவரத்து அதிகரித்த நிலையில் சாலை விபத்துக்கள் அதிகமாக ஏற்பட்டு அதன் காரணமாக நிறைய உயிரிழப்புகள் ஏற்படுகின்றன, அப்படிப்பட்ட உயிரிழப்புகளைத் தடுக்க ஒவ்வொரு தாலுக்காவிலும் ஒரு ஆக்சிடென்ட் வார்டை ஏற்படுத்த வேண்டும். மாவட்டத்திற்கு ஒரு நியூரோ சர்ஜனை நியமிக்க வேண்டியது அவசியம் என்று வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒவ்வொரு மாவட்டத் தலைமை மருத்துவமனையிலும்—சில மாவட்ட மருத்துவமனைகளைத் தவிர மற்ற அனைத்திலுமே ஜெனரேட்டர் இல்லாத குறை இருக்கிறது, ஆபரேஷன் போன்ற முக்கியமான பணிகளில் ஈடுபடும் நேரத்தில் மின்சாரத் தடை காரணமாக அந்தப் பணி தடைப்படுகின்றது. எனவே, ஒவ்வொரு மாவட்டத் தலைமை மருத்துவமனைக்கும் ஒரு ஜெனரேட்டரை அமைத்துத் தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மருத்துவக் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்களுக்குச் சிகிச்சையளிக்கப்படும் நேரத்தில் அவர்களிடத்தில் சிகிச்சைக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அப்படி வசூலிக்கும் பொழுது பெற்றோரின் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு வசூலிக்கப்படுகிறது. நான் மாணவர்கள் கட்ட முடியாத நிலையில் இருப்பவர்கள் என்பதற்காக இதைச் சொல்ல முன்வரவில்லை. டாக்டர் தொழில் என்பது புனிதமான





தொழில் ; அந்தத் தொழிலில் இருப்பவர்களுக்கு சர்வீஸ் மைன்ட் இருக்க வேண்டும் அந்த அடிப்படையில் பார்த்தால், மருத்துவக் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்களிடத்தில் அவர்களது சிகிச்சைக்கான கட்டணத்தை வசூலித்தால், பிறகு அவர்கள் படித்து விட்டு வெளியே வரும்பொழுது மற்ற நோயாளிகளிடத்தில் பணம் வாங்க வேண்டுமென்ற எண்ணம் உருவாகும். எனவே, அந்த முறையிலே .......... (மணியடிக்கப்பட்டது).

(இரவு 6-20).

திரு. ரி. கா. நல்லப்பன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மருத்துவம், மக்கள் நல்வாழ்வுத் துறை இந்த இரு கோரிக்கைகளின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். தமிழகத்தில் இருக்கிற ஏறக்குறைய 4 கோடியே 80 இலட்சம் பேரில் மூன்றில் இரண்டு பங்கு கிராமங்களில் வசிக்கக் கூடியவர்கள் என்று இந்த அறிக்கையிலே சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. இருப்பினும் கி. பி. 2000 ஆண்டிற்குள் இங்கு இருக்கிற அனைத்து மக்களுக்கும் நல்வாழ்வுத் துறையின் மூலமாகப் பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும் என்றும் அறிக்கையிலே கொடுத்து இருக்கிறார்கள். பொருளாதார ரீதியாக எப்படி முன்னேற்றுவார்கள் என்பதை நான் தெரிந்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும், மருத்துவத் துறைக்கு மாணவர்களைச் சேர்க்கின்ற பொழுது வருடா வருடம் அங்குமிங்கும் சில முறைகேடுகள் நடைபெறுவதாக பத்திரிகைகளிலும் நீதிமன்றங்களிலும் நாம் பார்க்கிறோம். இந்தக் குறையைப் பார்க்கின்ற பொழுது, மாணவர்களைச் சேர்க்கின்ற பொழுது, அவர்களுடைய பட்டியலை வெளியிடுகின்ற பொழுது, முழுமையாக அவர்கள் பெற்று இருக்கிற மதிப்பெண்களை வெளியிட்டு விட்டால் இந்தச் சூழ்நிலை இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நர்சிங் பயிற்சிப் பள்ளியைப் பொறுத்தவரை சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு அதிகமாக, மொத்தம் 690 பேர் சேர்க்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு 675 பேர்கள் சேர்க்கப்பட்டார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏற்கனவே, படித்து பட்டம் பெற்ற மருத்துவர்கள் வேலையில்லாத நிலைமையிருக்கிறது. ஆனால், நர்சுகளைப் பொறுத்த வரை, பற்றாக் குறை இருக்கிற இந்தச் சூழ்நிலையில் நிச்சயமாக நர்சுகள் பயிற்சி பெறுவதை, வருடம் ஒன்றிற்குக் குறைந்தபட்சம் ஆயிரமாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தமிழகத்திலே மொத்தமுள்ள 376 ஒன்றியங்களில், மலை வாழ்மக்கள், இதர தாழ்த்தப்பட்டவர்கள் அனைவருக்கும் சேர்த்து இருக்கக்கூடிய ஆரம்பச் சுகாதார நிலையம் 405.

ஏறக்குறைய 1 ஆரம்பச் சுகாதார நிலையம்தான் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் இருக்கிறது. ஒவ்வொரு ஒன்றியத்திலும் கிட்டத்தட்ட 70,000, 80,000, 1 இலட்சம் மக்கள் இருக்கிறார்கள். இந்த ஆரம்பச் சுகாதார நிலையத்திலிருந்து கிராமங்களுக்கு மருத்துவர்கள் நடமாடும் வான்கள் மூலமாகச் செல்வதாக அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிச் செல்வது என்பது, மருத்துவர்கள் ஒவ்வொரு ஊராட்சிக்குச் சென்று, அங்கேயிருக்கின்ற சிலரைப் பார்த்துவிட்டு, திரும்புவது என்பது, நல்ல மருத்துவர்களாக இருந்தால் இருக்கிறது. சில மருத்துவர்கள் செல்வதில்லை என்ற நிலைகூட இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பேரூராட்சிகள் இருக்கிற அனைத்து இடங்களிலும் இங்கே இந்த அறிக்கையில் 6,000 பேர்களுக்கு ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் என்று சுட்டிக் காட்டப்பட்டிருப்பினும் பேரூராட்சிகள் தோறும் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையமும், 3 அல்லது 4 ஊராட்சிகளுக்கு ஒரு ஆரம்பச் சுகாதார நிலையமும் இருந்தால் தான் நிச்சயமாகக் கிராமங்களில் இருக்கக் கூடிய மக்களுக்குச் சுகாதார வசதியைக் கொடுக்க முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை, மதுரை இன்னும் ஏனையப் பெரிய நகரங்களில் இருக்கிற மருத்துவ மனைகளில் கூட, கீழ்த்தட்டிலே இருக்கிற நோயாளிகளுக்கு வைத்தியம் செய்யக் கூடிய இடங்களுக்குச் சென்று பார்ப்போமானால், நமக்குக் கூட நோய் வந்துவிடுமோ என்ற அச்சம் இருக்கிறது.

அடுத்து, பாதுகாக்கப்பட்ட குடிநீர், ஸ்வீப்பர்களை அதிகப்படுத்துவது போன்ற விஷயங்கள் இந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தாலும், பேரூராட்சிகளில் ஆகட்டும், மாநகராட்சிகளில் ஆகட்டும், நகராட்சிகளிலாகட்டும் ஏறக்குறைய 25, 30 ஆண்டுகளுக்கு முன்பாக ஸ்வீப்பர்கள் வேலையில் அமர்த்தப்பட்டார்கள். ஆனால், இன்றைக்கு ஜனத்தொகைக்குத் தகுந்தாற் போல இந்த ஸ்வீப்பர்களுடைய எண்ணிக்கை வெளியிலும் இல்லை, மருத்துவ மனையிலும் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கழிவறைகளைப் பொறுத்தவரை, பெரிய மருத்துவ மனைகளில் பன்றிக் குட்டிகளைப் போல், பெருச்சாளிகள் உலவுவதை, இரவு 7-30 மணி, 8-00 மணி அளவில் பார்க்க முடியும் என்பதை ரொம்ப வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பொறுத்தவரையில் சில மருத்துவர்கள் அங்கே வருகின்ற நேரத்தில், அவர்களுக்குப் போக்குவரத்து வசதியோ, அல்லது குடியிருப்பு வசதியோ இல்லை என்பதனை காட்டி, அவர்கள் வேறு





நகரங்களுக்கு மாற்றிச் செல்லக் கூடிய நிலை இருக்கின்றது. அவர்கள் நகரங்களுக்கு மாற்றிச் செல்லும் நோக்கமே, அங்கே தனியாக ஒரு கிளினிக்கு வைத்து அதன் மூலம் பணம் சம்பாதிக்கும் நிலை காரணமாக இத்தகைய நிலை இருக்கின்றன. அப்படிப் போகக்கூடிய அந்த மருத்துவர்களை குறிப்பிட்ட ஒரு இடத்தில் அவர்களை நியமனம் செய்து அவர்கள் அந்த இடத்திற்குச் செல்லவில்லை என்றால் நிச்சயமாக அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பட்டத்தைப் பறிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். லட்சக்கணக்கான ரூபாய்களை, மக்கள் வரிப் பணத்திலிருந்து செலவழித்து அவர்கள் பட்டம் பெற்ற பின்னர் இந்த நிலைக்கு செல்வது கண்டிப்பாக தடுக்கப்பட வேண்டும். தற்போது கொடுக்கப்படும் சம்பளத்தை அதிகமாக்கி—தற்போது ஆந்திராவிலே புதிய சட்டம் கொண்டு வந்து அதன் மூலம் அரசு மருத்துவர்கள் தனியே மருத்துவம் செய்யக்கூடாது என்று கொண்டு வந்ததைப்போல தமிழகமும் அப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

குடும்ப நல திட்டத்தைப் பொறுத்தவரையில் அறிக்கையிலே குறிப்பிட்ட இலக்கை அடைந்துவிட்டதாக சுட்டிக் காட்டப்படுகிறது. இதைப் பொறுத்தவரையில் மக்கள் தாங்களாகவே உணர்ந்து தங்கள் நிலையிலே இரண்டு மூன்று குழந்தைகள் போதும் என்ற நிலை வந்தால்தான் இந்த குடும்ப கட்டுப்பாடு முறையாக இருக்கும் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். குறிப்பிட்ட இலக்கை அடைய வேண்டுமென்ற அந்த நோக்கத்திற்காக ஒருவரையே இரண்டு முறை மூன்று முறை எண்ணிக்கைக்காக கருத்தடை செய்வதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். அதேபோல 18 வயது, 19 வயது 20 வயதிலே இருக்கக்கூடிய இளைஞர்களை அவர்கள் வீட்டிலிருந்து வெளியே வந்து தவறிப்போய் எங்காவது ஒரு இடத்தில் படுத்திருந்தால் இந்த மாதிரி குடும்ப நல இருவார காலகட்டத்தில் அவர்களை அழைத்துச் சென்று அறுவை சிகிச்சை செய்வதும் எண்ணிக்கை பெருக வேண்டுமென்பதற்காக 60 வயதிற்கு மேற்பட்ட பெரியவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்வதை கண்டிப்பாக தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கொசுவின் காரணமாக பலவேறு நோய்கள் வருவது மறுக்க முடியாத நிலை. அதனால் தமிழகத்தில் அனைத்து இடங்களிலும், அதாவது நகரம் கிராமம் என்ற பாகுபாடு இல்லாமல், அனைத்து இடங்களிலும் கொசு இருக்கின்ற காரணத்தினால் வியாதிகள் பல பரவும் சூழ்நிலை இருக்கிறது. கொசுவை உற்பத்தியாகும் இடத்திலேயே தடுத்துக் கொல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு ஏற்கெனவே நரம்பு சிலந்தி போன்ற வியாதிகள் குடிநீர் அதாவது நடைபாதை குடிநீர் இருந்த காரணத்தினால் அம்

(திரு. நி.கா. நல்லப்பன்) [1982 மார்ச் 11

மாதிரியான வியாதிகள் வந்துக் கொண்டிருந்தன. அதைத் தடுக்கிற முறையிலே பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஒரு டாக்டர் விளம்பரப்படுத்தியிருக்கிறார். காச நோயை 3 மாதங்களில் ஒழித்துவிட முடியும் என்று. இப்படி காச நோய், தொழு நோய், கடுமையான நோய்கள் ஆரம்பத்திலேயே உருவாகாமல் தடுத்து நிறுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்வதோடு பிறக்கின்ற குழந்தைகளுக்கு கண்டிப்பாக தடுப்பு ஊசி போட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

கிராமத்திலே இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களில் இப்படி குழந்தைகளை எடுத்துச் சென்று தடுப்பு ஊசி போடுங்கள் என்று சொன்னால் மருந்துகள் இல்லை என்ற நிலை இருக்கிறது. இந்த நிலை போக்கப்படவேண்டும்.

ஒட்டப்பிடாரம் மருத்துவமனையில் பெண் டாக்டர் இல்லை. அவர் உடனடியாக நியமிக்கப்பட வேண்டும். அந்த மருத்துவமனைக் கட்டடம் 100 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டது. அதை புதிய கட்டடத்தில் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் டீன் தற்போது இல்லை. அவரை உடனடியாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

(இரவு 6–30)

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத் தலைவர் என்றால் அவருக்குக் கோபம் வந்துவிடும்—ஆகவே பேரவைத் தலைவர் அவர்களே..

திரு சு. பாலன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத் தலைவர் என்று கூறினால் உங்களுக்குக் கோபம் வந்துவிடும் என்று கூறுகிறார்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்): இந்த சீட்டிலே உட்கார்ந்தால் எல்லோரும் தலைவர் தான். அது குறித்த விதிகளை எல்லாம் கூட அன்றே படித்துக் காட்டினேன். அதை எற்றுக் கொண்டு தலைவர் அவர்களே என்று சொன்னால் சொல்லலாம். துரைமுருகன் இருக்கையில் இருக்கிறேன் என்பதற்காக அப்படிச் சொல்லச் சொல்லவில்லை.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, 1982—83-ம் ஆண்டிற்கான மக்கள் நல்வாழ்வுத் துறை, மருத்துவத் துறை ஆகிய இரண்டு துறைகளினுடைய மானியக் கோரிக்கைகளை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலே சமர்ப்பித்து இருப்பதை வரவேற்று, வாழ்த்திப் பேச ஆசைப்படுகிறேன்.



[1982 மார்ச் 11] (டாக்டர் கே. பி. இராமலிங்கம்)

புரட்சித் தலைவர் அரசு மிகவும் அக்கறையுடன் தமிழக மக்களுக்கு, குறிப்பாக அனைத்துப் பகுதிகளுக்கும், கிராமப் பகுதியானாலும், சரி, நகரப் பகுதியானாலும் சரி, தமிழகத்திலே வாழ்கின்ற அனைத்து மக்களுக்கும் மருத்துவ வசதியைச் செய்து தருவதிலே தீவிர அக்கறை செலுத்தி அதற்காகவே, மருத்துவத்துறையிலே பட்டம் பெற்று, மருத்துவத் துறையின் வளர்ச்சிக்காகவும், அதிக அக்கறை செலுத்தியவரும், அரசியலிலும் செல்வாக்கு பெற்ற வருமான ஒருவரை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக அமைத்து, அவர் பல்வேறு நல்ல திட்டங்களைக் கொண்டு வந்து தமிழகத்திற்கு பணியாற்றுவதை பாராட்டுகிறேன். அதற்கு எடுத்துக் காட்டாகத்தான் இருக்கிறது இந்த மாமன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிற அறிக்கை.

இந்த அறிக்கையிலே கி. பி. 2000த்திற்குள் அனைவருக்கும் நல்வாழ்வு என்ற மிகப் பெரிய ஒரு கொள்கை சொல்லப்பட்டிருக்கிறது, சில உறுப்பினர்கள் பேசும்போது எல்லா மக்களுக்கும் கி. பி. 2000க்குள் பொருளாதாரத்திலே எப்படி முன்னேற்றம் காணமுடியும் என்றும், பொருளாதார முன்னேற்றம் காணாமல் சுகாதாரத்திலே எப்படி முன்னேற்றம் காண முடியும் என்று கேட்டார்கள். சுவரை வைத்துத்தான் சித்திரம் எழுதமுடியும். நம் தமிழ் நாட்டிலே வாழ்கின்ற மக்கள் தங்கள் வாழ்க்கை நிலையை உயர்த்திக் கொள்வதற்கு நல்ல உடற்கட்டு உடையவர்களாக இருக்க வேண்டும். கிராமப் புறங்களிலே இருக்கிற மக்களும், நகர்புறங்களிலே இருக்கிற மக்களும், நல்ல உடற்கட்டுடன் இருந்தால் நன்கு உழைக்க முடியும், நன்கு உழைத்தால் தங்கள் பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ள முடியும், அப்படி மக்களின் பொருளாதார நிலை உயர்ந்தால் நாட்டின் பொருளாதார நிலை உயரும். இந்த சாதாரணமான கணக்கை வைத்துத்தான் அனைவருக்கும் நல்வாழ்வு என்ற திட்டம் புறப்பட்டிருக்கிறது.

இந்த வரவு செலவுத் திட்டத்திலே மருத்துவக் கல்லூரியை சேர்ந்த மருத்துவ மனைகளுக்காக ரூ. 220·78 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு புதிய பிரிவுகளை ஆரம்பிப்பதற்கும், நவீனப்படுத்துவதற்கும் முயற்சிகள் எடுத்திருக்கிறார்கள் என்பதை வரவேற்கிறேன்.

மருத்துவ மனைகளை மேம்படுத்த 341·12இலட்சம் ஒதுக்கியிருப்பதை, அந்த மருத்துவமனைகளில் இடவசதியை சமாளிப்பதற்காக, இருக்கிற இட நெருக்கடியை சமாளிப்பதற்காக புதிதாக வசதிகளை செய்வது என்பதை வரவேற்றுப் பேசுகிறேன்.

மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளை மேம்பாடு அடையச் செய்ய 26 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். ஏனோ தெரியவில்லை, சேலம் மாவட்டத் தலைமை மருத்துவமனை

இதிலே புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மாவட்டத் தலைமை மருத்துவமனையை மேம்பாடடையச் செய்வதற்கு துணை மானியக் கோரிக்கையிலாவது எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த தலைமை மருத்துவமனைக்கு ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வட்டத் தலைமை மருத்துவ மனைகளுக்கு, ஒவ்வொரு வட்டத்திலே இருக்கிற தாலுக்கா மருத்துவ மனைகளுக்கு என்று இன்றைக்கு தமிழகம் பூராவும் ரூ. 44 லட்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ராசிபுரம் வட்டத்திலே இருக்கிற ராசிபுரம் தாலுக்கா மருத்துவமனையை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கடந்த 10, 15 நாட்களுக்கு முன்னாலே பார்வையிட்டு எவ்வளவு குறைபாடுகள் இருக்கின்றன, எவ்வளவு சலுகைகள் அளிக்க வேண்டுமென்று அவரே உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு முன்உரிமை கொடுத்து வருகின்ற துணை மானியக் கோரிக்கையிலாவது தொகை ஒதுக்கித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் டானிடா திட்டத்தை இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலேயே இரண்டு மாநிலங்கள் தான் நிறைவேற்றி வருகின்றன. மத்தியப்பிரதேசம் ஒரு மாநிலம். இரண்டாவது மாநிலம் தமிழ்நாடு. இந்த இரண்டு மாநிலங்களும்தான் டானிடா திட்டத்தை நிறைவேற்றி வருகின்றன. முன் கூட்டியே மத்தியப் பிரதேசம் இந்த டானிடா திட்டத்தைத் தொடங்கி, அதற்கான வழிமுறைகளைச் செய்து பணிகளை ஆரம்பித்து விட்டாலும் அதற்குப் பின்னாலே தமிழ் நாட்டில் தொடங்கப்பட்டிருந்தாலும் மத்தியப் பிரதேசத்தைக் காட்டிலும் இந்தத் திட்டத்திலே முன்னோடியாக இருக்கிறது என்று டானிடா நாட்டிலிருந்து வந்த குழு பாராட்டுகின்ற வகையிலே அமைந்திருப்பது உள்ளபடியே தமிழக அரசுக்கும் தமிழக மருத்துவத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும் எங்களைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அது பெருமை அளிக்கக்கூடிய ஒன்று என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு டானிடா திட்டம் செயல்படும் இரண்டு மாவட்டங்களில் ஒன்று சேலம் மாவட்டம், மற்றொன்று தென்னாற்காடு மாவட்டம். இன்றைக்கு இந்த இரண்டு மாவட்டங்களும் மக்கள் நல்வாழ்வைப் பொறுத்த வரையில் தன்னிறைவு அளிக்கும்படி பல்வேறு நல்லத் திட்டங்களை இந்த டானிடா திட்டத்தோடு இணைத்து எங்கள் மாவட்டத்திற்கு அளித்திருப்பதற்காக என்னுடைய மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதைப் படிப்படியாக



மற்ற மாவட்டங்களுக்கும் அமுல்படுத்த இருக்கிறார்கள் என்ற வகையில் இது தமிழக மக்களுக்கு மிகப் பெரிய வரப்பிரசாத மாக அமையும் என்று சொல்லி மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு இந்த மக்கள் நல்வாழ்வுத் திட்டத்தை, இந்த டானிடா திட்டத்தை இந்த ஆண்டு கொண்டுவந்து செயல்படுத்துவது பெரிதும் வரவேற்கத்தக்க ஒன்றாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் இந்த டானிடா திட்டத்தின் மூலம் இரண்டு வட்டார தலைமை மருத்துவமனைகளில் மகப்பேறு வார்டு, அறுவை சிகிச்சைக்கூடம், குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு ஆகியவை களை ஏற்படுத்தப் போவதாகச் கூறியிருக்கிறார்கள். அந்த இரண்டில் ஒன்று சேலம் மாவட்டம், இராசிபுரம் வட்டார மருத்துவமனையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தின்கீழ் இராசிபுரம் வட்டார மருத்துவ மனையைக் கொண்டு வந்து அங்கே ஒரு குழந்தைகள் நோய் மருத்துவ வார்டும், அறுவை சிகிச்சைக்கூடமும், மகப் பேறு வார்டும் அமைத்துத் தர வேண்டுமென்ற் வேண்டுகோளை விடுக்கிறேன்.

அதேமாதிரி பள்ளிச் செல்லும் குழந்தைகளுக்கு தொழுநோய் இருக்கிறதா என்று அறியும்பொருட்டு, பரிசோதனை செய்யும் பொருட்டு தமிழ்நாட்டில் இந்த ஆண்டு மட்டும் 35 இலட்சம் குழந்தைகளுக்கு தொழுநோய் பரிசோதனையை ஆரம்பிக்கும் இந்தத் திட்டம் வரவேற்கத் தக்க திட்டமாகும்.

அதைப் போல தமிழ்நாட்டில் இருக்கிற குழந்தைகளை பெரிதும் பாதிக்கிற நோய் காசநோய். இந்த நோய் குழந்தை களுக்கு இருக்கிறதா என்பதை பரிசோதனை செய்வதற்கும் ஏற்பாடு செய்து, முதல் கட்டமாக 35 இலட்சம் குழந்தைகளை பரிசோதனை செய்து பார்க்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த தொழுநோய் இருக்கிறதா இல்லையா என்று பள்ளி செல்லும் குழந்தைகளை மட்டும் பரிசோதித்துப் பார்க்காமல் பள்ளிக்குச் செல்லாமல் ஆங்காங்கே தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும் குழந்தைகளுக்கும், விவசாயக் குடும்பத்தில் இருக்கிற குழந்தைகளுக்கும், பள்ளி செல்லும் விருப்பம் இல்லாமல் இருக்கிற சிறார்களுக்கும் இந்த பரிசோதனையை விரிவுபடுத்தி, அதற்கு நல்லதொரு திட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று மாண்பு மிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல குடும்ப நலத் திட்டத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்குத் தமிழ்நாடு இந்தியத் துணைக் கண்டத்திற்கே வழி காட்டியாக, முன்னோடியாக இருந்தாலும் சட்டமன்ற உறுப்பி

னர்களும் அரசியல் தலைவர்களும் கலந்து கொள்கின்ற நிகழ்ச் களில் எல்லாம் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைப் பற்றிய பிரச்சாரத்தில் ஈடுபட வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

மக்கள் நல்வாழ்வைப் பொறுத்த மட்டில் ஆரம்பச் சுகாதார நிலையங்களை மேல்நிலைப் படுத்துவதற்கான திட்டத்தை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். 15 ஆரம்பச் சுகாதார நிலையங்களை மேம்படுத்துவதாகக் கூறியிருக்கிறார்கள் அதில் ஒன்றாக எங்களுடைய தொகுதியில் இருக்கிற நாமகிரிப் பேட்டை ஆரம்பச் சுகாதார நிலையத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல 740 ஆரம்பச் சுகாதார நிலையங்களை தமிழ் நாடு முழுவதும் விரிவுபடுத்தியிருக்கின்ற நிலையிலும் 1981-82 ஆம் ஆண்டிலே இங்கே பல்வேறு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டாலும் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம்கூட ஆரம்பிப்பதாக உத்தேசம் இல்லை என்று தெரிகிறது. இது வருந்தத்தக்கது. ஆனால் அதே நேரத்தில் இருக்கிற மருத்துவமனைகளை மேம்பா டடையச் செய்யவும், ஆரம்பச் சுகாதார நிலையங்களில் சிகிச்சை முறைகளை விஸ்தரிக்க செய்யவும் மேற்கொண்டிருக்கிற முயற்சி பாராட்டத்தக்க ஒன்று.

மேலும் மருத்துவக் கல்லூரி மாணவர்களைப் பொறுத்த வரையில் எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் சொன்னதைப்போல பல்வேறு சலுகை களை அவர்களுக்கு அளிக்க வேண்டும். தமிழ்நாடு முழுவதும் ஆயிரம் பேர்களுக்கு ஒரு படுக்கை என்ற அடிப்படையில் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து, இருக்கிற மருத்துவமனைகளில் அதிகமான படுக்கை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

[இரவு 6.40]

அடுத்து மருத்துவமனைகளிலே இருக்கின்ற பல்வேறு குறைபாடுகளை நீக்குவதற்கும் பல்வேறு பணிகளைச் செய்து முடிப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*திருமதி நா இராசாம்பாள் : மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே மருத்துவத்துறை மானியத்தின்மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூறுவதற்கு முன் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்தப் புத்தகங்களை முழுமையாக படித்துப் பார்த்தபோது சேலத்திற்காக ஏதாவது அறிவிப்பு





இருக்குமா என்று பார்த்தேன். ஆனால் எதுவுமே காணப்பட வில்லை.........(குறுக்கீடு)........சேலம் மாவட்டத்திலே மருத்துவத்துறையினை மேம்பாடு செய்வதற்கான எந்தவிதமான திட்டங்களும் இல்லை. அங்கே செவிலியர்களுக்கான பயிற்சி நடந்து கொண்டிருந்தது. அங்கே எந்தவிதமான புது அறிவிப்பு களும் இல்லாத நிலையில் இருக்கின்ற நிலைமைகளை வைத்தாவது ஓரளவுக்கு திருப்திஅடையலாம் என்றால் உள்ள அந்தப் பயிற்சியை யும் ஏன் எடுத்து விட்டார்கள் என்பது தெரியவில்லை. ஆகவே இது ஒரு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு எடுக்கப்பட்ட காரியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்குக் காரணம் அங்கே இடவசதி இல்லை என்று கூறப்பட்டிருக்கின்றது.

பல மருத்துவமனைகளிலே, அரசு மருத்துவமனைகளிலேயும் மற்ற மருத்துவமனைகளிலேயும் நிறைய இடங்களை அதிகப் படுத்தி அதற்கான செலவுகளையும் அதிகப்படுத்தி உள்ளபோது சேலத்திற்காக எந்தவிதமான அறிவிப்பும் இதிலே கொடுக்கப்பட வில்லை. நீண்ட நாட்களாக சேலத்திற்கு மருத்துவக் கல்லூரி வேண்டும் என்ற கோரிக்கை இருந்து வருகின்றது. அதுவும் இங்கே கொடுக்கப்படவில்லை.

கிராமப்புறங்களில் உள்ள மக்களின் நன்மையினைக் கருதி அந்தப் பகுதியிலே ஒரு மருத்துவக் கல்லூரி ஒன்றை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஆத்தூரில் தாலூக்கா மருத்துவமனை அமைந்துள்ளது. அங்கே படுக்கை வசதிகள் அதிகமாக இல்லை. 120 படுக்கைகள் தான் உள்ளன. அங்கே படுக்கைகள் 120 இருந்தாலும் 500க்கு மேற்பட்டவர்கள் அட்மிட் செய்யப்படுவதன் காரணத்தால் அங்கே சுகாதாரம் கடைப்பிடிக்க முடியவில்லை. சுத்தமும் கடைப்பிடிக்க முடியவில்லை. அது மட்டுமல்ல. அங்கே தண்ணீர் பற்றாக் குறை இருப்பதால் அது மருத்துவமனையா அல்லது வேறு ஏதாவது இடத்திற்கு வந்து விட்டோமா என்று எண்ணக் கூடிய சூழ்நிலை ஏற்படுகின்றது. அப்படிப்பட்ட ஒரு துர்நாற்றத்திற்கு ஆளாக வேண்டிய சூழ்நிலை இருப்பதால் அந்த ஆத்தூர் மருத்துவமனையை விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று பெத்தநாயக்கன்பாளையத்திலே நீண்ட நாட்களாக அரசு மருத்துவமனையாக எடுத்துக் கொண்ட போதிலும் கூட இதுவரை கட்டிடங்கள் கட்டப்படவில்லை. அப்படிக் கட்டிடம் இல்லாத சூழ்நிலையிலே அங்கே மருத்துவ மனை நல்ல முறையிலே மக்களுக்குப் பயன்படும் வகையிலே இயங்க முடியாத சூழ்நிலை இருக்கின்றது.

தலைவாசலிலே ஆரம்பச் சுகாதார நிலையம் இருக்கின்றது. இதுபற்றிப் பல நேரங்களிலே நான் சுட்டிக் காட்டினேன். அந்தப் பகுதியிலே நல்ல மருத்துவமனை இல்லாத சூழ்நிலையில் தலை

வாசல் ஆரம்ப சுகாதார நிலையம் நல்ல தண்ணீர் வசதியும், இட வசதியும் உள்ள இடமாக இருப்பதால் அதனை அதிகப் படியான படுக்கைகள் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையமாக மேம்படுத்திக் கொடுக்கும்மாறு கேட்டுக் கொண்டிருந்தேன். அது பற்றிக்கூட இதிலே இடம் பெறவில்லை. வட பகுதியிலே உள்ள மலைவாழ் மக்கள் அனைவரும் நீண்ட தூரம் வந்து சிகிச்சை பெற வேண்டிய சூழ்நிலை இருப்பதாலும் குறிப்பாகப் பெண்கள் பேறு காலத்திற்காக அங்கே வருகின்றபோது குழந்தை பிறந்தவுடன் அவர்கள பஸ்ஸிலோ, காரிலோ செல்ல வேண்டிய நிலைமை இருப்பதாலும் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படியாக்கி வசதிகள் உள்ள ஆரம்ப சுகாதார நிலையமாக அதை மாற்றி யமைக்க வேண்டும். இந்த ஆண்டு பட்ஜெட்டிலே இல்லை என்றாலும் கூட துணை மானியக் கோரிக்கையிலேயாவது அதைக் கண்டிப்பாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று அந்தப் பகுதியின் மக்களின் சார்பிலே நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு, இவ்வாண்டு நீண்ட நாட்களாக, 1952 ஆம் ஆண்டிலே இருந்து வைக்கப்பட்ட கோரிக்கைகளின்மீது வீரகனூரில் அரசு மருத்துவமனை ஏற்படுத்தியிருப்பதற்காக இந்த அரசுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில், அந்த மருத்துவமனைக்கு கட்டிடம் இல்லாமல், ஒரே ஒரு டாக்டர் தான் பணியாற்றிக் கொண்டியிருக்கிறார்கள். ஏறத்தாழ 200க்கு மேற்பட்ட கேஸ்கள் அங்கே வருவதால், அவருக்கு உதவியாக ஒரு பெண் டாக்டரை அங்கே அமர்த்துமாறு கேட்டுக் கொள்கிறேன். கங்கைவள்ளியிலே இப்போது பணிபுரிய டாக்டர்கள் வருவதில்லை. இதைப்பற்றிக்கூட சட்டமன்றத்திலே பேசப்பட்டது. அதேபோல், வீரகனூர் அரசு மருத்துவமனை துவக்கப்பட்டு. பல இடங்களில் குறிப்பாக ராசீபுரம், ஆத்தூர் போன்ற பகுதிகளிலே இருந்து டாக்டர் போடப்பட்டும், அங்கே வந்து சேராத ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. குறிப்பாக நாமக்கல், மருத்துவ மனையில் 17 டாக்டர்களும் ஒரே இடத்தில் குவிக்கப்பட்டிருப்பதாகக் கேள்வி. ஆத்தூரிலே டாக்டர் இல்லை. ஒரே இடத்தில் டாக்டர்கள் குவிக்கப்பட்டு, மற்றோரு இடத்திலே டாக்டர் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அப்படியிருக்கும்போது, திருச்சியிலே இருந்து ஒரு டாக்டர் தன்னுடைய மனைவி சேலத்திற்கு அப்பால், 50 மைல் தொலைவில் பணி புரிந்த கொண்டிருக்கின்ற சூழ்நிலையில், வீரகனூரில் பணி புரிய முன் வந்தார். ஆனால், அவர் கேட்பதெல்லாம் அவருடைய மனைவியை கங்கைவள்ளிக்கு மாற்ற வேண்டும் என்பது தான். இதுநாள் வரையில் அந்த மாறுதல் கொடுக்கப்படவில்லை. அதைக் கண்டிப்பாக கொடுக்க வேண்டும். கணவனும் மனைவியும் ஒரே இடத்தில் பணி புரிய உதவ வேண்டும் என்ற அரசு உத்தரவுக்கு ஏற்ப, இந்த மாற்றத்தைச் செய்ய வேண்டும். கிராமப்புற பகுதியிலே பணியாற்ற முன்வந்திருக்கும் அந்த டாக்டருக்கு இதிலே தயக்கம் காட்டக் கூடாது.



அதோடு, தம்மம்பட்டியில் நீண்ட நாட்களாக தோட்டி போடாத காரணத்தினால், பச்சைமலையிலே இருக்கின்ற மலைவாழ் மக்கள் யாராவது சந்தேகப்படும்படி இறந்துவிட்டால், அந்தச் சவத்தை பரிசோதிக்க நீண்ட தூரத்திற்கு ஆத்தூருக்கு எடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. முப்பத்தைந்து மைல்களுக்கு அப்பால் உள்ள ஆத்தூருக்கு கொண்டு போக வேண்டிய அவல நிலைமை இருக்கிறது. ஆகவே, தம்மம்பட்டி மருத்துவமனையில் ஒரு தோட்டியை போடுவதோடு, இன்ஃபேஷண்ட். அவுட்-பேஷண்ட் தனித் தனியாகக் கட்டிடங்கள் இல்லை. அதே போன்று ஏற்கனவே நான் இந்த மன்றத்திலே பேசும்போது, டாக்டர்கள் பதவி சர்வீஸ் கமிஷன் மூலம் தேர்வு பெற்று,அவர்கள் எந்த இடத்திற்கு போடப்படுகிறார்களோ, அங்கே போய்ச் சேருவதில்லை. தங்களுக்குக் தேவையானவர்கள் மூலம், அரசிடம் அணுகி, தங்களுக்குத் தேவையான இடத்தில் அவர்கள் பெற்றுக் கொண்டு விடுகிறார்கள். அந்த இடத்திலே அவர்கள் பணியாற்றக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, சர்வீஸ் கமிஷன் மூலம் தேர்வு பெற்று, சேராதவர்களை மீண்டும் பணியில் எடுத்துக் கொள்ளக் கூடாது என்ற உத்தரவைப் பிறப்பித்து, உண்மையிலேயே எம்.பி.,பி.எஸ். பட்டம் பெற்று, வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு இந்த இடங்களிலே யார் வர விரும்புகிறார்களோ. அவர்களுக்கு அந்த இடத்திலே வேலை கொடுக்க வேண்டும். அந்த முறையிலே அவர்களுக்கு உடனடியாக வேலை வாய்ப்பைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்று சொன்னால், லட்சக் கணக்கான தொகையைப் போட்டு, இந்த டாக்டர்களை உற்பத்தி செய்து, அவர்களுக்கு வேலையில்லாத சூழ்நிலையை ஏற்படுத்தி விட்டு, அங்கேயுள்ள மருத்துவமனைகளில் டாக்டர்கள் இல்லாமல் இருந்தால், மக்களுக்கு மருத்துவ உதவி புரிய முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதைக் கவனிக்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இப்போது கிராமங்களில் மருத்துவ உதவியாளர் இருக்கிறார்கள். அவர்கள் ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கும், இங்கே அரசு மருத்துவமனையிலே உள்ள மருத்துவர்களுக்கும் இடையே இருப்பதால், தங்களுடைய பணிகளைச் சரிவர செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. அவர்களுக்கு கிடைக்க வேண்டிய யூனிபாரம் அலவன்சு, தோபி அலவன்சு மற்றவைகள் சரியான முறையில் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. அவர் களை அரசு ஊழியர்களாக எடுத்து, அவர்களுடைய பணியைச் சீராக்க ஆவன செய்ய வேண்டும். அதேபோன்று, திருவாச்சூரில் கிராமிய மருத்துவமனை கட்டப்பட்டிருக்கிறது. நீண்ட நாட்கள் ஆகியும் அங்கே டாக்டர் இதுவரை போடப்படவில்லை. ஆனால், பட்ஜெட்டில் அதற்கான தொகை ஒதுக்கப்பட்டு, செலவு செய்யப்பட்டிருப்பதாக கணக்கில் இருக்கிறதே தவிர, [illegible] அங்குள்ள மக்களுக்குக் கிடைக்கவில்லை

அதேபோன்று தன்னிறைவுத் திட்டத்தில் கிராமப்புறங்களில் கக்கூஸ்கள் கட்டி இருப்பதாக கணக்கு காட்டியிருக்கிறார்கள். அந்தக் கக்கூஸ்களை இதுவரை பயன்படுத்தவில்லை. இனியும் பயன்படுத்த முடியாது. ஏனென்றால் அங்கே தண்ணீர் பஞ்சத்தால் அவற்றை சரியான முறையில் பயன்படுத்த முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அந்தத் தொகைகள் அனைத்தும் வீணாக்கப்பட்ட சூழ்நிலை இருக்கிறது.

அடுத்து, கிராமங்களில் மட்டுமல்லாது, பேரூராட்சிகள், நகராட்சிகள், ஏன் சென்னை நகரில் கூட பள்ளிக்கூடங்களுக்கு எதிரிலேயே ஐஸ்க்ரீம் போன்ற இனிப்பான பலகாரங்களை விற்று வருவதால் பள்ளிக் குழந்தைகள் அவற்றை வாங்கி தின்றுவிட்டு பல் ஈறு கெடுதல், சொத்தை ஆதல் வாந்தி பேதி போன்ற வியாதிகளால் தாக்கப்படும் சூழ்நிலை இருக்கிறது. இதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, எம்.எஸ். படிப்பிற்கான காலத்தை இரண்டு ஆண்டுகள் என்பதை மூன்று ஆண்டுகள் என்று செய்திருப்பதால் அந்த ஓராண்டுக்கும் கூட உதவித் தொகை வழங்கப்படவேண்டும்.

மின்சாரம் வராத காலத்தில் அறுவைச் சிகிச்சை தடைபடுவதால் எல்லா அரசு மருத்துவமனைகளிலும் ஜெனரேட்டர்கள் வசதி செய்து கொடுக்கவேண்டும்.

இந்த மானியக் கோரிக்கையைப் பார்க்கும்போது என் தொகுதிக்கு, சேலத்திற்கு, ஆத்தூர் தாலுகாவிற்கு ஒருவித கண்ஸிடரேஷனும் இல்லாத வகையில் சூழ்நிலை இருப்பதைப் பார்க்கும்போது மிகவும் வேதனையாக இருக்கிறது. நம்முடைய சுகாதார அமைச்சர் அவர்களை எல்லோரும் புகழ்கிறார்கள். என்ன காரணத்தாலோ பெண் தொகுதியாகிய என் தொகுதியில் சுகாதாரம் நல்லமுறையில் இல்லை என்ற கேள்வியை எழுப்பக்கூடிய விதத்தில் ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கிறார். ஆகவே அடுத்து வரும் துணை மானியத்திலாவது நான் கூறியுள்ள குறைகளை நிவர்த்தி செய்யவேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

[இரவு 6 50]

**திரு. ஜே.சி.டி. பிரபாகரன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, Pom ti n f he lt is b sic t n ti n l progress என்கிற மையக் கருத்தை அடிப்படையாக வைத்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிற மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பங்கேற்க எனக்கு தரப்பட்டிருக்கிற நல்ல வாய்ப்புக்கு எனது நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். பிறப்பதைத் தடுப்பது என்பதும் பிறந்திருக்கிற குழந்தைகளுக்காக நல்வாழ்வுத் திட்டங்களை அளிப்பது என்பதும் குறிப்பாக வளருகிற நாட்டு மக்களுடைய தலையாய பிரச்னையாக இருந்து கொண் றது. இந்தியத்





துணைக் கண்டம் போன்ற கிராமப்பொருளாதாரத்தை நம்பிக் கொண்டிருக்கிற அல்லது மூன்றாம் உலக நாடுகளின் வரிசையில் நின்றுகொண்டிருக்கிற நமக்கு இருக்கிற முக்கிய பிரச்சனை இந்தியத் துணைக் கண்டம் விடுதலை பெற்ற நாளிலிருந்து இன்றுவரை நாம் போட்டிருக்கிற திட்டங்கள் அனைத்தும் உரிய முறையில் கிராமப்புறங்களுக்கு போய்ச் சேரவில்லை என்ற பெரும் மனக்குறை நமக்கெல்லாம் இருந்து கொண்டிருக்கிறது. கிராமப்புறங்களை நம்பித்தான் நம் பொருளாதாரம் இருக்கிறது. ஆகவே கிராமப்புறங்களில் உள்ள, வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்ந்து கொண்டிருக்கிற 80% மக்களுக்கு உரிய உத்தரவாதம் அளிக்கின்ற ஒரு கோரிக்கையாக ஒரு விஞ்ஞான கண்ணோட்டத்தோடு அமைந்திருக்கிற கோரிக்கையாக தொலைநோக்குப் பார்வையோடு அமைந்திருக்கிற கோரிக்கையாக கொள்கை விளக்கக் குறிப்புகளில் அத்தனையும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

"Economic growth, without being specifically attured to human needs and hum n realizations, is no worth very much. Once more you hear everywhere people speaking about nuclear energy, oil energy, solar energy, wind energy, and everybody seems to be overlooking the fact that without *human energy*, there would be no kind of progress either socially or economically."

என்கின்ற அந்தக் குறிப்புகளை நெஞ்சத்தில் தாங்கி நல்வாழ்வுத் திட்டங்களை இந்த அரசு பொறுப்போடு தீட்டி வருகிறது என்பதோடு கிராமப்புறங்களில் இருக்கிற அத்தனை மக்களும் இன்றைக்கு நல்லமுறையில் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களின் பயனைப் பெறக்கூடிய வாய்ப்புகளை உருவாக்கியிருப்பதை இந்த கொள்கை விளக்கக்குறிப்புகள் விளக்கமாக இன்றைக்கு எடுத்துக்காட்டுகிறது.

20 விழுக்காடு மருத்துவர்கள்தான், 80 விழுக்காடு கிராமப்புறங்களிலே உள்ள மக்களுக்கு கிடைக்கக்கூடிய வாய்ப்புகளும், வசதிகளும் இருக்கிறது. 80 விழுக்காடு மக்கள் வாழக்கூடிய கிராமப்புறங்களில், 20 விழுக்காடு மருந்துகள் மருத்துவக் கருவிகள், மருத்துவர்கள், மருத்துவ மனைகள் முதலிய வசதிகள் கிடைக்கின்றதே என்ற ஆதங்கம் நமக்கு நீண்டகாலமாக இருந்து வந்திருக்கிறது. இதை மாற்றியமைக்கின்ற வகையில் நல்வாழ்வுத் திட்டங்களைத் தீட்டி புதிய மருத்துவமனைகள் மூலம் இன்றைக்கு மருந்துகள் வழங்குகின்ற நிலைமையைப் பார்க்கின்றபோது, இந்திய துணைக் கண்டத்திற்கு முழுவதற்கும் ஒரு மாதிரி மாநிலமாக, நாம் எடுத்து வைக்கின்ற திட்டங்களிலே விளங்குகின்றோம். ஒரு உதாரணத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பிறக்கின்ற குழந்தைகளுக்கு சுகாதார பாதுகாப்பு முறைகளைச் சேர்த்து சிறந்த முறையில் கொடுக்கிறோம். அந்த வகையில், இந்தியாவில் நம் தமிழகம் இன்றைக்கு முன் நிற்

கிறது. 100 குழந்தைகள் பிறக்கின்றது என்று சொன்னால்
அதிலே தமிழகத்திலே பிறக்கின்ற குழந்தைகளில் 23 குழந்தை
களுக்கு சுகாதார முறையில் பாதுகாப்பு கொடுக்கப்படுகிறது.
இதை நாம் தொடர்ந்து அளித்து வந்திருக்கிறோம். பக்கத்திலே
இருக்கின்ற ஆந்திராவிலே, 100 குழந்தைகளுக்கு 10 குழந்தை
களும், கர்நாடக மாநிலத்திலே 17 குழந்தைகளும், மத்திய
பிரதேசத்திலே 2 குழந்தைகளும், உத்தரப் பிரதேசத்திலே
7 குழந்தைகளும், குஜராத்திலே 6 குழந்தைகளும், மகாராஷ்டி
ராவிலே 7 குழந்தைகளும், ராஜஸ்தானிலே 5 குழந்தைகளும்
தான் சுகாதார பாதுகாப்பு முறையைப் பெற்று வருகின்றது.
அதேபோல், குழந்தைகளின் இறப்பை எடுத்துக் கொண்டாலும்
தேசிய அளவிலே குறியீட்டை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, நமது
குறியீட்டு அளவு 1000-க்கு 112ஆக இருந்த நிலைமையைக்
காட்டிலும், நமது குறிக்கோள் 1000-க்கு 98ஆக குழந்தைகளின்
இறப்பை நாய குறைக்க முடிந்திருக்கிறது.

குழந்தை பிறப்பைத் தடுப்பதில் ஓரளவு நாம் முன்நிற்கி
போது, பிறந்த குழந்தைகளை வாழ்வாங்கு வாழ்வதற்கு உத்தி
வாதம் அளிக்கின்ற அடிப்படைத் திட்டத்தைத் தான் நமது
இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் நிதி நிலை அறிக்
கையிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். 100 கோடி
ரூபாய் அளவில் பிள்ளைகளுக்கு சத்துணவு வழங்கும் திட்டத்தை
அறிவித்தார்கள். இந்த 100 கோடி சத்துணவு வழங்கும் திட்
டம், மருத்துவ துறையிலே பின்னர் பிணைந்திருக்கிற திட்டமாக
இருந்திருக்கிறது. இலக்கியத்திலே இருக்கின்ற ஒரு சுவையான
நிகழ்ச்சி என் நினைவுக்கு வருகிறது. அங்கே புலவர் சொல்லு
கிறார், மன்னனைப் பார்த்து, நீ பசிப் பிணியைத் தீர்த்து விட்
டாய் என்று, மனிதனுக்கு அடிப்படைத் தேவையாக இருப்பது
இரண்டு, ஒன்று சோறு, மற்றொன்று நீரு, இந்த சோறையும்,
நீரையும் அளிக்கின்ற காரணத்தினால், காவிரி பாயக்கூடிய சோழ
நாட்டுக்கும், பொன்னி நாட்டுக்கும், கிள்ளி வளவன் பசிப்
பிணியைத் தீர்த்தான் என்பதற்கு—

"இருமருந்து விளைக்கும் நம் நாட்டு பொருண நீ வாழ்க"
என்று பாடினார். ஆனால், அன்றைக்கு அந்நாட்டை ஆண்ட
கிள்ளிவளவன் சோழ நாட்டுக்கும், பொன்னி நாட்டுக்கும் அடிப்
படைத் தேவையான சத்துணவை அளித்த நிலைமைகளை
இலக்கியத்திலே காண்கிறோம். ஆனால், இங்கே புரட்சித்
தலைவர் அவர்கள் அந்த மன்னனையும் மிஞ்சக்கூடிய மன்னாதி
மன்னனாக, புரட்சித் தலைவர் அவர்கள் தந்திருக்கிற
இந்த திட்டம், இருக்கிறதே பொன்னி நாட்டுக்கும்,
சோழ நாட்டுக்கும் மட்டுமல்ல, தமிழகம் முழுவதிலும்
இருக்கின்ற ஏழைப் பிள்ளைகளுக்கு, ஒட்டிய வயிரும்,
இடுங்கிய கண்களும் உடைய, பள்ளியிலே படிக்கின்ற
பிள்ளைகளுக்கு, இந்த சத்துணவு அளிக்கும் திட்டத்தை,
மருத்துவத் துறையும், மக்கள் நல்வாழ்வுத் துறையும் சேர்ந்து
இயங்கக்கூடிய ஒரு திட்டமாக அமைந்திருக்கிறது. அதையொட்
டித் தான், பள்ளிக்கூடங்களுக்குப் போகின்ற அந்தப் பிள்ளை



களுக்கு பள்ளிக்கு வருகின்றபோது, என்ன நோய் என்பதைத்
தெரிந்து, கிராமப்புறங்களிலே இருக்கின்ற பெற்றோர்களுக்கு ஒரு
இனிப்பு செய்தியாக. பள்ளிகளுக்கு வருகின்ற பிள்ளைகளுக்கு
மெடிகல் செக்-அப் செய்யக்கூடிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி,
அதற்குரிய முறையில் குறிப்பேடுகளில் தரக்கூடிய வாய்ப்புக்
களை நாம் இன்றைக்குத தந்திருக்கிறோம். அதைக் கண்டு நான்
உள்ளபடியே பெருமகிழ்ச்சி அடைகிறேன். பிற்பட்ட வகுப்பினர்
களுக்கு வழங்கப்படுகின்ற இந்தத் திட்டத்தைப் பற்றி பலர்
பல்வேறாகப் பேசினாலும், அடிப்படை அத்தியாவசியமான
தேவைகளை தரக்கூடிய முறையில் இன்றைக்கு ஏறத்தாழ 35
விழுக்காடுகள் பயன்பெறக்கூடிய நல்ல திட்டமாக இது அமைந்
திருப்பதைக் கண்டு உள்ளபடியே நாங்கள் பெருமிதம் கொள்
கிறோம்.

வந்த வியாதிக்கு சிகிச்சை அளிப்பது ஒருபுறம் இருக்க, வர
ருக்கும் நோய்களைத் தடுப்பதில் நாம் எடுத்துக் கொண்டிருக்
ற அக்கறையைச் சுட்டிக்காட்ட வேண்டும். குறிப்பாக, மூளைச்
ாய்ச்சல் நோய் 569 பேர்களை தாக்கியபோது, 101 இறப்
புகள் முன்னே நேர்ந்திருக்கிறது, மாறாக இந்த ஆண்டு குறிப்
பில், 218 பேர்கள் மூளைக் காய்ச்சலால் தாக்கப்பட்டு, 88 இறப்
பாக குறைக்கப்பட்டிருக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.
அதிலும் குறிப்பாக, பெருவாரியாக தென் மாநிலங்களில் தாக்கி
யிருக்கின்ற அந்த மூளைக் காய்ச்சல் நோய் இன்றைக்கு அறவே
அகற்றக்கூடிய அளவிற்கு, புதிய நவீன முறையில் தடுக்கின்ற
நிலைமைகளை நாம் உருவாக்கி இருக்கிறோம்.

(இரவு 7–00)

மாநிலத்தில் நெடுஞ்சாலைகளில் மருத்துவ மனைகள் அமைப்
பதன் மூலமாக நெடுஞ்சாலைகளில் ஏற்படும் விபத்துக்களில்
பாதிக்கப்படுபவர்களை உடனடியாக ஆம்புலன்ஸ் மூலமாக
மருத்துவ மனைகளுக்கு எடுத்துச் செல்வதற்கு ஒரு வாய்ப்புகள்
ஏற்படுத்தியிருப்பது, இந்திய துணைக்கண்டத்திலே இருக்கிற அத்
தனை மாநில அரசுகளும் இதை பின்பற்ற வேண்டுமென்று
குறிப்பு அனுப்புகிற வகையில் சிறப்பான திட்டம். சென்னை
மருத்துவக் கல்லூரியை உள்ளடக்கி இருக்கிற அரசு பொது
மருத்துவமனையில் அதை ஒரு பி.ஜி. இன்ஸ்டிட்யூட்டாக மாற்று
கிற நிலைமையும், ரிசர்ச் ஓரியன்ட்டட் ஆக மாற்றுகிற
நிலைமையும் வரவிருக்கிற இந்த குறிப்புகள் மகிழ்ச்சி அளிக்
கிறது. பொது மருத்துவ மனையிலே இன்றைக்கு சேரு
கிறவர்களுக்கு வருமானம் 300 ரூபாயாக இருக்கிறது. இது
சாதாரண மனிதன் கூட ஈட்டக்கூடிய ஒரு தொகையாக இருப்
பதால், குறைந்தபட்சம் 600 ரூபாயாக மாற்றியமைப்பது
பொருத்தமாக இருக்குமென்ற என்னுடைய கருத்தினை பணி
வோடு உங்கள் முன்பாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மருத்துவக் கல்லூரிகளிலே படிக்கின்ற மாணவர்களை மருத்துவ மனையிலே அனுமதிக்கப்படுகின்றபோது அவர்களின் பெற்றோர்களின் மாத வருமானத்தை தெரிந்து கொண்டு தான் அனுமதிக்கிற முறை இருக்கிறது. அதை மாற்றி அந்த மாணவர்கள் அவ்வாறு அனுமதிக்கப்படுவதை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசு பொது மருத்துவமனைகளைப் பொறுத்தவரையில் சாதாரண நோய்களுக்கு கூட அங்கே போகிற நிலைமைகள் இருக்கின்றன. அதை மாற்றியமைத்து பெரிபரல் ஆஸ்பத்திரிகள் புறநகரங்களில் அமைப்பதன் காரணமாக அவர்களிடமிருந்து ரெபரன்ஸ் வந்ததற்கு பிறகே சிகிச்சை அளிக்கக்கூடிய நிலை இருக்குமானால் அது முறையாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) சீக்கிரத்தில் முடித்து விடுகிறேன். ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். இன்றைக்கு எல்லா நவீன கருவிகளும் வைத்திருக்கிறார்கள். தமிழகத்தை பொறுத்தவரையில் நான்கு பிரிவுகளாக பிரித்து, அங்கு சென்னை அரசு பொது மருத்துவமனையில் இருக்கிற அத்தனை கருவிளும் அங்கு இருக்குமானால் புரட்சித்தலைவர் அவர்கள் ஸ்கேனர் என்ற கருவியை மதுரைக்கு வழங்கியிருக்கிறார்கள் —ஆங்காங்கு இருக்கிற கிராமப்புற மக்கள் அதிலே பயன்படக் கூடிய நிலைமைகள் ஏற்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

**திருமதி. ஏ எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மானியக்கோரிக்கையில் என்னுடைய கருத்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த துறையிலே நிபுணத்துவம் இருக்கிற காரணத்தால் மக்களுக்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அத்தனையும் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த பல்கலைக்கழகம் ஆரம்பிக்க இருப்பது மிகவும் பாராட்டப்படக் கூடிய ஒன்றாகும். சாலை விபத்தில் பாதிக்கப்படுபவர்களுக்கு உடனடியாக மருத்துவ பரிசோதனை செய்கிற திட்டம் இன்றைக்கு இருக்கிறது.

ஒரு மருந்தை குடித்து விட்டாலோ, அல்லது சாலை விபத்தில் இறந்தவர்களோ போஸ்ட் மார்ட்டத்திற்கு அனுப்பப்பட்டால், மாலை 6 மணி ஆகிவிடுமேயானால் அந்த டாக்டர்கள் 6 மணிக்கு மேல் போஸ்ட் மார்ட்டம் செய்ய முடியாது என்று சொல்கிறார்கள். ஏன் என்று கேட்டால் மெடிக்கல் கோட் சட்டம் அப்படியிருக்கிறது என்று சொல்கிறார்கள். எப்போதோ வெள்ளைகாரன் காலத்தில் போடப்பட்ட சட்டம், இப்போது எல்லா இடங்களிலும் மின்சாரம் இருக்கிற நிலைமை இருக்கிறது அந்த சூழ்நிலையில் 8 மணியாக இருந்தாலும், 10 ஆனாலும் பிணங்களை போஸ்ட் மார்ட்டம் செய்து கொடுக்கிற வகையில் சட்டத்தை மாற்றிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





1400 டாக்டர்களை நாம் தேர்வு செய்து அவர்களை கிராமப் புறங்களுக்கு அனுப்புகிறபோது அவர்கள் செல்ல மறுக்கிறார்கள். கிராமப் புறங்களிலே உள்ள ஆஸ்பத்திரிகளிலே குடியிருக்க வீடுகள் கிடையாது. போதுமான தண்ணீர் வசதியும் இல்லை. ஆகவே, கிராமப்புறங்களிலே சென்று பணியாற்றக்கூடிய டாக்டர்கள்—எப்படி ஆஸ்பத்திரி கட்டுகிறோமோ அதைப்போன்று அவர்களுக்கும்—குடியிருப்புக்களைச் செய்து கொடுத்தால் அவர்கள் அங்கே சென்று வைத்திய வசதி செய்வதற்கு சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நகரங்களிலே பணிபுரிகின்ற டாக்டர்களுக்கு நகர ஈட்டுப்படி கொடுக்கப்படுகிறது. அதைப்போன்று கிராமப்புறங்களிலே பணியாற்றுகின்ற டாக்டர்களுக்கும் கிராம ஈட்டுப்படி என்று அரை மாத சம்பளத்தைக் கொடுத்தால் பல டாக்டர்கள் போய் பணியாற்றுவதற்கு வாய்ப்பாக இருக்கும். அது மட்டுமல்ல 5 ஆண்டுகள் கிராமப்புறங்களிலேயே பணியாற்றிய டாக்டர்களுக்கு அவர்கள் மேல் பட்டப்படிப்புக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்ற முறையைக் கொண்டு வந்தால் கிராமப்புறங்களிலே டாக்டர்கள் போய் பணியாற்றுவதற்கு ஊக்கம் கொடுப்பதாக அமையும்.

பேமிலி பிளானிங், காச நோய், தொழு நோய் இவற்றிற்கான சிகிச்சைப்பிரிவுகள் தாலூகா மருத்துவ மனைகளிலே இருக்க வேண்டும். இந்த மூன்று விதமான நோய்களுக்கு சிகிச்சைக்காக ''சென்டம்''பணம் மைய அரசு கொடுக்கிறது. அந்தப்பணத்தைப்பெற்று தாலூகா மருத்துவ மனைகளிலே பேமிலி பிளானிங் ஆப்பரேஷனுக்கு 30 பெட்கள், அதைப்போன்று காச நோய் கிசிச்சைக்காக ஒரு 10 பெட்கள், அதைப்போலவே தொழு நோய் சிகிச்சைக்காக ஒரு 10 பெட்கள் என்று கொடுக்கக்கூடிய முறையிலே ஏற்பாடுகளைச் செய்வது சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். லெப்ரசிக்காக 59 கன்ட்ரோல் சென்டர்கள் இருப்பதாகத் தெரிகிறது. அங்கே பெட் வசதிகள் கிடையாது. ஏதோ மருந்துகளைக் கொடுக்கிறோம். அப்படியில்லாமல் ஒவ்வொரு இடத்திற்கும் 10, 10 பெட்கள் கொடுக்க வேண்டும். அதைத் தவிர தொழு நோய் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை யூனியன் வாரியாக சர்வே செய்து பார்த்து அங்கேயெல்லாம் ரிடையரான டி.எம்.ஓ. டாக்டர்கள் இவர்களைப் போட்டால் நல்ல முறையிலே செயல்படும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

அடுத்து இந்த வாலண்டரி இன்ஸ்டிட்யூஷன்ஸ் இருக்கின்றன. என்னுடைய தொகுதியிலே அப்படி நிறுவனம் ஒன்று இருக்கிறது. தனக்கு ஒரு புண் வந்துவிட்டால் எப்படி துடைத்து சீழை எடுப்பார்களோ அதைப்போன்று அங்கே மற்றவர்களுக்கு சிகிச்சை நல்ல முறையிலே செய்கிறார்கள். அவைகளை எல்லாம் ஊக்குவிக்கவேண்டும். உள் நோயாளிகளுக்கு 25 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அது போதாது. மகாராட்டிர மாநிலம் போன்று

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1982 மார்ச் 11

75 ரூபாய் மத்திய அரசிடம் கேட்டு வாங்கிக் கொடுக்கவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலும் நிலக்கோட்டையிலே உள்ள ஆஸ்பத்திரிக்கு டாக்டர்களுக்கு குடியிருப்புகள் இல்லை. அவர்களுக்கு குவார்ட்டர்ஸ் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். டாக்டர்கள் இல்லாத காரணத்தினால் மருத்துவ வசதிகள் மக்களுக்குக் கிடைக்கவில்லை. வத்தலகுண்டில் மருத்துவ வசதிகளைப் பெறக்கூடிய முறையிலே ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமேன்று கேட்டுக்கொள்கிறேன்.

மெடிக்கல் கல்லூரிகளில் ஒவ்வொன்றிலும் இன்றைக்கு விலை மதிப்பு உயர்ந்த வேன்கள் இருக்கின்றன. உள்ளேயே ஆப்பரேஷன் வசதியுள்ள அந்த வேன்கள் இன்றைக்கு 3 வேன்கள் ஐடிலாக இருக்கின்றன. அவைகள் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன. அவைகள் வெளியே சென்று புற நோயாளிகளுக்கு மருத்துவ வசதி அளிக்கக்கூடிய முறையிலே அவைகளிலே டாக்டர்களை நியமித்து மக்கள் மருத்துவ வசதிகளைப் பெறுவதற்கான ஏற்பாடுகளை உடனடியாகச் செய்யவேண்டுமென்று அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுகொள்கிறேன். கடைசியாக மட்டப்பாறை ஆஸ்பத்திரியிலே மருத்துவ வசதிகளை மக்கள் பெறுகின்ற முறையிலே போதுமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

இரவு 7 10

*திரு. பி. எஸ். துரைசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக இந்த மன்றத்திற்கு நன்றி செலுத்தி, இப்பொழுது காலம் கடந்து விட்டதால் சில முக்கியமான கோரிக்கைகளை இங்கே வைக்க விரும்புகிறேன்.

என்னுடைய பர்கூர் தொகுதியில் ஆரம்ப சுகாதார நிலையத்தை 25 படுக்கைகள் கொண்ட ஹாஸ்பிடல் ஆக்கியதற்காக முதற்கண் என்னுடைய நன்றியையும், அந்தப் பொதுமக்களின் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

80 சதவீத மக்கள் கிராமப் புறங்களில் வசிப்பதால் அங்கே நடமாடும் மருத்துவ மனைகளை ஒதுக்கியிருப்பதற்காக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

பழங்குடி மக்களுக்கும், ஆதி திராவிட மக்களுக்கும் இது மிகவும் நல்ல முறையில் பணியாற்றி வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

1981—82-ம் ஆண்டில் மருந்துகள் வாங்குவதற்காக இம்மாதிரி நடமாடும் சுகாதார குழுக்கள் இயங்கிக்கொண்டிருக்கும் ஒவ்வொரு ஆரம்ப சுகாதர நிலையத்திற்கும் 15,000 ரூபாய்



1982 மார்ச் 11] [திரு. பி. எஸ். துரைசாமி]

ஆக் இருந்தது. 20,000 ரூபாயாக உயர்த்தப்பட்டதற்கு மிக்க மகிழ்ச்சியைக் தெரிவித்து கொள்கிறேன். ஆனால் மக்கள் தொகை எண்ணிக்கையப் பார்க்கும் பொழுது இந்த 20,000 ரூபாய் மிகவும் குறைவாக இருப்பதால் அதை அதிகப்படுத்தும்படியாக அரசை நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

1978—79-ஆம் ஆண்டில் 100 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருந்தன. 1979—80-ல் மேலும் 100 ஆரம்ப சுகாதார நிலையங்களை அதிகப்படுத்தியது. 1981—82-ஆம் ஆண்டில் 20 நிலையங்கள் மற்றும், 1982-83-ஆம் ஆண்டில்........

மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. துரைமுருகன்: மாண்புமிகு உறுப்பினரவர்கள் தங்களது தொகுதிக்கு என்ன வேண்டுமென்று சொல்வதற்காக யான் ஐந்து நிமிடங்கள் கொடுத்திருக்கிறேன். ஆனால் உறுப்பினரவர்கள் மானியத்திலே ஒதுக்கப்பட்ட தொகையைப்பற்றியெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தால் நேரம் போய்விடும். எனவே, தொகுதி விவகாரத்தைப் பற்றிப் பேசினால் நேரம் சரியாக இருக்கும்.

திரு. பி. எஸ். துரைசாமி : மேலும் 15 சுகாதார நிலையங்களைக் கட்டுவதற்காக 140·49 இலட்சம் ஒதுக்கப்பட்டதற்காக நன்றி செலுத்திக் கொள்கிறேன்.

ஒருங்கிணைக்கப்பட்ட சேய்நல வளர்ச்சி திட்டம் தர்மபுரி மாவட்டம் தள்ளி வட்டாரத்திலும், மதுரை மாவட்டம் நிலக்கோட்டை வட்டாரத்திலும், சென்னை மாநகரின் குடிசைப் பகுதிகள் சிலவற்றிலும் தொடங்கப்பட்டதற்காக மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் பெருவகேபனப்பள்ளி; சந்நூர் போன்ற பகுதி ளில் மக்கள் அதிகமாக இருப்பதால் அங்கே முக்கியத்துவம் தந்து இரண்டு சுகாதார நிலையங்களைப் புதிதாகக் கட்டித் தருவதற்கு அரசு ஆவன செய்யும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆஸ்பத்திரிகள் பழுது பார்ப்பதற்காக 2 கோடியே 27 லட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டதற்காக நன்றியைத் தெரிவித்து கொள்கிறேன். ஆனால் நோயாளிகள் தங்குமிடத்திலும், சுற்று வட்டாரத்திலும் நல்லமுறையில் இருந்தால்தான் நோயாளிகள் விரைவில் குணமடைவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய பகுதியில் பெண் டாக்டர்கள் இல்லாததால் உடனடியாகப் பெண் டாக்டர்களை அதிகப்படுதத வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது 129 சுகாதார நிலையங்கள் இயங்கி வருவதை அதிகப்படுத்தி 264 சுகாதார நிலையங்கள் இயங்கிக்கொண்டிருப்பதைப்பற்றி நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வறட்சித் துயர் துடைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள 100 இலட்சம் ரூபாய் மதிப்புக்கு வழங்கியதையும், மக்களின் நல்வாழ்வுக்காக சிகிச்சைக்கான மருந்துகள் என்ற தலைப்பின்கீழ் 50 இலட்ச ரூபாய்க்கு வகை செய்யப்பட்டதாகும். மேலும் தற்போது சென்னை அரசு மருத்துவ மனையில் உள்ள இருதய நோய் கண்டுபிடிக்கும் கருவியாகிய ஸ்கேனிங் (Sc nl ɛ) யை ஒவ்வொரு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் அமைக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை).

1980—81-ஆம் ஆண்டுக்கு ரூ. 15 கோடி. 1981—82-ஆம் ஆண்டுக்கு ரூ. 20·7 கோடி செலவு செய்து, மக்கள் நல்வாழ்வு பற்றி, புரட்சித் தலைவர் அரசு நல்லமுறையில் செயல்பட்டு வருவதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த மானியக் கோரிக்கையின்மீது பேச எனக்கு வாய்ப்பளித்த அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி.

**திரு. க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய மருத்துவம், பொதுச் சுகாதாரம், துணைக் கோரிக்கையாக அமைகிற குடிநீர் திட்டம், இவைகளுக்கான மானியங்களின்மீது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கிற வாய்ப்பு பெற்றதற்காக நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த விவாதத்திலே கலந்து கொண்ட பெரும்பாலான உறுப்பினர்கள் பயனுள்ள பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்பதை உணர்கிற நாம் எவ்வளவு நல்ல கருத்துக்களை இந்த அவையிலே எடுத்துச் சொன்னாலும், அவை நடைமுறைக்கு வருவதில்லை என்பதை அமைச்சருக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன். அமைச்சராலே அந்தந்த ஆண்டிலே தரப்படுகிற அறிக்கை, அடுத்த ஆண்டு அந்த மானியக் கோரிக்கை மீது தெரிவிக்கப்படுகிற கருத்துக்களாக இருக்கிற அறிக்கையைப் பார்க்கிறபோது, முதல் ஆண்டு தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் எந்த அளவு நிறைவேற்றப்பட்டன என்ற விவரத்தைத் தெரிவிப்பதில்லை. அப்படியே ஒப்பிட்டுப் பார்க்க நேரிடுமானால் முதலாண்டு தெரிவிக்கப்பட்ட பல கருத்துக்கள் நிறைவேற்றப்படாத கருத்துக்களாக, நிறைவேற்றப்படாத கருத்துக்கள் என்று சொல்வதைவிட, கருவுற்றதற்கும் பின்னாலே கலைத்து வீணாகிப் போன கருத்துக்களாக இருக்கிறது என்பதை நினைவூட்டுவது என்னுடைய கடமை.





இந்த துறை பல ஆண்டு காலமாக சிறிது, சிறிதாக முன்னேறி வருகிற ஒரு துறைதான் என்பதை நான் ஒப்புக்கொண்டாலுங்கூட, முன்னேற்றத்திற்கான முயற்சி அந்த, அந்த ஆண்டு அறிக்கை மூலமாக மேற்கொள்ளப்படுகிறது. என்றாலும், மருத்துவர்களுடைய எண்ணிக்கை விரிவாகிறது, இயக்குநர் அவர்களுடைய எண்ணிக்கை அதிகம் ஆகிறது, அரசாங்கம் ஒதுக்கும் நிதியும் அளவுக் கணக்கிலே பார்க்கிறபோது, அதிகம் ஆகிறது என்று சொன்னாலும் பயன்படுகிற அளவு, 'யுட்டிலிட்டி' என்ற வகையில் குறைந்து போகிறது என்பதை —ஏற்கனவே இருந்ததைவிடக் குறைத்துவிட்டது என்று நான் சொல்வதாகக் கருத வேண்டாம்— எந்த அளவு பயன் ஏற்பட வேண்டுமென்று கருதிச் செயல்படுகிறோமோ அந்த அளவு பயன் ஏற்படவில்லையென்பதை 'யூட்டிலிட்டி' பயன் என்று அந்தக் கண்ணோட்டத்தில் இதை நோக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

அமைச்சரைப் பாராட்டிச் சொல்வதாக இருந்தால் அது எளிய காரியம். அவருக்கு மகிழ்ச்சியாக இருக்கும். பாராட்டுகிறவருக்குக் கூட மன நிறைவுகூட ஏற்படக் கூடும். ஆனால், அமைச்சரைப் பாராட்டுகிற காரணத்தால் இலாகா தூங்கி விடக்கூடிய ஆபத்து ஏற்படும் என்பதை நான் அறிந்திருக்கிறேன். எனவே, அமைச்சரை, மறுத்தோ, எதிர்த்தோ, கண்டித்தோ, பேசுகிறோம் என்றால், இந்தத் துறை நல்ல முறையிலே செயல்படுவதற்கு ஒரு வழி பிறக்க வேண்டுமென்பதற்காகத்தான் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தந்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் அமைச்சர் அவர்கள் படித்து பார்த்திருப்பார்கள். அமைச்சர் மட்டும்தான் படிப்பார் என்ற நிலை இருக்கிறது. அந்தத் துறையிலே உள்ளவர்கள் கொடுக்கப்பட்ட அனைத்தையும் வகைப்படுத்தி, முறைப்படுத்தி பார்ப்பார்களானால், இவ்வளவு குறைபாடுகள், இன்னும் மக்களுடைய தேவைகளை நிறைவேற்ற முடியாத குறைபாடுகள், ஏற்கெனவே சொல்லப்பட்ட உறுதி மொழிகள் நிறைவேற்றப்படாத, அஷ்யூரன்ஸ் நிறைவேற்றப்படாத குறைபாடுகள் இருக்கின்றன என்பது தெளிவாகத் தெரியும்.

சில வெட்டுத் தீர்மானங்களைப் பார்க்கிறபொழுது, 1981-வது ஆண்டு வந்த வெட்டுத் தீர்மானங்கள், 1980-வது ஆண்டு வந்த வெட்டுத் தீர்மானங்கள், திரும்ப 1982-வது ஆண்டு வந்திருக்கின்றன. அதையே இதிலே எழுதித் தந்து விட்டார்களா என்று பார்ப்பதை விட, அப்பொழுது வந்த வெட்டுத் தீர்மானத்திற்குப் பலன் ஏற்படாத காரணத்தால், திரும்பத் திரும்ப அந்த வெட்டுத் தீர்மானங்களைத் தர வேண்டிய நிலைமை உறுப்பினர்களுக்கு ஏற்படுகிறது என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது. ஒவ்வொரு கோரிக்கைமீதும் சட்டமன்றத்திலே விவாதத்திதற்குப் பின்னால், இந்தக் கோரிக்கையிலே தரப்பட்ட வெட்டுத் தீர்மானங்களின் அடிப்படையில், எந்த, எந்தக் கடமையை

[திரு. க. அன்பழகன்] [1982 மார்ச் 11

அரசு நிறைவேற்ற முடியுமோ அவைகளுக்காக, சப்ளிமென்டரி பட்ஜெட் என்று முறையிலாவது நிதி ஒதுக்கி, அந்தக் கடமைகளிலே பெரும்பாலான குறைகளை; நிறைவேற்றக்கூடிய குறைகளை, நிறைவேற்றுவதற்கு ஒரு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கூற விரும்புகிறேன்.

(இரவு 7–20)

புதிய மருத்துவமனைத் தேவைப்படுகிறது, என்பது ; மருந்தகம் எங்கள் ஊருக்குவேண்டும் என்பது ; மருத்துவமனைக்குள்ள கட்டடம் பழுது ஆகிவிட்டது, ஆகவேவேறுகட்டடம் கட்ட வேண்டும் என்பது ; மருத்துவப் பணியாளர்களுக்குக் குடியிருப்பு இல்லை என்பது ; பெண் டாக்டர்கள் எங்கள் மருத்துவமனைகளில் யாரும் இல்லை என்பது, புதிய சிகிச்சைப் பிரிவு தேவை என்பது, எக்ஸ்-ரே கதிர் கூடம் தேவை என்பது ; குழந்தை மருத்துவப் பிரிவு தேவை என்பது ; விபத்து சிகிச்சைப் பிரிவு தேவை என்பது ; ரத்த சேமிப்பு நிலையம் தேவை என்பது ; இன்னும் சில இடங்களிலே அறுவை சிகிச்சை கூடம் இல்லை என்பது, இருக்கின்ற கூடங்களுக்குப் போதுமான அறுவை சிகிச்சை செய்ய கருவிகள் இல்லை என்பது ஆகிய அந்தக் குறைகள் ; ஊழியர்கள் போதுமான அளவுக்கு நியமிக்கப் படவில்லை என்பது ; அதிகப்படுக்கைகள் தேவை என்பது ; போதுமான மருந்துகள் வழங்கப்படவில்லை என்பது ; நல்ல உணவாக தரப்படவில்லை என்பது இப்படி இந்தக் கோரிக்கைகளை எல்லாம் அடுக்கிப் பார்த்தால், ஏறத்தாழ மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தான் கொண்டு வந்த பட்ஜெட் 76 கோடி ரூபாய் மருத்துவத்திற்காக கொண்டு வந்திருந்தாலும் கூட, இன்னும் ஒரு 30 கோடி ரூபாய் இருந்தால்தான் இந்தக் குறைகளைக் களைய முடியும். ஆகவே, அமைச்சர் கடந்த ஆண்டுகளை விட இந்த ஆண்டு அதிகம் ஒதுக்கிவிட்டோம் என்று மகிழ்ச்சி அடைவதை விட, தேவைப்படுவதில் மூன்றில் 2 பங்கு கூட ஒதுக்க முடியாத நிலையிலே இருக்கிறோம் என்பதை அவர் உணர்வார் என்று நான் நம்புகிறேன்.

அதே போல சென்னையிலே உள்ள மருத்துவக் கல்லூரியைப் பட்ட மேற்படிப்பு நிலையமாக உயர்த்தவேண்டும் என்ற நடவடிக்கை, 7 ஆண்டு காலமாக, 1974-லே இருந்து தொடர்ந்து சொல்லப்பட்டு வருகிற ஒரு கதை. அதை நடைமுறைப்படுத்துவதாக இப்போது 1980-லே இருந்து தொடர்ந்து சொல்லி வந்தோம். ஆனால் நடைமுறைப்படுத்தவில்லை. அப்கிரேடட் இன்ஸ்டிடுட் என்று சொல்லப்படுகிற வகையிலே சில பகுதிகள் உயர்த்தப்பட்டாலும் கூட, ஒரு தனி மேற்பட்டப்படிப்பு ஆராய்ச்சி நிலையமாக அது உயர்த்தப்படவும் இல்லை, அதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோல மருத்துவக் கல்லூரிக்காகவே தனிப் பல்கலைக்கழகம் தனியாக ஏற்படுத்தப்



1982 மார்ச் 11] [திரு. க. அன்பழகன்]

படும்—செப்பரேட் இன்ஸ்டிடுஷன்—என்று தெரிவித்து இருக்கிறார்கள். ஒருவேளை அது சென்னையிலே உள்ள சென்னை மருத்துவக் கல்லூரி அந்த நிலைக்கு உயர்த்தப்பட இருக்கிறதா அல்லது வேறு தனியாகவே ஒரு நிலையம் உருவாக்கப்பட இருக்கிறதா என்று இந்த அறிக்கையிலே தரப்பட்டிருக்கின்ற கருத்திலே தெரியவில்லை.

ஆனாலும் பல்கலைக் கழகம் உருவாகிற கடமையும் இந்தப் பொது மருத்துவ மனையை உரிய நிலைக்கு உரியதாக ஆகிற அந்தக் கடமையும் இரண்டும் நீண்டகாலமாக தாமதமாக ஆகிவருகின்றன என்பதைப் பணிவோடு நான் கூற விரும்புகிறேன். தாமதம் ஆகிறது என்பது மருத்துவத் துறையைப் பொறுத்த வரையில் அதனாலே ஏற்படுகிற விளைவுகள் பல்வேறு தொடர் நிகழ்ச்சிகளிலே தாமதத்தை விளைவிக்கத்தான் செய்யும். ஒரு இடத்திலே ஏற்படுகிற தாமதம் தொடர்ந்து அந்தத் தாமதத்தின் விளைவாகப் பல துறைகளில் அந்தத் துறையிலே இருந்து படர்ந்து பல்வற்றைத் தாமதப்படுத்தும்.

சென்னையிலே 1975–ஆம் ஆண்டிலே அறிவிக்கப்பட்டவாறு பெரம்பூர் பகுதியிலே ஒரு புறநகர் மருத்துவமனைக் கட்டுவதற்கு அப்போது எண்ணப்பட்டு, அதற்கு அடிப்படைப் பணிகள் சில நிறைவேற்றப்பட்டு, 1981-82 ஆம் ஆண்டு அறிக்கையிலே அதற்காக நிதி ஒதுக்குவதாக தெரிவிக்கப்பட்டு மறுபடியும் இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே கடந்த ஆண்டு 170 இலட்சம் ஒதுக்கி இருக்கிறோம் 100 படுக்கைகள் கொண்டதாக மருத்துவமனை வருவதற்கு என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 170 இலட்சம் ரூபாய் இந்த ஆண்டு ஒதுக்கினாலும் அது ஓராண்டு காலத்திலே செலவழிக்கப்படுகிற தொகையாக இருக்காது என்று நான் ஐயுறுகிறேன். 2 ஆண்டு, 3 ஆண்டு காலத்திலே செலவழிக்கப்படுகிற தொகை அந்த 175 இலட்சத்தை பெரம்பூரிலே வரப்போகிற அந்த மருத்துவமனையின் பேரிலே ஒதுக்கி வைத்துவிட்டால், வேறு துறைகளிலே அந்தத் தொகை செலவிடப்படுவது, பயன்படுத்தப் படுவது குறைந்து போகிறது. என்பதை நான் நினைவூட்டுகிறேன். புறநகர் மருத்துவமனை தேவை என்று கருதியவன்தான் நான், அதை ஆதரிக்கிறேன். ஆனால் பெரம்பூரில் இதுவரையில் எந்த ஒரு சிறு பணியும் அதற்காக நடைபெறாத நிலையில் இந்த ஆண்டு ஏறத்தாழ 4 மாதங்களுக்கு முன்னால் 170 இலட்சம் ஒதுக்கி இருக்கிறோம் என்று சொன்னால், அந்த 170 இலட்சம் 2, 3 ஆண்டுகளில் செலவிடப்பட முடியுமே தவிர, அந்த மொத்த நிதியைக் கணக்குக்காக முடக்கி வைக்கிற ஒரு காரியமாக இது ஆகிறது என்ற சந்தேகத்தை நான் தெரிவிக்கிறேன்.

அதுபோலவே ஸ்டான்லி மருத்துவமனையில் பல அடுக்குகள் கொண்ட குழந்தைப் பகுதியைக் கட்டுவதற்கு ரூ. 199 லட்சம் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. ரூ. 199 லட்சம் இருந்தாலும்

[திரு. க. அன்பழகன்] [1982 மார்ச் 11

கட்டிடத்திற்காக ஓராண்டில் செலவிட முடியாது. கட்டடங்கள் வருகிற வேகத்தை நான் பார்த்துப் பார்த்து பயந்து போயிருக்கிறேன். அந்தக் கட்டடம் வருகிற வேகம் இரண்டு ஆண்டுகள், மூன்று ஆண்டுகள் ஆனாலும் கூட, முடியாது. முடிந்தாலும் அந்தக் கட்டிடத்தை பயன்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுப்பது கிடையாது. அப்படி எடுப்பதற்கு நிதித் துறைக்குக போய் அங்கே இருந்து அனுமதி கிடைத்தது, அந்தத் துறை செயலாளரிடம் இருந்து இயக்குநருக்குப் போனாலும் அதற்குப் பின்னரும் அதற்கான கருவிகள் வாங்க, அதற்கான தளவாடங்கள் வாங்குவதற்கு என்று சொல்லி ஓராண்டுக்குக் குறையாமல் ஆகிறது.

மருத்துவத் துறையிலே உள்ளவர்கள் சுறுசுறுப்பாக இருக்க வேண்டியதற்கு மாறாக, அவர்கள் தாமதமாக நடக்கிறபோது 199 லட்சம் ஸ்டான்லியிலே பல அடுக்குக கொண்ட குழந்தைப் பகுதி என்று சொல்லி, ஒரு ஆண்டுக்கு ஒதுக்கினால் அதைச் செலவிடப் போகிறீர்களா? செலவாகாமல் ஒரு கணக்குக்காக இருக்கட்டும் என்று ஒதுக்கிறீர்களா என்று கேட்க விரும்புகிறேன்.

சென்னையில் உள்ள குழந்தைகள் நல மருத்துவ மனைக்கு 250 படுக்கைகளை அதிகப்படுத்துவதற்கு அவசியமான காரியம் தான். இந்த ஆண்டுக்கு 173 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். கட்டடத்திற்கு மொத்தம திட்டம் 173 லட்சம் என்று சொல்லுங்கள். இந்த ஆண்டு 70 லட்சம் அல்லது 90 லட்சம் அடுத்த ஆண்டு ஒரு 70 லட்சம் என்ற முறையில் ஒதுக்கியிருந்தால் பரவாயில்லை. அப்படியில்லாவிட்டால் பட்ஜெட் என்று சொல்வதற்கான தகுதியையே இந்த குறிப்புகள் இழந்து விடுகின்றன என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

சென்னையில் உள்ள ஸ்டான்லி மருத்துவமனையிலே மூன்று நான்கு மாதம டீன் என்ற பொறுப்பிலே உள்ளவர் இல்லாமல் இருக்கிறார். திரு. உ. சுப்ரமணியம் அவர்கள் சொன்னதைப் போல கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் அந்தப் பதவிக்கு உரிய டீன் இரண்டு ஆண்டுக்காலமாக இல்லை என்று சொல்கிறார்கள். டீன், நிர்வாகத்தை நடத்துவதற்குப் பொறுப் பேற்றுக் கொள்ள வேண்டியவர். இரண்டாண்டு காலம் டீன் இல்லாமல் சென்னையிலே ஒரு மருத்துவமனை, மருத்துவக் கல்லூரியிடன் இணைந்து இருக்கிற ஒரு மருத்துவமனை நடைபெறுகிறது என்று சொன்னால் அது பெரிய குறைபாடு ஆகும்.

அப்படி இருப்பதற்கு என்ன காரணம்? வேண்டியவர்கள் கிடைக்கவில்லையா? அல்லது உரியவர்களைப் போடுவதற்கு மனம்இல்லையா யார் உரியவரகளோ அவர்களை நியமித்து, அவர்சரியாக வேலை செய்யாவிட்டால் அவரை அனுப்புவது என்று அந்த எண்ணத்தோடு செயல்பட்டால், உரியவர்களை



1982 மார்ச் 11] [திரு க அன்பழகன்]

நியமித்திருக்க முடியும். எனவே அப்படி ஸ்டான்லி மருத்துவ மனை, கீழ்ப்பாக்கம் மருத்துவமனை ஆகிய மருத்துவமனைகளிலே அந்தக் குறைபாடுகள் இருப்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நடைபெற்ற காரியங்களைக் குறைசொல்வது என்பது சாதாரணமாகக் காணப்படுகிறது. முன்னேற்றக் கழக ஆட்சி 5 ஆண்டுகளுக்கு முன்னாலே, 7 ஆண்டுக்கு முன்னாலே நடைபெற்றபோது, சில குறைபாடுகள் நடைபெற்றது என்று வைத்துக் கொண்டாலும், திருத்துவதற்கு, மாற்றுவதற்கு புதிய ஆட்சியிலே வந்திருக்கிறவர்கள், ஆட்சியிலே வந்து அமர்ந்ததிற்குப் பிறகு, அதுவும் மருத்துவத் துறையிலே ஈடுபட்டிருக்கிற டாக்டர் ஹாண்டே அவர்கள் வந்ததற்குப் பின்னாலே திருத்த வேண்டுமே தவிர, குறை சொல்லுகிற மனப்பான்மையில் எப்போதுமே நடந்து கொள்வது சரியல்ல. மாமியாரைக் குறை சொல்கிற காரணத்தால் மருமகள் எல்லாம் பிள்ளை பெறுகிறபோது திறமையான பிள்ளைகளைப் பெற்றுவிடுகிறார்கள் என்று பொருள் அல்ல. மாமியாரைக் குறை சொன்னால் மட்டும் போதாது. ஏற்கனவே இருந்த ஆட்சியைக் குறை சொல்கிறபோது, நீங்கள் குறைகளைக் களைய முயற்சிக்கவேண்டாமா?

கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது பற்றி நிரம்பக் குறை சொன்னார்கள். கண் சிகிச்சை முகாம்களிலே முதலிலே கொடுக்கப்பட்ட ரு. 2, 3 விலையுள்ள கண்ணாடி பற்றி குற்றம் குறை அத்தனையையும் சொல்லிவிட்டு, இப்பொழுது இந்த ஆண்டு முதலிலே அறிக்கையிலே தெரிவிக்கிறார்கள். ரூ. 3 கண்ணாடியை கழித்து— கொடுப்போம், அதற்குப் பிறகு ஒரு மாதம் கிறார்க ரூ. 15-லே ஒரு கண்ணாடி கொடுப்போம் என்று சொல் ஏற்பட்ட அது, ஏற்கனவே செய்யப்பட்ட காரியத்திலே எடுத்துச்ள.வளர்ச்சியே தவிர, அதிலே குற்றம் குறைகளை சொல்லியதில் பொருள் இல்லை. அவ்வாறு குற்றம் சொல்லப்பட்டதுஎன்பதற்காகச் சொல்கிறேன். நான் சொல்வது அமைச்சரை அல்ல. ஆளும் கட்சியின் பொதுவான கருத்தைச் சொல்கிறேன்.

தமிழ்நாட்டிலே மருத்துவக்கல்வித் துறை இயங்குகின்ற முறை, மருத்துவக் கல்வியில் அவர்களுக்கு எத்தனை அக்கறை இருந்தாலும் கூட, நடைமுறைப்படுத்துவதிலே இருக்கிற குறைபாடுகளை மறந்து விடக்கூடாது.

இந்த ஆண்டு, கடந்த 9—3—1982 அன்று 'ஹிண்டு' பத்திரிகையிலே 'போஸ்ட் கிராஜுவேட்ஸ் அண்ட் டிப்ளமாஸ், கோர்ஸ்களுக்கு விண்ணப்ப பாரங்களைப் பெறுவதற்கா அதற்கு ஒரு விண்ணப்பம் போடவேண்டும் அல்லவா? விளமபரம வந்த தேதி 9—3—1982. விளம்பரம் அரசாங்கத்தாலே தரப்

பட்ட தேதி 4-3-1982. இதன்படி அவர்கள் விண்ணப்ப பாரங்கள் கிடைப்பதற்குரிய முறையில் அதற்கான ஸ்டாம்புகள் வைத்து, போஸ்டல் ஆர்டர் வைத்து விண்ணப்பிக்கவேண்டும். வேறு விதமாக விண்ணப்பித்தால் அவர்களுக்கு விண்ணபிப்பதற்குரிய அப்ளிகேஷன் பாரங்கள் கிடைக்காது. 9-ம் தேதி வந்த 'ஹிந்து' பத்திரிகை அல்லது இன்னொரு பத்திரிகையைப் பார்த்து அவர்கள் விண்ணப்ப பாரம் கேட்டு, போஸ்டல் ஆர்டர் அனுப்பி, திரும்ப அது கிடைத்ததற்குப் பின்னால் அதிலே கேட்கப்பட்டுள்ள விவரங்களைப் பூர்த்தி செய்து, உரிய சர்டிபிகேட்டுகளை இணைத்து, மார்க் ஷீட்டுகளை தரவேண்டியிருக்குமானால் அதையும் இணைத்து அனுப்புவதற்கு கடைசித் தேதி மார்ச் 15-ம் தேதி. 9-ம் தேதி விளம்பரம், 10-ம் தேதியே வெளியூரில் இருந்து ஒருவர் எழுதுகிறார். 11-ம் தேதி, ஒருவேளை அந்த விண்ணப்ப பாரம் அனுப்ப வேண்டிய டீனோ அல்லது மற்றவர்களோ உரிய முறையிலே 11-ம் தேதி அனுப்புகிறார்கள் என்று வைத்துக்கொண்டாலும் அந்த பாரம் 12, 13-ம் தேதியிலே அவருக்குக் கிடைக்கும். 15-ம் தேதிக்குள், மாலை 5 மணிக்குள் அந்த விண்ணப்பங்கள் எல்லாம் வரவேண்டுமென்று விளம்பரம் போடுகிற அளவிற்கு ஒரு மருத்துவக் கல்வித்துறை செயல்படுமானால் அத்துறை எந்த அளவிற்கு ஒரு சாதாரண நடைமுறையிலே கூட தடுமாறிப் போய் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நடைமுறையிலே விளம்பரம் வந்தபின் 20 அல்லது 30 நாள் வரையில் விண்ணப்பம் போடுவதற்கு காலத்தைக் கொடுத்தால் என்ன ? காலக்கெடுவை இந்த அளவு குறைப்பதற்கு காரணம் என்ன ? விண்ணப்பத்தை வாங்கிவைத்துவிட்டு, இன்டர்வியூ வைப்பதற்கு 2, 3 மாதம். அதற்குப் பின்னால் செலக்ஷன் நடக்கிறது என்று சொல்லி, மாணவர்களைச் சேர்ப்பதற்கு பட்டியல் வெளியிட இரண்டு மாதம், அதன் பிறகு வெயிட்டிங் லிஸ்ட் என்று சொல்லி பட்டியலை ஒருமாதம் கையிலே வைத்துக்கொண்டு இருப்பது இப்படி 6 மாதம் வீணாக்கப்படுகிறது. அப்படி இருக்கும்போது இந்தத் துறை அமைச்சர் பொறுப்போ, இயக்குநர் பொறுப்போ அல்லது செயலாளர் பொறுப்போ, யார் பொறுப்போ அவர்கள் தீர்மானித்துக் கொள்ளட்டும். விண்ணப்பங்கள் வாங்கிக்கொள்ள இப்படி 6 நாள் இடைவெளி வைத்து ஏன் விளம்பரம் செய்ய வேண்டும் ? இனி வருங்காலத்திலாவது இந்த குறையைப் போக்குவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

[இரவு 7-30]

இன்றைக்குத் திடீர் திடீரென்று இந்த அரசுக்கு ஞானோதயம் ஏற்படுகிறது. பி.எஸ்ஸி., படித்தவர்கள் விண்ணப்பம் போடக் கூடாது, எம்.பி.பி.எஸ்., படிப்புக்கு என்று ஒரு உத்தரவைப் போட்டார்கள். அது தவறு என்று உணர்ந்து மறுபடியும் அனு





மதித்தார்கள். அதைப்போல ஹையர் செகண்டரி புதிய படிப்பு வந்துவிட்டாலும் கூட, பி.யு.சி. படித்த மாணவர்களும் இருப்பார்கள் என்பதை எண்ணிப்பார்க்காமல், இனிமேல் பி.யு.சி. மாணவர் விண்ணப்பிக்கக்கூடாது என்று ஒரு உத்தரவைப் போட்டார்கள். யாரோ ஒருவர் அதை எதிர்த்து நீதிமன்றத்திற்கு சென்றார். பி.யு.சி. மாணவர்களுக்குத் தரப்படுகிற இடத்தை நிறுத்தக்கூடாது என்று கோர்ட்டிலே தீர்ப்பு வழங்கிய பின்னால் அரசாங்கம் தன்னுடைய கருத்தை மாற்றிக்கொண்டு அவர்களும் விண்ணப்பிக்கலாம் என்று தெரிவித்தது. இப்படிப்பட்ட அவசர ஆலோசனைகளை அரசாங்கத்திற்குச் சொல்கிறவர் யார் ? பி.எஸ்ஸி., படித்தவர்களுக்கு நீண்டகாலமாக இடம் தந்துகொண்டிருக்கும்போது திடீரென்று நிறுத்துவதற்கு என்ன காரணம் ? அவர்கள் எல்லாம் அமெரிக்காவில் இருந்து வரக்கூடியவர்களா ? அமெரிக்காவில் இருந்து வருகிறவர்களுக்குக்கூட இடம் வைத்திருக்கிறோம். அப்படி இருக்கும் போது பி.எஸ்ஸி., படித்தவர்களுக்கு இருக்கிற இடத்தை நிறுத்துவதற்கு தகுந்த நியாயம் இருக்க வேண்டாமா ? நியாயமான காரணம் தந்து இருக்க வேண்டாமா ?

ஹையர் செகண்டரி படிப்பு வந்தாலும், பழைய பி.யு.சி. படிப்பைத் தொடர்ந்து படித்து வந்த பிள்ளைகள் நம்முடைய வீட்டிலேயே பலர் இருக்கிறபோது அதை நிறுத்துவதற்கு தகுந்த நியாயம் இருக்க வேண்டாமா ? திடீரென்று யாரோ ஒன்றிரண்டு பேர்கள் நீதிமன்றத்திற்குப் போன பிறகு பி.யு.சி. மாணவர்கள் விண்ணப்பம் போடுகிற நிலைமை உருவாக்கப்பட்டது என்பதை அரசாங்கத்தினுடைய நிருவாகக் குறை என்பதற்காகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதைப்போலவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மாணவர்களுக்கு கிடைத்த இடம் குறைந்துவிட்டது என்று சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் திடீரென்று 9,000 ரூபாய் வருமானத்திற்கு உட்பட்டவர்கள்தான் பிற்பட்ட வகுப்பு என்று நாங்கள் சொல்லவில்லை. இன்றைக்குச் சில உதவிகளைப் பெறுவதற்கு 24,000 ரூபாய் வருமானம் வந்தால் கூட உதவி பெறலாம் என்றும் நாங்கள் சொல்லவில்லை. அண்ணா தி.மு.க. ஆட்சியில் பிற்பட்ட வகுப்பு என்று சொல்கிற தகுதியைப் பெறுகிறவர்கள் ஆண்டுக்கு 9,000 ரூபாய் வருமானத்திற்கு உட்பட்டிருக்க வேண்டும். அதற்கு மேல் வருமானம் பெறுகிறவர்களாக இருக்கக்கூடாது. பட்டதாரியாகி, உதவித் தொகை பெற வேண்டுமானால் 24,000 ரூபாய் வரை ஆண்டு வருமானம் வரக்கூடியவர்கள் விண்ணப்பிக்கலாம். என்ன வெட்கக்கேடு. ஒரு கொள்கையை எடுக்கும்போது, சமுதாயத்தின் நிலையை எண்ணிப் பார்த்து ஒரு கொள்கையை எடுக்க வேண்டாமா ? நாம் நினைப்பது எல்லாம் கொள்கையா ? நாம் நினைப்பதை எல்லாம் உத்தரவாகப் போட்டால் ஒரு சமுதாயம் தாங்குமா ? வேலையில்

லாத வெறும் பட்டதாரி உதவித் தொகை பெற 24,000 ரூபாய் வரையில் வருமானம் இருக்கலாம் என்று எந்த அடிப்படையில் அந்த ஏற்பாட்டைச் செய்தீர்கள் ?

9,000 ரூபாய் என்று சொன்னதற்கு எதிர்ப்பு வந்து, மாறுபாடான உணர்ச்சி வலுத்து, அதன் பிறகு 9,000 ரூபாய் என்ற விதியை எடுக்கிறபோது திடீரென்று 31 சதவீதமாக இருந்ததை நாங்கள் 50 சதவீதம் என்று உயர்த்துகிறோம் என்று சொல்லி உயர்த்தினீர்கள். இந்த பிற்பட்ட வகுப்பினர் சதவீதத்தை உயர்த்த வேண்டிய நெருக்கடி நிலை இல்லாத போது வெறும் 25 சதவீதமாக இருந்ததை 31 சதவீதமாக உயர்த்தியது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. தாழ்த்தப்பட்டவர்ளுக்கு 15 சதவீதம் என்று இருந்ததை 18 சதவீதமாக ஆக்கியதும் திராவிட முன்னேற்றக் கழகம். அந்தக் காலச் சூழ்நிலையில் பிற்பட்ட வகுப்பு பாணவர்கள் 100-க்கு 20 பேர் ஓப்பன் காம்படிஷன் என்று சொல்லப்படுகிற பகுதியிலே இடம் பெற்றார்கள். அதை நான் பெருமையாகச் சொல்கிறேன். ஓப்பன் காம்படிஷனிலேயே பிற்பட்ட வகுப்பினர் 15 பேர், 20 பேர் இடம் பெற்றார்கள். 2 பேர், 3 பேர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் இடம் பெற்றார்கள். அவர்களுக்கும் தகுதி உண்டு என்பதை நிரூபித்தார்கள். ஆனால், இப்போது இந்த அரசாங்கத்தில் என்ன நிலைமை தெரியுமா ? இந்த அரசாங்கத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவீதம் ; பிற்பட்ட வகுப்பினருக்கு 50 சதவீதம். மிச்சம் இருப்பது ஓப்பன் காம்படிஷன் என்று சொல்வதற்குப் பதிலாக '' அதர் கம்யூனிட்டிஸ் '' என்று சொல்லப்படுகிற தவறான கருத்து இந்த அரசாங்கத்தில் இடம் பெற்றது அல்லவா ? '' அதர் கம்யூனிட்டீஸ் '' என்றால் பிற்பட்ட வகுப்பினர் அந்தப் பட்டியலில் இடம்பெறக் கூடாது அல்லவா ? தாழ்த்தப்பட்டவர்கள் அந்தப் பட்டியலில் வரக்கூடாது என்ற அந்தக் கருத்து இடம் பெற்றது அல்லவா ? எனவேதான் அரசாங்கத்தின் பல்வேறு குழப்பத்தின் காரணமாக இந்த நிலை ஏற்பட்டதை இந்த நேரத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அதே நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பிற்பட்ட்வர்களுக்கும் உரிய இடங்கள் மட்டுமல்ல ; அதை விட அதிக இடங்கள் தரப்பட்டன என்பதற்காக நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். கலைஞர் கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் பிற்பட்ட வகுப்பைச்சேர்ந்தவர்கள் டெபுடிகலெக்டர் அண்ட் டெபுடி சூப்பிரண்டண்டன்ட் பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது 120 பேர்களில் 114 பேர்கள் வந்தார்கள். அப்படியும் ஒரு வரலாறு உண்டு. அந்த வரலாற்றை மறந்துவிடவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே பட்ட மேல் படிப்பு (போஸ்ட் கிராஜுவேட் படிப்பதற்கு விண்ணப்பித்திருக்கிறார்கள். டிப்ளமோ தகுதி பெற்றவர்கள்தான் பட்ட மேல் படிப்புக்கு விண்ணப்பிக்க வேண்டு





மென்று இருக்கிறது. டி. ஆர்தோ படித்தவர்கள்தான் எம்.எஸ். ஆர்தோ படிக்க வேண்டும் என்று இருக்கிறது. நான் அமைச்சராக இருந்தபோது அந்த முறையிலேதான் சிலதுறைகளிலே செய்யப்பட்டது. அதைப் பெருமைக்காக நான் சொல்லவில்லை. எம்.டி. ஜைனகாலஜி படிப்பதற்கு ஜைனகாலஜீ டிப்ளமோ பெற்றவர்களுக்குத்தான் பெரும்பாலான இடம். '' கோல்டு மெடலிஸ்ட் ஆஃப் தி காலேஜ், யூனிவர்சிடி பர்ஸ்ட் '' அப்படிப்பட்டவர்கள் விண்ணப்பித்தால் அவர்களுக்கு ஒரு இடம் என்றுதான் அப்போது வழங்கப்பட்டது. அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களுக்கும் தெரியும். எங்களுடைய அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த இரண்டு நண்பர்களுடைய சகோதரிகள் அல்லது குடும்பத்தார் விண்ணப்பித்தபோது அந்த டிப்ளமோ இல்லாத காரணத்தால் அவர்கள் விண்ணப்பம் போட்டாலும் அதை அனுமதிக்க முடியாது என்று சொல்லி, நீங்கள் வேண்டுமானால் டிப்ளமோவுக்கு விண்ணப்பம் போடுங்கள் என்று நான் சொன்ன காரணத்தால் அவர்களுக்குக்கூட வருத்தம் ஏற்பட்டது.

ஆனால் டிப்ளமோ கூட பெறாமல், அதைப் பெறுவதற்கான தேதி பின் தேதியாக இருக்கிறபோது விண்ணப்பம் போடுகிறார்கள். அந்த விண்ணப்பம் அரசாங்கத்தில் வைத்துக்கொள்ளப்படுகிறது. அப்படி வைத்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள், மூலம் பின்னாலே வருகிற மார்க் ஷீட்டை இணைத்து இரண்டு பேர்கள் பி.ஜி. படிப்புக்கு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். எம்.எஸ். ஆர்த்தோ வகுப்பில் டிப்ளமோ பெற்ற பார்த்தசாரதி என்பவருக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. பின்னால், அவர் நீதிமன்றம் போகிறார். ஒருவேளை மாண்புமிகு அமைச்சரவர்கள் மேல் சபையில் சொன்னமாதிரி அவருக்கு ஹாங்காங் ஆப்பரேஷன் தெரியாது என்று சொல்வார்களேயானால் அவருக்குச் சொல்வேன் ஹாங்காங் ஆப்பரேஷன் டாக்டர் ஹண்டே அவர்களுக்கும் தெரியாது. மருத்துவத் துறையிலே இருக்கிற பேராசிரியர் சிலருக்கும் தெரியாது ; அவர் சொன்ன புத்தகத்திலேயும் அதைப் பற்றி இல்லை. இந்தத் துறையிலே நீண்டகாலமாக பணியாற்றிக் கொண்டிருக்கிற பலருக்கும் தெரியாது. அவருக்கு இன்டர்வியூ நடத்தினாரே, அவருக்குக் கூட தெரியாது. அவருக்கு, ஹாங்காங் ஆப்பரேஷனும் தெரியாது. டிப்ளமோ பெற்றதை மதிக்கத் தெரியுமா என்றால் அதுவும் தெரியாது. யார் இந்தத் துறையிலிருந்து தேர்ந்தெடுத்திருந்தாலும் நான் கேட்கிறேன், டிப்ளமோவுக்கு பின்னால் வருகிற தகுதியை டிப்ளமோ பெறுவதற்கு முன்னால் ஏற்றுக்கொண்டு, அப்படி ஒரு சலுகையை வழங்கி, அவர்களுடைய உறவினருக்கு வழங்கியிருக்கிறார்கள். அது சம்பந்தமாக நீதிமன்றத்திற்குப்போய், நீதிமன்றம் ஒரு இடத்தை அவருக்கு வழங்க வேண்டுமென்று சொல்லும்போது அந்த இடத்தை வழங்குவதில் அரசாங்கத்திற்கு என்ன இழப்பு ? அமைச்சர் ஹண்டே அவர்களை இதிலே நான் தனியாகப் பிரித்து பேசுவதாக கருத வேண்டாம். ஒரு அரசாங்கம் நீதிமன்றத்திலே வழங்கிய தீர்ப்பைச் செயல்படுத்துவதிலே என்ன இழப்பு ? அதற்கு

இசைவு அளிப்பதிலே என்ன தவறு ? ஏன் அந்தப் பார்த்தசாரதிக்கு மறுத்தீர்கள் ? எதற்காக "பெஞ்சு"க்கு மேலும் விண்ணப்பம் செய்ய வேண்டி வந்தது ? அந்த "பெஞ்சிலே" மறுபடியும் பார்த்தசாரதிக்கு இடம் கொடுங்கள் என்று சொன்ன பிறகு இந்த அரசாங்கம் அவருக்கு இடம் கொடுப்பதை எப்படி மறுக்க முடியும் ? மறுக்க வேண்டிய அவசியம் என்ன ? அதற்கு மேலே மீண்டும் ஏன் உச்ச நீதிமன்றத்திற்குப் போனீர்கள் ? எந்த நியாயத்தின் அடிப்படையிலே போனீர்கள் ?

தி.மு.க. அரசாங்கம் இருந்தபோது, நான் இந்தத் துறைக்கு அமைச்சராக இருந்தபோது ஒருவர் அரசாங்கத்தை எதிர்த்து இரண்டு முறை நீதிமன்றத்திற்குச் சென்றார். நீதிமன்றத்திலே அரசாங்கம் செய்தது சரி. உங்களுக்கு இடம் தர வேண்டுமென்று சொல்வதற்கு இடமில்லை; தரச்சொல்வதற்கு நியாயம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். அவர் மூன்றாவது தடவையும் விண்ணப்பம் போடுகிறார். யார் இரண்டு முறை அரசாங்கத்தை எதிர்த்து நீதிமன்றத்திற்குப் போனாரோ அவர் மூன்றாவது முறை விண்ணப்பம் போடுகிறார். தேர்வு நடத்துகிறவர்கள் அவருடைய விண்ணப்பத்தை அனுமதிக்கலாமா என்றும் கேட்கிறார்கள். நான் அப்போதும் சொன்னேன். தகுதி இருந்தால் அவரைத் தேர்ந்தெடுக்கலாம் ; தேர்வுக்கு அவரை அனுமதிக்கலாம். "இஃப் ஹி ஈஸ் குவாலிஃபைடு ஹி ஷூட் நாட் பி ரிஜெக்டட்" என்று சொன்னேன். நீதிமன்றத்திற்குப் போனார் என்பதற்காக அரசாங்கம் புறக்கணிக்க வேண்டாம், தடுக்க வேண்டாம் என்று சொன்னேன்.

அதே மாதிரிதான் திரு. பார்த்தசாரதி முதலிலே விண்ணப்பம் போடுகிறார் ; அவருக்கு இடம் கொடுக்கச்சொல்லி தீர்ப்பு வழங்கப்பட்டாலும் இடம் கொடுக்கவில்லை ; அவருக்கு அரசு இடம் தந்திருக்க வேண்டும்.

[இரவு 7–40]

பெஞ்சிலே தீர்ப்பு கிடைத்ததும் கூட சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனால் அதைத் தடுத்து விடலாம் என்றால் சுப்ரீம் கோர்ட்டிலே மட்டும் என்ன பதில் கிடைத்தது ? இந்த அரசாங்கம் செய்த காரியத்தை வரவேற்றார்களா ? ஆகவே, அரசாங்கத்திலே சில தவறுகள் நடக்கும் என்றால் அந்தத் தவறுகளுக்கு அமைச்சர் அவர்கள் உடந்தையாக இருக்கக்கூடாது. அமைச்சர் அவர்களுக்கு ஒரு நோக்கம் வந்துவிடக்கூடாது. ஆகவே, நான் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். அதைப்பற்றி இதற்கு மேலும் விளக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன்.

அடுத்து ஆரம்ப சுகாதார நிலையத்திலே இணைக்கப்பட்டிருக்கின்ற சுற்றி வருகின்ற வண்டிகளுக்கு 20 ஆயிரம் ரூபாய் அதாவது நடமாடும் சுகாதாரக் குழுக்கள் இயங்கிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் ரூபாய் 15,000





என்று இருந்தது ரூபாய் 20 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது. இது 1982—83-ஆம் ஆண்டுக்குக் கிடைக்கும் என்று 5-ஆவது பக்கத்திலே மருத்துவ நல்வாழ்வுத் துறை கோரிக்கையில் இடம் பெற்றிருக்கின்றது. அதிலே 4-ஆவது பக்கத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 14 ஆயிரம் ரூபாயிலிருந்து 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கின்றது என்று இருக்கின்றது. இதிலே உள்ள தொடர் எப்படி இருக்கின்றது என்றால் நடமாடும் சுகாதாரக் குழுக்கள் இயங்கிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் ரூபாய் 15 ஆயிரத்திலிருந்து ரூபாய் 20 ஆயிரமாக உயர்த்தப்பட்டது என்று இருக்கின்றது. அதிலே, இருக்கின்ற சொற்றொடரைப் (W . n ) படித்துப் பார்த்தால் மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் எழுப்பிய அந்தப் பிரச்சினைக்கு நியாயமான காரணம் இருக்கின்றது. அப்படிச் சொல்லுகிறபோது நடமாடும் மருத்துவ சுகாதாரக் குழுக்களுக்கு தனியாக 15 ஆயிரம் ரூபாய் தொகை, 20 ஆயிரம் ரூபாய் தொகை என்று சொல்லி இருக்க வேண்டும். ஆனால், அப்படிச் சொல்லப்படவில்லை.

அதேபோன்று இன்னொரு கருத்து இங்கே இடம் பெற்றிருக்கின்றது. அல்மா ஆட்டா என்ற அந்த—ஊர் பெயர் என்று நான் நினைக்கிறேன். எனக்கு அதுபற்றித் தெரியவில்லை....

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : It is a l.tin term 'Alma ata' decl ration signifying Health for all by 2000 A.D.

திரு. க. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, அல்மா ஆட்டா உடன்படிக்கை என்று இருக்கின்றது. டிக்ளரேஷன் என்று ஆங்கிலத்திலே இருக்கின்றது. தமிழிலே இது உடன்படிக்கை என்று வெளியிடப்பட்டிருப்பதால் ஒருவேளை இதையும் டேனிடா உடன்படிக்கை என்று நினைத்து............

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அப்படி உடன்படிக்கை என்று இருப்பது கரெக்ட்தான். நாம் அதற்காகக் கையெழுத்து போட்டிருக்கிறோம்.

India is one of the signatories for alma ata decl rati n.

ஆகவே இந்தியாவிற்கும் அதற்கும் உடன்படிக்கை இருக்கின்றது.

We have signed the decl rati n.

திரு. க. அன்பழகன் : துணைத் தலைவரவர்களே, அமைச்சர் ஹண்டே அவர்கள் ஆங்கிலம் தெரிந்தவர்கள். டிக்ளரேஷன் என்ற துறையிலேதான் அது அங்கே அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

you canno change declaration into agreement. you have stated only "declaration"

அப்படி ஆங்கிலத்திலே டிக்ளரேஷன் என்று தான் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆங்கிலத்திலே டிக்ளரேஷன் என்று சொல்லப்பட்டவுடனே தமிழிலே உடன்படிக்கை என்று சொல்வது எப்படி ? ஆங்கிலத்திலே சொன்னதைத்தான் தமிழிலே

சொல்ல வேண்டும். தமிழிலே சொல்வதைத்தான் ஆங்கிலத்திலே சொல்ல வேண்டும். உண்மைக்கு மாறாகச் சொன்னாலும் மொழி பெயர்ப்பில் ஒரே விதத்திலேதான் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. அவர்களைத் தூண்டிவிடுகின்ற மாதிரி என்னுடைய பேச்சு அமையக்கூடாது. அந்த மொழி பெயர்ப்பினை நான் பார்க்கவில்லை, அங்கே இருக்கக்கூடிய விஷயத்தைச் சொல்கிறேன். ஆகவே, இந்த சின்ன விஷயத்திலே உண்மைக்கு மாறாக தகவலைச் சொல்லவேண்டியதில்லை.

by Alma Ata, we mean health for all by 2000 A.D.

என்பதற்காக ஒரு டிக்ளரேஷன் அங்கே கொடுத்தார்கள். இந்திய நாடும் அதற்குக் கையெழுத்துப் போட்டு உடன்படிக்கையாக்கி இருக்கிறோம் என்று சொன்னேனே தவிர, மொழி பெயர்ப்பு கரெக்டா என்ற அந்த வாதத்துக்குள்ளே நான் போகவில்லை. இருக்கக்கூடிய நிலைமை என்ன என்பதை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

திரு. க. அன்பழகன்: துணைத் தலைவர் அவர்களே, தயவு செய்து மறுபடியும் அமைச்சர் அவர்கள் தன்னுடைய கருத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். டிக்ளரேஷன் என்று சொல்லப்பட்ட ஒன்றை டிக்ளரேஷன் என்று கருத்துப்பட நீங்களும் சொல்லி அந்த முடிவின்படி நடைமுறைப் படுத்துவதற்காக என்று சொல்ல வேண்டுமே தவிர உடன்படிக்கை என்று சொல்கிறபோது

there are two parties who have to agree on a particular matter, here it is not two parties.

பலபேர் சேர்ந்து ஒரு முடிவுக்கு வருவது அதாவது. டிக்ளரேஷன் என்றால் ஒரு முடிவுக்கு வருவது என்றுதான் சொல்ல வேண்டும். டேனிடா உடன்படிக்கை என்று சொன்னேன். அது குறிப்பிட்ட நாட்டோடு செய்துகொள்ளப்பட்ட ஒரு கருத்தாக இருக்கும் என்றுதான் பார்த்தேன். ஏதோ டேனிடாவோடு இந்திய அரசு செய்துகொண்ட உடன்படிக்கையின்படி அங்கே வருகிறது. அதிலே எனக்கு மாறுபாடு கிடையாது. இதிலேயும் எனக்கு கருத்து மாறுபாடு கிடையாது.

எனவே, சொற்களால் ஏற்படுகின்ற குழப்பத்தை நினைவூட்டுவதற்காக, நான் இதை எடுத்துக் காட்டினேன்.

அண்மையிலே, தஞ்சையிலே தமிழ் மொழியை மருத்துவக் கல்விக்குப் பயிற்சி மொழியாக்க வேண்டுமென்ற ஒரு கருத்து எடுத்துச் சொல்லப்பட்டு, அதற்குள்ள இடையூறுகளும் அங்கே எடுத்துக் காட்டப்பட்டது. தமிழில் மருத்துவத் துறை நூல்கள் வெளி வருவதற்கு, அலோபதி நூல்கள் வெளி வருவதற்கு, ஒரு ஏற்பாட்டை மேற்கொண்டால், அதை ஊக்கப்படுத்துகின்ற ஒரு





காரியத்தை மேற்கொண்டால், அந்த திசையை நோக்கியாவது இந்த மருத்துவத்துறை நகராவிட்டாலும், அந்த திசையையாவது பார்த்துக் கொண்டிருக்கக் கூடிய வாய்ப்பு ஏற்படும்;

எனவே, தமிழ் மொழியில் மருத்துவப் படிப்பு படிப்பது நல்லது என்ற அடிப்படையில் இலங்கையிலே, யாழ்ப்பாணத்திலே தமிழ் அறிஞர்கள் பெரும்பாலோர் கலந்து கொண்டு, 20, 25 ஆண்டுகளுக்கு முன்னால் மருத்துவத் துறையிலுள்ள விஞ்ஞான சொற்களை எல்லாம் தமிழ்ப்படுத்தி ஏடுகளை எழுதியிருக்கிறார்கள். அந்த ஏடுகளில் பலவற்றை இங்கே வரவழைத்து, தமிழ்நாட்டினுடைய மருத்துவத் துறைக்குப் பயன்படுத்த விரும்பினால், அந்த ஏடுகளை அச்சிட்டுப் பயன்படுத்த விரும்பினாலும் இரண்டொரு சொற்களிலே தான் மாறுபாடு ஏற்பட முடியும் என்றாலும் பயன்படும்.

மத்திய அரசாங்கம் பொறியியற் கல்லூரி, மருத்துவக் கல்லூரி ஆகியவற்றினுடைய நுழைவுகளை ஒழுங்குபடுத்துவதற்காக, அதனுடைய தேர்வுகளை ஒழுங்குபடுத்துவதற்காக, ஒரு முறையை வகுக்கப் போவதாக அதற்கொரு சட்டம் கொண்டு வரப் போவதாகத் தெரிவிக்கிறார்கள். அது இண்டர்னல் அட்மினிஸ்ட்ரேஷன் என்ற முறையில், ஒரு மாநில அரசாங்கத்தினுடைய உள் உரிமையில் தலையிடுகின்ற ஒரு காரியமாக ஆகும். வேண்டுமானால், அவர்கள் சில முறைகளைச் சொல்லலாம். 'கேபிடேஷன் பீஸ்' வாங்கும் முறை இருக்கக் கூடாது என்று சொல்லலாம். மேலும், இந்தியன் மெடிகல் கவுன்சில் மூலமாக ஆலோசனை வழங்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறபோது, ஒவ்வொரு துறையிலும், எலிமென்டரி எஜுகேஷன், செகன்டரி எஜுகேஷன் பள்ளிகளில் எப்படி அட்மிஷன் கொடுப்பது என்கின்ற முறையில், அதற்கு ஆலோசனை கொடுக்கின்ற அளவில் வந்து, நடைமுறைச் சிக்கல்கள் வளராமல் இருக்க வேண்டுமென்பதற்காக, அந்தக் கருத்துக்கு மறுப்பு தெரிவிக்கின்ற கடமையை இந்த அரசு செய்ய வேண்டும்.

அடுத்து நான் சொல்ல விரும்புவது, தமிழ்நாட்டில் தொழு நோய் பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகிறது பல ஆண்டுகாலமாக. எனக்குக் கூட அதிலே கொஞ்சம் அக்கறை இருந்தது. அந்த தொழு நோய் பணி அண்மைக் காலத்தில் சற்று விரிவாக, பரவலாக நடைபெறுவதாக ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படி தெரிவிக்கப்பட்ட அந்தக் கருத்தில், எப்படிப்பட்ட விளக்கங்கள் கிடைக்கிறது என்று கேட்டால், இங்கே ஆங்கிலத்தில் தரப்பட்டிருக்கின்ற கருத்து,

> "Prevalance has been reduced from 20 per thousand in 1977 to 14·08 per thousand in 1981. The incidence has been furtner reduced from 3.1 per thousand in 1977 to 1.4 per thousand in 1981.

என்று காணப்படுகிறது.

I doubt the figures.

நான் இந்த புள்ளி விவரத்தை ஐயுறுகிறேன். ஆனால், தமிழில் எப்படி மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது என்று கேட்டால், ' பரவி உள்ளது ' என்ற கருத்திற்குப் பதிலாக ' பரவுதல் ' என்று கருத்து இருக்கிறது. ' பிரிவலென்ஸ் ' என்றால், ' பரவுதல் ' என்றிருக்கிறது. ' இன்சிடென்ஸ் ' என்றால் ' பாதிக்கப்படுதல் ' என்று இருக்கிறது. ' பரவுதல் ' என்று போட்டிருக்கின்ற காரணத்தினால், சாதாரணமாக இதைப் படிக்கின்ற போது, இது 20 விழுக்காடு பரவுகிறது. 1,000க்கு 20 பேர்களுக்கு இது பரவுகிறது என்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறது. பரவுகிறது என்பதல்ல. பரவியிருக்கும் அளவு என்பது தான். அதை நான் படித்துக் காட்டுகிறேன். (பக்கம் 25—கொள்கை விள்க்கக் குறிப்பில் : '' இந் நோய் பரவுதல் 1977 ஆம் ஆண்டில் 1,000 பேரில் 20 ஆக இருந்தது. 1981 ஆம் ஆண்டில் 1,000 பேரில் 14.03 ஆகக் குறைந்துள்ளது. இந் நோயின் பாதிப்பு 1977 ஆம் ஆண்டில் 1,000 மக்களுக்கு 3.1 ஆக இருந்தது. 1981 ஆம் ஆண்டில் 1,000 க்கு 1.7 ஆக குறைந்துள்ளது ''. இந்த நோய் புதிதாக பாதிப்பது, என்பது Incidence is every year, new occurance புதியதாகப் பரவுவது, இன்சிடென்ஸ் என்பது என்று குறிப்பிடப்படவில்லை. பிரிவிலென்ஸ் என்றால் பரவி யிருக்கிற அளவு என்று அப்படி குறிப்பிடப்படவில்லை. எனவே, தமிழிலே படிக்கின்றவர்களுக்கு குழப்பம் ஏற்படுத்துகின்ற அளவிலே இந்தக் கருத்து இடம் பெற்று இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் இதையொட்டி சில கருத்துக்கள் பேசப்படுகின்ற போது, இந்த அறிக்கையில் பக்கம் 28 இல், ' தமிழ்நாட்டில் மொத்த மக்கள் தொகை 4.11 கோடி'' என்றிருக்கிறது.

(இரவு 7-50)

தமிழ் நாட்டின் மக்கள் தொகை, மக்கள் நல்வாழ்வுத் துறையினர் 48 மில்லியன் என்று தெரிவித்திருக்கிறார்கள். இங்கே இந்த அறிக்கையில் புள்ளி விவரங்கள் தருகிற போது பழைய கணக்கை அப்படியே முன்னைய அறிக்கையைப் பார்த்து எழுதுவதினால் எழுத்துப் பிழை இல்லாமல் இப்படிக் காப்பி அடிக்கும் போது எப்படி அவர்களுக்கு சிந்திக்கும் நிலை வரும். எப்படி சுய அறிவு வரும். தமிழ் நாட்டின் மக்கள் தொகை 4,11,00,000 என்று வைத்து தேசீய தொழு நோய் திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட மக்கள் தொகை 3,81,00,000 என்று வைத்து அதற்கு மேல் இந்த விவரங்களைத் தருகிறபோது இப்படிப்பட்ட கருத்துக்கள் தரப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு ஆண்டும் சோதனை செய்யப்பட்ட மக்களின் எண்ணிக்கையை பார்க்கும்போது 1978 ஆம் ஆண்டில் 103.95 இலட்சம் பேர்கள். 1979 ஆம் ஆண்டில் 92.8 இலட்சம் பேர்கள். 1980 ஆம் ஆண்டில் 97.6 இலட்சம். 1981 ஆம் ஆண்டில் 104.1 இலட்சம் பேர்கள். பல ஆண்டுகளில் மொத்தத்தில் பார்த்தால் **ஏழு கோடிப் பேர்களைச் சோதித்திருக்கிறார்கள்.**





நான்கு கோடி மக்கள் வாழ்கிற தமிழ் நாட்டில் இந்தப் புள்ளி விவரத்தைப் பார்த்தால் ஏழு கோடிப் பேர்களை சோதித்திருக்கிறார்கள் என்று நிலை எப்படி வரும்? சோதித்தவர்களையே திரும்பத் திரும்ப சோதித்தார்கள் என்றால் சோதித்த வேலைக்கான கணக்கா இது? எப்படி இந்தப் புள்ளி விவரங்கள் பயன்படும்? இவ்வளவு பேர்களை சோதனை செய்தார்கள், என்று சொல்லும்போது நான் கூட எண்ணினேன். 12 இலட்சம், 20 இலட்சம், 31 இலட்சம் என்று வருகிறபோது ஆண்டொன்றுக்கு பத்து இலட்சம் பேர்களை அதிகமாக பரிசோதனை செய்திருக்கிறார்கள் என்று.

இந்தப் பணிக்கு அதிகமான பேர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். புதிய யூனிட்ஸ் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அந்தப் பணிகள் விரிவாக நடைபெறுகின்றன. உண்மைதான். இருந்தாலும் ஸ்டாட்டிஸ்டிக்ஸ்-இல் ஒரு தெளிவு ஏற்படவில்லை.

இன்னொரு கருத்து. இந்தப் புள்ளி விவரங்களில் 14 வயது வரை உள்ள குழந்தைகளை பரிசோதனை செய்யும் திட்டம் இருக்கிறது. தொழு நோயைப் பொறுத்து. 1978–79 ஆம் ஆண்டில் இருந்து செயல் படுத்தப்பட்டு வருகிறது என்று தெரிவித்தார்கள். 1974–75 ஆம் ஆண்டில் சென்னையிலும், வேறு சில இடங்களிலும் ஒரு பைலட் ப்ராஜக்ட் நடத்தப்பட்டது. அதன் விளக்கங்கள் அந்தத் துறைக்குக் கிடைக்காமல் இருக்கலாம். 1980–81 ஆம் ஆணடு அறிக்கையை எடுத்துப் படித்துப் பார்த்தால அந்த அறிக்கையில் இருக்கிறது, 1978–79 ஆம் ஆண்டில் இருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது என்று. அந்த அறிககையில் காணப்படுவது, இதுவரை பரிசோதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 16,23,638. நோய் இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டவர்கள் 21,747. மறுபடியும் இந்த ஆண்டு அறிக்கையில்—1978–79, 1979–80 ஆம் ஆண்டு வரை சொல்லப்பட்ட 16 இலட்சத்திற்குப் பதிலாக, இப்போது சொல்லப்படுவது எவ்வளவு தெரியுமா? 1978 ஆம் ஆண்டில் 14,30,214. 1979 ஆம் ஆண்டில் 17,79,721. ஆக 32 இலட்சம் பேர்கள் என்று இப்போது தரப்பட்டிருக்கிறது.

The figures in 1980 statement of the Hon. Minister is altered here with a different figure for the present convenience.

1980 ஆம் ஆண்டை இதில் சேர்க்கவில்லை. 1978–79, 1979–80 ஆம் ஆண்டுக்கு 1980 ஆம் ஆண்டில் தரப்பட்ட அந்த அறிக்கையில் வருகிற கருத்துக்கும் இந்த அறிக்கையில் காணப்படுவதற்கும் எவ்வளவு வேறுபாடு இருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்து, அரசு துறையில் உள்ளவர்கள் இப்படிப்பட்ட அறிக்கைகள் தருகிறபோது ஒன்றுக்கொன்று மாறுபாடில்லாமல் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் 1980 ஆம் ஆண்டு அறிக்கையில் இந்த அரசு தெரிவித்திருக்கிற கருத்து காச நோயாளிகளுக்கு ஒரு திட்டம். காச நோயால் பாதிக்கப்பட்டிருக்கிற, வேலூர், சேலம் போன்ற பகுதிகளிலுள்ள பீடித் தொழிலாளர்களை வாழ வைப்பதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்வதற்காக மேற் கொள்ளப்பட்டது அந்தத் திட்டம். அதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டு 38 இலட்சம் ரூபாய் செலவில் அத் திட்டம் நடைமுறைப்படுத்தப் படும் என்று அரசு தெரிவித்தது. அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

1980 ஆம் ஆண்டு அறிக்கையில் அக்கருத்து காணப்படுகிறது. அதைப் படிக்கிறேன். ''மாநிலம் முழுவதும் உள்ள பீடி மற்றும் கைத்தறி நெசவாளர்களிடையே காணப்படும் காச நோய் தன்மையைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்கிற தெளிவமைந்த சுகாதாரப் பாதுகாப்புத் திட்டம் ரூபாய் 36.45 இலட்சம் மொத்தச் செலவில் செயல்படுத்த அரசாங்கம் ஆணை வழங்கியுள்ளது.''

இன்றைய தினம் முழு மாநிலம் 5 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு நடமாடும் சிகிச்சைப் பிரிவினையும், ஒரு மாஸ் மினியேச்சர் ரேடியோகிராபி பிரிவையும் கொண்டிருக்கும். இந்த 5 தொகுதிகளிலும் சேலம், ஈரோடு, திண்டுக்கல, தூத்துக்குடி, வேலூர் தலைமையிடங்களாகக் கொண்டு இயங்கும் என்று தெரிவிக்கப்பட்டது. அது நடைமுறைப்படுத்தப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை. அறிக்கையிலே இல்லாத காரணத்தினால், நான் ஐயுறுகிறேன். எனவே, 36 இலட்ச ரூபாய் செலவில் ஒரு திட்டத்தைப் போட்டு, அது நடைமுறைப் படுத்தப் பட்டது பற்றிச் சொல்லாதபோது, அதைக் கேட்க எனக்கு உரிமை இருக்கிறது. எனவே, அதற்குப் பதில் அளிப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

அலோபதி மருத்துவத் துறைக்கு கோடிக் கணக்கில் நாம் செலவிட்டாலும் கூட, சுகாதாரத் துறைக்கு அதைப் போல செலவிட்டாலும் கூட. சென்னை நகரத்திலே இன்றைய தினம் நோயினால் ஏற்படுகின்ற பாதகங்கள் எந்த அளவுக்கு இருக்கின்றன என்பதை அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும். மலேரியாவினால் ஏற்படுகின்ற பாதகம் சென்னை நகரத்திலே மிக அதிகம். நீங்கள் தந்த புள்ளி விவரப்படி 62.56 சதவிகிதம். தமிழ்நாட்டிலே ஏற்பட்டிருக்கின்ற மலேரியாவினால் ஏற்பட்ட பாதகம், சென்னை நகரத்திலே மட்டும் ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கத்திலிருந்து வந்த ஒரு குழு கூட, சென்னை நகரத்திலே இருந்து பரவுகிற மலேரியா, மற்றப் பகுதிகளையும் பாதிக்கிறது என்று குறிப்பிடக் கூடிய அளவிலே, அதிகம் பாதிக்கப்படும் இடம் சென்னை—62 சதவிகிதம். அடுத்து சேலம், அதற்கடுத்து பெரியார் மாவட்டம். அப்படி பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலைமையை எண்ணிப் பார்க்கும்போது, சென்னை நகரத்தின் மொத்த சுகாதார நிலை தாழ்ந்து போவதையும், அதை





மாற்றியமைப்பதற்கு இந்த அரசு ஒரு ஒழுங்கான திட்டத்தை மேற் கொள்ள வேண்டுமென்பதையும் நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

பொது மருத்துவமனையில் ஏறத்தாழ மூன்று திங்களுக்கு முன்னால் என்று கருதுகிறேன். என்னிடத்திலே அதுபற்றிய விவரம் இல்லை. ஏறத்தாழ பல இலட்சக்கணக்கான மதிப்புள்ள மருந்துகள் விலையுயர்ந்த மருந்துகள் திருடு போனதாகவும், அதற்குப் பின்னால் அரசுக்கு தெரிய வந்ததாகவும், உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் நான் கேள்விப்படுகிறேன். என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? திருட்டுக்கு யார் யார் பொறுப்பு ? அதற்கு உடந்தையாக இருந்தவர் யார் ? என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்கள் என்று கருதுகிறேன்.

இராயப்பேட்டை மருத்துவ மனையில் அறுவை சிகிச்சைப் பிரிவு இரண்டு, மூன்று கூடங்கள் மூடி வைக்கப்பட்டிருக்கின்றன. ஒருவேளை டெடனஸ் ஏற்பட்டிருககலாம். டெடனஸ் ஏற்பட்டாலும், விரைவில் அதைத் திறப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டாக வேண்டும்.

ஹயர் செகண்டரி என்ற முறையில் இப்போது அண்மைக் காலத்தில் மேல் உயர்நிலைப் பள்ளிகளில் நர்சிங் கோர்ஸ் படிப்பதற்கான வாய்ப்பு நம்முடைய பெண்களுக்கு இருக்கிறது. இரண்டு ஆண்டு காலம், அந்த நர்சிங் பயிற்சியைப் பெற்றதற்குப் பின்னர், நர்ஸ் துறையில் முழு தகுதி பெறுவதற்காக நர்ஸ் கோர்சில் இடம் பெறுவதற்காக அவர்கள் விண்ணப்பிப்பார்களானால், அந்த விண்ணப்பங்களுக்கு முக்கியத்துவம் தரப்படவில்லை. இன்னும் சொல்லப் போனால், அதற்குப் பின்னர் அவர்களது உயரத்தைக் காரணம் காட்டி, அவர்கள் இரண்டு செண்டி மீட்டர் குறைவாக இருக்கிறார்கள் என்று சொல்லி, அவர்களில் பல பேர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை. எனவே, ஹயர் செகண்டரி கல்வி ஒரு பயனுள்ள படிப்பாக இருக்க வேண்டுமானால், அதிலே செவிலியருக்காகப் பயிற்சி பெற்றிருப்பது உண்மையாக இருக்குமானால், அதைக் கல்வித் துறை சொல்லுமானால், அவர்களுக்கு 'நர்ஸ்' படிப்பில் இடம் தருகின்ற முறையில் ஏற்படக்கூடிய குறைகளை மாற்றியமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே மற்றொன்று. செவிலியர்களுக்கான படிப்பு சென்னையிலும், வேறு பல கல்லூரிகளிலும் இத்தனை இத்தனை இடங்கள் என்று அறிவிக்கபட்டிருக்கின்றது. ஆனால், அறிவிக்கப்பட்ட அந்த இடங்களில் மாற்றம் ஏற்படுத்துவதற்கு அரசு அவ்வப்போது முனைகிறது. தேவையில்லாமல், அனாவசியமாக அவ்வப்போது எண்ணிக்கையை மாற்றுவது என்பது, செலக்‌ஷன் முறையில் ஊழல் ஏற்படுவதற்கு இடமாகும். எனவே, நினைத்த போது மாற்றுகின்ற முறையைக் கைவிட வேண்டுமென்று தெரிவிக்க விரும்புகிறேன்.

[திரு. க. அன்பழகன்] [1982 மார்ச் 11

செவிலியர்கள் தேர்வு நடைபெற்று, சென்னையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடைய பட்டியல் வெளியிடப்பட்டுவிட்டதாகவும் மதுரையிலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பட்டியல் வெளியிடப் படவில்லை என்றும் நான் கேள்விப்படுகிறேன். அது உண்மையாக இருக்குமானால், அந்தக் குறையை மாற்றுவதற்கு வழிகாண வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நான் தெரிவிக்க விரும்புவது, அலோபதி மருத்துவத்தை பற்றி அதிகம் சொல்வதைவிட, அதனோடு தொடர்பு உடையதாக இருக்கின்ற தொழுநோய் மறுவாழ்வு இல்லங்கள் இருக்கின்றனவே, அந்த மறுவாழ்வு இல்லங்களுக்கு ஒரு புனர் வாழ்வு தேவைப்படுகிறது. காரணம், மறுவாழ்வு இல்லங்கள் ஒவ்வொன்றிலும் சேர்க்கப்பட்ட 500, 600 பேர்கள் அவர்களுக்காக தரப்படுகின்ற உணவுக்காக, .72 ஆம் ஆண்டிலே தீர்மானிக்கப்பட்ட தொகை ரூ. 2.30 ஒரு நாளைக்கு. இன்றைக்கும் அதே ரூ. 2.30 தான். 1972லே இருந்து 1982-வ ஆண்டுவரையில், இதே ரூ. 2.30 என்று சொன்னால், அவர்களுக்கு தகுந்த உணவு கிடைக்காது என்ற காரணத்தால், அந்த இல்லங்களிலே தங்கியிருக்க விரும்ப முடியாத நிலைமை இருக்கிறது. அவர்கள் கேட்பது, மருத்துவ மனைகளில் தரப்படுகின்ற ஸ்டாண்டர்ட் டயட் வேண்டுமென்பதுதான். ஆனால், மருத்துவ மனைகளில் தரப்படுகின்ற டயட்டில், இடையே எவ்வளவு துண்டு விழுகிறது என்பது எனக்கும், டாக்டர் ஹண்டே அவர்களுக்கும் தெரியும். எனவே, அந்த டயட்டை நான் சொல்லத் தயாராக இல்லை. இந்தத் தொகை போதாது என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

[இரவு 8-00]

அவர்களுக்கு ஏற்கனவே 15 நாட்கள் விடுமுறை தரப்பட்டிருக்கிறது. இப்போது 5 நாட்களாக குறைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல அவர்களுக்கு டம்ளர், போர்வை, ஸ்பூன் போன்றவை வாங்கிக் கொடுத்து நான்கு ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. ஒரு வேளை அவைகளுக்கே தொழுநோய் வந்திருந்தாலும் இருக்கலாம். எனவே, அவைகளை மாற்றுவதற்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை, நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை என்று ஒரு முறையை வைத்து அந்த பண்டங்களை வாங்குவதற்கு அரசுதான் முயற்சிக்க வேண்டும். ஏற்கனவே, இந்த பண்டங்கள் வாங்குகிறபோது சூப்பர் மார்க்கட்டிலே வாங்கப்பட்டது. அது ஒரு காலம். இப்போது தனிப்பட்டவர்களுக்கு கான்ட்ராக்ட் கொடுத்து வாங்குகிறார்கள். இதனால் முறை தவறான காரியங்கள் வருகின்றன. வேண்டிய மருந்துகள் கொடுக்கப்படவில்லை என்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் அவர்கள் அங்கே துணிகள் நெய்கிறார்கள், செருப்பு தைக்கிறார்கள், காய்கறிகள் பயிரிடுகிறார்கள்; அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற துணிகள் தர



1982 மார்ச் 11] [திரு. க. அன்பழகன்]

மற்ற நிலையில் தரப்படுவதாகச் சொல்கிறார்கள். இந்த மறுவாழ்வு பெறுகிற பிச்சைக்காரர்களாக இருந்த இந்த தொழுநோயாளிகளுக்கு இந்த எண்ணம் வரலாமா என்று கேட்கக்கூடாது. நாம் அல்லவா அவர்களுக்குப் பாதுகாப்பாளிகள் என்று சொல்லி அவர்களை கொண்டு வந்தோம் என்ற காரணத்தால் அவர்களுக்கு வேண்டியவற்றை செய்ய அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையிலே இருக்கிற ஹோமியோபதி கல்லூரி எந்த நோக்கத்தில் அமைக்கப்பட்டது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். மதுரையிலே இருந்த கல்லூரி பாழ்பட்டு போனதாலே, சரியாக நடக்க வில்லை என்பதாலே, ஹோமியோபதி தமிழ்நாட்டிலே வரவேண்டிய ஒரு மருத்துவம் என்ற காரணத்தாலே சென்னைக்கு மாற்றப்பட்டது. ஏறத்தாழ 15 ஆயிரம் பேர் பிராக்ட்டிஷனர்ஸ் என்று ரிஜிஸ்டர் செய்து கொண்டிருக்கிறவர்கள், அவர்கள் தரமுள்ள படிப்பு படிக்க முடியாது என்ற காரணத்தால், தரமுள்ள படிப்பு படித்த சில பேர் தமிழ்நாட்டில் உருவானால்தான், இந்த 15 ஆயிரம் பேர் செய்கிற வைத்தியத்திலே குறைகள் ஏற்படுமானால் நிவர்த்தி செய்கிற வாய்ப்பு ஏற்படும் என்ற காரணத்தாலே அந்தக் கல்லூரி இங்கே ஏற்பட்டது. அந்த கல்லூரி ஏற்படுத்துவதற்கு இடம் இல்லாத காரணத்தால், அன்று கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி டீன் அவர்களுடைய குவார்ட்டர்சாக இருந்த இந்த இடத்தை, நானே சென்று அவர்களிடத்திலே பேசி இந்த கட்டிடம் பழுதுபட்டிருக்கிற காரணத்தாலே, பழுதான கட்டிடத்திலே நீங்கள் இருக்க வேண்டாம், ஓராண்டு காலம் இந்த மாணவர்கள் படித்துவிட்டுப் போகட்டும், அதற்கு பின்னாலே வேறு கட்டிடத்திற்கு ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லி அதை துவங்கினோம். ஆனால் இந்த 7 ஆண்டு காலத்தில் அதற்கொரு கல்லூரி கட்டிடம் ஏற்படவில்லை. ஹோமியோபதி கல்லூரியில் மதுரையிலே படித்த அத்தனை மாணவர்களையும் கொண்டு வந்து சேர்த்திடும் வகையில் எந்தெந்த வகுப்பிலே இடம் பெற்றால் பொருத்தமாக இருக்கும் என்று ஹோமியோபதி வல்லுநர்கள் தீர்மானித்து அது நடைபெற்றது. ஆனால் இதுவரையில் அந்த மாணவர்களுடைய கல்வி வளர்ச்சிக்கு எந்த ஒரு பணியும் நடைபெறவில்லை. அந்த மருத்துவ கல்லூரிக்கு இன்னொரு இடத்தில் கட்டிடம் கட்டிக் கொடுப்பதற்கு 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடெல்லாம் தீர்மானிக்கப்பட்டிருந்தது நான் இருந்தபோது, அண்ணாநகரிலே கந்தசாமி கல்லூரிக்கு பின்னாலே ஒரு இடத்திலே எப்படியாவது ஒரு இடத்தை கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் இருந்தது. கல்லூரி கட்டிடத்திற்கு ஒரு முயற்சியும் இல்லை. அந்த கல்லூரிக்கு கட்டிடம் மட்டுமல்ல, லைப்ரரி இல்லை, லேபரட்டரி இல்லை. அந்த கல்லூரி மருத்துவமனைக்கு 25 படுக்கைகள் மட்டும் இருக்கின்றன. நோயாளிகள் வருகிறார்கள், சிகிச்சை பெறுகிறார்கள். அந்த கல்லூரிக்கென்று மாணவர்கள் விடுதி

இல்லாத காரணத்தால் தனிப்பட்ட இடத்திலே தங்கியிருக்கிறார்கள். மாணவர்களுக்கு வந்து போவதற்கு ஒரு பஸ் வேண்டுமென்று அவர்கள் கேட்டார்கள். உந்து வண்டி கொடுத்து விட்டீர்கள் ; அது தள்ளு வண்டியாகத்தான் இருக்கிறது. கொடுத்து ஆறு மாதம் இருக்கலாம் என்று கருதுகிறேன். இந்த அறிக்கையிலே தான் சொல்கிறீர்கள். அமைச்சர் முத்துசாமி அவர்கள் பெரிய மனது வைத்து நீண்ட காலம் ஓடிய வண்டியாக நல்ல அனுபவம் உள்ள வண்டியாக பார்த்து அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்த வண்டி ஓடவில்லை. மாணவர்களுடைய மனப்பான்மையை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் மனதிலே எவ்வளவு குறைகளை தான் தாங்குவார்கள்? உடனே அமைச்சர் ஹண்டே அவர்கள் ஏதோ அன்பழகன் அவர்கள் இந்த மாணவர்களுக்கு ஊக்கம் கொடுக்கிறார் என்று நினைக்கக்கூடாது. நான் மாணவர்களுக்கு எல்லாம் சொல்கிற உரை நீங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால் இந்த ஆட்சியில் உங்களுக்கு தண்டனைதான் கிடைக்கும் என்று நானே பயமுறுத்தி தான் அனுப்புகிறேன். ஆறு மாதத்திற்கு மேல் அந்த கல்லூரிகள் மூடியிருந்து அண்மையில் திறந்திருக்கிறார்கள். அந்த கல்லூரி வளர்ச்சிக்கு என்ன நிதி ஒதுக்கியிருக்கிறீர்கள் ? என்ன செய்யப்பட்டிருக்கிறது ? கட்டிடம் இல்லை, விடுதி இல்லை, லைப்ரரி இல்லை ; மாணவர்களுக்கு பயன்படக்கூடிய ஒரு லைப்ரரி வேண்டாமா ? அங்கே இருக்கிற ஆசிரியர்கள் மூன்று வருடம் ஒரு பாடம் நடத்துவது பிறகு வேறு பாடம் நடத்துவது என்று மாற்றியிருக்கிறார்கள் ஒரு பாடத்திலே புரோபிஷயன்சி ஒரு ஆசிரியருக்கு கிடைப்பதற்கே ஒரு பத்து பன்னிரெண்டு வருட காலமாகும்.

அவ்வளவு காலம் இருந்தால் தான் அவருக்கு கெப்பாசிடிடூச், சிறப்பாக அமையும். ஏனென்றால் அத்தனைபேரும் எங்கேயோ படித்துவிட்டு ஆக்ஸ்போர்டிலே இருந்து வந்தவர்கள் அல்ல. அவர்கள் இடம் மாற்றி, சப்ஜெக்ட் மாற்றி நியமிக்கப்பட்டிருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். இன்னும் சொல்லப்போனால் ஹோமியோபதி மருத்துவமனை சென்னையில் இருந்து, தினம் ஐயாயிரம் பேர், இரண்டாயிரம் பேர் அதிலே மருத்துவம் பெற்றால் அது அலோபதியில் ஆகிற செலவைக் குறைக்கும். என்னுடைய பர்ஸ்ட் கன்டன்ஷன் ஹோமியோபதியினால், தமிழ்நாட்டைப் போன்ற வறுமையுள்ள நாடுகளுக்குப் பலன் உண்டு. அதை மனமார நான் ஏற்றுக் கொள்கிறேன். அலோபதியிலே சிகிச்சை செய்யமுடியாத சிலருக்கு ஹோமியோபதி மருந்து கொடுத்து அவர்களுக்கு அப்படிப்பட்ட சிகிச்சையினாலே பயன் கிடைத்திருக்கிறது. மூன்றாவது அலோபதியிலே ஏற்படக்கூடிய சில ரீஆக்‌ஷன்ஸ் ஹோமியோபதியிலே கிடையாது. நான்காவது அலோபதியிலே வரக்கூடிய சில ஆபத்துக்கள் ஹோமியோபதியிலே கிடையாது. 100-க்கு 1 சதவீதம் தான் அதிலே குறைபாடு வரும். ஹோமியோபதியிலே அதிகம் படிக்காதவர்கள் கூட மருந்தைப் பயன்





படுத்தினால் பெரிய குற்றம் ஆவதில்லை. ஆனாலும் ஹோமியோபதி கல்லூரி ஏன் இந்த அளவுக்கு கவனிக்கப்பட முடியாத நிலையில் இருக்கிறது என்றால் அதற்காக ஒரு ஹானரரி டைரக்டர்—டைரக்டர் இலாகா முறைப்படி போடுவதற்கு ஆள் கிடைக்கவில்லை என்று சொல்வீர்கள் — ஒரு ஹானரரி டைரக்டர் அல்லது ஹோமியோபதி கவுன்ஸிலினுடைய தலைவராக இருக்கிறவரை நேரடியாக அப்படி நியமித்து, அவர் சூப்ரவைஸ் செய்து அங்கிருந்து அட்வைஸ் செய்யவும் நேரடியாக செகரட்டரியோடு தொடர்புகொள்ளக்கூடிய ஹானரரி டாக்டர் ஒருவர்தான் டைரக்டர் பொறுப்பிலே இருக்க வேண்டும்.

Any M.B.B.S. doctor not be helpful for any Homeopathy College. அவர்கள் படித்த படிப்பு அதைப்பற்றி அவர்களை, உணர விடாது. நானே எம்.பி.பி.எஸ். படித்திருந்தாலும் சரி, நான் சொல்லிக்கொள்ள விரும்புவது பயின்ற எண்ணங்கள் வேறு திசையிலே வேறு துறையிலே ஈடுபட்டு விட்ட காரணத்தினால் ஹோமியோபதியினுடைய அவசியத்தை உணரமுடியாது.

மற்றொன்று ஹெல்த் டிபார்ட்மென்டிலே டி.எம்.எஸ்.-இல் அது இணைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால் அந்த மாணவர்கள் ஓரளவுக்கு பயிற்சிப் பெறுவதற்கு குரோம்பேட்டையிலே இருக்கின்ற தாம்பரம் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. அரசாங்கம் எண்ணிப்பார்த்து இதை டி.எம்.இ. துறையிலே இணைத்து, கீழ்ப்பாக்கம் மருத்துவமனையிலே அவர்களுக்கு ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் பயிற்சி கொடுக்கக்கூடிய வாய்ப்பு இருக்குமானால் அவர்களுக்கு எளிதாக இருக்கும். எனவே இவற்றையெல்லாம் ஆலோசிக்க வேண்டும்.

ஹோமியோபதி மருத்துவத்தால் ஏற்படக்கூடிய நன்மையை இன்றையதினம் கேரளாவிலே பயன்படுத்துகிறார்கள் நல்ல அளவுக்கு. ஆந்திராவிலே ஆண்டுக்கு 20, 30 ஆஸ்பத்திரிகள் திறக்கிறார்கள். நம்முடைய அரசாங்கம் 3 ஆண்டுகளாகச் சொல்லி, 8 இடங்களில் ஹோமியோபதி டாக்டர்களுக்கு வேலை கொடுத்திருக்கிறார்கள். 8 இடங்கள் தான் எனில் இதில் எவ்வளவு பெரிய பஞ்சம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஹோமியோபதி மருத்துவத்தினாலே அரசாங்கத்திற்கே லாபம்தான். The patient gains, the Government gains as the public expenditure is less.

இன்னும் ஒரு வகையில் நான் ஆழ்ந்து எண்ணிப்பார்ததுச சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மருத்துவமனைக்குப் போய் வருகிற வேலைகூட கொஞ்சம் குறையும். ஒரு ஹோமியோபதி மருந்தை ஒரு ஹோமியோபதி டாக்டர் திறம்பட கொடுத்துவிடுவாரானால் ஒரு வாரத்திற்கு தினம் 3 மாத்திரை அல்லது 8 மாத்திரை என்று சாப்பிட்டால் மருத்துவ

மனைக்குப் போய் வருகிற வேலைகூட குறையும். இப்படி எத்தனையோ பயன்கள் இருக்கின்றன. அந்தப் பயன் கருதி ஹோமியோபதிக் கல்வியை தரமுள்ள நிலையிலே உயர்த்துவதற்கு முயற்சிகள் எடுக்க வேண்டும். சென்னையிலே இருக்கின்ற ஹோமியோபதி கல்லூரியை சேலத்திற்குக் கொண்டுபோகலாம் என்று எண்ணுவதாக அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்கள் சொன்னதாக நான் கேள்விப்பட்டேன். சேலத்திலும் இதனால் திருப்தி ஏற்படாது, சென்னையிலும் மகிழ்ச்சி ஏற்படாது. இப்படி இடம் மாற்றி இடம் மாற்றித்தான் நாம் கெட்டுப்போயிருக்கிறோம். ஹோமியோபதி கல்லூரி சென்னையிலே இருந்தால் நெசசரி அட்மாஸ்பியர்—தேவையான சூழ்நிலையிலே அவர்களுக்கு வளர்ச்சி ஏற்படும். சேலத்திற்கு என்ன தேவை என்பதை நான் சொல்கிறேன். அங்கே அலோபதி மருத்துவக் கல்லூரி ஏற்படுத்துவதாகச் சொல்லி அதற்கான முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு அது பாதியிலேயே நின்றுபோய்விட்டது. எனவே அந்த முயற்சியிலே ஈடுபடலாம். ஹோமியோபதி கல்லூரியிலே தனி கவனம் செலுத்தி அந்த மாணவர்களுடைய குறைகளைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு ஹவுஸ் சர்ஜன்களுக்கு மாதம் 175 ரூபாய் தான் தரப்படுவதாகத் தெரிவிக்கிறார்கள். மற்ற ஹவுஸ் சர்ஜன்களுக்கு 350 ரூபாய் தரப்படுகிறது என்று சொல்கிறார்கள். இந்த மாதத்திற்கு 175 என்பதற்குப் பதில் குறைந்தது 250 ரூபாய் வழங்க வேண்டும். இன்னும் சொல்லப் போனால் அந்தப் படிப்பு, பட்டயப் படிப்பாக டிப்ளமோ ஆக இருக்கின்ற காரணத்தினால் அதை ''டிகிரி'' கோர்ஸ் ஆக மாற்றி அரசு அதற்கு வழி செய்து, முடிந்தால் அதைப் பல்கலைக் கழகத்தோடு இணைப்பதன் மூலமாக கல்வித் தரத்தை உயர்த்த வழிகாண வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சித்த மருத்துவத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி நான் நேரடியாகவே அமைச்சர் அவர்களிடத்திலே பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இருந்தாலும் ஆரம்ப சுகாதார நிலையங்களிலே சித்த மருத்துவரை நியமிக்கப் போகிறோம் என்று சொல்லி 200 இடங்களில் நியமிப்போம் என்று கடந்த ஆண்டு அறிக்கையிலே தெரிவித்து 101 இடங்களிலேதான் நியமித்திருக்கிறோம், இன்னும் 99 இடங்களிலே நியமிக்கவில்லை என்று சொல்லியுள்ளீர்கள்.

[இரவு 8-10]

நீங்கள் நியமிக்காததற்காக நான் குறை சொல்லவில்லை. ஆனால் இங்கே தரப்பட்டிருப்பது INDIAN MɛD CINE—PERFORMANCE BUDGET—Page 30 The personal summary of the Siddha wi gs at Primary Health Centres as on date என்ற தலைப்பு. அதிலே 200 டாக்டர்களை நியமித்து, 200 பார்மசிஸ்ட்டுகளை நியமித்து, 200 ஹாஸ்பிடல் சர்வன்ட்டுகளை



நியமித்து They are working as on date என்றால் பர்ஃபார்மன்ஸ் இலட்சணம் எப்படியிருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். எதை வேண்டுமானாலும் அறிக்கையாகத் தருவதற்கு ஒரு இலாக்காவா?

20 இடங்களில் அரசாங்க ஆதரவில் தனி மருந்தகங்களைத் தோற்றுவிக்க சித்த மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று முன்பு சொல்லப்பட்டது. ஆனால் இதுவரையில் அப்படி யாரும் நியமிக்கப்படவில்லை. அதைப்போல பஞ்சாயத்து யூனியன்களில் இயங்குவதாகச் சொல்லப்படுகின்ற 500, 600 மருந்தகங்கள் இன்று செயற்படவில்லை.

இதற்காகப் பஞ்சாயத்து யூனியனை நான் குற்றம் சொல்லவில்லை. நீங்கள் பஞ்சாயத்து யூனியன்களைக் கலைத்து நீண்ட நாட்கள் ஆகிவிட்டது. எனவே, யூனியன் பெயரால் உள்ளவை இயங்கவில்லை. கிராம மருந்தகங்களும் இயங்கவில்லை. கிராம மருத்துவர்கள் இருந்தாலும் ஊதியம் குறைவாக இருக்கின்ற காரணத்தாலும், மருந்துகள் கிடைக்காத நிலையிலேயும் அவர்களும் செயல்படவில்லை. மூன்றாண்டுகள், ஐந்தாண்டுகளாகச் சொல்லிக்கொண்டு வரப்படுகின்ற ஒரு கருத்து மூலிகைப் பண்ணைகளை உருவாக்குவோம் என்பது. நான் இருந்த காலத்திலேயிருந்தே ஆலோசனை செய்யப்பட்டது. வீரப்புலி காடு பற்றிப் பேசப்பட்டது. வீரமும் போய் புலி மட்டும் மிச்சமாகி, காடு எப்படியோ இருக்கிறது.

சென்னையில் அறிஞர் அண்ணா மருத்துவமனைக்கு அருகில் மூலிகை வளர்ப்புத் திட்டம் போடப்பட்டு அதற்கு ஒருவரை ஓராண்டு, இரண்டாண்டுக் காலம் நியமித்திருந்தோம். பிறகு நெருக்கடி கால நேரத்தில் அதுவும் கைவிடப்பட்டு தற்பொழுது கட்டாந்தரையாக இருக்கிறது. பிறகு அதற்கு நிதியை ஒதுக்கினார்கள். அவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதியும் கூட செலவு செய்யப்படாதபொழுது யார் மீது நொந்து கொள்வது? 1981-82 ஆம் ஆண்டு இந்தத் துறைக்கு 231 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் செலவிடப்பட்ட தொகையோ 165 இலட்சம் மட்டுமே. இந்த 231 இலட்சம் ரூபாயிலேயும் கூட பெரும்பாலும் ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட நடைமுறை நிர்வாகம், நடைமுறை டாக்டர்கள் சம்பளம், மருத்துவமனைக்காக செலவழிக்கப்பட்ட செலவு ஆகியவைகளுக்குத்தான் செலவு செய்யப்பட்டு 66 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்படாமல் இருக்கிறது. இது ஸ்பூண் ஃபீடிங் டிபார்ட்மெண்ட், கரண்டியிலே கொஞ்சம் கொஞ்சமாக ஊட்டிதான் வளரும். அப்படி ஊட்டி வளர்க்கப்பட வேண்டியதுதான் சித்தமருத்துவம்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் பாலசுப்பிரமணியம் அவர்களும், வேறு உறுப்பினர்களும் சொன்ன கருத்தை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். சித்த மருத்துவர்கள் பத்துப் பேர்

ஒன்றாகச் சேர்ந்து ஒருமித்த ஒரு கருத்தைச் சொல்வது கடினம். அவரவர்களுக்கும் தனித்தனி ஸ்கூல் ஆஃப் தாட், அவரவர்களுக்கும் 20 மருந்துகள், 30 மருந்துகள் என்று தெரியும். ஆகவே பாலசுப்பிரமணியம் அவர்கள் சொன்னதைப்போல யார் யாருக்கு எந்த நோயைப்பற்றித் தெரியுமோ அதைப்பற்றியும், அதற்கான மருந்துகளைப்பற்றியும் அவர்கள் தங்களிடம் ஒரு பிரதியை வைத்துக்கொண்டு எழுதி அனுப்பினால் அந்த மருந்து ஒப்புக்கொள்ளப்பட்டால், அது புதிய மருந்தாக இருந்தால், பயனுள்ள மருந்தாக இருந்தால் ஆயிரம் ரூபாயோ அல்லது இரண்டாயிரம் ரூபாயோ பரிசுகள் அளிக்கப்படும் என்ற ஒரு திட்டத்தை வைத்தால் அவர்களை ஊக்கப்படுத்த முடியும். யாராக இருந்தாலும் மருந்தைப்பற்றி வெளியிலே சொல்வதற்கான ஊக்கம் உண்டாகும். மேலும், இந்த அரசு இதற்கு முன்னால் 1980 ஆம் ஆண்டு சொன்ன தொகையையும் செலவழிக்கவில்லை; 1981-82 ஆம் ஆண்டில் சொன்ன தொகையையும் செலவழிக்கவில்லை; 1982-83 ஆம் ஆண்டில் சொல்லப்பட்டிருக்கின்ற தொகையையாவது செலவழிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீங்களே அறிவித்திருக்கின்றபடி ''சித்தா சயன்ஸ் டெவலப்மெண்ட் கமிட்டி, என்று அமைத்திருக்கின்ற அந்தக் குழு ஆலோசனைக் குழுவாக மட்டும் இயங்காமல் செயல்படுகின்ற குழுவாக இருந்தால் நல்லது. முத்தமிழ்க் காவலர் திரு. கி.ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தலைமையில் குழு நியமிக்கப்பட்டிருப்பது என்னைப் பொறுத்தவரையில் வரவேற்கத்தக்கது. ஆனால் செயல்படுத்துவதை யார் மூலம் செய்வது? அந்தக் குழுவில் டைரக்டர் ஆஃப் இன்டியன் மெடிசன் இருப்பது சரியல்ல என்று தீர்மானமாக நிறைவேற்றப்பட்டிருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். பலர் ஒரு துறையிலே இடம் பெற்றால் அத்துறை வளர்ச்சியைப்பற்றி அக்கறைப்படுவதில்லை. அவர்கள் வாங்கும் சம்பளம்,

D.A. T.A. and other allowances which are not recognized ஆகியவையே பலரின் நோக்கமாக ஆகிவிடுகிறது. எனவே, நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன், இந்த சித்த மருத்துவத்தை வளர்க்கின்ற முறையில் மூலிகைப் பண்ணைகளை ஆரம்பித்து அதற்குத் தனியாக ஒரு இயக்குநர் அளவிற்கு அதிகாரியை நியமனம் செய்யுங்கள். அதில் ஒன்றும் தவறில்லை. நீங்கள் ஆயிரம் ரூபாய் சம்பளம் கொடுத்தால்கூட, ஆடிட் அப்ஜக்ஷன் வந்தாலும்கூட நான் வருத்தப்படமாட்டேன், இது அரசாங்கத்தினுடைய கொள்கை என்று தெரிவியுங்கள். மூலிகைப் பண்ணைத் தொழிலுக்கு ஒரு தனி இயக்குநரைப்போல முழுப் பொறுப்போடு ஒருவர் வேண்டும். மருந்துகள் செய்வதற்கு பாளையங்கோட்டை மருத்துவக் கல்லூரி, அறிஞர் அண்ணா மருத்துவக் கல்லூரிகளில் ஏற்கனவே ஏற்பாடு செய்ததாக அறிவிக்கப்பட்டு காரியங்கள் நடைபெறவில்லை; நவீன கருவிகள்



வாங்கவில்லை. இன்னும் சொல்லப்போனால், மெக்கனைஸ்ட் ஃபார்மிசி என்று சொன்னார்கள். அதற்கான கருவிகள் வராத காரணத்தால், உரலும் உலக்கையும் வைத்து, இடித்து, அண்ணா நகரிலே கட்டப்பட்ட கட்டத்தினுடைய தரையெல்லாம் பெயர்ந்து போயிருக்கிறது. பாளையங்கோட்டையிலே இன்னும் கருவிகள் தரவில்லை. மருந்து தயாரிப்பதற்கு தனித் திறமை வேண்டும். அதற்கு நல்ல ஆற்றல் வேண்டும். அப்படிப்பட்டவர்களை special officer for such and such work என்ற முறையில் நீங்கள் நியமித்தால்தான் மருந்து தயாரிக்க முடியும்,

அடுத்து, நான் சொல்வது, சித்த மருத்துவக் கல்லூரி ஒன்று சென்னையிலே வந்தால்தான் அண்ணா மருத்துவ மனையோடு ஒட்டி வந்தால்தான் இங்கே இருக்கிற இந்த மருத்துவ மனையைப் பயன்படுத்தி ஒரு வளர்ச்சி ஏற்படுத்த முடியும்.

இவைகள் எல்லாவற்றையும்விட பொள்ளாச்சியிலே மறுபடியும் மருந்து உற்பத்தி நிலையம் ஏற்படுத்துவதாக அமைச்சர் தெரிவித்து இருக்கிறார். கோயம்புத்தூரிலே அறிஞர் ஜி.டி.நாயுடு அவர்கள் மருந்து உற்பத்திக்கே ஒரு மருந்தகம் ஏற்படுத்த முயற்சித்தார். ஜி.டி. நாயுடுவினுடைய திறமை நமக்கெல்லாம் தெரியும். அப்படிப்பட்டவர் அதிலே முழு வெற்றி காணாமல் பின்னாலே கைவிட வேண்டிய நிலமை ஏற்பட்டது. எனவே, பொள்ளாச்சிக்குப் போவதற்குப் பதில் ஒன்று பழனி போய், சித்த மருத்துவர்கள் ஏராளமாக இருந்து மருந்துகள் தயாரிக்கிறார்களே அந்த வட்டாரத்திலே மருந்து உற்பத்திக்கான அந்த நிலையத்தை ஏற்படுத்தினால் The atmosphere in that area ஒருவாறு உதவி செய்வதாக இருக்கும், தெரியாதவர்கள் தெரிந்து கொள்ள வாய்ப்பிருக்கும். அல்லது, அந்த மருந்து உற்பத்தி நிலையம் ஏற்படுத்துகிறபொழுது, சென்னையிலே பாளையங்கோட்டையிலே ஏற்படுத்தி அதன்மூலமாக மருந்தை உற்பத்தி செய்கிற அந்தக் காரியத்தை மேற்கொள்ள வேண்டும். அல்லது மூலிகைப் பண்ணை வைக்கிற ஒரு இடத்தை தேர்ந்தெடுத்து, அந்த மூலிகைப் பண்ணையோடு ஒட்டி, மருந்து உற்பத்தி நிலையத்தை ஏற்படுத்த வேண்டும். அந்த முறையைக் கையாளுங்கள் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இனி, நான் உங்களுடைய நேரத்தை அதிகம் எடுத்துக் கொள்ளாமல் சுருக்கமாக முடிப்பதற்காகச் சொல்ல விரும்புகிறேன் சித்த மருத்துவம் ஊசலாடிக்கொண்டிருக்கிறது. தமிழ்ச் சமுதாயத்தை வாழ வைக்கவேண்டிய மருத்துவம் இன்றைக்கு வாழ வைப்பதற்கு ஆளில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறது. நிதி ஒதுக்குவதாகச் சொன்னால் மட்டும் போதாது. இன்னும் எத்தனையோ கருத்துக்களை அதைப்பற்றி நான் சொல்ல முடியும். இந்தச் சித்த மருத்துவத் துறையில், பாளையங்கோட்டை மருத்துவக் கள்லூரியிலே பேராசிரியர்கள் பதவி காலியாக இருக்கிறது. ரீடர்கள் பதவிகள் காலியாக இருக்கின்றன. இந்த நிலையில்

எம்.டி. படிக்கின்ற மாணவர்கள் எப்படிப்பட்ட பயிற்சியைப் பெறமுடியும்? ஏற்கனவே உள்ள சிலபேர் போய்விட்டால், மறுபடியும் நீங்கள் விளம்பரம் செய்கிறபோது, 5 ஆண்டுகள் அனுபவம் உள்ளவர்கள்தான் விண்ணப்பம் போடலாம் என்றால், 5 ஆண்டுகள் அனுபவம் பெற்ற முதல் எம்.டி. கிடைக்க இன்னும் 6 மாதம் இருக்கிறது. ஏற்கனவே,. எம்.டி. படித்து 5 ஆண்டு எக்ஸ்பீரியன்ஸ் இல்லாத காரணத்தால் வரமுடியவில்லை. எனவே You have to relax the rules and Regulations in order to provide teaching staff நீங்கள் ஏற்கனவே ஏற்படுத்திய விதிமுறைகளிலே குறை இருக்குமானால், விதியை உடனே மாற்றி, யார் யார் வருகிறார்களோ அவர்களுக்கு வாய்ப்பளித்து, பாளையங்கோட்டைக் கல்லூரியை முறையாக நடத்துவதற்கான முயற்சியை எடுத்துக் கொள்ள வேண்டும். பாளையங்கோட்டை கல்லூரி நாளுக்கு நாள் நலிந்து வருகிறது. தகுந்த அளவுக்கு யாரோ ஒரு முதல்வர் அக்கறை உள்ளவர் இருப்பதாக நான் கேள்விப்பட்டாலும்கூட அதிலே இருக்க வேண்டிய அளவுக்குத் தகுந்த ஆசிரியர்கள் இல்லையென்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

இந்த அரசாங்கம், இதுவரையில் 3 ஆண்டுக்காலம், 4 ஆண்டுக்காலம், தொடர்ந்து அறிக்கையிலே தெரிவித்து இருப்பது, சித்த மருவத்திற்காக 500, 600 ஓலைச் சுவடிகள் இருக்கின்றன. ஏற்கனவே தயாரானகையெழுத்து ஏடுகள் (மானுஸ்கிரிப்ட்டும்) இத்தனை புத்தகங்கள் எங்களிடத்திலே இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால், அச்சாகவேண்டிய ஏடுகள் இத்தனை இருக்கின்றன என்று சொல்லும்போது, 1900 ஏடுகள் (The number is not ordinary) எங்களிடம்இருக்கிறது. இந்த 1900 ஏடுகளில் சில அச்சாகியிருக்கின்றன என்று டாக்டர் ஹண்டே அவர்களுடைய அறிக்கையிலே காண்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த 4 ஆண்டுக்காலம் எதுவும் அச்சானதாக எனக்குத் தெரியவில்லை. இருந்தால் தயவுசெய்து டாக்டர் ஹண்டே அவர்கள் சொல்ல வேண்டும். 4 ஆண்டுக்காலத்திலே 4 ஏடுகள் அச்சாகியிருந்தால்கூட தயவுசெய்து சொல்லுங்கள். அதற்கு முன்னாலே, 1977-78வது ஆண்டு வரையிலே, 1974-லே போட்ட திட்டப்படி அச்சான நூல்கள், 1979-லே அச்சாகி வந்தவை, 1977-லே அச்சாகி வெளிவந்துள்ள சாம்பசிவம் அகராதி அறிஞர் ஜி.டி. நாயுடுவின் பெருந்தன்மையாலே அச்சிட்டு தரப்பட்ட 4-வது பகுதி 5-வது பகுதி அந்த ஏடுகளுக்குக்கூட அரசாங்கத்தாலே இன்னும் விலை வைக்கப்படவில்லையென்பதை நான் வருத்தத்தோடு தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். 1979-வது ஆண்டு வெளிவந்த அகராதிக்கு ஏன் விலை வைக்க முடியவில்லை? என்று தெரியவில்லை. ஜி.டி. நாயுடு இலவசமாக அச்சிட்டுத் தந்தார்கள். அவருடைய மறைவுக்குப்பின் அவருடைய மகன் அந்தக் கடமையைச் செய்தார். அச்சிடும் தாள்மட்டும்தான் அரசாங்கம் கொடுத்தது, என்வே, அந்தத் தொகுதிகளிலே 5 பகுதிகள் இருக்கின்றன அந்த தொகுதியை ஒரு நாமினல் பிரைஸ் அதற்கான விலை





யாகத் தீர்மானித்து, அதைக் கொடுக்கவேண்டும். அதோடு கூட, சாம்பசிவம் அகராதி மூலமாக, சித்த மருத்துவத்திலே ஈடுபட்டவர்கள் அறிவு மேம்படவும் மருத்துவத்தைப் பெருக்கவும் வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[இரவு 8-20]

இறுதியாக சித்த வைத்தியப் பயிற்சி பெறுவதற்கு, பரம்பரை மருத்துவர்களாக உள்ள சித்த மருத்துவர்களை ஒவ்வொரு ஆண்டிலேயும் ஒரு இடத்திலே பயிற்சி பெற்று வளர்ச்சி பெறுவதற்கு இங்கே பாலசுப்பிரமணியம் அவர்கள் பேசுகிறபோது எம்.பி.பி.எஸ் பட்டம் பெற்றவர்களுக்குக் கூட பயிற்சி பெறுவதற்கு ரெப்ரஷர் கோர்ஸ் கட்டாயம் தேவை என்று சொன்னார்களே அதேபோல பரம்பரை மருத்துவர்கள் எல்லாம் 35 வயது, 40 வயதுக்கு உட்பட்டவர்கள் ஓராண்டு காலப் பயிற்சி பெறுவதற்கு, அவர்களும் நல்ல முறையிலே சமுதாயத்திற்குப் பயன்படச் செய்வதற்கும் அரசு ஏதேனும் ஒரு முறையில் வழிகாண வேண்டும். ஏற்கெனவே இந்தத் திட்டம் இருந்தது. பழனியிலே நிறைவேற்றுவதாக இருந்தோம், அது நிறைவேற்ற முடியாமல் போய் விட்டது. ஓராண்டு காலப் பயிற்சி என்கிற முறையில் ஷார்ட் டெர்ம் கோர்ஸ் ஃபார் ஹெரிடிட்டரி சித்த வைத்தியம் என்ற முறையில் திட்டத்தை நடத்த முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். திருக்கோவில்களிலே எல்லாம் ஒரு லட்சத்திற்கு மேல் வருமானம் வருமானால் ஒரு சித்த மருத்துவரை நியமிக்க வேண்டும் என்று ஒரு வேண்டுகோள் விட்டோம். அந்தக் கோவில்களிலே நிறைய நிதி இருப்பதாக நான் கேள்விப் படுகிறேன். யார் யாரோ இருக்கின்ற நிதிக்காக அலைவதாக நான் கேள்விப்படுகிறேன். எனவே அந்த நிதி இருக்கிறபோது சித்த மருத்துவர் ஒருவரை, ஒரு லட்சத்திற்கு மேல் வருமானம் வருகிற கோவில்களிலே ஈடுபடுத்தி அவர்கள் மூலமாக சமுதாயத் தொண்டு ஆற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, இரண்டு மானியக் கோரிக்கைகளின் மீதும் இறுதியாகப் பேசிய மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் உட்பட பல உறுப்பினர்கள் பல நல்ல கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, ஏறத்தாழ 200-க்கும் மேற்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் மூலமாக பல்வேறு கருத்துக்களை அமைச்சருக்கு மட்டுமல்லாமல் இலாகாவிற்கே புரியக் கூடிய அளவுக்கு அந்த தீர்மானங்களை எல்லாம் கொடுத்து இருக்கிறார்கள். ஆகவே இந்த அளவுக்கு நம்முடைய இலாகாவாக இருந்தாலும்சரி, நம்முடைய செயலாளராக இருந்தாலும் சரி, நானாக இருந்தாலும் சரி, பல்வேறு கருத்துக்களை புரிந்து கொள்வதற்காக ஒரு அருமையான வாய்ப்பினை ஏற்படுத்தியதற்கு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாகப் பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். அதிலே குறிப்பாக சித்தவைத்தியத்தைப் பற்றி அவர்கள் இறுதியாக முடித்து அமர்ந்தார்கள். சித்த வைத்தியத்தைப் பொறுத்த வரையில் நம்முடைய புரட்சித் தலைவர் தலைமையிலே இயங்குகின்ற இந்த ஆட்சியும், அதற்கு முன்பு இருந்த இருக்கக்கூடிய ஆட்சியும், ஏறத்தாழ 4, 5 ஆண்டுகளாக எவ்வளவு அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பது மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்குத் தெரியாமல் இல்லை. தெரிந்திருந்தாலும் அதிலே மிக முக்கிய அக்கறையை நாம் கவனமாக செலுத்த வேண்டும் என்பதற்காக பல்வேறு கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். இன்று இந்தத் துறை எவ்வளவு சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றது என்பதற்கு நான் பல்வேறு சான்றுகளை இங்கே எடுத்துக் கூற முடியும். ஆனால் நம்மைப் பொறுத்த வரையில் ஒரு எக்ஸ்பார்ட் என்று முடிவு செய்து, எந்த இலாகாவாக இருந்தாலும் சரி, எந்தத் துறையாக இருந்தாலும் சரி, அரசாங்கமோ அல்லது அந்தத் துறை செயலாளரோ அல்லது ஒரு அமைச்சரோ அதை இயக்க முடியாது. அது அந்தந்த எக்ஸ்பார்ட் கையிலே, நல்ல விவரம் தெரிந்தவர்கள் கையிலே அதை ஒப்படைத்தாக வேண்டும். அதற்காக நாம் என்ன செய்தோம் என்றால், நல்ல ஒரு குழுவை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக இந்த சித்த மருத்துவத் துறையிலே நல்ல விவரம் தெரிந்து, அனுபவம் பெற்ற அவர்களை எல்லாம் நாம் நியமித்து, சித்த அறிவியல் மேம்பாட்டுக் குழு என்று போட்டு அதற்கு மதிப்பிற்குரிய கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களைத் தலைவராகவும், அதற்குச் செயலாளராக குமாரசாமி அவர்களையும், இந்தத் துறையில் மட்டுமல்லாமல், மூலிகைகளைப் பற்றி நன்றாக விவரம் தெரிந்தவர்களையும் நாம் நியமித்து இருக்கிறோம்.

எதற்காக நான் சொல்கிறேன் என்றால், கடைசியாக அவர் முடித்த அந்தக் கருத்தை ஏற்று, அதற்கு முதலிலேயே பதில் சொல்லலாம்என்பதற்காக இந்த விஷயத்தை நான் எடுத்தேன். கடைசியாக முடிக்கின்ற நேரத்தில் சித்த வைத்தியம் இந்த ஆட்சியினுடைய தலைமையில் ஊசலாடிக்கொண்டு இருக்கின்றது என்று அவர்கள் சொன்னார்கள். நான் அதைப் பற்றி குறைகூறவில்லை. இருந்தாலும் கூட, மாமன்றத்தினுடைய உறுப்பினர்களுக்கு தெரிய வேண்டும் என்பதற்காக இந்தத் துறை என்னென்ன செய்ய வேண்டும் என்று யோசனை சொல்வதற்காக நியமித்து இருக்கக்கூடிய அந்தக் குழுவினுடைய தலைவரும், செயலாளரும் சிறந்த ஒரு அறிக்கையைத் தந்தார்கள்.

தமிழ்நாடு அரசு சித்த அறிவியல் மேம்பாட்டுக் குழு, மாண்புமிகு முதலமைச்சர் திரு. எம்.ஜி.ஆர். ஆட்சியில் 'சித்தமருத்துவ மறுமலர்ச்சி' என்கிற தலைப்பில் என்ன என்ன நாம் செய்து





கொண்டு இருக்கிறோம் என்று நம்மைப் பாராட்டியிருக்கிறார்கள். நம்மைப் பாராட்டிய உடனே நாம் மயங்கிவிடுவோம் என்று, அதற்காகச் சொல்லவில்லை. இருந்தாலும் கூட நிலைமையை அத்தனை பேரும் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக, அவர்கள் பாராட்டிச் சொல்லியிருக்கிற விஷயங்களை நீண்ட நேரம் எடுத்துக் கொள்ளாமல் சொல்கிறேன்.

"சித்த மருத்துவ மேம்பாட்டுக் குழு அமைக்கப்பட்டுள்ளது, அதற்குப் பாராட்டுகிறோம்.

சென்ற 10 ஆண்டுகளில் முடங்கிக் கிடந்த ரெஜிஸ்டர்ட் இன்டியன் மெடிக்கல் பிராக்டீஷனர்ஸ் தேர்வுக்கு உரிமை வழங்கியது.

தோல்வி அடைந்தவர்களுக்கு மீண்டும் மறு தேர்வு வைத்து இருப்பது, அதற்காகப் பாராட்டுகின்றோம்.

டி.எம்.எஸ். பட்டப்படிப்பு மாணவர்களுக்கு உரிய தேர்வுக் குழுவில் பரம்பரை மருத்துவர் ஒருவருக்கு உறுப்பினர் பதவி கிடைத்ததை இன்றைக்குப் பாராட்டுகிறோம்.

பாளையங்கோட்டை இந்திய மருத்துவக் கல்லூரியின் பெயரை சித்த மருத்துவக் கல்லூரி என்று அமைத்து இருப்பதைப் பாராட்டுகிறோம்.

மருந்தாளர்கள் தேர்வுக்குழுவிலே, பரம்பரை மருத்துவர் ஒருவருக்கு தலைவர் பதவி கொடுத்ததற்காகவும் பாராட்டுகிறோம்.

சித்த மருத்துவக் கல்லூரியில் மாணவர்கள் எண்ணிக்கையை 44-ல் இருந்து 75 ஆக உயர்த்தியிருப்பதைப் பாராட்டுகிறோம்" என்று இப்படிப் பல்வேறு வகையிலே நம்மைப் பாராட்டியிருக்கிறார்கள்.

வேறு யாராவது நம்முடைய கட்சித் தோழர்களோ, கட்சியை ஆதரிக்கிறவர்களோ பாராட்டுகிறார்கள் என்றால் நான் அதைச் சொல்லியிருக்க மாட்டேன். நம்மைக் கடுமையாக, உரிமையோடு பேசுவதோடு, அன்போடு விமர்சிக்கின்ற மாண்புமிகு தமிழ் தெரிந்த பெரியார் ஏழத்தாழ 70, 76 ஆண்டுகளாக தமிழகத்திலே பல்வேறு வகையிலே அறிவுரைகள் கொடுக்கக் கூடிய ஒருவர் இங்கே இப்படி எழுதுகிறார் என்றால் நாம் கொஞ்சமாவது மகிழ்ச்சியடையாமல் இருக்க முடியாது என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதுவரை சித்த மருத்துவத் துறையிலே நல்ல நிபுணத்துவம் பெற்றவர்களை நீங்கள் ஏன் அமர்த்த முடியவில்லை என்ற அந்தக் கருத்தை ஒரு வினாவாக எழுப்பலாம். அதற்கு நான்

ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஏறத்தாழ 10, 15 ஆண்டுகளாக பல்வேறு ஆரம்ப சுகாதார நிலயங்களிலே ஒரு மருத்துவரைக் கூட சித்தத் துறையிலே நியமிக்க முடியாமல் இருந்து இருக்கக் கூடிய அந்த காலத்தை உறுப்பினர்கள் எண்ணி பார்க்க வேண்டும். அந்தக் காலத்தில் அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திலே யாரையும் நாம் நியமிக்க முடியாது. 3 மருத்துவர்கள் இருந்தார்கள், அப்போது, ஆனால் சித்த மருத்துவத் துறையிலே யாரும் கிடையாது. ஆனால், சென்ற ஆண்டு திட்டவட்டமாக, துணிவோடு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அக்கறை கொண்டு, சித்த மருத்துவத்தைப் பொறுத்த வரையிலே அவர் நேரடியாக அக்கறை கொள்வதற்கு காரணம் நல்ல முறையிலே அதைப் பரப்ப வேண்டும் என்பதற்காக, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொன்ன மாதிரி, அதிகாரிகளையே நாம் நம்பியிருந்தோமானால் அதில் நாம் தோல்வி அடைவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே இதிலே நேரடியாக கவனம் செலுத்தி எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் ஒருவரை நாம் நியமித்தாக வேண்டுமென்று உத்தரவுபோட்டார்கள்.

அதற்குப் பிறகு எந்தெந்த சுகாதார நிலையங்களில் போடுவது என்று ஒரு பிரச்சினை வந்தது. அந்த நேரத்தில் எந்த எந்த இடங்களிலே நாம் கட்டிடம் கட்டியிருக்கிறோமோ அந்த இடங்களிலே செய்தால் நன்றாக இருக்குமென்று கருதி, ஏனென்றால் அதற்கு என்று அந்தக் கட்டிடங்களில் ஒரு அறை இருக்கும் என்று கருதி, 200 இடங்களில் நாம் போட்டிருக்கிறோம். இதிலே இருக்கக்கூடிய பிரச்சனை எல்லாம் இப்படிப்பட்ட நேரத்தில் எத்தனை ஆட்கள் கிடைக்கிறார்கள் என்று பார்த்தால், 101 பேர் நமக்கு கிடைத்திருக்கிறார்கள். அவர்களை நாம் அமர்த்தியிருக்கிறோம். இன்னும் அதிகமான பேர்கள் கிடைக்க வேண்டுமென்று நாம் விரும்புகிறோம்.

ஆகவேதான் நாம் உடனடியாக ஒரு முடிவு எடுத்து ஆக வேண்டும். அந்தக் குழுவிற்குக் கூட சொல்லியிருக்கிறோம், ஏதோ இங்கே உட்கார்ந்து கொண்டு பேசினால் போதாது, சித்த மருத்துவத் துறையிலே பயிற்சி பெற்றவர்களை ஏராளமாக நாம் உருவாக்கியாக வேண்டும். அதற்காகவே இந்தக் கல்லூரிக்கு வருகின்றவர்கள் எண்ணிக்கையை நாம் உயர்த்தியாக வேண்டுமென்று 44-ல் இருந்து 75 ஆக உயர்த்தியிருக்கிறோம். அது மட்டுமல்லாமல் அதற்காக டிப்ளமோ இன் பார்மஸியில் சேருகின்றவர்களின் எண்ணிக்கையைக் கூட நாம் ஏராளமாக உயர்த்தியிருக்கிறோம். அதைக் கூட அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள்.

எவ்வளவோ செய்ய வேண்டுமென்று ஆத்திரப்படுகிறோம். எவ்வளவோ செய்ய வேண்டுமென்று விரும்புகிறோம். திட்டமிட்டு பல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். உடனடியாக டாக்டர்களைப் போட்டிருக்கிறோம்.



மருத்துவர்களை அனுப்பினால் மட்டும் போதாது. மிக மிகத் தேவையானது அந்த மருந்தகங்களிலே பயன்படுத்தக் கூடிய மருந்துகள். போதிய மருந்துகள் இல்லாத நிலையால், மருந்துகளைத்தயாரிக்கக்கூடிய இடங்களுக்குபோடக்கூடிய பார்மஸிஸ்ட்களின் எண்ணிக்கையைக்கூட நாம் உயர்த்தியிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

(இரவு 8-30).

அதுமட்டுமல்லாமல் இங்கே இன்னொரு கேள்வியினையும் எழுப்பினார்கள் இந்த புஸ்தகத்தைப் பற்றி எல்லாம் இங்கே சொன்னார்கள். ஏராளமாக புஸ்தகங்களைப் பொறுத்தவரையிலே நாம் இங்கே அதற்காக ஏற்பாடு செய்வது மட்டுமல்லாமல் இங்கே டி.வி.எஸ். டிக்ஷனரி வால்யூம் 1-லிருந்து 5 வரை இங்கே அந்த புஸ்தகத்தை அச்சடித்தது மட்டுமல்ல. 1978 ஆம் ஆண்டிலே கூட இங்கே டிக்ஷனரி அச்சடிக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் கூட இதைப் பார்த்துப் பாராட்டினார்கள். அதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். டி.வி.எஸ். வால்யூம் 1-ஐப் பொறுத்தவரையிலே 25 ரூபாய் என்று விலை நிர்ணயித்து 137 புஸ்தகங்கள் விற்பனை ஆகி இருக்கின்றன. டி.வி.எஸ். டிக்ஷனரி வால்யூம் 2 மதிப்பிற்குரிய சாம்பசிவம் பிள்ளை அவர்கள் எழுதிய அந்த புஸ்தகம் 1131 ஆம்ஆண்டு எழுதியது இந்த வால்யூம் 2-ன் விலையினை 20 ரூபாய் என்று நிர்ணயித்து 157 பிரதிகள் விற்பனை ஆகி இருக்கின்றன. 3 வது வால்யூம் விலை 18 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டு 491 பிரதிகள் விற்பனை ஆகி இருக்கின்றன. ஆகவே விலை என்ன என்று நிருணயித்திருக்கிறோம், விற்பனையும் செய்திருக்கிறோம் ஏராளமாக இன்னும் அச்சடிப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் செய்த காரியத்தைச் சொல்கிறபோது தவறி விட்ட காரியம் எது என்பதையும் அவைக்கு சொன்னால் நன்றாக இருக்கும். இந்த நான்காவது ஐந்தாவது வால்யூம் அரசாங்கத்திற்குக் கிடைத்து குறைந்தது $1\frac{1}{2}$ ஆண்டுகள் 2 ஆண்டுகள் ஆகின்றன இப்படி இந்த இரண்டு ஆண்டுக் காலத்திலே விலை ஃபிக்ஸ் செய்ய முடியாமல் அப்படியே தேங்கி இருக்கின்றது. இதுபோல் இன்னும் பல புஸ்தகங்கள் விலை நிர்ணயம் செய்யபடாமல் இருக்கின்றது. இரண்டு நாட்களுக்கு முன்புதான் கந்தசாமி பிள்ளை என்பவர் எழுதிய சித்தா ஹிஸ்டரிக்கு விலையினை 60 ரூபாய் என்று அறிவித்தீர்கள். இந்த புஸ்தகத்தின் விலையினைத் தீர்மானிப்பதற்கு ஏன் இவ்வளவு நாட்கள் ஆக வேண்டும்? ஆகவே அதற்கான விளக்கத்தைச் சொன்னால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, எவ்வளவு அக்கறையினை நாம் எடுத்து கொண்டிருக்கிறோம் என்பதைத்தான் படிப்படியாக விளக்கிக் கொண்டிருக்

கிறேன். மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் விரும்பக்கூடிய அளவுக்கும் நான் விரும்பக்கூடிய அளவுக்கும் வேகம் இல்லை. ஆகவே, அவரை விட வேகமாக இருக்கவேண்டும் என்று விரும்பக் கூடியவன் நான். ஆகவே இதற்காக என்ன செய்ய வேண்டும் என்பதைப் பிறகு சொல்கிறேன்.

அடுத்து கந்தசாமிப் பிள்ளை என்பவராலே எழுதப்பட்டிருக்கக்கூடிய அந்தப் புஸ்தகத்தின் விலை 60 ரூபாய் என்று நிர்ணயித்து இருக்கிறோம். இலாக்காவிலே கூட 80 ரூபாய் என்று குறிப்பிடப்பட்டது ஜாஸ்தியாக இருக்கின்றது என்று சொல்லி 60 ரூபாய் என்று நிர்ணயித்து பத்திரிகைகளுக்கு அறிவித்தோம். இந்தப் புஸ்தகத்தைப் பொறுத்தவரையிலே 1978 ஆம் ஆண்டு இதற்கு எவ்வளவு விலை என்று நிர்ணயித்து விற்பனை செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. அன்பழகன் :** துணைத் தலைவரவர்களே, எனக்கே விலை தெரியாது. அதற்காக நான் முயற்சி செய்துகொண்டிருக்கிறேன். 4-வது வால்யூம் 5-வது வால்யூம் என்ன விலை என்பதை அவர்கள் தெரிவிக்கவேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்கும் தெரியும். இதிலே உள்ள சங்கடங்கள் பற்றி அவர்களோடு பேசி இருக்கிறேன். ஆகவே படிப்படியாக எல்லாவற்றையும் செய்து முடிப்போம். மேலும் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்பதையும் நான் சொல்கிறேன். இந்த டி.வி.எஸ், டிக்ஷனரிக்கான விலையினை நிர்ணயம் செய்து இத்தனை பிரதிகளை நாம் விற்பனை செய்திருக்கிறோம். ஆனால் இதிலே இருக்கின்ற பிரச்சினைகளைப் பொறுத்தவரையிலே தனிப்பட்ட வகையிலே சில பேர் ஆர்வத்தைக் காட்டி ஆகவேண்டும். ஒரு அமைச்சரோ அல்லது ஒரு செயலாளரோ மட்டும் இங்கே கோட்டையிலே இருந்துகொண்டு உத்தரவுகளைப் போட்டால் நடைமுறைப் படுத்துவது மிகவும் சிக்கலான ஒன்று. இதற்கு மக்களுடைய ஆர்வம் மிகவும் தேவை. அந்த நிர்வாகத்தில் இருககக்கூடியவர்கள், இலாக்காவில் இருக்கக் கூடியவர்கள் தான் ஏராளமாக இதிலே பொறுப்பேற்றுக் கொண்டாகவேண்டும். இத்தனை ஆட்களை நாம் நியமித்திருக்கிறோமே, ஆரம்ப சுகாதார நிலையங்களிலே மருந்துகள் கிடைக்க ஏற்பாடு செய்திருககிறோமே இவற்றிற்கெல்லாம் ஒரு வார்த்தை—நான் கொஞ்சம் வேதனையோடே சொல்லவேண்டி இருக்கின்றது—பாராட்டி இருக்கலாம். அகில இந்தியாவின் நல்வாழ்வுத் துறை அமைச்சர்கள் மாநாடு நடந்தது. அப்போது நான் சொன்னேன். அங்கே பலபேர் மண்டையைப் போட்டுக் குழப்பிக கொண்டிருந்தார்கள். இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் சித்த மருத்துவம், மற்ற மாநிலங்களைப் பொறுத்தவரையிலே ஆயுர்வேதம் போன்ற மருத்துவம் ஆகியவற்றை எல்லாம்



எப்படி நடைமுறைப்படுத்துவது என்று சிந்தித்துக்கொண்டிருந்த நேரத்திலே, அதற்கு பயங்கரமான எதிர்ப்புகள் வந்திருந்த நேரத்திலே நான் தமிழ்நாட்டு சர்க்கார் சார்பாக என்ன சொன்னேன் என்றால் தமிழகத்தைப் பொறுத்தவரையிலே நாம் திட்டவட்டமாக உத்தரவுகள் போட்டிருக்கிறோம். இந்திய மருத்துவ முறைகளான சித்த மருத்துவ முறை மற்றும் உள்ள மருத்துவ முறைகளால் மக்கள் பயனடைய வேண்டும் என்பதற்காகத்தான் அந்தந்த இடங்களில் இருக்கின்ற டாக்டர்களை நாம் அதிகப்படுத்தி இருக்கிறோம். ஆரம்ப சுகாதார நிலையங்களிலே 3 டாக்டர்கள் இருப்பவர்களிலே ஒருவரை எடுத்து விட்டு இன்னொரு ஆயுர்வேத டாக்டரைப் போடலாமே என்று கூட கேட்டார்கள். அதற்கு எதிர்ப்பு கூட வந்தது. ஆகவேதான் இந்தப் பிரச்சினையை வேண்டாம் என்று அந்த மூன்று டாக்டர்களும் இருக்கட்டும். இன்னொருவரை நாம் போடுவோம் என்று திட்ட வட்டமாக உத்தரவு போட்டு படிப்படியாக நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். என்று சொன்ன நேரத்திலே அங்கே கரவொளி எழுப்பப்பட்டது. இவ்வளவு துணிவோடு செய்ததற்காக பாராட்டினார்கள். இதற்கு ஓரளவுக்குக் காரணம் நமது மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் தான். அவர் இங்கே அடிக்கடி பேசியதன் மூலமாகத்தான் நாம் காரியங்களைச் செய்வதற்கு தூண்டுகோலாக அமைகின்றது. அவர்கள் இதிலே இவ்வளவு அக்கறை காட்டிவருவதன் மூலமாகத்தான் நமக்கும் கூட தைரியமாக இப்படிப்பட்ட முடிவுகளை எடுக்க முடிகிறது. எதிர்ப்புகள் வராது என்ற அந்த தைரியத்திலே செயலாற்றக்கூடிய அளவுக்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்லக்கூடிய அந்தக் கருத்துக்கள் நமக்கு பயன் உள்ளதாக இருக்கின்றது. ஆகவே மத்திய அரசினடத்திலே நாம் இப்படிச் சொல்லி இங்கே பாராட்டுக்களைப் பெற்றிருக்கிறோம். அதுமட்டுமல்ல, மருந்துகள் பற்றாக் குறையைக் கூடப் போக்குவதற்கு உடனடியாக எங்கெங்கு மருந்துகள் கிடைக்கிறதோ அங்கங்கு வாங்கவேண்டும் என்றும் கூட நாம் அதற்கான உத்தரவுகள் போட்டுக் கொண்டு வருகிறோம். இப்போது இன்னொரு வாக்குறுதியும் நான் தருகிறேன். இந்த வாக்குறுதி நிச்சயமாக அவர்களுக்கு ஓரளவுக்குத் திருப்தி அளிக்கும் என்று நான் நினைக்கிறேன். இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு கூட நானும் நம்முடைய நல்வாழ்வுத்துறை செயலாளர் அவர்களும் பேசி இருக்கிறோம். அதற்குப் பிறகு எனக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய உணர்வு என்னவென்றால் நல்வாழ்வுத் துறை செயலாளர் அவர்களும் இதிலே ரொம்பவும் அக்கறை காட்டக்கூடிய, ஒரு நல்ல பயிற்சி பெற்றிருக்ககூடியவர்களாக இருக்கிறார்கள். அவர்களே இதிலே பொறுப்பேற்றுக்கொண்டு எங்கெங்கே குறைபாடுகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் To speed up in all the places and to remove the bottlenecks and stumbling block's, என்று அதற்காகச் சொல்லி இருக்கிறோம். அவர்களே அதற்

கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்கிறேன் என்று ஆர்வப் காட்டி இருக்கிறார்கள். அந்த வகையிலே அது ஒரு மகிழ்ச்சி கரமான செய்தியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக இந்த 4-வது வால்யூம் பற்றிக் கேட்டார்கள். 5-வது வால்யூம் 35 ரூபாய் என்று குறிப்புக்கள் தந்திருக்கிறார் கள். சித்த வைத்தியத்தைப் பொறுத்தவரையிலே நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்ன மாதிரி யாக நாம் துணிச்சலுடன் திட்டவட்டமான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது. இன்னொரு பிரச்சினை. ஆரம்ப சுகாதார நிலையங்கள் நல்ல முறையிலே இயங்குவதற்காக சில திட்டவட்டமான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டாக வேண்டும் என்பதற்காக முக்கியமான சில நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம், முதலாவதாக 15 ஆரம்ப சுகாதார நிலையங்களைச் சென்ற ஆண்டு தாலுக்கா மருத்துவமனையில் தரத்திற்கு உயர்த்தி அங்கே என்னென்ன நவீன கருவிகளை வைக்க வேண்டுமோ, என் னென்ன தன்மைகள் அங்கே இருக்கவேண்டுமோ அந்த அளவுக்கு இதுவரையில் இல்லாத ஒரு புது மறுமலர்ச்சியை நாம் கிராம பகுதிகளிலே உண்டாக்கி இருக்கிறோம். இதன்மூலமாக நிச்ச யமாக கிராமங்களில் ஒரு எழுச்சி ஏற்படும் இந்தத் துறையிலே என்பதிலே எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. இந்த ஆண்டு மீண்டும் இன்னொரு 15 ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தாலுக்கா மருத்துவமனையின் தரத்திற்கு உயர்த்துவதற்காக 8 இலட்சம் ரூபாய் செலவு செய்து அங்கே 24 படுக்கைகளை ஏற்படுத்தி அங்கே ஏற்கனவே இருக்கின்ற 6 படுக்கைகளோடு சேர்த்து 30 படுக்கைகளைக் கொண்ட தாலுக்கா மருத்துவ மனையின் தரத்திற்குக் கொண்டு வருகிறோம். அது மட்டு மல்லாமல் 1979 டிசம்பரில் 'Government have sanctioned the constructon of Dispensary build-ings, staff quarters and compound walls for 20 Primary Health Centres.' 20 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு இந்த மாதிரியாக ஸ்டாப் குவார்ட்டர்ஸ் பில்டிங்ஸ் எல்லாம் கட்டி இருக்கிறோம்.

(இரவு 8.40)

அது மட்டுமல்ல. 1980–81ஆம் ஆண்டில், 17 ஆரம்ப சுகாதார நிலையங்கள், இந்தக் கட்டிடங்கள் அந்தக் காம்பவுண்டுக்குள், எல்லைக்குள் கொண்டு வரவேண்டும் என்று உத்தரவு போட்டி ருக்கிறோம். 1981-82ஆம் ஆண்டில் Construction of 20 P.H.Cs. sanctioned. இன்னும் 20 upgradationக்கு வரவில்லை. படிப்படியாக கட்டிடங்கள் இல்லாத ஆரம்ப சுகாதார நிலையங்களில் இவ வாறு செய்ய முடியும். இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களைப்





பற்றி மற்றவர்கள் எல்லாம் பேசினார்கள். அந்தவகையிலே அதற்கான ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, மாண்புமிகு உறுப்பினர் சுப்பிரமணியம் அவர்கள் மிக அழகாகப் பேசினார்கள். அவர்கள் பேசியதில் எனக்கு நிச்சயமாக வருத்தம் கிடையாது. ஆனால், அவர் ஒரு கருத்தைச் சொன்னார்கள். 20 பாயிண்ட் பார்முலாவைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக் குச் சொல்கிறேன், இந்த 20 அம்சம் என்று புதியதாக அறிவிக் கப்பட்ட அந்தத் திட்டத்தில், நம்முடைய இலாகாவைப் பொறுத் தவரையில் 13, 14 இடங்களைப் பெற்றிருக்கிறது.

13. Promote Family Planning on voluntary basis as Peoples' movement.

14. Substantially augment universal primary Health Centres with facilities to control leprosy, T.B. and blindness.

என்றிருக்கிறது.

We are aproaching the voluntary institutions like Rotary club Lions Club etc.

இதிலே என்னவென்றால் இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் ஓராண்டுக்கு முன்பு, முதன்முதலாக கோட்டையில் தனியார் துறையிலே இருக்கக்கூடிய வாலின்டரி சர்வீஸ் ஆர்க னைசேஷன் அதாவது லையன்ஸ் கிளப், ரோட்டரி கிளப் ஆகிய எல்லா நிறுவனத்தாரையும், அது போன்ற அமைப்புகளையும் அழைத்து, நம்முடைய செயலாளர் அவர்களையும், டைரக்டர் ஆப் மெடிகல் எஜிகேஷனையும் வைத்துக்கொண்டு, எப்படியெல் லாம் நீங்கள் உதவி செய்கிறீர்கள் என்று 20 அம்ச திட்டத்தை, மத்திய சர்க்கார் அறிவித்தபோது கேட்டோம். அதற்கு இடை யூறாக நாங்கள் இல்லை. ஆனால், அதே நேரத்தில் இந்தக் கொள் கையை ஏறத்தாழ 9 மாதங்களுக்கு முன்பு நாம் கடைப்பிடித் திருக்கிறோம் என்று அவர்களுக்கு கடிதம் எழுதியிருக்கிறேன். மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் சங்கரானந்த் அவர் களுக்கு எழுதியிருக்கிறோம். இந்த அளவிற்கு நாம் திட்டவட்ட மாக செய்துகொண்டு வருகிறோம்.

அது மட்டுமல்ல. இங்கே இன்னொரு கருத்தை செஞ்சி இராமச்சந்திரன் அவர்கள் சொன்னார்கள். இதை நாம் அதிக மாக செய்து விட்டால், அதனால, ஜனத் தொகை குறையும், நமக்கு பாராளுமன்றத்தில் உறுப்பினர்கள் எண்ணிக்கை குறைந்து விடும் என்று சொன்னார்கள. அண்மையில் எல்லாக் கட்சி களையும் சார்ந்த கூட்டம் நடந்தது. முதலமைச்சர் அவர்கள் தலைமையில, மத்திய அரசாங்கத்திலிருந்து சத்பால் மிட்டல்

அவர்களும், லோக் சபா ஸ்பீக்கரும் இங்கே அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். அப்போது அந்தக் கமிட்டியிலே உறுப்பினராக இருந்ததால் திரு. இளையபெருமாள் அவர்களும் வந்திருந்தார்கள். அத்தனை பேர்களும் வந்திருந்தார்கள். இந்தப் பிரச்னையைப் பற்றி அப்போது பேசிய நேரத்தில், நான் திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறேன். இனிமேல் நாங்கள் வேகமாக செய்யவேண்டுமென்றால், நீங்கள் மத்திய அரசாங்கத்திலே தமிழ்நாட்டிற்கு கிடைக்கக்கூடிய பாராளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை குறைந்துவிடக் கூடிய நிலைமை இருக்கக் கூடாது என்பதைப் பார்த்துக்கொள்ளவேண்டும் என்ற கருத்தை நிலைமையைச் சொல்லியிருக்கிறோம். அந்தக் கருத்தைச் சொல்லி, நீங்கள் சொல்லக்கூடியதை இந்தப் பிரச்னையிலே கடைப்பிடிக்க வேண்டுமென்று சொன்னால்,

'By non-adopting the policy of implementing family planning, the balance of advantage rests with implementing it.'

நாம் இதைச் செய்வதன் மூலம் நன்மை இருக்கிறது. பர்காபிடா இன்கம், பர் காபிடா இன்வெஸ்ட்மென்ட் ஆன் ஹெல்த் புரோகிராம் இவைகளையெல்லாம் பார்க்கின்றபோது, நாம் எவ்வளவுதான் நல்லவகையில் கட்டுப்பாடோடு ஜனத்தொகைப் பெருக்கத்தை கட்டுப் படுத்த முடியுமோ, அந்த அளவுக்கு கட்டுப்படுத்தி, அதிலே வெற்றி காண முடியும். அந்த வகையிலே இந்த ஆண்டு, நம் இலாகா எடுத்துக்கொண்ட வகையிலே 1,82,000 செய்வதற்குப் பதில் 1,87,251 பேர்களுக்கு ஸ்டெரிலைசேஷன் செசய்யப்பட்டு, அதற்குப் பிறகு இந்த 2½ மாதங்களுக்குள் மேலும் நல்ல முறையிலே செயலாற்றிக் கொண்டிருக்கிறோம். எனவே, 13-வது அம்சத்தைப் பொறுத்தவரையில் எந்தவிதமான பிரச்னையும் இருப்பதற்கு இடமில்லை. நாம் நன்றாக செய்து கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இன்னொரு பிரச்னை. 14—வது திட்டத்தைப் பொறுத்தவரையில்,. . . .

**திரு. உ. சுப்பிரமணியன் :** துணைத் தலைவர் அவர்களே, குடும்ப நலத் திட்டத்தைப் பாதுகாப்பாக அமுல் செய்யவில்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால், பிரசவத்திற்குப் பிறகு இந்த குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை அமுல்படுத்தக்கூடாது என்று அதிகாரிகளுக்கு தடை உத்தரவு போடப்பட்டிருப்பதாக அறிகிறேன். அதைப் பற்றிச் சொன்னேன். அதற்கு விளக்கம் தேவை.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** அதைப்பற்றிச் சொல்ல வேண்டாம் என்று நினைத்தேன். மத்திய அரசாங்கத்திலே இருந்து வந்திருக்கக்கூடிய குறிப்பு அது. துரதிருஷ்டவசமாக அதை அப்போர்ஸ் பண்ணியிருக்கிறோம். அது தேவையற்றது என்று சொல்லியிருகிக்றோம்.





என்று நினைத்தேன்.

அதற்கு விளம்பரம் தரவேண்டாம்

[ J st kept sile it o that.

கடிதப் போக்குவரத்து நடந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியன் அவர்கள் கருத்தை நான் முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன். அது தேவையற்ற விஷயம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறேன். அவர்களின் கருத்தை மாற்ற வேண்டும்.

'It is d n u d r Central Gover me t g n ts'

அவர்கள் எப்படி கைட்லைன்ஸ் கொடுக்கிறார்களோ அந்த எல்லைக்குள்தான் நாம் செயலாற்ற முடியும்.

அடுத்தபடியாக, நான்காவது பாயின்ட்டுக்கு வருகிறேன். அதைச் சொல்லியிருக்கிறார்கள். எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்

'Lep osy is a m j r pr blem.

ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்த லெப்ரஸி பொறுத்தவரையில் ஆங்காங்கே பலயிடங்களில் நாம் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அந்தப் புள்ளி விவரங்களை எல்லாம் இங்கே கொடுத்திருக்கிறோம். இந்தத் தொழுநோயைப் பொறுத்தவரையில் திருச்சி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் பரீட்சார்த்தமாக எடுத்ததைச் சொல்கிறேன்.

In T ruchi Distri t - C nt ol U its - K i h l i, M siri, J iyanko d m, Pe mb lur.

S.E.T. U its - Ti uc irrp li, Sri a g m, U ya p lay m, K ur, Lalg di, A iy lur.

Urban lepr sy ce tres - a d temp or ry ho pit lis ti n w r's K lithall, Per mb lur a d Jaya k d i.

இப்படியெல்லாம் நாம் செய்து கொண்டுவருகிறோம். அது மட்டுமல்லாமல், இந்த தொழுநோயை பொறுத்தவரையில் இது ஒரு பெரிய பிரச்சினை. 1977-ல் அதற்காக கணக்கு எடுக்கப் பட்டது. அப்போது ஏறத்தாழ ஆயிரத்திற்கு 20 பேர்களுக்கு என்றிருந்தது. அந்தளவிற்கு அப்போது பாதிக்கப்பட்டிருந்தார் கள் மக்கள். இப்போது பார்க்கிறபோது 1,000பேர்களுக்கு 14 பேர்களுக்குத்தான்இருக்கிறது. ஆகவே ஐந்தாண்டுகளுக்கு உள் ளாக 1,000க்கு 6 என்றளவில் குறைத்திருக்கிறோம்.

எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதற்கு முழு விவரங்களையும் நான் வைத்திருக்கிறேன். எல்லா விவரங்களையும் பேச நான் தயாராயிருக்கிறேன். நேரம் இல்லாததால் கோடிட்டுக் காட்டுகிறேன்.

I m p ssi g over thi gs i a haste.'

அதைப் பற்றி பெரிய ஆராய்ச்சி நடத்த வேண்டியதில்லை.

இங்குதான் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் எழுப்பிய வாதத்திற்குப் பதிலாக சொல்கிறேன். லெப்ரஸி ஆயிரத்திற்கு 20 என்றிருந்ததை, புரட்சித்தலைவர் அவர்கள்ஆட்சிபொறுப்பை ஏற்றுக் கொள்கிற காலத்தில் ஆயிரத்துக்கு20 என்றிருந்ததை இப்போது ஆயிரத்துக்கு 14 ஆகக் குறைத்திருக்கிறோம். இது ஒரு பெரிய காரியம் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இன்ஸிடன்ஸ் ஆயிரத்துதிற்கு 3 என்றிருந்ததை 1·82 என்று குறைத்துக் கொண்டு வந்திருக்கிறோம். புள்ளி விவரங்களை கொடுத்துவிட்டு தப்பித்துக்கொள்ள முடியாது. மத்திய அரசு என்ன செய்கிறது என்றால் லெப்ரஸிகண்ட்ரோலை பொறுத்த வரையில் ஒரு அதிகாரியை வைத்திருக்கிறார்கள். மத்திய சர்க்கார் கூறியுள்ள பணிகளை முறையாகச் செய்கிறோமா இல்லையா என்று பார்க்க விவரம் தெரிந்த ஒரு டாக்டரை வைத்து மத்திய அரசுக்கு சரியான தகவல் கொடுக்க ஒருவரை நியமித்திருக்கிறார்கள்.

They have got all the facilities.

நாம் தவறான புள்ளி விவரங்களைத் தருவோமானால்

It will not be proper. I am giving the reviewed particulars.

திரு. க. அன்பழகன் : அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது சொன்ன அந்த விவரம் எனக்கு 1971 முதல் தெரியும். அந்த விவரங்கள் பற்றி எனக்கு கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் மொத்தம் மக்கள் தொகை 4 கோடி 88 இலட்சம் என்று கணக்கு வருகிறபோது இதுவரை பரிசோதிக்கப்பட்டவர்கள் ஐந்து ஆறு ஆண்டு காலத்தில் கூட்டினால் அதைவிட அதிகமான எண்ணிக்கை வந்து விடுகிறதே, அது எப்படி முடியும் என்பதற்காகத்தான் சொன்னேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : எல்லா விவரங்களையும் வைத்திருக்கிறேன். 33 சதவீதம் நோயாளிகளை இரண்டாவது முறை பரிசோதிக்கிறோம் தொழுநோய் பொறுத்தவரையில் ஒரு தடவை பார்த்துவிட்டு இல்லை இனி வராது என்று சொல்ல முடியாது. ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்கிறேன். எல்லா விவரங்களும் உள்ளன. நான் அவற்றையெல்லாம் கொடுக்கத் தயார். மணிக்கணக்கில் நான் பேசத் தயார். இதைச் சொல்லி நான் உங்களை மிரட்டவில்லை.

(இரவு 8-50)

நான் சொல்ல வந்ததெல்லாம் , மத்திய அரசாங்கத்திலே, இரண்டு மாதங்களுக்கு முன்பாக ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. ஒரு தணிக்கை நடத்தப்பட்டது. இது முக்கியமான ஒரு விஷயம் தயவு செய்து நண்பர்கள் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த இலாகா. சிறப்பான வகையிலே, அகில இந்தியாவும் போற்றக்கூடிய வகையிலே, அந்த அளவிற்கு நான் இரவும் பகலும், அதிகாரிகளை வரவழைத்து, தொழுநோய் பற்றி விவாதித்தேன். என்னை தொழுநோய் அமைச்சர் என்று கூட திரு. கே. ஏ. கே. அவர்கள்கூட தமாஷாகச் சொல்வார்கள். அந்த அளவுக்கு நான் இந்தத் துறையைவிடுவது கிடையாது. எப்படி பேராசிரியர் அவர்கள் இதிலே தனிக்கவனம் செலுத்திக் கொண்டிருந்தார்களோ, அதேபோல, 'இன்பேக்ஷன் ஆப்இன்டரெஸ்ட் ' எனக்கும் வந்திருக்கிறது. எப்படியிருந்தாலும், தமிழ் நாட்டிலே இருந்து இந்த தொழுநோயை அகற்றியாக வேண்டும் என்பதற்காக, நான் இதிலே தனிக்கவனம் செலுத்தி வருகிறேன். இதற்கு ஒரு ரெவியூ கூட்டம் நடைபெற்று, அப்போது இதையெல்லாம் பற்றி விவாதித்து இருக்கிறோம். ஹெல்த் சைடிலே உள்ளபிளானிங் கமிஷன் மெம்பர், அவரே சொல்லியிருக்கிறார்.



The Planning Commission Member on Health said: 'We are very much satisfied in the extraordinary work put in by the Tamil Nadu Government as far as leprosy is concerned.' It is a certificate of compliment

என்று பகிரங்கமாக 'சர்டிபிகேட் ஆப் காம்பிளிமேண்ட்' கொடுத்திருக்கிறார்கள். இதையெல்லாம் இங்கேதான் சொல்லவேண்டும். வேறு எங்கு சொல்வது? அப்படிப்பட்ட பாராட்டுக்கள் எல்லாம் வந்திருக்கின்றன.

ஸ்கூல் செக்அப்பைப் பொறுத்தவரை, நோயுற்றுள்ள மாணவர்களை யெல்லாம் கண்டுபிடிப்பதற்கு ஏற்பாடுசெய்யப்படுகிறது. 6 மாதங்களுக்குள்ளாக இதிலே நல்ல வெற்றியைக்காணமுடியும் என்பதற்கு முதலமைச்சர் அவர்கள் மாணவர்களைச் சேர்க்கின்ற காலத்திலேயை சோதனை செய்துபார்க்கவேண்டும் என்று வற்புறுத்திச் சொன்னார்கள். 1978-ஆம் ஆண்டில் 14,30,214 பேர்களைப்பார்த்து, அதிலே 11,252 பேர்களுக்கு இருக்கிறதுஎன்று கண்டுபிடித்தோம். 1979-ஆம் ஆண்டிலே 12,258 பேர்கள் என்றும், அதேபோல் 1980-ஆம் ஆண்டில் கணக்கிட்டு, 1981-ஆம் ஆண்டிலே ஜனவரி மாதம்வரையில் கிடைத்திருக்கின்ற புள்ளி விவரத்தின்படி25.34,355 பேர்களில், 12,380 பேர்களுக்குஇருக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவிற்கு நாம் இந்த தொழுநோயைப் பொறுத்தவரையில் மிக அதிகமாக கவனம் செலுத்திக் கொண்டு வந்திருக்கிறோம்.

அது மட்டுமல்லாமல், இங்கே மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் டி. பீ.-யைப்பற்றி என்ன செய்தீர்கள் என்று கேட்டு, 1981-ஆம் ஆண்டுவரை இத்தனை லட்சம்ரூபாய் செலவுசெய்து, அதற்குப் பிறகு என்ன நடந்தது என்று கேட்டார்கள். அப்படி அவர்கள் கேட்டதால், இதைச்சொல்வதற்கு வாய்ப்புஏற்பட்டது.

'The Government of Tamil Nadu sanctioned in 1980-81 a special comprehensive Health Care scheme for diagnosing T.B. patients among the handloomweavers.

For Beedi workers and families 5 mobile units have been sanctioned by the Government.

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1982 மார்ச் 11

இப்போது என்னசெய்திருக்கிறோம் என்றால், சேலம் ஜோனில் மட்டும் 35,232 பேர்களைப்பார்த்ததில், 980 பேர்களை ரெபர் செய்து, அதற்குப் பிறகு 72 பேர்களுக்கு வியாதி இருக்கிறது. இந்த ஒரு ஸ்கீமில் மூலமாக இது கண்டுபிடிக்கப்பட்டது. அதே போல் பெரியார் ஜோனிலே 33,479 பேர்களைரிஜிஸ்தர்செய்து, 522 பேர்களை ரெபர்செய்து, 15 பேர்களுக்குவியாதி இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டது. மதுரை ஜோனைப் பொறுத்தவரையில் 21,087 பேர்கள் என்று புள்ளிவிவரம் கொடுத்திருக்கிறோம். ஆனால், இதைக் கொடுக்கின்ற நேரத்தில், இன்னும் தீவிரமாக செய்ய வேண்டுமென்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அதைச் செய்தாக வேண்டும். அந்த அளவிற்கு இதிலே வேகத்தைக் காட்டியிருக்கிறோம் என்றுதான் சொல்லுகிறேன்.

அடுத்து, ஒரு முக்கியமான கேள்வி எழுப்பப்பட்டது. அது என்னவென்றால், இங்கே போஸ்ட்கிராஜுவேட்டைப்பொறுத்த வரையில் பிரச்சினை எழுப்பினார்கள். எதற்கெடுத்தாலும் சுப்ரீம் கோர்டுக்குப் போகிறார்களே என்ற பிரச்சினை எழுப்பப்பட்டது. இந்தப் பிரச்சினையைப்பொறுத்தவரையில், நான்எவ்வளவுவிவரம் வேண்டுமானாலும் சொல்லத் தயாராக இருக்கிறேன். ஆயினும், இந்தப் பிரச்சினையைப் பொறுத்த மட்டிலும் குற்றம் சுமத்தப்பட்டது. இந்த விஷயத்தைப் பொறுத்த வரையில் நாங்கள் எவ்வளவு தெளிவாக இருக்கிறோம் என்பதற்கு பல்வேறு சான்றுகளை எடுத்துச் சொல்ல முடியும். ஆனால், நேரம் இல்லை, அவைகளை எல்லாம் எடுத்துச் சொல்வதற்கு. பார்த்த சாரதி கேஸ் பற்றி பேசப்பட்டது. அதைப்பற்றி நான் ஜாஸ்தியான நேரத்தை எடுத்துக்கொள்ளப் போவதில்லை. எதற்கு இப்படி செய்யப்பட்டது என்று சொன்னார்கள். பல மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உண்மையைத் தெளிவாக்கவேண்டும்என்பதற்காகச் சொல்கிறேன். முன்பெல்லாம் எப்படி இருந்தது என்றால் கிப்ளமா ஆர்த்தோபாஸ் செய்து தான் ஆக வேண்டும் என்பது கடையது.

Dip. in Ortho was no mandatory. It was only recommendatory நாம் என்ன செய்தோம் என்றால் What was recommendatory was converted and made as mandatory. எத்தனை, எத்தனை பேர்களுக்கு டிப்ளமா இல்லாமல் கிடைத்திருக்கிறது என்று இன்னும் கொஞ்சம் விரிவாக சொன்னேன் என்றால் அது மனதிற்கு கொஞ்சம் சங்கடத்தை ஏற்படுத்தும், ஏனென்றால் பல அரசியல்வாதிகள் அதிலே வந்து விடுகிறார்கள்.

திரு. க. அன்பழகன்: துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிற விளக்கத்திலேயே ஏற்கனவே அது ரெக்கமன்டேட்டரியாக இருந்தது இப்போது மான்டேட்டரியாக செய்யப்பட்டு விட்டது என்று சொல்லிவிட்டு, ரெக்க



1982 மார்ச் 11]] [திரு. க. அன்பழகன்]

மென்டேட்டரியாக இருந்தபோது இடம் பெற்றவைகளை பற்றி மான்டேட்டரியானதற்கு பின்னால் செய்த காரியத்திற்கு அதை காரணம் காட்டக்கூடாது ;

It was recommendatory. Now it is made mandatory. Recommendatory was made mandatory. I was only additional qualification. Additional qualification is different from requisite qualification.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : துணைத் தலைவர் அவர்களே, I am also a seasoned bandicoot in this house like some of my friends here. கொஞ்சம் தயவு செய்து பொறுமையாக கேட்க வேண்டும். இத்தனை ஆண்டுகள் சட்டசபையிலே இருந்து கொண்டு முழுமையாக பதில் சொல்லவில்லை என்றால சரியாக இருக்காது. அந்த பாயின்டிற்கு தான் வருகிறேன். நான் என்ன சொன்னேன் என்றால் Recommendatory has become mandatory. என்று சொன்னேன். அதை நான் படிக்கவில்லை, படித்தால் நான் ஏதோ குற்றச்சாட்டாக சொல்வதற்கு வாய்ப்பாக தேடிக் கொண்டிருக்கிறேன். என்கிற குற்றச்சாட்டிற்கு நான் ஆளாகி விடக் கூடாது என்பதற்காக நான் அதை சொல்லவில்லை. நான் பல ஆண்டுகளாக நினைத்துக் கொண்டிருந்தேன். நீங்கள் துணிவோடு டிப்ளமா இருந்தால் தான் எடுத்துக் கொள்ள முடியுமென்று செய்தீர்கள். அகில இந்தியாவிலும் பல்வேறு மாநிலங்களிலே அப்படி கிடையாது. ஓரிரு மாநிலங்களிலே தான் அப்படியிருக்கிறது. நான் சொல்ல வந்தது நீங்கள் இப்படி செய்துவிட்டு, ஏன் இப்படி டிப்ளமா இல்லாதவர்களை எடுத்தீர்கள் என்ற கேள்வி கேட்க கூடும். இங்கே என்ன பிரச்சினை ஏற்பட்டது என்றால், ஒரு நபருக்கு டிப்ளமா வாங்கினால் தான் இந்த பி.ஜி-க்கு உரியவர்களாக போடுவதற்கு அருகதை இருக்கிறது, என்று நாம் சொல்லியாகிவிட்டது. ஆனால் டிப்ளமா இல்லாதவர்களை எல்லாம் போட்டு விட்டார்கள், ஏதோ முறை கேடு நடந்துவிட்டது ; இங்கே பிராஸ்பெக்டசில் போட்டிருக்கிறோம்.

'Wherever there is diploma course preceding Degree courses with corresponding subjects, candidates with diploma alone are admitted into the Degree Course.'

ஆகவே அட்மிட்டட் இன் தி கோர்ஸ் என்று போடப்பட்டிருக்கிறது என்றால் என்ன செய்தோம் என்றால், நாம் செய்யவில்லை, அது இலாக்காவில் செய்தது. தவறாக செய்து விட்டார்கள் என்று கூட சொல்வதற்கு தயாராக இருக்கிறேன். பி.டி. எஸ்., பற்றி சொன்னார்கள், மற்ற விஷயம் அங்கே சப் வார்ட்டன் சரியாக இல்லை என்று எல்லாம் சொன்னார்கள். நிச்சயமாக ஆராய்ந்து பார்த்து நடவடிக்கை எடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதை பொறுத்தவரையில் இந்த கேள்வி எழுப்பப்பட்டு, அதற்கு முன்பாகவே எனக்கு ஒரு சந்தேகம் வந்து இவர்கள் என்ன செய்திருக்கிறார்கள்

என்று பார்த்தேன். செலக்ட் ஆனவர்களுடைய டிப்ளமா சர்டிபிகேட்டுகளை கொண்டு வாருங்கள் என்று பார்த்ததிலே ஒருவருக்கு 23 மே 1979, 25 ஜனவரி 1980, 19 மே 1980 என்று இருந்தது. பரிட்சைக்கு கூப்பிட்டு இண்டர்வியூவிற்கு முன் பாகவே டிப்ளமா பெற்றிருக்கிறார்கள். அந்த டிப்ளமாவினுடை அடிப்படையிலே மார்க்குகள் போடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு சுப்பிரமணியம் அவர்கள் கூட ஒரு பிரச்சினை யை சொன்னார்கள். சுப்பிரீம் கோர்ட் இப்படி சொல்கிறதே, ஹை கோர்ட் இப்படி சொல்கிறதே என்றார்கள். அது அவர்களுடைய உரிமை. நாம் என்ன செய்தோம் என்றால் டிப்ளமா இருந்தால் தான் நாங்கள் அட்மிட் செய்ய முடியும் என்று சொல்லியிருக்கிறோம். மனு போடும் போதே டிப்ளாமா இருக்க வேண்டும். இது ஹைக்கோர்ட்டினுடைய வாதம். இன்டர்வியூவுக்கு போகிற நேரத்திலே மட்டும் இருந்தால் போதும் இது இலாக்காவினுடைய வாதம். நீங்கள் கூட கேட்கலாம், ஹைகோர்ட் வாதத்தை எடுத்துக் கொள்ளலாமே என்று. எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. இப்போது சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு கொடுத்திருக்கிறது. அப்படித்தான் நாம் போட்டிருக்கிறோம். ஆனால் என்ன ஆகும். தயவு செய்து பேராசிரியர் அவர்கள் கொஞ்சம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(இரவு 9-00)

திரு. க. அன்பழகன் : நான் குறுக்கிட்டு உங்கள் நேரம் செலவானதை விட நான் பண்ருட்டி திரு. இராமச்சந்திரன் அவர்களிடத்திலே என்னுடைய நியாயத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

HON'BLE DR. H. V. HANDE : I am not inviting interference. I am inviting your attention. Like the saying 'Romans, countrymen, please lend me your ears", let me say "my brother, please lend me your ears". ஏன் என்றால் அப்போது தான் எனக்கு ஒரு மகிழ்ச்சி, சந்தோஷம். நான் சொல்லியிருக்கிற அந்தக் கருத்துக்களை நீங்கள் கேட்டீர்கள் என்பதாக. நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது அல்ல. ஜனநாயகத்தை நான் மதிப்பவன். நான் சொல்ல வந்தது எல்லாம் சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக் கொடுத்து விட்டதே, என்னுடைய கருத்து என்னவென்றால் சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பு நியாயமா அல்லது அநியாயமா என்று சொல்வதற்கு லெஜிஸ்லேச்சருக்கோ அல்லது எக்ஸிகியூட்டிவ் விற்கோ உரிமை கிடையாது. அந்த உரிமைக்குள்ளே நான் போகவில்லை. ஆனால் அதன் விளைவுகளை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம்முடைய தமிழகத்திலே இருக்கக்கூடிய பர்ஸ்ட் கிளாஸ் மார்க் வாங்கிக் கொண்டு நல்ல கெட்டிக்காரர்களாக இருக்கக்கூடியவர்களுக்கு அவர்கள் அந்த ப்பரிட்சையில்



தேர்வு பெறாமல் 1, 2 மாதங்களுக்குப் பிறகே அவர்களுக்கு வாய்ப்பு அவர்களுக்கு இந்த வருஷம் கிடைக்காது. அடுத்த வருஷம் தான் கிடைக்கும்

திரு. க. அன்பழகன் : எவ்வளவோ கெட்டிக்காரர்கள் கிடைக்காமலிருந்து எத்தனையோ ஆண்டுகள் காத்திருந்து பின்னாலே வந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே முடித்து விட்டேன் என்றால் உங்களுக்கு டவுட்டே இருக்காது. நான் சொல்லவந்தது எல்லாம் We are preventing the brilliant students from appearing this year. The result is other persons come to the field much a faster than our boys and girls. ஆகவே நமக்கு இருக்கக்கூடிய அந்த வாய்ப்பை நாம் தடுக்கக் கூடாது என்பதற்காக நாம் போட்டதே தவிர வேறு ஒன்றும் கிடையாது. நமக்கு என்ன வந்தது சுப்ரீம் கோர்ட் இப்படித் தான் நீங்கள் போடவேண்டுமென்று மேன்டேட்டரியாக நீங்கள் போடவேண்டுமானால் சரி. அப்ளிகேஷன் போடும்போது டிப்ளமோ என்று அதைத் கொஞ்சம் மாற்றி இப்போது நாம் பப்ளிஷ் செய்திருக்கிறோம். அதிலே ஒரு யோசனையைச் சொன்னார்கள். அந்த யோசனையை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். அந்த யோசனை என்னவென்றால் 15-ஆம் தேதியன்று, நேற்றைய தினம் கூட டாக்டர் ஜனார்த்தனம் கூட, மேலவை கொறடா கூட, இப்படிப் போட்டிருக்கிறார்கள் என்று என்னிடம் சொன்னார்கள். உடனடியாக ஒரு வாரம் எக்ஸ்டென்ஷன் கொடுக்கவேண்டுமென்று நான் உத்திரவு போட்டு இருக்கிறேன். இன்றைய தினம் காலையிலே அது வந்திருக்கும். அந்த மாதிரி யோசனை பற்றி இங்கே ஆட்சேபனை இல்லை. என்ன கேள்வி கேட்கிறார்கள் என்றால், இந்த மாணவனை சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ் சொல்லிவிட்டார் நீங்கள் எடுத்துக் கொண்டிருக்க லாமே என்று சொன்னார்கள். என்னுடைய பிரச்சினை என்ன வருகிறது என்றால் ஒரு மாணவனை—யு—அட்ஜஸ்ட்—எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு இங்கே நாம் அவர்களை எடுத்துக் கொள்வோமானால் உடனடியாக என்ன சொல்வார்கள், அவர்கள் பயந்துகொண்டு இந்த மாணவனைச் சரிக்கட்டி விட்டார்கள் என்று சொல்லக்கூடிய குற்றச் சாட்டுக்கு ஆளாகக் கூடும். ஆகவே, நான் சொன்னேன், அதிகாரிகள் என்னிடம் வந்தார்கள், இதைப் பொறுத்த வரையில் என்ன நியாயமோ அதை செய்யுங்கள் என்று சொன்னேன். இந்த மாணவரை விட இன்னும் 2, 3, 4 பேர்கள்—நான் விவரம் வைத்திருக்கிறேன்—ஜாஸ்தியாக மார்க் வாங்கியிருக்கிறார்கள், ஆகவே இந்த மாணவனுக்குக் கொடுப்போமானால் சரிக்கட்டிவிட்டோம் என்று சொல்வார்கள். அந்த 3 பேர்களுக்கும் கொடுக்கவேண்டிய ஒரு கட்டாயத்திற்கு நாம் தள்ளப்படுகிறோம். வந்தால் மேன்டேட்டரியாக ஜட்ஜ்மென்ட் வரட்டும். இல்லாவிட்டால் we stick to our guns.

அந்த வகையிலே நாம் திட்டவட்டமான முடிவை எடுத்துக் கொண்டோமே தவிர வேறு ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு க. அன்பழகன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, விளக்கம் சொல்கிறபோது ஒரு பொதுவான அடிப்படையான பிரச்சினையை அமைச்சர் அவர்கள் கைவிட்டு விட்டார்கள். ஒரு நீதிபதி பத்மநாபன் அவருக்கு இடம் கொடுங்கள் அதன் மூலமாக பிரச்சினை தீரும் என்று சொன்னார்கள். இடம் கொடுக்கச் சொல்வதற்குக் காரணம் இன்னொருவருக்கு முறை தவறாக இடம் கிடைத்தது என்ற காரணம் காட்டித்தான். அதையும் மீறி அப்பீலுக்குப் போனபோது, உயர் நீதி மன்ற பெஞ்சிலே நீதிபதி திரு. கோகுல கிருஷ்ணன் அவர்களும் வேறு சில நீதிபதிகளும் சேர்ந்து திரு. பத்மநாபன் அவர்கள் கொடுத்த தீர்ப்பை செயல் படுத்துங்கள் என்று தெரிவித்துவிட்டார்கள். அதற்கு மேலும் இன்னொரு டைரக்ஷன் ஏன் தேவை ? அரசாங்கம் அதற்கு மேலும் ஒரு கட்டாயமான முடிவை நீதிமன்றத்திலே போய் பெற்றாக வேண்டுமென்று ஏதாவது நியதி இருக்கிறதா ? அவசியமா ? அப்படித்தான் இந்த அரசாங்கம் செயல்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** கிளியராக இருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்னதைப்போல அவருக்கு மேலே இரண்டு பேர்கள் இருக்கிறார்கள். அது மட்டுமல்ல, அந்த சர்வீஸ் காண்டிடேட் பற்றிய பூரா விவரமும் இங்கே இருக்கிறது. முக்கால் மணி நேரம் அங்கே இந்த சப்ஜெக்டைப் பற்றி பேசியிருக்கிறேன். தெளிவாகப் பேசியிருக்கிறேன்; பத்திரிகையிலேயும் வந்திருக்கிறது. சர்வீஸ் காண்டிடேட்ஸ்க்கு 2 சீட் ; நான்—சர்வீஸ் காண்டிடேட்ஸ்க்கு 4 சீட், இவருக்கு இடம் கிடைக்கவில்லை. எந்தக் காரணத்தினாலும் அதை உயர்த்துவதற்கு இடமில்லை என்பதால் உறுதியாக நின்றோம். ஜட்ஜ்மெண்ட் இருக்கிறது. நாம் எடுத்த நடவடிக்கையும் mala fide இல்லாமல் bona fide ஆக எடுத்திருக்கிறோம். கோர்ட் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. நான் அதற்குள் போகவில்லை. சர்வீஸ் காண்டிடேட்ஸ்க்கு இரண்டு இடம்தான். இவருக்குக் கொடுத்தால் வெளியே இரண்டு பேர்கள் இருப்பார்கள். அந்தப் பிரச்சினை இருக்கும் என்பதால் தைரியமாக, அச்சம் இருக்கக்கூடிய நிலைமையில் இல்லாமல், துணிவாக நடவடிக்கை எடுத்தோம். கோர்ட் வேறு தீர்ப்பைக் கொடுத்தது. இப்போழுது போட்டிருக்கிறோம். நீதிக்குத் தலை வணங்கிச் செய்ய வேண்டுமென்று செய்கிறோம்.

இங்கே ஒரு கேள்வியை எழுப்பினார்கள். பேக்வேர்ட் கிளாஸ் மாணவர்கள் எத்தனை பேர்கள் என்று எழுப்பினார்கள். நான் இதைப்பற்றிக் கொஞ்சம் தெளிவாகச் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்பதற்காகச் சொல்கிறேன் முன்பிருந்த



ஆட்சியைவிட நாங்கள் நன்றாகச் செய்திருக்கிறோம் என்று சொன்னால் உங்களுக்குக் கொஞ்சம் உணர்ச்சியைத் தூண்டியது மாதிரி ஆகும். எனவே, புள்ளி விவரத்தை ஜெண்டிலாக, காமாகச் சொல்கிறேன். 1974—75இல் 49 சதவீதம்தான் பேக்வேர்ட் கிளாஸ் நண்பர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது ; 1975—76இல் 53 சதம்வீதம்தான். நான் இங்கே இப்பொழுது சொல்ல வேண்டுமென்றால் 1980—81ஆம் ஆண்டு 60·5 சதவீதம் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவரையிலே வரலாற்றிலே இல்லாத அளதிற்கு 60·5 சதவீதம் புரட்சித் தலைவர் சர்க்காரில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை ஆணித்தரமாக, ஆதாரத்துடன் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைவிட ஓபன் காம்பெடிஷனிலும் ஏராளமாகக் கொடுத்திருக்கிறோம்.

**திரு. க. அன்பழகன் :** நாங்கள் இருக்கும்பொழுது 31 என்று இருந்தபொழுது 49 கொடுத்தோம் ; நீங்கள் 50 இருக்கும் பொழுது 60 கொடுத்தீர்கள். 31-லிருந்து 49 கொடுத்தது பெரிதா ? 50-லிருந்து 60-ஆவது பெரிதா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** பொறுமையோடு கேட்டால் நான் அதற்குப் பதில் கொடுக்க முடியும். நீங்கள் 31 ஆக வைத்துக் கொண்டு இருந்தீர்களே தவிர, புரட்சித் தலைவர்தான் 31-ஐ 50 ஆக உயர்த்தினார். அதையெல்லாம் சொன்னால் உங்களுக்குக் கொஞ்சம் எரிச்சல் வரும். இப்படியெல்லாம் செய்ய முடியும். I am a good debator. I can take any debate. I can also have techniques. ஆனால் நான் அப்படிப் பண்ணுவதில்லை.

**திரு. க. அன்பழகன் :** பண்ண முடியும் பண்ண முடியும் என்று சொன்னால் நாங்களும் பண்ண முடியும். நான் உங்களுக்கு முன்னால் அமைச்சராக இருந்தவன். ஆகவே அந்த மாதிரி சொல்லாதீர்கள். தங்களுக்குக் கருத்துக்காகச் சொல்கிறேனே தவிர எதிர்ப்பதற்காக அல்ல ; தாங்கள் ஏதோ தவறு செய்து விட்டீர்கள் என்று தனிப்பட்ட முறையில் சொல்லவில்லை. 9,000 ரூபாய் வருமான வரம்பு என்ற கருத்து வந்து அதனால் ஏற்பட்ட விளைவுகளின் காரணமாக 50க்குப் போயிற்று என்பது தங்களுக்குத் தெரியாவிட்டாலும் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்குத் தெரியும். எனவே, விளைவு தெரியாமல் அம்மாதிரி செய்வோம், இம்மாதிரி செய்வோம் என்று சொன்னால் இம்மாதிரி செய்பவர்களைப் பார்த்து விட்டுத்தான் இருக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** துணைத் தலைவர் அவர்களே, நான் துணிவோடு சொல்ல முடியும். 31 சதவீதம் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு என்று இருந்த அந்த நிலையை மாற்றி 50 சதவீதத்திற்குக் கொண்டு வந்த மாவீரன்தான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். என்பதை நான் எடுத்து சொல்வதற்கு எனக்கு முழு உரிமை இருக்கிறது. அதுமட்டுமல்லாமல்,

அந்த 50 சதவீதத்தைவிட, அதுவும் போதாது என்று ஒப்பன் காம்பெடிஷனிலே நாம் செய்யவில்லை என்கிற குற்றச்சாட்டுக்கு ஆளாகக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன், ஒப்பன் காம்படிஷனில் ஏராளமாகக் கொடுத்திருக்கிறோம். 60.5 சதவீதம் கொடுத்திருக்கிறோம் என்றால், பத்து சதவீதம் ஒப்பன் காம்பெடிஷனிலும் கொடுத்திருக்கிறோம்.

(இரவு 9·10)

அதே மாதிரியாக எஸ்சி. எஸ்.டி. என்று சொல்கிற நேரத்திலே, இன்னொரு புள்ளி விவரத்தையும் நான் இங்கே சொல்ல கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அது இன்னும் சிறப்பாக இருக்கும். நம்முடைய மாண்புமிகு இளையபெருமாள் அவர்களிடத்திலே தனிப்பட்ட முறையிலே கூடச் சொன்னேன். இவ்வளவு நல்ல காரியத்தை ஏன் சொல்லாமல் இருக்கிறீர்கள் என்று சொன்னார்கள். சமயம் வரும்போது, நேரம் வரும்போது நான் சொல்கிறேன் என்று கூடச் சொன்னேன். அது என்னவென்றால், எஸ்.ஸி, எஸ்.டி. என்ற வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு, இத்தனை ஆண்டுகளாக இல்லாமல், முதன் முதலாக ஒப்பன் காம்படிஷனில் 8 இடங்கள் கொடுக்கப்பட்டுள்ளது, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சியில் தான். திரு. சிவசாமி அவர்களிடத்திலேயும் சொல்லியிருக்கிறேன். சென்ற ஆண்டு ஒப்பன் காம்படிஷனில், ஹையஸ்ட் மார்க்ஸ் வாங்கியவர்கள் என்ற முறையில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 8 இடங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

8 இடங்கள் கொடுக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், டி.எம். கார்டியாலஜியில், நீண்ட நாட்களாக, ஒரு தாழ்த்தப்பட்ட நண்பருக்கு, உடன் பிறப்புகளுக்கு வாய்ப்பே இல்லாமல் இருக்கிறது என்பதற்காக, வந்த பைலை, திட்டவட்டமாக, தைரியமாக, துணிவோடு, இதிலே ஷெடுயூல்ட் காஸ்ட் ஒருவரைத் தேர்ந்தெடுக்கவில்லை, I am re'urni g tne file என்று துணிவோடு, தைரியமாக எழுதி அனுப்பி, அதில் ஒருவரை அனுப்புங்கள் என்று சொல்லி, அதற்குப் பிறகு டி.எம். கார்டியாலஜிக்கு ஒரு தாழ்த்தப்பட்டவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரை எனக்குத் தெரியாது. அவர் வந்து எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது, நான் இதற்கு முன்னாலே எதிர்பார்க்கவே இல்லை, I am glad என்ற மகிழ்ச்சியுடன் சொல்லிவிட்டு சென்றார். அந்த அளவு அப்பிரிவிலே ஒருவரை நாம் அதிகாரபூர்வமாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பதற்காக, உத்தரவு போட்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல இன்னும் நேரம் வேண்டுமென்றால், நாளைக் காலை தொடரச் சொல்லலாம்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்பொழுதே அமைச்சர் முடித்து விடுவார்.

**திரு. சோ. அழகர்சாமி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது ஒப்பன் காம்படிஷனில் எஸ்.,டி. எஸ். ஸி. கான்டிடேட்டுகள் இத்தனை பேர்களுக்கு கொடுக்கப்பட்டது என்றும், பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு இத்தனை இடங்கள் கொடுக்கப்பட்டது என்றும் சொன்னார்களே, இதுவரைக்கும் சர்ட்டிபிகேட் மார்க் கோடு நேர்முகத் தேர்விலே அவர்களுக்குக் கேட்கக்கூடிய கேள்விகளுக்குச் சொல்லக் கூடிய பதிலுக்கு அளிக்கக்கூடிய மார்க்குகளை வைத்துத் தேர்ந்தெடுத்ததாகச் சொன்னவர்கள், நாங்கள் கொடுத்தோம், நாங்கள் கொடுத்தோம் என்று சொன்னால், நினைத்தவருக்கெல்லாம் கொடுக்கக்கூடிய முறையிலே அதைக் கடை பிடித்தார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** 15 நிமிடத்திலே முடித்து விடுகிறேன். இங்கே, கொடுக்கப்பட்டது என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும். ஏனென்றால், இப்படி ஒரு நிலைமை, ஒரு நல்ல அருமையான சூழ்நிலை இங்கே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதற்கு அடையாளமாக நான் சொன்னேனே தவிர, வெறொன்றும் இல்லை.

அடுத்தபடியாக, இங்கே, மதிப்பிற்குரிய சுப்பிரமணியம் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அது என்னவென்றால் லேடீஸ் ஹாஸ்டலில் வார்டர் இல்லையென்று சொன்னார்கள். அதற்காக, உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று உத்தரவு போட்டோம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய மதிப்பிற்குரிய சுப்பிரமணியம் அவர்கள் ரெஃபரன்ஸ் சிஸ்டம் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். நான் எல்லா மருத்துவத்திற்கும் ஒருமுறை வைத்திருக்கின்றோம். பொதுவாக, அந்த அந்த தாலுகா மருத்துவமனைகளிலே பணியாற்றுகின்ற டாக்டர்களுக்கு நல்ல வகையிலே ஒரு 'ரெஃபரஷர் கோர்ஸ்' இருக்க வேண்டுமென்பதற்காக வல்லுநர்களை வரவழைத்து அவர்களுக்கு இங்கே நல்ல வகையிலே பயிற்சி கொடுக்கிறோம். அது மட்டுமல்லாமல், இந்த ரெப்ரஷர் கோர்ஸ் மூலமாக, என்ன இலாபம் என்றால், It is a two-w-y traffic அவர்களுக்கு என்ன என்ன பிரச்னை இருக்கும் என்டதைக் கண்டு பிடிப்பதற்காக, அங்கே சொல்லிக் கொடுக்கக்கூடியவைகள் சௌகரியமாக இருக்கும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், ஒரு பிரச்னையைப்பற்றி பல நாட்கள் இங்கே சென்னையிலே Chan‍nel of Commu‍nication........

**திரு. எல். இளையபெருமாள்** : டெபுட்டி ஸ்பீக்கர் சார், பாயின்ட் ஆப் ஆர்டர். அருமை அமைச்சர் அவர்கள் சொல்கிற பொழுதும், முன்னாள் அமைச்சர் சொல்லும்போதும், ஓப்பன் காம்படிஷனிலே கொடுத்தோம், கொடுத்தோம் என்று சொன்னார்கள். ஓப்பன் காம்படிஷனில் கொடுத்தோம் என்று சொல்வது, அவர்களுடைய மார்க், திறமை இவைகளைப் பார்த்துதான் ஓப்பன் காம்படிஷனில் எஸ்.ஸி. மாணவர்களுக்குக் கொடுத்தோம் என்பது கருத்து, ஆகவே, அந்த ' கொடுத்தோம் ' என்ற வார்த்தையை அன்பாகச் சொன்னாலும் இந்த அவையிலே என்ன கருத்து உருவாகிறது என்றால், தேர்தல் காரணத்தினாலே போட்டி போட்டுக் கொண்டு நாங்கள் கொடுத்தோம், நாங்கள் கொடுத்தோம், என்று முன்னாள் அமைச்சர் அவர்கள் அல்லது இன்றைய அமைச்சர் அவர்கள் சொல்வதானது, அவர்களுடைய திறமையிலே ஏதோ குறைவு வந்து விட்டதாக இந்த அவையிலே கருதுவதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்று சொல்வதோடு, அவர்களுடைய பாப்புலேஷன் பிரகாரம் கொடுக்கப்பட்டதா என்பதையும் நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே** : மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இளைய பெருமாள் அவர்களுக்கு நான் நன்றி சொல்லவேண்டும். மாண்புமிகு அழகர்சாமி அவர்களுக்கும் நன்றி செலுத்த வேண்டும். அவர்களுடைய திறமையின் அடிப்படையிலே கிடைத்திருக்கிறது என்பதுதான் பொருள். அன்று அம்பேத்கார் சொன்னார். இங்கே சலுகைகளைக் கேட்கவில்லை, உரிமைகளைத்தான் கேட்கிறோம் என்று சொன்னதை அப்படியே வாதாடுபவன் நான் என்பது மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாளுக்குத் தெரியும். ஆகவே இதிலே ஏதோ அரசாங்கம் அவர்களுக்கு சலுகைகளைக் கொடுத்தது என்பதற்காக அல்ல. நான் அந்த வாதத்தை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. நான் முழுமையாக, மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய விளக்கத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். அந்த விளக்கத்திற்கு நன்றியையும் தெரிவித்துக் சொள்கிறேன். உரிமையோடு கொடுத்தது. அதுமட்டுமல்லாமல் திறமையின் அடிப்படையிலே ரிசர்வேஷனையும் விட ஜாஸ்தியாக கிடைத்திருக்கிறது என்பதைப் பார்க்கின்ற நேரத்திலே மகிழ்ச்சியாக இருக்கிறது. அவ்வளவு நல்ல வகையிலே, வேகமாக வந்து கொண்டிருக்கிறார்கள், திறமைசாலிகளாக இருக்கிறார்கள். ஏனென்றால் பிறப்பிலே ஏதோ ஒரு பொருளாதாரத்தினுடைய பாதிப்பினாலே பல சங்கடங்கள் இருந்தாலும் கூட, அதனை முறியடித்து முன்னுக்கு வரக்கூடிய திறமை என்றால், ஒரு நல்ல குடிமகனுடைய வீட்டிலே அவன் பிறந்து 80 மார்க்குகள் வாங்குவது பெரிதல்ல. கஷ்டத்திற்குள்ளே பிறந்து, இன்னல்களுக்குள்ளே பிறந்து 80 மார்க்கு வாங்குகிற நேரத்திலே இவனை விடஅவன் திறமைசாலிதான் என்பதுதான் அதனுடைய பொருள் என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அதுமட்டுமல்லாமல் இன்னொரு கருத்து சொல்லப்பட்டது. ஏதோ பி.யூ.சி.-ஐப் பொறுத்தவரையில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தி இருக்கிற மாதிரியாக மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சொன்னார்கள். எந்தவிதமான குழப்பமும் கிடையாது. ஏனென்றால் இந்த பி.எஸ்.ஸி. மாணவர்களை ஏன் நிறுத்தப்பட்டது. அதை எழுப்பினதற்கு மிகவும் நன்றி. அதற்குப் பதில் சொல்வதற்கு எனக்கும் சௌகரியமாக இருக்கிறது. பி.எஸ்.ஸியை நாம் ஏன் நிறுத்தினோம் என்றால், இன்டியன் மெடிக்கல் கவுன்சிலுக்கும் நமக்கும் ஒரு வாக்குவாதம். ஒரு failure of c mmunic ion cr u derstanding. நாம் என்ன சொன்னோம். சென்ற ஆண்டு பி.யூ. சி. பி. எஸ்.ஸி. மாணவர்கள் இரண்டு பேர்களும் வரக்கூடிய ஒரு நேரம். அந்த 1981–82 ஆம் ஆண்டு. அப்போது பி.யு.சி.-க்கு 3 மாதம் கோர்ஸ் கொடுத்து, பிளஸ்-2 போல கொண்டு வரலாம் என்று சொன்னார்கள். நாங்கள் ஏற்றுக் கொண்டோம். ஆனால் பிளஸ்-2 அப்படியே போகலாம் withou pre-professicnal course போகலாம் என்று சொன்னார்கள். நாங்கள் ஏற்றுக் கொண்டோம். பி.எஸ்.ஸி. நேரடியாகப் போவதற்கு வாய்ப்பு கொடுக்கவேண்டும் என்று சொன்னோம்.

They do n t agree. They said 'they have to go through the bridge course'. I s id "Wh t is this humi i ti n" இது என்ன நியாயம்? ஒரு பிரிட்ஜ் கோர்ஸ் மூலகாக பி.எஸ்.ஸி. படித்தவர்கள் போகவேண்டியது என்ன நியாயம் என்றும் அப்படி ஒரு ஹீமிலியேஷன் அங்கே தேவையா என்றும், பி.எஸ்.ஸி. இருந்தால் பிரிட்ஜ் கோர்ஸ் மூலமாகத்தான் வரவேண்டும் என்று இண்டியன் மெடிக்கல் கவுன்சில் வற்புறுத்தியதன் காரணமாக அந்த ஆண்டு கைவிடப்பட்டு, நாம், தொடர்ந்து பி.எஸ். ஸி. படித்தவர்கள் நேரடியாகச் செல்லவேண்டும். பிளஸ்-2 படித்தவர்களுக்குக் கொடுக்கக் கூடிய சலுகைகளைக் கொடுக்கவேண்டும் என்று சொல்ல், இந்த ஆண்டு வெற்றி பெற்று, 10 சதவிகிதம் அதற்காக ஒதுக்கினோமே தவிர, அங்கே எந்தவிதமான குழப்பத்திற்கும் ஆளாகவில்லை. அதை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்புத் தரவில்லை. இப்போது வாய்ப்புத் தந்திருக்கிறார்கள். ஆகவே, இதை விளக்க முடிந்தது.

பி.யு.சி.-யைப் பொறுத்தமட்டில் நாம் திட்டவட்டமாக இருக்கிறோம். பி.யு.சி. தேவையில்லை என்று இருக்கிறோம். ஆனால் பி.யு சி.லே கொஞ்சம் பேர்கள் இப்போது இம்ப்ருவ்மெண்டு செய்து கொண்டிருக்கிறார்கள். மார்க்குகள் கிடைத்திருக்கிறது. ஆகவே, அவர்களுக்குக் கொஞ்சம் வாய்ப்பு கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று சொன்னார்கள். கோர்ட் கூட ஒரு முடிவு செய்திருக்கிறார்கள். பி.யு.சி.-க்கு இரண்டு முறை வாய்ப்பு கொடுத்து ஆகிவிட்டது. மீண்டும் கொடுக்கத் தேவையில்லை. இல்லை இல்லை கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். அதற்காக கொடுக்கவேண்டி இருந்தது. 10 பர்சன்ட் லாஸ்ட் சான்ஸ் கொடுத்து விடுங்கள் என்று சொன்னார்கள். கொடுத்துவிட்டோம். அதைத் தவிர வேறு எந்தவிதமான குழப்பமும்

இங்கே இல்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள் கிறேன். ஆனால் ஒரு கருத்து நூற்றுக்கு நூறு நான் இங்கே உடன்பட்டிருக்கக் கூடிய ஒரு கருத்தாக இருக்கிறது. அது என்ன வென்றால் மத்திய அரசாங்கம் தமிழகத்தினுடைய எந்த செலக் ஷனாக இருந்தாலும், எம்.பி.பி.எஸ். கோர்சாக இருந்தாலும் சரி, அல்லது டெக்னிகல் கோர்ஸ் எதுவாக இருந்தாலும் சரி, தலையிடுவது நியாயம் இல்லை என்று சொன்னார்கள். அதை முழுக்க முழுக்க ஏற்றுக் கொள்கிறேன். மத்திய அரசாங்கம் அதிலே தலையிடுவதற்கு நியாயம் இருக்காது. அந்தக் கருத்தைத் தான் நான் சொன்னேன். அண்மையில் நடந்திருக்கக்கூடிய அகில இந்திய நல்வாழ்வுத் துறை அமைச்சர்கள் மாநாட்டிலே நான் தெளிவாகச் சொல்லி அதை ஒத்துக் கொள்ளமாட்டேன் என்று சொல்லி, பல பேர்களிடத்திலே 'லாபியிங்' செய்து பல நல்வாழ்வுத் துறை அமைச்சர்களை நம் பக்கத்திலே இழுத்து, பிறகு அப்படிப்பட்ட தீர்மானம் வேண்டாம் என்று கைவிடப் பட்டு நமக்கு சாதகமான ஒரு தீர்மானத்தை அங்கே போட்டிருக் கிறோம் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கி றேன்.

(இரவு 9–20)

இங்கே சகோதரி, உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். சேலம் மாவட்டத்திற்கு ஒன்றுமே கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். சேலம், தென் ஆற்காடு மாவட்டங்களிலே ஒரு பெரிய ப்ராஜக்ட் கொண்டு வந்திருக்கிறோம். இங்கே நண்பர் செம்மலை எல்லாம் பேசினார்கள் 'டானடே' பிராஜக்ட் என்ற திட்டத்திலே, ஒரு 14 கோடி திட்டத்தின் மூலம் சேலம் மாவட்டத்திலும், தென் ஆற்காடு மாவட்டத்திலும் இருக்கக் கூடிய ஒன்றியங்களில் இருக்கக்கூடிய அனைத்து கிராமங்களிலும் ஒரு தாய்-சேய் நல விடுதி, சப்-சென்டர் என்ற வகையிலே இன்னும் இரண்டு ஆண்டுகளில் கட்டப்படும்.

ராசிபுரத்தில் சர்ஜிகல் தியேட்டர் கட்டப்படும்.

ஆத்தூரிலே இருக்கிற மருத்துவ மனையிலே, ஐ. சி. சி. கொண்டு வருவதற்கு—ஐ.சி.சி. இல்லையென்று ஒரு வெட்டுத் தீர்மானம் கூட ஒரு நண்பர் இங்கே கொடுத்திருக்கிறார்கள். அந்த வெட்டுத் தீர்மானத்திற்கு தேவையேயில்லை—உத்தரவு போட்டாகிவிட்டது. அது நிச்சயம் அங்கே வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த மாவட்டம் புறக்கணிக்கப் படவில்லை. இரண்டு ஆண்டுகளில் எல்லா கிராமங்களுக்கும் இப்படிப்பட்ட சப்-சென்டர்ஸ் வரும் என்பது பாராட்டுக்குரியது.

இன்னொரு விஷயத்தில், நாம் வாதாடி வெற்றி பெற்றிருக்கிற மாதிரி தெரிகிறது. ரூ. 15 கோடி டானடே பிராஜக்டைத் தவிர இன்னொரு ரூ. 30 கோடிக்கு w ter input is a part of th: s art of goo l prope h alth c re de.iverysy s em. என்கிற அடிப்படையிலே அதற்காக நாம் வாதாடி வெற்றிபெறு கிற நிலைமை இருக்கிறது. ஆங்காங்கு இருக்கக்கூடிய சில





தடைகளை எல்லாம் எடுத்துவிட்டோம். அதிலே வெற்றி பெற்றோமானால் எல்லாப் பிரச்சினைகளுக்கும் ஒரு தீர்வு வந்து விடும். எல்லாக் கிராமங்களிலும் குடிநீர் வடிகால் வாரி யத்திற்கும் நல்வாழ்வுத் துறைக்கும் ஒரு பிணைப்பு ஏற்படும். " Pro ec (d wa er-ruppl, will b: g ven o all the villages in these two d s r c s, prov ded we s cceed in his a d we are ; p iuis ic we w ll s cc :d " ஆகவே அந்த மாதிரியான ஒரு பிரச்சினையையும் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

மருந்துகள் போதாது என்று சொன்னார்கள். அந்த மருந்து களைப் பொறுத்தவரையிலும் 1978-79-லே டி.எம்.ஈ. சைடிலே ரூ. 5 (ஐந்து) கோடியே, ஒரு லட்சத்து எழுபத்து மூன்றாயிரம் மருந்துக்காகச் செலவழித்திருக்கிறோம். இந்த ஆண்டு ரூ. 6,31,65,000 செலவழிக்கவேண்டுமென்று கொண்டு வந்திருக்கிறோம். money spe t on m di ines. அதே மாதிரி டி.எம்.எஸ். சைடிலே இலாகாவிலே பார்த்தோமா னால் ரூ. 6,76,48,000 1978–79-ல் இருந்ததை, இந்த ஆண்டு ரூ. 9,10,67,000 ஆக ஆக்கப்பட்டிருக்கிறது. இது என்ன காட்டுகிறது என்றால் டி.எம்.எஸ். சைட் என்றால், தாலூகா ஆஸ்பத்திரி. சின்ன சின்ன ஆஸ்பத்திரி. மெடிகல் காலேஜ் ஆஸ் பத்திரியில் 5 கோடியில் இருந்து 6 கோடிக்கு வந்திருக்கிறது. டி.எம்.எஸ். இலாகாவில் ரூ. 6 கோடியில் இருந்து சுமார் ரூ. 9 கோடிக்கு வந்திருக்கிறது. இந்த Improvement is faster. We are spending mo e (n rur l areas. என்பதற்கு ஒரு அடையாளமாக இருக்கிறது. இது போதுமா என்றால் நிச்சயமாகப் போதாது. இங்கே எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதுபோல் இன்னும் ஏராளமாக நாம் செலவு செய்தாகவேண்டும்.

கண் சிகிச்சை முகாம் பற்றிச் சொன்னார்கள். பேராசிரியர் பொறுப்பேற்றுக் கொண்டிருந்த நேரத்திலே வேகமாக நடத்தி னார்கள். நான் கூட மன்றத்திலே குறைகள் எல்லாம் சுட்டிக் காட்டியிருக்கிறேன். அவர்கள் வேகமாக நடத்தினார்கள். ரொம் பவும் தீவிரம் காட்டினார்கள். அதற்குப் பிறகு உங்களுக்கெல் லாம் தெரியும் 1976-ல் எமர்ஜென்சி வந்தது. அதிலே கொஞ்சம் மந்தம் வந்தது. மீண்டும் We have revived the whole thing. தமிழ்நாட்டிலே கண் சிகிச்சை முகாம்கள் நடத்தவும், அதற்காக திட்டங்கள் மற்றும் செயல்முறைகளை மேற்கொள்ளவும், ஒரு உதவி மருத்துவ இயக்குநர் பதவியை ஏற்படுத்தி, இந்த ஆண்டு 18,554 பேர்களுக்கு அறுவை சிகிச்சை, முகாம்கள் மூலமாக நடத்தியிருக்கிறோம். நான் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்கி றேன். ரொம்ப வேகமாகப் போகாதீர்கள் என்று சொல்லி யிருக்கிறேன். ஏனென்றால் ரொம்ப வேகமாகப் போனால், ஒரு கண் பாழாகி விட்டால் கூட அது பெரிய பிரச்சினையாகப் போய்விடும்.

இந்த ஆண்டு 22,000 பேருக்கு செய்ய இருக்கிறோம். அதை யும் நல்ல பிளான்ட்டாக, அவசரம் இல்லாமல் செய்ய இருக் கிறோம். அதே நேரத்திலே தனியார்களுக்கும் நாம் உதவி

செய்து கொண்டிருக்கிறோம். ஊக்கம் அளித்துக் கொண்டிருக்கிறோம். மருத்துவ மனைகளில் ஏராளமாக நடத்துங்கள் என்று. ஒட்டுமொத்தமாக எல்லா நிறுவனங்கள் மூலமாகவும் கிட்டத்தட்ட 70,000, 75,000 ஆபரேஷன்கள் செய்ய திட்டமிடப்பட்டிருக்கிறது. ஒரு லட்சம் பேர்களுக்கு காடராக்ட் ஆபரேஷன் இந்த ஆண்டில் செய்ய முடியும் என்று நம்புகிறோம்.

இதே டெம்போவில் செய்தால் நிச்சயமாகச் செய்ய முடியும் என்று நம்புகிறோம்.

அடுத்து திருமதி இராசாம்பாள் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். stipend for candidates undergoing the post-graduate course.

Hitherto stipend was sanctioned for candidates undergoing post-graduate course for a maximum period of 24 months. இப்போது மூன்று ஆண்டுகளாக அதை அவர்கள் நியமிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதை செய்து முடித்திருக்கிறோம். அதற்கான ஆணை போட்டிருக்கிறோம்.

The extra expenditure will be Rs. 17,49,000. என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அடுத்து, establishment of intensive coronary care unit in Kilpauk Medical college. என்ற ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். அதற்கும் நாங்கள் உத்தரவு போட்டிருக்கிறோம். அது நடைமுறைக்கு வந்துவிட்டது.

அதேமாதிரி மதுரை இராஜாஜி மருத்துவ மனையில் கார்டியாலஜி யூனிட் ஒன்றை அமைக்க உத்தரவு போட்டிருக்கிறோம். அதுவும் விரைவில் செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் பேசும் போது அங்கே நைட்ரஸ் ஆக்ஸைடு கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் சொன்னவுடனேயே நான் அதை ஒரு காகிதத்தில் குறித்துக்கொடுத்து விசாரிக்கச் சொன்னேன். உடனடியாக அந்த 'டீன்' அவர்களோடு தொலைபேசியில் தொடர்பு காண்டு கேட்கப்பட்டது. ஒன்றரை மணி நேரத்திற்குள் அதற்கு பதில் வந்திருக்கிறது. அப்போது அது அங்கே இருக்கிறது. தட்டுப்பாடு இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். உடனடி தகவலுக்காக இதைச் சொல்கிறேன். அவர்கள் இருக்கிறது என்று சொன்னாலும் 'ஐ வில் செக் இட் அப் அகேயின்' I am not taking it at the face value. மீண்டும் நான் விசாரிக்கிறேன் ஆக, அந்த வகையிலும் தாங்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.



நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பம்மல் நல்லதம்பி அவர்கள் இங்கே இருப்பார்கள் என்று நினைத்தேன், அவர்கள் இப்போது இல்லை. அவர்கள் ஒரு கோரிக்கையை வைத்தார்கள். சென்னையிலே அடுத்துள்ள வேளச்சேரி பகுதி தற்போது சென்னை மாநகருடன் இணைக்கப்பட்டிருப்பதால் அந்த இடத்தில் இயங்கி வந்திருக்கிற ஆரம்பச் சுகாதார நிலையம் மாற்றப்பட வேண்டுமென்று நீண்டநாள் கோரிக்கை வைத்துக் கொண்டிருந்தார்கள். அது சம்பந்தமாக ஒரு வெட்டுத் தீர்மானம் கூட கொடுத்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அது மேடவாக்கத்திற்கு மாற்றப்படும். அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுவிட்டது. ஜி.ஓ. 510-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. வேளச்சேரியில் உள்ள கூடுதல் டிஸ்பென்சரி ஒன்று தொடர்ந்து நடக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொரு விஷயத்தையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

Hitherto only a section of B.D.S. doctors were allowed stipend. Government have sanctioned the payment of stipend at the rate of Rs. 325 p.m. for a period of one year to all B.D.S. candidates after they complete the B.D.S. course.

இங்கே என்ன பிரச்சனை வந்தது என்றால் ஒரு பெரிய 'கம்யூனல்' பிரச்சனை வந்தது. அந்தப் பிரச்சனையை இருக்கக் கூடாது என்பதற்காக அத்தனை பேர்களுக்கும் கொடுக்கலாம் என்று உத்தரவு போட்டோம். அது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று. அதில் பின்தங்கிய ஏழை எளிய மாணவர்கள் பயனடைவார்கள் என்பதால் அப்படி அந்த உத்தரவைப் போட்டிருக்கிறோம்.

அதைப்போல இன்றைக்கு 'ப்ரீ ட்ரீட்மென்ட் பார் மெடிக்கல் காலேஜ் ஸ்டுடன்ஸ்' என்ற முறையை உருவாக்கியிருக்கிறோம். ஒரு குறிப்பிட்ட அளவு வருமானத்திற்குமேல் வருவாய் வருகின்ற குடும்பத்திலுள்ள மருத்துவக் கல்லூரி மாணவர்கள் சிகிச்சை பெற பணம் செலுத்த வேண்டும் என்று ஏற்கெனவே இருந்தது. அவர்களின் வேண்டுகோள் அடிக்கடி இது சம்பந்தமாக வந்து கொண்டிருந்தது. இப்பொழுது மெடிக்கல் காலேஜ் ஸ்டுடன்ஸ் எல்லோருக்கும் இலவச சிகிச்சை அளிக்க உத்தரவிட்டிருக்கிறோம்.

அது மட்டுமல்ல. இந்த ஆண்டு எம்.டி. 20 சீட்ஸ் உயர்த்தியிருக்கிறோம், எம்.எஸ். 13 சீட்ஸ் உயர்த்தியிருக்கிறோம்; எம்.சி.எச். 3 சீட்ஸ் உயர்த்தியிருக்கிறோம்; டி.எம். கார்டியாலஜி 4 சீட்ஸ் உயர்த்திருக்கிறோம்; எம்.டி.எஸ்.2 சீட்ஸ் உயர்த்தியிருக்கிறோம்; டி.ஓ. 6 சீட்ஸ் உயர்த்தியிருக்கிறோம்; டி.ஆர்தோ 4 சீட்ஸ் உயர்த்தியிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

டி 2 15..32

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1982 மார்ச் 11

இன்னும் ஒரே ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். சென்னை மாநகரில் கொசுத் தொல்லையைப்பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். சென்னை மாநகரில் இது ஒரு பெரிய பிரச்சனையாக இருக்கிறது. கொசுவை ஒழிக்க நாம் சென்னை மாநகரிலே மட்டும்தான் நடவடிக்கைக் எடுக்கிறோம் என்றில்லை. மலேரியாவைப் பொறுத்தவரையில் அதைக் கட்டுப்படுத்த பல இடங்களில் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இராமேஸ்வரம், மற்றும் சில இடங்களில் எல்லாம் நாம் குறைத்திருக்கிறோம். தரம் உயர்ந்த மருந்துகளைப் பயன்படுத்தி அங்கெல்லாம் ரொம்ப குறைத்திருக்கிறோம். ஆனால் சென்னையில் குறைக்க முடியவில்லை. அதனால் 70, 000 ; 72,000 என்று புள்ளிவிவரம் இருக்கிறது. மற்ற மாநிலங்களில் உள்ளவ களுக்கு இது பெரிதாகத் தெரிகிறது. இராமேஸ்வரத்தில் குறைத்தாலும் சென்னையில் ஜாஸ்தியாக இருக்கிறது. அதனால் பெரிய ப்ரோகிராம் என்று வைத்துக் கொண்டு, சென்னை மாநகரில் மலேரியா பிரச்னையை ஒழிக்க, உடனடியாக நடவடிக்கை எடுக்க சென்னை மாநகராட்சிக்கு ஸ்டாஃப், இக்விப்மென்ட்ஸ் போன்றவைகளுக்கு 25 இலட்சம் ரூபாய் கடனாக வழங்க அரசு முடிவு செய்திருக்கிறது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(இரவு 9–30)

அடுத்தபடியாக, இங்கே ஹாங்காங் ஆபரேஷனைப் பற்றிச் சொல்லப்பட்டது. அது புத்தகத்திலே மிகத் தெளிவாக இருக்கிறது. அது ஒரு சிம்பிள் ஆபரேஷன். அந்தப் புத்தகத்திலே அதைப்பற்றி எளிதாக எழுதப்பட்டிருக்கிறது. டிப்ளமோ இன் ஆர்தோ படித்து விட்டு, பட்டம் பெற்ற ஒருவர் எம்.எஸ். க்கு செல்பவரிடம் இந்த சிம்பிள் ஆபரேஷனைப் பற்றி கேட்டார்கள் என்று சொன்னார்கள். யார்மீது பழிவாங்க வேண்டுமென்ற எண்ணமோ, புறக்கணிக்க வேண்டுமென்ற எண்ணமோ எனக்கோ, இந் ஆட்சிக்கோ இந்த அரசாங்கத்திற்கோ கிடையாது

நாம் இந்தத் துறைக்கு எவ்வளவோ பணம் ஒதுக்கி, அதற்கு ஜாஸ்தியான தொகையை செலவழித்துக் கொண்டிருக்கிறோம்; அங்கே 'காட்ஸ்கின்' வருகிறது ; இங்கே 'காட்ஸ்கின்' வருகிறது என்று சொன்னாலும் எனக்குத் திருப்தி கிடையாது. இன்னும் எவ்வளவோ செய்யவேண்டியிருக்கிறது. ஆகவேதான், கொள்கை ரீதியாக இதைப் பற்றிக் கொஞ்சம் சிந்திக்க வேண்டிய நேரத்திலே இருக்கிறோம். இந்தத் துறைக்கு நாம் எவ்வளவோ செலவழிக்கிறோம் என்று சொன்னாலும்கூட, ஒரளவுக்கு இது குறைவுதான். Why t we start a Hos it C r r tion. சில தனிப்பட்ட ஆஸ்பத்திரிகளில் பல வசதிகளை செய்து, ஏராளமாக பணத்தை வாங்குகிறார்கள். கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு 100, 150 ரூபாய் என்று வாங்குகிறார்க . ஆகவே, நாம் ரு



1982 மார்ச் 11] [டாக்டர் எச். வி. ஹண்டே]

ஆஸ்டில் கார்ப்பரேஷனை அமைத்து, அதிலே எல்லா வசதிகளையும் ஏற்படுத்தி, மிடில் கிளாஸ் மக்களுக்கு 10, 15 ரூபாயில் ஓரளவுக்கு அந்தப் படுக்கைகள் கொண்ட வசதியுடன் செய்தால் நன்றாக இருக்கும். இந்தக் கருத்தைப் பற்றி நான் ஒரு கூட்டத்திலேகூட சொன்னேன்.

Why n t we sta t a H s ital C rp r ti n of Tamil Nadu for the sake of upper and l wer-middle cl sses, espe ia ly the lower-mi dle l sses. என்று சொல்லியிருக்கிறேன். அந்தக் கருத்தில் நிச்சயமாக இப்போது எந்தவிதமான முடிவும் இல்லை. அது அரசாங்கத்தின் கொள்கையும் அல்ல.

It is a loud thinking.

சில யோசனைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் வாய்ப்புக் கிடைக்கின்ற போது சொல்லலாம். அப்படிச் சொன்னாலும் கூட, இந்த 4·80 கோடி ரூபாயை நாம் இங்கே செலவு செய்ய முடியாது. மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் நாம் ஒதுக்கியுள்ள தொகை, கொஞ்சம் சதவிகிதம் அதிகமாக உள்ளது. 1 சதவிகிதம் ஏற்கனவே நாம் அதிகமாக செலவழித்துக் கொண்டிருக்கிறோம். அப்படி செலவழித்துக் கொண்டிருந்தாலும் கூட, நாம் ஒதுக்கியுள்ள தொகை கொஞ்சம் போதாது.. தான். குறைவு என்பதிலே கருத்து வேறுபாடு கிடையாது. இதை மறுபரிசீலனை செய்து, புதிய கண்ணோட்டத்தோடு இதைப் பார்க்கவேண்டும் என்று சொல்லுகிற நேரத்திலேகூட, சென்ட்ரல் கவர்ன்மென்டைப் பொறுத்தவரையில் எங்களைப் பாராட்டுகிறார்கள்.

The Centr l Gove nment are ve y much pleased with our pe f m nce. They are very happy, wh the it is leprosy. whether it is tuberc losi . டி.பி யாக இருந்தாலும் அல்லது வேறு எந்த நோயாக இருந்தாலும், நாங்கள் நன்றாக நடத்திக் கொண்டிருக்கிறோம் என்று எங்களை அவர்கள் பாராட்டுகிறார்கள். ஆகவே, அந்த அளவிற்கு

We are praised for doing much greater things.

நம்முடைய இலாக்காக்கள் நல்லவகையில் செய்ய வேண்டுமென்ற ஆசையிருக்கிறது செய்வதற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள். இந்த விஷயத்தில் மாண்புமிகு உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், எந்த நேரத்தில் எப்படி விமர்சனம் செய்தாலும், எனக்கு கொஞ்சம்கூட வருத்தம் கிடையாது. அதன்மூலம் எனக்கு இரண்டு நன்மைகள் ஏற்படுகின்றது.

I get an extra channel of communication. இவ்வாறு சொல்வதினால், நடைபெறக் கூடிய உண்மைகளை. அதிகாரிகளின் உதவியில்லாமல் தெரிந்துகொள்ள வாய்ப்பிருக்கிறது. அது மட்டுமல்ல. அதிகாரிகளுக்கு சட்டமன்றத்திலே

சொல்லுவார்களே என்ற பயமும் கொஞ்சம் இருக்கும். நம்முடைய மாண்புமிகு சங்கரய்யா அவர்கள் ஒரு முக்கியமான கருத்தைச் சொன்னார்கள். பல மருத்துவமனைகளிலே பணம் வாங்குகிறார்கள், அப்படிப் பணம் வாங்கி மருத்துவ சிகிச்சை செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது என்று சொன்னார்கள். அது பல இடங்களில் நடக்கின்றது. அது எங்களுக்கு நன்றாகத் தெரியும். தெரியவில்லை என்று சொல்ல மாட்டேன். எப்படியும் கண்டுபிடித்தாக வேண்டும். இரண்டு நாட்களுக்கு முன்புகூட அதிகாரிகளிடத்திலே சொல்லியிருக்கிறேன். இதை நீங்கள் கண்டுபிடித்தாக வேண்டும். கண்டுபிடித்து இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும் என்று அவர்களிடத்திலே சொல்லி இருக்கிறேன். இதற்கு மேல், சட்டமன்றத்தில் உறுப்பினர்கள் இதைப் பற்றி பேசுவார்கள் என்ற பயம் அவர்களுக்கு இருக்க வேண்டும். ஆகவே, இதைப் பற்றிச் சொல்வதற்கு உறுப்பினர்களுக்கு சங்கோஜம் இருக்கத் தேவையில்லை. சட்டமன்றத்திலே உறுப்பினர்கள் கருத்துக்களுக்கு மதிப்பு கொடுக்கவில்லை என்றால், யாருடைய கருத்துக்கு மதிப்பு கொடுப்பார்கள். ஆகவே, அந்த அடிப்படையிலேதான் சொல்கிறேன். இப்படிப்பட்ட தவறான முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். சென்னையிலே டிபுடி டைரக்டரிடத்திலே சொல்லி இருக்கிறேன். எல்லா இடங்களுக்கும் சென்று, ஒரு மாதத்திற்குள் கண்டிப்பாக எல்லா இடங்களுக்கும், மருத்துவமனைகளுக்கும் சென்று பரிசோதனை செய்து, எங்கெங்கு தவறுகள் நடைபெறுகின்றன என்பதைச் சொல்ல வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன்.

சில நேரங்களில் தெரிகிறது. நோயாளிகள் சாட்சி சொல்லப் பயப்படுகிறார்கள். ஆக, இப்படிப்பட்ட பிரச்னைகள் வராமல் இருக்க சட்டமன்ற உறுப்பினர்கள் ஒத்துழைப்பு தேவை.

பெரம்பூர் பொறுத்தவரையில் திரு. பாலன் அவர்கள் ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்களும் அவர்களுக்குச் சாதகமாகப் பேசி இருக்கிறார்கள். சென்ற ஆண்டு ஆரம்பிக்க முடியவில்லை. அட்மினிஸ்ட்ரேட்டிவ் பாட்டில் நெக் ஏற்பட்டு இப்படி ஒரு ஆண்டு ஆயிற்றே என்று கேட்டு, இத்துறை செயலாளர் சுறுசுறுப்பாக செயலாற்றி—அவர்களை மிகவும் பாராட்ட வேண்டும்—அந்த பாட்டில்நெக்கை நீக்கி நில ஆர்ஜிதம் செய்து வேலையை ஆரம்பிக்க ஒரு ஜீ. ஓ. போட்டுவிட்டார்கள். வியாசர்பாடிக்குப் பதிலாக பெரம்பூரில் இந்த புற நோய் மருத்துவமனை ஆரம்பிக்க இருக்கிறது. அந்த விழாவில் உறுப்பினர்கள் எல்லாம் கலந்து கொள்ள வேண்டும். இன்னும் இத்துறைக்கு ஏராளமாக செலவழிக்க வேண்டியிருப்பதால், மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது: இப்போது வாக்கெடுப்பு.





**கோரிக்கை எண் 18 மருத்துவம்**

திருவாளர்கள் இரெ. இராசமாணிக்கம், சி. பழனிமுத்து, டி. மணி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன் உள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண். 18—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 76,56,72,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 19 பொதுச்சுகாதாரம்

திருவாளர்கள் சு. பாலன், கே. எம். தங்கமணி, டி. மணி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன் உள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண். 19—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 74,45,47,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 12—3—1982-ம் தேதி காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 9-38 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

**5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.**

**அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.**

124. தமிழ்நாடு காதி-கிராமத் தொழில் வாரியத்திற்கு உறுப்பினர்கள் நியமனம் செய்வது சம்பந்தமான, தொழில் துறையின் 2—4—1980 ஆம் தேதியிடப்பெற்ற 11 (1)/209/பி/80 ஆம் எண் அறிவிப்பை ரத்து செய்வது குறித்து 2—11—1981 ஆம் தேதியிடப் பெற்ற 1492 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு கதர்-கிராமத் தொழில் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1959] 29 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

125. தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியத்தைத் திருத்தி அமைப்பது குறித்து தொழில் துறையின் 2—11—1981 ஆம் தேதியிடப்பெற்ற 1493 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு கதர்-கிராமத் தொழில் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1959) 29 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

126. வணிகவரித் துறையில் பணியாற்றுகிற புள்ளிவிவர ஆய்வாளர் பதவித்தரத்திற்குக் குறையாத புள்ளிவிவரத்துறை அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிப்பது குறித்து வணிக வரிகள் சமய அறக் கட்டளைகள் துறையின் 28—9—1981 ஆம் தேதி இடப்பெற்ற 1098 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

127. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 18—11—1981 ஆம் தேதி இடப்பெற்ற 1283 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

128. பொது (காவல்) துறையின் 20—11—1935 ஆம் தேதி இடப்பெற்ற 173 ஆம் எண் அறிவிப்பில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 6—1—1982 ஆம் தேதியிடப்பெற்ற 29 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு பந்தய வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1935) 10 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

129. வெளியூர்களில் நடைபெறும் குதிரைப் பந்தயங்களுக்குச் சென்னை, கிண்டியிலுள்ள பந்தயத் திடலுக்குள் பந்தயம் கட்டுவதைப் பொறுத்த வரையில் விதிக்கத் தக்க வரிவீதத்தை நிர்ணயம் செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 31—12—1981 ஆம் தேதியிடப் பெற்ற 1435 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு பந்தய வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1935) 10 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

130. கன்னியாகுமரி கேரள அரசு இல்லம் தாம் விற்பனை செய்கிற உணவுப் பண்டங்கள் மற்றும் கொள்முதல் செய்கிற மளிகைப் பொருள்களின் பேரில் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக் கட்டளைகள



துறையின் 4—1—1982 ஆம் தேதியிடப்பெற்ற 12 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

கோரிக்கை எண் 18—மருத்துவம் பற்றிய மானியக் கோரிக்கை மீதான மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் உரை, 1982–83 (தமிழ், ஆங்கிலம்)

81 இந்திய மருத்துவம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1982–83 (தமிழ், ஆங்கிலம்)

82 கோரிக்கை எண். 19—பொதுச் சுகாதாரம் பற்றிய மானியக் கோரிக்கை மீதான மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் உரை, 1982–83 (தமிழ், ஆங்கிலம்).

83. கோரிக்கை எண். 19-க்கான துணைக் குறிப்பு—கழிவு நீர் போக்கு மற்றும் குடிநீர் வழங்கல், 1982–83 (தமிழ், ஆங்கிலம்).

84. கோரிக்கை எண். 18—தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1982–83 (தமிழ், ஆங்கிலம்).

85. 1982–83 ஆம் ஆண்டில் மருத்துவப் பணி, மற்றும் குடும்ப நலம் பற்றிய செயல்வினை முறைத் திட்டம் (ஆங்கிலம்).

86. 1982–83 ஆம் ஆண்டில் மருத்துவக் கல்வி பற்றிய செயல்வினை முறைத் திட்டம் (ஆங்கிலம்).

87. 1982–83 ஆம் ஆண்டில் இந்திய முறை மருத்துவம் பற்றிய செயல்வினை முறைத் திட்டம்.

88. 1982–83 ஆம் ஆண்டில் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து, ஆரம்ப சுகாதார நிலையங்கள் பற்றிய செயல்வினை முறைத் திட்டம் (ஆங்கிலம்).

# இணைப்புகள்.

(52 -ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

கோரிக்கை எண். 18.

மருத்துவம்—கொள்கை விளக்கக் குறிப்பு.

1. தோற்றுவாய் :

கி.பி. 2000-க்குள் அனைவருக்கும் நல்வாழ்வு என்ற இயக் கத்தை செயல்படுத்துவதே இவ்வரசின் முதன்மையான குறிக் கோளாகும். இம் மாநிலத்தில் வாழும் குடிமக்கள் அனைவரும் சமூகரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் ஆக்கபூர்வமான வாழ்க்கையினை ஏற்று நடத்த அனுமதிக்கும் வகையில் அவர் களது நல்வாழ்வுத் தரம் மேம்படையச் செய்வதே இதன் பொருளாகும்.

2. இந்நோக்கத்தை கருத்திற்கொண்டு, கிராமப்புறங்களி லும், நகர குடிசைப் பகுதிகளிலும் வாழும் மக்களுக்கு வழங்கப் படும் சுகாதார பாதுகாப்பு நிலையை மேம்படுத்துவதற்கு இவ் வரசு மிகப் பெரிய அளவில் முயற்சிகளை செய்து கொண்டு வருகிறது.

இதன் மூலம் நாளடைவில் சுகாதார மேம்பாடு அடைந் தோர்க்கும், சுகாதார மேம்பாடடையாதோர்க்கும் இடையே உள்ள வேறுபாடு குறைக்கப்படும் எனவும் கருதுகிறது.

3. சுகாதாரப் பாதுகாப்புப் பணிகளை மேம்படுத்தும் நட வடிக்கைகளான—கட்டிடங்கள் கட்டுதல், அதிக படுக்கை வசதி களை வழங்குதல், மிக நுட்பமான மருத்துவக் கருவிகளை வாங் கித்தருதல், சிறப்பு மருத்துவச் சிகிச்சை வசதிகளை வழங்கு தல், மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களது எண்ணிக்கையை அதிகப்படுத்தித் தருதல், வழங்கப்பட்டு வரும் மருத்துவப் பணிகளை மேம்படுத்துதல், சமூகத்தின் மிக மிக ஏழைப் பிரிவினருக்கும் போய் சேர முடியும் என்ற கருத்தினை யொட்டியே இவ்வரசு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக் கிறது. ஒவ்வொரு ஆண்டும் சுகாதாரத்திற்கென கூடுதல் தொகை ஒதுக்கீடு செய்யப்படுவதின் மூலம் இது புலனாகும். 1982—83 ஆம் ஆண்டில் ரூ. 731 இலட்சம் மதிப்பில் மேம்பாடுகள் வழங்க கருதப்பட்டிருக்கின்றன.

1982—83 ஆம் ஆண்டில் ஒப்புதல் வழங்கக் கருதப்பட்டுள்ள திட்டங்களில் முக்கியமானவை கீழே தரப்படுகின்றன :—

(1) சென்னை குழந்தை நல நிறுவனத்தின் படுக்கைகளின் எண்ணிக்கையை 250லிருந்து 500-க்கு உயர்த்துதல்.





(2) ரூ. 44 இலட்சம் செலவில் தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தலை ஸ்கான்னர் கருவி (Head Scanner) வழங்குதல்.

(3) ரூ. 107 இலட்சம் செலவில் மதுரை அரசு இராஜாஜி மருத்துவ மனையில் முழு அளவு உடல் ஸ்கான்னர் கருவி (Whole body Scanner) வழங்குதல்.

(4) சென்னை இராயப்பேட்டை மருத்துவ மனையில் தலைக்காய சிகிச்சை பிரிவு ஏற்படுத்தித்தருதல்.

4. சென்னை மருத்துவக் கல்லூரியை, பட்ட மேற்படிப்பு மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலையமாக உயர்நிலைப் படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொண்டு வருகிறது. மேலும் மருத்துவப் பல்கலைக் கழகம் தனியாக ஒன்று ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறது. தேவையான கருத்துக்களை உருவாக்க தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது.

5. சாலை விபத்துக்களில் பலியாகிறவர்களுக்கு முக்கிய மான மருத்துவமனைகளில் சிறப்புப் பிரிவுகளை அமைத்தும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிறப்பு மருத்துவப் பெட்டிகளை அளித்தும் மிக மிக விரைவாக மருத்துவ நிவாரணம் வழங்கக் கருதி, இவ்வரசு விபத்து மற்றும் அவசரப் பணிகள் திட்டத்தினை உருவாக்கி செயல்படுத்துவதில் முன்னோடியாகத் திகழ்கிறது. மிக குறுகிய நேரத்தில், மிக அருகில் உள்ள மருத்துவ மனை களுக்கு, பலியாகிறவர்களை எடுத்துக் கொண்டு செல்ல ஆம்பு லன்ஸ் ஊர்தி வசதி நடைமுறைக்கு வர இருக்கிறது. இத்திட்டம் இந்திய அரசின் பாராட்டினைப் பெற்று, இந்திய அரசே பிற மாநிலங்களில் செயல்படுத்த பரிந்துரை செய்திருக்கிறது.

6. இவ்வரசு குடும்பநலத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தொடர்ந்து அதிக முக்கியத்துவம் காட்டிவருகிறது. நடப்பு ஆண்டில் அறுவைச் சிகிச்சைகளிலும் ஏனைய குடும்பத்திட்ட முறைகளிலும் எய்திய சாதனை, சென்ற ஆண்டைவிட சிறந்த முறையில் இருக்கிறது. சென்னை மற்றும் மதுரையில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில், தொண்டு நிறு வனங்களின் ஒத்துழைப்புடன் நடைபெற்று வரும் லாப்ரோஸ் கோபிக் முறையிலான அறுவை சிகிச்சை முறை நடப்பு ஆண்டின் சிறப்பு அம்சமாகும். குடும்ப நலத்திட்டத்தில் அடங்கிய கர்ப் பிணிப் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் தடுப்பூசி போடுவது அவர்களது சுகாதாரப் பாதுகாப்பினை மேம்படுத்துவது ஆகிய மகப்பேறு மற்றும் குழந்தை நலத் திட்டத்திற்கு தொடர்ந்து உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது.

7. மருத்துவக் கல்வித் துறையில் சிறப்புப் பிரிவுகளில் ஒரு குறிப்பிடத் தகுந்த மேம்பாடு அடையப்பட்டிருக்கிறது. இந்திய மருத்துவக் குழு கூட இதனை அங்கீகரித்திருக்கிறது.

8. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு கோரிக்கைகளில் அடங்கிய செலவின் விபரங்களை பிற்சேர்க்கை 1-ல் தரப்படுகின்றன.

## II. மருத்துவக் கல்வித் துறை.

**1. மருத்துவக் கல்லூரிகள் :**

தற்சமயம், மாநிலத்தில் 8 அரசு மருத்துவக் கல்லூரிகளும், ஒரு அரசு பல் மருத்துவக் கல்லூரியும் இருக்கின்றன. அவைகளில், 3 மருத்துவக் கல்லூரிகளும், அரசு பல் மருத்துவக் கல்லூரியும் சென்னை மாநகரில் உள்ளன. எஞ்சிய 5 மருத்துவக் கல்லூரிகளும் மாவட்டங்களில் உள்ளன. தாலுகா மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் மருத்துவர்களுக்கு கற்பிக்கவும், பயிற்சி அளிக்கவும் போதுமான அளவு மருத்துவத்தில் சிறப்புத் தகுதிபெற்றவர்கள் வேண்டும் என்பதற்காக பட்ட மேற்படிப்பிற்கான இட ஒதுக்கீட்டினை உயர்த்த அரசு முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறது. பட்டப்படிப்பு பட்ட மேற்படிப்பு மற்றும் உயர்நிலை சிறப்புப் பட்ட வகுப்புகள் பற்றிய விவரங்கள் பிற்சேர்க்கை இரண்டில் உள்ளன.

**(2) செவிலியர் பயிற்சி :**

தற்போது 8 செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் உள்ளன. செவிலியர் பயிற்சிக்குள்ள 675 இடங்களை 690 இடங்களாக அரசு இப்போது அதிகரித்துள்ளது. மேலும் ஒரு புதிய பயிற்சிப் பள்ளி திருநெல்வேலியில் துவங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஒவ்வொரு ஆண்டிலும் ஜனவரித் திங்கள், ஜூலைத் திங்கள் ஆகிய இரண்டு பயிற்சிப் பிரிவுக்கு மாணவிகள் அனுமதிக்கப்படுகின்றனர். 1981 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் செவிலியர் பயிற்சிக்கு 345 மாணவிகள், அனுமதிக்கப்பட்டனர். 1982 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் பயிற்சிக்கு 345 மாணவிகள் அனுமதிக்



கப்படுவார்கள செவிலியர் பயிற்சி பள்ளிக்கான இடநெருக்கடியை எளிதாக்க இரண்டு பிரிவுக்கும் உள்ள 690 இடங்களை கீழ்க்கண்டவாறு ஒதுக்கப்பட்டுள்ளன :—

| வரிசை எண்ணும், செவிலியர் பயிற்சிப் பள்ளியுள்ள இடங்களும். | மாணவிகளின் எண்ணிக்கை. ஜனவரி. | ஜூலை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. அரசு பொது மருத்துவமனை, சென்னை .. .. .. | 65 | 65 |
| 2. அரசு கஸ்தூரிபா காந்தி பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான மருத்துவமனை, சென்னை. .. | 25 | 25 |
| 3. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர் .. | 35 | 35 |
| 4. கோயம்புத்தூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர். | 35 | 35 |
| 5. அரசு தலைமையிட மருத்துவமனை, திருச்சி .. .. | 50 | 50 |
| 6. அரசு தலைமையிட மருத்துவமனை, சேலம் .. .. | 50 | 50 |
| 7. அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை .. .. .. | 40 | 45 |
| 8. அரசு இராஜாஜி மருத்துவமனை, மதுரை .. .. .. | 45 | 40 |
| | 345 | 345 |
| மொத்தம் .. | 690 | |

இப்பயிற்சியின் காலம் $3\frac{1}{2}$ ஆண்டுகளாகும். பொது செவிலியர் பயிற்சிக்கான மூன்று ஆண்டுகள் முடிந்தவுடன் ஆறுமாத கால மகப்பேறு பயிற்சிக்காக செவிலியர் மாணவியர்கள்

மகப்பேறு பயிற்சி நிலையங்களில் நியமிக்கப்படுவர். உதவித் தொகை பெறும் செவிலியர் இடங்களான 340 கீழ்க்கண்டவாறு ஒதுக்கப்பட்டுள்ளன :—

| மகப்பேறு பயிற்சி நிலையங்கள். | இடங்கள். |
|---|---|
| (1) | (2) |
| 1. மகப்பேறு மற்றும் மகளிர் நோய் இயல் நிறுவனம் மற்றும் அரசு பெண்கள் குழந்தைகள் மருத்துவமனை, சென்னை .. .. | 89 |
| 2. அரசு கஸ்தூரிபா காந்தி பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை, சென்னை .. | 76 |
| 3. அரசு இராஜா சர் மிராசுதார் மருத்துவமனை, தஞ்சாவூர் .. .. .. .. | 50 |
| 4. அரசு இராஜா சர் இராமசாமி முதலியார் மகப்பேறு மருத்துவமனை, சென்னை .. | 39 |
| 5. அரசு இராஜாஜி மருத்துவமனை, மதுரை .. | 51 |
| 6. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர் .. .. .. | 35 |
| | 340 |

வெற்றிகரமாக பயிற்சியை முடித்த பின் செவிலியர் பயிற்சியில் பட்டயமும், மகப்பேறு பயிற்சியில் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

1981 ஆம் ஆண்டு மார்ச் திங்களில், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மற்றும் தலைமையிட மருத்துவமனை, திருச்சி செவிலியர் பயிற்சி பள்ளிக்கும் அதோடு இணைந்த மாணவர் விடுதிக்கும் முறையே ரூ. 47.70 இலட்சம் மற்றும் ரூ. 47.80 இலட்சம் செலவில் கட்டிடங்கள் கட்ட அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

(b) இயன் மருத்துவம் :

1968 ஆம் ஆண்டில், உலக அளவில் உள்ள இயன் மருத்துவப் பயிற்சியின் தரத்திற்கொப்ப இயன் மருத்துவப் பட்டயப் படிப்பின் இரண்டு ஆண்டு பயிற்சி மூன்று ஆண்டாக அதிகரிக்கப்பட்டது. சென்னை-83-ல் உள்ள கே. கே. நகர் மறுவாழ்வு மற்றும் செயற்கை உறுப்பு பொருத்தும் நிலையத்தோடு இணைந்த இயன் மருத்துவப் பயிற்சிப் பள்ளியில் ஒவ்வோராண்டும் 10 உதவித் தொகை பெறும் மாணவர்கள் பயிற்சிக்கு அனுமதிக்கப்படுகின்றனர். 1981 ஆம் ஆண்டு ஜூலையில் 10 உதவித் தொகை பெறும் மாணவர்களும் மற்றும் 7 உதவித் தொகை பெறாத மாணவர்களும் பயிற்சிக்கு அனுமதிக்கப்பட்டனர். 1981 ஆம் ஆண்டு நவம்பரில், இயன் மருத்துவப் பயிற்சிக்குரிய உதவித் தொகை மாதம் ஒன்றுக்கு ரூ. 100—120-லிருந்து ரூ. 115—130 ஆக உயர்த்த ஆணையிடப்பட்டது.



(c) பொது உடல் நல செவிலியர் பட்டயப்படிப்பு :

1980 ஆம் ஆண்டு ஜனவரியில் பல்வேறு திட்டங்களுக்காக கூடுதல் பொது உடல் நலச் செவிலியர்களை அடைய சென்னை மருத்துவக் கல்லூரியிலுள்ள செவிலியர் பயிற்சிக் கல்லூரியில் 10 மாதங்களைக் கொண்ட பொது உடல் நல செவிலியர் பட்டயப்படிப்பு தொடங்க அரசு ஒப்புதல் அளித்தது. 1981-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து, 20 பணிபுரியும் மாணவர்கள் இப்பட்டயப் படிப்புக்கு அனுமதிக்கப்படுகின்றனர். 1981 ஆம் ஆண்டு செப்டம்பரில் இப்பயிற்சி நடத்த ரூ. 13,000 செலவு செய்ய அரசு அனுமதி வழங்கியது.

(d) சுகாதார பணியாளர்கள் (பெண்கள்) பயிற்சி வகுப்புகள் :

1979 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் பல்நோக்குப் பணியாளர் திட்டத்தின் கீழ் இரண்டு ஆண்டுப் படிப்பான மகப்பேறு மற்றும் செவிலியர் பயிற்சியை 18 மாதம் பயிற்சியாக மாற்றி அரசு ஆணையிட்டது. ஏற்கனவே வேலூர், சேலம், திருச்சி மற்றும் திண்டுக்கல் தலைமை மருத்துவ மனைகளில் செயல்படும் மகப்பேறு மற்றும் செவிலியர் பயிற்சிப்பள்ளிகள் தவிர, காஞ்சீபுரம், கடலூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம் மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் உள்ள தலைமை மருத்துவ மனைகளில் 5 புதிய மகப்பேறு மற்றும் செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன. தற்போதுள்ள 4 பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கையை 120-லிருந்து 240 ஆக உயர்த்துவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19 ஆம் நாளிட்ட சமூக நலத்துறை அரசாணை எண். 653-ல், ரூ. 99.48 இலட்சத்தில் பழைய பயிற்சி பள்ளிகளிலும் புதிய பயிற்சி பள்ளிகளிலும் கட்டிடங்கள் கட்டவும், ஆணையிடப்பட்டது. அப்பயிற்சிப் பள்ளிகளுக்கான கட்டிடங்கள் முடியும் தருவாயில் உள்ளது. பழைய 4 பள்ளிகளில் 6 மாதத்திற்கு 240 மாணவர்களும், புதிய 5 பள்ளிகளில் 6 மாதத்திற்கு 150 மாணவர்களும் சேர்க்கப்படுகிறார்கள். ஆக ஓர் ஆண்டிற்கு 780 பேர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். மேலும் 4 பயிற்சிப் பள்ளிகளை ஈரோடு, புதுக்கோட்டை, தூத்துக்குடி மற்றும் தர்மபுரி ஆகிய இடங்களில் திறக்க அரசு ஆலோசித்து வருகிறது.

(e) டி. பார்மசி படிப்பு :

தற்சமயம் டி. பார்மசி பட்டயப்படிப்பு மதுரை மருத்துவக் கல்லூரியில் 125 மாணவர்களைக் கொண்டு நடத்தப்பட்டு வருகிறது. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியிலும், கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியிலும் ஆண்டொன்றுக்கு, ஒவ்வொரு கல்லூரியிலும் 60 மாணவர்கள் வீதம் சேர்த்துக்கொண்டு டி. பார்மசி வகுப்பு நடத்த அரசு அனுமதி வழங்குகியுள்ளது. இவ் வகுப்புகள் நடந்து வருகின்றன.

(f) மற்றைய படிப்புகள் :

மேற்குறிப்பிட்டதைத் தவிர, துப்புரவு ஆய்வாளர் படிப்பு, கண்வரைவாளர் பயிற்சிப்படிப்பு, கதிர்வீச்சு உதவியாளர் படிப்பு, இருட்டறை உதவியாளர் படிப்பு, எலும்பு முறிவு சிகிச்சை, ஆய்வுக்கூட நுண்ணறிவுப் படிப்பு, ஆய்வுக்கூட நுண்ணறிவாளர் தரம் 2 படிப்பு, கண் சிகிச்சை உதவியாளர் படிப்பு மற்றும் பல் மருத்துவ நுட்பனர் படிப்ப ஆகியவை பல்வேறு மருத்துவக் கல்லூரியிலும், சென்னை கிண்டியிலுள்ள தடுப்பு மருத்துவ கிங் நிலையத்தில் நடத்தப்படுகின்றன. மருத்துவ ஆவணங்கள் காப்பாளர் படிப்பையும் அரசு மீண்டும் துவங்கியுள்ளது.

(g) பி.எஸ்.ஸி. செவிலியர் பயிற்சி :

அடிப்படை பி.எஸ்.ஸி. செவிலியர் பயிற்சி சென்னை மருத்துவக் கல்லூரியில் நடத்தப்படுகிறது. ஆண்டுக்கு 20 பணிபுரியும் மாணவிகளும், 10 மற்ற மாணவிகளும் அனுமதிக்கப்படுகின்றனர்.

3. மருத்துவ ஆராய்ச்சி :

1982–83 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 8.37 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(4) மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் :

(a) புறநகர் மருத்துவமனைகள் :

சென்னை மாநகரின் சுற்றுப்புறங்களில் வாழ்கின்ற மக்களுக்கு மருத்துவ வசதி அளிப்பதற்கென அமைக்கக் கருதப்பட்டுள்ள ஐந்து புறநகர் மருத்துவ மனைகளுள் மூன்று கே. கே. நகர், அண்ணா நகர், தண்டையார்பேட்டை ஆகிய இடங்களில் ஒவ்வொன்றும் 100 படுக்கைகளோடு இயங்கி வருகின்றன. 1981–82 ஆம் ஆண்டில் பெரம்பூரில் ஒரு புறநகர் மருத்துவமனை கட்டுவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.





(b) கேட்பியல் பிரிவுகள் அமைத்தல் :

1981–82 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர், திருநெல்வேலி, தஞ்சாவூர் ஆகிய இடங்களிலுள்ள மருத்துவக் கல்லூரிகளின் காது, மூக்கு, தொண்டை துறையில் மூன்று கேட்பியல் பிரிவுகளை ரூ. 2.16 இலட்சம் செலவில் அமைப்பதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

(c) மருத்துவக் கல்லூரிகள் மற்றும் அவைகளைச் சார்ந்த மருத்துவ மனைகளின் மேம்பாடு :

(1) மருத்துவக் கருவிகள் :

1981–82 ஆம் ஆண்டில் பல்வேறு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு கருவிகள் வாங்குவதற்காக ரூபாய் 71·21 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது. இதன் விவரம் பிற்சேர்க்கை 3-ல் கொடுக்கப்பட்டுள்ளது. 1982–83-ல் ரூபாய் 220.78 இலட்சம் மதிப்புள்ள கீழ்க்கண்ட உபகரணங்கள் வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது :—

| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1 | திருநெல்வேலி மருத்துவக் கல்லூரிக்கு உபகரணங்கள் வாங்குதல் .. .. | 1.00 |
| 2 | மதுரை மருத்துவக் கல்லூரியில் உள்ள நச்சுக்கிருமி பரிசோதனைக் கூடத்திற்கு உபகரணங்கள் வாங்குதல் .. .. | 20.00 |
| 3 | சென்னை பல் மருத்துவக் கல்லூரிக்கு உபகரணங்கள் வாங்குதல் .. .. | 5.00 |
| 4 | தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு தலையிலுள்ள நோய் கண்டறியும் ஸ்கானர் என்ற கருவி வாங்குதல் .. | 43.85 |
| 5 | இராயப்பேட்டையிலுள்ள அரசு மருத்துவமனையில் தலைக்காய பிரிவிற்கு உபகரணங்கள் வாங்குதல் .. .. | 6.00 |
| 6 | கே. கே. நகரிலுள்ள செயற்கை அவயங்கள் பொருத்தும் மற்றும் மறுவாழ்வு நிறுவனத்திற்கு 300 எம்.ஏ.எக்ஸ் கதிர் கருவி வாங்குதல். | 2.82 |

[1982 மார்ச் 1]

| | | |
|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 7 | எட்டு மருத்துவக் கல்லூரியைச் சார்ந்த மருத்துவமனைகளுக்கு உபகரணங்கள் வழங்குதல். | 10.00 |
| 8 | உடல் முழுவதும் நோய் கண்டறியக்கூடிய ஸ்கானர் கருவி மதுரை இராஜாஜி மருத்துவ மனைக்கு வழங்குதல். | 107.11 |
| 9 | மதுரை இராஜாஜி மருத்துவ மனையில் உள்ள செயற்கை அவயவங்கள் பொருத்தும் நிலையத்திற்கு உபகரணங்கள் வாங்குதல். | 15.00 |
| 10 | காரப்பேட்டை அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய் மருத்துவ மனைக்குக் கருவிகள் வழங்குதல். | 10.00 |

(2) கட்டிடங்கள் :

இம்மாநிலத்திலுள்ள பல்வேறு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளை மேம்படுத்த 1981–82 ஆம் ஆண்டில் ரூபாய் 416.98 இலட்சம் மதிப்பில் பல்வேறு கட்டிடப் பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களின் விவரங்கள் பிற் சேர்க்கை 4-ல் தரப்பட்டுள்ளது. 1982–83 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட கட்டிடம் கட்டும் பணிகள் ரூபாய் 341.62 இலட்சம் மதிப்பில் அமுல்படுத்தப்படவிருக்கின்றன :—

| | | |
|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1 | கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மதுரை இராஜாஜி மருத்துவ மனைகளில் செவிலியர் பயிற்சியாளர்களுக்கும் செவிலியப் பணியாளர்களுக்கும் கூடுதல் தங்குமிடம் வசதி செய்து தருதல். | 103.00 |
| 2 | சென்னை குழந்தைகள் நல நிறுவனம் குழந்தைகள் மருத்துவமனையில் 250 படுக்கைகளை 500 படுக்கைகளாக உயர்த்தும் கட்டிடம் கட்டுதல். | 173.24 |
| 3 | சென்னை மனநோய் மருத்துவமனையில் பெண்கள் மனநோய் தீவிர சிகிச்சைப் பிரிவு அமைத்தல். | 6.00 |



1982 மார்ச் 11]

| | | |
|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 4 | திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் குழந்தைகளுக்காக 20 படுக்கைகள் கொண்ட பகுதி கட்டுதல். | 7.00 |
| 5 | தாம்பரம் உருக்கிநோய் மருத்துவமனையில் வெளி நோயாளிகள் மார்புச் சிகிச்சை வெளி நோயாளிகள் பிரிவு அமைத்தல். | 5.06 |
| 6 | அரசு இராயப்பேட்டை மருத்துவமனையில் உள்ள (ஏ) மற்றும் (பி) பிரிவு அறுவை அரங்கிற்குச் சில கூடுதல் வசதிகள் அளித்தல். | 0.61 |
| 7 | மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் நான்காவது மற்றும் ஐந்தாவது அறுவை அரங்கங்களுக்கு ஸ்டைரயில் காரிடர் வசதி செய்து கொடுத்தல். | 1.57 |
| 8 | சென்னை மருத்துவக்கல்லூரி மருந்தாக்கியல் துறையில் உள்ள சிறியபரிசோதனைக் கூடத்தில் தூசி புகாமலிருக்க தக்க குளிர்வசதி ஏற்படுத்துதல். | 0.30 |
| 9 | தஞ்சாவூர் அரசு ராஜா மிராசுதார் மருத்துவமனையில் காத்திருக்கும் கூடம் ஒன்றை கட்டித் தருதல். | 0.80 |
| 10 | திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் திறந்த வெளிக்கிணறு தோண்டுதல் மற்றும் மேல்நிலைத் தொட்டி ஒன்று அமைத்தல். | 5.00 |
| 11 | மதுரை மருத்துவக் கல்லூரியின் விளையாட்டு மைதானத்திற்குள் நுழையும் மழைத் தண்ணீரை தடுப்பதற்கான கல் கட்டு வடிகால் அமைத்தல். | 1.50 |
| 12 | திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் பிரிட்டிஷ் அரசால் இலவசமாக வழங்கப்பட்ட நடமாடும் மருத்துவப் பிரிவு வண்டியை நிறுத்தி வைப்பதற்கான தற் | 0.41 |

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 13 தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மற்றும் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை ஆகியவைகளுக்குத் தனித்தனியே மின் இணைப்பு அமைப்பது. | 0.84 |
| 14 சென்னை அரசு பொது மருத்துவமனை, ராஜா சர் இராமசாமி முதலியார் மகப் பேறு மருத்துவமனை, ஓட்டேரி திரு வொட்டீஸ்வரர் காச நோய் மருத்துவ மனைகளுக்கு மின் உற்பத்தி கருவி வழங்குதல். | 13.44 |
| 15 சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் எல்லா வசதிகள் கொண்டு விளக்கும்படி நீராவி சலவை நிலையம் ஒன்று அமைத்தல். | 3.00 |
| 16 மதுரை மாவட்டம் பாலரெங்காபுரம் அரசு மருத்துவமனையில் சலவை நிலையம் ஒன்று கட்டித் தருவது. | 0.35 |
| 17 அரசு பொது மருத்துவ மனையில் இருதய மற்றும் மார்புக்கூடு சிகிச்சைப் பிரிவில் உள்ள அறுவை அரங்கத்திற்கும். அறுவை சிகிச்சைக்கு பிந்திய சிகிச்சைப் பகுதிக்கும் சன்னல் அமைப்பு சீர்வளி வசதி அமைத்துத் கொடுத்தல். | 0.52 |
| 18 தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் உள்ள 10 படுக்கைகள்கொண்ட தீப்புண் சிகிச்சைப் பகுதியையும், 500 எம். ஏ. எக்ஸ் கதிர் பிரிவு அறையையும் சீர்வளி வசதி செய்துத் தருவது. | 2.04 |
| 19 சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தீப்புண் சிகிச்சைப் பகுதி கட்டுதல். | 12.00 |
| 20 சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 50 மாணவர்கள் தங்குவதற்கான தங்கும் விடுதி கட்டிக் கொடுத்தல். | 5.00 |
| மொத்தம் .. | 341.62 |



5. கிண்டி கிங் நிலையம் :

கிண்டி கிங் நிலையம் இம்மாநிலத்தின் மிகப் பெரிய பொது சுகாதாரச் சோதனைக் கூடமாகும். இது ஒரு கல்வி போதனை மற்றும் ஆராய்ச்சி நிலையமாகவும் திகழ்கிறது. இந்நிறுவனத்தில் பலவகைப்பட்ட தடுப்பு மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. இந் நிறுவனம் காலரா தடுப்பு மருந்து போன்றவைகளை பல மாநிலங் களுக்கு வழங்கி அதற்கான விலையைப் பெறுகிறது. வெறிநாய் தடுப்பு மருந்திற்கு அதிகமாக தேவை ஏற்பட்டுள்ளதால், இந் நிறுவனம் வெறிநாய் தடுப்பு மருந்து உற்பத்தி செய்ய துவங்கி யுள்ளது.

2. 1982–83 ஆம் ஆண்டில் ரூபாய் 20 இலட்சம் மதிப்பில் மருத்துவக் கருவிகள் மற்றும் இரசாயனங்கள் இந்நிறுவனத் திற்கென வழங்க கருதப்பட்டுள்ளது.

111. மருத்துவப் பணிகள் மற்றும் குடும்ப நலத் துறை.

1. மருத்துவக் கல்லூரிகளோடு இணைந்திராத மருத்துவ மனைகள்:

கிராமப்புற மக்களின் மருத்துவ வசதியை விரிவாக்குவதற்காக தற்போது இருக்கும் மாவட்ட வட்ட மற்றும் வட்டமல்லாத மருத்துவ மனைகளில் படுக்கை வசதியை அதிகரித்தல், அதிக அளவு சிறப்பு மருத்துவ வசதி ஏற்படுத்துதல் ஆகியவைகளே மருத்துவ சிகிச்சைப் பணிகளின் மிக முக்கிய பங்காகப் கருதப் படுகிறது.

(அ) மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளின் மேம்பாடுகள்:

இம்மாநிலத்தில் 5,138 படுக்கை வசதிகள் கொண்ட 15 மாவட்டத் தலைமை மருத்துவ மனைகள் இயங்கிக்கொண்டு வருகின்றன. 1981–82 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட மருத்துவ மனைகளில், படுக்கை வசதி அதிகரிக்க அரசு அனுமதித்துள்ளது.

| | | | |
|---|---|---|---|
| திருப்பூர் | .. .. | 104 இருந்து | 300 வரை. |
| தர்மபுரி | .. .. | 150 இருந்து | 300 வரை. |
| இராமநாதபுரம் | .. .. | 215 இருந்து | 300 வரை. |
| திண்டுக்கல் | .. .. | 267 இருந்து | 300 வரை. |
| காஞ்சிபுரம் | .. .. | 257 இருந்து | 300 வரை. |

1981–82 ஆம் ஆண்டில் பல்வேறு திட்டங்களுக்கு ரூ. 104.21 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. திட்டங்களின் விவரம் பிற் சேர்க்கை 5-ல் தரப்பட்டுள்ளது.

மேலும் 1982–83 ஆம் ஆண்டில் ரூ. 26.00 இலட்சத்திற்கான திட்டங்களை மேற்கொள்ள அரசு கருத்தில் கொண்டுள்ளது.

| | (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| 1 வேலூர் மற்றும் ஈரோடு அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் மின் உற்பத்தி சாதனம் அமைக்க. | 7.00 |
| 2 காஞ்சிபுரம் மற்றும் கடலூர் அரசு மாவட்ட தலைமை மருத்துவ மனையில் உயர் அழுத்த சாதனம் அமைத்தல். | 9.00 |
| 3 வேலூர் மற்றும் திருப்பூர் அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனையில் உள்ள சவக்கிடங்குகளுக்குக் குளிர்சாதன வசதி ஏற்படுத்தல். | 5.00 |
| 4 நாகப்பட்டிணம் அரசு மாவட்ட தலைமையிட மருத்துவ மனையில் அறுவை சிகிச்சை அரங்குகளில் குளிர் சாதன வசதி அமைத்தல். | 5.00 |
| | 26.00 |

(b) வட்ட தலைமையிட மருத்துவ மனைகளின் மேம்பாடுகள் :

1981–82 ஆம் ஆண்டில் ரூ. 24·54 லட்சத்திற்கு பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற அரசு அனுமதித்தது. திட்டங்களின் விவரம் பிற்சேர்க்கை 5-ல் தரப்பட்டுள்ளது.

மேலும் 6,152 மொத்த படுக்கைகளுடன் 116 வட்ட மருத்துவ மனைகள் இயங்கிக்கொண்டு வருகின்றன. 1981–82 ஆம் ஆண்டில் கூடுதலாக 150 படுக்கைகள் பல்வேறு வட்ட மருத்துவ மனைகளில் சேர்க்கப்பட்டது.

தற்போது 1982–83 ஆம் ஆண்டில் பல்வேறு வட்ட மருத்துவ மனையில் 144 படுக்கை வசதிகள் சேர்க்க அரசு கருத்தில் கொண்டுள்ளது.

1982–83 ஆம் ஆண்டில் ரூ. 43.99 இலட்சத்திற்கான **புதிய திட்டத்தை** அரசு மேற்கொள்ள எண்ணியுள்ளது.



| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1 தென்னாற்காடு மாவட்டம் திருக்கோவிலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் ஆகிய அரசு வட்ட மருத்துவ மனைகளில் எக்ஸ்ரே பிரிவு கட்டுதல். | 2.00 |
| 2 தஞ்சை மாவட்டம் நன்னிலம் அரசு மருத்துவ மனையில் 16 கூடுதல் படுக்கைப் பிரிவு கட்டுதல். | 2.50 |
| 3 கோயம்புத்தூர் மாவட்டம் தாராபுரம் அரசு மருத்துவ மனையில் 32 படுக்கை வசதிகள் கொண்ட பிரிவு, எக்ஸ்ரே நவீன சமையல் கூடம், அறுவை மருத்துவ கிடங்கு பிரிவு கட்டுதல். | 7.00 |
| 4 புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அரசு மருத்துவ மனையில் 32 படுக்கைக் கட்டிடம், இரத்த சேமிப்பு வங்கி மற்றும் சோதனைக் கூடம் கட்டுதல். | 7.53 |
| 5 வட ஆற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனையில் புற நோயாளிகள் பிரிவு கட்டுதல். | 2.20 |
| 6 வட ஆற்காடு மாவட்டம் ஆற்காடு அரசு மருந்தகம் கூடுதல் 24 படுக்கைகள் கட்டிடம் எக்ஸ்ரே பிரிவு, அறுவை அரங்கு, சமையல் கூடம் கட்டுதல். | 11.90 |
| 7 கோயம்புத்தூர் மாவட்டம் வால்பாறை அரசு மருத்துவ மனையில் 24 படுக்கைக் பிரிவு, எக்ஸ்ரே பிரிவு, சோதனைக்கூடம் கட்டுதல். | 5.30 |
| 8 திருநெல்வேலி மாவட்டம் எட்டயாபுரம் அரசு மருத்துவ மனையில் கூடுதல் 20 படுக்கை வசதி பிரிவு, அறுவை சிகிச்சை அரங்கு, சமையல் கூடம் ஆகியவைகள் கட்டுதல். | 5.56 |
| மொத்தம் .. | 43.99 |

(c) வட்டமல்லாத மருத்துவ மனைகள் மற்றும் மருந்தகங்கள் மேம்பாடுகள் :

மொத்தம் 2,125 மற்றும் 243 படுக்கை வசதியைக் கொண்ட 113-வட்டமல்லாத மருத்துவ மனைகளும், 194 அரசு மருந்தகங்களும் செயல்பட்டு வருகின்றன.

1981–82 ஆம் ஆண்டில் ரூ. 15.88 இலட்சத்திற்கு பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற அரசு அனுமதித்தது. இத்திட்டங்களின் விவரம் பிற்சேர்க்கை 5-ல் கூறப்பட்டுள்ளது.

1981–82 ஆம் ஆண்டில் 30 படுக்கைகள் இந்த மருத்துவ மனைகளுக்குச் சேர்க்கப்பட்டன. 1982–83 ஆம் ஆண்டில் கூடுதலாக 48 படுக்கைகள் சேர்க்க அரசு கருத்தில் கொண்டுள்ளது.

மேலும் வட்டமல்லாத மருத்துவ மனைகளுக்கும் மருந்தகங்களுக்கும் கீழ்க்கண்ட மேம்பாட்டு திட்டங்களை செய்ய எண்ணியுள்ளது.

| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1 | இராமநாதபுரம் மாவட்டம் வாட்ராப் அரசு மருத்துவ மனையில் 16 கூடுதல் படுக்கை வசதி பிரிவு கட்டிடம் கட்டுதல். | 2.50 |
| 2 | தர்மபுரி மாவட்டம், இராயக்கோட்டை அரசு மருந்தகத்தில் 10 படுக்கை வசதி கொண்ட கட்டிடம் கட்டுதல். | 3.40 |
| 2 | பெரியார் மாவட்டம், காங்கே ம் அரசு மருத்துவ மனையில் 8 படுக்கை வசதிக் கொண்ட மகப்பேறு பிரிவு மற்றும் அறுவை அரங்கு கட்டுதல் | 2.30 |
| 4 | திருச்சி மாவட்டம் பள்ளப்பட்டி அரசு மருத்துவ மனையில் 20 படுக்கை வசதிக்கொண்ட பிரிவு பேறுகால அறை மற்றும் அறுவை அரங்கு ஆகியவைகள் கட்டுதல். | 5.75 |
| 5 | நோயாளிகள் வருகை அதிகமானதையொட்டி வேளைப்பளு அதிகமானதால் பல்வேறு அரசு மருத்துவ மனைகளுக்கு கூடுதலாக 40 உதவி மருத்துவர்கள் பதவி ஏற்படுத்துதல் | 6.55 |
| | மொத்தம் .. | 20.50 |



(d) சிறப்புச் சிகிச்சைத் துறைகள் ஆரம்பித்தல் :

கிராமப்புற மக்களுக்கு சிறந்த மருத்துவ வசதிகள் அளிக்க வேண்டும் என்பதை கருத்திற் கொண்டு போதன வசதியில்லாத மருத்துவ மனைகளில் கூடுதலான சிறப்பு சிகிச்சை துறைகள் ஆரம்பிக்கப்படுவது மிகவும் அவசியமாகும். இதனைக் கருத்திற் கொண்டு 1981–82 ஆம் ஆண்டில் பலவித சிறப்புத் துறைகள் ஆரம்பிக்க அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அத்தகைய திட்டங்கள் பிற்சேர்க்கை பட்டியல் 5-ல் தரப்பட்டுள்ளன. மேலும் 1982–83 ஆம் ஆண்டில் கீழ்கண்ட திட்டங்களை எடுத்துக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது :—

(1) ஸ்ரீவில்லிபுத்தூர், திருப்பத்தூர், அம்பாசமுத்திரம், சங்கரன்கோவில், திண்டிவனம், விருத்தாசலம், மேட்டூர் அணை, உசிலம்பட்டி, திருவண்ணாமலை, பழநி, கிருஷ்ணகிரி, மற்றும் கூடலூர் முதலிய இடங்களிலுள்ள மருத்துவமனைகளில் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு ஆரம்பித்தல் (ரூ. 7.62 இலட்சம்)

(2) குடியாத்தம், மன்னார்குடி, காரைக்குடி, திண்டிவனம் மேட்டூர் அணை, மற்றும் ஸ்ரீரங்கம் மருத்துவமனைகளில் கண் நோய் சிகிச்சைப் பிரிவு ஆரம்பித்தல் (ரூ. 4.86 இலட்சம்).

(3) குளித்துறை மற்றும் குளித்தலை மருத்துவமனைகளில் பல் சிகிச்சைப் பிரிவு ஆரம்பித்தல் (ரூ. 0.82 இலட்சம்).

(4) கோபிச்செட்டிபாளையம் மற்றும் கும்பகோணம் மருத்துவமனைகளில் பால் வினை நோய்ச் சிகிச்சைப் பிரிவு ஆரம்பித்தல் (ரூ. 0.74 இலட்சம்).

(5) திருவாரூர் மற்றும் கோவில்பட்டி மருத்துவமனைகளில் காது, மூக்கு, தொண்டை நோய் சிகிச்சைப்பிரிவு ஆரம்பித்தல் (ரூ. 1.36 இலட்சம்).

(6) திண்டிவனம் மற்றும் விருதுநகர் மருத்துவமனைகளில் முடநீக்கு சிகிச்சைப் பிரிவு ஆரம்பித்தல் (ரூ 1.71 இலட்சம்).

(b) விபத்து மற்றும் அவசர கால சிகிச்சை:— சாலை விபத்து, தீ விபத்து, விஷம் குடித்தல், நீரில் மூழ்குதல் போன்றவைகளில் சிக்கியவர்களுக்கு உடனடியாக தகுந்த மருத்துவ உதவி அளிப்பதற்காக அரசு "விபத்து மற்றும் அவசர மருத்துவப் பணிகள்" என்ற திட்டத்தினை 1980–81-ல் நான்கு மாவட்டங்களில் துவக்கியது. இதன்கீழ் 11 மருத்துவ மனைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இத்திட்டம் 1981–82-ல் மேலும் நான்கு மாவட்டங்களுக்கு ரூ. 66 இலட்சம் செலவில் விஸ்தரிக்கப்பட்டது. ஆகவே தற்போழுது 8 மாவட்டங்களில் உள்ள 22 மருத்துவ நிலையங்கள் மூலம் இந்த அவசர சிகிச்சைப் பணி செய்யப்படுகிறது.

1982—83 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் இடங்களில் மருந்தகங்கள் திறக்க அரசு கருதியுள்ளது :—

1. கல்லிடைக்குறிச்சி (திருநெல்வேலி மாவட்டம்).
2. கலசப்பாக்கம் (வடாற்காடு மாவட்டம்).
3. திருப்பாலைக்குடி (இராமநாதபுரம் மாவட்டம்)
4. லளிகம் (தருமபுரி மாவட்டம்).
5. பேரிகை (தருமபுரி மாவட்டம்).
6. ஏம்பல் (புதுக்கோட்டை மாவட்டம்).

1982—83-ல் இத் திட்டத்தை ரூ. 84·28 இலட்சம் செலவில் சேலம் மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களுக்கு விரிவு படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்கீழ் 6 மருத்துவ மனைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

கிராமங்களில் பற்பாதுகாப்பும் பாம்புக்கடி மருத்துவமும்.

கிராம மக்களின் பல் பாதுகாப்புக்காக பற்பொடி இலவசமாக வழங்கப்படும். பாம்புக்கடிக்கு உடனடி மருத்துவ வசதி அளிக்க ஊநீர் மருந்து ஆரம்ப சுகாதார மற்றும் கிளை நிலையங்களுக்கு அளிக்கப்படும்.

(f) டேனிடா உதவியுடன் தமிழக அரசு செயல்படுத்தும் சுகாதார பாதுகாப்பு மற்றும் குடும்ப நலத் திட்டம்.

சேலம், தென்னாற்காடு மாவட்டங்களில் ரூ. 14·40 கோடி மதிப்பீட்டுச் செலவில் ஐந்தாண்டுகளுக்கு நிறைவேற்றப்படவிருக்கிற இத் திட்டத்திற்கு அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. சேலம், தென்னாற்காடு ஆகிய இரு மாவட்டங்களில் கிராமப்புற மக்களின் குறிப்பாக நலிந்த பிரிவினரின், நல்வாழ்வு-குடும்பநல நிலைமைகளை உயர்த்துவதே இத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

| | |
|---|---|
| பயனடையக் கூடிய கிராமப்புற மக்களின் எண்ணிக்கை. | சேலம், தென்னாற்காடு மாவட்டங்களிலுள்ள 70 இலட்சம் பேர். |
| கிராமங்களின் எண்ணிக்கை | 3,230 |
| வளர்ச்சி வட்டாரங்களின் எண்ணிக்கை. | 69 |
| திட்டக் கால அளவு .. .. | 1981—86. |
| திட்டச் செலவு .. .. | ரூ. 14·40 கோடி. |

இந்திய அரசும் டென்மார்க்கு அரசும் 1—8—1981 அன்று செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி டென்மார்க்கு அரசு இத்திட்டத்திற்கு ரூ. 12·71 கோடி நிதியுதவியளிக்க இசைவு தெரிவித்துள்ளது. இத் திட்டத்தில், சுகாதாரப் பணிகளுடன் [illegible] குடிநீர் வழங்குதல், துப்புரவு, சத்துணவு, பயிற்சி



புதிய திட்டங்கள், தகவல் தொடர்புப் பணிகள் மற்றும் சமுதாய நல நிதி ஏனைய திட்டப் பணிகளும் நிறைவேற்றப்படும். இத் திட்டப் பணிகள் அனைத்திலும் சமுதாயத்தில் அனைத்துப் பிரிவினரும் ஈடுபாடு கொண்டு பங்கேற்க வேண்டும் என்பதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. முதலாண்டில், சேலம் மாவட்டத்தில் 4 வளர்ச்சி வட்டாரங்களிலும், தென் ஆற்காடு மாவட்டத்தில் 5 வளர்ச்சி வட்டாரங்களிலும் ஆக பின்வரும் ஒன்பது வளர்ச்சி வட்டாரங்களில் இத்திட்டத்தைச் செயல் படுத்துவதற்காக தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன.

| சேலம் மாவட்டம். | தென்னாற்காடு மாவட்டம். |
|---|---|
| 1. குளத்தூர் | 1. மைலம். |
| 2. ஏற்காடு | 2. மங்களூர். |
| 3. கொங்கணாபுரம் | 3. நல்லூர். |
| 4. சேந்தமங்கலம் | 4. பண்ருட்டி |
| | 5. கீரப்பாளையம். |

2. இரண்டாமாண்டில் சேலம் மாவட்டத்தில் 19 வளர்ச்சி வட்டாரங்களிலும், தென்னாற்காடு மாவட்டத்தில் 17 வளர்ச்சி வட்டாரங்களிலும் ஆக மொத்தம் 36 வளர்ச்சி வட்டாரங்களில் இத் திட்டம் செயற்படுத்தப்படும்.

| சேலம் மாவட்டம், | தென்னாற்காடு மாவட்டம், |
|---|---|
| 1. கடையாப்பட்டி | 1. கடலூர். |
| 2. ஓமலூர் | 2. குறிஞ்சிப்பாடி. |
| 3. மேச்சேரி. | 3. புவனகிரி |
| 4. நங்கவள்ளி | 4. கொமராட்சி |
| 5. சங்ககிரி | 5. விருத்தாசலம். |
| 6. எடப்பாடி | 6. கள்ளக்குறிச்சி |
| 7. எலச்சிப்பாளையம் | 7. சின்னசேலம், |
| 8. திருச்செங்கோடு | 8. ரிஷியவந்தியம் |
| 9. தலைவாசல். | 9. சங்கராபுரம் |
| 10. அயோத்தியாபட்டினம் | 10. தியாகதுர்க்கம். |
| 11. பனமரத்துப்பட்டி | 11. உளுந்தூர்பேட்டை |
| 12. வீரபாண்டி | 12. திருநாவலூர் |
| 13. பெத்தநாயக்கன் பாளையம். | 13. கண்ட மங்கலம். |
| 14. கங்கவள்ளி. | 14. கனை. |
| 15. நாமகிரிப்பேட்டை, | 15. மரக்காணம். |
| 16. வெண்ணந்தூர் | 16. செஞ்சி. |
| 17. புதுச்சத்திரம் | 17. மேல்மலையனூர் |
| 18. பரமத்தி. | |
| 19. எருமைப்பட்டி. | |

வேலை வாய்ப்பை உருவாக்குதல் :

முதலாண்டில் இத்திட்டத்தின் வாயிலாக உருவான வேலை வாய்ப்புகள் வருமாறு :

| தொடர் எண்ணும் விவரங்களும். (1) | எண்ணிக்கை. (2) |
|---|---|
| 1. மாநிலத்திட்ட அமைப்பு .. .. | 29 |
| 2. மாவட்டத் திட்ட அமைப்பு, சேலம் .. | 35 |
| 3. மாவட்டத் திட்ட அமைப்பு, கடலூர், தென்னாற்காடு. | 35 |
| 4. கட்டுமானப் பணிக்கான பணியாளர்கள். | 50 |
| 5. சுகாதாரப் பணிகள் .. .. .. | 333 |
| 6. சத்துணவுத் திட்டம் .. .. .. | 263 |
| மொத்தம் .. | 745 |

3. இத்திட்டத்தின்கீழ் பின்வரும் பணிகளுக்கு அரசு அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது :

(1) 58 சுகாதார துணை நிலையங்களைக் கட்டுதல் (சேலம் மாவட்டத்தில் 28, தென்னாற்காடு மாவட்டத்தில் 30).

(2) 20 சுகாதாரப் பார்வையாளர் (பெண்) குடியிருப்புகள் கட்டுதல் (சேலம் மாவட்டத்தில் 9, தென்னாற்காடு மாவட்டத் தில் 11).

(3) 95 கூடுதல் சுகாதாரத் துணை நிலையங்களை ஏற் படுத்தல் (சேலம் மாவட்டத்தில் 29, தென்னாற்காடு மாவட்டத் தில் 66).

(4) 95 கூடுதல் சுகாதார துணை நிலையங்களில் பல் நோக்கு சுகாதார பணியாளர்கள் திட்டத்தைக் கொண்டு வருதல், இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு சுகாதார துணை நிலயத்திலும் ஏனையோருடன் பல்நோக்குச் சுகாதாரப் (ஆண்) பணியாளர் ஒருவர், பல் நோக்கு சுகாதாரப் (பெண்) பணியாளர் ஒருவர், பெண் ஏவலர் ஒருவர் ஆகியோரும் இருப்பர். ஒவ்வொரு நான்கு





துணை நிலயைங்களுக்கும், சுகாதார (பெண்) பணியாளர்களின் பணியை மேற்பார்வையிடுவதற்காக சுகாதார மேற் பார்வை யாளர் (பெண்) ஒருவரும், சுகாதாரப் (ஆண்) பணியாளர்களின் பணியை மேற்பார்வையிடுவதற்காக சுகாதார மேற் பார்வை யாளர் (ஆண்) ஒருவரும் இருப்பர்.

(5) சேலம் மாவட்டத்திலும், தென்னாற் காடு மாவட்டத் திலும் முதலாண்டில் திட்டம் செயல்படுத்தப்படும் வளர்ச்சி வட்டாரங்களில் 352 'தாய் களுக்குப் பயிற்சியளித்தல்.

(6) மாநில, மாவட்ட, வளர்ச்சி வட்டார, கிராம நிலை களில் திட்டத்தில் சம்பந்தப்பட்ட பணியாளர் அனைவருக்கும் மாதிரிப் பயிற்சி முறையை வகுத்தல்.

(7) சேலம், குளத்தூர் வளர்ச்சி வட்டாரத்திலுள்ள பன்னவாடைக் கிராமத்தில் 100 வீடுகளுக்கு கழிப்பறைகள் கட்டித்தருதல் மூலம் துப்புரவுத் திட்டத்தைச் சோதனை முறை யில் செயல்படுத்தல்.

(8) குளத்தூர் (சேலம் மாவட்டம்), மைலம் (தென்னாற் காடு மாவட்டம்) ஆகிய முன்னோடி வளர்ச்சி வட்டாரங்களில் சோதனை முறையில் சத்துணவுத் திட்டத்தைச் செயல் படுத் துதல்.

(9) சேலம் மாவட்டத்தில் மூன்று புதிய திட்டங்களை மேற்கொள்ளுதல்.

(10) திட்ட தகவல் தொடர்புப் பணியை செயல்படுத்தல்.

(11) சமுதாய நல நிதி உதவியுடன் மூன்று திட்டங்களைச் செயல்படுத்தல்.

4. மேற் சொன்ன திட்டங்களை செயல்படுத்துவதற்கான செலவு 1982–83 நிதியாண்டிலும் தொடரும். இதைத் தவிர, இத்திட்டத்தின் கீழ்வரும் பணிகள் வரும் நிதியாண்டில் விரைவு படுத்தப்படும். மற்றும், 1982–83இல் சேலம் மாவட்டத்தி லுள்ள 19 வளர்ச்சி வட்டாரங்களில் கூடுதலாக 125 சுகாதாரத் துணை நிலையங்களையும் தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள 17 வளர்ச்சி வட்டாரங்களில், 183 சுகாதாரத் துணை நிலையங் களையும் ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. 1982–83இல் 308 சுகாதாரத் துணை நிலையங்கள்; 156 சுகாதார பார்வையாளர் கள் (பெண்) குடியிருப்புகள், ஆராம்ப சுகாதார நிலயங்களில் 14 பொது மருந்தகக் கட்டிடங்கள், 20 மருத்துவ அதிகாரிகள் குடியிருப்புகள், வட்ட மருத்துவ மனையில் 2 குழந்தைகள் நோய் மருத்துவ வார்டுகள், 2 மகப்பேறு வார்டுகள், 3 அறுவைச் சிகிச்சைக் கூடங்கள் ஆகியவற்றைக் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கக் கருதப்பட்டுள்ளது.

5. இரு மாவட்டங்களில் 3,640 கிராமங்களில் வசிக்கும் 18,27,000 பேர்களுக்குக் குடிநீர் வழங்க வகை செய்யும் கிராமப் புற குடிநீர் வழங்கல் துணைத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது அடுத்த நான்சாண்டுகளுக்குள் இத்திட்டத்தைச் செயல் படுத்து வதற்சாக மத்திய அரசின் மூலம் ''டேனிடா'' விடமிருந்து ரூ. 35·04 கோடி நிதியுதவி கோரப்பட்டுள்ளது.

(உ). அரசு இலவச கண் சிகிச்சை முகாம் :

சண் நோய் மற்றும் கண்புரை நோய் போன்றவற்றினால் கிராமங்களில் அவதிக்குள்ளாகும் மக்களின் துயர் துடைப்பதற்கு 1972–ல் அரசு இலவச் சண் சிகிச்சை திட்டத்தை தொடங்கியது. இத்திட்டத்தின்கீழ் ஐந்து நடமாடும் கண் மருத்துவ பிரிவுகள் அமைக்கப்பெற்று சென்னையிலே இரண்டும் கோவை, மதுரை, மற்றும் தஞ்சாவூர், பகுதிகளில் ஒரு பிரிவு வீதம் மூன்றும் மருத்துவம் மற்றும் மருத்துவம் சேரா—களப்பணியாளர்களைக் கொண்டு மாநிலம் முழுவதும் இத்திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு கண்புரை அறுவை சிகிச்சைக்கும் ரூபாய் 94 வீதம் அரசு செலவிடுகிறது. இதில் ரூபாய் 50 இக்கண் சிகிச்சை முகாம்களை அமைப்பதற்கும், உணவு, போக்குவரத்து, துப்புரவு போன்ற செலவினங்களை சரிக்கட்டுவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவரின் பொறுப்பில் விடப்படுகிறது. மீதி உள்ள ரூபாய் 44 கண்ணாடிகள் வழங்குவதற்கும், இதர மருத்துவ செலவுகளுக் காகவும் பயன்படுத்தப்படுகிறது.

இக்கண் சிகிச்சை முகாம்களில் சிகிச்சை பெறுபவர்களுககு உடனடி நிவாரணம் அளிக்க அவர்களுக்கு ரூபாய் 3-லிருந்து ரூபாய் 5 பெறுமான தற்காலிக கண்ணாடிகள் அறுவை சிகிச்சை முடிந்த உடன் வழங்கப்படுகின்றன. இம்முகாம்களிலே சிகிச்சை பெற்றவர்கள ஆறு வாரங்களுக்கு பின்னர் மீண்டும் பரிசோதிக்கப் கப்பட்டு ரூபாய் 15 பெறுமான நிரந்தரமான சண்ணாடிகள் அவர் களுக்கு வழங்கப்படுகின்றன.

சென்ற ஆண்டின் குறியீட்டளவாகிய 20,000-ஐ இவ்வாண்டில் (1981–82) 40,000 என உயர்த்தப்பட்டு மாவட்ட வாரியான குறியீடுசள் அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அரசால் நிர்ண யிக்கப்பட்ட இக்குறியீட்டினை செவ்வனே நிறைவேற்றிடும் பொருட்டு மாவட்ட ஆட்சியாளர்கள் இக்சண் சிகிச்சை முகாம் களைத் தடங்கலின்றி நடத்துவதற்கு தேவைப்படும் பணத்தை மாவட்ட ஆட்சியாளர்களே மாவட்ட கருவூலங்களிலிருந்து பெற் றுக் கொள்ள அரசு அதிகாரம் அளித்துள்ளது. இதற்கு முன் னால் மருத்துவப் பணி மற்றும் குடும்பநல இயக்குநரே இக்கண் சிகிச்சை முகாம்களுக்சான முன் பணத்தைப் பெற்று, மாவட்ட ஆட்சியாளருக்கு வினியோகித்து வந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. இப்புதிய முறை, சண்சிகிச்சை முகாம்களை அமைக்கும் போது ஏற்படும் தாமதத்தை தவிர்க்க உதவும்.





சாதனைகள்.

(கடந்த மூன்று ஆண்டுகள்).

| ஆண்டு. | குறியீடு. | நடைபெற்ற கண் சிகிச்சை முகாம்களில் எண்ணிக்கை. | சிகிச்சை பெற்ற புற நோயாளிகள் எண்ணிக்கை. | கண் புரை சிகிச்சை செய்தோர் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1978–79 .. | 25,000 | 59 | 89,148 | 12,124 |
| 1979–80 .. | 25,000 | 50 | 65,769 | 10,887 |
| 1980–81 .. | 20,000 | 61 | 83,237 | 12,776 |
| 1981–82 .. | 20,000 | 56 | 86,504 | 14,615 |
| (15-2–1982 முடிய). | (பின்னர் இரட்டிப்பாக்கப்பட்டது). | | | |

தேசிய கண்நோய் தடுப்புத் திட்டம்.

1—4—1981முதல் மைய அரசின் நூறு சதவீத உதவியுடன் நிறைவேற்றப்பட்டு வரும் திட்டம் இதுவாகும். 18-6-1980 முதல் ''நடமாடும் கண்நோய் தடுப்பு மருத்துவப் பிரிவு '' ஒன்று மதுரை அரசினர் இராஜாஜி மருத்துவ மனையில் தொடங்கப் பெற்றுள்ளது. மதுரை, இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் இப்பிரிவின் ஆளுகைக்குள் கொண்டு வரப்பட் டுள்ளன. இதற்குத் தேவையான மருத்துவரும் மற்றும் மருத் துவம் சேரா களப்பணியாளர்களும் நியமிக்கப்பட்டு 1980-81ஆம் ஆண்டிலிருந்து இது செயல்பட்டு வருகிறது.

மேலும், மதுரை மருத்துவக் கல்லூரியிலுள்ள கண் மருத்துவப் பிரிவு 75 படுக்கைகள் கொண்ட பிரிவாக விரிவாக்கப்படவும் கண் மருத்துவப் பிரிவு மாநில ஆலோசனைக் குழு மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு போன்றவைகள ஏற் படுத்தப்படவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மதுரை மருத்துவக் கல்லூரியில் அமைந்துள்ள நடமாடும் கண் மருத்துவப் பிரிவுக்கு தேவையான 1·50 இலட்சம் பெறுமான உபகரணங்களும் மற்றும் 'சிறு பேருந்தும்' மைய அரசினால் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கண் மருத்துவ சிகிச்சை முகாம்கள் நடத்த முன்வரும் தானியங்கும் இயக்கங்கள், சமூக நிறுவனங்களுக்கு இம்முகாம்களில் கண் அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் நபர் ஒன்றுக்கு ரூபாய் 60-ம், ஒவ்வொரு முகாமுக்கும் ரூபாய் 12,000மும் மைய அரசு உதவியாக அளித்துவருகின்றது. ''மத்திய கண் மருத்துவ நடமாடும் பிரிவு ''( மதுரை) சமூக நிறுவனங்கள் துணையோடு இதுவரை 572 கண் அறுவை சிகிச்சையினை நடத்தி உள்ளது. மைய அரசின் திருத்தியமைக்கப்பட்ட நடை முறைப் கொள்கைக்கு ஏற்ப '' கண் மருத்துவ உதவியாளர்களுக்கான பயிற்சி '' (Opthalmic Assistants Course) மதுரை மற்றும் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரிகளில் முறையே 15-9-81, 1-10-81 அன்றும் தொடங்கப்பட்டு இவைகளில் 15 மாணவர்களுக்கு பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

மைய அரசின் தேசிய கண் நோய்த் தடுப்புத் திட்டம் புறநகர் பகுதியிலும் நிறைவேற்றபட்டு வருகிறது. இது நூறு சதவீத மைய அரசின் உதவி பெறும் திட்டம் ஆகும். கீழ் குறிப்பிட்டுள்ள மாவட்ட மருத்துவ மனைகள் இத்திட்டத்தின் உதவியின் கீழ் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| அரவு மருத்துவமனை. | கானாடுகாத்தான். | இராமநாதபுரம் மாவட்டம். |
| அரசு மருத்துவமனை. | திருவில்லிப் புத்தூர், | இராமநாதபுரம் மாவட்டம். |
| அரசு மருத்துவமனை. | பழநி, .. | மதுரைமாவட்டம் |
| அரசு மருத்துவமனை. | அறந்தாங்கி, .. | புதுக்கோட்டை மாவட்டம். |

இம்மருத்துவ மனைகளுக்குத் தேவையான கருவிகள் மைய அரசினால் வழங்கப்பட்டு, மேலே கண்டுள்ள மருத்துவமனைகளுக்கு அளிக்கப்பட்டுள்ளன. மேலும் தகுதி பெற்ற கண் மருத்துவர்கள் இம்மருத்துவ மனைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்,

இத்திட்டத்தின் கீழ் இரண்டாவது கட்டமாக கீழ் குறிப்பிட்டு உள்ள மாவட்ட மருத்துவ மனைகள் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| அரசு மருத்துவமனை | .. | .. | பொள்ளாச்சி. |
| அரசு மருத்துவமனை | .. | .. | மேட்டூர் அணை. |
| அரசு மருத்துவ மனை | .. | .. | கிருஷ்ணகிரி. |
| அரசு மருத்துவமனை | .. | .. | கூனூர். |



இம்மருத்துவ மனைகளுக்கு தேவையான உபகரணங்களும் மைய அரசினால் வழங்கப்பட்டுள்ளன. மேலும், தகுதி பெற்ற கண் மருத்துவர்கள் இம்மருத்துவ மனைகளில் நியமிக்கப்பட்டும் வருகின்றனர். கீழ்க்குறிப்பிட்டுள்ள மருத்துவ மனைகளும் இத்திட்டத்தின் மூன்றாவது கட்டத்தின் கீழே தேர்வு செய்யப்பட்டு, மைய அரசின் ஒப்புதலை எதிர் நோக்கியுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1 | அரசு மருத்துவமனை. | குழித்துறை, | கன்னியாகுமரி மாவட்டம். |
| 2 | அரசு மருத்துவமனை. | கோவில்பட்டி, | திருநெல்வேலி மாவட்டம். |
| 3 | அரசு மருத்துவமனை. | திருச்செந்தூர், | திருநெல்வேலி மாவட்டம். |

(h) எக்ஸ் கதிர் கருவிகள்.

மருத்துவக் கல்லூரிகளை சாராத மருத்துவ மனைகளில் கதிர் வீச்சு மூலம் நோய் கண்டறியவும், மற்றும் தற்பொழுது இல்லாத உயர் ரக உபகரணங்கள் தேவைக்கு ஏற்ப அளிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. 1981-82-ல் பாய்ல்ஸ் கருவிகள், அறுவை சிகிச்சைக்கான ஹைட்ராலிக் மேஜைகள், டயதெர்மி கருவிகள் போன்றவை ரூபாய் 2·84 இலட்சத்திற்கு வாங்கப்பட்டு மருத்துவக் கல்லூரியைச் சாராத மருத்துவ மனைகளுக்கு வழங்கப்பட்டன.

மேலும் 1981-82-ல் 100 எம். ஏ. எக்ஸ் கதிர் கீழ்கண்ட மருத்துவ மனைகளுக்கு அவைகளின் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள செலவில் வாங்கி வழங்கப்பட்டுள்ளன—

| | | | ரூபாய். |
|---|---|---|---|
| 1 | அரசு மருத்துவமனை, வாணியம்பாடி | .. | 1,30,920 |
| 2 | அரசு மருத்துவமனை, திருவள்ளூர் | .. | 1,30,920 |
| 3 | அரசு மருத்துவமனை, குமாரபாளையம் | .. | 1,30,920 |

1982-83-இல் கீழ்க்கண்ட மருத்துவ மனைகளுக்கு எக்ஸ் கதிர் கருவிகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது,

| | | ரூபாய். |
|---|---|---|
| 1 | அரசு மருத்துவ மனை, உளுந்தூர்ப்பேட்டை 100 எம். ஏ. .. .. .. .. | 1,30,920 |
| 2 | அரசு மருத்துவ மனை, டெங்கனிக்கோட்டை 50 எம். ஏ. .. .. .. .. | 49,664 |

[1982 மார்ச் 11

| | | |
|---|---|---|
| 3 | அரசு மருத்துவ மனை, திருவாடானை 100 எம். ஏ. .. .. .. .. .. | 1,30,920 |
| 4 | அரசு மருத்துவ மனை, பட்டுக்கோட்டை 200 எம். ஏ. .. .. .. .. | 1,68,000 |
| 5 | அரசு மருத்துவமனை, செஞ்சி 100 எம். ஏ. .. | 1,30,920 |
| 6 | அரசு மருத்துவமனை, சோழவந்தான் 50 எம். ஏ. | 49,664 |

தமிழ் நாட்டில் தொழுநோய்க்கட்டுப்பாட்டுத் திட்டம்.

மத்திய அரசின் தேசீய தொழுநோய்த் திட்டத்தின் அடிப்படையில் தமிழ்நாட்டில் தொழுநோய்த் திட்டமானது செயல் படுத்தப்பட்டு வருகிறது. முக்கிய பணிகளாக தொழு நோயாளி களைக் கண்டுபிடித்தலும், தொழுநோயின் விளைவுகளைப்பற்றி சுகாதாரக் கல்வி மூலம் விளம்பரம் செய்வதுமாகும். பெருமளவு பொது மக்களிடையே சோதனை மூலமும், பள்ளிச் சிறுவர்களிடையே சோதனைகள் மூலமும் நோயாளிகளைக் கண்டுபிடித்து அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இத்தகைய சிகிச்சைகளுக்காக சிகிச்சை முறையை மாற்றி பரிசீலிக்கப்பட்டு நடமாடும் சிகிச்சைப் பிரிவுகளாக்கி ஒவ்வொரு நடமாடும் சிகிச்சைப் பிரிவிலும் ஒரு மருத்துவ அதிகாரியும் ஏனைய மருத்துவ சம்பந்தப்பட்ட அலுவலர்களும் சாலை ஓரங்களிலும், கிராமப்புறங்களிலும் சென்று சிகிச்சை அளிக்கின்றனர். இதனால், ஒரு நோயாளி அதிக தூரம் நடந்து சென்று சிகிச்சை பெறுவதை தடுத்து அதிகபட்சம் மூன்று மைல்களுக்குள்ளாகவே சிகிச்சை பெற வசதி செய்யப்பட்டுள்ளது.

இந்நோய் பரவுதல் 1977ஆம் ஆண்டில் 1,000 பேரில் 20 ஆக இருந்தது, 1981இல் 1,000 பேரில் 14.03 ஆகக் குறைந்துள்ளது. இந்நோயின் பாதிப்பு 1977இல் 1,000 மக்களுக்கு 3.1 ஆக இருந்தது, 1981இல் 1,000-க்கு 1.7 ஆக குறைந்துள்ளது. களப் பணியிலும், வழிமுறைகளிலும், தீவிரமான பயிற்சி வெற்றி கரமாக மேற்கொண்டவர்களால் இத்திட்டம் அடிமட்ட அளவில் செயல்படுத்தப்படுகிறது, வெற்றிகரமாக பயிற்சி முடித்த பின்னர் இப்பணியில் நியமிக்கப்படுகிறார்கள்,

தொழுநோய் திட்டத்தின் அடிப்படை ஊழியர்களான தொழு நோய் ஆய்வளார்களுக்கு கீழ்க்கண்ட இடங்களில் 6 மாதங்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது :—

1. அரசு தொழுநோய்க் கல்வி மற்றும் சிகிச்சை நிலையம், திருக்கோவிலூர், தென்ஆற்காடு மாவட்டம்,



1982 மார்ச் 11]

2. ஹேமர்ஜாக் அரசு தொழுநோய் மையம், போலம்பாக்கம்.

3. புனித தாமஸ் மருத்துவமனை மற்றும் தொழுநோய் மையம், சேத்துப்பட்டு, வடாற்காடு மாவட்டம்.

4. செப்பிலியன் தொழுநோய் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம், கரிகிரி, வடாற்காடு மாவட்டம்.

இத் திட்டத்தின் கீழ்ப் பணியாற்றும் எல்லா பணியாளர் களுக்கும், பணியை மேற்கொள்ளும் முன் பயிற்சி அளிக்கப்படுகிறது. மருத்துவ அதிகாரிகளுக்கு சைதாப்பேட்டையிலுள்ள வெள்ளி விழா மருத்துவமனையில் குறுகிய கால பயிற்சி அளிக்கப் படுகிறது. 1980–81ஆம் ஆண்டில் 80 மருத்துவ அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கிராமப் புற சிகிச்சை அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டதின்கீழ் நகர்ப்புறமும் கிராமப்புற பகுதி களும் சிகிச்சையின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. களப்பணி களை நன்கு கவனிக்கும் பொருட்டு தற்காலிக மருத்துவ மனை பிரிவுகள் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திறக்கப்பட்டன. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் தொழுநோய் கட்டுப்பாடு திட்டத்தில் கீழ்க்கண்ட தொழுநோய் நிலையங்கள் செயல்படத் தொடங்கின :—

| | | |
|---|---|---|
| 1. | தொழுநோய் கட்டுப்பாட்டு நிலையங்கள் | 58 |
| 2. | சிகிச்சை மற்றும் கல்வி நிலையம் .. | 1 |
| 3. | ஆய்வு கல்வி மற்றும் சிகிச்சை நிலையங்கள் | 132 |
| 4. | தொழு நோய் பயிற்சி நிலையங்கள் .. | 4 |
| 5. | தற்காலிகமாக தங்கி சிகிச்சை பெறும் வார்டுகள் .. .. .. .. | 25 |
| 6. | தனியார் நிறுவனங்கள் .. .. .. | 25 |
| 7. | அரசு மானியம் பெறும் தனியார் நிறுவனங்கள் .. .. .. .. | 2 |
| 8. | மறு உறுப்பெறச் செய்யும் இரண சிகிச்சை நிலையங்கள் .. .. .. | 9 |
| 9. | மாவட்ட தொழுநோய் அலுவலர்கள் அலுவலகம் .. .. .. .. | 13 |
| 10. | நகர்ப்புற நிலையங்கள் .. .. .. | 48 |
| 11. | தொழுநோய் ஆய்வு நிலையம் .. .. | 3 |

[1982 மார்ச் 11

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மத்திய அரசு தமிழ்நாடு அரசுக்கு 1979–80ஆம் ஆண்டிற்கு 36.00 இலட்சமும் 1980–81ஆம் ஆண்டிற்கு 30.00 இலட்சமும் கீழ்க்கண்ட நிலையங்கள் தொடங்குவதற்காக வழங்கியது :—

| | | |
|---|---|---|
| 1. | தற்காலிகமாக தங்கி சிகிச்சை பெறும் வார்டுகள். .. .. .. .. | 22 |
| 2. | நகரத் தொழுநோய் கட்டுப்பாடு நிலையங்களை மேம்படுத்துதல் .. .. | 2 |
| 3. | மாவட்டத் தொழு நோய் அலுவலர்கள் அலுவலகத்தை மேம்படுத்துதல் .. | 6 |
| 4. | பழைய தொழுநோய் கட்டுப்பாட்டு பிரிவை கட்டுதல் .. .. .. .. | 6 |
| 5. | தொழுநோய் மறுவாழ்வு அபிவிருத்தி பிரிவு | 1 |

மேற்கண்ட நிலையங்கள் அனைத்தும் மேல்நிலை நிலையங்களாக மாற்றப்பட்டு விட்டன. தற்காலிக மருத்துவமனை பிரிவுகளும் தொழுநோய் பிரிவுகளும் கட்டும் பணி பல்வேறு நிலையங்களில் உள்ளன.

1981–82ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு தற்காலிக இலக்கு நிர்ணயித்துள்ளது. மேலும், மத்திய அரசு நிதி உதவி 50 சதவீதத்திற்குப் பதிலாக 100 சதவீதம் அளிக்கும் என்று தெரிவித்துள்ளது. 1981–82ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூபாய் 40.80 இலட்சம். 1981–82ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட செயற்குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன :—

| | | |
|---|---|---|
| 1. | மருத்துவம் அல்லாத மேற்பார்வையாளர் .. | 5 |
| 2. | மாவட்டத் தொழுநோய் மருத்துவ அதிகாரி | 1 |
| 3. | மாவட்ட தொழுநோய் அதிகாரியின் அலுவலகம் மேம்படுத்தல் .. .. | 1 |
| 4. | மாதிரி கணக்கெடுப்பு மற்றும் நிர்ணயப்பிரிவு | 1 |
| 5. | மாற்று வாகனங்கள் அளித்தல் .. .. | 1 |
| 6. | பழைய பிரிவுகளை புதுப்பித்தல் .. | 1 |



1982 மார்ச் 11]

தொழுநோய்த் தடுப்புத் திட்டம் தொடர்த்திட்டமாக உள்ளபடியால் தொழு நோயாளிகளைக் கண்டறிய சோதனைகள் நடத்தப்படுகிறது. அவ்வாறு சோதனைக்கான புள்ளி விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | | |
|---|---|---|
| 1. | தமிழ்நாட்டில் மொத்த மக்கள் தொகை .. .. .. .. | 411,00,000 |
| 2. | தேசிய தொழுநோய்த் திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட மக்கள் தொகை | 381,00,000 |
| 3. | மதிப்பீடு செய்யப்பட்டுள்ள நோயாளிகளின் எண்ணிக்கை .. .. .. | 7,80,000 |
| 4. | 1981 நவம்பர் முடிய கண்டு பிடிக்கப்பட்ட நோயாளிகள் .. .. .. | 7,50,000 |
| 5. | சிகிச்சையின்கீழ் உள்ள நோயாளிகளின் எண்ணிக்கை .. .. .. | 5,50,000 |
| 6. | நோயிலிருந்து குணமடைந்து அனுப்பப்பட்டவர்களின் எண்ணிக்கை .. | 99,513 |
| 7. | குணமடைந்து, நிலையத்தில் மருத்துவ சிகிச்சையில் உள்ள நோயாளிகளின் எண்ணிக்கை .. .. | 92,668 |

1978 ஆம் ஆண்டு பள்ளி குழந்தைகளுடைய தீவிர மருத்துவ சோதனை மேற்கொள்ளப்பட்டது. பள்ளிக் குழந்தைகளிடையே செய்யப்பட்ட மருத்துவ பரிசோதனையின் புள்ளி விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | 1978 | 1979 | 1980 | 1981 |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| சோதனை செய்யப்பட்ட பள்ளிக் குழந்தைகளின் எண்ணிக்கை. | 14,30,214 | 17,79,721 | 18,06,851 | 24,08,140 |
| நோய் உள்ளவர்களாகக்கண்டு பிடிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை— | | | | |
| பழைய | 4,767 | 9,489 | 14,630 | 14,897 |
| புதிய | 11,282 | 12,258 | 9,741 | 12,353 |

பள்ளியில் சேர்க்கும் போதே பள்ளிக் குழந்தைகளுக்கு தொழு நோய் கண்டிருக்கிறதா என்று அறிந்து அதற்கான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பள்ளி செல்லும் குழந்தைகளிடையே தொழுநோய் உள்ளதா என கண்டறிய, 1982–83 ஆம் ஆண்டில் கிராம, நகர்ப்புற பகுதிகளில் உள்ள பள்ளிகளில் படிக்கும் 35 இலட்சம் குழந்தைகளை பரிசோதிக்க கருதப்பட்டுள்ளது. செங்கல்பட்டு மாவட்டத்தில் சிகிச்சை அளிக்கும் நாட்களை குறைக்க பல்வகை மருந்துகள் கொடுக்கும் சிகிச்சை முறை கொண்ட முன்னோடி சோதனை ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.



**தொழுநோய் திட்டத்தில் மேற்கொண்ட பணிகளின் ஒப்புநோக்கு புள்ளி விவரங்கள்.**

| | 1970 | 1971 | 1972 | 1973 |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. சோதனை செய்யப்பட்ட மக்கள் தொகை (இலட்சத்தில்) .. .. .. | 12.3 | 20.8 | 20.01 | 31.89 |
| 2. கண்டுபிடிக்கப்பட்ட நோயாளிகள் .. | 26,181 | 47,487 | 31,955 | 40,654 |
| 3. கண்டுபிடிக்கப்பட்ட புதிய நோயாளிகள் (1,000-க்கு) .. .. .. .. | 21.3 | 22.8 | 16.0 | 12.7 |
| 4. மொத்தத்தில் தெரியவந்த நோயாளிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) .. .. | .. | .. | .. | 1.94 |
| 5. சிகிச்சையின் கீழ் உள்ள நோயாளிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) .. .. | .. | .. | .. | 1.38 |
| 6. மேற்பார்வையின் கீழ் உள்ளவர்கள் (இலட்சத்தில்) .. .. .. | .. | .. | .. | 7.8 |
| 7. சோதனை செய்யப்பட்ட பள்ளிக் குழந்தைகள் (இலட்சத்தில்) .. .. .. | .. | .. | .. | .. |
| 8. பள்ளிக் குழந்தைகளில் கண்டுபிடிக்கப்பட்ட நோயாளிகள் .. .. .. | .. | .. | .. | .. |
| 9. பழைய நோயாளிகள் (1,000-க்கு) .. | .. | .. | .. | .. |
| 10. புதிய நோயாளிகள் (1,000-க்கு) .. | .. | .. | .. | .. |

தொழுநோய் திட்டத்தில் மேற்கொண்ட பணிகளின் ஒப்புநோக்கு புள்ளி விவரங்கள்—தொடர்ச்சி.

| | 1974 (6) | 1975 (7) | 1976 (8) | 1977 (9) |
|---|---|---|---|---|
| 1. சோதனை செய்யப்பட்ட மக்கள் தொகை (இலட்சத்தில்) .. .. .. | 36.62 | 56.01 | 89.39 | 107.19 |
| 2. கண்டுபிடிக்கப்பட்ட நோயாளிகள் .. | 45,003 | 61,788 | 50,929 | 60,000 |
| 3. கண்டுபிடிக்கப்பட்ட புதிய நோயாளிகள் (1,000-க்கு) .. .. .. .. | 12.3 | 11.00 | 5.7 | 5.6 |
| 4. மொத்தத்தில் தெரியவந்த நோயாளிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) .. .. | 2.2 | 4.8 | 5.5 | 5.9 |
| 5. சிகிச்சையின் கீழ் உள்ள நோயாளிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) .. .. | 1.61 | 3.8 | 4.4 | 4.7 |
| 6. மேற்பார்வையின் கீழ் உள்ளவர்கள் (இலட்சத்தில்) .. .. .. | 8.78 | 11.5 | 13.6 | 14.9 |
| 7. சோதனை செய்யப்பட்ட பள்ளிக் குழந்தைகள் (இலட்சத்தில்) .. .. .. | .. | .. | .. | 3.5 |
| 8. பள்ளிக் குழந்தைகளில் கண்டுபிடிக்கப்பட்ட நோயாளிகள் .. .. .. | .. | .. | .. | 1,159 |
| 9. பழைய நோயாளிகள் (1,000-க்கு) .. | .. | .. | .. | 20.4 |
| 10. புதிய நோயாளிகள் (1,000-க்கு) .. | .. | .. | .. | 3.00 |



தொழுநோய்த் திட்டத்தில் மேற்கொண்ட பணிகளின் ஒப்புநோக்கு புள்ளி விவரங்கள்—தொடர்ச்சி.

| | 1978 (10) | 1979 (11) | 1980 (12) | 1981 நவம்பர் வரையில். (13) |
|---|---|---|---|---|
| 1. சோதனை செய்யப்பட்ட மக்கள் தொகை (இலட்சத்தில்) .. .. .. | 103.95 | 92.8 | 97.6 | 104.1 |
| 2. கண்டுபிடிக்கப்பட்ட நோயாளிகள் .. | 58,327 | 41,683 | 29,968 | 250.79 |
| 3. கண்டுபிடிக்கப்பட்ட புதிய நோயாளிகள் (1,000-க்கு) .. .. .. .. | 5.6 | 4.5 | 3.0 | 2.4 |
| 4. மொத்தத்தில் தெரியவந்த நோயாளிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) .. .. | 6.3 | 7.0 | 7.3 | 7.5 |
| 5. சிகிச்சையின் கீழ் உள்ள நோயாளிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) .. .. | 4.9 | 5.2 | 5.3 | 5.5 |
| 6. மேற்பார்வையின் கீழ் உள்ளவர்கள் (இலட்சத்தில்) .. .. .. | 16.6 | 16.6 | 17.8 | 20.5 |
| 7. சோதனை செய்யப்பட்ட பள்ளிக் குழந்தைகள் (இலட்சத்தில்) .. .. | 14.3 | 17.8 | 18.6 | 24.3 |
| 8. பள்ளிக் குழந்தைகளில் கண்டுபிடிக்கப்பட்ட நோயாளிகள் .. .. .. | 16,049 | 21,748 | 24,371 | 272.50 |
| 9. பழைய நோயாளிகள் (1,000-க்கு) .. | 18.5 | 15.5 | 15.0 | 14.03 |
| 10. புதிய நோயாளிகள் (1,000-க்கு) .. | 2·1 | 1.9 | 1.7 | 1.4 |

[1982 மார்ச் 11

(i) காசநோய்த் தடுப்புத் திட்டம்.

காசநோயைத் தடுக்கும் பொருட்டு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தேசீய காச நோய் தடுப்புத் திட்டம் உருவாக்கப் பட்டது. தமிழ்நாட்டில் மாவட்ட காசநோய் தடுப்புத் திட்டம் எல்லா மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. மேற்கண்ட மாவட்ட காசநோய் தடுப்புத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் காசநோய் நோயாளிகளுக்கு நோய் கண்டுபிடிப்பதும், சிகிச்சையும் இலவசமாக எல்லா அரசு மருத்துவ மனைகளிலும், அரசு மருந்தகங்களிலும், ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் அளிக் கப்படுகின்றது. தமிழ்நாட்டில் மாவட்ட காசநோய்த் தடுப்புத் திட்டத்தின் கீழ் 1981 ஆம் ஆண்டு (20—9—1981 வரை) 10.31 லட்சம் காசநோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு சிகிச் சைக்கு உட்படுத்தப்பட்டனர். மருத்துவமனைகளில் தங்க வைத்து அளிக்கப்படும் சிகிச்சையானது காசநோயால் தீவிரமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே தேவையானது. தமிழ்நாட் டில் எட்டு அரசு காசநோய் மருத்துவமனைகளும், மூன்று தனி யார் நிறுவனங்களும் உள்ளன. மாவட்ட தலைமை மருத்துவ மனைகளிலும் சில தாலுகா மருத்துவமனைகளிலும் காச நோயாளிகளுக்கு அவசர சிகிச்சைக்காக சில படுக்கை வசதிகள் உள்ளன. மொத்தத்தில் தமிழ்நாட்டில் 3,651 படுக்கைகள் காச நோயாளிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

காசநோயை கண்டுபிடிக்கும் திட்டத்தை தீவிரப்படுத்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள தொழில் நுட்பர்களும் சளி மற்றும் இரத்த பரிசோதனை செய்ய வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பி.சி.ஜி. ஊசி போடும் திட்டம் காசநோய் தடுப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். தமிழ்நாட்டில் 23 பி.சி.ஜி. குழுக்கள் மாவட்ட காசநோய் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றன. இக் குழுக்கள் வீடு வீடாகச் சென்று இளம் வய தினர்களுக்கு பி.சி.ஜி. ஊசிகளை போடுகின்றனர். புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு பி.சி.ஜி. ஊசி தாய்—சேய் நல விடுதி களிலும் குழந்தைகள் வார்டுகளிலும் போடப்படுகின்றது. தமிழ் நாட்டில் மாவட்ட காசநோய் தடுப்புத் திட்டத்தின் கீழ் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் முடிய 181.26 லட்சம் பேர்களுக்கு பி.சி.ஜி. ஊசி போடப்பட்டுள்ளது. 1981 ஆம் ஆண்டின் குறியீடு 13 லட்சம் என்று நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் 13.35 லட்சம் நபருக்கு பி.சி.ஜி. ஊசி போடப்பட் டுள்ளது.

தமிழகத்தில் இரண்டு காசநோய் விளம்பர பிரிவுகள் உள்ளன. இவ்விரண்டு பிரிவுகளும் காசநோய் தடுப்புத் திட்டத்தின் கீழ் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், சேரி பகுதிகளிலும் காசநோய்



1982 மார்ச் 11]

பற்றிய திரைப்படங்களை காண்பித்து மக்களுக்கு காசநோய் களை களைவதற்கு வேண்டிய வசதிகள் உள்ளன என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

தமிழ்நாடு காசநோய் கழகம், சென்னை, வழங்கிய நன் கொடையைப் பயன்படுத்தி 1981—82 ஆம் ஆண்டில் ரூ. 90,000 செலவில் 12 படுக்கைகள் கொண்ட ஒரு காசநோய் பிரிவை ராசிபுரம் அரசு மருத்துவமனையில் கட்ட அரசு ஆணையிட் டுள்ளது.

தமிழ்நாடு காசநோய் கழகம், சென்னை வழங்கிய நன் கொடையை முழுதும் பயன்படுத்தி மருத்துவப் பணி மற்றும் குடும்ப நலத் துறை இயக்குநரின் கருத்துருவை ஏற்று ரூபாய் முறையே 1,00,000 செலவில் அரக்கோணத்திலும், ரூபாய் 1,00,000 செலவில் திருப்பத்தூரிலும், ரூபாய் 75,000 செலவில் ஆரணியிலும் பத்து படுக்கைகள் கொண்ட பிரிவுகள் கட்ட ஆணையிடப்பட்டு கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

காசநோய் தடுப்புத் திட்டத்தின் கீழ், மாநில அரசுக்கு மத்திய அரசு காசநோய் தடுப்பு மருந்துகள், பி.சி.ஜி. ஊசி, நுண்கதிர் கருவிகள், ஓடல்கா புகைப்படக் கருவி, நுண் உருப் பெருக்கி, பி.சி.ஜி. பெட்டி முதலியன வழங்குகின்றது. மேற் கண்ட பொருள்களை மத்திய அரசு மாவட்ட காசநோய் மையங்களுக்கு பொருள்களாகவே வழங்குகின்றது. காச நோய் தடுப்பு மருந்தும், மற்றும் ஏனைய கருவிகள் வழங்கு வதிலும் மத்திய அரசு மொத்த தேவையில் 50 சதவீதம் ஏற்றுக் கொள்கிறது. மாநில அரசு மீதியுள்ள 50 சதவீதம் செலவினத்தை ஏற்றுக் கொள்கிறது. மத்திய அரசு சுகாதார இயக்குநர் அவர்கள் கொடுத்த புள்ளி விவரத்தின்படி தமிழ் நாட்டிற்கு காசநோய் தடுப்புத் திட்டத்திற்கு மத்திய அரசு வழங்கிய உதவிகளின் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| 1979—80 | .. | .. | 8.34 |
| 1980—81 | .. | .. | 7.65 |
| 1981—82 | .. | .. | 4.75 |

தமிழ்நாடு காசநோய் கழகமும், அதனுடன் இணைக்கப் பட்ட மாவட்ட கழகங்களும் காசநோய் பில்லைகள் விற்பனை யின் மூலம் திரட்டிய தொகை பின்வருமாறு :—

| | | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| 1977—78 | .. | .. | 9.37 |
| 1978—79 | .. | .. | 11.57 |
| 1979—80 | .. | .. | 7.06 |
| 1980—81 | .. | .. | 9.14 |

நாட்டிலுள்ள காசநோய் கழகங்களில் தமிழ்நாடு காச நோய் கழகம், அதிகப்படியான பணத்தை காசநோய் பில்லைகளை விற்பதன் மூலம் திரட்டியதற்காக மேலே குறித்த ஆண்டுகளுக்கான சுழற் கேடயத்தை பரிசாக இந்திய காசநோய் கழகத்திலிருந்து பெற்றுள்ளது. தமிழ்நாடு காச நோய்க் கழகம் கடந்த 11 (பதினோறு) ஆண்டுகளாக இப்பரிசைப் பெற்றுள்ளது. இந்திய காச நோய்கழகம் தமிழ்நாடு காசநோய் கழகத்திற்கு காசநோய் தடுப்புப் பணிகளில் 1980—81 ஆம் ஆண்டில் சிறப்பான பணியை ஆற்றியதற்கு '' போய்மோகன்சிங் பரிசு '' என்ற பரிசையும், தகுதிச் சான்றிதழையும் வழங்கியுள்ளது. கடந்த 30 முகாம்களில் அனைத்து மாநில காசநோய் கழகங்களின் ஒட்டு மொத்தமான சேகரிப்பு ரூபாய் மூன்று கோடியாகும். இதில் தமிழக காசநோய் கழகத்தின் சேகரிப்பு ஒரு கோடி ரூபாயாகும். காசநோய் தடுப்புப் பணிகளில் தமிழ்நாடு காசநோய் கழகம் எப்பொழுதும் முன்னணியில் நிற்கிறது.

(பி) தனியார் மருத்துவ நிலையங்களுக்கான மானியங்கள்.

தனியாரால் நடத்தப்பட்டு வரும் மருத்துவ நிலையங்களுக்கு உதவியாக மானியம் வழங்கப்பட்டு வருகிறது. நம் மாநிலத்தில் கீழ்க்கண்ட வகையான மானியங்கள் வழங்கப்படுகின்றன :—

தனியார் மருத்துவ நிலையங்களுக்கான பராமரிப்பு மானியம்.

மருத்துவப்பணி மற்றும் மக்கள் நல்வாழ்வு இயக்குநரின் பரிந்துரையின் பேரிலும் மற்றும் தணிக்கைப் பட்டியலுடன் இம் மானியம் வழங்குவதைப் பற்றியும் அதை உபயோகப்படுத்தும் வரையறைகளையும் ஆய்வுக் குழுவினரின் திருப்தி தெரிவிப்பதின் பேரிலும் இம்மானியம் வழங்கப்படுகிறது. 1981—82 ஆம் ஆண்டில் (ஜனவரி 1982 வரை) 38 நிறுவனங்கள் சுமார் ரூபாய் 22.30 லட்சம் அளவில் பராமரிப்பு மானியமாக பெற்றுள்ளது.

1980—81 ஆம் ஆண்டில் செங்கிப்பட்டியிலுள்ள மகாத்மா காந்தி நினைவு உருக்கி நோய் நிலையம் ஏற்கெனவே பெற்று வந்த ரூபாய் 58,000 மானியத் தொகையிலிருந்து ரூபாய் 1.00 லட்சத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

2. கட்டிட மானியம்.—இம்மானியமானது தனியார் மருத்துவ நிறுவனங்கள் மருத்துவ வசதிக்காக கட்டப்படும் கட்டிடங்களுக்கு ஆகும் தொகையில் பாதியையோ அல்லது அரசால் குறிப்பிடப்படும் அதிக பட்ச தொகையாகவோ வழங்கப்படுகிறது. இவ்வாண்டில் கீழ்க்கண்டவாறு ரூபாய் 9.92 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1) | புற்றுநோய் நிறுவனம், அடையாறு .. .. | 6.15 |
| (2) | தானே முன் வந்து இயங்கும் சுகாதார நிலையம், அடையாறு. | 3.53 |





3. கருவிகள் மானியம்.—இம்மானியமும் தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கு கருவிகள் வாங்குவதற்காக அக்கருவியின் விலையில் பாதி தொகை வழங்கப்படுகிறது. இம்மானியமானது இந்நிறுவனங்கள் கருவியை வாங்கியவுடன் அதற்கான கணக்குகளுடன் தணிக்கைப் பட்டியலையும் சமர்ப்பித்த பிறகே வழங்கப்படுகிறது.

4. தனியார் தொழுநோய் நிறுவனங்களுக்கான தலைவீத மானியம்.—இம்மானியமானது தனியார் தொழுநோய் நிலையங்களில் சிகிச்சை பெற்று வரும் தொழுநோய் நோயாளிகளுக்கு ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு ரூபாய் 25 வீதமும் அவர்களைச் சார்ந்துள்ள சுகாதாரமான குழந்தைகளுக்கு ரூபாய் 12 வீதமும் மாதாமாதம் வழங்கப்படுகிறது. மேலும் தொழு நோய் தொண்டு நிறுவனங்களில் கவனிக்கப்படும் தொற்று நோய் சிகிச்சைக்காகவும், தொழு நோய் புனர்வாழ்வு அறுவை சிகிச்சைக்காகவும் மற்றும் தொழு நோய் சிகிச்சையல்லாது வெளி புண்கள் சிகிச்சைக்காகவும் மேற்கூறிய தலைவீத மானியம் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு அரசிடமிருந்து இதுபோன்று 11 (பதினோரு) நிறுவனங்கள் இம்மானியத்தைப் பெற்று வருகின்றன. 1981—82 ஆம் வருடம் ரூபாய் 2.02 லட்சம் இதற்காக வழங்கப்பட்டுள்ளது.

ஹோமியோபதி.

ஹோமியோபதி கல்வியும், ஹோமியோபதி மருத்துவ முறையும், தமிழ்நாடு ஹோமியோபதி மருத்துவ முறை மற்றும், ஹோமியோபதி மருத்துவ அலுவலர்கள் சட்டம் 1971-ன் படி இயங்கி வருகிறது.

ஹோமியோபதி மருத்துவ முறைக்கு முக்கியத்துவம் அளிப்பதற்கும், மேலும் இம்முறையை தமிழகத்தில் அபிவிருத்தி செய்வதற்காகவும், இவ்வரசு ஹோமியோபதி மருத்துவ முறையை அங்கீகரிக்கப்பட்ட முறையாக ஆணையிட்டுள்ளது. மேலும் சென்னை கீழ்ப்பாக்கத்தில் 25 படுக்கை வசதிகள் கொண்ட ஒரு அரசு ஹோமியோபதி கல்லூரியுடன் இணைந்த மருத்துவமனை செயல்பட்டு வருகின்றது. இங்கு ஹோமியோபதி முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இக் கல்லூரியில் நடத்தப்பட்டு வரும் 6 மாத உட் பயிற்சியுடன் கூடிய 4 வருட டி. எச். எம்.எஸ். (D.H.M.S.) பட்டயப் படிப்புக்கு ஆண்டு தோறும் 21 மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர்.

இம்மருத்துவ மனையில் நோய்களைக் கண்டு பிடிக்கவும், அவற்றிற்கு தக்க சிகிச்சை அளிக்கவும் எக்ஸ்-ரே மற்றும் மருத்துவ பரிசோதனை வசதிகள் உள்ளன.

[1982 மார்ச் 11

1980-81 ஆம் வருடத்தில் திறக்க உத்தேசிக்கப்பட்ட ஆறு ஹோமியோபதி மருந்தகங்களில், மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு இம்மருந்தகங்கள் 1982 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் செயல் பட்டு வருகின்றன.

மேலும் ஹோமியோபதி கல்லூரி மாணவர்களுக்காக, ஒரு கல்லூரி ஊர்தி இவ்வருடத்தில் வாங்கப்பட்டது.

1982-83 ஆம் வருடங்களில் செயல்படுத்த எண்ணியுள்ள திட்டங் களின் விபரம் :

அரசு ஹோமியோபதி மருத்துவ கல்லூரியில் ஹோமியோபதி மருத்துவத்தில் பட்ட படிப்பு ஏற்படுத்தும் திட்டம் உள்ளது. மேலும் அங்கு ஹோமியோபதி மருத்துவ முறையில் மருந்தாளுனர் படிப்பும் ஏற்படுத்தும் திட்டம் உள்ளது.

1980-81 ஆம் ஆண்டில் இரண்டு மாவட்ட தலைமையிட மருத்துவ மனைகளில் ஏற்படுத்தப்பட்ட ஹோமியோபதி, மருந்தகங்களைத் தவிர, 1981-82 ஆம் ஆண்டில் மேலும் 6 மாவட்ட மருத்துவமனைகளில் ஹோமியோபதி மருந்தகங்கள் திறக்கப்பட்டன.

தற்போது எஞ்சிய மாவட்ட தலைமையிட மருத்துவ மனை களில் ஹோமியோபதி மருந்தகங்கள் திறக்க வேண்டுமென நிச்ச யிக்கப்பட்டு அதன்படி 1982-83 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட ஏழு மாவட்ட தலைமையிட மருத்துவ மனைகளில் ஹோமியோபதி மருந்தகங்களை திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1. மாவட்ட தலைமையிட மருத்துவமனை, புதுக்கோட்டை.

2. மாவட்ட தலைமையிட மருத்துவமனை, தர்மபுரி.

3. மாவட்ட தலைமையிட மருத்துவமனை, நாகர் கோயில், கன்னியாகுமரி மாவட்டம்.

4. மாவட்ட தலைமையிட மருத்துவமனை, உதகமண்டலம்.

5. மாவட்ட தலைமையிட மருத்துவமனை, ஈரோடு.

6. மாவட்ட தலைமையிட மருத்துவமனை, திருப்பூர்.

7. மாவட்ட தலைமையிட மருத்துவமனை, காஞ்சிபுரம்.



1982 மார்ச் 11]

2. குடும்பநலத் திட்டம்.

குடும்பநலத் திட்டம் மத்திய அரசின் முழு நிதி உதவியைக் கொண்டு நடத்தப்படுகின்ற ஒரு திட்டமாகும். திட்டமிட்ட வளர்ச்சியின் ஓர் அங்கமாக இத்திட்டம் திகழ்ந்து வருகிறது. திங்கள் ஒன்றுக்கு ஒரு மில்லியன் என்ற கணக்கில் நமது நாட் டின் மக்கள் தொகை பெருகி வருகிறது. இந்த நிலையில் மக்கள் தொகை பெருகிச் சென்றால் இந் நூற்றாண்டின் முடிவில் மக்கள் தொகை 1,065 (ஆயிரத்து அறுபத்தைந்து) மில்லியனை எட்டி விடும். நாட்டின் திட்டமிட்ட சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்கு மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டியதன் தேவையை உணர்த்த அரசு மத்திய அரசின் பொறுப்பேற்கும் திட்டமாகக் குடும்பநலத் திட்டத்தைச் செயல் படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கி வருகிறது. குறைந்த அளவுத் தேவைகள், தாய்சேய் நலத்திட்டம் ஆகியவற்றிலிருந்து பிரிக்க முடியாத உடல்நலக் காப்பின் ஒரு பகுதியாக இத்திட்டம் அமைந் துள்ளது.

குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழகம் எப்போதுமே முன்னணியில் விளங்குகிறது. 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி நமது மாநிலத்தில் நில வும் மக்கள் தொகை சீராக அமைந்துள்ளது நமக்கு நிறைவைத் தருகிறது. இந்நாட்டில், தமிழகம் மட்டும்தான் ஆண்டொன் றுக்கு மிகக் குறைந்த, அதாவது 17.23 சதவீத மக்கள் தொகை வளர்ச்சியைக் கொண்டுள்ளது. பிறப்பு வீதம் ஆயிரம் பேருக்கு 28.1 சதவீதமாகக் குறைந்துள்ளது.

இறப்பு வீதம் ஆயிரத்துக்கு 12 என்ற கணக்கில் உள்ளது. குழந்தைகளின் இறப்பு வீதம் ஆயிரத்துக்கு 112 லிருந்து 98 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. கருத்தடை செய்து கொண்ட தகுதி வாய்ந்த தம்பதியரின் சதவீதம் 28.6 ஆகும். கருத்தடை செய்து கொள்ளும் தகுதி வாய்ந்த தம்பதியரின் சதவீதத்தை அதிகரித்து, அதன் மூலம் வளர்ச்சி வீதத்தையும், பிறப்பு வீதத்தையும் மேலும் குறைக்க வேண்டும் என்பதே தற்போதைய நோக்கமாகும். அதே நேரத்தில், தாய்-சேய் நலப் பணிகளை சிறப்பாக மேற் கொண்டும், சுகாதாரப் பாதுகாப்பு மருத்துவப் பாதுகாப்பு திட் டங்களைச் செயற்படுத்தும் முறைகளைச் செம்மைப் படுத்தியும் குழந்தைகள் இறப்பு வீதத்தையும், குறைப்பதில் நாட்டம் செலுத் தப்படும்.

குடும்பநலத் திட்டம் தமிழ்நாட்டில் எந்தவித கட்டாயமும் இன்றி, மக்களைத் தூண்டுவதின் வாயிலாகச் செயற்படுத்தப் படுகிறது. இது தொடர்பாக தகுதி வாய்ந்த தம்பதியர், நிலை யான குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளைப் பின்பற்றிச் சிறு குடும்ப கோட்பாட்டை, பின்பற்றும் வகையில் குடும்பநலத்திட் டம் பற்றி அவர்களுக்கு அறிவுறுத்தி ஊக்குவிப்பதற்கான, முனைப்பான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

[1982 மார்ச் 11

அதிக அளவில் மகளிர் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள முன்வருவதே குடும்ப நலத் திட்டத்தின் இப்போதுள்ள நிலை. எனவே, மாவட்ட மருத்துவ மனைகளில், கருத்தடை அறுவை சிகிச்சைக்குப் பிறகு கண்காணிக்கப்படும் பிற்காப்புப் பிரிவுகளில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய அவசியமேற்பட்டுள்ளது. பிரிட்டன் உதவித் திட்டத்தின் கீழ் 15 வட்ட மருத்துவ மனைகளிலும், 31 ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும், கருத்தடை அறுவை சிகிச்சைக்குப் பிந்திய பிற்காப்பு மருத்துவ வசதிகள் உள்ளன. இவற்றைத் தவிர, மருத்துவக் கல்லூரி இணைந்த 9 மருத்துவ மனைகளிலும், 2 தொண்டு நிறுவனங்களிலும், 14 மாவட்ட தலைமையிட மருத்துவ மனைகளிலும், கருத்தடை அறுவைச் சிகிச்சைக்குப் பிந்திய, மருத்துவ வசதித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேற் சொன்னவற்றைத் தவிர, 5 அரசினர் வட்ட மருத்துவ மனைகளிலும், உள்ளாட்சி மன்றங்கள் நடத்தி வருகின்ற 5 நிலையங்களிலும், தொண்டு நிறுவனங்கள் நடத்தி வருகின்ற 2 நிலையங்களிலும், கருத்தடை அறுவைச் சிகிச்சைக்குப் பிந்திய பிற்காப்பு மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

1981–82 ஆம் ஆண்டில், நகர்ப்புற குடும்ப நல நிலையங்கள் 31-க்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 14 மாவட்ட தலைமையிட மருத்துவ மனைகளில் 20 படுக்கைகள் கொண்ட கருத்தடை அறுவைச் சிகிச்சைக்கும் பிந்திய பிற்காப்பு மருத்துவ வார்டுகள் கட்டுவதற்கும் அரசு உத்தரவுகள் பிறப்பித்துள்ளது. அந்த மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளில் கட்டுமானப் பணிகள் நடந்தேறி வருகின்றன.

1981–82 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு நிர்ணயித்த இலக்கில் சனவரித் திங்கள் வரையில் அடைந்த சாதனை வருமாறு :—

| குடும்ப நலத் திட்ட முறைகள். | மத்திய அரசு நிர்ணயித்த இலக்கு. | 1982 ஆம் ஆண்டு சனவரி இறுதி வரையிலான சாதனை. | கடந்த வருட சனவரி மாதத்தின் இறுதி வரையிலான சாதனை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| அறுவைச் சிகிச்சை .. | 1,82,000 | 1,23,893 | 1;11,912 |
| கருத்தடை வளையங்கள் பொருத்துதல். | 47,800 | 25,684 | 26,009 |
| மரபு முறையிலான கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்துவோர் .. .. | 1,58,300 | 58,796 | 71,000 |
| கருத்தடை மாத்திரைகள் உட்கொள்வோர் | 31,900 | 3,741 | .. |



1982 மார்ச் 11]

1981–82-ஆம் ஆண்டுக்காக மத்திய அரசு நிர்ணயித்த இலக்கான 182,000 அறுவைச் சிகிச்சைகளின் விகிதாசார இலக்கில் 1982 சனவரி இறுதி வரையில் 83 சதவீதம் எய்தப்பட்டுள்ளது. சென்னை மாநகரில் தொண்டு நிறுவனங்களின் உடன் உழைப்புடன், அரசு மருத்துவமனைகளில் தீவிர குடும்பநலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மகளிருக்கான கருத்தடை அறுவைச் சிகிச்சையில் ''லெப் பிராஸ்கோப்பிக்'' (L pr sc pic Te h ique) பின்பற்றப் படுகிறது. நடப்பு ஆண்டுக்கான திட்ட இலக்கை முழுவதும் எய்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

குடும்பநலத் திட்டத்தின் வெற்றிக்கு ஊக்கமாக தாய்-சேய் நலத்தின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு. தாய்-சேய் ஆகியவர்களுக்கு ஊட்டச் சத்துணவின்மையால் ஏற்ப ம் இரத்த சோகையைத் தடுத்தல். குழந்தைகளுக்கு கண் குருடாவதைத்தடுத்தல். ஆகிய திட்டங்களுக்குத் தொடர்ந்து அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும். தவிர, பச்சிளங் குழந்தைகளுக்குத் தடுப்பூசி போடுதல், பள்ளி வயதடையா குழந்தைகளுக்குத் தொண்டை அடைப்பான், கக்குவான், நரம்பிசிவு நோய் ஆகிய நோய்களைத் தடுக்க தடுப்பூசி போடுதல், கருவுற்ற தாய்மார்களுக்கு நரம்பிசிவு நோய் ஏற்படாமல் இருக்க தடுப்பூசி போடுதல் போன்றவைகளுக்கும் முதன்மை அளிக்கப் படும்.

தடுப்பூசி.—குடும்பநல திட்டத்தின் அங்கமாக தாய்-சேய் நலத் திட்டத்தில் தடுப்பூசி மற்றும், பிற சுகாதார வசதித் திட்டங்களும் சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்படடு, செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

தாய்கள்.—1981–82-ஆம் ஆண்டில், 5,000 தாய்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டுமென மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. நடப்பு ஆண்டில் அந்த இலக்கு முழுமையாக நிறைவேற்றப்படும்.

மருந்துவ முறையில் கருவைக் கலைத்தல்.—மகப்பேறுக்குத் தொடர்ந்து ஆளாவது மகளிரின் உயிருக்குக் கேடாகும். எனவே, தொடர்ந்து கருத்தரித்தலைத் தடுக்கும் வண்ணம் அவர்களுக்கு ஆலோசனை வழங்க தமிழ்நாட்டில் தெரிந்தெடுக்கப்பட்ட மருத்துவமனைகளில், மருத்துவ முறையில் கருவைப் கலைப்பதற்கான வசதிகள் 1971-ஆம் ஆண்டு மருத்துவ முறையில் கருவைக் கலைத்தல் சட்டத்தின்படி செய்து கொடுக்கப்படுகின்றன.

தற்போது 159 அரசு மருத்துவ நிலையங்களிலும், 34 தனியார் மருத்துவ நிலயைங்களிலும் இவ்வசதிகள் உள்ளன. 1981 டிசம்பர் வரை 31,121 பேருக்கு மருத்துவ முறையில் கருக்கலைப்பு செய்யப்பட்டுள்ளது.

லெப்ராஸ்கோபி (Laproscopy).

தற்போது இக்கருத்தடை முறை ஆர். எஸ். ஆர். எம். மகப்பேறு மருத்துவமனை, சென்னை, தாய்-சேய் நல மருத்துவமனை, சென்னை, அரசினர் இராஜாஜி மருத்துவமனை, மதுரை, ஆகியவற்றில் பின்பற்றப்பட்டுவருகிறது. இந்த நவீன முறையில் மருத்துவ அதிகாரிகளுக்குப் பயிற்சியளிக்கும் பயிற்சி நிறுவனங்களாக இம்மூன்று நிறுவனங்களையும் அரசு அண்மையில் அங்கீகரித்துள்ளது. இந்த நவீன முறை கருத்தடை வசதியினை போதனா மருத்துவ மனைகளுக்கும் மற்றும் மாவட்ட மருத்துவமனைகளுக்கும் விரிவாக்கம் செய்ய அரசு கருத்திற் கொண்டுள்ளது.

தனியார் மருத்துவர்கள் மருத்துவ நிலையங்களின் பங்கு :

தனியார் மருத்துவர்களையும் குடும்பநலத் திட்டத்தை ஊக்குவிப்பதில் ஈடுபடுத்தும் இத்திட்டம் மத்திய அரசால் வகுக்கப்பட்டதாகும். இத்திட்டத்தின் கீழ், தனியார் மருத்துவர்களும் குடும்பநலப் பணிகளை ஆற்றுவதோடு அதற்கென செலவிடும் தொகையை அரசிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தனியார் மருத்துவர்கள் குடும்ப நலத்தொண்டினை இலவசமாகச் செய்யவேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் ஆண்களுக்கு கருத்தடை அறுவைச் சிகிச்சை, மகளிருக்குக் கருத்தடை வளையம் பொருத்துதல் ஆகியவற்றுக்காகும் செலவினங்களுக்காக மருத்துவர்களுக்கு முறையே ரூ. 30, ரூ. 5 அனுமதிக்கப்படுகிறது.

உதவி மானியங்கள் :

தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு தொண்டு நிறுவனங்களுக்கும் உள்ளாட்சி மன்றங்களுக்கும் குடும்பநலத் திட்டத்தைச் செயற் படுத்துவதற்காக, மாநில அரசு மூலமாக, மத்திய அரசு உதவி மானியங்களை வழங்கிவருகிறது.

குடும்பநலப் பிரச்சாரமும், கருத்தடை ஆதரவாளர்களுக்கு அளிக்கப்படும் புத்தறிவு பயிற்சி முகாம்களும் :

குடும்ப நலத்திட்டத்தை வெற்றியாகச் செயற்படுத்துவதில் குடும்பநலக் கல்வியும், பிரச்சாரமும் பெரும் பங்கு வகிக்கின்றன. 1981 அக்டோபர் திங்களில் தமிழ்நாடு முழுவதும், தேசிய குடும்பநல இருவார விழா கொண்டாடப்பட்டது. 1981-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் சென்னையில் மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் 1982-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் குடும்ப நலத் திங்களாக கொண்டாடப்பட்டது. குடும்பநலத் திட்டம் குறித்து "கல்யாணத்துக்கு ஒரு நிபந்தனை" என்ற செய்தி விளக்க வண்ணப்படம்



தயாரித்து வெளியிடப்பட்டது. தகுதி வாய்ந்த தம்பதிகளுக்கு அறிவுறுத்தி ஊக்கமளிப்பதற்காக விளம்பரங்கள், சுவர் ஓவியங்கள், விளம்பரத் தட்டிகள் பேருந்துகளில் விளம்பரப் பலகைகள், பொருட் காட்சிகள், படக்காட்சிகள் போன்றவற்றின் மூலமாகவும், கருத்தடை ஆதரவாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதன் மூலம் (1,025-க்கும் மேற்பட்ட முகாம்கள் நடத்தியதின் மூலம்) பிரச்சாரப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

மகளிருக்கான கருத்தடை :

கருத்தடை அறுவைச்சிச்சைக்கு ரூ. 85-ம் ஆடவர்களுக்கான கருத்தடை அறுவைச் சிகிச்சைக்கு ரூ. 75ம் மானியமாக இம்மாநிலத்தில் அளிக்கப்படுகிறது. மத்திய அரசு இவ்விரு சிகிச்சைக்களுக்கு ரூ. 70 மட்டுமே நிர்ணயித்தது. "மருந்துகள்— கட்டுக்போடுதல்", "உணவு", "போக்குவரத்து" ஆகிய செலவினங்களுக்காக வரையறுக்கப்பட்ட தொகை 1981-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ஆம் தேதியிலிருந்து கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. கருத்தடை அறுவை சிகிச்கை ஒவ்வொன்றிற்கும் மருத்துவ துணைப் பணியாளர்களுக்கும் வழங்கப்படும் ஊதியம் தொண்டு நிறுவனங்களுக்கும் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

வரவு-செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு :

1980—81-ஆம் ஆண்டில் ஏற்பட்ட செலவு ரூ. 907.69 இலட்சமாகும். 1981—82-ஆம் ஆண்டில் திருத்த மதிப்பீட்டில் ரூ. 998.31 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 1982—83-ஆம் ஆண்டில் குடும்ப நலத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 942.94 இலட்சமாகும்.

பிற்சேர்க்கை 1.

மாநில வரவு-செலவுத் திட்டமும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு செலவினங்களும்.

1982—83-ஆம் ஆண்டுக்கான கோரிக்கை. 18, மருத்துவம் மற்றும் கோரிக்கை 19, மக்கள் நல்வாழ்வு இவைகளின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 151 கோடியாகும். இதில் கழிவு நீரகற்றல் மற்றும் குடிநீர் வழங்கல் ஆகியவற்றின் கீழ் ரூ. 38 கோடியும் அடங்கும். இது வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூ. 1,370 கோடியில் 11 விழுக்காடாகும்.

மருத்துவக் கோரிக்கையின் கீழ் 1982—83—க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பல்வேறு நிலைப் பணிகளுக்கும் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் பற்றிய விவரங்கள் பின் வருமாறு :—

1982—83-க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

| | திட்டமில்லாத செலவினம். | திட்ட செலவினம். | | | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| | | மாநிலத் திட்டம். | மத்திய அரசு பொறுப் பேற்கும் திட்டங்கள். | மத்திய அரசு உதவி செய்யும் திட்டங்கள். (50: 50) | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | (ரூபாய் ஆயிரத்தில்.) | | | |
| 259. அரசு மருத்துவ நிலையங்களின் கட்டட பராமரிப்பு, சீர் செய்தல் பணிகளுக்கான செலவு. | 1,10,00 | .. | .. | .. | 1,10,00 |
| 280. மருத்துவம்— | | | | | |
| (1) கல்வி .. .. .. | 7,52,16 | 42,78 | .. | 4,42 | 7,99,36 |
| (2) பயிற்சி .. .. .. | 34,92 | 18.08 | .. | 11 | 53,11 |
| (3) ஆராய்ச்சி .. .. | 3,87 | 3,13 | 1,37 | .. | 8,37 |
| (4) மருத்துவ நிவாரணம் (மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகள், மருத்துவக் கல்லூரி களோடு இணைந்திராத மருத்துவ மனைகள் சேர்ந்து). | 48,69,72 | 5,19,31 | 36,65 | 1,71 | 54,27,39 |
| (5) ஹோமியோபதி மருத்துவம். | 9,98 | 3,89 | .. | .. | 13,77 |
| (6) இந்திய முறை மருத்துவம்* | 76,24 | 1,16.21 | 3.66 | .. | 1,96,11 |
| (7) பிற இனங்கள் .. .. | 9,59,37 | 8,48 | .. | .. | 9,67,85 |
| 288. சமூக பாதுகாப்பு மற்றும் நலம். | 72,76 | .. | .. | .. | 72,76 |
| திருப்பி வசூலிப்பவை .. | .. | .. | .. | .. | 8,00 |
| பெரு மொத்தம்— கோரிக்கை 18. மருத்துவம். | 68,88,92 | 7,11,88 | 41,68 | 6,24 | 76,56,72 |

* இந்திய மருத்துவம் பற்றிய குறிப்பு தனியாக அவையில் வைக்கப்பட்டுள்ளது.

* மக்கள் நல்வாழ்வுக் கோரிக்கையின் கீழ் 1982–83-க்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பல்வேறு நிலைப் பணிகளுக்கும் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்க விவரங்கள் பின்வருமாறு :—

1982–83-க்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

| | திட்டமில்லாத செலவினம். | திட்டச் செலவினம்: மாநிலத் திட்டம். | மத்திய அரசு பொறுப் பேற்கும் திட்டங்கள். | மத்திய அரசு உதவி செய்யும் திட்டங்கள். (50 : 50) | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| | (ரூபாய் ஆயிரத்தில்) | | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 259. மக்கள் நல்வாழ்வு நிலையங்களுக்கான கட்டட பராமரிப்பு, சீர் செய்தல் பணிகளுக்கான செலவு. | 9,00 | .. | .. | .. | 9,00 |
| 230. மருத்துவம்-ஆரம்ப சுகாதார நிலையங்கள் முதலியன. | 8,06,96 | 4,38,94 | 1,74 | .. | 12,47,64 |
| 281. குடும்பநலம் .. .. | .. | .. | 13,13,76 | .. | 13,13,76 |
| 282. (1) மக்கள் நல்வாழ்வு மற்றும் துப்புரவு. | 5,64,68 | 1,34,46 | .. | 2,99,59 | 9,98,74 |
| (2) கழிவு நீரகற்றல் மற்றும் குடிநீர் வழங்கல். | —48,99 | 33,25,32 | 5,00,00 | .. | 37,76,33 |
| கூட்டுக-திருப்பி வசூலிப்பவை .. | .. | .. | .. | .. | +1,00,00 |
| பெரு மொத்தம் கோரிக்கை—19 மக்கள் நல்வாழ்வு. | 13,31,66 | 38,98,72 | 18,15,50 | 2,99,59 | 74,45,47 |

— மக்கள் நல்வாழ்வு பற்றிய குறிப்பு தனியாக அவையில் வைக்கப்பட்டுள்ளது.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுப் பணிகளுக்காக செய்யப்பட்டுள்ள மேற்கண்ட நிதி ஒதுக்கங்கள் தவிர மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுக் கட்டிடங்கள் ஆகியவற்றிற்காக பிற கோரிக்கைகளின் கீழ் 1982—83-ல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

| | | திட்டச் செலவினம். | | | |
|---|---|---|---|---|---|
| | திட்டமில்லாத செலவினம். | மாநிலத் திட்டம். | மைய அரசு பொறுப் பேற்கும் திட்டங்கள். | மைய அரசு உதவி செய்யும் திட்டங்கள். (50 : 50) | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| வருவாய் கணக்கில் செலவு மானியக் கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்.) | | | |
| 28. சமுதாய வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகங்களும். | | | | | |
| 280. மருத்துவ நிவாரணம் : (உள்ளாட்சி மன்றங்களின் மகப்பேறு நிலையங்களுக்கு பராமரிப்பு மானியம் உட்பட). | 1,20,00 | 6,50 | .. | .. | 1,26,50 |
| 30. சமூக நலம் : தமிழ்நாடு சத்துணவுத் திட்டம் பொது சுகாதாரம். .. | .. | 1,21,70 | .. | .. | 1,21,70 |
| 37. பொதுப்பணி-மருத்துவம் மக்கள் நல்வாழ்வுக் கட்டிடங்கள். | 6,90 | 3,41 | .. | .. | 10,31 |
| வருவாய்க் கணக்கின் கீழ் வராத செலவு : | | | | | |
| மருத்துவம் குடும்பநலம், மக்கள் நல்வாழ்வு, துப்புரவு, குடிநீர் வழங்கல் கட்டிடப் பணிகள். | 51,02 | 11,72,65 | 2,12,93 | 61,26 | 14,97,26 |
| 680. மருத்துவம் குறித்த கடன்கள் | 20 | .. | .. | .. | 20 |
| 682. மக்கள் நல்வாழ்வு, துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த கடன்கள். | 7,34,07 | 20,07,27 | .. | .. | 27,41,34 |
| மொத்தம் .. | 9,12,19 | 33,10,93 | 2,12,93 | 61,26 | 44,97,31 |

மேற்சொன்ன நிதி ஒதுக்கங்களைக் கணக்கில் கொண்டால் 1982—83-ல் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுக்காக செலவிடப்படும் தொகை ரூ. 196 கோடியாகும்.

5. எல்லாம் தலைப்புகளின் கீழும் (280 மருத்துவம், 281 குடும்ப நலம், 282 மக்கள் நல்வாழ்வு, மற்றும் துப்புரவு 480 மருத்துவ மூலதனச் செலவு, 481 குடும்பநல மூலதனச் செலவு 482. மக்கள நல்வாழ்வு, மற்றும் துப்புரவு, மூலதனச் செலவு) மருத்துவம், மக்கள் நல்வாழ்வு மற்றும் துப்புரவுக்கான (குடிநீர் வழங்கலைச் சேர்க்காமல்) 1982—83 ஆம் ஆண்டில் திட்டப் பணிகளின் செலவு விவரம் வருமாறு :—

| | பொறுப்பேற்ற செலவினம். | 1982—83-ல் புதிதாக ஒப்பளிப்பு வழங்கும் செலவினங்கள் | மொத்தம். |
|---|---|---|---|
| | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
| மாநிலத் திட்டம் | 20,25,68 | 7,30,25 | 27,55,93 |
| மத்திய அரசு பொறுப்பு ஏற்பவை .. | 15,68,37 | .. | 15,68,37 |
| மத்திய அரசு உதவி செய்பவை (50:50) | 3,67,09 | .. | 3,67,09 |

6. 1982—83 ஆம் ஆண்டில் புதிதாக ஒப்பளிப்பு வழங்கக் கருதப்பட்டுள்ள திட்டங்களின் விவரம துறைவாரியாக கீழே தரப்படுகிறது —

| துறை. | மொத்தச் செலவு | 1982—83ல் செலவு |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. மருத்துவக் கல்வி .. .. | 498.02 | 338.24 |
| 2. மருத்துவப் பணி மற்றும் குடும்பநலம் .. .. | 199.99 | 136.71 |
| 3. ஆரம்ப சுகாதார நிலையங்கள் .. .. .. | 66.61 | 146.89 |
| 4. மக்கள் நல்வாழ்வு மற்றும் தடுப்பு மருந்து .. .. | 34.16 +1.73 | 17.36 +1.03 |
| 5. இந்திய மருத்துவம் .. | 47.08 | 41.37 |
| 6. சுற்றுப்புற துப்புரவு .. | 5.00 | 5.00 |
| 7. மாநில சுகாதார போக்குவரத்து அமைப்பு .. .. | 46.08 | 44.68 |
| மொத்தம் .. | 898.67 | 731.28 |





1982—83 ஆம் ஆண்டில் ரூ. 731.28 இலட்சம் இத்துறைக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இத்தொகை எல்லாதுறைகளுக்கும் ஒதுக்கப்பட்ட தொகைகளைவிட அதிகமாகும். இது 51,77,76 இலட்சத்தில் 14 விழுக்காட்டினைக் காட்டும்.

+ குறியீடு திட்டமில்லாத செலவினத்தைக் குறிக்கும்.

## பிற்சேர்க்கை 2.

## பட்டப்படிப்புகள்.

| படிப்பின் பெயர். | கால அளவு. | ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| எம்.பி.பி.எஸ். .. .. | 5½ ஆண்டுகள் (உட்பணி பயிற்சி உட்பட). | 1,051 |
| புகுமுக மருத்துவப் படிப்பு. | (1981—82ஆம் ஆண்டு மட்டும்). | 105 |
| பி. பார்மசி .. .. .. | 4 ஆண்டுகள் | 56 |
| பி.டி.எஸ். .. .. .. | 4 ஆண்டுகள் | 45 |
| பி.எஸ்ஸி. செவிலியர் .. | 2½ ஆண்டுகள் பணிபுரிவோர். | 20 |
| | தனியார். | 10 |

[1982 மார்ச் 11

பட்ட மேற்படிப்பு மற்றும் உயர்நிலை சிறப்பு வகுப்புகளுக்கான பட்டியல் :

பட்டப்படிப்பு.

| படிப்பின் பெயர். | ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| எம். டி. .. .. .. .. .. | 240 |
| எம். எஸ். .. .. .. .. .. | 141 |
| எம். சி. எச். .. .. .. .. .. | 31 |
| டி. எம். .. .. .. .. .. | 17 |
| எம். பார்மசி .. .. .. .. .. | 3 |
| எம். டி. ஏ .. .. .. .. .. | 18 |

பட்டமேற்படிப்பு பட்டய படிப்பு வகுப்புகள்.

| | |
|---|---|
| டி. ஜி. ஓ. .. .. .. .. .. | 82 |
| டி. எல். ஓ. .. .. .. .. .. | 48 |
| டி. ஓ. .. .. .. .. .. | 36 |
| டி. எம். ஆர். டி. (D.M.R.T.) .. .. | 8 |
| டி. எம். ஆர். டி. (D.M.R.D.) .. .. | 24 |
| டி. ஏ. .. .. .. .. .. | 52 |
| டி. ஆர்தோ. .. .. .. .. .. | 26 |
| டி. சி. எச். .. .. .. .. .. | 74 |
| டி. டி. சி. டி. .. .. .. .. | 12 |
| டி. வி. .. .. .. .. .. | 20 |
| டி. சி. பி. .. .. .. .. .. | 9 |
| டி. டி. .. .. .. .. .. | 16 |
| டி. பி. எம் .. .. .. .. .. | 16 |
| டி. ஐ. பி. எம். .. .. .. .. | 4 |
| டி. பி. எச். .. .. .. .. .. | 10 |
| எல். பி. எச். .. .. .. .. .. | 4 |



1982 மார்ச் 11]

பிற்சேர்க்கை 3.

1981—82 ஆம் ஆண்டில மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்ட மருத்துவக் கருவிகள் விவரம் :—

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. பேச்சு மற்றும் காது கேளாத ஊனமுற்றவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் நிலையத்திற்கு கருவிகள் வாங்குதல் .. .. .. .. | 2.62 |
| 2. சென்னை அரசு பொது மருத்துவ மனையில் செயற்கை சிறுநீரகம் பொருத்தும் சிகிச்சைப் பிரிவிற்கு கருவிகள் வாங்குதல் .. .. | 15.60 |
| 3. கீழ்க்கண்ட 8 மருத்துவ மனைகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு அல்ட்ரா ஸானிக் கருவி வாங்குதல். | 16.96 |
| (அ) ஆர். எஸ். ஆர். எம். மகப்பேறு மருத்துவ நிலையம், சென்னை .. .. .. | .. |
| (ஆ) கஸ்தூரிபாய் காந்தி பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை, சென்னை | .. |
| (இ) மகப்பேறு மகளிர் நோய் இயல் நிலையம் மற்றும் பெண்கள் குழந்தைகள மருத்துவமனை, சென்னை .. .. | .. |
| (ஈ) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, தஞ்சாவூர் .. .. .. | .. |
| (உ) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி .. | .. |
| (ஊ) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, கோயம்புத்தூர் .. | .. |
| (எ) செங்கல்பட்டு, மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, செங்கற்பட்டு .. .. | .. |
| (ஏ) அரசு இராஜாஜி மருத்துவ மனை, மதுரை .. .. .. .. | .. |
| 4. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு உபகரணங்கள் வாங்குதல் .. | 3.25 |

[1982 மார்ச் 11

| | | |
|---|---|---|
| 5. | தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலுள்ள நரம்பியல் பிரிவிற்கு உபகரணங்கள் வாங்குதல் .. .. .. | 2.86 |
| 6. | அரசு இராயப் பேட்டை மருத்துவ மனையில் உள்ள தீவிர சிகிச்சை பிரிவிற்கு உபகரணங்கள் வாங்குதல் .. .. .. .. | 2.55 |
| 7. | அரசு இராயப்பேட்டை மருத்துவமனையிலுள்ள முட நீக்கியல் மருத்துவ சிகிச்சை பிரிவிற்கு உபகரணங்கள் வாங்குதல் .. .. .. | 0.95 |
| 8. | காஞ்சிபுரத்திலுள்ள அறிஞர் அண்ணா புற்று நோய் சிகிச்சை நிலையத்திற்கு இரத்த சேமிப்பு வங்கிக்காக உபகரணங்கள் வாங்குதல் .. .. .. .. .. .. | 10.58 |
| 9. | சென்னை அரசு மகப்பேறு மகளிர் நோய் நிலையம் மற்றும் பெண்கள் குழந்தைகள் மருத்துவ மனைக்கு உபகரணங்கள் வாங்குதல் .. | 2.75 |
| 10. | சென்னை அண்ணா நகரிலுள்ள புற நகர் மருத்துவமனைக்கு உபகரணங்கள் வாங்குதல் | 4.69 |
| 11. | கோயம்புத்தூர் மருத்துவக் கலலூரி மருத்துவ மனைக்கு விபத்து மற்றும் அவசர பணிகள் சிகிச்சைக்காக உபகரணங்கள் வாங்குதல் .. | 3.00 |
| 12. | மதுரை மருத்துவக் கல்லூரியில் நச்சுக் கிருமியியல் பரிசோதனைக் கூடத்திற்கு உபகரணங்கள் வாங்குதல் .. .. .. .. | 5.40 |
| | மொத்தம் .. | 71.21 |



[1982 மார்ச் 11

பிற்சேர்க்கை 5.

981–82 ஆம்ஆண்டில் கீழ்க்கண்ட மருத்துவக் கல்லூரிகளோடு இணைந்திரா மருத்துவமனைகளுக்குரிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட தலைமையிட மருத்துவ மனைகள்.

| | | |
|---|---|---|
| 1. | ஈரோடு அரசு மாவட்ட தலைமை மருத்துவ மனையில் உயர் அழுத்த சாதனம் அமைத்தல் | 4.35 |
| 2. | திண்டுக்கல், உதகமண்டலம், தர்மபுரி மற்றும் புதுக்கோட்டை ஆகிய அரசு மாவட்ட தலைமை மருத்துவ மனைகளில் மின் உற்பத்தி சாதனம் அமைத்தல் .. .. .. | 13.00 |
| 3. | ஈரோடு, காஞ்சிபுரம், திண்டுக்கல் மற்றும் நாகப் பட்டிணம் ஆகிய அரசு மாவட்ட தலைமை மருத்துவ மனைகளில் உள்ள சவக் கிடங்கிற்கு குளிர் சாதன வசதி அமைத்தல் .. | 7.12 |
| 4. | ஈரோடு அரசு மாவட்ட தலைமை மருத்துவ மனையில் புற நோயாளிகள் பிரிவுக் கட்டுதல் | 5.12 |
| 5. | திருப்பூர், தர்மபுரி, இராமநாதபுரம், மற்றும் காஞ்சிபுரம் ஆகிய அரசு மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளில் குறைந்த பட்ச 300 படுக்கை வசதிக் கொண்ட கட்டிடம் கட்டுதல் | 64.22 |
| 6. | புதுக்கோட்டை மற்றும் தர்மபுரி அரசு மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளில் தீவிர இருதய சிகிச்சைப் பிரிவு அமைத்தல் .. .. | 3.20 |
| 7. | உதகமண்டலம் மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் கூடுதல் பணியாளர்களுடன் 15 படுக்கைகள் கொண்ட சிறப்புப் பகுதி ஏற்படுத்தி தருதல் .. .. .. .. | 3.20 |
| 8. | திண்டுக்கல், தர்மபுரி, தூத்துக்குடி, இராமநாதபுரம், புதுக்கோட்டை ஆகிய மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளுக்கு பிணஊர்தி வழங்குதல் .. .. .. .. | 4.00 |
| | மொத்தம் .. | 104.21 |

1982 மார்ச் 11]

## பிற்சேர்க்கை 4

### கட்டிடத் திட்டங்கள்.

1981–82 ஆம் ஆண்டு கீழ்க்கண்ட கட்டிடத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது ;—

| | செலவு ரூபாய் லட்சத்தில. |
|---|---|
| 1. மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் செயற்கை அவயவங்களை பொருத்தும் நிலையமும் மறு வாழ்வு கட்டிடமும் கட்டுவது .. | 24.5 |
| 2. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் மைய கிருமி நோய் அழிவு பகுதி கட்டுவதற்கு .. .. .. .. | 2.7 |
| 3. சென்னை கஸ்தூரி பாய் தாய்சேய் நல மருத்துவமனையில் குளிர் சாதன பிணவறை கட்டுவதற்கு .. .. .. .. | 3.71 |
| 4. சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் பல அடுக்கு கொண்ட குழந்தைகள் சிகிச்சைப் பகுதி கட்டுவதற்கு .. .. .. .. | 199.0 |
| 5. சென்னை பெரம்பூரில் 100 படுக்கைகள் கொண்ட வெளி வட்டார மருத்துவமனை கட்டுவது .. .. .. .. .. | 170.91 |
| 6. தாம்பரம் காசநோய் மருத்துவமனையில் டீசல் ஜெனரேட்டர் அமைப்பது சம்பந்தமாக .. .. .. .. .. | 1.10 |
| 7. சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஸ்டாண்டு பை ஜெனரேட்டர் அமைப்பது .. .. .. | 4.00 |
| 8. கோயம்புத்தூர் மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையில் விபத்து மற்றும் அவசரச் சிகிச்சைப் பகுதி கட்டுவது .. .. .. .. | 10.00 |
| 9. மதுரை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நுண் உயிரியல் ஆய்வுக் கூடம் கட்டுவது .. | 1.00 |
| மொத்தம் .. | 416.98 |



1982 மார்ச் 11]

### வட்ட தலைமையிட மருத்துவ மனைகள்.

| | |
|---|---|
| 1. தர்மபுரி மாவட்டம், ஹோசூர் அரசு மருத்துவ மனையில் கூடுதலாக 57 படுக்கைகள் கட்டுதல் .. .. .. .. .. .. | 9.93 |
| 2. திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை அரசு மருத்துவ மனையில் அறுவை சிகிச்சை அரங்கு கட்டுதல் .. .. .. .. | 0.97 |
| 3. கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடம் அரசு மருத்துவ மனையில் மகப்பேறு பிரிவை விரிவாக்குதல் .. .. .. .. .. | 0.80 |
| 4. தர்மபுரி மாவட்டம், அரூரில் 24 படுக்கை வசதிக் கொண்ட மருத்துவ மனை கட்டுதல் .. | 10.63 |
| 5. திருச்செங்கோடு அரசு மருத்துவ மனையில் கூடுதல் பணியாளர்களுடன் 20 படுக்கைகள் அதிகரித்துத் தருதல் .. .. .. | 0.66 |
| 6. தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு அரசு மருத்துவ மனையில் கூடுதல் பணியாளர்களுடன் 20 படுக்கைகள் அதிகரித்துத் தருதல் | 1.55 |
| மொத்தம் .. | 24.54 |

### வட்டமல்லாத அரசு மருத்துவ மனைகள் மற்றும் மருந்தகங்கள்.

| | |
|---|---|
| 1. வீரகனூரில் 6 படுக்கை வசதிக் கொண்ட அரசு மருத்துவமனை கட்டுதல் .. .. .. | 0.86 |
| 2. கரடிக்குப்பத்தில் புதிய அரசு மருத்துவ மனை கட்டுதல் .. .. .. .. .. | 1.70 |
| 3. கன்னியாகுமரி மாவட்டம், சிங்களயார்புரியில் உள்ள அரசு மருந்தகத்தை 4 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக உயர் நிலைப் படுத்தல் .. .. .. .. .. | 0.05 |
| 4. திருவரங்கம் அரசு மருத்துவ மனையில் தேவையான கூடுதல் பணியாளர்களுடன் மேலும் 3 படுக்கைகள் அதிகப்படுத்தித் தருதல் .. | 0.70 |

| | |
|---|---|
| 5. தென்னாற்காடு மாவட்டம், கண்டமங்கலத்தில் தேவையான பணியாளர்களுடன் 7 படுக்கைகள் கொண்ட புதிய மருத்துமனையை திறத்தல் .. .. .. .. .. | 0.49 |
| 6. மூக்குப்பேரி, அனுக்கூர், அம்மா பட்டினம், அஞ்செட்டி ஆகிய இடங்களில் புதிய மருந்தகங்கள் திறத்தல் .. .. .. .. | 1.82 |
| 7. சேலம் மாவட்டம், வீரகனூரில் புதியதாக மருந்தகம் திறத்தல் .. .. .. | 0.97 |
| மலை வாழ்ப் பகுதிகளில் அரசு மருந்தகம் திறத்தல் | |
| 8. சேலம் மாவட்டம், அருணூத்து மலையில் அரசு மருந்தகம் திறத்தல் .. .. .. | 3.17 |
| 9. தென்னாற்காடு மாவட்டம் சிரப்பட்டுவில் அரசு மருந்தகம் திறத்தல் .. .. .. | 3.95 |
| 10. கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரம் அரசு மருந்தகத்தை கூடுதல் பணியாளர்களுடன் 16 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மாற்றித்தருதல் .. .. .. ... | 2.17 |
| மொத்தம் .. | 15.88 |

சிறப்புச் சிகிச்சைத் துறைகள் ஆரம்பித்தல்

| | |
|---|---|
| 1. பத்மநாபபுரம், கோபி செட்டிப்பாளையம் மற்றும் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனைகளில் குழந்தைகள் சிகிச்சைப்பிரிவு ஆரம்பித்தல் | 1.70 |
| 2. நிலக்கோட்டை, பல்லடம் மற்றும் தாராபுரம் அரசு மருத்துவ மனைகளில் பல் சிகிச்சைப் பிரிவு ஆரம்பித்தல் .. .. .. .. | 0.90 |
| 3. கரூர், பட்டுக்கோட்டை மற்றும் பெரியகுளம் அரசு மருத்துவ மனைகளில் கண் நோய் சிகிச்சைப் பிரிவு ஆரம்பித்தல் .. .. | 1.68 |
| 4. தென்காசி, திருப்பத்தூர் மற்றும் விருதுநகர் அரசு மருத்துவ மனைகளில் பால் வினை நோயியல் சிகிச்சைப் பிரிவு ஆரம்பித்தல் .. | 1.24 |
| மொத்தம் ... | 5.52 |



## இந்திய முறை மருத்துவம்.

1. கொள்கை.—இந்திய முறை மருத்துவம் பற்றிய நாடளாவிய கொள்கை வழி நின்று, (i) மிகக் குறைந்த செலவில் குறிப்பாக கிராம மக்களுக்கு மருத்துவ உதவியளிப்பதையும் (ii) அனைத்திந்திய அளவில் வரையறை செய்த பாடத் திட்டங்களின் வாயிலாக மருத்துவக் கல்வி புகட்டி வரும் பள்ளிக் கூடங்கள், பயிற்சி நிலையங்கள் வாயிலாக மருத்துவப் பயிற்சி பெற்ற மருத்துவர்களை அதிகரிக்கவும் (iii) ஆராய்ச்சி வளர்ச்சித் திட்டங்கள் வளர்ப்பதையும் (iv) இன்றியமையாத மருந்துச் சரக்குகளை உற்பத்தி செய்வதோடு, மருந்து மூலிகைகளை வளர்ப்பதற்கு ஏற்பாடு செய்வதையும் (v) தரத்திற் குறைந்த பயிற்சி நிலையங்களைக் கட்டுப்படுத்துவதையும் அரசு தன் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

2. சித்த மருத்துவத்தின் வளர்ச்சி.—தமிழ்நாட்டுக்கே உரிய சித்த முறை மருத்துவம், தொன்மை வாய்ந்த நமது மரபுக்கும் மற்றும் நாகரிகத்துக்கும் ஓர் அங்கமாகத் திகழ்வதால் எல்லா வகையிலும் அதனை மேம்படுத்த அரசு மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளது. பாளையங்கோட்டையிலுள்ள அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரியின் பெயர், '' அரசு சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை '' என்று மாற்றப்பட்டுள்ளது.

(அ) மருத்துவ உதவி.—தற்போது சித்த முறையில் பின் வரும் மருத்துவ நிலையங்கள் வாயிலாக மருத்துவ உதவியளிக்கப் படுகிறது:—

(i) பாளையங்கோட்டையிலுள்ள அரசின் சித்த மருத்துவக் கல்லூரியுடன் இணைந்துள்ள 208 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவ மனை.

(ii) சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனையிலுள்ள 51 படுக்கை வசதிகள் கொண்ட சித்த முறைப் பகுதி.

(iii) 15 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் இயங்கிவரும் சித்த மருத்துவப் பிரிவுகள்.

(iv) வட்டத் தலைமையிடத்திலும் பிற ஊர்களிலுமுள்ள 86 சித்த மருத்துவப் பிரிவுகள். மேலும் இரு சித்த பிரிவுகள் விரைவில் செயல்படத் தொடங்கும்.

(v) தொடக்கச் சுகாதார நிலையங்களில் 101 சித்த மருத்துவப் பிரிவுகள். எஞ்சியுள்ள 99 சித்த மருத்துவப் பிரிவுகள் விரைவிலேயே செயற்படத் தொடங்கும்.

(vi) 8 அரசு சித்த மருத்துவ மருந்தகங்கள்.

(vii) உள்ளாட்சி மன்றங்களால் நடத்தப்படும் 412 சித்த முறை மருந்தகங்கள்.

(viii) நெடுந்தொலைவிலுள்ள கிராமங்களில் 20 அரசு மருந்தகங்கள் விரைவிலேயே செயல்படத் தொடங்கும்.

ஆ. திட்டங்கள்—

(i) அனைத்துச் சித்த மருத்துவப் பிரிவுகளுக்கும் தடையேதுமின்றி மருந்துகள் கிடைக்க வேண்டும் என்பதற்காக 1982—83 ஆம் ஆண்டில், ரூ. 19.99 இலட்சம் செலவில் பொள்ளாச்சியில் வட்டார மருந்தாக்கியல் நிலையம் ஒன்றைத் தொடங்குவதெனவும் கருதப்பட்டுள்ளது.

(ii) பாளையங்கோட்டை, அரசு சித்த மருத்துவக் கல்லூரியிலுள்ள மருந்தாக்கியல் நிலையத்தில், மருந்து உற்பத்தியைக் கூடுதலாக்க, 1982–83 ஆம் ஆண்டில், ரூ. 9.99 இலட்சம் செலவில் இந்நிலையத்தை வலுப்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

(iii) பாளையங்கோட்டை, அரசு சித்த மருத்துவக் கல்லூரியில் 'x' ஊடுகதிர் வசதிகளை நிறுவுவதற்காக, 1982–83 ஆம் ஆண்டில், ரூ. 1.50 இலட்சம் செலவில் 'x' ஊடு கதிர் பிரிவுக் கட்டிடம் ஒன்றை நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

(iv) பாளையங்கோட்டை, அரசு சித்த மருத்துவக் கல்லூரியில், ரூ. 3.00 இலட்சம் செலவில், 24 படுக்கை வசதிகள், உடைய குழந்தைகள் பிரிவு ஒன்றைக் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

(v) மேலும், 10 தொடக்க சுகாதார நிலையங்களில் சித்த மருத்துவப் பிரிவுகளைத் தொடங்குதல்.

(இ) மருத்துவக் கல்வி.

பாளையங்கோட்டை, அரசு சித்த மருத்துவக் கல்லூரியில், பின்வரும் படிப்புத் துறைகளில் கல்வி அளிக்கப்படுகின்றது :—

| | |
|---|---|
| (i) 5½ ஆண்டுகால பி.எஸ். எம். அண்டு எஸ். சித்த. மருத்துவப் பட்டப்படிப்பு. | 75 இடங்கள் (திங்கள் ஒன்றுக்கு ரூ 75 என்ற வீதத்தில்) 53 மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை அளிக்கப்படுகிறது. |



| | |
|---|---|
| (ii) குணப்பபாடம். மருத்துவம் ஆகிய பிரிவுகளில் நடத்தப்படும் 3 ஆண்டுகால எம்.டி சித்த மருத்துவப் பட்ட மேற்படிப்பு. (மத்திய அரசு ஆதரவுத் திட்டம்.) | ஒவ்வொரு பிரிவுக்கும் 10 இடங்களாக மொத்தம் 20 இடங்கள். முந்தைய ஆண்டில் அனைத்து மாணவர்களுக்கும் அளிக்கப்பட்ட படிப்புதவித் தொகை ரூ. 325, 1981–82 ஆம் ஆண்டிலிருந்து பின்வருமாறு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.<br>(அ) 5 ஆண்டுப் பணிக்காலத்தை முடித்துள்ள முறையான பணியிலுள்ள மருத்துவர்களுக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 650.<br>(ஆ) 5 ஆண்டுப் பணிக்காலத்தை முடிக்காமலுள்ள முறையான பணியிலுள்ள மருத்துவர்களுக்கு, திங்கள் ஒன்றுக்கு ரூ. 500.<br>(இ) முறையான பணியிலிராத மாணவர்கள், தற்காலிக பணியாளர்கள் ஆகியோருக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 325. |
| (iii) 2 ஆண்டுகால சித்த மருத்துவ மருந்தாக்கியல் பட்டயப் படிப்பு. | 1981–82 ஆம் ஆண்டிலிருந்து 8 இடங்கள் 25 இடங்களாக உயர்த்தப்பட்டுள்ளன. (ஒவ்வொரு மாணவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 30 படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது.) |

மேலும், சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனையிலும், இரண்டாண்டு கால சித்த மருத்துவ மருந்தாக்கியல் பட்டயப்படிப்பு நடத்தப்படுகிறது. இப் படிப்பிற்குரிய மொத்த இடங்கள் 7. 1981–82 ஆம் ஆண்டிலிருந்து 25 இடங்களாக உயர்த்தப்பட்டுள்ளது. மாணவர் ஒவ்வொருவருக்கும் திங்கள் தோறும் ரூ. 30 படிப்புதவித் தொகை வழங்கப்படுகின்றது.

(iv) பாளையங்கோட்டை, அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில், 1982 ஆம் ஆண்டுக்கு மட்டும், ஓராண்டு சித்த மருத்துவப் புகுமுக வகுப்பினைத் தொடங்குவதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வகுப்பில் 25 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். ஓராண்டில் 9 திங்களுக்கு, ஒவ்வொரு மாணவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 75 வீதம் படிப்புதவித் தொகை வழங்கப்படும்.

சித்த ஆயுர்வேத, யுனானி மருத்துவ முறைக்கேற்றவாறு, 3 திங்கள் கால அளவுடைய செவிலியர் மறு பயிற்சி வகுப்பு, சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்தி முறை மருத்துவ மனையில் விரைவிலேயே தொடங்கப்படும். இவ்வகுப்பில சேரும் (செவிலியர்) பயிற்சி பெறுவோர் தங்குவதற்காக, சென்னை, அறிஞா அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனையில் ரூ. 3.80 இலட்சம் செலவில் கட்டிடம் கட்டப்படும்.

(ஈ) சித்த அறிவியல் வளர்ச்சிக் குழு.

சுவடிகள், அச்சிடப்படாத கையேட்டுப் பிரதிகள், அச்சிடப்பட்ட அரிய நூல்கள, ஆகியவற்றைத் திரட்டவும் வாங்குவதற்காகவும், பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரிக்குத் தேவைப்படும் சித்த பாடப்புத்தகங்கள் உட்பட, எல்லா சித்த மருத்துவ நூல்களை அச்சிடுவதற்காகவும் சித்த மருந்து தயாரிக்கும் நிறுவனக்குறியீடு பற்றிய தகவலைத் திரட்டவும், வேண்டிய ஆராய்ச்சி செய்த பின்னர் சித்த மருந்துப் பொருள்கள் குறித்த நூல்களை, தொடுக்கவும் அச்சிடப்பட்ட அரிய சித்த நூல்கள், சித்த மருத்துவக்கையேட்டு படிகள் ஆகியவற்றை அச்சிட்டு வெளியிடவும், 25 உறுப்பினர்கள் அடங்கிய சித்த அறிவியல் வளர்ச்சிக் குழுவை, அரசு மாற்றி அமைத்துள்ளது. திரு கி. ஆ. பெ. விசுவநாதம் தலைமையில் அமைந்துள்ள இக்குழு இதுவரையில் இரு கூட்டங்களை நடத்தியது. சென்னை, அறிஞா அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவ மனை வளாகத்தில், ரூ. 5.00 இலட்சம் செலவில், இக்குழுவிற்கென தனிக் கட்டிடம் கட்டுவதென்றும் கருதப்பட்டுள்ளது. 1982—83 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 2.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போது, மேல்நிலைப்பள்ளிகளில், சித்த மருத்துவம் பற்றிய பாடமொன்று விருப்பப்பாடமாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

உயர்நிலைப்பள்ளிகளில் 6—வது முதல் 10—வது வகுப்பு வரையிலான பாடத்திட்டத்தில் சித்த மருத்துவம் பற்றிய பாடங்களை அறிமுகப்படுத்தலாமெனக் கருதப்பட்டுள்ளது.

திரு. கந்தசாமிப்பிள்ளையவர்கள் எழுதிய '' சித்த மருத்துவ வரலாறு '' என்னும் ஆங்கில நூல் அச்சிடப்பட்டு, அதன் விலை பிரதி ஒன்று ரூபாய் 60 என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்நூல் விற்பனைக்கு விரைவில் வெளியிடப்படும்.

(உ) ஆராய்ச்சி.

சித்த அறிவியல் வளர்ச்சிக் குழு இதுகாறும் சித்த மருத்துவ இலக்கியங்கள் அடங்கிய 848 சுவடிகளையும், 699 அச்சிடப்பட்ட அரிய நூல்களையும், 102 கையேட்டுப் படிகளையும்,



முப்பு பற்றி 2 தொகுதிகள் கொண்ட தட்டச்சுப் படிகளையும் 308 தட்டச்சுப் படிகளையும் சேகரித்துள்ளது. புத்தகங்கள் மறு அச்சு செய்யப்பட்டுள்ளன. மேற்கூறியனவற்றை எடுத்தெழுதும் பணியும் விரைவாக நடைபெற்று வருகிறது. சித்த ஆயுர்வேத மத்திய ஆராய்ச்சிப் பிரிவு, பாளையங்கோட்டையில் நடத்தி வரும் சித்த இலக்கிய ஆராய்ச்சிப் பிரிவு, சித்த மருத்துவ இலக்கியங்கள் பற்றி ஆய்வு செய்து வருகின்றது. மாநில அளவில், ஆராய்ச்சிப் பணியை விரிவுபடுத்தும் பொருட்டு, சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனையிலுள்ள நோய்க் குறியியல் மற்றும் உயிர்வேதியியல் ஆய்வுக் கூடங்கள் X ஊடுகதிர் பிரிவுக் கட்டிடம், ஆகியவை விரைவிலேயே செயல்படத் தொடங்கும். சென்னையிலுள்ள சித்த மருத்துவ மத்திய நிலையம், புற்றுநோய் முதலியவற்றைக் குணமாக்கும் முறைகளில் பயனுள்ள ஆராய்ச்சிகளைச் செய்து வருகின்றது. மத்திய சித்த ஆயுர்வேத ஆராய்ச்சிக் குழுவின் ஆதரவிலுள்ள இரண்டு மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவுகள், சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவ மனையிலும், பாளையங்கோட்டை, அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியிலும் செயற்பட்டு வருகின்றன.

(ஊ) மருந்துத் தயாரிப்பு நிலையங்கள்.

சென்னை, அறிஞர் அண்ணா இந்திய முறை மருத்துவ மனையிலும், பாளையங்கோட்டை, அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியிலும் இயங்கிவரும் மருந்துத் தயாரிப்பு நிலையகளின் உற்பத்தியளவை உயர்த்தி, அரசு மருத்துவ நிலையங்களின் தேவைகளை நிறைவாககும் வகையில் இம்மருந்து தயாரிப்பு நிலையங்களில எந்திரங்களைப் பயன்படுத்தி மருந்து தயாரிப்புப்பணியை அரசு மேற்கொண்டு வருகிறது. சென்னை, அறிஞா அண்ணா அரசினா இந்திய முறை மருத்துவமனையிலுள்ள மருந்து தயாரிப்பு நிலையத்தினை விரிவுபடுத்துவதற்கு, மத்திய அரசு ஆதரவுத் திட்டத்தின் கீழ் இதுவரையில் ரூ. 3.00 இலட்சத்தை இந்திய அரசு அளித்துள்ளது.

(எ) மருந்தாக்கியல் ஆலோசனைககுழு

உறுப்பினர் ஐவரைக்கொண்ட ''மருந்தாககியல் ஆலோசனைக் குழு'' ஒன்றை, அரசு அண்மையில் அமைத்துள்ளது. இக்குழுவின் ஆய்வு வரம்புகள் பின்வரும் முறையில அமையும். —

(1) சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவ மனையிலுள்ள மருந்துத் தயாரிப்பு நிலையம், பாளையங்கோட்டையிலுள்ள அரசினர் சித்த மருத்துவ கல்லூரி மருந்து தயாரிப்பு நிலையத்தில் 6 திங்கள் கால அளவிற்குள் உற்பத்தித் திறனை உயர்த்த தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளல்.

(2) 1982–83 ஆம் ஆண்டில், பொள்ளாச்சியில் வட்டார மருந்துத் தயாரிப்பு நிலையத்தை அமைப்பது தொடர்பாக ஆலோசனை நல்குவது.

(3) இம்மருந்தகத்தால், பெறப்பட்ட கச்சா மருர்து மூலச் சரக்குகள், மூலிகைகள் ஆகியவற்றின் தரத்தை ஆய்வு செய்தல்.

ஏ. மூலிகைத் தோட்டங்கவ.

சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவ மனையில் ஒரு மூலிகைத் தோட்டம் உள்ளது. அந்த மூலிகைத் தோட்டத்திற்காக, ரூ. 50,000 செலவில், விசை யேற்றத்துடன் திறப்புக் கிணற்றை அமைப்பதற்காக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அங்கே உள்ள மூலிகைத் தோட்டம் **அல்லாமல்** பின்வரும் இடங்களிலும் மூலிகைத் தோட்டங்களை அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

1. கன்னியாகுமரி மாவட்டம், வீரப்புலி ஒதுக்குக் காடு.
2. சேலம் மாவட்டம் கொல்லி மலை.
3. திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருவரங்கம்.
4. மதுரை—காமராசர் பல்கலைக் கழகம் வளாகம்.

மேற்கூறிய திட்டங்கள் கூடிய விரைவிலேயே செயற்படுத்தப்படும்.

மூலிகைத் தோட்டங்களை ஏற்படுத்தவும் அவற்றை முறையாகப் பேணி வரவும் தனி அதிகாரி ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். மாறுபடுகின்ற தட்ப, வெப்ப நிலைகளிலும் வெவ்வேறு உயரங்களிலும் மற்ற நிலைகளிலும் மூலிகைச் செடிகள் வளரும் முறையினை ஆராயும் பொருட்டு, பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் மூலிகை ஆராய்ச்சி கூடமொன்றும் (பசுமை இல்லம்) கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன பசுமை இல்லம் தொடர்பாக, பணியாளர்களை அமர்த்தவும், இரசாயனப் பொருள்கள், சாதனங்கள் மேசை, நாற்காலி போன்ற அறை கலன்கள், கண்ணாடிப் பொருள்கள் இதழ்கள், புத்தகங்கள், ஆகியவற்றை வாங்குவது தொடர்பான தொடர் இனச் செலவு, தொடரா இனச் செலவு ஆகியவற்றுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

ஆயுர்வேதம் மற்றும் சித்த மத்திய ஆராய்ச்சி குழுவின் ஆதரவில், பாளையங்கோட்டை, அரசினர் சித்த மருத்துவக்கல்லூரியில் மூலிகை ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றும் செயற்பட்டு வருகிறது.

(ஐ) மூலிகைச் செடி மருத்துவ தன்னுரிமைக்கழகம்.—மருத்துவச் செடி, மூலிகை மருந்துகள் ஆகியவற்றுக்கு தன்னுரிமை கழகம் தொடங்க, தொழில்நுட்ப-பொருளாதார சாத்தியக் கூறு தொடர்பான அறிக்கையைத் தயாரிப்பதற்காக, அரசு ஒரு குழுவை



அமைத்துள்ளது. இக்கழகத்தை அமைப்பதற்கு, தொழில்நுட்ப சாத்தியக் கூறும், பொருளாதார வசதியும் சாதகமாக உள்ளன என்று, இக்குழு தெரிவித்துப் பரிந்துரையும் செய்துள்ளது. இவ்வறிக்கை, அரசால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

(ஒ) அனைத்திந்திய சித்த மருத்துவ மாநாடு.—திருச்சிராப்பள்ளி அல்லது சேலத்தில் சித்த அறிவியல் வளர்ச்சிக் குழு நடத்தும் அனைத்திந்திய சித்த மருத்துவ மாநாட்டைக் கூட்டுவதற்குச் செலவாக ரூபாய் 10,000-ஐ ஏற்றுக்கொள்வதற்கு அரசு இசைவு அளித்துள்ளது.

(ஓ) மரபு வழி மருத்துவர்களை பதிவு செய்தல்,—இவ்வாண்டு முதல், இந்திய முறை மருத்துவ மத்தியக் கழகத்தில் பி–II வகுப்பில் பரம்பரை மருத்துவர்கள், மரபு வழியில் பயிற்சிபெற்றவர்கள் ஆகியோர் பதிவு செய்து கொள்ளவியலும் வகையில் அவர்களுக்கு எழுத்துத் தேர்வு, வாய்மொழித் தேர்வு ஆகியவற்றைத் தொடர்ந்து நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

(ஔ) மரபு வழி மருத்துவர்களின் திறனைப் பயன்படுத்தல்.—பாளையங்கோட்டை, அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியின் ஆசிரியப் பணியாளர்களுக்கும், மாணவர்களுக்கும் குறித்த காலத்திற்கொருமுறை கருத்தரங்குகளையும், விரிவுரைகளையும் நடத்தவேண்டுமென்றும், அதற்காகத் திறன் வாய்ந்த புகழ்பெற்ற மரபுவழி சித்த மருத்துவர்களை அழைக்க வேண்டுமென்றும், அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இம்மருத்துவர்கள் மந்தனமாகத் தங்களகத்தே வைத்து வரும் தனித் திறமை ஆற்றல்களை (நாடி கட்டு, கழங்கு, முப்பு போன்றவை) மாணவர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்பதும் இதன் நோக்கமாகும். வருகை தருகிற மருத்துவர்க்கு பயணப்படி, நாட்படி ஆகியவற்றுடன் விரிவுரை/ கருத்தரங்கு ஒன்றுக்கு ரூபாய் 50 வழங்கப்படும்.

3. யுனானி மருத்துவ முறை

(அ) மருத்துவ உதவி.

சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவ மனையில் 49 படுக்கை வசதிகள் உடைய யுனானி பகுதியிலும் உள்ளாட்சி மன்றங்கள் நடத்தும் 13 மருந்தகங்களிலும் யுனானி முறையில் மருத்துவ உதவி அளிக்கப்படுகிறது.

(ஆ) மருத்துவக் கல்வி.

(1) 7½ ஆண்டு யுனானி மருத்துவப்பட்டப் படிப்பினை அரசு தொடங்கியுள்ளது. இப்படிப்பிற்கு ஆண்டுதோறும் 15 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். இதில் 10 மாணவர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு, ஒருவருக்கு ரூபாய் 75 வீதம் படிப்புதவித்

தொகை வழங்கப்படுகிறது. முதல் இரண்டு ஆண்டுகளில் சேர்க்கப்பட்டுள்ள மாணவர்கள் புகுமுக யுனானி பட்டய வகுப்புப் பாடங்களை படித்து வருகின்றனர். யுனானி மருத்துவக்கல்லூரிக்குத் தேவையான கட்டிடங்கள் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(2) சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனையில் இரண்டாண்டுக் கால யுனானி மருந்தாக்கியல் பட்டயப்படிப்பில் ஆண்டுதோறும் 5 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். மாணவர் ஒருவருக்கு திங்கள்தோறும் ரூபாய் 30 படிப் புதவித் தொகையாக அளிக்கப்படுகிறது.

(இ) ஆராய்ச்சி.

யுனானி ஆராய்ச்சி மத்திய கழகம், சென்னையில் ஓர் யுனானி மருத்துவ வட்டார ஆராய்ச்சிப் பிரிவினை இராயபுரத்தில் தொடங்கியுள்ளது. யுனானி ஆராய்ச்சி மத்திய கழகம் நடத்தும் மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றும் அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனையில் இயங்கி வருகிறது.

(ஈ) மருந்துத் தயாரிப்பு நிலையம்.

சென்னை அறிஞர் அண்ணா மருத்துவ மனையுடன் இணைந்துள்ள மருந்துத் தயாரிப்பு நிலையம், அம்மருத்துவ மனைக்குத் தேவையான யுனானி மருந்துகளையும் தயாரிப்பதில் ஈடுபட்டு உள்ளது.

(உ) யுனானி முறை மேம்பாட்டுக்குழு.

தமிழ்நாட்டில் தற்போதுள்ள யுனானி மருத்துவ வசதிகளை முழுமையாகப் பயன்படுத்தவும் இவ்வசதிகளை மேலும் பெருக்குவதற்கும் உரிய வழிமுறைகளைக் கண்டறிந்து அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்கு வல்லுநர் குழுவை அரசு அமைத்துள்ளது. இக்குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

4. ஆயுர்வேத மருத்துவமுறை.

(அ) மருத்துவ உதவி.

ஆயுர்வேத மருத்துவ முறைப்படி, பின்வருமிடங்களில்— மருத்துவ வசதிகள் கிடைக்கப்பெறுகின்றன :

(i) சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனையிலுள்ள 50 படுக்கை வசதிகள் உடைய ஆயுர்வேத மருத்துவப் பகுதி.

(ii) 5 அரசினர் மருந்தகங்கள் மற்றும் உள்ளாட்சி மன்றங்கள் நடத்தும் 93 மருந்தகங்கள்,



(ஆ) மருத்துவக் கல்வி—

(i) கோயம்புத்தூர், சென்னை ஆயுர்வேதத் தனியார் கல்லூரிகளில், ஆயுர்வேதப் பட்டப்படிப்பு கற்பிக்கப்பட்டு வருகிறது. இவ்விரு கல்லூரிகளும் சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்துள்ளன.

(ii) சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனையில் இரண்டாண்டு ஆயுர்வேத மருந்தாக்கியல் பட்டப்படிப்பில் ஆண்டுதோறும் 5 மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். மாணவர் ஒருவருக்கு திங்கள் தோறும் ரூபாய் 30 படிப் புதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

(இ) ஆராய்ச்சி—

டில்லியிலுள்ள ஆயுர்வேத மற்றும் சித்த ஆராய்ச்சி மத்தியக் கழகம், கேப்டன் சீனிவாசமூர்த்தி ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையத்தினை சென்னையில் ஏற்படுத்தி, மலேரியா போன்ற நோய்கள் பற்றிய பயனுள்ள ஆராய்ச்சிகளைச் செய்து வருகின்றது. சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவ மனையில் மத்திய அரசு ஆதரவுத் திட்டத்தின் கீழ் ஆயுர்வேத மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றும் இயங்கி வருகிறது.

(ஈ) மருந்தாக்கியல் நிலையம்—

சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவ மனையுடன் இணைந்துள்ள மருந்தாக்கியல் நிலையத்தில் அம் மருத்துவ மனைக்குத் தேவையான ஆயுர்வேத மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன.

(உ) ஆயுர்வேத முறை மேம்பாட்டுக்குழு—

தமிழ்நாட்டில் தற்போதுள்ள ஆயுர்வேத மருத்துவ வசதிகளை முழுமையாகப் பயன்படுத்தவும், இவ்வசதிகளை பெருக்கவும் தேவையான வழிவகைகளை கண்டறிந்து அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்கு, அரசு வல்லுநர் குழுவை அமைத்துள்ளது. இக்குழுவின் அறிக்கை பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

5. இயற்கை நல மருத்துவம்—

இயற்கை நல மருத்துவத்தினை ஒரு சிகிச்சை முறையாக அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. ஐதராபாத்தில் இயற்கை நல மருத்துவத்தில் $4\frac{1}{2}$ ஆண்டுப் பட்டப்படிப்புப் பயிலும் பொருட்டு ஆண்டுதோறும் தமிழகத்திலிருந்து நால்வர் அனுப்பப்படுகின்றனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் திங்கள் தோறும் ரூபாய் 250 வீதம் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. 20 படுக்கை வசதிகள் உடைய இயற்கை நல மருத்துவ மனையை தொடங்குவதற்கான செயற்குறிப்பை அரசு ஆய்ந்து வருகிறது.

6. யோகப்பயிற்சி மருத்துவ முறை—

அரசு நியமித்த குழு அளித்த யோகப்பயிற்சி மருத்துவம் பற்றிய அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. யோகாசனப் பயிற்சியை ஊக்குவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளைப் பற்றியும் அரசு ஆய்ந்து வருகிறது. இம்மாநிலத்தில் யோகாசனப் பயிற்சி முறையை ஊக்குவிக்கும் பொருட்டு, பள்ளிகளில் யோகாசன வகுப்புகளை இணைப்பதற்கான நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகிறது. யோகாசனப் பயிற்சியை நடை முறைப்படுத்துவதற்காக மருத்துவப்படிப்பைச் செயற்படுத்தவும் தெரிந்தெடுக்கப்பட்ட சில நோய்களுக்கு யோகாசனப் பயிற்சி யுடன் கூடிய மருத்துவ முறையை அளிக்கவும், மருத்துவமனையில் படுக்கை வசதிகளை ஒதுக்கவும் செயற்குறிப்புகள் சில பரிசீல னையில் உள்ளன. மேலும், இம்மாநிலத்தில் தெரிந்தெடுக்கப் பட்ட யோகாசன் நிலையங்களுக்கு நிதி உதவி ஒப்புதல் அளிப பதற்கான செயற்குறிப்புகளும் பரிசீலனையில் உள்ளன.

7. வரவு-செலவுத் திட்டம்—1982-83-ஆம் ஆண்டில், இந்திய முறை மருத்துவத்திற்கு ஒதுக்கீடு ரூபாய் 235·72 இலட்சம். 1981-82ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் ரூபாய் 165·87 இலட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது. 1980-81-ஆம் ஆண்டில் இந்திய முறை மருத்துவத்திற்கு ஏற்பட்ட மொத்தச் செலவு ரூபாய் 123·35 இலட்சமாகும்.

1982-83-ஆம் ஆண்டிற்குரிய புதிய திட்டங்களின் பட்டியல் அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை.

1982-83ஆம் ஆண்டில் இந்திய முறை மருத்துவத் துறை தொடர்பாக ஏற்கப்பட்டுள்ள புதிய திட்டங்கள்.

| தொடர் எண். | திட்டத்தின் பெயர். | 1982-83ஆம் ஆண்டில் செலவு (ரூபாய் ஆயிரங் களில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியிலுள்ள மருந்துத் தயாரிப்பு நிலையத்தை வலுப்படுத்துதல் | 999 |
| 2 | பொள்ளாச்சியில் வட்டாரமருந்து தயாரிப்பு நிலையம் தொடங்குதல் | 1999 |
| 3 | 10 தொடக்கச் சுகாதார நிலையங்களில் சித்த மருத்துவப் பிரிவுகளைத் தொடங்குதல் .. .. | 303 |
| 4 | நாகப்பட்டிணம் ஈரோடு அரசினர் தலைமையிட மருத்துவ மனையில் 25 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவப் பிரிவுகளுக்கு பணியாளர்களை நியமனம் செய்தலும், தொடர் இன, தொடரா இனச் செலவு ஆகியவற்றுக்கு நிதி ஒதுக்கம் செய்தலும் .. .. | 170 |
| 5 | பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில், 24 படுக்கை வசதிகள் உடைய குழந்தைகள் பிரிவு ஒன்றைக் கட்டுதல் .. .. | 300 |
| 6 | பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் ' X ' ஊடுகதிர்ப் பிரிவைக் கட்டுதல். .. | 150 |
| 7 | சித்த அறிவியல் வளர்ச்சிக் கழகத்திற்கு கட்டிடங்கள் கட்டுதல் .. | 200 |
| 8 | சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனையிலும், பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியிலும் 2 (வணிக) கணக்காளர்களை நியமனம் செய்தல் .. | 16 |
| | | 4137 |



தமிழ்நாட்டில் அரசு மறுவாழ்வு இல்லங்கள்.

மறுவாழ்வு இல்லங்களின் முக்கிய நோக்கம்:

இவ்வில்லங்கள் நிறுவப்பட்டதன் முக்கிய நோக்கம் தொழு நோயால அவதியுறும் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளித்து, அவர்கள் இல்லங்களைவிட்டு வெளியேறும்போது, சுயமாகவும் சுதந்திரமாகவும் பிச்சையெடுக்காமல் வாழ வழி செய்வதேயாகும். தமிழ்நாடு அரசு கீழ்க்காணும் 10 இடங்களில் மறுவாழ்வு இலலங்கள் அமைத்துள்ளது. அவ்வில்லங்கள் கீழ்க் குறிப்பிட் டுள்ள நாட்களில் ஆரம்பிக்கப்பட்டன :—

| மறுவாழ்வு இல்லம் உள்ள இடம். | திறக்கப் பட்ட நாள் |
|---|---|
| 1. பரனூர், செங்கற்பட்டு மாவட்டம் .. | 2–10–1971 |
| 2. உளுந்தூர்பேட்டை, தென் ஆற்காடு மாவட்டம் | 22–1–1972 |
| 3. பர்கூர், தருமபுரி மாவட்டம் .. .. | 18–6–1972 |

4. புதுக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம். 7–1–1973

5. விண்ணப்பள்ளி, பெரியார் மாவட்டம் .. 15– 2–1973

6. மனையேரிப்பட்டி, தஞ்சாவூர் மாவட்டம் .. 17–2–1973

7. யா-புதுப்பட்டி, மதுரை மாவட்டம் .. 22– 4–1973

8. மல்லவாடி, வடாற்காடு மாவட்டம் .. 4–7–1973

9. செல்லியம்பட்டி, தருமபுரி மாவட்டம் .. 19–10–1973

10. தேவியாகுறிச்சி, சேலம் மாவட்டம் .. 23–10–1973

அனுமதி மற்றும் நீக்கம் :

ஓவ்வொரு இல்லமும், பெரியவர்கள் 400 பேரும், 25 சிறுவர்களும் தங்குவதற்கு வசதியாக கட்டப்பட்டுள்ளது. தொழுநோய் பிச்சைக்காரர்கள் அவர்கள் தொழுநோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று தெரிந்த பின்னர், மற்றும் காவல் துறையினரால் பிச்சை எடுத்ததற்காக தண்டனை வழங்கப்பட்டவர்களும் இவ்வில்லங்களில் அனுமதிக்கப்படுகிறார்கள். மணமானவர்களில் ஒருவர் தொழுநோயால் பாதிக்கப்பட்டு பிச்சையெடுப்பவராய் இருந்தால், மற்றவரையும் இவ்வில்லத்தில் சேர்க்க அனுமதி உள்ளது.

உள்ளிருப்போர்கள் தொழுநோய் இல்லாதவர்கள் என்று சான்று அளிக்கப்பட்டால், அவர்கள் சொந்த முயற்சியில் வாழ்க்கை நடத்த வெளியில் அனுப்பப்படுகிறார்கள்., திரும்பத் திரும்ப ஒழுங்கற்ற முறையில் நடந்து கொள்வோரையும், இல்லம் சீரிய முறையில் நடைபெற தடையாய் இருக்கும் உள்ளிருப்போர்களையும் வெளியே அனுப்பிவிடுவார்கள்.

உள்ளிருப்போருக்கு அளிக்கப்படும் வசதிகள்:—

இல்லத்திலுள்ள உள்ளிருப்போருக்கு இலவசமாக தங்க வசதியும், உணவு, உடை, மருத்துவ வசதி மற்றும் பல தொழில்களில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. விளையாடுவதற்கான வசதியும், திரைப்படம் காண்பிக்க வசதியும், நூலகம் போன்ற வசதிகளும் உள்ளிருப்போருக்கு செய்யப்பட்டுள்ளது.

உணவு :—

வயதுவந்த ஓவ்வொருவருக்கும் அன்றாடம் ரூபாய் 2-30-ம், சிறுவருக்கு ரூபாய் 1·15 உணவிற்காக வழங்கப்படுகிறது. இவ்வுணவில் காலை சிற்றுண்டியும், தேநீரும், மதிய உணவு, மாலைத் தேநீர் மற்றும் இரவு உணவும் சேர்க்கப்பட்டுள்ளன.



அனுதினமும் மோர் வழங்கப்படுகிறது. வாரம் ஒரு முறை இறைச்சியும் வழங்கப்படுகிறது. காச நோயாளிக்கு சிறப்புணவு வழங்கப்படுகிறது. சுதந்திர தினத்தன்றும், காந்தியடிகள் பிறந்த நாள் அன்றும், மற்றும் முக்கியமான குறிப்பிடப்பட்ட நாட்களிலும் ஓவ்வொரு உள்ளிருப்போருக்கும், ரூபாய் ஒன்றுக்கு சிறப்புணவு வழங்கப்படுகிறது.

இருப்பிடம் :

உளுந்தூர்பேட்டை மற்றும் பர்கூர் இல்லங்களைத் தவிர, மற்ற எல்லா இல்லங்களும் குடும்பத்தினர்கள் தங்கக்கூடிய அறைகள் கொண்ட 4 தொகுதிகளாக (பிளாக்) கீழ்த் தளத்தில் கட்டப்பட்டுள்ளன. மேலும், முதல் மாடியில் தனிப்பட்டவர்கள் தங்குவதற்கு துயில் கூடங்கள் (Dormitories) கட்டப்பட்டுள்ளன. உளுந்தூர்பேட்டை, பர்கூர் இல்லங்கள் ஒற்றை கட்டிடமாகவும் நிரந்தர கொட்டகையாகவும் கட்டப்பட்டுள்ளது.

உடை :

ஓவ்வொரு ஆண்டும் பொங்கல் நாளன்றும் சுதந்திர தினத்தன்றும் உள்ளிருப்போருக்கு இரண்டு ஜதை துணிகள் வழங்கப்படுகின்றன.

உள்ளிருப்போர் குழந்தைகளுக்கு வழங்கப்படும் வசதிகள் :

உள்ளிருப்போரின் பிணியற்ற குழந்தைகள் அருகிலுள்ள பள்ளிகளில் படிக்க முதன்மை செலவினங்களுக்கான உடை, பெட்டி, புத்தகங்கள், கரும்பலகைகள் முதலானவைகள் வாங்க ஓவ்வொரு குழந்தைக்கும் ரூ. 75 அரசு வழங்குகிறது. அரசு மறுவாழ்வு இல்லங்களிலிருக்கும் பள்ளி செல்லும் சிறுவர்களுக்கு அரசு தற்போது படிப்பிற்காகச் செலவு செய்ய கீழ்க்கண்டவாறு அனுமதித்துள்ளது :—

1. ரூ. 20 (ரூபாய் இருபது மட்டும்) 2-ம் வகுப்பு முதல் 7-ஆம் வகுப்பு வரை (ரூபாய் 120 ஆறு வருடங்களுக்கு).
2. ரூ. 30 (ரூபாய் முப்பது மட்டும்) 8-ம் வகுப்பு முதல் 9-ம் வகுப்பு வரை (ரூபாய் 60 இரண்டு வருடங்களுக்கு).
3. ரூ. 50 (ரூபாய் ஐம்பது மட்டும்) 10-ம் வகுப்புக்கு.
4. ரூ. 75 (ரூபாய் எழுபத்து ஐந்து மட்டும்) 11-ம் வகுப்பு. 12-ம் வகுப்புகளுக்கு (ரூபாய் 150 இரண்டு வருடங்களுக்கு).

255 சிறார்கள் இல்லங்களுக்கு அருகிலுள்ள பள்ளிகளில் படித்து வருகிறார்கள்.

மருத்துவ வசதிகள் :

உள்ளிருப்போர்களுக்கு மருத்துவ சிகிச்சை இலவசமாக அளிக்கப்படுகிறது. இரு மருத்துவ அதிகாரிகள், இரு செவிலியர்கள், ஒரு ஆய்வுக்கூட தொழில் நுட்பப் பணியாளர், ஒரு

மருந்தாளுநர், ஒரு உடற்கூறு பயிற்சியாளர், இரு தாய்மை செவிலியர், ஒரு உதவி ஆண் செவிலியர் முதலானவர்கள் ஒவ்வொரு இல்லத்திலும் உள்ளிருப்போரின் மருத்துவத் தேவைகளை கவனிக்க உளளனர். உள்ளிருப்போருக்கு தொழு நோய்க்குமட்டும் சிகிச்சையளிப்பதோடு மட்டுமின்றி மற்ற நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. நோயாளிகள் வார்டுகளில் அனுமதிக்கப்பட்டு சிறப்பு உணவுகள், மருந்துகள் முதலானவைகள் அளிக்கப்படுகின்றன. எல்லாவித வசதிகள் கொண்ட அறுவை சிகிச்சை செய்யுமிடங்கள், பர்கூர், உளுந்தூர் பேட்டை இல்லங்களைத் தவிர மற்ற இல்லங்களில் உள்ளன. கைவிரல் முடமானவர்கள், கால் விளங்காதவர்கள் மற்றும் உடற்கூறு முதலானவைகள் சரியில்லாத நிலையிலுள்ளவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. இல்லத்திலுள்ளவர்களுக்கு தனிச் சிறப்பு வாய்ந்த காலணிகள், செயற்கை முறை காலுறைகள் முதலானவைகள் வாங்க ஒவ்வொரு ஆண்டும் ரூபாய் 300 செலவிட அரசு அனுமதி வழங்கியுள்ளது.

உடற்பயிற்சியும் தொழில் நுட்பமும் :

ஒவ்வொரு இல்லத்திலும் ஓர் உடற்கூறு பயிற்சியாளர் உள்ளார். உள்ளிருப்போரின் ஊனமுற்ற உறுப்புகள், மின் தூண்டு கருவி (Electric Stimulator) மெழுகு தொட்டி (wax beath) ஆகியவற்றின் துணையால் ஊனமுற்ற உறுப்புகளுக்கு பயிற்சிகள் அளிக்கிறார். உடற்கூறு பயிற்சி தேவையுள்ள உள்ளிருப்போர் அனைவருக்கும் இவர் பயிற்சி அளிக்கிறார். புண்ணுள்ள மற்றும் வளர்ச்சி குன்றிய நோயாளிகளை, உடற்கூறு பயிற்சிமாளரும் மற்றும் மருத்துவ அதிகாரிகளும் நிர்ணயம் செய்து அறுவை சிகிச்சைக்கான நபர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். தகுந்த நுண்ணிய துளையுடன் கூடிய ரப்பரினால் ஆன காலணிகள் நோயாளிகளுக்கு வழங்கப்படுகின்றன.

மூன்று தொழில் ஈடுபாட்டு பயிற்சியாளர்கள் முறையே பரனூர், புதுக்கோட்டை, தேவியாக்குறிச்சி ஆகிய இல்லங்களில் நியமிக்க அரசு உத்திரவிட்டுள்ளது. தலைமை அலுவலகத்தில் உள்ள தலைமை தொழில் ஈடுபாட்டு பயிற்சியாளர் மற்ற இல்லங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் பட்டியலை ஆய்வு செய்வதிலும், உடற்கூறு பயிற்சியாளர்கள், சோதனைச்சாலை தொழில் நுட்பப் பணியாளர் மற்றும் சமூக பணியாளர்கள், குறிப்புரைகளையும் கவனிப்பதிலும் ஈடுபட்டுள்ளார். இவர் மறுவாழ்வு இல்லங்களை பார்வையிடும் போது அங்குள்ள உற்பத்திப் பிரிவுகள் சரியாக இயங்குகின்றனவா என்பதையும் உடற்கூறு பயிற்சியாளர்கள் நடவடிக்கைகள மற்றும் ஆபத்தான தொழில் நுட்ப விஷயங்களை நோயாளிகளுக்கு விளக்குவதுடன் நோயாளிகளின் சக்திக்கேற்ப, தொழில்களை பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கின்றார். மயக்க மருந்து கொடுப்பவருக்காக சிறு பொறியமைப்பு மற்றும் முறிந்த எலும்பு கட்ட உதவும் வரிச்சல்கள், நுண்ணிய துளையுடன் கூடிய ரப்பர்



பாதுகாப்புள்ள கருவிகளையும், பாதுகாப்புச் சாதனங்களையும் தற்காப்பு சாதனங்களையும் கொடுக்கும்படியும் மறுவாழ்வு திட்டங்களுக்கு நோயாளிகளை தயார் செய்யும்படியும் உடற் சிகிச்சைத் தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு அவர் ஆலோசனை வழங்குகிறார்.

தொழுநோய் நுண் கிருமியும், நுண் கிருமியல்லாத தொழு நோய் மற்றும் தொத்து வியாதியல்லாத உள்ளிருப்போரின் (10 இல்லங்களில் உள்ளவர்களின்) பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது :—

| தொழுநோய் நுண் கிருமி இருக்கும் வகை. | | | தொழு நோய் நுண் கிருமி இல்லாத வகை. | | | தொழுநோய் தொத்து நோய் இல்லாத வகை. | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஆண் | பெண் | சிறார் | ஆண் | பெண் | சிறார் | ஆண் | பெண் | சிறார் |
| 455 | 154 | 2 | 730 | 272 | 1 | 1,056 | 372 | 68 |

10 இல்லங்களில் அறுவை சிகிச்சை செய்யப்பட்ட உள்ளிருப்போரின் விவரம் :

| | |
|---|---|
| கையும் நரம்புகளும் .. .. .. | 142 |
| காலும் நரம்புகளும் .. .. .. | 65 |
| மார்பு வீக்கமுள்ளவர்கள் .. .. | 16 |
| முகம் .. .. .. .. | 47 |
| இதர வகைகள் .. .. .. .. | 422 |
| மொத்தம் | 692 |

விளையாட்டும் பொழுது போக்கும் :

ஒவ்வொரு இல்லத்திலும் விளையாட்டுப் பொருட்கள் வாங்குவதற்கு ஒவ்வொரு ஆண்டுக்கும் (ரூபாய் 200) அனுமதி வழங்கியுள்ளது. ஒவ்வொரு இல்லத்திலும் உள்ளிருப்போர்கள் மகிழ்ச்சியுடன் இருக்க இசைக் கருவிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

இதர வசதிகள் :

ஒவ்வொரு உள்ளிருப்போருக்கும் எண்ணெய், சோப்பு, பற்பொடி, பாய், செருப்பு முதலானவைகள் அளிக்கப்படுகின்றன. கண் நோயால் அவதியுறும் உள்ளிருப்போருக்கு சிகிச்சையும் மூக்குக் கண்ணாடி மற்றும் கறுப்பு மூக்குக் கண்ணாடிகளும், அளிக்கப்படுகின்றன. உள்ளிருப்போருக்காக இரு தினசரி செய்தி தாள்கள் வாங்கப்படுகின்றன. உள்ளிருப்போரின் இலக்கிய ரசனையையும், பொது அறிவையும் விருத்தி செய்ய இலக்கிய புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.

[1982 மார்ச் 11

உடற்கூறுள்ள உள்ளிருப்போருக்கு கீழ்க்கண்ட துறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது :—

1. துணி நெய்தல் (கைத்தறி, விசைத் தறி).

2. பாய் பின்னுதல்.

3. செருப்பு செய்தல் மற்றும் பழுது பார்த்தல்..

4. தச்சு வேலை.

5. விவசாயம்.

6. தையல்.

7. கைராட்டை.

8. காகித உறை செய்தல் (புதுக்கோட்டை இல்லம் மட்டும்).

9. பட்டுப்புழு வளர்ப்பு.

காகித உறை தொழில் பிரிவு :

காகித உறை தயார் செய்வதற்கான தொழிற் பிரிவு **புதுக்கோட்டை** மறுவாழ்வு இல்லத்தில் ரூ 24,500 செலவில் நிறு**வப் பட்டுள்ளது**. காகித உறை தயாரிக்கும் தொழிற் பிரிவு **1978 ஆம்** ஆண்டு பிப்ரவரித் திங்கள் 1 ஆம் தேதி முதல் இயங்கி வருகிறது. இவ்வில்லத்தில் உள்ள உள்ளிருப்போர்கள் 1980 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் 1981 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் முடிய வேலை செய்த வகையில் கூலியாக ரூபாய் 6,134 சம்பாதித்துள்ளனர். அவர்கள், 19,17,000 காகித உறைகளை மேல் குறிப்பிட்ட காலத்தில் செய்துள்ளார்கள்.

நவீன தொழிற்சாலையுடன் அமைந்த தொழிற்கூடம் :

பரனூர் மறுவாழ்வு இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள நவீன தொழிற்சாலையுடன் அமைந்த தொழிற் கூடத்தில், காட்பாடியிலுள்ள ஸ்வீடன் நாட்டு செஞ்சிலுவை சங்க மறுவாழ்வு தொழிற்சாலையினரால் பயிற்சியளிக்கப்பட்ட 30 பேர்கள், திருச்சி காட்பாடி ஆகிய இடங்களிலும், மற்றவர்கள் தனியார் நிறுவனங்களிலும் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். மேலும் உள்ளிருப்போருக்கு ( Lathe Machine ) உபயோகிப்பதிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. முக்கியமாக, இத் தொழிற்சாலைகளில் கட்டுப்பாடான ஒழுங்கு முறையில், உள்ளிருப்போருக்கு அளிக்கப்படும் பயிற்சிகள் அவர்களின் சுதந்திரம் மற்றும் தன்னம்பிக்கையை வளர்க்க உதவுகின்றன.

தற்போது 135 தறிகள் எல்லா இல்லத்திலும் நடைமுறையில் உள்ளன. 77 பாய் தறிகள் உள்ளன. இவைகளில் தயாரிக்கப்படும் பொருட்கள் உள்ளிருப்போரின் உபயோகம் போக



1982 மார்ச் 11]

மற்றவைகள் அருகிலுள்ள மாவட்ட மருத்துவ மனை மற்றும் அரசு மருத்துவ மனைகளுக்கு விற்கப்படுகின்றன. கிராமப்புற நூற்பு கேந்திரம், யா. புதுப்பட்டி மற்றும் உளுந்தூர்பேட்டை இல்லங்களில் நிறுவப்பட்டுள்ளது. இவைகளில் பிரதி மாதம் 9,000 முதல் 10,000 சிட்டங்கள் தயாரிக்கப்படுகின்ற. 34 தையல் மிஷின்கள் இவ்வில்லங்களில் உள்ளன. உடைகள் தையல், கலையில் தேர்ச்சி பெற்ற உள்ளிரு போரால் தைக்கப்பட்டு அவர்களுக்கு அளிக்கப்படுகின்றன. ரப்பர் செருப்புகள் இல்லத்தில் தைக்கப்படுகின்றன. இல்லத்திலுள்ள உள்ளிருப்போரின் தொகை அட்டவணை 1-ல் உள்ளது. உற்பத்தித் திறன் அட்டவணை 2 (அ), 2 (இ) மற்றும் 2(உ)-ல் உள்ளது. உள்ளிருப்போர் வேலைக்கு அமர்த்தப்பட்ட எண்ணிக்கை அட்டவணை 3-ல் உள்ளது. அலுவலர்களைப் பற்றிய விவரங்கள் அட்டவணை 4-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 1.

பத்து மறுவாழ்வு இல்லங்களில் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் வரை தங்கியுள்ள உள்ளிருப்போரின் விவரம்.

| | ஆண். | பெண். | சிறார். | மொத்தம். |
|---|---|---|---|---|
| 1. உளுந்தூர்பேட்டை | 211 | 104 | 37 | 352 |
| 2. தேவியாகுறிச்சி .. | 224 | 96 | 29 | 349 |
| 3. புதுக்கோட்டை | 250 | 87 | 20 | 357 |
| 4. மல்லவாடி .. | 196 | 82 | 12 | 290 |
| 5. மனையேரிப்பட்டி | 307 | 98 | 15 | 420 |
| 6. விண்ணப்பள்ளி .. | 134 | 74 | 23 | 231 |
| 7. யா. புதுப்பட்டி | 270 | 111 | 42 | 423 |
| 8. பரனூர் .. | 260 | 136 | 79 | 475 |
| 9. பர்கூர் .. | 233 | 115 | 33 | 381 |
| 10. செல்லியம்பட்டி.. | 159 | 77 | 12 | 248 |
| மொத்தம். | 2,244 | 980 | 302 | 3,526 |

அட்டவணை 2. (அ)

அக்டோபர் 1980 முதல்—செப்டம்பர் 1981 வரை இல்லங்களில் உள்ள உற்பத்தித்திறன்

| வரிசை எண். (1) | அரசு மறுவாழ்வு இல்லத்தின் பெயர். (2) | விவசாயம் மற்றும் தோட்டம் காய்கறி வகைகள், (கிலோ). (3) | எலுமிச்சை (எண்ணிக்கை.) (4) | தேங்காய் (எண்ணிக்கை. (5) | நெல் (கிலோ). (6) | மரவள்ளி (கிலோ). (7) | தானியங்கள் (கிலோ). (8) | கேழ்வரகு (கிலோ). (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பரனூர் .. .. | 5,333 | .. | .. | .. | .. | .. | .. |
| 2 | உளுந்தூர்பேட்டை .. | 2,014 | 1,280 | .. | .. | .. | .. | .. |
| 3 | பர்கூர் .. .. | 257 | .. | .. | .. | .. | .. | .. |
| 4 | புதுக்கோட்டை .. | 3,787 | .. | 815 | .. | .. | .. | .. |
| 5 | மனையேரிப்பட்டி .. | 3,336 | .. | .. | .. | .. | .. | .. |
| 6 | யா. புதுப்பட்டி .. | 1,071 | 2,079 | .. | 104.5 | .. | .. | .. |
| 7 | மல்லவாடி .. .. | 914 | .. | 109 | .. | .. | .. | .. |
| 8 | தேவியாகுறிச்சி .. | 4,234 | .. | 417 | .. | 259 | 226 | |
| 9 | செல்லியம்பட்டி .. | 1,844 | .. | .. | .. | .. | .. | 34 |
| 10 | வின்னப்பள்ளி .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| | மொத்தம் .. | 22,790 | 3,359 | 841 | 1,04.5 | 259 | 226 | 34 |



அட்டவணை 2 (இ).

அக்டோபர் 1980 முதல் செப்டம்பர் 1981 வரை இல்லங்களில் உள்ள உற்பத்தித்திறன்.

| அரசு மறுவாழ்வு இல்லத்தின் பெயர். (2) | பாய் (எண்ணிக்கை). (3) | செருப்பு (ஜோடிகள்.) (4) | சட்டை (எண்ணிக்கை). (5) | ரவிக்கை (எண்ணிக்கை). (6) | பாவாடை (எண்ணிக்கை). (7) | குழந்தை உடை (எண்ணிக்கை). (8) |
|---|---|---|---|---|---|---|
| பரனூர் .. .. | 697 | 173 | 469 | 287 | 286 | 287 |
| உளுந்தூர்பேட்டை .. | 1,301 | 140 | 506 | 246 | 127 | 98 |
| பர்கூர் .. .. | 901 | 155 | 321 | 230 | 226 | 56 |
| புதுக்கோட்டை .. | 938 | 268 | 321 | 138 | 95 | .. |
| மனையேரிப்பட்டி .. | 658 | 184 | 545 | 186 | 139 | 100 |
| யா. புதுப்பட்டி .. | 861 | 264 | 438 | 156 | 573 | 99 |
| மல்லவாடி .. .. | 891 | 306 | 436 | 180 | 214 | 58 |
| தேவியாகுறிச்சி .. | 819 | 206 | 306 | 120 | 197 | 88 |
| வின்னப்பள்ளி .. | 1,043 | 272 | 106 | 51 | 65 | 40 |
| செல்லியம்பட்டி .. | 886 | 160 | 230 | 92 | 95 | 20 |
| மொத்தம் .. | 9,005 | 2,190 | 3,678 | 1,686 | 2,017 | 846 |

அட்டவணை 2 (உ)

அக்டோபர் 1980 முதல் செப்டம்பர் 1981வரை இல்லங்களில் உள்ள உற்பத்தித்திறன்.

| வரிசை எண். (1) | அரசு மறுவாழ்வு இல்லத்தின் பெயர். (2) | | கட்டும் துணி (மீட்டர்) (3) | கல்லாத் துணி (மீட்டர்) (4) | சேலை (எண்ணிக்கை) (5) | வேட்டி (எண்ணிக்கை) (6) | துண்டு (எண்ணிக்கை) (7) | காடாத்துணி (விசைத் தறி/கைத்தறி) கட்டை(மீட்டர்.) (8) | கிட்டங்கள். (9) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பரனூர் .. | .. | 2,375 | .. | 291 | 314 | 1,798 | 3,253 | .. |
| 2 | உளுந்தூர்பேட்டை | .. | 2,272 | .. | 201 | 720 | 1,732 | 896 | 85,240 |
| 3 | பர்கூர் .. | .. | 132 | .. | 296 | 199 | 409 | 1,496 | .. |
| 4 | புதுக்கோட்டை | .. | 4,200 | .. | 49 | 312 | 980 | 350 | .. |
| 5 | மனையேரிப்பட்டி | .. | 730 | .. | .. | 147 | 138 | 400 | .. |
| 6 | யா. புதுப்பட்டி | .. | 2,185 | .. | .. | 466 | 999 | 1,459 | 87,322 |
| 7 | மல்லவாடி .. | .. | 1,195 | 412 | 180 | 256 | 530 | 1,397 | .. |
| 8 | தேனியா குறிச்சி | | .. | .. | 121 | 723 | 789 | 1,619 | .. |
| 9 | வின்னப்பள்ளி | .. | .. | .. | 69 | .. | .. | 264 | .. |
| 10 | செல்லியம்பட்டி | .. | 3,601 | 30 | 276 | 462 | 551 | 2,380 | .. |
| | மொத்தம் | .. | 16,690 | 442 | 1,483 | 3,599 | 7,926 | 13,514 | 1,72,562 |



அட்டவணை 3.

1980–81 ஆம் ஆண்டில் வேலையில் அமர்த்தப்பட்ட உள்ளிருப்போரின் எண்ணிக்கை.

(அக்டோபர் 1980 முதல் செப்டம்பர் 1981 வரை)

| மாதம் மற்றும் வருடம் (1) | | பரனூர். (2) | உளுந்தூர்பேட்டை. (3) | பர்கூர். (4) | புதுக்கோட்டை. (5) | மனையேரிப்பட்டி. (6) | யா. புதுப்பட்டி. (7) | மல்லவாடி. (8) | தேனியாகுறிச்சி. (9) | வின்னப்பள்ளி. (10) | செல்லியம்பட்டி. (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **1980** | | | | | | | | | | | |
| அக்டோபர் | .. | 193 | 168 | 128 | 131 | 185 | 150 | 180 | 140 | 80 | 139 |
| நவம்பர் | .. | 168 | 160 | 127 | 157 | 189 | 146 | 178 | 140 | 68 | 149 |
| டிசம்பர் | .. | 154 | 163 | 128 | 135 | 198 | 154 | 185 | 132 | 71 | 141 |
| **1981** | | | | | | | | | | | |
| ஜனவரி | .. | 178 | 152 | 115 | 140 | 207 | 129 | 175 | 109 | 70 | 130 |
| பிப்ரவரி | .. | 174 | 163 | 116 | 161 | 227 | 124 | 171 | 109 | 58 | 68 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மார்ச் .. | 178 | 158 | 150 | 158 | 197 | 154 | 187 | 112 | 51 | 72 |
| ஏப்ரல் .. | 159 | 153 | 208 | 140 | 187 | 155 | 181 | 110 | 57 | 66 |
| மே .. | 158 | 162 | 212 | 124 | 221 | 147 | 174 | 116 | 56 | 73 |
| ஜூன் .. | 137 | 192 | 207 | 143 | 235 | 152 | 172 | 120 | 70 | 168 |
| ஜூலை .. | 153 | 162 | 188 | 161 | 146 | 146 | 175 | 122 | 65 | 79 |
| ஆகஸ்ட் .. | 169 | 169 | 194 | 159 | .. | 137 | 166 | 108 | 71 | 87 |
| செப்டம்பர் .. | 174 | 177 | 186 | 174 | .. | 142 | 164 | 119 | 96 | 75 |
| மொத்தம் .. | 1,995 | 1,979 | 1,959 | 1,783 | 1,992 | 1,736 | 2,108 | 1,437 | 813 | 1,237 |

சராசரியாக 1,704 உள்ளிருப்போர் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.



அட்டவணை 4.

10 அரசு மறுவாழ்வு இல்லங்களுக்காக நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் பற்றிய விவரப் பட்டியல்.

| வரிசை எண். | பதவியின் பெயர். | பதவிகள் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | **மருத்துவப் பணி குடும்ப நல இயக்குநர் அலுவலகத்தில் நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் :—** | |
| 1 | மருத்துவப் பணி குடும்ப நல உதவி இயக்குநர் (மறுவாழ்வு இல்லங்கள்). | 1 |
| 2 | உதவி சிறப்பு அலுவலர் (மருத்துவம்). | 1 |
| 3 | இளநிலை கணக்கு அலுவலர் .. | 1 |
| 4 | கண்காணிப்பாளர் .. .. .. | 1 |
| 5 | தலைமை தொழில் நுட்பப் பணியாளர். | 1 |
| 6 | உதவியாளர் .. .. .. | 3 |
| 7 | இளநிலை உதவியாளர் .. .. | 1 |
| 8 | தட்டச்சர் .. .. .. .. | 1 |
| 9 | மருத்துவப் பணி குடும்ப நல உதவி இயக்குநருக்கான (ம.இ.) அடிப்படை ஊழியர். | 1 |
| 10 | நிலைய அடிப்படை ஊழியர் .. | 1 |
| 11 | ஓட்டுநர் மற்றும் சுத்தம் செய்பவர் .. | 1 |
| 12 | மருத்துவப் பணி குடும்ப நல உதவி இயக்குநருக்கான சுருக்கெழுத்தர். | 1 |
| 13 | உதவி சிறப்பு அலுவலருக்காக (மருந்துவம்) நியமிக்கப்பட்டுள்ள அடிப்படை ஊழியர். | 1 |

[1982 மார்ச் 11

10 மறுவாழ்வு இல்லங்களில் நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் :

| | | |
|---|---|---|
| 1 | நிர்வாக அலுவலர் .. .. .. | 10 |
| 2 | உதவி மருத்துவர் .. .. .. | 20 |
| 3 | செவிலியர்கள் .. .. .. | 20 |
| 4 | தாய்மை மருத்துவ துணைச் செவிலி. | 10 |
| 5 | தொழுநோயர் உடற்கூறு பயிற்சியாளர். | 10 |
| 6 | ஆய்வுக்கூட தொழில்நுட்பப் பணியாளர் நிலை-1. | 10 |
| 7 | மருந்தாளுநர் .. .. .. | 10 |
| 8 | ஆண் செவிலி உதவியாளர் (நிலை (II). | 10 |
| 9 | பெண் செவிலி உதவியாளர் நிலை (II). | 10 |
| 10 | துப்புறவுப் பணியாளர்கள் .. .. | 20 |
| 11 | சமையலாளரின் உதவியாளர் .. | 20 |
| 12 | அடிப்படை ஊழியர் .. .. .. | 10 |
| 13 | சமையலாளர் .. .. .. | 10 |
| 14 | அலுவலக கண்காணிப்பாளர் .. | 10 |
| 15 | பண்டகக் காப்பாளர் மற்றும் கணக்காயர். | 10 |
| 16 | இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர். | 10 |
| 17 | ஓட்டுநர் மற்றும் சுத்தம் செய்பவர் .. | 10 |
| 18 | தொழில் நுட்பப் பணியாளர் .. | 3 |
| 19 | தலைமைக் காப்பாளர் .. .. | 20 |
| 20 | காப்பாளர் .. .. .. | 80* |
| 21 | மின்வினைஞர் .. .. .. | 80 |
| 22 | மின்விசை தறி விரிவுரையாளர் .. | 1 |
| 23 | இளநிலை முதலாள் .. .. .. | 1 |
| 24 | இளநிலை புத்தகம் கட்டுபவர் .. | 2 |

* ஆண் 60, பெண் 20



1982 மார்ச் 11]

கோரிக்கை எண் 19

மக்கள் நல்வாழ்வு— கொள்கை விளக்கக் குறிப்பு

## 1. தோற்றுவாய்.

"கி.பி. 2000த்திற்குள் அனைவருக்கும் நல்வாழ்வு" என்ற இயக்கத்தைத் தீவிரமாக செயல்படுத்துவதே இவ்வரசின் முதன்மையான குறிக்கோளாகும். இம்மாநிலத்தில வாழும் குடிமக்கள் அனைவரும் சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் ஆக்க பூர்வமான வாழ்க்கையினை ஏற்று நடத்த அனுமதிக்கும் வகையில் அவர்களது நல்வாழ்வுத்தரம் மேம்பாடடையச் செய்வதே இதன் பொருளாகும்.

2. சென்னை பெருநகர், மாவட்ட மற்றும் வட்ட தலைமையிடங்களில் வாழும் மக்களுக்குத் தேவையான சுகாதார பாதுகாப்புத் நடவடிக்கை இவ்விடங்களில் பரவி அமைந்திருக்கும் மருத்துவ நிலையங்களின் மூலமாக தேவையான அளவு கவனிக்கப்படுகிறது. ஆயினும் மாநிலத்தில மொத்த மக்கட் தொகையான 48 மில்லியனில் ஏறக்குறைய 32 மில்லியன் மக்கள் கிராமப்புறங்களில் வாழ்கின்றனர். இந்தக் கிராமப்புற மக்களின் சமூக பொருளாதார நிலைகளை மேம்படுத்துவதற்கும், அவர்கள் நல்ல உடலநிலையுடன் வாழ்வதற்கும், அவர்களுடைய சுகாதார நிலையை மேம்படுத்துவது என்பது மிக முக்கியமாகிறது என்பதால், இந்தப் அரசின் கவனம் எல்லாம் இந்த பரந்த எண்ணிக்கை கொண்ட கிராமப் புற மக்களுக்கு மிகச் சிறந்த மருத்துவ வசதிகளும், சுகாதாரப் பாதுகாப்பும் வழங்கப் படுவதை உறுதிபடுத்துவதிலேயே இருக்கிறது. இதன் மூலம் பெருவாரியான மக்களுக்கு பெருவாரியான நன்மைகள் அளிக்க உதவுவதோடு மட்டுமின்றி சுகாதார மேம்பாடடைந்தோர்க்கும், சுகாதார மேம்பாடடையாதோர்க்கும் இடையே நிலவும் ஏற்றத் தாழ்வினையும் குறைக்க உதவும் எனவும் கருதுகிறது. அரசின் இவ்வெண்ணம், ஆரம்ப சுகாதார நிலையங்கள மற்றும் அதன் கிளை நிலையங்களை அமைத்ததிலிருந்தும், நடமாடும் சுகாதார குழுக்களை ஏற்படுத்தியதிலிருந்தும், சிறு சுகாதார நிலையங்களைத் தோற்றுவித்தலிருந்தும் பிரதிபலிக்கின்றது.

3. இதைத் தவிர, மக்கள் நல் வாழ்வுப் பணிச் செயல்பாடுகளின் முக்கிய குறிக்கோள், நோய்கள் ஏற்படுவதற்குச்சாதகமாக இருக்கும் சூழ்நிலைகளை அறவே நீககுவதையும். நலமான முறையில் வாழ்க்கை நிலைகளை மேம்படுத்துவதற்கு உதவும் சூழ்நிலைகளை வளர்ப்பதையும் கொண்டு விளங்குகின்றது. இதைக் கீழ்க்கண்டவைகளை எய்துவதின் மூலம் அடைய முடியும்.—

(1) பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல்.

(2) நல்ல சாக்கடைத் திட்டம்.

(3) சுற்றுப்புற மாசினைக் கட்டுபடுத்தி, சுற்றுப்புறத் துப்புரவினை நிலையான அளவில் பராமரித்தல்.

(4) சமூகத்தின் மிகத் தாழ்ந்த இன மக்களின் சத்துணவுத் தரத்தினை மேம்படுத்தல்.

(5) சிறந்த தனிநபர் உடல் நலம்.

(6) மக்கள் தொகை பெருக்கக் கட்டுப்பாடு.

(7) சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் சத்துணவு குடும்பநலம் உட்பட சுகாதாரக் கல்வியினைக் கொண்டு, அறியாமை மூட நம்பிக்கைகளை நீக்குதல்.

4. சாதாரண நோய் நீக்கப்பணிகள் எளிதில மக்களுக்குக் கிடைக்கப் பெற வேண்டும். மக்கள் நல்வாழ்வுப் பணிகளின் அமைப்பில் எளிதில் பரவக்கூடிய மற்றும் பரவாத நோய்களைத் தடுத்தலும், கட்டுப்படுத்தலும் முக்கியத்துவம் தரப்பட வேண்டும். சமுதாயத்தின் மக்கள் நல்வாழ்வுத்தரம் மேம்பாடு அடைவதற்கான இந்தக் குறிக்கோளை எய்துவதற்கு சமூகத்தின் அனைத்துத் தரப்பட்ட மக்களின் ஈடுபாடும், ஒத்துழைப்பும் அவசியம் ஆகும். சமுதாயத்தின் மக்கள் நல்வாழ்வுத் தரத்தினை காலகிரமமாக மதிப்பீடு செய்ய மக்கள் நலவாழ்வு நற்பணிகளின் தொகுப்பினைச் சேகரிப்பதும், மதிப்பீடு செய்வதும் அவசியமாகும்.

5. மேலே சொன்ன குறிக்கோளைக் கருத்திற் கொண்டு கடந்த காலத்தில் இவ்வரசு அநேக நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. அவைகளில் தாய்-சேய் நலம் அடங்கிய சமுதாய மக்கள் நல்வாழ்வு பாதுகாப்பு வழங்குதல், மக்களின் சத்துணவுத் தரங்களை உயர்த்தல், தொற்று நோய்களைத் தடுத்தலும் கட்டுப்படுத்தலும், உணவுக் கலப்படத்தைத் தடுத்தல், கலப்பட மருந்துகளின் விற்பனையைத் தடுத்தல், மருந்து மற்றும் ஒப்பனைப் பொருள்களின் உற்பத்தியையும், விற்பனையையும் கட்டுப்படுத்தி தரத்தை நிலை நிறுத்தல், சுற்றுப்புற சுகாதாரத்தை மேம்படுத்தல் மற்றும் சுற்றுப்புறம் மாசு அடைவதை குறைத்தல், பிறப்பு, இறப்பு பதிவு செய்வதை கட்டாயப்படுத்தல் மற்றும் மக்களின் நல்வாழ்வுத் தரத்தை உயர்த்தும் பொருட்டு நல்வாழ்வுடன் வாழ்வதைப் பற்றிய தகவல்களை விளம்பரப்படுத்துதல் முதலியவை அடங்கும்.

## II ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயக்குநரகம்.

(1) கிராம சுகாதாரப் பணிகள்—

மருத்துவ சிகிச்சை அளிப்பது ஆரம்ப சுகாதார நிலையங்களின் முக்கிய பணிகளில் ஒன்றாகும். ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அதன் சுற்று வட்டாரத்திலுள்ள பொது மக்களுக்கு மருத்துவ பரிசோதனை, ஆலோசனை, மருந்துகள், போன்றவைகளை உள் நோயாளிகளுக்கும், வெளிப்புற நோயாளிகளுக்கும்



வழங்குவது மட்டுமில்லாமல் சமுதாய சுகாதாரப் பணிகளான மலேரியா, மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலம், தடுப்பூசி குடும்பநலம் மற்றும் ஊட்டச்சத்து பற்றிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வழி செய்கிறது.

2. தமிழ்நாட்டில் 376 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. அவற்றில் 374 ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இவைகளோடு 9 ஊராட்சி ஒன்றியங்களில் கூடுதலாக ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே 1980-81-ல் 383-ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வந்தன. 1981-82-ல் கூடுதலாக 20 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது. மலைவாழ் மக்கள் மேம்பாட்டுக்கான திட்டத்தின் கீழ் இரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறாக நமது மாநிலத்தில் 405 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 1982–83 ஆம் ஆண்டில் புதுக்கோட்டை மாவட்டத்தில் மேலும் 2 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

3. மேற்குறிப்பிட்ட 405 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 267 நிலையங்கள் அரசு கட்டிய கட்டிடங்களில் செயல்பட்டு வருகின்றன. அதில் 192 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாளர் குடியிருப்பு கட்டிடங்கள் கட்டப்பட்டு உள்ளன. எஞ்சியுள்ள 138 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருந்தக கட்டிடங்களும் 213 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு பணியாளர் குடியிருப்புகளும் கட்டப்பட வேண்டியுள்ளது. அரசு கீழ்க்கண்ட ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருந்தக கட்டிடம் மற்றும் ஊழியர் குடியிருப்பும் கட்ட அனுமதித்துள்ளது.

1. கோதநல்லூர் .. கன்னியாகுமரி மாவட்டம்.
2. செல்லம்பட்டி .. .. மதுரை மாவட்டம்.
3. நெல்லக் கோட்டை .. நீலகிரி மாவட்டம்.
4. நெடுகுலா .. .. நீலகிரி மாவட்டம்.

4. 1979 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருந்தகக் கட்டிடம், பணியாளர் குடியிருப்பு மற்றும் சுற்றுச் சுவர் கட்டவும் மேலும் 5 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாளர் குடியிருப்பு மற்றும் சுற்றுச் சுவர் கட்டவும் ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்களில் சுற்றுச் சுவர் கட்டவும் அரசு அனுமதி அளித்துள்ளது.

5. மீண்டும் 1980ஆம் ஆண்டு 17 ஆரம்ப சுகாதார நிலையங் களின்மருந்தகக் கட்டிடம், பணியாளர் குடியிருப்பு மற்றும் சுற்றுச் சுவர் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

6. 1981–82-லிருந்து ஆண்டொன்றுக்கு ரூபாய் 14,000-த்தி லிருந்து ரூபாய் 20,000 ஆக ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருந்துகள் வாங்க அரசு அனுமதி தந்துள்ளது. இது 1982-83-ஆம் ஆண்டுக்கும் பொருந்தும்.

7. 1981-ஆம் ஆண்டு மே மாதம் ஆரம்ப சுகாதார நிலையங் களுக்கு தேவையான லினன், படுக்கை விரிப்புகள் மற்றும் கருவி கள் வாங்க ரூபாய் 2·27 லட்சங்களை அரசு அனுமதித்துள்ளது. பழுதுபார்க்க இயலாத நிலையிலுள்ள நான்கு ஊர்திகளுக்கு பதி லாக் புதிதாக நான்கு ஊர்திகள் வாங்கவும் அரசு ஒப்பளித்துள்ளது.

(2) நடமாடும் மருத்துவப் பணிகள் :

மொத்த மக்கள் தொகையில் சுமார் 80 சதவீத மக்கள் கிராமப் புறங்களில் வசிப்பதால் கிராமபுற ஏழை எளிய மக் களுக்கு விரிவான மருத்துவப்பணிகள் வழங்குவது இத்திட்டத்தின் நோக்கம், ஆரம்ப சுகாதார நிலையம், கிராமப்புற மக்களுக்கு மருத்துவ சேவைசெய்யும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட போதி லும் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர்கள் கிராமப் புறங்களுக்குச் செல்ல சில நடைமுறை இடர்பாடுகள் ஏற்பட்ட தால் அதை நீக்கவும் கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு மிக அருகில் மருத்துவ வசதிகள் கிடைக்கவும் 1977–78-ம் ஆண்டு முதல் முதலாக இத்திட்டம் 24 ஆரம்ப சுகாதார நிலையங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது.

2. மூன்று மருத்துவ அதிகாரிகளும், மூன்று மருந்தாளுநர் களும் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. ஒரு மருத்துவ அதிகாரி வெளிப்புற நோயாளிகளை ஆரம்ப சுகாதார நிலயைத்தில் தங்கியிருந்து காலையிலும் மாலையிலும் கவனித்துக் கொண்டிருப்பார் எஞ்சியுள்ள இரண்டு மருத்துவ.அதிகாரிகள் நோய் தீர்ப்பு, நோய்த் தடுப்பு பணிகளை கிராமங்களுக்குச் சென்று கவனிப்பார்கள். இவ்வாறாக ஒரு வார காலத்திற்குள் முழு வட்டாரமும் கவனிக்கப் படும். சிக்கலான நோயுள்ளவர்கள் மருத்துவ மனைகளிலுள்ள சிறப்புமருத்துவர்களிடம் காண்பிக்கும்படி. அனுப்பப்படுகிறார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் கிராம நல குழுக்கள் அமைக்கப்படு கின்றன. இக்குழுவின் உறுப்பினர்கள் சுகாதாரக் கல்வியைப் பரப்புவதிலும் மக்கள் நல்வாழ்வுப் பணிகளுக்கு ஒருமித்த மக்கள் ஆதரவைத் திரட்டுவதிலும் உதவி புரிவர்.





3. 1978–79-ல் 100 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் 979–80-ஆம் ஆண்டு மேலும் 100 ஆரம்ப சுகாதர நிலையங் ளுக்கும் 1981–82-ல் இன்னும் 25 ஆரம்ப சுகாதர நிலையங் ளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. இவ்வாறாக 249 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இத்திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

4. 1981-ஆம் ஆண்டு புதிதாக இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் புதிதாக 12 மெடாடர் ஊர்திகள் வாங்க அரசு பணித்துள்ளது. 1981–82 ஆம் ஆண்டில் மருந்துகள் வாங்குவதற்காக இம்மாதிரி நடமாடும் சுகாதார குழுக்கள் இயங்கிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு ஆரம்ப சுகா தார நிலையத்திற்கும் ரூபாய் 15,000 ஆக இருந்தது ரூபாய் 20,000 ஆக உயர்த்தப்பட்டது. இது 1982–83-ஆம் ஆண்டுக்கும் நீடிக்கும்.

(3) மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம் :

நீலகிரி மாவட்டத்திலுள்ள மலைவாழ் மக்களின் சுகாதார வசதிகளை விரிவாக்கும் நோக்குடன் உதகமண்டல வட்டாரத்தி லுள்ள துணேரியில் 1976-ஆம் ஆண்டில் ஒரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமும், 1977-ஆம் ஆண்டு கூடலூர் வட்டாரத்திலுள்ள நெல்லக்கோட்டையில் மேலும் ஒரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமும் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

2. 1981–82-ல் மேலும் இரண்டு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் குன்னூர் வட்டத்தில் கொல்லக்கொம்பையிலும் மற்றும் கோத்தகிரி வட்டத்தில் குட்டபேட்டியிலும் நிறுவ அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

(4) மேல்நிலைப்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் :

அடிப்படை சுகாதார வசதிகள் கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு விரிவாக்கும் நோக்குடன் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. சிக்கலான நோய் உள்ளவர்கள் முதன்மையான மருத்துவ ஆலோசனைகள் பெற அருகிலுள்ள மருத்துவ மனைகளிலுள்ள சிறப்பு மருத்துவரிடம் அனுப்பப்பட வேண்டிய காரணத்தால் கிராமப்புறங்களில் மருத்துவமனைகள் தேவைப்படுகின்றன. இந்நோக்குடன் அரசு 1981–82 ஆம் ஆண்டு மாவட்டத்திற்கு ஒன்றாக 15 ஆரம்ப சுகாதார நிலை யங்களை தேவையான பணியாளர்களுடனும் உபகரணங்க ளுடனும் மேல் நிலைப்படுத்தும் ஆணைகளைப் பிறப்பித்தது. இதற்கான கட்டிடங்கள் கட்டுவதற்கும் அரசு அனுமதியளித் துள்ளது. இக்கட்டிடம் கட்டும் வேலையை பொதுப்பணித் துறை மேற்கொண்டுள்ளது. இக்கட்டிடம் கட்டப்பட்டவுடன் தேவையான பணியாளர்கள் நியமிக்கப்பட்டு நிலையங்கள்

செயல்பட துவங்கும். இதன்மூலம் ஏழை எளிய கிராமப்புற மக்களுக்கு உயர்தரமான மருத்துவ வசதிகள் கிடைக்கும். மேலும் 15 ஆரம்ப சுகாதார நிலையங்களை 1982–83-ல் ரூ. 140·49 இலட்சம் செலவில் மேல்நிலைப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

(5) கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் :

அல்மா ஆடா உடன்படிக்கையின்படி கி.பி. 2000 ஆண்டிற்குள் மக்கள் தொகை பெருக்கத்தை கருத்தில் கொண்டு நிறைந்த அளவில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தேவைப்படலாமென்று கணக்கிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் தமிழ்நாட்டில் 50,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற விகிதத்தில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போதைய மக்கட் தொகை பெருக்கத்தை கணக்கில் கொண்டு பார்க்கும்போது, மாநிலத்தில் 740 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தேவைப்படும்.

2. இதன்படி 1981–82-ஆம் ஆண்டில் 20 கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

(6) சிறு சுகாதார நிலையங்கள் :

மக்களுக்கு விரிவான நல்வாழ்வு பாதுகாப்பு பணிகளை கூட்டுறவு அடிப்படையில் அளிக்க தொண்டு நிறுவனங்களை ஊக்கப்படுத்தும் நோக்கத்தோடு சிறு சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

2. 5,000 மக்களுக்கு ஒரு சிறு சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள இத்திட்டத்தில் ஈடுபட்டுள்ள தொண்டு நிறுவனம் ஆண்டொன்றுக்கு ரூ. 18,000 மொத்த செலவில் சுகாதாரப் பணிகள் வழங்க ஏற்பாடு செய்யும்.

3. இந்நிலையத்தில் ஒரு பகுதி நேர மருத்துவ அலுவலர், ஒரு முழு நேர ஆண் மற்றும் பெண் சுகாதாரப் பணியாளர்கள், மூன்று முதலுதவியாளர்களும் அமர்த்தப்படுவர். மருந்துகளுக்காக ஆண்டொன்றுக்கு ரூ. 3000 ஒதுக்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு மொத்த செலவான ரூ. 18,000-ல் 50% தொகையான ரூ. 9,000-ஐ மாநிலஅரசும் மைய அரசும் சம விகிதத்தில் அளிக்கின்றன.

4. தொண்டு நிறுவனம் நன்கொடைகள் பெறுவதன் மூலமோ அல்லது பயனடைபவர்களிடமிருந்து பணம் வசூலிப்பதன் மூலமோ, எஞ்சியுள்ள 9,000 ரூபாய் செலவை ஏற்கும். சிறு



சுகாதார நிலையங்கள் தொடங்க தொண்டு நிறுவனங்கள் தேவையான கட்டிடம், சாதனங்கள், மேசை, நாற்காலிகள் முதலியவற்றை தங்கள் நிதியிலிருந்து ஏற்படுத்திக் கொள்வார்கள். தொண்டு நிறுவனங்களின் நிதி பற்றாக்குறையை தவிர்க்க கருதி அரசு பின்கண்டவாறு மூன்று தவணைகளில் ரூ. 9,000 மானியத் தொகையை வழங்குகிறது.

1. முதல் தவணைத் தொகையான ரூ. 3,000 ஏப்ரல் மே மாதங்களில்.

2. இரண்டாவது தவணைத் தொகையான ரூ. 3000 செப்டம்பர் அக்டோபர் மாதங்களில்.

3. மூன்றாவதும் இறுதியுமான தவணைத் தொகை ரூ. 3,000 கணக்குகள் ஆய்வு செய்யப்பட்ட பிறகு.

5. விலைவாசிகளின் உயர்வைக் கருத்தில் கொண்டு தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கும் மான்யத் தொகையை ரூபாய் 18,000-லிருந்து ரூபாய் 27,000-மாக உயர்த்தவும், இத்தொகையை மாநில அரசு, மத்திய அரசு மற்றும் தொண்டு நிறுவனம் சமமாக பகிர்ந்துகொள்ளும் திட்டம் ஒன்றினை மத்திய அரசின் பரிசீலனைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

6. இதுவரை அரசு 264 சிறு சுகாதார நிலையங்கள் அமைக்க ஆணைகள் வழங்கியுள்ளது. தற்போது 192 சிறு சுகாதார நிலையங்கள் இயங்குகின்றன.

## III. மக்கள் நல்வாழ்வு மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநரகம்.

1. கொள்ளை நோய்கள் கட்டுப்பாடு :

குடல் சார்ந்த நோய்களான வாந்திபேதி, கடுமையான குடற் அழற்சி, டைபாய்டு, மஞ்சள் காமாலை நோய்களும் மலேரியா, யானைக்கால், மூளைக் காய்ச்சல், தொழு நோய், காச நோய் போன்றவை தமிழ் நாட்டில் பரவுகின்ற பெரிய தொற்று நோய்களாகும். இத்தகைய கொள்ளை நோய் ஒழிப்பு தடுப்பு திட்டங்களை வெற்றியுடன் நிறைவேற்றுவதன் மூலம், இக்கொள்ளை நோயினால், ஏற்படும் இறப்புகள் மற்றும் நலிவுகள் பெருமளவுக்கு குறைந்துள்ளன.

(1) வாந்திபேதி :—வாந்திபேதி, மஞ்சள் காமாலை மற்றும் குடல் அழற்சி முதலான தொற்று நோய்கள் நீர்நிலைகளில் நோய் தொற்று தோன்றுவதால் பரவுகின்றன. இந்நோய்களை

கண்டறிந்து ஆரம்ப நிலையிலேயே கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள கண்காணிப்பு முறை தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. மேம்படுத்தப்பட்ட கண்காணிப்பு முறையினால் மிகுதியான நோயாளிகள் கண்டறியப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் வாந்திபேதி நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் இறந்தவர்களின் தொகை வருமாறு :—

| ஆண்டு. | வாந்திபேதி நோயாளிகளின் எண்ணிக்கை. | வாந்திபேதியினால் இறந்தோர் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1979 .. .. | 1,336 | 38 |
| 1980 .. .. | 3,461 | 74 |
| 1981 .. .. | 1,918 | 32 |

1981 ஆம் ஆண்டு வாந்திபேதியினால் பாதிக்கப்பட்டோர் மற்றும் இறந்தோரின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. உடலில் நீர்வறட்சி ஏற்பட்டுள்ளதால் நிகழும் இறப்புகளைத் தவிர்ப்பதற்கு வாய்வழியாக ஈரத்தன்மையூட்டக் கூடிய உப்புகளைக் கொண்டு நோயாளிகளுக்கு அவரவா வீடுகளிலேயே அளிக்கத்தக்க எளிய சிகிச்சை முறை பரப்பபட உள்ளது. இந்த மாத்திரைகள் எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் மருத்துவமனைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. வருகின்ற ஆண்டுகளில் இந்த சிகிச்சை முறை மாநிலத்திலுள்ள ஆரம்பச் சுகாதார கிளை நிலையங்கள் மற்றும் மருத்துவமனைகளின் பணியாளர்கள் மூலமாக தீவிரப்படுத்தி பிரபலப்படுத்தப்படும்.

(2) பிளேக்.—தமிழ்நாட்டில் 1965 ஆம் ஆண்டு முதல் மனிதர்களைப் பாதிக்கும் பிளேக் நோய் அறவே இல்லை. ஆயினும் இந்நோய் பரவும் பகுதிகளில் காட்டெலிகளிடையே இந்நோய் காணப்படுகிறது. எனவே நமது மாநிலத்தில் வட ஆற்காடு, பெரியார், தர்மபுரி மற்றும் நீலகிரி மாவட்டங்களான ஏற்கனவே பிளேக் நோய் பரவி வந்த பகுதிகளில் எலிகளிடையே வருகின்ற பிளேக் நோயை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(3) மலேரியா முறைகாய்ச்சல்.—1958 ஆம் ஆண்டில் இருந்து தமிழ்நாட்டில் தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.





அடிப்படை நல்வாழ்வுப் பணியாளர்கள் கிராமப் பகுதிகளில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை சென்று இரத்த மாதிரிகளைச் சேகரித்து ஆய்வு செய்து மலேரியா நோயைக் கண்டறிந்து அவ்வாறு கண்டறியப்பட்ட எல்லா மலேரியா நோயாளிகளுக்கும் மலேரியா தடுப்பு மருந்து கொடுத்துச் சிகிச்சையளித்தல் மற்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மலேரியா பரவுதலைத் தடுப்பதற்காக புழுப்பருவக் கொசு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் மற்றும் பூச்சி கொல்லி மருந்துகளைத் தெளித்தல் ஆகியவற்றின் மூலம் கொசு உற்பத்தியாகும் இடங்களைக் குறைத்தல் முதலியன இத்திட்டத்தில் அடங்கும்.

தமிழ்நாட்டில் குறிப்பிட்ட நகரங்களிலும், கிராமங்களிலும் மட்டுமே மலேரியா பரவுகிறது. தர்மபுரி, வடார்க்காடு, தென்னாற்காடு மாவட்டங்களின் பெண்ணையாற்றை ஒட்டிய கிராமங்கள் மற்றும் ராமேஸ்வரம் தீவு உட்பட இராமநாதபுர மாவட்டக் கடற்கரை ஓரக் கிராமங்கள் ஆகியவற்றிலும் மலேரியா பரவியுள்ளது. சேலம், ஈரோடு, தூத்துக்குடி, வேலூர், திண்டுக்கல், கரூர், திருச்சிராப்பள்ளி நகராட்சிப் பகுதிகளிலும் சென்னை மாநகராட்சியிலும் மலேரியா உள்ளது.

1981 ஆம் ஆண்டில் மொத்தம் 71,517 மலேரியா நோயாளிகள் பதிவாகியுள்ளனர். மாநிலத்தில் பதிவான மொத்த நோயாளிகளில் 63 சதவீதத்தினர் சென்னை மாநகரத்தில் இருந்தனர். 1978–81 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் மலேரியா நோயாளிகளின் எண்ணிக்கை விவரம் வருமாறு :

| ஆண்டு. | தமிழ்நாடு முழுவதும். | சென்னை மாநகர். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1978 .. .. .. | 76,227 | 29,953 |
| 1979 .. .. .. | 95,009 | 33,460 |
| 1980 .. .. | 73,381 | 36,193 |
| 1981 .. .. .. | 71,517 | 44,951 |

இத்துறை மேற்கொண்ட சிறப்பு நடவடிக்கைகளின் விளைவாக இராமேஸ்வரம் தீவில் மலேரியா நோய் தோன்றுவது குறைந்து வருகிறது. 1981 ஆம் ஆண்டில் இராமேஸ்வரம் தீவில் மொத்தம் 4,224 பேர் மலேரியா நோயாளிகள் எனப் பதிவாகி உள்ளது. ஆனால் 1980-ஆம் ஆண்டில் 9,541 பேர் இந்நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார்கள்.

1981 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டம் குமாரப்பாளையம் நகரத்துக்கு மத்திய அரசின் நகர்ப்பகுதி மலேரியா ஒழிப்புத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டம் ஏற்கனவே சென்னை மாநகர், சேலம், இராசிபுரம், எளம்பிள்ளை, தூத்துக்குடி, ஈரோடு, வேலூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல் ஆகிய நகரப் பகுதிகளில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இந்நகரங்களில் புழுப் பருவக் கொசு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. சென்னை மாநகரத்தை பொறுத்த மட்டிலும் மலேரியா குழுவின் பரிந்துரைகளின் படி சிறப்பு நடவடிக்கைகள் பற்றி எடுத்துக் கூறவும் திட்டத்தை மேற்பார்வையிடவும் என ஒரு [செயற்குழு] (task force) அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் பரிந்துரைகள் நிறைவேற்றப் பட்டுள்ளன. நகரில் பெருகி வரும் மலேரியா தொல்லையை சமாளிக்க மாநகரம் மூன்று பகுதிகளாக அதாவது (1) நோய் கடுமையாக உள்ள 361 கோட்டங்கள் (2) நோய் சாதாரணமாக உள்ள 34 கோட்டங்கள், (3) நோய் குறிப்பிடத்தக்க அளவில் இல்லாத 80 கோட்டங்கள் என பிரிக்கப்பட்டுள்ளது. முதல் மற்றும் இரண்டாவது பகுதிகளில் தீவிர மருந்து புகை அடித்தல் முதலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு சிறப்பு நோய் தடுப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

(4) யானைக்கால் நோய் : இந்நோய் க்யூலெக்ஸ் என்ற வகை கொசுக்களினால் பரப்பப்படுகிறது. இந்நோய் தொற்று மிகுதியாக உள்ள பகுதிகளில் யானைக்கால் நோய் கட்டுப்பாட்டு திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. தேசிய யானைக்கால் நோய் கட்டுப்பாடு திட்டத்தின்கீழ் 1981—82 ஆம் ஆண்டில் 19 நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவுகள், 33 சிகிச்சை நிலையங்கள், ஒரு யானைக்கால் நோய் ஆய்வுப் பிரிவு முதலானவை தொடர்ந்து செயல்படலாயின.

இவ்வாண்டில் (1981 ஆம் ஆண்டு ஜனவரி முதல் நவம்பர் வரை) பரிசோதனை செய்யப்பட்ட 3,58,836 பேர்களில் 8,560 பேர் இந்நோய்த் தொற்றுக்கு ஆளாகியுள்ளதாகவும், 1,532 பேர் நோயினால் அவதியுறுவதாகவும் கண்டறியப்பட்டது. இவர்களுக்கு சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இப்பகுதிகளில் க்யூலெக்ஸ் கொசு உற்பத்தியை குறைப்பதற்கான நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டது.

(5) மூளைக் காய்ச்சல் :

மூளைக்காய்ச்சல் நோய் ஜப்பானிய நோய் நுன்னியிர் 'பி' என்ற கிருமியினால் ஏற்படுகிறது. இந்நோய் கிருமிகள் பறவைகள், பன்றிகள், ஆகியவற்றிடமிருந்து க்யூலெக்ஸ் என்ற வகைக்





காசுக்களால் மனிதர்க்கு பரப்பப்படுகிறது. இவ்வகை கொசுக் ள் நெல் வயல்களிலும், பாசனக் கால்வாய்களிலும் மெல்ல ஓடும் ரிலும் பெருமளவில் உற்பத்தியாகின்றது. 1981 செப்டம்பர் ாதத்தில் தென்னாற்காடு, வட ஆற்காடு, திருச்சிராப்பள்ளி ஞ்சாவூர் மாவட்டங்களில் மூளைக்காய்ச்சல் மிகுதியாகத் தான்றியதாக அறிவிக்கப்பட்டது. 1981-ல் இந்நோயினால், ாதிக்கப்பட்டவர்களின் மொத்தத் தொகை 1,305 இந்நோயை ட்டுப்படுத்தவும் பரவுவதை தடுக்கவும் உடனடி தீவிர நட ்டிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நோய்க்குக்குறிப்பிட்ட கிச்சை இல்லை என்பதால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு நாய் அறிகுறிகளுக்கான சிகிச்சை அளிக்கப்பட்டது.

6) நரம்புச் சிலந்தி நோய் :

நரம்புச் சிலந்தி நோய் ஒழிப்புத் திட்டம், திட்டத்தின் சேரா வேலையாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 1960 ஆம் ஆண்டில் மொத்தம் 13,712 நரம்பு சிலந்தி நோயாளிகள் பதிவு செய்யப்பட்டனர். 1981-ஆம் ஆண்டில் இத்தொகை 2 ஆக குறைக்கப்பட்டது. இது ஒரு குறிப்பிடத்தக்க வீழ்ச்சியாகும். சில ஆண்டுகளில் தமிழ்நாடு நரம்புச் சிலந்தி நோயிலிருந்து முழுவதுமாக விடுபட்டுவிடும்.

| ஆண்டு. | ஆய்வு செய்த கிராமங்களின் எண்ணிக்கை. | கண்டறிந்த நோயாளிகளின் எண்ணிக்கை. | சிகிச்சை பெற்ற நோயாளிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1980 .. | 4 | 4 | 4 |
| 1981 .. | 1 | 2 | 2 |

இப்பகுதிகளில் திட்ட வேலை செய்யும் களப்பணியாளர்கள் தண்ணீரில் பூச்சிக் கொல்லி மருந்திடல் மற்றும் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்தல் ஆகியவற்றுடன் சமுதாயத்தில் நல்வாழ்வுக் கல்வி விளக்கமும் அளித்து வருகின்றனர்.

(7) யாஸ் நோய் ஒழிப்புத் திட்டம் :

சேலம் மாவட்டம் ஆத்தூரில் யாஸ் நோய் ஒழிப்புத் திட்ட பிரிவு செயல்பட்டு வருகிறது. இப்பிரிவு யாஸ் நோயாளிகளை யும் அவர்களுடன் நெருங்கிய தொடர்புடையவர்களையும் கண்

டறிந்து நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதுடன் இப்பகுதியில் மலைப்பகுதி மக்களிடையே நல்வாழ்வுக் கல்வி விளக்கமும் அளித்து வருகிறது. இத்திட்டச் சாதனை விவரம் வருமாறு:—

| ஆண்டு. | ஆய்வு மறு-ஆய்வு செய்யப் பட்ட கிராமங்களின் மற்றும் கிளைக் கிராமங்களின் எண்ணிக்கை. | ஆய்வு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை. | கண்டறிந்த நோயாளிகளின் எண்ணிக்கை. | சிகிச்சை பெற்ற நோயாளிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1980 .. | 145 | 14,157 | 57 | 38 |
| 1981 .. (நவம்பர் வரை). | 134 | 8,768 | 40 | 49 |

(8) சந்தைகளும்-விழாக்களும் :

மாநிலத்தில் பல்வேறு சந்தைகளும், திருவிழாக்களும் நடைபெற்றுள்ளன. இச்சந்தைகள், விழாக்களின்போது செய்யப்பட்ட துப்புரவு ஏற்பாடுகள், நல்வாழ்வுத்துறை அலுவலர்களால் மேற்பார்வையிடப்படுகின்றன. சந்தைகள், திருவிழாக்களில் செய்யப்பட்ட விரிவான துப்புரவு ஏற்பாடுகளின் பயனாக கொள்ளை நோய்கள் ஏதும் தோன்றி பரவவில்லை. குறிப்பாக தஞ்சாவூர் தமிழ் பல்கலைக் கழகத் துவக்க விழா, எட்டயபுரம் மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா ஆகியவற்றில் நல்வாழ்வு தடுப்பு மருந்து இயக்குநரின் நேரடி மேற்பார்வையில் உள்ளாட்சி நல்வாழ்வு அதிகாரிகள் விரிவான துப்புரவு ஏற்பாடுகளை செய்தனர். இலட்சக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இவ் விழாக்கள் கொள்ளை நோய்கள் தோன்றி பரவும் தொல்லை ஏதுமின்றி இனிது நடைபெற்றன.

2. வறட்சி துயர்த்துடைப்பு நடவடிக்கைகள் :

பருவ மழை உரிய காலத்தில் பெய்யாததால் பல கிராமங்கள் வறட்சிக்கு ஆளாயின. பொதுவாக இத்தகைய வறட்சி காலங்களில் சூலுற்ற தாய்மார்கள் சிறு குழந்தைகள், பள்ளிக் குழந்தைகள் ஆகியோர் எளிதில் ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்பட்டு அதன் விளைவாகப் பல நோய்களுக்கு ஆளாகின்றனர். தமிழக அரசு தடுப்பு மருந்து என்ற தலைப்பின் கீழ் பாதிக்கப்பட்ட பகுதிகளில் துணைச்சத்துணவு, மருந்துகள், தொற்றுத்தடை மருந்துகள் அம்மைப்பால் வழங்குதல் போன்ற துயர்த்துடைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ரூபாய் 100 இலட்சம் வழங்கியது. பாதிக்கப்பட்ட பகுதி மக்களின் நல்வாழ்வு நிலையை



பராமரிக்க இந்நடவடிக்கைகள் பெரிதும் உதவியாக இருந்தன. சிகிச்சைக்கான மருந்துகள் என்ற தலைப்பின்கீழ் 50 இலட்சம் ரூபாய்க்கு வகை செய்யப்பட்டது.

3. விரிவுபடுத்தப்பட்ட தடுப்பு ஊசித் திட்டம் :

கீழ்க்காணும் நோய்களினால் ஏற்படத்தக்க நலிவு மற்றும் இறப்பின் அளவை உயர்ந்த அளவு எண்ணிக்கையுள்ள குழந்தைகளுக்கு முறைப்படி தடுப்பூசி போடுவதன்மூலம் குறைப்பதே விரிவுபடுத்தப்பட்ட தடுப்பூசி திட்டத்தின் குறிக்கோளாகும். அவையாவன :—(1) தொண்டை அடைப்பான், (2) கக்குவான் இருமல், (3) இசிவு நோய், (4) காச நோய், (5) இளம்பிள்ளை வாதம், (6) தட்டம்மை, (7) டைபாய்டு காய்ச்சல், சூலுற்ற தாய்மார்களுக்கும் இசிவுநோய் தடுப்பூசி போடப்படுகிறது. இத்திட்டச் சாதனை வருமாறு:—

(1) இளம்பிள்ளை வாதம் :

மூன்று மாதம் முதல் இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இத்திட்டத்தின்கீழ் வாய்வழி இளம்பிள்ளைவாதம்தடுப்பு மருந்து மூன்று தவணைகளாகவும், பின்னர் ஊக்குவிப்பு அளவாகவும் தரப்படுகிறது. செய்து முடித்த பணிகளின் விவரம் வருமாறு :—

| ஆண்டு. | இலக்கு. | அளிக்கப்பட்ட தடுப்பு மருந்தின் அளவு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1980–81 .. | 4.00 இலட்சம் குழந்தைகள். | 5.20 இலட்சம் தவணைகள். |
| 1981–82 .. | 1.70 இலட்சம் குழந்தைகள். | 2.98 இலட்சம் தவணைகள். (டிசம்பர் 1981 வரை.) |

(2) முத்தடுப்பூசி சிறப்புத் திட்டம் :

தமிழ்நாட்டில் 1964-இல் தொண்டை அடைப்பான், கக்குவான், இசிவு நோய் தடுப்பிற்காக மூன்று நோய்த்தடுப்பூசித் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டம் முதலில் 142 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் அவற்றின் கிளை நிலையங்களிலும் நிறைவேற்றப்பட்டது. இத்திட்டம் இப்போது 200 ஆரம்ப சுகாதார நிலையங்களில் நல்வாழ்வுப்பணியாளரால் நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஒவ்வொரு குழந்தைக்கும் 4 முதல் 8 வார கால இடைவெளியில் 3 தவணைகளாக முத்தடுப்பூசி போடப்படுகிறது.

1980–81, 1981–82 ஆண்டுகளில் இத்தடுப்பூசி போடப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை வருமாறு:—

| ஆண்டு. | தடுப்பூசி போடப்பட்டோரின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1980–81 .. .. .. | 4,23,000 |
| 1981–82 (டிசம்பர் 1981 வரை.) | 2,56,182 |

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இயலாமை தடுப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக முத்தடுப்பூசி இளம்பிள்ளைவாதத் தடுப்பு மருந்து, தட்டம்மை தடுப்பு மருந்து ஆகிய தடுப்பூசிகள் போடப்பட்டன. 1982 சனவரியில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 1,01,151 குழந்தைகளுக்கு இளம்பிள்ளை வாதத்தடுப்பு மருந்து முதல் தவணை கொடுக்கப்பட்டது. 62,685 குழந்தைகளுக்கு முத்தடுப்பு ஊசி போடப்பட்டது. மேலும், 16,155 குழந்தைகளுக்கு தட்டம்மை தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டது.

(3) தட்டம்மை தடுப்பு ஊசித் திட்டம் :

விரிவுபடுத்தப்பட்ட தடுப்பூசித் திட்டத்தின் கீழ் தட்டம்மையினால் ஏற்படத்தக்க நலிவு மற்றும் இறப்பினைத் தடுக்கும் நோக்கத்துடன் தட்டம்மை தடுப்பூசி போடும் திட்டமும் நிறைவேற்றப்படுகிறது. 9 மாதம் முதல் 5 ஆண்டுகள் வரையிலான எல்லா குழந்தைகளுக்கும் தட்டம்மை தடுப்பூசி போடப்படுகிறது. இதற்குமுன் தட்டம்மையால் பாதிக்கப்படாத குழந்தைகளுக்கு 1 தவணைத் தடுப்பு மருந்து கொடுக்கப்படுகிறது. இத்திட்டம் இன்னமும் இந்திய அரசினால் மேற்கொள்ளப்படவில்லை என்றபோதிலும் தட்டம்மை தடுப்பூசித் திட்டம் பொதுநல நிறுவனங்களினால் ஏற்று நடத்தப்படுகிறது. இத்திட்டம் 1979 அக்டோபர் முதல் அனைத்துலக ரோட்டரி சங்கத்தினரால் நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை 7,60,000 தவணை மருந்துகள் இதற்கென பயன்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் 1982–83லிருந்து, இத்திட்டத்தை பொது சுகாதார இயக்குநரகம் இந்த நிறுவனத்துடன் இணைந்து விரிவுபடுத்தப்பட்டு தடுப்பூசித்திட்டத்தின் கீழ் செயல்படுத்தக் கருதியுள்ளது.

(4) டைபாய்டு காய்ச்சல் :

இத்தடுப்பூசித் திட்டத்தின் கீழ் 5 முதல் 6 வயதான பள்ளியில் சேரும் குநந்தைகளுக்கு டைபாய்டு காய்ச்சல் தடுப்பூசி அளிக்கப்படுகின்றன.



இத்திட்டத்தின் கீழான சாதனை விவரம் வருமாறு:—

| ஆண்டு. | பயன் பெற்றோர். |
|---|---|
| (1) | (2) |
| 1979–80 .. .. .. | 0.78 இலட்சம். |
| 1980–81 .. .. .. | 2.50 இலட்சம். |
| 1981–82 .. .. .. | 4.06 இலட்சம் (டிசம்பர் 81 வரை). |

(5) பள்ளிக்குழந்தைகளுக்கு இசிவுநோய் தடுப்பூசி :

இத்திட்டம் 1981 நவம்பரில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 10 வயது மற்றும் 16 வயது பள்ளிக் குழந்தைகள் இசிவுநோய்த் தடுப்பூசி அளிக்கப்படுகின்றனர். இவ்வயதினருக்கு முறையே 1.5 இலட்சம் மற்றும் 1.0 இலட்சம் பேருக்கு இத் தடுப்பு மருந்து அளிக்க வேண்டுமென இந்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. 1982 சனவரி வரை 4.30 இலட்சம் பேருக்கான தவணை மருந்துகள் வரப்பெற்று வழங்கப்பட்டுள்ளன.

(6) குளிர்பதன வசதி :

குழந்தைகளுக்குக் கொடுக்கப்படும்வரை தடுப்புமருந்துகள் வீரியம் குறையாமல் இருப்பதற்காக அவை குளிர்ப்பதன அறை (cold room), ஆழ் உறைபனிக்கலம் (Deep Freezer) குளிர்ப்பதனப் பெட்டி (Refrigerator) முதலானவற்றில் சேமித்து வைக்கப்படுகின்றன. அவை இடம் விட்டு இடம் எடுத்துச் செல்லப்படும்போது தடுப்பு மருந்துக்கலங்களில் (Vaccine carriers) எடுத்துச் செல்லப்படுகின்றன. இதற்கென 1981–82 ஆம் ஆண்டில் 31 குளிர்ப் பதனப் பெட்டிகளும் (Refrigerators) 6 ஆழ் உறைபனிக்கலம் (Deep Freezer) வழங்கப்பட்டுள்ளன.

4. மகப்பேறு மற்றும் சேய் நலப் பணிகள் :

மாநில நல்வாழ்வுத் திட்டங்கள் அனைத்திலும் இத்திட்டம் உயர் முன்னுரிமை பெறுகிறது. கருத்தரிக்கத்தக்க பருவத்தில் உள்ள 15–45 வயது மகளிர் மொத்த மக்கள் தொகையில் சுமார் 20 சதவிகிதமாகவும், 16 வயதுக்குட்பட்ட குழந்தைகள் சுமார் 40 சதவிகிதத்தினராகவும் உள்ளனர். இவர்கள் ஊட்டச் சத்துக் குறைபாடுகள் மற்றும் தொற்று நோய்கள் முதலான ஆபத்துகளுக்கு எளிதில் ஆளாகத் தக்கவாறு உள்ளனர்.

குறிக்கோள் :

1. தாய்மார்களுக்கு ஊட்டச் சத்துணவுக் கல்வி உள்பட நல்வாழ்வுக் கல்வி விளக்கமளித்தல் மற்றும் அவர்களின் பேறு காலம், பிரசவ காலம் மற்றும் பிரசவத்துக்குப்பிந்திய காலம் ஆகிய காலங்களில் உடல் நலப் பரிசோதனை செய்தல்.

2. எல்லா குழந்தைகளுக்கும் சிறு குழந்தைப்பருவ கவனிப்பு, பள்ளிப் பருவத்துக்கு முந்திய கவனிப்பு மற்றும் பள்ளி நலப் பணிகள் ஆகியவற்றிற்கு வகை செய்தல்.

3. தாய்மார்கள் மற்றும் குழந்தைகளிடையே நலிவு மற்றும் இறப்பினைக் குறைப்பதற்காக இவ்விரு தரத்தினருக்கும் தடுப்பூசி போடுவதன் மூலம் நோய்த் தடுப்புப் பணிபுரிதல்.

கிராமப் பகுதிகளில் மகப்பேறு மற்றும் சேய் நலத்திட்டங்கள் அந்தந்த ஊராட்சி ஒன்றியங்கள் அல்லது பின்தங்கிய பகுதித் திட்டம், பலநோக்கு நல்வாழ்வுப் பணியாளர் திட்டம் ஆகியவற்றின் கீழ் வரும் அரசு மகப்பேறு நிலையங்கள் மூலமாக நிறைவேற்றப்படுகின்றன. ஊராட்சி ஒன்றியங்கள், அவற்றின் கிளை நிலையங்கள் மூன்றுக்கு அவை செய்யும் செலவில் 1/3 பகுதியை மாநில அரசிடமிருந்து மானியமாகப் பெறுகின்றன. எஞ்சியுள்ள நிலையங்கள் இந்திய அரசின் குடும்ப நலத்திட்டத்தின் கீழ் 100 சதவிகித மானியம் பெறுகின்றன.

இப்போது தமிழ்நாட்டின் கிராமப்பகுதிகளில் ஊராட்சி ஒன்றியங்களால் அமைக்கப்பட்டுள்ள 2,814 நிலையங்கள் உட்பட, மொத்தம் 3,693 மகப்பேறு நிலையங்கள் உள்ளன. நகரப் பகுதிகளில் 128 நகராட்சி மகப்பேறு இல்லங்களும் 372 நகராட்சி மகப்பேறு நிலையங்களும் உள்ளன.

5. பள்ளி நல்வாழ்வுத் திட்டம் :

இத்திட்டம் 153 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் 30 நகராட்சிகளிலும் நிறைவேற்றப்படுகிறது மருத்துவ அலுவலர்கள் மற்றும் நல்வாழ்வுப் பார்வையாளர்கள் அடங்கிய குழு பள்ளிக் குழந்தைகளின் உடல் நல மதிப்பீட்டை நடத்துகின்றன. இவ்வுடல் நலப் பரிசோதனைகளின்போது ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் உடன் இருத்தல் ஊக்குவிக்கப்படுகிறது. ஏனெனில், நல்வாழ்வுக் கல்வி விளக்கமளிப்பதற்கு இந்த சந்தர்ப்பம் பயன்படுத்திக் கொள்ளப்படலாம். உடல் நலக் குறைவுக்கான அறிகுறிகளுள்ள குழந்தைகளுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்படுகிறது. சிறப்புச் சிகிச்சை தேவைப்படும் குழந்தைகள் பெரிய மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர்.



இப்பள்ளிகளில் ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் சில எளிய நல்வாழ்வு மற்றும் நோய்கள் பற்றிய விபரங்களும் அவர்களின் உடல் நலத்தைப் பேணி பாதுகாத்துக் கொள்ளும் வழிமுறைகள் பற்றியும் சில அடிப்படை உண்மைகளைக் கற்பிக்க நல்வாழ்வுக் கல்வி விளக்கமும் அளிக்கப்படுகிறது. ஆசிரியர்கள் நல்வாழ்வுக் கல்விக் கொள்கைகளை அவர்களுடைய அன்றாட வகுப்பறைப் பாடங்களுடன் பின்னர் இணைத்துக் கொள்வார்கள். 1981–82 ஆண்டில் (31 டிசம்பர் வரை) உடல் நலப் பரிசோதனை செய்யப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 2,08,837, 1982-83 ஆம்—ஆண்டில் ஊரகப் பகுதிகளில் 7.20 இலட்சம் குழந்தைகளை பரிசோதனை செய்து ஒவ்வொரு குழந்தைக்கும் தனி நல்வாழ்வுப் பதிவுரு வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

6. மக்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துதல் :

தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் உட்பட மக்களில் நலிந்த பிரிவினரின் ஊட்டச் சத்து நிலையை மேம்படுத்துவதற்கு கீழ்க்கண்ட திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன :—

1. ஒருங்கிணைந்த சேய் நல வளர்ச்சித் திட்டம்.

2. கல்ராயன் குன்றுகளில் மலைவாழ் மக்கள் நல்வாழ்வுத் திட்டம்.

3. வைட்டமின் 'ஏ' மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக குழந்தைகளிடையே ஏற்படும் பார்வை இழப்பை தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல்.

4. சிறப்பு ஊட்டச்சத்துத்திட்டம் மற்றும் திருத்தப்பட்ட சிறப்பு ஊட்டச் சத்துத் திட்டம்.

5. நடைமுறை ஊட்டச் சத்துத் திட்டம்.

6. தமிழ்நாடு ஒருங்கிணைக்கப்பட்ட ஊட்டச் சத்துத் திட்டம்.

7. டானிஷ் உதவி பெறும் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்திட்டம்.

ஒருங்கிணைக்கப்பட்ட சேய்நல வளர்ச்சித் திட்டம் :

இத்திட்டம் தர்மபுரி மாவட்டம் தள்ளி வட்டாரத்திலும், மதுரை மாவட்டம் நிலக்கோட்டை வட்டாரத்திலும், சென்னை மாநகரின் குடிசைப்பகுதிகள் சிலவற்றிலும் தொடங்கப்பட்டது.

திட்டத்தின் நோக்கங்களாவன :

1. 0–6 வயது குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் நல்வாழ்வு நிலையை மேம்படுத்துதல்.

2. குழந்தையின் மன, உடல், சமூக வளர்ச்சி முறையாக அமைய அடித்தளம் அமைத்தல்.

3. குழந்தை இறப்பு, நலிவு ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் பள்ளியிலிருந்து இடையில் நின்றுவிடுதல் ஆகியவற்றைக் குறைத்தல்.

4. குழந்தை நல வளர்ச்சியை மேம்படுத்த இத்திட்டத்தை திறம்பட நிறைவேற்றுவதற்கு பல்வேறு துறைகளையும் ஒருமுகப் படுத்துதல்.

5. தாய்மார்களுக்கு உரிய ஊட்டச்சத்து மற்றும் நல்வாழ்வுக் கல்வி விளக்கம் அளிப்பதன்மூலம் குழந்தையின் ஊட்டச்சத்து தேவைகளையும் சாதாரண நல்வாழ்வுத் தேவைகளையும் திறம்பட நிறைவு அடையச் செய்தல்.

இக்குறிக்கோள்களை அடைய கீழ்க்கண்ட பணிகள் நிறைவேற்றப்படுகின்றன :—

1. பள்ளிப் பருவ முன்னிலைக் கல்வி.

2. குறை நிரப்பு ஊட்ட உணவு.

3. தடுப்பு ஊசி.

4. மருத்துவப் பரிசோதனை.

5. சிறப்பு சிகிச்சைக்கு அனுப்புதல்.

6. ஊட்டச் சத்து நல்வாழ்வுக் கல்வி விளக்கம்.

7. தாய்மார்களுக்கு முதியோர் கல்வி வழங்கி அதன் மூலம் அவர்களை தேசிய வாழ்வில் ஈடுபடுத்துதல்.

1976ல் தொடங்கப்பட்ட இத்திட்டம் 1981–82 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நிறைவேற்றப்படுகிறது.

7. கல்ராயன் குன்றுகளில் மலை வாழ்மக்கள் நல்வாழ்வுத் திட்டம்.

கல்ராயன் குன்றுகளிலுள்ள 103 கிராமங்களில் வாழும் மக்கள் இத்திட்டத்தினால் பலன் பெறுகின்றனர். மருத்துவ நல்வாழ்வும் பணியாளர்கள் அடங்கிய நடமாடும் மருத்துவப் பிரிவு கால முறைப்படி இக் கிராமங்களுக்கு சென்று மலைவாழ் மக்களுக்கு மருத்துவ மற்றும் நோய்த் தடுப்புப் பணிகளையும் புரிகிறது.



8. வைட்டமின் ‘ ஏ ’ மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக குழந்தைகளிடையே ஏற்படும் பார்வையிழப்பைத் தவிர்த்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் :

இத்திட்டம் ஒவ்வொரு மாவட்டத்திலும் நடைமுறை ஊட்டச்சத்துத் திட்டம் நிறைவேற்றப்படாத ஒரு வட்டாரத்தில் நிறைவேற்றப்படுகிறது. தாய்மார்கள் குழந்தைகளிடையே ஊட்டச்சத்துணர்வு தொடர்ந்து இருக்கத் தேவைப்படும் கல்வி விளக்கத்தை அளிப்பது இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். ஊரக பகுதி வாழ் மக்களின் நலனுக்குத் தேவைப்படும் கல்விச் சாதனங்களும் பொருட்களும் வழங்கப்படுகின்றன. உள்ளூரில் கிடைக்கத்தக்க ஊட்டச்சத்து மிக்க உணவுகளை உட்கொள்ள வேண்டியதன் இன்றியமையாமை மற்றும் ஊட்டச் சத்து குறைபாட்டினால் உண்டாகும் நோய்களைக் கண்டறிதல் ஆகியவை பற்றி நல்வாழ்வுப் பணியாளர்கள் விளக்கமளிக்கின்றனர்.

9. சிறப்பு ஊட்டச்சத்துத் திட்டம் :

நகர்ப்புற குடிசைப் பகுதிகள் மற்றும் மலைப் பகுதிகள் ஆகிய இடங்களில் வாழ்கின்ற சூலுற்ற தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் பள்ளிப் பருவமடையாக் குழநதைகள் ஆகியோரின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவது இத் திட்டமாகும். இத்திட்டம் 2 மாநகராட்சிகள் 33 நகராட்சிகள் மற்றும் 25 நகராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றில் செயல்படுத்தப் படுகிறது.

(1) திருத்தப்பட்ட சிறப்பு ஊட்டச்சத்துத் திட்டம் :

இத்திட்டம் சென்னை, மதுரை, கோவை மாநகராட்சிகள், புதுக்கோட்டை நகராட்சி ஆகியவற்றில் 79 நிலையங்களைக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தினால் 6 மாதம் முதல் 6 வயது வரையிலுள்ள குழந்தைகள் பயன் பெறுகின்றனர். குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனை, வைட்டமின் ‘ ஏ’ திரவம் மற்றும் இரும்புச் சத்து, போலிக் மாத்திரைகள், தடுப்பூசிகள் ஆகியவை உட்பட்ட மருத்துவ வசதிகளும் ஒரு வாரத்துக்குத் தேவைப்படுகின்ற வீட்டுக்கு எடுத்துச் செல்லப்படும் உணவுப் பொருளாக 700 கிராம பாலாஹார் கோதுமை கொடுக்கப்படுகிறது.

(2) கேர் நிறுவனத்தின் உணவு வழங்கு திட்டம். :

மக்கள் தொகையில் நலிந்த பிரிவினராக உள்ள பள்ளிப் பருவமடையாத குழந்தைகள் சூலுற்ற தாய்மார்கள் மற்றும் தாய்மார்கள் ஆகியோரிடையே ஊட்டச்சத்துக் குறைபாட்டை ஒழிக்கும் நோக்கத்துடன் கேர் நிறுவனம் ஒவ்வொருவருக்கும

நாள் ஒன்றுக்கு 80 கிராம் தானியங்கள் மற்றும் 7 கிராம் எண்ணெய் வீதம் இலவசமாக வழங்குகிறது. இவ்வாறு ஆண்டில் 300 நாட்களுக்கு 3,322 உணவு வழங்கு நிலையங்களில் இத்தகைய உணவு வழங்கப்படுகிறது. இந்நிலையங்களில் அரசு மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள் நடத்தும் நிலையங்களும் அடங்கும். இத்திட்டத்தினால் சுமார் ஒரு இலட்சம் பேர் பயனடைகின்றனர். (இவர்களுள் 80,000 பேர் பள்ளிப் பருவமடையாக் குழந்தைகள். பேறு காலத்துக்கு முந்திய மற்றும் பிந்திய தாய்மார்கள், எஞ்சியோர் ஆவர்.)

### 10. பிறப்பு இறப்புப் பதிவு :

பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களைச் சிறந்த முறையில் வகுத்து நிறைவேற்றுவதற்கு நம்பத்தக்க பிறப்பு-இறப்புப் புள்ளி விவரம் தேவையாகும். தமிழ்நாட்டில் பிறப்பு-இறப்புப் பதிவு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. 1969 ஆம் ஆண்டு மத்திய சட்டம் 18-இன் கீழ் பதிவுப் பணி நடைபெற்று வருகிறது. குடிமுறைப் பதிவுகள் மேம்பாடு அடைய மக்களிடையே தேவையான பிரச்சாரம் செய்ய வேண்டியுள்ளது. மக்கள் தொகையின் நம்பத்தக்க பிறப்பு வீதம் இறப்பு வீதம் ஆகியவற்றை மதிப்பிட மாநிலத்தில் மாதிரி பதிவுத் திட்டம் நடத்தப்படுகிறது.

### சிறு குழந்தை இறப்பு :

1978 ஆம் ஆண்டில் அனைத்திந்திய அடிப்படையில் சிறு குழந்தை இறப்புக் கணக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட்டது. அந்த ஆய்வறிக்கையின்படி நாடு முழுவதுக்குமாக சிறு குழந்தை இறப்பு வீதம் ஊரகப் பகுதிகளில் உயிருடன் பிறந்த 1,000 குழந்தைகளுக்கு 136 ஆகவும் நகர்ப்புறங்களில் உயிருடன் பிறந்த 1,000 குழந்தைகளுக்கு 70 ஆகவும் உள்ளது. தமிழ் நாட்டின் ஊரக மற்றும் நகர்ப் பகுதிகளுக்கான 1976 ஆம் ஆண்டு முதல் 1980 ஆண்டு வரையிலான காலத்துக்கு சிறு குழந்தை இறப்பு வீதம் வருமாறு :—

சிறு குழந்தை இறப்பு வீதம் (உயிருடன் பிறந்த ஒவ்வொரு 1,000 குழந்தைகளுக்கு.)

| ஆண்டு. | ஊரகப்பகுதி. | நகர்ப்பகுதி. | இணைந்தது. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1976 .. .. | 120.0 | 81.8 | 108.5 |
| 1977 .. .. | 130.7 | 73.3 | 113.4 |
| 1978 .. .. | 116.4 | 60.3 | 99.6 |
| 1979 .. .. | 111.1 | 63.3 | 98.5 |
| 1980 .. .. | 115.7 | 62.7 | 100.2 |





### 11. பலநோக்கு நல்வாழ்வு பணியாளர் திட்டம் :

தேசிய மலேரியா ஒழிப்பு பராமரிப்புத் திட்டம், பெரியம்மை ஒழிப்புத் திட்டம், தேசீய யானைக்கால் நோய் ஒழிப்புத் திட்டம் முதலான பல்வேறு திட்டங்களை அரசு நிறைவேற்றி வருகிறது. இத்திட்டங்கள் அந்தந்த திட்டப் பணியாளர்களால் 10,000 லிருந்து 20,000 மக்கட் தொகைக்கு ஒருவர் என்ற வீதத்தில் இருந்து நிறைவேற்றப்படுகின்றன. இப்பணியாளர்கள் அனைவரும் பல நோக்கு நல்வாழ்வு பணியாளர்களாக ஒருங்கிணைக்கப்பட்டு இவர்களின் மூலமாக எல்லா நல்வாழ்வுத் திட்டங்களையும் நிறைவேற்றக் கருதப்பட்டுள்ளது. ஆனால், இவர்கள் மக்கள் தொகையில் குறிப்பிட்ட ஒரு சிறு பகுதியினருக்கு அதாவது 5,000 பேருக்கு ஒருவர் வீதம் இருந்து அவர்களின் நல்வாழ்வுத் தேவைகளைக் கவனித்துக் கொண்டு சமுதாயத்தில் சிறு நோய்களுக்குச் சிகிச்சை அளித்து நல்வாழ்வு பணி புரிவார்கள்.

ஒவ்வொரு 4 ஆண் நல்வாழ்வுப் பணியாளர்களுக்கு ஓர் ஆண் மேற்பார்வையாளரும், ஒவ்வொரு 4 பெண் நல்வாழ்வுப் பணியாளர்களுக்கு ஓர் பெண் மேற்பார்வையாளரும் இருப்பர்.

செங்கற்பட்டு, தென்னார்க்காடு, மதுரை, கன்னியாகுமரி சேலம் மாவட்டங்களில் இத்திட்ட நிறைவேற்றத்துக்கு அரசு ஒப்பளித்துள்ளது. இம்மாவட்டங்களில் அமர்த்தப்படுவதற்காக 718 கூடுதல் துணைச் செவிலியர்கள், மற்றும் 177 கூடுதல் நல்வாழ்வுப் பார்வையாளர்கள் அமர்த்தப்படுவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதுவரை 691 துணைச் செவிலியர் மற்றும் 177 நல்வாழ்வு பார்வையாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். திருச்சிராப்பள்ளி, சேலம், திண்டுக்கல் மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் உள்ள துணைச் செவிலியர் பயிற்சி நிலையங்கள் சேர்க்கைத் தொகையை 30-லிருந்து 60 ஆக இரட்டிக்கவும், கடலூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம் காஞ்சீபுரம், நாகர்கோவில் ஆகிய இடங்களில் ஆண்டுதோறும் 60 பேருக்கு பயிற்சி அளிக்கத்தக்க 5 புதிய பயிற்சி நிலையங்களைத் தொடங்கவும் அரசு ஒப்பளிப்பு வழங்கி உள்ளது. மேலும் நான்கு பள்ளிகளைத் தொடங்கக் கருதப்பட்டுள்ளது.

### 12. தமிழ்நாடு ஒருங்கிணைக்கப்பட்ட ஊட்டச்சத்துத் திட்டம்.

(உலகவங்கி உதவியுடன்)

தமிழ்நாடு ஒருங்கிணைக்கப்பட்ட ஊட்டச்சத்துத் திட்டம் உலக வங்கியின் உதவி பெறுகிறது. 32 மில்லியன் டாலர்களுக்கான கடன் ஒப்பந்தம் 1980 ஆம் ஆண்டு மே திங்கள் 12 ஆம் நாளில் கையெழுத்தானது. உலக வங்கியின் ஆய்வுக் குழுக்கள் 1980 ஆம் ஆண்டு மேத் திங்களில் ஒன்றும், 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் ஒன்றுமாக இரண்டு குழுக்கள் தமிழ் நாட்டுக்கு வருகைதந்தன.

[1982 மார்ச் 11

குறிக்கோள்:

குழந்தைகள் இறப்பு வீதத்தை 25 சதவிகிதம் குறைக்கவும், குழந்தைகளிடையே சத்துக் குறைபாட்டு விளைவுகளைக் குறைப்பதும், கருத்தரித்த மற்றும் பாலூட்டும் தாய்மார் களிடையே ஊட்டச்சத்துக் குறைபாட்டு சோகை நோய் தோன்று தலைக் குறைப்பதும், இத்திட்டத்தின் நோக்கமாகும்.

திட்ட நிறைவேற்றம் :

மாநிலத்தில் இத்திட்டத்திற்கென்று தேர்ந்தெடுக்கப்பட்ட 1. மதுரை, 2. செங்கற்பட்டு, 3. வடார்க்காடு, 4. இராமநாத புரம், 5. திருநெல்வேலி, 6 புதுக்கோட்டை முதலான மாவட்டங் களில் இத்திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது. குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதற்கு அரசு மேற்கொள் ளும் முயற்சிகளின் திறனையும் பரப்பையும் செறிவையும் அதிகப் படுத்த எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட உள்ளன. கருத்தரித்த மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் பள்ளிப் பருவமடையாக் குழந்தைகள் முதலான ஊட்டச் சத்துக் குறை பாட்டு ஆபத்துக்கு ஆளாகக் கூடிய அனைவருக்கும் ஊட்டச் சத்து பற்றிய பணிகள் சென்றடையவும், ஊட்டச்சத்து தரத்தை மேம்படுத்தவும், இத்திட்டம் வழிவகுக்கும். பள்ளிப் பருவமடை யாக் குழந்தைகளிடையே ஏற்படும் இறப்பில் 90 சதவிகிதம் 3 வயதுக்கு குறைந்தவர்களிடையே ஏற்படுவதாகக் கணக்கிடப் பட்டுள்ளது. எனவே இத்திட்டத்தின் கீழ் 3 வயதுக் குட்பட்ட குழந்தைகளைக் குறியீட்டின் உள் அடக்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. 3 வயதுக்குக் குறைந்தவர்களிடையே ஏற்படும் இறப்பில் 75 சதவிகித அளவு ஊட்டச் சத்துக் குறை பாட்டினால் ஏற்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் இரு புதுமைக் கூறுகள் வருமாறு :

1. ஊட்டச்சத்து நிலைக் கண்காணிப்பு முறை ஏற்படுத்தப் பட்ட திட்ட மாவட்டங்களின் ஊரகப் பகுதிகளின் தகுதியுள்ள எல்லாக் குழந்தைகளும் கண்டறியப்பட்டு காலமுறைப்படி அவர் களின் முன்னேற்றம் கண்காணிக்கப்படுதல்.

2. குழந்தை போதுமான அளவு ஊட்டச்சத்து நிலையை அடையும் காலம் வரை தொடர்ந்து கூடுதல் சத்துணவு அளித்தல் மற்றும் திட்டத்திற்கு உட்பட்ட பகுதி குடும்பங்களில் வீட்டு உணவுப் பழக்கங்களில் நிலையான முன்னேற்றத்தை ஏற்படுத்தும் வகையில் குடும்பத்தின் முக்கிய உறுப்பினர்களுக்கு ஊட்டச் சத்துக் கல்வி விளக்கமளித்தல் ஆகியவை :—

திட்டத்தின் கூறுகள் :—

1. நல்வாழ்வுப்பணி.
2. ஊட்டச்சத்து வழங்குதல்.



1982 மார்ச் 11]

3. குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் கூடுதல் உணவு தயாரிப்பு.
4. இணை மதிப்பீடு.
5. ஊட்டச்சத்துக் கல்வி விளக்கம்.

நல்வாழ்வுப் பணிகளை வழங்குவது, நல்வாழ்வு மற்றும் தடுப்பு மருந்து இயக்குநரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஏனைய கூறுகள் பிற துறைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தொழில் நுட்பப் பயிற்சி, அமைப்பு முறை மேம்பாடு, ஒவ்வொரு 5,000 மக்கட் தொகைக்கும் 1 வீதம் புதிய கிளை நிலையத்துக் கான கட்டிடம் கட்டுதல், ஊர்திகள் கருவிகள் தட்டு முட்டுப் பொருட்கள் (மேசை நாற்காலிகள்) மருந்துகள் முதலியன வழங்கு தல் மற்றும் மேம்படுத்தப்பட்ட பணிகளை கால முறைப்படி ஊரக மக்களின் வீடுகள் தோறும் சென்று வழங்குதல் ஆகிய வற்றைக் குறிக்கோளாகக் கொண்டது இத்திட்டத்தின் நல்வாழ்வு பற்றிய கூறாகும்.

முதல் 3 ஆண்டுகளுக்கான வேலை முறை :

இத்திட்டம் 5 கட்டங்களாக நிறைவேற்றப்படும்.

முதற் கட்டம்.—மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி வட் டாரத்தில் 1980-81 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. (முன் மாதிரித் திட்டம்).

இரண்டாவது கட்டம் : (1981-82) :

மதுரை மாவட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட சேய் நல வளர்ச்சித் திட்டம் நிறைவேற்றப்படும். நிலக்கோட்டை வட் டாரம் நீங்கலாக ஏனைய 32 வட்டாரங்களிலும் நடைபெறும்.

மூன்றாவது கட்டம் (1982-83) :—

இராமநாதபுரம் மாவட்டத்தில் 32 வட்டாரங்கள், புதுக்கோட்டை மாவட்டத்தில் 10 வட்டாரங்கள்.

நான்காவது கட்டம் (1983-84) :—

அடுத்த 45 வட்டாரங்கள்.

ஐந்தாவது கட்டம் (1984-85) :—

ஏனைய 50 வட்டாரங்கள்.

[1982 மார்ச் 11

13. உணவில் கலப்படம் செய்தலை தடுத்தல் :—

உணவுப் பொருட்களில் கலப்படம் செய்தல் சமூகத்திற்கு இழைக்கப்படும் கடுமையான தீமையாகும். நல்வாழ்வுத் திட்டங்கள், மற்றும் நல்வாழ்வுக் கல்வி வழியாக இத்தீங்கினைக் கட்டுப்படுத்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. தொழில் நுட்ப வழிமுறை விளக்கம், மற்றும் தொழில் நுட்ப உணவுக் கட்டுப்பாடு நிர்வாகம், சட்டப்படி நல்வாழ்வு இயக்குநரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்துறையில் இவருக்குத் துணையாக ஒரு துணை இயக்குநர் மற்றும் உணவுக் கட்டுப்பாட்டு அமைப்பு உள்ளன.

இவ்வியக்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் பகுப்பாய்வகங்களும் இயங்குகின்றன. கிண்டி கிங் நிலையத்திலுள்ள அரசு பகுப்பாய்வாளர் ஆய்வகம், கோயம்புத்தூர், மதுரை, தஞ்சாவூர் உணவு பகுப்பாய்வகங்கள் ஆகியவற்றிலும் சட்டப்படிக்கான உணவுப் பொருள் மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. பாளையங்கோட்டை உணவு பகுப்பாய்வகத்தில் சட்டம் சாரா உணவு மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. சேலம் உணவு பகுப்பாய்வகம் அமைப்பு நிலையில் உள்ளது. சென்னையில் உள்ள பொது பகுப்பாய்வகம் (Pu'lic A alysi L b ratory) சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. சென்னை தேனாம்பேட்டையில் உள்ள உணவு மற்றும் மருந்து பகுப்பாய்வகம் மருந்து மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்வதுடன் சட்டம் சாரா உணவுப் பொருள் மாதிரிகள் மற்றும் ஆய்வு உணவு மாதிரிகளையும் பகுப்பாய்வு செய்கிறது.

சட்டம் செயல்படும் இடங்கள் :

1980 ஆம் ஆண்டு வரை திருத்தப்பட்ட 1954 ஆம் ஆண்டு உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டம், 3 மாநகராட்சிகளிலும், எல்லா 98 நகராட்சிகளிலும், 8 ந ரியங்களிலும், இரு இராணுவம் பகுதி வாரியங்களிலும் அதாவது தமிழ்நாட்டின் பெருநகர் மற்றும் நகர்ப்பகுதிகளில் 100 சதவீத பரப்பையும் உள்ளடக்கி செயல்படுத்தப்படுகிறது.

264. சிறு நகரப்பகுதிகளிலும் 69 ஊராட்சி ஒன்றியங்களின் ஊரகப்பகுதிகளிலும், உணவுப்பொருள் மாதிரி எடுப்பு வேலைக்கென்று சட்டத்தின் கீழ் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

உள்ளூர் நல்வாழ்வு அதிகாரிகள்.—

நகரப் பகுதிகளில், மாநகராட்சி நல்வாழ்வு அலுவலர்கள், நகராட்சி நல்வாழ்வு அலுவர்கள் மற்றும் நகராட்சி ஆணையர்கள் ஆகியோரும் ஊரகப்பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர்கள் ஆகியோரும் உள்ளூர் நல்வாழ்வு அதிகாரிகளாகப் பணிபுரிகின்றனர்.



1982 மார்ச் 11]

கடந்த மூன்றாண்டுகளில் உணவுப்பொருள் மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்ட புள்ளி விவரம் வருமாறு :—

| விவரம் | 1979—80 | 1980—81 | 1981—82 (81 டிசம்பர் வரை). |
|---|---|---|---|
| பகுப்பாய்வு செய்யப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை. | 16,994 | 19,530 | 15,179 |
| கலப்படம் செய்யப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை. | 2,404 | 2,349 | 1,654 |
| அபராதம் விதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை. | 735 | 677 | 490 |
| சிறைத்தண்டனை அளிக்கப்பட்டோரின் எண்ணிக்கை. | 304 | 197 | 169 |
| | ரூ. | ரூ. | ரூ. |
| வரவு வந்த அபராதத் தொகை. | 4,54,932 | 3,98,043 | 2,87,540 |

14. பூவிருந்தவல்லி மக்கள் நல்வாழ்வு நிறுவனம்—

பூவிருந்தவல்லி மக்கள் நல்வாழ்வு நிறுவனத்தில் 1, பணி 2. பயிற்சி 3, ஆராய்ச்சி பகுதிகள் உள்ளன. 1978 ஆம் ஆண்டில் நல்வாழ்வுக் கல்வி ஆசிரியர் பயிற்சிப்பிரிவும், மாணவர் நல்வாழ்வுக் கல்விப்பிரிவும், இந்நிறுவனத்தின்கீழ் கொண்டு வரப்பட்டன.

பூவிருந்தவல்லி நல்வாழ்வுப் பிரிவின் குறிக்கோள்களாவன:

1. செறிவாக நல்வாழ்வு பணிபுரிவதன் மூலம் ஊரகப் பகுதிகளில் நல்வாழ்வு நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.

2. நன்கமைந்த பணியாளர் அமைப்பு மற்றும் அவர்களின் பணியின்மூலம் ஊரக மக்களின் நல்வாழ்வு மற்றும் பல்வேறு நலன்களையும் எவ்வாறு மேம்படுத்த முடியும் என்பதைச் செயல் மூலம் விளக்கிக்காட்டுதல்.

3. நல்வாழ்வு பற்றிய எல்லாத் தன்மைகளையும், மருத்துவ மற்றும் நல்வாழ்வுப் பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோருக்குப் பயிற்சி அளித்தல்.

இந்நல்வாழ்வு பிரிவு 128,092 மக்கள் தொகையுள்ள 62 சதுர கிலோ மீட்டர் பரப்பில் அமைந்துள்ள 39 ஊர்களுக்குப் பணிபுரிகிறது. இப்பிரிவின் பணியைப் பெருக்குவதற்காக 1958 ஆம் ஆண்டில் ஒரு ஊரக நல்வாழ்வு நிலையம் இணைக்கப்பட்டுள்ளது. இந்நிலையம் மருத்துவ மற்றும் நல்வாழ்வு பணியாளர்களுக்கு மக்கள் நல்வாழ்வு பற்றிய அனைத்துத் தன்மைகளையும் மிகவும் தேவைப்படுகின்ற பயிற்சி வசதியினை அளிக்கிறது.

பணிப்பயிற்சி நிலையம் :

குறிக்கோள் :

1. ஆரம்ப நல்வாழ்வு நிலையங்களில் பணிபுரியும் மருத்துவ மற்றும் நல்வாழ்வுப் பணியாளர்களுக்கு பணிக்காலப்பயிற்சி அளித்தல்.

2. நல்வாழ்வு பணியாளர்களிடையே குழுவாக இணைந்து பணி புரியும் பழக்கத்தை ஏற்படுத்துதல் மற்றும் அவரவர் பணி அவை தொடர்பான பிரச்சினைகள் பற்றிய பயிற்சி அளித்தல்.

3. ஆரம்ப சுகாதார நிலைய பணியாளர்களுக்கு ஊரக நல்வாழ்வு வேலையில் நடைமுறைக் களப்பணி பயிற்சி அளித்தல்.

4. பல்வேறு நல்வாழ்வு திட்டங்களின் வெற்றிக்கு பல்வேறு வகை நல்வாழ்வுக் கல்வி முறைகள் மற்றும் சாதனங்களைப் பயன்படுத்தும் வகைகளைக் கற்பித்தல்.

ஆண்டுதோறும் 4 தொகுதியினருக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு தொகுதிக்கும் 8 வார கால பயிற்சி அளிக்கப்படும்.

மேலும் தமிழ் நாடு நல்வாழ்வு பணிகளில் புதிதாக அமர்த்தப்படுகின்ற நல்வாழ்வு அலுவலர்களுக்கு 3 வார காலத்துக்கு குறுகிய காலப் பயிற்சி ஒன்று நடத்தப்படுகிறது.

ஆராய்ச்சி—செயல் திட்டம்.

செங்கற்பட்டு, மதுரை, தஞ்சாவூர், திருநெல்வேலி மாவட்டங்களில் 4 ஆராய்ச்சி மற்றும் செயல் திட்டங்கள் அமைந்துள்ளன.





இவற்றின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பட்டியல் வருமாறு :—

தன்னிறைவுத் திட்டம்.—இத்திட்டம் ஊரக மக்களின் பொது நல்வாழ்வு நிலையை மேம்படுத்தவும் ஊரக சுற்றுப்புறத்துப்புரவை மேம்படுத்தவும் அமைந்தது. எல்லா மாவட்டங்களிலும் தன்னிறைவுத் திட்ட வட்டாரங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊர்களில் 4 இருக்கை கொண்ட சமுதாயக் கழிப்பிடங்கள்களைக் கட்ட டிசம்பர் 1980-ல் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

(2) யூ. என். டி. பி. துப்புரவுத் திட்டம்.—நகராட்சி பொறியாளர்களுக்கு நல்வாழ்வு பொறியாளர்கள் கழிப்பிடம் கட்டுதல் பற்றிய விளக்கம் அளிக்கின்றனர். இத்திட்டம் மண் துப்புரவு திட்டத்திற்கும் வழிமுறை விளக்கமளிக்கிறது. மேலும் தமிழ்நாட்டில் உணவுப் பண்டங்களைக் கையாள்வோர் பற்றிய ஆய்வையும் இரத்த சோகை பற்றிய ஓர் ஆய்வையும் நடத்தி உள்ளது. சமுதாயத்தில் குறிப்பாக நலிந்த பிரிவினரிடையே பரவியுள்ள இரத்த சோகையின் அளவைப் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதற்கு இரத்தச் செம்மை பரிசோதனை மூலம் இரத்தசோகை பற்றிய ஆய்வு நடத்தப்பட்டது சமுதாயத்தில் இரத்த சோகையின் அளவைக் கண்டறிந்த பின்னர், பரிசோதனைக் காரியங்களுக்காக உடலுக்கு உரமூட்டும் சத்து மாத்திரைகளை வழங்குவதற்கு ஆராய்ச்சி செயல் திட்டம் கருதியுள்ளது.

15. நல்வாழ்வுக் கல்வி ஆசிரியர் பயிற்சிப் பிரிவு :

மாநிலத்திலுள்ள பல்வேறு பள்ளி ஆசிரியர்களுக்கு நல்வாழ்வுக் கல்வியில் பயிற்சி அளிப்பதற்கு நல்வாழ்வுக் கல்வி ஆசிரியர் பயிற்சி பிரிவைத் தொடங்க அரசு 1970-ல் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

குறிக்கோள் :

சமுதாயத்திலும் பள்ளிகளிலும் நல்வாழ்வு மேம்பட ஆசிரியர்களின் கடமை பற்றி உணர்த்தவும் புரிந்து கொள்ளவும் வகை செய்தல்.

திட்டமிடல் மற்றும் நிறைவேற்றல் :

இப்பயிற்சி திட்டத்தில் அறிஞர் கலந்துரையாடல், குழு விவாதம், ஒலி ஒளி கருவிகள் பயன்படுத்துதல், கள செய்முறை விளக்கம் முதலான பல்வேறு கல்வி முறைகளை பொருத்தமான முறையில் தேர்தெடுத்து பின்பற்றப்படுகிறது.

பல்வேறு நல்வாழ்வுக் கல்வி தொழில் நுட்பத் திறமைகளில் வல்லுனர்களாக உள்ளவர்களைக் கொண்டு விரிவுரைகளுக்கு ஏற்பாடு செய்து இப்பயிற்சித் திட்டம் மேலும் பயனுள்ளதாக அமைய வழி செய்யப்படுகிறது, கருத்துரை விளக்க வகுப்பு களில் எடுத்துக் கூறப்பட்ட நல்வாழ்வுப் பொருட்களைப்பற்றி மேலும் நல்லமுறையில் புரிந்து கொள்வதற்கு வசதியாக பயிற்சியாளர்கள் பல்வேறு நல்வாழ்வு நிறுவனங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். இதுவரை பி. டி பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் 103 பேர்களுக்கு 6 தொகுதிகளாக பயிற்சி அளிக்கப்பட்டது, மேலும் பல்வேறு உயர்நிலை மேல்நிலை பள்ளித் தலைமை ஆசிரியர்கள் 33 பேருக்கு இரண்டு தொகுதிகளாக பயிற்சி அளிக்கப்பட்டது.

1981–82 ஆண்டில் பிற வேலைகளாவன :

(1) பள்ளி மற்றும் சமுதாய நல்வாழ்வுத் திடடம்,

(2) பள்ளி நல்வாழ்வு அட்டை பற்றிய பரிசோதனை (School Healtn Card).

(3) சமுதாயம் மற்றும் பள்ளி சார்ந்த நல்வாழ்வுப் பணியாளர்களுக்கான ( S.C.E.R.T.) நடத்திய கருத்தரங்கம்.

1982–83-ல் ஒரு கருத்தரங்கம் நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதில் ஏற்கனவே பயிற்சி பெற்ற சில தலைமை ஆசிரியர்களும் கலந்து கொள்வார்கள். ஆசிரியர் பயிற்சி படிப்பின் பாடத்திட்டத்தை சீராய்வு செய்வதே கருத்தரங்கின் நோக்கமாகும்.

மாணவர் நல்வாழ்வுக் கல்விப் பிரிவு :

இப்பிரிவு சொறிநோய், இரத்த சோகை, மாலைக்கண், வாய்ப்புண் (மைனாவாய்), காசநோய், மஞ்சள் காமாலை, மலேரியா, யானைக்கால் நோய் மற்றும் பிறப்பு–இறப்புப், புள்ளி விவரம் முதலான பல்வேறு பொருள் பற்றி கல்வி, சாதனம் தயாரித்துள்ளது. மக்கள் தொகை பெருக்கம் பற்றி ஆரம்ப நடுநிலை உயர்நிலைப் பள்ளிகளுக்கான மாதிரிச் பாடங்களுக்கு பின்னணி தகவல்களைத் தயாரித்து வழங்கு கிறது. 2, 3, 4. 5 வகுப்புகளுக்கு கேர் நிறுவனம் தயாரித்த நல்வாழ்வுக் கல்வி வெளியீடுகளைச் சீராய்வு செய்து வருங்கால மறுபதிப்புகளுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்கி உள்ளது.

16. நல்வாழ்வு கல்வி:

மக்கள் நல்வாழ்வு மற்றும் தடுப்பு மருந்து இயக்ககத்தின் மாநில நல்வாழ்வுக் கல்வி நிலையம் கீழ்க்கண்ட நோக்கத்துடன் நல்வாழ்வுக் கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது :—



(1) மக்கள் தங்களின் நல்வாழ்வு பிரச்சினைகளை அறிந்து கொள்ள உதவுவது.

(2) மக்களுக்கு கி.பி. 2000 ஆண்டுகளுக்குள் நல்வாழ்வு அளிக்கும் நோக்கத்துடன் நல்வாழ்வுக் கல்வி அளித்து உதவுவது.

(3) நல்வாழ்வுப் பணியாளர்கள் நல்வாழ்வுக் கொள்கை களையும் திட்டங்களையும் நன்கு புரிந்துகொண்டு, திட்டக் குறிக்கோளை அடைய நல்வாழ்வுக் கல்வியின் மூலம் உதவுதல்.

(4) மக்கள் தங்களின் சொந்த முயற்சிகளிலும் கூட்டுறவு முயற்சியிலும் முடிவெடுத்து தங்கள் பிரச்சினை களைத் தீர்த்துக்கொள்ள உதவுவதில் நல்வாழ்வுப் பணியாளர் களுக்குத் தக்க பயிற்சி அளித்தல்.

மக்களுக்கு நல்வாழ்வுக் கல்வி சிறு குழு விவாதம் மூலமாக வும் தனிப்பட்டவர்களைச் சந்திப்பதன் மூலமாகவும் நல்வாழ் வுக் கல்விச் சாதனங்களைக் கொண்டு விவாதிக்கப்படுகின்றது. இது ஆக்கத் திட்டப்பணிகளுக்கு பல்வேறு வழிமுறைகளில் உதவுகின்றது.

நல்வாழ்வுக் கல்வியின் பணிகள் பல்வேறு திட்டங்களில், அந்த திட்ட அலுவலர் மூலம் கீழ்க்கண்டவாறு நிறை வேற்றப்படுகின்றன:—

(1) ஆரம்ப சுகாதார நிலையங்களில் நல்வாழ்வுக் கல்வி பற்றிய செயல் முறை விளக்கம் அளித்தலும் பயிற்சி கொடுத் தலும் மற்றும் மாவட்டங்களின் பின்தங்கிய பகுதிகளிலும் மலைப்பகுதிகளிலும் நல்வாழ்வு கல்வி பற்றிய முக்கியத்துவம் குறித்து அறிக்கை தருதல்.

(2) 20 அம்ச பொருளாதார திட்டத்திற்கு முக்கியத் துவம் அளித்து சோமங்கலம் கிராம சீரமைப்பு ஆக்கப் பணியில் சுகாதாரம் மற்றும் நல்வாழ்வுக் கல்வி கொடுக்கப்பட்டு வருகின்றது.

(3) ஆரம்ப பள்ளி ஆசிரிய-ஆசிரியைக்கு பயிற்சி.

(4) நல்வாழ்வுக் கல்விப் பயிற்சி எல்லா நிலைகளிலும் அதாவது களப்பணியாளர்களுக்கும் பலநோக்கு பணியாளர்களாக பயிற்சி பெறுபவர்களுக்கும் மற்றும் நல்வாழ்வுத் துறையைச் சார்ந்த அனைத்துப் பணியாளர்களுக்கும் கொடுக்கப்பட்டு வருகின்றது.

(5) தேசிய மாணவர் சேவைத் திட்டத்தில் மாணவர் களுக்கு சமுதாய சத்துணவுத் திட்டம். நல்வாழ்வில் அவர்கள் பங்கு போன்றவைகளுக்குப் பயிற்சி அளித்தல்.

[1982 மார்ச் 11

(6) நகர்ப்புற மருத்துவமனைகளில் நல்வாழ்வு கல்வி பயிற்சி மற்றும் எல்லா மாவட்டங்களிலும் ஏனைய இடங்களிலும் பொருட்காட்சி அமைத்தல்.

(7) தனியார் துறை நிறுவனத்தினருக்கும் சிறு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் நல்வாழ்வுக் கல்வி அளித்து உதவுதல்.

## IV. மருந்து கட்டுப்பாட்டு நிர்வாகம்.

ஹாதி கமிட்டியின் பரித்துரைகளின்படி இம்மாநிலத்தில் ஒரு மாநில மருந்து கட்டுப்பாட்டு அதிகாரியை தலைவராகக் கொண்டு தனித்துறையாக அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின் நேரடி கட்டுப்பாட்டில் மருந்து கட்டுப்பாட்டு நிர்வாகம் தனியாக செயல்பட வேண்டுமென அரசு முடிவெடுத்து அதன்படி ஆணையிட்டது. தற்போதைய அமைப்பின்படி மாநில மருந்து கட்டுப்பாட்டு அதிகாரியை தலைவராகக் கொண்டு மருந்து கட்டுப்பாட்டு நிர்வாகம் தனித்துறையாக 26–11–1981 முதல் இயங்கி வருகிறது. அவருக்கு உதவியாக சென்னையில் இரண்டு துணை மாநில மருந்து கட்டுப்பாட்டு அதிகாரிகளும் மற்றும் 10 உதவி மாநில மருந்து கட்டுப்பாட்டு அதிகாரிகளும். 59 மருந்து ஆதரவளர்களும் இந்நிர்வாகத்தில் உள்ளனர். உரிமங்கள் வழங்கும் அதிகாரங்களை பரவலாக்கும் பொருட்டு இப்புதிய அமைப்பில், மருந்து கட்டுப்பாட்டு நிர்வாகத்தின் தலைவர் என்ற முறையில் மாநில மருந்து கட்டுப்பாட்டு அதிகாரி இந்நிர்வாகத்தின் முழு நிர்வாக பொறுப்பினையும் ஏற்று நடத்துவார். மேலும் அவர் அரசினரால் நியமிக்கப்பட்ட எல்லா மருந்து ஆய்வாளரையும் நிர்வகிக்கும் அதிகாரியாக விளங்குவார். ஒரு துணை மாநில மருந்து கட்டுப்பாட்டு அதிகாரி ஹோமியோபதி தவிர மற்ற மருந்துகளைத் தயாரிக்க அனுமதிக்கும் உரிமங்களை வழங்கும் அதிகாரியாகவும் மற்றொரு துணை மாநில மருந்து கட்டுப்பாட்டு அதிகாரி ஹோமியோபதி, ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகள் மற்றும் ஒப்பனைப் பொருட்கள் தயாரிக்க அனுமதிக்கும் உரிமங்களை வழங்கும் அதிகாரியாகவும் அமைவார்கள்; உதவி மாநில மருந்து கட்டுப்பாட்டு அதிகாரிகள் மருந்துகள் விற்பனை செய்ய அனுமதிக்கும் உரிமங்களை வழங்கும் மற்றும் மருந்து தயாரிக்க அனுமதிக்கும் உரிமங்களை புதுப்பிக்கும் அதிகாரங்களையும் உடையவர்களாவார்கள். இம்மாநிலம் பத்து பகுதிகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு உதவி மாநில மருந்து கட்டுப்பாட்டு அதிகாரியும், அவரவர் பகுதிகளில் மருந்துகள் விற்பனை செய்ய அனுமதிக்கும் உரிமங்களை வழங்கும் பொறுப்பை உடையவர்களாவர்.



1982 மார்ச் 11]

பரிசோதனைக்கு எடுக்கப்படும் மாதிரி மருந்துகள், தேனாம்பேட்டையிலுள்ள மருந்து பரிசோதனை கூடத்திலும், கிண்டியிலுள்ள கிங் நிலையத்திலும் பரிசோதிக்கப்படுகின்றன.

காவல் துறையினர் உதவியுடன் கலப்பட மருந்துகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்காகவும் இந்நிர்வாகத்தில் ஒரு தனி பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## V. மாநில சுகாதார போக்குவரத்து அமைப்பு இயக்குநரகம்.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறையின் கட்டுப்பாட்டின் கீழுள்ள பல இயக்குநரகங்களால் செயல்படுத்தப்படும் பல்வேறு சுகாதாரம் மற்றும் மருந்துவப் பணிகளில் மொத்தம் 1516 மோட்டார் வண்டிகள் உள்ளன, செயலற்று போகும் வண்டிகளின் எண்ணிக்கையை மிகக் குறைந்த அளவில் வைத்துக்கொள்ள, மோட்டார் வண்டிகளின் பராமரிப்பு மற்றும் சேவை ஆகியவற்றை மாநில சுகாதார போக்குவரத்து நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்காக இந்நிறுவனத்திற்கு சென்னை, மதுரை, சேலம் ஆகிய இடங்களில் மூன்று மண்டலபழுது பார்ப்பு நிலையங்களும் திருச்சிராப்பள்ளியில் ஒரு மத்திய பழுது பார்ப்பு நிலையமும் மாவட்ட தலைமையிடங்களில் 15 நடமாடும் பழுது பார்ப்பு நிலையங்களும் உள்ளன.

மோட்டார் வண்டிகளின் நடமாட்டத்தை அதிகரிப்பதற்கும் செயலற்ற நிலையிலுள்ள வண்டிகளின் எண்ணிக்கையை குறைப்பதற்குமாக பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துதுறையின் ஒரு அங்கமாக இருந்த மாநில சுகாதார போக்குவரத்து நிறுவனத்தை 1981 சூலை திங்களில் தனியாகப் பிரித்து ஒரு இயக்குநரின் கீழ் ஒப்படைக்கப்பட்டது. இவ்வியக்குநரகம் மாநில அரசின் கீழ் இயங்கி வருகிறது. மாநில சுகாதாரப் போக்குவரத்து அலுவலர் மாநில சுகாதாரப் போக்குவரத்து இயக்குனராக மாற்றப்பட்டுள்ளார். இவருக்கு மோட்டார் வண்டிகள் பராமரிப்பு நிறுவனத்தின் இயக்குநரைப்போல் அதிகாரங்களை பயன்படுத்தலாம் என்றும் அரசு பணித்துள்ளது. 1982–83 ஆம் ஆண்டில் மோட்டார் வண்டிகளை பழுது பார்க்கவும் பராமரிக்கவும் கீழ் கண்ட ஆறு மாவட்டங்களில் பழுது பார்ப்பு மற்றும் பராமரிப்பு நிலையங்கள் ஏற்படுத்துவதற்காக அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

1 தென்னாற்காடு மாவட்டம்
2 பெரியார் மாவட்டம்
3 தஞ்சாவூர் மாவட்டம்
4 இராமநாதபுரம் மாவட்டம்
5 திருநெல்வேலி மாவட்டம்
6 நீலகிரி மாவட்டம்

இவற்றிற்குத் தேவையான தொழில் நுட்ப பணியாளர்களை அமர்த்துவதற்கு தொடரும் செலவாக ரூ 5.18 லட்சமும் கருவிகள் அமைக்க ரூ. 80,000 செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது

செயல்பட உகந்ததல்ல என கருதப்படும் பழைய வண்டிகள் இந்நிறுவனத்தின் கீழ் ஏராளமாக உள்ளன. அரசு இவ்வண்டிகளை படிப்படியாக மாற்றி வருகிறது. 1980–81-ல் இது போன்ற 100 வண்டிகள் மாற்றப்பட்டு புது வண்டிகள் வாங்கப்பட்டன. 1982–83-ல் 20 வருடங்களுக்கு மேல். பழக்கமுள்ளமேலும் 50 வண்டிகளை மொத்தம் ரூபாய் 40·10 லட்சம்செலவில் மாற்ற உதேசிக்கப்பட்டுள்ளது. தனி இயக்குநராக மாற்றப்பட்டதின் விளைவாக வண்டிகளைப் பயன்படுத்தும் விழுக்காடு கணிசமாக உயர்ந்துள்ளது. கீழே குறிப்பிட்டுள்ளவாறு 1–1–81-ல் 70.4 சதவீதமாக இருந்த வண்டிகள்பயன்படுத்தல் விழுக்காடு 1–1–82-ல் 82 சதவீதமாக உயர்ந்துள்ளது.

| | எண்ணிக்கை | செயல்படுபவை | விழுக்காடு சதவீதம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1.1.81 | 1,528 | 1,076 | 70.4 |
| 1.1.82 | 1,516 | 1,244 | 82 |

1982–83-ல் உத்தேசிக்கப்பட்டுள்ள 6 பழுதுபார்ப்பு நிலையங்களும் செயல்படுத்தப்பட்டவுடன் வண்டிகளை பயன்படுத்துத் திறன் மேலும் உயருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## VI. சுற்றுப்புறத் தூய்மை கெடுதலைத் தடுத்தல்.

கடந்த சில ஆண்டுகளாக, தொழிற்சாலைகளின் வளர்ச்சி மிகுந்துள்ளது. அதன் பயனாக தொழிற்சாலைகள் திட, திரல மற்றும் வாயு கழிவுப் பொருட்களை அதிகமாக வெளியிட்டு சுற்றுப்புறத் தூய்மையை கெடுத்துக் கொண்டிருக்கின்றன. எனவே சுற்றுப்புறத்தை பேணிக்காப்பதும் தூய்மைக் கெடுதலை கட்டுப்படுத்துவதும் தடுத்தலும் மிகவும் அவசியமாக உள்ளது.

2. தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் கழிவு நீரினால் சுற்றுப்புறம் மாசடைவதை கட்டுப்படுத்த நீர்பகுப்பாய்வகங்கள் இரண்டு (ஒன்று கிண்டியிலும் மற்றொன்று கோவையிலும்) உள்ளன. நகராட்சிகள் நகரப்பஞ்சாயத்துகள், புகைவண்டி நிலையங்கள் சிறைச்சாலைகள், மருத்துவமனைகள் விமான நிலையங்கள் முதலியவைகளிலுள்ள நீரின் மாதிரிகளை எடுத்துப் பரிசோதித்து வருவதுடன் இப்பகுப்பாய்வகங்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் தொழிற்சாலைகளின் கழிவுநீர்





மற்றும் சாக்கடை நீர் முதலியவைகளை பகுத்து ஆராய்ச்சி செய்கிறது. புதிதாக வழங்கப்படும் குடிநீர் திட்டங்களிடமிருந்து மாதிரிகள் எடுக்கப்பட்டு ஆய்வு செய்யப்படுகிறது.

3. மாநிலத்தில் துரிதமாக தொழில்மயமாதல் நடைபெறுவதால் அதனால் எதிர்காலத்தில் சுற்றுப்புறத்திற்கு ஏற்படும் தீமைகள் குறித்து பொதுசுகாதாரம் மற்றும் தடுப்பு மருத்துவ இயக்குநர் அதிக கவனம் செலுத்தி வருகிறார். தோல் பதனிடும் தொழிற்சாலைகள், எரிசாராயத் தொழிற்சாலைகள், உரத் தொழிற்சாலைகள், சிமென்ட் ஆலைகள் அனல் மின் நிலையங்கள் முதலியவைகளில் இருந்து வெளிவரும் கழிவுப் பொருட்களின் தன்மை பற்றி கவனம் செலுத்தப்படுகிறது. இந்த ஆலைகள் தொடங்குவதற்கு முன்பாக பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநரிடமிருந்து சுகாதாரச் சான்றிதழ் (Health Clearance Certificate) பெற வேண்டும். இச் சான்றிதழ் கொடுப்பதற்கு முன்பாக அத்தொழிற்சாலை வெளியிடும் கழிவுப் பொருட்கள். தொழிலாளர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வசதிகள் சுற்றுப்புறம் முதலியன பற்றி ஆராயப்படுகிறது.

4. சுகாதாரச் சான்றிதழ் கொடுக்கும் பொழுது தொழிலின் தன்மை, இடம், அளவு, வெளியிடப்படும் கழிவுப் பொருட்களின் குணம், கழிவுப்பொருட்களை தூய்மைப்படுத்தும் முறை அப்புறப்படுத்தும் முறை அப்புறப்படுத்தும் இடம் முதலியன இந்திய தர நிர்ணய நிறுவனத்தின் அளவு கோலுக்கு பொருந்தி உள்ளனவா என்பது பற்றி பரிசீலிக்கப்படுகிறது. இதன்படி 1980ஆம் ஆண்டில் 103 சுகாதாரச் சான்றிதழ்களும், 1981ஆம் ஆண்டில் 130 சுகாதாரச் சான்றிதழ்களும் தொழிற்சாலைகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

5. சுற்றுப்புறச் சூழல் பிரச்சனைகளில் முக்கியமானதொன்று மாசுப்பிரச்சனையாகும். இப்பிரச்சனையின் முக்கியத்துவத்தை உணர்ந்து தொழிற்சாலைகளிலிருந்து சுத்திகரிக்கப்படாமல் வெளியாகும் கழிவுப்பொருட்களாலும், பூச்சி கொல்லி மருந்துகள், ரசாயன உரங்கள் உபயோகிப்பதனாலும், சுற்றுப்புறம்மாசுபடுவதை ஆராய்வதற்காக தமிழக அரசு 1972 ஆம் ஆண்டு சூழல்நலவியல் துறையை நிறுவியுள்ளது. இத்துறையில் தலைமைப் பொறியாளர் நிலையில் ஒரு தனி அலுவலரும் ஒரு நிர்வாகப் பொறியாளர் இரண்டு உதவி நிர்வாகப்பொறியாளர்களும் உள்ளனர். இத்துறை ஆலோசனை கூறும் அமைப்பாக செயல்படுகிறது.

6. மாநிலத்தில் சுற்றுப்புற சூழல் மாசுப்படுவதற்குக் காரணமாக உள்ள தொழிற்சாலைகள் சூழல் மாசுறுவதைத் தவிர்க்க என்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளன என்பதை

அறிய இத்துறை அத்தொழிற்சாலைகளைப் பார்வையிடு கிறது. அரசிடமிருந்து வரும் மாசுப் பிரச்சனைகளை ஆராய்ந்து தடுப்பு நடவடிக்கைகள் பற்றி தேவையான ஆலோசனை கூறுகிறது. உற்பத்தி செய்யும் பொருட்கள், மூலப்பொருட்கள் உபயோகிக்கும் தண்ணீர் அளவு, கழிவுகளின் தன்மை மற்றும் அளவு சுத்திகரிப்பு முறைகள் முதலியனபற்றி தொழிற்சாலை களிடமிருந்து விவரங்கள் சேகரித்து ஒரு விபரப்பட்டியலைத் இத்துறை தயாரித்து வருகிறது. 5,000 மற்றும் அதற்கும் அதிகமான மக்கள் தொகை உள்ள உள்ளாட்சி நிறுவனங்களில் தண்ணீர் மற்றும் வடிகால் வசதி பற்றிய விபரங்களையும் இத்துறை சேகரித்து வருகிறது.

7. 1974 ஆம் ஆண்டு நீர்தூய்மை கெடுதல் (கட்டுப்படுத்தல்) சட்டம் ஒன்றை மத்திய அரசு நிறைவேற்றி உள்ளது. தமிழக இரு சட்ட மன்றங்களும் இந்த சட்டத்தை அங்கீகரித்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளன. நீர் மாசுபடுவதை தடுக்க ஒரு சட்டபூர்வமான வாரியம் அமைக்க இந்த சட்டம் வழி செய்கிறது. அதன்படி 27–2–1982 லிருந்து செயல்பட வேண்டி இவ்வரசு தமிழக நீர்தூய்மை கெடுதல் மற்றும் கட்டுப்படுத்தல் வாரியம் ஒன்றை அமைத்துள்ளது. சூழல் மாசுறுவதைத் தடுக்க 1982–83 ஆம் ஆண்டு 2-வது பகுதி திட்டத்தில் ரூ. 5 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வாரியம் 1978 ஆம் ஆண்டு நீர் (தூய்மைக் கெடுதல் கட்டுப்படுத்தல்) செஸ் சட்டத்தையும் 1981 ஆம் ஆண்டு காற்று (தூய்மை கெடுதல் கட்டுப்படுத்தல்) சட்டத்தையும் நடைமுறைப்படுத்தும் பொறுப்பை நிர்வகிக்கும்.

8. சுற்றுப்புற சூழ்நிலையை பாதுகாப்பது, பல்வேறு துறை களில் ஒரு முக்கிய பணியாகும். பல்வேறு துறைகளின் செயல் களையும் இணைத்து நடத்துவதற்கு ஓர் உயர்மட்டக் குழு அவசியமாகும். மாநிலத்தில் சுற்றுப்புறச் சூழல் பற்றிய கொள்கைகளை வகுப்பதில் அரசுக்கு ஆலோசனை வழங்கவும் வளர்ச்சிப்பணிகள் சுற்றுப்புறச் சூழலுடன் இணைந்துள்ளதா என்று பரிசீலிக்கவும், தமிழக அரசு சூழல் நலவியல் கழகம் என்ற ஓர் உயர்மட்டக் குழுவை நிறுவியுள்ளது. மேதகு ஆளுநர் இதன் தலைவராகவும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் இதன் துணைத் தலைவராகவும் உள்ளனர். தனி அலுவலர் (சூழல் நலவியல் துறை) இதன் உறுப்பினர்-செயலாளர் ஆவார். சூழல் நலவியல் துறை இக்கழகத்தின் அலுவலகமாகப் பணி புரிகிறது. இதுவரை இக்கழகம் 8 முறை கூடியுள்ளது. 20 லட்சம் ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள வளர்ச்சித் திட்டங் களினால் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புப் பற்றியும் அதைத் தடுக் கும் நடவடிக்கைகள் பற்றியும் இக்கழகம் ஆய்வு செய்கிறது.

9. பறவைகள் மோதலினால், விமானங்களுக்குத் தொல்லை கள் ஏற்படுகின்றன. இதைத் தவிர்க்க விமான நிலையங்களைச் சுற்றியுள்ள சுற்றுப்புறம் சுத்தமாக இருக்க வேண்டும். இதைக்



கருத்தில் கொண்டு மக்கள் நல்வாழ்வுத்துறை ஆணையர் மற்றும் செயலாளரைத் தலைவராகவும் மற்றும் 23 பேர்களை உறுப் பினராகவும் கொண்ட ''விமான நிலைய சுற்றுப்புற பாது காப்புக் குழு' ஒன்று 1980-ல் அரசால் நிறுவப்பட்டுள்ளது. விமான நிலையம் விமானப் படை விமான நிலையங்களிலிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு உள்ள சுற்றுப்புறங்களைக் காக்க தேவையான நடவடிக்கைகளைப் பற்றி இக்குழு ஆராயும். இக்குழு, தனது முதலாவது கூட்டத்தை 28—1—1982 ஆம் தேதி நடத்தி, எதிர்காலத்தில் நிறைவேற்ற வேண்டிய செயல்கள் குறித்து விவாதித்து முடிவு செய்தது.

10. தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் இருந்து வெளி யிடப்படும் கழிவு நீரைத் தூய்மைப்படுத்தும் பிரச்சினையை ஆராய்வதற்கு அரசு ஒரு குழுவை ஏற்படுத்தியுள்ளது. அக் குழுவின் அறிக்கை அரசுக்கு கிடைத்த பின் சிறிய தோல் தொழிற்சாலைகள் மற்றும் பொதுமக்கள் முதலியோர்களுக்கு ஏற்படுகின்ற தொல்லைகளை களைய அரசு நடவடிக்கைஎடுக்கும்.

**கழிவு நீர் போக்கு மற்றும் குடிநீர் வழங்கல்.**

**முகவுரை :**

''தன்னிறைவுத் திட்டம்'' என்னும் திட்டத்தின்படி இந்த மாநிலத்திலுள்ள அனைத்துக் குடியிருப்புக்களுக்கும், பாது காக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கான எல்லா முயற்சிகளை யும் தமிழக அரசு மேற்கொண்டுள்ளது. இருபது அம்சத் திட்டத் தின் முக்கிய அம்சமான ''குடிநீர் வசதி'' அரசின் தனிக்கவனத் தால் சிறப்பான முன்னேற்றம் அடைந்துள்ளது.

நகர்புற குடிநீர் திட்டங்களுக்கும் முக்கியத்துவம் அளித்து பல்வேறு திட்டங்கள் இதுவரை நிறைவேற்றப்பட்டு மேலும் பல செயலாக்கத்திலும் உள்ளன. சென்னைப் பெருநகர் தவிர்த்து தமிழ்நாடு முழுவதும், குடிநீர் வசதித் திட்டங்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயலாக்குகிறது. சென்னை நகரைப் பொறுத்த மட்டில் இவ்வசதிகளை சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் நிறைவேற்றுகிறது.

2. ஊரகக் குடிநீர்த் திட்டம்.

தமிழக அரசு, ஊரகப் பகுதிகளிலுள்ள அனைத்துக் குடியிருப்புக்களுக்கும், குறித்தகாலவரைக்குள், குடிநீர் வழங்குவதென முடிவு செய்துள்ளது. எனவே இதற்கான வகையில்

[1982 மார்ச் 11

ஒரு விஞ்ஞான ரீதியான கணக்கெடுப்பு மேற்கொண்டு, அதனடிப்படையில் அனைத்துக் குடியிருப்புகளும் கீழ்க்கண்ட வகைகளாகப் பிரிக்கப்பட்டன :—

| வகை. | விளக்கம். | குடியிருப்புகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | குடியிருப்புகளுக்குள் நீர் மூலங்களே இல்லாத குடியிருப்புகள் .. | 3,567 |
| 2 | குடிக்கத்தகுதியற்ற நீர் மூலங்கள் உடைய குடியிருப்புகள் .. | 2,051 |
| 3 | குடிக்கத் தகுதியுள்ள நீர் மூலங்கள் கொண்ட ஆனால் அனைத்து பருவத்திலும் நீர் கிடைக்காத குடியிருப்புகள் .. .. .. .. | 6,487 |
| 4 | குடிப்பதற்கு ஏற்ற மற்றும் அனைத்து பருவங்களிலும் நீர் கிடைக்கும் குடியிருப்புகள், ஆனால் நீர் நிலைகள் தனி நபருக்கு சொந்தமாக அல்லது பாதுகாக்கப்படாத நீர் மூலங்கள் கொண்டது .. .. | 4,955 |
| 5 | குடியிருப்புக்குள்ளே நல்ல நீர் நிலைகள் இல்லாத ஆனால் 1 கி.மீ. சுற்றுக்குள் மாற்று நீர் நிலைகள் கொண்ட குடியிருப்புகள் .. .. .. | 1,107 |
| | மொத்தம் .. | 18,167 |
| 6 | நல்ல நீர் நிலைகள் கொண்ட குடியிருப்புகள் .. .. .. | 29,106 |

இக் கணக்கெடுப்பின்படி, வகை ஒன்று முதல் ஐந்து வரை அடங்கியுள்ள 18,167 குடியிருப்புகள் போதுமான குடிநீர் வசதியற்றதாக உள்ளன. குடிநீர் பிரச்னை உள்ள குடியிருப்புகளுக்கு முன்னுரிமை அளித்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பணியை மாநில அரசு மேற்கொண்டு வகை 1, 2-ல் அடங்கும் குடியிருப்புகளுக்கு 1980-81-க்குள் குடிநீர் வழங்க திட்டமிட்டது. ஒன்று மற்றும் இரண்டு வகையில் அடங்கும் 5,618 குடியிருப்புகளில் 31-1-80 வரை 3,465 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் பணி முடிந்துள்ளது.



1982 மார்ச் 11]

3. தன்னிறைவுத் திட்டம்:

குறிப்பிட்ட கால வரைக்குள் எல்லா குடியிருப்புகளிலும் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்காக வகை செய்யும் வழியில் தமிழக அரசு 'தன்னிறைவுத் திட்டம்' என்னும் ஓர் திட்டத்தை தமிழ்நாட்டில் நிறைவேற்றி வருகின்றது. இத் திட்டத்தின்படிச் செய்யப்படும் வசதிகளில் "பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி மிக முக்கியமானது.

1980—81 ஆம் ஆண்டில், 31-3-81க்குள் மாநிலம் முழுவதும் எஞ்சியுள்ள, 2,153 குடியிருப்புகளுக்கும் (வகை 1 மற்றும் 2). மற்றும் தன்னிறைவுத் திட்டம் முதல் கட்டத்தைச் சார்ந்த 69 ஒன்றியங்களில் பிரிவு 3, 4, 5ச் சார்ந்த 2,158 குடியிருப்புகளுக்கும் குடிநீர் வசதி செய்ய உத்தேசிக்கப்பட்டது. மேற்கூறிய இலக்குகளில் 31—3—81 முடிய, 2,300 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி அளிக்கப்பட்டது.

1980—81 ஆம் ஆண்டு எடுத்துக் கொள்ளப்பட்ட பல கூட்டு குடிநீர்த் திட்டங்கள், அவ்வாண்டிலேயே முடிக்க இயலவில்லை. ஏனெனில், அத்திட்டங்கள் அநேக குடியிருப்புகளுக்காக எடுத்துச் செய்யப்படும் மிகப் பெரிய பணிகளாகும். மேலும், சில குடியிருப்புகளில் அங்குள்ள பொதுமக்களின் ஆட்சேபங்களினால் குடிநீர் திட்டங்கள் செயலாக்க இயலவில்லை.

1981-82:

எஞ்சிய, வகை 1 மற்றும் 2ஐச் சார்ந்த 957 குடியிருப்புகளுக்கும், மேலும் தன்னிறவுத் திட்டம் முதற்கட்டத்திலுள்ள பிரிவு 3, 4, 5ஐச் சார்ந்த குடியிருப்புகளில் எஞ்சிய 1,054 குடியிருப்புகளுக்கும், தன்னிறைவுத் திட்டம் 2-ம் கட்டத்தின் கீழ் 150 ஒன்றியங்களிலுள்ள 2,000 குடியிருப்புகளுக்கும், 1981—82 ஆம் ஆண்டில் குடிநீர் வசதி அளிக்க உள்ளது. மேற்கூறிய இலக்குகளில், சாதனைகள் பின்வருமாறு;:

| பிரிவு. | சாதனை (சனவரி, 1982 வரை). |
|---|---|
| 1 மற்றும் 2 (மாநிலம் முழுவதும்) .. .. | 526 |
| 3 4 மற்றும் 5 (முதற் கட்டம்) .. .. | 664 |
| 3, 4 மற்றும் 5 (இரண்டாம் கட்டம்) .. | 1,234 |
| மொத்தம் .. | 2,424 |

**4. வறட்சி நிவாரணத் திட்டம் (1981-82):**

1981–82 ஆம் ஆண்டு முன்பகுதியில், இம் மாநிலம் கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டது. அதன் காரணமாக இவ்வரசு பல்வேறு திட்டங்களை ''போர்க்கால நடவடிக்கை'' யாக எடுத்து முடித்து, வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைத்தது.

வறட்சி நிவாரண திட்டத்தின் முக்கிய அம்சமான குடிநீர் வழங்குதலை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வெற்றிகர மாக செயலாக்கியது. ஆறு அல்லது ஏழு மாத இடைவெளியில் 6,708 குழாய்கிணறுகளை, வறட்சியால் பாதிக்கப்பட்ட பன்னி ரெண்டு மாவட்டங்களில் ரூ. 1,202.280 லட்சம் செலவில் அமைத்துள்ளது. (இதில் ரூ. 800 லட்சங்கள் வறட்சி நிவாரணத் தின் கீழும், மீதம் தன்னிறைவுத் திட்டத்தின் கீழும் ஒதுக்கப் பட்டதாகும்.) இந்த 6,708 ஆழ்துளை கிணறுகளில், 447 கிணறுகள், தன்னிறைவுத் திட்ட முதல் கட்ட பகுதிகளிலும் மீதமுள்ள 1,846 ஆழ்துளை கிணறுகள் தன்னிறைவுத் திட்ட இரண்டாம் கட்ட பகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ளன. 31–1–82 முடிய எடுத்துக் கொண்ட பணிகள், முடிக்கப்பட்ட பணிகள், நிதி ஒதுக்கீடு, செலவினத் தொகை முதலியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—



| விவரம். | 1981–82 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு. | 1-4-81 முதல் 31–1–82 முடிய செலவு. | எடுத்துக் கொண்ட பணிகள். | முடிந்தவை |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1. வகை 1 மற்றும் 2 திட்டம் .. | 393.71 | 408.08 | 957 | 526 |
| 2. தன்னிறைவுத் திட்டம் — முதற் கட்டம் | | | | |
| (அ) நிரந்தரத் திட்டம் .. | 724.29 | 429.65 | 1,054 | 664 |
| (ஆ) வறட்சி நிவாரணத் திட்டம் | .. | 83.96 | .. | .. |
| 3. தன்னிறைவுத் திட்டம் இரண்டாவது கட்டம் | | | | |
| (அ) நிரந்தரத் திட்டம் .. | 2,105.00 | 1,029.87 | 2,000 | 1,234 |
| (ஆ) வறட்சி நிவாரணத் திட்டம் | .. | 318.82 | .. | .. |
| மொத்தம் .. | 3,223.00 | 2,269.82 | 4,011 | 2,424 |

5. ஊரகக் குடிநீர்த் திட்ட பராமரிப்பு :

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஊரகக் குடிநீர் திட்டங்களைச் செயற்படுத்துவது மட்டுமின்றி அத்திட்டத்தின்படி பொருத்தப்பட்டுள்ள கைப்பம்பு மற்றும், மின்விசைப் பம்புகளின் பராமரிப்பையும் ஏற்றிருந்தது. இம்மாநிலத்திலுள்ள 23,856 கைப் பம்புகளையும் மற்றும் 11,526 மின்விசைப் பம்புகளையும் பராமரித்து வந்தது. 23–7–81 முதல் கைப் பம்புகளின் பராமரிப்பை அரசு ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்றி உத்தரவிட்டுள்ளது ஆனால், மின்விசைப் பம்புகளின் பராமரிப்பு இன்னும் வாரியத்திடமே உள்ளது. இவ்வாறு ஊராட்சி ஒன்றியங்களுக்கு, கைப் பம்புகளின் பராமரிப்பு மாற்றப்பட்ட போதிலும், தொழில்நுட்ப உதவி, மற்றும் தேவையான உபரி கருவிகள் வழங்குதல், போன்றவைகளை வாரியமே தொடர்ந்து வழங்குகிறது. கைப் பம்புகள் மற்றும் மின்விசைப் பம்புகள் பராமரிப்புக்கான திட்டம் ஒன்றை வாரியம் தயாரித்து வருகிறது. மாவட்ட ரீதியில், ஊரகக் குடிநீர் திட்ட பராமரிப்புக்கான ஓர் தனிப்பிரிவு மாவட்ட ஆட்சித் தலைவரின் பொறுப்பில் அமைப்பது பற்றி அரசின் பரிசீலனையிலுள்ளது.

6. நகர்ப்புறத் திட்டப் பராமரிப்பு :

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நகர்ப்புற திட்டங்களையும் செயற்படுத்தி வருகிறது. 1981–82 ஆம் ஆண்டு வாரியம் ரூ. 1392.52 லட்சம் செலவில் 30 திட்டங்களை செயலாக்கியுள்ளது. 1982–83 ஆம் ஆண்டு ரூ. 1431.20 லட்சம் செலவில் 22 திட்டங்களை செயலாக்கத் திட்டமிட்டுள்ளது.

நகராட்சி நிறுவனங்களின் குடிநீர்த் திட்டங்களை செயலாக்குவது மட்டுமின்றி வாரியம், தொழிற் நிறுவனங்களுக்குமான குடிநீர்த் திட்டங்களையும் செயல் படுத்துகிறது. அவ்வகையில், வாரியம் 6 திட்டங்களைப் பராமரித்து வருகிறது. அதற்கென ரூ. 41.40 லட்சம் 1982–83 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டங்களின் விவரங்கள் வருமாறு :

| வகை. | திட்டத்தின் பெயர். | நிதி ஒதுக்கீடு. (1982–83): (ரூபாய் லட்சங்களில்.) |
|---|---|---|
| 1. | ஆவடி பாதுகாப்புச் சாதன உற்பத்தித் தொழிற் சாலைக்கான குடிநீர்த் திட்டம் .. .. | 9.00 |
| 2. | திருவான்மியூரிலிருந்து கடற்கரைப் பகுதியில் உள்ள நீர்நிலைகளில் இருந்து சென்னை நகருக்குக் தண்ணீர் கொண்டு வரும் திட்டம் | 3.00 |



| வகை | திட்டத்தின் பெயர் | நிதி ஒதுக்கீடு. (1982 83). (ரூபாய் லட்சங்களில்) |
|---|---|---|
| 3. | திருச்சிராப்பள்ளி வட்டாரப் பொறியியல் கல்லூரிக்கான குடிநீர்த்திட்டம் .. .. | 3.15 |
| 4. | திருச்சிராப்பள்ளி சிறு ஆயுதங்கள் உற்பத்தித் தொழிற்சாலைக்கான குடிநீர்த் திட்டம் .. | 2.50 |
| 5. | தூத்துக்குடி மூன்று மில்லியன் காலன் குடிநீர்த் திட்டம். (துறைமுகம்) .. .. | 5.50 |
| 6. | தூத்துக்குடி துறைமுகம் இருபது மில்லியன் காலன் குடிநீர்த் திட்டம், ஸ்பிக் நிறுவனம் த. நா. மின்வாரியம் மற்றும் இதர தொழில் நிறுவனங்களும் .. .. .. | 18.25 |
| | மொத்தம் .. | 41.40 |

7. உலக வங்கித் திட்டம் :

மாநில அரசு மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ரூ. 104.45 கோடி மதிப்பீட்டில் ''தமிழ்நாடு குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டத்திற்கான'' கடன் உதவி கோரி, உலக வங்கியை அணுகியுள்ளது. இத்திட்டம், மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளுக்கும் சேலம், ஆத்தூர் நகராட்சிகள், மற்றும் 75 நகரங்கள் மற்றும் 740 ஊரகக் குடியிருப்புகள் ஆகியவற்றிற்கு குடிநீர் வழங்க வகை செய்வதாகும். மேலும் 14 நகரங்களுக்கு குறைந்த செலவில் சுகாதார வசதிகள் செய்வதும் இத்திட்டத்தில் அடங்கும். அக்டோபர் மற்றும் நவம்பர் 1981-ல் உலக வங்கி நிபுணர் குழு தனது முன் மதிப்பீட்டை முடித்துள்ளது. 1982 பிப்ரவரியில் தாங்கள் குறிப்பிட்டபடி திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா என அறிய குழு சென்னை வந்தது. இத்திட்டம் மைய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர், உலக வங்கியின் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

8. சென்னைப் பெருநகர் குடிநீர் வசதி மற்றும் வடிகால் திட்டங்கள் :

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் 1982–83 ஆம் ஆண்டில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று பணிக்காக ரூ. 1,250.43 லட்சம் செலவிட

உத்தேசித்துள்ளது. இத்திட்டப் பணிகளின் கீழ் செயற்படுத்த உள்ள இரு முக்கிய பணிகளாவன :

| | குடிநீர் வசதி. | கழிவு நீர் அகற்றல். |
|---|---|---|
| | (ரூபாய் | லட்சங்களில்) |
| 1. உலக வங்கி நிதியுதவியுடன் செயல் படுத்தும் திட்டங்கள். | 43.80 | 16.02 |
| 2. மாநில அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தும் திட்டங்கள். | 320.00 | 370.60 |
| 3. சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றும் திட்டம். | 500.00 | 0.01 |
| மொத்தம் .. | 863.80 | 386.63 |

ஒட்டு மொத்தம் 1,250.43 இலட்சங்கள்.

I. உடனடிப் பணிகளின் திட்டம் :

அ. குடிநீர்ப் பிரிவு :—உடனடிப் பணிகள் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள தொழிற் கூடங்கள் அலுவலகங்கள் மற்றும் வணிக இல்லங்களுக்கும் மற்றும் அதிக வருவாயுள்ள வகுப்பைச் சேர்ந்த குடியிருப்பு வீடுகளுக்கும் இணைக்கப் பட்டுள்ள வீட்டு குடி நீர் இணைப்புகளுக்கு புதிதாக 25,000 நீர் அளவைக் கருவிகள் பொருத்துதல் மற்றும் தற்போது செயலிலுள்ள நீரளவை கருவிகளில் பழுதடைந்துள்ள 11,00 நீரளவைக் கருவிகளை புதுப்பித்தல் ஆகிய பணிகள் இவ்வருடம் முடிவடையும். கூடவே எடுத்துக் கொள்ளப்பட்ட விநியோக முறையிலுள்ள நீர்க் குழாய்களில் அளவைக் கருவிகள் மற்றும் தடுக்கிதழ்கள் பொருத்துதல் பணியும், இவ்வருடம் முடிவடையும்.

இவ்விரண்டு பணிகளும் குடி நீர் வழங்கலில் தற்போது கிடைக்கும் நீரை முழுமையாக உபயோகித்துக் கொள்வதற்காக நீர்ச் சேதத்தையும், நீர்க்கசிவையும் தவிர்ப்பதற்கான திட்டங்களாகும். வாரியத்தில் எல்லா மட்டத்திலுள்ள பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக, கட்டப்பட்டுவரும் பயிற்சி மையம் முடிவுற்று இவ்வாண்டு செயல்படத் துவங்கும்



ஆ. சென்னை நகரின் கழிவு நீர் அமைப்பை திருத்தி அமைத்தலும் மேம்படுத்தலும்.

முன்னரே எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகள் 15 கழிவு நீரேற்று நிலையங்கள் 1982—83-ல் நிறைவுபெற்று துவங்கும். இந்த கழிவு நீரேற்று நிலையங்களால் பயனடையும் பகுதிகளில் தற்போது நிலவிவரும் கழிவு நீர்க் குழாய்களில் கழிவு நீர்தேங்கி ததும்பி வழிந்தோடுவது குறையும்.

மேலும் கழிவு நீர்க்குழாய்கள் சுத்திகரிப்பை நவீனப்படுத்துதல் மூலம் பலகாலமாக பழக்கத்திலுள்ள சுத்திகரிப்பு தொழிலாளர்கள் சாக்கடை குழாய்களில் இறங்கி கயிறு, மூங்கிற்குச்சிகள் மூலம் அடைப்பு எடுத்தல் தவிர்க்கப்படும். இந்த நவீன திட்டம் தற்போது நிறைவேற்றப்பட்டு இந்த ஆண்டில் முழுமையான அளவில் செயல்முறைக்குக் கொண்டு வரப்படும். இதனால் மனிதக் கழிவுகளுடன் ஊழியர்களின் நேரடித் தொடர்பும் தவிர்க்கப்படும். இத்திட்டத்தின் மூலம் சில அடைப்பு அகற்றும் பொறிகள், மணல் வாரும் பொறிகள், நீர்ப்பாய்ச்சி தூர் உறிஞ்சும் இயந்திரம் முதலான கருவிகள் தருவிக்கப்பட்டு உபயோகத்தில் உள்ளன. தானே இயங்கும் 31 கழிவு நீரேற்று நிலையங்களும் இயங்க உள்ளன.

II. மாநில நிதியுதவியுடன் செயல்படுத்தும் திட்டங்கள்.—

(அ) குடிநீர்ப் பிரிவு.—சென்னை நகருக்கு தினசரி 190 மில்லியன் லிட்டர் குடிநீர் கொணர்வதற்காக செங்குன்றத்திலிருந்து கீழ்ப்பாக்கம் தலைமை நீர் நிலையம் வரை 10 கிலோ மீட்டர் நீளத்தில் 3 வது பாதாள நீர்வழிப்பாதை கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது. அது முடிவடைந்ததும், தற்போது 65 வருடங்களாக புழக்கத்திலிருந்து பழுதடைந்த நிலையிலுள்ள முதலாவது புதைநீர் வழிப் பாதைக்கு மாற்றாக செயல்படும், மேலும் இது குடிநீர் விநியோகம் தடை இல்லாமல் செயல்பட உதவும்.

தற்போது மணலியிலிருந்து அண்ணா பூங்காவிற்கு 750 மில்லி மீட்டர் விட்டமுள்ள வார்ப்பு இரும்புக் குழாய்களை அமைக்கும் திட்டம் முடிவடைந்து செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த திட்டத்தினால் சென்னை நகர் குடிநீர் விநியோகம் 8 முதல் 15 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் வட சென்னை மக்கள் பயனடைவர்.

தற்போது சென்னை நகருடன் இணைக்கப்பட்ட ஊராட்சிகளுக்கு குடிநீர் வழங்குவதற்காக ரூ. 206·00 இலட்சம் மதிப்பீட்டில் இவ்வாரியம் மேற்கொண்டுள்ள பணி துரிதமாக செயல்படுத்தப்படும், இந்த திட்டத்தினால் திருவான்மியூர், சாலிகிராமம், விருகம்பாக்கம், கானகம்—தரமணி, வேளச்சேரி ஆகிய பகுதிகள் பயனடையும.

சென்னை நகரில் இதுவரை குடிநீர் வசதி பெறாத இடங்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக இவ்வாரியம் செயல்படுத்தும் பொதுத் தெருக்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட குடியிருப்புகளில் குடிநீர் குழாய் போடும் பணியும் தொடர்ந்து நடைபெறும்.

மேலும் ரூ. 100 இலட்சம் மதிப்பீட்டில் நகரில் 40 அல்லது 50 ஆண்டு காலமாக நடைமுறையில் இருக்கும் தூர்ந்த பழைய குடிநீர்க் குழாய்களை புதுப்பிக்கும் பணிகளை இவ்வாண்டு தொடர்ந்து படிப்படியாக செய்யும். இதனால் குடிநீர்க் குழாய்களில் நீர் அழுத்தம் அதிகரித்து நீர் வழங்குதலில் முன்னேற்றம் உண்டாகும்.

கடந்த பல ஆண்டு காலமாக உபயோகத்திலிருக்கும் கீழ்ப்பாக்கம் நீர் நிலையத்திலிருந்து பங்கீட்டு பெரும் குழாய்கள் தொடக்க பகுதி வரையில் ( shaft ) இடம் வரை உள்ள 48'' விட்டமுள்ள பழுதடைந்துள்ள எக்கு குழாயினை 60 '' விட்டமுள்ள குழாயாக சுமார் 1 கிலோ மீட்டர் நீளத்திற்கு மாற்றம் செய்து புதுப்பிக்கும் பணியை ரூபாய் 120 இலட்சம் செலவில் தொடங்கும். இந்த திட்டம் சென்னை நகருக்கு குடிநீரினை மேலும் அதிக அழுத்தத்துடன் தடையின்றி விநியோகிக்க உதவி செய்யும்.

நிலத்தடி மற்றும் நீர்மட்ட நீரின் ஒருங்கிணைத்த திட்டம்.

சென்னை நகரில் குடிநீர் தேக்கங்களில் தற்போது ஏற்படும் நீர் ஆவியாதல் மற்றும் நீர்க்கசிதல் ஆகியவற்றால் ஏற்படும் நீர் இழப்பை தவிர்த்து நகரில் குடிநீர் வழங்கலை மேம்படுத்த ஆரணியார், கொற்றலையார் கரையோரப் பகுதிகளிலுள்ள நிலத்தடி நீர், மேல்மட்ட நீர் இவற்றை ஒருங்கிணைத்து உபயோகப்படுத்துவதற்கான சாத்தியக் கூறு பற்றி ஆய்வதற்காக அரசால் மொத்த மதிப்பீடான ரூபாய் 86.45 இலட்சத்தில், முதல் கட்டமாக ரூ. 59.40 இலட்சம் செலவு செய்ய அங்கீகரிக்கப்பட்டு பணியும் இவ்வாண்டு தொடங்க உள்ளது. இத்திட்டம் ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்ட உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது

ஆ. கழிவுநீர்ப் பிரிவு.

மக்கள் அதிகமாக வசிக்கும் ஜார்ஜ் டவுன் பகுதியில் 70 ஆண்டுகாலமாக இருந்து வரும் கழிவு நீர்க்குழாய்களை புதுப்பித்து மாற்றியமைக்கும் பணி முழுமையாக முடிவடையும். இதனால் குறைந்த கொள்ளளவுள்ள கழிவு நீர்க் குழாய்கள் காரணமாக தற்போது இப்பகுதியில் நிலவி வரும் குறைபாடான குழாய்களில் கழிவுநீர்த் தேங்கி ததும்பி சாலையில் வழிந்தோடுவது மற்றும் கழிவுநீர் அடைப்பு போன்ற குறைபாடுகள் நீங்கும்.

தற்போது பாதாள சாக்கடை வசதியில்லாத கோட்டூர், பள்ளிப்பட்டு போன்ற பகுதிகளுக்கு கழிவுநீர் அகற்று வசதி ஏற்படுத்த ரூ. 100 இலட்ச மதிப்பில் ஒரு திட்டமும் இவ்வாண்டு தொடங்கப்படும்.

V811,31 N82
N83-82
122233





அடையார் நதியில் கழிவு நீர் போய்ச் சேருவதைத் தடுக்க சைதாப்பேட்டை, அசோக் நகரைச் சுற்றியுள்ள பகுதியிலுள்ள கழிவு நீர் ஏற்று நிலையம் மற்றும் கழிவு நீரேற்று குழாய்களை மேம்படுத்தி அபிவிருத்திகள் செய்ய ரூ. 90.00 இலட்ச மதிப்பீட்டில் ஒரு திட்டமும் இவ்வாண்டு தொடங்கப்படும். இதுபோலவே, நந்தனம் பகுதியிலுள்ள கழிவு நீரை சென்னை பெருநகர் வாரிய கழிவு நீர் இணைப்புகளுடன் சேர்ந்தது, இதனால் தற்சமயம் அடையாறில் கழிவு நீர் கலந்து அசுத்தப்படுத்துவதை தவிர்ப்பதற்காக ரூ. 26 இலட்சம் மதிப்பீட்டில் திட்டமும் தொடங்கப்படவுள்ளது.

நகரின் மண்டலம் 1 மற்றும் 2-லிருந்து வரும் கழிவு நீரை சுத்திகரிப்பு செய்யும் திட்டத்தில், மண்டலம் 2-ற்கான திட்டப் பணி ஆய்வு முடிவடையும் நிலையிலுள்ளது. இத்திட்டம் இவ்வாண்டு தொடங்கப்படும்.

இவ்வாரியம் இவ்வாண்டு தொடங்கவுள்ள மற்றொரு சிறந்த முக்கிய திட்டம் கழிவு நீரை சுத்திகரிப்பு செய்து திருப்பி எடுத்து அதை தொழில் உபயோகத்திற்காக பயன் படுத்தப்படுவதற்கான நிலையம் அமைக்க ஏதுவான மாதிரி நிலையம் ஒன்றை ரூ. 25·00 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்து பரிசீலிக்க உள்ள ஒரு திட்டமாகும்.

9. இந்திய அரசின் ஆதரவுடன் மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திரம் மற்றும் தமிழ் நாடு அரசுகளிடையே 1976 ஆம் ஆண்டு ஏற்பட்டுள்ள முடிவின்படி, 15 டி.எம்.சி. கிருஷ்ணா நதி நீரை, சென்னை நகருக்கு வழங்குவதற்கான, ஒப்பந்தம் ஒன்று அக்டோபர் 1977-ல் கையெழுத்திடப்பட்டது. இத்திட்டத்திற்கான ஆய்வுகள், தமிழகப் பகுதிகளில், தமிழ்நாடு பொதுப்பணித் துறையால் செய்யப்படுகின்றன. ஆந்திர மாநிலப் பகுதிகளிலுள்ள ஆய்வுகள், ஆந்திர பொதுப்பணித் துறையால் ஜூலை, 1978-ல் மேற்கொள்ளப்பட்டு, அதற்கான செலவுகள் தமிழக அரசால் ஏற்கப்பட்டுள்ளது. தமிழகப் பகுதிகளிலுள்ள ஆய்வுகள் முடிவுற்றன. ஆந்திர அரசும், அதன் பகுதியிலுள்ள ஆய்வுகளை முடித்து, சென்னை நகருக்குக் கிருஷ்ணா நதி நீரை வழங்கும் திட்டத்தின் தற்காலிக அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளது. தமிழக அரசின் பரிசீலனையிலுள்ள இத்திட்டம், விரைவில், ஆந்திர மாநில அரசுடன், எடுத்துக் கொள்ளப்பட்டு திட்டத்தின் விவரங்கள் பற்றி முடிவு செய்யப்பட இருக்கிறது.

10. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் ஏற்படுத்திய பின்னரும், மழை நீர் வடிகால்களை செயலாக்கும் பணி தொடர்ந்து சென்னை மாநகராட்சியே செய்து வருகிறது. மழை நீர் வடிகாலுக்கென ரூ. 50 லட்சத்தை அரசு சென்னை மாநகராட்சிக்கு 1981–82ல் வழங்கியுள்ளது.

LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras 14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Ro Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Socie (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Stre Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmo Madras-8.

IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) Distric
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkott
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem 1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajentha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai 1.

IN OTHER STATES

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B. B. Ganguli Street. Calcutta-

S
36-75

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTME PUBLISHED UNDER RULES 303 AND 306 OF THE TAM NADU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECT UPTO 15TH NOVEMBER 1979) AND PRINTED BY TI DIRECTOR OF STATIONERY AND PRINTING. MADRAS.